உ

சிவமயம்.

அருணந்தி சிவாசாரியார்

இயற்றிய

சிவஞானசித்தியார்

சுபக்ஷம்

எ—அ—கூ—க0—கக—கஉ—சூத்திரங்கள்.

மறைஞானதேசிகர்

சிவாக்கிரயோகியர்

ஞானப்பிரகாசர்

சிவஞானயோகியர்

நிரம்பவழகியர்

சுப்ரமண்யதேசிகர்.

இவர்களின் உரையுடன்

சிவஞானபோதயந்த்ரசாலையில்

பதிப்பிக்கப் பட்டன.

சென்னை - சிந்தாதிரிப்பேட்டை.

கலியுகாதி ரு௲கக—விரோதி ௵ ஆனி௴

உ

சிவமயம்.

சிவஞான போதச் சித்தி யுபாயம்.

அகமகிழ்ந்திட நாம் அடையும்பொருள்கள், அழியாக்கவலை
யநுதினம் தருதலால், இப்பொருளின்ப மெப்பொழுதும் பெற,
உய்வகை நாடி மெய்வகை யீதென, ஒப்பரும் பொருளான் உயர்
ஞானத்தைச், செப்பியவழியே சேர்ந்தநுதினமும், நிட்டைகூ
டி நேர்ந்தபேரின்பத், தவ்வழியிருந்தே யநுதினம்வாழ்க, அவ்
வழியின்பம் அடைவுடன் பெறற்குச், செவ்வழிகாணாது தியங்
கியகாலை - மெய்ப்பொருள் காட்டி மேன்மைபடச் செயும்,
ஒப்பிலாக்குரவனை உண்மையினாடி, அவர்பணிநின்று அவர்குறிப்
பின்வழி, அநுதினநடக்க அடையுமெய்ஞ்ஞானம், இப்படிச் சிவ
னருள் ஞானபோதத்தை, மெய்ப்படக்கண்டவன் செப்பிடத்
தமிழில், அவன்குறிப் பின்வழி யணைவரு மின்பம், உவப்பினிலை
ய்தி உண்மைசித்திட்பெறச், செப்பினன் கலைகடேர் சீர்அருண
ந்தி, இப்பொருளதனை யாவருமெளிதில், தப்பற வுரைவகை சாற்
றினர்தம்மை, முறைபெறவீங்கு வரையறைசெய்து, அவற்றின்
குறிப்புடன் அச்சியற்றினதை, நம்பரனன்பர்கள் நாடுசெயலை
ளாது, தம்பாற் கண்டு தான்களித் திதனை, அன்பினால் யார்க்
கும் அறிச்கையிட் டின்பச், செம்பொருடேர்ந்து சிவன் பதம்
வாழ்கவே.

சிவமயம்.

சிவஞானசித்தியார் உற்பத்தி.

இந்நூலியற்றிய ஸ்ரீமத் அருணந்தி சிவாசாரியார் தற்கா
லத்திற்கு முற்காலம் அறுநூறு வருஷத்திற்குச் சற்றுமுன் பி
ன் ஆதிசைவ ப்ராம்மணகுல திலகராய்ச் சிவனடியார் பலர்க்
குப் போதகாசாரியரும் தீக்ஷாகுருவுமாய் விளங்கி, மலபரிபாக
மேலீட்டால் திருவெண்ணெய்ம்பதிச் சைவவேளாளர் மரபில்
திருவவதாரங்கொண்ட மெய்கண்டதேவர் அடியார்கள் நாற்
பத் தொன்பதின்மருட் சிறந்து இந்நூலும் இருபாவிருபஃ தெ
ன்னு மாசிரிய சிஷ்ய சம்வாதமான அந்நூலு மியற்றின ரென்
பதை எம்மாலச்சியற்றிய சிவஞானபோத பாண்டிப் பெருமா
ன் விருத்தியுரையில் மெய்கண்டதேவர் தோற்றப் பிரபாவத்தி
னும் இந்நூலிற்கு முகற்பாகமாகிய பரபக்ஷத்து முகவுரையி
னும் இந்நூலில் சிவாக்ரயோகியர் உரையின் முகவுரையினும்
மறைஞானதேசிகர் உரையிற் பாயிரத்தினும் விவகரித்திருப்ப
தால் இவ்விடத்து மீட்டும் விளக்கற்பாற் றன்றென்பது யார்க்
கும் துணிந்த பொருளேயாம்.

உரை யாசிரியர்களின் வரலாறு.

திரு மறைஞான தேசிகர்:—சீகாழிப் பதியில் திருஞானச
ம்பந்த மூர்த்திகளின் திருவடியார்களில் வள்ளல்கள் அறுபத்து
நால்வருள் ஒருவராகிய ஆளவந்தவள்ளல் சந்தானத்தைச் சேர்
ந்தவர். ப்ராம்மண குலத்தவர். வைதிகசைவ பரிபாலகர். பதிப

சுபாசப் பநுவல் முதலிய நூல்களுக்கு உரையியற்றியவர். பரம திமிரபானுமுதலிய நூல்களை யியற்றியவர். இவர் இந்நூற்குக் காண்டிகையுரை சண்ணழிவுரையென இரண்டுரை யியற்றினர். அதனுள் இஃது காண்டிகையுரை. இவ்வுரையே யிந் நூற்கு முந்திய வுரையெனப் பிந்திய வுரையாசிரியர்கள் கொண்டிருப் பதை அவ்வவர் சமவாத மறுப்பு முகவுரைகளான் றெள்ளிதிற் றெளியப்படும்.

சிவாக்கிரயோகியர் :—சிவக்கொழுந் தாசாரியர் எனவும் வழங்கப் பெறுவர். அக்ரம்=கொழுந்து. இவர் நிகம ஆகம சைவபரிபாலக சதாசிவ யோகீந்தரரின் மாணாக்கர். சிவஞானபோ தத்திற்குப் பன்னீராயிர ஸ்லோக உதாரணங்களுடன் குருடீ கையென்னும் உரையியற்றினவர். சைவ பரிபாஷைமுதலிய பன் னிரண்டுநூற்க ளியற்றியவர். இவர் இந்நூல் பரபக்ஷ சுபக்ஷங் கட்குச் சிவாகமஸ்லோகங்களை யுதகரித்து மணிப்பிரவாளமா யோருரையும் தெள்ளிய தமிழ்நடையி லோருரையு மியற்றினர். இதனுள் இஃது மணிப்பிரவாள உரை. இவர் சோழநாட்டில் சோழகுலத் தரசர்மரபின ரொருவரால் ஆதரிக்கப் பெற்றுச் சூரனார்கோவிலில் மடாலயபதியாய் வீற்றிருந்தனர். இவ்வா தீனம் தற்காலத்துத் திருவாவடுதுறையார் மேற்பார்வையிலி ருந்து வருகின்றது.

ஞானப்பிரகாசர்:—யாழ்ப்பாணத்தில் வீணாகானபுரம் சா லிவாடீசுர நகரத்தில் கார்காத்தவேளாளருள் முடிதொட்ட வேளாளராய்ப் பாண்டி மழவர் குலத்தில் முன்னூறு வருஷங்க ளுக்குமுன் தோன்றி ஞானப்பிரகாச ரென்னும் நாமதேய மு டையரா யிருந்தனர். இவர் திருப்புகலூரை யடைந்து ஆதிசை வராகிய பெரிய அண்ணாசாமி குருக்களிடம் தீக்ஷையுற்றுச் சிதம் பரவாசியாய் சிலகால மிருந்து அங்கிருந்து கௌடதேய மடை ந்து அவ்விடத்துள்ள சமஸ்கிருத பாண்டித்ய முற்ற ஓர் ப்ராம்

மண சந்யாசியாற் றமது சீடர்கட்குத் தர்க்க மீமாஞ்ச வே
தாந்த சாத்திரங்களைக் கற்பிப்பதைக் கண்ணுற்று அவ்விடத்
தே அவர்கள் வாசிக்குந் தோறும் சென்று அப்பொருள்களைச்
சிந்தனைசெய்து வந்தனர். ஓர்நாள் அவ்வாசிரியர் இவரைநோ
க்கி நீவிர் யாவர்! நீர் இச்சாத்திரப் பாடங்களின் சாரத்தை
யுற்றுக் காலந்தோறும் சவனிப்பதில் நன்கு புலப்படுகின்றன
வா வென்று வினவியதற்கு இவர்கூறிய விடைகளைக் கேட்டு
ஆச்சரிய முற்று இவருக் கச்சாத்திரங்கள் முற்றும் க்ரமமா
ய்க் கற்பித்து வந்தனர். ஞானப்பிரகாசர் ஓர் வருடத்திற்குள்
வித்யாபாரங்கத ரானமை கண்டு ஆசிரியர் விடையளிக்க மீட்
டும் திருவண்ணமலை யாதீனத்தை யடைந்து அக்காலத்துள்
ள மடாதிப ரிடத்துச் சந்யாசம் பெற்றுச் சிவாகமங்களை
யோதி யுணர்ந்தனர். பின் அங்கிருந்து சிதம்பர மடைந்து
பௌஷ்க ராகம விருத்தி சிவஞானபோத விருத்தி சித்தாந்த
சிகாமணி பிரமாண தீபிகை பிராசாத தீபிகை அஞ்ஞான விவே
சனம் சிவயோகசாரம் சிவயோகரத்நம் சிவ சமாதி மகான்
மிய சங்க்ரஹம் எனபவைகளை வடமொழியி லியற்றினர். ஓர்
நாள் இவர தன்பரி லொருவர் இவ ரிருக்கு மடத்திற் கடுதத
நிலததில் நிதிக்குவை யிருப்பதாய்த் தெரிவிக்க, அவர் அதனை
க்கொடு ஓர் திருக் குளமும் அதனருகில் திருமடங்களும் அ
மைப்பித்தனர். இக்குளம் ஞானப்பிரகாசர் குளமென வழங்க
ப் பெற்றிருக்கின்றது. இவர் சாயுசசிய முற்றது பங்குனிமாதம்
பூச நக்ஷத்திரம்.

சிவஞானயோகியர்:—திருவாவடுதுறை யாதீனத் தம்பிரா
ன்களிற் சிறந்தவர். இவர் சரித்திரம் காஞ்சிப்புராண முகவு
ரையிற் கூறப்பட் டுளது. ஆங்குகாண்க. இவர் சாயுச்சியமுற்
றது சித்திரைமாதம் ஆயிலிய நக்ஷத்திரம்.

நிரம்பவழகியர்:—கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார் சந்தானத்துக் கருணை ஞானப்ரகாசரின் தீக்ஷாவிசேஷம் பெற்று மதுரைப் பதியின் வாசஞ் செய்த வேளாளகுல திலகர். சேதுபுராணம் தமிழின் மொழிபெயர்த்தவர். திருவருட் பயனுக்குப் பொழிப்புரை புகன்றவர். இவருரை தென்னாட் டவர்க்குத் தெளிதீந் தமிழின் இனிமைப் பொருள் பயந் திருத்தலுமன்றிச் சிவஞானபோத உதாரண வெண்பாக்களின் செறிந்த பொருட்குச் சித்தியின் விருத்தம் இணங்கக் காட்டியிருத்தலு மொன்றும்.

இவ்வுரையே முந்திய வுரையெனச் சிலர் கூறுகின்றனர். இதனைச் சிவாக்ரயோகியர் முதல் சிவஞானயோகிய ரீறுய் ஒருவர்மே லொருவ ராக்ஷேபங் கூறிவருவதால் அவ்வவர்களின் கருத்துவகை நன்குபுலப்பட அவர்க ளுரைகளின்பின் வைக்கப் பட்டது.

சுப்ரமண்யதேசிகர்:—திருவாவடுதுறை யாதீனத்தில் கஎ-வது பட்டத்து மடாதிபதி. இவர் தமது இளைய பட்டத்து நமசிவாய தேசிகருக்கு இந்நூ லுரை கற்பிக்கும் பொருட்டு சிவஞானயோகிய ரியற்றிய பொழிப்புரைக் கிணங்க அப்பொழிப்பின் பதங்களையே உரைப்பொருளாக்கி அப் பொழிப்பினது மேம்பாட்டை விரித்துக் காட்டி அம்முனிவர்க் கோர்பெரும் புகழ்நாட்டினர், இம்மடத்தின் மடாதிபதிகளில் தமிழ் சமஸ்கிருதங்க ளிரண்டினும் பாண்டியத்திய முற்றுந் தம்மையடைந்த வித்வான்கள் முதலியோரை மிகவும் ஆதரித்து வந்தவரிவர் ஒருவரேயாம்.

சிவமயம்.

மறைஞானதேசிகர்.

முதற்சூத்திர முதல், -கஉ-ஞ், சூத்திரவரை உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டிய

பிரமாண நூல்கள்.

கிரணாகமம்
வாயவ்யம்
(சிந்திய-விசுவம்)
பௌஷ்கரம்
ஸ்வச்சந்தம்
இரத்நத்ரயம்
சர்வஞானோத்தரம்
மதங்கம்
ம்ருகேந்த்ரம்
காமிகம்
சூக்கும ஸ்வாயம்புவம்
திருமந்திரம்
வருணபத்ததி
காலோத்தரம்
அம்சுமான்
சைவசந்யாச தீபிகை
சித்தாந்தசேகரம்
ஞானரத்நாவலி
வாதுளம்
ரௌரவம்
மகுடோத்தரம்
யோகஜம்
தேவிகாலோத்தரம்
நிச்வாசம்
சிவதருமோத்தரம்
மகுடம்
தொல்காப்பியம்
அசிதம்
ஸ்வாயம்புவம்
பராசரோபபுராணம்
சர்வசித்தாந்தசங்க்ரஹம்
பஞ்சப்ரம்மபாஷ்யம்
மோகசுரோத்ரம்
மூலதந்த்ராவதாரம்
வாலஞானரத்நாவலி
பராக்யை
வாயவ்யசம்ஹிதை
சிவஞானசங்கிரகம்

சுப்ரபேதம்
கராஞதிகாரம்
சிவதர்மம்
சிவஞானபோதசங்கரம்
ஓதசங்கற்பம்
ஸ்காந்தபுராணம்
ருக்வேதம்
யஜுர்வேதம்
சாமம்
அதர்வணம்
சைவபுராணம்
சூதசம்ஹிதை
ப்ருகுசாபத்ரயம்
பட்டணத்துப்பிள்ளையார்
தேவாரம்

காரணம்
சித்தாந்தசம்போதி
பூஜாஸ்தவம்
சிவதந்த்ரம்
இரகச்யசாரம்
ஆக்நேயபுராணம்
சிவஞானபோதம்
பத்ரகிரி
ப்ரம்மகீதை
பெரிய கிரணம்
சர்வமதோபந்யாசம்
பாரமேசுரம்
சூக்ஷமம்
ஸ்கந்தகாலோத்தரம்
விச்வசாரோத்தரம்

---

* திருவாசகம்
அளவைநூல்
குறள்
தர்க்கபரிபாஷை
வாதராச்யக்காரர்
நிச்வாசோத்தரம்
சிந்தியலாகமம்
சுத்தாச்யை
காலிங்கம்
பரமதநிராகரணம்
ப்ரம்மபத்ததி

சம்புபத்ததி
வாதுளோத்தரம்
சித்தாந்தசாரசங்க்ரஹம்
தெய்வப்புலவர்குறள்
சார்புநூலார் திருவருட்பயன்
சர்வசுரோத்தரசங்க்ரஹம்
சதருத்ரசங்க்யை
தந்த்ரசாரம்
சிதம்பரமஹாத்மியம்
சித்தாந்தசாராவளி
பாரதம்

பரார்த்தம்	பதிபசுபாசப்பநுவலுரை
இருபாவிருபஃது	சௌந்தர்யலகிரி
சாராதாதிவகம்	ஸ்வச்சந்தாவைரவம்
சிவப்பிரசாசம்	சித்ததந்த்ரயம்
வாதுளசுத்தாக்யை	விச்வசாதாக்யம்
சுபாஷிதம்	நிச்வாசகாரிகை

ஆ ௧0௨

சிவாக்ரயோகியர்.

—0—

சிவஞானபோதம்	ம்ருகேந்த்ரம்
தேவிகாலோத்தரம்	தத்வப்பிரகாசிகை
சிவஞானபோதம் சமஸ்க்ருதம்	பராக்யம்
மதங்கம்	சித்தாந்தபோதம்
பௌஷ்கரம்	காலோத்தரம்
காமிகம்	ஸ்வாயம்புவம்

---

* வீராகமம்	காளிதாசர்
வாதுளம்	ஆதித்யபுராணம்
அம்பாஸ்தவம்	ப்ரம்ஹாண்டபுராணம்
மஹிமநஸ்தவம்	பூஜாஸ்தவம்
இதர நூல்	தேவாரம்
சித்தாந்ததீபிகை	சிவதர்மோத்தரம்
நைஷதம்	கூர்மபுராணம்—சிவகீதை
சைவாகமம்	பாரதம்
ந்யாயசார்யம	விஶ்வசாரோத்தரம்
ரத்நத்ரயம்	கிரணம்
ஜைநதர்மம்	சர்வஞானோத்தரம்

நிச்வாசகாரிகை	காபிலம்
ஞானோத்தரம்	ரௌரவம்
சிவப்பிரகாசம்	ஈஸ்வரகீதை
சித்தாந்தசாராவளி	ஸ்வச்சந்தம்
பீடகதந்த்ரம்	

ஆ௨ சங

ஞானப்பிரகாசர்.

———o———

திருமந்திரம்	பராக்யை
தொல்காப்யம்	மகுடம்
காமிகம்	இராமாயணம்
அகோரசிவாசாரியர்பத்ததி	பிரமாண்டபுராணம்
சோமசம்பு பத்ததிவிருத்தி	சுப்ரபேதம்
காலோத்தரம்	ஸ்வாயம்புவம்
கிரணாகமம்	பௌஷ்கரம்
மேருதந்த்ரம்	தேவிகாலோத்தரம்

* ஞானாம்ருதம்	விச்வசாதாக்யம
வாதுளம்	மோக்ஷகாரிகை
இரத்நத்ரயம்	கோயிற்புராணம்
மதங்கம்	திருவாதவூரர்புராணம்
காரணாகமம்	தேவாரம்
ம்ருகேந்திரம்	சிவதருமோத்தரம்
ரௌரவவ்ருத்தி	சதுர்வேத தாற்பரியம்
பாரமேஸ்வரம்	திருவாசகம்
சிந்தியம்	கந்தரலங்காரம்

ஆ௨ ஙச

சிவஞானயோகியர்.

—— 0 ——

சிவஞானபோதம்	திருக்குறள்
சோமசம்புபத்ததி	சங்கற்பநிராகரணம்
வருணபத்ததி	அம்மைதிருவந்தாதி
* ஸ்ரீகண்டபாஷியம்	தேவாரம்
வேதாந்தநூல்-உ-அதிகரணம், க-உ-பாதம்	வாயுசம்ஹிதை
	வாதுளம்
ஞானாம்ருதம்	துகளறுபோதம்
இரதநத்ரயம்	சர்வஞானோத்தரம்
சிவப்ரகாசம்	உபநிஷதம்
சதுர்வேததாற்பர்யசங்க்ரஹம்	

ஆக கஅ

நிரம்பவழகியர்.

—— 0 ——

சங்கற்பநிராகரணம்	திருக்களிற்றுப்படியார்
சிவஞானபோதம்	திருவாசகம்
சித்தியார்பரபக்ஷம்	தேவாரம்
* தத்வவிளக்கம்	திருமந்திரம்
காளத்தியந்தாதி	

ஆக கூ

ஆக மொத்தம் உதாரண சாத்திரங்களில் உ௱கூ-இ தனிப்பெயராய் வந்த சாத்திரங்கள் க௱ரு.

* கோட்டிற்கு மேலுள்ள பெயர்கள் கூ-கு, முதல் பன்னிரண்டாஞ் சூத்திரவரையுள்ள உதாரண நூல்கள். கோட்டிற்குக் கீழுள்ளவை இதில் வருவன நீங்கலாக க-கு, முதல்-கூ - வரையுள்ள பெயர்கள்.

சிவமயம்.

சிவஞானசித்தியார் சுபக்ஷம்.

எ-முதல்-கஉ-வது சூத்திரவரை அதிகரணப்பிரிவு.

———0———

௪—அவரினீக்கி மலமகற்றித் தானாக்கி ம
லரடிக்கீழ் வைப்பன் ௨௨௫௮

—— ० ——

௯— ௧—பாசஞானத்தாலும் பசுஞானத்தாலு
ம் பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞா
னத்தாலே தேசமொடு முள்ளத்தே
நாடி ௨௨௯௪
௨—ஆசைதரு முலகமெலா மலகைத்தே
ராமென் றறிந்தகல வந்நிலையேயாகும் ௨௩௨௩
௩—பாதநிழற்கீழ் நில்லாதே நீங்கிப்போ
தின் பின்னு மோசைதரு மைஞ்செழு
த்தை விதிப்படியுச்சரிக்க வுள்ளத்
தேபுகுந்தளிப்ப னூனமெலா மோட ௨௩௩௨

—— ० ——

௧௦—௧—இவனுலகிலிதமகிதஞ்செய்த வெல்லா
மிதமகித மிவனுக்குச் செய்தார்பாலி
சையு மவனிவனாய் நின்றமுறை யேக
னாகில், சிவனுமிவன் செய்தியெலா
மென்செய்தியென்று செய்ததெனக்
கிவனுக்குச் செய்ததென்றும், பவம
கலவுடனாகி நின்றுகொள்வன் பரி
வாற்பாதகத்தைச் செய்திடினும் ப
ணியாக்கிவிடுமே ௨௪௦
௨—அரன்பணியி னின்றிடவு மகலுங்கு
ற்றம் ௨௪௦௮

—— ० ——

௧௧—௧—காயமொழிந்தாற் சுத்தனாகி யான்
மா காட்டக்கண்டிடுந் தன்மையுடை

ய கண்ணுக் கேயுமுயிர் காட்டக் க
ண்டிடுமாபோல வீச னுயிர்க்குக் கா
ட்டிடக் கண்டிடுவென் உசரு௫

உ—இத்தை யாயுமறிவுடையனு யன்புசெ
ய்ய வந்நிலைமையிர்நிலையி னடைந்த
முறையாலே மாயமெலா நீங்கியர
ன் மலரடிக்கிழிருப்பன் மாருதசு
வானுபவ மருவிக்கொண்டே— உசகஎ

—o—

கஉ—க—செங்கமலத் தாளிணைகள் சேரலோ
பாத் திருமலங்களறுத்து உருசரு

உ—ஈசநேசரொடுஞ் செறிந்திட்டு உருரு௫

௩—அங்கவர்தம் திருவேட மாலயங்க
ளெல்லா மரனெனவே தொழுதிறை
ஞ்சி யாடிப்பாடி உருசா க—சாஉ

—o—

புறநடை

எங்குமியா மொருவர்க்கு மெளியோமல்லோ
மியாவர்க்கு மேலானோமென் றிருமாப்
பெய்தித் திங்கண்முடியாரடியா ரடியோ
மென்றுந் திரிந்திடுவர் சிவஞானச் செய்
தியுடையோரே கருஅஉ

—

அதிகரணத்திற்கு உதாரண விருத்தத்தொகை

—o—

எ-கு.

எ-கு-விருத்தம்.

,,—(க—உ)அதிகரணம் கூ

சிவஞானசித்தியார் சுபக்ஷம்

எ—சூத்திரம்.

ஆன்மதரிசன இலக்கணம்.

இது முன் சூத்திரத்திற்குப் புறனடையுணர்த்துகின்றது.

எ—சூ, க - உ - வது, அதிகரணம்.

க அனைத்துஞ்	சித்தசித்தாகிய விரண்டினையும் ஆன்மாவேயுணருமென்றது. (சி) சிவாத்துவைதவாதி மறுப்பு இவ்விடத்துச் சிவஞான போதத்திற் கூறப்படும் சித்தைச் சத்தெனப் பரியாயமாகக் கூறப்பட்டிருக்கின்றது. (சிவ) சாதனவியல்பு கூறுகின்றது. (நி) பரிணாமவாதி மறுப்பு	ச அ௫௭

எ—சூ, ௩ - வது, அதிகரணம்

உ சத்தசத்தறிவ	சித்தசித்தைப் பிரித்தறியு முறைமை (நி) சிவஞானபோதம், எ - சூ, ௩-வெண்பா.	க௨௩௬உ
௩ சுத்தமெய்ஞ்	சித்தசித் தானமாவின் கணுள்ளதென்றும் சிவனுக்குச் சுத்தமும் ஆன்மாவிற் கசுத்தமுமநாதியெனறது. (நி)சிவஞானபோதம் எ-சூ, ௫-வெ.	க௩௭உ

*

ள அறிவிக்க — அறிவிக்கவறிகிற ஆன்மா சுதந்தரனல்ல வென்பதும் கர்த்தாவே சுதந்தரனென்பதும் — கஅஎஅ

அ—சூத்திரம்.

ஞானஞ்ஞான இலக்கணம்.

—o—

இது பாசஞானம்போம்படி பதிஞானமறிவிக்கு முறைமை.

க மன்னவன்றன் — ஆன்மாவிற்குள்ள மயக்கத்தைத் தீர்த்தக் குருவா லுணர்த்தப்பட்டு முத்தி யடையும் வகை (ஞா) ஞானபாத முணர்த்தி யோகபாத முதல் முப்பொருளு முணர்த்துகின்றது — கஅஅ௫

அ—சூ, க - வது, அதிகரணம்.

உ உரைதரு — ஏழுசூத்திரமளவும் பதிமுதலியவற்றைப் பொது விதியாலுணர்த்தி ஆன்மாவிற்குச் சத்திநிபாதானு குணமாகத் தீக்கைசெய் தநுக்கிரஹிக்கு முறைமை. விசேஷவுரை. (நி) சிவஞானபோதம், அ-சூ, ௩-வெண்பா. — சஅகூ௫

௩ பலவிதமாசான் சகலர்க்கு ஆசாரியன் செய்யுந் தீக்கை — ககூஉ௯

அ—கூ, உ-வது, அதிகரணம்.

		பரிபாகங் கூறுகின்றது. (நி) சிவஞான முண்டாம்படி கூறுகின்றது. சிவஞானபோதம் அ - சூ, க-வெண்பா.	உ000
௬உ	இம்மையே	உலோகாயதன் முதலியோர்முத்திச் சிறப்பின்மையும் சித்தாந்த மூத்திச் சிறப்புடையதென்பது. (நி) முத்தித் தொகை கூ-து. விசேஷ வுரை	உ0௪0
௬௩	ஓதுசமயங்கள்	மேலு மிச்சித்தாந்தமே சிறப்புடைததென்பது (சி) வேத சிவாகமங்களே சாத்திரம் சிவஞானமே ஞானம் என்பது	உ0௫உ
௬௪	அருமறை	வேதாகமமாகிய முன்னூல் முதலிய மூவித மிதற் குளது (சி) வேத சிவாகமங்களே சித்தாந்தம் (நி) வேதாகமங்களி லெல்லா மடங்க மற்றுள்ளனூ லேதுக் கென்பது கூறுகின்றது.	உ0௬௭
௬௫	வேதநூல்	ஆதியில் ஞானமொன்று மிருக்க வேதாகமங்களென விருவகைக் கூறியது அதிகார பேதத்தாலென்பது	உ0௫உ
௬௬	சிந்தாதத்தே	சிவ ஞசாரிசனை அதிஷ்டித்து மலங்களை நீக்கி முத்தியடைவிப்ப னென்னும் அவ்வுண்	

	தம் பக்குவர் பரமுத்தியை யடைவர் என்பதும் உ-து.	௨௪௪௧
௨௬ சிவஞானச் செல்வ	மேலெயதியது விலக்கிச் சிறப்புவிதி	௨௪௫௦
௨௭ ஞானத்தால்	ஞானத்தாலேதான்முத்தி எ-து. (ஞா) மீமாஞ்சகன் மறுப்பு. விசேஷவுரை. (நி) சைவர் மறுப்பு. சிவஞான போதம் அ-சூ, க-வெண்பா.	௨௪௫௭
௨௮ சூரியகாந்த	அருபசிவ ஞசாரிய மூர்த்தமாயறுக்கிர கிக்கு முறைமை (சி) சிவஞான சித்தி யுபாயமும் அதனாற் றரிசனமும் (நி) பாடாணவாதி மறுப்பு. சிவஞானபோதம் அ-சூ, ரு-வெண்பா.	௨௪௭௧
௨௯ மிக்கதொரு பக்குவ	சீவன்முத்தித தன்மை (நி) சிவதரிசனம் உண்டாம்படி	௨௪௭௮
௩௦ அறியாமை	சீவன்முத்தர் ஞேயத் தழுந்துமுறை (சி) சிவதரிசனம் வருவதற் குபாயம் (ஞா) விசேஷவுரை	௨௪௮௬
௩௧ புண்ணியமே ஞேக்கு	ஞேயத்தழுந்தின சீவன் முத்தன் தேகாந்தத்தில் பெறும் பலன் பரமுத்தி எ-து. (சி) ஜீவன்முத்தி பரமுத்தி க்ரமம் (ஞா) விசேஷவுரை. (நி) சிவஞான மிருவினை யொத்த	

நிற்பன் எனப் பரிணாம
வாதியைநோக்கிக் கூ-து.
சிவஞானபோதம் அ-சூ,
அ-வெண்பா. உஉசுஅ

ருக பாசிபடுகுட்ட இப்படி நில்லார்க்குவேறோ
ருபாயமுணர்த்தல் (நி)
சிவனைக் கூடியவானமா
மீளவும் இந்திரியங்களைக்
கூடவற்றோ வென்ற பரி
ணாமவாதிமறுப்பு சிவஞா
னபோதம் அ-சூ, கூ-வெ. உஉஎக

கூ—சூத்திரம்.

ஆன்மசுத்தி இலக்கணம்.

இ-சூ முற்கூறிய நிலைநில்லார்க்கு வேறோருபாய
நிட்டைகூறி யான்மசுத்தி உ-து.

க பாசஞானத்தா "தேசமொடுந் திருவடிக்கீழ்
நீங்காதே துங்க" என்பத
னை விரித்துணர்கின்றது.
(நி) சங்கிராந்தவாதி ம
றுப்பு உஉஅஎ

கூ—சூ, க – அதிகரணம்.

உ வேதசாத்திர மேற்றொகுத்ததை வகுத்து
ச் சத்தப் பிரமவாதியை
மறுத்தது (சி-ஞா-சிவ-

கூ—சூ, உ- அதிகரணம்.

௯—சூ, ௫ - அதிகரணம்.

க0—சூத்திரம்.

மலமோசன இலக்கணம்.

இது பாசவாதை நீங்கி சீவன்முத்தர்நிற்கு நிலைமை கூ-து.

க	இவனுலகி	சீவன் முத்தர்க் காகாமிய மேருவகை	உஙஅ

க0—சூ, க - அதிகரணம்.

உ	யான்செய்தே	இந்நிலைமை ஞானம் பிரகாசித்தார்க் குண்டென்பது மஃதில்லார்க் கில்லையென்பது (நி)சிவஞானபோதம் க0-சூ, க-வெண்பா	உச0௧

க0—சூ, உ - அதிகரணம்.

ங	இந்திரியமெனே	இம்முறை நிற்காது இந்திரியாதி வசத்தாகி லதற்கோ ருபாயம் கூறுகின்றது (நி) சிவஞானபோதம் க0 - சூ, உ-வெண்பா.	உரு0அ
ச	சலமிலனாய்	சிவன் கைம்மாறு கருதாதனுக்கிர கிப்பது சுபாவம் (சி-ஞா) ஞானிகட்கு ராகாதிகளால் பாவபுண்ணியமேருது (நி) சிவன் சிலரை ரக்ஷிப்பதால் பக்ஷபாதி யாகானே வென்ற அவிகாரவாதியை மறுத்	

		தல் சிவஞானபோதம்-௧௦ சூ, ௫-வெண்பா.	௨௪௧௯
௫	நாடுகளிற்	ஞான மில்லார் சிறப்பின் மையும் அஃதுள்ளார் சிற ப்புடைமையும் (சி) ஞான த்தாலல்லது காரிய யோ கங்களில் முத்தியில்லை	௨௪௨௫
௬	அங்கித்தம்பனை	ஜீவன்முத்தர் வாதனையினு ற் கன்மங்களைச் செய்தா லு மாகாமிய மேறாது(நி) சிவஞானபோதம் ௧௦-சூ, (௫-௪) வெண்பா.	௨௪௩௧

———o———

௧௧—சூத்திரம்.

பக்தியி னிலக்கணம்.

———o———

இது பந்தத்தினின்று நீக்கின சிவனிடத்து பத்திசெய்யு மாறு

௧	காயமொழிக்	காணுங் கண்ணுக்கு ஆன்மா காட்டாய் நின்றதுபோ ல ஆன்மாவுக்குச் சிவ னு பகரிக்கு முறைமை (சி)சி வனிடத்து அந்தரங்கபத் திசெய்யு முறைமை ஞா னத்திற் கிரியை	௨௪௪௫

கக—சூ, க- அதிகரணம்.

உ	பரஞானத்தாற்	மேலந்த சிவன் முத்தர்களையத் தழுந்து முறைமை	உசரு௩
௩	அநாதியுட	மேற் சிவசமவாதி சரீரநீங்கி முத்திபெறவேணுமோ முத்தியினு நித்தியத்தவம் பெற் றிருக்கலாமோ வென்றதற்கு விடை (சி) வயிரவ தந்திரவாதிகள் தேக நித்யமென்பதை மறுத்தல் (ஞா) சாரூபமுதலிய முத்தி பரமுத்தி யன்று	ரு
ச	தெரிவரிய	சிவன்முத்தர் மல வாதனை கெட்டு நிற்பதற் குதாரணம் (நி) சிவஞானபோதம் கக - சூ, கூ-வெ.	உசகூக
ரு	ஆணவந்தா	முத்தியில் ஆணவங்கெடுமாயின் ஆன்மாவுங் கெடுமென்றவர்க்கு மறுப்பு (சி) சைவர் ஆணவங் கெடாதென்பதை மறுத்துக் கெடுமென்பது (நி) பேதவாதி மறுப்பு	உசகூஅ
கூ	நெல்லினுக்குத்	ஆணவம் முத்தான்மாக்களைப் பொருந்தாது பெத்தான்மாக்களைப் பொருந்தும்	உசஎரு

		(சி) ஆணவம் நித்தியம் அது கெடா தென்பதும் ஆன்மா ஆணவாதி பாச நீங்கு முறைமையும். (நி) சமவாதி மறுப்பு	௨௪௮௬
௭	எவ்விடத்து	சிவன்றிருவடி கூடு முறைமை யிவ்விதமென ஐக்கியவாதியை மறுத்தல் (நி) அவிகார வாதி மறுப்பு சிவஞானபோதம் ௧௧-சூ, ௨-வெண்பா.	௨௪௮௯

௧௧—சூ, ௨- அதிகரணம்.

௮	எங்குந்தானிறை	சிவன்சர்வ வியாபியாயினும் பக்குவான்மாக்களுக்கன்றி காணப்படான் (நி) அவிகார வாதி மறுப்பு சிவஞானபோதம் ௧௧-சூ, ௩-வெண்பா.	௨௪௯௭
௯	சென்றிணையு	சிவனுடனான்மாகூடி நிற்கு முறை அவ்வச் சமயிகளை வினவி மறுத்தல்	௨௫௦௩
௪௦	செம்பிரத	செம்பிரத குளிகையிற் கலந்தபோ தண்டாய தன்மைபோல் ஆன்மா சிவனைக் கலந்த விடத்து நிற்கு முறைமை (ஞா) சிவாத்	

		து விதியை மறுத்தல் (நி) பேதவாதியை மறுத்தல்	உ௫௧௯
௧௬	சிவன் சீவ	ஆன்மாவும் சிவனு மொன்ருய்க் கூடியிருப்பதே முத்தியென்பானை மறுத்தது(நி) ஐக்யவாதி மறுப்பு	உ௫உ௩
௧உ.	இரும்பைக்	ஆன்மா சித்தெனிற் சிவனாற் பிரயோசன மில்லையென்பானை மறுத்தது (சி) ஜீவன் முத்திபேத மேழுவித மென்பது (நி) சிவஞானபோதம் ௧௧-சூ, ௪-டு-வெண்பா.	உ௫௩௪

௧உ—சூத்திரம்.

அடியவ ரிலக்கணம்.

———o———

சிவனையுணர்ந்த ஞாதாக்கள் தமது முதலெனக் கருதிநிற்கு முறைமை.

௧உ—சூ, ௧- அதிகரணம்.

௧	செங்கமலத்	பிரமா முதலாயினோரால் சிந்திக்கப் படாத பதியை சீவன் முத்தர் சிந்திதனுக் கண்டு வழிபடு மாறு (சி) சிவஞான சரிதையாகிய பாசியபத்தி கூ—து.	உ௫௪௫

௧௨—சூ, ௨-அதிகாரணம்.

௨ ஈசனுக்கன்பில்லா

சிவன் சர்வ வியாபியாத லாற் சிவபத்தர்களிடத் தன்பு செய்யு முறைமை (நி) ஜீவன்முத்தர் சிவன டியாரிடத்துக் கூடுதலும் அடியா ரல்லாதா ரிடத் துச் சேரலாகாமையும். சிவஞானபோதம் ௧௨-சூ, ௨-வெண்பா. ௨௫௫௩

௧௨—சூ, ௩-வது, அதிகாரணம்.

௩ அறிவரியான்

சிவன் திருவேடத்தாரையு ண்டாக்கி சர்வான்மாக் களையு மீடேற்றுகையின் பொருட் டோர் சிறப்பு விதி கூ-து. (நி)சிவஞான போதம் ௧௨-சூ, ௩-வெ ண்பா. ௨௫௬௧-௬௨

௪ திருக்கோயி

சிவன் சர்வ வியாபியாயிரு ந்தாலும் தன்னிடத் தன் புடையார்க்கு வெளிப்படு முறைமை(சி-ஞா) சிவலிங் கத்தை வழிபடு முறைமை (நி)சிவஞானபோதம்-௧௨ சூ, ௪-வெண்பா. ௨௫௬௮-௬௯

ரு ஞானயோக — இங்ஙனம் இலிங்கத்தினையுந் திருவேடத்தாரையும் வழிபடு முறைமை யுணர்த்தி ஞானாசாரியனை சிவனென வழிபடு முறைமை — உருஎசு

கஉ—சூ, புறனடை.

சு மந்திரத்தான் — ஆசிரியரைச் சிவனாகப் பாவிக்காவிடின் அவருபதேசித்த மந்திர முதலானவை பலியா தென்பது — உருஅஉ

எ பரம்பிரம — ஆசிரியரை பரமசிவ மெனக் கருதினார்க்குச் சிவனனுக்கிரகஞ் செய்யு முறைமை (நி) சிவஞானபோதம் கஉ-சூ, எ-வெண்பா — உருஅஎ

---

*

உ

சிவமயம்.

சிவஞானசித்தியார் சுபக்ஷம்.

நிரம்பவழகியர்

சிவஞானசித்தியாரில் சிவஞானபோத வெண்பாக்களின் கருத்தை வகுத்துக் காட்டிய விவரம்.

சிவஞான சித்தியார். சூ—வி.		சிவஞான போதம். சூ—வெ.		சூ—வி.			
				௪	௨	௪	௨
				,,	௩	,,	௩
௧	௨	௧	௧	,,	௪	,,	௪
,,	௩௧	,,	(௨-௮-௪)	,,	௫	,,	௭
				,,	௨௬	,,	௨
௨	௨	௨	(௨-௩)	,,	௩௧	,,	௫
,,	௩	,,	(௧-௪)				
,,	௪	,,	௫	௫	௫	௫	௩
,,	௨௨	,,	௬	,,	௬	,,	௨
,,	௩௬	,,	௮				
,,	௩௮	,,	௯	௬	௫	௬	௨
,,	௪௬	,,	௬	,,	௬	,,	௩
,,	௯௬	,,	௧௦	,,	௭	,,	௪
				,,	௮	,,	௫
௩	௨	௩	௬	,,	௯	,,	௬
,,	௩	,,	௩				
				௭	௨	௭	௩

,,	௩	௫	,,	,,	௯	,,	௮
௮	௨	௮	௩	௧0	௨	௧0	௧
,,	௧0	,,	,,	,,	௩	,,	௨
,,	௧௧	,,	௧	,,	௪	,,	௩
,,	௧௬	,,	௪	,,	௬	,,	(௫-௪)
,,	௨௭	,,	௧				
,,	௨௮	,,	௫	௧௧	௪	௧௧	௬
,,	௩௧	,,	௨	,,	௭	,,	௨
,,	௩௭	,,	(௬-௭)	,,	௮	,,	௩
,,	௩௮	,,	௮	,,	௧௨	,,	௪
,,	௩௯	,,	௯	,,	,,	,,	௫
௯	௪	௯	௧	௧௨	௨	௧௨	௨
,,	௫	,,	௨	,,	௩	,,	௩
,,	௬	,,	௩	,,	௪	,,	௪
,,	௭	,,	௫	,,	௭	,,	௭
,,	௮	,,	(௬-௭)				

உ

சிவமயம்.

இந்நூலச்சிடுவதற்குப் பிரதிருபங்க ளுதவிசெய்தவர்கள்.

———0———

மறைஞானதேசிகருரை.

ம-ா-ஸ்ரீ, வித்துவான்	புரசை-பொன்னம்பல முதலியார்.அ.	சென்னை இராஜகீய சர்வகலா சாலை உபாத்தியாயர்.
,,	சிந்தாதிரிப் பேட்டை பு-தெய்வசிகாமணி முதலியார். அ.	மில்லர் கலாசாலை உபாத்தியாயர்
	காஞ்சி-அருணகிரி பரதேசியார்.அ.	
	,, நாகலிங்கமுதலியார் அ-ள்.	தியலாஜிகல் அச்சியந்தரசாலைத் தலைவர்.

ஆ௨ ச

சிவாக்ரயோகியருரை.

,,	கொட்டையூர்-சாமிநாததேசிகர்.அ.	திருவனந்தபுரம் ராஜகீய சர்வகலாசாலை உபாத்தியாயர்
,,	திருப்பாதிரிப் புலியூர்-சிவ சிதம்பர முதலியார் அவர்கள்.	
,,	திருமயிலை-முருகேசமுதலியார்.அ.	பச்சயப்பமுதலியார் கலாசாலை உபாத்தியாயர்

ஸ்ரீமத்-யாழ்ப்பாணம் நல்லூர் - ஆறு   சைவப்பிரகாச வித்
முகநாவலர் சந்தான   யாபிவிர்த்தித் த
ம்சதாசிவம்பிள்ளை.அ.   லைவர்

ஆ ௪

ஞானப்பிரகாச ருரை.

வித்வான்   சுந்தரம்பிள்ளை அவர்கள்.
,,   புரசை பொன்னம்பல மு   இராஜகிய கலாசா
தலியார் அவர்கள்.   லை உபாத்தியாயர்
சென்னை ஐபாசாமி தே   சைவக்ரியா தீக்ஷிதர்
சிகர் அவர்கள்.

ஆ ௫

சிவஞானயோகிய ருரை.

,,   திருப்பாதிரிப்புலியூர்-சிவ
சிதம்பர முதலியார் அவர்கள்.க

நிரம்பவழகிய ருரை.

அஷ்டாவதானம் ,,   புரசை-சபாபதிமுதலியார் அவர்கள்.
சென்னை-ஐயாசாமி தே   சைவக்ரியாதீக்ஷிதர்
சிகர். அ-ள்.

ஆ ௨

சுப்ரமண்யதேசிக ருரை.

வித்வான்   திருவட்டீச்சுரம்பேட்டை-   பச்சயப்ப முதலி
சிங்காரமுதலியார்.அ-ள்.   யார் கலாசாலை உ
பாத்தியாயர்   க

* இப் பிரதிருபங்களை வெளியிட வுதவிபுரிந்த காருண்ய புருஷர்கள் சிவதருமோத்திரம் சிவஞானதான வியலிற் கூறியுள்ள பலன்களைப் பெற்றின்புறும்படி இப்புத்தகத்தை யன்போடு பாராட்டிப் படிப்போர் யாவரும் சிவபெருமானைச் சிந்தித்தல் வேண்டும்.

உ

சிவமயம்.

சிவஞானபோத யந்திரசாலையில் அச்சிட்டிருக்கும் புத்தகங்களின் விபரம்.

—o—

	தபாற் செலவுட்பட ரூ. அ-பை.
சமஸ்க்ருத சிவஞானபோத சவ்வியாக்கியாநம் ஆகம உதாரணங்களுடன்	0-ரு-0
த்ரிலோகசிவாசாரியார் சித்தாந்த சாராவளி அநந்தசிவாசாரியார் வடமொழி வியாக்கியாநத்திற் கிணங்கிய தமிழ் விசேஷவுரையுடன்	உ-சு-0
காமிகாகமம் தமிழுரையுடன் அர்ச்சனுபடலம்வரை தபாற்செலவுட்பட	அ-அ-0
ஷை நூதன சஞ்சிகை ஒன்றுக்கு	0-அ-சு
அகோரசிவாசாரியார் க்ரியாக்ரமஜ்யோதி தமிழ்ப் பொழிப்புரை - சஞ்சிகை - ச௰	0-சு-சு
சகலாகமசார சங்க்ரஹம் மூலம்	க-ச-0
சிவஞானபோதத்திற்கு ஸமஸ்க்ருத - கஉ - ஸூத்திரப்ரதிபத வியாக்கியாநம், பொல்லாப்பிள்ளையார் - சூர்ணிகை, மெய்கண்டதேவர் வார்த்திகம், பாண்டிப்பெருமாள் விருத்தி, சிவஞானயோகிகள் சிற்றுரை ஆக ஐந்துஞ் சேர்த்து அச்சிட்டது	க-அ-0
சிவஞானசித்தியார் பரபக்ஷவுரை	க-கஉ-0
சிவஞானசித்தியார் சுபக்ஷம்	௩-அ-0

	தபாற்செலவுட்பட ரூ. அ-பை.
திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், இருபாவிருபஃது, உண்மை விளக்கம், திருவருட் பயன், வினாவெண்பா, கொடிக்கவி, உண்மைநெறிவிளக்கம், போற்றிப் பஃறொடை, சங்கற்பநிராகரணம், இவற்றினுரை	௨-௧-0
திருமூலர் திருமந்திரம்	௧-0-0
கூர்மபுராணம்	௨ ௧௪-0
இலிங்கபுராணம்	௧-௧௫-0
* குருநமசிவாயர் சரித்திரம்	0-0-௯
விநாயககவசம், சிவகவசம், சத்திகவசம், திரிபுரை அகவல், திரிபுரைதோத்திரம், காமாக்ஷியம்மன் அகவல், விநாயகர் அகவல், கந்தர் சஷ்டி கவசம்	0-0-௯
சௌந்தரி - யானந்தலகரி மூலம்	0-0-௬
அபிராமி யந்தாதி	0-0-௬
கந்தரநுபூதி மூலமும் - உரையும்	0-0-௬
சரஸ்வதிதோத்திரம், சரஸ்வதியந்தாதி ...	0-0-௫
ஸ்ரீமத்-சிவஞானயோகியாரியற்றிய வைராக்கியப்பாயம்	0-௨-௬
ஷையார் கம்பராமாயண முதற்செய்யுள் சங்கோத்தரம்	0-௨-௬

* இக் குறிப்புள்ளது முதல் புத்தக மொவ்வொன்றிற்குத் தனித்தனி தபாற்செலவு அணா-௨.

இங்ஙனம்

கொ - ஷண்முக சுந்தர முதலியார்

சென்னை - சிந்தாதிரிப்பேட்டை.

சிவமயம்.

சிவஞானசித்தியார் சுபக்ஷம்.

எ—சூ, ஆன்மதரிசன இலக்கணம்.

மறைஞானதேசிகர் உரை.

மேலேழாஞ் சூத்திர மென்னுதலிற்றோ வெனின்? மேலதற்குப் புறனடை புணர்த்துகின்றது.

சூத்திரம் - பிண்டசூத்திரம், தொகைச்சூத்திரம், வகைச்சூத்திரம், குறிச்சூத்திரம், செய்கைச்சூத்திரம், புறனடைச்சூத்திரம் என அறுவகைப்படும்.

இனிப் புறனடையாவது- ஒத்துப்புறநடை, அதிகாரப்புறனடை, சூத்திரப்புறனடை, பிண்டப்புறனடை, நூற்புறனடை எனப் புறனடை ஐந்துவிதப்படும்.

அவற்று ளிஃதியாதெனில்? சூத்திரப் புறனடையென வறிக. அஃதாவது, முற்கூறிய சூத்திரத்துட் சொல்லிய பொருளையாப்புறத்தானு மச்சூத்திரத்து ளில்லாத பொருளைத் தழீஇயானு நிற்பது. அச்சூத்திரத்திற் கூறுபாடுசெய்த சத்தையு மசத்தையும் பாதுகாத்து, அதனிற் கூறுபாடு செய்யாத வான்மாவையும் விளங்க வறிவிக்கையா லெனவறிக.

இத் தலைச்செய்யு ளென்னுதலிற்றோ வெனில்? சித்தசித்துக்களாகிய விரண்டுந் தம்மிற் செறியமாட்டா வாதலால் அவ்விரண்டினையு மான்மாவே யுணருமென்று சூளகமாகவுணர்த்துகின்றது.

அனைத்துஞ்சத் தென்னிலொன்றை யறிந்திடா தசத்தாலென்னின், முனைத்திடா தசத்துச்சத்தின் முன்னிரு ளிரவிமுன்போ, னினைப்பதிங் கசத்தேயென்னிற் சத்தின்முன் னிலாமையானும், தனைக்கொடொன் றுணர்தலானுந் தானசத் தாகுமன்றே. (க)

(இ-ள்.) அனைத்துஞ்சத் தென்னிலொன்றை யறிந்திடாது அசத்தாலென்னில் — ஆன்மாக்களெல்லாம் பிரமமென்று சொல்லில், அப்பொழுது அந்தப் பிரமம் சத்தசத்துக்களை விகற்பித் தறிகைக் கிடமில்லை.

சங்கிராந்தவாதி யிந்திரியங்க டாமே யறியுமென்னில், உடல்போல வழிந்துவருவது மாயையாகிய வுபாதிவசத்தாலே காணுமென்னில்?

முனைத்திடா தசத்துச் சத்தின் முன்னிரு ளிரவி முன்போல் — ஆதித்தன் சன்னிதியி லந்தகாரஞ் சேட்டியாத வாறுபோலச் சித்தின்முன்னே யசித்தாகிய பிரபஞ்ச முண்டாய்க் காரியப்படாது.

நினைப்பதிங் கசத்தேயென்னில் — மனத்தாலே யல்லோ யாதொன்று சிந்திக்கிறுன் ஆகையாலே அசத்துத் தானே சிவனை யறியுமென்னில்?

சத்தின் முன் னிலாமையானும் — அசத்தாயுள்ள பிரபஞ்சந் தானுகவறியாது, சத்தின்முன் னில்லா தாகையாலும்,

தனைக்கொண் டொன்றுணர்தலானும் — அந்த மாயா காரியங்களைக் கொண்டுநின் றறிகையாலு மிந்த வேதுக்க ளுண்டாகையால்,

தானசத்தாகுமன்றே — அந்த மாயை தானு மசித்தாகையா லதனைக்கொண் டறிவா னுரான்மா வுண்டு எ-று.

ஓரிடங்களிற் சித்தென்றதையே சத்தெனவும், அசித்தென்றதையே யசத்தென்றும் கூறுவது தம்மிற் பேதமில்லை, ஆகலா விழுக்கா. (க)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

இதற்குச் சிவாத்வைதவாதி சித்து அசித்தென்று இரண்டே வஸ்து. இதிலே சித்து சிவன், அசித்து பிரபஞ்சம். அந்தச் சித்தே சத்து, சடமே அசத்து. இவ்வாறு இரண்டேவஸ்து சிவனுக்கு வ்யதிரிக்தமாக சித்ரூபியாக ஆன்மாக்களுண்டென்பது * யுக்தியுக்தமுமல்ல, சுருதி விரோதமுமுண்டு. பிரத்தியக்ஷமாக நாநாத்மத்வங் காணப்படுகிறதே யென்னில்? அதுவுமத்வத் திரயோபாதி வசத்தினாலே சிவனுக்கே கூடுமென்று சொல்ல, இதற்குமேல் ஏழாஞ் சூத்திரம் நாலுவிருத்தத்தினாலே சங்கையு முத்தரமுங் கூறுகின்றது.

* யுக்தியுக்தம் - யுத்தியோடு கூடியது.

இந்தச் சிவஞானசித்திக்கு மூலமாகிய சிவஞான போதத்தில், சிவனைச் சித்தென்றும் பிரபஞ்சத்தை யசித்தென்றும் பிரதிபாதித்திருக்க, இவ்விடத்துச் சிவன் சத்தென்றும் பிரபஞ்சம் அசத்தென்றும் பிரதிபாதித்த தென்னையோ வென்னில்? சித்தானதே சத்து, அசித்தானதே அசத்தாகையால் பரியாயநாமமாகக் கூறப்பட்டது. ஆகில் அசித்தாகிய வாணவ மாயை கன்ம மசத்தேயோ வென்னில்? அவைகளும் † ஆமோக்ஷமே சத்து. அதுவுஞ் சாஸ்திர திருஷ்டியினாலே முக்ததிருஷ்டிக்கு அசத்தே.

† ஆமோக்ஷம் - மோக்ஷபரியந்தம்.

தத்வஸ்தும் ஸத்விகாரொத்தெ — ஹொத்த நஸ்தாஸ்தி
உஷணாஸ்தி நாஸ்தி கஷ்டுவ்ஸஹாவத: । கஸஷ்ஹ ரூத தேஹம்
ஸவஷ்ணாஸ்தியொகொ நஷளகிகஜிக்கி.

அனைத்துஞ் சத்தென்னில் - சர்வான்மாக்களுஞ் சச்சிச்சுவரூபமாகிய சிவனே யென்னில்?—ஒன்றையறிந்திடா - அந்தவொன்றாகிய சிவத்தை யறியாமல் சம்சாரியாய் துக்கப்படுவானேன்?—அசத்தாலென்னில் - அவ்வா றறியாமனிற்ப தசத்தாகிய மாடையினாலே யென்னில்?—முனைத்திடா தசத்துச் சத்தின் முன்னிரு ளிரவிமுன்போல் - ஆதித்தன் சன்னிதியி லிருள் நில்லாததுபோல சத்தின் முன்னே அசத்து நில்லாது,—நினைப்பதிங் கசத்தேயென்னில் - ‡ அகம் சுகீ § அகம் துக்கீ, என்றது மஹங்கார மமகாரத்தைப் பண்ணுவதும் சிவன்சன்னதியில் மாயா விகாரங்களே யென்னில்?—சத்தின்மு னிலாமையானுந் தனைக்கொடொன் றுணர்தலானும் தானசத் துணராதன்றே - சத்தாகிய சிவன்முன்னே யசித்தாகிய மாயாவிகாரங்கள் பொருந்தா தாகையாலும், மாயாகாரியங்களைக் கரணங்களாகச்கொண் டான்மா வறிகையினாலும் ஜடமாகியமாயாகாரியங்க டானாக வொன்றையு மறியாது.

‡ அகம்சுகி- நான்சுகமுள்ளவன், § அகம்துக்கி-நான்துக்கமுள்ளவன்,

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

முற் சூத்திர முடிவிற் கூறிய பொருளைத்தானே வற்புறுத்து கின்றார்.

அனைத்துஞ் சத்தென்னி லொன்றை யறிந்திடா-சித் தசித்துக்களெல்லாஞ் சிவமென்று நீசொல்லில்? அச்சிவம் சித் தசித்துப் பிரபஞ்சத் தொருபொருளையானாலும் சிருட்டிக்கத் திதிக்கச் சங்கரிக்கத் திரோபவிக்க அனுக்கிரகிக்க வேணுமென் றறியாது.

தன்னைத்தவிர வேறொன்றிலாமையால் தன்னைத்தானே சிருட்டிக்கும் திதிக்கும் என்பது முதல் மாறுபடும் வார்த்தை வருமாதலால், விபரீதமாய்ச் சுகதுக்க வேதனுபோகமுஞ் சிவாத்துவைதியும் வேதாந்தியும் சிவனுக்கும் பிரமத்துக்குஞ் செப்பவேணும். பிரம வியதிரித்தஞ் சர்வ மித்தையென்று சொல்லுதலால் அவ்வேதனையு மித்தையாமே ! அப்போது மித்தையென்று நீ சொல்லியது மித்தையாமே ! அப்போது சித்துப் பிரபஞ்சமுஞ் சிவனு மொன்றாதலால் அவ்வேதனைசிவனுக்கு,—

அசத்தாலென்னில்-அசித்துப் பிரபஞ்ச சங்கத்தாலென்னில்,—இரவி முன்னிருள்போற் சத்தின் முன் னசத்து முனைத்திடா -சிவத்தின் முன் அசித்துப்பிரபஞ்சம் பிறர் பிரயோசனம் பிறர் போக்கியம் பிறர் போசகம் ஸ்வதிருச்யம் இவைமுதலியவாய்த் தோற்றினாலும் ஸ்வப்பிரயோசனமா யப்படித் தோற்றாது. சிவனுக்குச் சொரூப மாத்திரமாய்த் தோற்றுமென்பது கருத்து.—இங்கசத்தே-அசிற்பிரபஞ்சத்திற் சில வந்தக் கரண முதலியதே சற்சன்னிதானத்திலே,—நினைப்பதென்னில் - பிறப்பொருளை யறிந் ததற்கருகமாகு முட் சுகதுக்க மோகங்களை யனுபவிப்பதென்று நீ சொல்லில்?— அசத்து - அந்தக் கரண முதலியன,—சத்தின்மு னிலாமையானும் - சிவத்தின்முன் னின்றதானாலும் அது கோடு முதலானதற்குப்போ லோரறிவிலாமையானும்,— தனைக்கொடொன் றுணர்தலானும் - விளக்கை

விளக்காகக் கொண்டு கண் காண்பது போலத் தன்னைக் காட்டாகக் கூட்டிச் சிற்சிவசித்துக் கன்னியமாய் ஒருசதசத்தான்ம சித்துப் போக்கியப் பொருளைப் புசித்தலானும்,— தானசத்துணராதன்றே - புசியாது தானே.

சிவஞானயோகியருரை வருமாறு.

——o——

நாலாஞ் சூத்திர முதலிய மூன்றானும் பொருளியல்பு கூறிய வாசிரியர், நிறுத்த முறையானே, வேண்டுஞ்செய்தி முறைமையெனப்படுஞ் சாதனங்களதியல்பு மூன்று சூத்திரத்தாற் கூறுவான்றொடங்கினார்.

அவற்றுள், மேற்கூறிப்போந்த முப்பொருள்களுட் சாதித்துப் பெறுதற்குரிய வதிகாரமுடைய திதுவென்பது பாரிசேடவளவையின்வைத் துணர்த்துதற் கெழுந்தது ஏழாஞ்சூத்திரம்.

மேலைச் சூத்திரத்து வரைசெய்துணர்த்திய சத்தசத்துக்களைப் பகுத்தறியும் பொருள் யாதென வினாயினார்க்கு, சத்தாகிய சிவமே யசத்தாகிய பாசமனைத்தினையு மறிவதெனச் சிவாத்துவிதசைவர் விடுப்பின், சத்தாகிய சிவம் வியாபகவறிவாதலால் எவற்றினையு மொருங்கே யறிந்து நிற்பதன்றி ஏகதேசமாய்ப் பகுத்து ஒன்றை யறியுமா றில்லை. அற்றேல், சிவம் வியாபகவறிவாயினும் உயிரின்பொருட்டு அசத்தெனப்படுங் கருவி கரணங்களிடமாக நின்று அங்ஙனம் பகுத்தறிதல் கூடுமெனின், இரவிமுன் னிருள்போலச் சத்தெதிர சத்து முனைத்து நில்லாமையின் அசத்திடமாய் நின்று அங்ஙன மறியுமென்பதுங் கூடாது. இனிவிகாரமின்றி நிற்கு மான்மசந்நிதியில் அசத்தாகிய கருவியே சத்தாகிய சிவத்தைச் சிவகரணமாய் நின்றறிவதெனச் சிவசங்கிராந்த வாதிகள் விடுப்பின், சத்தெதிர் முனைத்து

நில்லாதென மேற் கூறினமையானும், பிறிதொன் றுணர்வதற்குத் தான் கருவியாய் நிற்பதன்றித் தனக்கோ ரறிவில்லாதாகலானும் அசத்துச் சத்தை யறியுமென்பதுங் கூடாதென்பதாம்.

எனவே, பாரிசேட வளவையான் இவ்விரண்டினும் வேறாயெஞ்சிநின்ற பசுப்பொருளே இவ்விரண்டினையும் பகுத்தறியுமென்பது பெறப்பட்டது.

படவே, முதனூ லேழாஞ்சூத்திரம்போல இச்செய்யுளும் முக்கூற்றதாயவாறு காண்க.

அனைத்தையுமென இரண்டாவது விரித்துரைக்க.

அறிவதென்பது அவாய்நிலையான் வந்தது. அஃதசத்தாதலென்பதனோடுங் கூட்டி யுரைக்கப்பட்டது.

முனைத்திடாமை யாவது, இஃது குடம் இஃது ஆடையென நம்மனோராற் சுட்டியறியப்படு மாறுபோல முதல்வனுற் சுட்டியறியப் படுவதாய் வேறு நில்லாமை.

இதனுட்போந்த முக்கூற்றினுள், முன்னை யிருகூற்றினும் விரிக்கக்கடவதாய விசேடமின்மையின் அவற்றை யீண்டே விருவிடைகளாற் றெருகுத்துணர்த்தி, ஏனை மூன்றாங்கூற்றை மூன்றுசெய்யுளான் விரித் துணர்த்துகின்றார்.

அவற்றுட் பாரிசேட வளவையாற் பெறப்பட் டெஞ்சிநின்ற பொருளை இனிது விளக்கி யதனியல்பு வரைசெய் துணர்த்துதற் கெழுந்தது வருஞ்செய்யு ளென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு.

எல்லாத்தையு மறிகிறது சிவமென்று சொல்லுகைச் செய்தே இப்படியோ ரான்மாவுண்டென்று எங்கே காணப்பட்டது என்ற பரிணாமவாதியை நோக்கி மே லருளிச்செய்கிறார்.

முன் சூத்திரத்திலே கூறுசெய்தவத்தை விளங்கச்சொல்லியது.

அனைத்துஞ் சத்தென்னி லொன்றை யறிந்திடாது - எல்லாத்தையு மறிகிறது சிவம் ஆன்மாவென்ப தொன்றில்லை என்று நீ சொல்லில்? பிரபஞ்ச விஷயத்தைச் சிவனுக் கறியவேண்டுவதில்லை. கருவிகளானது சிவனையறியாதிற்க அவன்முன் னிவை நில்லாதென்றதென நம்பு என்ற சங்கிராந்தவாதியை நோக்கியருளிச்செய்கிறார்.—அசத்தாலென்னில் - அசத்தானது சடமாய் நிலைநில்லாதபடியாலே அறியாது. அதென்போல வென்னில்?—முனைத்திடாவசத்து சத்தின் முன்னிருளிரவிமுன்போல் - சத்தாகிய சிவனுடைய சன்னதியில சத்தாகிய பிரபஞ்சந் தோன்றாதது, ஆதித்தன் சன்னதியில் அந்தகாரந் தோன்றாதாற்போல. அப்படி யன்றுகாணும்,—நினைப்பதிங் கசத்தேயென்னில் - மாயாகருவிகள் தானே காணும் எல்லாத்தையு மறிகிறது என்று நீ சொல்லில்?—சத்தின்முன் னிலாமையானும் - நீ சொல்லுகிற மாயாகருவிகள் சிவனுடைய சன்னதியிலே நில்லாததாகையாலும்,—தனைக்கொடொன் றுணர்தலானும் - அவையிற்றைக் கருவியாகக்கொண்டு ஒரான்மாநின்றறிகையாலும்,—தானசத் துணராதன்றே - அந்த மாயாகருவிகள் சடமாகையாலே தானுக வொன்றையு மறியமாட்டாது அறிகிறது,வேறேயொரு முதல்.

அனைத்துஞ் சத்தென்ற பரிணாமவாதியை மறுத்ததற்குப் பிரமாணம் சங்கற்ப நிராகரணம் "தன்போலநிஞருந் தலைவருமிலரால்- மின்போல்நிலையை வேண்டலும்பழுதே" என்றும். அசத்தாலென்ற சங்கிராந்தவாதியை மறுத்ததற்குப் பிரமாணம் சங்கற்பநிராகரணம்"அவைமுற்றுன்பந் துடைக்கும்-திருவருள்மருவ வுரியனவென்னி - லருளுருமாயா விருளினதாங்

சொல்-சத்தப்பரிச ரூபரசநாறை-பெத்திறத்தினதரு ளியம்பு கவன்றியு - நிறைந்துநீயாய் நின்றனைபென்று-மறந்தைம்புலனு ய்வாராயென்றுங் - கரணமெல்லாங் கடந்தனை யென்று - மா ணமையைந்தி னப்புறத்தென்று - முன்னருட் டலைவர்பன்னி னரெனவு- மினையவைபொழிய வறிதுவதெவ்வா - றென்றநிற்க விக் கொன்றியவின்பங்-கூறுதறகுமருட் பேறினையன்றே" என் னுமதுங் கண்டுகொள்க.

இதனுற் சொல்லியது, பிரபஞ்சஞ் சிவனுக்கு விடயமா காதென்றும் அந்தப் பிரபஞ்சஞ் சடமாயிருக்கையால் சிவனை யறியாதென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

அனைத்துஞ் சத்தென்னின்-மேலைச் சூத்திரத்து வரைசெய் துணர்த்திய சத்தசத்துக்களைப் பகுத்தறியும்பொருள் யாதென வினுவினூர்க்குச் சத்தாகிய சிவமே யசத்தாகிய பாசமனைத்தி னையு மறிவதெனச் சிவாத்துவித சைவர் விடுப்பில்,—ஒன்றை ய றிந்திடாது-சத்தாகிய சிவம் வியாபக வறிவாதலான் எவற்றி னையு மொருங்கே யறிந்து நிற்பதன்றி யேகதேசமாய் ஒன்றை ப் பகுத்தறியு மாறில்லை.— அசத்தாலெனின் - அற்றேற் சிவம் வியாபக வறிவாயினு முயிரின் பொருட்டு அசத்தெனப்படுங் க ருவிகரணங்க ளிடமாக நின்று அங்ஙனம் பகுத்தறிதல் கூடுமெ னின்?— இரவிமுன் னிருள் போலச் சத்தின்முன் னசத்துமுனை த்திடாது - இரவி முன்னிருள் போலச் சத்தின்முன் அசத்துமு னைத்து நில்லாமையின். சத்திடமாய் நின்று அங்ஙன மறியு மென்பதுங் கூடாது.— இங்கசத்தே நினைப்பதென்னில் - இனி விகாரமின்றி நிற்கு மான்மசந்நிதியி லசத்தாகிய கருவியே சத்

தாகிய சிவத்தைச் சிவகரணமாய் நின்றறிவதெனச் "சிவசங்கிராந்தவாதிகள் விடுப்பில்,—சத்திமுன் னில்லாமையானும்-சத்தெதிர் முனைத்து நில்லாதென மேற் கூறினமையானும்,—தனைக்கொடொன் றுணர்தலானும்-பிறிதொன் றுணர்வதற்குத் தான்கருவியாய் நிற்பதன்றித் தனக்கோ ரறிவில்லாதாகலானும்,—தானசத் துணராதன்றே அசத்துச் சத்தை யறியுமென்பதுங் கூடாதென்பதாம்.

எனவே பாரிசேட அளவையா னிவ் விரண்டினும் வேறாய் எஞ்சிநின்ற பசுப்பொருளே யவ் விரண்டினையும் பகுத்தறியு மென்பது பெறப்பட்டது.

படவே முதனூல் ஏழாஞ் சூத்திரம்போல இச்செய்யுள் முக்கூற்றதாய வாறுகாண்க.

இதனுட்போந்த முக்கூற்றினுள் முன்னை யிருகூற்றினும் விரிக்கக் கடவதாய விசேடமின்மையி னவற்றை யீண்டே வினாவிடைகளாற் றொகுத் துணர்த்தி, ஏனை மூன்றாங்கூற்றை மூன்று செய்யுளான் விரித் துணர்த்துகின்றார்.

மறைஞானதேசிகர் உரை.

மேலிவ்வாறு முற்கூறிய சித் தசித்துக்களைப் பிறித் தறியுமுறைமை யுணர்த்துகின்றார்.

சத்தசத் தறிவதான்மாத் தான்சத்து மசத்துமன்று,
நித்தனுய்ச் சதசத்தாகி நின்றிடு மிரண்டின்பாலு,
மொத்துட னுதித்துநில்லா னுதியாது நின்றிடாது,
வைத்திடுந் தோற்றநாற்ற மலரினில் வருதல்போலும். (௨)

(இ-ள்.) சத்தசத்தறிவதான்மா	சத்திதுவென்றும் அசத்திதுவென்றும் விவேகித்தறிவ தான்மா.
தான்சத்துமசத்துமன்று	அந்தவான்மாத்தான் முற்கூறிய சத்துமல்ல அசத்துமல்ல.
நித்தனாய்ச் சதசத்தாகி நின்றிடுமிரண்டின் பாலும்	அந்த வான்மாத்தா னித்தனாய்ச் சத்தாகிய சிவத்தையும் அசத்தாகிய பிரபஞ்சத்தையும் பொருந்திநின் றதுவதுவாக விரண்டினையு மறிவன்.
ஒத்துடனுதித்து நில்லான்	அருவுங் கருவு முருவுக் குருவுமதுவதுவாகக் கூடியிருந்தானே யாகிலும் பிரபஞ்சத்தைப்போல விதுவென்னத் தோன்றி நில்லான்; சிவனைப்போல விதுவென்னத் தோன்றாமலு நில்லான்.
உதியாது நின்றிடாது	உதயமு மதனுக்கில்லை யஸ்த்தமானமு மில்லை இவ்விரண்டு மில்லாமற் றனக் கான் மலாபத்தையே பார்த்து நிற்பன். ஆனாலந்த வான்மா நிற்கு நிலையாதெனில்?
வைத்திடுந் தோற்ற நாற்ற மலரினில்வருதல் போலும்.	மலருடன்கூடி மணந் தோன்றினாற்போலத் தேகத்துடன்கூடி யான்மாத் தோன்றும் எ-று.

பூ உடல், மணம் ஆன்மா என வுவமித் திவனுங் கூடினது தானாய் நிற்றலா லெனவறிக. (உ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

ஆகையால் சத்தாகிய சிவத்தையு மசத்தாகிய பிரபஞ்சத்தையும் அறிவ தான்மாவென்று மேற் கூறுதல்.

சத்தசத்தறிவதான்மா- சத்தாகிய சிவத்தையும் அசத்தாகிய பிரபஞ்சத்தையு மறிகிற தானமா,—தான்சத்து மசத்துமன்று - சிவப்பிரேரணையன்றியிற் றானேயொன்றையு மறியாதாகையால் ஸ்வதந்தர சித்தென்று சொல்லவும்படாமல் ஞானக்கிரியா சத்தியை யுடைத்தாகையால் சடமுமல்லாமல்,—நித்தனாய்ச் சதசத்தாகி நின்றிடு மிரண்டின்பாலும்- ஆன்மா நித்தியனுமாய்ப் பராசத்தி பதிந்தபொழுது சிவனைப்போலே * யநிவாரித சிற்சத்திப் பிரகாச சுவரூபனாகவும் அல்லாத ஆணவகேவலத்திலே ஞானம் பிரகாசியா திருக்கையால் ஜடம்போலுமிவ்வாறு சிதசித் தவஸ்தைகளை யடைவதாய் நிற்கும். ஆகின் மாயாகாரிய மாகிய லிங்க சரீரத்துடனே ஆன்மாப்பிறப்ப துண்டாகையா லிறப்பது முண்டு. நித்தியனென்று சொன்னதெவ்வா றென்னில்?—ஒத்துடனுதித்து நில்லா துதியாது நின்றிடாது வைத்திடுந் தோற்றநாற்ற மலரினில் வருதல் போலும்- லிங்கசரீரமாயையிலே தோன்றுகிறபொழுது ஆன்மாவு மாயையிலே நின்றுகூட வுற்பத்தியான தல்ல. பிரளயத்திலே மாயாமண்டல மத்தியவர்த்தியாகநின்று லிங்கசரீரோற்பத்தி யுடனே ஆன்மாவின் ஞானேச்சாக்கிரியைகளைப் பிரகாசிக்கையால் புஷ்பங்களுக்கு விருக்ஷாதிகளிலே, யுற்பத்தியுண்டு,கந்தம் ×வஸ்துவந்தரமாகியிருக்கவும் புஷ்போற்பத்தியே கந்தோற்பத்தியாகச் சொல்லுவது போல,ஆன்மாவுக்கு லிங் கசரீரோற்பத்தியுடனே யுற்பத்தியென் றுபசார மாகச் சொல்லுவதனால் நாசவத்தல்ல, ஆன்மா நித்தியமே.

* அநிவாரிதம் - தளையப்படாதது × வஸ்துவந்தரம்-வேறு வஸ்து.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

சத் தசத்துக்களைத் தற்பிர யோசனமாய் விரும்பி யறிவ து சதசத்தென்று சாற்றுகின்றார்.

சத் தசத் தறிவதான்மா-மோக்ஷ போகக்குறிச் சுவப் பி ரயோசன காரணமாக முறைமையின் சிவப்பிரபஞ்சங்களை வா ஞ்சித்தறிவ துயிர்,—தான் - அந்த வான்மா,— சத்துமசத்து மன்று-சிவமும் அசித்துப் பிரபஞ்சமுமல்ல,—நித்தமாய்- நித்தி யப் பொருளாய்,—சத் தசத்தாகி நின்றிடுமிரண்டின் பாலும் - சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவ ரூப சிவத்துவத்தையும், அ சர்வஞ்ஞத்துவ அசர்வ கர்த்திருத்துவ ரூப பசுத்துவத்தைய மு டையனாகி; அந்தச் சிவத்துவ பசுத்துவ வியற்கைச் செயற்கை யிருதன்மங்களிலே இயற்கை செயற்கை தன்மியாயிருக்கும்.— ஒத்துடனுதித்து நில்லாது-இருளோ டொளிபோற் பசுத்துவத் தோடு சிவத்துவம் ஒத்து ஒருகாலத் துதயமாகாது. அப்போது அப்பொருளாகாசப் பூவாம். அப்படிச் சொல்ல வேண்டா,— உதியாது நின்றிடாது - பசுத்துவஞ் சிவசத்திசின்ன தீக்ஷா ங்கியங்களால் மறையச் சிவசத்துவம் பரந்துவிரியும். அப்போ தான்மாவின்முன் காணாத சிவத்துவம் காணப்படுமாகிற சற் காரிய வாதத்தைத் தாக்கித்தள்ளி யசத்காரியவாத மாவிர்ப்ப விக்கும். அப்படிச் சொல்லவேண்டா,—வைத்திடுந் தோற்ற காற்ற மலரினில் வருகல்போலும் - அரும்பிற் சூக்குமித்திருந் த பூவின்மணம் ஆவிர்ப்பவித்தற் சொக்கும்.

மலம் நீங்கு முன் மலமடக்கி யிருக்குஞ் சிவத்வத்தின துதயம் ‟சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது” என்று திருமந் திரத்திருப்பது முணர்க.

அப்படியாகிற் சிவத்துவங் காரணாகார சத்திரூப பிராக பாவமாயிருந்து காரியாகார வியதிரூப சத்தியோ சாதமா ய்த் திரிந்து பரிணமித்தலால், அதில் விகாரித்துவம் அநித் தியத்துவம் ஜடத்துவம் முறைமையில் வந்துவிழும். அட்படி நீ சொல்லிய தூஷணமிங்கிசையாது, ஆன்மாவிற் சிவத்துவம் அப்போதப்பிரவர்த்தி ரூப வனபிவியத்தி யெனுஞ் சத்திரூப மாயிருந் திப்போ ப்ரவிருத்திரூப வியத்திரூபமான தன்று.

பின்னெப்படி யாவது அப்படி யப்போ திப்போ தெப்போ தும் வியத்திரூபமாயே யிருக்கும். அப்போ தில்லையெனும் பொ ருட் பிராகபாவப் பெயர் சூக்கும பாவரூபசத்தி பூதமாயும், இப்போ துள்ளதெனும் பொருள தவிநாபாவப் பெயர் பெறுந் தூலபாவரூப வியத்தி பூதமாயுமிருந்து வந்ததென்பதும் லோ பாதி வருவித்தது. அப்படித் திருமந்திரத்துஞ் சொல்லப்பட்ட து. "அனாதி சிவரூபமாகியவான்மாத், தனாதிமலத்தாற்றடைப் பட்டுநின்றது, தனாதிமலமுந்தடையற்றபோதே, யனாதிசிவரூ பமாகியவாறே." என்றும்,

ஆதலால் மலம் ஆவிர்த்தி நிவிர்த்திச்சொற் சொல்லும் மறை த்தல் திரும்புதலெனனு மீரேக சுவபாவசத்தி மத் தாதலா ல்,மலசத்தியினது ஆவிர்த்தி ரூபத்தைத் தீக்ஷாகன்மத்துச் செ ய்யு முத்தி யாகுதியாற் பகுப்பற்றுப் பிரித்தற் கரிதாகிய அந்த ரங்க நிவிர்த்திரூப ஸ்வரூப சத்துவ பரிணமத்தால் மலமூத்தி பண்ணிப் பின் செவ்வரத்தம்பூச் சிவப் புபாதியைப் போக்கிப் படிகவெண்மை துலக்க விளக்கத்தை யிருந்தபடி யிருத்துவது போலத் தீக்ஷா கன்மத்துச் செய்யும் வியத்தியாகுதையால், ம லத்தினால் மகாமாயையில் வைகத மாமாயாகாரிய மலவாச னாமுத்திபை, மமாய வீனமாய் வாசனையிருப்பதாய் முறைமை யிற்பண்ணிச் சத்திசாமார்த்தியப் பெயர்பெறும் சிவத்துவத்

தினது சர்வார்த்தக் கிரியா விஞபூத சர்வார்த்த ஞானவிர்த் தியினது இயற்கை யபிவியத்திவை யிருந்தபடி யிருததுவதே; இப்போது புதிதாய்ச் சிவத்துவாதி வியத்திவைப் பண்ணுவ தென்பது.

ஆகையாற் கரணீயமெல்லாம் மலவாசனையவதி மாத்திரத்தில் மாறுதலாற் றிரிவின்றி இயற்கையால் விகிர்திவிட் டிருந்தபடி யிருத்துஞ் சிவத்துவாபி வியத்தியுளெங்கே நீ சொல்லும் அநித்தியத்துவம் வந்தெய்தும். இல்லைதானே! ஆகையாற் சர்வார்த்தக் கிரியாவிஞபூத சர்வார்த்த ஞானம் இருந்தபடியிருத்தலால் அந்தச் சர்வார்த்தக்கிரியா விஞபூத சர்வார்த்த ஞானுபாவமெனும் அஞ்ஞானம் மலத்திடத் திபற்கை ஞானுத்தியந்தா பாவரூப மோகவஸ்துவாயிருந்து ஆன்மாவின் ஞானம் பிராகபாவம்போ லாபாசித்தலால் ஆன்மாவில் ஞானப்பிராகபாவஞ் செயற்கை யாதலால், உபசரிதமென் றூகித்தலால் ஞானம் வியத்திமத்தா யிருந்தபடி யிருத்தலால் அந்த ஞானுபாவம் இயற்கையாலில்லை யென்று அஞ்ஞானம் ஆன்மாவில் வஸ்துவன்று. மலத்தில் மெய்வஸ்து ஆன்மாவிற் பொய்யே! அப்பொய்யைப்போக்க வேறுசாதனம் வேண்டுவதில்லை. அப்பொய்யை மெய்யென்று பண்ணு மலசத்தி முத்தி மலசத்தி வாசனு முத்திபண்ணி யிருந்தபடியிருக்கும் ஞானவியத்தி காண்பிக்கு முத்திவியத்தி சாதனமே சாதனம். அந்த வியத்தியே அஞ்ஞான நிவிர்த்தி, வேறொன்றில்லை. மணிமந்திர மருந்து பொருந்தும் விரும்புமொருசத்தியால் ரோக சத்தி முத்தியானது தனது மாரண விருத்தியினது நிவிர்த்திரூப ஸ்வரூப சத்துவ பரிணமத்தாற் பண்ணப்படுமது போலத் தீக்ஷாலக்ஷண சிவமந்திர சத்தியால் மலசத்தி முத்தியுந் தனதாவிர்த்தி நிவிர்த்தியினது நிவிர்த்தி ரூப ஸ்வரூபசத்துவ பரிணமத்தாற் பண்ணப்படுமாது

லால், ஆவிர்த்தி நிவிர்த்தி சுவ விர்த்திபோடு நித்தியமல தன் மிதன்ம சத்திக்கு அநித்தியத்துவமே யில்லை.

ஆன்மாக்களுக்கு மல மேகமாறு மல சத்திக ளவரவர்க்கு வேறுவே றுதலால் அசேதன மநேகமாதலால் மல சத்திகள் அநித்தியங்களா மென்னில்? அநித்தியங்களன்று; நித்தியமல தன்மி தன்மங்களாதலால்.

அப்படியாகிற் றன்ம தன்மிகளுக்கு வியாபக பேதமாதலாற் றன்மிக்கு மநித்தியத்துவப் பிரசங்கம் வரும். ஆதலால் அசேதன மநேகம் அநித்திய மென்றது தன்மியைக் குறித்துச் சொல்லியது, தன்மத்தைக் குறித்துச் சொல்லியதன்று.

அப்படியாகில் நமது பார்வையாற் பின்ன சாதியாதலால் ஏகம் ஏகமாயிருந்தாலும் பானது பார்வையாற் சத்திசமுக மாத்திரமாய் அசேதனமாய் அநேகமாயிருக்கும் மாயை மகாமாயைகள் அநித்தியங்களாய் விடும். மாயா சத்திகள் மல சத்திபோல ஸ்வரூப சத்துவ மின்றித் திரிந்து பரிணமித்தலால் மாயை மாமாயைக ளநித்தியமாமே! அநித்தியங்களன்று. பால் தயிரானது போற் சத்திகள் முற்றும் பரிணமியாமற் கிருத காடின்னியம் போல ஏகதேசத்திற் பரிணமித்தலால்; அப்போது ஏகதேசத்தி னுசமாகட்டும், அதுவுமில்லை. ஏகதேசத்திற் பரிணமித்த சத்திகள் வியத்தி ரூபங்களாயிருத்தலால் வியத்திரூப காரியங்களும் முன்சத்திரூபமா யிருத்தலாற் காரண காரிய மிரண்டு நிதியமே.

அப்போது மலசத்திகள் அநித்தியங்கள். மாயா சத்திகளேகதேசத்தில் நித்தியங்க ளென்பதென்னே? ஸ்வரூப சத்துவ ஸ்வரூபத்திரிவு பரிணம பேதத்தாற் படித்துச் சொன்ன மாத்திரம் பாரமார்த்தத்தா லெல்லாம் நித்தியங்களே! 'வைத்திடுங் தோற்ற நாற்ற மலரினில் வருதல் போலும்' என்பதனுற் சிவ

னோடு கூடிச் சிவனாயும் பாசத்தோடு கூடிப் பசுவாயும் இருப்ப னென்ப திசையாதென்பதறிக.

சிவஞானயோகியருரை வருமாறு.

தம்முளுரிமையில்லாத வவ்விரண்டினையு மறிவது ஆன்மா வேயாம். அதுதா னவ் விரண்டற்கும் வேறாய் இரண்டன்பாலும் மலரின்க ணாற்றம்போல் அதுவதுவாய் நின்று சதசத்தாவ தோருரிமை யுடைத்தாகலா னென்பதாம்.

உயிர் அவ்விரண்டின் வேறாயும் அதுவதுவாய் நிற்பதொன் றென்ற விதனானே, சத்தசத்தறிவதாகிய வான்மா தன்னை அறியுமோ வறியாதோவெனக் கடாயினார்க்கு, அவைபோலத் தனித்தறியப்படுவ தொன்றன்றி அவ்விரண்டினையு மறியுமுகத்தா னறியப்படுவதா மெனத் தன்னையறியுமாறு கூறியதூஉ மாயிற்று.

அற்றேல், சிவன் சீவ னிரண்டுஞ் சித்தாகவும், சிவனெதிர் முனைத்து நிற்றலாற்றாத வசத்துச் சீவனாலறியப் படுவதாய் அதனெதிர் முனைத்துநிற்ற லாற்றுதற்கு என்னையோ காரணமென்பாரை நோக்கி யெழுந்தது வருஞ்செய்யுளென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு.

இந்த விரண்டும் ஒன்றையொன் றறியாது. ஆனால் பின்னை யறிகிற முதலெது என்ற பரிணாமவாதியை நோக்கி யருளிச்செய்கிறார்.

சத்தசத் தறிவதான்மா - அந்தச் சிவத்தோடுகூடிச் சிவத்தையும் இந்தப் பிரபஞ்சத்தோடுகூடிப் பிரபஞ்சத்தையும் அ

றியுமது ஆன்மா. அவையிரண்டினு மான்மா வேறெதென்னில்?—தானசத்தும் சத்துமன்று - இவனுடைய வுண்மையை விசாரிக்கில் அந்தக் காணப்படாத சிவமுமல்ல இந்தக் காணப்பட்ட பிரபஞ்சமுமல்ல. இரண்டு மல்லவென்று நீசொல்லில்? ஆன்மா வென்பதொரு முதலில்லையாகவேண்டும். என்றுநீசொல்லில்?—நித்தனாய் சதசத்தாகி நின்றிடுமிரண்டின்பாலும் - தனக்கொரு அறிவில்லாதவனுமாய்ச் சிவத்துடனே கூடினபொழுது சிவமுமாய்ப் பிரபஞ்சத்துடனே கூடினபொழுது பிரபஞ்சமுமாய் இரண்டின் பகுதியிலும் நிற்பன். ஆனாலிந்த முதல் காணப்பட்டு நிற்குமோ காணப்படாது நிற்குமோ வென்னில்?—ஒத்துடனுதித்துநில்லா துதியாதுநின்றிடாது - சிவத்தோடுகூடிச் சிவமெனவும் பிரபஞ்சத்தோடுகூடிப் பிரபஞ்சமெனவும் நின்றதாகிலும் பிரபஞ்சம்போல இதுவென்னத் தோன்றியு நில்லாது, அந்தச் சிவம்போலத் தோன்றாமலும் நில்லாது. ஆனாலிதுதோன்றி நின்றமுறைமை யெங்ஙனே யென்னில்?—வைத்திடுந் தோற்றநாற்ற மலரினில் வருதல்போலும் - இவ வுடம்போடுகூடித் தோன்றுமுறைமை சொல்லுமிடத்து பூவோடுகூடித் தோன்றுகிற மணம்போலும்.

இதற்குப் பிரமாணம் சங்கற்பநிராகரணம். "கடவுளுமுடலின் கண்படல் துஞ்ச - விடர்நலமுறுக விறங்குதலேறுக - வெறுவகையேனுஞ் செய்கையின்றதலும் - பலகலையுலகி னிலவுதலானும் - மெண்ணிரும்பொருளு மிரவியுமொழிபக் - கண்ணொன்று காண்கையினாலும் - பாசப்பகுதியு மீசனுமொழிபப் - பசுவுமுண்டென் றிசையவேண்டின்றே" என்றும், சிவஞானபோதம். எ-சூ, ங-வெ, "அருவுருவந் தானறித லாயிழையா யான்மா, வருவுருவ மன்றாகு முண்மை—யருவுருவாய்த், தோன்றியுட னில்லாது தோன்றாது நில்லாது, தோன்றல் மலர்மணம்போற் றொக்கு" என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, சத்தையு மசத்தையு மறிகிற தான்மா வென்றும் இதனுடைய வுண்மை சத்துமல்ல வசத்து மல்லவெ ன்றும் அழியாதவனுமாய் சத்தோடு கூடினபோது சத்தும் அசத்தொடு கூடினபொழுது அசத்துமாய் நிற்கையால்சதசத் தென்றும் திரிசியமாகத் தோன்றி நில்லாதென்றும் தோனுரு மல் நில்லாதென்றும், இது தோன்றுகிற முறைமை மலரின்மண ம்போலு மென்னுமுறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

சத்தசத்தறிவதான்மா-தம்மு ளொரிமையிலாத சத்து அச த்தென்கின்ற வவ்விரண்டினையு மறிவதான்மாவேயாம்,—தான் சத்து மசத்துமன்று - அதுதான் சத்தசத்தென்கின்ற அவ்விர ண்டிற்கும் வேறாய்,—இரண்டின்பாலு மொத்துட னுதித்துநில் லாது - அவ்விரண்டின் பகுதியினும் விளங்கித்தோன்றி யவற் றோடொப்ப நிற்பதுமன்று,— உதியாது நின்றிடாது-விளங்கா து சூநியமாய் நிற்பதுமன்றாய்,—வைத்திடுந் தோற்ற மலரின் நாற்றம் வருதல்போலும்-நிற்குமுறைமை மலரின்கணுற்ற மவ் விருவகையுமன்றி யதன்க ணடங்கித் தோற்றுமாறுபோல,—ச த்தசத்தாகி நித்தனாய்நின்றிடும்-சத்தினுமசத்தினுஞ் சார்ந்தத ன்வண்ணமா யடங்கித் தோற்றுவதோ ரியல்பாகலான் அஃது வைபோலத் தனித் தறியப்படுவ தொன்றன்றி யவ்விரண்டனை யு மறியுமுகத்தா னசத்தாவதோ ரூரிமையுடைத்தா யறிவின்றி நிற்கும் என்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

சத்தாகிய சிவனது சந்நிதியி லசத்தாகிய பிரபஞ்சஞ் சீவியாதென்று ஆன்மாவின் கண்ணே சீவிக்கு முறைமை தொகுத்து முடித்து, மேற் சிவனுக் குச் சுத்தமுமான்மாவுக் கசுத்தமு மநாதி யென் றுணர்த் துகின் றார்.

சுத்தமெய்ஞ் ஞானமேனிச் சோதிபா லசத்தஞ் ஞான, மொத்துறு குற்றமெல்லா முற்றிடு முயிரின்க ண்ணே, சத்துள போதேவேறுஞ் சதசத்து மசத்து மெல்லாம், வைத்திடு மநாதியாக வாரிநீர் லவணம் போலும். (கூ)

(இ-ள்.) சுத்தமெய்ஞ் ஞானமேனிச் சோதிபா லசத்தஞ் ஞான மொத்துறு — சுத்தனுமாய் ஞானசொரூபனுமாய்ப் பரஞ்சோதியுமாகிய சிவனது சந்நதியில் அசத்து மஞ்ஞானமுங்கூடி நில்லாது,

குற்றமெல்லா முற்றிடு முயிரின் கண்ணே — ஆன்மாவினிடத்தி லிந்தக் குற்றமெல்லாம் பொருந்தா நிற்கும். சுத்த ஞானதற்கும், சித்தஞானதற்குங் காரணம் யாதெனில்? படிகமுந் தாமிரத்துக்குங் காரண மில்லாதவாறுபோலச் சிவனுக்கு மான்மாவுக்கு மநாதியெனவறிக.

சத்துள போதேவேறுஞ் சதசத்து மசத்து — சத்தான சிவ னநாதியான போதே யவனுக்கு வேறாகிய சதசத்தாகிய வான்மாவு மசத்தாகிய பாசமு மாக விம்மூன்று பொரு

மெல்லாம் வைத் ளு மநாதியென்றே வேதாகமங்கள் சொல்
திடுமநாதியாக லும். அஃதென்போல வென்னில்?
வாரிநீர்லவண அந்தச் சிவன் கடலைப்போலவு மான்மா
ம்போலும் நீரைப்போலவும் பாச முப்பைப் போலவு
மென் றுவமித்தது. எ-று.

ஈண் டுவமை தொக்கதெனவறிக.

இப்படி யுவமித்த தெக்காரணத்தா லெனில்? கடலு நீரு முப்புஞ் சகசமாயிருக்க உப்பானது நீரைப்பொருந்தி நிற்ப தொழிந்து கடலைப் பொருந்தாத வாறுபோலப் பாசமும் பசு வைப்பொருந்துமதொழிந்து பதியைப் பொருந்தா தாதலா லெனவறிக. (ரு)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேலசத்து மஞ்ஞான மாயிருக்கிறது அநாதிநின்மல நித்தியஞானப் பிரகாச ஸ்வரூபங்களைப் பொருந்கா தாகை யால் பாரிசேஷத்தால், ஆன்மாக்களைப் பொருந்துமென்பதுகூ றுதல்.

சுத்தமெய்ஞ்ஞானமேனிச் சோதிபால சத்தஞ்ஞானமொ த்துரு-நிர்மல நித்தஞானியாகிய சிவனிடத்தேஸ்வரூபி அநித்ய ஞானமாகிய ஆணவாதி பாசங்கள் பொருந்தாது,—குற்றமெல் லா முற்றிடு முயிரின்கண்ணே-ஆணவ மாயை கன்மமென்னு மல ங்களெல்லாம் ஆன்மாவினிடத்திலே பொருந்திடும்,— சத்தள போதேவேருஞ் சதசத்து மசத்துமெல்லாம் - சற்சித்சொரூப மாகிய சிவனைப்போலே அநாதியே சிவனுக்குவேருக ஜடமாகிய ஆணவ கேவலத்தில் ஜடம்போலும் பலசத்தியோக சுத்தாவத் தையிலே சித்துருபமாகவும் நிற்பதுண் டாகையால் சித்தசித் தென்னும் விகாரத்தையுடைய வான்மாக்களும் அசத்தாகிய

ஆணவமாயை கன்மங்களு முள்ளது. சிவன் விபுவாகில் சிவனுக்குவேறாக ஆன்மாக்களும் ஆணவாதி பாசங்களும் நிற்குமென்பதற் கவகாசமில்லை. இவைகள் சிவனுக்கு அந்நியமாக நிற்குமென்னில் சிவன் விபுவென்பது கூடாதென்னுஞ்சங்கைக்குமேல்திட்டாந்த புரஸ்ஸரமாக உத்தரங் கூறுகின்றது;—வைத்திடு மநாதியாக வாரிநீர் லவணம்போல - ஆழம் நீளம்அகலமாகிய சமுத்திரசல வாகாச ப்ரதமாகிய ஆகாசமும் அதிற் சலமும் ஜலத்தைக் கலந்து நிற்குமுப்பும் போல் பதியும் பசுவும் பாசமு மநாதியே இப்படி நிற்கும். அவகாசப் பிரதமாகிய சமுத்திராகாசத்திலே சலத்திற் கலந்துநிற்கிற வுப்பில்லாததுபோலச் சிவன் விபுவாயிருந்தும் சிவனிடத்திலே பசுபாசங்களினின்றும் அந்தப்பசுபாச தர்மங்கள் சிவனிடத்திலே பொருந்தாதென்று வேதாகமங்கள் ஸ்தாபிக்கும்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

மலசத்தி பண்ணும் அஞ்ஞான தோஷ மான்மாவுக்கே சிவனுக் கில்லையென்று செப்புகின்றார்.

சுத்த மெய்ஞ்ஞானமேனிச் சோதிபால் - சத்தச் சித்துருபசிவன்கண்;— அசத்தஞ்ஞான மொத்துறு - அசத்தமல மாரோபிக்கும் ஞாநுபாவ மூர்ச்சா மோகம்பொருந்தா.—உயிரின்கண்ணே - பசுக்களிடத்தில்,— குற்றமெல்லா முற்றிடும் - மூர்ச்சா மோகம் பிரஞ்ஞாமோக முதலிய தோஷமெல்லாம் பொருந்திடும்.—சத்துளபோதே வேறும்- சிவசங்கற்ப சாந்நித்திய முண்டாக நீங்கும்.—சதசத்து மசத்து மெல்லாம் - பசுவர்க்கம் பதிவர்க்க மிம்மூனறும்,—வாரி-நீருக்கிடங்கொடுக்குமாகாயம்,—நீர்-அவ்விடத்தி னிறையும் ஜலம்,—லவணம்போ

ல-ஆகாயத்திற் றேயாது சலத்திற்றோயுமுப்பு. இவைகள் போல;—அநாதியாக வைத்திடும்-நித்தியமாய் நிச்சயிக்கப்படும்.

வாரிக்கொப்பு பதி, நீருக்கொப்பு பசு, லவணத்துக்கொப்பு பாசம்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

அநாதியாகிய முப்பொருள்களுட் சிவமுயி ரிரண்டும் நித்தவியாபகசித்தாதற் பொதுமையா னொக்குமாயினும், அவற்றுட் சிவம் அதிசூக்கும சித்தாதலின் ஆணவ அசத்து நிற்றலாற்றாது, உயிர் தூலசித்தாதலின் அதனெதிர் முனைத்து நிற்றலாற்றுமென்பது. கடலு நீருந் தூயனவேயாகவுங் கடலின் மருவலாற்றாது கடனீரின் மருவிநிற்கு முப்புப்போலு மாகலான் ஆணவைக்கு வேறு காரண மில்லை யென்பதாம்.

இலவணமென்பது னிகரம் விகாரத்தாற் றொக்கது.

'சுத்தமெய்ஞ் ஞானமேனிச் சோதிபா லசத் தஞ்ஞான மொத்துறா' என்ற விதனுனே முன்னை யிருகூற்றையு மொரு வாற்றானே வலியுறுத்தவாறு மாயிற்று.

தூலசித்தெனபது உயிரென்னும் பெயரானு மூவமையானும் பெறுதும்.

அற்றேல், சிவமதிசூக்கும சித்தென்பதும் உயிர் தூலசித்தென்பதும் எற்றாற்பெறுது மென்பாரை நோக்கி யெழுந்தது வருஞ் செய்யுளென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு.

இப்படி மலருமணமும்போலச் சரீரத்திலேதோன்றிநின்ற றிகிறதுகா னல்லோ அந்தச் சிவமென்ற பரிணாமவாதியை நோக்கிச் சரீரசம்பந்தம் பசுமுதலுக் கொழிந்து பதிமுதலுக் கில்லை யென்று அருளிச்செய்கிறார்.

சுத்தமெய்ஞ்ஞானமேனிச் சோதிபா லசத்தஞ்ஞான மொத்துறு - நின்மலமாயிருக்கிற வுண்மைஞானமே திருமேனியாயுள்ள சிவசொரூபத்திலே அசத்தாகிய பாசஞ் ஜடமாகையாலே சென்று பொருந்தமாட்டாது.—குற்றமெல்லா முற்றிடு முயிரின்கண்ணே - இந்த அஞ்ஞானங்களாகிய பாசம் ஆன்மாவினிடத்திலே பொருந்திநிற்கும். இவனுக்கு இந்த அஞ்ஞானம் எந்தஅவதரத்திலே கூடினது என்ற பரிணாமவாதியை நோக்கி யருளிச்செய்கிறார் —சத்துளபோதோவேறுஞ் சதசத்து மசத்துமெல்லாம் வைத்திடுமனுதியாக வாரிநீர்லவணம்போல - பதிமுதலுள்ளவன்றே அந்தப் பதிக்கு வேறாயிருக்கும் ஆன்மாவும் பாசமுமுண்டாகையாலே இவை மூன்று முதலும் அநாதியென்றே வேதாகமங்கள் சொல்லும். அதென்போல வென்னில்? ஆழமகலமுண்டாகிய கடலும் அதிற் றண்ணீரு மதி லுப்பும்போல.

இதற்குப் பிரமாணம் பரிணாமவாதி மறுப்பு சங்கற்பநிராகரணம்., 'பிறர்க்கெனிற்பிறரும் பிறர்க்காம்பொருளும் - பொருட்கமை கருவியு மதற்குபாதானமுஞ் - செய்கையுமொன்றே ரைவகைத்தாளெடு-மாருச்சைவர்கூறுரென்றல்-நின்சித்தாந்த மவசித்தாந்தமென்" என்றும், சிவஞானபோதம், எ-சூ, ந-வெ, மெய்ஞ்ஞானந் தன்னில் விளையா தசத்தாத, லஞ்ஞான முள்ள மனைதல்கான்—மெய்ஞ்ஞானந்,தானே யுளவன்றேதண்கடல்நீ

ருப்புப்போல், தானே யுளமுளவாய்த் தான்" என்னுமதுங் க
ண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, அநாதியே சிவனுக்கு நின்மலமாயி
ருக்கிற ஞானமே திருமேனி யாகையால் அவனிடத்தில் அஞ்
ஞானமாயிருக்கிற பாசம் பொருந்தாதென்றும், அநாதியே யா
ன்மாவினிடத்திலே பாசங்கள் பொருந்தி நிற்குமென்றும், சிவ
னுள்ளவன்றே ஆன்மாக்களும் பாசங்களும் ஆக மூன்று முத
லு மநாதியே நின்றமுறைமை சமுத்திரமும் அதிற் றண்ணீரும்
உப்பும்போலும் என்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

சுத்த மெஞ்ஞானமேனிச் சோதிபா லசத்தஞ்ஞான மொ
த்துறு - அநாதியாகிய முப்பொருளுட் சிவமுயி ரிரண்டு நித்த
வியாபக சித்தாதற் பொதுமையா னொக்குமாயினும், அவற்றுட்
சிவ மதிசூக்கும சித்தாதலி னுண்டசத்து நிற்றலாற்றாது.—உ
யிரின் கண்ணே குற்றமெல்லா முற்றிடும் - உயிர் தூல சித்தா
தலி னதனெதிர் முளைத்து நிற்றலாற்றும்,— சத்துளபோதே
வேறுஞ் சதசத்து மசத்துமெல்லா மாநாதியாக வைத்திடு
ம்-சத்தாகிய அச்சிவமென் றுள்ளதன்றே வேறாகிய சதசத்தா
கிய வுயிர்களு முள்ளவாக அவ்வுயிர்களை யசத்தாகிய பாசங்
க ளநாதியாகப் பற்றி நிற்றல்,—வாரிநீர் லவணம்போலும்-கட
லுநீருந் தூயனவே யாகவும் கடலின் மருவலாற்றாது கடனீரி
ன்மருவிநிற்கு முப்புப்போலு மாகலா னுண்டைக்கு வேறுகா
ரண மில்லை.

மறைஞானதேசிகர் உரை.

ஆதலாலான்மா சுதந்தரனல்லவென்றதூஉங் கர்த்தாவே சுதந்திரனென்பதூஉ முணர்த்துகின்றார்.

அறிவிக்க வறிதலானு மழிவின்றி நிற்றலானுங், குறிபெற்ற சித்துஞ்சத்துங் கூறுவ ருயிருக்கீச, னெறிநித்த முத்தசுத்த சித்தென நிற்பனென்றும், பிறிவிப்பன் மலங்களெல்லாம் பின்னுயிர்க் கருளினாலே. (ச)

(இ-ள்) அறிவிக்க வறிதலானு மழிவின்றி நிற்றலானுங் குறிபெற்ற சித்துஞ்சத்துங் கூறுவருயிர்க்கு — ஆன்மாவுக்குக் கூறுவம் யாதென்னில்? ஒருத்தரறிவிக்கத் தான் பின் பதலையறிகையாலும், அஃதெக்காரணத்தாலென்னில்? சதசத்தென்னும் பெயருண்டாகையால் அறிவித்த போது அறிகையா லறிவாயிற்று. அல்லாத போதறியாதிருத்தலா லறியாமையாயிற்று. என்னவே அநித்தியமு நித்தியமு மென்று கூறியதாம். அழிவதாயிருக்கிற சடவத்துக்களைப்போல வழிந்து போகாம லெக்காலமு நித்தியமா யிருக்கையாலே நித்தியமென்று சொல்லப்படும், ஆன்மாவுடன் கூடிநின் றுன்மபோதமாகச் சீவித்த தத்துவங்களாகிய பசுபோத மழிந்து போகையா லநித்தியமென்று சொல்லப்படும். இந்தமுறைமையாயிருக்கு மான்மாவுக் கடையாள மறியாமலு மறிவு நித்தியமு மநித்தியமு மாகிய சத சத்தென்று சொல்லுவர்.

ஈச னெறிநித்த முத்த சுத்த — சிவனுடைய நெறியாதெனில்? ஒருக்காலு மழிவில்லா தவனுமா யநாதியே மலமில்லா

சித்தென நிற்ப னென்றும்	தவனுமாய்ச் சுத்தனுமாய்ச் சிறப்பினை யுடையதாய்ச் சித்தென்னும்படி பெயரைப் பெற்று நிற்பன். அஃதன்றி
பிறிவிப்பன் மலங்க ளெல்லாம் பின்னுயிர்க் கருளினாலே.	அந்தச் சர்வஞ்ஞனாவ னான்மாக்களிடத்து வைத்த காருண்ணியத்தினாலே பின்பு ஞானசாரியனை யதிட்டித்துக் கொண்டு சிவதீக்கையினா லான்மாக்களுக் குண்டாகிய வாணவாதி பாசங்களை விடுவித்து மோட்சத்தை யடைவிப்பன் எ-று.

இதற்குக் கிரணாகமத்தும் வாயவ்யத்து மறிக. (ச)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

கீழ்ச்சொன்ன மூன்று விருத்தத்தின் பொருளும் மேல் விருத்தத்திலே தொகுத் துரைக்கின்றது.

அறிவிக்க வறிதலானு மழிவின்றி நிற்றலானுங் குறிபெற்ற சித்துஞ் சத்துங் கூறுவதுயிர்க்கு-ஆன்மாவானவன் சிவனறிவிக்க வறிகையினாலும் நாசமில்லாம னிற்கையாலு மாணவத்தா* னிரோதிக்கப்பட்ட சித்துருபனும் நித்தியனுமென்று சொல்லுவ தான்மாவே யென்றறி.—ஈச னெறிநித்த முத்தசுத்த சித்தென நிற்பனென்றும்- சிவனே நித்தியனு மநாதிமுத்த சுத்தசித்து ரூபனுமாக நிற்பனென வறிக. ஆகையா லான்மாக்களுக்குஞ் சிவனுக்கு மிவ்வாறு பேதமுண்டு.—பிறிவிப்பன் பெத்தமெல்லாம் பின்னுயிர்க் கருளினாலே- அநாதிமுத்தனாகிய சிவன் ஆன்மாக்களுக்குப் பந்தமாகிய வாணவ மாயை கருமங்களைத் தன்னுடைய சமவாயசத்தியினாலே நீக்கிடுவன், நீக்கவே ஆன்மாக்கள் சாதிமுத்தராவர்கள்.

இதனால் அசித்தானது அசத்தாகையால் சித்தாகிய சத்தின்முன் னில்லாத தாகையால் சத்து சித்து ஸ்வரூபனாகிய சிவன் றனக் கன்னியமாக வொன்றை யறிவதுமில்லை. பிரபஞ்சஞ் ஜடமு மசத்துமாகையா லந்தப் பிரபஞ்ச மொன்றை யறிவது மில்லை. † பரிசேஷாத் நித்தியமாகிய சிவத்தையு மநித்தியமாகிய ப்ரபஞ்சத்தையு மறிவ திவ்விரண்டுக்கும் ‡ பிரதக்கான வான்மாவென்று கூறியது.

தஉ-க்தம் ஸிவஜ்ஞாநபோயெ — நாவிஃ வ்ஃ வஸ்நியஸ கிஞ்-ந விக்தமெ உமெஹியஃ। ஶுவஷுஶிவயொவெ-த்தா யஸ்ருஹா்த்தாதயொஃவஶுமிதி.

அன்னிய மிலாமை யரற்கொன்றுணர் வின்று, மன்னியமிலா னசத்தைக் காண்பவனே,—லன்னியமாய்க், காணுனவன் முன் கதிர்முன் னிருள்போல, மாணுவசத்தின்மை மற்று.

* நிரோதித்தல்-தகைதல், † பரிசேஷாத்-ஒழிவினாலே, ‡ பிரதக் - வேறு.

ஸ்ரீமத் ததிவர்ஞஶ்ர மாசாரிய வர்ய சைவ
பரிபாலக சிவாக்ரயோகி பண்ணின
சிவஞானசித்தி ஏழாஞ் சூத்திர
வியாக்கியானம் சமாப்தம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

ஆன்மாச் சிவன்போற் சச்சிதானந்த ரூபியென்பது சாற்றுகின்றார்.

அறிவிக்க வறிதலானும் - சிவன் சகலாவத்தையிலே கலாதி தத்துவங்களில் தத்துவ தேவதா பாரம்பரியமாய் வந்து ம

றைந்து நின்று அவைகளைச் செலுத்தி அவரவர் பருவ மருகமா கப் போதிக்க உணர்தலானும்.

உம்மையினுற் சுத்தாவத்தையிலே சாக்ஷாத் தீக்ஷா லக்ஷ ணத் தனது சத்தியால் சிவன் முன்சொல் முறைமையில் முற் றும் மலமுத்த மலவாசனுமுத்தி சிவத்தவ வியத்திபண்ணி அ றிவிக்கத் திரும்பத் திரும்பச் சிவசத்திவிளக்கு விரும்பாதுவி ட்டு ஸ்வயம் பிரகாசமாய்ப் பதிமுதலிய சர்வபதார்த்தங்களைப் போக்கிய போத்திருத்துவத் தன்மைவிட்டு இடைவிடாது எ ப்போது முள்ளமைமாத்திர மாய்ப் பார்த்திருத்தலானும்,—

அழிவின்றி நிற்றலானும் - நித்திய சத்தியமாதலானும்;—

குறிபெற்றசித்துஞ் சத்துங் கூறுவருயிருக்கு-(ஒரு மொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே என்பதனுல்) தன திலக்ஷ ணமாக அடைந்த சச்சிதானந்தரூப முயிருக்குப் பெரியோர் பேசுவர்,—

அறிவின்றிநிற்றலானும் என்றுபாடங் கொண்டால் குறிபெ ற்றவசத்துஞ்சத்து மென்று பாடங்கொணடு சதசத் தான்மா வென்பதற்குக் காரணமாய்க் கேவலாவஸ்தையிலே பிரஞ்ஞா மோகமின்றி மூர்ச்சாமோகியா யிருத்தலானும்,—

குறிபெற்றவசத்துஞ் சத்துங் கூறுவர் உயிர்க்கு - தனது செயற்கை லக்ஷணமு மியற்கை லக்ஷணமுமாக வடைந்த பசுத் துவ சிவத்துவமு மான்மாவுக்குப் பெரியோர்படிப்பார்கள்,—

ஈசனெறி நித்தமுத்தசித்த சித்தெனநிற்பனன்றே-சித்தெ ன்பதனை நாலிடத்துங்கூட்டுக,—

பிறிவிப்பன்மலங்களெல்லாம் பின்னுயிர்க் கருளினுலே- முன் சொல்லிய பிரகாரம் மலமுத்தி சிவத்துவ வியத்திபண் ணுவன்.

சிவஞானயோகியருரை வருமாறு.

தன்னறிவு நிகழ்ச்சிக்கு வியஞ்சகத்தையின்றி யமையாமை யால் உயிர் தூலசித்தென்பதூஉம், அவ்வுயிரின் கண்ணதாகிய மலத்தை நீங்கிபறிவிக்கும் வியஞ்சகப் பொருளாகலாற் சிவந் தனக்கொரு வியஞ்சகம் வேண்டாத அதிசூக்குமசித்தென்பதூஉம், இனிது விளங்கு மென்பதாம்.

இவ்வியல்பு கண்ணொளி ஞாயிற்றினொளிகளின் வைத்துக் கண்டுகொள்க.

சித்தியல்புபோற்சத்தியல்பினுள் வேற்றுமை காட்டுவார், அழிவின்றிநிற்றலாற் சத்தங் கூறுவதென்றார்.

அறிவிக்கவறிதலானு மறிந்தபின் னழிவின்றி நிற்றலானு மென்றுரைக்க.

அறிந்தபின்னென்றது ஆற்றலான் வந்தது.

சுத்தசித்தென்புழியுஞ் சத்தென்பது கூட்டியுரைக்கப்படும்.

பிறிவிப்பன் மலங்களெல்லாம் பின்னுயிர்க் கருளினாலே என்றவிதனால் வருகின்ற சூத்திரத்திற்குத் தோற்றுவாய் செய்ததூஉமாயிற்று.

இவைமூன்று செய்யுளானும் முறையே உயிர்க்குச் சத்தசத்திரண்டினையு மறியுமுரிமை யுண்மையும் அதற்குக் காரணமும் அஃது தாண்டுளதாமாறுந் தெரித்துணர்த்திப் பாரிசேடவளவையாற் பெறப்பட்ட மூன்றாங்கூற்றுப் பொருள் வலியுறுத்தப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

அறிவு ஒன்றாயிருக்குமதொழிந்து இரண்டு பகுதியா யிருக்குமோ, எல்லாமொன்றென்ற பரிணாமவாதியை நோக்கி; சிற்ற

றிவென்றும் பேரறிவென்றும் இரண்டாயிருக்குமென்று அருளிச்செய்கிறார்.

அறிவிக்கவறிதலானும்-ஒருவ னறிவிக்க அறியுமதொழிந்து தானாக வொன்றையு மறியாதிருக்கையாலும்,—அழிவின்றி நிற்றலானும் - ஒருகாலத்தினு மனித்தியமின்றி நித்தியமாய் நிலைபெற்று நிற்கையாலும்,—குறிபெற்றசித்தஞ் சத்துங் கூறுவதுமிருக்கு - குறிக்கப்பட்ட ஆணவமலத்தாலே அநாதியே பந்திக்கப்பட்ட வறிவென்றும் இப்படி மலசம்பந்தமா யிருக்கையாலே யசேதனமென்றும் ஆன்மாவுக்குச் சொல்லுவார்கள். பரமேஸ்வரனுடைய வுண்மையை விசாரிக்கில்?—ஈச னெறிநித்த முத்த சுத்தசித்தென நிற்பனன்றே-பரமேஸ்வரன் அநாதியே நிற்கிற முறைமையழி பாததுமாய் மலரஹிதமுமாயிருக்கிற சுத்தஞானமே தனக்குச்சொரூபமாய்நிற்பன். இதுவன்றியும்,—பிறிவிப்பன மலங்களெல்லாம் பின்னுயிர்க் கருளினாலே-அநாதியே யான்மாக்களுக் குள்ள பாசபந்தங்களையெல்லா முன்சொன்ன முறைமையிலே கன்மம் புசித்துத் தொலைந்து மலபரிபாகம் வந்த பினபு தன்னுடைய காருண்ணியத்தினாலே விடுவியாநிற்பன்.

இதனாற் சொல்லியது, ஆன்மாக்க ளறிவிக்க வறிகையினாலும் அநாதியே பாச பந்தியாயிருக்கையினாலும் சிற்றறிவாயிருக்குமென்றும், பரமேஸ்வரன் அநாதியே மலரகிதனுமாய்ச் சிற்சொரூபனுமாய்ச் சர்வஞ்ஞனா யிருக்கையினாலே தனது காருண்ணியத்தினாலே ஆன்மாக்களுடைய பாசங்களை நீக்குவிப்பனென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

உயிருக் கறிவிக்க வறிதலானும் - உயிரினுக்குத் தன்னறிவு

நிகழ்ச்சிக்கு வறிவிக்க அறிதலாகிய வியஞ்சகத்தையின்றி யமை யாமையானும்'— அழிவின்றி நிற்றலானும் - அறிந்தபின் னழி வின்றி நிற்றலானும்,— குறிபெற்ற சித்துஞ்சத்துங் கூறுவது- தூலசித் தென்பதூஉம் தூலசத் தென்பதூஉங் கூறப்படும்,—ஈ சனுயிர்க்கு மலங்க ளெல்லாம் பிறிவிப்ப னருளினாலே-முதல்வ னவ்வுயிரின் கண்ணதாகிய மலத்தை நீங்கியறிவிக்கும் வியஞ்ச கப் பொருளாகலான்,—நெறிநித்த முத்த சுத்த சித்தென நிற் பனன்றே - சிவன்றனக் கொருவியஞ்சகம் வேண்டாத அறிகு க்கும சித்தென்பதூஉஞ் சத்தென்பதூஉ மினிதுவிளங்கு மென பதாம்.

இவை மூன்று செய்யுளானு முறையே யுயிர்க்குச் சத்தசத் திரண்டினையு மறியு முரிமை யுண்மையு மதற்குக் காரணமு மஃ தாண்டுள காமாறும் தெரித் துணர்த்திப் பாரிசேடவளவையா ற்பெறப்பட்ட மூன்றுங் கூற்றுப் பொருள் வலியுறுத்தப்பட் டது.

எ-சூ, க-உ-ந-அதிகரணங்கள் முடிந்தன.

ஏழாஞ் சூத்திரம் முற்றிற்று.

"நனிநான்கு"
என்ற ஏழாஞ்சூத்திரம்
நான்கு
முடிந்தது.

பாயிரமுட்பட - உருஉ.

சிவமயம்.

சிவஞானசித்தியார் சுபக்ஷம்.

அ—சூ ஞாதுஞ்ஞான இலக்கணம்.

மறைஞானதேசிகர் உரை

மேலெட்டாஞ் சூத்திர மென்னுதலிற்றோ வெனின்? முற்கூறிய பாசஞானம் போம்படிக்குப் பதிஞான மறிவிக்கு முறைமையினை யுணர்த்துத னுதலிற்று.

மேலித்தலைச் செய்யு ளென்னுதலிற்றோ வெனில்? இந்த ஆன்மாவுக்கு மயக்கத்தைத் தீர்த்துக் குருவா லுணர்த்தப்பட்டு முத்தியடையு முறைமை யுணர்த்துகின்றது.

மன்னவன்றன் மகன்வேட ரிடத்தேதங்கி வளர்ந்தவனை யறியாது மயங்கிநிற்பப், பின்னவனு மென்மகனீ யென்றவரிற்பிரித்துப் பெருமையொடுந் தானாகப் பேணுமாபோற், றுன்னியவைம் புலவேடர் சுழலிற்பட்டுத் துணைவனையு மறியாது துயருந்தொல்லுயிரை, மன்னுமருட் குருவாக வந்தவரினீக்கி மலமகற்றித் தானாக்கிமலரடிக்கீழ்வைப்பன். (க)

இ-ள்.) மன்னவன்றன் மகன்வேடரிடத்தே தங்கி வளர்ந்தவனை யறியாது மயங்கிநிற்ப	ஓரவதரத்தி லிராசாவி னுடைய பிள்ளையானவன் வேடரிடத்திலே நின்றுவளர்ந்து பின்பு தன்னுடைய பிதா வின்னாரென் றறியாமன் மயக்கத்தை யுற்றுநிற்க

பின்னவனுமெ ன்மகனீ யென்ற வரிற் பிரித் துப் பெருமையொடுந் தானுகப் பேணுமாபோல் — பின்பந்த ராசாவு மயக்கநீங்கி யென்னுடைய பிள்ளையா யிருக்கு மென்றவனுக்குப் பிறப் புணர்த்தி யந்தவேட்டுவச் சேரியினின்றும் விடுவித்துக் கொண்டு தனக்குண்டான வரிசையுடனே தானுகப் பார்க்குமுறைமைபோல,

துன்னிய வைம்புலவேடர் சுழலிற்பட்டுத் துணைவனையு மறியாது துயருந்தொல்லுயிரை — நெருங்கிய பஞ்சேந்திரியமாகிற வேடர் சுழலிலே யகப்பட்டுத் தனக்கொரு கர்த்தாவுளனென்னு முணர்விழந்து மயக்கமுற்று வருந்துகிற வான்மாவை சிவன்றனது காருண்ணியத்தினுலே

மன்னு மருட் குருவாகி வந்து — ஞானத்தைப் பொருந்திய குருவை யதிட்டித்துக்கொண் டெழுந்தருளி வந்து.

அவரினீக்கி — அந்தவிந்திரிய மாகிய வேடரிடத்தினின்று விடுவித்து.

மலமகற்றித் தானுக்கிமலரடிக் கீழ்வைப்பன். — குருவினுற் செய்யப்பட்ட தீக்ஷையினுலே மலங்களைச் சோதித் ததன்வலியைக் கெடுத்துத் தனைப்போல வெண்குணத்தையுமுடைய னுக்கித் தனது சீர்பாதத்தை யடைவியாநிற்பன் எ-று.

சிவனென்பது - தோன்ரு வெழுவாய்.

வைப்பன் - பயனிலை.

ஆன்மாவுஞ் சிவனிடத்திலே பாசங்களுமன்றி யிருந்து பின்பு பாசங்களோடேவந்து கூடினுரோ வென்னில்? அப்படியன்று. இராசாவின மகன் பிறந்தனறே தன்னையு மின்னுனென் றறியாமற் ருய்தகப்பனு மின்னுரென் றறியாது வேடரிடத்திலே வளர்

ந்தாற்போல விந்தவான்மாவு மநாதியே தன்னையுஞ் சிவனையு மறியாதே பாசத்தோடே கூடிநிற்கின்ற தன்மைக்குச் சொன்னதாயிற்று. அந்த வேடர்கள் காமாதியாகிய வனத்திலே சஞ்சரித்துச் சத்தாதி விடயங்களாகிய நாயகனைக்கொண் டந்தக்கரணவழியேசென் றான்மாவை மயக்கஞ் செய்கையினா லேகதேசவுவமை கூறினாராயினும், முற்றுவமையாக்கி வந்ததுகொண்டு வாராததுமுடித்த லென்னுந் தந்திரவுத்தியாற் கூறியதென வறிக.

துயருறுமென்பது துயருமென விகாரப்பட்டது.

தொல்லுயிரென்றார் அநாதியாக வருகையினால்.

துணைவனையு மென்னு மும்மை யெதிரது தழீயவெச்சம் (க)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேலெட்டாஞ்சூத்திர முப்பத்தொன்பது விருத்தத்தினாலே சிவன் ஆன்மாக்களுடைய பாச * மோசனம்பண்ணும் படிக் கூறுகின்றது.

துன்னியவைம் புலவேடர் சுழலிற்பட்டுத் துணைவனையு மறியாது துயருந்தொல்லுயிரை மன்னுமருட் குருவாகி வந்தவரினீக்கி மலமகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன் - ஆன்மாவானவன் றன்னுடைய பொருளைப் பறிக்கும் வேடரைப்போல சப்தாதியான விஷயங்க ளைருங்கித் தன்னுடைய வறிவைக் கவர அதினாலே பிரமித்துத் தன்னுடைய ஸ்வரூபத்தையுந் தனக்கு † சுகிருத்தாகிய சிவனையுமறியாம லநாதியே இவ்வாறு துயரத்தைப் பொருந்திட மலபரிபாகத்தில் பூமியின்க ணாசாரிய மூர்த்தியை யதிட்டித்துவந்து நின் றந்த ஆசாரிய ரிடத்திலே கிருபையையும் பக்குவான்மாவி னிடத்திலே விநயத்தை

யுஞ் சிவனேயுண்டாக்கி யந்தவாசாரியராலே யநுக்கிரகத்தைப் பண்ணி இந்திரியாதிகளை யான்மா தனக் கன்னியமாக வறிந்து பிரியும்படிசெய் தாணவ மலத்தையும் நீக்கிச் சிவன் றானே யாக்கித் தம்முடைய பாதாரவிந்தத்தின் கீழேவைப்பன்.

தானுக்கியென்பது போதும், மலரடிக்கீழ் வைப்பனென்பது வேண்டாவென்னில்? அப்பொழுது சிவசமமேயாம். சிவனுட னந்நியமென்ப தில்லையாம். சிவனுட னந்நியமென்பதற்காகக் கூறவேண்டியது. அப்பொழுது சிவன் வேறறக் கலந்திருப்ப னென்பதுபோதும், பாதத்தின்கீழென்ப தேனென்னில்? § சர்வத : பாதமாகையால், பரிபூரணனான சிவன் வியாபியும் ஆன்மா வியாப்பியமு மாகையால், முத்தியிலு மான்மா சிவனை வியாபியாதோ வென்னில்? ஆன்மா வியாபித் தறிந்ததெல்லா மசத்தாகையால் சிவ னொருக்காலும் வியாப்பியனல்ல வியாபகனே. ஆன்மா சர்வ வியாபியென்ப தெவ்வாறென்னில்? சர்வப் பிரபஞ்சத்தையும் வியாபித்தறியு மாகையினாலே சர்வவியாபியென்றது. சிவன் வியாபகனே! ஆன்மா சர்வாவஸ்தையிலும் சிவனுக்கு வியாப்பியனே! சிவனுக் ¶ கந்யமாகவே சிவானந்தாநுபவத்தை யநுபவிக்க வுரித்தாகிய ஆன்மா சிவனுக் கந்ய பாவத்தையு மடைந்து கிஞ்சிஞ்ஞதையையு மடைந்து நின்றதெங்ஙன். சிவ னாசாரிய மூர்த்திமானாகி யெழுந்தருளி யநுக்கிரகித்த தெவ்வாறென்ன? இதற்குமேல் திட்டாந்தமாக.

மன்னவன்றன் மகன் வேடரிடத்தே தங்கி வளர்ந்தவனை யறியாது மயங்கிநிற்பப் பின்னவனு மென்மகனீ யென்றவரிற் பிரித்துப் பெருமையொடுந் தானுகப் பேணுமாப்போல்- ராஜாவினுடையபிள்ளை வேடச்சேரியிற் பிறந்து வேடரிடத்தே வளர்ந்து பிதாவாகிய விராஜாவையு மறியாமல் தான் க்ஷத்திரியனென்கிறதையு மறியாமல் +கிராதபாவத்தையுந் தரித்திரத்தையும்

பொருந்தி மயங்கிநிற்க வவனுக்கு வேடனாயிருப்பதினும் ராஜாவாயிருப்ப ததிகமென்னு மறிவுண்டாகியபின் பிதாவாகிய விராஜா நீ யென்னுடைய பிள்ளையென் றிளவரசுப்பட்டங் கட்டினாற்போல வொக்கும்.

இதனாற் சிவ னாசாரியமூர்த்தியை யதிட்டித்துக்கொண்டுவந்து பக்குவான்மாக்களை நீ யிந்திரியமாகிய வேடரோடே கூடியிருந் துன்னுடைய ஸ்வரூபத்தை யறிகிறா யில்லையென் றுபோதிக்க வந்த அந்யனாகிற பக்குவான்மாவும் சப்தாதி விஷயேச்சைகளை விட்டுத் தத்பதவாச்சியமாகிய பரமசிவத்தை யடைவனென் றிதன்பொருள்.

* மோசனம் - விடுவித்தல, † சுகிருத்து - ஆப்த்தன், ‡ விநயம் - வணக்கம், § சர்வத - நாலுபக்கத்திலும், ¶ அந்நியபாவம் - வேறாயிருக்கை, + கிராதபாவம் - வேடததன்மை.

தது³க்தம் ஶிவஜ்ஞாநபோ³தே⁴ — ஸுதஸ்ஸோ இந்த்³ரியவ்யாத⁴பா⁴வேந ஸாத⁴வஸ்தே²தி போ³தி⁴த: । முக்த்வா தாந் ஶரண்யாநந்யோ யந்ந: ப்ராப்நோதி தத்பத³ம் இதி.

தது³க்தம் தந்த்ரே — ப்ரணவப்ரணகஶ்ரீ ஶாந்து யோக³விஸர்ஜநாத் । க³ந்த⁴ஸ்ப³ர்ஹாஸ்யவிநயே த⁴யாந்தப்ராஹகஸ்யவ । காரணே ஸுநயோ யதா² ஸ்தி²தயோயதா²ஸ்வஸ்வஹேதுப³லஹதி.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

அவ்வள விவ்வளவா யாகமங்களின் ஞானபாதப் பொருள் போதித்துச் சிலகலப்புப் பகுப்பாய்ப் பொதுச்சிறப்பாக யோகபாத முதல் முப்பாதப் பொருள் போதிப்பதற்கு முயலுகின்றார்.

இராஜா நீயென்று ராஜா ராஜபுத்திரனுக்கு ராஜகுலம் போதித்ததுபோலச் சிவன் குருக்குறி கொண்டு தீக்ஷைபண்ணித் தீக்ஷாங்கமாகுஞ் சித்தாந்த மஹாவாக்கியஞ் செப்பிச் சிவகுலம் போதித்துத் தியானிப்பித்துப் பசுத்துவம் பறித்துச்சிவத்துவங் கொடுத்துத் தானாக்கி.

இவ்விடத்துச் சொல்லிருந்தபடி பொருளுரைத்தால் சிவாத்துவைதி ஒரு பிரகாரத்தாற் சிவாவேசவாதி யிருவருஞ் சயிப்பார்கள் ஆதலால் கருதரன்போனிற்ப னென்று மேற்காட்டும்படிக்குத் தன்னைபோலாக்கி, மலரடிக்கீழ் வைப்பன்-மலரடியின் கீழே வைப்பன்.

இங்கு மிருந்தபடி பொருளுரைக்கிற் றடத்த லக்ஷணந் தாக்கும்.

இலக்ஷணையினால், அடி - சிவசத்தி என் றுரைக்கில் ஆன்மாவின் சடத்தன்மை விடாத வியாப்பியத்துவம் சங்கிராந்தவாதந் தான் சாரும்.

ஆதலால், மலரடியென்பது மலருமடி, மலராநின்றவடி, மலர்ந்தவடி என்றுவிரியும்.

வினைத்தொகை யாதலாற் றனது சத்திபோற் பிறப்பொருட் பிரமேய மாத்திரத்தில் அறிதற் றொழில் பண்ணி மலர்ந்த தற்பொருட் பிரமேயமாகிய எதிர்முக சிற்சத்தி மாத்திர

த்தி லறிதற் ெறுழில் பண்ணி, மலர்ந்த திரும்பியமுக சிற்சத்தி ரூபியாகச் செய்வன்.

மலரடி வியத்த சிற்சத்தி யென்று தாற்பரியம்.

சத்த ஸ்பரிச முத லைம்புலத்தை விஷயீகரிக்கு மைம்பொறியை ஐம்புலமென் றுருகுபெயராற் சொல்லியது.

சுழல் என்றது தன வழிக்கிழுக்கு மொருபால் துணைவன்.

சிவன் தனது வியாபகத்து ளடங்க வியாப்பியமாய் வைப்பனென்று சிலர் பொருளுரைத்தார்கள்.

அவர்கள் வியாப்பியனுனால் ஆன்மா சடமாவனென்றும் ஏன் செப்பா திருந்தார்கள்.

திரும்ப வியாப்பிய வியாபகலக்ஷணத்தால் வேற்றுமை வரும், ஐக்கியமேயில்லை என்பது ஏன அறியாதிருந்தார்கள். ஆதலால் ஒப்பு ஒரு சாதியைக்கியமே யந்நியத்துவம்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

மேலைசூத்திரத்தாற் சாதித்துப்பெறுமுரிமை தனக்கே யுண்டென்பதுணர்ந்த வுயிர்க்கு,அப்பேறு தனக்கு வேண்டற்பால தென்பதூஉம் அதற்குச் சிறந்த சாதனமாவ திதுவென்பதூஉம் அதுவருவாயு முணர்ந்தன்றிச் சாதனஞ்செய்தற்கு மனவெழுச்சி செல்லாமையின், மனவெழுச்சி சேறற்பொருட்டு அவற்றையுணர்த்துதற் செழுந்தது எட்டாஞ்சூத்திரம்.

உயிர் தன்னிலையிற் பிறழ்ந்து ஐம்பொறிகளுட்பட் டறிவிழந்து வருந்துமாற்றை, நித்தமுத்தசுத்த சித்தெனப்படுமவ் வீசன், குருவடிவங்கொண் டெழுந்தருளிவந்து, தவமுதிர்ச்சி நோக்கி யுணர்த்தி, மீட்டுத் தொனனிலையிற் பிறழாது வைத்து வாழ்விப்பனென்பதாம்.

இங்ஙனம் வாழ்வித்தல் ஈசனுக்குக் கடப்பாடாதலினிது விளக்குவார், பிள்ளைமைப்பருவத்து மடமையால் வேடருட்பட்டுப் பரதந்திரனாய்த் தன்சாதிக்குரிய பெருந்தகைமையிழந்து இழிதொழில் பயிற்றி வருந்தும் மன்னவகுமாரனாவானொருவனுக்கு அவன்றந்தை செய்யுமுதவியை யெடுத்துக்காட்டிக் கூறினார்.

மும்மலச்சுழலிற்பட்டு வருந்துதல் காட்சிப்புலனாதல் செல்லாமையின், அதனையொழித்துக் காட்சிப்புலனா யெளிதினறியப்படுவதாகிய ஐம்பொறிச்சுழலிற் படுதலே யீண்டெடுத்துக் கூறினார்; தூலவருந்ததிநயம்பற்றிச் சோபானமுறைமையினவைத்துணர்த்துதல் மரபாகலின்.

துணைவனையுமென்னு மும்மை தன்னையறியாமையேயன்றியென இறந்தது தழீஇயது : சிறப்புமாம்.

மன்னுமருளென்றது ஈண்டிறப்பிறவத்தின் மேற்று.

மூன்றாவது விரித்துரைக்க.

என்மகனீயென்றென உவமையுட் கூறுதலாற் பொருளினும் உணர்த்தியென்பது வருவித்துரைக்கப்பட்டது.

“தவத்தினுணர்த்த” என்றார் முதனூலாசிரியரும்.

இங்ஙன முரைத்தவாற்றான் முதனூலெட்டாஞ்சூத்திரம்போல இச்செய்யுளும் நாற்கூற்றதாமாறு கண்டுகொள்க.

நிரம்பவழகியருரை வருமாறு.

மேல் ஞானத்தினையுணரு முறைமையினை யுணர்த்துத னுதலிற்று.

இப்படிப் பாசபந்தியாயுள்ள வான்மாக்களை யவரவர்கள் பக்குவத்திலே சிவன் ஆசாரியமூர்த்தமாக வெழுந்தருளி இரக்ஷிக்கிற முறைமை யருளிச்செய்கிறார்.

மன்னவன்றன் மகன்வேட ரிடத்தேதங்கி வளர்ந்தவனை யறியாது மயங்கிநிற்ப - இராஜாவினுடைய புத்திரன் வேடரிடத்திலேநின்று வளர்ந்து வேடருடைய வாதனையாலே தன்னுடைய பிதாவைத் தானறியாமல் மயங்கிநிற்ப அந்தப் பிள்ளையுடைய வறியாமை நீங்கின வவதரத்திலே,—பின்னவனு மென்மகனீ யெனறவரிற்பிரித்துப் பெருமையொடுந் தானாக்கிப் பேணுமாபோல் - இவனுக்கு பிரஞ்ஞை யுண்டானபின்பு அந்த இராஜாவும் என்னுடைய பிள்ளையாயிருக்கு நீ என்று அந்த வேடரிடத்தினின்றும் விடுவித்து பெருமையுடனே தானாசப்பார்த்து அந்தப் பிள்ளையை இரக்ஷிக்கிற முறைமைபோல,—துன்னிய வைம்புலவேடர் சுழலிற்பட்டு - கன்மத்துக் கீடாக வான்மாவைப் பொருந்தப்பட்ட ஐந்து விஷயமாகிய வேடருடைய சுழலிலே யகப்பட்டுக்கொண்டு,— துணைவனையுமறியாது துயருந் தொல்லுயிரை - தனக்குப் பிராணனாய் நிற்கிற சிவனையு மறியாமல் அநாதியே துக்கப்படுகிற ஆன்மாவை,—மன்னுமருட் குருவாகி வந்தவரினீக்கி- அநாதியே யிவனிடத்திலேநிற்கிற ஞானந் தானே ஆசாரியமூர்த்தியாக வெழுந்தருளிவந்து அந்த ஐம்புலவேடரிடத்து நின்றும் விடுவித்து,—மலமகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன் - அநாதியே யிவனுக்குண்டான மலங்களையும்போக்கிச் சிவசொரூபமாக்கித் தன்னுடைய சீர்பாத கமலத்தின்கீழே வைப்பன்.

இதனாற் சொல்லியது, கன்மத்துக்கீடாக அநாதியே பொருந்தப்பட்ட சத்தாதி விஷயங்களிலே மயங்கிச் சிவனையு மறியாமற் றுக்கத்தை யனுபவிக்கிற வான்மாவுக்கு அநாதியே யிவனிடத்திலே நிலைபெற்றுநிற்கிற ஞானந்தானே ஆசாரியமூர்த்தியாக வெழுந்தருளிவந்து அந்தச் சத்தாதி விஷயங்களினின்றும் இவனை விடுவித்து அநாதியே இவனுக்குண்டான மல

ங்களையும் போக்கி சிவசொரூபமாக்கித் தன்னுடைய சீர்பாத கமலத்தின்கீழே வைப்பனென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

மன்னவன்றன்மகன்-மன்னவன் குமாரனொருவன்,—வேடரிடத்தே தங்கிவளர்ந்து - பிள்ளைமைப் பருவத்து மடமையால் வேடருட்பட்டுப் பரதந்திரனாய் தன்ஜாதிக்குரிய பெருந்தகைமை யிழந் திழிதொழில் பயிற்றி வளர்ந்து,—அவனையறியாதுமயங்கி நிற்ப - அவ்வரசனையுந் தன்னையு மறியாது மயங்கி நிற்க,—பின்னவனு மென்மகனீ யென்றவரிற் பிரித்து - தந்தையாகிய அவ்வரசனு நீபென் மகனென் றறிவுறுத்தி யவ்வேடரினின்றும் பிரிப்பித்து,—பெருமையொடுந் தானாக்கிப் பேணுமாபோல்-பெருந் தகைமையோடுந் தானாம்வண்ணஞ் செய்யுமாறு போல,—தொல்லுயிர் - நிலைபெற்ற வுயிர்,—துன்னிய வைம்புல வேடர்சுழலிற் பட்டு - த்ன்னிலையிற் பிறழ்ந்து நெருங்கிய வைம்பொறியிற்பட் டறிவிழந்து,—துணைவனையு மறியாது துயருறும்-தன்னையுந் தலைவனையு மறியாது வருந்துமாற்றை,—மன்னுமருளின்-இறப்பி றவமுதிற்சிநோக்கி,—குருவாகி வந்து - நித்தமுத்த சுத்த சித்தெனப்படு மவ்வீசன் குருவடிவங் கொண்டெழுந்தருளிவந் துணர்த்தி,—அவரினீக்கி மலமகற்றி- பொறியினின்று நீங்குமாறு மலவலிமையைக் கெடுத்து,—தானாக்கி மலரடிக் கீழ்வைப்பன்-மீட்டுத் தொன்னில்லையிற் பிறழாது வைத்து வாழ்விப்ப னென்பதாம்.

இங்ஙன முறைத்தவாற்றுன் முதனூலெட்டாஞ்சூத்திரம் போல இச்செய்யுளு நாற் கூற்றதாமாறு கண்டுகொள்க.

மறைஞானதேசிகர் உரை.

முதற்சூத்திரமுதலேழாஞ்சூத்திர மீருசப் பதிமுதலியமு
ப்பொருளையும் பொதுவிதியா லுணர்த்தி; மேற் பதி மூ
வகைப் பட்ட வானமாக்கட்குச் சத்தினி பாதாநு கு
ணமாகச் சாதார நிராதார தீக்கைசெய் தனுக்கிர
கஞ்செய்புமுறை தொகுத் துணர்த்துகின்றார்.

உரைதருமிப் பசுவர்க்க முணரின்மூன்ற மூய
ரும்விஞ் ஞானகலர் பிரளயாகலர் சகலர், நிரையின்ம
ல மலங்கன்ம மலங்கன்மமாயை நிற்குமுத லிருவர்க்கு
நிராதாரமாகிக், கரையிலருட் பரன்றுவிதா சத்தினி
பாதத்தாற் கழிப்பன்மலஞ் சகலர்க்குக் கன்மவொப்பி
ற், றரையிலாசான் மூர்த்தியா தாரமாகித் தரித்தொழி
ப்பன் மலஞ்சதுர்த்தா சத்திளிபாதத்தால். (உ)

(இ-ள்.) உரைதருமிப்பசுவர்க்க முணரின்மூன்றும்	வேதாகமங்களிற் கூறுவதாயுள்ள வான்மவர்க்கங்களை விசாரித் தறியின் மூவகையாம். அவர்யாரெனில்?
உயரும் விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர்	உத்தமரொன் றோதிய விஞ்ஞானகலர் ப்ரளயாகலர் சகலரென மூவகையாம்.
நிரையின் மல மலங்கன்ம மலங்கன்ம மாயை நிற்கும்	நிற னிரைப் பொருள் கோளாக வுடைவே விஞ்ஞானகலர் ஆன்மாக்களுடைய ஞானக் கிரியைகளைத் தடுக்கும தாகிய வாணவமல மொன்றையு முடையர்கள், பிரளயாகலர்

மூலமலத்தினோடுங் கன்ம மலமாக விரண்டுடன் சம்பந்தரா யுள்ளார், சகலர் மலங் கன்ம மாயை யெனக் கூறிய மும்மலங்களுடனுங் கூடினவர்கள்.

முத லிருவர்க்கும் — முதற்கட் கூறிய விஞ்ஞானகலர் பிரளயாகல ராகிய விருவர்க்கும்

நிராதாரமாகிக் கரையிலருட்பரன் றுவிதாசத்திநிபாதத்தாற் கழிப்பன் மலம் — எல்லையில்லாத கிருபா சமுத்திரமாகிய சிவன் றானேவந்து தீவிரந் தீவிரதரமாகியசத்திநிபாத மிரண்டினையும் பதிவித் தவலோகனம் பண்ணி யவர்களுக் குள்ளே நின்று பாசத்தினைச் சேதித் தவர்களறிவினை விளக்குவன், பிரளயா கலர்க்குச் சிவன் றானே தேவகுருவாய் வந்து மலகன்மங்களை யவலோகனத்தினாலே போக்கி யவர்களறிவை விளக்குவன், "முத்திதரு—நன்னெறி விஞ்ஞானகலர் நாடுமல மொன்றினையு, மன்னிலையே யுண்ணின் றறுத்தருளிப்—பின்னன்பு,மேவா விளங்கும் பிரளயா கலருக்குத்,தேவாய்மலங் கன்மந்தீர்த்தருளி" எனனும் போற்றிப் பஃறொடையானு முணர்க.

சகலர்க்குக் கன்மவொப்பிற் றரையிலாசான்மூர்த்தி யாதாரமாகித்தரித்தொழிப்பன் மலஞ்சதுர்த்தா சத்திநிபாதத்தால். — சகலர்க்குச் சிவன் யாவனொரு வில்லியானவனோரிலக்கைக்கட்டித் தூக்கி யசைவற நின்றகாலம்பார்த் தெய்யு மாறுபோ லான்மாக்கள் செய்த புண்ணிய பாவங்கள் தொலையொத்த காலம்பார்த்துப் பூமியின்கண் ணாசாரிய மூர்த்தியை யதிட்டித்துக் கொண்டு மந்தமாதியான நால்வகைச் சத்திநிபாதானுகுணமாகத் தீக்கையினைச் செய் தவரவர்கள் பாசத்தைச்சேதித் தவர்களறிவை விளக்கி யதிபக்குவரா யுள்ளவர்க்குச் சுவாநந்தானுபூதி

யிற்றிலைத் திருக்கும்படி முத்தியை யடைவிப்பன். மந்தபா கராயுள்ளவர்களை வித்தேசுரர் பதத்திலு மந்திரேசுரர் பதத்தி லு ருத்திரர்க ளுடைய பதத்திலு மடைவிப்பன். எ-று.

சிவன் கழிப்பன்,

பரன் ஒழிப்பன்,

என விரண்டெழுவாயு மிரண்டு பயனிலையும்.

இதற்குச் சிந்திய விசுவத்து மறிக.

இது பொழிப்பு.

மேலகலம்.

அவையாவன?—

விஞ்ஞானகலத்துவ சித்தி யெக்காரணத்தா லெனில்? ஆசாரியனாலே தீக்கையிற் கலாதத்துவ மளவாகக் கன்மங்களைச் சோதிக்கப் படுகையாற் றான் மாயையினுடையவு மான்மாவுடையவும் வியாபாரங்களைப் பிரித்தறிகின்ற ஞானத்தினாலே தானந்த வாதாரயோக தியானுதியிற்றான் மிகுந்த தபசினுடைய சித்தியினாலேதான் கன்மாநுகுணமாகத் தனுவை பெடுத்துக் கன்மங்கள் புசித்துத் தொலைந்த காலத்திற்றான் வைராக்கியத்தான் சன்னியாசானுட்டானத்தாற்றான் எல்லாக் கன்மங்களு நசிக்க வதற் காதீனமாயிருக்கிற மாயையு மின்றி யாணவ மலமொன்றுஞ் சேட்டித்து நிற்கையினு லுண்டான பெயரென வறிக.

பிரளயாகல சித்தி யெக்காரணத்தா லென்னில்? ஆசாரியனாற் றீக்கிதரான சகலர் பிரகிருதியையு மான்மாவையு முள்ளபடி யறிந்த ஞானத்தினாலே யந்தப் பிரகிருதியினின்று முத்தனாய்ச் சிருட்டிகாலத்திற் பிராகிருத தேகத்தைபெடாமல் மாயேயமாகிய சரீரத்தைப் பொருந்தி யதிலுண்டான கன்மபலங்களை யந்தந்தப் புவனங்களிற் புசித்துத் தீர்கையாற் குண

தத்துவத்துக்கு மேலுண்டான் கன்மமு மாணவமு மாகவிர ண்டுடனுங் கூடினவர்க ளாகையினு லுண்டாகிய பெயரென வறிக.

சகலத்துவ சித்திக்குக் காரணம் யாதெனில்? ஆணவ முதலிய மூன்று பாசத்துடனுங்கூடி யாணவத்தாற் றடுக்கப்பட்ட ஞானக்கிரியைகளை யுடையராய் மாயையினுலே மோகித்து நானுவிதமான கன்மங்களைப் புசித் ததனைப புசிக்கிற காலத்தி லாகாமியமேறி யதனைச் சஞ்சிதமாகக் கட்டுப்பட்டதனைப் புசித்துத் தொலைக்கை காரணமாகப் புரியட்க ரூபியாய்ப் பிராகிருதமான வடிவையெடுத ததிலுண்டான் போகங்களைப் புசிக்கிறவ னுகையா லுண்டாயபெயரென வறிக.

முற்கூறிய விஞ்ஞானகலர், அபக்குவர் பக்குவர் எனவிரு வகையாம்.

அபக்குவமாவது - ஆமம். அஃதாவது. நென்முதலிய தானியங்கள்.

பக்குவமாவது புசிக்கப் படுவது. அஃதாவது, சோறுகறி முதலானவைகள்.

இத்தன்மைபோல ஆன்மாக்கள் சங்காரத்துக்குக் காரணமாகிய மலமும் பக்குவமெனவு மபக்குவமெனவு மிருவிதப் படும். ஆதலால் விஞ்ஞானகலர் பக்குவமல ரபக்குவமலரென விருவகையர்.

இவற்றிற் பக்குவமலராவார் மலபரிபாக மிகுதியாலே சிவனுலே யனுக்கிரகம்பெற்றுச் சாயுச்சியத்தை யடையுமவர்.

அபக்குவ மலராவார் மலபரிபாகமாந்தியத்தாலே சிவனவர்களுடைய ஞானக்கிரியைகளை விளக்கி யனுக்கிரகஞ் செய்யப்பட்டிருக்கையினும் சுத்தாத்துவாவுக் கதிகாரிக ளாகையா லதிகார மலத்தைப்பொருந்தி யிருப்பர்கள்.

இந்த அபரமுத்திபெற்றவர்கள் யாவரெனில்? உத்தமராகிய பிரணவர் சுதாக்கியர் சிவர் தீர்த்தர் காரணர் சுசீலர் சூக்ஷமர் காலர் தேசசர் அங்சு எனக்கூறிய அணுசதாசிவர் பதின்மரு மதோமாயா புவனத்துள்ளார்க்குப் பக்குவம் வந்தவிடத் தனுக்கிரகஞ்செய்து சதாசிவதத்துவத்திற் போகங்களைப்புசித் தந்த மூர்த்தியைச்சூழச் சேவித்துக்கொண் டிருப்பர்கள். இவர்களுக்குப் போகத்தில் வைராக்கியம் பிறந்தாலப்பொழுது சிவன் பிரசன்னராகி மேலானபதத்தை யடைவர்கள்.

இனி மத்திமராகிய அட்டவித்தியேஸ்வரராவார் அநந்தர் சூக்குமர் சிவோத்தமர் ஏகநேத்திரர் ஏகருத்திரர் திரிமூர்த்தி சீகண்டர் சிகண்டி. இவ்வெண்மரு மீசுரதத்துவத்திலிருக்கு மீசுரனைச் சூழ்ந்திருந்து மாயையிற் கீழுண்டாகிய சிருட்டியாதி கிருத்தியங்களைச் சிவன தேவலாற் செய்பவர்கள்.

இவர்களுக்குப் படைப்புமுதலிய தொழில்களெக்காரணத்தாலெனில்? சாந்தமூர்த்தியாயிருக்கிற சதாசிவரிவர்களெண்மரையுந் தமது சரீரத்தினின்றுந் தோற்றுவிக்கையாலுண்டானதெனவறிக.

ஆனாலிவர்களெண்மருந் தம்மி லொக்குமோ வெனில்? அநந்ததேவ நாயனாரைப்பற்ற மற்றவர்களுக் கெல்லா மொவ்வொருகலை யடைவே குறைந்தகுறைந்து வருதலாலுத்தரோத்தர மொருவர்க்கொருவர் விசிட்டரென வறிக.

முந்தின வநந்ததேவ நாயனார்க்கு அதிகாரத்தில் வைராக்கியம் பிறந்தா லவரைச் சிவன் சங்காரகாலத்திலே மோக்ஷத்தை யடைவிப்பன். அதன்பின் னவர்க்கடுத்த சூக்கும ரவ்வதிகாரத்தைப்பெற்றுக் கிருத்தியங்களை யவனைப்போலச் செய்வர். மற்றவர்களு மிவ்வா றடைவே யதிகாரத்தைப் பண்ணுவர்கள்.

எல்லார்க்கும் பிந்தின ஸ்ரீகண்டருடைய பதம் பாழ்கிடவாமற் சிவன் விஞ்ஞானகலரிற் பக்குவ முண்டானபேரி லொருவனை யடையே யெண்மரிற் குறையாமற் கூட்டுவர்.

இதற்குப் பௌட்கரம், வாயவ்வியம், சுவச்சந்தம், இரத்தினத்திரயம், ரௌரவம், சர்வஞானோத்தரம், மதங்காகமத்து மறிக.

இனி யதமராகிய சத்தகோடி மகாமந்திரங்களின் மூன்றரைக்கோடி பெயரை மலபரிபாக மிகுதியாலே கீழுள்ள கிருத்தியங்களிலு மேலுள்ள போகத்திலும் வைராக்கியம் பிறந்து வெறுப்புண்டாகையால் விஞ்ஞானகலர் விஷயமாகவு மாயாகர்ப்பாதிகாரிகள் விஷயமாகவுஞ் சிவ விரதிகாரணமாகத் தீக்கைபண்ணுதற்குக் காரணமாகப்பண்ணி யவர்களை மகாப்பிரளயத்திலே முத்தியை யடைவிப்பன்.

மற்ற மூன்றரைக்கோடி பெயரையுஞ் சிவ னதோமாயையி லுதிக்குந் தூலகாரியங்களுக்குக் கர்த்தாவாக்கிச் சுத்தவித்தையி லுண்டான போகங்களைப் புசிப்பித்துத் திதிகாலத்திற் சகலர் நிமித்தமாக வாசாரியரை யதிட்டித்துக்கொண் டனுக்கிரகஞ் செய்யுங் கன்மத்துக்கான பூதமாக விருந்து மஹாப்பிரளயத்திலே முத்தியை யடைவிப்பன்.

அபக்குவரான விஞ்ஞான கேவலிகளாவா ரியாவரெனில்? ஆணவ மிகுதியா லளவற்ற வானமாக்கள் ஞானக்கிரியைகள் மிகவு மறைப்புண்டு மலபரிபாகம் வருமளவுஞ் சுத்தவித்தைக்குக் கீழாக மாயைக்கு மேலாக நடுவே நெடுங்காலங் கேவலத்தைப் பொருந்திக் கிடக்கையால் முத்தான்மாக்க ளெனப்பெருமல் விஞ்ஞான கேவலிகளெனப் பெயர்பெற்றிருப்பர்கள். ஆதலால் விஞ்ஞானகலர் நால்வகையரென வறிக.

இதற்கு ம்ருகேந்த்ரத்துங் காமிகத்து மறிக.

இனிப் பிரளயாகலர் பக்குவமலர் அபக்குவமலரென விருவகையாம்.

பக்குமலர் யாவரெனின்? மலபரிபாக மிகுதியாலே சிலர்க்கெல்லாக் கன்மமும் பக்குவமா யுள்ளவிற் சிவன் தீவிரந் தீவிரதரமென்னுஞ் சத்தியைப் பதித்து நிரதிகார தீக்கையாற் றிருக்கண்சாத்தி யவர்கள்பாசத்தைச் சேதித் தவர்கள் ஞானக்கிரியைகளைப் பிரகாசிப்பித்து மோட்சத்தை யடைவிப்பன்.

மற்ற வபக்குவரைக் கன்மாநுகுணமாகப் போகத்தைப் புசித்துத் தொலைக்கையின் பொருட்டுப் புரியட்டகத்தைப் புவனசதேகமாகிய யோனிகடோறும் பிறந்துழன்று திரிந்து மலகன்மங்கள் பரிபாகமானவாறே சிவன் சத்தியைப்பதித் தவர்க ளறிவைவிளக்கி மோட்சத்தை யடைவிப்பன்.

புரியட்டகத்துடனே கூடினவர்களுட் சிலரை யநந்த தேவநாயனார் அப்பு தத்துவதத்தி லமரேசராதியாகிய புவனத்தி லிருக்குங் குய்யாட்டகராகிய வெண்மர்க்கும் தேயுவி லரிச்சந்திராதி புவனத்தி லிருக்கும் அதிகுய்யாட்டகர்க்கும் வாயுவில் தெயையாதியாகிய குய்யாத் குய்யாட்டகர்க்கும் ஆகாயத்தில் வத்திரபதாதிபராகிய பவித்திராட்டகர்க்கும் அகங்காரத்தில் சகலண்டாதியாகிய தாணுவட்டகர்க்கு மாகப் புவனாதிபர்கள் நாற்பதின்மரையு மிவர்களை யடைவே யதிபராக்கி யோசியாநிற்பன்.

முற்கூறினவர்களன்றிச் சேடித்துள்ளாருட் சிலர்செய்த கன்மத்தாலே ப்ரளயாகலரா யிருந்தார்களேயாயினு மவர்களுக்கு மலபரிபாகம் வாராதபடியாலே யநந்ததேவ நாயனார் மாயாகர்ப்பாதி காரிகளாக கலாமத்தகத்தி லிருக்குங் ககநேசுரர்முதலிய வெண்மரையுங் குணதத்துவத்தி லிருக்குங் குராதர் முதலிய வெண்மரையும் நூறு ருத்திரர்க்கு மதிட்டா

தாவாய்ச் சூக்கும ப்ரகிருதியி லிருக்கும் வீரபத்திரரும் குணத த்தவத்தி லிருக்கும் ஸ்ரீகண்ட பரமேசுர னதற்குக்கீழ்ப்பட்ட புவனங்களுக்கும் பிரமா முதலாயினோர்க்கும் பிரமாண்டத்த ராகிய கபாலீசுரமுதலிய வுருத்திரர்க ளூற்றுவரு மாக நூற் றொருபத்தெண்மரையுங் கர்த்தராக யோசியாநிற்பன்.

ஆகப்பிரளயாகலர் மூவகையரெனவறிக.

இவர்கள் சிருட்டிகாலத்தி லதிகார பந்தத்தாலே கலாதி களுடனே கூடிப் பந்தப்படினுங் கலாதிகளாற் சகலரைப்போல வசியரல்ல.

அஃதென்போலவென்னில்? பாம்பின் கண்டத்திலிருக்கிற விடமிருக்கினு மதனை வாதியாதவாறுபோல விவர்களு மதனு ல் வாதையுறார்க ளெனவறிக.

இதற்குச் சிந்தியவிசுவத்து மிருகேந்திரத்துங் கிரணத்து மறிக.

சகலராவார் யாவரெனில்?

தேவர்க ளிருடிகள் மானுடர்முதலாயினோ ரெனவறிக.

அவர்க ளதிபக்குவர் மந்தபக்குவர் அபக்குவரென மூவ கையர்.

அதிபக்குவராகிய தேவர்கள் தானவர்கள் முதலாயினோ ரைச் சிவன் தீவிரமுதலிய நால்வகைச் சத்திநிபாதம் பதித்துத் திவ்வியமான திருமேனியை யதிட்டித்துக் கொண்டவர்கள் பா சத்தைச் சேதித் தவர்கள் ஞானக்கிரியைகளை விளக்கித் திதிகா ல முடியுமளவுஞ் சுத்தாத்துவாவிற் போகங்களைப் புசித்திரு ந்து மகா சங்காரத்திலே மோட்சத்தை யடைவர்கள்.

தேவர்கள் முதலென்பதனால் எறும்பீறாக வெனவறிக.

சிவன் மந்த மலபாகராயுள்ள வைநயிகர் முதலாயினோரை மந்த மந்ததரமென்று சொல்லப்பட்ட சத்திநிபாதம் பதித் தாசா

ரியனை யதிட்டித்தவர்களுக் கநுகுணமான தீக்கையைச் செய்தவர்க ளவர்கள் யாதொரு பதத்திலே யிருந்து போகம் புசிக்க விரும்பினார்க ளந்ததந்தப் பத்திலே யோசியாநிற்பன்.

மலபரிபாகம் வாராத வபக்குவரை யவர்களவர்கள் செய்த கன்மத்துக் கீடாகப் பௌனசரீரத்தை பெடுப்பித்துப் போகங்களைப் புசித்துத் தொலைந்தவாறே மலபரிபாகம் பிறப்பித்தாசாரியன் தீக்கையைப்பண்ணி மோட்சத்தை யடைவிப்பன்.

இதற்குக் காமிகத்திற் பத்தாநுக்கிரகபடலத்து மருகேந்த்ரத்தும் சூக்குமசுவாயம்புவத்தும் சிந்தியவிசுவத்து மறிக.

"இமையா ரிமைப்பவ ராகுஞ்சகல" மென்னுந் திருவாக்கிலும், 'மும்மலங்கூடி முயங்கி மயங்குவோ, ரம்மைச் சகலத்தர் தேவாசுரர் நர,ரிம்மையின் வேதா வரிமிகு கீழுந்தத், தம்மிறையொளிபுக்கார்க்குச் சகலரே" எனவறிக.

இம்மூவரையுந் தொகுத்தறியிற் பதின்ம ரெனவறிக.

"விஞ்ஞானர் நால்வரு மெய்ப்பிரளயாகலர், தஞ்ஞான மூவருந் தங்குஞ் சகலத்து, ளஞ்ஞான மூவரு மாகப்பதின்மராம், விஞ்ஞான ராதியர் வேற்றுமைதானே." (உ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் மூவகை யான்மாக்களுக்குஞ் சிவ னநுக்கிரகம்பண்ணு முறைமை கூறுகின்றது.

உரைதருமிப் பசுவர்க் முணரின்மூன்றும் - கீழ்ச்சொல்லிப் போந்த ஆன்மாக்க ளறியுங்கால மூன்றுவர்க்கமாம். அவைகளாவன:—

உயரும் விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் - அதோமாயைக்கு மேலாயிருக்கும் விஞ்ஞான கலரொன்றும், மாயாமத்

தியவர்த்தியான பிரளயாகல ரென்றும், மாயாதோபாகவர்த்தியான சகலரென்றும்.

விபுவாயிருக்கிற ஆன்மாக்களுக்கு மாயைகதேசித்தவஞ் சொல்லுகிறது * அநுசிதமென்னில்? உண்மை. மாயாகாரியங்களினாலே யேகதேசத்தை யடைகையினாற் கூடும்.

* அநுசிதம் - தகாதது

மாயைநீங்கி யாணவமொன்றேயான விஞ்ஞான கேவலர்க்கேகதேசத்துவ மெவ்வா றென்னில்? அதோமாயையி லுண்டான போகங்களெல்லாம் புசித்துச் சுத்தமாயா போகத்துக்குச் சிவாநுக்கிரக மில்லாதிருக்கையான் மாயாத்வய மத்தியே † யவஸ்தானஞ் சொல்லப்பட்டது.—

† அவஸ்தானம் - இருப்பு

ததுக்தம் பௌஷ்கரே – மாயாதோ வர்த்ததே சாதே
க்ரமேணைஷாம் வ்யவஸ்தி²தி꞉ । அவஸ்தா²நந்து ப³த்³த்⁴யே
நபக்ஷ்யேதயோ விப்ரஸுவ்ரத꞉ ॥ விஜ்ஞானகேவலா
ணாந்நாம் ப³த்³த⁴ஸ்தோர்த்⁴வமவஸ்தி²தி꞉ । ஶுத்³த⁴ஸ்ய வ்யாபக
கேவல மாயாயாஞ் ஸம்ஸ்தி²தி꞉ கிமு ॥ ஸ்ருஷ்டௌ ஸம்ஹார
ப்ரஜ்ஞா ப⁴ஸ்வாயத꞉ ஸம்ஸ்தி²த꞉ । மோக்ஷ்யமாண
த்யாதஸ்ய ஸம்ஹாரேசைவ பு³த்⁴யஸ்ய ச ॥ அவஸ்தா²து வ்ய
வஸ்தா²ஶேஷ்ய ஸம்ஹாரார்த²ம் விஜ்ஞானகேவலா꞉ ।

நிரையின்மல மலங்கன்ம மலங்கன்ம மாயைநிற்கும்-நிறைநிரையே விஞ்ஞானகலர்க் காணவ மலமொன்றும், பிரளயாகலர்க் காணவமுங் கர்ம்மமும், சகலர்க் காணவமுங் கன்மமு மாயையும் பொருந்திநிற்கும்.

ஆகுதும், கன்மமானது மாயாகாரியமாகிய புத்திகருமம் பிரளயத்திலுமாயையே யதற் காதாரம். கன்மத்துக்குக் காரணமு மாதாரமு மாயை யாதலால் பிரளயாகலர்க்கு மாயையில்லாமல் கன்ம மெப்படியிருக்கும். கன்மமில்லாமல் விஞ்ஞானகலர்க்கும் போகமெப்படி யுண்டாமென்னில்? இவ்விடத்துப் பிரளயாகலர்க்கு மாயை யில்லையென்றது. லக்ஷணையாக மாயை மாயேயமாகிய பிரகிருதியை விஞ்ஞான கலர்க்குக் கன்மத்தினாலேயல்ல, போக மாணவ பரிபாகத்தினாலே.

இனிச் சகலர் பிரளயாகல னுசிரத்துக்கும் விஞ்ஞானகலனுகிரத்துக்கும் ஏது‡குணாத்மகமாயிருக்கிற பிரகிருதி புருஷவிவேகத்தைப்பண்ணி பிரகிருதி விகாரத்தை நீங்கினவனுள்ளவன் பிரளயாகலன்.

‡ குணாத்மகம் - குணவடிவு

பிரளயத்திலே கலை நீங்கப்பட்டவனும் பிரளயாகலனென்று பெயருண் டாகையால் பிரளயாகல ரிருவகைத்தாம்.

பிரகிருதி புருஷ விவேகத்தைப்பண்ணி பிரகிருதி நீங்கின மாத்திரத்திலே முத்தனென்னுமல் பிரளயாகல னென்பானேனென்னில்? பிரகிருதிக்குமேல் மாயாகாரியங்களாய புவனுதாரங்களான வைந்து தத்துவங்க ளிருக்குது, அந்தப் புவனங்களிலே கன்மங்களுமிருக்குது.

இதன்றி ஆன்மஞான § நிரோதகமான வாணவ மிருக்குதாகலால் சிருட்டி காலத்திலும் அபக்குவ மலனாகிய பிராகிருதனாகாமல் பிரளயாகலனாகவே நிற்பன். இந்தப் பிரகிருதி புருஷ விவேகத்தைப் பண்ணினதுபோல மாயையையு மான்மாவையும் பிரிந்து நின்றறிந்த பிரளயாகலன் விஞ்ஞானகலனாவன். இவ்வாறறிந்த சகலனும் விஞ்ஞான கலனாவன்.

§ நிரோதகம் - மறைக்கிறது

இவ்வாறறிந்த சகலன் பிராகிருத தேகியாயிருக்கிற வர்த்தமான காலத்திலும் விஞ்ஞானகேவலனே! மாயையுங் கன்மமும் நீங்கினவுடனே முத்தனென்றோது விஞ்ஞானகேவல னென்பானேனென்னில்? ஆன்மஞான நிரோதகமான வாணவ மிருக்கையா லெவ்வாறு முத்தனாவன். ஆணவமல பரிபாகத்தினாலே சிவாநுக்கிரகத்தினாலே பக்குவாநுகுணமாக ¶ பராபரமுத்தியினையடைவன்.

¶ பராபரம் - மேல்கீழ்

[illegible]

ஜ்ஞாநாம் நகர்மாணேஷ்வபி ஸூக்ஷ்மஃ || ஸகலஃ ப்ரளயாகலே
கேவலீ யதாஸ்தாநம் ப்ரதிஷ்டிதாஃ । ஸதாஶிவே யதாஸ்திதா
ஸ்ச யாஸ்தாநம் பரிவேஷ்டிதாஃ || விஜ்ஞாநகேவலா ஜீவாஃ
மலமாத்ரஸமந்விதாஃ । ஸதாஶிவாந்த வர்த்மநி ஸ்தித
ஜாத்யஸம்யுக்தாஃ || ததாபி ஸாத்விகே
விஜ்ஞாநகலஸம்ஜ்ஞயா । ஸர்வாஸ்து வர்த்தநே நாபி
லோகே விஜ்ஞாநகேவலஃ || ஸ்வாந்தேஜ ஸ்வதந்த்ர
நஸ்ஸூக்ஷ்மஸூக்ஷ்மத்வதே । த்ரயாணாம் ஸமாவத்ரதோ
விப்ரா விஜ்ஞாநகேவலோக்தி.

சகலன் பிரளயாகலனாகிறதற்கும் விஞ்ஞானகலனாகிறதற்கும் + ஏதுவந்தரம் தத்துவங்களுடைய பிரளயத்திலே கலைநீங்குகையினால் ஸ்தூல சூக்குமதேகமிரண்டும் விடப்பட்டுப் பிரளயாகலனென்று பெயராவன் நிவிருத்திப் பிரதிஷ்டாகலர் சர்வகன்மமு மேற்சொல்லுகிற வுபாயத்தினாலே நசிக்கவதனால் பிராகிருதமாயிருக்கிற தூலசூக்கும தேசமிரண்டும் விடப்பட்டு மேல் மிசிராத்துவாவிலே புசிப்பதான கன்மத்தையுடையவன் பிரளயாகலனாவன்.

+ ஏதுவந்தரம் - வேறு ஏது

தீக்ஷையிலே கலாதத்துவபரியந்த சோதனையினாலே யாதல் விவேகமாயாபுருஷத்தினாலேயாதல் யோகாப்பியாசத்தினாலே கன்மமுண்டானத்தை யெல்லாமறிந் தந்தக் கன்மாநுகுணமான தேகங்களை யேககாலத்திலே யெடுத்து சர்வகன்ம பலங்களையும் புசித்ததனாலேயாதல் பஞ்சீகரண பஞ்சகோச விவேகஞான யுக்த் சந்நியாசத்திலே யாதல் சர்வகன்மங்களு

நசிக்க விந்தக்கன்மங்களுக்குக் காரணமு மாதாரமும் தநுகரணமாயிருக்கிற தநுவாதிகளுக் குபாதாந காரணமாயிருக்கிற மாயையுந்தநுவாதிகளுக் கேதுவாயிருக்கிற கன்மமீங்குகையினுலே தானும் நீங்க வாணவ மலமொன்றுமே சேஷிக்கையினுல் விஞ்ஞான கேவலனுவன்.—

தத்ரோக்தம் பௌஷ்கரே — தஸ்மாந்நாமலஸம்ஹாரே
ப்ரலயே ஸர்வகர்மணாம் | த்ருக்ஸ்ப்ருக்ஷ்ணோஹி
தேஹாந் ஸ்ருஷ்ட்யாஸ்தேஷாமநுக்ரஹேந:॥ஸ்வபக்வ:
கர்மஹியுக்தா ஜந்தவ ப்ரயோஜகா: | கர்ம த
ஸ்வாத்மதேஶாயிந்ருக்ஷயாஜ்ஞாநதோ விநா || யோமே
நோஹாம்ஶதோவாப்யஸம்ஸ்ராஸாதுபரிக்ஷய: | கர்மணா
த்ரிதத்வாயத்த ஶாயாயாஸ்தூபரிக்ஷயாஸ்ய || ஏவம் ஸோகா வ
ஶிஷ்டஸ்யாத்ஸதோஸோऽத்விஜ்ஞாநகேவலா இதி.

கலையிலருட்பரன் நிராதாரமாகி முதலிருவர்க்குந் தவிராசத்திநி பாததான் மலங்கழிப்பன் - வரம்பிகந்த கருணாநிதியான சிவன் விஞ்ஞானகலர் பிரளயாகலர்க்கு ஸ்பரிசத்தினுலே மாயையும் மந்திரோபதேசத்தினுலே கன்மத்தையும் - நீக்கவேண்டுவ தில்லை யாதலால் ஆதார தேகாதிக ளன்றி முதற்சொன்ன விஞ்ஞானகலர் பிரளயாகல ரிரண்டு வகையிற் பக்குவருக்குந் தனது சிற்சத்தி யபிவியத்தினுலே அஞ்ஞானத்தை நீக்குவன். அதெவ்வா றெனில்?

தீவ்ர சத்திநி பாதத்தையுடைய விஞ்ஞான கலனாயும் பிரளயாகலனாயும் பிரளயாதியிலும் பிரளயாந்தத்திலும் அநுக்கிரகம் பண்ணுவர், அவர்க ளப்பொழுதே சிவனுவர்கள். வி

ஞ்ஞான கேவலர்களிலே தீவ்ர சத்திநி பாதத்தை யுடைய வர்களை சிருட்டியாதியிலே அநுக்கிரகம் பண்ணி யதிகார மல மாத்திரம் நிறுத்தி சர்வஞ்ஞத்துவாதி × ஷாட்குண்ணியாபி வியத்தராகப் பண்ணி சுத்தாத்துவ புவநபதிகளாய் மந்தி ர மந்திரேசுர மந்திரமஹேஸ்வரர் அணுருத்திரர் அணுசதா சிவ னென்னும்படிக்குச் சுத்த வித்தியாதி தத்துவங்களிலே மஹாபோகங்களைப் புசித்து ருத்திர மஹேஸ்வர சதாசிவ துல்லியரான அபரமுத்தரா யிருந்து பிரளயகாலத்திலே பர மமுத்தி யடையும்படி பண்ணுவர். விஞ்ஞானகலரில் தீவ்ரசத் திநிபாதம் வாராத பேர்கள் பழயபடி கேவலராயே யிருப்பர்.

× ஷாட்குணியம் - ஆறுகுணம்

ப்ரளயாகலரிலும் தீவ்ரசத்திநி பாதத்தை யுடையவர்க ளை யநுக்கிரஹித்து அதிகார மலமாத்திரம் நிறுத்தி ஷாட்கு ண்ணியாதி குணாபி வியத்தியாகப் பண்ணி அசுத்த மாயா புவ நாதிகளாகிப் பிரளயகாலத்திலே பரமமுத்தி யடையும்படிச் செய்வர். இருவகையில் தீவ்ரசத்திநிபாதத்திலுலே பிரளயாதி யிலே அநுக்கிரஹிக்கப் பெற்றபேர் பிரளயாந்த பரியந்தம் நின் றல சுழுத்தியை யடைந்திருந்து சிருட்டிகாலத்திலே சுத்தா த்வ அசுத்தாத்வாக்களில் புவனபதி யாவர்கள். பிராகிருதி ன்ம க்ஷயம்வாராமல் பிரளயத்திலே கலைகழன்று பிரளயாக ரொன்று நின்றபேரிலே அபக்குவரானபேர் சிருஷ்டி காலத் திலே சகலரே யாவர்கள்.

தஉக்தம் ஶ்ரீமத்ரௌரவே — யாவந்நோதயதி ஸாவெ
சிவாவேஶோஹவம்திதே । ஸம்ஹாரகாலே வா ஸம்க்
ஏதா வணவாவநயோமவேதி ॥

தத்த்வப்ரகாஶிகாயாம் — [illegible]

கரையிலருட்பரன் றரையிலாசான்மூர்த்தி யாதாரமாகித் தரித்துச் சகலர்க்குக் கன்ம ஒப்பிற் சதுர்த்தா சத்திநி பாதத் தான்மலமொழிப்பன் - சகலர்க்கு ஸ்பரிசத்திஞலே மாயையையும் மந்திரோபதேசத்திஞலே கன்மத்தையும் பாவனையிஞலே ஆணவத்தையு மொழிக்க வேண்டுகையால் பூமியினகண் ஞாஞசாரிய லக்ஷணம் + லக்ஷிதமான தேசத்தை வேறற அதிட்டித்துக்கொண்டு நின்று சகலரிலே கன்ம சாம்யமு மாணவமல பரிபாகமு முற்ற விடத் துண்டாம் மந்தம் மந்ததரம் தீவ்ரம் தீவ்ரதரம் என்னும் நாலுவித சத்திநிபாதாறுகுணமாகச் சகலர் சோதனையிலே தத்துவங்களையுங் கன்மங்களையும் மாயையையும் ஆணவமல சத்திகளையும் நீக்குவன்.

சத்திநி பாதத்துக்கு மலபரிபாகம் ஏதுவென்பது விஞ்ஞானகலர்க்கே யாதலால் சகலர்க்குக் கன்மவொப்பிலேஎன் றிவ்விடத்துக் கூறப்பட்டதே னென்னில்? சகலர்க்குக் கன்ம சாம்யமே ஏதுவல்ல. சத்திநிபாதத்துக்கு மலபரிபாகமே ஏதுவென்பது மூவகையான்மாக்களுக்கும் மறுக்கத சித்தமாகையாலும், விஞ்

ஞானகலர்க்குக் கன்மமில்லாம லிருக்கையினாலும் சகலர்க்கு விசேஷித்துக் கன்ம சாம்யமும் வேணுமென்ற தெனவறிக.

+ லக்ஷித - குறிக்கப்பட்ட

÷ அநுக்த சித்தம் - சொல்லாமலேற்பட்டது.

ததுக்தம் பௌஷ்கரே — ஸகலாநாஞ்ச ஸர்வேஷாம் கர்மஸாம்யம் நகாரணம் । கர்மணாம் வ்யஸ்தஸாமஸ்த்ய விபக்வம் தத்பவேந ச ॥ தஸ்மாத்ரௌத்ரீ பராஶக்தி: பஶுவர்க்கே நிபதேத் ।

சத்திநிபாதமாவது, ஆன்மஞானத்தைத் தடுக்கும் ஆணவசத்தி யதிகார நிவிருத்திக்குப் பக்குவம்வந்து நழுவின அவசரத்திலே முற்பிற்பாடற சகதேக பந்துவான சிவனுடைய சிற்சத்தியானது பதிந்து ஆன்மாவினுடைய நித்தியஞானக் கிரியையை யபிவியத்தியாக்குவது.

ததுக்தம் ஸ்ரீமந்ம்ருகேந்த்ரே — தத்ஸம்ஸ்காரஸ்யாதிகாரஸ்ய நிவ்ருத்தௌ தஸ்ய பரிபாகத: । வ்ருத்தௌ த்ருக்க்ரியாநந்த்யம் ஜந்மபந்தர்ணாம் ஶிவஸ்திதி.

இந்த ஆணவமல பரிபாகானு குணமாகச் சிற்சத்தியானது அற்பம் பிரகாசிக்கிறபொழுது ஆணவ சத்தியு மற்பநீங்கும். அதிகம் பிரகாசிக்கிறபொழுது அதிக நீங்கும்.

சிற்சத்தி யபிவியத்தியானது ஆணவமல பரிபாகத்தை யபேக்ஷிக்கவும், ஆணவமல நிவிர்த்தியானது சிற்சத்திப் பிரகாசத்தை யபேக்ஷிக்கவும் வேண்டுகையில் * அந்யோந்யாஸ்ரய மன்னில்? அதல்ல. சூரியோதயமு மந்தகார நிவிர்த்தியும் முற்பிற்பாடற வேககாலத்திலே யானதுபோல சித்தயபிவியத்தியு

மஞ்ஞான நிவிர்த்தியும் ஏககாலமாகையால் அந்யோந்யாஶ்ரய தோஷ மில்லை.

* அந்யோந்யா ஶ்ரயம்-ஒன்று மற்றொன்றைவேண்டுதல்

தது³க்தம் [illegible]

[illegible]

[illegible] ||

சத்திநிபாதம் நாலென்றது, நிவிருத்திசத்தி பதிந்தபொழுது மந்தம். அப்பொழுது நித்தியா நித்திய விவேகத்தைப்பண்ணி விஷயங்களிலே † விரக்திவரும்.

† விரக்தி - ஒழிவு

பிரதிஷ்டாசத்தி பதிந்தபொழுது மந்ததரம், அப்பொழுது முதலுண்டான விவேகமும் விரக்தியும் பிரதிஷ்டிதமாம். இவ்விடத்து தரப்புப்பிரத்தியம் நியூநத்திலே.

வித்தியாசத்தி பதிந்தபொழுது சிவஞானம் பிரகாசம்; இது தீவ்ரசத்திநிபாதம்.

சாந்திசத்தி பதிந்தபொழுது தீவ்ரதரம், இவ்விடத்துத் தரப்புப் பிரத்தியம் அதிகத்திலே. நிர்விகார ஞானத்தினுலுபசாந்திவரும்.

இந்த சத்திகளுக்குச் சத்திமானுயிருக்கிற சிவனுடைய நாமமும் நிவிர்த்தீசன் பிரதிஷ்டேசன் வித்யேசன் சாந்தீசன் என்று வியவஹரிக்கப்படும். சத்திசிவனுக்கு ஆகாரதேக ரணுதிளாகையா லிவ்விடத்துச் சத்திகள் ஸ்தானமென்றுஞ் சொல்லப் பெறும்.

தது³க்தம் [illegible]

[illegible]

[illegible]

யோ யாஹ்யப்ரத்யவமர்சனா । நிக்ஷிப்யதே ப்ரதிஷ்டாவஸ்தானம் தஸ்யாம்ஸ்திதச்சக்தி: ॥ த்யக்த்வா தம: ஸ்வவிஷயம் யதாஜ்ஞானத்ருக்யா த்வணோ: । ஸாவித்ர்யா ஸாநபேக்ஷ்யஸ்ய விசேஷ்யஸ்ஸ்புடதீஸ்வரா: ॥ ஸர்வஜ்ஞ: ஸர்வப்ரகாசனம் யதாஸ்ய காரணதோஹர: । ஸாம்சாம்தி ஸ்வசக்திம் சேதி தத்கர்மானுமோதாவிச்ராந்திராதிதி.

இவ்வாறு கன்ம சாம்யமு மலபரிபாகமுமான காலத்திலே ஆன்மாவினுடைய ஞானதிருஷ்டியை விழிப்பிக்கிற ஈஸ்வர சத்தியானது பதியும். அது பதிந்தமாத்திரத்திலே யாணவமலத்தினாலே யான்மாவை விஷயோன்முகமாகப் பண்ணுவிக்கிற திரோதான சத்தியானது மலத்தைச் செலுத்தாமல்விடும். அந்த திரோதானசத்தி நிவிருத்தியான மஹான்மாவுக்குத் துக்க ‡ சாகரமாகிற சம்சாரத்திலே §சடிதி வைராக்யமுண்டாம். கண்ணைப் பெற்றவன் காக்ஷியை யிச்சிக்குமாப்போல ஞான திருஷ்டியைப்பெற்ற ஆன்மா சிவனுடைய பாதாரவிந்த தரிசனத்திலே யிச்சையுண்டாய் எப்பொழுது தரிசிப்பேன், எப்பொழுது பந்தத்திலே நின்றும் முத்தனாவேன், ஆரவரைத் தரிசிப்பிக்கிறவரென்று புத்தியையுடையவனாய் இவ்வாறு சம்சாரத்திற் பயப்பட்டிருக்கிறவனை யாசாரிய மூர்த்திமானாகிய சிவன் சத்திநிபாதானு குணமாக வனுக்கிரகம்பண்ணுவன்.

‡ சாகரம் – சமுத்திரம்

§ சடிதி – சீக்கிரம்

சத்திநிபாதானு குணமான அநுக்கிரஹமாவது? மந்த சத்திநிபாதத்தை யுடையவனுக்கு நிவிர்த்திகலையி லுண்டான புண்ணிய பாபங்களைச் சோதித்துப் பிருதுவியாதி யாகாச பரியந்த

முண்டான தத்துவங்களைத் தரிசித்து நீங்கும்படி யுபதேசித்துப் பிரமாண்டோ ¶ பரிலோகங்களிலே + யோசிப்பது.

¶ உபரி - மேல்
+ யோசித்தல் - கூட்டுதல்

மந்ததர சத்திநிபாதத்தை யுடையவர்களுக்கு நிவிர்த்தி பிரதிஷ்டை யிரண்டுகலையில் புண்ய பாபங்களையுஞ் சோதித்துப் பிருதுவியாதி பிரகிருதி பரியந்த முண்டான தத்துவங்களைத் தரிசித்து நீங்கும்படி யுபதேசித்து புருஷோபரி தத்துவங்களிலே பிரளயாகலனாக விருக்கும்படி யோசிப்பித்து.

தீவ்ரசத்திநி பாதத்தை யுடையவனை நிவிர்த்தி பிரதிஷ்டை வித்தியை மூன்றுகலைகளையுஞ் சோதித்து பிரதிவ்யாதி மாயாந்தந் தரிசித்து நீங்கும்படி யுபதேசித்து சுத்தவித்யாதி யபரமுத்தி ஸ்தாநமாகிய சுத்தாத்துவ ×வாசியாகப் பண்ணுவது.

தீவ்ரதர சத்திநிபாதத்தை யுடையவனைப் பஞ்சகலையுஞ்சோதித்து நாமரூபரஹிதமும் நிராதாரமும் பிரத்தியக்ஷா ÷ கம்யமும் அநுமாநாகம்யமும் § ஷட்த்ரிம்சத் தத்வாதீதமுமாய் அகண்டாகார சச்சிதாநந் தாத்வய பரிபூர்ண பரமசிவத்திலே வேறறத் ததாகாரமாம்படி யோசிப்பது.

× வாசி - இருக்கிறவன்
÷ அகம்யம் - அறியக்கூடாதது
* ஷட்திரிம்சத் - முப்பத்தாறு.

ததுக்தம் பௌஷ்கரே — கலாஸ்வாத்யாஸு மத்யாஸு விவி
பாகேஷு ஹ்ருதாஸ்விண: । பதத்யுத்தீவ்ரே ஶக்தி ஸ்த
ரேஷு ஹ்ருதமிவிணீ ॥ தஸ்யாபவித்ராதீக்ஷாயாமே
ஸ்யாயோஜிகாஶிகா । ஶக்திஸ்தீவ்ரதமே தஸ்யாமிவ ரு.

[illegible]

வைராக்ய ஏதுபத்து. அவையாவன? வியாதி பீடையாலே வரும் ஜநக வைராக்கிய மொன்று,

தன்னுடைய தேஹ தோஷத்தைக் கண்டு வரும் தேஹவைராக்கிய மொன்று,

சகல ஐஶ்வரியங்களையுங் குறைவற வனுபவித்து இனிப் போதுமென்று வரும் ஐஸ்வரிய வைராக்கியமொன்று,

ஆதியாத்மிக ஆதிதைவிக ஆதிபௌதிக தாபத்திரயங்களினாலே வரும் பிரபஞ்ச வைராக்கியமொன்று,

அர்த்தத்தைத் தேடுகிறதினாலு மிரக்ஷிக்கிறதினாலும் கள்ளர் கொண்டுபோகிறதினாலும் யாதொரு துக்க முண்டானதினாலும்வரும் திரவ்ய வைராக்கிய மொன்று,

மாதா பிதா ஸ்திரீ புத்திரன் இஷ்டபந்து ஸ்நேகிதரிவர்களைப் பிரிந்த ததினாலே கூட்டமெல்லாம்பிரிந்த காலத்தில் துக்கத்துக் கேதுவென்று வரும் சங்க வைராக்கிய மொன்று,

காமுகனா யிருக்கிறவன் முன் மோகமாயிருக்கிற ஸ்திரீயினிடத்திலே குணத்திலே யாகிலும் தேஹத்திலே யாகிலும் வைராக்கிய ஏதுவான தொரு தோஷத்தைக் கண்டு விரக்திவரும் ஸ்திரீ வைராக்கிய மொன்று,

அன்னபானாதிக ளொருபொழு தில்லாதிருக்கிலும் தேகம் நில்லாது, எத்தனைநா ளொத்தனை வகையிலே புசித்தாலும் திருப்தியை யடையாதென்றுவரும் புசிப்பு வைராக்கிய மொன்று,

தானத்துக்குப் போய்த் தள்ளுண்டதினால் வரும் பிரதிக்கிரஹ வைராக்கியமொன்று,

தேஹத்திலே யாதொரு ஏதுவுமில்லாமல் பூர்வஜந்ம சிவபூஜா புண்யபலத்தினாலே தேஹாதியான சர்வ வஸ்துக்களிலும் வரும் வைராக்கிய மொன்று,

ஆகப்பத்து.

இவற்றுள் நிரு ஏதுகமாக வருகிற வைராக்கிய முத்தமம். நின்ற வொன்பதும் மத்யமம்.

𑌪𑍌𑌷𑍍𑌕𑌰𑍇 — 𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌹𑍇𑌤𑍋𑌰𑍍𑌵𑌿 𑌸𑌂-
𑌕𑍍𑌷𑍇𑌪𑍇𑌣𑌾𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 । 𑌵𑍍𑌯𑌾𑌧𑍍𑌯𑌾𑌦𑌿 𑌵𑌿𑌭𑍀𑌤-
𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌸𑌹𑌸𑍈𑌵 𑌵𑌿𑌰𑌾𑌗𑌤𑌾 ॥ 𑌸𑌂𑌤𑍁𑌷𑍍𑌟𑌸𑍍𑌯
𑌕𑌾𑌮𑍍𑌯𑍇𑌷𑍁 𑌨𑌿𑌃𑌸𑍍𑌵𑌹𑌸𑍍𑌤𑌾 𑌜𑌙𑍍𑌗𑌮𑌸𑍍𑌥𑌿 । 𑌶𑍍𑌮𑌶𑌾𑌨𑍇𑌷𑍁
𑌕𑌾𑌰𑍀𑌷𑍁 𑌵𑍈𑌦𑍇𑌹𑍍𑌯𑌾 𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌂 𑌨𑌿𑌯𑌤𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 । 𑌶𑍁-
𑌶𑍍𑌰𑍂𑌷𑍁𑌣𑍈𑌰𑍍𑌵𑌾𑌰 𑌸𑍌𑌣𑍍𑌡𑌿𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌵𑍈𑌣𑌸𑍍𑌯𑌯𑌃 ॥
𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌦𑍀𑌨𑌸𑍍𑌯 𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌂 𑌸𑌹𑌸𑌾𑌹

[illegible]

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

சகலனுக்குமாத்ரம் அனுக்கிரஹமென் றெண்ணவேண்டாம் மூவருக்கு முண்டென்னு முறைமை யுரைக்கின்றார்.

நிராதாரமாகி - நிரதிகரணனாய்நின்று,—

துவிதா சத்தி நிபாதத்தால் தீவிர தீவிரதர சத்தி வீழுத லாற் றீவிரதரத்தாற் பரமுத்தி, தீவிரத்தால் அபரமுத்தி.

தீவிரத்துள்ளும் மந்த மந்ததர சத்திநிபாத முண்டு.

அபரமுத்தி யனந்தவிதமாதலால் நிரதிகரணனுக்கிரகஞ் சகலர்க்கு மேகதேசத்திற் சாற்றியதுண்டு,—

ஆசான் மூர்த்தி ஆகாரமாகித் தரித்து - சாதிகரணனாயிருந்து,—

சதுர்த்தாசத்திநிபாதத்தால் - மந்ததராதியால்,—

மலங்கழிப்பன் - மலத்தை யொழிப்பன்.

ஒழிப்பனென்பதற்குப்பின் சிவத்துவாபிவியத்தியும் செய்வனென்பது செப்புக.

விஞ்ஞானகலரென்பது தலைக்குறையாதலால் விஞ்ஞானகலரென நின்றது.

விஞ்ஞானத்தால் மாயாபுருஷவிவேகஞானத்தால் கலைமுதல் முப்பது தத்துவத்தால் மூடப்பட்ட சூக்குமதேகமில்லையாது சிலபெயர்க்கவர்கள் விஞ்ஞானகலர்கள்.

பிரளயத்துக் கலைநீங்கினபெயர் பிரளயாகலர்.

ஆதலால், இருவர்க்கத்துக்கும் நிரதிகரணனுக்கிரகம்.

சிலபெயர் அனந்தாதி யணுசதாசிவாதிய ரிவர்களை விஞ்ஞானகலர்களென்றும், அபர மந்த்ரேசுவரர்களாகிய ஸ்ரீகண்டாதியர்களைப் பிரளயாகல ரென்றும் பேசுவார்கள்; அவர்கள் மலமலகன்ம முத்தராய்ப் பதிபதார்த்தத்துள் அந்தர்ப் பவித்து மலமாத்திரகலுஷித விஞ்ஞானகலர்க்குறி. மலங் கன்மமாத்திர கலுஷித பிரளயாகலக்குறி, பிரியாது தரியாமையால் அப்படிப் பேசுதல் அறியாமையாலென வறிக.

பெரியோர் சிலவிடத் தப்படிப் படித்துப் பேசியதேது? முன்னிருப்பைக் குறித்துக் கூறிய தெனக் குறித்தறிக.

பிரளயாகலர்க்குத் தேவகுருவா யனுக்கிரகம் பண்ணுவரென்று சிலர் பேசிய தேது? தேகமிலாப் பிரளயாகலர்க்குத் தேவகுருவாய்வந் தனுக்கிரகம் பண்ணுவரென்பது செய்திதெரியாது செப்பியது.

இருவர்க்கும் நிராதாரமாகி யெனுமாசிரியர் வசனத்துக்கு
ம் சிவாகமத்துக்கும் விரோதச் சொல்லுமாம்.

ஆன்மதத்துவ மிருபத்தினான்கிற்கு மேல் பிரகிருதி முத்சரா
யிராகாதி கலாந்தமாகிய தத்துவங்களி னிரஞ்சனர் தவிரச்
சாஞ்சனரா யிருப்போர்கள் பிரளயாகலர்களென்று சிலர் பே
சிய தேது? ஸ்ரீமத் காமிகாகமத்தில் ஏகதேசத்தில் அப்படியிரு
த்தலால், இசைத்தார்கள்.

அச்சகல விசேஷ பிரளயாகலரைக் குறித்து உருத்திர தே
வர்களிற் றேவகுரு வென்பது கூடும், தேகமில்லாப் பிரளயாக
லர்க்குத் தேவகுருவென்பது கூடாது; மற்றது பிரசித்தப் பொ
ருள்.

விஞ்ஞானகலர்கள் பரிபக்குவ மலர்கள் அபரிபக்குவ மல
ர்கள் என்றிருவகையர்.

அந்த இருவகையருக்குட் பரிபக்குவ மலர்கள் சிவானுக்கிர
கம்பெற்றுப் பதிபதார்த்தங்களாய் ஆதிமுத்த சிவன்களாயும் அ
னு சதாசிவர் அநந்தாதிகள் மந்திரர்கள் புவனவாசிகள் என்னு
ம் அபர முத்த சிவன்களாயும் போயிருப்பார்கள்.

அபரிபக்குவமலர்கள் மாயைக்குமேற் சுத்தவித்தைக்குக்
கீழ் மலமாத்திர கலுஷிதர்களாய்ப் பசுபதார்த்தங்களா யிருப்
பார்கள்.

பிரளயாகலர் பரிபக்குவமலர் அபரிபக்குவ மலரென விரு
வகையர்.

அவ்விருவகையருள் பரிபக்குவமலர்கள் சிவானுக்கிரகம்
பெற்றுப் பதிபதார்த்தங்களாய் ஆதிமுத்த சிவன்களாயும் ஸ்ரீ
கண்ட வீரபத்திரர் முதலிய அபரமந்திரேஸ்வரர்கள் புவன
வாசிகளென்னும் அபரமுத்த சிவங்களாயும் போயிருப்பார்கள்.

அபரிபக்குவமலர்கள் சிருஷ்டிகாலத்திலே சகலராவார்
கள்.

சகலர்கள் திரிபந்திகளென்றும் விஞ்ஞாதிகளினாலே கன்மநாசம்வந்து விஞ்ஞான கைவல்லியம் வருமளவும் துவிபந்திகளென்றும் இருவிதமாயிருப்பார்கள்.

அந்த விருவிதமாயிருக்குஞ் சகலர்கள் தூலதேகிகளென்றும், அப்பிராத்தவாகிய சரீரிகளென்றும், பிரநட்டவாகிய சரீரிகளெனறு சொல்லப்படும் தூலவிதேகிகளாயும் இருப்பார்கள்.

திரும்ப அந்த நால்வகையோருந் தனித்தனிப் பரிபக்குவ மலர்களென்றும் அபரிபக்குவ மலர்களென்றும் எண்வகையர்.

அவ் வெண்வகையருள், பரிபக்குவ மலர்கள் என்னும் நால்வகையினரும் சிவாநுக்ரகம் பெற்றுப் பதிபதார்த்தங்களாய் ஆதிமுத்த சிவன்களாயும் நாளுபத முத்தராயிருக்கும் அபரமுத்த சிவன்களாயும் போயிருப்பார்கள்.

அபரிபக்குவ மலர்களெனும் நால்வகையோரும் சம்சாரிகளாயிருப்பார்கள்.

ஆக மூவகையோரும் பன்னிருவகையரென்பது பார்த்திக.

சகலானுக்கிரகங் குருத்திருமெனி குறித்திருக்குஞ் சிவன் பண்ணுவது.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

இவற்றுட் 'குருவாகிவந் துணர்த்தி'என்ற முதற்கூற்றுப் பொருளை ஒன்பதுசெய்யுளான் வகுத்துக் கூறுவான் றொடங்கினார்.

எண்ணரிய வுயிர்களெல்லாம் பந்தவேறுபாட்டான் மூவகைப்படும். அவற்றுள் மும்மலங்களுமுடைய சகலவர்க்கத்திற்கு நால்வகைச் சத்திநிபாத முறைமையின்வைத்து அரிதுணர்

த்த வேண்டுதலின், அவ்வுயிர்கட்கே குருவாகி வந்துணர்த்தி யென மேற்கூறிய சாதாரதீக்கை செய்வது. ஒருமல மிருமலமுடைய மற்றை யிருவர்க்கத்திற்குந் தீவிரந் தீவிரதரமென்னும் இருவகைச் சத்திநிபாதத்தின் வைத்துணர்த்த வமையுமாதலின், சகலவர்க்கம்போற் குருவடிவின் மறைந்து நின்று படர்க்கையா னுணர்த்தப்பட் டறிதுணர வேண்டாது அவ்விருதிறத்துயிர்கட்கும் முறையே உண்ணின்று முன்னின்று முணர்த்துவதாகிய நிராதாரதீக்கை செய்யப்படுமென்பதாம்.

இதனானே தீக்கை இருவகைத் தென்பதூஉம் அவ்விருவகைக்குமுரியா ரிவரென்பதூஉங் கூறப்பட்டன.

இனி இவ்விரண்டனுள் ஈண்டெடுத்துக்கொண்ட சாதாரதீக்கையிற் படும் பாகுபாடும் அவற்றதியல்பும் வகுத்துக் கூறுதற்கெழுந்தன வருஞ்செய்யுட்களென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

முன்னே சொல்லப்பட்ட வான்மவர்க்க மூன்றுவகைப் பட்டிருக்குமென் றருளிச்செய்கிறார்.

உரைதருமிப் பசுவர்க்கமுணரின் மூன்றும்- திவ்வியாகமங்களிற் சொல்லப்பட்ட விந்த வான்மவர்க்கத்தை விசாரிக்கில் மூன்றுவகைப் பட்டிருக்கும். அவையாவன?—உயரும் விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் - மேலான விஞ்ஞானகலனொன்றும் ப்ரளயாகலனொன்றும் சகலனொன்றும் — நிரையின்மல மலங்கன்ம மலங்கன்மமாயை நிற்கும் - இந்த அடைவிலே விஞ்ஞானகலர்க்கு ஆணவமல மொன்றும் ப்ரளயாகலர்க்கு ஆணவமலமுங் கன்மமலமும் ஆக விரண்டும் சகலர்க்கு ஆணவமலமு மா

யாமலமுங் கன்மமலமும் ஆக மூன்றுமலமும்; இவை யநாதியே யுள்ளதாய் நிற்கும்.—முதலிருவர்க்கும் - மூற்பட்ட விஞ்ஞான கலரிற் பிரளயாகலரிற் பக்குவராயுள்ள விரண்டுவகைக்கும்,—நிராதாரமாகிக் கரையிலருட் பரன்றுவிதா சத்தினிபாதத்தாற் கழிப்பன்மலம் - எல்லையில்லாத வனுக்கிரகத்தை யுடைய பரமேஸ்வரன் அவர்களுக்குப் பிராணனாய் நின்ற முறைமையிலே தீவ்ரம் தீவ்ரதரம் என்றுசொல்லப்பட்ட விரண்டு சத்தினிபாதத்தாலு மலங்களைப்போக்கி ஞானத்தைப் பிரகாசிப்பிப்பன்.—சகலர்க்கு - சகலரிற் பக்குவரா யுள்ளவர்களுக்கு,—கன்மவொப்பில்- புண்ணியபாவங்களிரண்டுந் தன்னிலேராமற் குறையாமல் இரண்டுமொத்த வவதாரத்திலே,—தனாயி லாசான்மூர்த்தி யாதாரமாகித் தரித்தொழிப்பன் மலம் - பூமியிலே ஆசாரியமூர்த்தியிலே யதிட்டித்துக்கொண்டு நின்று மலங்களைப்போக்கி ஞானத்தைப் பிரகாசிப்பிப்பன்.—சதுர்த்தா சத்தினி பாதத்தால்-மந்தம் மந்ததரம் தீவ்ரம் தீவிரதரம் என்று சொல்லப்பட்ட நாலுவகைச் சத்தினி பாதத்தாலும்.

இதற்குப் பிரமாணம். சிவஞானபோதம்-அ-சூ,ந-வெ "மெய்ஞ்ஞானந் தானே விளையும் விஞ்ஞானகலர்க், கஞ்ஞான வச்சகலர்க் கக்குருவாய்—மெய்ஞ்ஞானம், பின்னுணர்த்து மன்றிப் பிரளயா கலருக்கு, முன்னுணர்த்துந் தான்குருவாய் முன்" என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, பரமேஸ்வரன் மூவகை யான்மவர்க்கத்தில் விஞ்ஞானகலர் பிரளயாகலரிற் பக்குவரா யுள்ளவர்களுக்கு நிராதாரமாய்நின்று தீவ்ரம் தீவ்ரதரம் என்கிற சத்தினிபாதத்தாலே மலங்களைப் போக்கி இரட்சிப்பனென்றும், சகலரில் பக்குவரா யுள்ளவர்களுக்குக் கன்மவொப்பில் பூமியிலே ஆசாரிய மூர்த்தியை யதிட்டித்துநின்று மந்தம் மந்ததரம் தீவ்

ரம் தீவ்ரதரம் என்கிற நாலுவகைச் சத்திநிபாதத்தாலும் இர
ட்சிப்ப னென்னுமுறைமையும் அறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

உரைதரு மிப்பசுவர்கம் - என்னணரிய வுயிர்களெல்லாம்,—
உணரின் - உணருமிடத்து,—உயரும் விஞ்ஞானகலர் பிரளயாக
லர் சகலர்-உயர்ந்த விஞ்ஞானகலரும் பிரளயாகலரும் சகலரு
மென,—நிரையின்மல மலங்கன்ம மலங்கன்மமாயை - முறை
யே யாணவமலமு மதனோடு கன்மமலமு மவைகளோடுமாயா
மலமுமாக,— நிற்குமூன்றும் - இப்பந்த வேறுபாட்டான் மூவ
கைப்படும்.—சகலர்கருக் கன்மவொப்பில்-அவற்றுள் மும்மலங்
களுடைய சகலவர்க்கத்திற்கு இருவினை யொப்பின்கண்,—சது
ர்த்தா சத்திநிபாதத்தால்-நால்வகைச் சத்திநிபாதமுறைமையி
ன்வைத்துத் தெரித்துணர்த்த வேண்டுதலின்,—தரையிலாசா
ன்மூர்த்தி யாதாரமாகித் தரித்துமலமொழிப்பன்- இவ்வுலகின்
க ணவ்வுயிர்கட்கேகுருமூர்த்தியாதாரமா யதிட்டித்துநின்று
மல நீக்குவதாகிய சாதாரதீக்கைசெய்து,—முதலிருவர்க்கும்-ஒ
ருமலயிருமலமுடைய மற்றை யிருவர்க்கத்திற்கும்,—துவிதா
சத்திநிபாதத்தால் - தீவிரம் தீவிரதரமென்னு மிருவகைச் சத்
திநிபாதத்தின்வைத் துணர்த்தலமையு மாதலில்,—கரையிலரு
ட்பரன் மலங்கழிப்ப னிராதாரமாகி - அளவிடுதற்கரிய கரு
ணைவடிவாகிய முதல்வன சகலவர்க்கம் போற் குருவடிவின் ம
றைந்து நின்று படர்க்கையா னுணர்தகப்பட் டறிதுணர வேண்
டாது அவ்விருதிறத் துயிர்கட்கு மலநீக்குதற்கு முறையே யுண்
ணின்று முன்னின் றுணர்த்துவதாகிய நிராதாரதீட்சை செ
ய்யப்படும்.

இதனானே தீக்கை யிருவகைத் தென்பதூஉம் அவ்விருவகைச்குமுரியா ரிவரென்பதூஉங் கூறப்பட்டன.

மறைஞானதேசிகர் உரை.

இனிச் சகலர்க் காசாரியன் செய்யுந் தீக்கையாதி தொகுத்துணர்த்துகின்றார்.

பலவித மாசான்பாச மோசனந்தான்பண்ணும்
படிநயனத் தருள்பரிசம் வாசகமானதமு, மலகில்சா
த் திரம்யோக மவுத்திராதி யநேகமுள ்வவற்றினவுத்
திரியிரண்டாமறியி, னிலகுஞா னங்கிரியை யெனஞா
னமனத்தா லியற்றுவது கிரியையெழிற் குண்டமண்ட
லாதி, நிலவுவித்துச் செய்தல்கிரியா வதிதானின்னு
நிர்ப்பீசம்பீச மெனவிரண்டாய் நிகழும். (௩)

(இ-ள்.) பலவித மாசன் பாச மோசனந்தான்பண்ணும்படி ஆசாரிய னான்மாக்களுக்குப் பாசத்தைச் சேதிக்கையின் பொருட்டுச் செய்யுந்தீக்கை பலபிரகாரமா யிருக்கும். அஃதெவ்வாற்றானெனின் சாதிபேதத்தாலு மலபாக தாரதன்மியத்தாலும் பலவாகக் கூறியது. அவையாவன?

நயனத் தருள் பரிசம் வாசகமானதமுமலகில்சாத்திர மியோகம் மீனானது சினையைப் பார்த்த மாத்திரத்திலே யதனைப் பேதித்துத் தன்னைப்போலாக்குமாறுபோ லாசாரிய னுண்மைப்பொருளிலே சித்தத்தை வைத்துத் திவ்வியமான நயனத்தினாலே பார்த்தவனுக்குக் கட்டுப்பட்ட பந்தங்களைச் சோதிக்குமது நயன தீக்கை.

வாரணமானது போல வாசாரியன் றனது வலது கையிற் சிவ அத்தங் கற்பித்துச் சோதிரூபமாகத் தியானம்பண்ணி மாணவகன் றலைதொடங்கிச் சர்வாங்கமும் பரிசித்துப் பின்னாலே விடுவது பரிசதீக்கை.

ஆமையானதுபோல ஆசாரியன் றனது முதலாகிய வுண்மைப் பொருளிலே சித்தத்தை வைத்துப் பரமமான சோதியுடன் கூடித் தியானித்துச் சங்கிதா கிரியா விதிக்குச் செய்யுமாறுபோல மந்திரக் கிரியா பாவனைகளுடன் வழுவின்றி எல்லாத்தையு முள்ளபடி யறிந்து சோகம்பாவனை பண்ணி யிந்த வையிக்கியத்தினாலே மாணாக்கன் பாசத்தைச் சேதிப்பது மானத தீக்கை. மந்திரங்களை யந்தந்த வன்னங்களுக் குடைய மாத்திரைகளை யறிந் தேறாமற் குறையாம லுச்சரிக்குமது வாசக தீக்கை.

ஆசாரிய னாகமத்திற் சொன்னபடி யோதியுணர்த்தி மாணாக்கனுக் கையந் திரிவின்றி யந்த வாகமத்தின் பொருளை யறிவிக்கை சாத்திர தீக்கை.

ஆசாரிய னாடிசந்தான மார்க்கத்தினாலே மாணாக்கனுடைய விதய கமலத்திற் பிரவேசித் தவ்விதய கமலத்தி னடுவே விந்துரூபமான வான்மாவைச் சுழுமுனை நாடியிற் பிரமரந்திரமளவாகக் கொண்டு சென்று சிவனிடத்தில் யோசிப்பித்து நிறுத்துகை யோகதீக்கை; ஆகவறுவகை யெனவறிக.

அவுத்திராதி பநேகமுள — ஓம சம்மந்தமாகிய அவுத்திரி யென்று சொல்லிய தீக்கையை விசாரிக்கி லேகதத்துவ திரிதத்துவ முதலாகிய தீக்கைபலவு முளவென்றறிக.

இந்தவிகற்பம் வருணபத்ததியிற்காண்க.

இத்தீக்கையினுக் கதிகாரி யாவரெனில்? தண்ணிய சாதியி

ஞர்க்கு அவுத்திரி யாகாமையி னித்தீக்கைகளைக் கூறியதென வறிக.

இம்முறைமை காலோத்தரத்திற் காண்க.

‘‘அன்னியர்க்கும் பாசமறுத்திடுக பார்வையினூற்-றன்னரு கைவத்துத் தலை’’ எனவுமறிக.

அவற்று ளவுத்திரி யிரண்டா மறியில்

அவைகளை விசாரித்தறியி லிரண்டுபிரகாரமாம். அவையாவன?

இலகுஞானங் கிரியை யென

அந்தவவுத்திரி, விளங்காநின்ற ஞானதீக்கையெனவும் கிரியாதீக்கை யெனவுமாம்.

ஞான மனத்தா லியற்றுவது

தீவிரந் தீவிரதரமென்னும் சத்திநிபாதத்தையுடைய மாணக்கனுக் காசாரியர் கிரியாதீக்கையைப்போல மனோ வியாபாரத்தினாலே செய்து முடிப்பது.

முற்கூறிய ஞானதீக்கைக்கு மிதற்கும் பேதம்யாதெனில்? சாமானிய விசேடமென விருவிதமாம்.

அவற்றுள் விஞ்ஞான தீக்கையென்று சாமிகத்துஞ் சிந்திய விசுவத்துங் கூறுகையா லீண்டுக் கூறியதே விசிட்ட மெனவறிக; அதனைவிரிக்கிற் பெருகும்.

கிரியையெழிற் குண்ட மண்டலாதி நிலவுவித்துச் செய்தல்

விதிவழி குண்ட மண்டலமிட்டு வடக்குமண்டபத்தைப் பதினாலுக்குப் பதினாலு சூத்திரமேற்றி நூற்றுப் பத்தொன்பது பதமாக்கி நடுவொன்பது பதத்தில் மண்டலேசுர பூசைக்கு வேதிகையும் இதற்குமேற்குங் கிழக்கு மிட்டலிங்க பூசைக்கு வேதிகையும் குண்டமும் குண்டத்துக்கு வடக்கே கும்பத்தினுக்கு வேதிகையும் அதற்குமேற்கே யாசாரியரபிடேகத்துக்குக் கும்பந்தாபிக்க வேதிகையும் அதற்குமேற்கே பஞ்சோ

விதி பஞ்சத்துவக்குப் பல்லவம் வைக்கவும் ஆக வேதிகை யஞ்சுக்குங் குண்டததுக்குப் பதம் (ருச) மற்றவிருபத் தேழிலாசாரிய ரிருக்கவுஞ் சிடனிருக்கவும் தாலீபாகம் பண்ணவும் பஞ்சகவ்யந் தாபிக்கவு மெனவறிக. இதனைச் சூழச் சஞ்சார பதமொன்று மதனைச் சூழ்ந்து கும்பமுதலிய கும்பந் தாபிக்கவு மெனவறிக.

கிரியாவதிதானின்னு நிர்ப்பீசம் பீசமென விரண்டாகி நிகழும். அந்தக் கிரியாவதியை விசாரிக்கிற் சபீசம் நிர்ப்பீசம் சாதிகாரை நிரதிகாரை யென நால்வகையுந் தொகுத்தறியு மிடத்துச் சபீசதீக்கை நிர்ப்பீசதீக்கையென விரண்டாக விளங்கா நிற்கும். எ-று.

இதற்கு வருணபத்ததியினும் அஞ்சுமானினு மறிக. (ரு)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

இனி யாசாரியன் பக்குவான்மாக்களுடைய பாசவிமோசனம் பண்ணுவ தெவ்வாறென்னில்?

(பலவிதமாசான் பாசமோசனம்...தானிரண்டாகிநிகழும்) இது அந்வய மாக்குவது. ஆசான் பாசமோசனம் பண்ணும்படி பலவிதம். அவ்விதங்களாவன,—

நயனத்தருள்-* அவலோகனமானது ச்ருங்காரமென்றும் நிக்கிரகமென்றும் அநுக்கிரகமென்றும் மூன்று விதமாம்.

* அவலோகனம் - பார்வை,

அதிலே யாசாரியன் சிஷ்யனிடத்திலே பண்ணு மவலோகனம் கருடபாவனை கைவந்தவன் பாம்பினாலே கடிபட்டவனைப் பாம்பாகவுந் தான் கருடனாகவும் பாவித்துக் கருடனு

டைய கிரகாவலோகனம் பண்ணி விஷந் தீர்ந்தவாறே யவ னுடைய † ச்ராந்தி நிவிர்த்தி யர்த்தந் தான் சந்திரபாவனை யைப் பண்ணி யவனை யமிர்தகலையினாலே யபிஷேகம் பண்ணி னதாகக் கிருபாவலோகனம் பண்ணினதுபோல; சிற்பாவனா சித்தனான வாசாரியன் பாசநிவிர்த்தியர்த்தமாக நிக்கிரகாவ லோகனமும் ஆன்மாவினுடைய ‡ வாப்பியாய நார்த்தமாக அநுக்கிரகாவலோகனமும் பண்ணுவது சக்ஷுஷ தீக்ஷை.—

† சிராந்தி - இளைப்பு.

‡ ஆப்பியாயகம் - திருப்தி,

பரிசம் - ஆசாரிய தக்ஷிண அஸ்தத்திலே கந்தலேபனத் தைப் பண்ணிச் சிவனை யாசநமூர்த்தி மூலம் வித்தியாதேகம் பஞ்சப் பிரம ஷடங்க மூலமந்திரங்களினாலே புஷ்பங்கொ ண்டு பூஜித்துச் சிஷ்யனுடைய மஸ்தகத்திலே வைத்து, ஸ்பரி சவேதி ஸ்பரிசத்திலே தாம்பராதி லோகங்களினது களிம்பு நீங்கி ஸ்வர்ணமானதுபோல, சிஷ்யனுடைய பாசத்திரயம் நீ ங்கிச் சிவமாம்படி பண்ணுவது ஸ்பரிச தீக்ஷை.—

வாசகம்-வர்ணாஸ்ரமாநுகுணமாக பஞ்சாக்ஷரத்தை யுப தேசம் பண்ணுவது வாசகதீக்ஷை.—

மானதமும்-ஆசாரியன் றன்னுடைய ரேசகவாயுவினாலே புறப்பட்டு சிஷ்யனுடைய பூரகவாயுவினாலே இருதயத்திலே பிரவேசித்து சிஷ்ய சைதந்யத்தை தவாங்கி துவாதசாந்தமள வாகக் கொண்டுபோய்த் தம்முடைய இருதயத்திலே சிவ சை தந்யத்துடனே கலந்து உப்பு மப்புங் கலந்து ஏகரசமானது போலப் பாவித்து சிஷ்ய சைதந்யத்தை சிஷ்யதேகத்திலே பிரதிஷ்டை பண்ணுகிறது மாநச தீக்ஷை.—

அலகில்சாத்திரம் - முடிவற்ற சாஸ்திரார்த்தங்களை யெ ல்லாம் சங்கிரஹித்து பதிபசு பாசத்தினுடைய லக்ஷணங்களை

யுஞ் சிவ ஜீவர்களுடைய ஐக்கியத்தையும் சத் சம்பிரதாயமாகப் போதிப்பது சாஸ்திர தீக்ஷை.—

யோகம் - நிராதார சிவயோகத்தை யப்பியாசம் பண்ணுவிப்பது யோகதீக்ஷை.—

அவுத்திரி - ‡ஹோத சஹிதமாகப் பண்ணுந் தீக்ஷை அவுத்திரி.—

‡ ஹோதசஹிதம் -ஓமத்தோடு கூடியது.

ஆதி யநேகமுள - கீழ்ச்சொன்ன தீக்ஷைகளாதியாக வின்னு மநேக தீக்ஷையுண்டு.—

அவற்றி லவுத்திரி யிரண்டாம்,—அவற்றுகளுக் குள்ளே அவுத்திரி தீக்ஷையானது இருவகைப்படும்.—

அறியில் - இரண்டையு மறியில்,—

இலகு ஞானங் கிரியையெனும் - பிரகாசத்தை யுடைய ஞான தீக்ஷையென்றும் கிரியா தீக்ஷையென்றும் சாஸ்திரங்கள் சொல்லும்,—

ஞான மனத்தாலியற்றுவது - மனதினாலே சிஷ்யனுடைய தேகத்தை பிரவேசித்து நாபி குண்டத்திலே சிவாக்கினி முகங்கண்டு இந்த ஓம பூர்வமாக ஷடத்துவ சுத்தியைப் பண்ணுவது ஞானதீக்ஷை.—

கிரிகைபெழிற் குண்டமண்டலாதி நிலவுவித்துச்செய்தல், சிற்ப ¶ கௌசல்யததுடனே குண்டமண்டப வேதிகளைச் சமைத்து ஆகமோக்தமாகக் கலாசோதனையைப் பண்ணுவது,—

¶ கௌசல்யம் - சாமர்த்தியம்.

இன்னுங் கிரியாவதிதா னிர்ப்பீச சபீசமென விரண்டாகி நிகழும் - மேலுமந்தக் கிரியாவிதியானது நிர்ப்பீச தீக்ஷையென்றும் சபீச தீக்ஷையென்றும் இரண்டாகச் சொல்லப்படும்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

சகலர்க் கனுக்கிரகங் குருத்திருமேனி குறித்திருக்கும் சிவன் பண்ணுவது பல ப்ரகாரமெனப் படிக்கின்றார்.

ஆசான் - குருக்குறி குறித்துக்கொள்ளுஞ் சிவன்,—பாசமோசனம் பண்ணும் படித்தான்-அனுக்கிரகஞ் செய்யும் பிரகாரம்,—பலவிதம் - வெகுபிரகாரம்.— நயனத்தருள் - அத்துவாமார்க்கங் குறியாது குறித்து சுருக்கிப் பாசங்கழலப் பார்த்தல் சாக்ஷுஷதீக்ஷையென்னுந் தீக்ஷை,— பரிசம்-அப்படிக் குறித்துச்சிவ அத்தம்வைத்தல் பரிசதீக்ஷை.— வாசகம்-அப்படிக் குறித்துப் பதினொரு மந்திரத்தோடு பஞ்சாக்ஷர முபதேசித்தல் வாசகதீக்ஷை,— மானதம்-அப்படிக்குறித்து யோகமார்க்கத்தில் சீஷனது இருதயம் பிரவேசித்துச் சிந்தித்தல் மானசதீக்ஷை,— அலகில்சாத்திரம் - அப்படிக் குறித்து ஆன்மப்பொருளைச் சுருக்கி யுபதேசித்தல் சாத்திரதீக்ஷை,— யோகம் - அப்படிக்குறித்து யோகமார்கத்தால் சீஷனது இருதயகமலத்தில் பிரவேசித்து நக்ஷத்திரம்போ லிருக்கின்ற சீவனைப் பாசம் பறித்து துவாத சாந்தத்திற் சிவனிடத்திலே யோசித்தல் யோகதீக்ஷை. இவ் வறுவகை தீக்ஷையும் அவுத்திரி தீக்ஷைக் கருக மல்லாத செயர்க்குப் பண்ணுவ தெனவும் அவுத்திரிக் கங்க மெனவு மறிக.—அவுத்திரியாதி - அவுத்திரிப் பிரதானமா யிப்படித் தீக்ஷைகள்,— அநேகமுள - வெகுபேதமுண்டு,—அவற்றுள் அவுத்திரி இலகுஞானம் - விளங்கும் ஞானவுத்திரி என்றும்,— கிரியை-கிரியாவுத்திரி என்றும்,— இரண்டுதிறமாம் - இருவகையாம். அவற்றுள்,— ஞானம் - ஞானதீக்ஷை. அது சத்தி சாம்பவி யென்றிருவகை. அதில் சத்தி - யோகதீக்ஷை, சாம்பவி - ஞானதீக்ஷை. அதில் சத்தி,—ம

ணத்தா லியற்றுவது - புறம்பேபோற் குண்டமண்டலாதி மன ச்சிறப்புச் சங்கற்பத்தாற் குறித்துப் பண்ணுவது. சாம்பவி - மேஞானதீக சிற்சத்தி மனச்சங்கற்ப பூர்வ சிற்சத்திக்கட் சிறப்பு ப்பார்வையாற் பாசம் முறைமையிற் பறியப் பார்த்துப்பண் ணுவது. கிரியாதீக்ஷ,—கிரியை எழிற்குண்ட மண்டலாதி நில வுவித்துச் செய்தல் கிரியாவதிதா னின்னும் நிர்ப்பீசஞ் சபீசமெ ன நின்று இரண்டாய் நிகழும் - விளங்கும்.

சிவஞானயோகியருரை வருமாறு.

அவ்வுயிர்க் கண்ணதாகிய மலபரிபாகம் பலவகைப் படுத லின் அம்மலத்தை மோசிக்குஞ் சாதாரதீக்கையு மதற்சேற்பத் திருநோக்க முதலியனவாகப் பலவேறுவகைப்படும். அவற்றுள் ஏனைத்தீக்கைகளெல்லாந் தனக்கங்கமாகவுடைத்தாய்ச் சிறந்த ஔத்திரி தீக்கையாவது, ஞானவதி கிரியாவதியென் றிருவகைப் படும். அவற்றுட் குண்டமண்டலம் அங்கி நெய் சுருக்குச் சுரு வமுதலிய வனைத்தும் மனத்தாற் கற்பித்துக்கொண்டு விதிப்ப படி யகத்தே யாகுதிமுதலிய கிரியை செய்வது ஞானவதி. அ வையனைத்தும் புறத்தே நிலவக்கொண்டு புறம்பே யக்கிரியை செய்வது கிரியாவதி யெனப்படும். இங்ஙன மிருவகைப்பட் ஔத்திரி தீச்கைதான் இன்னும் நிர்ப்பீசஞ் சபீசமென வெவ் வே றிருவகைப்படு மென்பதாம்.

கிரியையியற்றுவதென மாறுக.

ஔத்திராதி யென்றதனாற் சாம்பவதீக்கை முதலியனவு ந் தழுவப்பட்டன.

நயனதீக்கை முதலிய ஆறும், சுதந்திரமாய்ச் செய்யப்ப

டுவனவும் அவுத்திரிக் கங்கமாய்ச் செய்யட்படுவனவுமென் றி ருவகைப்படும்..

அவற்றுள் முன்னையவை ஔத்திரிக்குரிய ரல்லாதார்க்கு ச் செய்யப்படுவனவெனக் கொள்க.

நிரம்பவழகியருரை வருமாறு.

———o———

சிவன் ஆசாரிய மூர்த்தியை யதிட்டித்துக் கொண்டு நின் று சகலருடைய பாசததைப் போக்குகிற முறைமை பலபிரகா ரமா யிருக்குமென் றருளிச் செய்கிறார்.

பலவித மாசான் பாசமோசனம் பண்ணும்படி - சகலரு டைய பாசத்தைஆசாரியன் மோசனம் பண்ணும்படி பலபிரகா ரமாயிருக்கும். அவையாவன?— நயனத் தருள்பரிசம் வாசக மானதமு மலகில் சாத்திர மியோக மவுத்திராதி யநேகமுள- தனது காருண்ணியத்தினாலே திருக்கண்சாத்தியும் ஸ்ரீபாதங்க ள் பரிசித்தும் உபதேசித்தும் தன்னைப்போல நின்மலனாகப் பா வித்து எண்ணிறந்த நூலுரைகாட்டியும் பொருளோடு கூட்டியு ம் குண்டமண்டல மிட்டுச் செய்யுந் தீட்சைமுதலாக அநேகமு ண்டு.—அவற்றி லவுத்திரி யிரண்டா மறியில் - அவையிற்றைவி சாரித்துப் பார்க்கில் அவுத்திரி யென்கிற தீட்சை இரண்டுவ கைப் பட்டிருக்கும் — இலகுஞானங் கிரியைபெனும் - விளங் காநின்ற ஞானவதி யென்றும் கிரியாவதியென்றும் சொல்லும். அதெங்ஙனே யென்னில்,—ஞான மனத்தா லியற்றுவது - ஞா னவதியாவது ஆசாரியன் தன்னுடைய மனோ பாவகத்தினாலே மலங்களைப் போக்கி இவனுக்குப் பிராணனாய் நின்றசிவன் தன் னைப் பிரகாசிப்பித்து,—கிரியை யெழிற் குண்டமண்டலாதி நி லவுவித்துச் செய்தல்-கிரியாவதியாவது அழகிய குண்டமண்ட

லங்களை யிட்டு விளங்கச் செய்தல் —கிரியாவதிதா னின்னு நிர்ப்பீசம் பீசமென விரண்டாகி நிகழும் - கிரியாவதியாவது இன்னமும் நிர்ப்பீசமெனறும் சபீசமென்றும் இரண்டாய் விளங்காநிற்கும்.

இதனாற் சொல்லியது சிவன் ஆசாரிய மூர்த்தியாக வெழுந்தருளிச் சகலர்க்குப் பாசமோசனம் பண்ணுகிறமுறைமை பலபிரகாரமாயிருக்குமென்றும் இவர்களுக்குச் சமயம் விசேடம் நிருவாணம் என்கிற தீட்சைகள் செய்யுமிடத்துக் கிரியாவதியாகவும் ஞானவதியாகவுஞ் செய்யலாமென்றும், கிரியாவதிதான் மேலும் நிர்ப்பீசமென்றும் சபீசமென்றும் இரண்டுவகையாயிருக்கும் என்னுமுறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

———o———

பலவிதம் - அவ்வுயிர்க் கண்ணதாய மலபரிபாகம் பலவிதப்படுதலின்,—ஆசான் பாசமோசனந்தான் பண்ணும்படி-அதற்கேற்ப ஆசாரியனும் அம்மலத்தை மோசிக்கும்படி செய்யுஞ் சாதார தீக்கையும்,— நயனத்து - திருநோக்கமும்,— அருள் பரிசம் - அருளுகின்ற பரிசமும்,—வாசகம் - வாக்கும்,— மானதமும் - பாவனையும்,—அலகில் சாத்திரம் - மிக்க நூல்களும்,— யோகம் - யோகமும்,— அவுத்திராதி யநேகமுள - அவுத்திரி முதலியனவு மாகப் பலவேறு வகைப்படும் —அவற்றினவுத்திரி - அவற்று ளேனைத்தீக்கைளெல்லாம் தனக் கங்கமாக வுடைத்தாய்ச் சிறந்த அவுத்திரி தீக்கையாவது,— இலகுஞானங் கிரியையென விரண்டுதிறனும் - விளங்கும் ஞானவதி கிரியாவதியென் றிரண்டு வகைப்படும்,—எழிற் குண்டமண்டலாதி மனத்தாற் கிரியை யியற்றுவது ஞானம் - அவற்று ளழகினை யு

ணைய குண்டமண்டல மங்கி நெய் சுருக்கு சுருவமுதலியவனை த்து மனத்தாற் கற்பித்துக் கொண்டு விதிப்படி யகத்தே யா குதிமுதலிய கிரியைசெய்வது ஞானவதி.—நிலவுவித்துச் செய்த ல் கிரியாவதி - அவையனைத்தும் புறத்தே நிலவக்கொண்டு புற ம்பே யக்கிரியை செய்வது கிரியாவதி யெனப்படும்,— தானின் னும் - இங்ஙன மிருவகைப்பட்ட அவுத்திரி தீக்கைதா னின்னு ம்,— நிர்பீசம் சபீசமென விரண்டாகி நிகழும் - நிர்பீசஞ் சபீ சமென வெவ்வே றிருவகைப்படும்.

மறைஞானதேசிகர் உரை

மே னிறுத்த முறையானே நிரைநிறையாக நிர்ப்பீ
சமு நிரதிகார லக்ஷணமு முணர்த்துகின்றார்.

பாலரொடு வாலீசர் விருத்தர்பணிமொழியார்
பலபோகத் தவர்வியாதிப் பட்டவர்க்குப்பண்ணுஞ்,
சீலமது நிர்ப்பீசஞ் சமயாசாரந் திகழ்சுத்தி சமயிபுத்
திரர்க்குநித்தத், தேலுமதி காரத்தை யியற்றித்தா
னு மெழினிரதி காரையென நின்றிரண்டாய்விளங்கு
ஞ், சாலநிகழ் தேகபா தத்தினோடு சத்தியநிரு வாண
மெனச் சாற்றுங்காலே. (௪)

(இ-ள்.) பாலரொடு வாலீசர் விருத்தர்பணி மொழியார் பலபோகத்தவர் வியாதி பட்டவ — மூன்று வயதுக்குமேற் பதினாறு வயதள வாகிய பாலர்க்கும், கன்ம முள்ளபடி யனு ட்டிக்க மாட்டாது மிகவு மறிவில்லாத வ ர்களுக்கும்,எழுபது வயதுக்குமேற் பட்டவி ருத்தர்க்கும்,மாதர்க்கும்,போகத்திலே மிகவு ம் விருப்பத்தை வைத்த விராசாக்களுக்கு

ர்க்குப் பண்ணு ஞ் சீலமது நிர்ப் பீசம் — ம்,வியாதியினுல் வருத்தமுறு மவர்களுக்கும் இவர்களுக் கெல்லாஞ் சரீராந்த மனுட்டிக்கத் தக்கதான கன்மங்களனைத்தையும் தீக்ஷா காலத்திலே யாசாரியர் நிறைவேறினதாகச் செய்து முடிக்குந் தீக்ஷை நிர்ப்பீசம்.

சமயா சாரந் திசம் சுத்தி — அக்காலத்தி லாசாரியன் குண்டத்தி லக்கினியிலே நந்தியாதி சண்டேசு ராந்தமான வெட்டுக்கணங்களையும் பூசித்துச் சுவாஹாந்தமாகத் தர்ப்பண மந்திரதீபனங்களை யொவ்வொருக்கா லோமம்பண்ணிச் சமயாசார சோதனை நிமித்தமாக மூலத்தா லஞ்ஞூ ருஹூதிபண்ணிப் பூர்ணுஹூதி கொடுத்து முடித்து இவர்கள் சமயபாசத்தை யிந்தயாகதேவதைக ளனைவருங் கரியாகச் சமயாசார சுத்திசெய்வது. இதற்கு அதிகாரி யாவரெனில்?

சமயி புத்திரர்க்கு — சமயா சாரத்துடன் கூடின சமயிக்கும் புத்திரகனுக்கும் செய்வது. இவர்களெந்தக் கிருத்தியத்திலே யேவப்படுவ ரெனில்?

நித்தத் தேனு மதிகாரத்தை யியற்றி — "புனன்மூழ்கித் தர்ப்பித் தமலனடி பூசித் தனலோம்பலாதி நித்தியம்" என்பதனுள் சமயிக்குப் புனன்மூழ்கித் தர்ப்பணஞ்செய்து தாதமார்க்கஞ் செய்வது. புத்திரக னதுவுஞ் செய்து சிவபூசையு மக்கினிகாரிய முதலாயினவும் புத்திரமார்க்கமுஞ்செய்வது. இவ்விருவரையு மிகக் கருமங்களுக் குரிமையாகக் கற்பித்தது

தானுமெழி னிறதிகாரை யென — அந்தத் தீக்கையுடைய சமயிக்குப் பூசாதியி லதிகார மில்லாத படியாலும் புத்திரகனுக்குத் தீக்கைபிரதிட்டைமுதலிய கன்ம

ஞ்செய்கற் கதிகார மில்லத படியாலே யந்தத் தீக்கை நிரதி சார தீக்கையெனப் பெயர் பெறும்.

நின்றிரண்டாய்விளங்குஞ் சாலநிகழ்தேகபாதத்திரேனாடு சத்திய நிர்வாண மெனச் சாற்றுங்காலே.

என்பதனை, சாற்றுங்காற் சாலநிகழ் தேகபாதத்திரேனாடுஞ் சத்திய நிருவாணமென நின்றிரண்டாய் விளங்கும் எனப்பொருள் கூட்டுக. அத்தீக்கையை விசாரித்துப் பார்த்துச் சொல்லு மிடத்துச் சத்திய நிருவாண தீக்கை யெனவு மசத்திய நிர்வாண தீக்கை யெனவு மிரண்டாக விளங்காநிற்கும் எ-று.

இவ்விரண்டினுக்கு மதிகாரி யாரெனில்.

தேகாதி பிரபஞ்சத்தைக் கான்றசோறெனக் கருதி மிகவும் விரத்தராகிய பக்குவர்க்குக் கட்டுப்பட்ட சஞ்சிதத்தையும் பிராரத்துவத்தையு மாகாமிய கன்மங்களையுந் தீக்கையிற் சோதனைபண்ணிக் கிரியை முடிந்தவாறே சரீரம் பாதமானவுடனே மோட்சத்தை யடைவது சத்திய நிருவாண தீக்கையெனப்பெறும்.

நிகழ்காலத்துப் பிராரத்த கன்மபோகம் புசிக்கையின் பொருட்டு வைத்து ஆசார மனுட்டிக்க மாட்டாத வாலீசர் முதலாயி னோர்க்குத் தீக்கையிற் சுத்தியைப் பண்ணி யாகாமிய மேருதடடி தியானபூசை முதலிய கன்மங்களைப் பண்ணி யெடுத்துச் சரீரத் துக் கமைத்த பிராரத்தகன்மம் புசித்துத் தொலைந்தவாறே சரீரபாதம் வந்து மோட்சத்தை யடைவது அசத்திய நிருவாண தீக்கை யெனப்பெறும்.

இதற்கு வருணபத்ததி, சைவ சன்னியாச தீபிகை, காலோத்தரம், சித்தாந்த சேகரத்து மறிக. (௪)

சிவாக்ரயோகியருளா வருமாறு.

—o—

மேலிவ்விரண்டு தீக்ஷைகளுக்கும் அதிகாரிகளைக் கூறுகின்றது.

பாலர்-பத்துவயதளவும்,—ஒடு-அசை,— வாலீசர்-இருபத்தைஞ்சு வயதளவுப்,—விருத்தர் எழுபத்தைந்து வயசுக்குமேல்,—பனிமொழியார்-ஸ்திரீஜனங்கள்,—பலபோகத்தவர்-¶அநியம் புபூட்சுக்கள்,—வியாதிப் பட்டவர்க்குப் பண்ணுஞ் சீலமதுநிர்ப்பீசம்-தீர்க்க ரோகத்தை யுடையவர்களுக்குப் பண்ணும் தீக்ஷா விதியாவது பீசாக்ஷரகிதமாக மந்திரங்களினாலே ஓமமும் உபதேசமு மாகையால் இவர்களுக்குச் §சாம்பவ தீட்சையுமில்லை ஆசாரியபிஷேகமு மில்லை.—

𑌤𑌥𑍋𑌕𑍍𑌤𑌂 𑌵𑍀𑌣𑌾𑌶𑌿𑌖𑍇 — 𑌬𑌾𑌲𑌬𑌾𑌲𑌿𑌶𑌵𑍃𑌦𑍍𑌧𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌭𑍋𑌗𑌭𑍁𑌕𑍍 𑌰𑍋𑌗𑌸𑌾𑌯𑌕𑌾𑌃 । 𑌵𑍍𑌯𑌾𑌧𑌿𑌗𑍍𑌰𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌸𑌵𑍃𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌨𑌿𑌰𑍍𑌬𑍀𑌜𑌦𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌃 ॥ 𑌯𑌾𑌵𑌦𑍍𑌬𑌂𑌧𑌂𑌸𑌿𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑍀𑌨𑌿 𑌤𑌾𑌵𑌤𑍍𑌸𑌾𑌮𑍀𑌪𑍍𑌯𑌸𑌂𑌭𑌵𑌃 । 𑌸𑌬𑍀𑌜𑌾𑌦𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌃 𑌸𑌾𑌂𑌭𑌵𑌦𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌃 ॥ 𑌦𑍀𑌕𑍍𑌷𑌾𑌵𑌧𑍂𑌤𑌵𑌿𑌧𑍀𑌨𑌾𑌂 𑌨𑌾𑌯𑌿𑌕𑌾𑌯𑌾𑌂 𑌦𑌿𑌵𑍍𑌯𑌤𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿 .

சமயாசாரந் திகழ் சுத்தி-இந்த நிர்ப்பீசதீக்ஷையைப் பண்ணுகிறபேர்க்குச் சமயாசாரக் கிரியைக்கு ஏதுவா யிருக்கிற கர்ம பீசத்தையும் சுத்திப்பண்ணப் படுவது.—

சமயிபுத்திரர்க்கு நித்தத்தேனு மதிகாரத்தை யியற்றி-சபீஜதீக்ஷையையுடைய சமயிக்கும் புத்திரனுக்கும் நைமித்திகத்தினாலே ஆசாரியனுக் கொழிய அதிகார மில்லையாகையால் நித்

தியத்திலே அதிகாரத்தைக் கொடுத்து,—தானுமெழி லிரதிகாரையென நின்றிரண்டாய் விளங்கும்-நிர்வாண தீட்சை யுடையவர்களுக்குத் தானும் நித்தியத்திலே சாதிகார மென்றும் நிரதிகார மென்று மிருவகைத்தாய்ச் சொல்லப்படும்.—சாலநிகழ் தேகபாதத்திேனுடு சத்தியநிருவாண மெனச் சாற்றுங்காலே - இனனுமந்த நிருவாணதீக்ஷா பேதங்கூறுங்கால நிகழ்காலத்துத் தேக‡பதனமா யப்பொழுதே பரமமுத்தியை யடையப்பண்ணுவது × சத்தியோ நிர்வாணமென்றும் சீவன் முத்தி+வியவதாநமாகப் பண்ணுவது அசத்தியோ நிர்வாணமென்று மிருவகைத்தாம்.

¶ அந்நியம் புபுக்ஷு-நியமமில்லாமல் சாப்பிடவிரும்புவன் § சாம்பவம் - சம்புவினது ‡ பதநம்-விழுகை, × சத்தியோ நிர்வாணம் - உடனேசுகம். + வியவதாநம்-மறைவு.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

இருவகை தீக்ஷைக்கு மருகரை முறைமையி லிசைக்கின்றாய் நிர்ப்பீசத்தருசரை நிகழ்த்துகின்றார்.

பாலர்-சத்திபாத லக்ஷணங்காண்பிக்குஞ் சாமர்த்தியமுடையராய்ச் சமயாசார மனுஷ்டிக்குஞ் சாமர்த்தியமிலராய் நிரம்ப ஓதி யுணராதவர்களாய்ப் பதினாறு வயதுட்பட்டவர்,—

ஓடு-அவர்களோடு,—

வாலீசர்-வாலிசர் வாலீசரென நீட்டியவாறு. சத்திபாத சின்னர்களாயும் ஓதி யுணராதார்,—

விருத்தர் - சத்திபாதசின்னர்களாய் ஓதியுணர்ந்தாலும் அனுஷ்டானத்தில் அசத்தரா யெழுபது வயதுக்கு மேற்பட்டார்,—

பனிமொழியார் - உள்ளபடி யோதியுணர்ந்து சமயச்செய்தி சாங்கமாயனுஷ்டிக்குஞ் சாமர்த்திய மில்லாதாராய்ச் சத்திபாத சின்னிகளாய்ச் சஞ்சரிக்கும் மகளிர்,—

பலபோகத்தவர் - சாத்திர பாத்திரராய்ச் சத்திபாத சின்னந்தாக்கித் தூக்கவும் போகவாஞ்சை போக்கு மூக்கமில்லாதார்,—

வியாதிப்பட்டவர் - உரைத்தவை யெல்லா முடையராயினு முரோகத்தர். இவர்கட்கு,—

பண்ணுஞ் சீலமது - செய்யுஞ் செயற்கையையுடைய தீக்ஷை,—

சமயாசாரந் திகழ்சுத்தி,—பீசச்சொற் சொல்லுஞ் சைவசங்கேதானுஷ்டானப் பொருளில் விளங்கும் நிர்சொற் சொல்லுஞ் சோதனைப்பொருள்,—

நிர்ப்பீசம்-தீக்ஷை.சாதகர் ஆசாரியர் இருவர்க்குந் தகாதாதலால்,—

சமயி புத்திரர்க்கு - புத்திரரென்று நிருவாண தீக்ஷிதர்க்குப் பெயர் பேசுதலாற் சமயவிசேஷ சாதகாபிடேக நைமித்திகாதிகாரமில்லா நிருவாணிகளில் நித்திய கிருத்திய மாத்திரத்திற் சாமர்த்தியவான்கள் ஒரு பிரகாரஞ் சாதிகாரிகளானாலும் அவருள் நித்திய முற்றும் பண்ணுஞ் சாமர்த்தியமில்லாப் பாலர் முதற் சமயி விசேஷி சாதகாபிடேக நைமித்திகாதிகாரமில்லா நிருவாணிகட்கு.

நித்தத்தேனுமதிகாரத்தை யியற்றி - முழுகுதல், தர்ப்பித்தல், சபித்தல், குருக்குறிப்பேவல், பூசித்தல், ஓமித்தல், கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து தியானித்தல், சமாதித்தல், சாக்ஷாத்கரித்தல் முதலிய நித்தியகன்மத்திற் குருக்குறிப் பேவலால் நைமித்திக கன்மத்துஞ் சிறிதிற் காமியத்துஞ் சிறிதிற் சாமர்

த்த சமயிமுதலோர் பண்ணும் கிருத்தியத்தில் இயன்ற கிருத்தியத்தைப் பண்ணுவது, கூடாதிருந்தாற் குருக்குறிப் பேவல் மாத்திரம்பண்ண, அதுவும் கூடாதிருந்தாற் புத்திராதிகளாற் பொருள்கொடுத்து வேண்டிக் கொண்டாதல் பிறராற்முன் பேணக் குருவைக் கொண்டு கற்பிக்கப் பண்ணி.—

தானும் - அந்த நிர்ப்பீசதீக்ஷையும்,—

எழினிரதிகாரரையென நின்று - வடிவுறு நிர்ப்பீசை தீக்ஷையென்றிருந்தும்,—

இரண்டாய் விளங்கும் - ஏலுங்கிருத்தியம் ஏலாக்கிருத்தியம் குறித்துச் சகதிகாரரையாயு நிரதிகாரரையாயும் இருததலாற் சபீசையாயும் நிர்ப்பீசையாயும் இருவிதமாய் ஒருவகை சாற்றத்தோற்றும்,—

சாலநிகழ் தேகபாதத்தினோடு-பண்ணுமென்று தொகுத்தலால், பண்ணுங்காலே யெனப் பண்ணுக. சபீசதீக்ஷாயோக்கியர்க்குள் இயற்கையாற் சரீரவைராக்கிய முடையோர்க்கும்,நிர்ப்பீச தீக்ஷாயோக்கியர்க்குள்ளும் வியாதி முதிர்ச்சி விருத்தத்தன்மை மிகுதி முதலியவற்றாற் சரீரவயிராக்கிய முடையோர்க்கும், சஞ்சரிக்குங் காயமுடன் முற்றுங் கழியப்பண்ணும் நிர்ப்பீச தீக்ஷதானே,—

சத்தியோ நிர்வாண மெனசாற்றும் - முத்திவிரும்பினர்க்கு நயிஷ்டிக தீக்ஷையென்று நாட்டப்படுந் தீக்ஷை சத்தியோ முத்திப் பிரதமானாற் சத்தியோ நிர்வாண தீக்ஷையென்று பேர் பேசப்படும்.

சிலவிடத்திற் சித்தி விரும்பினர்க்குப் பவுதிகதீக்ஷ யென்று பார்க்கப்படுந் தீக்ஷ சத்தியோ புத்திப் பிரதமானாற் சத்தியோ போசதீக்ஷ யென்றுபேர் சாற்றப்படும்.

விதேக விஞ்ஞானகலர்க்கும் விதேக ப்ரளயாகலர்க்குங் குருதேக தேகியல்லாச் சிவனால் நிர்ப்பீச தீக்ஷையாய்ப் பண்ணு முன் சொல்லிய நிராதார தீக்ஷையென்னும் நிரதிகரண தீக்ஷையும் இவ்விருவகைப் பெயர்பெறுமென்பதறிக.

தேகபாதமில்லாமற் செய்யும் நிர்ப்பீசதீக்ஷையும் சபீசதீக்ஷையும் அசத்தியோ நிர்வாணதீக்ஷ யென்பதறிக.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

அவ்விரண்டனுள் நிர்ப்பீச தீக்கையாவது, மலபரிபாகமுடையவராயுந் தீக்கைப்பின் ஒருதலையான் வழுவின்றிச் செய்யக்கடவனவாய சமயாசாரங்களை அனுட்டிக்கும் ஆற்றலறிவிலராயினார்க்கு, ஆசாரியனுவா னதனையுணர்ந்து ஏனைக் கன்மங்களோடுகூடச் சமயாசாரத்தையும் ஆகுதியாற் சுத்திசெய் தொழித்து, நித்தியகன்ம மாத்திரையின் ஏன்றவா றனுட்டிக்கு மதிகார முடையராகச் செய்வதாம். ஆயினும் சமயாசாரங்களைச் சுத்திசெய் தொழித்தமையின் நைமித்திகத்துங் காமியத்து மதிகாரங் கொடாமையான் இது நிரதிகார தீக்கையெனப் படும். அத்தீக்கை மூன்றனுள் சமயமும் விசேடமு மொரோவொன்றேயாம். ஏனை நிருவாணதீக்கை தேகாந்தத்தின் முத்தியைப் பயக்கும் அசத்தியோ நிருவாணமெனவும், அப்பொழுதே முத்தியைப் பயக்குஞ்சத்தியோ நிருவாணமெனவும், இருவகைப்படு மென்பதாம்.

சமயாசார சுத்தியோடு செய்யப்படும் நிருவாண தீக்கையும் அதற் கங்கமாயுஞ் சுதந்தரமாயுஞ் செய்யப்படுஞ் சமயவிசேடங்களும் நிர்ப்பீச தீக்கையெனக் கொள்.

நிரம்பவழகியருரை வருமாறு.

———o———

மேல் நிர்ப்பீசதீக்ஷையின்னார்க்கென்றும், நிரதிகாரை அதிகாரையின் முறைமையும், சத்தியோ நிருவாணம் அசத்தியோ நிருவாணத்தின் முறைமையும், அருளிச்செய்கிருர்.

பாலரொடுவாலீசர் விருத்தர்பனிமொழியார் பலபோகத் தவர்வியாதிப் பட்டவர்க்குப்பண்ணுஞ் சீலமதுநிர்ப்பீசம்-சிறு பிள்ளைகளுக்கும் அவர்களோடு அயோக்கியர்க்கும் வயோதிகர்க்கும் ஸ்த்ரீகளுக்கும் வெகுவிதமான புசிப்புகளை யிச்சித்தவர்களுக்கும் வாத பித்த சிலேத்ம முதலான வியாதிகளினாலே ஆக்கப்படுகிறவர்களுக்கும் செய்கிற தீக்ஷையினுடைய முறைமை, பீசங்கூடாமலிருக்கிற தீட்சையாம்.—சமயாசாரந்திகழ் சுத்தி சமயிபுத்திரர்க்கு - சமயாசாரங்கள் விளங்கா நின்ற சமய தீட்சையிலும் விசேஷ தீட்சையிலும் நின்றவர்களுக்கு,—நித்தத்தேனு மதிகாரத்தையியற்றி - பொருந்தப்பட்ட நித்தியமான வதிகாரத்தைக் கற்பிக்கிறது. அதுதானேதென்னில்?—தானுமெழில் நிரதிகாரையென நின்றிரண்டாய் விளங்கும் - அதுதானும் அழகிய நிரதிகாரையென்றும் இது வொழிந்து அதிகாரையென்றும் இரண்டாய் விளங்கா நிற்கும். இன்னமும்,—சாலநிகழ் தேகபாதத்தினோடு சத்தியநிரு வாணமெனச் சாற்றுங்காலே - மிகவும் விளங்காநின்ற நிருவாண மிரண்டு வகைப்பட்டிருக்கும். அதெங்ஙனே யென்னில்? தீட்சை செய்தவுடனே சரீரத்தைக் கமனமாக்கிறது சத்தியோது தேகா நிருவாணமென்றும், தீட்சை செய்தபின்பு சிலநாள் சரீரமிருந்ததிலே முத்தியைக் கொடுக்கிறது அசத்தியோ நிருவாண மென்றுஞ் சொல்லப்படும்.

இதனாற் சொல்லியது, பாலராயுள்ளவர்கள் முதல் வியாதியத்தரீருயுள்ளவர்களுக்குச் செய்கிறமுறைமை நிர்ப்பீச தீட்சையென்றும், சமய தீட்சையுடையவனுக்கும் விசேஷ தீட்சை யுடையவனுக்கும் அததற்குத்தக்க நித்திய கன்மங்களைக் கற்பிக்குமது நிரதிகாரை யென்றும், விளங்காநின்ற நிர்வாண மிரண்டு வகைப்பட் டிருக்குமென்றும், அவையாவது தீக்ஷை செய்தவுடனே சரீரத்தைக் கமனமாக்குகிறது சத்திய நிர்வாணமென்றும் தீக்ஷைசெய்த பின்பு சரீரம் சில நாளிருந்து தேகாந்தத்திலே முத்தியைக் கொடுக்கிறது அசத்தியோ நிருவாணமென்னு முறைமையும் அறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

நிற்பீசம் - அவ்விரண்டினுள் நிற்பீச தீக்கையாவது மலபரிபாக முடையவராயுந் தீக்கைப்பி னொருதலையான் வழுவின்றிச் செய்யக்கடவனவாய சமயாசாரங்களை யநுட்டிக்கு மாற்றலறிவிலராகிய,—பாலரொடுவாலீசர் விருத்தர் பணிமொழியார் பலபோகத்தவர் வியாதிப் பட்டவர்க்கு - பாலருடன் குமாரரும் முதியோரு மாதரும் பலபோகத்தினை யுடையவரு மிக்க நோயினை யுடையவருமாகிய விவர் முதலாயினோர்க்கு,—சமயாசாரந் திகழ்சுத்தி -ஆசாரியனுவா னதனையுணர்ந்து வினைக்கண்ணங்களோடு கூடச் சமயாசாரத்தையு மாகுதியாற் சுத்திசெய்தொழித்து,—நித்தத்தேனு மதிகாரத்தையியற்றி - நித்தியகன்ம மாத்திரையி னென்றவா றநுட்டிக்கு மதிகார முடையராகச் செய்வதாமாயினுஞ் சமயாசாரங்களைச் சுத்திசெய் தொழிந்தமையின்,—எழினிர்திகாரையென நின்றுபண்ணுஞ் சீலம் - நைமித்திகத்துங் காமிகத்து மதிகாரங் கொடாமையானிது அ

முதுபொருந்திய நிரதிகார தீக்கை யெனப்படும்.—அது - அத் தீக்கை மூன்றனுள்,—சமயிபுத்திரர்க்கு - சமயி புத்திரர்க்குச் செய்வதாகிய சமயமும் விசேடமும் ஒரோவொன்றே யாம்.—சாற்றுங்கால் - ஏனை நிருவாண தீக்கையைச் சொல்லுமிடத்து,—சாலநிகழ் தேகபாதத்தினோடு சுதநிய நிருவாண மென விரண்டாய்விளங்கும் - மிக்கு நிகழ்கின்ற தேகாந்தத்தின் முத்தியைப் பயக்கு மசத்தியோ நிருவாணமெனவும், அப்பொழுதே முத்தியைப் பயக்கும் சத்தியோ நிர்வாணமெனவும் இருவகைப் படுமென்பதாம்.

சமயாசார சுத்தியோடு செய்யப்படு நிருவாண தீக்கையும், அதற் கங்கமாயும் சுதந்தரமாயும் செய்யப்படுஞ் சமய விசேடங்களும் நிற்பீச தீக்கையெனக் கொள்க.

மறைஞானதேசிகர் உரை.

மே லிறுத்த முறையானே சபீச தீக்கையெனவும், அந்தச் சபீசஞ் சிவ தன்மணி லோகதன்மணியென விருவிதமா மாறுமுறையே யுணர்த்து கின்றார்.

ஓதியுணர்ந் தொழுக்கநெறி யிழுக்கா நல்ல வுத்தமர்க்குச் செய்வதுயர் பீசமிவர் தம்மை,நீதியினா னித்திய நைமித்திக காமியத்தி னிறுத்திநிரம் பதிகார நிகழ்த்துவதுஞ்செய்து, சாதகா சாரியரு மாக்கிவீடு தருவிக்கு முலோகசிவ தருமிணியென்றிரண்டா, மாதலினா னதிகாரை யாஞ்சமயவிசேட நிருவாண மபிடேக மிவற்றடங்குமன்றே. (௫)

(இ-ள்.) ஓதியுண ஆசாரியனிடத்திலே யாகமங்களை யோதி ர்க்தொழு யத னுண்மைப் பொருளை யறிந்து சமயாசா

க்கநெறியி ரங்களை வழுவற வனுட்டியென் ருசாரியன் சண்டேசுரன் சன்னதியிற் கற்பித்தபடி நடவாநின்ற உத்தமராகிய மாணுக்கற்குச் செய்யுந் தீக்கை மேலான சவீசமெனப் பெறும்.

ழுக்கா நல்லவுத்தமர்க்குச் செய்வ துயர்வீசம்

இவர்தம்மை

இந்தத் தீக்கைபெற்ற சாதகனையு மாசாரியனையு முத்தமாதிகாரிகளென்று சொல்லு மிருவரையும்,

நீதியி னு னித்திய நைமித்திக காமியத்தி னிறுத்தி

சாதகனை நித்தியகன்மங் காமிக கன்மமாகிய விரண்டு முறைமையிற் செய்தற்கதிகாரியாகக் கற்பித்து, ஆசாரியனை "புனன் மூழ்கித் தற்பித் தமலனடிபூசித் -தனலோம்பலாதி நித்தியம்" "பரமப்பிரதிட்டை தீக்கை பணுங் - கருதிலிங்கா னைமித்தி கம்" "உரைத்தமலன் வாக்கை யுளங்கொளக்கற் பாற்கு-விரித்தலுனை மித்திகமாமே. "சித்தியினைவேண்டியருச் சிக்கை சபம் பண்ணலென்-றெருத்திவிதங் காயகமென் றோர்." இங்ஙனங் கூறிய நித்தியமுதலிய மூன்று கிருத்திய மாசாரியற்கும், நித்தியமுங் காமியமுமாகிய விரண்டுஞ் சாதகற்கும் இம்முறைமையாற் கற்பித்தது.

நிரம்பதிகார நிகழ்த்து வதுஞ் செய்து

இம்மூன்று தொழிலையுஞ் செய்தற் காசாரிபருரித்தாதலாற் றனு மனுட்டித்தற் காசாரியராய் அதிகாரம்பெற்று மாணுக்கற்கு முபதேசம்பண்ணி நடக்கும்படி கற்பித்து,

சாதகாசாரியருமாக்கி

சாதகற்குச் சாத்திய மந்திரத்தையுங் கற்பித்துச் சாதகாபிடேகமும் பண்ணி யாசாரியற்குச் சருவ வித்தியாபிடேகத்தையுஞ் செய்து,

வீடு தருவிக்கு மலோக சிவதன் மணியென் றிரண்டாம்

அந்திக்கை யபரமுத்தியைக் கொடுக்கு முலக தன்மணி தீக்கையெனவும் பரமுத்தியைக் கொடுக்குஞ் சிவதன்மணியெனவு மிருவகைப்படும். அவையாவன,—

நிருவாண தீக்கையி லாசாரியன் மாணாக்கற்குப் பாவ கன்மத்தையே சோதித்துப் புண்ணியத்தைச் சோதியாமல் வைத்துச் சிகாச் சேதமு மின்றிப் பதப்பிராப்தியாகிய புவனங்களிலே யோசனைசெய்யும் தீக்கை லோகதன்மணி. மோட்ச காயியாகிய மாணாக்கற் காசாரியன் புண்ணியபாவமாகிய விரண்டினையு நானாவிதமாயிருக்கிற சஞ்சித கன்மங்களையுஞ் சுத்திசெய்து விதிவழிச் செய்யப்பட்டுச் சிகா மந்திரத்தி னாலேழுபிரகார மபிமந்திரிக்கப்பட்டதுமாய் ஞானசத்தி ரூபமா யிருக்கிற கத்திரிகையைக் கொண்டு பிரம ரந்திரத்துக்குமேலே பன்னிரண் டங்குலமுடைய சிகையில் சத்தி வியாபினி சமனை யுன்மனையெனக் கூறிய சத்திகள் நாலுக்கு மேற் சிவம் வியாபித்து நிற்கையா லடியி லெட்டங்குலம்விட் டான்மாக்களுக்கு மூலபாசமா யவர்கள் ஞானக்கிரியைகளைத் திரோதானஞ் செய்யுந் திரோதான சத்தி ஸ்வரூபமாயிருக்கிற மேல் நாலங்குல முடைய சிகையை யத்திரத்தாலே சேதிக்குமது சிவதன்மணி தீக்கையெனப் பெறும்.

ஆனதினாலதி காரையாம்

இச்சிறப்பினை யுடைத்தாகையினாலே சபீச தீக்கை சாதிகாரை யெனப்பெறும். மேலந்த விருவகையினை முடித்துணர்த்துகிறார்.

சமய விசேட நிருவாண மபிடேக மிவற்றடங்குமன்றே.

இங்ஙனங் கூறிய நிர்ப்பீச தீக்கையி லுண்டாகிய நிரதிகாரை சமய விசேடத்தி லடங்கும், சபீச தீக்கையி லுண்டாகிய சாதிகாரை நிருவாண தீக்கையு மபிடேகமு மடங்கும். எ-று.

சமயாசாரத்துடனே கூடி யனுட்டித்து வருகையாற் சபீசமென்றார். இது வடமொழி.

நிற்பீசத்தைப் பற்றச் சபீசஞ் சிறப்புடைத்தாகையா லுபர்பீசமெனச் சிறப்பித்தார்.

ஆசாரியனுக்குஞ் சாதகற்கும் செய்தொழில் வேற்றுமையாதலால் ரீதியெனச் சிறப்பித்தார்.

உலோகதன்மணி பராபரபோக வேதுவாதலாற் சிவதருமணியைத் தருமெனச் சிறப்பித்தார்.

இதற்கு வருணபத்ததி ஞான ரத்நாவலியிலுங் காலோத்தரத்துங் காமிகத்தும் வாதுளத்து மறிக. (௫)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

மேல் சபீச தீக்ஷாதிகாரிகளைக் கூறுகின்றது.

ஓதியுணர்ந் தொழுக்கநெறி யிழுக்காதல்ல வுத்தமர்க்குச் செய்வ தயர்பீசம் - கன்மகாண்ட சாஸ்திரங்களைப் படித் ததனுடைய பொருளை யறிந்து அந்தப்படியே வழுவாமல் அநுஷ்டாநங்களையும் பண்ணிவரு முத்தமர்க்குப் பண்ணுமது சபீச தீக்ஷை.—

ரீதியின் னித்தியநைமித்திய காமியத்தினிறுத்தி நிரம்பநிகார நிகழ்த்துவதுஞ்செய்து சாதகாசாரியருமாக்கி-அவர்களவர்க ளதிகாராநுகுணமாக நித்திய கன்மமாத்திரமாகவும் நித்திய நைமித்திக கன்மமும் நித்திய நைமித்திக காமிய கன்மமும்பண்ணும்படி ஸ்தாபித்து தீக்ஷை பிரதிஷ்டை பிராய்ச்சித்தாதியான சர்வாதிகாரத்தையுங் கொடுத்து சாதகாசாரியாபிஷேகமும்பண்ணி.

சாதகாசாரிய னென்றது, நைஷ்டிகாசாரியனைப் போல அக்கினி காரியாதி கன்மங்களின்றி சர்வமும் ஞானத்தினாலே பண்

ஞது அக்கினிகாரியாதி சர்வகன்மங்களையும் பண்ணும் பௌதி காசாரியனைச் சொன்னது.—

வீடுதருவிக்கு மூலோகசிவதன்மணி யென்றிரண்டாம் - மோக்ஷத்தைக் கொடுக்கும் நிர்வாண தீக்ஷைதானும் லோகதன் மணியென்றுஞ் சிவதன்மணியென்று மிருவகைத்தாம்.

உலோகதன்மணியாவது கிரகஸ்தனுக்கு பௌதிகாசாரியர் சிகாச்சேதமன்றியிற் பண்ணுந் தீக்ஷை.

சிவதன்மணியாவது ‡ நைஷ்டிகாசாரியன் நைஷ்டிகனுக்கு சிகாச்சேதத்துடனே பண்ணுந்தீக்ஷை.

நைஷ்டிகாசாரியன் பௌதிகனுக்கு உலோக தன்மணி தீக்ஷையும் பண்ணலாம்.

பௌதிகாசாரியன் நைஷ்டிகனுக்கு தீக்ஷை பண்ண லாகாது.—

ததுக்தம் காமிகே — த்வேதா நிர்வாணதீக்ஷா ஸ்யாத் லௌகிகீ ஶிவதர்மிணீ । ஶிவாசார்யம் விநா வக்த்ரே யா ஸா லோகதர்மிணீ ॥ ஶிவாசார்யேண ஸம்யக் க்ரியதே யா ஸா ஶிவதர்மிணீ । தீக்ஷயா லோகதர்மிண்யா பௌதிகாந் தீக்ஷயேத் குரு: ॥ ததைவ ஶிவதர்மிண்யா நைஷ்டிகாந் தீக்ஷயேத் குரு: । நைஷ்டிகோ நைஷ்டிகம் சைவ க்ருஹஸ்தம் தீக்ஷயேத் க்வசித் ॥ பௌதிகஸ்து க்ருஹஸ்தாம்ஸ்து நாந்யாந் தீக்ஷாம் ஸமாசரேத்.

ஆதலினு லதிகாரையாஞ் சமயவிசேட நிருவாண மபிடேக மிவற்றடங்குமன்றே - சபீச தீக்ஷைதானது அதிகாரத்துடனே கூடினதாகையால் சமய விசேஷ நிருவாண மாசாரி

யாபிஷேக மென்னும் நாலு தீக்ஷையு மவரவர் ஞானத்துக் கேடாகப் பண்ணப்படுவது. தீக்ஷையை யநேக பேதமாகச் சொல்லிப்போந் திவ்விடத்து நாலென்று சொல்லுவானே னென்னில்? அந்த தீக்ஷா பேதங்களெல்லா மிந்த நாலு தீக்ஷையிலே யந்தர்ப்பவிக்கு மென் றிதன்பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

சபீசத் தருகரைச் சாற்றுகின்றார்.

ஓதியுணர்ந் தொழுக்கநெறி யிழுக்கா நல்லவுத்தமர்க்கு—சபீசதீக்ஷை படிப்பிக்கப் பண்ணும் விசேஷ வித்தையாகிய சிவாகமங்களைப் படித்துப் பார்த்துப் பதார்த்தங்களைப் பகுத்தறிந்து அச்சமயாசார மார்க்க நடக்கை தப்பாதனுஷ்டிக்குஞ் சாமர்த்தியங் காண்பிக்குஞ் சாமானிய வித்தையாகிய தர்க்க சத்த வேத வேதாந்த மீமாம்ச புராண முதலிய முற்று மற்றருகமா மிவைகளில் ஒவ்வொன்றைத் தான்படித்துப் பார்த்துப் பதார்த்தங்களைப் பகுத்தறிந்து அச்சமயாசாரமார்க்க நடக்கை தப்பா தனுட்டியாநின்று காண்பிக்குஞ் சாமர்த்திய முடையராய்ச் சத்துத்தமாதிகாரிகளாகுஞ் சமயி விசேஷி நிருவாணி சாதகாசாரியர்களா மருகர்க்கு.—

செய்வது - பண்ணுவது,—

உயர்பீசம்-கலைகடை- குறைதலால் முக்கிய சபீசதீக்ஷ,—

இவர் தம்மை - இவ்வைவரையும்,—

நீதியினால் - அவரவர்க்கு அருகமாக,—

நித்திய நைமித்திய காமியத்தில் நிறுத்தி-சமயி விசேஷி நிருவாணி மூவரையும்; நீர்முழுகுதல், தர்ப்பித்தல், ஜபித்தல் பூசித்தல்ஓமித்தல் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து தியானித்த

ல், சமாதித்தல், சாக்ஷாத்கரித்தல் முதலிய அவரவர்க் கருகமான கன்மங்களை விதிப்படி விழாதுசெய் நித்தியாதிகாரத்திற் பிரதானமாய் நிற்பித்துக் குருக் குறிப்பேவலாற் சிறிதியன்ற நைமித்திகாதிகாரத்திலும், சிகாச்சேதவானாகிய நிருவாணிகட்கு விசேஷித்து நைமித்திகத்தி லதிகார முண்டென்று காமிக முதலிய சிவாகமஞ்செப்புதலாற் குரு கற்பனையாற் சகல நைமித்திகாதிகாரத்திலும் சிறிது விரும்பிற் குருகற்பனையாற் சிறிது காமியாதிகாரத்திலும் நிற்பித்துச் சாதகாபிஷேகம் பண்ணிச் சாதகனாகக் குறித்து அவனைச் சாதகாபிஷேகம் பண்ணிச் சாத்திய மந்திர ஜபபூசை யோக முதலிய காமியாதிகாரத்திற் பிரதானமாய் நிற்பித்து, நித்தியாதி காரத்திலும் குருவாஞ்ஞையினாற் சகல நைமித்திகாதி காரத்திலும் நிற்பித்து, ஆசாரியாபிஷேகம் பண்ணி ஆசாரியனாகக் குறித் தவனை யாசாரியாபிஷேகம்பண்ணி தீக்ஷைபிரதிட்டை சிவாகமபோதன முதலிய நைமித்திகாதிகாரத்திற்பிரதானமாய்நிற்பித்து நித்தியாதி காரத்திலும் பரார்த்தம் சிறிது சுவார்த்தமாகவும் சிறிது காமியாதிகாரத்திலும் நிற்பித்து,—

நிரம்பவதிகாரம் நிகழ்த்துவதஞ் செய்து-நிர்ப்பீச தீக்ஷை போல் ஏலாதிகார மாத்திரமாய் ஏலாவதிகாரக் குறையாய் இயற்றுவிப்பதின்றி, இப்போது சொல்லிய நித்தியாதிகாரி காமியாதிகாரி நைமித்திகாதிகாரி மூவர்க்கும் அவரவர்க் கருகமாய் நிறைய வதிகாரம் பண்ணுவது பண்ணுவித்து, அவர்க்குள் ளிருவரை.—

சாதகா சாரியருமாக்கி - சாதகாசாரியர்களாலுஞ் சிகாச்சேதமாத்திரஞ் செய்த நிருவாணியாலு மோரிருவர் முறையில் ஸ்வதந்திரர்களாயுங் குருவாஞ்ஞையினாலும் பண்ணப்பட்டதினால்,—

வீடு தருவிக்கும் - மோக்ஷங்கொடுப்பிக்கும் மூவருள் ஆசாரியன் ஸ்வதந்திரமாய்ச் சர்வாதி காரியாதலாற் சர்வசம்பூரண சபீச சாதிகாரதீக்ஷாவாரூதலா லவனுக்கே சாதிகார தீக்ஷையென்ப தியல்பினாற் செல்லும்.

திரும்ப அந்தச் சபீசதீக்ஷை,—

உலோகசிவதன்மிணி யென்றிரண்டாம் - உலோகதன்மிணிதீக்ஷை சிவதன்மிணி தீக்ஷையென் றிருவிதமாம்,—

ஆதலினால் - சொல்லிய நீதியினால், சபீசதீக்ஷா பேதமெல்லாம் நிர்ப்பீச தீக்ஷையில் நிரதிகாரையாய் முன் சொல்லிய சமய விசேஷ நிருவாண தீக்ஷைகளை நீக்கி —

அதிகாரையாம்-என்பது தலைகடை குறைதலாற் சாதிகார தீக்ஷையாம்.—

சமய விசேட நிருவாண மபிடேக மிவற் றடங்குமன்றே. அன்றே என்பதசை.

உலோக சிவதன்மிணி யென்ற விடத்துச் சிறிதிசையாதது விசேஷித்திசைப்பாம்.

முறைமையிற் சபீச தீக்ஷபேத மாகுஞ் சிவதன்மிணி தீக்ஷை உலோகதன்மிணி தீக்ஷை யிரண்டிற்குள் சிவதன்மிணி தீக்ஷை பரையென் றுரைக்கும் நயிஷ்டிகீ தீக்ஷை யென்றும் அபரையென் றுரைக்கும் பவுதிகீ தீக்ஷை யென்று மிருவிதமாம்,—

அவற்றுள், பரம்பரையாயும் சாக்ஷாத்தாயும் நிரதிசயசர்வஞ்ஞாதி சிவகுணமண்ட்புற்ற முத்திமாத்திர காமிகராயுஞ் சாதக காரிய காமிய சிவதன்ம லோகதன்ம கன்மானுஷடான பலப்பற் றற்றவர்களாயும் அவரவர்க்கருகமாஞ் சாமானிய விசேஷ சரியை கிரியை ஜப சாலம்ப சிவயோக நிராலம்ப சிவயோக ஞான திரிபதார்த்த ஞான சிவத்துவ பசுத்துவ விவேக ஞானவான்களாயும், அந்தந்தச் சிவதன்மானுஷ்டான சீலர்க

ளாயுஞ் சிரீகண்டாதி சதாசிவாந்த சாலோக சாமீப சாரூப ச மபலத் தியான சாத்திய சமபல மூர்த்தி சாயுச்சியங்களையு ம் சதாசிவ தத்துவத்திற்குமேற் சத்தி சிவதத்துவ கலாபுவ ன சாதார நிராதாரங்களிற் பரசிவ லோக சாமீப சாரூப சத்து ச் சித்துச் சமபலதடஸ்த மூர்த்தி சாயுச்சியமுற்றுப் பெற்று மூ ர்த்முத்தஸ்வரூப சாயுச்சியங்களையும் அவரவர்க்கருகமாய்ச் சா ருதற்கருகர்களாயுமிருக்கும் சமயிபுத்திரர்கள் புத்திரவிசேஷ நிரபிஷேக நிரதிகார நிருவாணிகள் சாபிஷேக சாதிகாராசாரி யர்க ளிவர்கட்கு யோக்கிய மறிந்து சர்வசிவ புண்ணிய பசு பு ண் ணிய பாவசஞ்சித கன்மசுத்தி மதியாகவும் அதில்லாதாகவும் அஷ்டாங்குல மட்டு விட்டறுக்குஞ் சிகாச்சேத வதியாகவும் அ தில்லாதாகவும் பண்ணுமது நயிஷ்டிகி சிவதன் மிணி தீக்ஷை.

கூடவுதிக்குமாயேய மாகாமாயேய புத்திகுண வணிமாதி குண குணஞ்சிற்றுப் பலமாகத்தான், அதிக பலமாகத் தா ன், அதிக பலமாகவுதிக்குஞ் சரீர நிரவதிக சாதிசய சர்வ ஞ்ஞாதி சிவகுண மணப்புற்ற போகபோகாந்த மோக்ஷ கா மிகளாயும் மகாப்பிரளய பரியந்த மிந்தச் சரீரத்தைத் தானே மரண மடாதபடி அதிமார்க்க மாந்திர சாத்திரப் பிரசித்த விசேஷ சிவ தீர்த்த மருந்து மந்திர யோக முதலிய சிவதன்ம விசேஷா னுஷ்டானத்தாற் சித்தி பண்ணிக் கொண்டு தாமிரு க்குப் புவனமது விட்டு முட்டின்றி விரும்பிப்போம் புவனங்க ட்கிணங்க வேடந்திரித்து வடிவு விரித்து மாயாவதி சரிக்கும் சாமர்த்திய வாஞ்சா வான்களாயும் சரீரம் விட்டு விரும்பும் வேறு சரீரம் பரித்து மகாமாயாவதி சரிப்பவிருப்பந் தரிப்பவ ராயுங் காமிய சிவஞானத்தியான ஜப பூசா சேவாதி சகாமா ராதனை அல்லதணுபக்ஷப் பிரமாதி நாற் சிவமூர்த்தி யான்மாரூ ட சம்புபக்ஷ பிரமாதி நாற்சிவமூர்த்தி சம்புபட்சமாத்ர சதா சிவ மூர்த்தி யாகப் பஞ்ச பஞ்ச கலேசுவர மூர்த்திகளு

ள் அவரவர்க்கிஷ்ட பலார்க கலார்க கலேசுவர மூர்த்தி ஞா னத் தியான ஜப பூஜாசேவாதி சகமாராதனை அல்லது அப் படிச் சிந்திக்கப்படும் காலாக்கினியாதி அநாசிருதாந்த புவ னேசுவர்களுள் அவரவர்க் கிஷ்டபலார்க புவனார்க புவனேசுவ ர ஞானத் தியான ஜபபூசாசேவாதி சகாமாராதனை யென்கி ன்ற அதிமார்க்க மாந்திர சாஸ்திரப் பிரசித்த சிவதன்மானுஷ் டான வாஞ்சா வான்களாயு மிருக்குஞ் சாதகர்க்குத் தீக்ஷா னந்தர மனுஷ்டிக்குஞ் சிவபுண்ணியத்தைக் கொத்து மாறின்றிச் சேரும் முன்செய்த சிவபுண்ணிய மாத்திரம் அந்தந்தச் சாதக ரடையும் பலார்க கலார்கங்களாய் அந்தந்தக் கலாமரியாதி யிற் சேஷித்து நிற்கச் சர்வ பசுபுண்ணிய பாவசஞ்சித கனம சுத்தி மதியாகவும் துவாதசாங்குல மட்டுவிட் டறுக்குஞ் சிகா ச்சேதவதியாகவும் பண்ணுமது பௌதிகசிவதன்மிணி தீக்ஷை.

மாயாவதிமட்டு முட்டும் பிரஞ்ஞாப் பெருக்குத் தனது த னது வசதி அவதி சுருக்கும் பின் கூட்டவுதிக்குந்தான் சிற்றுப்பல மாக அதிக பலமாக வதிக்கும் சாதிசய சர்வஞ்ஞதாதி சிவகு ணை மணப்புற்று மாயாமண்டலத் திருந்தாலும் சிரிதுபெயரிடத் தப்பிரஞ்ஞாப்பெருக்குமாயோபரி அபரிமிதமாக விரிக்கும் மா யேயபுத்தி அணிமாதிகுணமணப்புற்றும் அதுவனறி வைதிகாத் தியான்மிக சாத்திரப் பிரசித்த யாகாதி பசுத்தன்மந் தன் கோ டிக்குளடக்கும் லௌகிக சாத்திரப் பிரசித்த தண்ணீர்பந்தர் தடாகமுதலிய லோகதன்மந் தழுவியொழுகியும் லோகதன்ம சிவதன்மதுலாகோடிகளுக்குட் சிறிதொருதலைபற்றி முன்சொ ல்லிய அதிமார்க்க மாந்திர சாத்திரப்பிரசித்த சிவ தன்ம து லாகோடி கொழுவி, அச் சிவதன்மானுஷ்டானத்தால் மகா மாயாபூதி விரும்பில் தன்றோடு கூடவுதிக்கும் மகாமாயேய பு த்திகுண அணிமாமுதலிய குணபலம் சிற்றுப் பலமாகத்தான்

அதிகபலமாக வுதிக்குஞ் சாதிசயா சர்வஞ்ஞதாதி குணமணப் புற்று முதிக்கும் போகபோகாந்த மோக்ஷகாமிகளாயும், மகாபிரளய பரியந்தஞ் சிவதன்மிணி பவுதிகிதீக்ஷையில் சொல்லிய இருவகை முறைமையிற் சரீரந் தரித்துச் சரிப்ப விருப்பத் தரிப்பவராயும், சிவதன்மமணப்புற்ற லோகதன்மம் உலோக தன்ம மணப்புற்ற சிவதன்மம், இருதன்மானுஷ்டான சீலர்களாயுமிருக்கும் சாதகர்க்கு அந்தந்தச் சாதகர் பொருந்த விரும்பும் அந்தந்தப் பலார்க கலார்கங்களாய் அந்தந்தக் கலாமரியாதியிற்பசுபுண்ணியங்கள் சிவபுண்ணியங்கள் பரிசேஷித்துநிற்கப் பாவ கன்மங்கள் அந்தந்தக் கலாமரியாதியிற் பரிசேஷியாது பரிசுத்தியாக அப் பரிசுத்தி மதியாகவும் அந்தந்தச் சாதகருக்குட் சதாசிவதத்துவோபரி சத்திசிவதத்துவ போக காமிகட்குத் துவாத சாங்குலமட்டு விட்டறுக்குஞ் சிகாச்சேதவதியாகவும் பிருதிவி தத்துவாதி சதாசிவதத்துவாந்த போக காமிகட்குச் சிகாச்சேதவதியன்றியும் பரையாகவு மபரையாகவு பண்ணுமது உலோக தன்மிணி பவுதிகிதீக்ஷை.

ஸ்ரீமதகோர சிவாசாரியர் பத்ததிமுதற் சிறிதுபத்ததிகளிற் பவுதிகி சிவதன்மிணி தீக்ஷை பவுதிகிலோகதன்மமிணி தீக்ஷை இரண்டிற்கும் இருதீக்ஷாபலார்க கலார்கங்களாய்ப் பசுபுண்ணிய சிவபுண்ணிய தன்ம கன்மங்கள் பரிசேஷித்து நிற்கப் பாவகன்மங்கள் மாத்திரம் பரிசேஷியாது பரிசுத்தியாகப் பஞ்சகலாசுத்தி யொருமிக்கப்பண்ணி விரும்பிய விரும்பிய புவனபோக போகாந்தத்துப் புநர்தீக்ஷாபேக்ஷை யுபேக்ஷித்துச் சாக்ஷாத்மோக்ஷம் சாரும்படிக்குச் சிவனிட்டத்து யோசனை செப்பியிருப்பது சிந்தித் தறிக.

நிர் தீக்ஷா பரீக்ஷை பண்ணியது நுண்ணியதுதானே, கிருஹஸ்தாசாரியர் விரக்தாசாரியர் என்று விசேஷிபாம லாசாரி

யர்கட்கு நயிஷ்டிகதீக்ஷை யென்று முன்சமுதாயத்திற் சாற்றினீர்! அதுகாலோத்தராதியில் நயிஷ்டிகாசாரியர் நயிஷ்டிகர்க்கும் கிரகத்தர்களுக் தீக்ஷைபண்ணுக, பவுதிகாசாரியர் பவுதிகர்க்கு மாத்திரம் தீக்ஷைபண்ணுக வென்னும் பாடத்தாற் கிருகஸ்காசாரியர்க்கு நயிஷ்டிகதீக்ஷை நாட்டப்படாதென்று நாட்டப்பட்டது. நீ சொல்லிய துள்ளது, ஆசாரியர்கட்கு நயிஷ்டிகதீக்ஷை யென்னுஞ் சர்வஞ்ஞானோத்தர சாமானிய வசனத்தினாலும் நயிஷ்டிகாசாரியர் நயிஷ்டிகருக்கு மாத்திரம், கிருகத்தாசாரியர் நயிஷ்டிகர்க்கும் பவுதிகர்க்கும் பண்ணுக வென்னு மாகமாந்தர விசேஷவசனத்தாலும் நயிஷ்டிகதீக்ஷையினாலே தீக்ஷிதனாயிருக்கும் கிரகத்தனும் விரக்தனும் வர்ஜிக்கப்படாது வாஞ்சிக்கும் பிராரத்தகன்ம பலபோகவாஞ்சை மாத்திரத்தினாலேதான் மணிமந்திர மருந்து முதலிய சாதனமாத்திர சாத்தியகாயிக போகவாஞ்சை மாத்திரத்தினாலேயுந்தான் மலபரிபாகதாரதம்மியத்தால் நையிஷ்டிகதீக்ஷா வைசித்திரிய மாத்திரத்தால் இங்கிருந்து வாஞ்சியாதிருக்கவும் சரீராந்தத்திற்றானேவரும் பராபர புத்தி யபரபுத்தி போகவாஞ்சை மாத்திரத்தினாலேயுந் தானசாதக சாத்திய பவுதிக தீட்சா பல புவன பகிபூதி வாஞ்சையில்லாமையாற் பவுதிகனன்று நயிஷ்டிகன்றானே யென்றுஞ் சோமசம்புவிருத்தி வசனத்தாலும், கிரகத்தாசாரியர்கட்கு நயிஷ்டிகதீக்ஷை நன்றாக நாட்டப்பட்டது.

நீரப்படிச் சொல்லில் பவுதிகாசாரியர் பவுதிகர்க்குத் தீக்ஷை பண்ணக் கடவர்க ளென்னும் வசனம் நிஷ்பலமாய் அப் பிரமாண்ணியத் தானமாய்ப் போகாதோ ? நீயப்படிப் போமென்று சொல்லியதெப்படி, போகாது. சபலமாகத் தானே சோமசம்பு பத்ததி வியாக்கியானத்திற் சுருக்கியுரைத்திருப்பது விரித்துரைப்பாம்.

முறைமையில் நிஷ்டை யென்று மோக்ஷத்திற்கும் சமாதிக்கும் விரத முதலியவற்றிற்கும் பெயராதலால், பாலியவயது தொடுத்து மரணாந்தம் விரதம் நியமித்துத் துறவிகளாயிருக்கும் நயிஷ்டிகப் பிரமசாரிக ளென்றும் கன்னிகா கல்யாண காலாவதி விரதம் நியமித்துத் துறவிகளாயிருக்கும் பவுதிகப் பிரம சாரிகளென்றும் இருவகையராயிருப்பர். விரக்தாசாரியர்களும் கிரகத்தா சாரியர்களும் தனித்தனி சரீராந்தத்தில்வரும் மோக்ஷ விருப்பத்தினாலும் அவரவர்க்கிட்ட புவனபதி பூதி விருப்பத்தினாலும் அவ்விருப்பத்துக் கருகமாய்நயிட்டிகதீக்ஷை பவுதிகதீக்ஷை பண்ணுவித்துக்கொண்டு மூன்று பகுப்பார்களுக்கும் தனித்தனி அட்டாங்குல சிகாச்சேதமுடைய நயிட்டிகாசாரிகளென்றும் துவாதசாங்குல சிகாச்சேத முடைய பெளதிகாசாரியர்களென்றும் இருவிதமாயிருப்பார்கள். ஆதலால், கிரகத்தா சாரியர்கள் நயிட்டிகா சாரியர்களாயும் பவுதிகா சாரியர்களாயும் குருத்துவம் பரிப்பார்களென்பது பக்ஷமாத்தானீ போற் பதித்து நாட்டுதலானும் வசனங்கள் சபலங்கள் தானே! அஃதப் படியாகட்டும், ஸ்ரீகாமிகாமகத்தில் நாலாம் வருணத்தில் நயிட்டிகர்கட்கே நைமித்திக கன்மகர்த்திருத்துவ குருத்துவம்; கிரகத்தருக்கு நித்தியகாமிய கன்ம கர்த்திருத்துவ சமயிபுத்திர சாதகத்துவ மாத்திரம், குருத்துவ மில்லை யென்று கூறியதேது? அது உள்ளது. ஆமர்த்தக மடம் முதல் மடகுரு மனக்குறிப்புப் பிரிப்பினால் மடப்பகுப்பாகமங்களிற் சிறிதாகமங்களிற் கூறியது.

காலோத்தராதியில்,—

க்ருஹஸ்தஸ்ஸர்வவர்ணேஷு பூஜ்யோகுருருதாகிருத:
நைஷ்டிகத்வதமோக்ஞேயோபௌதிகந்துவிசேஷத:
சதுர்ணமபிவர்ணாம்லிங்கிநாம்க்ருஹிணமபி
ஆசார்யத்துவம்சிவேநாஸ்மிஂஸித்தாந்தேப்ரதிபாதிகம்

என்று கூறுதலானும், கிரணாகமத்தில் பிராமணாசாரியர் முதல் ஆசாரியர் நால்வர்க்கும் முறைமையில் நான்கு மூன்று இரண்டு ஒரு வர்ணங்களிலே கல்யாணம் விதித்திருத்தலானும், சர்வாகமங்களும் அப்படிச் சாற்றுவாம். ஓராகமத்திற் றள்ளியது கொண்டு தள்ளினுல் பிராமணனே குரு, மற்றை வருணத்தார் சாதகர் புத்திரர் சமயிகள் மாத்திரமா யிருப்பார்களென்றும், பிராமணன் பிராமணன் முதல் நால்வர்க்குங் குருவென்றும், அரசன் அரசன்முதல் மூவர்க்குங் குருவென்றும், வணிசன் வணிகன்முத லிருவர்ககும் குருவென்றும், சூத்திரன் சூத்திரர்க்குக் குருவென்றும் மேருதந்திரத்திலும் காமிகம் பாராக்கிபை முதலிய ஆகமங்களிலும் முறைமையில் நிஷேதித்தும் விதித்தும் இருத்தலால் ஒருவசனத்தைப்பிடித்துப் பிராமணன் றனே குரு மற்றவ ரல்லரென்று பேசவேண்டும். அப்படியாகட்டு மென்று நீ சொல்லில் மற்றையர்களுங் குருவென்னும் அநேகாகமவசனங்களுக்கும் அப்பிராமணியப் பிரசங்கம் வரும்.

பிராமணனில் பிரஞ்ஞாவான்க ளில்லாதிருந்தால் அரசன் முதலோர்க் கரசன்குரு, அரசரிற் பிரஞ்ஞாவான்க ளில்லாதிருந்தால் வணிசன்முதலோர்க்கு வணிகன் குரு, வணிசரிற் பிரஞ்ஞாவான்க ளில்லாதிருந்தால் சூத்திரர்க்குச் சூத்திரன் குருவென்னும் வசனங்களுக்குப் பிராமாண்ணியம் சொல்லலாமென்று நீ சொல்லில், நாலாம் வருணத்து நயிட்டிகரிற் பிரஞ்ஞாவான்கள் இல்லாதிருந்தாற் கிரகத்தன் குருவென்னும் வசனத்துக்கும் பிராமாண்ணியம் நாம் பேசுவோம். அப்படித்தான் சொலுமென்று நீ சொல்லில் அதுவுங்கூடாது. கிரகத்தன் சர்வவர்ணங்களிலும் பூச்சியனாகிய குருவென்று கூறுதலால் நாலாம்வருணத்து நயிட்டிகர் பிரஞ்ஞாவான்களா யிருந்தா

னும் கிரகத்தரும் பிரஞ்ஞாவான்களா யிருந்தால், இருவகை யாருங் குருவென்று கூறுவோம்.

அப்படித்தானுகட்டு மென்று நீ சொல்லில்? அதவுங் கூடாது. மந்தப் பிரஞ்ஞாவானுயிருந்தாலும் பிரவாக சந்ததிப் பிரசித்தப் பிரகுதிமானுயிருக்கின்ற குருபுத்திரனைத் தியாச்சியம்பண்ணலாகாதென்று சிவாகமஞ் செப்புதலால் ஒன்றுங் குறியாமற் பிரஞ்ஞாவான்களா யிருக்கிறசீஷர்களுதவியாக அவனேகுருவென்று கூறுவோம். இப்போது சொல்லிவந்த வசனங்களாலே விரதிகளில் பிரமசாரியும் கிரகத்தனும் குரு, வானப்பிரத்தனுஞ் சந்நியாசியுங் குருவல்லரென்று கூறப்பட்டது.

ஸ்ரீ காமிகாகமத்தில் சன்னியாசிக்கும் குருத்துவமுண்டென்று கூறியதேது? உள்ளது. சாத்திர திட்சைமாத்திரத்திலென்று சமாதானம். சாட்சாத்கிருத சிவாதிபதார்த்த சித்த சிவயோகியாகில் சாம்பவ தீக்ஷைமாத்திரத்திலென்று சமாதானமாம்.

நாலாம் வருணத்தார்க்குப் பிரணவமாகாதென்று பிராமணர் முதலோர் பேசுவதேது? உள்ளது. குருத்துவம் விதித்திருத்தலாற் பிரணவ பூர்வப் பிராசாதமறியாதவன் குருவல்லனென்று கூறுதலானும், ஸ்ரீ மகுடாகமத்தில்

"நிர்வாணதீக்ஷிதே சூத்ரே
ப்ரணவஞ்ச நியோஜயேத்"

என் றிருத்தலாலும், காமிகத்திலு மப்படி யிருத்தலானும் பிரணவமாமென்று பேசுவோம்

சோமசம்பு பத்ததி முதற் பத்ததி கர்த்தாக்கள் நிஷேதியாதபடியினாலே விசிஷ்ட சமயி முதலானோர்க்கும் பிராமாண்ணியங்கொடுத்திருத்தலானும் ஆமென்பது சூசிக்கப்பட்டது.

பிரஞ்ஞையில்லாப் பிராமணர் சிலர் நாலாம் வருணத்திற் சந்நியாசி இல்லையென்று சாற்றுவார்கள், அது நயிட்டிகப் பிரம

ாரிக்குள் ளடக்கிப் பிராயச் சித்தாதி விதித்தலாலேயும், சிந்தி
ு விசுவசாதாக்கியத்தில் பிராமணர்முதற் பத்துச் சாதிக்கும்
ிரமசரியம் கிரகத்தம் வானப்பிரத்தம் சந்யாசமென்று நான்
ாச் சிரமமு முண்டென்று விதித்தலால் சைவத்திற் பிரசி
த்தம்.

வைதிகத்தினும் ராமாயணத்தில் கிருதாயுகக் கிரமத்தில்
ிராமணர் முதல்நால்வர்க்கும் தபோமுக்கியஞ் சாற்றுவது
ோலப் பிரமாண்ட புராணத்தில் கிருதயுகத்திற்குப் பிராமண
ந்நியாசி முக்கியன், திரேதாயுகத்திற்கு க்ஷத்திரிய சந்நி
ாசி முக்கியன், துவாபர யுகத்திற்கு வைசிய சந்நியாசி முக
ியன், கலியுகத்திற்குச் சூத்திர சந்நியாசி முக்கியன் என்னும்
பசன முதல் வசனங்களால் பிரசித்தந்தானே.

சிகாச்சேத மில்லார்க்கு ஆசாரியாபிடேக மாகாதாதலால்
ிரகத்தரிலும் விரக்தரிலும் நயிட்டிகி தீட்சாவான்களால் நயி
ட்டிகாசாரியர்கள் உண்டென்று நாமுன் நாட்டுதலால் அவ்விரு
ளை நால்வருணத்தும் நயிட்டிகாசாரியர்களே சாற்றியபரியா
தயில் சைவத்திற் சந்நியாசங் கொடுக்க வேண்டும். வைதிகத்
துக்குப்போலக் குருத்துவமில்லாத சந்நியாசங்கொடுப்பதின்று.

பஞ்சருஷி கோத்திரத்தில் சிவபிராமணர் சர்வாதிகாரிக
ளென்று காமிகத்திற் சாற்றுதலால் அவர்களிடத்தில் சிவநிட
்திற் போல நயிட்டிகாசாரியர் பவுதிகா சாரிய ரென்னும் பரி
ாலோசனை சந்நியாசாதி பரிக்கிரகம் பண்ணும் பொருட்டுப் ப
ண்ணுவதின்றென்று சமபுத்தி பண்ணுவதே சால்பு. அமையும், இ
னி யப்பால் நடப்போம்.

சிவஞானயோகியருரை வருமாறு.

———o———

இனிச் சபீசமாவது, மலபரிபாகத்தோடு கூடக் கற்றறிவு மாற்றலும் மிக்குடையராயினார்க்கு, ஆசாரியனுவான் அஃறிந் து சமயாசார கன்மமாத்திர நிறுத்தி ஏனையவற்றைச் சுத்திசெ ய்தொழித்து நித்திய கன்மமுதலிய மூன்றினும் அதிகாரமு டையராகச் செய்வதாம். ஆகலின் இது சாதிகார தீக்கையெ னவும் பெயர் பெறும். இத்தீக்கைப் பேறுடையார் தீக்கை வே றுபாட்டாற் சாதகரு மாசாரியருமென் றிருதிறப்படுவர். இந் தச் சபீச தீக்கைதான் இல்லற முடையார்க்குத் திரோதான சுத்திரூப சிகாச்சேதமின்றிச் செய்வதாய உலகதருமிணியுந் து றவற முடையார்க்குத் திரோதான சத்திரூப சிகாச்சேதத் தோடு செய்வதாகிய சிவதருமிணியுமென் றிருவகைப்படும். இ வை முறையே பௌதிக தீக்கை நைட்டிக தீக்கை யெனவும் பரியாயப் பெயர் பெறும். சமய விசேட நிருவாண மபிடேக மென்னும் பேதமெல்லாம் நிர்ப்பீசனு சபீசமென்னும் இவ்விர ண்டனு ளடங்கு மென்பதாம்.

சமயாசார சுத்தியின்றிச் செய்யும் நிருவாண தீக்கையும் அதற் கங்கமாய்ச் செய்யப்படுஞ் சமய விசேடங்களுஞ் சபீச தீக்கையெனக் கொள்க.

உத்தமத்தி லுத்தமரென்பார், நல்ல வுத்தமரென்றார்.

ஓதியுணர்தலும் ஒழுக்கநெறி யிழுக்காமையுமாகிய விரண் டுமுடையார் உத்தமத்தி லுத்தம ரென்பதூஉம்,இரண்டுமில்லா தார் உத்தமத்தி லதமரென்பதூஉம் பெற்றாம்.

பெறவே, நிர்ப்பீசஞ் சபீசமென் றிருதிறப்படுஞ் சாதார தீக்கைக் குரியார் இவ்வாறு மூத்திறப் படுவரென்ப தாயிற்று

இங்ஙனங் கூறிய வாற்றால் ஔத்திரியெனத் தொகையா னொன்றும், ஞானவதி கிரியாவதியென வகையா னிரண்டும், ஞானவதி நிர்ப்பீசஞ் சபீசம் கிரியாவதி நிர்ப்பீசஞ் சபீசமென விரியா னான்குமாயவாறு காண்க.

நிர்ப்பீசஞ் சபீசமென்னும் இவற்றின் விரியாகிய சமயவிசேட முதலியவற்றி னியல்பெல்லாம் ஆகமங்களுட் காண்க.

இவை மூன்று செய்யுளானுஞ் சாதார தீக்கையின் வகையும் அவற்றியல்புகளுந் தொகுத்துக் கூறப்பட்டன.

நிரம்பவழகியருரை வருமாறு.

—0—

முன் சொன்ன நிர்ப்பீச சபீசமென்ற விரண்டினுள் நிர்ப்பீசமருளிச்செய்து மேல் சபீச தீக்ஷையின் முறைமையும் உலோகதன்மணி சிவ தன்மணியின் முறைமையு மருளிச்செய்கிறார்.

ஓதியுணர்ந் தொழுக்கநெறி யிழுக்கா நல்ல உத்தமர்க்குச் செய்வ துயர்பீசம் - வேதாகம சாத்திரங்க ளெல்லாத்தையு மதிகரித்து அவையிற்றி லுண்டானவர் தங்களையு மறிந்து அந்தச் சாத்திரஞ் சொன்ன முறைமையில் ஒழுங்கு தப்பாமல் நடக்கிற உத்தமரி லுத்தமரா யுள்ளவர்களுக்குச் செய்வது மேலான சபீசதீக்ஷை,—இவர்தம்மை - இந்தவுத்தமர்தங்களை,—நீதியினால் நித்திய நைமித்திய காமியத்தி நிருத்தி- அவரவர்க்குத் தக்க முறைமையாக நித்திய கன்மத்தையும் நைமித்திய கன்மத்தையும் காமியத்தையும் கற்பித்து நிறுத்தி,—நிரம்பதிகார நிகழ்த்துவதுஞ் செய்து - பரானுக்கிரக முதலான எல்லாவதிகாரத்தையுங் குறைவறக் கொடுத்து,—சாதகராசாரியருமாக்கி- நிருவிகற்ப சமாதி முதலானவையிற்றையுங் கற்பித்து ஆசாரியபிஷேகமுஞ் செய்து,—வீடுதருவிக்கும் - மோக்ஷத்தையுங்

கொடுப்பிக்கும். அது,—உலோகசிவ தன்மணியென் றிரண்டாம் - ஆசாரியன் இந்த வான்மாவை இவன் போகங்களுக்கு இச்சையான புவனங்களிலே யோசிப்பிக்கிறது உலோகதன்மணி யென்றும் சிவனுடனே யோசிப்பிக்கிறது சிவதன்மணி யென்றும் இரண்டுவகைப்பட்டிருக்கும்.—ஆகலினு லதிகாரையாம்- இப்படிச் சொல்லிவந்த தீக்ஷைகளின் விசேஷங்களினுல் இவையெல்லா மதிகாரையாம்.—சமயவிசேஷ நிருவாண மபிடேகமி வற்றடங்குமன்றே - முன் சொல்லிவந்த தீக்ஷைகளெல்லாம் சமயத்திலும் விசேஷத்திலும் நிருவாணத்திலும் அபிஷேகத்திலும் இந்த நாலு தீக்ஷையிலும் அடங்கும்.

'பாலரொடு வாலீசர்' என்ற திருவிருத்தத்தில் 'நிரதிகாரை யென நின்றிரண்டாய் விளங்கும்' என்ற பதத்துக்கு வியாக்யானம் 'இவற்றடங்குமன்றே' என்ற வளவும் வந்து முடிந்தது; இது அதிகாரை என்னுமதுங் கண்டுகொள்க.

இதனுற் சொல்லியது, வேதாகம சாஸ்திரங்களை ஓதியுணர்ந்து அந்தச் சாத்திரஞ் சொன்ன முறைமையினுலே நிற்கிற உள்ளத்தவர்களுக்குச் செய்வது சபீசதீக்ஷை யென்றும், இவர்களுக்கு முறைமையிலே நித்தியம் நைமித்தியங்களையும் கற்பிக்கிறது அதிகாரையாமென்றும், இந்தத் தீக்ஷைகளெல்லாஞ் சமய விசேஷ நிருவாணம் அபிஷேகமென்கிற நாலினு மடங்குமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

உயர்பீசம் - இனிச் சபீசமாவது,—ஓதியுணர்ந் தொழுக்கநெறி யிழுக்கநல்ல வுத்தமர்க்கு-மலபரிபாகத்தோடு கூடக் கற்றறிவு மொழுக்கவழியில் வழுவாது செய்யு மாற்றலு மிக்குடைய வுத்தமத்தி லுத்தம ராயினுர்க்கு நிறுத்தி,—செய்வது - ஆ

சாரியனுவா னஃதறிந்து சமயாசார கன்மமாத்திர நிறுத்தி யேனையவற்றைச் சுத்திசெய் தொழிந்து,—இவர்தம்மை நீதியி னான் - இவரை முறைமையான்,—நித்திய நைமித்திய காமியத் தி னிரம்பதிகார நிகழ்த்துவதுஞ் செய்து - நித்திய நைமித்திய காமியமாகிய மூன்றினும் பேரதிகார முடையராகச் செய்வதா கலின்,—அதிகாரையாம் -இது சாதாரதீக்கையேனவும் பெயர் பெறும்.—சாதகாசாரியருமாக்கி வீடுதருவிக்கும் - இத்தீக்கை ப் பேறுடையார் தீக்கை வேறுபாட்டாற் சாதகரு மாசாரிய ருமென் றிருவகைப்படுவர்.—உலோக சிவதருமணியென் றிர ண்டாம் - இந்த சபீசதீக்கைதா னில்லற முடையார்க்குத் தி ரோதான சத்திரூப சிகாச்சேதமின்றிச் செய்வதாகிய வுலோ கதரு'மணியுந், துறவற முடையார்க்குத் திரோதான சத்திரூப சிகாச்சேதத்தோடு செய்வதாகிய சிவதருமணியுமென் றிருவ கைப்படும். இவைமுறையே பவுதிக தீக்கை, நயிட்டிக தீக்கை யெனவும் பரியாயப் பெயர்பெறும்.—ஆதலினுற் சமய விசேட நிருவாண மபிடேக மிவற்றடங்குமன்றே- இவ்வாறுதலிற் சம யவிசேட நிருவாணம் அபிடேசமென்னும் பேதமெல்லா நிற்பீச சபீசமென்னு மிவ்விரண்டி னடங்கும்.

சமயாசார சுத்தியின்றிச் செய்யு நிருவாண தீக்கையும் அ தற் கங்கமாய்ச் செய்யப்படும் சமய விசேடங்களும் சபீசதீக் கை யெனக்கொள்க.

ஓதியுணர்தலு மொழுக்கநெறி யிழுக்காமையுமாகிய விர ண்டையு முடையார் உத்தமத்தி னுத்தமர் எனவே இவ்விரண் டினி லொன்றிலாதார் உத்தமத்தில் மத்திமரெனவும் அவ்விர ண்டு மில்லாதார் உத்தமத்தி லதமரென் பதும்பெறும்.

இவை மூன்று செய்யுளானுஞ் சாதார தீக்கையின் வகையும் அவற்றியல்புகளுந் தொகுத்துக் கூறப்பட்டன.

மறைஞானதேசிகர் உரை

மேற் றீக்கை யிருவிதத் தொன்றா னத்துவா சுத்திசெய்வ
தூஉ மவ் வத்துவா வாறென்பதூஉ மதனது வியாப்
தியின் முறைமையு முணர்த்துகின்றார்.

அழிவிலாக் கிரியையினா லாதல்சத்திமத்தா லாத
லத்து வாசுத்தி பண்ணிமலமகற்றி, யொழிவிலாச் சிவ
ம்பிரகா சித்தற்குஞான முதிப்பித்துற் பவந்துடைப்ப
ரொருமூவர்க்கும், வழுவிலா வழியாறா மந்திரங்க
ள்பதங்கள் வன்னங்கள்புவனங்க டத்துவங்கள்கலைகள்,
கழிவிலா துரைத்தமுறை யொன்றினொன்றுவியாத்தி
கருதுகலை சத்தியின்கண் சத்திசிவன்கண்ணும். (௯)

(இ - ள்.) அழிவிலாக்கிரியையினாலாதல்	கேடில்லாத கிரியாவதியென்னுந் தீக்கையினாலே யாதல்,
சத்திமத்தாலாதல்	அந்தரங்க வியாபாரத்தாற்செய்யு ஞான தீக்கையினாலே யாதல் அவரவர் சத்திநிபாதானுகுணமாக
அத்துவா சுத்திபண்ணி	தத்துவாத்துவா முதலானதெல்லாம் பாசபந்த மாகலானவைகளைப் பஞ்சகலைகளினு மடைத்துச் சுத்திசெய்து, இஃதாற் பல மியாதோவென்றால்?
மலமகற்றி	ஆணவமுதலியன மூன்று பாசங்களைச் சேதிப்பதுஞ் செய்து.
ஒழிவிலாச் சிவம்பிரகாசித்த	அஞ்ஞான நீங்கவே யிவனைவிட்டு நீங்காது, சிவஞான மிரண்டறத் தரிசனமாகையி

த்குஞான முதிப்பித்து — ன் பொருட்டுச் சர்வஞ்ஞத்துவாதி குணங்களைப் பிரகாசிப்பித்து,

உற்பவந்தடைப்பன் — மேற் திரும்பிவந்து சனனமெடாதபடி செய்வன். அஃதென்போலெனில்? நதியிற் ஜலம் சமுத்திரத்திலே பொருந்தி லத்தன்மையாய்த் திரும்பாத வாறுபோல வித்தவான்மாவு மசரீரியுமா யசலனுமாய் நிருமலனுமாய்ச் சர்வஞ்ஞத்துவாதி குணங்களை யுடையனுமா யாதி முத்த சிற்சத்தியிற் பேராநந்தத்தை யனுபவனுமாய்ச் சிவத்தை யடைந்திருப்பன்.

மகுடோத்தரம், ரௌரவமறிக.

அரனொருமூவர்க்கும் — இப்படி யெல்லாருடைய பாசங்களையும் அரிக்கையினான்; அரனென்னுந் திருநாமத்தையுடைய சிவன் முற்கூறிய நிராதார சாதார தீக்ஷை பேதத்தான் மூவகைப்பட்ட வான்மாக்களுக்கு மனுக்கிரகஞ் செய்வன். அத்துவா சுத்தி செய்யுமிடத்து,

வழுவிலா வழிபாரும் — ஆன்மாக்களைப் பரகதி யடைவிப்பிக்கைக் காரணமாகக் குற்றமில்லாத மந்திராத்துவாமுதலிய மார்க்க மறுவிதப்படும். அவை யாவன?

மந்திரங்கள் பதங்கள் வன்னங்கள் புவனங்கடத்துவங்கள் கலைகள் — அத்தரூபஞ் சத்தரூபமாகிய மந்திர பத வன்ன புவன தத்துவ கலைகளென்று சொல்லிய வாறத்துவாவும்,

கழிவிலா துரைத்தமுறை யொன்றினொன் — இங்ஙனங் கூறியவாறினு மொன்றுங் குறையாமற் சொன்ன முறையிலே யொன்றிலே யொன்றாக வியாபித்திருக்கும். அஃதா

றுவியாத்தி வது, மந்திர மக்கரங்களின் கூட்டமாகிய பதத்திலே வியாபித்திருக்கும், அப்பதம் வன்னத்திலே வியாபித்திருக்கும், அவ்வன்னம் புவனத்திலே வியாபித்திருக்கும், அப்புவனந் தத்துவத்திலே வியாபித்திருக்கும், அத்தத்துவம் கலைகளிலே வியாபித்திருக்கும்.

கருதுகலை சத்தியின்கண் சத்தி சிவன்கண்ணும் இவ்வாறினுக்குஞ் சத்தியே துணைக்காரணமாகையாற் கலைகளதனை வியாபித்திருக்கும். அச்சத்தி சிவனுக்குச் சமவாய மாதலாற் சிவனிடத்திலே வியாபித்திருக்கும். எ-று.

கண்ணென்பதேழாமுருபு.

இதற்கு வருணபத்ததியும் ரௌரவமுமென வறிக. (சு)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

ச்ரிபா_தீக்ஷை யென்றும் ஞானதீக்ஷை யென்றும் சாம்பவ தீக்ஷையென்றும் மூன்றுவித மாகையால் இந்த மூன்றுவகை தீக்ஷாதிகாரிகள் மூவர்க்கு முத்திபேத முண்டோவென்னில்? பேதமில்லை யென்பதும் கன்ய¶ மார்ச்சித்ததுக்குவழி யீதென்பதும் மேற் கூறுகின்றது.

அரனெருமூவர்க்கு மழிவிலாக் கிரியையினாலாதல் சத்தி மத்தாலாதலத்துவா சுத்திபண்ணி மலமகற்றி பொழிவிலாச் சிவம் பிரகாசிக்க ஞானமுதிப்பித் தூற்பவர் தடைப்பன் - பக்கு வான்மாக்களுடைய பாசத்தை ஹரிக்கையினாலே அரனென்னு நாமத்தையுடைய சிவ ஞசாரிய மூர்த்தியை யதிஷ்டித்துநின்று கிரியாதீக்ஷாதிகாரிக்கும் ஞானதீக்ஷையிற் பேதம் சாம்பவ_தீக்ஷை யாகையால் ஞானதீக்ஷாதி காரிக்கும் சாம்

பவ தீக்ஷாதிகாரிக்குமிந்த மூன்றுபேருக்கும் ஆகிலுமென்றது ×வியவஸ்தித விகற்பமாதலால் கிரியாதீக்ஷாதிகாரிக்குக் கன்ம*வைகல்யமில்லாத கிரியாதீக்ஷையினாலும் ஞானதீக்ஷாதிகாரிக்குஞ் சிற்சத்தி § சகிதமான மனோ பாவனையினாலே பண்ணும் ஞான தீக்ஷையினாலும் கேவல சிச்சக்திமாத்ரத்தினாலே பண்ணுஞ் சாம்பவ தீட்சையினாலும் அத்துவ சுத்தியைப் பண்ணி.

அத்துவசுத்தியாவது,ஷடத்துவாவிலும் சஞ்சிதமாயிருந்த கன்மங்களை யெல்லாம் நசிப்பித்தல், கன்மங்க ணசிக்கவே மாயையும் நீங்கும் ஆணவமலத்தினுடைய தடையையுமொழித்து நித்தியஞானாநந்த மயமானசிவ மான்மாவினிடத்திலே யபிவியத்தியாவதற்குமுன் னிராகாதி+கலுஷிதமா யிருக்கிற பசுஞானம்போக ஆன்மசுவரூபஞானத்தை பிரகாசிப்பித்து மேல் சநநங்க ளடாதபடிக்குச் சுத்தம் பண்ணுவன் பதியும்ஆன்மாவும்விபுவா யிருக்க அத்துவாவென்ற தாருக்கென்னில்? ஆன்மா மாயேத்தினாலே பந்திக்கப்பட்டு ஏகதேசத்தை யடைந்து கிஞ்சிஞ்ஞனாய் நின்று தீக்ஷாக்கிரமத்தினாலே யொவ்வொரு தத்துவங்களாக நீங்கி ஸ்வஸ்வரூபமான விபுத்துவத்தையும் சர்வஞ்ஞதையையும் பெற்றுச் சிவத்தை யடைகையினா லத்துவாவென்ற தொழிந்து தேசாத் தேசாந்தரத்தை யடைந்ததென்றதல்ல,

தஉக்தம் ஸ்வாயம்ஹுவெ — வதிவர்மவொ விூ
ஹூமெக்ஷவிஉூாவிஶொஆா தயொயஷியா। தயெரா
அூெதஶூணூஜ ஹநயநச வரூஷஸூஅ ॥ தீ
க்ஷாகஉஷக்ஷஉெணாக்ஷஉாயாவஶிணதாயதஃ। வொ
யாவஶிணதிஸஸாஉஶாதிஶயவதிஷநீ ॥ ஜூஜ
நாஹாவஉாவஹுா க்ஷஉஶஃ வூதூஶிஃயா। வூக்ஷ

௧) ஜ்ஞாநமேயாஸ்ஸ ஶிவாஸம்யநம்ப்ரதி ॥ ௧௩
ரஜ்ஜதாநாம் ஸ்வாத்யா பஹிர்ஜதாநாவிச । பஹிர்ஜே
வநீதேஸ்யாஞ்ஞாரம்மகிர்யாகர்ஷ ॥ ஸவத்வா ஶிவ
ஸ்யார்த்தம் பம்பந்தகர்ஷியாமத: । யோகே சாவ்
வ்ரவிஷயம் த்ருஷ்டாச்வாநி பந்நேந ॥ பந்தஸம்
ஸாரபீஜஸ்யா பம்ஸோவஶ்சிஶாஶ்யிதி: । ஸாமதி
த்ஸஸ்யவிஜ்ஞயா நவஶாஞ்ஞரஸஸ்யிதிரிதி ॥

இதன்றியும் ஆன்மாவுக்குக் கன்ம மார்ஜிக்கிறதுக்கு வழியென்பதாக,—

வழுவிலாவழியாறு மந்திரங்கள் பதங்கள் வன்னங்கள் புவனங்க டத்துவங்கள் கலைகள் - தப்பறக் கன்மமானதென்று மார்க்கமாகும். அவை யாதோவென்னில்? மந்திரங்களை †யுதாத்தா ÷நுதாத்த ‡ஸ்வரிதப் ○பிரசயங்களுடனே தப்பாம லுச்சரித்தாற் புண்ணியமென்றும் தப்பினாற் பாவமென்றும் வியாகரணத்தை யறிந்து பதங்களைப் பிரித்தவளாற் புண்ணியமென்றும் அறியாதே பிரித்தாற் பாவமென்றும் வன்னங்களை [illegible] ரஸ்வ +தீர்க்கப் ‖புலுதம் வழுவாம லந்தந்த ஸ்தாநங்களிலே யுச்சரித்தாற் புண்ணியமென்றும் அல்லது பாவமென்றும் புவன நாயகரைப் பண்ணின பூஜாதிகளினாலே புண்ணிய மென்றும் தத்திரவியாபகார நிந்தாதிகளினாலே பாவமென்றும் ஞானேந்திரிய கன்மேந்திரி யாந்தக்கரணங்களினாலே பராக்குப் பண்ணின வுபகாரத்தினாலும் விசிஷ்டத்திரவிய போக்கியத்தினாலும் புண்ணியமென்றும் பிறர்க்குப் பண்ணின அபகாரத்தினாலு நிஷித்த திரவிய போக்கியத்தினாலும் பாவமென்றும்

டஞ்சகலாபி மானிகளான பஞ்ச சத்திகளுக்குப் பண்ணின பூசா பூசைகளினாலே புண்ணிய பாபமென்றும்,—

கழிவிலா துறைத்தமுறை யொன்றி லொன்று வியாத்திகருதகலை சத்தியின்கண் சத்திசிவன்கண்ணும் - ஒன்றையொன்று நீங்காத முறைமையாய்ச் சொல்லுகையால் மந்திரங்கள் வியாப்பியமும் பதங்கள் வியாபகமும், பதங்கள் வியாப்பியமும் வன்னங்கள் வியாபகமும், வன்னங்கள் வியாப்பியமும் புவனங்கள் வியாபகமும், புவனங்கள் வியாப்பியமும் தத்துவங்கள் வியாபகமும், தத்துவங்கள் வியாப்பியமும்கலைகள் வியாபகமும், கலைகள் வியாப்பியமும் சத்திகள் வியாபகமும், சத்திகள்வியாப்பியமுஞ் சிவன் வியாபகமு மாம்.—

இவ்வாறு சிவன்சர்வ வியாபி யாகையா லாறத்துவாக்களினாலே யேற்பட்ட கன்மங்களைக் கூட்டிப் புசிப்பிக்கிறவனும் புசியாதபடிக்கு தீக்ஷையினாலே யொழிக்கிறவனுஞ் சிவனேயாமென் றிதன்பொருள்.

¶ ஆர்ஜிதம் - சம்பாதிக்கப் பட்டது, × வியவஸ்திதி-கட்டுப்பபடு * வைகல்யம்-குறைவு § சகிதம்-கூடினது ÷ கலுஷிதம்-கலங்கினது † உதாத்தம் - உரத்துச் சொல்லல் ÷ அநுதாத்தம்-மெள்ளச் சொல்லல் ‡ ஸ்வரிதம் - உச்சரிப்புப்பேதம் ○ பிரசயம் - கூட்டல், ● ரஸ்வம் - குறில் ┼ தீர்க்கம்-நெடில் ╘ புலுதம்-அளபெடை.

ஞானப்பிரகாசருளா வருமாறு.

—0—

மேற்கிரியாவதி தீக்ஷையினாலேதான் சாம்பவி தீக்ஷையோடு சாத்தி யென்று சாற்றும் ஞானவதி தீக்ஷையினாலேதா

ன் சடத்துவ சுத்திபண்ணி முத்திவியத்தி பண்ணும் பொருட்டு அறியுஞ் சடத்துவாக்கள் கீழ்மேற் செல்லும் கிரமத்திலே யொன்றி னொன்று வியாத்தியை யுடையதாகி வியாப்பிய வியாபகங்களாய்ப் போய்த் தங்களை வியாபிக்குஞ் சிவசத்தியொடு கூடச் சர்வவியாபக சிவனுக்கு வியாப்பியங்களா யிருக்குமென்று விளம்புகின்றார்.

மலமகற்றி என்பதனால் முத்திசெய் தீக்ஷாலக்ஷண சிவசத்தியாற் பாசமுத்தி சொல்லப்பட்டது,—

சிவம்பிரகாசிக்கும்ஞான முதிப்பித்தென்பதனால், வியத்திசெய்தீக்ஷாலக்ஷண சிவசத்தியாற் சிவசாக்ஷாத் காரோத்திரேக காரண தீக்ஷித சிவத்துவ லக்ஷண சிற்சத்தியினது விர்த்திரூப சர்வபதார்த்த கர்ப்ப சிவ சாக்ஷாத்கார சமுத்திரேக ரூப வியத்தி சொல்லப்பட்டது,—

உற்பவர் துடைப்ப னென்பதனால், மீளத்திரும்புதலில்லை யென்பது விளம்பப்பட்டது.

சிவனார்க்குச் சிவசத்தி வியாப்ய மென்றது சிவசமவேதையாற்செலுத்சப்பட் டிருத்தலா லுபசாரம்.

மற்றவை வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

அரன், குருமூர்த்தியை யதிட்டித்துநின்று, மந்திரமுதலறுவகைப்படு மத்துவாக்க ளொன்றினொன்றடங்க இறுதிக்கணின்றகலை திரோதான சத்தியினும் அது சிவத்தினு மடங்குமாறுணர்ந்து அவ்வாறடக்கி நிர்ப்பீசமெனத் தனித்தனி யிருவகைப்படுமென மேற்கூறிப்போந்த ஞானவதி கிரியாவதியென்னு மி

ரண்டனுளொருதீக்கையானே உத்தமத்திலுத்தமர்முதலிய வம் மூவர்க்கும் அறுவகை யத்துவாக்களையுஞ் சோதிக்குமுகத்தாற் பிறவிக்கேதுவாகிய மலத்தைக் கெடுத்துச் சிவம்பிரகாசித்தற் கேதுவாகிய ஞானத்தைக் கொடுக்குமென்பதாய்.

கிரியை ஆகுபெயர்.

ஔத்திரி யிரண்டுதிறனு மிலகுஞானங்கிரியையென முதற்கணெடுத்துக்கொண்டு முடிவின்கண் அழிவிலாக்கிரியை யினுனுதல் சத்திமத்தானுதலென முடித்தமையின், இடைக்கட் கூறப்பட்டனவெல்லாம் இவவிரண்டற்கும் பொதுவாமாறு காண்க.

சோமசம்புபத்ததி வருணபத்ததி முதலியவற்றினும் இவ்வாறே கூறப்பட்டன.

இதனானே ஆசிரியன் தீக்கை செய்யுமாறு தொகுத்துக் கூறப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

பரமேஶ்வரன் கிரிபாவதியாலாதல் ஞானவதியாலாதல் அத்துவாக்களைச் சோதித்து ஆன்மாக்கள் மலங்களைப் போக்குகிற முறைமை மேலருளிச்செய்கிறார்.

அழிவிலாக்கிரியையினாலாதல் சத்திமத்தாலாதல்-அநாதியே நித்தியமாயுள்ள கிரிபாவதியாலாதல் ஞானவதியாலாதல்,—அத்துவாசுத்திபண்ணி - அத்துவாக்களிலே யெல்லையற்ற ஜனனங்களுக்கு ஏதுவான கன்மங்களை யெல்லாம் சுத்திகரித்து,—மலமகற்றி - மலமாயாதி கன்மங்களைப் போக்கி,—ஒழிவிலாச் சிவம்பிரகாசிக்கு ஞானமுதிப்பித் துற்பவர்துடைப்ப னரனெ

ருமூவர்க்கும் - உயிர்க்குயிராய் அநாதியே இவனைவிட்டு நீங்காமல் நிற்கிற சிவப்பிரகாசத்தை யுண்டாக்குகிற பரஞானத்தையுந் தோற்றுவித்து ஜனனத்தையு மறுப்பன் பரமேஸ்வரன். மூன்றுவகைப்பட்டஆன்மாக்களுக்கும்,—வழுவிலாவழியாரும் - மலத்தைப் போக்குகைக்கு ஏதுவாயிருக்கிற குற்றமற்ற அத்துவாக்கள் ஆறுவகைப்பட்டிருக்கும். அவையாவன?—மந்திரங்கள்பதங்கள் வன்னங்கள்புவனங்கள் தத்துவங்கள் கலைகள் - மந்திரங்கள் பதங்கள் அக்கரங்கள் புவனங்கள் தத்துவங்கள் கலைகள் என்கிற விந்த ஆறினுண்மையும்,—கழிவிலாதுரைத்தமுறை - வழுவறவேதாகமங்கள் சொன்ன முறைமை,—ஒன்றிலொன்று வியாத்தி - இந்த ஆறு அத்துவாவும் தன்னில் ஒன்றிலே யொன்றாக வியாபித் திருக்கும். இவையே திடமாக நிற்குமென்று விசாரிக்கில்,—கருதுகலை சத்தியின்கண் - மற்றுள்ள அஞ்சத்துவாக்களுக்கும் நிற்கைக்கிடம் இதுவென்று கருதப்பட்ட கலைகள்,இந்தக் கலைகள் நிற்கைக் கிடமாயிருக்கும் சத்தி, இந்தச்சத்திக் கிடமேதென்னில்,—சத்திசிவன் கண்ணும்- இவை யிதற்கெல்லாம் மேலான சத்தி பரமேஸ்வரனிடமாக நிற்கும்.

இதனாற் சொல்லியது ஆன்மாக்களுக்குப் பரமேஸ்வரன் அத்துவாக்களைச் சோதித்து மலத்தையும் போக்கி அநாதியே யுயிர்க்குயிராய் நிற்கிற தன்னைத் தரிசிப்பிக்கிற ஞானத்தையுந் தோற்றுவித்து இவர்கள் சனனத்தையு மறுப்ப னென்றும், அத்துவாக்கள் ஆறுவகைப்பட் டிருக்குமென்றும், இவையொன்றிலேயொன்று வியாத்தியா யிருக்குமென்றும், இந்த அத்துவாக்கள் சத்தியிடமாக நிற்குமென்றும், இந்தச்சத்தி சிவனிடமாகநிற்குமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

——o——

அரன்-முதல்வன், குருமூர்த்தி யதிட்டித்துநின்று,—மந்திரங்கள் பதங்கள் வன்னங்கள் புவனங்கள் தத்துவங்கள் கலைகளாறும் வழுவிலாவழி-மந்திரம் பதம் வன்னம் புவனம் தத்துவம் கலைகளென் றறுவகைப்படும் வழுவிலாத அத்துவாக்கள்,—கழிவிலாதுரைத்தமுறை யொன்றினொன்று வியாத்தி- நீங்குதலின்றிச்சொல்லிய முறையே யொன்றினொன்றடங்க,—கருதுகலை சத்தியின்கண் - இறுதிக்கணின்ற கருதுகின்றகலைத் திரோதான சத்தியினும்,— சத்திசிவன்கண்ணும் - அத்திரோதானசத்திசிவத்தினு மடங்குமாறுஉணர்ந்து அவ்வாறடக்கி,—அழிவிலாக் கிரியையினுலாதல் சத்திமதத்தாலாதல் - நிற்பீசம் சபீசமெனத் தனித்தனியிருவகைப்படுமென மேற்கூறிப்போந்த ஞானவதி கிரியாவதியென்னு மிரண்டனு ளொருதீக்கையானே,—ஒருமூவர்க்கு மத்துவா சுத்திபண்ணி மலமகற்றி- உத்தமத்திலுத்தமர்முதலிய வம்மூவர்க்கு மறுவகை யத்துவாக்களையுஞ் சோதிக்கு முகத்தாற் பிறவிக்கேதுவாகிய மலத்தைக் கெடுத்து,—ஒழிவிலாச் சிவம் பிரகாசித்தற்கு ஞானமுதிப்பித்து - எவ்விடத்தும் வியாபகமாய் விளங்குகின்ற சிவம் பிரகாசித்தற்கேதுவாகிய ஞானத்தைக் கொடுத்து,—உற்பவம் தொடைப்பன் - பிறவியையொழிப்பன்.

இதனுனே ஆசாரியன் தீக்கைசெய்யுமாறு தொகுத்துக் கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

இங்ஙனம் வியாப்தியினது முறைமை தொகுத்துக் கூறி யத்தீக்கையின் மந்திர முதலிய வைந்தினையும் பஞ்ச கலை

சளில் வியாபித்து நிற்கு மதனைப் பிறித் தடைவே மூன்று விருத்தத்தா லுணர்த்துகின்றார்.

மந்திரங்கண் முதலைந்துங் கலையைந்தின்வியாத்தி மருவுமந் திரமிரண்டு பதங்களுலே, ழந்தநிலை யெழுத்தொன்று புவனநூற்றெட் டவனிதத் துவமொன்று நிவிர்த்தியபன்றெய்வம், வந்திடுமந் திரமிரண்டு பதங்கண்மூவேழ் வன்னங்க ளுலாறு புரமைம்பத்தாறு, தந்திடுந்தத் துவங்களிரு பத்துமூன்று தரும்பிரதிட்டா கலைமா லதிதெய்வந்தானும். (எ)

(இ-ள்.) மந்திரங்கண் முதலைந்துங் கலையைந்தின் வியாத்தி — மந்திராத்துவா முதலிய வைந்தும் நிவிர்த்திமுதலிய கலைகளிலே வியாபித்து நிற்கும். அஃதாவது,

மருவு மந்திரமிரண்டு — சத்தியோசாதம் இதயம் ஆக மந்திரமிரண்டு.

பதங்களுலேழ் — பதாத்துவாவிற் பதங்கள்ஓம் நமோ நமவென்னும் பதமுதலாக மஹாதேவ என்னும் பதமீறாக விருபத்தெட்டு.

அந்த நிலையெழுத்தொன்று — அந்தமுறையே அச்கரம் க்ஷகாரமொன்று.

புவன நூற்றெட்டு — புவனங்கள் ௱அ. அவையாயன:—

பிரமாண்டத்துட் காலாக்கினியாதி யுருத்திரபுவனமீறாகப் புவனம் ௬

கபாலீசாதி திரிதேசாதிபதி யீறாகக் கீழ்த்திக்கிற் புவனம் ௧0

அக்கினி யுருத்திராதியாக கூஷயாந்தரீருக அக்கினிதிக்கிற் புவனம் ... ௧௦
யாமிய வுருத்திராதியாக அதன்ம ரீருக யமதிக்கிற் புவனம் ... ௧௦
நிருதியாதி தௌஷ்ட்ரிகனீருக நிருதிதிக்கிற் புவனம் ... ௧௦
பெலனாதி சுதாந்தருத்திர ரீருக வருணதிக்கிற் புவனம் ... ௧௦
சீக்கிரனாதியாக மேகவாகன னீருக வாயுதிக்கிற் புவனம் ... ௧௦
நிதிசாரதியாகப் பிரகாச ருத்திரரீருகக் குபேர திக்கிற் புவனம் ... ௧௦
வித்தியாதிப ராதியாக பலிப்பிரிய ரீருக வீசான திககிற் புவனம் ... ௧௦
அண்டகடாகத்துக்குக் கீழாக மாயனாதி யந்தி வச்சிர தெங்கட்டிரனீருகப் புவனம் ... ௧௦
அண்டகடாக வோட்டுக்குமேல் சம்புருத்திராதியாகத் திரிலோசன ரீருகப் புவனம் ... ௧௦
இவர்களுக்கு மேலாக வீரபத்திரர் பத்திரகாளி புவனம் ... ௨

ஆகூ புவனம் ... ௧௦அ

அவனிதத்துவ மொன்று	பிருதிவிதத்துவம் - க. இப்படி வியாபித்திருக்கும்
நிவர்த்தியயன் றெய்வம்	நிவிர்த்தி கலைக்கு அதிபதி பிரம்மா எனவறிக

நிவிர்த்தியென்னுஞ் சொற்பொருள் தன்னிடத் தடைந்த பக்குவர்களுக்குச் சங்கர்பங்களை விடுவித்துத் திருப்புவிக்கையா னிவிர்த்தியெனக் காரணத்தாற்பெயராயிற்று.

மேல்பிரதிட்டா கலையில் வியாபிக்கு முறையாவன?

வந்திமெந்திர மிரண்டு — வாமதேவம் சிரசு ஆகமந்திர மிரண்டு.

பதங்கள் மூவேழு — மகேசுர னென்னும் பதமுதலாக அரூபின் அரூபின் என்றபதமீறாகப் பதங்களிருபத்தொன்று.

வன்னங்க ளாறு — ளகாரமுதல் டகாரமீறாக வெழுத்துகளிருபத்துநாலு.

ஈண்டு ளகாரம் டகாரம் தம்பெயர் கிளத்தலால் மொழிக்கு முதலாகக் கூறியதெனவறிக.

புர மைம்பத்தாறு — புவனங்க ளைம்பத்தாறு, அவையாவன?

அப்புதத்துவத்தில் அமரேசாதி லகுளீசுர ரீறு கப்புவனம் — ௮

தேயுவில் அரிச்சந்திராதி வைரவ மீறாகப் புவனம் — ௮

வாயுவில் இயக்ஷாதிப ராதியாக ஸ்ரீமேசுர ரீறாகப் புவனம் — ௮

ஆகாசத்தில் வத்திராபராதி தானவுருத்திர ரீறு கப் புவனம் — ௮

தன்மாத்திரையில் சகலண்டம் துவிரண்டம் மாகோடம் மண்டலேசுரம் ஆகப்புவனம் — ௪

கன்மேந்திரியத்தில் காலசோமம் என்னும் புவனம் — ௧

ஞானேந்திரியத்தில் சங்குகன்ன மென்னும் புவனம் — ௧

மனத்தில் துலேசுர மென்னும் புவனம் — ௧

அங்காரத்தில் தலேசுர மென்னும் புவனம் — ௧

ஆகப் புவனம் ... ௩௮

புத்தியில் பைசாசமாதியாகப் பிரம மீறுகத் தே
வயோனிக ளாகிய புவனம் அ
பிரதிகிருதி குணத்தில் அகிருதை முதல் சிகண்ட
புவன மீறுகப் புவனம் அ

ஆ புவனம் ருக

தந்திமெந் தத்து வங்க ளிருப்பத் து மூன்று — அப்பு தத்துவமுதற் பிரகிருதி யீறுகத் தத்துவங்கள் உங. தந்திமென்பதனை பிரகிருதி மாதாவாகையால் தந்திமெனப் பொருள் வருவிக்க.

தரும் பிரதிட் டாகலை — இவைக ளெல்லாத்தையும் பிரதிட்டாகலை தன்னிடத்திலே யடக்கிக்கொண்டு பின் புண்டாக்கும்.

மா லதிதெய்வ ந்தானும். — இச்சிறப்பினை யுடைய பிரதிட்டா கலைக்கு மாயன் காரணேசுர னுதலால் எ-று.

பிரதிட்டை யென்னுஞ் சொற்பொருள் தன்னையடைந்த வான்மாக்கட்கு முன் சொன்ன சங்கற்ப விகற்பங்களை விசேடித்து நிலைநிறுத்தலாற் பிரதிட்டை யெனப் பெயர் காரணத் தா லாயிற்று. (எ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் பஞ்ச கலையிலும் மந்திர பத வன்ன புவன தத்துவங் களிற்கு முறைமை கூறுகின்றது.

மந்திரங்கள் முதலைந்துங் கலையைந்தின் வியாத்தி-மந்திர பத வர்ண புவன தத்துவங்க ளைந்தும் நிவிர்த்தியாதி பஞ்ச கலைகளினாலே வியாபிக்கப்படும்.

மேல் வெளிப்பதம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

ஆறத்துவாக்களுக்குள் மந்திரமுதலைந்துங் கலைபைந்தின் வியாத்தியை யுடைய தாதலினல், வியாபகமாயிருக்குங் கலைகளுக்கு வியாப்பிய மென்றுஞ் சூசிப்பித்துச் சடத்துவாவில் மந்திரத்தட் பஞ்சப் பிரமங்களுக்குச் சங்காரக் கிரமம் சத்தியோஜாதாதி யீசானந்தம்.

நேத்திரம் விட்டுச் சடங்கங்களுக்குச் சங்காரக்கிரமம் இருதயாதி அத்திராந்தம்.

பதங்களுக்கு ஓமாத்தியோமாந்தம்.

வன்னங்களுக் குக்ஷாகாராதி அகாராந்தம்.

புவனங்களுக்குக் காலாக்கினியாதி யநாசிருதாந்தம்.

தத்துவங்களுக்குப் பிருதிவியாதி சிவதத்தவாந்தம்.

கலைகளுக்கு நிவிர்த்தியாதி சாந்தியதீதையந்தமென்று சிந்தித்துக்கொண்டு, சங்காரக் கிரமத்தில் மந்திரமுதலைந்துங் கலையைந்தினிற்கு முறைமை மூன்று திருவிருத்தத்தால் வகுத்துரைக்கின்றார்.

இது முதல்-௬-வது, செய்யுள்வரை வெளிப்படை.

சிவஞானயோகியருரை வருமாறு.

இதனை ௬-வது செய்யுளுரையிற் காண்க.

நிரம்பவழகியருரை வருமாறு.

முன் சொல்லி வந்த அத்துவாக்களாறில் மந்திரமுதலான ஐந்தத்துவாவும் கலை யத்துவாவிலே வியாத்தியாயிருக்கிற முறைமை மேலருளிச் செய்கிறார்.

மந்திரங்கள் முதலைந்துங் கலையைந்தில் வியாத்தி - மந்திரங்கள் முதலாக வெண்ணப்பட்ட ஐந்தத்துவாவும் கலைகளைந்திலும் வியாத்தமாயிருக்கும். அதெங்ஙனே யென்னில்?—மருவு மந்திரமிரண்டு பதங்கள்ளே மூந்தநிலை பெழுத்தொன்று புவன நூற்றெட் டவனிதத்துவமொன்று நிவிர்த்தியன்றெய்வம் - நிவிர்த்தி கலையிலே பொருந்தப்பட்ட மந்திரமிரண்டும் பதங்களிருபத்தெட்டும் அதிலே நிலைபெற்று நிற்கும் அக்கரமொன்றும் புவனம் நூற்றெட்டும் பிருதுவி தத்துவமொன்றும் இதற்குத் தெய்வம் பிரம்மாவுமாகும்.—வந்திடு மந்திரமிரண்டு பதங்கள் மூவேழ் வன்னங்களுலாறு புர மைம்பத்தாறு தந்திடுந் தத்துவங்களிருபத்துமூனறு தரும்பிரதிட்டாகலை மாலதிதெய்வந்தானும் - பிரதிட்டாகலையிலே யிரண்டு மந்திரமும் இருபத்தொரு பதமும் இருபத்துநாலு அக்கரமும் ஐம்பத்தாறு புவனமும் இதற்குள்ள இருபத்துமூன்று தத்துவமு மாகப் பொருந்தும். இதற்குத் தெய்வம் விஷ்ணுவுமாம்.

இதனாற் சொல்லியது, மந்திரங்கள் முதலான ஐந்தத்துவாவும் கலைகளைந்திலும் வியாத்தமா யிருக்குமென்றும் நிவிர்த்திகலையிலே இரண்டு மந்திரமும் இருபத்தெட்டுப் பதமும் ஓரக்கரமும் நூற்றெட்டுப் புவனமும் பிருதுவி தத்துவமொன்றும் தெய்வம் பிரம்மாவுமாகப் பொருந்தி நிற்குமென்றும், பிரதிட்டா கலையிலே இரண்டு மந்திரமும் இருபத்தொரு பதமும் இருபத்துநாலு அக்கரமும் ஐம்பத்தாறு புவனமும் இருபத்துமூன்று தத்துவமும் தெய்வம் விஷ்ணுவும் ஆகப் பொருந்தி நிற்குமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

———o———

மந்திரங்கண்முதலைந்துங் கலையைந்தில் வியாத்திமருவும்-அசுத்த மிச்சிரஞ் சுத்தமென மூவகை யத்துவாக்களு மந்திரங்கள் முதலாக வைக்கப்பட்டு ஒன்றினொன்று வியாத்தியாய் முறையானே பஞ்சகலைகளு ளடங்குமா றெங்ஙன மெனின்?—நிவர்த்தி - அவற்று ணிவர்த்திகலையின்கண்,—அவனி தத்துவமொன்று - பிருதிவிதத்துவ மொன்றும்,—புவன நூற்றெட்டு-நூற்றெட்டுப் புவனங்களும்,—அந்தநிலை யெழுத்தொன்று-இறுதியாகிய வெழுத்தொன்றும்,—பதங்களுலேழ்-பதங்க ளிருபத்தெட்டும்,—மந்திரமிரண்டும் - மந்திரங்க ளிரண்டுமாக விவைகளி லொன்றினொன்றாக வடங்குவன;—அயன்றெய்வம் - அதற்குப்பிரம னதிதெய்வமாம்.— தரும்பிரதிட்டாகலை-தரப்பட்டபிரதிட்டா கலைக்கண்,—தந்திடும் தத்துவங்கள் இருபத்துமூன்று-தரப்பட்ட தத்துவங்க ளிருபத்துமூன்றும்,—புர மைம்பத்தாறு-புவன மைம்பத்தாறும்,— வன்னங்களுலாறு-வன்னங்களிருபத்தினுலும், —பதங்கண்மூவேழ்-பதங்க ளிருபத் தொன்றும்,—வந்திடுமந்திரமிரண்டு-வாராநின்ற மந்திரமிரண்டுமாக விவைக ளொன்றினொன்றாக வடங்குவன;—மா லதிதெய்வந்தானும் - அதற்குமால் அதிதெய்வமாம்.

மறைஞானதேசிகர் உரை.

மேல் வித்தை சாந்திகலைகளை யுணர்த்துகின்றார்.

வித்தையின்மந் திரமிரண்டு பதநாலைந்து விரவுமெ
முத் தேழுபுர மிருபத்தேழு தத்துவமு மோரேழு தங்
குமதிதெய்வந் தாவிலுருத் திரனுகுஞ் சாந்திதன்னி

ல், வைத்தனமந் திரமிரண்டு பதங்கள்பதினொன்று வ
ன்னமொரு மூன்றுபுரம் பதினெட்டாகு, முத்தமமா
ந் தத்துவமு மொருமூன்றாகு முணரிலதி தேவதையு
முயரீசனுமே. (அ)

(இ-ள்.) வித்தை — வித்தியாகலையில் அகோரஞ் சிகையாக
யின் மந்தி — மந்திர மிரண்டு.
ரமிரண்டு

பதநாலைந்து — பதங்க ளிருபது. அவையாவன? வியாபி
ன்வியாபின்என்னும் பதமுதலாகத் தியான
காராயாவென்னும் பதமீறாக வென்றறிக.

விரவுமெழுத் தேழு — ஞகார முதல் வகாரமீறாக வக்கரங்க
ளேழு

புரமிருபத்தே ழு — புவனங்க ளிருபத்தேழு. அவையாவன
புருட தத்துவத்தில்

வாமாதி ஏகவீராந்தபுவனம் சு

இராகத்தில் பிரசண்டாதி யாகச்சிவாந்தமான
புவனம் ரு

நியதிமுதலிய தத்துவங்களிற் குரோதராதியா
க சிகேத ருத்திராந்தமாக வொவ்வொன்றி லி
ருவராக வெண்ம ரிருப்பர்கள் அ

மாயையில் மகாத்துதிமுக லங்குட்ட ருத்திராந்
தமாகப் புவனம் அ

ஆகப் புவனம் உஎ

தத்துவமு மோரேழு — புருடதத்துவமுதல் மாயையீறாகத் தத்
துவங்கள் எ

தங்கு மதிதெய்வந் தாவிலுரு த்திரனாகும் — இந்தக்கலையை யதிட்டித்துக் கொண்டெ
ழுந்தருளி யிருக்குங் கேடில்லாதிருக்கிற வுரு
த்திர மூர்த்தியாகும்.

வித்தியா கலையென்பதன்பொருள் அத்தை யடைந்திருக்கிறவான்மாக்க ளறிவைப் பிரகாசிப்பிக்கையால் வித்தையெனப் பெற்றபெயர். மேற்சாந்தி கலை

சாந்திதன்னில் சாந்திகலைக்கு மந்திரந் தற்புருடம் கவைத்தன மந்தி சம் ஆக உ.
ரமிரண்டு

பதங்கள் பதி நித்தியயோகினேயென்னும் பதமுதல் வினொன்று யோமவியாபினேயென்னும் பதமீருகப் பதம்பதினொன்று.

வன்னமொரு ம-வ-கூ-எனவெழுத்து-ங.
மூன்று

புரம் பதினெ சுத்தவித்தியா தத்துவத்தில் வாமைமுதல்
ட்டாகும் மனோன்மனி புவனமீருகப்புவனம் கூ
ஈசுவரதத்துவத்தில் அநந்தேசுவரராதியாகச் சிகண்டியீருகப்புவனம் அ
சாதாக்கியதத்துவத்தில் சாதாக்கிய புவனம் க
ஆகப் புவனம் கஅ

உத்தமமாந்த உத்தமமாகிய சுத்தமாயையிற்றோற்
த்துவமு மொரு றிய சுத்தவித்தை யீசுரஞ்சாதாக்கியம்
மூன்றாகும் ஆகத் தத்துவம் ங

உணரிலதிதே இக்கலைக்குத் தேவதையைவிசாரிக்கி லீசு
வதையு முயரீச வரமூர்த்தியதிட்டாதா-எ-று.
னுமே.

சாந்திகலைக்குப்பொருள் இந்தக்கலையை யடைந்திருக்கிறவான்மாக்களுக்கிராகத்துவேடமில்லாதபடியாலும் சங்கற்பித்த தன்வழிச் செல்லாமற் பரமமான சாந்திவருகையால்பெற்ற காரணப்பெயர். (அ

சிவாக்ரயோகியருரை வருமாறு.

வித்தையில் இதுவுமது.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

வெளிப்படை.

சிவஞானயோகியருரை வருமாறு.

௯-உரையிற் காண்க.

நிரம்பவழகியருரை வருமாறு.

மேல் வித்தைக்குஞ் சாந்திக்கும் அத்துவாக்கள் நின்ற முறைமை யருளிச்செய்கிறார்.

வித்தையின் மந்திரமிரண்டு பதநாலைந்து விரவுமெழுத்தேழு புரமிருபத்தேழு தத்துவமுமோரேழு தங்குமதிதெய்வந் தாவிலுத்திரனாகும் - வித்தியாகலையிலே பொருந்தப்பட்ட இரண்டு மந்திரமும் இருபது பதமும் ஏழு அக்கரமும் இருபத்தேழு புவனமும் ஏழு தத்துவமும். இதற்குநிற்கு மதிதெய்வம் விட்டு நீங்காத உருத்திரனுமாகும்.—சாந்திதன்னில் வைத்தனமந்திர மிரண்டு பதங்கள்பதினொன்று வன்னமொரு மூன்று புரம்பதினெட்டாகு முத்தமமாந் தத்துவமு மொருமூன்றாகு முணரிலதிதெய்வ முயரீசனுமே - சாந்திகலைக்கு மந்திரமிரண்டும் பதினொருபதமும் மூன்று அக்கரமும் பதினெட்டுப் புவனமும் நன்

மைப் பதியினையுடைய தத்துவமூன்றும். விசாரித்துப்பார்க்கில் அதிதெய்வம் மேலான மஹேஶ்வரனு மாகும்.

இதனாற் சொல்லியது வித்தியாகலையிலே யிரண்டு மந்திரமும் இருபது பதமும் ஏழு அக்கரமும் இருபத்தேழு புவனமும் ஏழு தத்துவமும் அதிதெய்வம் உருத்திரனும் ஆகப் பொருந்தி நிற்குமென்றும், சாந்திகலையிலே இரண்டு மந்திரமும் பதினொரு பதமும் மூன்றக்கரமும் பதினெட்டுப் புவனமும் மூன்று தத்துவமும் அதிதெய்வ மஹேஶ்வரனு மாமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

———o———

வித்தையின் - வித்தியாகலையின்கண்,— தத்துவமோரேழு - தத்துவமேழும்,— புரமிருபத்தேழு-புவனம்இருபத்தேழும்,—விரவுமெழுத்தேழு-விரவுகின்றவன்னமேழும்,—பதகாலைந்து - பதங்களிருபதும்,— மந்திரமிரண்டு - மந்திரங்களிரண்டுமாக விவைகளொன்றினொன்ருக வடங்குவன,—தாவிலுருத்திர னதிதெய்வமாகும் - அதற்குமுடிவில்தாத உருத்திர னதிதெய்வமாம்,—சாந்திதன்னில் - சாந்திகலைக்கண்,— உத்தமமாந்தத்துவ முமொருமூன்ருகும் - உத்தமமாகிய தத்துவமூன்றும்,— புரம்பதினெட்டாகும் - புவனம்பதினெட்டும்,—வன்னமொருமூன்றும் - வன்னங்கள்மூன்றும்,—பதங்கள்பதினொன்று - பதங்கள்பதினொன்றும்,—மந்திரமிரண்டு - மந்திரங்களிரண்டு மாக விவைகளினொன்றினொன்ருக வடங்குவன,—உணரிலுயரீசனதி தேவதையுமாகும் - உணருமிடத் ததற்கு மயேச்சுர னதிதெய்வமாம்.

மறைஞானதேசிகர் உரை

மேற் சாந்தியாதீதகலையி னடைவு முற்கூறிப்போந்த வற்றையு முடித்துக்காட்டுகின்றது.

சாந்தியா தீதகலை தன்னின்மந்திரங்க டாமூன்று
பதமொன்றக் கரங்கள்பதினாறு, வாய்ந்தபுர மூவைந்
து தத்துவங்களிரண்டு மருவுமதி தேவதையு மன்னுச
தாசிவமா, மேய்ந்தமுறை மந்திரங்கள் பதினொன்றுப
தங்க ளெண்பத்தொன் றக்கரங்க ளைம்பத்தொன்றாகு,
மாய்ந்தபுர மிருநூற்றே டிருபத்துநாலா மறிதருதத்
துவமுப்பத் தாறுகலையைந்தே. (சு)

(இ-ள்) சாந்தியா தீத கலைத ன்னின் மந்திரங்க டான்மூன்று	சாந்தியா தீதகலையில் வியாபித்திருக்கு மந்திரங்கள். ஈசானம் அத்திரம் மூலமந்திரம்	ஆ௩.
பதமொன்று	ஓம் என்னும் பதம்-க.	
அக்கரங்கள் பதினாறு	அகாரமுதல் அஃ வரை	கசு.
வாய்ந்தபுர மூவைந்து	சத்தி தத்துவத்திலிருக்கும் நிவிர்த்தி பிரதிட்டை வித்தை சாந்தி சாந்தியாதீதமெனக் கூறியபுவனம்	ரு.

இச்சத்தி தத்துவம் நிரவயவ மாதலாற் புவனமிருக்குமென்றது கூடாதெனின்? ஈசுர தத்துவத்துக்கு மேல் சாதாக்கிய தத்துவம், சாந்தி புவனபரியந்த மிருக்குமென் றாகமமோதுகையால் சாந்தியாதீதகலை யிருக்குமென வறிக.

கீழுள்ள குணதத்துவ முதலாயின வற்றுக்கு மிவ்வாறுண ர்ந்துகொள்க.

சிவதத்துவத்திற் புவனம் இந்திகை தீபிகை ரோசிகை மோசிகை ஊர்த்துவகாமினி வியாபினி வியோமரூபினி அனந்தை அநாதை அநாசிருதை ஆ க௦

ஆ புவனம்-கரு.

தத்துவங்களி ரண்டு — சத்திதத்துவம் சிவதத்துவம் ஆ உ.

மருவு மதிதே வதையு மன்னு ச தாசிவமாம் — இந்தக்கலைக் கதிட்டாதா சதாசிவதேவ நாயனார்.

இங்ஙன மோதியவற்றை முடித் துணர்த்துகின்றார்.

ஏய்ந்த முறை — இப்படிப் பஞ்ச கலை வியாபித்து நின்ற முறை,

மந்திரங்கள் ப திினொன்று பதங் க ளெண்பத்தொ ன் றக்கரங்களைம் பத்தொன் றுரு மாய்ந்தபுர மிரு நூற்றொ டிருபத் தநாலா மறிகரு தத்துவ முப்பத் தாறு கலைபைந் தே. — ஈசான முதலிய பதினொரு மந்திரம். மந்திரங்கள் பலவுண்டாயினு மவற்றுட் டலைமை யாதலா லிதனையே யோதினார். சிறிதாகமங்களில் மந்திரம் நேத்திரங்கூடிப் பன்னிரண் டென்றுஞ் சொல்லும். கண்ணி ல்லாதவன்போ லெனவறிக.

ஓம் நமோ நமவென்னும் பதமுதலான வெண்பத்தொரு பதத்துக்கு அகார முதலாக வெழுத்து முன்னூற் றுருக வாக மங்களிற் கூறும். பஞ்சமுகங்களிற் றோற்றிய பதமந்திரங்க

வீசான முகத்திற் றோற்றின வாகையா லவைகளைக்கூறு திவை களைச் சிறப்பித்தோதினார்.

சிறிதிடத்திலே பதத்தைத் தொண்ணூற்று நாலென்றும் பதங்களுக் களவில்லை யென்றும், காலோத்திரத்திற் கூறியது பெரும்பான்மை.

பிரதிலோமக் கிரமத்திலே க்ஷகார முதலாக வக்கரங்கள் - ருக. இதனைச் சிறிதிடங்களில் லகார ளகாரங்களுக்குப் பேதமில்லையென் றக்கரங்க ளைம்பதென்று சொல்லும்.

புவனங் காலாக்கினி முதல் - உஉச.

இதனை மதங்கமுதலிய வாகமத்திற் சுத்தாத்துவாவில் புவனங்கண் முப்பத்து மூன்றெனவும், அசுத்தாத்துவாவி லிருநூற்று நாலென்று மாகப் புடைபுவனம்கூட விருநூற்று முப்பதேழு எனக்கூறும். அப்புடை புவன மிதி லடங்குகையா லதனைக் கூறிற்றிலர்.

தனித்தனியே காரியப்பாட்டை யுடைய பிருதிவி முதலிய தத்துவ முப்பத்தாறு நிவிர்த்தி முதலிய கலைகளைந்து. எ-று.

அருவமான தெல்லாம் பூத சரீரத்தி லுருவத்தை யாசிரயித்துக்கொண் டிருத்தலால் இக்கலைகளுக் கிதயதானம் அடையாளம். ஆகிருதி நிறம் குணம் அவத்தை நாடி வாயு இவைகளைக் கூறுமிடத்து விரியுமாதலாற் கூறிற்றிலர்.

இந்த மூன்று விருத்தத்திற்கும் வருணபத்ததியினும், காலோத்தரத்தும் சிந்தியத்துமெனை வறிக. (கூ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—— ᴑ ——

சாங்கியா தீதகலை
மேலிதவு மது.

ஞானப்பிரகாசருரை வருமாறு

பொருள் பதத் ததிகங்களிற் பிரசித்தம்.

சிவஞானயோகியருரை வருமாறு.

அத்துவாக்கள் ஒன்றினொன்று வியாத்தியாய் முறையானே பஞ்சகலைகளு ளடங்குமாறு யாங்ஙனமெனின்? அசுத்தம் மிச்சிரஞ் சுத்தமென்னும் மூவகை யத்துவாக்களும் ஐவகைப்பட்டுப் பஞ்சகலைகளு ளடங்குமாறு சங்காரமுறையின் வைத்தெண்ணி யிவ்வாறு கண்டுகொள்க வென்பதாம்.

மந்திரமுதலியவற்றிற்குங் கலையில் வியாத்தி கூறியது பரம்பரையின் வியாப்பியமாதல் பற்றியாதலான், மேல் ஒன்றினொன்று வியாத்தியென்பதனோடு முரணாமையறிக.

சாந்தியாதீதகலை நீட்டும்வழி நீட்டல்.

இவைமூன்று செய்யுளானுந் தீக்கைசெய்தற்கண் அத்துவாக்க ளொன்றினொன்று வியாத்தியாதலறிந்தடங்குமாறு வகுத்துக் கூறப்பட்டது.

அற்றேல், இறைவனிங்ஙனங் குருமூர்த்தியை யதிட்டித்துநின்று செய்யுந் தீக்கையில் ஏனைமலசுத்திகளை யொழித்து அத்துவசுத்தியே மிகுத்துக் கூறியது என்னையென்பாரை நோக்கி யெழுந்தது வருஞ்செய்யு ளென்பது.

நிரம்பவழகியருரை வருமாறு.

மேல் சாந்தியாதீத கலைக்கு அத்துவாக்கள் நின்றமுறைமையும் இந்த அத்துவாக்களுக்குத் தொகையு மருளிச் செய்கிறார்.

சாந்தியாதிதகலை தன்னில்மந்திரங்கள் தான்மூன்று பத மொன் றக்கரங்கள் பதினாறு வாய்ந்தபுர மூவைந்து தத்துவங் களிரண்டு மருவுமதிதேவதையு மன்னுசதா சிவராம் - சாந்தியாதீத கலைக்கு மூன்று மந்திரமும் ஒருபதமும் பதினாறு அக்கரங்களும் வாய்ந்தபுவனங்கள் பதினைந்தும் இரண்டு தத்துவமும் இதற்குப் பொருந்தும் அதிதெய்வம் நிலைபெற்ற சதாசிவமாகும். (மந்திரங்கள் முதலைந்துங் கலையைந்தில் வியாத்தி என்றபகத்துக்கு வியாக்கியானம் இவ்வளவும் வந்து முடிந்தது.) மேலிந்த அத்துவாக்களுக்குத் தொகை யருளிச் செய்கிறார்.— ஏய்ந்தமுறை - இப்படி முன் சொன்ன வடைவே,—மந்திரங் கள்பதினொன்று பதங்களொண்பத்தொன் றக்கரங்க ளைம்பத் தொன்றாகு மாய்ந்தபுரமிருநூற்றிரு டிருபத்துநாலா மதிதருத த்துவமுப்பத்தாறு கலையைந்தே - அக மந்திரங்கள் பதினொன் றும் பத மெண்பத் தொன்றும் அக்கரங்க ளைம்பத்தொன்றும் ஆராயப்பட்ட புவன மிருநூற்றிருபத்து நாலும் அறியப்பட்ட தத்துவ முப்பத்தாறும் கலை யைந்துமாம்.

இதனாற் சொல்லியது, சாந்தியா தீதகலைக்கு மூன்று மந்திரமும் ஒரு பதமும் பதினாறு அக்கரங்களும் பதினைந்து புவனமும் இரண்டிதத்துவமும் அதிதெய்வஞ் சதாசிவமும் பொருந்து மென்றும், ஆறு அத்துவாக்களுக்குத்தொகை மந்திரங்கள-கக என்றும், பதங்கள் - அக - என்றும், அக்கரங்கள் - ருக - என்றும், புவனம் - உஉச-என்றும், தத்துவங்கள் - ௩௬-என்றும், கலைகள் - ரு - என்றும், ஆக அறுத்துவாக்களுக்கும் வகை இப்படியென்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

சாந்தியாதீத கலைதன்னில் - சாந்தியாதீத கலைக்கண்.—தத்துவங்களிரண்டு - தத்துவங்களிரண்டும்,—வாய்ந்தபுரமூவைந்து - பொருந்திய புவனம் பதினைந்தும்,—அக்கரங்கள் டதினாறு - வன்னங்கள் பதினாறும்,—பதமொன்று - பதமொன்றும்,—மந்திரங்கடான்மூன்று- மந்திரங்கண் மூன்றுமாக விவைகளொன்றினொன்றாக வடங்குவன;—மன்னுசதாசிவரா மருவுமதிதெய்வதையுமாம் - அதற்கு நிலைபெற்ற சதாசிவர் பொருந்திய அதிதெய்வமாம்.—ஏய்ந்தமுறை - பொருந்திய விம்முறையே,— கலையைந்து-நிவிர்த்திமுதற்கலைகளைந்தும்,—அறிதருதத்துவ முப்பத்தாறு - அறியப்பட்ட பிருதுவிதத்துவ முதலிய முப்பத்தாறும்,—ஆய்ந்தபுர மிருநூற்றோடிருபத்துநாலாம்- ஆராயப்பட்ட காலாக்கினி புவனமுத லிருநூற்றிருபத்தினாலும்,—அக்கரங்களைம்பத்தொன்றாகும் - க்ஷகாரமுதலிய ஐம்பத்தொரு வன்னங்களும்,—பதங்கள் எண்பத்தொன்று - சிவாயநமோநம முதலிய எண்பத்தொரு பதங்களும்,— மந்திரங்கள் பதினொன்று - சத்தியோசாத மிருதய முதலிய பதினொருமந்திரங்களுமாகச் சங்காரமுறையின்வைத் தெண்ணி யிவ்வாறு கண்டுகொள்க வென்பதாம்.

மந்திரமுதலிய வற்றிற்குங் கலையில் வியாத்தி கூறியது பரம்பரையில் வியாப்பியமாதல்பற்றி யாதலான் மேலொன்றினொன்று வியாத்தியென்பதனோடு முரணாமை யறிக.

இவை மூன்று செய்யுளானுந் தீக்கைசெய்தற்க ணத்துவாக்க ளொன்றினொன்று வியாத்தியாத லறிந் தடங்குமாறு வகுத்துக் கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

மேற் சிவ ஞசாரியனை யதிட்டித்துக்கொண் டநேக யோனியி லுண்டாய்க் கட்டுப்பட்டுப் புவனச தேசத்துக்குக் காரணமாயிருக்கிற சஞ்சித கன்மங்களை மந்திர சாமர்த்தியத்திஞலே புசிப்பித்துத் தொலைத்தப் பிராரத்த கன்மம் புசித்துத் தொலைத் தாகாமிய மேருமனு மாணவம்புக் கும்படியையு முணர்த்துகிருர்.

மூன்று திறத் தணுக்கள்செய்யுங் கன்மங்கட்கு முன்னிலையா மூவிரண்டா மத்துவாவி, ஞன்றமுறை ய வையருத்தி யறுத்துமலமுதிர்வித் தரும்பருவ மடைதலுமே யாசாஞகித், தோன்றிநுக ராதவகை முற்செய்கன்மத் துகளறுத்தங் கத்துவாத் துடக்கறவேசோதித், தேன்றவுடற் கன்மமனு பவத்திஞ லறுத்திங் கினிச்செய்கன்ம மூலமல ஞானத்தாலிடிப்பன். (கo)

(இ-ள்.) மூன்று திறத் தணுக்கள் செய் யுங் கன்மங்கட் கு — ஆன்மாக்கள் மனே வாக்குக் காயமாகிய மூன்று திறத்திஞலே யனுபவ வேதுவாகச் செய்யும் வினைகட்குந் திறனும் வகையுங் கூறுபாடாகும்.

மூன்று திறத்தணுக்க ளென்பது, மூன்றும் வேற்றுமைத் தொகையென வறிக. இக்கருத் தறியாதார் மூன்றென்றது மெண்ணை விளக்க, விஞ்ஞானகலர் முதலியன மூன்றுபெய ரிடத்திஞ மேற்றிக் கூறுவர். அஃது தபசித்தாந்த மாதலால் கூடாதெனக் கொள்க.

முன்னிலையா மூவிரண்டா மத்துவாவின்	தனுகரணாதிகளுக்கு முன்னிலையான வத்துவா வாறினு மமைந்த கன்மங்களை
ஆன்றமுறைய வையருத்தி யறுத்து	அமைந் தமைந்த முறையிலே யந்தந்தக் கன்மங்களை யதுவதுவாகப் புசிப்பித்துத் தொலைந்தவாறே
மலமுதிர் வித்து	ஆணவ மலத்தைப் பக்குவமாக்குவது செய்து
அரும் பருவ மடைதலுமே	மாணாக்கர்க்குக் கிட்டுதற்கரிதாகிய மிக்க பக்குவ முண்டானவாறே

தேகாதி பிரபஞ்ச மெய்யென்று புத்திபண்ணினவன்முனே மீண் டதனையெல்லாம் பொய்யென்று மதித் திந்தச் சங்சார சமுத்திரத்தைக் கடப்பிப்பான் யாரோவென்று தேடு மறிவுண்டாகையா லரும்பருவமெனச் சிறப்பித்தார்.

ஆசானாகி	சிவ னாசாரியனை யதிட்டித்துக்கொண்டு வந்து பாசத்தைச் சேதம்பண்ணுவன். அஃதெங்ஙனமென்னில்?
தோன்றி நுகராதவகை முற்செய்கன்மத் துகளறுத்து	முற் சநநத்திற் புசித்துச் சேடித்தகன்மம் புசித்துத் தொலையாதபடியாலே யநேக யோனிகடோறு மார்ச்சித்த கன்ம மந்தமாதலால், புசித்துத் தொலைக்கும்

படி வாகீசுரி வாகீசுரரிடத்தி லொருடலிற்றானே பிறருக்குச் செய்த இம்சை சௌரிய முதலியனவற்றா லுண்டாகிய வகிதகன்மங்களையும் வாவி கூவ தடாகமுதலியனவற்றா லுண்டாகிய வித கன்மங்களையும் வேதத்தில்விதிவழி செய்யப்பட்ட வக்கினிட்டோமாதிகளாகிய விதாகிதகன்மங்களையு மொன்றொழியாமல் தீக்ஷானுகுணமாக

அங்கத்தவாத் தடக்கறவே சோதித்து	சோதிக்குமவ்விடத் தாறத்துவாயிலுண்டான பாச பந்தங்களைத் தொந்திப்பறச் சோதித்து
ஏன்றவுடற் கன்ம மனுபவத்தி னலறுத்து	எடுத்த தேசத்துக் கமைத்த பிராரத்த கன்மத்தைப் புசிப்பித்துத் தொலைப்பிப்பது செய்து
இங்கினிச்செய் கன்ம மூலமல ஞானத்தா லிடிப்பன்.	தீக்ஷைக்குமே லிவ்விடத்தேறின வாகாமியத்தையு மாணவமலத்தையும் ஞானக்கினியாலே தகித்துப்போடுவன். எ-று.

சிவன் - எழுவாய்.

இடிப்பன் - பயனிலை. (௪௦)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் சஞ்சித ஆகாமிய பிராரத்தங்களையு மாணவமலத்தையு மொழிக்கு முறைமை கூறுகின்றது.

அணுக்கள் மூன்றுதிறத்துச்செய்யுங் கன்மங்கட்கு முன்னிலையா மேவிரண்டாமத்துவாவி னூன்றமுறையவை யருத்தியற்றுத்து - விபுவாயிருந்தும் சூக்குமதேகத்தளவிலே ஞானக்கிரியாவியாபார மாகையா லணுவென்று பெயருடைய ஆன்மாக்கள் மனோவாக்குக் காயமென்னுந் திரிவித கரணங்களினாலே பண்ணும் புண்ணிய பாபங்கட்கு ஏதுவான வாறுவழியிற் பொருந்தின கன்மங்களைப் பக்குவ முறைமையிலே புசிப்பித் தந்தகன்மங்களை நசிப்பித்து,—

மலமுதிர்வித் தரும்பருவ மடைதலுமே யாசானாகித்தோன்றி-மலசத்திகளை நீங்கும்படிக்குப் பக்குவமாக்கி யரிதாயிரு

க்கப்பட்ட மலபரிபாகம் பிறந்தவுடனே சிவ ஞசாரிய மூர்த்தி யை யதிட்டித்துக்கொண்டு சாந்நித்தியம் பண்ணி,—

நுகராதவகை முற்செய்கன்மத் தகளறுத் தங்கத்துவாத் தொடக்கறவே சோதித்து - அத்துவாக்களிலே சஞ்சிதமாயிரு க்கிற புண்ணிய பாபங்களானவை பக்குவமா யிவன் புசியாதப டித் த்வந்தமறச் சுத்திபண்ணி,—

ஏன்றவுடற் கன்ம மநுபவத்திலை லறுத்து - பொருந்தின தேகப் பிராரர்த்தகன்மபலம் புசிப்பதும் - சுவாநுபவத்திலை லே யவனுக்குப் பரமறும்படி பண்ணி.—

பரமறுமாறு :-புஷ்டிகாரியம் தேகதருமமாகவும் சப்தா திகளை கிரகிப்பது சுரோத்திராதி தருமமாகவும் சோகமோக * அர்ஷணதிக ளந்தக்கரண தருமமாகவும் கண்டு தா னிவை யிற்றுக்குச் சாக்ஷியாய்ச் சிவனுடன் வேறறநிற்கை.—

இங்கினிச்செய் கன்ம மூலமல ஞானத்தாலிடிப்பன்-இவ் விடத்து குரு வநுக்கிரகத்துக்குமேல் பண்ணு மாகாமிய கன்ம த்தையு மாணவ சத்தியையுஞ் சிவன் ஞானத்திலை லே பொடிப ண்ணுவனென் றிதன்பொருள்.

* அர்ஷணம் - சந்தோஷம்.

ஞானப்பிரகாசருணா வருமாறு.

———o———

குருவதிகாரணை யிருக்குஞ் சிவன் தத்துவசோதனை பண் ணுமுறைமை யறைகின்றார்.

மூன்று திறத்தணுக்கள் செய்யுங் கன்மங்கட்கு - ஆன்மா க்கள் மனோவாக்குக் காயங்களினது வியாபாரப் பிரகாரத் தாற் புத்தியில் வாசனையாய்ப் புகுத்திப் பண்ணுங் கன்மங்கட் கு,—

முன்னிலைபா மூவிரண்டா மத்துவாவின் - சஞ்சிதமாய்க் குறித்துப் பகுத்தமைக்குத் தானமா மூவிரண்டா மத்துவாவின்,—

ஆன்றமுறையவை யருத்தியறுத்து - அந்தச்சஞ்சித கன்மங்களை யபக்குவங்களை விட்டுப் பக்குவங்களைப் பிராரத்த கன்மமாக்கிப் புசித்துத் தொலைத்து,—

மலமுதிர்வித்து - அந்தக்கன்ம போகதேகசம்பத்தினாலே மலசத்தியை வளர்த் தந்தமுதிர்ச்சியினாலே யந்தமலசத்தி,—

அரும்பருவ மடைதலுமே - பழுத்துப் பக்குவமாயுள்ளளவில்,—

ஆசானாகி - சிவன் குருவதிகரணனாகி,—

தோன்றி - பிரசன்னனாய், (தோன்றி யென்பது நடுநிலைத்தீபக மாதலால்). தோன்றி நுகராதபடி - திரும்பச் சென்மித்துப் புசியாதபடி,—

முற்செய் கன்மத் துகளறுத்து-மலபரிபாகத்தினது தீவிரதரத் தன்மையாற் பக்குவங்களாயும் மாந்தியத்தினால் அபக்குவங்களாயிருந்தாலுந் தீக்ஷாமந்திர சமஸ்காரத்தாற் பக்குவங்களாயுமிருக்கின்ற சஞ்சித கன்ம மலத்தைக் கலைகளிற் பகுத்துத் தீட்சா பலார்க கலார்கங்களாய்ச் சேஷித்து நிற்கவும் நில்லாமலும் சுத்தி பண்ணி,

அங்கு அத்துவாத் துடக்கறவே சோதித்து-சடத்துவக் கட்டுவிடச் சுத்திபண்ணி சடத்துவாவிற் புகுதப்பதித்தச் சஞ்சித கன்ம மோசனமாகும் சுத்தியே அத்துவ சுத்தி யென்றுதாற்பரியம்.—

ஏன்ற உடற் கன்மம்-பிராரத்த கன்ம மலத்தை,—

அனுபவத்தினாலறுத்து - புசிப்பினாற் போக்கி,—

இங்கு இனிச்செய் கன்மம் - தீக்ஷைக்குப் பின் பிராரத்தம் புசிக்குமிடத் தபிமானத்தினு லேறும் வைதிகாதி சாத்திர மாத்திரப் பிரசித்த காமிய கன்ம மலம் சிவதன்மினி தீட்சா சுத்தனிடத்தி லுவர்த்தரையில் விதைத்த விதைபோ லுக்கிப் போம். ஆதலால், சிவசாத்திர மாத்திரத்தில் விதித்த கன்மம் பண்ணுதல் விடுதல் நிஷித்த கன்மம் விடுதல் பண்ணுதலெனுஞ் சுத்தாசுத்த மனோவாக்குக் காய வியாபாரத்தால் சுத்தா சுத்த புத்தியிற் புருக்ஷும் புண்ணியா புண்ணிய காமிய கன்ம மலத்தையும்,—

மூலமலம் - தீட்சையிற் சேஷித்த ஆணவ மலத்தையும் தீட்சா பலார்க கலார்கங்களாய்ப் பரிசேஷித்தும் பரிசேஷியாது மிருப்ப.—

ஞானத்தாலிடிப்பன் - தான் கற்பித்த சாலம்ப நிராலம்ப புவனபதி விஷய திரி பதார்த்த கர்ப்ப சிவ விஷய ஞானத்தியான காரிய சாக்ஷாத்கார காரணமாகுஞ் சாலம்ப நிராலம்ப புவனபதிவிஷய சமாதி சிவவிஷய சமாதி நிருவித சமாதியினு லிலயிப்பிப்பன்.

—

சிவஞானயோகியருரை வருமாறு.

——0——

அநாதிமறைப்பாகிய வாணவமலமும் வாதனைபற்றி நிசழுமாகாமியவினையும் ஒளிமுன் னிருள்போல இறைவனது ஞானசத்தியா லொழிடற்பாலன. அவ்வாணவமலத்தை முதிர்வித்தற்பொருட்டு ஈட்டிய முறையானன்றிப பக்குவமுறையா னுகர்விக்கப்பட் டெஞ்சிக்கிடந்த கன்மமலமும் அதற்குப் பற்றுக்கொடுத்து நிற்கும் முன்னிலையாகிய மாயேயமலமுங் கிரியாசத்தியா லொழியற்பாலன. உடம்பு முகந்துகொண்ட பிராரத்தகன்மம்

அனுபவத்தா லொழியற்பாலன. இங்ஙன மாகலாற் கிரியா சத்தி விருத்தியாகிய தீக்கையால் எஞ்சிநின்ற கன்மங்களையுஞ் சுத்திசெய்தற் பொருட்டு, அவற்றிற்குப் பற்றுக்கோடாகிய வத்துவசுத்தியே ஈண்டுக் கூறப்பட்டன வென்பதாம்.

இவ்வாறு வருத்தோதற்பாலனவற்றை விரிவஞ்சி பொருமுடிபாக வைத்தோதினார்.

இரண்டும் ஒருபொருள் வினையாதற்குரிய வியைபுதோன்ற அருத்தியறுத்துத் தோன்றியறுத்தென உடன்கூறினார்.

ஆன்றமுறை பக்குவமானமுறை.

மலமுதிர்தலாவது தனது சத்தி தேய்தற்குரிய துணைக்காரணங்க ளெல்லாவற்றோடுங் கூடிப் பதனழியுஞ் செவ்வித்தாதல்.

உயிர் பருவமடைதலாவது அறிவித்தவாறே யறியவல்லுஞ் செவ்வித்தாதல்.

அரும்பருவமென்றார், எய்துதற்கருமை நோக்கி.

அது வருஞ் செய்யுளிற் பெறப்படும்.

பருவமடைதலுமே யாசானுகித் தோன்றியென்றதனானே பருவமடையாதார்க்குத் தீக்கை செய்தலும் அடைந்தார்க்கு அது செய்யாமையும் பழுதென்பது பெற்றாம்.

இதனானே அத்துவசுத்தியின் சிறப்புக் கூறப்பட்டது.

'உரைதரும்' என்பதுமுதல் வித்தையுங் குருவாகிவந்துணர்த்தி, என்னும் முதற்கூற்றுப் பொருளை விரித்துணர்த்தியவாறு.

நிரம்பவழகியருளா வருமாறு.

——o——

முன் சொல்லப்பட்ட ஆறத்துவாக்களிலும் ஆன்மாக்களுக்குக் கட்டுப்பட்டுக் கிடக்கிற கன்மங்களைக் கர்த்தா புசிப்

பித்துப் போக்குகிறபடி யெப்படியென்ற மாணாக்கனுக்கு மேலருளிச் செய்கிறார்.

மூன்றுதிறத் தணுக்கள்செய்யுங் கன்மங்கட்கு முன்னிலையா மூவிரண்டா மத்துவாவின் - மூன்றுவகைப்பட்ட வான்மாக்களும் அநாதியேசெய்த கன்மங்கள் அநாதியே கட்டுப்படுகைக்கு முன்னிலையான் ஷடாத்துவாக்களிலே,—ஆன்றமுறையவையருத்தி யறுத்துமல முதிர்வித்து - அவரவர் செய்ததற்குத் தக்கதாக வமைத்து,அமைத்தவடைவிலே அவையிற்றைப் புசிப்பித்துத் துலைப்பித்து,மலத்தையும் பக்குவமாக்குவித்து,—அரும்பருவ மடைதலுமே - இந்த வான்மாக்களுக்குச் சொல்லுதற்கரிதான மிக்கப் பக்குவமுண்டாகவே,—ஆசானுகித்தோன்றி - பரமேசுவரன் தனது காருண்ணியத்தினாலே ஆசாரிய மூர்த்தியாக வெழுந்தருளி வந்து,—நுகராதவகை முற்செய்கன்மத் துகளறுத்து - முன்புசெய்யப்பட்ட கன்மமாய் அத்துவாவிலே கட்டுப்பட்டுக் கிடக்கிற சஞ்சிதமான புண்ணிய பாவங்களையும் இவன் புசியாதபடி நாசமாக்கி,—அங்கத்துவாத்துடக்கறவே சோதித்து - அந்தப் பாசநாசம் பண்ணின வவதரத்திலே அத்துவாக்களி லுண்டான தொந்தனைகளையு மறுத்து,—ஏன்றவுடற் கன்ம மனுபவத்தினாலறுத்து - தேகத்துக்கு அடுத்த பிராரத்த கன்மத்தை அனுபவத்தினாலே நோகவில்லையாக்கி,—இங்கு இனிச்செய்கன்ம மூலமல ஞானத்தா லிடிப்பன்-கன்மங்களெல்லாம் போக்கியும் சரீரமிருக்கையாலே மீளவும்பிராரத்தமும் ஆகாமியமும் வாதனையாலே போகாது; அது போகைக்கு இவ்விடத்திலே மேற் செய்யப்பட்ட வாகாமியத்தையும் அதுக் கேதுவான ஆணவமலத்தையும் பரமேசுவரன் தன்னுடைய ஞானத்தினாலே இவனுக் கில்லைபாக்கி விடுவன்

இதனாற் சொல்லியது, பரமேசுவரன் மூன்றுவகைப்பட்ட ஆன்மாக்களும் செய்தகன்மம் அத்துவாக்களிலே கட்டுண்

டுகிடக்கிறவையிற்றை அடைவிலே புசிப்பித்துத் தொலைப்பித்து மலத்தையும் பாகம்வருத்தி ஆன்மாவுக்கு மிக்கதொரு பக்குவத்திலே ஆசாரியமூர்த்தியாக வெழுந்தருளிவந்து அத்துவசோதனையினாலே சஞ்சிதத்தையும் அனுபவத்தினாலே பிராரத்தத்தையும் மேல் ஏறுகிற வாகாமியத்தையும் ஆணவமலத்தையுந் தன்னுடைய சிவஞானத்தினாலே போக்குவனென்னு முறைமையுமறிவித்தது.

'பலவிதமாசான்' என்ற திருவிருத்தமுதல், 'மூன்றுதிறத் தணுக்கள்' என்ற திருவிருத்த மீறாக, எட்டுத் திருவிருத்தமும் சகலரைப்பற்றியெனக் கொள்க.

இதற்குப் பிரமாணம் சிவஞானபோதம், அ-சூ, ௩-வெ, "அஞ்ஞான வச்சகலர்க் கக்குருவாய்—மெய்ஞ்ஞானம், பின்னுணர்த்தும்" என்னுமதுங் கண்டுகொள்க.

'உரைதருமிப் பசுவர்க்கம்' என்றதிருவிருத்தத்தில் 'சகலர்க்குக் கன்மவொப்பிற் றரையிலாசான் மூர்த்தி யாதாரமாகித் தரித்தொழிப்பன் மலஞ் சதுர்த்தா சத்திநிபாதத்தால்' என்ற பதத்துக்கு வியாக்கியானம் இவ்வளவும் வந்து முடிந்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

மூலமலம் - அநாதிமறைப்பாகிய வாணவமலமும்,—இங்கினிச் செய்கன்மம்-இவ்விடத்து வாசனைபற்றிநிகழும் ஆகாமியவினையும்,—ஞானத்தாலிடிப்பன்-ஒளிமுன் னிருள்போல விறைவனது ஞானசத்தியா லொழியற்பாலன,—மலமுதிர்வித்து-அவ்வாணவமலத்தை முதிர்வித்தற்பொருட்டு,—அணுக்கள் மூன்றுதிறத்துச் செய்யுங்கன்மங்கட்கு-ஆன்மாக்கண் மனவாக்குங் காயமென்று முத்திறத்தா லீட்டப்படும் கன்மங்களை,—மூவிர

ண்டா மத்துவாவி ஞன்றமுறை யவையருத்தி யறுத்து,—ஈட்டிய முறையானன்றி யாறத்துவாவின் பக்குவமுறையா னுகர்விக்கப்பட்டு எஞ்சிக்கிடந்த கன்ம மலமும்,—முன்னிலையா மரும்பருவ மடைதலுமே யாசானுகித் தொன்றி பறுத்து-அதற்குட்பற்றுக்கொடுத்து நிற்கு முன்னிலையாகிய மாயேயமலமும் பக்குவம் வந்தழிக் குருவடிவாய் வருதலாற் கிரியாசத்தியா லொழிதற்பாலன,—என்றவுடற்கன்ம மனுபவத்தினாலறுத்து- உடம்புமுகந்து கொண்ட பிரார்த்த கன்ம மனுபவத்தா லொழிதற்பாலன,—நுகராதவகை முற்செய்கன்மத் துகளறுத் தங்கத்துவாத் தொடக்கறவே சோதித்து - இங்ஙனமாகலாற் கிரியாசத்தி விருத்திபாகிய தீக்கையா லெஞ்சி நின்ற கன்மங்களைச் சுத்திசெய்தற் பொருட்டு அவற்றிற்குப் பற்றுக்கோடாகிய அவ்வத்துவாசுத்தியே யீண்டுக் கூறப்பட்டன.

இதனானே யத்துவா சுத்தியின் சிறப்புக் கூறப்பட்டது. 'உரைதரும்' என்பதுமுத லித்துணையும் 'குருவாகி வந்துணர்த்தி' என்னு முதற்கூற்றுப் பொருளை விரித்துணர்த்தியவாறு.

☞ அ-ரு, முதலதிகரண முடிந்தது.

மறைஞானதேசிகர் உரை

மேலிந்தத் தீக்கையின்றிப் பரமமுத்தி யடையப்படாதென்பதூஉம் புறச்சமயத்தின்க ணின்றுஞ் சத்கன்மானுட்டானத்தினாலே சைவசமய வதிகாரியாவ னென்பதூஉ முணர்த்துகின்றார்.

புறச்சமய நெறிநின்று மகச்சமயம புக்கும் புகன்மிருதி வழியுழன்று மபுகலுமாச்சிரம, வறத்துறை

களவையடைந்து மருந்தவங்கள் புரிந்து மருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள்படித்துஞ், சிறப்புடைய புராணங்களுணர்ந்தும் வேதச் சிறப்பொருளை மிகத் தெளிந்துஞ் சென்றாற் சைவத், திறத்தடைவ ரிதற்சரியை கிரியா யோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர். (கக)

(இ-ள்.) புறச்சமய நெறிநின்றும்	உலோகாயுதம் பௌத்தம் ஆருகதம் மீமாஞ்சம் மாயாவாதம் பஞ்சராத்திர மென்னுந் தூலமாகிய புறச்சமயங்களாறில் நின்றும்,
அகச்சமயம்புக்கும்	சைவம் பாசுபதம் வாமம் வைரவம் மாவிரதம் காளாமுகம் என்னுஞ் சூக்குமமாகிய உட்சமயங்களாறினுட்புக்கு நின்றும்,
புகன்மிருதி வழிபுழன்றும்	மனுமுதலிய வாசாரியராற்சொன்ன தன்மசாத்திரம் பதினெட்டின்வழி யனுட்டித்தும்.

அவையாவன? "மனுவே யத்திரி-சங்கு வாசிட்டமயம் மங்கிரசம்-யோகீசுரமேவருணம்பராசரஞ்-சாதாதவமே சம்வர்த்தமமே-யுசநசம்லிகிதம் விட்டுணுத்தட்சமம்-பிரகற்பதிமதமே கவுதமமென்றே சட்டுரைசெய்வர் அவர் பதினெண்மர்"மிருதியைப் பண்ணினர் பெயரால் எனவறிக.

புகலுமாச்சிரமவறத்துறைகளவையடைந்தும்	வேதத்திற் கொண்டாடிச் சொல்லப்படாநின்ற பிரமசரிய முதலியன வாசிரமங்கள் நான்கின்வழிநின் றனுட்டித்தும்.

அவையாவன?

பிரமசரியம் நயிட்டிகம் பௌதிகம் எனவிருவிதமாம்.

இல்லறம் சாதகன் உதாசினன் என விருவிதமாம்.

வானப்பிரஸ்தம் சபத்தினிகன் விபத்தினிகன் என விரு விதமாம்.

சன்னியாசம் வித்துவான் விபித்சு தவசுவி என மூன்று விதமாம்.

இதன்றி வைதிகத்தில் ஒவ்வொன்றை நந்நான்காக்கிப் பதினாறுகச்கூறும். அவையாவன?

காயத்திரம் பிராமம் பிராசாபத்தியம் நைட்டிகம் எனப் பிரமசாரிய நான்கு.

வார்த்தா விருத்திசாலுீ விருத்தியாயா வாமகோசாரம் எனக் கிரகபதியும் நான்குவிதமாம்.

வைரிஞ்சம் வாலகில்லியம் தென்பம்———— ———— என வானப்பிரஸ்தம் நான்கு விதமாம்.

வேகூதகம் குடீசகம் அங்கிசகம் பரமஅங்கிசகம் எனச் சந்நியாசமும் நான்குவிதமாம்.

அருந்தவங்கள் புரிந்தும் — அனுட்டித்தற் கரிதாகிய பஞ்சாக்கினி முதலியவற்றினின் றரியதபசுகளைச்செய்து,

அருங் கலைகள் பலதெரிந்தும் — கற்பதற் கரிதாகிய கலைஞானங்களை யாராய்ந்தும் "கற்றிலேன் கலைகள் பலஞானம் இடைமருதுறை யெந்தைபிரானே" என்னுந் திருவாக்கானு முணர்க.

ஆரணங்கள் படித்தும் — "நால்வகை வேதம் இருக்கு தயித்திரியம்- சாம மதர்வணமெனச் சாற்றினர் புலவர்." எனக்கூறிய வேதங்களைச் சந்தை யிரட்டை முதலியன விலக்கணத்தோ டோதியும்

சிறப்புடைய புராணங்களுணர்ந்தும் — சிறப்புடைய பதினெண் புராணங்களோதியுணர்ந்தும். அவையாவன?

பிராமம் பாத்மம் வயிணவமே - சைவம் பாகவதமென ச் சார்வருகாலம் - நாரதம் மார்க்கண் டேயமாக்கினேயங்- கைவர்த்த மிலிங்கம் வராகங்-காந்தம் வாமனங் கருதிற் கூர் மம் - மச்சியங் காருட மதிக்கிற் பிரமாண்டம்-பதினெண் புரா ணம் பண்ணினர் புலவர்.

வேதச் சிறப் பொருளை மிகத் தெளிந்தும்

வேதாந்தத்திற் சொல்லிய உபநிடத்துக்கள் முப்பத்திரண்டினையு மோதித் தெளிந்தும். அவையாவன?

பிரகதாரண்யம் சாந்தோக்கியம் கடவலி முண்டகம் மாண்டவீயம் தைத்திரியம் சாபாலம் பிரகத்சாபாலம் அதர்வசிரசு அதரசிகை பிரம்மோபநிடத்து கைவல்லியம் சுவேதாசுவத்தரோபநிடத்து நாராயணோபநிடத்து காலாக்கினியுருத்திரோபநிடத்து சர்வசங்கற்பம் கூசிகெ யுருத்திரோபநிடத்து ஈசோவாசோபநிடத்து நாரசிங்கம் தாமோபநிடத்து சுவரோபநிடத்து கோபாலோபநிடத்து பரம அம்சோபநிடத்து சாபாலோபநிடத்து வாசுதேவோபநிடத்து காதிசாகை கௌதமீயம் பாரத்துவாசியம்.

சென்றுற் சைவத் திறத் தடைவர்

இவர்கள் நாடோறு மனுட்டித்த தபோபலத்தாலே சைவசித்தாந்தமாகிய காமிகாகம மிருபத்தெட்டையு மதிகரித்தற் குரித்தாவர்கள்

இதிற் சரியை கிரியா யோகஞ் செலுத்தியபின்

இங்ஙனங் கூறிய வாகமங்களிற் சொல்லியபடியே ஞானாசாரியனிடத்தில் தீக்ஷைபெற்றுச் சரியை கிரியாயோக மிவைகளின் வழியின் றனுட்டித்த தபோபலத்தினாலே கிரியை யென மருவுமவையாவு ஞானங் கிடைத்தற்கு நிமித்தமெனக் கிளக்குமென வறிக.

ஞானத்தாற் ஞானத்தினாலே தானே பரம முத்தியை
சிவனடியைச் யடைவர். எ-று.
சேர்வர்.

இதற்கு யோகசூத்ரஞ் சிந்திய விசுவஞ் சுப்பிரபேதம் தேவிகாலோத்தரம் சைவபுராணத்து மறிக. (கக)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேலிந்த மலபரிபாகம் வருமாறு கூறுகின்றது.

புறச்சமய நெறிநின்றும் - வேத * பாஹ்யமான பௌத்தாதிமதங்களிலே பிரவேசித்து அந்தந்த சாஸ்திரங்கள் சொன்னபடி தவம்பண்ணி யதனால்,—

* பாகியம் - வெளிப்பட்டது,

அகச்சமயம்புக்கும் - தருமாதியான சதுர்வித புருஷார்த்தத்தையுஞ் சொல்லும் வைதிகத்திலே பொருந்தி,—

புகன்மிருதிவழி யுழன்றும் - ருஷிகளாற் பண்ணப்பட்ட ஸ்மிருதி யுக்தாநுஷ்டான மார்க்கத்திலே நின்று வருந்தியும் மனு முதலியன,—

புகலுமாசிரம வறத்துறைகளவையடைந்து மருந்தவங்கள் புரிந்தும் - மேலு மந்த ஸ்மிருதியிலே சொல்லும் பிரமசரிய கிரகஸ்திய வானப்பிரஸ்த சந்நியாச மெனனு மாசிரமங்களை யடைந் தந்தவாச்சிரமங்களுக்கேற்ற தருமங்களை யநுஷ்டித்தும்,—

அருங்கலைகள் பலதெரிந்தும் - வேதாங்கங்களாகிய வியாகரணாதி சகலஞானங்களை யுணர்ந்தும்,—

ஆரணங்கள் படித்தும் - வேதாத்தியயநத்தைக் குறைவறப்பண்ணியும்,—

சிறப்புடைய புராணங்களுணர்ந்தும் - அஷ்டாதச மகாபுராணங்களையு மறிந்தும்,—

வேதச் சிரப்பொருளை மிகத்தெளிந்தும் - வேதாந்த சிரவண மநந † நிதித்தியாசநங்களைப் பண்ணியும்,—

சென்றால்-இவ்வாறு உத்தரோத்தர மாகச் சநநங்கடோறு மப்பியாசம் பண்ணிவந்தால்,—

சைவத் திறத்தடைவர் - அந்த புண்ணிய பலத்தினாலே சைவ சமயத்தைப் பொருந்துவர்கள்.—

இதிற் சரிதைகிரியாயோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடிபைச் சேர்வர் - இந்தச் சைவததில் சரிதை கிரியை யோகமென்னும் மூன்று வித்தையுங் கிரமத்திலே யநுஷ்டித்தவை யிற்றுக்களின் பலமாகிய சாலோக சாமீப சாருபங்களை யடைந்து பின்பொரு சன்மத்திலே யாசாரியனுடைய வனுக்கிரகத்தினாலே சிவ சாயுச்சியத்தை யடைவர்களென் றிதன்பொருள்.

† நிதித்தியாசநம் - தியாநம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

சிவசமாதி சித்தாந்தத்தன்றிச் சேரப்படாதென்று செப்புகின்றார்.

புறச்சமய நெறி நின்றும் - உலோகாயதம் பௌத்தம் அருகம் மீமாம்சம் மாயாவாதம் பாஞ்சராத்திரம் என்னும்புறச்சமயங்களினின்றும்,—

புகன் மிருதி வழியுழன்றும் - அப்பொருள்வழி பொருத்திப்போய்,—

வேதச் சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றால்,—

அகச்சமயம்-சைவம் பாசுபதம் வாமம் வயிரவம் மகாவிரதம் காளாமுகம் என்னு முள்ளாறுசமயம்

புக்கும்,—

பின்னைசவத்திறத்தடைவர் - சைவசித்தாந்தத்திற் பிரவேசிப்பர்.

இதிலெனப் பொருள் வழி பொருத்திப் பொருளுரைக்க. பதக்கிரமத்திற் பொருளுரைத்தாற் சமயக்கிரமம் மாறுபடும்,—

ஞானத்தால் - சிவ தீக்ஷாங்க நிராலம்ப சிவ சமாதியினால்,—

சிவனடியைச் சேர்வர் - சிவசத்தி சமானமாய்த் தமது சிற்சத்தி விரிவு திருத்தி யிருப்பார்கள்.

போகமாத்திரத்தை நிமித்தீகரித்துவரு மலபரிபாகத்திற்கும், மலபரிபாகமாத்திரத்தை நோக்கிவருஞ் சிவசத்திநிபாதத்துக்கும், சிவதீக்ஷானுக்கிரகத்திற்கு , ஞானத் தியான சமாதி சிவன்முத்தி சாட்சாத்காரக்குறித் தீட்சாங்கத்துக்கும், மோக்ஷத்துக்கும், சாதிக்கிரம மாச்சிரமக் கிரமஞ் சமயக்கிரமங் காலதேசக்கிரமங் கருதி வருத லில்லாமையாற் சமயக்கிரமத்தினின்று சைவத்திறத் தடைவரென்பது தந்திரமன்று.

சகல சமயிகளுக்கு மிலிங்கோத்தாரஞ் சைவத்திற் சொல்லுதலால், சைவத்து வந்தல்லது பரமுத்தி சித்தியில்லை, பதமுத்தியென்று தாற்பரியம்.

மற்றைய வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

இனி, மன்னுமருளா லுணர்த்தி' என்னு மிரண்டாங் கூற்றினை இருபத்தைந்து செய்யுளான் விரித்துணர்த்துகின்றார்.

மேற்கூறிய அரும்பருவமடைதல், இங்ஙனஞ் சோபானமுறையாற் பலபிறவிகளினு மேற்பட்டு நிகழ்ந்து முற்றுப்பெறுவ

தன்றி, ஒருங்கே யொருகாலத்து முற்றுப்பெறுவ தன்றென்ப தாம்.

சைவத்திறமென்றது சைவக்கூற்றின் முடிபாகிய சித்தாந்த சைவத்தை.

சென்றுலென்பது சேறலருமை விளக்கி நின்றது.

இதனானே மேற்கூறிய பருவமடையுமுறைமை கூறுமுகத்தான் மன்னுமருளென்றதன் வகையும் அவற்றிற்கு வாயிலிவை யென்பதூஉம் வகுத்துக் கூறப்பட்டன.

நிரம்பவழகியருரை வருமாறு.

இப்படி முன் சொல்லப்பட்ட சிவஞானம் ஆன்மாக்களுக்கு உண்டாம்படி யெப்படியென்ற மாணாக்கனை நோக்கி மேலருளிச்செய்கிறார்.

புறச்சமய நெறிநின்றும் - உலகாயதன் முதல் பாஞ்சராத்திரியீறாகச் சொல்லப்பட்ட புறச்சமயங்களிலே சென்றுசென்று அந்தந்த சாஸ்திரஞ் சொன்ன முறைமையிலே யனுட்டித்தும்,—அகச்சமயம்புக்கும் - உட்சமயமாகிய பாசுபதம் மாவிரதம் காளாமுகம் வாமம் வயிரவம் என்றுசொல்லப்பட்ட அந்தந்தச் சமயங்களிலே புகுந்து அந்தந்தச் சாத்திரங்கள் சொன்ன முறைமையிலே யனுட்டித்தும்,—புகல்மிருதி வழியுழன்றும் - சொல்லப்பட்ட மிருதிவழிகளிலே திரிந்தும்,—புகலுமாச்சிரம வறத்துறைகளவையடைந்தும்-கொண்டாடப்பட்ட ஆச்சிரமமான தன்மநெறிகளைச் செய்தும்,—அருந்தவங்கள் புரிந்தும்-பஞ்சாக்கினியை முதலானஅரிய தபசுகளைவிரும்பிச் செய்தும்,—அருங்கலைகள் பலதெரிந்தும் - அரிய சாத்திரங்கள் பலவுமோதியுணர்ந்தும்,—ஆரணங்கள்படித்தும்- வேதங்களையோதியும்,—

சிறப்புடைய புராணங்களுணர்ந்தும் - நன்மைப் பகுதிகளைச் சொல்லுகிற புராணங்களை யோதியறிந்தும்,—வேதச்சிரப்பொருளை மிகத்தெரிந்தும் - வேதாந்தத்தி னர்த்தங்களைமிகவும் ஆராய்ந்து இதுவே யர்த்தமென்று அறுதியிட் டறிந்தும்,—சென்றற் சைவத்திறத்தடைவர் - இவையிற்றை வழுவறச்செய்து முடித்து யாதொரு ஜனனம், அந்த ஜனனம்போய் மற்ற ஜனனத்திலே சைவநெறியைச் சென்று பொருந்துவார்கள்.—இதிற் சரியைகிரியாயோகஞ் செலுத்தியபின் - இந்தச் சமயத்திலே நின்று சரியை கிரியாயோகங்களைச் செய்து அவையிற்றின் முதிர்ச்சியினாலே ஞானத்தைப்பெற்று,—ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர் - அந்த ஞானத்தினாலே சிவனுடைய சீபாதத்தைப் பொருந்துவர்கள்.

என்னவே கிரியையாலே மோக்ஷமென்ற சைவரை மறுத்து ஞானத்தினாலே மோக்ஷமென்றதெனக் கொள்க.

இதற்குப் பிரமாணம் சங்கற்ப நிராகரணம், "பல்பணி ஞான காரணமென்னிற்.றெல்பணி தொறும்பயன் றெப்டுபதனாலு-மொருபணிசெய்யாச் சிரபுரச் சிறுவரு-மரசராய தருணத்தலைவரு-முதிர்பரசமையத் திதமுறுமரசரு - ஞானம்பெற்ற நன்மையினாலு-மீனமில்பணியருட் கேதுவன்றன்றால்- ஞானோற்பத்தி நிமித்தமித்தொழிலென- வேனோற்சிறைநூ லியம்பிற்றென்னும்" என்றும், சிவஞானபோதம், அ.சூ, க-வெ, "தவஞ்செய்தா ரொன்றுந் தவலோகஞ் சார்ந்து, பவஞ்செய்து பற்றறுப்பாராகத் —தவஞ்செய்த, நற்சார்பில் வந்துதித்து ஞானத்தை நண்ணுதலைக், கற்றார்சூழ் சொல்லுமாங் கண்டு" என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, உலோகாயதன், புத்தரில் சவுந்திராந்தகன் யோகாசாரன் மாத்தமிகன் வைபாடிகன், அமணரி

ல்நிகண்டவாதி ஆசீவகன், மீமாஞ்சரில் பட்டாசாரியன் பிரபாகரன் நையாயிகன் மாயாவாதி பாற்கரியன் நிரீச்சுரசாங்கியன் பாஞ்சராத்திரி ஆகப் புரச்சமயத்திற் பேதம் பதினாலும்; அந்தந்த முறைமைகளிலே நின்றும், பாசுபதம் மகாவிரதம் காளாமுகம் வாமம் வயிரவம் என்கிற உட்சமயத்திற் பேதம் ஐந்திலும் புக்கு அந்தந்த முறைமைகளிலே நின்றும் 'புகல் மிருதி' என்ற பதமுதல் 'வேதச்சிரப்பொருளை மிகத்தெளிந்தும்'என்றபத மீறாக உழன்றும் அடைந்தும் புரிந்தும் தெரிந்தும் படிந்தும் உணர்ந்து மிகத்தெளிந்தும் இங்ஙனஞ் சொல்லப்பட்ட முறைமைகளை வழுவறச்செய்து முடிந்தால் சைவநெறியைப் பொருந்துவார்களென்றும், இதிலேநின்று சரிதைகிரியை யோகங்களை யனுட்டித்தால் அந்தமுதிர்ச்சியினாலே ஞானமுண்டாயந்த ஞானத்தினாலே சிவனுடைய சீ பாதத்தை யிரண்டறச்சென்று பொருந்துவர்கள் என்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

புறச்சமய நெறிநின்றும் - புறச்சமய நூல்வழியே யொழுகியும்,—அகச்சமயம் புக்கும் - அகச்சமய நூல்வழியேசென்றொழுகியும்,—புகன்மிருதி வழியுழன்றும் - சொல்லப்பட்ட மிருதி நூல்வழியே சென்றொழுகியு ,—புகலுமாச்சிரம வறத்துறைகளவையடைந்தும்-வேதங்களிற் கூறியவாறு ஆச்சிரம தருமங்களிற்குறைவின்றியொழுகியும்,— அருந்தவங்கள் புரிந்தும் - செய்தற்கரிய தவங்களைச்செய்தும்,—அருங்கலைகள் பலதெரிந்தும்- அரிய கலைஞானங்களைப் பலபயின்றும்,—ஆரணங்கள் படித்தும் - வேதங்களை யோதியும்,— சிறப்புடைய புராணங்களுணர்

ந்தும் - சிறபுப் பொருந்திய புராணங்களை யறிந்தும்,—வேதச் சிறப்பொருளை மிகத் தெளிந்தும் - உபநிடதப்பொருளை மிகவு மாராய்ந்து தெளிவுற்றும்,—சென்றுற் சைவத்திறத்தடைவர்- இங்ஙனஞ் சோபான முறையாற் பலபிறவிகளினு மேற்பட்டு நிகழ்ந்து சென்றுற் சைவக்கூற்றின் முடிவாகிய சித்தாந்த சைவத்தைத்தலைப்படுவர்,—இதிற்சரியை கிரியாயோகஞ் செலுத்திய பின்-இச்சித்தாந்த சைவத்தினுஞ் சரியைகிரியா யோகங்களை யனுட்டித்துமுன்னியபின்,— ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்-ஞானத்தைப்பெற்று அதனாற் சிவன்றுளைச் சேர்வரென்கலின் மேற்கூறிய பருவமடைதல் ஒருங்கே யொருகாலத்து முற்றுப் பெறுவதன்று.

இதனுனே மேற்கூறிய பருவமடையு முறைமை கூறுமுகத்தான் மன்னுமருளென்றதன் வகையும் அவற்றிற்கு வாயிலிவை யென்பதூஉம் வகுத்துக் கூறப்பட்டன.

மறைஞானதேசிகர் உரை

ஒருதலை துணிதலென்னுந் தந்திரவுத்தியா லுலோகாயதன்
முதலியோர் முத்திச் சிறப்பின்மையுஞ் சித்தாந்த
முத்தியே பரமுத்தியென்று முணர்த்துகின்றார்.

இம்மையே யீரொட்டாண் டெய்தியெழிலாரு மேந்திழையார் முத்தியென்று மிருஞ்சுவர்க்கமுத்தி, யம்மையே யென்றமுத்தி யைந்துகந்த மறக்கெடுகை யென்றுமட்ட குணமுத்தியென்று, மெய்ம்மையே பாடாணம் போல்கைமுத்தியென்றும் விவேகமுத்தி யென்றுந்தன் மெய்வடிவாஞ் சிவத்தைச், செம்மையே

பெறுகைமுத்தி யென்றுஞ்செப்புவர்கள் சிவனடியை
ச் சேருமுத்தி செப்புவதிங்கியாமே. (௧௨.)

(இ-ள்.) இம்மையேயீரெட்டாண் டெய்தி யெழிலாருமேந் திழைபார் முத்தியென்றும் — இந்தவுலகத்தின் மடந்தைப் பருவமுடைய மாதருடன்கூடி யவருடனூடுத லுணர்தல் பிரிவுற்றவிடத்து வாடுதல் வணங்குத லிவைகளே யரிய தபசுபண்ணுத லவர்களிடத்தி லுண்டாகிய சுகத்தை யடைகிறதே முத்தியென்றும்.

இருஞ்சுவர்க்க முத்தி யம்மையே முத்தியென்றும் — வேதத்திற் கிரியாபாகத்தைப்பற்றி யனுட்டிக்கு மீமாஞ்சகன் சோதிட்டோம முதலிய வனுட்டானத்தாலே யொரு கன்ம முண்டாயதுதானே பலத்தைக் கொடுக்கும், சுருதி வாக்கியாத்மகமாகிய சத்தமே தேவதையொழிந்து வேறொரு தேவதை கன்மபலத்தைக் கொடுக்க வேண்டுவதில்லை. சுவர்க்கத்தை யடைகிறதே முத்தியென்றும்.

கந்தமைந்து மறக்கெடுகை யென்றும் — புத்திதத்துவ முதல் கீழுள்ள தத்துவங்களடங்கலும் க்ஷணிகமாயிருக்கும், ஆன்மாவு மீசுரனு மென்ப தொன்றில்லை, முத்தி பூதத்தினுடையதா யிருக்கிற கூட்டமேயென்றும்; ரூபகந்தமும், சுகதுக்க ரூபமாயிருக்கிற புத்தியினுடைய சந்தியென்னும் வேதனாகந்தமும், யாதொன்றுக்கு யாதொரு கந்தக் கூட்டங்களுடைய சந்தி சஞ்ஞாகந்தமும், ஞான மிடைவிடாம லிருக்கிறதே ஞானகந்தம், இந்த ஞானத்தை விசேடித்தறிகிற சந்ததியே விஞ்ஞானகந்தம், ஆக விந்தப் பஞ்சகந்தங்களும் நேராகக் கெடுகிறதென் றறிகிறது மிந்த நூலையுபதேசித்த சுகத பகவானையே வழிபடுகை முத்தியென்றும்

அட்டகுண மூ அருகசாத்திரஞ் சொல்லிய அநந்தஞா
த்தியென்றும் னம் அநந்ததரிசனம் அநந்த வீரியம் அநந்த
சுகம் நிர்நாமம் நிட்கோத்திரம் நிராயுஷ்
யம் சகலசம்மியகபாவம் எனக்கூறிய குணங்களெட்டு.

இது தொகை.

அதனை வகுத்தறியில் அநந்தஞானம் ஐந்துவகைப்படும். அஃதாவது? மிதி சுருதம் அவதி மனபரியாயம் கேவலம் எனவரும். இதனை ஞானுவர்ணிய மென்பர்கள்.

இனித் தரிசனுவர்ணியம் ஒன்பது பேதப்படும். அவையாவன ? சட்சுதரிசனம் அசட்சுதரிசனம் அவதிதரிசனம் கேவலதரிசனம் நித்திரை நித்திராநித்திரை பிரசலை பிரசலாப்பிரசலை தியானக்கிரந்தியென வரும்.

இனி வேதநீயம் இரண்டு. சாதவேதநீயம் அசாத வேதநீயம் எனவரும்.

ஆயுஷியம் நாலு, தேவாயுஷியம் திரியக்காயுஷ்யம் மனுஷ்யாயுஷ்யம் நரகாயுஷ்யம் எனவரும்.

இனி மோகனுவர்ணிய மிருபத்தெட்டு. மித்தியாதத்துவம் மிசவு மித்தியாதத்துவம் சம்மியகம் பிரகிருதி அந்தானுசந்திகுரோதம் மானம் மாயாலோபம் அப்பிரத்தி யாச்கியானதிகுரோதம் சசுவலனம் அதிக்குரோதம் அதிமானம் அதிமாயம் அதிலோபம் சிரிப்பு அரதிருதி சோகம் பயம் நிந்தை மாதாவேதம் புருடவேதம் அலிவேதம் சத்தாவலோகனம் மாதிருதரிசனம் சாகாகிரகணதரிசனம் ஞானம் எனவறிக.

நாமந் தொண்ணூற்று மூன்றுபேதப்படும். வமயம் சந்தம் இரதம் பரிசம் உத்தியோகம் உச்சுவாசம் வாதாம்பரியாத்தி அபரியாத்தி சூக்குமவியாத்தி பிரசித்தம் அப்பிரசித்தம் சீவக தற்பக அதேய அநாதேய சாகாய சகீர்த்தி அபகீர்

த்தி அகுரு இவது உபகாதா பரகாதா ஆனுபூர்வி இதமுதலாகப் பிண்டாபிண்ட பிரகிருதி பேதத்தினாலே யவைகளை யறிக.

இனி கோத்திரமிரண்டு. உயர்ந்த கோத்திரம் தாழ்ந்த கோத்திரம் எனவரும்.

இனி அந்தராயம் அஞ்சுபேதம், தாநாந்தராயம் இலாபாந்தராயம் போகாந்தராயம் உப்போகாந்தராயம் வீரியாணியந்தராயம் எனவரும்.

இந்த வட்டவித கன்மத்தை விசாரித்தறியில் நூற்று நாற்பத்தெட்டென வறிக.

இதன்மேல் விரிக்கிற் பெருகுமென வறிக.

மெய்ம்மையே பாடாணம் போல்கை முத்தியென்றும்	உண்மையாகவே கருவிகரணங்களெல்லாங் கழிந்து பாடாணம்போலே கிடக்கிறதென்னும் பாடாணவாதி முத்தியும்
விவேசமுத்தியென்றும்	மாயாவாதி சமுத்திரத்தி னிடத்திலே திரைதோன்றி யதிற்றானே யொடுங்குமாறுபோலப் பிரமத்தி னிடத்திலே சகத்துந் தோன்றி யதிலேதானே யொடுங்கு மாயையிற் காட்டில் விலட்சணமான பிரமசுரூபத்தை வேதாந்த ஞானத்தினாலே விவேகித் தறிகிறதே முத்தியென்பதும்
தன் மெய்வடிவாஞ்சிவத்தைச் செம்மையே பெறுகை முத்தி	சிவசமவாதி யான்மாவுக்குச் சுபாவமான சைதன்னியத்தின் முறைமையினையும் சிவனது சீர்பாதத்தினையுந் தாளிணைதலையுமின்றி மயக்கத்தாற் றன்னையே சிவனென மதிக்கு முத்தியும்
என்றுஞ் செப்புவர்கள்	உம்மையாற் சங்கிராந்தமாகிய பாசுபத முத்தியும் சமாவேசமாகிய காபாலமுத்தி

காலாந்தரத்திற் றிரும்பு மதுவு மாகாது. சித்தாகிய சிவனிடத்திலே மலரகிதனான வான்மாத் தோன்று மெனில்? யாதொன் றநேகமுமா யுற்பத்தியுடையு முடைத் ததுநாசமடையும். இந்த மாவிரத முத்தியன்று

இப்படிச் சமயங்கடோறு முத்தியைப் பலவாகக் கூறுமதனை மெய்யென்று கருதிப் பலங்கொள்ளக் கருத லெத்தன்மைக் கொக்குமென்னில்? அக்கினியை விரும்பினவன் மின்மினியினிடத் ததனைப் பெறுவோமென் றுசைப்படு மதற்கொக்கும். அவைகளெல்லாஞ் சிருட்டிகாலத்தில் அழிந்துபோகிற முத்திகள். அழியாமுத்தி யாதெனின்?

சிவனடியைச் சேருமுத்திசெப்புவதிங்கியாமே. தீக்கையில் மும்மலங்களையுஞ் சோதித்துச் சிருட்டிகாலத்தில் கீழே திரும்பாமல் சிவனைப்போல சர்வஞ்ஞத்துவா ஷட்குணங்களபிவியத்தமாகிறதே யாஞ்சொல்லும் பரமுத்தி. எ-று. (௧உ)

செம்மையே பெறுகையென்னும் ஏகாரந் தேற்றம்.

யாமே - ஈற்றசை.

யாம் - எழுவாய். செப்புவம்-பயனிலை.

இதற்குச் சிந்தியம் மிருகேந்திரம் நிச்வாசம் "நான்மகச்சேதோ" என்னுஞ் சுலோகத்து மறிக.

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் பரமதமுத்தியைத் தூஷித்து ஸ்வமதமுத்திக் கூறுகின்றது.

இம்மையே யிரெட்டாண் டெய்தி யெழிலாரு மேந்திழையார் முத்தியென்னும்- இகமேயுள்ளது, பரமென்பதில்லை, சுவர்

க்கம் நரகமென்ப தேதென்னில்?* மஜ்ஜன போஜன கந்த புஷ்பாதி சௌக்கியமே சுவர்க்கம், இவைகளின்றி தரித்திரத்தினாலும் வியாதியினாலும் பீடிக்கப்படுகிறதே நரகம், அழகையுடைத்தாகிய வவயவங்களை யுடைத்தாய் பதினாறு வயதாய் † மதனகலா வல்லபைகளாயிருக்கிற ஸ்திரீகளுடனேகூடி யனுபவிக்கிற வேளையில் ‡ நீவிவிடுகிறதே மோக்ஷ மென்னும். லோகாயதனும்,—

* மஜ்ஜனம் - ஸ்நாநம், † மதனகலாவல்லபை - மன்மதநூலில் கெட்டிக்காரி. ‡ நீவி - துணிமுடிச்சு.

இருஞ்சுவற்கமுத்தி யம்மையேயென்றும்- வேதோக்த கன்மாநுட்டானங்களினாலே யிந்தப் பூதபரிணாம தேகத்தை விட்டு திவ்விய தேகியாய் மறுமையிலே பெரியபோகததை யுடைத்தாகிய சுவர்க்கத்தை யடைவதே மோக்ஷமென்னும் பூர்வ மீமாம்சகனும்,—

ஐந்துகந்த மறக்கெடுகை முத்தியென்றும்- ரூபம் வேதனை குறிப்பு பாவனை விஞ்ஞானமாகிற பஞ்சஸ்கந்தமும் § சந்தானமின்றியில் நிச்சேஷமாகக் கெடுகிறதே மோக்ஷ மென்னும் பௌத்தனும்,—

§ சந்தானம் - பரம்பரை.

அட்டகுண முத்தியென்றும் - அனந்தஞானம் அநந்ததரிசனம் அனந்தவீரியம் அனந்தசுகம் நிர்நாமம் நிர்கோத்திரம் நிராயுஷ்யம் சகல்சம்மியதா பாவமென்னு மெண்குணப் பிராப்த்தி மோக்ஷமென்னுஞ் ஜயினனும்,—

மெய்ம்மையேபாடாணம் போல்கை முத்தியென்றும் - ஆத்மா சடமாய் ஞானாச்ரயமாயிருக்கும். அதெப்படி யென்னில்? விளக்குத்தகளியும் விளக்கும்போல அந்த ஞானத்தினாலே சுகதுக்கானுபவ முண்டாயிருக்கும் ¶ ஷோடச பதார்த்தத்வ

¶ ஷோடசம் - பதினாறு

ஞானத்திஞலே சுகதுக்கங்களும் தகேதுவாயிருக்கிற ஞானமும் நீங்கப் பாஷாணம்போல வோரறிவுமற் றிருப்பதே மோக்ஷமென்னும் நியாய வைசேஷிகனும்,—

விவேக முத்தியென்றும் - பிரகிருதிபுருஷ விவேகத்தைப் பண்ணி பிரகிருதி விகாரங்களுக்குத் தானன்னியமாகக் கர்த்திருத்துவ போக்த் திருத்துவங்களற நிற்பதே மோக்ஷமென்னும் நிரீஸ்வர சாங்கியனும், மேல் மாயாபுருஷ விவேகத்தைப் பண்ணி மாயையை நீங்குவதே மோக்ஷமென்னும் மாயாவாதியும்,—

தன்மெய்வடிவாஞ் சிவத்தைச்செம்மைபே பெறுகைமுத்தியென்றுஞ் செப்புவர்கள் - பாஞ்சராத்திரிகள் மகாவிஷ்ணுவினுடைய கிருபையிஞலே பிராகிருத தேகத்தை நீங்கித் தங்களுக்கு சத்திய ஸ்வரூபமான சுத்த சித்ரூபிபாய் விஷ்ணு× துல்யஞய் சிரீ பூமி நீலாசத்தித்திரய வியதிரிகத்தமான சகல போகங்களும் மகாவிஷ்ணுவைப் போலே நித்தியமா யுடைத்தாயிருக்கை மோக்ஷமென்றும், பூர்வ சைவர் சிவானுக்கிரகத்திஞலே யாணவ மாயை காமிகங்களிங்க சத்தியமும் சுத்தமுமாய்த் தங்கள் ஸ்வரூபமாகிய ஞானக்கிரியை பிரகாசிக்க வதஞல் சர்வஞ்ஞத்துவாதி ஷாட்குண்ணியாபி வியத்திபாய்ச் சிவசமமா யிருப்பதே மோக்ஷமென்றுஞ் சொல்லுவர்கள்; ஆதலால் இதெல்லாம் பதமுத்தியே.—

× துல்பம் - சமானம்.

சிவனடியைச் சேருமுத்தி செப்புவதிங்கியாமே - ஆன்மாவுஞ் சிவனு மஞதியே பிறிவற்றது; அந்தப் பிறிவில்லாமையைத் தோன்ருதபடி யஞதியே யாணவசத்தி தடுத்திருக்கையா லிந்த வுபாதிகளிஞலே யசத்தியமாகிய போகங்களை சத்தியமென்று மயங்கிநின்று சிவானுக்கிரகத்திஞலே யுபாதித் திரயங்களும் நீங்கக் கண்ணினது காச காமலாதி தோஷம்நீங்கக் காக்ஷி

யைப் பெற்றதுபோல,சிவனுடைய பிரிவில்லாமையைச் சிவஞானத்தா லன்னியமாகக் கண்டு சிவாநந்த பரவசத்தினாலே சிவமேயாய் நிற்பது மோக்ஷமென்று சொல்லிப் பரம மூர்த்தியை யடைவது உத்தர சைவராகிய வெம்மோனோரேயென் றிதன் பொருள்.

பதமென்ற சொல்லுக்குப் பொருள் நிச்சயம், ரக்ஷை, இருக்குமிடம், அடையாளம்,அடி, ஒருவஸ்து, இத்தனையுமாகையால், இவ்விடத்துச் சிவனடியைச் சேரவெனறது சிவமாகியவஸ்துவைப் பொருந்தவென்றது.

பொருந்த வென்றதினா லிரண்டிருந்து கூடிய தல்ல, தன்னுடைய பிள்ளையானவன் வியாதியினாலே மிகவும் பீடிக்கப்பட்டுக் குணமானபொழு திந்தப் பிள்ளையை யிப்பொழுது பெற்றேனென்றதுபோல வுபாதியினாலே சிவாநுபவம் விளங்காமலிருந்து விளங்கினபிறகு கூடியதென்று சொல்லவேண்டியது.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

ஆதலால், லோகாயதன் முதலோர் முத்தி, முத்திப்போலியென்பதுந் தெரிவித்து, சித்தாந்த முத்தித்திறனுஞ் செப்புகின்றார்.

இம்மையே யீரேட்டாண் டெய்தி யெழி லாரு மேந்திழைபார் முத்தி யென்றும - முழுகுதல் புசித்தல் பூசுதல் முடித்தல் முதற் சுகமே சுவர்க்கம், அந்தச் சுகமில்லாமை நரகம், மசளிரை மணத்த லிம்மையே முத்தியென்று லோகாயதன் சொல்லுவன்,—

இருஞ் சுவர்க்க மம்மையே முத்தி யென்றும்- பூர்வமீமாம்சன் சொல்லுவன்,—

உருவம் வேதனை குறிப்பு பாவனை விஞ்ஞான மென்கின்ற,

கந்தமைந்து மறக் கெடுகை முத்தி யென்றும் - புத்தரிற் பிரதீப நிருவாணவாதி பேசுவன்.—

அனந்தஞான மனந்ததரிசன மனந்தவீரிய மனந்தசுகம் நிர்நாமம் நிர்க்கோத்திரம் நிராயுஷ்யம் சகலசம்மியச்பாவ மெனும்,

அட்டகுணமுத்தி - என்று மருக னிசைப்பன்.—

ஞான முதலிய செயற்கைக் குணங்கள்கெட் டியற்கை யஞ்ஞானமே குணமாய்,

மெய்ம்மையே பாடாணம் போல்கைமுத்தி என்றுந் தார்க்கிகன் சாற்றுவன்,—

பிரகிருதி புருஷ,

விவேக முத்தி என்றும் - சாங்கிய னுரைப்பன்.—

தன் மெய் வடிவாஞ் சிவத்தை - தனதிந்த வடிவு போற் சாகார சிவமூர்த்தி சாரூப சிவாகாரத்தை,—

செம்மையே பெறுகைமுத்தி - பரமுத்தியாகப் பரிப்பது முத்தி,

என்றும் - சிவசமவாதி,—

செப்புவன் - இப்படி வாதிகள் செப்புவார்கள்.

சிவனடியைச் சேருமுத்தி - சிவசத்திக் கொத்து விரிக்குஞ் சாட்குண்ணிய சிற்சத்தி நாம சிவத்துவாபி வியத்தியா முத்தி,—

யாம் இங்குச் செப்புவதே.

சில ஆதுநிக சைவாசாரியர் யாஞ்சொல்லு மிந்த முத்தியைச் சாரூப முத்தி சாற்றுஞ் சிவசமவாதி முத்தியாய்த் திருப்பி நமது சிவசித்தாந்த சித்த சிவசாதிர்ச்சிச சிவசாத்தியைக் கிய சிவசுத்தாத்துவைத முத்தித் துவேஷிகளாய் வேதாந்த வி

சேஷசித்த விசிஷ்டாத்துவைத கோடி கொளுவிச் சிவ வியத்தி யத்துவைத விசிஷ்டாத்துவைதப் போலிமுத்தி விளம்பி விப்பி ரலம்பராய் விட்டார்கள்.

வாதிகளுடையும் பதமுத்திக் கிரமம் பகுப்பு வகுப்பாம்:—

பூதான்ம ஞானோபாய முபதேசிக்கு முலோகாயதனுக்கும், பூதவிசேஷப் பிராணான்ம ஞானோபாய முபதேசிக்கும் கௌத னுக்கும், விஞ்ஞானகந்த விச்சிஞ்ஞானோபாய முபதேசிக்கும் பிரதீப நிருவாண வாதிக்கும், கன்மேச்வர ஞானோபாய முப தேசிக்குக் மீமாம்சனுக்கும், சோதிரான்ம ஞானோபாய முபதே சிக்குஞ் சோதிசாத்திர வித்துக்களுக்கும், சூரியாக்கினி சமாத் ம ஞானோபாய முபதேசிக்குஞ் சூரியாக்கினி சாம்யவாதிகட்கு ம், அவரவர்க்கருகமான பஞ்ச பூதபுவனப் பிராப்திதானே மோட்சம்.

பூதாண்டகாரணப் பிரம ஞானோபாய முபதேசிக்கும் ஸ் மார்ததர்க்குத் தன்மாத்திர புவனப் பிராப்தி தானே மோட் சம்.

இந்திரியான்ம ஞானோபாய முபதேசிக்கு முலோகாயத னுக்குளொருவனுக்கு இந்திரியபுவனப் பிராத்திதானே மோட் சம்.

மனாத்ம ஞானோபாய முபதேசிக்கு முலோகாயதர்க்கு ளொருவனுக்கு மனோ புவனப்பிராப்திதானே மோட்சம்.

அகங்காரான்ம ஞானோபாய முபதேசிக்கும் வைசேஷிக னுக்கு அகங்கார புவனப் பிராத்திதானே மோக்ஷம்.

புத்தியான்ம ஞானோபாய முபதேசிக்கும் நையாயிகனுக் கும், புததிவிர்த்தி யான்ம ஞானோபாய முபதேசிக்கும் புத்தனு க்கும் புத்தி புவனப் பிராப்திதானே மோக்ஷம்.

சலஞ்சல சதசத்குணான்ம ஞானோபாய முபதேசிக்கு மரு கனுக்குக் குணபுவனப் பிராப்திதானே மோக்ஷம்.

பிரமகாரியான்மா ஞானோபாய முபதேசிக்கும் பரிணத வேகரந்திக்கும் நாராயணப் பிரகிருதி காரியான்ம ஞானோபாயமுபதேசிக்கும் பாஞ்சராத்திரிக்கும் பிரகிருதி புவனப் பிராப்திதானே மோக்ஷம்.

சத்தப்பிரம சிரீடாப்பிரம சித்திரப் பிரமவாதிப் பிரமுகர்க்கும் பிரகிருதிபுவனப் பிராப்திதானே மோட்சம்.

யோகோபாய முபதேசிக்கும் பாதஞ் சலனுக்கும் பிரகிருதி புருஷ விவேக ஞானோபாய முபதேசிக்குஞ் சாங்கியனுக்குஞ் சந்நியாசோபாய முபதேசிக்கும் விவர்த்த வேதாந்திக்குமான்ம வாதிகளாதலால் புருஷபுவனப் பிராப்திதானே மோக்ஷம்.

சிவ தீக்ஷாங்கியங்க சிவஞானோப கிருத சாகார சிவாத்ம பாவனோபாய முபதேசிக்குஞ் சிவவாதிகளாகும் சைவரிற் சைவ பவுராணிகர்க் கிராக புவனப் பிராப்திதானே மோக்ஷம்.

சாகார நிராகார சிவபாவனா பரசோம சித்தாந்திகட்குக் கலார்க கர்ப்ப வித்திபா புவனப் பிராப்திதானே மோக்ஷம்.

சிவாவேசவாதியாகுங் காபாலர்க்குக் கலாபுவனப் பிராப்திதானே மோக்ஷம்.

காலேசுர வாதிகட்குக் காலதத்துவப் பிராப்திதானே மோக்ஷம்.

சங்கிராந்த வாதியாகிய சைவபாசுபதர் வைதிகபாசுபதர்க்குஞ் சமுத் பத்திவாதி மாவிரத விசேஷர்க்கும் மாயா புவனப் பிராப்திதானே மோக்ஷம்.

கலாதத்துவாந்த சோதினியாகிய தீட்சாவான்களுக்கு விஞ்ஞான கைவல்லியந்தானே மோக்ஷம்.

சர்வஞ்ஞத்தவ மாத்திரவாதி மகாவிரதர்க்குச் சுத்த வித்தியா புவனப்பிராப்திதானே மோக்ஷம்.

பிரயோச்சிய கர்த்திருத்துவ வாதிகட்கும் பிரவாகேவர வாதிகட்கும் அநேகேச்வர வாதிகட்கும் ஈஸ்வர புவனப் பிராத்திதானே மோக்ஷம்.

சதாசிவ சாமிப வாதிபாகிய சிவசமவாதிகளுக்குச் சதாசிவ புவனப் பிராப்திதானே மோக்ஷம்.

சுத்தசாத்தர்களுக்குச் சத்தி புவனப் பிராப்திதானே மோக்ஷம்.

வாம தக்ஷிண காருட பூதநாந்திரிகர்க்குச் சத்திகலா புவனப் பிராப்தி தானே மோக்ஷம்.

சிவ தீக்ஷா சாகல்லிய சுத்தராயிருந்தும் சிவவியத்திவைக்கியஞ் செப்புமிப்போதுள்ள சைவர்களுக்கு

"சதஷ்கலந்துஜாநீயாத்
புருஷம் லோகபாவநம்"

என்னும் வசனத்தினாற் சத்தி புவனப் பிராப்தி தானே மோக்ஷம்.

தீக்ஷா வைகல்லிப வான்களாகில் முற்சொல்லிப புருஷ புவனப் பிராப்தி தானே அல்லது சிவலோகப் பிராப்திதானே மோக்ஷமென்று சிந்திக்கப்படும்.

சிவனுக்கு வைந்தவ சரீரம் வாஸ்தவமென்னுஞ் சாமானிய சைவர்க்குச் சிவதத்துவ புவனப் பிராப்திதானே மோக்ஷம்.

உலோகாயதாதி வேதாந்தியந்த ஆன்மவாதிகளுக்கு மான்ம விவேகப் பிரவிர்த்திமான்களாகையாற் சிவவாதிகள் பண்ணுஞ் சிவவிவேகத்திற்கு மான்ம விவேக மடிப்படையாதலான் அவ்வான்ம விவேகிகட்கு மலபரிபாக நோக்குஞ் சிவசமான பரமுத்தி பார்க்கும் பாத்திரமாங் கால மெண்ணிக்கைக் கிசையுமாதலா லவரவர் முத்தி சாதனங்கள் சபலங்கள் தானே, நிஷ்பலங்களன்று.

சிவஞானயோகியருரை வருமாறு.

—0—

ஏனைச் சமயநூலார் கூறு முத்திகளாவன? சோபானமுறையால் நிலமுதனாதமீறாய்க் கிடந்த முப்பத்தாறு தத்துவங்களிடைக்கட் படுவனவாய அரிவைய ரின்புறுமுத்தி முதலாயினவாம். வேதாகமநூ லுண்மையுணர்ந்த யாங் கூறுமுத்தியாவது, முப்பத்தாறு தத்துவங்களுக்கு மப்பாற்பட்ட சிவனடியைச் சேருமுத்தியா மென்பதாம்.

ஏந்திழையை யென்னு மிரண்டாவது விகாரத்தாற் றொக்கது.

ஆர்முத்தி வினைத்தொகை.

உம்மையை எதிரது தழீஇயிற்றாக்கி யெண்ணிக்கூறாத சமய முத்திகளையும் இவற்றுடன் வைத்துக் கூறிக்கொள்க.

இதனானே புறச்சமயநெறிநின்றான் முதலியனவெல்லாஞ் சைவத் திறத்தடைதற்குச் சோபானமுறையான் வாயிலாமாறும் அவற்றது பயன் கூறுமுகத்தானே இனிது விளக்கப்பட்டது.

—

நிரம்பவழகியருரை வருமாறு.

—0—

மேல் முத்தித்தொகை யருளிச் செய்கிறார்.

இம்மையேயீரெட்டாண் டெய்தியெழிலாரு மேந்திழையார் முத்தியென்றும் - இம்மையிலே பதினாறு வயதைப்பொருந்தி அழகினையும்பொருந்தி ஆபரணங்களையுந் தரித்திருப்பதாயுள்ள ஸ்திரீகளுடனே கூடி அவர்களிடத் துண்டான சுகத்தை யனுபவிக்கிறதே முத்திபென்னும் உலோகாயதன் முறைமையும்,—இருஞ்சுவர்க்கமுத்தி யம்மையென்று - எக்கியாதி கன்மங்

களைச்செய்து மறுமையிலே சுவர்க்கத்தைப் பெறுகிறதே முத்திபென்னும் பட்டாசாரியன் முறைமையும்,—முத்தி யைந்துகந்தமறக் கெடுகைபென்றும் - உருவம் வேதனை குறிப்பு பாவனை விஞ்ஞானம் என்கிற பஞ்சகந்தங்களும் நேராகக் கெடுகிறதே முத்தியென்னும் பௌத்தரில் சவுத்திராந்திகன் முறைமையும்,—அட்டகுண முத்தியென்றும் - எட்டு பதினெழு ஆறு என்னு மூன்றுவகையாயுள்ள குணங்களை விடுகிறதே முத்திபென்னும் சமணரிற் நிகண்டாவாதி முறைமையும்,— மெய்ம்மையே பாடாணம் போல்கைமுத்தியென்றும் - உண்மையாகவே ஆன்மா ஒன்றுமறியாமற் கற்களைப்போலே கிடப்பதே முத்தியென்னும் அகச்சமயத்திற் பாடாணவாதி முறைமையும்,—விவேக முத்தியென்றும் - இந்த ஜீவான்மாவுக்கு விவேகஞான முண்டாகிறதே முத்தியென்னும் மாயாவாதி முறைமையும்,—தன் மெய் வடிவாஞ்சிவத்தைச் செம்மையே பெறுகை முத்தியென்றும் - ஆன்மா தனக்குள்ள விந்தச்சரீரமானது ஸ்வரூபத்தைப் பெற்று நித்தியமாயிருக்கிறதே முத்தியென்னும் அகச்சமயத்தில் சமவாதி முறைமையும்,—செப்புவர்கள் - இப்படிப் பலவாகச் சொல்லுவர்கள். அப்படிச்சொல்லுகிற விவை குற்றத்தைப்பொருந்தின முத்திகளாம்;—சிவனடியைச் சேருமுத்தி செப்புவதிங்கியாமே - ஆகையால் பரமேஶ்வரனுடைய சீர்பாதத்தைப் பெறுகிற முத்தியே இவ்விடத்தில் முத்தியென்று சொல்லப்படுவதும், யாங் கொள்ளப்படுவது மதுவே.

இம்மையே யிரொட்டாண் டெய்தி யெழிலாரு மேந்திழையார் முத்தியென்றது உலோகாயதன் பிரத்தியட்ச மொழிந்து அனுமான முதலானவை கொள்ளாத படியாலே இம்மைப்பயனாகிய மகளிரிடத்துச் சிற்றின்பமே முத்தியென்று கொண்டானெனக்கொள்க.

இதற்குப் பிரமாணம் பரபட்சம்,அவன்மதம்-௨0-செ. "ஊடு வதுணர்வதற்ற கலவிமங் கயனாயுள்கி, வாடுவதடியில் வீழ்ந்து வருந்துவ தருந்தவம்பின், கூடுவதுணர்வு கெட்டுக் குணமெலாம் வேட்கைபாகி, நீடுவதின்பமுத்தியித்தினின்றார்கள் முத்தர்," என்றும், அவன் மறுமைப்பயன் கொள்ளானென்பதற்குப் பிரமாணம் பரபட்சம், அவன்மதம்-௨ச-செ. "வீட்டினையுளதென்றோடி மெலிவதிங்கென்னைவீடு, காட்டுவோர் கண்டோர்கேட்டோர் கரியவையுண்டேற் காட்டீர்,நாட்டினிலரசனாணைக் கிசையவேநடந்து நாளு, மீட்டியபொருள்கொண் டிங்கே யின்பத்துளியைந்திடீரோ" என்னுமதுங் கண்டுகொள்க.

இருஞ்சுவர்க்கமுத்தி யம்மையேயென்றது பட்டாசாரியன் இம்மையிலே நித்திய கன்மங்களைச் செய்ய நன்மைப் பகுதிகளுண்டாமென்றும் சோமயாக முதலாயுள்ள யாகங்களைச் செய்ய மறுமையிலே மகத்தாகிய சுவர்க்கத்தைப் பெறுசிறதே முத்தியென்றும் கொண்டான் எனக்கொள்க.

இதற்குப் பிரமாணம் பரபட்சம், அவன்மதம்-கக-செ "நித்தியால்நித்தகன்ம நிகழ்த்திட சுபத்தைநீங்கார், நிதிலாவிச்சா கன்மஞ் செந்தழலோம்பிச்செய்ய, வேதுதான்வேண்டித்தெல்லா மெய்தலாஞ்சோமயாக,மாதிதா ளுகைவீசி யமைத்திட்டவிடதாமே" என்ற திருவிருத்தத்திற் கண்டுகொள்க.

அவன் செயல்களே முத்தியைக் கொடுக்கும தொழிந்து ஒரு கர்த்தா வுண்டென்றுகொள்ளான் என்பதற்குப் பிரமாணம் பரபட்சம், அவன்மதம் ௪௨ செ. "கருதியகன்மஞான மிரண்டு காலாகக்கொண்டு" என்ற திருவிருத்தத்திற் கண்டுகொள்க.

முத்தியைந்தகந்த மறக்கெடுகை யென்றது சவுத்திராந்திகன்பிருதிவி யப்புதேயு வாயு என்ற பூதரூபம் நாலும், அறிவுக்

தமிரதம் வன்னம் என்கிற உபாதான ரூபம் நாலும், ஆக ரூப கந்தம் எட்டு. குசலாவேதனை அகுசலாவேதனை குசலா குசலா வேதனை என்கிற வேதனாகந்த மூன்று. சோத்திரம் தொக்கு சட்சு சிங்குவை ஆக்ராணம் மனம் என்கிற குறிப்பு கந்தம் ஆறு. பொய்சொல்லல் கோட்சொல்லல் கோபித்துச் சொல்லல் பயனில சொல்லல் என்கிற வாக்கின்குணம் நாலும், களவுக்குப் போகல் வறிதே தொழில் செய்தல் கொலைசெய்தல் ஆக காயத்தின் குண மூன்றும், கொலை நினைக்கை காமப்பற்று ஆசையென்கிற மனதின் குணம் மூன்றும், அசத் தீக்குணம் பத்து. மெய்யுரைத்தல் வார்த்தை இனியனகூறல் பயன்படு சொல் என்கிற வாக்கின் குணம் நாலும், பள்ளிவலம் வருதல் தவம்புரிதல் தானஞ் செய்தல் என்கிற காயத்தின் குணம் மூன்றும், அருணினைவு ஆசையறுத்தல் தவப்பற்று என்கிற மனத்தின்குணம் மூன்றும் ஆக நற்குணம் பத்து. ஆக பாவனை கந்த மிருபது. சத்த பரிச ரூப ரச கந்தம் சித்தம் என்கிற விஞ்ஞான கந்தமாறு. ஆக இங்ஙனம் நாற்பத்து மூன்றாக வெண்ணப்பட்டு வருகிற பஞ்சகந்தங்கள் ஐந்தும் காரணங்கிடக்கக் காரியங்கிடக்குமென்பது மிகுத்துரை யில்வழக்குமாய்ப் பந்தத் துக்கமுமாய் இது குற்ற விடென்றும் கந்தங்களைந்தும் நேராகக்கெட்டு விட்டின்பத்தை யடையுமென்பதுவே முத்தியின்பமாகக் கொண்டானெனக் கொள்க.

இதற்குப் பிரமாணம் பரபட்சம் அவன்மதம்,நக-செ,“ஓங்கியவுருவமோடு வேதனைக்குறிப்பிேனாடு” என்னுந் திருவிருத்தத்திற் கண்டு கொள்க.

அட்டகுண முத்தியென்றது நிகண்டாவாதி. அட்டகுண முதலாயுள்ள மூன்றுவகைக் குணங்களையும் விடுகிறதே முத்தியென்று கொண்டானெனக் கொள்க.

மூன்றுவகைக் குணமாவன, ஞானவாணியம் தரிசனுவாணியம் வேதநீயம் மோகனீயம் ஆயுஷ்யம் நாமம் கோத்திரம் அந்தராயம் என்கிற குணங்கள் எட்டும், பசித்தல் தாகம் பயம் செற்றம் உவகை மோகம் சிந்தனை பழித்தல் நோய் நசித்தல் வேர்வை கேதம் மதம் அதிசயித்தல் புசிப்பு பிறப்பு உறக்கமென்கிற குணங்கள் பதினேழும் அர்ச்சிகம் இந்தி ஆரம் சோகம் சுகுச்சை பயம் என்கிற குணமாறும் ஆக இங்ஙனஞ் சொல்லப்பட்ட முப்பத்திரண்டு குணமுதலான மூவகைக் குணங்களையும் விட்டு பூர்வத்திலுண்டாகிய கன்மங்களை புசித்துத் தொலைந்த வவதரந் தானே வீட்டின்ப மெனக்கொண்டானெனக் கொள்க.

முதற்சொன்ன ஞானவாணிய மாதிடாயுள்ள எட்டுக்கும் பிரமாணம் பரபட்சம் அவன்மதம் - உ-செ, "ஈறிலாதன வனந்த ஞானமுத லெண்குணங்களொ டொண்குண, மாறிலாதமதி மேவுசீதமென மன்னிவானவர் வணங்கவே, வேறலாவுகுண ஞானவாணியம தாதியெட்டினையும் விட்டசீ, ரோறுபான்மையுடை நீடுவா ழருக னெங்களுக்கிறைவ னென்றனன்"

இரண்டாவது சொன்ன பசித்த லாதியாயுள்ள பதினேழு குணங்கட்கும் பிரமாணம் பரபட்சம், அவன்மதம் - ௬ - செ. "பசித்தல்தாகபய செற்றமோடுவகை மோகசிந்தனை பழித்தல் நோய், நசித்தல்வேர்வினொடு கேதமோடுமதம் வேண்டலின்றி சயித்தலும், புசிக்கவந்திடு பிறப்புறக்கமிட விட்டொரட்டகுண பூதனும், வசித்தவன்னுலகின் மேலிருந்தொருசொலிகலனுக்கருளு மென்றனன்"

மூன்றுவது சொன்ன அரிச்சிகமாதியாயுள்ள குணங்களாறுக்கும் பிரமாணம் பரபட்சம், அவன்மதம்-அ-செ."ஏனுமொன்றுடைய வாகியெங்குமணு வாயிரும்புகன் மரங்களும், பூணுமங்

குருவெ லாமுமாகுமிவை புற்கலப்பொருள்க ளென்னலாங்,கா ணுமஞ்சறு வகைத்தொழில்களவை கட்டுவிட்டநெறி கன்மமே ல், மாணநின்றுவரு மாறிமாறிமுன் வகைந்தருண்டுவிட மாட் சியே" என்றும் பிரமாணங்கள் கண்டுகொள்க.

மெய்ம்மையே பாடாணம் போல்கைமுத்தி யென்றது பா டாணவாதி அறிவிலாதவர்கள் அதிநப்பட்டுக் கிடக்குந் தன் மைபோல ஆன்மாச் சுத்தாவத்தையிலும் ஒன்றுமறியாமல் கல் லைப்போலே கிடக்கிறதேமுத்தியென்று கொண்டானெனக்கொ ள்க. இதற்குப் பிரமாணம் சங்கற்பநிராகரணம், "கொத்தை மாந்த ருத்துறு துயில்போற் - காட்சியென்னக் காணுத்துயர- மாட்சியைமுத்தி யெனவகுத்தனரே" என்னுமதுங் கண்டுகொ ள்க.

விவேகமுத்தி யென்றது மாயாவாதி நின்மலமாயிருக்கி ற ஆகாயத்தை மேகமறைத்த தன்மைபோல சுத்தமாயிருக்கிற பரப்பிரம மாயா வுபாதிகளினாலே வாதிக்கப்பட்டு இந்தவுட லிலே மயங்கிநிற்கிறதே ஆன்மாவாவது, அந்த ஆகாயத்திலே ஒரு வாயுத்தோன்றி அந்த மேகத்தை நீக்கின தன்மைபோல தன்னிடத்திலே ஒரு விவேகஞானந்தோன்றி யந்த மாயாவவி த்தையை நீக்குகிறதே முத்தியென்று கொண்டானெனக் கொ ள்க. இதற்குப் பிரமாணம் சங்கற்பநிராகரணம், "இவ்வியற் பந்தப் பவ்வமதகல - விண்முதறந்த கொண்மூப்படலத் - தி ருளறவுதித்த காறகவிவேகந் - தன்னிருேன்றிச் சாதக மனை த்தையு - மன்னகப்பிரிப்பு மடியிழைவாங்கலும் - போலஞா லம் பொய்யறக்கழீஇத் - தானேதானுய்த் தன்னிற்றன்னைத்- தானேகண்டு தன்னலமுற்றும்" எனனுமதுங் கண்டுகொள்க.

தன்மெய்வடிவாஞ்சிவத்தைச் செம்மையே பெறுகைமுத் தியென்றது சமவாதி வேட்டுவானி யொன்றுமறியாத பச்சை

ப்புழுவையெடுத்துத் தற்சொரூபமாக்கின தன்மைபோல ஒன்றுமறியாமற் கிடக்கிற வான்மாவையும் சிவனுடைய ஞானமெடுத்துத் தற்சொரூபமாக்கி அந்தவுடலே நித்தத்துவத்தை பெற்றிருப்பது முத்தியெனக் கொண்டானெனக் கொள்க. இதற்குப் பிரமாணம் சற்கற்பநிராகரணம், "முன்னொன்றனது முதிரொளிஞான- மறிபாப்பச்சை சிறுபுழுக்கவர்ந்த- வண்டெனவுயிரைக் கொண்டிடுமுயிரது- தன்னைநோக்கித் தன்னுருவாகி- யவ்வகைத்தொழிலு மெய்வகையுணர்வும் - பிரியாவாறு பெற்றுத் - திரியாப்பெரியோர் திருக்ஷிசேர்ந்திடுமே" என்னுமதுங் கண்டுகொள்க.

செப்புவர்களென்றது உலோகாயதன் முதலாயுள்ள எழுவகை முத்தியையுங் குற்றத்தையுடைய முத்தியென்றுரொன்க் கொள்க. அவை வருமாறு:—

உலோகாயதன் முத்திக் குற்றத்தைப் பொருந்தின முத்தியென்றது, பன்றியானது கன்மத்துக்கீடாக விட்டைவிரும்பிப் புசிக்குந் தன்மைபோல வசுத்தமாகிய மகளிரிடத் துண்டாகிய சிற்றின்பத்தையுங் கன்மத்துக்கீடாக விரும்பிப் புசிக்கையினாலெனக் கொள்க. இதற்குப் பிரமாணம் பரபட்சம், அவன்மறுப்பு-உஅ-செ. "ஆசையுற்றுழல் சூகரங்க ளசுத்தமேவி" என்கிற திருவிருத்தத்திற் கண்டுகொள்க.

பட்டாசாரியன் முத்தி குற்றத்தைப் பொருந்தின முத்தியென்றது, கன்மத்தினாலும் ஞானத்தினாலு மோக்ஷமென்று சொல்லுகையில் கன்மத்தினாலே ஆசையுண்டாயதினாலே முத்தியுண்டாகாதாகையினாலெனக்கொள்க. இதற்குப் பிரமாணம் பரபட்சம் அவன் மறுப்பு,க0-செ. "கருமங்கண் ஞானமது வுடனின்றலான்மருவு சதிதங்கலாவ தெனினீ" என்னுந் திருவிருத்தத்திற் கண்டுகொள்க.

சவுத்திராந்திகன் முத்தி குற்றத்தைப் பொருந்தின முத்தியென்றது, கர்ப்பூரவிளக்குப்போலக் கந்தமிருந்துமறக் கெடுகையினாலே பெறுவானில்லாத படியினாலெனக் கொள்க, இதற்குப்பிரமாணம் பரபட்சம், அவன்மறுப்பு ௬௯-செ "ஐந்துகந்தம் சந்தானத்தழிதல்பந்த துக்க" மென்னுந் திருவிருத்தத்திற் கண்டுகொள்க.

நிசண்டாவாதி முத்தியைக் குற்றம் பொருந்தின முத்தியென்றது, குணங்களை விட்டவிடந் தவமாகா தென்பதாலும் பூர்வசன்மம் நிச்சயித்துப் புசிக்கைக்கு இவ்விடத்து ஆன்மாவுக்குத் தனக்கென வேறோரறி வில்லாதபடியாலு மெனக்கொள்க. இதற்குப் பிரமாணம் பரபட்சம், அவன்மறுப்பு-கக-௬க-செ. "ஆறுகாரியங்கள் மாறவேதவங்க ளாமெனில்" என்னுந் திருவிருத்தத்திலும் "பூர்வகன்ம மற்றிடப் புசித்தபின்பு" என்னுந் திருவிருத்தத்தில்" தெண்கடல்நீர் வறந்தபின்பு பூனை மீனருந்த நின்றதே" என்னுமதுங் கண்டுகொள்க.

பாடாணவாதி முத்தியைக் குற்றத்தைப் பொருந்தின முத்தியென்றது அவன் கேவலப்பட்டுக் கிடக்கிறதை முத்தியென்று சொல்லுகையினால் அது முத்தியாகாது எனக் கொள்க. இதற்குப் பிரமாணம் சங்கற்பநிராகரணம் அவன் மறுப்பு "காட்சியென்னக் காணுத்துயர - மாட்சிமை முத்தி யெனவுரைத்துரைக்கிற் - காணுபாவமரணங்கரும - மேய்ந்தவர்முத்தி சேர்ந்தவரன்றே- யினையகதிக்கோர் முனைவரும்வேண்டா - தனிதரு துயர மெனுமிதுதிடமே - பாடாணத்திற் கூடாமுத்தி" என்னுமதுங் கண்டுகொள்க.

மாயாவாதி முத்தியைக் குற்றத்தைப்பொருந்தின முத்தியென்றது, இவனிடத்திலே தோன்றின விவேகஞானம் முன்பே யுள்ளதாமாகில் இவனுக்கு மயக்கம்வர வழக்கில்லை, பின்பு

ண்டானதாகில் ஆகாயப் பூப்போலே இல்லாத துண்டாகா து, ஆகையினாலெனக் கொள்க. இதற்குப் பிரமாணம் சங்கற்ப நிராகரணம், "பந்தமதகல முந்துவிவேகம் - வான்வளிபெனத் தனிற் றுனைதோன்றின் - முன்புளதாயின் மங்காதிலதெனிற்-பின்புளதாகா திலதுளதெனில்வெளி-மலரது தருமணம்" என் னுமதுங் கண்டுகொள்க.

சமவாதி முத்தியைக் குற்றத்தைப் பொருந்தின முத்தி யென்றது, அருவினைப்பொருந்தின ஆன்மாக்களுடைய மாயா தேகந்தன்னை நித்தியதத்துவத்தைப் பெற்றிருக்கிறது பதமுத் தியாம். அதொழிந்து சாயுச்சிய மாகாதாகையினாலும் யாதொ ருயாதொரு சரீரதொந்தனை யுள்ளமட்டும் மூன்று மலங்களுநீங் கா தாகையினாலுமெனக்கொள்க. இதற்குப் பிரமாணம் சங்க ற்ப நிராகரணம், "முத்தியுற்ற நற்றவரவையிடை-சேர்வொன் றனை சார்தருமுத்தி - சாலோக்கியமோ சாயுச்சியமேற்- பங்க முற்ற கந்தலகழித்த-வறிவினோடறிவு பிறியாப்பெற்றி - வேண் டுமென்பதற் கிண்டிவரிவ்வா - றிருப்பவென்பதற் குருத்தான் வேண்டும்" என்னுமதுங் கண்டுகொள்க.

"சிவனடியைச் சேருமுத்தி செப்புவதிங் கியாமே" என்றது க்குப் பிரமாணம் பரபட்சம், சௌந்திராந்திகன் மறுப்பு-௨௰ செ. "அனாதிமுத்தனாய்ப்பரனா யசலனாயெல்லா வறிவுதொழி லனுக்கிரக முடையவரன்கன்பா, னாதிகமற் றொத்தவிடத்தே சத்திபாத நுழைவித்து மலங்களெல்லா நுங்கனேக்கி, மனாதி கரணங்களெல்லா மடக்கித் தன்னை வழிபடுநல் லறிவருளி மாக் கருணைக்கையா, லினாதிபிறப்பினின்று மெடுத்துமாறு வின் பமுத்திக்கே வைப்ப னெங்கள் முத்தியிதுவே" என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, உலோகாயதன் முதலாயுள்ள சம யிகள் கொள்ளப்படு முத்திகள் குற்றத்தைப் பொருந்தின முத்

தியென்றும் இவ்விடத்து முத்தியென்று சொல்லப்படுவது பரமேஸ்வரனுடையஸ்ரீ பாதத்தைப் பொருங்கிறதே முத்தியென்னு முறைமையும் அறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

ஏனைச் சமயநூலார்கூறு முத்திகளாவன? சோபான முறையா னிலமுத னாதமீறாய்க் கிடந்த முப்பத்தாறு தத்துவங்களிடைக்கட் படுவனவாம். அவற்றுள்,—இம்மையே யீரெட்டாண்டெய்தி யெழிலாருமேந்திழையார் முத்தியென்றும் - உலகாயதநூலா ரிம்மைக்கண் பதினாறு ஆண்டுள்ள அழகுபொருந்திய ஆபரணங்க ளணிந்த அரிவைய ரின்புறுதலே முத்தியென்பர்.—அம்மையேயிருஞ் சுவர்க்க முத்தியென்றும் - மீமாம்சை நூலார் யாகாதிகன்மங்கள் செய்து அம்மைக்கண் சுவர்காதி போக மனுபவித்தலே முத்தியென்பர்.—ஐந்துகந்த மறக் கெடுகை முத்தியென்றும் - சௌத்திராதிக நூலார் உருவமுதலிய ஐந்துவகை கந்தங்களு மறக்கெடுதலே முத்தியென்பர்.—அட்டகுண முத்தியென்றும் - ஆருகதநூலார் அநந்தஞான முதலிய எண்குண மடைதலே முத்தியென்பர்,—மெய்ம்மையே பாடாணம் போல்கைமுத்தி யென்றும் - மெய்மையாகப் பாடாணம்போற் கிடக்கை முத்தியென்பர் வைசேடிக நூலார்.— விவேக முத்தியென்றும் - சாங்கியநூலார் பகுத்துணரும் விவேகஞானமே முத்தியென்பர்.—தன் மெய்வடிவாஞ் சிவத்தைச் செம்மையே பெறுகை முத்தியென்றும் செப்புவர்கள் - சிவசமயவாதிகண் முதலியவாகச் சமயநூலார்களும் தன்னுடைய வடிவாகிய சிவசாரூப முதலிய பதமுத்திகளைப் பெறுதலே முத்தியென்றுஞ் சொல்லுவர்கள்.—இங்கு யாஞ்செப்புவது -

வேதாகமநூ லுண்மையுணர்ந்த யாங்கூறு முத்தியாவது,— சிவனடியைச் சேருமுத்தி - மும்பத்தாறு தத்துவங்களுக்கு மப்பாற்பட்ட சிவனடியைச் சேருமுத்தியாம்.

இதனுனே புறச்சமயநெறிநிற்றன் முதலிய வெல்லாஞ் சைவத் திறத்தடைதற்குச் சோபானமுறையான் வாயிலாமாறு அவற்றது பயன்கூறுமுகத்தானே யினிது விளக்கப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை

மேலிந்தச் சித்தாந்தமே சிறப்புடைத்தென்
றுணர்த்து கின்றார்.

ஓதுசமயங்கள்பொரு ளுணருநூல்க ளொன்றோ
டொன் றொவ்வாம லுளபலவு மிவற்றுள், யாதுசமயம் பொருணூ லியாதிங்கென்னி லிதுவாகு மதுவல்ல வெனும்பிணக்க தின்றி, நீதியா லிவையெல்லா மோரிடத்தேகாண நிற்பதியா தொருசமய மதுசமயம் பொருணூ, லாதலினா லிவையெல்லா மருமறையாகமத்தே யடங்கியிடு மவையிரண்டு மரனடிக்கீ ழடங்கும். (௧௩)

(இ-ள்.) ஓதுசமயங்கள் பொருளுணருநூல்களொன்றோடொன் றொவ்வாம லுள — இட்படிப் பலவாகச் சொல்லப்பட்ட சமயங்களையுமதற்கதற்கேற்ற தேவதைகளையுமதற்கதற்கேற்ற சாத்திரங்களையுமுத்திபெறுமதங்களையும் பலவாகவுரைத்து, இவற்றுளுண்மையான சமயம் யாது வுண்மைப் பொருள்யாது அச்சமயத்திற்குக் கூறுமாக

பலவு மியற்றுள் யாதுசமயம்பொருளுடலியா திங்கெனில்

மங்கள் யாது என்று கேட்கிறுயாகில்? அவைகளை யுணர்த்துதும்.

இதுவாகுமது வல்லவெனும் பிணக்கதின்றி நீதியிரு விவையெல்லா மோரிடத்தே காணநிற்பது யாதொருசமய மதுசமயம் பொருளால்

தத்தஞ் சமயத்தி விழிபையுந் தேவதைகள் முறைமையினையு மந்தநூல்களுண்டாய வழியினையு நோக்காது சலம்பற்றி நின்றெமது பொருளேயுண்மை மற்றொன்று முண்மைப் பொருளல்ல வென்னுஞ் சந்தேக விகற்பமின்றிக் கடாவிடையானும் பிரமதப் பொருள்களெல்லா மெய்ப்பொருளன்றென்று விருவிருலுந் திருட்டாந்தத்தாலும் அவ்வியாப்தி முதலிய குற்றங்களாற் சோர்வுபடாத வுண்மைப் பொருளு மிதுவே சமயமு மதுவே இந்தச்மயதுட் டுணிந்து கூறப்பட்டதே பரமமான மோட்சமென்று கூறும் வாலோன்மத்தர் வாக்கிய மலையுமாறுபோல மூன்றெனுடின் மலைவின்றிப் பிறமதங்களைந்து தன்னுண்மைப் பொருளை யறுதியிட்டுணர்த்துகின்ற சமயநூலாகிய நூலேநூல்?

ஆதலிரு விவையெல்லா மருமறை யாகமத்தே யடங்கியிரும்

இச்சிறப்பினை யுடைய தாகையிருலே அச் சமயப் பொருள்களெல்லாம் வேதாகமங்களிரண்டினு மடங்கியிருக்கும்.

அவையிரண்டு மரணடிக்கீழ் டங்கும்.

இந்த வேதாகமங்களாகிய விரண்டு மத்தவாதமின்றி விதிவாதமே கூறுகையா லவனது திருவாக்கே சிறப்புடைத்தெனப் பெறும் எ-று.

இதற்கு சிந்தியம் சிவதருமோத்தரம் மகுடம் காமிகத்தறிக. (௧௫)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———○———

மேல் வேதசிவாகமங்களை சாஸ்திரமென்றும் சிவஞானமே ஞானமென்றுங் கூறுகின்றது.

ஓதுசமயங்க ளநேகநூல்கள் பொருள்க ளொன்றோடொன்றொவ்வாமை யுளபலவு மிவற்று ளியாதுசமயம் பொருணூலியாதிங் கென்னில் - சொல்லுஞ் சமயங்களு மந்தந்தச் சமய சாஸ்திரங்களுஞ் சாஸ்திரங்களில் §பிரதிபாத்தியமான பதார்த்தங்களும் பந்தமுத்தியி னுடைய தன்மைகளும் மோக்ஷாபாயங்களும் ஒன்றுக்கொன்று விரோதமாகப் பலவாகவுள. இவையிற்றுக்களுக் குள்ளே யெந்தச்சமயம் பெரியது, எந்தசாஸ்திரம் சர்வத்தையுஞ் சொல்லுகிறது, எந்தச் சாஸ்த்திரத்திலே சொல்லும் பதார்த்தம் யதார்த்தம், எந்தச் சாஸ்த்திரத்தில் சொல்லு மோக்ஷாபாயம் பரமமுத்தியைக் கொடுப்பது, எந்தச் சாஸ்திரத்திலே சொல்லுந் தருமத்தைப் பண்ணவேண்டுவது, என்று வினுவில்?—

§பிரதிபாத்யம் - சொல்லத் தக்கது.

இதுவாகு மதுவல்லவெனும் பிணக்கதின்றி நீதியினு லிவையெல்லா மோரிடத்தேகாணநின்ற திபா தொருசமய மது சமயம் பொருணூல்-உலகாயிதாதி சிவாவாத்துவைதி யந்தமாகச் சொல்லும் பதார்த்த லக்ஷணங்களையும் தருமங்களையுட் மோக்ஷா பாயங்களையும் மோக்ஷங்களையு மிதுவாகு மதுவல்லவென்று ¶ சமுத்திர கலசநியாயமாக வேதாகமங்களிலே

¶ சமுத்திரகலசநியாயம் - சமுத்திரத்தில் குடத்தைப் போட்டுமொண்டால் குடங்கொண்ட ஜலந்தான் வருமென்கிற நியாயம்.

யேகதேசத்தை யறிவிப்பது பூர்வபக்ஷமும் சித்தாந்தமு மாகத் தர்க்கிப்பித்து, ஆறு குருடர் யானையினுடைய ஏகதேசத்தை ஸ்பரிசித்து யானை யிப்படியிருக்கு மிப்படி யிருக்குமென்று தர்க்கம் பண்ணக் கண்ணுள்ளவ னிவர்கள்சொல்லு மவயங்களெல்லா முடைய தியானையென்று நிச்சயித்ததுபோல, இந்தச்சமயங்க ளெல்லாஞ் சொல்லுவது வேதாகமத்தி லேகதேசத்தைப் பற்றியென்று பரதத்துவத்தை யுணர்வதான சமயமே சமயம், அந்தச்சமய சாத்திரமே சாத்திரம், அந்தச் சாத்திரத்திலே சொல்லும் பதாாத்தமே யதார்த்தம், அதிற்சொல்லும் தருமமும் மோக்ஷா பாயமுமே சாதிக்க வேண்டியது,—

ஆகலினு னிவையெல்லா மருமறை யாகமத்தே யடங்கியிடு மவையிரண்டு மரனடிக்கிழடங்கும் - சர்வத்தையுஞ் சொல்லுவது சாஸ்திரமென்ப தாதலால் வேதசிவாகமங்களுக்குள்ளே சகல சாஸ்திரங்களு மடங்கும். வேதாக மோக்தானுஷ்டானங்களையே பண்ணவேண்டுவதும், அதிலே அதிலேசொல்லும் பதார்த்தங்களே யதார்த்தமும், வைதிகமுஞ் சைவமுமே சமயமும். இவ்விடத்து மிரண்டாகச் சொல்லுகையிலு லிரண்டிலே யதிகமேதென்னில்? வேதசிவாகம மாகிய அபரஞானமிரண்டும் பரஞானமாகிய சிவஞானத்திலே × பரிபாவசானமாகையால் *வேதோபப் பிரமிதமானது கொண்டு வைதிக சைவமென்றும், சிவகுண † சங்கிராந்தி சமுற்பத்தி ‡ சமாவேச சிவசமத்துவ மென் றி முத்திகளுக்கு மேலாயிருக்கிற சிவசாயுச்சியப் பிரதமாகையா லுத்தரசைவ மென்றும், இதை பூர்வபக்ஷம் பண்ணுவதற்கு ஒருசமய மில்லையாகையால் சித்தாந்தசைவமென்றும் பெயரையுடைய வைதிகசைவமே சர்வோத்கிருஷ்டமான சமயம். வேதசிவாகமங்களே சாஸ்திரம். இதிற்சொன்ன பதிபசுபாசம் பதார்த்தத் திரயமே யதார்த்தம். விசிஷ்

டதருமமாகிய சரிதை கிரியாயோக சிவதருமமே பண்ணவேண்டுவது. கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிஷ்டையென்பதே மோக்ஷோபாயமென்றிதன்பொருள்.

× பரியாவசானம்-முடிவு. * வேதோபப்பிரமிதம் - வேதத்திலே அதிகமாகச் சொன்னது, † சங்கிராந்தி - சம்பந்தம், + சமாவேசம் - பிரவேசம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—0—

மேற்சாமான்னிய வேதவிசிஷ்ட விசேஷவேத சிவசித்தாந்தமே சிறப்புடைத்தென்று செப்புகின்றார்.

பொருள் - அந்த அந்தச் சமயத்திற்குச் சொல்லும் பதார்த்தங்கள்,—நூல் - அப்பொருளைச் சொல்லுஞ் சாத்திரம்,—பிணக்கதின்று-சந்தேகமற்று,—ஓரிடத்தே - ஒருசமயத்திலே,—காண - அடங்க. வேதத்திற் சாவதியடங்கும், சிவாகமத்திலே நிரவதியடங்கும்,—அரனடிக்கீழடங்கும்-அபரஞானமாதலால் வேதஞ் சிவாகமத்தடங்கும், சிவாகமம் வேதத்தைக் குறித்துப் பரஞானமானாலும் சிவசத்தி சின்ன சிவாகமத்தைக் குறித்து அபரஞான மாதலால் சிவசத்தியாகுஞ் சேதன பரஞானசிவாகமத்தடங்கும்

மற்றைய வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—0—

கண்ணில்லார்பலர் குஞ்சரங்கொண்டு வேழுகின்றுழித்தலைப்பட்டுக் கையினாற்றைவந்து வேறுவேறு கூறுமிலக்கணங்க

ளெல்லாங் கண்ணுள்ளானொருவன் கண்டுகூறு மக னிலக்கணத்துள் ஏகதேசமாய்க் காணப்பட் டடங்குமாறுபோல, ஏனைச்சமயநூலார் தத்தஞ் சிற்றறிவுக்குப் புலனாயவாறுபற்றி அவ்வநூல்களிற் கூறும் பொருளியல்புகளெல்லாம் முற்றுணர்வுடைய முதல்வனாற் செய்யப்பட்ட வேதாகமங்களிற் கூறும் பொருளியல்பின் ஏகதேசமாய்க் காணப்பட்டு அவற்று ளடங்கும். சிவபிரானாற் செய்யப்பட்டு அவனையே தமக்கு முதலாகக்கொண்டுரைக்கு மவ்விருவகை நூலும் அவ்விறைவன் றிருவடியி லடங்கு மென்பதாம்.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

முன் சொல்லப்பட்ட சமயங்களும் அததற்குப் பொருந்தின அர்த்தங்களும் அததற்குப் பொருந்தின நூல்களும் ஒன்றுக்கொன் றொவ்வாமல் எண்ணிறந் திருக்கையினால் இவையிற்றுள் எந்தச் சமயத்தை எந்தப் பொருளை எந்த நூலை பொருளாகக் கொள்ளுவதென்ற மாணாக்கனை நோக்கி மேலருளிச் செய்கிறார்.

ஓது சமயங்கள் பொருளுணருநூல்க ளொன்றோடொன் றொவ்வாமலுளபலவும் - சொல்லப்பட்ட சமயங்களும் அந்தந்தச் சமயிகள் கொள்ளத்தக்க வத்தங்களும் அததற்கு அறியத்தக்க சாத்திரங்களும் இவை யொன்றுகொன் றொவ்வாமலிருப்பது அநேக விருத்தியுண்டா யிருக்கும்,—இவற்றுள் - இவையிற்றுக்குள்ளே, — யாது சமயம் பொருணூ லியாதிங்கென்னில் - எந்தச் சமயத்தை எந்த வத்தத்தை எந்த நூலையுண்மையாகக் கொள்ளுவசென்று நீ கேட்கில்?—இதுவாகு மதுவலவெனும் பிணக்கதின்றி - இந்தச் சமயமும் இந்தப் பொரு

ளும் இந்தச் சாத்திரமும் ஆமென்றும், அங்கச்சமயமும் அந்தப் பொருளும் அந்தச் சாத்திரமும் அல்லவென்றுஞ் சொல்லுகிற மாறுபா டில்லையாய்,—நீதியினா லிவையெல்லா மோரிடத்தே காணநின்ற தியாதொரு சமய மதுசமயம்பொருணூல் - உலோகாயதன்முதல் பாஞ்சராத்திரியீறாகப் புறச்சமயத்திற் பேதம் பதினாறும், பாசுபதமுதல் வயிரவமீறாக உட்சமயத்திற் பேதம் ஐந்தும், சைவத்தில் ஐக்கியவாதி முதல் சைவரீறாகப் பேதம் எட்டும், ஆக இருபத்தேழு சமய பேதத்துக்கும் அததற்குத் தக்கதாகப் பொருந்தின பொருளும், அததற்குப் பொருந்தின சாத்திரங்களும், அவரவர் பக்குவத்திற்குத் தக்கதாகப் பரமேஶ்வரன் அருளிச்செய்தான் என்கிற முறைமையை யொருசமயத்திலே யறியப்பட்டது யாதொரு சமயம் அதுவே யுண்மையான சமயமென்பதும், அதுவே யுண்மையான அத்தமென்பதும், அதுவேயுண்மையான சாத்திரமென்பதும். இந்தவுண்மையைச் சொல்லுகிற சாத்திரந்தானேது என்னில்?—ஆதலினாலிவையெல்லா மருமறையாகமத்தே யடங்கியிடும் - சர்வத்தையுஞ் சொல்லுகிற வேதாகமங்களாகையினால் முன்சொல்லப்பட்டவையெல்லாம் ஒருவராலு மறியப்படாத வேதாகமங்களிலே யடங்காநிற்கும். அந்த வேதாகமங்களிரண்டும் எங்கே யடங்குமென்னில்?—அவையிரண்டு மரனடிக்கீ ழடங்கும் - அந்த வேதமும் ஆகமமும் இரண்டும் பரமேஶ்வரனுடைய ஞானமாகிய சீர்பாதத்தின்கீழே யொடுங்கும். என்னவே சைவசமயமே சமயமும், சைவசித்தாந்தமே சித்தாந்தமும், வேதாகமமே சாத்திரமும்.

இதற்குப் பிரமாணம் சங்கற்பநிராகரணம் பாயிரம், “பெருங்கட லுக்கவுஞ் சருங்கடு வாங்கிக் - கந்தரத் தடைத்த வந்தமிழ்க் கடவுள் - பாலனை யுணர்த்து மேலவர் போலக் - கேட்போ

ரளவைக் கோட்படு பொருளா - லருளிய கலைக ளருளில வாலவை - பலபலசமயப் பான்மைத்ததன்றே - யஃதாலன்னூற் றன்மையுன்னிய - மாந்தரிதவே பொருளென்றதனிலை - யறைதலின்வேற்றோர் பனுவலேற்றோர்க் - கிசையாமாறு பாடுகூறுவரதனால்-புறச்சமயங்கள் சிறப்பில வாகி-யருளின்மாந்தரை வெருளுற மயக்கி- யலகைத்தேரி னிலையிற்றீரு - மீங்கிவைநிற்க நீங்காச்சமய - மூவிருதகுதி மேவியதாகு - மொன்றோடொன்று சென்றுறுநிலையி - லாறுமாறு வீறுடைத்திவற்று - ளெவ்வமில்லாச் சைவநற்சமயத் - தலகிலாகம நிலவுதலுளதவை- கனகமிரணியங் காஞ்சனமீழந் - தனநிதியாடகந் தமனியமென்றிவை - பலபெயர்பயப்பதோர் பொருளேபோலப் - பதிபசுபாச விதிமுறைகிளக்கும்" என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, சொல்லப்பட்ட சமயங்களும் பொருள்களும் சாத்திரங்களும் ஒன்றோடொன்று ஒவ்வாமல் பலவாகச் சொல்லுகையினாலே எந்தச் சமயத்தை எந்தப் பொருள்களை எந்த நூல்களை உண்மையாகக் கொள்ளுவதென்று மாணாக்கன் கேட்க, ஆன்மாக்கள் பக்குவத்துக்கிடாகப் பரமேஸ்வரன் இப்படிப் பலவாக அருளிச்செய்தானென்று அறிகிறது சைவமாகையினால் சைவசமயமே சமயமும் சைவசித்தாந்தமே பொருளும் வேதாகமங்களே நூலுமென்று அருளிச்செய்ததென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—0—

ஓதுசமயங்கள்-சொல்லப்பட்ட சமயங்களும்,—பொருளுணரு நூல்கள் - அச்சமயப் பொருள்களை யுணர்த்து நூல்களும்,— ஒன்றோடொன் றொவ்வாம லுளபலவும் - மாறுபட்டன.

வாக வுள்ளன பலவாகலின்,— இவற்றுள் சமயமியாது பொருணூல்யா திங்கென்னின் - இவற்றுண் முதன்மையான சமயம்யாது அச்சமயப் பொருளுணர்த்து நூல்யா தில்விடத்தென்னில்,—இறவாகு மதுவல்ல வெனும் பிணக்கதின்றி - கண்ணில்லார் பலர்குழீஇக்கொண்டு வேழநின்றுழித் தலைப்பட்டுக் கையிருற் றைவந்து வேறுவேறுகூறு மிலக்கணங்க ளெல்லாங் கண்ணுள்ளா னொருவன் கண்டுகூறு மதனிலக்கணத்து ளேகதேசமாய்க் காணப்பட் டடங்குமாறுபோல, இதுபொருந்து மிது பொருந்தா தென்னும் பிணக்கின்றி,—நீதியினு லிவையெல்லா மோரிடத்தேகாண நின்றது யாதொருசமயம் - முறைமையா லிவையனைத்து மொருங்கே காணப்பட்டுநின்றதெச் சமயம்,— அதுசமயம் பொருணூலாதலினுல் - அதுவேசமயமும் அச்சமயப் பொருளுணர்த்து நூலுமாதலின்,— இவையெல்லா மருமறையாகமததே யடங்கியிடும் - ஏனைச்சமய நூலார் தத்தஞ் சிற்றறிவுக்குப் புலனாய வாறுபற்றி யவ்வநூல்களிற் கூறும் பொருளியல்புக ளெல்லா முற்றுணர்வுடைய முதல்வனுற் செய்யப்பட்ட வேதாகமங்களில் கூறும் பொருளியல்பி னேகதேசமாய்க் காணப்பட் டவற்று ளடங்குதலின், அவையே நூல்களும்.— அவையிரண்டு மரனடிக்கீ ழடங்கும் - சிவபிரானுற் செய்யப்பட்ட அதனையே தமக்குமுதலாகக் கொண்டுரைக்கு மவ்விருவகைநூலு மவ்விறைவன் றிருவடியி லடங்குமாதலின் அதுவே சமயமுமாம்.

மறைஞானதேசிகர் உரை.

ஆகமப்பிரமாண முன்னூல் முதலிய மூவிதம் இசற்குளதென் றுணர்த்துகின்றூர்.

அருமறையா கமமுதனூ லனைத்துமுரைக்கையினு
லளப்பரிதா மப்பொருளை யரனருளாலணுக்க, டருவ
ர்கள்பின் றனித்தனியே தாமறிந்தவளவிற் றர்க்க
மொடுத் தரங்களினுற் சமயஞ்சாதித்து,மிருதிபுராணங்
கலைகண் மற்றுமெல்லா மெய்ந்நூலின் வழிபுடையாற
ங்கம்வேதாங்கம், சுருதிசிவா கமமொழியச் சொல்லு
வதொன்றில்லைச் சொல்லுவார் தமக்கறையோ சொ
ல்லொணுதே. (கச)

(இ-ள்.) **அருமறை யாகம முதனூல்** — பொருளறிதற் கரிதாகிய நாலுவேதங்களுங் காமிகமுதலிய விருபத்தெட் டாகமமு முதனூல். அஃதெக்காரணத்தா லென்னில்?

அனைத்து முரைக்கையினுல் — அறம்பொருளின்பம் வீடாகிய நான்கினையு முரைக்கிறத்தினுலே அவனே சர்வஞ்ஞன் "வினையினீங்கி விளங்கிய வறிவின் முனைவன் கண்டதுமுதனூலாகும்" என்றூர் தொல்காப்பியனூர்.

அளப்பரிதா மப்பொருளை — வேத மநந்த சாகையையுடைத்தாகையா லளவிட் டகனை யறிதற்கரிது. ஆனலொருவராலு மறியப்படாதோ வெனில்?

அரனருளா லணுக்க டருவர்கள் — சிவனது காருண்ணியத்தினுலே யநந்தமான வேதத்தை நாலாகப் பிரித்து வேதவியாச பகவான் விளங்க வருளிச்செய்தார்.

பின் றனித்தனியே தாமறிந்த வளவிற் றர்க்கமொ டுத்தரங்க — அதனையுற்று நோக்கி யாராய்ந்து தமக்கேற்ற கடவுளானும் விடையானுந் தமதுபொருளையே மேலாக்கிப் பிறமதத்தைக் கீழாக்கியந்த வேதத்தைப் பின்சென்று சமயவே

ஸினுற் சமயஞ் சாதித்து — தங்களையு மதற்கதற்கேற்ற பொருள்களையுஞ் சாதித்து,

மிருதிபுராணங்கலை கண்மற்றுமெல்லா மெய்ந் நூலின்வழி — மனுமுதலிய பதினெட்டு மட்டாதச புராணமு மறுபத்துநாலுகலையு மற்றுமுண்டாகப்பட்டதெல்லா மந்தவேதத்தின் வழிபாதலால் வழிநூலெனப் பெறும். ' முன்னோர் நூலின் முடிபொருங்கொத்துப் பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி யழியாமறபினது வழி நூலாகும்" எனவறிக.

புடையாறங்கம் வேதாங்கம் — வேதங்களுக் கங்கமாகிய சிட்சைமுதலியவாறு முபாங்கமாகிய மீமாங்ஸை முதலிய நாலுமாகப் பத்தும் புடைநூலெனப் பெறும்.

உபாங்கத்தைத் தலைக்குறைத்தலாக்கி யங்கமென்றார்.

வேதமென்பதனை யிருபாலுங் கூட்டிப் பொருளுரைக்க. அவையாவன:—

சிக்ஷை கற்பம் நிருத்தம் சந்தோபசிதி சோதிடம் வியாகரணம்.

இவற்றாற் பிரயோசன மியாதோவெனில்?

வேதோச் சாரணத்துக்கு வன்னத்திற் றோற்றுஞ் சுரத்தையு மாத்திரா பேதத்தினையும் விளங்கச் சொல்லுகையாற் சிக்ஷையெனப் பெயராயிற்று.

வேதமோது மதற்குக் கன்மத்தையுங் கன்மபிரயோஜனத்தையுஞ் சொல்லுதலாற் கற்பமெனப் பெயராயிற்று.

வேதவசனங்களுக் கர்த்தத்தை விளங்க வறியத்தக்கதாக வந்தப்பதங்களோடும் நிர்வசநத்தைச் சொல்லுகையா லதற்கு நிருத்தமெனப் பெயராயிற்று.

வேதத்திற் சொல்லிய மந்திரங்களினது வன்னத்தி னுடைய கணனையினையு மாத்திரா விருத்தமாகிய உத்ததைமுதலிய விருபத்தாறு சந்தபேதத்தினையும் வன்னவிருத்தமாகிய பத்தியை முதல் யாரியை இதிமுதல் காதையீறுக வுள்ளவிலக்கணங்களை விளங்கக் கூறுகையால் சந்தோபிசிதியம்.

லௌகிக வைதிக கன்மங்களுக்கு முபயோகமாகிய தடிலவமுதலிய காலவிசேடங்களை யிதற்கிதுவென் றறிதியிட்டுவிடுப்பதுசோதிடம்.

சங்கிதை பதங்களையு மறுவிதமான பதப்புணர்ச்சிமுதலிய விதியாகிய சத்தலக்ஷணத்தை விளங்கச் சொல்லுகிறது வியாகரணம் எனவறிக.

மீமாஞ்சை நியாயம் புராணம் மிருதி இந்நாலு முபாங்கமெனவறிக.

"இருவர் நூற்கு மொருசிறைதொடங்கித் திரிபு வேறுடையது புடைநூலாகும்" எனமூவிதத்தினையு மறிக.

இனியாகமத துக்குக் காமிகாதி யாகமங்கள் முதனூல்?

அஃதெக்காரணத்தா லென்னில்.

அநாதியே மலமில்லாதவனுமாய் ஆயுள்வேதத்தினையுங் கணிதத்தையும் மந்திரவாதத்தினையும் இரதவாத முதலியவற்றையுங் கூறுகையா லவனேசர்வஞானவான். அவன்வாக்கியமே முதனூல்.

இஃதாசவேணுமோ! கபிலர் பதஞ்சலி முதலாயினர் வாக்கிய மாகாதோ வெனில்?

அவர்களுக்குச் சர்வஞானமில்லாத படியாலு மிராகத்துவேஷத்துடனே கூடினவர்களாகையாலும் அவர்கள் வாக்கிய முதனூலெனப் பெறு.

அளப்பரிதா மப்பொருளை அந்தச் சிவவாக்கிய மாமென் றோரிடத்திலே சொன்னதை யோரிடத்திலே யாகாதென்று

மந்த வாக்கியங்க ளெல்லாஞ் சாபேட்சை நிரபேட்சையாக விருக்குமாதலால் அதனைய னவிடப்படாதென வறிக.

ஆனாலறியப்படாதெனில் அறியும் பகுதியாதெனில்?

ஓரிடத்திலே சத்தசாமர்த்தியத்தாலும் வத்துசாமர்த்தியத்தாலும் சங்கிதாந்தரங்களைக்கொண் டறிவதென வறிக.

நாரசிங்கமுதலிய வுபபேதங்க ளிருநூற்றேழும் வழிநூலெனப்பெறும்.

மூன்னூலாகிய வாகமத்தையும் வழிநூலாகிய வுபாகமங்களாக விரண்டினையு முற்றுநோக்கி யுக்கிரச்சோதி சத்தியச்சோதி பிரகற்பதி பரதர் முதலாகிய வாசாரிமாராற் செய்யப்பட்ட போககாரிகை மோட்சகாரிகை பரமோட்ச நிராசகாரிகை முதலிய பிரகரணங்களைப் புடைநூலெனப் பெறும்.

இத்தன்மையை யுடைத் தாகையினாலே.

சுருதிசிவாகம மொழிபச் சொல்லுவ தொன்றில்லை	இந்தச்சுருதியு மாகமங்களுமே பிரமாண சாத்திரம், மற்றதுக ளெல்லாவற்றிற்கும் பிரமாணிக்க முண்டென்று சொல்லப் பெறா.
சொல்லுவார் தமக் கறையோ சொல்லொணா தே.	இதற்கு வேறாயிருக்கிற சாத்திரமே பிராமாணியமென்று கூறுமவர்களுக்கு நாமென்ன சொல்லப்போகிறோம் எ-று.

ஏகார மீற்றசை

இதற்கு அசிதம் காமிகம் மிருகேந்திர பத்ததி சுவாயம்புவம் பராசரோப புராணம் சர்வசித்தாந்த சங்கிரகங்களி லறிக. (சச)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் வேத சிவாகமங்களை சித்தாந்த சாஸ்திரமென்பது திடப்படுத்துகின்றது.

அருமறையாகமமுதனூ லனைத்துமுரைக்கையினா லளப்பரிதாமப்பொருளை-முடிய வோதியுணர்தற் கரிதாகிய வேதசிவாகமங்க ளிரண்டிலு மெல்லாத்தையுஞ் சொல்லுகையினா லதனுடைய பொருளைப் பூர்வோத்தர விரோதமற வேகவாக்கியத்தைப் பண்ணவரிது,—

அரனருளா லணுக்கள் தா மறிந்தவளவிற் றர்க்கமொடுத் தரங்களினாற் றனித்தனியே பின்சமயஞ்சாதித்துத்தருவர்கள்- விஞ்ஞானத்தின் பொருட்டு ருஷிகள் ஞானப்பிரதமான மந்திரங்களைத் தபசுடனேகூட புனர்ச்சரணைபண்ணி சர்வமந்திரபதியானவ ரந்தந்த மந்திரங்களுக்குந் தபசுக்குந் தக்க விஞ்ஞானத்தைப் பிரகாசிப்பிக்க அந்த ஞானத்தளவு வேதாகமங்களிலே யேகதேச மறிந்து தாமறிந்த மட்டுங்கொண்டு பூர்வபக்ஷமும் சித்தாந்தமுமாக வேறுவேறு சமயமாகச் சாதித்து அந்தப்படியே தாங்கள் சாஸ்திரங்களும் பண்ணுவர்கள்.—

மிருதி புராணங் கலைகண் மற்றுமெல்லா மெய்ந்நூலின் வழிபுடையா மங்கம வேதாங்கஞ் சுருதி சிவாகம மொழியச்சொல்லுவதொன்றில்லைச் சொல்லுவார் தமக்கறையோ சொல்லொணாதே- ஸ்மிருதிகள் புராணங்கள் சிக்ஷா கற்பம் வியாகரணம் நிருக்தம் ஜோதிஷம் சந்தசு என்னுங் கலைகள் இன்னுஞ் சாஸ்திரமென்று சொல்லப்பட்டவைகளெல்லாம் யதாத் தோக்தமான வேதசிவாகமங்களாகிய முன்னூலினுடைய வழிநூலும் அதற்கு சமான தந்திரமும் வேதத்துக்கு அங்கமுமாம். பிரதானமாச் சொல்லப்பட்டது வேதமுஞ் சிவாகமமு மொழி

யவேறில்லை, இதற் கந்நியமாக சுவதந்திராகமங்கள் பிடகநூ லாதிக ளுண்டென்று சொல்லுமவர் வேதபாஹ்ய ராகையால் அசம்பாஷிதரானது கொண் டவர்களோ டுத்தரஞ் சொல்லலா காதென் றிதன்பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

முன்னூல் வழிநூல் சார்புநூ லிதுவென்று சாற்றுகின்றார்.

அணுக்கள் - ஆன்மவர்க்கங்களாகிய மனு முதலிய மிருதிக ர்த்தாக்கள் வியாசர் முதலிய புராணகலை கர்த்தாக்கள்,—ப ண்ணின—மிருதி-முதலியன, வேதமாகிய முதனூலுக்கு,—வழி நூல் ஆறங்கம் புடை-சார்புநூல் முதனூலாகிய சிவாகமத்துக் குபாகமங்கள் வழிநூல்,பிரகரணமுதலியன சார்புநூல்,—சுரு திசிவாகம மொழிபச் சொல்லுவ தொன்றில்லை- வேதத்துஞ் சி வாகமத்தும் புறச்சமய முட்சமய மடங்குதலா லவைதவற்றிற்கு வியாபகமாய்க் கொண்டு புறம்பா பொருசாஸ்திரமில்லை,—அ றை - உத்தரம்.

மற்றவை வெளிப்பொருள்.

ஒன்றில்லை யென்பதற்குப் புறச்சமய முட்சமய சாஸ்திர ங்களும் பிரமாணங்களாய்க் கொண்டு இல்லையென்று பேசவே ண்டாம், தமதவதிப் பிரமாணங்கொன்று பௌஷ்கராதிகளி லும் ஸ்ரீராமகண்ட குருபண்ணின சர்வாகமப் பிராமாண்ணிய த்துஞ் சாதித்திருத்தலால்.

சிவஞானயோகியருரை வருமாறு.

நூலெனப்படுவன வெல்லா மொருநிகரனவாதலின்றி மு தனூல் வழிநூல் சார்புநூல் பூருவபக்கநூலெனப் பலவேறுவ

கப்பட்டு மென்மேனூல்களை நோக்கிக் கீழ்க்கீழ் நூல்கண் மெ
மையுடையனவாம். அவற்றுள் ஏனைச்சமய நூல்களெல்லாம்
தனூலாகிய வேதாகமப் பொருளை முழுவது முள்ளவாறுண
மாட்டாதார் அவற்றுட் சில்பொருளைச் சமுத்திரகலச நயம்
ற்றி ஆண்டாண்டெடுத்துக் கொண்டு தத்தமறிவளவுக்கேற்பத்
தாகுத்தும் விரித்துஞ் செய்த நூலாகலான் அவையெல்லாம்
ருவபக்க நூலெனப்படும். சமயநூலல்லவாகிய மிருதிபுரா
ங்கலைகள், மற்றுமென் பதனுற் றழுவப்படும் உபாகமமுதலா
ன வெல்லாம் அவ்வேதாகமப்பொருளை உள்ளவாறுணர்ந்தோ
அவற்றைப் பிறர்க்கு இனிது விளக்குதற் பொருட்டு நால்வ
கயாப்பினு ளொன்றான் வழிப்படுத்துச் செய்த நூலாகலான்
வை வழிநூலெனப்படும். ஏனைக்காருடந் தக்கிணைமுதலிய
ாகமாங்கங்களும், சிக்கை கற்பசூத்திரமுதலிய வேதாங்கங்
ளும், முறையே யவ்விரண்டனையு முள்ளவாறுணர்தற்குச் சா
பாய்ப் புடைபட்டு நிகழ்தலின், அவை சார்புநூலெனப்படும்.
வ்வாறன்றி வேதாகமங்களி னடங்காதபொருளா யொன்ற
ன யெடுத்துக்கொண்டு சுதந்திரமாய்ச் செய்யுநூல் ஒன்றுமில்
ல, உண்டென்று சொல்லிப் பிணங்கும் பேதைகள் எனகடவா
ரன்பதாம்.

சமுத்திர கலசநயம்பற்றி யெடுத்துக்கொண்டு தருதற்கு
அவர்சுவதந்திர ரல்ல ரென்பார் அரனருளாலென்றார்.

பிறநூ நிகழ்பூர்வமென முன் வருதலின் ஈண்டு வேறுகூ
றொழிந்தார்.

சாதித்துத் தருவர்களென விடையும்.

ஆமென் பதனை மேலுங் கூட்டுக.

ஆகமாங்கத்தை அங்கமென்றது தலைக்குறை.

ஒன்றுமென னும்மை விகாரத்தாற் றொக்கது.

அறை உத்தரம்.

எல்லா மருமறையாகமத்தே காணப்பட்டடங்குதலே இனி து விளக்கியவாறு.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

முன் சொன்ன வேதாகமங்களிலே எல்லா மடங்குமாகில் மற்றுள்ள நூல்களேதுக்கென்ற மாணுக்கனை நோக்கி அருளிச் செய்கிறுர்.

அரு'மறையாகமமுதனூல் - அறிதற்கரிய வேதாகமங்களிரண் டும் எல்லாத்துச்கு முன்னூல்,—அனைத்து முணாக்கையினுல் - சர்வத்தையும் விரியச் சொல்லுகையினுலே,—அளப்பரிதாம் - அந்த நூல்களிலுண்டாகிய வத்தங்களைச் சேர வாராய்ந் தறி கைக்கு அரிதாயிருக்கையினுலே,—அப்பொருளை யரனருளால ணுக்கடருவர்கள்- அந்த வேதாகமங்களை விரியச்சொன்ன வத் தங்களைத் தம்பிரானூர் திருவருளைப்பெற்ற பெரியோர்கள் அந் தத் திருவருளினுலே சுருக்கி ஒருநூலாகச்செய்து அந்த வத்தத் தைப் பச்குவான்மாக்களுக்குக் கடாக்ஷிப்பர்கள். இது வொழி ந்து,—பின் தனித்தனியே தாமறிந்த வளவிற் றற்கமோடுத்தர ங்களினுற் சமயஞ்சாதித்து - இந்த நூல்களையன்றிப் பின்னை யும் பரமேஸ்வரனை யறியாதவர்கள் ஒருவர் சொன்னதொருவ ர்க்குப் பொருந்தாமல் தங்கள் தங்கள் போதத்துக்குத்தக்க ச ங்கற்பங்களையும் அதனுடன் நிராகரணங்களையும் வைத்துக்கொ ண்டு அதுக்கதற்குத்தக்க சமயங்களைச் சாதித்துச் சொல்லுகிற நூல்களும் அநேகம். இப்படி யான்மபோதத்தாலே சொல்லு கிற விந்த நூல்களுமின்றி,—மிருதிபுராணங் கலைகள் மற்றுமெ ல்லா மெய்ந்நூலின் வழிபுடையாம் - மிருதி என்கிற நூலும் பு

ாணங்களும் சாத்திரங்களும் இவைபொழிந்து சொல்லப்பட்
.வையெல்லாம் சத்தியமாயிருந்துள்ள வேதாகமங்களின்வழி
யவந்து விரிந்தநூல்களாம்.—அங்கம் வேதாங்கம் - சந்தை
ற்பம் வியாகரணம் நிருத்தம் சிக்ஷை சோதிடம் என்னும் அ
கம் ஆறும் வேதத்துக்குச் சொருபமாயிருக்கும்.—சுருதிசிவா
மமொழிபச் சொல்லுவதொன்றில்லை- வேதமும் ஆகமமுமொ
ிப வேறென்று இப்படி சர்வத்தையுஞ் சொல்ல மாட்டா
.—சொல்லுவார்தமக் கறையோ சொல்லொணுதே - அந்த
ூல்களைப்போல மற்றுள்ள நூல்களையும் நூலென்றுசொல்லு
ார்க்கெல்லாம் சொல்லவோ! சொல்லவென்று விசாரிக்கில்
'சால்லிமுடியப் போகாது.

பின் றனித்தனியே தாமறிந்த வள்விற் றற்கமோடுத்தரங்
ளினூல் சமயஞ் சாதித்துச் சொன்ன நூலென்றது பரசமயி
ளைப் பற்றித்தெனக் கொள்.

உலகாயதன் சமயஞ் சாதித்துச் சொன்ன நூலென்றதற்
ப் பிரமாணம் அவன்மறுப்பு பரபக்ஷம் அவன்மதம்- க-செ.
இந்திரபுரோகித னியம்புமொரு நூலின், றந்தரமெனுதறிவி
ருடருளிலாமற், சந்தணைபுயத்துமண மாலைகடயங்க, வுந்தி
லகத்துலுல காயதனுரைப்பான்" என்றும்,

புத்தன் சமயஞ் சாதித்துச் சொன்ன நூலென்றதற்குப்
'ரமாணம் அவனமதம்-க - செ. "நீதியார்வேத நூலின் நெறி
லாவறங்களுரு, மோதியோரைந்துசீல முடையராயுடலமூ
.ப், போதிநீண்மரத்தின்மேவு புத்தர்நால்வரினும் வைத்துச்,
ாதிதானிலாதகொள்கைச் சவுத்தராந்திகன் முன்சாற்றும்"
ான்றும்,

அமணன் சமயம் சாதித்துச் சொன்ன நூலென்றதற்கு
் பிரமாணம் அவன்மதம் - ரு - செ. " அந்தவாய்மொழிபி

னுலவன்சரண மாதியோசமுத்லானநூ, லிந்தமானிட மயங்
கிடாதவகை யிங்கியப்பியபி னிதன்பொருள், வந்தகாலமுயிர்
தன்மதன்பிற மாறுவிண்மருவு புற்கலம், பந்தம்வீடினொ ட
னாதியாயிவை படைப்பதின்றியுள பத்துமே" என்றும்,

மீமாங்கிசன் சமயஞ்சாத்துச் சொன்ன நூலென்றதற்கு
ப் பிரமாணம் பட்டாசாரியன் மதம்-க-செ. "வேதமேயோ
திநாத விலையென்றுவிண்ணிலேறச், சேதமாங்கன்மஞ்செய்ட
ச் செயமுனிசெப்புநூலி, நீதியேகொண்டுபட்டா சாரியனிகத்
துநீர்மை, யோதநீர்ஞாலத்துள்ளே யுள்ளவாறுரைக்கலுற்றும்'
என்றும்,

மாயாவாதி சமயஞ்சாதித்துச் சொன்ன நூலென்றதற்
குப் பிரமாணம், அதன்மதம் - க - செ. "நானேபிரமமென்
றுரைத்து ஞாலம்பேய்த்தேரெனவெண்ணி, யூனேபுகுந்துநின்
றுயிர்கட் குபதேசங்களுரைத்தவரு, மானாதிகே டனுமாய
மாயாவாதியேயாகித், தானேயுரைக்குமின்னூலி னுண்மைதன்
னைச்சாற்றுவாம்" என்றும்,

பாஞ்சராத்திரி சமயஞ்சாதித்துச் சொன்ன நூலென்றத
ற்குப் பிரமாணம் அவன்மதம்-க-செ. "ஆதியாயருவமாகி யகண்
டபூரணமாய்ஞானச், சோதியாய்நின்றமாயன் சுவேச்சையா
லுருவுகொண்டு, நீதிபார்கருணையாலே நீள்கடற்றுயின்று நூலு
மோதினனென்றுபஞ்ச ராத்திரியுரைப்பனற்றே" என்றும்.

ஆகசமயங்கள் ஆறுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, வேதமும் ஆகமமும் சர்வத்தையுஞ்
சொல்லுகையினால் அந்த வத்தமெல்லாத்தையும் அறிதற் கரி
தானதுகொண்டு அவை யிற்றுக்குள் வேண்டத் தக்கவை யிற்
றைத் தம்பிரானார் திருவருளைப்பெற்றவர்கள் சுருக்கிச் சொன்
ன சாத்திரங்களும் வேண்டினதென்றும் அந்த இரண்டு நூலு

ச்கும் அத்தந் தெரியாமல் தங்கள் தங்கள் கருத்துச்குத்தக்க சமயஞ் சாதித்துச் சொன்ன நூல்களும் அநேக முண்டென்றும் இப்படிச் சொல்லப்பட்ட நூல்களு மிருதிமுதலான மற்றுமுள்ள நூல்களும் இந்த விரண்டு நூலினுமுள்ள தொழிந்து வேறல்லவென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

——o——

(நூலெனப் படுவனவெல்லாம் ஒருநிகரனவாதலின்றி முதனூல் வழிநூல் சார்புநூல் பூருவபக்ஷ நூலெனப் பலவேறு வகைப்பட்டு மேன்மேனூல்களை நோக்கிக் கீழ்க்கீழ் நூல்கள் மென்மையுடையனவாம்),— சமயம்-அவற்றுளேனைச் சமயநூல்களெல்லாம்,—அனைத்துமுரைக்கையினு ளளப்பரிதாம்-அனைத்துங் கூறுகையினு லலவிடற்கரிப.—முதனூலருமறையாகம மப்பொருளை - முதனூலாகிய வேதாகமப்பொருளை,— அணுக்களானருளாற் பின்றனித்தனியே - முழுவது முள்ளவா றுணரமாட்டாத உயிர்கண் முதல்வ னருளா லவற்றுட் சிலபொருள்களைச் சமுத்திரகலச நயம்பற்றி யாண்டாண்டெடுத்துக் கொண்டு,—தாமறிந்தவளவில் - தத்தமறிவளவிற் கேற்பத்,—தர்க்கமொடுத்தரங்களினுற் சாதித்து தருவர்கள் - பூர்வபக்க சித்தாந்தங்களினுற் சாதித்துத்தொகுத்தும் விரித்தும் செய்தநூலாதலான வைபெல்லாம் பூருவபக்க நூலெனப்படும்.—மிருதி புராணங்கலைகண்மற்று மெல்லாம்-சமயநூலல்லவாகிய மிரிதி புராணங்கலைகண். மற்றும் என்றதனுற் றழுவப்படு முபாகம முதலாயினவெல்லாம்,—மெய்ந் நூலின் வழிபாம்-அவ்வேதாகமப்பொருளையுள்ளவாறுணர்ந்தோர் அவற்றைப் பிறர்கு இனிது விளக்குதற்பொருட்டு நால்வகை யாப்பினு ளொனமுன் வழிப்படுத்துச்

செய்த நூலாகலா னவை வழிநூலெனப்படும்.—அங்கம் வேதாங்கம் புடையாம் - ஏனைக்காருட தக்கணமுதலிய வாகமங்களுஞ் சிக்கை கற்பசூத்திர முதலிய வேதாங்கங்களு முறையே யவ்விரண்டனையு முணர்வாறுணர்தற்குச் சார்பாய்ப் புடைபட்டு நிகழ்தலின் அவைசார்புநூலெனப் படும்,—சுருதி சிவாகம மொழிபச் சொல்லுவதொன்றில்லை-இவ்வாறன்றி வேதாகமங்களினடங்காத பொருளா யொன்றனை யெடுத்துக்கொண்டு சுதந்தரமாய்ச் செய்யுநூ லொன்றுமில்லை.—சொல்லுவார் தமக்கதையோ சொல்லொணாதே - உண்டென்று சொல்லிப் பிணங்கும் பேதைகட் குத்தரஞ்சொல்லுதன் முடியா தென்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

ஆதிகாலத்திலே ஞான மொனமுமிருக்க வேதாகமங்களென விரண்டாக்கிக் கூறியதென்னெனில்? அதிகார பேதத்தா லென்பதூஉ மதனுட் சித்தாந்தமே சிறப்புடைத் தென்பதூஉ முணர்த்துகின்றார்.

வேதநூல் சைவநூ லென்றிரண்டே நூல்கள் வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்தநூல்க, ளாதிநூலநாதியம லன்றருநூலிரண்டு மாரணநூல் பொதுச்சைவ மருஞ்சிறப்புநூலா, நீதியினு லுலகர்க்குஞ் சத்தினிபாதர்க்கு நிகழ்த்தியது நீண்மறையி னொழிபொருள்வே தாந்தத், தீதில்பொருள் கொண்டுரைக்கு நூல்சைவம் பிறநூ லிகழ்பூர்வஞ் சிவாகமங்கள் சித்தாந்தமாகும். (கரு)

(இ-ள்.) வேதநூல் சைவநூலென் றிரண்டே நூல்கள் — ஆப்த வாக்கியமாகிய வேதமு மாகம முமாகிய விரண்டுமே யுலகத்திற் சிறப்புடை யநூல்கள். அஃ தெக்காரணத்தா லென் னில்?

வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்தநூல்களாதி நூலநாதியமலன் றருநூலிரண்டும் — அநாதியே மலமில்லாத நிட்களமான சி வனிடத்திநின்று வாக்குப் பிரபஞ்சமாகப் புறப்பட்டத்தை யொருவராலு மதனைத் த ரித் ததிகரிக்கப்படாதபடியாலே, மகாசதா சிவ தேவநாயனா ரதனைத் தரித் தான்மாக் களுக் குபயோகப் படுகையின் பொருட்டுத் தமது மேலான பஞ்ச வதனத்தி னின்றுஞ் சிருட்டி காலத்திலே வேதாகமங்களை யுண்டாக்கினது.

அந்த வேதத்தில் விரித்துக் கூறியவற்றை யுற்றுநோக்கி யக்ஷபாதர் நியாயத்தையும்

கணாதர் வைசேஷி கத்தையும்
கபிலர் சாங்கியத்தையும்
சைமினிபகவான் மீமாஞ்சையையும்
வாசுதேவன் வைட்டணவத்தையும்
பிரபாகரன் பிரபாகரத்தையும்
வேதாந்தத்தையும்

வேதத்தின்வழியே யுண்டாக்கின சாத்திரங்களும் ஆதி நூலெனப் பெறும்.

திவ்வியாகமங்களை யுற்றுநோக்கிச் சிலர் மாயாவாதம் ஐக்கியவாதம் ஈசுரைச்யம் சிவசம்வாதம் பேதவாதம் பாடாண வாதி சங்கிராந்திவாதி சமவேதவாதி நிமித்தகாரண பரிணா வாமதி எனக்கூறிய சமயபேதங்களைப் பிறித்துநிறுத்தி யதனை

மறுத்துச் சாத்திரங்களாக்கிக் கூறினவைகளு மாதிநூலெனப்பெறும்.

“நூலெனப்படுவது நுவலுங்காலை, முதலுமுடிவு மாறுகோளின்றி, யுண்ணின்றகன்ற வுரையொடு பொருந்தித், திண்ணிதின் விளக்க லதுவதன் பண்பே”. என்னு மிலக்கணத்தை யுடைத்தாதலா னூலென்றுரைத்தார்.

அந்தமுன்னூலாகிய விரண்டுநூலுந் தம்மி லொக்குமோ வென்னில்?

ஆரண நூல் பொது — வேதநூல் சாமான்யமெனப் பெறும். அஃதெக்காரணத்தாலென்னில்? அதோமுகமான தற்புருடாதியான நாலுதிருமுகத்திலுண்டாகையால்.

அந்த நாலுவேதமுந் தம்மி லொக்குமோ வென்னில்? அஃதொவ்வா.

சத்தியோசாதத்திற் றோற்றிய இருக்கு, அதைப்பற்ற வாமத்திற் றோற்றிய யசுர்வேதஞ் சிறப்புடைத்து, அதனைப்பற்ற அகோரத்திற் றோற்றிய சாமஞ்சிறப்பு, அதனைப்பற்றத் தற்புருடத்திற் றோற்றிய அதர்வணம் விசிட்டமெனவறிக.

என்னவே முகபேதத்தா லிதுவு முத்தரோத்தரந் தம்மில்விசிட்டமாயிற்று.

சைவ மருஞ்சிறப்பு நூலாம் — காமிகமுதலிய திவ்யாகமங்க ளிருபத்தெட்டுஞ் சிறப்புநூலெனப்பெறும். அஃதெக்காரணத்தா லென்னில்?

ஈசானமுகத்திற் றோற்றுகையாலு மதற்குமேற் றோற்றமின்மையாலும் இதற்குமேலான நூல்கள் வேறின்மையாலுஞ் சிறப்பாயிற்று.

சிவனுடைய திருவாக் கொன்றாயிருக்கப் பொதுவென்றுஞ் சிறப்பென்று மிருவிதப்படுத்திக்கூறிய தென்னையோவெனில்? அதிகாரிகள் பேதத்தால் பரமபரமென விரண்டாயிற்று.

அஃதென்போலென்னில்? கண்ணென்னுந் தன்மை யெல்லார்க்கு மொன்றாயிருக்கவு மிராத்திரியில் § விலாளத்துக்கு மானுடர்க்கும் விலக்கணமாகச் சேவிக்கக் கண்டோமே! ஆதலாலதுபோலெனவறிக.

§விலாளம் - பூனை.

நீதியி னுலகர்க்குஞ் சத்திநிபாதற்கு நிகழ்த்தியது

அந்த வேதாகமங்களைச் சிவ னிரண்டுபடுத்திக் கூறினது "உலகமென்பதுயர்ந்தோர் மாட்டே" என்பதனால், வேதத்தில் பார்ப்பார்முதலிய வன்னத்தார்க்கும் சதுராசிரமிகளுக்கும் மனுமுதலிய நீதிசாத்திரத்தின் வழிநின் றனுட்டிக்கு மதிகாரியர்க்குங் கூறியது. சைவாகமத்திற் கூறியது, நால்வகைச் சத்திநிபாதானுகுணமாகச் சிவதீக்ஷையினையுடைய வதிகாரி யாகிய பக்குவான்மாக்களுக்கே கூறியது. அஃதெச்சிறப்பினை யுடையதெனின்?

நீண்மறையி னொழிபொருள் வேதாந்தத் தீதில்பொருள் கொண்டுரைக்கு நூல் சைவம்

அநேகசாகையினை யுடைய வேதநூல் சீவான்மாவையு மாயையாகிய வவித்தையையு மற்றுமொழிவுபட்ட பொருள்களையுங்கூறும், அந்தவேதாந்தத்திலே குற்றமற்ற பதியினது சொரூபத்தைத் தெளிவுபெறப் பிரித்துக் கூறமாட்டா, இதுவே யந்த முப்பொருளையும் விரித்துக் கூறுமாதலால்.

புறனூ றிகழ் பூர்வம்

வேதத்திற் சொல்லுமது பூர்வபக்க மெனப்பெறும்.

சிவாகமங்கள் திவ்யாகமங்கள் சித்தாந்த மெனப் பெ
சித்தாந்த மாகு றும். எ-று.
ம்.

சிறிதாகமங்க ளிருபத்தெட்டையும் பஞ்சவத்திரத்திற் றோன்றிற்றென்றும், சிறிதுவசன மீசானத்திற் சிவபேதம் பத்து முபாகமங்க ளுடனே கூடியும், அங்கங்க ளுடனேகூட நாலுவேதமு முண்டாயிற்றென்றுச் சொல்லியிருக்க;ஈண் டீசானத்திற்றானே தோற்றுமென் றுரைத்த தென்னெனில்? சிருட்டி பேதத்தா லாகமபேதங் கூறியதென் றுசாரிபர் தாமே விரோதமின்றிப் பொருளுறைப்பது தன்மமென்று மதங்காகமத்திற் கூறுகையா லவ்வழியே கொள்க வெனவறிக.

இதற்குக் காமிகந் தந்திராவதாரத்து மாசாரியாபிடேகத்தும் பஞ்சப்பிரம பாடியத்தும் சுவாயம்புவத்தும் மோகசுரோத்தரத்தும் மூலதந்திராவதாரத்தும் இரத்தினத்திரயத்துமறிக.

"வேதமோடாகம மெய்யா மிறைவநூ, லோதும்பொதுவுஞ் சிறப்புமென் றுன்னுக, நாதனுரையிவை நாடிலிரண்டந்தம், பேதமதென்னிற் பெரியோர்க்கபேதமே,, எனவறிக. (கரு)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேலு மதற்கே புரகடை.

வேத நூல் சைவ நூ லென்றிரண்டே நூல்கள் - வேதம் சிவாகமமென் றிரண்டே சாஸ்திரம். பிரமவிஷ்ணுவாதி தேவர்கள் ருஷிகள் பண்ணின து சாஸ்திரங்களல்லவோவென்னில்?—

வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்களாதிநூல் - வேதசிவாகமங்க ளல்லாமல் தேவர்களாலும் ருஷிகளாலும் சொ

ல்லப்பட்ட சாஸ்திரங்களெல்லா மிந்த வேத சிவாகமங்களி லே யேகதேசத்தை யெடுத்துக்கொண்டு தங்களுடைய பசு ஞா னத்தினாலே சொல்லப்பட்ட வாதிசாஸ்திரம்.—

அநாதியமலன் றருநூலிரண்டும் - அநாதி நின்மலனாகிய சிவனாலே சொல்லப்பட்டதாகையால் வேத சிவாகம மிரண்டு மநாதி நூலென்று சொல்லப்படும். ஆகில் வேதமென்றுஞ் சிவா கமென்று மிரண்டாகச் சொல்லவேண்டுவா னேனென்னில்?—

ஆரணநூல் பொதுச் சைவ மருஞ்சிறப்புநூலாம் - வேத மானது சூரியன்முதலாக ஈஸ்வரனை முடிவாயுள்ள தேவர்க ளையெல்லா மாராதிக்கச் சொல்லுவதாகையாற் பொது, சிவா கமஞ் சிவனொருவனையேயாராதிக்கச் சொல்லுகையால் சிறப்பு நூலாகும். இவ்விரண்டுக்கு மதிகாரிக ளாரென்னில்?—

நீதியினாலுலகர்க்குஞ் சத்திநிபாதர்க்கும் நிகழ்த்தியது - கிரமத்திலே யஞ்ஞாதி யநுட்டாநங்களைப் பண்ணிப் புண்ணிய வுலகங்களையடைய விச்சிப்பவ ருலகர், அவர்களுக்குச் சொ ன்னது வேதம். சிவசத்தி பதிந்ததனூர் சிவ சாயுச்சியத்தை யடைய விச்சிப்பவர் சத்திநிபாதர், அவர்க்குச் சொன்னது காமிகாதி சைவாகமம். ஆகில் வேதமுஞ் சைவமும் வேறேயோ வென்னில்?—

நீண்மறையி னொழிபொருள் வேதாந்தத் தீதில்பொருள் கொண்டுரைக்கு நூல்சைவம்-வேதத்திலே தேவதாராதனையை ச்சொல்லி, யதற்கு×கர்ஷணாதி பிரதிஷ்டாந்த முச்சவாதி தீர் த்தாந்தமான தந்திரங்க ளொன்றுஞ் சொல்லாதபடியாலே ய வைகளையும், சார்வாகாதி பூர்வபக்ஷமும் நிராகரணமுஞ் சொல் லாதபடியாலே யவைகளையும், வேதாந்தத்திற் குற்றமற்ற சூக் குமார்த்தத்தையும்,திருவுள்ளத் தடைத்துக்கொண்டு விளங்கக் கூறியது சைவாகம மாகையால், வேதத்துக்குஞ் சைவாகமத்து க்கும் பேதமில்லை.

பிறநூல்திகழ்பூர்வஞ் சிவாகமங்கள் சித்தாந்தமாகும்-வேதசிவாகமங்களுக் கந்நியமாய்ப் பிரகாசிக்கப்பட்ட பசுசாஸ்திரங்களெல்லாம் பூர்வபக்ஷம், காமிகாதி வாதுளாந்தமான சைவாகம மிருபத்தெட்டும் சித்தாந்தமென் றிதன்பொருள்.

× கர்ஷணம் - இழுப்பு.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

அப்படிச் சமய சாத்திரங்களெல்லாம் வேதாகமங்களிற் சுருக்கிச் சூசிப் பித்திருக்கும், அவைகளையுருத்திரர் தேவருஷிகள் தனித்தனி விரித் துட்சமய புறச்சமய சாத்திரங்களாகப் பண்ணினார்களென்றும், அப்படியாகில் வேதமென்று மாகமமென்றுஞ் சாத்திரமிரண்டு வருவானேனென்ன, பிரகரணவிரோதங்களிருந்தாலும் வியாகரணாதியிற் சாமானிய விசேஷசூத்திரங்கள்போற் பொதுச்சிறப்புச் சாத்திரங்களாயிருக்குமென்றும், அப்படி வைதிகசம்மதமாய் விருத்தாசல புராணாதியிலு மாகமத்திலு மிருப்பதறிந்து குறித் துரைக்கின்றார்.

வேத முலகர்க் கென்றது-லௌகிகம், வைதிகம், அத்தியான்மிக மெனகின்ற முச்சாத்திரப் பிரசித்த வுலோக தன்ம வருணச் சிரமவழி வழுவாமைமுத லியாகாதி வைதிகப் பிரமவிசாராதிகளிற் பரபுத்தி பண்ணி யொழுகு மலபரிபாக மில்லாமாந்தர்க்கென்று பொருள்.

சிவாகமஞ் சத்திநிபாதர்க்கென்றது அதிமார்க்க மாந்திரமென்கிற விருசாத்திரப் பிரசித்தமா யுலோக தன்மாதி விடாதும் விட்டு மிருக்குஞ் சிவதீக்ஷா வான்களாய்ச் சிவதன்ம திரி

பதார்த்த ஞானத் தியான சமாதியுபாயஞ் சம்பாதிக்கு மிச்சாவான்களுக்கென்றும் பொருள்.

நீண்மறையி னொழிபொருள்-வேதத்திற் கெட்டாப் பொருள்.

வேதாந்தத் தீதில்பொருள் - சித்தாந்தத்துக் கொத்து விரோதியாத வேதாந்தப்பொருள்.

கொண்டு - அங்கீகரித்து.

பிறநூல் திகழ் பூர்வம் - வேதவேதாந்த முதலிய சாஸ்திரங்கள் பூர்வபட்சம்.

மற்றைய வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

வேதஞ்சிவாகமமிரண்டும், ஏனையோர் செய்யப்படும் வழிநூல் சார்புநூல் பூருவபக்க நூல்களி னொன்றாகவைத் தெண்ணுதற்கு ஒருவாற்றானு மியையின்றி அவையனைத்திற்கும் முதனூலாகி அநாதிமுத்தனாகிய விறைவனாற் றரப்படுநூலாக, ஏனையவெல்லாம் இவையிரண்டினின்றும் விரிந்த நூல்களாகலின் இவ்விருவகைநூலுமே நூலென் றுயர்த்துக் கூறப்படுவனவாம். அற்றேல், முதல்வனாற் றரப்படு முதனூலை ஒன்றாகவைத் தெண்ணாமல் இங்ஙன மிருவகைப்படுத் தெண்ணியது என்னையெனின்? அஃதொக்கும். முதல்வன் பெருங்கருணையாளனாகலின் உலகத்தாருய்தற் பொருட்டுஞ் சத்திநிபாத முடையா ருய்தற் பொருட்டுந் திருவுளத்திற் கருதி பொருள் பலபடத் தோன்றுஞ் சூத்திரமும், அதனை யவ்வா றாகவொட்டாது தெளித்துரைக்கும் பாடியமும்போல, முறையே வேதமுஞ் சிவாகமமுந்

செய்யப்பட்டனவாகலான் அவையிரண்டும் முறையானே பொது நூல் சிறப்பு நூலெனப்பட்டுச் சூத்திரமும் பாடியமும்போல வேறுவைத்தெண்ணப்பட்டன. இங்ஙனம் வேதத்திற் கூறுங் கருமகாண்டப்பொருள்கட்கு இன்றியமையாது வேண்டப்பட்டெஞ்சிநின்றனவாய பொருள்களையும் வேதமுடிபாய உபநிடதத்தின் சாரமாயுள்ள பொருள்களையும் வேறெடுத்துக்கொண்டினிதுவிளக்குவது சிவாகமமாகலான், இதனின் வேறாய வேதத்தின் பூர்வபக்கப்பொருளைச் சொல்லுமேனை நூல்களெல்லாம் பூர்வபக்கநூலெனவும் அதன்சித்தாந்தப்பொருளைச் சொல்லுவதாய சிவாகமஞ் சித்தாந்த நூலெனவு மாமென்பதாம்.

சிவாகமத்தின் சிறப்புக் கூறியவாறு.

இவ்வாறன்றி யுரைப்பனவெல்லாம் போலியென்பது சொற்கிடக்கை முறையானும் மகுடாம முதலியவற்றானு மறிக.

இவை மூன்றுசெய்யுளானுப் அவ்வ நூல்களி தியல்புகூறு முகத்தான் மேலது வலியுறுத்தப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

வேதமென்றும் ஆகமமென்றும் புராணமென்கிறது முதலாக இப்படி நூல்கள் வெகுவிதமாயிருக்குமோவென்ற மாணாக்கனை நோக்கி மேலு மருளிச்செய்கிறார்.

வேத நூல் சைவநூ லென்றிரண்டே நூல்கள் - வேத நூல் என்றும் ஆகம நூலென்றும் சொல்லப்பட்ட விரண்டுமே நூலென்பது, மற்றுள்ள நூல்களெல்லாம் நூலல்லவோ வென்னில்?— வேறுரைக்கும் நூலிவற்றின் விரித்த நூல்கள் - இதுவொழிந்து வேறுசொல்லப்பட்ட நூல்களெல்லாம் இவை யிரண்டிலே

னின்றும் தங்களுக்கு வேண்டத்தக்க வர்த்தங்களை யெடுத்துக் கொண்டு விரித்துச் சொல்லப்பட்ட நூல்களாம்.—ஆதி நூல் - அவையிரண்டையு முன்னூலென்று சொல்லப்படும்.—அனாதிய மலன்றரு நூலிரண்டும்-அனாதியே மலரகிதனுமிருந்துள்ள பரமேஸ்வரன் அருளிச்செய்யப்பட்டதா யிருக்கும். வேதாகமங்களிரண்டும் ஒருவ னருளிச் செய்தானுமாயின் ஒருநூலே யமையாதோ இரண்டு நூ லேனென்னில்?—ஆரணநூல்பொது - இவையிற்றில் வேத நூல் சாமானியமா யிருக்கும்,—சைவம் அருஞ்சிறப்பு நூலாம் - ஆகமந்தான் விசேஷத்தவமுடைய நூலாயிருக்கும். இந்தநூல்க ளாருக்குச் சொன்ன தென்னில்?—நீதியினுலகர்க்குஞ் சத்திநிபாதர்க்கும் நிகழ்த்தியது - உலகியல்பு வேத நூல் ஒழுக்கமாயிருக்கையால் உலகத்தி லுள்ளவர்களுக்கும், ஆகம நூல் சத்திநிபாதம் பதிந்த பக்குவரா யுள்ளவர்களுக்கும்சொன்ன தாயிருக்கும். இந்த நூலிரண்டையும் பொதுவென்றுஞ் சிறப்பென்றுஞ் சொன்னது எப்படியென்னில்?—நீண்மறையினொழிபொருள் வேதாந்தத் தீதில்பொருள்கொண்டுரைக்குநூல்சைவம்-அனாதியாயுள்ள வேதத்திலுஞ் சொல்லாத உபதேசப் பொருள்களையும் வேதாந்தத்திலே சொல்லபபட்ட குற்றமில்லாத வர்த்தங்களையுங் கூட்டிக்கொண்டு தெளியச் சொல்லப்பட்ட நூல் சிவாகமம்;—பிற நூல் திகழ்பூர்வம்-பெரிய வேதமானது விளங்காநின்ற பூர்வபாகமா யிருக்கும்,—சிவாகமங்கள் சித்தாந்தமாகும்- திவ்வியாகமங்கள் உண்மையாகிய உத்தரவாகமமாயிருக்கும்.

இதனாற் சொல்லியது வேதாகமங்க ளிரண்டும் அநாதியே பரமேஸ்வரனாலே யருளிச் செய்யப்பட்டதென்றும் மற்றுண்டான நூல்களெல்லாம் அந்த விரண்டு நூலிலும் விரித்த நூல்களென்றும், வேதம் பொதுவாக வுலகர்க்குச் சொன்னதென்

றும், ஆகமம்உண்மையாகச் சத்திநிபாதம் பதிந்தவர்களுக்குச் சொன்னது என்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

வேதநூல் சைவநூலென்னிரண்டே நூல்கள்-வேதசிவாகமமிரண்டும், ஏனையோர் செய்யப்படும் வழிநூல்சார்புநூல் பூர்வபக்கநூல்களி லொன்றாகவைத் தெண்ணுதற் கொருவாற்றானு மியைபின்றி யவையனைத்திற்கு முதனூலாகி,—அநாதி யமலன்றரு நூல்-அநாதி முத்தனாகிய விறைவனாற் றரப்பட்ட நூலாக,—வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்களாதி-ஏனையவெல்லா மிவையிரண்டி னின்றும் விரிந்தநூல்களாகலின்,—இரண்டுநூல் - இவ்விருவகை நூலுமே நூலென் றுயர்த்துக் கூறப்படுவனவாம். அற்றேல், முதல்வனாற் றரப்படு முதநூலை யொன்றாக வைத் தெண்ணாம லிங்ஙன மிருவகைப்படுத்து எண்ணிய தென்னையெனில்? அஃதொக்கும்,—நீதியினா லுலகர்க்கும் சத்தி னிபாதர்க்கும் நிகழ்த்தியது,—முதல்வன் பெருங்கருணையாளனாகலின் முறையி னுலகத்தோ ருய்தற்பொருட்டுஞ் சத்திநிபாதமுடையா ருய்தர் பொருட்டும் திருவுளத்திற் கருதிப் பொருள் பலபடத்தோன்றுஞ் சூத்திரமு மதனை யவ்வாறாகவொட்டாது தெளித்துரைக்கும் பாஷியமும் போல முறையே வேதமும் சிவாகமமும் செய்யப்பட்டன வாகலான்,—ஆரணநூல்பொதுச் சைவமருஞ்சிறப்பு நூலாம்-அவையிரண்டு முறையானே பொதுநூல் சிறப்பு நூலெனப்பட்டுச் சூத்திரமும் பாஷ்யமும்போல வேறுவைத் தெண்ணப்பட்டன.—நீண்மறையி னொழிபொருள் வேதாந்தத் தீதில் பொருள்கொண் டுரைக்குநூல் சைவம் - இங்ஙனம் வேதத்துட் கூறும் கருமகாண்டப் பொரு

ாகட் கின்றியமையாது வேண்டப்பட் டெஞ்சி நின்றனவாம் பொருள்களையும் வேதமுடிபாய உபநிடதத்தின் சாரமாயுள்ள பொருள்களையும் வேறெடுத்துக்கொண் டினிது விளக்குவது சிவாகம மாதலான்,— பிரநூ -நிசம்பூர்வம்-இதனின் வேறாகிய வேதத்தின் பூருவபக்கப் பொருளைச் சொல்லுமேனை நூல்களெ ல்லாம் பூர்வபக்க நூலெனவும்,— சிவாகமங்கள் சித்தாந்தமா தம்-அதன் சித்தாந்தப் பொருளைச் சொல்லுவதாய சிவாகமம் சித்தாந்த நூலெனவு மாம்.

சிவாகமத்தின் சிறப்புக் கூறியவாறு.

இவை மூன்றுசெய்யுளானும் அவ்வவ் நூல்களதியல்பு கூறு முகத்தான் மேலது வலியுறுத்தப் பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

இங்ஙனங் கூறியவாகமத்திலே சிவன் ஞானாசாரியனை யதிட்டித்து மலங்களைநீக்கி முத்தியடைவிப்ப னென்று சொல்லியிருக்க வந்தவுண்மை யறிகிறார்க ளில்லையென் றுணர்த்துகின்றார்.

சித்தாந்தத் தேசிவன்றன் றிருக்கடைக்கண்சேர் ச் செனநமொன்றி லேசிவன் முத்தராக,வைத்தாண் மலங்கழுவி ஞானவாரி மடுத்தானந் தம்பொழிந்து வ நம்பிறப்பையறுத்து, முத்தாந்தப் பதமலர்க்கீழ் வைப்பனென்று மொழிந்திடவு முலகரெல்லா மூர்க்க ாகிப், பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப்பா ப் பெருங்குழியில் வீழ்ந்திடுவ ரிதுவென்னபிராந் தே. (௧௬)

(இ-ள்.) சித்தாந்தத்தே சிவன்றன் றிருக் கடைக்கண் சேர்த்தி — ஆகமத்தின் விசுவாசத்தை யுடையவான்மாக்களை முத்தி யடைவிக்கையின் பொருட்டுச் சிவன் றன் றகாருண்ணியத்தினாலே ஞானாசாரியனை யதிட்டித்துத் திருநோக்காகிய தீக்கையைச் செய்து,

செநந மொன்றிலே சீவன்முத்தராகவைத் தாண்டு மலங்கழுவி — மந்திர சாமர்த்தியத்தாலே வாகீசுர வாகீசுரி யிடத்திலே சனிப்பித் தநேக சன்மத்துக்குக் காரணமாகிய கன்மமுதலியபாசங்களைச் சோதித்துப் போக்கி யெடுத்ததொரு சனனத்திலே தானே வருத்தமறச் சீவன்முத்தி தன்மையை யடைவிப்பது.

ஆன்மாக்களுக்கு மலம்போனது காணுதபடியாலே மலக்ஷயம் பிறந்ததின்று மெனில்? மந்திரமூர்த்திடைக் காணுதிருக்கவும் விடம்போகக் கண்டோமே! அதுபோலக் கன்மாதியுந் தமது பலங்கெட் டான்மாக்களை வாதைபண்ணு தெனவறிக.

இதன்றி யொருவன் றீக்கை பெறுமுன்னுந் துலையினிறுக்கப் பின்புநிறுத்தா லதனினுங் குறையுமென் றுகம மோதுகையாலுமறிக.

ஞானவாரிமடுத்து — இந்த சீவன்முத்தனைச் சுவானந் தானுபூதியாகிற சமுத்திரத்திலே யநவரதமும் முழுகும்படி யமுத்தி,

ஆநந்தம் பொழிந்து — ஆநந்தமாக்கட லாடுசிற் றம்பலம்"என்றார். இவனுக்குச் சிவத்துவாபி வியத்தியை நன்றாகப் பிரகாசிப்பித்து, அஃதாவது ஆனையினிடத்திலே வியாபித்திருந்த மதமானது பருவம் வந்தவாறே புறம்பே புறப்பட்டும் பிரகாசித்தலை பொழித லென்றார். இத்தன்மை யுடையனுதலால்,

வரும்பிறப்பை யறுத்து — அனலிடைப் பட்ட வித்தானது மேலு முளைத்தற்குச் சாமர்த்திய மில்லாதவாறு போல இவனு மீண்டு மொருசரீர மெடுப்பி யாத படியே பண்ணி.

முத்தாந்தப்ப தமலர்க்கீழ் வைப்பன் — முத்திக்கு முடிவாகிய சாயுச்சியமாகிற தனது பாதமாகிற திருவடிக்கீழ் வைப்பன். பாதமாகிற மலரைப் பதமலரென்றார்.

என்றுமொழி ந்திடவும் — சிவ னிப்படி யான்மாக்களுக் கனுக்கிரகஞ் செய்வனென்று திவ்யாகமங்கள் முறையிடுகையிலு மதனையறியாமல்,

உலகரெலா மூர்க்கராகி — பிரபஞ்சத்தி லுண்டான வான்மாக்களிந்தச் சித்தாந்த சாத்திரத்தி னுதிக்கத்தினையு முண்மையினையு மறியாம லிவ்வர்ழக்கையின்கண் மயக்கத்தைப் பொருந்தி மூர்க்கரானவர்கள் வியாபாரத்தைப் பொருந்தி நூலறிவின்றித் திரிவர்கள். அஃதெ ன்போலென்னில்?

பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றி — பித்துக்கொண் டவனைப் போலப் பரசமயிகள் சாத்திரமாகிய பசுசாத்திரத்தி லொருப்பட் டிந்தச் சித்தாந்தத்தை நிந்திக்கையால்,

பாவப்பெருங் குழியில் வீழ்ந்திடுவ திதுவென்ன பிராந்தே. — ஆகமநிந்தை யதிபாதகமாதலால் ரௌரவமுதலிய நரகத்திலே விழுந்து நெடுங்காலங் கிடந்து நரகசேடம் புசித்தற்பொருட்டு மீளவுஞ் சனனத்துக் கேதுவாகிறார்கள்; இதுவென்ன மயக்கந்தான். எ-று.

சிவன் - எழுவாய், வைப்பன் - பயனிலை.

இதற்குச் சிவதருமோத்தரம் கிரணம் ரௌரவம் வாலஞான ரத்தினாவலி இரத்தினத்திரையத்து மறிக. (கசு)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

——o——

மேல் சித்தாந்த முத்தியே முத்தியென்பது கூறுகின்றது.
சிவன்றன் றிருக்கடைக்கண்சேர்த்தி மலங்கழுவி ஞானவாரி
மடுத் தாகந்தம்பொழிந் தாண்டுவரும் பிறப்பையொழித்து சன
னமொன்றிலே சீவன் முத்தராகவைத்து மூத்தாந்த பதமலர்க்
கீழ் வைப்பனென்று சித்தாந்தத்தே மொழிந்திடவு முலகரொ
ல்லா மூர்க்கராகிப் பித்தாந்தப் பெரும்பிதற்றுப்பிதற்றிப் பா
வப் பெருங்குழியில் விழுந்திடுவ ரிதுவென்னப்பிராந்தே - என
மாறிப் பொருளுரைக்க - சிவனுசாரியனாக வந்து நின்று பக்கு
வான்மாக்களைக் கருணாகடாக்ஷ * வீக்ஷணம் பண்ணிக் கருணா
ஜலத்தினாலே யஞ்ஞானமாகிய வழுக்கைக் கழுவிச் சிவஞான
சமுத்திரத்தை யான்மாவினிடத்திலே பிரகாசிப்பித்துச் சிவா
நந்தமழையை யொழிவறப் பெய்து தனது வசமாக்கி யிரண்
டறக்கலந் தினிமேல் வருஞ் ஜநநத்துக் கேதுவான சஞ்சி தா
காமியங்களைக் கெடுத்து தேகத்திலே பிராரத்தம் புசிப்பதாக
ஜீவன்முத்தனாக வைத்துத் தேகாந்தத்திலே சர்வதரிசன முத்
திக்கு முடிவாயிருக்கிற தம்முடைய பாதமலர்க்கீழ் வைப்ப
னென்று சிவாகமத்திலே † சங்கோத்தரங்களுடனே விளங்க
க் கூறியிருக்கவும், உலகவாழ்வே பரமப் பிரயோசனமாக மதி
ப்பவரெல்லாந் தங்கள் மயக்கறிவுக் கேற்ற ‡ சுஷ்க தர்க்கங்
களைப் பெரிதாகக் கூப்பிட்டுப் பாவமிகுதியினாற் பெரிதாகிய நர
கக்குழியிலே விழுவர்கள்; இந்தப் பிராந்தருக் கென்ன சொல்
லப்போகிறோமென் றிசன்பொருள்

* வீக்ஷணம் - பார்வை, † சங்கோத்தரம்-வினாவிடை,
‡ சுஷ்கம் - வீண், அதாவது அடியையே மலராகச் சொல்
லுவது போல்.

பதமென்றது-சிவம்.

மலரென்றது - § ரூபகம். அஃதாவது, சிவஞானமணம், சிவாநந்தத் தேன்.

சிவஞானாநந்தாநுபவி யான்மா.

கீழ்வைப்ப னென்றது சிவனை யான்மா வியாபியான், ஆன்மாவைச் சிவன் வியாபித்திருப்ப னென்றதை யறிவித்தது.

ஆண்டென்பது சிவ ஞானாநந்தாநுபவத்தைக் கொடுத்து முத்தியிலுஞ் சிவ னான்மாவை ரக்ஷிப்பனென்ப தெனவறிக.

§ ரூபகம் - ஓரலங்காரம்.

இதனாற் சிவசமவாதிகள் முத்திபரிபக்கமே யான்மா சிவனாகிலமென்றும், சிவன் ரக்ஷிப்பனென்றும், முத்தியிலே ஸ்வதந்திரனே! சிவனால் ரக்ஷிக்கவுந் தேவையில்லை, ஞானக்கிரியாபிவியத்தி யொழிந்து சிவாநந்தாநுபவ மில்லையென்பதை நிராகரிக்கப்படுகிறது.

𑌤𑌥𑌾𑌹𑌃 — 𑌪𑌶𑍂𑌨𑍍 𑌪𑌾𑌶𑌾𑌂𑌶𑍍𑌚 𑌉𑌤𑍍𑌕𑍍𑌰𑌾𑌣𑍍𑌨𑍍 𑌪𑌾𑌤𑍀𑌶𑌿𑌵𑌶𑌿𑌰𑌃𑌸𑌂𑌶𑍍𑌰𑌿𑌤𑍇। 𑌇𑌤𑌿.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—0—

சித்தாந்தத்தின் சிறப பு ணர்த்து கின்றார்.

சித்தாந்தத்தே - சிவாகமாசார வான்களிடத்திலே,—திருக்கடைக்கண் சேர்த்தி - தனது நிட்சாரூபக் கிரியா சத்தி சங்கற்பம் பண்ணி,—ஞானவாரிமடுத் தானந்தம் பொழிந்து - சிவத்துவக்குறிச் சிற்சத்தி சமுத்திரத் தழுத்திச் சிவத்துவாபிவியத்திலட்சண சிவானந்த மனுபவித்து,—முத்தாந்தப் பாதமலர்க்கீழ் வைப்பன் - நின்மல நிரதிசய தன்சத்திசமான சத்திமான்க ளாக்குவன்,—இதுவென்னபிராந்தே - இதுவேதுமயக்கம்.

மற்றைய வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

இத்துணைப் பெருமைத்தாகிய சித்தாந்தநெறி, வீடுபேற்றிற்கு நேர்வழியென உபமன்னியன் அகத்தியன் முதலிய உயர்ந்தோரெல்லாம் வாயுசங்கிதை சிவகீதை முதலியவற்றுள் விரித்தெடுத்தோதவும், அதனைத் தெளியமாட்டாது தத்தமக்கு வேண்டியவாறெல்லாந் தூபிமானங்கொண்டு பிதற்றுமவ்வுலகத்தார் என்கடவரென்பதாம்.

ஔத்திராதியென்றாற்போல முத்தியந்தம் முத்தாந்தமென் மரீஇயிற்று.

சித்தாந்தம் சித்தமுடிபு, பெரும்சித்தென்பதாம்.

நிரம்பவழகியருரை வருமாறு.

சத்திநிபாதம் பதிந்த பக்குவான்மாக்களை சிவன் இரக்ஷிப்பனென்றதென் னம்பு, ஆன்மாக்களிலே விசேஷவான்கள் குருவாய் இரக்ஷிக்குமதொழிந்து சிவ னவரம் மனுதீத கோசரனாயிருக்கையால் அவன் குருமூர்த்தமாகான் என்ற பாடாணவாதியை நோக்கி யருளிச்செய்கிறார்.

சித்தாந்தத்தே சிவன்றன்றிருக்கடைக்கண் சேர்த்திச் செனனமொன்றிலே சீவன்முத்தராகவைத் தாண்டு மலங்கழுவி ஞானவாரிமடுத் தானந்தம்பொழிந்து வரும்பிறப்பையறுத்து முத்தாந்தப் பாதமலர்க்கீழ் வைப்பனென்று மொழிந்திடவு முலகமெல்லாம்-அன்வயம் - சிவன்றன் றிருக்கடைக்கண் சேர்

த்துச் சனனமொன்றிலே ஜீவன்முத்தராக மலங்கழுவி ஞான வாரிமடுத் தானந்தம் பொழிந்து வரும்பிறப்பை யறுத்து முத்தாந்த பாதமலர்க்கீழ் வைப்பனென்று சித்தாந்தத்தே யுலகெல்லா மொழிந்திடவும் என்று பொருள்கூட்டுக - முன்சனனங்களிற் செய்த தபோபலத்தாலே இருவினை யொத்துச் சத்திநிபாதம் பதிந்த பக்குவான்மாக்களைப் பரமேஸ்வரன் தனது காருண்ணியத்தினுலே திருக்கண் சாத்தியருளி அந்தச் சனனந்தன்னிலே சரீரத்திலே கூடியிருந்து புசிக்கச்செய்தே அதிற் தாக்கறநிற்கிற வுண்மையையுந் தரிசிப்பித்து அடிமைகொண்டருளி ஆணவமலத்தா லுண்டாகிய அஞ்ஞானத்தையும்போக்கி ஞானசாகரத்திலே யழுத்தி சிவபந்தத்தையு நிறைத்து அநாதியே தொன்றுதொட்டு வருகிற சனனங்களையும் போக்கி முத்திகளுக்கெல்லா முடிவாயிருக்கிற தனது சிர்பாதத்தின்கீழே வைப்பனென்று ஆகமத்திலே யருளிச்செய் திருக்குமென்று உயர்ந்தோர்கள் எல்லாஞ் சொல்லுகைச்செய்தேயும் ஆன்மாக்களின் விசேஷவான்களே ஆசாரியமூர்த்தியென்று,—மூர்க்கராகி-சாத்திரஞ் சொன்னவழி ஒன்று மறியாமல் மூடராய்,—பித்தாகத் பெரும்பிதற்றுப்பிதற்றி - பித்த்ரது சுபாவம்போல அறிவும் அறியாமலு மாயிருக்கிற பெரியவார்த்தைகளையுஞ்சொல்லி,—பாவப்பெருங்குழியில் வீழ்ந்திடுவர் - துக்கங்களுக் கேதுவான பிறப்பென்கிற குழியிலே விழாநிற்பர்கள்,—இதுவென்ன பிராந்தே - இந்த மதிமயக்க மேதென் றறிந்திலோம்.

என்னவே ஆகமங் குருவே சிவமென்று சொல்லுமென்பது கருத்து. இதற்குப் பிரமாணம் சிவஞானபோதம், அ - சூ, ௬ வெ, "அறிவிக்கவன்றி யறியாவுளங்கள், செறியுமாமுன்பின் றுறைக—ணெறியிற், குறையுடைய சொற்கொள்ளார் கொள்ப

லத்திவ்வீடென், குறைவில்சகன் சூழ்கொள் பவர்க்கு" என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, ஆன்மாக்களுடைய பக்குவத்திலே சிவனே ஆசாரிய மூர்த்தியாக வெழுந்தருளித் திருக்கண்சாத்தி அந்த சனனத்திலே ஜீவிக்கையிலே முத்தனாயிருக்கத்தக்க வுண்மையிலேவைத்து இரக்ஷித்து மலத்தையும்போக்கி ஞானசாகரத்திலே யழுத்தி சிவானந்தத்தையும் நிறைத்து அநாதியே வருகிற சனனதொந்தங்களையு மறுத்துத் தனது திருவடித்தாமரையின்கீழே வைப்பனென்று ஆகமத்திலே யருளிச்செய்யுமென்று பெரியோர்கள் சொல்லுகைச் செய்தேயும், சாத்திரகெதியையு மறியாமல் மூடராய்ப் பித்தரைப்போல வறிவுமறியாமலுமாய்ப் பிதற்றிக்கொண்டு திரிந்து நரகமாகிய பெரியகுழிகளிலே விழாநிற்பர்களென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—0—

சித்தாந்தத்தே சிவன்றன் றிருக்கடைக்கண் சேர்த்தி-சிவஞானாசாரியமூர்த்தமா யெழுந்தருளிப் பக்குவான்மாக்களுக்குச் சனனமொன்றிலே திருநோக்கு முதலிய தீக்ஷைசெய்து,—ஞானவாரிமடுத் தானந்தம் பொழிந்து - ஞானசமுத்திரத்தின் மூழ்குவித்துச் சிவானந்த மேலிடச் செய்வதற்கும்,—சென்னமொன்றிலே - இவ்வொரு பிறப்பிற்றானே,—மலங்கழுவி-மும்மலவழுக்கைநீக்கி,—சீவன் முத்தராகவைத்து-சீவன்முத்தராகச் செய்து,—ஆண்டுவரும் பிறப்பையறுத்து-அவ்விடத்து மேல்வரும் பிறவியை யொழித்தற்கும்,—முத்தாந்தப் பாதமலர்க்கீழ்வைப்பன்-முத்தியந்தத்திற் றிருவடிக்கீ ழடங்கி நிற்கச்செ

ய்தற்கும் வழியாகலான்,—என்று சித்தாந்தத்தே யுலகரெலா மொழிந்திடவும் - இத்துணைப் பெருமைத்தாகிய சித்தாந்தநெறி வீடுபேற்றிற்கு நேர்வழியென உபமன்னியன் அகத்தியன்முதலிய உயர்ந்தோரெல்லாம் வாயுசம்ஹிதை சிவகீதை முதலியவற்றுள் விரித்தெடுத்தோதவும்,—மூர்க்கராகிப் பித்தாந்தம் பெறும் பிதற்றுப் பிதற்றி - அதனைத் தெளிடமாட்டாது தத்தமக்கு வேண்டியவாறெல்லாந் துரபிமானங் கொண்டு பித்தமுடிவாகிய பெரும்பித்தாற் பிதற்றி,—பாவப் பெருங்குழியில் வீழ்ந்திடுவரிதுவென்ன பிராந்தே - அப்பாவத்தா னரகத்தில விர்வர் இதுவென்ன மயக்கம்.

மறைஞானதேசிகர் உரை

இப்படி யெல்லா வான்மாக்களுஞ் சிவனுக்குச் சமமான குணத்தை யடைந்திருப்பர்களே யென்னில்? அநேகேசுரத்வம் வர வதனைக் குறித்து எல்லாத்தையு மறியுந் தன்மையுமெல்லா முண்டாக்குந் தன்மையுஞ் சர்வான்மாக்களுக்கும் அனுக்கிரகஞ் செய்யு முறைமையுஞ் சிவனுக்கே யியல்பாக வுள்ளதென் றுணர்த்துகின்றார்.

இறைவனவான் ஞானமெல்லாமெல்லா முதன்மையனுக் கிரகமெல்லா மியல்புடையானியம்பு, மறையாக மங்களினு லறிவெல்லாந்தோற்று மரபின்வழி வருவோர்க்கும் வாராதோர்க்கும், முறைமையினு லின்பத்துன் பங்கொடுத்தலாலே முதன்மையெலா மறிந்துமுயங் கிரண்டுபோகத், திறமதனல் வினையறுக்குஞ் செய்தியாலே சேருமனுக் கிரகமெல்லாங் காணுதுநாஞ் சிவன்பால். (கஎ)

(இ-ள்.) இறைவனாவான்

பரமகர்த்தா வானவன் யாவனெனில்?

எல்லா ஞான மெல்லா முதன்மை யனுக்கிரக மெல்லா மியல்புடையான்

சர்வஞ்ஞத்துவத்தையுஞ் சர்வகர்த்திருத்துவத்தையுஞ் சர்வானுக்கிரகத்தையு மாக விம்மூன்றினையு மொருவராற் றருதலின்றித் தனக் கியல்பாக வுடையவன் யாவனொருவன் அவனே பரமகர்த்தா. மேற்றொகுத்த முறையானே வகுத்துணர்த்து கின்றது.

இயம்பு மறை யாக மங்களினா லறிவெலாந்தோற்றும்

சிவன் சர்வஞ்ஞனென் றறியப்படும். அஃதெக் காரணத்தா லென்னில்? வேதாகமங்களை யுள்ளபடியறிந்து சொல்லுகையினாலே. "கணிதத்து மந்திரத்துங் காணக் கசடின்மை-யெணுகவிவை போன்மற் றெல்லாம்" எனவறிக. சர்வகர்த்தா வென்பதற்குப் பிரமாணம் யாதெனில்? அன்னுவயத்தாலே யவன் கருத்தாவென் றறிக. பெண் முதலா காரியத்தைப் பெற்று என்பதனாலறிக.

இதற்குப் பார்க்கியை மிருகேந்திரம் வாயவ்ய சங்கிதையினாலறிக.

மரபின்வழி வருவோர்க்கும் வாராதோர்க்கும் முறைமையினா லின்பத்துன்பங் கொடுத்தலாலே முதன்மை யெலா மறிந்தும்

சிவன் சர்வகர்த்தனென் றறியப்படும். அஃதெக்காரணத்தா லெனில்? ஆன்மாக்கடோறுந் தானன்னியமாய் நிறைந்துநின்றவ னருளிச்செய்த திவ்யாகமங்களிற் சொன்ன வழியே புண்ணியஞ் செய்யுமவர்களுக்கு மதன்வழி வாராமற் பாவஞ் செய்வோர்க்கு மந்தந்த வினைவழி பிறழாம லிருவினைப் பலன்களையுங் கொடுக்கையாலே யிவனுக்குச் சர்வகர்த்தத்துவ முண்டென் றறிவிக்கப்பட்டது. சர்வகர்த்த னென்பதற்குப் பிரமாணம்.

"அன்னுவய வெதிரேகத் தாலவனறிவை- யுன்னுக வேது கருத்தா வுற்று" எனவறிக.

இதற்குப் பராக்கியை மிருகேந்திரத்து மறிக.

முயங்கிரண்டு போகத் திறமத னால் வினையறுக் குஞ் செய்தியா லே சேருமனுக்கி ரகம்

ஆன்மாக்கட்கு அபரபோகம் பரபோக மாகிய விரண்டினையு மவர்கள்செய்த வினைக்கீடாக வந்தந்தத் தேசத்திலே யிருந்து துய்ப்பித்து அதுதொலைந்தவாறே பரமுத்தியை யளிக்கையாலு மிவன்சர்வானுக்கிரகனென்னு மதுவு மறிந்தோ மாதலால்,

எல்லாங்காணு துநாஞ் சிவன்பால்.

இங்ஙனங் கூறிய சர்வஞ்ஞத்தவஞ் சர்வ கர்த்திருத்துவமுஞ் சர்வானுக்கிரகமு மாக விம் மூன்றுஞ் சிவனிடத்திலே யுண்டாகையா லவனே பரமகர்த்தா. எ-று.

இதற்கு மிருகேந்திரஞ் சிந்தியவிசுவத்து மறிக.

அநந்தாதிகளுங் கர்த்தாவல்லோ வெனில்? "ஆக்கையுடைய வதிகாரியர்க் கெல்லா - மாக்கையிலானேபதி யாவான்" "முன்படைப்ப ராக்கையிலா மூலனுயிர்கட்கவனாற் - பின்படைப்ப ராக்கையுற்பெற் றார்." என்பதனாற் பரமசிவ னிவர்களுக்குப் படைப்பு முதலிய தொழிலைச் செய்யென்று கற்பித்துப்பின் பவனேவலாற் பஞ்ச கிருத்தியங்களையுஞ் செய்வார்களென வறிக.

இதற்குப் பௌட்கரத்தும் வாயவ்விய சங்கிதையினு மறிக. (௧௭)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் சர்வஞ்ஞத்துவ சர்வ கர்த்திருத்துவ சர்வானுக்கிரஹத்துவ முடையவனே பரம கர்த்தாவாகையா லிந்த லக்ஷண

ங்களெல்லாஞ் சிவனுக்கே யுள்ளதாகக் காணப்படுகையால் சிவனே பரமகர்த்தாவென்று கூறுகின்றது.

இறைவனாவா னெல்லாஞான மெல்லாமுதன்மை யநுக்கிரகமெலா மியல்புடையான்-சகத்து ஸ்வாமியாகிறவ னெல்லாவறிவையு மெல்லாத்துக்குங் கர்த்தாவாகையு மெல்லாத்தொழிலு மநுக்கிரகமே யானவையையும் ஸ்வபாவமாயுடையவன்.

அதுநாஞ் சிவற்கே - நாங்காண்பதுஞ் சிவற்கே. இந்தலக்ஷணங்கள் நாஞ் சிவனிடத்திலேயே காண்கிறோமாதலால் சிவனே பரமகர்த்தா, இந்த லக்ஷணஞ் சிவனிடத்திலே கண்டதெவ்வா றென்னில்?

இயம்புமறை யாகமங்களினு லறிவெல்லாந்தோற்றும் வளவின் வழி வருவோர்க்கும் வாராதோர்க்கு முறைமையாலின்பத் துன்பங் கொடுத்தலாலே முதன்மையெல்லா மறிந்துமுயங் கிரண்டுபோகத் திறமதனால் வினையறுக்குஞ் செய்தியாலே சேருமநுக்கிரகமெல்லாங் காணுதும் - சிவன் சொல்லப்பட்ட வேதாகமங்களினுலே சர்வஞ்ஞனென்ப தறியப்பட்டது. அந்த வேதாகமங்களின்படியே நடந்தபேர்க்கும் நடவாதபேர்க்குங் கிரமத்திலே சுகத்தையுந் துக்கத்தையும் புசிப்பிக்கையினுல் சர்வ கர்த்தாவென்ப தறியப்பட்டது. புசிக்கப்பட்ட சுகதுக்க போகங்களினுல் புண்ணிய பாபங்களையொழிந்து, புண்ணிய பாபங்களொழியவே சத்திநிபாத முண்டாம், சத்திநிபாதத்திலே யநுக்கிரகம்பண்ணுவர். ஆதலால் சிவனே பரமகர்த்தாவென்பது சித்தமென் றிதன்பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

சிவன் சர்வஞ்ஞன் சர்வகர்த்தா சர்வாநுக்கிரகன் என்று சாற்றுகின்றார்.

எல்லாஞானம் - சர்வஞ்ஞத்துவம்,—எல்லாமுதன்மை-ஸர்வ கர்த்திருத்துவம்,—எல்லா மனுக்கிரகம் - சர்வானுக்கிரகத்துவம். இம்மூன்றும்,—இயல்புடையான் - வேதாந்திகள் சைவரிற் சிலர் சாற்றுந் தடத்தலக்ஷணமன்றிச் சுத்த சைவ சித்தாந்திகள் சொல்லுஞ் சொரூப லக்ஷணமாக வுடையன்.— இறைவனாவான் - சர்வசகத் கர்த்தாவானவன்,—இடம்படுமறை யாகமங்களினால் அறிவெல்லாந் தோற்றும்-சர்வஞ்ஞத்துவ மனுமிக்கப்படும்.—வரைவின்வழி வருவோர்க்கும் வாராதோர்க்கும்—விதிநிஷேதப்படி நடப்போர்க்கும் நடவாதோர்க்கும்;—முறைமையினா லின்பத் துன்பங் கொடுத்தலாலே முதன்மை யெல்லாமறிந்தும் - சர்வகர்த்திருத்துவ மனுமித்தேம்,—முடங்கிரண்டு போகத்திறமதனால் - அனுபவிக்கப்படு மிருசுகதுக்க வேதனையினாலே,—வினையறுக்குஞ் செய்தியாலே - புண்ணியபாவங்களைப் போக்கும் பரிசினால்,—சிவற்கே-சிவனுக்குத்தானே,—சேருமனுக்கிரக மெல்லாம் - பொருந்துஞ் சர்வானுக்கிரகம்,—காணுதுநாம் - அனுமானித்தறிவோம்.

——

சிவஞானயோகியருரை வருமாறு.

——0——

முற்றுணர்வு முதலிய மூன்றுஞ் சிவபிரானுக்கே யுளவென்பது மேற்கூறியவாற்றாற் பெறப்பட்ட மறையாகம மியம்புதன்முதலிய மூன்றேதுவானும் முறையே யறியக்கிடத்தலான, அங்ஙன மிம்மூன்றுகுண மியல்பாகவுடைய வம்முதல்வன் ஞானமொன்றிலே திருக்கடைக்கண் சேர்த்தி ஞானவாரிமடுத் தானந்தம் பொழிதற்கும் அச்சனன மொன்றிலேதானே மலங்கழுவிச் சீவன்முத்தராக வைத்தாண்டு வரும்பிறப்பை யறுத்தற்கும் பாதமலர்கீழ் வைத்தற்கும் வல்லவனாவானென்பதாம்.

இறைவனென்றது வல்லவனென்னுந் துணையாய் நின்றது. பலசனனங்களினு மாகாதவற்றையெல்லாம் ஒருசனனத்திலேதானே யங்ஙனமாகச் செய்யுமாறு யாங்ஙனமென்பாரை நோக்கி யவ்வாசங்கைநீக்கி மேலதனை வலியுறுத்தியவாறு.

இதற்குப் பிறரெல்லாம் ஓரியைபன்றுதன் மேலுங் கூறிய துகூறலென்னும் வழுப்படவைத்துரைப்ப.

இவை யிரண்டுசெய்யுளானுஞ் சைவத்திறத் தடைதற் சிறப்புக் கூறப்பட்டது.

நிரம்பவழகியருளை வருமாறு.

எண்ணிறந்த கர்த்தாக்களில் சிவனே கர்த்தாவென்றதற்குப் பிரமாண மென்னவோ வென்ற மாணுக்கனை நோக்கி யருளிச்செய்கிறார்.

இறைவனுவான் - கர்த்தாவென்று சொல்லப்படுகிறவன்,— ஞானமெல்லா மெல்லாமுதன்மை யனுக்கிரகமெல்லா மியல்புடையான் - சர்வஞ்ஞத்துவம் சர்வகர்த்தத்துவம் சர்வானுக்கிரகம் என்று சொல்லப்பட்டவையிற்றை அநாதியே தனக்கென்ன வியல்பாகவுள்ளவன். இந்த முறைமைகளை யுடையவனை யறியும்படியெப்படி யென்னில்?—இயம்புமறை யாகமங்களினுலறிவெலாந் தோற்றும் - முன்னூல் வழிநூலின்றியே தனதிச்சையாலே அவனருளிச் செய்யப்பட்ட வேதாகமங்களினுலே அவனது சர்வஞ்ஞத்துவ மறிந்தோம்,— வனாவின்வழி வருவோர்க்கும் வாராதோர்க்கும்- அவ னியமித்தவழியே வருகிறவர்களுக்கும் அந்தவழி வாராதவர்களுக்கும்,—முறைமையினுலின்பத் துன்பம் கொடுத்தலாலே முதன்மையெலாமறிந்தும்-அவரவர்செய்த கன்மத்துக் கிடாகச் சுகதுக்கங்களைக் கொடுக்

கையாலே அவனது சர்வ கிருத்யமெல்லா மறிந்தோம்,—முப்பங்கிரண்டு போகத்திறமதனுல் வினையறுக்குஞ் செய்தியாலே-அவரவர்க்குப் பொருந்தப்பட்ட சொர்க்க நரகங்களிலுண்டாகியவின்பதுன்பங்களைபுசிப்பித்துத் தலைப்பிக்கிறமுறைமையாலே,—சேருமனுக்கிரகமெல்லாங் காணுதும் - பொருந்தப்பட்ட சர்வானுக்கிரகமெல்லா மறிந்தோம்,— நாஞ்சிவற்கே - இங்ஙனஞ் சொல்லிவந்த முறைமைகளெல்லாம் நாம் சிவனுக்கேயுள்ளதென் றறிந்தோம், ஆகையால் சிவனே கர்த்தா.

இதனுற் சொல்லியது, சர்வஞ்ஞத்துவமும் சர்வ முதன்மையும் சர்வானுக்கிரகமும் இவை மூன்றும் அநாதியே யியல்பாக வுடையவனே கத்தாவென்றும், முன்னூலின்றியே வேதாகமங்களைத் தானே யருளிச்செய்கையாலும், அந்த நூலின்வழி வந்தோர்க்கு இன்பத்தையு மந்த நூலின்வழி வாராதவர்களுக்குத் துன்பத்தையுங் கொடுக்கையினுலும், இப்படி இன்பத்துன்பங்களைப் புசிப்பித்துக் கன்மத்தைத் தலைப்பித்து இரக்ஷிக்கையினுலும், முன்சொன்ன முறைமைகளெல்லாம் சிவனுக்கே யுண்டாயிருக்கையினுல் சிவனே கத்தாவென்னு முறைமையும் அறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

எவ்லாஞான மெல்லாமுதன்மையெல்லாமநுக்கிரசஞ் சிவற்கே நாங்காணுதும் - முற்றுணர் வுடைமையும் முடிவிலாற்றலுடைமையும் பேரருளுடைமையும் ஆகிய மூன்றுஞ் சிவபிரானுக்கெ உளவென்பது,—இயம்புமறைக ளாகமங்களினு லறிவெல்லாந் தோற்றும்- சொல்லுகின்ற வேதாகமங்களை யருளிச்செய்த வேதுவா லெல்லாஞான முடைமை தெரியப்படும்,—மரபின்

வழிவருவோர்க்கும் வாராதோர்க்கு முறைமையினு லின்பத்து ன்பங் கொடுத்தலாலே முதன்மையெல்லாமறிதும் - வேதாகம ங்களினெறிச் செல்லுவோர்க்கும் செல்லாதோர்க்கும் முறை யாற் சுகதுக்க மளித்தலாகிய யேதுவா னெல்லா முதன் மைதெளியப்படும்,—முயங் கிரண்டு போகத் திறமதனுல் வினை யறுக்குஞ் செய்தியாலே யநுக்கிரக மெல்லாஞ் சேரும் - அநு பவியாநின்ற சுகதுக்கமாகிய கூறுபாட்டா லதற்கேதுவாகிய விருவினைகளை நீக்குமேதுவா னெல்லா மனுக்கிரக முடைமை தெரியப்படும்.—இயல்புடையா னிறைவனுவான்-அங்ஙன மிம் மூன்றுகுண மியல்பாக வுடைய வம்முதல்வன் சனனமொன்றி லே திருக்கடைக்கண்சார்த்திஞானவாரிமடுத்து ஆனந்தம்பொ ழிசற்கும் ஜனன மொன்றிலேதானே மலங்கழுவி சீவன்முத்த ராகவைத்து ஆண்டுவரும் பிறப்பை யறுத்தற்கும் பாதமலர் க்கீழ் வைத்தற்கும் வல்லவனுவன்.

இவையிரண்டு செய்யுளானுஞ் சைவத்திறத்தடைதற் சிறப் புக் கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

இப்படி யான்மாக்களுக் குபசரிக்கிற சிவனது சரியை முதலிய தொழிலைத் தொகுத் துணர்த்துகின்றார்.

சன்மார்க்கஞ் சகமார்க்கஞ் சற்புத்ரமார்க்கந் தாத மார்க்கமென்றுஞ் சங்கரனையடை யு, நன்மார்க்க நாலி வைதான் ஞானயோக நற்கிரியா சரியையென்று நவிற் றுவதுஞ்செய்வர், சன்மார்க்க முத்திகள்சா லோக்கிய சாமீப்பிய சாருப்பியசாயுச்சியமென்று சதுர்விதமா,

முன்மார்க்க ஞானத்தா லெய்துமுத்தி முடிவென்பர்
மூன்றினுக்கு முத்திபதமென்பர். (கஅ)

(இ-ள்.) சன்மார்க்கஞ்சகமார்க்கஞ்சற்புத்திரமார்க்கந் தாதமார்க்க மென்றுஞ் சங்கரனையடையு நன்மார்க்கநாலு

சன்மார்க்கமுதலிய நல்லவழிகள் சிவனையடையு மதற்கு நான்கு முத்தரோத்தரந் தாழ்ந்த பலத்தை யுடையன. அவை யாவை யென்னில்?

இவை தான் ஞானயோக நற்கிரியா சரிதையென நவிற்றுவதுஞ் செய்வர்

அவைகளுக் கடைவே ஞானபாதம் யோகபாதம் கிரியாபாதஞ் சரியாபாதமென்று பரியாயப் பெயராகிப் பிரித்துக்கூறுவர்கள்.

தான் - அசை.

இங்ஙனம் கூறிய நாலுக்குப் பெறும்பல மியாதெனில்?

சன் மார்க்க முத்திகள் சாலோக்கிய சாமீப்பிய சாரூப்பிய சாயுச்சிய மென்று சதுர்விதமாம்

சைவரடையு நல்லவழி சன்மார்க்க முதலிய நான்கினுக்கு எதிர் நிறைநிரையாக வவனுடன் புசிக்கப்பட்ட சாயுச்சியமு மவனைப்போல மான்மழுவுங் காளகண்டமுமாயிருக்குஞ் சாரூபமும் அவன் சமீபத்தி லிருக்குஞ் சாமீப்பியமு மவனுலகத்தி லிருக்குஞ் சாலோகமுமாக நான்குவகைப்பட்டிருக்கும்.

முன் மார்க்க ஞானத்தாலெய்து முத்தி முடிவென்பர்

முதற்கண் கூறிய சன்மார்க்கமாகிய ஞானபாதத்தின் வழியின் றனுட்டிக்கு மதனாலடையுஞ் சாயுச்சியமே பரமமான முத்தி,

மூன்றினுக்கு மற்ற மூன்றினையும் பதமுத்தியென் ருக முத்திபத மென் மம் வல்லோர் சொல்லுவார்கள். எ-று. பர்.

உம்மை - எதிரதுதழீஇய வெச்சம்.

தாதமார்க்கத்தை முதற்கூறுது சன்மார்க்கத்தைக் கூறியது தலைதடுமாற்ற மென்னுந் தந்திரவுத்தியாற் கூறியதெனவறிக.

இதற்குக் காமிக முத்தரோத்தர விசிட்ட பலத்துஞ் சிந்திய விசுவத்துஞ் சிவஞான சங்கிரகத்துஞ் சுப்பிரபேதத்து மறிக (கஅ)

சிவாக்ரயோகியருளை வருமாறு.

——0——

மேல் முன்சொன்ன சிவதருமத்தைத் தொகுத்துக் கூறுகின்றது.

சங்கரனை யடையு நன்மார்க்கஞ்சன்மார்க்கஞ் சகமார்க்கஞ் சற்புத்திரமார்க்கங்*தாத்மார்கக மென்றுநாலு-சுகத்தைக்கொடுக்கையினுல் சங்கரனென்னு நாமத்தையுடைய சிவனை யுத்தேசித்துப் பண்ணுந் தருமநெறியானது சத்தியநெறியென்றும் தோழநெறியென்றும் புத்திரநெறி யென்றும் தாதநெறி யென்றும் நாலாம். இதற்குப் பரியாயநாமம்.

அவைதான் ஞானயோக நற்கிரியா சரிதையென்று நவிற்றுவதுஞ்செய்வர் சன்மார்க்க முத்திகள் சாலோக்கிய சாமீப்பியசாரூப்பிய சாயுச்சியமென்று †சதுர்விதமா முன்மார்ககஞானத்தாலெய்து முத்திமுடிவென்பர் மூன்றினுக்கு முத்திபதமென்பர் - சரிதை யநுட்டித்தவனுக்குச் சிவசாலோக்கியமும், கிரியை யனுட்டித்தவனுக்குச் சாமீப்பியமும், போகஞ்சாதித்தவனு

க்குச் சாரூப்பியமும், ஞானசாதகனுக்குச் சாயுச்சியமும் பலம்.
)வையிற்றுள் முனசொன்ன ஞானசாதகனுக்குப் பரமமுத்தி,
ன்றமூன்றுபேருக்கும் பதமுத்தி.

பதமுத்தியாவது, காலாந்தரத்திலே ‡ புநருற்பவ முள்
தெனவறிக.

*நாத - பிதா, †சதுர்விதம் - நாலுவிதம், ‡ புநருற்பவம்-
றுபிறப்பு.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

புறச்சமயமெனும் விருத்தத்திற் சரியா கிரியா யோகஞ்செ
த்தியபின் ஞானத்தாலென்றுசெப்பிய நா லுபாயத்தின் செய்
சிங்கநோக்காற் செப்புகின்றார்.

ஞானயோகாதிகளுக்குச் சன்மார்க்க சகமார்க்காதிப்பே
ஞ் சாற்றப்படுமென்று பொருள்.

சன்மார்க்கச் சொருபஞ் சொல்லுவாம்.

சிவசாஸ்திர சமுற்பன்ன நிராலம்ப சிவபரோக்ஷ ஞானே
காரோப கிருதமாயும், அஃதன்றி நிராலம்ப சிவசாக்ஷாத் கா
)மென்றும் நிராலம்ப சிவாபரோக்ஷ ஞானமென்றுஞ் சாற்றப்
ம் நிராலம்பாங்கி சிவயோகத்திற்கு அங்கசிவ யோகமாகவு
நக்குஞ் சாத்த மனச்சங் கற்பக் கிரியையுண் மணக்கும் அப
ாக்ஷம்போ லபிநயக்குறிச்சாத்த பவுத்த சிவஞானச் சிறப்பு
பிரவாக லக்ஷண நிராலம்ப சிவத்தியான மூலத்தின் முளைத்
தியானத்தின் தசைவருதற்குறி நிராலம்ப சிவசமாதியே
ன்மார்க்கம்.

சகமார்க்கச் சொருபஞ் சொல்லுவாம்.

சிவசாஸ்திர சமுற்பன்ன சாலம்ப சிவபரோக்ஷ ஞானே

பகாரோபகிருதமாயு மதன்றிச் சாலம்ப சிவ சாக்ஷாத்காரமென்றுஞ் சாலம்ப சிவாபரோக்ஷ ஞானமென்றுஞ் சொல்லப்படுஞ் சாலம்பாங்கி சிவபோசத்திற் கங்கச் சிவயோகமாயுமிருக்கும் பிராகிருத மனச்சங்கற்பக் கிரியையுண்மனக்கு மபரோக்ஷம்போ லபிநயக் குறிப் பிராகிருத பவுத்த சிவஞானச் சிறப்புப் பிரவாகலக்ஷண சாலம்பசிவசமாதி மூலசாலம்பசிவத்தியானமேபோகமெனுஞ் சகமார்க்கம்,—

சற்புத்திர மார்க்கம் - சிவபூசாதி,—

தாதமார்க்கம் - சிவசேவாதி,—

சன்மார்க்க முத்திகள் - நல்லமார்க்க முத்திகள்-

சதுர்விதம் - நான்குவகை,—

முன்மார்க்க ஞானத்தால்-சன்மார்க்க சமாதியால்,—

முடிவென்பர் - பரமுத்தியென்பர்.

மற்றைய வெளிப்பொருள்.

சன்மார்க்க முதலிய நான்கினும் பொதுச் சிறப்பாகச் சன்மார்க்கத்திற் சன்மார்க்கம் சன்மார்க்கத்திற் சகமார்க்கஞ் சன்மார்க்கத்திற் புத்திரமார்க்கஞ் சன்மார்க்கத்திற்றாதமார்க்கம், சகமார்க்கத்திற் சன்மார்க்கஞ் சகமார்க்கத்திற் சகமார்க்கஞ் சகமார்க்கத்திற் புத்திரமார்க்கஞ் சகமார்கத்திற் றாதமார்க்கம்,புத்திரமார்கத்திற் சன்மார்க்கம் புத்திரமார்கத்திற சகமார்க்கம் புத்திரமார்கததிற் புத்திரமார்க்கம் புத்திரமார்க்கத்திற்றாதமார்க்கம்,தாதமார்கத்திற் சன்மார்க்கம் தாதமார்க்கத்திற் சகமார்க்கம்தாதமார்க்கத்திற் புத்திரமார்க்கம்தாதமார்க்கத்திற் றாதமார்கம் என்றிப்படி சன்மார்க்கமுதலியநான்குந் தனித்தனி ஸ்ரீகண்டநாத அனந்தேசுர சதாசிவ சாலோக்கியாதி அவரவர் சமபல சாயுச்சியாந்தமுத்திகளாயுஞ் சதாசிவ தத்து

வத்துக்குமேற் சத்தி தத்துவத்தான் சிவதத்துவத்தான் தத்
துவாதீதமாகிய பரசிவத்தான முத்தானங்களிலே பரசிவ சா
லோக்கியாதி சர்வத்திர பரசிவ சமபல பரசிவ சாயுச்சியாந்த
முத்திகளாயிருக்கும் நயிஷ்டிகி தீக்ஷாமுத்திகளாயுங் காலாக்
னியாதி யனுசிருதாந்த புவனபதி சாலோக்கியாதி புவனபதி
சமபல புவனபதி சாயுச்சியாந்த முத்திகளாயிருக்கும் பவுதிகி
தீக்ஷாமுத்திகளாயும் அனந்தவிதமா யிருக்குமெனவறிக.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

அங்ஙனஞ் சைவத்திறத்தடைந்தார் சிவனடியைச் சேர்த
குரிய நெறி தாதமார்க்கமுதலிய நான்குவகைப் படுதலின்,
வையே சரியைமுதலிய பெயரான் வழங்கப்படும். அவற்றிற்
ப் பயன் முறையே சாலோகமுதலிய அபரமுத்தியுஞ் சாயுச்
யமாகிய பரமுத்தியுமா மென்பதாம்.

சாலோக்கிய முதலியவற்றிற்குப் பொருள் வருகின்ற செ
பட்க ணொன்கினும் ஆசிரியர் தாமே மொழிபெயர்த் துரைக்கின்
வாற்று ணறிக

இதனானே, சைவத்திறத் தடைந்தாராற் செலுத்தப்படுஞ்
ியைய முதலிய நான்கும் முத்தி நெறியாதற்கட்படும் பேதமு
அவற்றின் பயனுங் கூறப்பட்டன.

நிரம்பவழகியருரை வரும...

—o—

இப்படி முன்சொல்லப்பட்ட சிவனே ...
ற பொருந்துகிற முறைமை ஒரு பிரகா...

பிரகாரமா யிருக்குமோ வென்ற மாணாக்கனை நோக்கி நாலுபிரகாரமா யிருக்குமென்று மேலருளிச்செய்கிறார்.

சன்மார்க்கஞ்சகமார்க்கஞ் சற்புத்திரமார்க்கந் தாதமார்க்கமென்று சங்கரனையடையு நன்மார்க்க நால்வகைதான்-சன்மார்க்கமென்றுஞ் சகமார்க்கமென்றும் நல்ல புத்திரமார்க்கமென்றும்தாதமார்க்கமென்றும்பரமேஸ்வரனை பொருந்துகிற நல்லவழி நாலுவகையாயிருக்கும்,—அவைதான் ஞானயோகக் கிரியாசரிதையென்று நவிற்றுவதுஞ் செய்வர் - ஞானமென்றும் யோகமென்றும் கிரியையென்றும் சரிதையென்றுஞ் சொல்லுவதுஞ் செய்வர்கள். இதுவன்றியும் சன்மார்க்கமுத்திகள் சலோக்கிய சாமீப்பிய சாரூப்பிய சாயுச்சியங்களென்று சதுர்விதமாம்-சன்மார்க்க முதலான நாலு மார்க்கத்துக்கு முத்திகள் சொல்லுமிடத்து சாலோக்கியமென்றும் சாமீப்பியமென்றும் சாரூப்பியமென்றும் சாயுச்சியமென்று நாலு பிரகாரமாயிருக்கும்,—முன்மார்க்கஞானத்தா லெய்துமுத்தி முடிவென்பர்-முன் சொல்லப்பட்ட சன்மார்க்க ஞானத்தாலே பெறுகிற மோக்ஷத்தையே முடிந்த முத்தியென்று பெரியோர்கள் சொல்லுவர்கள்,—மூன்றினுக்கு முத்திபதமென்பர் - நின்ற சாலோக்கிய மாதியாயுள்ள மூன்றினையும் பதமுத்தியென்று பெரியோர்கள் சொல்லாநிற்பர்கள்.

இதனாற் சொல்லியது, பரமேஸ்வரனை ஆன்மாக்கள் பெ... ...ற முறைமை தாதமார்க்க முதலாக நாலுமார்க்கமாயிருக்கு... ...பாதமுதலாக நாலுபாதமா யிருக்குமென்று... ...ாகப் பேறு நாலாயிருக்கு மென்னு முறைமை...

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

———o———

சங்கரனை யடையு நன்மார்க்கம்-அங்ஙனம் சைவத்திறத்தடைந்தார் சிவனடியைச்சேற்தற் குறிய நெறியாவன,—தாதமார்கஞ் சற்புத்திர மார்க்கஞ் சகமார்க்கம் சன்மார்க்க மென்றுநாலு-தாசநெறி யென்று நன்மையாகியபுத்திரநெறி யென்றுத்தோழநெறி யென்று நன்னெறியென்று நான்கு வகைப்படும்.—அவைதான் சரியை கிரியா யோக ஞானமென நவிற்றுவதுஞ்செய்வர்-அவையே சரியை நல்லகிரியை யோக ஞானமென்றபெயரான் வழங்கப்படும்,—சாலோக்கிய சாமீப்ய சாரூப்பியசாயுச்சிய மென்று சன்மார்க்க முத்திகள் சதுர்விதமாம்-அவற்றிற்குபயன் முறையே சாலோக சாமீப சரூப சாயுச்சிய மென்கிற நன்னெறியாகிய முத்திகள் நான்கு வகைப்படும்,—மூன்றிறுக்கு முத்திபதமென்பர்-சலோக சாமீப சாரூமூன்றற்கும் அபரமுத்திக ளாகிய பதமுத்திக ளென்பர்,—முன்மார்க்க ஞானத்தா லெய்துமுத்தி முடிவென்பர்-கருதுகின்ற ஞானவழியா னெய்துஞ் சாயுச்சிய மாகிய பரமுத்தியே முடிவாகிய முத்தியாம்.

இதனுனே சைவத்திறத் தடைந்தாராற் செலுத்தப்படுஞ் சரியை முதலிய நான்கு முத்திநெறியாதற்கட் படும் பேதமும் அவற்றின் பயனுங் கூறப்பட்டன.

மறைஞானதேசிகர் உரை.

மேற் றுதமார்க்க முணர்த்து கின்றார்.

தாதமார்க்கஞ் சாற்றிற் சங்கரன்றன்கோயிற் றலமலகிட் டிலகுதிரு மெழுக்குஞ்சாத்திப், போதுகளு

ங் கொய்துபூந்தார் மாலைகண்ணி புனிதர்க்குப் பலச
மைத்தே புகழ்ந்துபாடித், தீதிரு விளக்கிட்டுத் தி
ருநந்தவனமுஞ் செய்துதிரு வேடங்கண் டாலடியேன்
செய்வ, தியாதுபணி யீரென்று பணிந்தவர் தம்பணி
யுமியற்றுவதிச் சரியைசெய்வோ ரீசனுலகிருப்பர்.
(௧௧௯)

(இ-ள்.) தாதமார்க்கஞ் சாற்றில் — சரியைத் தொழிலாகிய தாதமார்க்கத்தைச் சொல்லின்,

சங்கரன் றன் கோயிற் றலமலகிட்டு லகு திருமெழுக்குஞ் சாத்தி — நித்தியகன்மஞ் செய்து, திருக்கோபுரந் தூலலிங்க மாகையா லதனைவணங்கிப் பலிபீட முதலாயினரை வணங்கி நந்திகேசுர னனுமதிபெற் றுள்ளேசென்று, விதிவழியுண் டாக்கிய தென்னலகாற்றான் மவுஞ்சிப்புல் லாற்றான் திருவலகைக் கொண் டலகிட்டு "அப்புமலரி முடைமலமுந்தின்பதென்னு - மாத்தானுந் துய்ய தல்ல வாசு" என்னுங் குற்றமற்ற கோமயமும் வடித்தெடுத்த ஜலமும் வார்த்து மெழுகிப் பின்பு,

போதுகளுங் கொய்து பூந்தார் மாலை கண்ணி புனிதர்க்குப் பலசமைத்து — தான்வைத்த மரத்தின் பூவே யுத்தமமாதலின் திருப்பள்ளித் தாமமெடுத்துச் சிவனுக்குத் தொடை நெற்றிமாலை விசுமாலை முதலிய பணிப்பற்றிச் சூட்டுவித்து,

புகழ்ந்துபாடி — அவன் கீர்த்தியை வடமொழி தமிழ்மொழி முதலியவற்றாற் பூபாளமுதலிய விராகங்களைக் காலானுகுணமாக வறிந்து தோத்திரஞ் செய்து,

தீதிநிருவிளக் கிட்டு — கொட்டையி னுண்டாகிய தன்றிக் கபிலை முதலிய பசுவினெய்யாற் றிருவிளக்கும் பார்த்து, தீபமெனவே தூபமுங் கூறியதாயிற்று. இதனைப் பின்னற் கூறிய தென்னெனில்?

"விரும்புநல் விளக்குத்தூபம் விதியினி லிடவல்லார்க்கு, கரும்பினிற் சட்டிபோலுங் சடலூர்வீ ரட்டனூரே" இதனுட் டூபத்தைக் கூறியது பலாதிக்கத்தானும், தூபமின்றித் தீபமின்மையானுமென வறிக. "விளக்கிட்டார் பேறுசொல்லின் மெய்ந்நெறி ஞானமாகு, மளப்பில கீதஞ்சொன்னூர்க் கடிகடாமருளுமாறே" எ-ம், "தீபமாலை தூபமுஞ் செறிந்த கையா" எ-ம். அறிக.

திருநந்த வனமுஞ்செய்து — கோட்டுப்பூ முதலிய நால்வகையினையுமுண்டாக்கி, எனவே திருக்கோயில் மடமுதலானவுங் கூறியதாயிற்று.

திருவேடங் கண்டாலடியேன் செய்வ தியாது பணியீ ரென்று பணிந் தவர்தம் பணியுமிபற்றுவது — அதிலெழுந்தருளி யிருக்கு நைட்டிகர் முதலாயினூர்க்குத் தானே வேண்டியதுஞ்செய்து வணங்கி யவரேவினதுங் கேட்டு "எவரேனுந்தாமாக விலாடத்திட்ட திருநீறு கணலாமே" "ஆமாத்தூர்மேயா னடி யாடப்பெற்றனன் பெற்றனன் போந்து போந் திறவாமைக்கே" எனவும் "நிலைபெறுமா றெண்ணுதியே அலருநில்லே" எனவுமறிக.

இச்சரிபைசெய்வோ ரீசனுலகிருப்பர். — இந்தச் சரியைத் தொழில் செய்வோர் சிவன துலகத்தை யடைவர்கள். எ-று.

செய்வோர் - எழுவாய், இருப்பர் - பயனிலை.

இதற்குக் காமிகம் சுப்பிரபேதம் காரணுகிகாரம் சிவதன்மம் சிவஞானபோத சங்கிரக வோதசங்கிரசத்து மறிக. (கக)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

——o——

மேல் * தாசோகம் † பாவிதனான சமயிபண்ணுஞ் சரியை யிலக்கணந் தொகுத்துக் கூறுகின்றது.

இதற்குப் பொருள் வெளி.

* தாசோகம் - நானடிமை, † பாவிதன் - பாவிக்கப்பட்டவன்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

——o——

தாதமார்க்க மூதலன்கினது ஸ்வரூபம் நான்கு திருவிருத்தத்தாற் சொல்லுகின்றார்.

இது வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

——o——

புறத்தொழின் மாத்திரையானே உருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு சரியையெனப்படுமென்பதாம்.

நிரம்பவழகியருரை வருமாறு.

——o——

முன் சொல்லிவந்த நாலுமார்க்கத்தில் தாதமார்க்கத்தின் முறைமை மேலருளிச்செய்கிறார்.

தாதமார்க்கஞ் சாற்றில் - பரமேஸ்வரனுக்கு அடிமைப்பட்டு அடிமைத்திறஞ் செய்கிறவர்களுடைய வழிபாட்டைச்

சொல்லில்,—சங்கரன்றன்கோயிற் றலமலகிட் டிலகுதிருமெழு க்குஞ்சாத்தி - சிவலிங்கப்பெருமா ளுயனர் எழுந்தருளியிருக் கிற திருக்கோயிலுக்குத் திருவலகுமிட்டு விளங்கத் திருமெழுக் குஞ்சாத்தி,—போதுகளுங்கொய்து பூந்தார்மாலைகண்ணி புனை தற்குப் பலசமைத்து- திருப்பள்ளித் தாமங்களுமெடுத்து பொ லிவினை யுடையதாகிய தொடையல் மாலைகோவை கண்ணி தம் பிரானூர்க்குச் சாற்றுகிறபடிக் கீடாகப் பலவாகப் பத்திய ணி,—புகழ்ந்துபாடி-அவனுடைய கீர்த்திகளையுஞ்சொல்லி வா ழ்த்தி,—தீதி றிருவிளக்கிட்டு - குற்றமற்ற திருவிளக்குகளு மிட்டு,—திருநந்தவனமுஞ்செய்து - நன்ருகத் திருநந்தவனங்க ளும் வைத்து,—திருவேடங்கண்டா லடியேன்செய்வ தியாது பணியீதென்று பணிந் தவர்தம்பணியுமியற்றுவது - சிவனுடை ய வடியாராகிய திருவேடத்தாரைக் கண்டால் அடியேன் செ ய்யத்தக்க பணிவிடை யாதென்று தண்டன்பண்ணி யருளிச் செய்ய வேணுமென்றுகேட்டு அவர்களருளிச்செய்த பணிவிடை யுஞ்செய்து முடிப்பது.—இச்சரிதை செய்வோ ரீசனுலகிருப்பர்- இந்தச் சரிதைத்தொழிலைச் சாத்திரஞ்சொன்ன முறைமையி லே செய்து முடித்தவர்கள் சிவலோகத்திலே யிருப்பர்கள்.

இதனூற் சொல்லியது தாதமார்க்கத்துக்குச் சொல்லப்ப ட்ட திருவலகிடுகிறது முதற் சிவனடியாரை வழிபடுகிறது யீரு கச் சொல்லப்பட்ட திருத்தொழில்களை இந்த முறைமையிலே செய்தவர்கள் சாலோக்கியத்தைப் பெறுவர்களென்னு முறை மையை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

தாதமார்க்கஞ் சாற்றில் - தாதநெறியைச் சொல்லுமிடத் து,—சங்கரன் றன்கோயிற்றல மலகிட்டு-சிவபிரா னெழுந்தரு

ளியிருக்கின்ற திருக்கோயினுட் டுருவலகிட்டும்,—இலகு திருமெழுக்குஞ் சாத்தி - விளங்குகின்ற திருமெழுக்கிட்டும்,—போதகளுங்கொய்து- திருப்பள்ளித்தாமங்களெடுத்தும்,—பூத்தார்மாலைகண்ணிப்புனிதற்குப் பலசமைத்து- பொலிவினையுடைத்தாகியமாலை யிண்டைமுதலிய கண்ணிகளுஞ் சிவபிரான் றிருமேனியிற்பொலிவுறும் வண்ணம் பலவாகவமைத்தும்,—புகழ்ந்துபாடி-முதல்வனுடைய புகழ்தற்சரிய மேலாகிய சீர்த்தியினை வாயாற வாழ்த்தியும்,—தீதிறிருவிளக்கிட்டு - குற்றமற்ற பிரகாசம் பொருந்திய விளக்குகளிட்டு,—திருநந்தவனமுஞ் செய்து-அழகிய நந்தவனங்கள் வைத்தும்,—திருவேடங்கண்டா லடியேன் செய்வதியாதுபணியீரென்று பணிந்து-சிவனடியாராகிய திருவேடத்தாரைக் கண்டா லடியேனாற் செய்யத்தக்கபணியாதென் றருளவேண்டுமென்று வணங்கி,—அவர்தம் பணியு மியற்றுவது- அவரருளிச் செய்யும் பணிவிடையும் செய்வதாம்.—இச்சரியை செய்வோ ரீசனுலகிருப்போர் - இச்சரியைத் தொழிலினை யநுட்டித்தோர் சாலோகமாகிய பதமுத்தியைப் பெறுவர் என்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

மேற்புத்திரமார்க்க முணர்த்துகின்றார்.

புத்திரமார்க் கம்புகலிற் புதியவிரைப்போது புகையொளிமஞ் சனமமுது முதல்கொண்டைந்து, சுத்தி செய்தா சனமூர்த்தி மூர்த்திமானுஞ் சோதியையும் பாவித்தா வாகித்துச்சுத்த, பத்தியினு லர்ச்சித்துப் பரவிப்போற்றிப் பரிவினொடு மெரியில்வரு காரியமு

ம்பண்ணி, நித்தலுமிக் கிரியையினை யியற்றுவோர்க
ளின்மலன்ற னருகிருப்பர் நினையுங்காலே. (உ0)

(இ-ள்.) புத்திர மார்க்கம்புகலின்	கிரியாபாத மாகிய புத்திர மார்க்கத்தின் பகுதியைச் சொல்லின்
புதிய விரைப் போதுபுகையொளிமஞ்சன மமுதுமுதல் கொண்டு	பழம் பூவின்றி மணம்பொருந்திய மலர் முதலானது கொண்டு
ஐந்து சுத்தி செய்து	பூதசுத்தி முதலிய பஞ்ச சுத்தியினையுஞ் செய்து.
ஆசன மூர்த்தி மூர்த்தி மானுஞ் சோதியையும்பாவித்தாவாகித்து	ஆதாரசத்தி யாதி சத்திபரியந்தமாக ஆசனம் பூசித்தன்மேல் வித்தியா தேகமாகிற மூர்த்தியை கற்பித்து அந்தமூர்த்திக் கதிட்டாதாவா யிருக்கிற சோதிரூபத்தைத் தியானித் தாவாகித்து
சுத்த பத்தியினு லர்ச்சித்து	சுத்த பத்தியினு லேகாக்கிரமான மனதை யுடைத்தா யிருந்து முன்னற் கூறிய கன்மங்களையு மேற்செய்யுஞ் சேடித்த வுபசாரங்களையுஞ் செய்துமுடித்து.
பரவி	சுவாமீ! தேவரீர் யான்செய்யுங் கிரியையி ந்தச் சிவலிங்கத்திலே பெருந்தருளி யிருந்து கைக்கொள்ள வேணுமென்று வேண்டிக் கொண்டு,
போற்றி	தோத்திரஞ் செய்து
பரிவி னொடு மெரியில்வரு காரியமும் பண்ணி	வைதிகம் சைவம் வைதிகசைவமாகிய மூவிதத் தருகமான வக்கினி காரியத்தை விருப்பத்துடனே செய்து.

நித்தலு மிக்கிரியையினை யியற்றுவோர்களின் மலன்றன்னருகிருப்பர் நினையுங்காலே.

இந்தக்கிரியை நாடோறு முட்டாமலியற்றினோர்களிருக்குமிடம் விசாரிக்கில் சிவனது சமீபத்திலே யிருப்பார்கள் எ-று.

இயற்றுவோர் - எழுவாய், இருப்பர் - பயனிலை,

"நிரைமலிகாமன் செருடுமுகை நறுமலர், புகைமிகுவளரொளி நிறைபுனல் கொடுதனை, நினைவொடு நிதமும் வழிபடு மடியவர், குறைவில் பதமன தரவருள் குணமுடை யிறையே" எனவும் "முட்டாதே நாடோறு நீர்மூழ்கிப்பூபறித்து மூன்றுபோதுங், கட்டார்ந்த விண்டை கொண் டடிசேர்க்கு மந்தண்" எனவும். "மணம் பொருந்திக் கைவிட நான்கடவேனே" எனவுமறிக.

இதற்குக் காமிகம் அஞ்சுமான் ஞானரத்நாவலி இவைகளிலறிக. (உ1)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் புத்திரகன் பண்ணுங் கிரியாலக்ஷணந் தொகுத்துரைக்கின்றது.

இதற்குப் பொருள் வெளி.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

விரைப்போது - மணம் பொருந்திய புஷ்பம்,—புகை ஒளி - தூபதீபம்,—ஐந்து சுத்தி - ஆன்ம ஸ்தான திரவிய மந்திர லிங்க சுத்தி,—ஆசனம் - சத்தி யாதிசத்திபரியந்த பத்மரூப விந்து,—

மூர்த்தி - விந்து மத்தியத் தெழுந்து கண்டா சிருதியாய்த் திரும்ப வித்தியா தேக ரூப வியாபகமாயிருக்கும் நாதம்,—மூர்த்திமானுஞ் சோதி - வித்தியா தேகத்துக்குச் சீவனும் பர சிவ தேஜஸு.

மற்றைய வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

புறத்தொழி லகத்தொழி லென்னு மிரண்டானும் அருவுருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு கிரியையெனப்படு மென்பதாம்.

நிரம்பவழகியருரை வருமாறு.

மேல் புத்திரமார்க்க மருளிச் செய்கிறார்.

புத்திர மார்க்கம் புகலில் - பரமேசுரனுக்கு உபதேசத்தினாலே புத்திரரா யுள்ளவர்கள் செய்யுங் கிரமத்தைச் சொல்லில்,—புதிய விரைப்போது - நவமாயிருக்கப்படாநின்ற திருமெய்ப்பூச்சுமுதலான பலசுகந்தத் திரவியங்களும் திருப்பள்ளித் தாமமும்,—புகையொளி மஞ்சன மமுதுமுதல் கொண்டு- தூபதீபம் திருமஞ்சனம் அமுது முதலானவை யெல்லாம் நன்றாகவரத் தேடி வைத்துக் கொண்டு,— ஐந்து சுத்தி செய்து-பூத சுத்தி ஆன்மசுத்தி திரவியசுத்தி மந்திரசுத்தி லிங்கசுத்தியென்று சொல்லப்பட்ட அஞ்சி சுத்திகளையும் பண்ணி,—ஆதனமூர்த்தி மூர்த்திமானுஞ் சோதியையும் பாவித் தாவாகித்து-ஆதன மூர்த்தியும் மூலமாக சாதித்து அந்தமூர்த்தி மானான சோதியை

தியானிக்கும்படி பிரமாமுதல் சதாசிவ மீறாகத் துவாதசாந்தத்திலே கூடிக் கோடி சந்திரப் பிரகாசம் போலே பாவித்து இந்தப்பொருளைச் சிவலிங்கப் பெருமானிடத்திலே ஆவாகனம் பண்ணி,—சுத்தபத்தியினாலர்ச்சித்து-அழுக்கற்று நின்மலமாயிருக்கிற அன்புடனேகூடியிருந்து அர்ச்சித்து,— பரவிப்போற்றி-புகழ்ந்து தோத்திரங்களுஞ் செய்து,—பரிவினொடு எரியிற் வருசாரியமும் பண்ணி - விருப்பத்துடனே அக்னிகாரியமுஞ் செய்து,—நித்தலுமிக் கிரியையினை யியற்றுவோர்கள் - நாள்தோறுஞ் சாத்திரஞ் சொன்ன முறைமையிலே இப்படி சிவனையர்ச்சிக்கிறவர்கள்,— நின்மலன்றனருகிருப்பர் நினையுங்காலே- மலரகிதனாயிருக்கிற சிவனுடைய சமீபத்திலே யிருப்பார்கள் விசாரித்துப் பார்க்குமிடத்து.

இதனாற் சொல்லியது புத்திர மார்க்கத்துக்குச் சொல்லப்பட்ட புதியவிரை போதுமுதல் அக்கினிகாரிய மீறாக நாள்தோறு மிந்தமுறைமையிலே செய்து முடித்தவர்கள் சாமீப்பியத்தைப் பெற்றிருப்பார்களென்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

புத்திரமார்க்கம் புகலின் - புத்திரநெறியைச் சொல்லுமிடத்து,—புதியவிரைப்போது புகைபொளி மஞ்சனமமுது முதல்கொண்டு-புதிதாகிய வாசனை பொருந்திய போதுகளுந் தூபதீப திருமஞ்சன மமுதுமுதலியனவெல்லாந் தேடிவைத்துக்கொண்டு,—ஐந்துசுத்திசெய்து ஆசனமூர்த்தி மூர்த்திமானும் - ஐவகைச் சுத்திகளையும்பண்ணி யாசனமூர்த்தி மூலங்களாலே மூர்த்திமானாகிய சிவத்தை,—சோதியையும் பாவித்தாவாகித்து-சோதியுருவாகப்பாவித்து ஆவாகனம்பண்ணி,— சுத்தபத்தியி

னலர்ச்சித்து-நிருமலமாகிய மெய்யன்பினலர்ச்சனை செய்து,—டாவினொடும் பாவிப்போற்றி- விருப்பத்தோடுதுதித்து வழிபாடியற்றி,—நித்தலு மெரியில்வரு காரியமும்பண்ணி-நித்தியாக்கினி காரியமும்பண்ணி,—நினையுங்கால்கிரியையினை யியற்றுவோர்கள்,—நினையுமிடத்துக் கிரியையினை யனுட்டித்தோர்,— நிருமலன்றனருகிப்பர் - சாமீபமாகிய பதமுத்தி பெறுவர் என்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

மேற்சகமார்க்க முணர்த்துகின்றார்.

சகமார்க்கம் புலனொடுக்கித் தடுத்துவளி யிரண்டி
ஞ் சலிப்பற்று முச்சதுர முதலாதாரங்க, ளகமார்க்க ம
றிந்தவற்றி னரும்பொருள்களுணர்ந்தங் கணைந்துபோ
ய் மேலேறி யலர்மதிமண்டலத்தின், முகமார்க்க வ
முதுடல முட்டத்தேக்கி முழுச்சோதி நினைந்திருத்த
ன் முதலாகவினைக, ளகமார்க்க வட்டாங்க யோகமு
ற்று முழத்தலுழந் தவர்சிவன்ற னுருவத்தைப்பெ
றுவர். (உக)

(இ-ள்) சகமார்க்கம் புலனொடுக்கி — போகபாதமாகிய சகமார்க்கமாவது, பதும முதலிய வாதனங்களி லொன்றிலிருந்து புலன்வழி செல்லாதபடி யாமை யான தவயவங்களை யுள்ளே யடக்குமாறுபோல வடக்கி, இஃதாசனம்.

தடுத்துவளியிரண்டுஞ் சலிப்பற்று — ரேசகபூரகங்களில் வாயுச்சலிக்குமதனைத் தடுத்துக் கும்பித்திருந்த பிராணவாயுவைச் சுழுனையிலே நிறுத்தி, இது பிராணாயாமம்.

முச்சதுர முதலாதாரங்களக மார்க்க மறிந்து தனது சரீரத்தினுள்ளே முக்கோணமுதலிய வாறு தாரங்களின தாகிருதியையு மஃதிருக்குந் தானங்களையும் வடிவுமுதலிய வற்றை யதுவதுவாக வறிந்து,

அவற்றினரும் பொருள்களுணர்ந்து மூலாதார முதலிய வாதாரங்க டோறு மிருக்கும் பதுமதளங்களையு மவைகளி லிருக்கு மதிதேவதைகளையு மவைகளி லிருக்கு மக்கரங்களையு மறிந்து தியானித்து.

அங் கணைந்து போய் மேலேறி யலர்மதி மண்டலத்தின் முகமார்க்க வமுதுடல முட்டத் தேக்கி மூலாதாரத்தி லிருக்கு மக்கினிமண்டலத்தி னக்கினியைச் சொலிப்பித்து, அந்தச் சந்திரமண்டலமாகிய நாபித்தானத்தி லிருக்குங் குண்டலினி சத்திச்சொரூபிணி யாயிருக்கிற வமிர்தத்தை யுருகப் பண்ணி, மற்றவாதாரங்க ளனைத்து மதோமுகமான பதுமங்களினது கிரந்திகளை யடைவே யதனைக் கொண்டு பேதித்து, மேலேசென்று விந்துத் தானத்தின்வழியேயிறங்கிப் பெருகாநின்ற வமிர்த தாராப்பிரவாகத்தைத தனதுடலமுழுது நிறைந்தவாறே யிவனுக்கு மந்திரபீசாக்கர முச்சரிக்கிற தெல்லாம் விளங்கா நிற்கும்.

முழுச் சோதி நினைந்திருத்தல் தான் முன் தியானம் பண்ணப்படுமது, பொருளி னிடத்திலே யடிக்கிற காற்றான தெப்படிசலியாமல் வியாபித்திருக்கும், அதுபோலப் பரிபூரணமான பிரகாசாந்தத்திலே யழுந்தி யிருத்தல் சமாதி. இதனாற் பயன் யாதெனில்?

முதலாகவினை சளுக இம்மைக்கண் கன்மமுதலிய பாசங்களினது வலிகெட்டுப் போம்படியு மறுமைக்கண் முத்தியடைகையின் பொருட்டும்

மார்க்க வட்டாங்கயோகமுற்று முழுத்த லுழுந்தவர் — சகமார்க்க மாகிய யோகபாதத் தட்டாங்க யோகத்தை யியமநியம முதலாக நாடோறும் வருந்திச் சாதித்தவர்கள்,

சிவன்ற னுருவத்தைப்பெறுவர். — சிவனது திருமேனியைப் போலத் தாங்களும் வடிவை யெடுத்துக்கொண் டவன் சமீபத்திலே யிருப்பர்கள் எ-று.

சகமார்க்கத்தைத் தலைக்குறைத்து மார்க்க வட்டாங்கமென்றார் "இயமநியம மிணங்காசனம்யாம, மயர்வில் பிரத்யாகாரமாகு—முயலுங்காற், றாரணை யோடு தியானஞ் சமாதியு மென், றோரிருநான்குமே யோகு" எனவறிக.

இது பொழிப்பு.

மேலகலம்.

மூலாதாரமாவது:—குதத்துக் கிரண்டங்குலத்துக்கு மேலிலிங்கத்துக்கு இரண்டங்குலத்துக்குக் கீழெனவறிக.

இதற்குவடிவு முக்கோண மாயிருக்கும். செந்தாமரை யிதழ்க ணான்கு.

இவையெளி நிற்கு மக்கரங்க ளாவன வ ஶ ஷ ஸ எனநான்கு.

இவ்விதழ்களுக் கதிதேவதைக ளாவன? விநாயகன் வைரவன் க்ஷேத்ரபாலன் சண்டன் எனநால்வர்.

சுவாதிஷ்டான மாவது:—இதற்குத் தான மிலிங்மூலம்.

இதற்குவடிவு அறுகோணம். அநேக காந்தியினை யுடையவாறிதழ்த் தாமரை.

இதினிற்கு மக்கரங்கள் ப ஹ ம ய ர ல

ஆறிதழ்களி னிற்கு மதிதேவதைக ளாவன? பிரதிட்டை சுத்ததபிரினி பாவனை இருடி பத்மணி பத்மயோகி என்றறுவர்.

மேல் மணிபூரகம்:—இதற்குத் தான நாபி.

இதற்கு வடிவு மூன்றுவட்டம். ரத்னப்பிரபைபோன்ற பத்மதளங்கள் பத்து

இவைகளினிற்கு மக்கரங்கள்— ஡ ஢ ண த ம த ந ய ந ப ம எனப்பத்து.

பத்மதளங்கள் பத்தூக் கதிதேவதைகள்.

தூலாராக்ஷி நீலாராக்ஷி கைலாசநீ புலங்கினி உபாகி உட்டினிகை வாசினி நேத்திரகரி தவநீ நவநீ எனப்பதின்மர்.

இனிபநாகத மாவது:—அதற்குத் தானம் இருதயமகலம்.

வடிவு முக்கோணம். இதற்குப் பொற்சென்ற நிறத்தினையுடைய வித்ழ்ப் பன்னிரண்டு.

இவைகளினிற்கு மக்கரம் க வ ங வ ஜ வ ஜ ஜ ஞ ட ட எனப் பன்னிரண்டு

இவைகளினிற்கு மதிதேவதைக ளாவன? கபிநீ ப்ரசநீ சோஷி காலோணினி வேணி ஆகூஷணி சாமுண்டி விராடி தூர்க்கா செடிகா ஆரணி சுரணீ எனப் பன்னிருவர்.

இனி விசுத்திக்குத் தானமாவது:—கண்டகூடம்.

வடிவு அறுகோணம். இதிற் சுவேகபத்மதளம் பதினாறு.

இவைகளினிற்கு மக்கரங்கள். அ ஆ இ ஈ உ ஊ ஙு ஙூ ஸு ஸூ ஏ ஐ ஒ ஔ அம் அ: எனப் பதினாறு

இவைகளிலிருச்கு மதிதேவதைக ளாவன? மாண்டி புடபடிதிரி சிருங்கி சுவரா அசனி இராத்திரி தர்மகூஷாணி சாயா உற்பாசி நிகாராக்ஷி தில்லாசினி யூபா சாரிணி காலாசி கமலா எனப் பதினறுவர்.

இனி ஆக்கினை என்னுமாதாரம்;—இதற்குத் தானமாவது புருவமத்திரம்.

இதற்குப் பத்ம தளங்களாவன? செந்தாமரை தளங்களிரண்டு. இவைகளி லிருக்கு மக்கரங்கள் ஹ க்ஷ எனவிரண்டு.

இதற் கதிதேவதைகளாவன? சுந்தரி யாநந்தி எனவிருவர்.

இவைக ளெல்லாத்தையு மாதனமாகப் பண்ணிக்கொண்டதற்கு மேலாகிய பிரம்மரந்திரத்தி லாயிரந் தளத்துடன் கூடின பதுமத்தில்மேற் பரமசிவ னெழுந்தருளி யிருப்பர்.

இது பெரும்பான்மையாதலின், சிறிதாகமங்களிற் சிறுபான்மையாக நவாதாரத்தின் முறையைக்கூறிற் பெருகுமாயினுஞ் சிறிதுகூறுதும்.

மூலாதாரமுதல் விசுத்தியீறாக முன்புபோல்.

இதற்குமேற்கிரியாசத்தி ஞானசத்தி யிச்சாசத்தி இம்மூன்று மூன்று மண்டலம். அஃதொவ்வொன்றுக்குப் பதினாறுகளாமுமதி லகாரமுதலிய வெழுத்துப் பதினாறும்.

விந்து நாதங்களுடன்கூடி மேற்பிரம்மரந்திரம். இதிற் பத்மதள முன்னூற் றறுபதுடன் கூடியகமலம் பராசத்தி மயமாயிருக்கும். அதிற் பரமசிவனைப் பாவிக்கின் முத்தி யடைவர்களென வறிக.

இதற்குச் சுப்பிரபேத மகுட சிந்திய விஸ்வத்த மறிக. (௨௬)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

சகமார்க்கம் - தோழநெறியாவது,—தடுத்து வளியிரண்டும் - உச்சுவாச நிசுவாச மிரண்டையு மடக்கிச் சுழுமுனை மார்க்கத்திலே பிராணவாயுவை நிறுத்தி,—புலனொடுக்கி - விஷயங்களின்வழி மனசைப் போகவொட்டாமற் றிருப்பி,— சலிப்பற்று - அந்த மனோவியாபாரமு மன்றி லட்சியத்திலே நிறுத்தி,— முச்சதுர முதலாதாரங்க ளகமார்க்க மறிந்து - திரிகோண

மாயிருக்கிற மூலாதார முதலான வாறுதாரத்திலுந் தர்மார்த்த காமத்தை யறிந்து அந்தந் தாதாரங்களின் றேவதைகளைத் தியானித்து,—அவற்றி னரும்பொருள்க ளுணர்ந்து - அந்தவாறுதாரங்களிலும் அசபை சத்தி சிவாத்மகமாக நிற்கும் முறைமையைப்பார்த்து,—அங்கணைந்துபோய் மேலேறி - மூலாதாரந்துவக்கி விநாயகன் முதலாயுள்ள தேவதைகளைப் பொருந்தியபிமுகம் பண்ணிக்கொண் டாறுதாரத்துக்கு மேலாகிய பிரமரந்தர மளவும் அசபையுடனே சென்று,—அலர் மதிமண்டலத்தின் முகமார்க்க வமுதுடல முட்டத்தேக்கி - பிரமரந்தரத்தி னதோமுகமாய்ச் சகஸ்ரதளமாய் வாழைப்பூப்போலே யிருக்கிற தாமரை முகையை ஜ்யோதிர் ஜ்யோதி பதோச்சாரணத்தா லுதிக்கப்பட்ட * சிவார்க்கனாலே யலரச்செய் தந்தத் தாமரைப்பூவின் † கேசராக்கிரத்திலே யுள்ள சந்திர மண்டலத்தை ‡ அருகுஞ் சனத்தினாலே மூலாக்கினியை வன்னி பீஜோச்சாரணத்தினாலே யெழுப்பி நாடிசக்கிரத்தைப் பேதித்து அந்த அக்னியினாலே சந்திரமண்டலத்தை யிளகப்பண்ணி அந்த வமிர்தத்தைச் சர்வநாடி முகவழித்தாய் நிரப்பி யவ்விடத்திலுண்டாகிய சுகோதயத்திலே தன்மயாவத்தையை யடைந்து நின்று இவையேழும் பிரத்தியங்கமாக,—முழுச்சோதி நினைந்திருத்தல் முதலாக-முன்சொன்ன சோமசூரியாக்கினிப் பிரகாசாதிகளாகிய § கண்டஜ்யோதிசுக்க ளெல்லாம் சூரியோதயத்திலே நக்ஷத்ராதி பிரகாசங்க ளடங்கினாற்போலத் தன்னிடத்தடங்க சர்வதோமுகமாய் ஸ்வபரட்பிரகாசமாயிருக்கிறபூரணப்பிரகாசத்தைப் பாவிப்பது பிரதானாங்கமாக. இவ்வாறு,—வினைசளுக வட்டாங்க யோகமார்க்கமுற்று முழுத்தலுழன்றவர் சிவனுற வுருவத்தைப் பெறுவர்-சஞ்சிதாகாமிய கன்மங்களெல்லாம் நசிக்கும்படிக்குச் சொல்லிப்போந்த வட்டாங்க யோக

த்தை யெல்லா ¶ முத் யோகத்துடனே பிரயாசைப்பட்டுச் சாதித்தபேர் சிரீகண்ட பரமேஸ்வரனுடைய சாரூப்பியத்தைப் பெறுவர்.

* சிவஅர்க்கன் - சிவசூரியன், † கேசரம் - தாது, ‡ ஆகுஞ்சனம் - சுருக்குதல், பிரத்திபங்கம் - அங்கந்தோறும், § கண்டஜ்யோதிசு - ப்ரத்யேகமான ப்ரகாசம், ¶ உதயோகம் - முயற்சி.

தடுத்து வளியிரண்டு மென்றது பிராணாயாமம்.

புலனொடுக்கி யென்றது பிரத்யாகாரம்.

சலிப்பற் றென்றது தாரணை.

முச்சதுர முதலாதாரங்க ளகமார்க்க மறிந் தென்றது தியானம்.

அவற்றி னரும்பொருள்க ளுணர்ந்தென்றது விக்ஷணம்.
அங்கணைந்துபோய் மேலேறி யென்றது ஜபம்.

அலர்மதி மண்டலத்தின் முகமார்க்க வமுதுடல முட்டத்தேக்கி யென்றது சமாதி.

முழுச்சோதி நினைந்திருத்தல் முதலாகவென்றது பிரசாதாங்கமாகிய யோகம்.

ததோக்தம் ஸ்ரீம்ருகேந்த்ரே — ப்ராணாயாம: ப்ரத்யாஹாரோ தாரணா த்யாந வீக்ஷணே । ஜப: ஸமாதிரித்யங்காநி யோகாஷ்டஂ வ்யவஸ்திதி.

இதற்குப் பூர்வாங்கம் - இயமநியம ஆசன மென்று மூன்று.
இவைகளில்லாதிருக்கில் யோகங் கூடாதாகையால் மூலவிருத்தத்திற் கூறுதிருக்கவும கூட்டிப் பொருளுரைக்க வேண்டும்,

இவையிற்றில் இயமமாவது × அஹிம்சை சத்யம் + அஸ்

தேயம் ப்ரம்மசரியம் தயை வஞ்சனையற்றிருக்கை பொறுமை தைரியம் அல்பாசாரம் ÷ சுசித்வம் எனப்பத்துவகை.

× அஹிம்சை-கொல்லாமை, + அஸ்தேயம் - திருடாமை ÷ சுசித்வம் - சுத்தி.

தயாஹு: — வேதோக்தேந ப்ரகாரேண விநா ஸத்யம் தபோதந | காயேந மநஸா வாசா ஹிம்ஸாபாவோ ந சாந்யதா || ஆத்மா ஸர்வகதோऽச்சேத்யோ ந க்ராஹ்ய இதி மே மதி: | ஸா சாஹிம்ஸா பரா ப்ரோக்தா முநே வேதாந்தவேதிபி: || யச்சக்ஷுர்த்ருஷ்டம் ஶ்ருதம் க்ராதம் வேதவிதாம்வர: | தஸ்யைவோக்திர்பவேத்ஸத்யம் விப்ர ஸா நாந்யதா பவேத் || ஸர்வம் ஸத்யம் பரம் ப்ரஹ்ம ந சாந்யதிதி யா மதி: | தச்ச ஸத்யம் பரம் ப்ரோக்தம் வேதாந்தஜ்ஞாநபாரகை: || அந்யதீயே த்ருணே ரத்நே காஞ்சநே மௌக்திகேऽபி வா | மநஸா விநிவ்ருத்திர்யா ததஸ்தேயம் விதுர்புதா: || ஆத்மந்யநாத்மபாவேந வ்யவஹாரவிவர்ஜிதம் | யத்ததஸ்தேயமித்யுக்தம் ஆத்மவித்பிர்மஹாத்மபி: || காயேந மநஸா வாசா நாரீணாம் பரிவர்ஜநம் | ருதௌ பார்யாம் விநா ஸ்வஸ்ய ப்ரஹ்மசர்யம் ததுச்யதே || ப்ரஹ்மபாவே மநஶ்சாரம் ப்ரஹ்மசர்யம் பரந்தப | ஸ்வாத்மவத்ஸர்வபூதேஷு காயேந மநஸா கிரா || அநுஜ்ஞா யா தயா ஸைவ ப்ரோக்தா வேதாந்தவேதிபி: |

𑌪𑌰𑍇𑌤𑍍𑌰𑌿 𑌮𑍈𑌤𑍍𑌰𑍇 𑌚 𑌶𑌿𑌵𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌟𑌾 𑌨𑌿𑌯𑌤𑍍𑌤𑌾𑌃 । 𑌦𑌶𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌸𑌨𑍇𑌯𑌤𑍍𑌸𑌾𑌜𑍍𑌞𑌂 𑌪𑍍𑌰𑍋𑌚𑍍𑌯𑍇𑌤𑍇 𑌯𑌾 ॥ 𑌕𑌾𑌯𑍇𑌨 𑌮𑌨𑌸𑌾 𑌵𑌾𑌚𑌾 𑌸𑌤𑍍𑌰𑌂 𑌹𑌿𑌂 𑌪𑌰𑌿𑌵𑍀𑌜𑍍𑌯𑌤𑍇 । 𑌬𑌂𑌧𑍇𑌕𑍍𑌷𑌾 𑌪𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌯𑌕𑍍𑌷𑌾𑌸𑌾𑌸𑌂𑌨𑌿𑌪𑌂 𑌜𑍍𑌰𑌵 ॥ 𑌵𑍇𑌦𑌾𑌵𑍇𑌦𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑌕𑍍𑌷𑌹𑌂𑌸𑌾𑌰𑌹𑍍𑌯𑌨𑌾𑌨𑍍𑌯𑌾 । 𑌇𑌤𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌷𑍍𑌠𑌤𑍍𑌵𑌂 𑌧𑍃𑌤𑌿𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾𑌹𑌿 𑌵𑍇𑌦𑌿𑌕𑍈𑌃 ॥ 𑌸𑌹𑌸𑍍𑌤𑌾𑌨𑌚𑌾𑌨𑍍𑌯𑍋𑌷𑍀𑌤𑍍𑌯𑌂𑌸𑌾𑌪𑌚𑍍𑌯𑌂 𑌤𑌾𑌸𑌤𑌿𑌃 । 𑌯𑌾𑌸𑌾 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾 𑌧𑍃𑌤𑌿 𑌪𑍍𑌰𑍋𑌷𑌾 𑌸𑌂𑌨𑌿𑌹𑌿 𑌵𑍇𑌦𑌵𑍇𑌦𑌿𑌹𑌿𑌃 ॥ 𑌕𑍍𑌷𑍁𑌤𑍍𑌤𑍃𑌷𑍍𑌣𑌾𑌪𑌨𑌾𑌹𑌾𑌰𑌂𑌤𑌂 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌯𑍋𑌗𑌃 𑌕𑌤𑌞𑍍𑌚𑌨 । 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑍋𑌗𑌾𑌨𑍁𑌗𑌾 𑌹𑌾𑌰𑌨𑌿𑌯𑌮𑌾𑌜𑌨𑌮𑍍 ॥ 𑌸𑍍𑌵𑌦𑍇𑌹 𑌸𑌂𑌨𑌿𑌦𑍇𑌹𑌾𑌕𑍍𑌷 𑌸𑌜𑍍𑌜𑌾𑌹𑌾𑌰𑌸𑌂𑌸𑌂𑌤𑍇𑌨 । 𑌯𑌤𑍍𑌤𑌸𑍍𑌯𑌂 𑌹𑌵𑍇𑌤𑍍 𑌬𑌾𑌹𑍍𑌯𑌂 𑌸𑌾𑌨𑌸𑌂 𑌸𑌨𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃 ॥ 𑌸𑌹𑌸𑍍𑌤𑌾𑌂𑌶𑌜𑌾𑌤𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌾𑌯𑌂 𑌵𑌾𑌂𑌛𑌂𑌤𑌿𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌾 𑌇𑌤𑌿.

இந்தப்பத்தும் ஞானத்மகக் கிரியாத்மக பேதங்களுமாம்.

நியமமாவது:—தபசு சந்தோஷம் * ஆஸ்திக்யம் தானம் ஈஸ்வரபூசை ஞானசாஸ்திரத்தைக்கேட்டல் † லச்சை புத்தி ஜபம் விருதம் எனப் பத்துவிதம்.

* ஆஸ்திக்யம் - தெய்வமுண்டென்கை, † லச்சை -வெட்கம்,

𑌨𑌿𑌯𑌮𑌾𑌃 — 𑌤𑌪𑌸𑍍𑌸𑌂𑌤𑍋𑌷 𑌆𑌸𑍍𑌤𑌿𑌕𑍍𑌯𑌦𑌾𑌨𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌪𑍂𑌜𑌨𑌮𑍍 । 𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌶𑍍𑌰𑌵𑌣𑌞𑍍𑌚𑍈𑌵 𑌹𑍍𑌰𑍀𑌰𑍍𑌮𑌤𑌿𑌶𑍍𑌚 𑌜𑌪𑍋 𑌵𑍍𑌰𑌤𑌮𑍍 ॥ 𑌦𑌶𑍈𑌤𑍇 𑌨𑌿𑌯𑌮𑌾𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾 𑌇𑌤𑌿 .

இவையிற்றுக்களின் லக்ஷணங்கள்.

𑌤𑌥𑌾𑌪𑌰𑌃 — 𑌵𑍇𑌦𑍋𑌕𑍍𑌤𑍇𑌨 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍇𑌣 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌚𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑌣𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 । 𑌶𑌰𑍀𑌰𑌶𑍋𑌷𑌣𑌂 𑌯𑌤𑍍𑌤𑌤𑍍 𑌤𑌪 𑌇𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌬𑍁𑌧𑍈𑌃 ॥ 𑌸𑍋𑌹𑌂 𑌗𑌨𑍍𑌤𑍃𑌕𑌃 𑌕𑌃𑌪𑍁𑌕𑍇𑌨 𑌸𑌂𑌸𑌾𑌰𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑌰𑍍𑌵𑌾𑌤𑍁 । 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌂 𑌨 𑌜𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌸𑍍𑌤𑍍𑌯𑌜𑌾 𑌸𑌂𑌤𑌿𑌵𑌂𑌬𑌿𑌤𑌾𑌃 ॥ 𑌯𑌤𑍍𑌰 𑌸𑍍𑌥𑌾𑌸𑌾𑌹𑌤𑍇𑌤𑌾𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌤𑌿𑌶𑍍𑌚𑌾𑌜𑌾𑌯𑌤𑍇 𑌨𑍃𑌣𑌾𑌮𑍍 । 𑌤𑌸𑍍𑌯 𑌸𑌗𑍋𑌷𑌂 𑌵𑌿𑌨𑌾 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨𑌕𑌤𑌸𑍍𑌯𑌵𑌰𑌾𑌃 ॥ 𑌶𑍍𑌰𑌂𑌹𑌾𑌦𑌿𑌯𑍋𑌗𑌵𑌯𑍁𑌙𑍍𑌗𑌂 𑌵𑌿𑌰𑌕𑍍𑌤𑌸𑍍𑌯𑌵𑌰𑌾𑌤𑍍𑌤𑌿 । 𑌵𑍍𑌰𑌯𑌂 𑌯𑌤𑍍𑌤𑌂 𑌗𑍋𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌸𑍍𑌯𑍋𑌤𑌂 𑌵𑌰𑌗𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃 ॥ 𑌶𑍍𑌰𑍌𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍇𑌤𑍍𑌯𑌶𑍍𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌸𑍋 𑌯𑌸𑍍𑌤𑌦𑌾𑌸𑍍𑌤𑌿𑌕𑍍𑌯𑌗𑌨𑍍𑌯𑌤𑍇 𑌨𑍍𑌯𑌾𑌯𑌾𑌜𑌿𑌤 𑌯𑌨𑍍𑌶𑌾𑌸𑌂 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾 𑌵𑍇𑌦𑍇𑌷𑍁 𑌕𑍇𑌵𑌿𑌤𑍇 ॥ 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌾 𑌯𑌸𑍍𑌯 𑌦𑍀𑌯𑌤 𑌤𑌦𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌾𑌚𑍍𑌯𑌤𑍇 𑌽𑌯𑌾 । 𑌚𑍈𑌵𑌦𑌿𑌕𑌾𑌯 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌯 𑌦𑌤𑍍𑌤𑌂 𑌯𑌤𑍍𑌨𑌮𑌿𑌵𑍇𑌜𑍍𑌞𑌵 ॥ 𑌨𑌾𑌵𑌕𑌾𑌰𑌾𑌯 𑌤𑌤𑍍𑌸𑍍𑌯 𑌹𑌸𑍍𑌤𑍀𑌵𑌾 𑌹𑌨𑍍𑌤𑌂 𑌹𑌵𑌿𑌃 । 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌦𑍀𑌶𑌾𑌨𑌂 𑌵𑍇𑌶𑍍𑌯𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑌃 ॥ 𑌯𑌥𑌾𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑌂 𑌸𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌯𑌤𑍍𑌦𑍀𑌶𑍍𑌵𑌰𑌵𑌰𑍍𑌜𑌨𑌮𑍍 । 𑌰𑌾𑌗𑌾𑌦𑍍𑌯𑌵𑍇𑌤𑌂𑌸𑌰𑍍𑌦𑌯𑌂 𑌵𑌾𑌗𑌦𑍍𑌦𑍁𑌷𑍍𑌟𑌾𑌨𑍍𑌨𑌤𑌾𑌦𑌿𑌨𑌾𑌮𑍍 ॥ 𑌹𑌿𑌂𑌸𑌾𑌦𑌿𑌰𑌹𑌿𑌤𑌃 𑌕𑌾𑌯𑌵𑌤𑍇𑌶𑍍𑌵𑌰𑌵𑌰𑍍𑌜𑌨𑌮𑍍 । 𑌸𑌤𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌜𑌨𑍍𑌗𑍁𑌵𑌾𑌨𑍍𑌦𑌂 𑌯𑌦𑍍𑌵𑌰𑌮𑍍 ॥ 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌹𑌿𑌤𑍍𑌵𑌗𑌤𑍍𑌯𑌗𑍍𑌗𑌂 𑌵𑍇𑌦𑌾𑌗𑌂 𑌶𑍍𑌰𑌵𑌣𑌂𑌬𑌨𑍍𑌧𑌯𑌾𑌃 । 𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌶𑍍𑌰𑌵𑌣𑌂 𑌪𑍍𑌰𑌾𑌹𑍁𑌶𑍍𑌶𑌿𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌾

ஸ்தீநிதாந்தஸ் ॥ ஶூத்ராணாஞ்ச விரக்தாநாம் ததாஸ்த்ரீ-
ணாம் ஸ்மார்த்தமேந । மிஶ்ராத்ஸ்வரணம் ப்ரோக்தம் ப்ர-
ணவஸ்வரணம் பரம் ॥ வைதிகைஸ்தாந்த்ரிகைர்மந்த்-
ரை: கல்பிதம் ஸம்ஸ்க்ருதமேவ ச । தத்விது ஸவதி யாவ-
ஜ்ஜந்ம ஸம்ஸாரஸேவதி கீர்த்திதா ॥ வைதிகேஷு
ஹிதம் ப்ரோக்தம் ஶாஸ்த்ரம் ச தந்த்ரமுச்யதே । ப்ரணவ
மந்த்ரார்ணவே ப்ரோக்தம் ஸ்வதந்த்ரே ஸம்ஜ்ஞயா ॥ யத்ரா
ஸ்ஸ்ராத் விஸ்ருஜேத்ஸம்பாவயேத் ப்ரணவம் ததா ।

ஜபலக்ஷணம் மேலேகூறுவாம்.

ஆசனமாவன:—சுவஸ்திகாசனம் கோமுகாசனம் பத்மாசனம் வீராசனம் சிங்காசனம் பத்திராசனம் முக்தாசனம் மயூராசனம் எனஒன்பதுவிதம்.

ததாஹ: — ஸ்வஸ்திகம் கோமுகம் பத்மம் வீரம் ஸிம்ஹாஸநம் ததா । பத்ரம் முக்தாஸநம் சைவ மயூராஸநமேவ ச ॥ ஸர்வாஸநவராவ்ருத்தம் நவமம் ஸ்தி-ரம் பவேதி.

இவையிற்றி னிலக்ஷணங்கள்.

ஜாநுநோருபரி ஸம்யக் க்ருத்வா பாததலே உபே । ஸமக்ரீவஶிர:காய: ஸ்வஸ்திகம் தத்ப்ரசக்ஷதே ॥ ஸவ்யே தக்ஷிணகுல்பம் து ப்ருஷ்டபார்ஶ்வே நியோஜயேத் । தக்ஷிணேபி ததா ஸவ்யம் கோமுகம் தத்ப்ரசக்ஷதே ॥ அங்குஷ்டாவபி க்ருஹ்ணீயாத் ஹஸ்தா

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]

நாடிசோதனை க்ரமம்

[illegible]

யாவத்³தே³ஹே ந தே³ஹே ந: | தாவத் தத்த்வம் வாயு [illegible] தத்³தா⁴ரணா ஸதை³வ வா || ஷட்க்ஷ்மா [illegible] ஹ்ருதி³ [illegible] த்ரிவிஷ்டபே | நாஸாக்³ரே [illegible] ஸு [illegible] கிஞ்சின்ன வீக்ஷிதா: || ஶரீர [illegible] த்³ருஷ்ட்வா [illegible] இந்த்³ரியார்த²விவர்ஜித: | [illegible] விஹாய [illegible] ஸ்வயம் [illegible] || யாவ [illegible] ஸதா³ [illegible] ஸமாசரேத் |

மேல் ப்ராணாயாம லக்ஷணம்.

[illegible] பூரகாணாம் [illegible] நாஞ்ச ததை²வ ச | ஸர்வேஷாம் [illegible] ப்ராண ஸம்யமனம் [illegible] || [illegible] ஶிவத்⁴யானம் வா வைஷ்ணவம் வா ந சான்யதா² | [illegible] ப்ராகாஶ்ய [illegible] ப்ராணாயாமம் [illegible] || [illegible] [illegible] | [illegible] [illegible] || [illegible] | [illegible] || ப்ராணஸம்ரோத⁴னேனைவ ஜ்ஞானானந்த³ [illegible] | பா³ஹ்யத: ப்ராணவாயோர் [illegible] ரேசக: || ஸம்பூர்ணகும்ப⁴வத் [illegible] கும்ப⁴க: | ப³ஹிர்விரேசக [illegible]

[illegible]

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

புலனொடுக்கி - பிராணயாமப் பிரத்தியாகாரங்களினு லிந்திரியங்களை நிறுத்தி,—தடுத்து வளியிரண்டும்-பிராணனை திடை—

பிங்கலைகளினியக்கம் மடக்கி,—முச்சதுர முதலாதார மகமார்க்கம் - சுழுமுனை நாடிவழி பொருந்திய பிரமாதி தேவதை முதலியன,—அலர்மதி மண்டலம் - புருவமத்தியம்,—முழுச் சோதி நினைந்திருத்தல்-அந்தப் புருவமத்திய பதுமத்தில் விந்து நாத ரூபமாயிருக்கும் தேஜோலிங்க சகளநிஷ்கள சிவத்தை, இருதயத்திற் சதாசிவ முதலிய சகள சிவத்தைத் தான் தியானித்துச் சமாதித்தல்,—முதலாக - சங்காரக்கிரமத் தாதியாகச் சிருஷ்டிக்கிரமத் தந்தமாக,—அஷ்டாங்க யோகம் - இயமநியம ஆசனப்பிராணாயாமப் பிரத்தியகார தாரண தியான சமாதியென்னு மெட்டங்கமுடைய சகள சகளாகள சிவ சாக்ஷாத்கார ரூப அங்கிசிவ யோகத்தை,—முற்றும் - அங்கமின்றி,—உழந்துழுந்தவர் - அந்த வட்டாங்கங்களினுற் சாதித்தலைப் பண்ணினவர்.

மற்றைய வெளிப்பொருள்

சிவஞானயோகியருணா வருமாறு.

—o—

அசத்தொழின் மாத்திரையானே அருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு யோகமெனப் படுமென்பதாம்.

சகமார்க்க முழத்தலென வினைமுடிக்க.

இவ்வியோக முழந்தவரென எடுத்துக்கொண்டுரைக்க.

நிரம்பவழகியருணா வருமாறு.

—o—

மேல் சகமார்க்க மருளிச்செய்கிறார்.

சகமார்க்கம் புலனொடுக்கி - சகமார்க்கமென்று சொல்லப்பட்டது ஐம்புலன்களையும் விஸ்வ வியாபாரத்திற் செல்லாமலடக்கி,—தடுத்து வளியிரண்டுஞ் சலிப்பற்று - பிராணாயாமத்தினாலே உஸ்வாச நிஸ்வாசங்களிரண்டும் தடுத்து சத்தஞ் சலனமற்று,—முச்சதுர முதலாதாரங்க ளகமார்க்கமறிந்து -மூன்றுசதுரமான மூலாதாரமுதலான ஆறு ஆதாரங்களுக் குண்டான வழிகளையறிந்து,—அவற்றி னரும்பொருள்க ளுணர்ந் தங்கணைந்துபோய்மேலேறி - அவையிற்றினுடைய வறிதான அந்த வத்தங்களையு மறிந்து அவ்விடங்களிலே பொருந்தி அந்த ஆதாரங்களுக்கு மேலேசென்று,—அலர்மதிமண்டலத்தின் முகமார்க்கவமுதுடல முட்டத்தேக்கி- விரிந்த சந்திரமண்டல முகத்தின்வழியி னுண்டான வமுதத்தைத் தன்னுடைய தேகமுழுதும் நிரம்பத்தேக்கி,—முழுச்சோதி நினைந்திருத்தல்முதலாக வினைகளுகமார்க்க - எல்லாப் பிரகாசமுங் கூடிநிறைந்த பிரகாசத்தைப் பொருளாகத் தியானித்திருப்பது இவனுடைய கன்மங்களெல்லாம் சமமாகத் தக்கவழிக் கேதுவாம், இதுவன்றியும்,—அட்டாங்க யோகமுற்று முழைத்தலுழந்தவர்- இயமநியம ஆசனம் பிராணாயாமம் பிரத்தியாகார தாரண த்யாந சமாதி என்னு மட்டாங்கயோகந் துடங்கி மற்றுள்ள யோகங்களெல்லாஞ் சாதிக்கிற விது யோகமாம். இப்படிச் சாதித்தவர்கள்,—சிவன்றனுருவத்தைப் பெறுவர்- பரமேஸ்வரனை யொத்த சாரூபமான திருமேனியைப் பெறுவர்கள்.

இதனாற் சொல்லியது, சகமார்க்கத்துக்குச் சொல்லப்பட்ட புலன்களை யொடுக்குகிறதுமுதல் அஷ்டாங்கயோக மீறாக இந்த முறைமையிலே செய்து முடித்தவர்கள் சாரூப்பியத்தைப் பெறுவர்கள் என்னு முறைமையை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

சகமார்க்க முழத்தல் - தோழ நெறியைச் சொல்லுமிடத்து,— புலனொடுக்கி - விடயங்களிற் செல்லுமைம்பொறிகளையு மடக்கி,—வளியிரண்டுந் தடுத்து - உச்சுவாச நிசுவாசமாகிய வாய்விரணடினையுந் தம்பித்து,—சலிப்பற்று - சுழுமுனை மார்க்கத்திலே மனோவியாபார மின்றிச் சலனமற்று,— முச்சதுர முதலாதாரங்க ளகமார்க்க மறிந்து - திரிகோணமுதலிய மூலாதாரமுதலான வாறுதாரத்தினு மந்திரக்கிரமத்தை யறிந்து,— அவற்றி னருட்பொருள்க ளுணர்ந்து - அந்த வாதாரங்களின் றேவதைகளை தியானித்து அவ் வாறுதாரங்களினு மசபை சிவசொரூபமாய் நிற்கு முறைமை யுணர்ந்து,—அங்கணைந்து போய் மேலேறி - மூலாதாரந் தொடங்கி விநாயகர் முதலாயுள்ள தேவதைகளைப் பொருந்தி பிரமரந்திர மளவும் சபையுடனே சென்று,— அலர்மதி மண்டலத்தின் முகமார்க்கம்-விரிந்தசந்திரமண்டல முகத்தினடி யுண்டாகிய,— அமுதுடல முட்டத்தேக்கி - அமுதத்தை தன்னுடைய தேசமுழுமை நிறப்பத்தேக்கி,—முழுச்சோதி நினைந்திருத்தன் முதலாக-எல்லாப் பிரகாசமுங்கூடினிறைந்த சோதி சொருபமாகத் தியானித்தன் முதலிய வற்றான்,—வினைசளுக மார்க்க வட்டாங்க யோகமுற்று முழந்தவர்-வினைகள் கெடுதற்கு வழிபாகிய வியம நியமமுதலிய வட்டாங்க யோகத்தை யனுட்டித்தோர்,—சிவன்ற னுருவத்தைப் பெறுவர் - சாரூபமாகிய பதமுத்தியைப் பெறுவர்.

மறைஞானதேசிகர் உரை

சன்மார்க்கமாகிய ஞானபாத முணர்த்து கின்றார்.

சன்மார்க்கஞ் சகலகலை புராணவேத சாத்திரங்கள் சமயங்க டாம்பலவுமுணர்ந்து, பன்மார்க்கப் பொருள்பலவுங் கீழாகமேலாம் பதிபசுபா சந்தெரித்துப் பரசிவனைக்காட்டு, நன்மார்க்க ஞானத்தை நாடிஞான ஞேயமொடு ஞாதுருவு நாடாவண்ணம், பின்மார்க்கச் சிவனுடனும் பெற்றிஞானப் பெருமையுடை யோர் சிவனைப் பெறுவர்காணே. (உஉ)

(இ-ள்.) சன்மார்க்கம் — சிவனையடைதற்கு நல்லவழி யாதெனில்

சகலகலை புராணவேத சாத்திரங்கள் சமயங்கடாம் — அறுபத்துநாலு கலைக்கியானம் நாலுவேதம் பதினெண் புராணம் வேதத்துக்குப் புறம்பாயுள்ள லோகாயதம் பௌத்தம் ஆருகத மிந்தச் சாத்திரங்கள் வேதவழி யாகிய தர்க்கம் வேதாந்தம் பிரபாகரம் பாட்டம் வைசேடிகம் சாங்கிய மெனக் கூறிய சமய சாத்திரங்களாறு. சாத்திர மென்பதனை யிருபாலுங் கூட்டிப் பொருளுரைக்க.

வேதாகமத்தின் வழியின் றனுட்டித்த வான்மாக்களுக்குச் சுகத்தைக் கொடுக்கையாலும் ஜனன மரணங்களிற் றயக்குறு தெடுத்து விடுகையாலுஞ் சாத்திரமெனப் பெயராயிற்று, இதுவடமொழி.

பலவும் — "அறம்பொரு ளின்பம்வீ டென்னு மிவற்றைத், திறப்பெற வேதாகமங்கள் செப்பும்—அறைந் தவற்றுள், வீட்டினை வீடல்லா வினைதனையும் விளங்கக், காட்டுமது சாத்திரமேகாண்" "மருந்தின்விதத்தைப் பணி பிணி மாற்றத், திருந்தவே செய்யுந் திறமு — மருந்திடுடு, மந்திரமுஞ் சொல்லி விடத்தினையு மாற்றிவிக்கும், தந்திரமுஞ்

சாத்திரமே தான்" "எழுத்தின் விதிச்சொல் விதிபொழுவாயும், விழிக்க விளக்க விளம்புற்—மொழித்திறமும், காலவிதன்றன்னைப் பலத்தினையுங் காட்டுமதற், கேதுநாலாஞ்சாத்திரம்" பிறவும் வந்துழிக்காண்க.

உணர்ந்து	இவைகளெல்லாத்தையு மறிந்து.
பன்மார்க்கப் பொருள் பலவுங் கீழாக மேலாம் பதிபசு பாசந் தெரிந்து	இங்ஙனங்கூறிய சமயிகடமதகோட்பாட்டை பரமென்று நிறுவ வதனையாகாதென்று கீழ்ப்படுத்திச் சித்தாந்த வசனத்தா னிராகரித்தற் கெல்லாம் விசிட்டமான பதிபசுபாசமாகிய முப்பொருள்களை யுள்ளபடி யறிந்து.
பரசிவனைக்காட்டு நன்மார்க்க ஞானத்தைநாடி ஞானஞேயமொடு ஞாதிருவு நாடாவண்ணம்	ஞானமாகிய வறிவுடனு மதனாலறியப்படும் பொருளாகிய ஞேயத்துடனு மறிவானை யொருமுகலெனக் கருதாது கேவலம் நின்று ஞானசத்தி முதலிய மூன்றினுக்கு மப்பாற்பட்ட சிவனை, ஞானாசாரிய னுபதேசித்தவழியே துரியத்தைக் கடந்த சமாதி பொருந்துதற் பொருட்டு 'ஞானமொடு ஞேயமொடு ஞாதிருவு நாடாவண்ணம் பரமசிவனைக் காட்டும் நன்மார்க்க ஞானத்தை நாடி' என மாறிப் பொருளுரைக்க.
பின் மார்க்கச் சிவனுடனும் பெற்றி ஞானப்பெருமை யுடையோர்	அந்தச் சத்திகளுடன் கலந் தப்பாற்பட்ட பின் சமரசீபாவமா யாநந்தத்தைப் பொருந்தி யதனை யனுபவித்த ஞாதாக்கள் பெறும்பலன் யாதெனிற்?
சிவனைப் பெறுவர்காணே.	சிவசாயுச்சியமாகிய பரமுத்தி யடைவர்கள். எ-று.

ஞானப் பெருமை யுடையோர் எழுவாய்,பெறுவர் பய
னிலை
இதற்குக் காமிகம் சிந்தியம் காந்தபுராணத்து மறிக·(உஉ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் ஞானமார்க்கத் தடைவு கூறுகின்றது.

பின்மார்க்கச் சிவனுடனும்பெற்றி சன்மார்க்கம் - சரியை கிரியா யோகமார்க்கானுஷ்டானத்துக்குப்பின் ஷடத்துவ மார்க்கத்தினாலே சிவ சாயுச்சியத்தை யடையுந் தகைமை சத்திய நெறி.

சத்தியநெறி என்றது சரியையாதி அநுஷ்டானங்களும் அதனாலடையும் சாலோக்கியாதி முத்திகளும் அநித்தியமாகையால் அசத்தியம். ஞானமும் இதனாற் பெறும் சிவசாயுச்சிய முத்தியமாகையாற் சத்தியம். ஆகையாற் சத்தியநெறியென்பதற்குப் பரியாயமாகச் சன்மார்க்கமென்றது. அஃதாவன:—

சகலகலை வேதபுராண சாத்திரங்கள் சமயங்க டாம்பலவு முணர்ந்து-

கலைபுராண வேதமென்றது ஜாதியொருமை.

உணர்ந்தென்பதை பதந்தோறு மொட்டிப்பொருளாக்க.

இவ்விடத்துக் கலைகளென்றது பாசஞானங்களை.

இதற்குச் சம்மதி.

'மொய்தருபூதமாதி' என்ற விருத்தத்திலே எழுதப்பட்டது.

அந்த ஞானங்கடானவையிற்றுக்களினாலே யறியப்படுமென்னில் ?—

வேதங்களுணர்ந்து - வேதங்களையோதி வேதாந்தப்பொருள்களை யறிந் ததனால் வேதாத்தியயநத்துக்கு அதிகாரமில்லாத ஸ்திரீ சூத்திர துவிசபந்துக்கள்,—

புராணங்க ளுணர்ந்து - புராணங்களையோதி யதன்பொருளை யறிந் ததனால்,—

இதன்றிச் சிவ தீக்ஷாயுத்தராய் * விசிஷ்டயாகிய சிவதர்மிகளானபேர் காமிகாதி சிவசாஸ்திரங்களை யோதி யதிலே பூர்வபக்ஷமாகச் சொல்லும் சார்வாகாதி சமயங்களினுடைய பலச்ருதி லக்ஷணங்களை எல்லாமறிந்து,—

இதற்குச்சம்மதி சித்தாந்தபோதத்திலே,—

वेदान्तश्रवणं तर्कश्रवणं नाम विद्यते ।
सूत्रागमस्य विज्ञाने कारणं श्रवणं विदु-
र्नाम ॥ श्रुतार्थश्रवणेष्वानिष्ठाः सर्वशास्त्र-
ष्वनुष्ठानात् । श्रवणान् वृत्तियोगाच्च श्रो-
तृत्वं देवनागमस्यैव ॥ एतेषां
विरक्तानां भाषया तत्त्ववेदनम् ॥

பன்மார்க்கப் பொருள்பலவு மிழாகமேலாம் பதிபசுபாசந்தெரிந்து - பலசமயிகளுடைய நெறியிற் சொல்லும் பதார்த்தங்கள்தாழ சர்வோன்னதமான பதிபசுபாசமாகிய பதார்த்தத்திரியங்களைத் தெரிந்து.

தெரிந்தென்றது தெரித்தென விகாரமாயிற்று.

இவ்வளவும் பரஞானம்

மேற் பரஞானங் கூறுகின்றது.

இதற்குச் சம்மதி யளவையிலே 'அநாதியே யமலனுகி' என்ற திருவிருத்தத்திலே எழுதப்பட்டது —

பரசிவனைக்காட்டு நன்மார்க்க ஞானத்தைநாடி - நில ருத்திராதி சதாசிவ பரியந்தம் சிவாதிஷ்டித விக்கிரஹங்களுக் கெல்லாம் சிவனென்னு நாம முண்டாதலால் இவர்கள் பரசிவ னென்று கருத்தாய் நிஷ்கள சிவனைப் பரசிவனென்றது. அந் தப் பரசிவனைத் தரிசிப்பிக்கும் ஞானம் நன்மார்க்கமென்றது, சரிதையாதிகளைப்போல காயக்கிலேசாதி இல்லாமல் அப்பியா சாவஸ்தையிலும் †சுகரமாகையால்.

இனிச் சூரியனையுந் தன்னையுந் தரிசிக்கிறவனையுந் தரிசிப்பி க்கும் சூரியப்பிரகாசம்போல, சிவனையுந் தன்னையு மான்மாவை யும் தரிசிப்பிப்பதான சிவசமவேத சிற்சத்தியைத் தரிசித்த தனுல் சிவனைத் தன்னிடத்து வேறாகக்கண்டு.

இது விகற்பஞானம்.

மேல் நிர்விகற்ப ஞானமாவது?—

ஞானஞேயமொடு ஞாதிருவு நாடாவண்ணம் - காக்ஷியாகிய சிவஞானத்தையும் காணப்படுவதான சிவனையும் காண்பவனு ன தன்னையும் பகுத்தறியு முறைமையின்றிச் சிவமாகிநிற்பது,—

ஞானப்பெருமை யுடையோர் சிவனைப் பெறுவர்காணே - இவ்வாறு ஞானுதிக்யத்தினுலே சிவாநந்தாநுபவத்தை யா ன்மலாபமாகப் பெறுவராதலா லிந்த அநுபவத்தை ஞானுப்பி யாசத்தினுலே நீயு மனுபவித் தறிவாயாகவென் றிதன் பொ ருள்.

ஏகாரம் - ஈற்றசை.

* விசிஷ்டம்-மேலானது, † சுகரம்-சுளுவாய்ச் செய்யக் கூடும்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

நன்மார்க்க ஞானத்தால் - சிவாசமத்திரிவழி சரிக்குஞ் சிவசத்தி விளக்கில் விளங்கிய சிற்சத்தி மூலத்தில் முளைத்து வாயிற் காட்சிகடந்து யோகக்காட்சி தொடர்ந்து நடுநிற்கு மறிவினால் சிவனை,—நாடி - அதுவிதுவல்ல வதுவென்றறிந்து ரூப தரிசனமுற்றுப் பின் மகாமந்திரத்திரிவழிபற்றி முற்றும் போய் மே னிராலம்பினியாஞ் சிவசத்தி விளக்கில் விளங்கிப் போய்ச் சமனைகடந் துன்மனை பற்றி விசேஷித்து ரூப தரிசன முற்று மகாவாக்கியப் பொருளுன்னித் தியானமுமிழ்த் துபரி விரியுஞ் சிற்சத்திப் புத்தி வித்தின் முளைத்துக் காட்சிபோற் காட்டி நடிக்கு ஞானசிறப்புகருதித் தியானக் குறியாய்ச் சிற்சத்தி மனச் சங்கற்பக் கிரியை மணந்து பின் கோத்த சிற்போதத்தாற் றியானித்து,—ஞானஞேயமொடு ஞாதிருவு நாடாவண்ணம்-தியானிக்குமான்மா, தியானம் பண்ணப்படுமாம், தியான முபலக்ஷிக்குஞ் சிவ மிம்மூன்றெனுஞ் சித்தாந்த வாக்கியார்த்தங்களொரு நெறியானுந் தோற்றுதென்னில்? நித்திரை முத்திரை நிலைபெறுமாதலாற், சிற்சத்திப் புத்தி வித்துமிழ்க்குஞ் சூக்ஷ்ம யோசன விகற்ப சாந்திர சசலச தரங்க போதப் பிரவாகக்குறித் தியானத்தின் றுறைப்புக்குறி நிர்வியோசன நிர்விகற்ப நிரந்தர நிர்ச்சல நிஸ்தரங்க போதப் பிரவாக சமாதியிலும் "ஸ்வரூப சூந்யமிவஸமாதி" எனும் பதஞ்சலி வசனத்தா லொரு நெறி யோகமாய் முச்சூனியம் போல முப்பொருள் விள்ளாது விண்டு தோற்றாது தோற்ற நோக்காது நோக்கி,—பின்மார்க்கச் சிவனுடனும் பெற்றி ஞானப் பெருமை யுடையோர்-முன்பின் சொன்ன சன்மார்க்க நிராலம்ப சிவயோக சிவசமாதி யுறைப்புற்ற சத்துக்கள்,—சிவனைப் பெறுவர்காணே - சிவனோடு சமமாய் ம

லத்தால் மறைந்திருந்து, மலமுத்தியால் வியத்தியாய் விரிந்து விளக்குஞ் சிவத்துவத்தை ஸ்வரூப லக்ஷணமாகச் சாக்ஷாத்க ரித்திருப்பர் தானே.

மற்றைய வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

——o——

புறத்தொழி லகத்தொழி லிரண்டுமின்றி அறிவுத்தொழின் மாத்திரையானே அம்மூன்றுதிருமேனிக்கும் மேலாய் அகண் டாகார நித்தவியாபக சச்சிதானந்தப் பிழம்பாய் நிறைந்துநிற் கின்ற சிவபிரானிடத்திற் செய்யும் வழிபாடு ஞானமெனப்படு மென்பதாம்.

அவ்வழிபாடிவையென்பது முன்னர் வகுத்துக் கூறப்ப டும்.

ஈண்டு வேதமென்றது வேதஞ்சிவாகமமென்னு மிரண்டினு முள்ள கருமகாண்டத்தை.

சிவாகமமும் வேதமென வழங்கப்படும்.

கீழுள்ளவற்றைக் கீழெனக் கண்டு கழித்தாலன்றி மேலுள் ளன பயன்படாவென்பார், கீழாகவென்றார்.

கழித்தென்பது சொல்லெச்சம்.

பதிபசுபாசந் தெரித்தலாவது அம்மூன்றுபொருளையுந் த டத்தலக்கணத்தின் வைத்து வகுத்துணர்த்தல்.

பரமசிவனைக் காட்டலாவது, அம்மூன்றனுட் பதிப்பொரு ள் ஏனைப்பாசபசுக்களுக்கு மேலாதலினிதுவிளங்கச் சொரூப லக்கணத்தின்வைத் துணர்த்துதல்.

ஈண்டு ஞானமென்றது ஞானசாஸ்திரத்தின் மேற்று.

தெரித்துக்காட்டு ஞான நூலெனவே, ஞானகாண்டமெல்லாந் நூலாருந்ததிநியாயம்பற்றி இங்ஙனமிருபகுதிப்பட நிகழுமென்பதாயிற்று.

நாடுதல் சிந்தித்தல்.

நாடியெனவே, நாடுதற்கு வேண்டப்படும் ஓதல்கேட்டல் களும் உடன் கொள்ளப்படும்.

பின்மார்க்கச்சிவன் வினைத்தொகை.

பின்னுதல் அத்துவிதமா யிசைதல்.

நாடாவண்ணம் பின்னிய சிவனென்றுரைக்க.

மார்க்கம் இடைப்பிறவரல்.

சன்மார்க்கமாவதுணர்ந்து கழித்து நாடியுடனும்பெற்றியென வினைமுடிபு செய்க.

மேல் இச்சரியை யிக்கிரியை யென்றாற்போல ஈண்டும் இஞ்ஞானப்பெருமையெனச் சுட்டு வருவித்துரைக்க.

இவை நான்கு செய்யுளானும் மேலெடுத்துக்கொண்ட சரியைமுதலிய நான்கிற்கு மிலக்கணங் கூறப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

மேல் சன்மார்க்கத்தின் முறைமை யருளிச்செய்கிறார்.

சன்மார்க்கஞ் சகலகலைபுராணவேத சாத்திரங்கள் சமயங்கள் தாம்பலவு முணர்ந்து — சன்மார்க்கமாவது? பலகலை ஞானங்கள் வேதங்கள் பலசாத்திரங்கள் புராணங்கள் உலோகாயதன் முதலாயுள்ள புறச்சமயங்க ளுட் சமயங்களென்று சொல்லப்பட்ட பலவகையிற்றையு மாராய்ந் தறிந்து, அப்படியறியவே பல மார்க்கத்திலுள்ள பொருள்களெல்லாஞ் சத்தியம்போலே தோன்றி அசத்தியமாய்ப்போம். ஆகையாலே,—பன்

மார்க்கப் பொருள்பலவுங் கீழாக மேலாம் பதிபசுபாசந்தெரித்து - பலசமயங்களிலுஞ் சொல்லப்பட்ட வத்தங்களெல்லாங் கீழ்ப்படுத்தி எல்லாததுச்கு மேலாயிருக்கிற பரமேஸ்வரனுடைய விலக்ஷணத்தையும் ஆன்மாக்களுடைய விலக்ஷணத்தையும் பாசங்களுடைய விலக்ஷணத்தையும் கூறுசெய்து,—பரசிவனைக்காட்டு நன்மார்க்க ஞானத்தைநாடி-மேலான பரமேஸ்வரனைத் தரிசிப்பிக்கைக்கு நல்ல வழியான பரஞானத்தை யாசாரியனாலே யறிந்து,—ஞானஞேயமொடு ஞாதிருவு நாடாவண்ணம் - இவனுக்குக் காட்டுகிற ஞானமுங் காணப்படுவதாயிருந்துள்ள ஞேயமும் அதனோடு காண்கிற ஞாதுருவாகியதானும் என்கிற சங்கற்பங்களும் பொருந்தாதபடி,—பின்மார்க்கச் சிவனுடனும்பெற்றி - பின்பு இந்தஞானத்தின்வழித்தாய் தற்போதஞ் சீவியாமனிற்கவே சிவனைவிட்டு நீங்காமல்நிற்கிற ஞானத்தைப்பெற்று ஞானமேயாய் விடுவர்கள். இந்தநிலை கூடினவர்கள்,——ஞானப்பெருமை யுடையோர் சிவனைப் பெறுவர்காணே - இப்படிப் பரிபூரணமான அந்த ஞானத்தைப் பொருந்தினவர்கள் அந்த ஞானத்தினாலே சிவனோடே கூடிச் சிவனாய்நிற்பர்கள்.

பின்மார்க்கச் சிவனுடனும் பெற்றியென்றது ஆன்மதரிசனம்.
ஞானப்பெருமை யுடையோரென்றது ஆன்மசுத்தி.
சிவனைப்பெறுவர்காணே யென்றது ஆன்மலாபம்
என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, சன்மார்க்கமாவது வேதாகம புராண சாத்திரங்க ளெல்லாவற்றையு மாராய்ந்தறிந்து உட்சமயம் புறச்சமயங்களிலுள்ள பேதங்களையும் அவை யொன்றுசொன்னது ஒன்றுசொல்லாத வத்தங்களையு மறிந்து அவையிற்றைக் கீழ்ப்படுத்தி யவற்றிற்கு மேலாயிருக்கிற பதிபசுபாசமார்க்கத்

தினுண்மையை யறிவதென்றும் அந்தப் பதிஞானத்தாலே சிவனுடைய திருவடியைப் பெறுகிறது சாயுச்சியமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

சன்மார்க்கம் - நன்னெறி யாவது,— சகலகலை புராண வேத சாத்திரங்கள் - சகலமான கலைஞானங்களும் புராணங்களும் வேதாகமங்களி லுள்ள கருமகாண்டங்களும் மற்றச்சாத்திரங்களும்,— சமயங்க டாம்பலவு முணர்ந்து - ஏனைச்சமய நூல்கள் பலவுமாராய்ந்து,— பன்மார்க்கப் பொருள்பலவுங்கீழாக-பலவழிப் படுகின்ற பொருள் முழுவதுங் கீழெனக் கொண்டு கழித்து,— மேலாம் பதிபசுபாசந் தெரித்து-மேலான பதிபசு பாசமாகிய மூன்று பொருளையுந் தடத்த லக்கிணத்தில் வைத்து வகுத்துணர்த்தி,— பரசிவனைச் காட்டு நன்மார்க்க ஞானத்தை நாடி - அம்மூன்றனுட் பதிப்பொருளேனைப் பாசம் பசக்களுக்கு மேலாத லினிதுவிளங்கச் சொரூபலக்ஷணத்தின் வைத் துணர்த்தலாகிய நல்லவழிக்கேதுவான ஞானகாண்டத்தை போதல் கேட்டல் களுடன் சிந்தித்து,— ஞானஞேயமொடு ஞாதிருவு நாடாவண்ணம் பின்மார்க்கச் சிவனுடனும் பெற்றி-ஞாதரு ஞானஞேய மாகிய பகுப்பின்றி யத்துவிதமாயகண்டாகார நித்திய வியாபக சச்சிதானந்தப் பிழம்பாய் நிறைந்து நிற்கின்ற சிவபிரானோடு கலக்குந் தன்மைத் தாகிய ஞானப் பெருமை யுடையோர்,—சிவனைப் பெறுவர்காணே-ஞானத்தை யனுட்டித்தோரே சாயுச்சியமாகிய பரமுத்தியைப் பெறுவர்.

இவை நான்கு செய்யுளானுமே லெடுத்துக்கொண்ட சரி யை முதலிய நான்கிற்கு மிலக்கணங் கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

கருமயாக முதலியவற்றால் பல மடையப்படாதோ வெ னின்? அவற்றிலும் ஞானயாகமே சிறைப் புடைத்தெ ன் றுணர்த்து கின்றார்.

ஞானநூ றனையோத லோதுவித்த னற்பொருளை க் கேட்பித்த றான்கேட்டனன்று, வினமிலாப் பொரு ளதனைச் சிந்தித்தலைந்து மிறைவனடி யடைவிக்கு மெ ழின்ஞானபூசை, யூனமிலாக் கன்மங்க டபஞ்செபங்கடு யான மொன்றுக்கொன் றுயருமவை யூட்டுவது போ க, மானமையான் மேலான ஞானத்தாலரனை யர்ச்சிப்ப ப்பர் வீடெய்த வறிந்தோரெல்லாம். (உகூ)

(இ-ள்) ஞானநூறனையோதல். காமிகாதியான திவ்யாகமங்களை யோதல். அஃதாவது, ஆசாரியன் சுத்தத் தலத்திலே வடக்குக் கிழக்கு முகமாக விருந்து ஆசீரண முதலிய குற்றங்களை நீக்கித் தனது முன்னே மெழுகி யதிற் பருதிகளைச் சூழவைத்து நடுவே சிவனை யும் பக்கத்திற் குருவையுங் கணபதியையும் பூசித்து, அதிலே வி திவழிச்செய்த யந்திர பீடத்தை வைத் ததன்மேலே பரிவட்டம் விரித் ததிலேவைத்துப் பூசித்துப் படித்தல்.

ஓதுவித்தல் அந்தஆசாரியன் மாணுக்கர்க் காகமங்களை போதிக்கு மிடத் தபிமுகமாக மாணுக்களை யிருவென்று கற்பித்துச் சிருட்டிகாலத்தி லாகமங்கள் பரம்ப

ரை பரமசம்பந்தம் தற்சம்பந்தம் அந்தராளம் அதிவ்வியம் திவ்யாதிவ்யம் எனவாறு சம்பந்தத்துடன் ஆசாரியர் பாரம்பரை முதற்கூறித் தனதாசாரிய பரம்பரையாக ஆகமங்கேட்ட முறைமை யுணர்த்திப் பின்பு தான்சொல்லப்போகிற பொருளையு மிதனுற்பெறும் பலத்தினையு மவனுளங்கொள வுரைத்தல்.

நற்பொருளைக் கேட்பித்தல்	"கருத்துப் பதப்பொருள் காட்டுவினு விடை" எனக் கூறிய வைந் தறுப்புடனு மாணாக்கர்க்கு வியாக்கியானஞ் செய்வது.
தான் கேட்டல்	ஐயந்திரிபறத் தன்னாசிரிய னிடமாகக் கேட்டல்.
நன்றுணமிலாப் பொருளதனைச் சிந்தித்தல்	தான் கேட்ட பொருள்களைத் தனக்கொத்த சம்பிரதாயிகளுடன் கூடியிருந்து நாடோறுஞ் சிந்தித்தல்.
ஊந்து மிறைவனடி யடைவிக்கும்	ஓதல்முதலிய வைந்தினையுங் குற்றமறச் செய்தார்க்குச் சிவனது திருவடியை யடைவிக்கும். அஃதெக்காரணத்தா லெனில்?
எழின் ஞான பூசை	அழகிய ஞானபூசை யென்று திவ்வியாகமங்களோதுதலால்,
ஊனமிலாக் கன்மங்கள்	சிவபூஜை முதலிய நித்திய கன்மங்கள் கன்மயாகமெனப் பெறும்.
தவம்	சாந்திராயண விரத முதலியவற்றாற் சரீரத்தை மெலிவித்தல்.
செபங்கள்	மானதமுதலிய மூவிதத்தால் ஜபஞ்செய்வது.
தியானம்	"காண்பானுங் காட்சியுங் காணப்படும் பொருளு-மாண் பாக் தியான வகை" என்ப

தனுற் றனக்கு வேண்டியதொரு பொருளை யாற்றுநீரான தி

டையரும லொழுகுமாறுபோலத் தியானஞ் செய்தல் தியான யாகம்.

ஒன்றுக் கொன்றுயரும்	கன்மத்தைப் பற்றத் தவம் பதின்மடங்கு பலமதிகம், அதனைப் பற்ற ஜபம் நூறுமடங் கதிகம், அதனைப் பற்ற தியானம் நூறு

மடங்கதிகம், அதனைப்பற்ற ஞானயாகமானது சாதனப்பிரயாசமற்பமாய் மகத்தா யளவற்ற பலத்தைக் கொடுப்பதா யிருக்கும்.

கன்ம முதலிய நான்கினையு மனுட்டித்தாற் பெறும்பலன் யாதெனின்?

அவை யூட்டுவது போகம்	அவைகளின் வழிநின் றனுட்டித்தவர்களுக்குப் போகத்தைக் கொடுக்கும். அந்த போகமும் புசித்துத் தொலைத்தவாறே மற்

றொரு சரீரமெடுத்தற்குக் காரணமாம்.

ஆனமை யால் மேலான ஞானத்தா லரனைய ர்ச்சிப்பர் விடை யீத வறிந்தோரெல்லாம்.	இத்தன்மை யுடைத் தாதலினாலே மோட்சத்தை யடையக் கருதின ஞானவான்கள் விசிட்டமான ஞானபூசனையே யனவரதமுஞ் செய்வர்கள். எ-று.

ஞானபூசை யடைவிக்குமெனவும் அறிந்தோ ரர்ச்சிப்பரெனவும் எழுவாய் பயனிலை கூட்டுக.

இதற்குச் சிவதருமோத்திர மெனவறிக. (உ௫)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் சைவர் அநாதிசைவர் ஆதிசைவர் மஹாசைவர் அநுசைவர் அவாந்தரசைவர் பிரபரசைவர் அந்தியசைவர் என்றேழுபேதத்திலே அநாதிசைவரும் பிரபரசைவரும் அந்தியசைவரு நீங்கலாக நின்ற நாலுபேருக்கும் விசேஷ தர்மமாகிய பஞ்ச மகா யக்யம் கூறுகின்றது.

ஊனமிலாச் சன்மங்கள் தபஞ்செபந் தியானங்களிவை யொன்றுக்கொன் றுயரு மூட்டுவது போகம் ஞானநூறனை யோத லோதுவித்த னற்பொருளைத் தான்கேட்டல் கேட்பித்தல்நன்று மீனுமிலாப் பொருளதனைச் சிந்தித்த லைந்து மெழின் ஞானபூசை இறைவனடி யடைவிக்கு மானமையான் மேலா ஞானத்தா லரனை யர்ச்சிப்பர் வீடெய்துவ ரறிந்தோரெல்லாம் என மாறிப் பொருளுணர்க்க.

ஊனமிலாக் கன்மங்கள்-* பிராம முகூர்த்தத்திலே யெழுந்திருந்து சிவசிந்தனை முதலாகச் சிவபூஜை யக்நிகாரியம் துரியசந்தி பரியந்த மாகமோக்தப் பிரகாரங்களிலே அந்தந்த வர்ணாஸ்ரமத்துக்கு வேறாகக் கிரியைகளை யேற்றக் குறைச்சலறப் பண்ணுவது கன்மயக்கியம்.

தவம் - சாந்திராயணம் கிருச்சிரம் மாசோபவாசம் அஷ்டமியாதி † யநசன விரதங்களினாலே தேகத்தைத் தபிப்பிக்கிறது தபோயக்கியம்.

ஜபம் - அந்தந்த வர்ணாஸ்ரமானுகுணமான சிவமந்திரத்தை வாசகமாகத்தான் ‡ உபாம்சுவாகத்தான் மானசமாகத்தான் மேற்சொல்லும் பிரகாரத்திலே ஜபிப்பது ஜபயக்கியம்.

தியானம்-இருதயாதி ஸ்தானங்களிலே சதாசிவாதி மூர்த்திகளைப் பலகாலும் தியானிப்பது தியானயக்யம்.

இவை யொன்றுக்கொன்றுயரு மூட்டுவேது போகம் - இந் நாலும் ஒன்றுக்கொன்று அதிக பலங்களைக் கொடுப்பதாய்ச் சிவலோகத்திலே மஹா போகங்களைப் புசிப்பித்துக் காலவிறுதியினாலே புநர் ஜநநத்தை யுண்டாக்கும்.

ஞான நூறனை யோத லோதுவித்தல் நற்பொருளைத்தான்கேட்டல் கேட்பித்தல் நன்றும்- ஞான சாஸ்திரத்தைத் தான் முன்னொடு பின் மலைவற ஆசாரியனிடத்திலே படித்தல், தான்படித்தபடி யொருவர்க்குப் படிப்பித்தல், பாசபசுபதியென்னு மூன்று பொருளுக்குள்ளே ஞானாநந்த ஸ்வரூபியாகையால் நற்பொருளாகிய பதியை மனமுதலான கரணங்களை நீக்கிப் பாவிக்கும்படி யாசாரியனிடத்திலே தான் கேட்டல் அவ்வாறு தன் சிஷ்யனுக்குப் போதித்தல்.—

ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்து மெழின்ஞானபூசை யிறைவனடி யடைவிக்கு மானமையான மேலானஞானத்தா லரனையர்ச்சிப்பர் வீடெய்துவ ரறிந்தோரெல்லாம்- பாசமானது ஜடமு மலமு மாகையினாலும் பசு அந்த மலசம்பந்தமாகையினாலும் ஒழிமுக்கு மல்லாமல் ஸ்வபாவ நின்மலமாய் நித்தியானந்தமயமா யுள்ள பரம்பொருளை யான்மாவிலே வேறறப் பாவிக்கையா லவ்வைந்தும் முன்சொன்ன நாலு யக்ஞங்களிலும் விசிஷ்டமாகிய ஞான யக்யம். இது சிவசாயுச்சியத்தை யடைவிக்கும். ஆதலினாலே பாச பசுஞானத்துக்கு மேலான சிவஞானத்தினாலே சிவனைப் பூசைபண்ணுமவர்கள் மோக்ஷத்தை யடைய வறிந்தோர்க ளென் றிதன்பொருள்.

* பிராமமுகூர்த்தம் - விடிய ஐந்துநாழிகை, † அநசநம் - சாப்பிடாமை, ‡ உபாம்சு - ரஹஸ்யம்.

ശൈവാഗമേഷു മുഖ്യാ ശൈവാഗമാ ശൈഷാം ശൈവാ

ശ്രീവിഷ്ണു। ചന്ദ്രൌ ശൈവഃപാദ്യഃ ശൂദ്രി ശൈവ

த்விதீயக: ॥ த்ருதீயஸ்து மஹாஶைவஶ் சதுர்த்தஸ்த்வ
நுஶைவக: ॥ பஞ்சமோவாந்தரஶைவஷ் ஷஷ்ட: ப்ரவ
ர உச்யதே । ஸப்தமோந்த்யஶைவஶ்ச ஶைவா
நாம் பேத உச்யதே ॥ அநாதிஶைவ ஸ்ஸஶிவ ஸ்யாதி
ஶைவஶ்ஶிவத்விஜ: । விப்ரஶ்ச மஹாஶைவா: க்ஷ
த்ரியோ வைஶ்ய ஏவ ச ॥ அநுஶைவ ஸாவந்த்ரா
தாஸ்ஸச்சூத்ராஸ்சாவாந்தர ஸூத்ரா: । ஸவர்ணாம்பஷ்ட
உக்ராஸ்து க்ஷத்தாரஶ் பாரஶவஸ்தயா ॥ ப்ரவர ஶை
வ ஶூத்ராத: ப்ரோச்யதே ஸரஜம்ஜயா । அந்யா
ஸாமேவ ஜாதீநா மந்த்யஶைவ மிஹோச்யதே ॥ ஸு
ரப்ரஜாத்ரிகாயந்தரைஶ்ச ஹேமைஶ்வர்யஹாவிஶே
ஷத: । கர்மயஜ்ஞ ஸமாக்யாத: தப: க்ருச்ச்ரசாந்த்ராயணாதி
கம் ॥ ஸாத்யாயஶ்ச ஜப: ப்ரோக்தா ஶிவமந்த்ரஸ்ய ஸத்
க்ரியா । த்யாநயஜ்ஞ ஸமாக்யாத: ஶிவசிந்தாஸமா
ஹித: ॥ அத்யாபநம் அத்யயநம் வ்யாக்யா ஶ்ரவண
சிந்தநம் । ஏவம் பஞ்சப்ரகாரோயம் ஜ்ஞாநயஜ்ஞ: ப்ர
கீர்த்தித: ॥ உத்தரோத்தர வைஶிஷ்ட்யம் ஸர்வேஷாம்
பரிகீர்த்திதம் । பஞ்சாநாமபி யஜ்ஞாநாம் ஜ்ஞாநய
ஜ்ஞோ விஶிஷ்யதே ॥

ஞானப்பிரகாசருனா வருமாறு.

—o—

சிவசித்தாந்த சாத்திர ஞானமு மறிந்தே தியானசமாதி பண்ணப்படுமாதலால், சாக்ஷாத்கார சாதன சாக்ஷாத் சன்மார்க்க ஞானபூசையாகு நிராலம்ப சிவத்தியான சமாதி முதலியவற்றைச் சாதிப்பிக்குமாதலால், சன்மார்க்க ஞான பூசையாமென்று சாற்றுகின்றார்.

சிந்தித்தலுக்குப்பின் தெளிதல் என்பதைகூட்டி ஆறென்று பண்ணுக.

சாலம்ப சிவ சக மார்க்க ஞானசாத்திய சாலம்ப சகமார்க்கத் தியான சமாதி முதலியவற்றைக் குறித்து நிராலம்ப சிவசன்மார்க்க சாஸ்திரஞான முயர்ந்தது, நிராலம்ப சிவசன்மார்க்கத் தியான சமாதி முதலியற்றைக் குறித்துத்தாழ்ந்ததென்பதறிக.

அப்படிச் சிவாகமஞ் செப்பியது காண்பிப்பாம். கிரியாவான்கள் பத்துப் பெயர்க் கதிகன சாந்திராயண முதற் றபவிரதி, தபவிரதிகள் நூறுபெயர்க் கதிகன் சபசீலன்; சபசீலர்க ளாயிரம் பெயர்க் கதிகன் சிவஞானி, சிவஞானிகளில் லக்ஷம்பெயர்க்கதிகன் சிவத்தியானி, சிவத்தியானிகள் கோடிபெயர்க்கதிகன் சிவசமாதிமான், சிவசமாதிமான்க ளனந்தம்பெயர்க் கதிகன் சிவசாக்ஷாத்காரவான்.

சிவத் தியானம் சிவ சமாதி சிவ சாக்ஷாத் காரங்களும் விரியோத்திரேக விசிஷ்டச் சிறப்பு ஞானங்கள்தானே.

பதப்பொருள் வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

சிவதருமோத்தரத்திற் கூறியவாறே ஒன்றற்கொன்றேற்ற மாகிய கன்மவேள்வி தவவேள்வி சபவேள்வி தியானவேள்வி ஞானவேள்வியென்னு மைந்தனுள், முன்னைநான்கும் போகத் தையூட்டுவனவாக, ஒதன்முத லைவகைப்பட்ட ஞானவேள்வி யொன்றுமே வீடுபேற்றைத் தருவதாகலான் அஃதுணர்ந்தோ ரா லங்ஙன மைவகை ஞானவேள்வியே வேட்கற்பாற்றென்ப தாம்.

தெளிதற்கும் நிட்டைக்கும் நூல் வேண்டாமையின் நூலா னாகற்பாலனவாய ஏனையைந்துமே ஈண்டு வேள்வியென் றெடுத் துக்கொள்ளப்பட்டன.

நற்பொருளைத்தான்கேட்டல் கேட்பித்தலெனக் கேட்ட ர்குப்பின் வைத்தோதாமையான, ஈண்டுக் கேட்பித்தலென் றது, ஆசிரியனை வழிப்பட்டுத் தான் கேட்டலின்றியும் ஓசவு மோதுவிக்கவும் பெற்று நூலின்க ணதிகாரமுடையராயினர் அந் நூற்பொருளைத் தமது மதிநுட்பத்தாலுணர்ந்து தம்மாலோ துவிக்கப்பட்டார்க்கு உரைத்தலை யென்பதுபெற்றும்.

கேட்டற்குப் பின்னர்த்தாகிய ஏனைக் கேட்பித்தல், பிறர் க்குரையிடத்தே நூல்கலப்பாலுமென்பவாகலிற் சிந்தித்தற்பய த்தாய் அதனுளடங்குதலின், வேறுவைத் தெண்ண வேண்டா வாயிற்று.

அற்றாகலினன்றே வருஞ்செய்யுளிற் கேட்டற்குப்பின் சிந் தித்தலே கூறியொழிந்ததூஉமென்க.

நிரம்பவழகியருரை வருமாறு.

———o———

முன் சொன்ன பரஞானத்தாலே சிவனைக் கூடுதற் கரிதென்ற மாணாக்கனை நோக்கி அபரஞானத்தாலே கூடுகிற முறைமை மேலருளிச்செய்கிறார்.

ஞான நூலதனையோதல் ஓதுவித்தல் நற்பொருளைக்கேட்பித்த றான்கேட்டல்நன்றா யீனமிலாப் பொருளதனைச் சிந்தித்தலைந்தும் - ஞானசாஸ்திரங்களைத் தானோதலும் பிறர்க்கு அந்தச் சாஸ்திரங்களை யோதுவித்தலும் அந்தச் சாஸ்திரங்களிலுண்டான நல்ல வத்தங்களைப் பிறருக்குச் சொல்லுதலும் தான் பிறரிடத்திலே கேட்டலும் நன்றாகக் குற்றமற்ற வந்தப்பொருளை யாராய்ந் தறிதலுமென்று சொல்லப்பட்ட வைந்தும்,—இறைவனடி யடைவிக்கு மெழில்ஞானபூசை - இங்ஙனஞ் சொல்லப்பட்டவை யெல்லாங் கர்த்தாவுக்கு அழகிய ஞானபூசையாயிருக்குமாகையாலே அவனுடைய திருவடியிலே பொருந்தும்படிபண்ணும்.—ஊனமிலாக் கன்மங்கள் தவஞ்சபங்கள்தியானமொன் றுக்கொன் றுயருமிவை யூட்டுவது போகம்-குற்றமில்லாத எக்யாதி கன்மங்கள் தபசுகளைப்பண்ணுகை ஜபங்கள் தியானங்கள் இவை தன்னில் ஒன்றுக்கொன்று மேற்பட்டிருக்கும். அப்படியிருந்தாலும் புசிப்புக் கேதுவொழிந்து இவையிற்றாலே மோக்ஷமுண்டாகாது.—ஆனமையால் மேலானஞானத்தா லரனையர்ச்சிப்பர் வீடெய்த வறிந்தோரெல்லாம் - ஆகையாலே இவையிற்றுக்கு எல்லா மேலாயிருக்கிற சிவனைப் பெற்றுச் சிவானுபவத்தை அனுபவித்துக்கொண் டிருப்பர்கள் மோக்ஷத்தைப் பெறுகிற முறைமையறிந்த பெரியோர்களெல்லாம்.

இதனாற் சொல்லியது, ஞானசாஸ்திரத்தை யோதுகிறது முதலாயுள்ள அபரஞானத்தாலே பரஞானத்தைப் பெறலாமெ

ன்றும் கன்ம வெச்யமுதல் நாலும் ஒன்றுக்கொன்று மேலாயிருக்குமென்றும் அவையிற்றினால் போகமொழிந்து மோக்ஷமுண்டாகாதென்றும் ஞானத்திநாலே மோக்ஷமுண்டாமென்றும் அறிந்த பெரியோர்கள் அனவரதமும் அந்த ஞானத்தினாலே சிவனோடே கூடியிருப்பர்களென்னுமுறைமையும் அறிவித்தது

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

——o——

ஒன்றுக் கொன்றுயரும் - சிவதரு மோத்திரத்திற் கூறியவாறே யொன்றற்கொன் றேற்ற மாகிய,— ஊனமிலாக் கன்மங்கடவஞ் சபந் தியான மிவைபோக மூட்டுவது-குறைவிலாத கன்மவேள்வி தபவேள்வி தியானவேள்விஜபவேள்விஞானவேள்வி யென்னுமைந்தனுள் முன்னைய நான்கும் போகத்தை யூட்டுவனவாக,—ஞான நூறனை யோதல்-ஞான நூறனை யோதலும்,— ஓதுவித்தல்-அந்நூலைப் பிறர்க் கோதுவித்தலும்,— நற்பொருளைக்கேட்பித்தல்-அந்நூற் பொருளைத் தமது மதினுட்பத்தாற் பிறர்க்குக் கேட்பித்தலும்,—தானன்றுக் கேட்டல்-அந்நூற்பொருளைத் தானன்றாகக் கேட்டலும்,— ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தலைந்து மெழின்ஞான பூசை யானமையான் - குறைவில்லாத வப்பொருளைச் சிந்தித்தலுமாகிய வைவகைப்பட்ட அழகிய ஞானவேள்வி யாகலின் அஃதொன்றுமே,— இறைவனடி யடைவிக்கும் - விடுபேற்றைத் தருவ தாகலான்,— வீடெய்தவறிந்தோ ரெல்லாம்-அஃதுணர்ந்தோ ரெல்லா ராலும்,—மேலான ஞானத்தா லரனையருச்சிப்பர்-அங்ஙனமைவகையான ஞானவேள்வியே வேட்கற்பாற்று என்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

மேலந்த ஞானத்தினை யுடையவர்கள் பெறும்பல மீதென்பதூஉம் அஃதில்லாதார் பெறும்பல மீதென்பதூஉம் வரையறைசெய் துணர்த்துகின்றார்.

கேட்டலுடன் சிந்தித்த றெளிதனிட்டை கிளர்த்தலென வீரிரண்டாங் கிளக்கின்ஞான, வீட்டைய டைந் திடுவர்நிட்டை மேவினோர்கண் மேவாது தப்பி னவர் மேலாயபதங்கட், கிட்டியபுண் ணியநாத ராகியி ன்ப மினிதுநுகர்ந் தரனருளா லிந்தப்பார்மே, னட் டியநற் குலத்தினில்வந் தவதரித்துக்குருவான் ஞான நிட்டை யடைந்தடைவர் நாதன்றாளே. (உச)

(இ-ள்.) கேட்டலுடன் சிந்தித்த றெளிதனிட்டை கிளர்த்தலென வீரிரண்டாங் கிளக்கின் — யாதாமொருவர் தாம் ஞானசாரியனிட த்தோதின திவ்யாகமங்களின் வாக்கியத் தைத்தனக்குப் புலப்படக் கேட்டலு மதனை மறவாமல் நாடோறு மீண்டு சிந்தித்தலு மதனை யறிவிற் றெளிதலும் தெளிந்த மேலான ஞானத் துடனே கலந்து நிட்டைபுரிதலு மெனச் சொல்லில் நாலுப் பிரகாரமாம்.

ஞானவீட்டையடைந்திடுவர் நிட்டை மேவினோர்கள் — இவ்வாறு சமாதியை யடைந்தவர்கள் பரமமான மோட்சத்தை யடைவர்கள். நிட்டை மேவினோர்கள் வீட்டை யடைந்திடுவர் என்பதமாறுக.

மேவாதுதப்பினவர் — இராகத் துவேஷத்துடன்கூடி நிட்டையைப் பொருந்தி யிருக்க மாட்டாதவர்கள் பிரிந்தவாறே

மேலாய பதங் கட் கீட்டியபுண் ணிய நாதராகி — அந்தத் தபோபலத்தாலே சிவலோகமு தலிய புவனங்களுக் கதிபராய்

இன்ப மினிது நுகர்ந்து — அவர்க ளிருபத்தொரு தலைமுறையி லுண் டான பேர்களுடன் சிவலோகத்தி னூறு கோடி கற்பகால மிருந் தாண்டுள்ள போகம் புசித்துத் தொலைந்தவாறே பின் மாயனுலகம் பிரமன் பிர் சாபதிலோக மிந்திரன்புரி கந்தருவர்புரி யிவர்க ளுலகங்களி லுண்டான போகங்களை யடைந் தக்காலவரையுமிருந் தாண்டுள்ள போகங்களைக் கிரமத்திலே யனுபவித்துத் தொலைந்தவாறே.

அர னருளால் — சிவன் றனதுகாருண்ணியத்தி னாலே. இது நடுநிலைத்தீபகம்.

இந்தப் பார் மேனுட்டியநற் குலத்தினில் வந்தவதத்து — இந்தப்பூமியின்கண் வேதாகமங்களிற் கூறப்பட்ட நல்லசாதியினும் நல்ல ஐஸ்வரியத்தினும் வந்து

குருவால் ஞானநிட்டை யடைந்து — ஞானசாரிய னிடாமாகச் சிரவணம் மனனம் நிதித்தியாசனம் முற்றுதலானும் பூர்வவாதனையினாலும் எவ்வளவு இவனுக்குச் சிவஞானதிடம் பிறக்கு மவ்வளவு மதன்வழி நின்று பின்பு ஞானநிட்டையைப் பொருதியிருந் தெடுத்தவுடலுக் கமைந்த கன்மபலந் தொலைந்தவாறே

அடைவர் நாதன் றாளே. — சிவனது சீர்பாத கமலங்களைப் பொருந்தியிருப்பர்கள். எ-று.

நிட்டை மேவினோ ரடைவர் ஒழிபினும் எது; மேவாதோர் ஒருசனன மெடுத்துக் குருவாலடைவரென எழுவாய் பயனிலை கூட்டுக.

இதற்கு நிசுவாசம் சிவதருமோத்தரம் சிந்திய விசுவம் சுப்பிரபேதமு மெனவறிக. (உச)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் ஞானயக்கியம் நாலுபேதமாயிருக்குமுறைமை கூறுகின்றது.

கேட்டல் - பதிபசுபாசத்தினுடைய லக்ஷணங்களை யாசாரிய முகத்திலே நின்றுங் கேட்டல்,—உடன்சிந்தித்தல் - கூடப்படித்தபேருடனே யந்த லக்ஷணத்துக்கு அவ்யாப்த்தி அதிவியாப்தி அசம்பவதோஷமில்லாமற் சோதித்தல்,—தெளிதல் - மூன்று பொருள்களினுடைய ஸ்வரூபத்தை நிச்சயித்துப் பாச *ஹானமென்றும், பதி † யுபாதேயமென்றும் பாசத்தைநீங்கிப் பதியைப் பிரிவற நிற்பாமென்றுந் துணிதல்,—நிட்டை கிளர்த்தல்-அந்தப் பதியுடனே வேறறநின்று பேரின்ப வளர்ச்சியைப் பெறுதல்,— என வீரிரண்டாம் - இவ்வாறு ஞானப்பியாசம் நாலுவிதமாம்.—கிளர்க்கில் ஞானவீட்டை யடைந்திடுவர் நிட்டைமேவினோர்கள் - சதுர்வித ஞானப்பியாச பலத்தை விசாரிக்கில் ஞானத்தினாலே யுண்டாம் பரமமுத்தியை, நிட்டைபொருந்தினபேர்க ளடைவார்கள்.—மேவாது தப்பினவர் மேலாய பதங்கட் கிட்டியபுண்ணியநாதராகி யின்பமினிது நுகர்ந்து-நிட்டை பொருந்தாது கேட்டல் சிந்தித்தல் தெளிதலளவிலே தேகத்தை விட்டபேர் பிருதிவியாதி புத்திதத்துவ பரியந்தங் கடந்து இவையிற்றுகளுக்கு மேலான பிரகிருதி மண்டலத்தில் சிவலோகத்திலே சாலோக சாமீப சாரூப பதங்களுக்கேதுவான புண்ணியங்களை யுடையவரா யவ்விடத்துத் துக்கமென்பது சற்றுமில்லாமல் சுகமே யநுபவிப்பர். அநுபவிக்கையிலும் போகத்தில் மனப் பற்றில்லை. ஆகில்,—அரனருளால்-சிவனருளால் நிட்

ை—கூ-டி பிரளயகால மளவும் அவ்விடத்துச் சீவன்முத்தரா யிருந்து பிரளயத்திலே பரமுத்தியை யடைவர். அவ்விடத்துப் போகபரவசத்தினாலே நிட்டை கூடாதிருந்ததாகில்,—இந்தப் பார்மேல் நாட்டிய நற்குலத்தினில்வந்தவதரித்து- இந்தப்பூமியின்மேல் ஈனகுலத்தின்றிச் சிவதருமம்பண்ணுவோர் குலத்திலேவந்துதித்து,—குருவான் ஞானநிட்டையடைந்தடைவர் நாதன்றாளே-ஆசாரியர் கருணையினாலே ஞானநிலைமையைப் பெற்றதனால் சிவனை வேறற சிவசாயுச்சியத்தை யடைவர்களென்றிதன்பொருள்.

* ஹரணம் - நீக்குதல், † உபாதேயம்-எடுக்கத்தக்கது,

ஞானப்பிரகாசருரை வருமாறு.

——o——

சர்வாதிக்க நிராலம்ப சிவ சாக்ஷாத்கார சாதன நிராலம்பசிவசமாதி முன்சொல்லிய ஞானத்தினு முக்கிய மென்பது ஆசாரியரு மறிவிப்பிக்கின்றார்.

கோத்தல் - பண்ணுதல்,—இந்தப்பார்மே லென்பது நியமமன்று "புவநே குரவஹ" என்று சிவாகமவித்துக்கள் செப்புவார்களாதலால், போய்ப் பொருந்திய புவனத்திருந்தபடி பூமியிற் றிரும்பாது ஸ்ரீமத் ஸ்ரீகண்டருத்திரகுரு சதாசிவகுரு முதலோரால் நிரீக்ஷிதர்களாய்க் கொண்டுப் பரமுத்திமான்களாவார்கள்.

மற்றைய வெளிப்பொருள்.

× புவனந்தோறுங் குருக்கள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

மேற்கூறிய ஞானவேள்வி யைந்தனுள் முன்னையமூன்றினும் ஆசிரியனறிவுறுக்கு முண்மைஞானம் நிகழாமையின், உண்மைஞான மெனப்படுவன வேனைக் கேட்டல்சிந்தித்தல்களுஞ் சிந்தித்தலைப்பின்னர்த் தெளிதலுந்தெளிந்தவாறே யதன்பி னிட்டைகூடுதலுமென்னு நான்கேயாம். இம்முறையே வந்து நிட்டைபொருந்தினோர் வீட்டினைத் தலைப்படுவர். இந்நான்கினுண் மேவுதலின்றித் தீக்கையி லத்துவசுத்தி பண்ணப்பட்டு ஓதலோதுவித்தல் கேட்பித்தன் மாத்திரையினின்று தப்பினவர், பதமுத்திகளின் வைகி நீங்கியதுணையானே ஆசிரியன் மாட்டுக் கேட்டன்முதலிய நெறியா னிட்டையினைத் தலைக்கூடி வீடுபெறெய்துவ ரென்பதாம்.

ஓதன்முதலிய மூன்றினின்றார்க்குங் கேட்டன்முதலிய ஆசிரியனையின்றி யமையாதென்பது உணர்த்துதற்பொருட்டு, 'இந்தப்பார்மே னாட்டிய நற்குலத்தினில்வந் தவதரித்து' என்றதுணையேயாகலின் அதுவே நியதமன்றெனக்கொள்க; சரியைமுதலியவற்றி னின்றாரும் 'அங்குநாதனே முன்னிற்கின்னுருவர்நற்றுளே, என வருஞ் செய்யுளிற் கூறப்படுதலின்.

இனி மேவாது தப்பினவரென்பதற்குக் கேட்டன்முதலிய மூன்றினின்று தப்பினவரென் றுரைப்பாருமுளர்.

கேட்டபின்னர்க் கேட்கவேண்டாமையானும், சிந்தித்தபின் நூல் வேண்டாமையானும், தெளிந்தவழி நிட்டைமேவுதற்கு இடையீடின்மையானும், கேட்டன் முதலியவற்றி னின்றார் சுத்ததத்துவபுவனங்களின் அபரமுத்தராக வைகியவாறே பரமுத்தியைத் தலைப்படுவதன்றி மீளுதலின்மையானும், அவர்களைச் சரியைமுதலியவற்றி னின்றாரோடொப்ப வைத்து அங்

மனமுரைத்தல் சிறிதுமேலாமையானும், மேலைச்செய்யுளோ டியைபுபடாமையானும், அவருரைப்பனவெல்லாம் போலியெ ன்றொழிக.

இவையிரண்டு செய்யுளானும் மேற்கூறிய ஞானமாவது இ த்துணைப் பகுதித் தென்பதூஉம் அவற்றுட் பொதுச்சிறப் பா மாறும் அவற்றிற்குரிய பயன்வேறுபாடு முணர்த்தியவாறு.

நிரம்பவழகியருரை வருமாறு.

இந்த நிட்டை கூடாதென்ற மாணுக்கனை நோக்கி மேலு மோ ருபாயநிட்டை யருளிச்செய்கிறார்.

கேட்டல் - முற்சனனங்களிற்செய்த சரிதை கிரியை யோ கங்களின் முற்றுதலினாலே ஆசாரிய னருளிச்செய்த ஞானோப தேசங்களை ஏகாக்கிர சித்தனாய்க்கொண்டு விரும்பிக் கேட்ட ல்.—உடன் சிந்தித்தல் - முன்சொல்லப்பட்ட திரிபதார்த்தங்க ளைக் கேட்டபொழுதே இப்படியோ பதியினுண்மை, இப்படி யோ பசுவினுண்மை, இப்படியோ பாசத்தி னுண்மையென வா ராய்வது சிந்தித்தலாம்.—தெளிதல் - இப்படி யாராயப்பட்ட பாசத்தினுண்மை பசுவினுண்மையிற் கூடாமல், பசுவினுண்மை பதியினுண்மையிற் கூடாமல்,பாசஞானம் அஞ்ஞானம், பசுஞா னம் சுதந்திரஹீனம், ஆகையால் பதிஞானமே உண்மையாகவு ள்ள இதுவே பொருளெனத் தெளிவதே தெளிதலாம்.—நிட் டைகிளர்த்தல் - பதிஞானம் பெத்தத்தி லான்மாவொழிந்து தானொரு முதலில்லையென்ன அந்த வான்மாவாய்நின்ற தன் மைபோல இந்த வான்மாவும் அந்த ஞானமொழிந்து தானொ ருமுதலில்லையென்ன அந்த ஞானந் தானாய் நின்றுவிடுதல் நிட்

டைகூடுதலாம்.—எனவிரண்டாம் - இப்படியே கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டையென நாலுவகையாம்.—கிளக்கில் ஞானவிட்டை யடைந்திடுவர் நிட்டைமேவினோர்கள் - இவையிற்றுக் குண்டான பேறுகளைச் சொல்லுமிடத்து நிட்டையிலே பொருந்தினவர்கள் ஞானத்திலே யுண்டாகப்பட்ட சாயுச்சியத்தைப் பெறுவர்கள் —மேவாது தப்பினவர் - அல்லது கேட்டுச் சிந்தித்துத் தெளிந்தமாத்திரத்திலே நிட்டை கூடாதவர்களுக்குச் சாயுச்சிய முண்டாகாது.—மேலாய பசங்கட்டிட்டிய புண்ணியநாதராகி - மேலாய சாலோக்கியாதியான பதமுத்திகளைப் பெற்று அதற்குக் கர்த்தாக்களாக விருந்து,—இன்பமினிதுநுகர்ந்து-அவ்விடங்களி லுண்டான சுகங்களை நன்றாக வனுபவித்து,—அரனருளா லிந்தப்பார்மேல் நாட்டியநற்குலத்தினில் வந்தவதரித்து-அது தொலைந்தபின்பு தம்பிரானுருடைய காருண்ணியத்தினாலே இந்தப் பூமியின்கண்ணே வேதாகமங்களிலே சொல்லப்பட்ட தபசுபொருந்தியிருக்கிற நல்ல ஜாதிகளிலே வந்துதோன்றி அந்த ஜநநங்கன்னிலே,—குருவால் ஞானநிட்டையடைந் தடைவர்நாதன்றாளை - ஆசாரியனாலே ஞானநிட்டையைக்கூடி பரமேஸ்வரனுடைய சீர்பாதத்தைப் பொருந்தா நிற்பர்கள்.

இதனாற் சொல்லியது, கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டையென ஞானம் நாலுவகைப்பட் டிருக்குமென்றும், நிட்டை கைகூடினவர்கள் சாயுச்சியத்தைப் பெறுவரென்றும், நிட்டைகூடாதவர்கள சாலோக்கியாதியான பதமுத்திகளைப் பெற்று அதற்குக் கர்த்தாக்களாயிருந்து அந்தப்போகத்தையு யனுபவித்துத் தொலைந்தபின்பு தம்பிரானுருடைய காருண்ணியத்தினாலே பூமியின்கண்ணே நல்ல ஜாதிகளிலே வந்துதோன்றி ஆசாரியனாலே ஞானநிட்டையைப் பெற்று அதினாலே பர

மெய்வரனுடைய சீர்பாதத்தைப் பெறுவார்களென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

விளக்கின் ஞானம் - மேற்கூறிய ஞானவேள்வி யைந்தனுள் முன்னைய மூன்றினும் ஆசிரியனறிவுறுக்கும் உண்மைஞான நிகழ்முறையின் உண்மைஞானமெனப்படுவன,—கேட்டலுடன் சிந்தித்தறெளிதனிட்டை கிளத்தலென வீரிரண்டாம்-ஏனைக்கேட்டல்சிந்தித்தல்களுஞ் சிந்தித்ததனைப் பின்னர்த்தெளிதலுந் தெளிந்தவாறே யதன்பினிட்டை கூடுதலுமென்னு நான்கேயாம்.—நிட்டை மேவினோர்கள் வீட்டை யடைந்திடுவர் - இம்முறைமேவந்து நிட்டைபொருந்தினோர் வீட்டினைத் தலைப்படுவர்,—மேவாது தப்பினவர்- இந்நான்கினுள் மெவுதலின்றித் தீக்கையினெதறவ சுத்திபண்ணப்பட்டு ஓதல் ஓதுவித்தல் கேட்பித்தல்மாத்திரையி னின்று தப்பினவர்,— மேலாயபதங்கட் கீட்டிய புண்ணியநாதராகி - மேலாய பதமுத்திகட் கீட்டப்பட்ட புண்ணிய மேலீட்டால்,—இன்ப மினிதுநுகர்ந்து - இன்பத்தினை யினிதாக வநுபவித்தலாகிய பதமுத்திகளின்வைகி,—அரனருளாலிந்தப் பார்மேல்-முதல்வ னாணையானவைகளினின்றுநீங்கி யிவ்வுலகத்தின்,—நாட்டியநற்குலத்தினில்வந் தவதரித்து - உயர்ந்த நற்குலத்திற்றோன்றிய தனையானே,—குருவான் ஞானநிட்டை யடைந்தடைவர் நாதன்றாளே - ஆசிரியன் மாட்டுக் கேட்டன் முதலிய நெறியான் நிட்டையினைத் தலைக்கூடி வீடுபே றடைவர்.

இவையிரண்டு செய்யுளானு மேற்கூறிய ஞானமாவது இத்துணைப் பகுதித்தென்பதூஉம் அவற்றுட் பொதுச்சிறப்பாமாறு மவற்றிற்குரிய பயன்வேறுபாடு முணர்த்தியவாறு.

மறைஞானதேசிகர் உரை.

நிட்டை கூடாதோர் திரும்புதலன்றி வேசத்தின்வழி நின்று தானஞ் செய்தோர் பெறும்பேறும், சரியைமுதலியவழியினின்றனுட்டித்தவர் அபரமுத்தியை யடைந்ததற்கும், பக்குவர் பரமுத்தியை யடைவரென்பதூஉ முணர்த்து கின்றார்.

தானமியா கந்தீர்த்த மாச்சிரமந்தவங்கள் சாந்திவிர தங்கன்ம யோகங்கள்சரித்தோ, ரீனமிலாச் சுவர்க்கம்பெற் றிமைப்பளவின்மீள்வ ரீசன்யோ கக்கிரியா சரியைதனின்முயன்றோ, ரூனமிலா முத்திபதம் பெற்றுலகமெல்லா மொடுங்கும்போ தரன்முனிலாதொழிலிலுற்பவித்து, ஞானநெறி யடைந்தடைவர் சிவனையங்கு நாதனை முன்னிற்கி னணுகுவர்நற்றுளே. (உரு)

தானம் துலாபுருட முதலிய மகாதானஞ் செய்தவர்களும்
யாகம் அக்கினிட்டோம முதலிய யாககன்மத்தை யனுட்டித்தவர்களும்
தீர்த்தம் தீர்த்த யாத்திரைசெய்து கங்கைமுதலிய தீர்த்த மாடினவர்களும், கோடி தீர்த்தங் கடந்து குளிக்கினும் பலமில்லை யென்றார்.

ஆச்சிரமம் — பிரமசரிய முதலிய நாலாச்சிரமத்தின் வழிநின் றனுட்டித் தவர்களும்
தவங்கள் — விரத சாந்திராயணங்களினாலே சரீரத்தைவாடப் பண்ணினவர்களும்
சாந்தி — பரிகாரம்
விரதம் — "வீடுஞானம்வேண்டுவ திரல்விரதங்களால், வாடிஞான மென்னுவதென் அடிசேர்வது ஞானமே" என்பதனால் மாதோபவாச முதலிய விரதங்களை யனுட்டித்தவர்களும்,
கன்மயோகங்கள் சரித்தோர் — கன்மயோகத்தின்வழி நின் றனுட்டித்தவர்களும், இவர்களெல்லாரும்
ஈனமிலாச் சுவர்க்கம்பெற் றிமைப்பளவின் மீள்வர் — சுருதிவழி யொழிகினவர்கள் சுவர்க்கத்தார், என்பதனாற் சுவர்க்கத்தி லுண்டான போகங்களைப் புசித்துத் தொலைந்தவாறே இமைக் கொட்டி விழிக்குமுன்னே பூமியின் கண்வந்து பிறப்பர்கள். சைவர்க ளடையும் பலமியாதெனில்?
ஈசன் யோகக் கிரியா சரியைதனின் முயன்றோர் — சிவ னருளிச்செய்த திவ்யியாகமங்களிற் கூறிய சரியை கிரியை யோகமென்னு மிம்மூன்றினு மனுட்டித்தவர்கள்
ஊன மிலா முத்திபதம் பெற்று — குற்றமில்லாத சாலோக சாமீப சாருபமாகிய பதமுத்திகளை யடைந்திருந்து. இவைவடமொழி.

அஃதாவது ஸ என்றது அவனென்றதாம். அவனுலோகத்தை யவன் சமீபத்தை அவ னுருபத்தை எனவறிக.

இப் பதமுத்தியாவது மிச்சிராத்துவாவிற் பிரளயாகலப்பிராப்த்தியைப் பெற்றிருக்கிற ஸ்ரீகண்ட பரமேசுரன் எழுங்

தருளி யிருக்கும் சிவலோகத்திற் பதமுத்தியைப் பெற்றிருக்க லெனவறிக.

உலக மெல்லா மொடுங்கும்போது — அசுத்தமாயை சங்காரப் படும்போது பக்குவரிற் சிலருக்குச் சிவன் சாநித்தியமாகி மேலான நாத தத்துவத்தை யடைந்திருந்து மகாசங்கார காலத்திற் பரமுத்தியை யடைவிப்பது.

அரன்முனிலா தொழியில் — சிலர் பக்குவ மில்லாதபடியினாலும் போகத்தில் விருப்பத்தை வைக்கையி னாலும் அவர்களுக்குச் சிவன் சாநிதியமாய்த் திருவடியைக் கொடுத் தனுக்கிரகஞ் செய்யா திருப்பானாகில் அப்பொழுதவர்கள்

உற்பவித்து — அந்தப் பிரகிருதியினின்றுஞ் சங்கரிப்புண்டு மீளவுஞ் சிருட்டிக்கப்பட்டு சநநமெடுத்த தந்தப் போகங்களைப் புசித் ததில் வையிராக்கியம்பிறந்து முத்தியடையவேணு மென்னு மிச்சையுண்டாய்

ஞானநெறி யடைந்து — முன் சநநத்தில் விட்ட குறையினாலே ஞான யாகத்தை யடைந்து கேட்டல் முதலியவற்றின் வழியே யனுட்டித்து நிட்டை பொருந்தி னின்று

அடைவர் சிவனையங்கு — அந்த வான்மாக்கள் பிரகிருதி சிவலோகத்தை முன்புபோ லடைவர்கள்.

அஃதென்போல வெனில்? சுந்தரப்பெருமா னாயனார் சிவலோகத்தினின்று பூமியின்கண் வந்து சரீரமெடுத்து என்னை யொருவனாக வகுத்தனை யென்று திருவுளஞ் செய்து ஞானநிட்டா பலத்தாலே பிராகிருதமான வடிவுடனே போகக்கண்டோமே!

நாதனே முன்
னிற்கி னணுகுவ
ர் நற்றாளே.

அவ்விடத்துச் சிவன் சாந்நித்திய மாகில் மாயைக்கு மேற்பட்டு நாத தத்துவத்திற்பு வனபோகங்களைப் புசித்திருந்து மகாசங்கார காலத்திலே சிவ னவர்களை யவலோகனம் பண்ணிப் பரமுத்தியான அவனதழகியதிருவடியை யடைந்திருப்பர்கள். எ-று.

பரமுத்தி யாதலி னற்றாளெனச் சிறப்பித்தார்.

சரித்தோர் மீள்வரெனவும் நற்றாள் நணுகுவர் எனவும் எழுவாய் பயனிலைக் கூட்டுக.

இதற்குச் சிவதருமோத்திரம் சுப்ரபேதம் மிருகேந்திரத் துமறிக.

உலகமெலா மென்று சொல்லியிருக்க மாமாயைக் கூறாமல் அசுத்த மாயையைக் கூறிய தென்னெனில்? ஜகத்சப்தேன மாயாந்தம்'' என்றுமதங்கத்து வசனமுண்டானபடியாலே மாயையையே கூறியதெனவறிக.

சுத்தாத்துவாவைப் பொருந்தினவர்க ளெல்லாருஞ் சிவதுல்லியரென் றோதுதலால் அவர்கள் திரும்பார்கள்.

விசிட்டமான கன்மபரிபாகத்தாலே புரியட்டக வுடலையெடுத்துப் பொல்லாதென்ற சகலயோனிகளைப் பொருந்தியெல்லா விடயஞானங்களையுங் கலையடைவே புசித்துத் தொலைந்தவாறே பிரளயா கலராய்ப் பின்பு விஞ்ஞானகல ராவர்களெனவறிக.

''விஞ்ஞான கன்மத்தான் மெய்யட் டகங்கூடி, யஞ்ஞான கன்மத் தாற் சகலயோனிபுக், கெஞ்ஞானமு மெய்தி யிடையிட்டு மீண்டுபோய், விஞ்ஞானராய்ச்சிவ மேவுவ துண்மையே''
எனவறிக. (உரு)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

முந்தின விருத்தத்திலே வைதிகதரும மிருவகை சிவதருமமாகிய சிவபூஜாதிகளை செய்யவேண்டுவதாகக் கூறிய தென்னையென்னும்சங்கையைப்பண்ணிக்கொண்டுத்தரங்கூறுகின்றது.

தானமியாகந்தீர்த்த மாச்சிரமந்தவங்கள் சாந்திவிரதங்கன்ம போகங்கள்சரித்தோ ரீனமிலாச் சுவர்க்கம்பெற் றிமைப்பளவின்மீள்வர் - ருஷிப் * புரோக்தங்களான ஸ்மிருதியாதி தரும சாஸ்திரங்களிலே சொல்லும் பூதானமுதலாகிய தானங்கள், அக்னிஷ்டோமாதியான யக்கியங்கள், தீர்த்தயாத்திரை பிரம சாரியாதி யாச்சிர மாநுஷ்டானங்கள், பஞ்சாக்கினி மத்திய † வர்த்தித் துவாதித பசுக்கள் பிராயச்சித்தங்கள், கிருச்சிர சாந்திராயணாதி விருதங்கள், அடையோகங்க ளிவையிற்றுகளைப் பண்ணினபேர்; துக்கமில்லாமல் சுகமே யனுபவிக்குந் தலமாகையினால் சுவர்க்கமென்று பெயராயுள்ள தேவலோகத்தை யடைந்து சுகத்தைப் புசித்துக் கன்மத்துக் கிடான தேகத்தை யெடுப்பர்கள்.—

இமைப்பளவிலென்றது-சிறிதுகால மென்பதற்கு உபலக்ஷணம்.

ஈசனியோகக்கிரியா சரிதையினின்முயன்றோ ருனமிலாமுத்திபதப்பெற்று - சிவப்புரோக்தமாகிய காமிகாதி யாகமங்களிலே சொல்லும் சரிதைகிரியா யோகங்களை யனுட்டித்தபேர் குறைவற்ற சாலோக சாமீப சாரூபமென்னும் பதமுத்திகளைப் பெற்று பிரளய பரியந்தமுந் அவ்விடத்திருந்து—

உலகமெலாம் ஒடுக்கும்போ தரன்மு னிலாதொழியி லிங்குற்பவித்து ஞானநெறி யடைந்தவர் சிவனை-பிரளயாரம்ப மளவும் போகத்திலே வைராக்கியம் பிறவா திருக்குமாகில் அரன

வர்களிடத்தில் சாந்நித்தியம் பண்ணுர். பண்ணுதொழியவே பிரளய முடிவாய்ச் சிருஷ்டி யாரம்ப மெவ்வளவுண்டு,அவ்வளவு காலமுங் கேவலாவஸ்தையை யடைந்திருந்து சிருஷ்டிக்குப் பிற கிந்தப் பூமியின்கண்ணேபிறந் தாசாரியனுலே ஞானமார்க்கத்தைப் பெற் றந்தமார்க்கத்திலே சிவசாயுச்சியத்தை யடைவர்கள்.

நாதனே முன்நிற்கி னணுகுவர் நற்றுளே-பிரள யாரம்பத்துக்கு முன்னே வைராக்கியம் வந்ததாமாகில் சிவன் சாந்நித்தியம்பண்ணுவர், பண்ணவே சிவசாயுச்சியததை யடைவர்.

சிவனே என்பது நடுநிலைத்தீபம்.

ஏகார மீற்றசை.

இதனுல் ஸ்மிருதியுக்த தருமத்திலும் ஆகமோக்த தருமமதிகமென்பது கூறியது.

* புரோக்தம் - சொல்லப்பட்டது, † வர்த்தித்வம் - இருக்கை.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

அப்படியே ஸ்ரீமத் ஸ்ரீகண்ட தேசிகாதியர்களால் நிரீக்ஷிக்கப்படா திருந்து சிலர் மகாப்பிரளய முடிவில் சிவநிரீக்ஷணத்தால் பரமுத்திமான்களாவார்கள், ஸ்ரீமத் ஸ்ரீகண்டாதி நிரீக்ஷணம்போல சிவ நிரீக்ஷணமு மில்லாதார் மற்றும் மகாசிருஷ்டியிற் பூமியிற் புவனங்களிற் முன்ஜன்மித்துப் புவன குரு குலங்களாற் றிக்ஷிக்கப்பட்டுச் சிவசமாதிபண்ணிப் பரமுத்திமான் களாவார்களென்று பாஷிக்கின்றுர்.

இமைப்பளவில் - நித்திய நிலையின்றி,—ஈசன் யோகமென்றது சாலம்ப சிவயோகமாதலால் ஈசன் யோகக் கிரியா சரியை

தனி னின்றோர் நிராலம்ப சிவசமாதி நிலைகெட்டு நிலைபெறுதோ ருமென்று வருவித்துக்கூட்டுக,— முத்தி - பதமுத்தி.

மற்றைய வெளிப்பொருள்.

சிவஞானயோகியருணா வருமாறு.

—o—

மேலேமேலே போயும் மீளுதற்கேதுவாகிய பசுபுண்ணிய ம்போலன்றி, மேம்பட்ட சரியைமுதலிய சிவபுண்ணியங்களை விதிவழியனுட்டித்தோரும், மேவாது தப்பினவரோடொப்பத் தத்தமக்குரிய பதமுத்திகளி னெடுங்காலம்வைகி முடிவின்க ணெவ்வாற்றானும் ஞானநெறியைத் தலைப்பட்டே வீடெய்துவரென்பதாம்.

இதனானே சரியைமுதலியவற்றிற்குப் பயன் மேற்கூறிய சாலோகமுதலிய பதமுத்திமாத்திரையே போலுமென்னு மாசங்கையை நீக்கியதூஉமாயிற்று.

நிரம்பவழகியருணா வருமாறு.

—o—

ஆன்மாக்கள் புண்ணியங்களைச்செய்து போகங்களைப் புசிக்குமிடத்து இருக்கிற பதங்களெல்லா மொத்திராமல் ஒன்றுக்கொன்று ஏற்றக் குறைந்ததென்னம்பு என்ற மாணுக்கனைநோக்கி யருளிச்செய்கிறார்.

தானம் - கோதான பூதான முதலாகவுண்டான தானங்கள்,—யாகம் - சோமயாக முதலான யாகங்கள்,—தீர்த்தம் - கங்கைமுதலான தீர்த்தங்கள்,—ஆச்சிரமம்-தேவதாருவனமுதலான ஆச்சிரமங்கள்,—தவங்கள் - பஞ்சாக்கி நடு ஜலத்தின்னடுமுதலாகச் செய்கிற தவங்கள்,—சாந்தி - நன்மைப்பகுதி

களைப் பொருந்தியிருக்கிற சாந்திகள்,—விரதம் - மாகேஸ்வர சம் அட்டமிவிரத முதலான விரதங்கள்,—கன்மயோகங்கள் - சிவயோகமன்றியே சரீரவருத்தமாகச் செய்யப்பட்ட யோகங்கள்,—சரித்தோர் - தான முதலானவற்றைச் செய்தவர்கள்,—ஈனமிலாச் சுவர்க்கம்பெற் றிமைப்பளவில் மீள்வர்-குற்றமற்றிருக்கிற சுவர்க்கத்தைப் பெற்று அவ்விடத்திலுண்டாகிய வின்பங்களை யனுபவித்து அது தொலைந்தவாறே ஒரு கணப்பொழுதிலே பூலோகத்திலே மீண்டு வருவர்கள். இந்தப் பசுபுண்ணியத்தின் முறைமையன்றியும்,—ஈசனியோகக்கிரியா சரிதையினின்றோர் - பரமேஸ்வர னருளிச்செய்த சிவாகமஞ் சொன்ன முறைமையிலே சரிதை கிரியை யோகங்களை யனுட்டித்தவர்கள்,—ஊனமிலாமுத்திபதம்பெற்று - குற்றமற்ற சாலோக்கிய சாமீப்பிய சாரூப்பியமென்னும் பதமுத்திகளைப்பெற்று சருவசங்காரம் வருமளவு மந்தப்பதங்களிலுண்டாகிய போகங்களைப் புசித்துக்கொண் டிருப்பர்கள்.— உலகமெலா மொடுங்கும்போது - பிரபஞ்சமெல்லாஞ் சங்காரப்படும்பொழுது,—அரன் முனிலா தொழியின் - பரமேஸ்வர னிவர்களை யந்தவவசரத்திலே முன்னின்று இரக்ஷியானாகில்,—உற்பவித்து - மீண்டுஞ் ஜநநத்தையடைந்து,—ஞானநெறி யடைந்தடைவர் சிவனை-முன்பு விட்டகுறையிலே அந்த ஞானத்தைப் பொருந்தி யதின்வழித்தா யந்தஞானத்திலே சிவனைப் பெறுநிற்பர்கள்.—அங்கு நாதனேமுன்னிற்கில் நணுகுவர்நற்றாளே - அந்தச் சங்காரகாலத்திலே பரமேஸ்வரன் முன்னின்று இரக்ஷிப்பானாகி லப்பொழுதே யவனுடைய நன்மைப்பகுதியா யிருந்துள்ள சீர்பாதத்தைக் கூடாநிற்பர்கள்.

இதனாற் சொல்லியது, தான மியாகமுதலான பசுபுண்ணியங்களைச் செய்தவர்கள் சொர்க்காதி பதங்களைப்பெற்று அங்கு

ள்ள சுகங்களை யனுபவித்துத் தொலைந்தவாறே இமைப்பிற் பூலோகத்திலே வருவர்களென்றும் சிவ புண்ணியமென்று சொல்லப்பட்ட சரியை கிரியை யோகங்களைச் செய்தவர்கள் பதமுத்திகளைப் பெற்றிருப்பர்களென்றும் சங்காரகாலம் வந்த வவசரத்திலே பரமேஸ்வரன அனுக்கிரகிக்கி லவ்விடந்தனிலே சாயுச்சியத்தைப் பெறுவர்களென்றும் அவ்விடத்தி லனுக்கிரகஞ் செய்தானில்லையாமாகில் மீளவுஞ் ஜனனத்தை யெடுத்து ஞானத்தினாலே சிவனுடைய சீர்பாதத்தைப் பெறுவர்களென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—0—

தானம் - தானங்கள் செய்தலும்,— யாகம் - யாகங்களியற்றுதலும்,—தீர்த்தம் - புண்ணியதீர்த்தங்களாடலும்,—ஆச்சிரமம் - தத்தநிலைகளிற் றவறு தநுட்டித்தலும்,—தவங்கள் - தவங்களியற்றலும்,—சாந்தி - பிராயச்சித்தங்களியற்றலும்,—விரதம் - விரதங்களியற்றலும்,—கன்மயோகங்கள் சரித்தோர் - கன்மயோகங்களியற்றலுமாகிய வினைகளை யநுட்டித்தோர்,—ஈனமிலாச் சுவர்க்கம்பெற் றிமைப்பளவின் மீள்வர் - ஈனமிக்குடைய சுவர்கலோகத்தினைப்பொருந்தி யநுபவித்து மீள்வராகலின் மேலேமேலேபோயும் மீளுதற்கேதுவாகிய பசுபுண்ணியம்போலன்றி,—ஈசன் சரியைகிரியாயோகத்தினின்றோர் - முதல்வன் விதித்த மேம்பட்ட சரியைகிரியாயோகங்களாகிய சிவபுண்ணியங்களைவிதிப்படி யநுட்டித்தோரும்,—ஊனமிலா முத்திபதம்பெற்று - மேவாது தப்பினவரோடொப்பத் ததமக்குரிய பதமுத்திகளி னெடுங்காலம்வைகி,— உலகமெலாமொடுங்கும்போ தரன்முநிலா தொழியின்-பிரபஞ்சமெல்லாஞ் சங்

காரப்படும்பொழுது முதல்வன் முன்னின்றருளானாகில், — உற்பவித்து ஞானநெறியடைந்து சிவனையடைவர் - மீட்டுஞ் சனனத்தையுற்று முடிவின்கணெவ்வாற்றானுங் குருவருளான ஞானநெறியைத் தலைப்பட்டே வீடெய்துவராகலின், — அங்ஙனாதனை முன்னிற்கில் நற்றுணையாதவர் - மேற்கூறிய சரியைமுதலியவற்றினின்றோரு முதல்வனருள்பெற்று திருவடியிற் கலப்பர்.

இதனானே சரியைமுதலிய வற்றிற்குப் பயன் மேற்கூறிய சாலோக முதலிய பதமுத்தி மாத்திரையே போலுமென்னு மாசங்கையை நீக்கியதூஉமாயிற்று.

மறைஞானதேசிகர் உரை.

மேலெய்தியது விலக்கிச் சிறப்புவிதி யுணர்த்துகின்றார்.

சிவஞானச் செயலுடையோர் கையிற்றானந் திலமளவே செய்திடினு நிலமலைபோற்றிகழ்ந்து, பவமாயக் கடலிலழுந் தாதவகையெடுத்துப் பரபோகந் துய்ப்பித்துப் பாசத்தையறுத்த, தவமாரும் பிறப்பொன்றிற் சாரப்பண்ணிச் சரியைகிரியாயோகந் தன்னினுஞ் சாராமே, நவமாருந் தத்துவஞானத்தைநல்கி நாதனடிக் கமலங்களணுகுவிக்குந்தானே. (உசா)

(இ-ள்.) சிவஞானச் செயலுடையோர்கையிற் றானந் திலமளவே செய்திடினும் — சிவஞானத்தினுடைய செயலை யுணர்ந்த ஞாதாக்களிடத்தி னெள்ளளவுபொருள் தானங் கொடுக்கினும் ஆசையற்ற ஞாதாக்கள் தானம்வாங்கில்அவர்களும் நம்மைப்போலே விருப்ப முடையவர்களாகார்களோ வெனில்?

"மெய்வினையுணர்ந்தஞானி வேணவா விடுத்தானேனு, முய்யவே பிறரையுன்னி யவர்கொடை யுகப்பன்" என்பதனு லறிக.

நிலமலைபோற் றிகழ்ந்து — நிலமானது மலையானது மெப்படி நாடோறும் வளருமோ அதுபோல்இந்தப் புண்ணியமும் பிரளயபரியந்தமும்நின் றந்தந்த வவதாரத்துக்குப் போகத்தைக் கொடுக்கும்

"கருமிகட் கீகைநிற்குங் கலந்தொரு பிறப்பிற்கற்ற, பெரியராந் தவத்தோர்க் கீகை பிறப்பொரு நூறுநிற்கு, மரியமந் திரத்தார்க்கீகை யாயிரம்பிறப்புநிற்கு, முரியயோகிக்குஞானிக் கூழிபேருழிநிற்கும்" என்பதனு லொன்றுக்கொன்று விசிட்ட மெனவறிக.

பவமாயக்கடலி லழுந்தாதவகையெடுத்து — இந்தப் பலங்கொடுத்த தாதாவை ஜநநமரணமாகிற கடலிலே கிடந் தழுந்தாதபடி கரையேற்றி

பரபோகந் துய்ப்பித்து — அபரபோகங்களைப் புசிப்பியாமல் மேலான போகங்களைப் புசிப்பித்து

அவ்விருவகை யாவன? மாயாகாரியமாகிய புவனங்களிலிருக்கு மமோசாதிகளான உருத்திரர்கள் புசித்திருக்கும் போகம் அபரபோக மெனவறிக.

சுத்தமாயா காரியமாகிய சுத்ததத்துவ புவனங்கள் வித்தியேசுரர் முதலாயினோர் புசித்திருக்கும் போகம் பரபோகமெனவறிக.

சுத்த தத்துவ புவனவாசிகளுக்குக் கன்மமில்லாமையாலவர்களுக்குப் போகங் கூடாதெனில், பிரளயாகலருக்குக் கன்மமுண்டாதலால் அபரபோக மெனறுர்.

விஞ்ஞானகலருக்குக் கன்மங் காரணமன்று மலபரிபாகமே காரணமாதலானும், சுத்தகன்ம முண்டென்று ஆகமங் கூறுகையாலும் பரபோகத்தைப் புசித்திருப்பர்களென வறிக.

பாசத்தை யறுத்துத் தவமாரும் பிறப்பொனறிற் சாரப்பண்ணி

அநேக ஜநநமெடுத் தடைதற் கரிதாகிய முத்தியை யெளிதினிலடைதற்குத் தவத்தைப்பண்ணுதற் சேற்றதொரு ஜநநத்தை யெடுப்பித்து ஞாநாசாரியரை யெளிதினி லடைதற்குத தவத்தைப் பண்ணுதற் கேற்றதொரு ஜநநத்தை யெடுப்பித்து ஞாநாசாரியன் தீக்ஷையிலே பாசத்தைச் சேதிக்கும்படி பண்ணி,

சரியைகிரியா யோகந் தன்னினுஞ்சாராமே

சரியை முதலியவற்றைப்பொருந்தி யதனாலே வருந்தி யனுட்டித் தந்தப் பலத்தினாலே யடையவேணுமென்னும் நியமமுமின்றி, இஃது இல்லாவிடத் தெக்காரணத்தாலென்னை?

நயமாருந் தத்துவ ஞானத்தை நல்கி

நினைக்குந்தோறு நினைக்குந்தோறும் புதுமைபொருந்தி யிராநின்ற சத்தியஞானத்தைக் கொடுத்து,

நாதனடிக் கமலங்க ணணுகுவிக்குந் தானே.

அந்தத் தான பலத்தினாலுண்டாகிய ஞானந்தானே சிவனது திருவடித் தாமரைகளைப் பொருந்திவிக்கும். எ-று.

தானம் - எழுவாய்.

நணுகுவிக்கும்-பயனிலை.

இதற்குச் சிவதருமோத்தரம் மிருகேந்திரம் பௌட்கரத்து மறிக. (உகூ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் தானமும் சாமானியருக்குக் கொடாமற் சிவஞானிக்குக் கொடுக்கில் சுவர்க்க பலமாத்திரமன்றி முத்திக் கேதுவா மென்பது கூறுகின்றது.

சிவஞானச் செயலுடையோர்கையிற் றுனந்திலமளவுசெய்திடினு நிலமலைபோற் றிகழ்ந்து பரபோகந் துய்ப்பித்து-காஷ்டத்திலே மறைந்திருந்த அக்நியானது * மதனத்தினாலே பிரகாசித்துக் காட்டத்தை மறைத்துத் தானேயாய் நின்றதுபோல முன் னான்மாவிலே மறைந்திருந்த சிவனது ஞானக்கிரியாசத்திகள் கேட்டல் சிந்தித்தல் தெளிதலினாலே ஆன்மாவினுடைய ஞானக்கிரியா சத்திகளிலே பிரகாசித் தவைகளை யடக்கித் தானேயாய் நிற்கும். அவ்வாறு பெற்றபேர் சிவஞானச்செயலுடையோர். அவர்கள் கையிலே யெள்ளளவாகிலும் ஒருவஸ்துவைப் பக்தியுடனே கொடுத்தால் அது ரத்தினங்கள் முதலான சர்வ வஸ்துக்களையு முடைத்தாய்ப் பஞ்சாசத்கோடி விஸ்தீரணமுடை யிருக்கும் பூமியையும் ஸ்வர்ணமயமாகிய மகாமேருவையும் வேத வேதாங்கங்களை யோதியுணர்ந்து வழுவற அக்னிஷ்டோமாதி சத்திரயாக பரியந்தம்பண்ணுங் கன்மகாண்டிகையினாலே கொடுக்க தனிலும் அதிகமாக விளங்கி இந்திரலோக முதலான வுலகங்களிலே மேலான போகங்களைப் புசிப்பித்து,—பவமாயக் கடலி லழுந்தாதவரையெடுத்துப் பாசத்தையறுத்துத் தவமாருந் பிறப்பொன்றிற் சாரப்பண்ணி-ஆசாரியனாலே ஜநந மரணமாகிய மாயா சமுத்திரத்திலே நின்றுங் கரையேற்றி யாணவ மாயை கன்மமென்கிற பாசத்தையொழிக்கும்படிச் சிவதருமமாகிய † தபோதநருடைய குலத்திலே யொரு ஜநநத்தை யெடுப்பித்து,—சரியைகிரியாயோகந் தன்னிலும் சாராமே - சரியைகிரியா யோகங்களைச் சாதியாமலே,—நவமாருந் தத்துவஞானத்தைநல்கி - புதுமையாகவே பரதத்துவமாகிய சிவஞானப் பிரகாசத்துக் கேதுவாய்,—நாதனடிக்கமலங்க ணணுகுவிக்குந்தானே - சுவாமியாகிய சிவனுடைய சாயுச்சியத்தை யடைவிக்குஞ் சிவஞானிகள் கையிற் றுனமென்றிதன்பொருள்.

* மதனம் - கடைதல், † தபோதநர் - தவத்தைத் தனமாகவுடையார்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

நிஷ்பிரபஞ்சமாதி நிலைபெற்றோர் பெருமை நிகழ்த்துகின்றார்.

சிவஞானச்செயலுடையோர் - நிராலம்ப சிவயோக சமாதி மான்கள்,—சித்துவஞானத்தை - நிராலம்ப சிவயோக சமாதியை,—நல்கி - கொடுத்து,—நாதனடிக்கமலங்கள் - நானதுத ஞானக்கிரியா சத்திசமான சத்திலக்ஷண சிவத்துவத்தை.

மற்றைய வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

விதிவழியின்றிப் பத்திவழியினின்று பதமுத்தியைப் பெற்றோரும் முடிவின்கண் ஞானநெறியைத் தலைப்பட்டே வீடெய்துவரென்பதாம்.

பத்திநெறியினின்றோர்க்குப் பக்குவ மிகுதிப்பாட்டாற் சரியைகிரியாயோகம் எளிதிற் கைகூடி முற்றுப்பெறுவனவன்றி ஏனோர்க்குப்போலக் காலநீட்டிப்பும் அருமையுமுடையனவல்லவென்பார், சரியைகிரியாயோகந் தன்னினுஞ்சாராரேயென்றாராகலின், சரியைகிரியாயோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச்சேர்வரென மேற்கூறிய சோபானமுறையோடு முரணுமையறிக.

இவை நான்கு செய்யுளானும் ஐவகைவேள்வி யாற்றினோர் பெறும் பயனும் சரியைமுதலியவற்றிற் சரித்தோர் பெறும் பய

ணும் சிவஞானிகட்குச் செய்யுந் தானப்பெருமை கூறுமுகத்தாற் பத்திநெறியினின்றோர் பெறும் பயனும் உணர்த்துமுகத்தானே, எந்நெறியினின்றோர்க்கும் வீடுபேறெய்துதற்கண் ஞானநெறியாகிய சன்மார்க்கம் இன்றியமையாச் சிறப்பிற்றென்பது கூறப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

———o———

பாத்திரா பாத்திரங்களை யறிந்து தானஞ்செய்யு முறைமை யருளிச்செய்கிறார்.

சிவஞானச் செயலுடையோர் கையிற் றனந் திலமளவே செய்திடினு நிலமலைபோற் றிகழ்ந்து - தேகாதிப் பிரபஞ்சத்தைவிட்டு நீங்கியிருக்கிற சிவஞானிகள் கையிலே கொடுக்கப்பட்ட திரவியமோ ரெள்ளளவாகிலும் அது பூமியின்கண் ணுண்டான மகாமேருவென்னச் சக்கிரவாளகிரியென்ன விட்டுவிளங்கி,—பவமாயக்கடலி லழுந்தாதவகை யெடுத்து - ஜனனமரணமாகிய மயக்கத்தைப் பொருந்தியிருக்கிற துக்கசாகரத்திலே விழுந்து அழுந்தாதபடி யெடுத்து,—பரபோகந் துய்ப்பித்து - மேலானபோகங்களைப் புசிப்பித்து,—பாசத்தையறுத்து - பாசங்களை நாசமாக்கும்படி,—தவமாரும் பிறப்பொன்றிற் சாரப்பண்ணி - அரியதவசுகளைச் செய்யத்தக்க கோத்திரங்களிலேவந்து ஒரு ஜனனமெடுத்து,—சரியை கிரியாயோகந் தன்னிலுஞ்சாராமே - சிவஞானிகள் கையில் கொடுக்கப்பட்ட தானமாகையாலே திரிவித கரணங்களிலுண்டாகிய தொழிலாலே செய்யுஞ் சரியை கிரியை யோகமென்று சொல்லப்பட்டவையிற்றிலும் பொருந்தாமல்,—நவமாருந் தத்துவஞானத்தை நல்கி - நாளுநாளும் புதுமைபொருந்தி யிருக்கப்பட்டாநின்ற வுண்மை ஞானத்தையும்

கொடுத்து,—நாதனடிக்கமலங்கள் நண்ணுவிக்குந்தானே - தம்பிரானாருடைய சீர்பாத கமலங்களிலேதானே பொருந்திவிக்கும்.

இதனாற் சொல்லியது, திலமளவாயினுஞ் சிவஞானிகளுக்குச் செய்ததான மகாமேருபோல மகத்தாகிய பிறவிக்கடலினின்றுமெடுத்து மேலான போகங்களைப் புசிப்பித்து பாசநாசமாம்படி தவகோத்திரத்திலேவந்து ஒரு ஜனனமெடுப்பித்துச் சரியை கிரியை யோகங்களையும் அனுட்டியாமல் உண்மைஞானத்தை யுண்டாக்குமென்றும் அந்த ஞானந்தானே தம்பிரானாருடைய திருவடித்தாமரைகளிற் கூட்டுவிக்குமென்னு முறையையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

சிவஞானச் செயலுடையோர் கையிற் றானம் - விதிவழியின்றிப் பத்திவழியினின்று சிவஞானிகள் கையின்கண் தானஞ்செய் தளித்தபொருள்,—திலமளவே செய்திடினு நிலமலைபோற் றிகழ்ந்து-சிறிதாயினு நிலமலைபோல் வளர்தலால்,—பரபோகந் துய்ப்பித்து - மேலாகிய சாலோகாதி பதங்களை யொருதலையாகநண்ணி யாண்டுளவாகிய வின்பங்களை யநுபவிக்கச்செய்து,—பவமாயக்கடலி லழுந்தாதவகையெடுத்து - ஜனனமரணக்கடலின்க ணழுந்தாதவண்ணங் கருணைக்கையா லெடுத்து,—பாசத்தையறுக்க - பாசத்தினை நீக்கி,—தவமாரும் பிறப்பொன்றிற் சாரப்பண்ணி - தவஞ்செய்தற்குரிய வுயர்ந்த குலத்தி லொரு பிறவியை யடையச்செய்து,—சரியை கிரியாயோகந் தன்னினுஞ் சாராமே - சரியை கிரியாயோக மேனோர்க்குப்போலக் காலநீட்டிப்பு மருமையுமின்றி யெளிதிற் கைகூடி முற்றுப்பெறச்செ

ய்து,—நவமாருந் தத்துவ ஞானத்தைநல்கி நாதனடிக் கமலங் க ணணுதுவிக்குந்தானே - முடிவின்கண் ஞானநெறியைத் த லைப்பட்டே முதல்வன் கமலம்போன்ற திருவடியிற் கலத்தலா கிய வீட்டினை யெய்துவிக்கும்.

இவை நான்குசெய்யுளானு மைவகைவேள்வி யாற்றினோர் பெறும்பயனும் சரியை முதலியவற்றிற் சரித்தோர் பெறும்பய னும் சிவஞானிகட்குச் செய்யும் தானப்பெருமை கூறுமுகத்தா ற் பத்திநெறிநின்றோர் பெறும் பயனு முணர்த்து முகத்தானே ஐந்நெறியி னின்றோர்க்கும் வீடுபே றெய்துசற்கண் ஞானநெ றியாகிய சன்மார்க்கமின்றி யமையாச் சிறப்பிற்றென்பது கூற ப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை

ஆதலான் ஞானத்தினாலே தானே முத்தியென் றுணர்த்துகின்றார்.

ஞானத்தால் வீடென்றே நான்மறைகள்புராண நல்லவா கமஞ்சொல்ல வல்லவாமென்று, மூனத்தா ரொன்கடவா ரஞ்ஞானத்தா லுறுவதுதான் பந்தமுயர் மெய்ஞ்ஞானந்தா, னுனத்தா லதுபோவ தலர்கதிர்மு ன்னிருள்போ லஞ்ஞான மறப்பந்த மறுமுத்தியா கு, மீனத்தார் ஞானங்க ளல்லாஞான மிறைவனடி ஞா னமே ஞானமென்பர். (உஎ)

(இ-ள்) ஞானத்தால் வீடென்றே நான் — நாலுவேதமும் பதினெண்புராணமு மிரு பத்தெட்டுத் திவ்வியாகமங்களு மிவைக ளெல்லா ஞானத்தினாலே முத்தியென்று

மறைகள் புராண முறையிட்டுச் சொல்லியிருக்க. அவையா ல்லவாகமஞ் வன:-
சொல்ல

இருக்கில், பிராமணத்திலும் உருதிரசூக்தத்திலும் ஞானத்தினாலே முத்தியெனவும்,

இரண்டாம் வேதத்தி லாரணத்திலும் ப்ரகதாரண்யதத்திலும் ஞானத்தினன் முத்தியெனவும்,

சாமத்திற் சாந்தோக்கியத்தி லாருவதில் ஞானத்தால் முத்தியெனவும்,

அதர்வசிரசில் ஈஸ்வர சாட்சாத்காரத்தினாலே முத்தியெனவும் கூறுகையாலும்,

இஃதன்றிச் சைவபுராணத்தும், சூதசங்கிதையிலும், ஞானத்தால் முத்தியென்பதாலும்,

சுப்பிரபேதத்தும் சிவதருமோத்தரத்தும் ஞானத்தினல் முத்தியென்கையால் ஆகமத்துங் கூறியதாயிற்று.

அல்லவாமென்னு மூனத்தாரொன்கடவார்

இந்த ஞானத்தினாலே முத்தியில்லை கன்மத்தினாலே முத்தியென்றும் சிவதீக்ஷையினாலே தானே முத்தியென்றும் சர்வஞானோத்தரமுதலிய ஆகமத்தும் காந்தபுராணத்தும் பிருகு சாபத்திரயத்திலும் சைவதீக்ஷையினாலே முத்தியென்றோதியிருக்க, 'ஈண்டு ஞானத்தால்' என்று கூறியதென்னெனில்? 'கிரியையென மருவுமவையாவுஞானங் கிடைத்தற்கு நிமித்தம் எனக் கிளர்க்கும்' என்கையாலும்,

பார்க்கியை தேவிகாலோத்தர மென்னு மாகமங்களிற் கிரியை சரியை யோக மிம்மூன்றும் ஞானத்துக்கு அங்கமென்

று கூறுகையால் இவ்வாசிரியரு மிக்கருத்தையேபற்றி யருளிச் செய்ததென வறிக.

அஞ்ஞானத் தா லுறுவதுதா ன்பந்தம் — இப்படி யறியாமற் சொல்லுகிறதுக்குப் பலம் யாதெனில், சரீரபந்தமான பிறப் புண்டாகையால் முத்தி யடைந்தானென்று சொல்லப்பெறு.

உயர் மெய்ஞ் ஞானந் தா ஞா னத்தா லது போவது — இந்த ஞானத்தால் பெறும்பலம் யாதென்னில்? அஞ்ஞானமான ஜநநமரணத் துற்று வாதையுமற லவனது திருவடியை யடைந்திருக்கிறதே! அஃதென்போலவென்னில்?

அலர் கதிர் முன்னிருள்போல அஞ்ஞானமறப் பந்த மறு முத்தி யாகும் — பிரகாசதிரனை யுடைய வாதித்தனது முன்னே யந்தகார நில்லாம னீங்குமாறு போல, அஞ்ஞான மிவனைவிட்டு நீங்கினவாறே பாசபந்தமு மற்று முத்தியையு மடைவன்.

ஞானத்தார் ஞானங்க ளல்லாஞான — பரசமயிகள் தங்தாந் தெய்வத்தை யடைந்திருப்பதே முத்திபென்பர்கள், அந்தஞான மிவர்கள் சொல்லு ஞானம்போலன்று, இந்தக் சிவஞானத்துக்குப் பரமு மில்லைச் சமனுமில்லை யாதலால்.

இறைவனடி ஞானமே ஞான மென்பர். — அநாதி யமல முத்தனுமாய்ச் சுத்தனுமா யாநந்தமே வடிவாயிருக்கிற கர்த்தாவினது திருவடியைச் சேர்ந்து சர்வஞ்ஞத்துவம் விளங்கிச் சுவாநந்தானுபூதியைத திளைத்திருப் பதே மேலான ஞானமென் றறிவாலுயர்ந்தோர் சொல்லுவர் கள். எ-று.

(உஎ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மோட்சம் ஞானத்தினாலே யல்லது சரியை கிரியா யோகங்களினா லில்லையென்பது கூறுகின்றது.

(ஞானத்தால் - ...ஞானமென்பர்) ஞானத்தினாலே முத்தியென்று நாலுவேதங்களிலும் பதினெண் புராணங்களிலும் இருபத்தெட் டாகமங்களிலுஞ் சொல்ல, அப்படியன்று யசகியாதி கன்மங்களினாலே மோக்ஷமென்று சொல்லும் பூர்வமீமாம்சகரும், தீக்ஷாகன்மத்தினாலே மோக்ஷமென்று சொல்லும் பூர்வ சைவரும், குறைந்த * மதிமான்களாகையாலே என்ன சுகத்தைப் பெறக்கடவர். அவர்கள் சொல்லுங் கன்மங்களெல்லாம் அஞ்ஞானமான மாயா காரியத்தினாற் செய்வது. மாயா காரியத்தினாலே பொருந்துவது பந்தமே! நின்மலா சத்தி ஞானத்தினாலே யந்தப்பந்தம் நீங்குவது. அதெவ்வாறெனில்? விரிந்த பிரகாசத்தையுடைய ஆதித்தன்முன் னிருள்நீங்குவது போல. இவ்வாறு சிவஞானத்தினாலே அஞ்ஞான நீங்கவே பந்தம்நீங்கி முத்தியாம். அந்த ஞானந்தான் ஈனவாதிகளாகிய உலகாயிதராதி நிரீஸ்வர சாங்கியராந்தம் ஆன பெயருடைய ஞானம்போலே ஒத்த ஞானமல்ல, பின்னை ஏதென்னில்? சிவஞானமே பரமமுத்தியைக் கொடுக்கும். பரஞானமென்று பெரியோர்கள் சொல்லுவர்களென் றிதன்பொருள்.

* மதிமான் - புத்தியுள்ளவன்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

ஜடகன்மத்தால் முத்தியென்று மீமாம்சன் விளம்ப மறுத்துச் சிற்கன்மத்தாலே முத்தியென்று செப்புகின்றார்.

ஞானத்தால் வீடென்றே-நிராதார தீக்ஷையிற் றிரியதார்த்த கர்ப்ப தீக்ஷாகலா கலாபமறிந்து பண்ணவேண்டு மாதலால்.

சிவனது ஞானசத்தி கிர்த்தியக்குறித் தீக்ஷாங்க ஞானமும் ஞானம்.

பின்னவனது தீக்ஷாக்குறிக் கிரியாசத்திச்சிறப்பிருப் பிச்சாசத்தி கிர்த்தியக்குறிச் சங்கற்ப சிற்கன்மமு ஞானம்.

அதுவன்றிச் சாதார தீக்ஷையில் திரிபாதார்த்தகர்ப்ப தீக்ஷாகலா கலாப மறிந்து பண்ணவேண்டு மாதலாற் குருவினது ஞானசத்திக் கிர்த்தியக்குறிச் சிவாகம சிரவண மனனத்தெழுந் தெளிதிற் செயற்கைத தீக்ஷாங்க யோகாங்க ஞானமும் ஞானம்.

பின்னவனது காயிக வாசிக மானசிக தீக்ஷாகன்ம மியற்றுங் காயவாக்கு மனதசைவு பண்ணுந் தீக்ஷாக் குறிக் கிரியா சத்திச் சிறப்பிருப் பிச்சாசத்தி கிர்த்திய சங்கற்பக்குறிச் சிற்கன்மமு ஞானம்.

அதுவன்றிச் சாதார வசத்தியோ நிருவாண தீக்ஷையிற் சீஷனது திரிபதார்த்த கர்ப்ப யோககலா கலாப மறிந்து பண்ணவேண்டுதலாற் சீஷனது ஞானசத்தி கிர்த்தியக்குறிச் சிவாகம சிரவண மனனத்தெழுந் தெளிதறச் செயற்கைத தீக்ஷாங்க யோகாங்க ஞானமு ஞானம்.

பின்னவனது யோகக்குறிக் கிரியாசத்திச் சிறப்பிருப் பிச்சாசத்தி கிர்த்தியக்குறிச் சங்கற்ப சிற்கன்மமனைந்த ஞானசத்தி கிர்த்தியக்குறிச் சிறப்பு ஞானப்பிரவாக தீக்ஷாங்க யோகாங்க தியானமும் ஞானம்.

தியானத் தசைவறு தற்குறித் தியான சாத்திய தீக்ஷாங்க யோகாங்க சமாதியும் ஞானம்.

சமாதி சாத்திய திருக்கிரியாக்குறி யோகப்பேர் விசேகப ரமுத்தி சாக்ஷாதகார சாதன தீக்ஷாங்க சதேக சீவன் முத்தி சாக்ஷாத்காரமும் ஞானம்.

இஞ்ஞானங்களிற் சிறிதிற் றுதான்மியமாயுஞ் சிறிதி லாருடமாயு மனுசரிக்குஞ் சாக்ஷான் மோக்ஷமும் கிடைப்பிக்கும் சங்கற்ப தீக்ஷண நிரீக்ஷணம் பண்ணுஞ் சிவக்கிரியா சத்திச் சிறப் பிருப்பிச்சாசக்தி லக்ஷண தீக்ஷையும் ஞானம்.

அப்படிச் சுப்பிர பேதம், சுவாயம்புவம், பௌஷ்கர முதற் சிவாகமங்களிற் சிறப்பித்திருத்தலால் தீக்ஷையும் ஞான மென்பது சிவாகமப் பிரசித்தம்.

விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலரெனு மவரவர்க் கருகமாய் விட்டுக் கூட்டி விதிக்கும் அநேக வித ஞானத்தால் மோக்ஷ மென்றே பொதுச் சிறப்பாய்,—

நான் மறைகள் புராண நல்லவாகமஞ் சொல்லவல்லவா மென்னு மூனத்தாரென்கடவார் - பிராகிருத காமிக வாசிக மானசிக ஜடபந்த கன்மத்தால் முத்தியென்று செப்பும் ஞான வீனராகும் கன்ம மீமாம்சர் முதலோரேது பிரயோஜனத்திற் கருகர், நிஷ் பிரயோஜனர்களே!—

அஞ்ஞானத்தால் - அஞ்ஞான மூலவஞ்ஞானப்பெய ராணவமல மாரோபித விபரீத ஞானரூப போகக் கிரியாகர்த்திருத்துவக்குறி போக்த் திருத்வத்தால்,—

உறுவது தான் பந்தம் - மாயா கன்ம தேகபோகம் கட்டிப் பொருந்தும்.—

உயர் மெய்ஞ்ஞானந் தானுனத்தால் - சொல்லிய வங்கச் சிவ தீக்ஷா சிவஞான சிவயோக சிவ சரியாங்கி யங்கஞானத் தால்.—

அதுபோவது - அந்தப் பந்தம் நீங்குவது. காரண மிருக்கக் காரிய மெப்படிப்போம்?—

அலர்கதிர்முன் னிருள் போல் - சூரிய கிரண சந்நிதானத்தி லந்தகார மொப்ப,—

அஞ்ஞான மறப் பந்தமறும் - மலம் நீங்க மாயா கன்மக் கட்டு விடும் —

முத்தியாகும் - பின் சிவத்துவாபிவியத்தி சித்திக்கும்.

சொல்லிய அங்காங்கி ஞானங்களு ளங்கி ஞான முக்கிய மென்ப தறைகின்றார்:—

ஏனத்தார் ஞானங்க ளல்லாஞானம் - சிவ தீக்ஷா சிவஞான சிவயோக ஞானபாத்திரர்களல்லாச் சாங்கியன் வேதாந்தி முதலோர் சொல்லும் பிரகிருதி புருஷ விவேகப் பிரம விவேக பவுருஷ ஞானங்கள் சைவதேசிகள் சொல்லுஞ் சீவ சிவ ஐக்கிய விஷய சிவசத்திப் பிரமாணிக பௌருஷப் பிரமிதிக் குறித் தீக்ஷாங் காங்கி ஞானம்.

இவைகளல்லா ஞானம் சங்கற்ப சிற்கன்ம கிர்த்திய ஞான கரண ஞானம்:—

இறைவனடி ஞானமே - சிவக்கிரியா சத்திச் சிறப்பிருப் பிச்சாசதத்தி லக்கண சிவதீக்ஷையே.—

ஞானமென்பர் - ஞானச் சிறப்பென்று சிவ சித்தாந்திகள் செப்புவார்கள்.

சைவ சித்தாந்திப்போல் மறைந்து சாங்கிய வேதாந்தி மதத் தாபாசர்களாய்ச் சஞ்சரிக்குஞ் சிலர், தியான சமாதிச் சிற் நன்மச் சிறப்பு ஞானமுஞ் செப்பாது ஞானந்தியான சமாதி சீவன் முத்தி சாக்ஷாத்கார சர்வாங்காங்கியாயிருக்கும் தீக்ஷையை ஞானத தக் கங்கமென்று மாறிக்கொண்டு சீவ சிவ ஐக்கிய விஷய சிவசத்திசரண நைமித்திக பௌருஷ போத ஞான யா

த்திரமே இறைவனடி ஞானம், அதுவே சமாதி, அதுவே ஞான மென்பர்.

அவர்கள் முன்னுசாரியர் தீக்ஷையே மோக்ஷ சாதன மென் றநேகந் திருவிருத்தத்தில் வித்தரித்த வாக்கியங்களுக்கு முன்பின் விரோதமாய்ப் பொருள்கொள்ளாது தங்கள் மனக்கொள்கைக் கிணங்கப் பொருள் கொண்டு முன் பின் விரோதிக்கப் பண்ணி யக்குருவாக்கியங்களைப் பிராந்த வாக்கியங்களாகவும் விப்பிரலம்ப வாக்கியங்களாகவும் பண்ணிப் பேசும் பேயர்களோடு பேச்சே திருக்கின்றது.—

ஏதிப்போ நீர் நீதிசப்பிச் செப்பிற்றெனறு நிகழ்த்தியது? மலங்குணமது அஞ்ஞானமே, அஞ்ஞானங் குணகுணிதிரவியமென்று. மலமாகுமந்த வஞ்ஞானமுஞ் சிப்பி வெள்ளி ஞானம்போல ஞான மாத்திரத்தா னீங்கும்.

நன்று நீ சொல்லியது, மலங்குணம் அஞ்ஞானமாகி லதற்குச்குணியொன்று கூறவேண்டும். ஆன்மாவென்னிற் பாஷாணம் போல அஞ்ஞானமான்மா வென்னும் நையாயிக வைசேஷிக மதமாம். ஆன்மாவுக் கன்னிய மக்குணி யென்னி லதுவே மலம். அஞ்ஞானமென்றது மலகுணமென் றுமக் கபிமத ஞானுத்தியந்தா பாவ லக்ஷணம் மவுட்டியமாகும். அஞ்ஞானமன்று. குற்றிகொல்லோ மகன் கொல்லோ வென்னு மையஞானம்போ லையஞான மாகு மஞ்ஞானமே.

அல்ல திதுவெள்ளியெனுஞ் சிப்பி வெள்ளி விபரிய ஞானம்போற் சவிகற்ப விபரிய ஞானமாகு மஞ்ஞானமே தான், நன்றிது வன்று. குணியொன்று குறிக்குமிடத்துச் சாகங்கார புத்தி தத்துவமாதலால், புத்திதத்துவமுதற் றத்துவபிரளயத்து முத்திப் பிரசங்கம் வரும். அப்போது இருசந்திரனென்னும் விபரி

ய ஞானம்போற் புத்தி பொருந்தாது. சரீர நானென்று தற்றேதோற்று நிர்விகற்ப விபரிய ஞானமாகு மஞ்ஞானமே.

அதுவும் நன்றன்று, ஞானும் சத்திற்குச் சித்தும் விபரியாம் சத்திற்கு மலகலை மணந்து கலந்த வித்தையுங் குணியாதலால்,இயற்கைக் குணிமாறி மயங்கிச் செயற்கைக் கலைகலந்த வித்தியா தத்துவ முதற் றத்துவப் பிரளயத்து முத்திப் பிரசங்கம் வரும்.

அதுவன்றி, இரு சந்திர ஞானமாகு மஞ்ஞான மொருசந்திரனெனு முண்மை ஞானத்தா லுண்ணிக்க முற்றுலும் ஒப்புமாத்திரத் துதிக்குஞ் சிப்பி வெள்ளி ஞானமாகு மஞ்ஞானஞ் சிப்பியெனு முண்மைஞானத்தா லுண்ணிக்கம் புறநீக்க முற்று முற்றும்போனாற்போல நேத்திரபடல திரவிய நீக்கமன்றிப் புறநீக்க முறாததுபோலச் சரீர நானென்னுஞ் சரீரான்ம ஞானமாகு மஞ்ஞானமுஞ் சரீரத்துக் கன்னிய மான்மா நானெனு முண்மை ஞானத்தா லுண்ணிக்க முற்றுலு மொரு மலத் திரவிய நீக்கமன்றிப் புறநீக்க முறாது மல திரவியமும் படலமென்றிதொரு திரவியப் பொருளெனு முண்மை ஞான மாத்திரத்தாற் படலம்போல மல மென்றிதொரு திர வியப் பொருளெனு முண்மை ஞானமாத்திரத்தால் நீங்காது.

நேத்திர படல திரவியம் படல நீக்கு முபாய ஞானத்தினையுடைய வைத்திய சத்தி சத்திர கன்மத்தால், நேத்திர விபரீத விருத்தி நிமித்தாந்திய விருத்தியோடு நீங்குவது போல், மல திரவியமு மல நீக்கு முபாய ஞானத்தினையுடைய சிவதீக்ஷாக்குறிக் கிரியா சத்திச் சிறப்பிருப் பிச்சாசத்தி கிருத்தியக் குறிச் சங்கற்ப சிற்கன்மத்தாற் கலை கலந்த வித்தியா தத்துவ விபரீத விர்த்தி நிமித்த மவுட்டிய விர்த்தியோடு நீங்குமாகலால்,

சாங்கியர் போற் சொல்லுஞ் ஸ்வதந்திர ஞானத்தால், பாதஞ்சலர் போற் சொல்லுஞ் ஸ்வதந்திர யோகத்தால், வேதாந்

திகள்போற் சொல்லுஞ் ஸ்வதந்திர சந்நியாசத்தால், மீமாஞ்சர் போற் சொல்லுஞ் சுவதந்திர கன்மத்தால், மோக்ஷமில்லை.

சீக்ஷ பௌருஷ சிவஞானாதிகளும் சீக்ஷபௌருஷ சிவயோகாதிகளும், சாதார வசத்தியோ நிர்வாண தீக்ஷாங்கி மாத்திராங்கங்கள் குருசிவஞானாதி குருசிவ யோகாதிகளும், சிவ சிவஞானாதிகள் சிவ சிவயோகாதிகளு முறைமையிற் சாதார நிராதார சத்தியோ நிருவாண தீக்ஷாங்க மாத்திராங்கங்கள். சீக்ஷபவுருஷ சிவ ஞானாதி சிவ யோகாதிகள் மோக்ஷகாரிய முற்றுமொத்துச் செல்லாது ஓரிடத்தில் வியபிசாரிகளாதலான்.

மோக்ஷ காரிய முற்று மொத்துச் சொல்லுஞ் சொல்லிய சிவசத்தி லக்ஷண தீக்ஷையாற் றானே மோக்ஷ மென்று ஸ்வதந்திர தீக்ஷா சிற்கன்மத்தால் மோக்ஷம் ஸ்வ தந்திரமல்லா ஞான சோடிகள் தீக்ஷாங்கங்களன்றி ஸ்வ தந்திரங்களாய்ச் சூழ்ந்தாலு மோக்ஷமில்லையாம். ஆகலாற் சொல்லிய சிவ தீக்ஷா சத்தி சங்கற்ப சிற்கன்மத்தாற்றானே மோக்ஷமென்று சித்தாந்தம்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

மேற்கூறியவாற்றால் ஏனையவெல்லா ஞானத்தைப் பயப்பிக்கும் ஞானமொன்றே வீடுபேற்றிற்குச் சிறந்த காரணமாவதென்பது வேதமுதலிய பிரமாண நூல்கட்கெல்லாந் துணிபாகவும், அவற்றோடு பிணங்கி வீடுபேற்றிற்குத் தீக்கை மாத்திரையேயமையும்,ஐவகை வேள்விமுதலிய கன்மங்களேயமையும், பத்திநெறிமாத்திரையே யமையுமென்று இவ்வாறு பிதற்றும் பேதைநீரார் ஒருவாற்றானுந் தெருட்டற்பால ரல்லரெனவும்; ஞா

னமல்லாதனவெல்லா மஞ்ஞானமாகலின் அவ்வஞ்ஞானப் பகுதிகளாற் பந்தமுறுதலின்றி வீடுபேறடைதல் கூடாதெனவும், அவ்வஞ்ஞானப்பகுதிகளெல்லாம் ஒளிமுன்னிருள்போல ஞானத்தின் முன்னர்ச் சத்திகெட்டொழியும். அவை யொழியவே அவற்றானாய பந்த நீங்கும். அது நீங்கவே முத்தியில் கைகூடுமாகலான் ஞானமொன்றே முத்திக்குச் சிறந்தகாரணமெனவும், ஞானத்துள்ளுந் தார்க்கிகர் சாங்கியர் மாயாவாதிமுதலியோர் கூறும் ஞானங்களெல்லாம் பாசஞான பசுஞானங்களாகலான் அவையும் பந்தமுறுத்துவனவேயன்றி வீடெய்துவிக்க மாட்டாமையின் அவற்றின் வேறாய திருவடிஞானமொன்றே அப்பெற்றித்தாகிய ஞானமாவதெனவுங் கூறுவர் அந்நூல்களி னுண்மையுணர்ந்தோரென்பதாம்.

ஏகாரமிரண்டும் பிரிநிலைக்கண் வந்தன.

சொல்லவுமெனச் சிறப்பும்மை விரித்துரைக்க.

தானிரண்டும் அசை.

ஆனந்தால் ஆனவதனாலென்க.

ஆனவென்பதனு ளகரமும் அதனாலென்பதனு ளன்சாரியையுந் தொடைநோக்கி விகாரத்தாற் றொக்கன? "பெற்றத்தாற் பெற்றபயன்" என்றாற்போல.

ஆதல் உண்டாதல்.

இதனானே,பிறவெல்லாம் வீடுபேற்றிற்குச் சிறந்தகாரணமல்லவாதல் இனிது விளக்கி மேலது வலியுறுத்தப்பட்டது.

இத்துணையும் ஞானத்தினியல்பும் அதன் பயனும் பொதுவகையாற் கூறி, இனிச் சிறப்புவகையாற் கூறுகின்றார்.

நிரம்பவழகியருரை வருமாறு.

ஞானத்தை நல்கி மோக்ஷத்தைக் கொடுக்குமென்ற தென்னம்பு, கிரியையினாலே மோக்ஷமென்ற சைவரை நோக்கி மேலருளிச்செய்கிறார்.

ஞானத்தால் விடென்றே நான்மறைகள்புராண நல்லவாகமஞ்சொல்ல - சரிதைகிரியா யோகங்களுக்குப் பதமுத்தியொழிந்து மோக்ஷ முண்டாகாது, ஞானத்தாலே மோக்ஷமென்று நாலு வேதங்களுந் திவ்வியாகமங்களும் புராணங்களுஞ் சொல்லிப்போத,—அல்லவாமென்னு மூனத்தாரொன்கடவார் - அந்தஞானத்தாலே மோக்ஷமில்லையென்று சொல்லுகிற அறிவில்லாதவர்களுக்கு ஞானமில்லாததுகொண்டு அஞ்ஞான முண்டாம்,—அஞ்ஞானத்தா லுறுவதுதான்பந்தம் - அந்த வஞ்ஞானத்தா லுண்டாவது ஜனனமொன்றுமே! அந்த ஜனனந் தான் போம்படி யெப்படியெனனில்?—உயர்மெய்ஞ்ஞானந்தா னுனத்தா லதுபோவது - எல்லாத்துக்கு மேலாயிருக்கிற சிவஞான முண்டானா லந்த ஜனனம்போம் அல்லது போகாது. அது வென்போல?—அலர்கதிர்முன்னிருள்போல் - விட்டு விளங்காநின்ற வாதித்தன் சன்னதியி லந்தகாரம் போனாற்போல்,—அஞ்ஞானமறப் பந்தமறுமுத்தியாகும் - இவனை அநாதியே மறைத்துக்கொண்டு நிற்கிற மலசம்பந்தம் போகவே ஜனனமற்று ஞானம் பிரகாசிக்கும். அந்த ஞானத்தாலே மோக்ஷ முண்டாம்.—ஈனத்தார் ஞானங்க ளல்லாஞானம் - இந்தச் சிவஞான மொழிந்து வேறுசொல்லப்பட்ட ஞானங்களெல்லாம் போதனினர் சொல்லுகிற ஞானங்களாம். போதவான்கள் சொல்லுகிற ஞானமேதென்னில்?—இறைவனடி ஞானமே ஞானமென்பர் - ஆகையால் பரமேஶ்வரனுடைய சீர்பாதத்திலே பொருந்துகைக்

கு உண்டான சிவஞான மெய்ஞ்ஞானமென்று சொல்லுவர்கள் அறிவாலுயர்ந்த பெரியோர்கள்.

இதற்குப் பிரமாணஞ் சங்கற்பநிராகரணம், "பல்பணி ஞான காரணமென்னிற் - றெல்பணிதொறும்பயன் றருப்ப தனுலு-மொருபணிசெய்யாச் சிரபுரச்சிறுவரு-மரசராயத் தரு ணத் தலைவரு-முதிர் பரசமயத் திதமுறுமரசரும்-ஞானம்பெற் றநன்மையினுலு - மீனமில்பணியருட் கேதுவன்றென்றால் - ஞா னோற்பத்தி நிமித்தமிஃதொழிலென-வேறேற்கிறைநூ லியம் பிற்றென்னும்" என்றும், சிவஞானபோதம், அ-சூ, க- "வே. தவஞ்செய்தா ரொன்றுந் தவலோகஞ் சார்ந்து, பவஞ்செய்து ப ற்றறுப்பா ராகத்—தவஞ்செய்த, நற்சார்பில் வந்துதித்து ஞா னத்தை நண்ணுதலை, கற்றார்சூழ் சொல்லுமாங் கண்டு" என் னுமதுங் கண்டுகொள்க.

இதனுற் சொல்லியது, சிவஞானத்தாலே ஆன்மாக்கள் சிவனுடைய திருவடியைப் பெறுவர்களென்றும், அந்த ஞானத்தி னுலே ஜனன மறுமென்றும், அல்லாத ஞானங்களெல்லாங் குற் றத்தைப் பொருந்தின ஞானமாகையால் ஜனனத்தைப் போ க்காதென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

——o——

ஞானத்தால் வீடென்றே - மேற்கூறிய வாற்றால் ஏனைய வெல்லா ஞானத்தைப் பயப்பிக்கு ஞானமொன்றே வீடுபேற்றி ற்குச் சிறந்த காரணமென்பது,—நான்மறைகள் புராண நல்ல வாகமஞ்சொல்ல - நான்குவேதங்களும் பதினெண்புராணங்க ளும் நன்மையான இருபத்தெட்டு ஆகமங்களுமாகிய பிரமாண நூல்கட்கெல்லாந் துணிபாகவும்,—அல்லவாமென்னு மூனத் தாரொன்கடவர் - அவற்றொடு பிணங்கி வீடுபேற்றிற்குத் திக்கை

மாத்திரையே யமையும், ஐவகை வேள்வி முதலிய கன்மங்களையமையும் பத்திநெறி மாத்திரையே யமையுமென்று இவ்வாறு பிதற்றும்பேதைநீரா ரொருவாற்றானுந்தெருட்டற்பாலரல்லரெனவும்,—அஞ்ஞானத்தா லுறுவதுதான்பந்தம்-ஞானமல்லாதனவெல்லா மஞ்ஞானமாகலின் அவ்வஞ்ஞானப் பகுதிகளான் பந்தமுறுதலின்றி வீடுபேறடைதல் கூடாதெனவும்,—அலர்கதிர்முனிருள்போ லுபர்மெய்ஞ்ஞானந்தா னுனத்தா லதுபோவது - அவ்வஞ்ஞானப் பகுதிகளெல்லா மொளிமுன் விருள்போல ஞானத்தின் முன்னர் சத்திகெட் டொழியும்,—அஞ்ஞானம்விடப் பந்தமறு முத்தியாகும் - அவ்வஞ்ஞான மொழியவே யவற்றானாய பந்தநீங்கும், அது நீங்கவே முத்திநிலை கைகூடுமாகலான், ஞானமொன்றே முத்திக்குச் சிறந்த காரணமொனவும்,—ஏனத்தார் ஞானங்களல்லாஞானம் - ஞானத்தாலுள்ள நூல்களால் தார்க்கிகர் சாங்கியர் மாயாவாதி முதலியோர்கூறு ஞானங்களெல்லாம் பாசஞான பசுஞானங்களாகலா னவையும்பந்தமுறுத்துவனவே யன்றி வீடெய்துவிக்க மாட்டாமையின்,—இறைவனடி ஞானமே ஞானமென்பர் - அவற்றின்வேறாய திருவடி ஞானமொன்றே யப்பெற்றித்தாகிய ஞானமாவதெனவும் கூறுவர் அந்நூல்களினுண்மை யுணர்ந்தவர்.

இதனானே பிறவெல்லாம் வீடுபேற்றிற்குச் சிறந்தகாரணமல்லவாத லினிது விளக்கி மேலது வலியுறுத்தப்பட்டது.

இத்துணையு ஞானத்தினியல்பு; முதன்பாடனும் பொதுவகையாற் கூறி யினிச் சிறப்பு வகையாற் கூறுகின்றார்.

மறைஞானதேசிகர் உரை.

இந்த வான்மாவுக் கனுக்கிரகஞ் செய்தற் பொருட்டு அருபியாயிருக்கிற சிவன் ஞானே யாசாரியனா

ஞும் வடிவைபெடுத் துபசரிக்கு முறைமை
யுணர்த்துகின்றூர்.

சூரியகாந் தக்கல்லி னிடத்தேசெய்ய சுடர்தோ
ன்றி யிடச்சோதி தோன்றுமாபோல், ஆரியனு மாசா
ன்வந் தருளாற்றேன்ற வடிஞான மான்மாவிற் றேன்
றுந்தோன்றத், தூரியனுஞ் சிவந்தோன்றுந் தானுந்
தோன்றுந் தொல்லுலக மெல்லாந்தன் றுள்ளேதோ
ன்று. நேரியனுப் பரியனுமா யுயிர்க்குயிராயெங்கு
நின்றநிலை யெல்லாமுந் திகழ்ந்துதோன்றும். (௨௮)

(இ-ள்) சூரியகாந்தக்கல்லினிடத்தே செய்யசுடர்தோன்றியிடச் சோதிதோன்றுமாபோல்	சியந்த வாதித்தப் பிரகாசந் தோன்றின விடத்துச் சூரியகாந்தக் கல்லினிடத்திற் கிடந்த அக்னிப்பிரகாச முண்டான வாறு போல
ஆரியனு மாசான்வந் தருளாற்றேன்ற	சிவன்றான தனுக்கிரகத்தால் பூர்சியனு ன வாசாரியன்வந் திவனுக்கு ஞானோபதே சஞ் செய்தவிடத்து
அடிஞான மான்மாவிற் றேன்றுந்தோன்ற	அந்தப்படியே நாடோறு மநுசந்தானம் பண்ணியிருக்கவே யிவனிடத்திலே சிவஞா னம் பிரகாசிக்கும். அது பிரகாசித்தவாறே 'அடிகளாது ஞான மடிஞானம்' என்னவே

சிவன் ஞானமென்றதாயிற்று. "அடிகே ளுமக்காட் செயவஞ்சு தமென் றமரர்பெருமானை யாரூ ரனஞ்சி" எனவறிக.

தூரியனுஞ் சிவந்தோன்றும்	அருபியாயிருக்கிற சிவனும் வெளிப்படு வன்.

தானுந் தோன் றும்

தற்சொரூபமும் விளங்கும்.

இவ்விடத்து விளங்குமென்றது அசுத்தமாயா காரியமாகிய தத்துவ முப்பத்தொன்றும் விட்டு நீங்கினவிடத்துச் சுத்தமாயா தத்துவரூபியாய் நிற்பன், அப்பொழு திவன் சுத்தமாயா ரூபமாகிய தன்னுடைய தனுகரணங்களைக் காண்கிறதே யென வறிக.

இத்தன்மை யுண்டாகவே,

தொல் லுலக மெல்லாந் தன் னுள்ளே தோன் றும்

பழபதாய் வருகின்ற சுத்ததத்துவ புவனத்திலிருக்கு மான்மாக்களு மிவனிடத்திலே விளங்கத்தோன்றும். இந்தச் சுத்தமாயா பந்த நீங்கவே,

நேரியனுப்பரியனுமா யுயிர்க் குயிரா யெங்கு நின்றநிலை யெல் லாமுந் திகழ்ந் துதோன்றும்.

சிவ னணுவுக்கணுவாயு மகத்துக்கு மகத்தாயு மான்மாக்களுக் கெல்லாம் பிராணநாயகனு யெவ்விடத்தும் விட்டு நீங்காமற் பிரகாசித்து நிற்கு முறைமையெல்லாந் தரிசிக்கப்படும். எ-று.

“ சூரியகாந்தமுஞ் சூழ்பஞ்சும்போலச் - சூரியகாந்தஞ் சூழ்பஞ்சைச் சுடமாட்டா - சூரியன் சன்னிதியிற் சுடுமாறுபோ - லாரியன் றோற்றமுன் னற்றமலங்களே” எனவுமறிக.

“தேவதேவ வாதிபுராண - மாயப்படலங்கீறித் தூயஞான நாட்டம் பெற்றேன்-பெற்றபின் மெய்ம்மைய நின்பெருந தன்மையுங் -கண்டேன் காண்டலு - மென்னையுங் கண்டேன்பிறரையுங் கண்டே--னன்னிலை யனைத்துங்கண்டே- னென்னேநின்னைக் காணுமாந்தர் - தம்மையுங்காணுத் தன்மையோரே” எனப் பிள்ளை வாக்கினு முணர்க. (உஅ)

சிவாக்ரயோகியருளை வருமாறு.

—— o ——

மேலந்தச் சிவஞானஞ் சித்திக்கு முறைமையும் அதனாற் றரிசனப்படுவதுங் கூறுகின்றது.

ஆரியனுமாசான்வந் தருளாற்றேன்ற வடிஞானமான்மா விற்றேன்றும் - சர்வதேவ முநிகணங்களினுலும் பூஜ்யனுன சிவன் கருணையினுலே ஆசாரியமூர்த்தியை யதிஷ்டித்துவந்து பக்குவான்மாவினிடத்திலே சந்நிதாநம் பண்ணச் சிவஞானம் ஆன்மாவிலே அபிவியத்தியாம். அஃதென்போலவெனில்?—சூரியகாந்தக் கல்லினிடத்தே செய்ய சுடர்தோன்றியிடச் சோதி தோன்றுமாபோல் - ஆதித்தன் சூரியகாந்தத்தி னிடத்திலே சன்னிதானம் பண்ண வதனிடத்திலே அக்னி யுண்டானதுபோல,—தோன்றத் தூரியனுஞ்சிவந்தோன்றும் தானும்தோன்றும் தொல்லுலகமெல்லாந் தன்னுள்ளேதோன்றும் நேரியனுய்ப் பரியனுமா யுயிர்க்குயிராயெங்கு நின்றநிலை எல்லாமுன் னிகழ்ந்து தோன்றும்-இவ்வாறு சிவஞான மான்மாவிலே பிரகாசிக்கவே முன் வாக்குக்கு மனத்துக்கும் விருத்திஞானத்துக்கு மெட்டாதே நின்ற சிவன் ஆன்மாவிலே வேறறத் தோன்றுவன். அந்தச் சிவனிடத்தில் தன்னையும் வேறற ஸ்வரூபஞானத்தினுலே காணப்படும். அநாதியாகிய பிரபஞ்சமெல்லாம் பரிபூரணமான தன்னிடத்திலே யேகதேசமாய்க் காணப்படும். தேகத்துப் பிரேரகன் ஜீவான்மாபோலச் சிவன் ஜீவான்மாக்களுக்குப் பிரேரகனுய்ப் பரமான்மாவாய் ஜடவஸ்துக்களிலும் குறைவற நிற்கு முறைமையும் விளங்கத் தெரியுமென் றிதன்பொருள.

——

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—— 0 ——

அப்படிக் குரு ஞானாதி சாங்க சாகார சத்தியோ நிருவாண தீக்ஷையினால் விதேக பரமுத்தி சாக்ஷாத்காரஞ் சடிதி விளங்குமென்றுஞ் சீஷஞானாதி சாங்க சாகார வசத்தியோ நிருவாண தீக்ஷையினால் சதேக சீவன் முத்தி சாக்ஷாத்காரமெல்லாம் விளங்குமென்றுஞ் சமாதி நடுவொரு திருவிருத்தத்தால் நாட்டி யிரு திருவிருத்தத்தா லிசைக்கின்றார்.

இதுமுத லிரண்டு செய்யுள் - ௯௦ - வது செய்யுளுரையிற் காண்க.

சிவஞானயோகியருரை வருமாறு.

—— 0 ——

தனது கிரணத்தோடுந் தோன்றும் ஞாயிற்றின் சந்நிதி மாத்திரையானே சூரியகாந்தக்கல்லின்கண் ணெருப்பு விளங்கித் தோன்றுமாறுபோல, கேட்பித்தலோடுந் தோன்றுமாசிரியன் சந்நிதிமாத்திரையானே மாணாக்கன்மாட்டு மேல் 'ஈரிரண்டாங்கிளக்கின் ஞானம்' என்றவற்றுள் முந்திய ஞானமாகிய கேட்டலறிவு விளங்கித் தோன்றும். அது தோன்றவே, பதிமுதலிய முப்பொருளும் அவை பொன்றியொன்று வியாபக வியாப்பியங்களாமாறும் நிருவிகற்பமாய்த் தோன்றுமென்பதாம்.

அருளாலென்புழி ஆன் உடனிகழ்ச்சிப் பொருட்கண் வந்தது. "தூங்குகையா னோங்குநடையன்" என்றாற்போல.

ஈண்டு அருளென்றது ஏற்புழிக்கோடலாற் கேட்பித்தலையுணர்த்திற்று.

ஆசிரியன் நூற்பொரு ளுரைக்கும்வழி ஆசிரியன்ஞானமே மாணாக்கன்மாட்டுச் சென்று பற்றுவதுபோலுமென்னு மாசங்கை யறுத்தற்பொருட்டுத் தோன்றத்தோன்றுமென்றார்.

உவமை கூறியதுமது.

சடத்துக்கன்றிச் சித்துக்குச் சங்கிரமங் கூடாதென்பது சிவாகமநூற்றுணிபென்க.

அணுவோரண்டமாம்படி நேரியனாகலால் உயிர்க்குயிராதலும், அண்டமோரணுவாம்படி பரியனாதலால் எங்குநிற்றலும் பெறப்படுமென்பார், 'நேரியனாய்ப்பரியனுமா யுயிர்க்குயிரா யெங்கு நின்றநிலை' என்றார்.

முன்னிகழ்ந்தென்பதனை யாண்டுங் கூட்டுக.

முன்னிகழுந் தோற்றமாவது சவிகற்பத்துக்கு முன்னாக நிகழும் நிருவிகற்பத் தோற்றம்.

இதனானே கேட்டலாமாறும் அதன்கணிகழுமனுபவமுங் கூறப்பட்டன.

நிரம்பவழகியருரை வருமாறு.

அருவமாய் வாங்மனாதீதகோசரனாய் நின்ற சிவன் உருவமாய் வந்து இரக்ஷித்த தெப்படியென்ற பாடாணவாதியை நோக்கி யருளிச்செய்கிறார்.

சூரியகாந்தக் கல்லினிடத்தே செய்யசுடர் தோன்றிடச் சோதிதோன்றுமாபோல் - சூரியகாந்தமென்கிற கல்லினிடத்திலே சிவந்த வாதித்கர் வந்து பிரவேசிக்க வரூபமாய்நின்ற வக்னி உரூபமாய்த் தோன்றுகிற முறைமைபோல,—ஆரியனாமா சான்வந் தருளாநின்ற வழி ஞான மான்மாவிற்றோன்றும் -

சுத்தனு யருவமாய்நின்ற சிவன் ஆன்மாக்கள்மேலே வைத்த காருணணியத்தினுலே தான்தானே ஆசாரியமூர்த்தியாக வந்து தோன்ற பெத்தத்தன்மையி லிவனை யுபகரித்துக்கொண்டு நிற்கச்செய்தேயுந் தோன்ருமல்நின்ற சிவஞானந் தன்னிடத்தி லே பிரகாசிக்கும்.—தோனறத் தூரியனுஞ் சிவந்தோன்றும்- அந்த ஞானம் பிரகாசிக்கவே இத்தனைகாலமுந் தோன்ருமல் நின்ற சிவதரிசனமுண்டாம்,—தானுந்தோன்றும் - ஆனம தரி சனமுமுண்டாம்,—தொல்லுலகமெல்லாந் தன்னுள்ளேதோன் றும் - பழயதாய்வருகிற விசுவங்களெல்லாம் அசத்தியமென்கி ற முறைமையுந் தன்னிடத்திலே தரிசிக்கலாம். இவையொழிந் து மந்தஞானத்தாலே,—நேரியனுய்ப் பரியனுமா யுயிர்க்குயிரா யெங்கு நின்ற நிலையெல்லா முன் னிகழ்ந்துதொன்றும்- அந்தச் சிவன் அணுவுக்கணுவாய் மகத்துக்கு மகத்தாய் சர்வான்மாக் களுக்கும் பிராணனுய் எவ்விடத்தும் பரிபூரணனு யசைவற நின்ற நிலைமையெல்லாஞ் சந்தேகமற விளங்காநிற்கும்.

ஆரியனுமாசான்வந் தருளாற்ருேன்ற வென்றது பாடா ணவாதி.

ஆன்மாக்களிலே விசேஷவான்கள் குருவா யிவனை இர க்ஷிக்கும தொழிந்து சிவன் வாங் மனுதீதனுகையால் குரு மூர்த்தி யாகானென்னச் சிவனே குருவா யிரக்ஷிப்ப னென்றத ற்குப் பிரமாணம், சிவஞானபோதம் - அ - சூ, டு-வெ, இல்லா முலைப்பாலுங் கண்ணீருமேந்திழைபால், நல்லாயுளதாமல் நீர் நிழல்போ—லில்லா, வருவாகிநின்ருனை யா ரறிவார்தானே, யுரு வாகித் தோன்ருனே லுற்று" என்னுமதுங் கண்டுகொள்க.

இதனுற் சொல்லியது அருவமாகிநின்ற சிவன் ஆன்மாக் கள்மேல் வைத்த கிருபையாலே யாசாரியமூர்த்தியாக வந்து தோன்ற இவனிடத்திலே யநாதியேயப்பிரகாசமாய்நின்ற சிவ

ஞானம் பிரகாசிக்குமென்றும் அந்த ஞானத்தினாலே சிவதரிசனம் ஆன்மதரிசனம் பிரபஞ்சமாகிய பாசதரிசனம் என்னும் மூன்று தரிசனப்படுமென்றும், இவை யொழிந்து மந்தச் சிவன் சடசித்துக்க ளிரண்டினும் பரிபூரணனாய்நின்ற முறைமையும் இவனுக்கு விளங்கா நிற்குமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

தோன்றியிடச் செய்யசுடர் - தனது கிரணத்தோடுந் தோன்றுஞாயிற்றின் சந்நிதி மாத்திரையானே,—சூரியகாந்தக் கல்லினிடத்தே சோதிதோன்றுமாபோல - சூரியகாந்தக் கல்லின்கண் நெருப்புவிளங்கித் தோன்றுமாறுபோல,—அருளான்வந்தாரியனுமாசான்றோன்ற-கேட்பித்தலோடுந்தோன்று மாசிரியன் சந்நிதிமாத்திரையானே,—ஆன்மாவினடி ஞானந்தோன்றும்-மாணுக்கன்மாட்டுமேல்"ஈரிரண்டாங்கிளக்கின் ஞானம்"என்றவற்றுண் முந்தியஞானமாகிய கேட்டலறிவு விளங்கித்தோன்றும்.—தோன்றத்தூரியனுஞ் சிவந்தோன்றும் தானுந்தோன்றுந் தொல்லுலகமெல்லாந் தனுள்ளே தோன்றும் - அதுதோன்றவே முதல்வனுகிய பதியும் ஆன்மாக்களாகிய பசுவும் பழய பிரவஞ்சமாகிய பாசமும் என்ற முப்பொருள்களுந் தன்னுள்ளே தோன்றும்,—நேரியனாய்ப் பரியனுமாய் - அணுவோரண்டமாம்படி நேரியனாயும் அண்டமோரணுவாம்படி பரியனுமாய் நிற்றலால்,—உயிர்க்குயிராயெங்கு நின்றநிலையெல்லாமுன் னிகழ்ந்து தோன்றும் - உயிர்க்குயி ராதலு மெங்குநிற்றலு மவை யொன்றிலொன்று வியாபக வியாப்பியங்களாமாறு நிருவிகற்பமாய்த் தோன்றும்.

இதனானே கேட்டலாமாறு மதங்க ளாசமு மறுபவமும் கூறப்பட்டன.

மறைஞானதேசிகர் உரை.

இவ்வாறடைந்த சீவன்முத்தித் தன்மை யுணர்த்துகின்றார்.

மிக்கதொரு பக்குவத்தின் மிகுசத்திநிபாதமே
வுதலு ஞானம்விளைந் தோர்குருவினருளாற், புக்க
னுட்டித் தேநிட்டை புரிந்துளோர்கள் பூதலத்தே பு
கழ்சீவன் முத்தராகித், தக்கபிரி யாப்பிரிய மின்றியோ
ட்டிற் றபனியத்திற் சமபுத்தி பண்ணிச்சங்கரனே,
டொக்கவுரைந் திவனவரை யவரிவனை விடாதே யுடந்
தையாய்ச் சிவன்றேற்ற மொன்றுமே காண்பர்.(உகூ)

(இ-ள்.) மிக்கதொரு பக்குவத்தின் மிகு சத்திநிபாதமேவுதலும் — ஆன்மாக்கட்கெங்கு மொக்க மலபரிபாகமுண்டாயுள்ளளவில் அப்பொழுதிற் சிவனிவனிடத் துண்டாய மலத்தைக் கீழ்ப்படுத்தித் தீவ்ரதரமான சத்தியைப் பதித்துள்ளளவிற் சம்சாரத்தில் வையிராக்யம் பிறந்து,

ஞானம் விளைந்தோர் குருவினருளால் — ஒருஞானசாரியனை யதிட்டித்துக் கொண்டு சாதிகாரை யென்னுந் தீக்கையைப் பெற்று,

புக்கனுட்டித்தே நிட்டைபுரிந்துளோர்கள் — அவனருளிச்செய்த வாகமத்தின்வழி யாராய்ந்து வைகல்யமற வனுட்டித்த பலத்தாலே, காட்டமானதுபோல அசைவின்றி யி

ருந்த நிட்டையைப் பொருந்தினவர்கள் எச்சிறப்பினை யுடையோ ரென்னில்?

பூதலத்தேபுக ழ்சிவன் முத்த ராகி	பூமியின்கண்ணே யெல்லாராலும் சிவன் முத்தரென்று கொண்டாடப்பட் டிருப்பர்கள்; அவர்கள் பூதலத்தே சஞ்சரிக்குமிடத்து.
தக்க பிரியாப் பிரியமின்றி	ஆன்மாக்களுக்குத் தனக்கமைப் பாட்டையுடைய சுகதுக்கமு மித்ருசத்ரு வென்னும் விகற்பமின்று. இஃதில்லாமையால்
ஓட்டிற் றபனி யத்திற் சமபுத்தி பண்ணி	எப்படி யோட்டி னிடத்தில் விருப்பற்றார் அதுபோலப் பொன்னி னிடத்தும் விருப்பற்று,
சங்கரனோ டொக்கவுரைந்து	சிவனுடைய வியாபகத்துடனே தானும் வியாத்தனாய்
அவனிவனை யிவனவனை விடாதே	சிவனு மான்மாக்களை விடாமல் ஆன்மாக்களு மந்தச்சிவனை விடாமற் கலந்திருப்பர்கள். இக்கலப்பு யாதெனில்? அநாதியந்த சமவாய மெனப்பெறும்.
உடங்கை யாய்ச்சிவன் றோற்ற மொன்றுமே காண்பர்.	விசுவமெங்குஞ் சிவன்வியாபித்து நிற்கையா லஃதெல்லாஞ் சிவனுடைய சொரூபமாகவே கண்டிருப்பர்கள். எ-று.

நிட்டை புரிந்துளோர் - எழுவாய், காண்பர் - பயனிலை. ஏகாரந் தேற்றம்.

இதற்குப் பௌட்கரம் சிவதருமோத்தரம் சுப்ர பேதத் தமறிக. (உக)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

(மிக்கதொரு பக்குவத்தில்...காண்பர்)ஏகபாதம். ஆணவமல மிகவும் பரிபாகமான காலத்தில் தீவ்ரசத்திநிபாதம்பதிய வொப்பற்ற ஆசாரியனுடைய கருணையினாலே சிவஞானம் பிரகாசித்து விஷயமுகத்தைவிட்டுச் சிவாபிமுகனாகப் பொருந்தி நிட்டை கூடினபோ திந்தப்பூமியின் கண்ணிலே யெல்லாரு மேத்தப்பட்ட ஜீவன்முத்தராகி யிச்சை யுண்டாகத்தக்க பதார்த்தத்திலே பிரியமும் அல்லாத பதார்த்தத்திலே த்வேஷமு மில்லாமற் பொன்னையு மோட்டையும் சமமாகக் கண்டு சுகத்தைப் பண்ணுகிறவராகையால் சங்கரனென்று பெயருடைய சிவனுடனே பிரிவற்று, சிவன் ஜீவன்முத்தனைப் பிரியாமல் ஜீவன் முத்தர் சிவனைப்பிரியாம லோரியல்பாய்ச் சிவானந்தோதய மொன்றையுமே யனுபவிப்பரென் றிதன்பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

௩௰ - செய்யுளுரையுட் காண்க.

சிவஞானயோகியருரை வருமாறு.

பக்குவமுதிர்ச்சியா னாலாஞ் சத்திநிபாத மேவப்பெற்றார்க்கு அச்கேட்டலறிவு மந்தமாதலின்றி முதிர்ந்து முறுக விளையும், அப்பொழுது தம்மாச்சாரியராதல் தம்மோ டொருசாலை மாணாக்கராய்த் தம்மின் மூத்தாருளொருவராதல் சிந்திப்பிக்கப்பெறு மந் நூற்பொருளின் கண்ணே கருத்தொருங்கி நுழை

ந்து முன்னொடுபின் மலைவற ஏது திருட்டாந்த முதலியவற்றா ற் சிந்தித்து நிட்டை கூடுதற்கண் வேட்கை மிக்குடையராகப் பெற்றார், சிந்தித்தற் கருமமே மேற்கொண்டு மற்றொன்றினும் பற்றொன்றின்றிச் சீவன் முத்தரோடொத்துப் பேரறிவாகிய சிவமுஞ் சிற்றறிவாகிய தாமும் ஞாயிற்றினொளியுங் கண்ணொளியு ம் போலத் துவிதமாய் நிற்றலான், ஆண்டுத் தாமுளராதலறியப் பெறாது சிவத்தோற்றமொன்றே காணப்பெற்று நிருவிகற்பஞ் சவிகற்பமென்னுமிரண்டிற்கு மிடைநிலதத்தே நிற்பரென்பதாம்.

மிக்கதொருபக்குவத்தின் மிகுசத்திநிபாத மேவுதலு ஞான ம் விளைந்தெனவே, அங்ஙனம் மேவாதவழி அக்கேட்டலறிவு முறுகுதலின்றி யஃகி நிசமுமென்பதாயிற்று.

விளைந்தவழியென்பது விளைந்தெனத் திரிந்தது.

ஓர்குருவெனப் பொதுப்படக் கூறினார், ஒருசாலை மாணாக் கராய்த் தம்மின் மூத்தாரையுந் தழுவுதற்கு.

புரிதல் விரும்புதல்.

சீவன்முத்தராகி யென்புழி ஆக்கச்சொல் உவமைப் பொ ருள் குறித்து நின்றது. "ஆள்வாரிலிமாடாவேனோ" என்றாற் போல.

உடங்கையாயுறைந்து காண்பரென்றது, மணமெய்து சு ணநிறைந்த தென்றற்போலக் காரணகாரியப்பொருட்டாய் நி ன்றது.

உம்மை சிறப்பு.

ஏகாரம் பிரிநிலை.

'அடைபவர்சிவமேயாகு மதுவன்றித்தோன்றுமென்ற கட னதென்' என்பதும் இந்நிலையெனக் கொள்க.

இதனானே சிந்திக்கலாமாறு மதன்கணிகமு மனுபவமுங் கூறப்பட்டன.

நிரம்பவழகியருளா வருமாறு.

——o——

இப்படி முன்சொல்லப்பட்ட சிவதரிசனம் ஆன்மாக்களுக் குண்டாம்படி யெப்படியென்ற மாணுக்கனை நோக்கி மேலருளிச் செய்கிறார்.

மிக்கதொரு பக்குவத்தின் - இருவினையொப்பு வந்து ஆன்மாக்களுக்குச் சிவனைப் பெறவேணுமென்று மிகுத்ததொரு வாசை யெழுந்திருந்த வவசரத்து,—மிகு சத்திநிபாத மேவுதலும் - தீவிரம் தீவிரதரம் என்னும் மிகுத்த சத்திநிபாதம் பொருந்துதலும்,—ஞானம்விளைந்து - அந்தச் சத்திநிபாதத்தாலே இவ்விடத்திலே ஞானம் பிரகாசித்து,—ஓர் குருவினருளார்புக்கனுட்டித்தே நிட்டைபுரிந்தவர்கள் - இவனுக்குப் பிராணனாய்நின்று பிரகாசித்த அந்த ஞானந்தானே ஒப்பற்ற வாசாரியனாக வெழுந்தருளிவந் திரக்ஷித்து அவனருளிச்செய்த முறைமையிலேநின்று நிட்டைகூடினவர்கள்,—பூதலத்தே புகழ்சிவன் முத்தராகி - பூமியிலே சொல்லப்பட்ட ஜீவன்முத்தராயிருப்பர்கள். இவர்களுடைய விலக்ஷணம் எப்படி யென்னில்?—தக்கபிரியாப் பிரியமின்றி-சுகதுக்கங்களைப் புசிக்குமிடத் ததுக்குமுறைமையான விகாரவகிதங்களு மில்லையாய்,—ஒட்டிற்றமணிபத்திற் சமபுத்திபண்ணி - மட்குடமுடைந்த ஓடும் பொற்குடமுடைந்த வோடும் இரண்டும் பிருதிவியென்று இரண்டையுமொக்கக் கண்டு இந்தப் பிரபஞ்ச வியாபாரத்தைவிட்டு நீங்கி,—சங்கரனோ டொக்கவுறைந்து - பரமேஸ்வரனுடனே இரண்டறக் கூடிப்பொருந்தி,—இவனவரை யவரிவனை விடாதே -

இந்தவான்மா அந்தச் சிவனைவிட்டு நீங்காமல்நிற்க அந்தச் சிவனிந்தவான்மாவைவிட்டு நீங்காமநிற்க,—உடனாகையாய் - ஆனமபோதஞ் சீவியாமல் அந்தச் சிவபோதமேயாய் ஒன்றுபட்டு நிற்பர்கள். அப்படி நின்றவர்கள்,—சிவன் றேற்றமொன்றுமே காண்பர் - பிரபஞ்சஞ் சிறிதுந்தோன்றாமல் சிவனுடைய சுகசொரூப மொன்றுமே கண்டுகொண் டிருப்பர்கள்.

சங்கரனோ டொக்க வுறைந் திவனவரை யவரிவனைவி
டாதே என்றது ஆன்மதரிசனம்.

உடனாகையாய் என்றது ஆன்மசுத்தி.

சிவன் றேற்றமொன்றுமே காண்பரென்றது ஆன்மலாபம்.

இதனாற் சொல்லியது மிருத்த பக்குவான்மாக்கள் ஆசாரியனுடைய வனுக்கிரகத்தினாலே ஞானநிஷ்டை கூடி இந்தப் பூமியிலே ஜீவன்முத்தர் விருப்பு வெறுப்பின்றி யிருப்பார்களென்றும் அவர்களுக்குச் சிவதரிசனமொன்று மொழிந்து மற்றொன்றுந் தோன்றாதென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

மிக்கதொரு பக்குவத்தின் - பக்குவமுதிர்ச்சியான்,—மிகுசத்தி நிபாத மேவுதலும் - நாலாஞ் சத்தி நிபாத மேவப்பெற்றோர்க்கு,—ஞானம் விளைந்து-அச்கேட்டலறிவு மந்தமாதலின்றி முதிர்ந்த முறைக விளையும்.—ஓர் குருவி னருளாற் புக்கு-அப்பொழுது தம்மாசிரியராதல் தம்மோடு ஒருசாலை மாணாக்கராய்த் தாமின் மூத்தாருளொருவராதல் சிந்திப்பிக்கப் பெறும் அந்நூற் பொருளின் கண்ணே கருத்தொருங்கி னுழைந்து,—அறுட்டிக்கே நிட்டை புரிந்துளோர்கள் - முன்னொடு பின் மலைவற வேத திட்டாந்த முதலிய வற்றாற் சிந்தித்து நிட்டை கூடுதற்

சுண் வேட்கை மிக்குடையராகப் பெற்றார்,—பூதலத்திற் றக்க பிரியாப் பிரிய மின்றி - இவ்வுலகின்கண் விருப்பு வெறுப்பின்றிச் சிந்தித்தற் கருமமே மேற்கொண்டு,—ஓட்டிற் றமனியத்திற் சமபுத்திபண்ணி - ஓடும் செம்பொடு மோக்கவே நோக்குவதாய் மற்றொன்றிற் பற்றொன் றின்றி,—புகழ் சீவன் முத்தராகி - புகழத்தக்க ஜீவன்முத்தரோ டொத்து,—சங்கரனோ டொக்கவுறைந் திவரவனை யவனிவரை விடாதே யுடைந்தையாய் - பேரறிவாகிய சிவமும் சிற்றறிவாகிய தாமும் ஞாயிற்றி னொளியும் கண்ணொளியும் போலத் தவிதமாய் நிற்றலால்,—சிவன் றோற்ற மொன்றுமே காண்பர் - ஆண்டுத் தாமுளதாத லறியப் பெறாது சிவற்றோற்ற மொன்றே காணப்பெற்று நிரு விகற்பஞ் ச விகற்ப மென்னு மிரண்டிற்கு மிடைநிலத்தே நிற்பரெனப தாம்.

இதனானே சிந்தித்த லாமாறு மதன்க ணிகழு மநுபவமுங் கூறப்பட்டன.

மறைஞானதேசிகர் உரை.

இந்த ஜீவன்முத்தர் ஞேயத்தழுந்தமுறை யுணர்த்துகின்றார்.

அறியாமை யறிவகற்றி யறிவினுள்ளே யறிவுதனை யருளினா லறியாதேயறிந்து, குறியாதே குறித்தந் தக் கரணங்களோடுங் கூடாதே வாடாதே குழைந்திருப்பையாகிற், பிறியாத சிவன்றானே பிறிந்துதோன்றிப் பிரபஞ்ச பேதமெல்லாந் தானாய்த்தோன்றி, நெறியாலே யிவையெல்ல மல்லவாகி நின்றென்றுந் தோன்றிடுவ னிராதாரனையே. (௩௦)

(இ-ள்.) அறியாமை யறிவகற்றி	அறியாமையாகிய வாணவத்தான் மறைப்புண்டு மயக்கமுறுங் கேவலக்கிடையுங் கருவிகரணங் கூடின சகலாவத்தையு மாகவிரண்டினுங் கூடாமல்,
அறிவினுள்ளே யறிவுதனை	சுத்தாவத்திதனானவன் இவனிடத்திலே அறிவுக்கறிவாய்த் தோன்றிநிற்குஞ் ஞானப் பிரகாசத்தினை,
அருளினாலறியாதேயறிந்து	சிவனது கிருபையினாலே பசுகரணத்துடன் கூடி யறியாமற் சிவகரணமே தனுவாய் நின்றறிந்து,
குறியாதே குறித்து	பாராதே பார்த்து, அஃதாவது:—

"ஊனக் கண்ணினாலீதென்றுசுட்டி யறியாதே யறிந்து, அருட்கணேக்கு மவரருள் பெற்றோர்" எனவும், "என்னொன்றின்றி நினைந்தவர்தாம்பா லுண்ணின்றுமகிழ்ந்தனன்" எனவு மறிக

அந்தக்கரணங்களோடுங் கூடாதே	சிவன் கரணாதீதனாகலாற் புத்தியாதி கிழுகமாதலால் அந்தக் கரணத்தா லறியாமல்
வாடாதே	அவத்தைகளிலும் பொருந்தாமல்
குழைந் திருப்பையாகில்	அந்த ஞேயத்துடன்கூடி ஐக்கியமாயிருப்பையாகில்

"எப்பொழுதும் நிறைவு வேண்டுவீர் வன்னியூர் மறையுளான்கழற் குறவு செய்மினே" எனவுமறிக.

பிறியாதேசிவன்றனே பிறிந்துதோன்றி	சர்வான்மாக்களிடத்திலு மிரண்டற வியாபித்திருக்கிற சிவன்றனே யிவனிடத்திலே பிரகாசித்து,

“என்னிலாருமெனக்கினி யின்னம்பூரீசனே” எனவறிக.

பிரபஞ்சபேத மெல்லாந் தானாய்த்தோன்றி — விஸ்வத்திலுண்டாகிய சராசரங்களெல்லாத்தையு மவன் வியாபித்திருக்கையா லந்தச் சிவனுடைய சுரூபமாகவே காணப்பட்டு,

நெறியாலே யிவையெல்லா மல்லவாகி — அவனுடைய வுண்மையை விசாரித் தறியில் இந்தப் பிரபஞ்சசொரூப மெல்லா மல்லவாய்,

நின்றென்றுந் தோன்றிடுவ னிராதாரனாயே. — இவை யனைத்துக்கும் வேறாகி நிராதாரனாகிநின் றெப்பொழுதும் தோன்றிடுவன். எ-று.

உம்மை - எதிர்மறை.

சிவன - எழுவாய்.

நிற்பன் -பயனிலை.

இதற்குத் தேவிகாலோத்தரம். (௩௧)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

மேல் சிவதரிசனம் வருவதற் குபாயங் கூறுகின்றது.

அறியாமை யறிவகற்றி - அறியாமையாகிய கேவலாவஸ்தையையு மறிவாகிய சகலாவஸ்தையையுஞ் சிவஞானபலத்தினாலே தள்ளிவிட்டு,—அறிவினுள்ளே யறிவுதனை யருளினா லறியாதே யறிந்து- ஆன்மாவினிடத்திலே சிவனைப் பராசத்தியினாலே வேறாக வறியாதே வேறறவேயறிந்து,—குறியாதேகுறித்து - ஆன்மாவினிடத்திலே சிவனைக் காண்கையாற் சிவனுக் கான்மாவாதாரமென்று குறியாதே ஆன்மாவிற்குச் சிவனிடத்திலே அவகாசமென்று குறித்து, — அந்தக்கரணங்களோடுங் கூடா

தே- அவ்விடத்துச் சிவசத்தி பதிகையாற் சிவகரணமான விச்சா ஞானக் கிரியைகளுடனேகூடிய சிவானந்தத்தை இச்சித் ததுப்பற்றி யனுபவிப்பதுஞ் செய்யாதே,—வாடாதே-அவ்விடத்து ஞானலயமும்வாராதே.—குழைந்திருப்பையாகில்-இளகியவுள்ளத்தனு யிருப்பையாகில்,—பிறியாதே சிவன்றனே பிறிந்து தோன்றி-பெந்தத்திலே பாலினிடத்துநெய் பிறிந்து தோன்றுததுபோலத் தோன்றுநிருந்த சிவன் தயிரினிடத்து நெய்போலத்தன்னுடைய ஸ்வரூபந் தெரியத்தோன்றி;—பிரபஞ்சபேதமெல்லாந் தானாய்த்தோன்றி - அநேகபேதமா யிருக்கிற பிரபஞ்சமெல்லாஞ் சிவாகாரமே யென்னும்படிக்குக் காண்பித்து,—நெறியாலே யிவையெல்லா மல்லவாகி - ஞானமார்க்கத்தினுலே பிரபஞ்ச மெல்லாம் சத்தியமல்லவாகவுந் தோற்றுவித்து,—நின்றென்றுந்தோன்றிடுவ னிராதாரனுயே- ஆதாரதேகாதிகளில்லாம லகண்டாகார சச்சிதாநந்தாத்வய மாகவே பிரகாசிப்பனென் றிதனபொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

சூரியக்காந்தக் கல்லினிடத்தே,—

செய்யசுடர் தோன்றிடுட சோதிதோன்றுமாபோல் - சூரிய சன்னிதானமாக நெருப்பிருந் தெழுந்தது போல்,—

ஆரியனுமாசன் வந்து தோன்ற - பூச்சியனுகிய குருப்பருவங் கருதி விரும்பி வெளியாக,—

அருளால் - அக்குருபண்ணிய செயற்கைத் தீக்ஷாக்குறிச் கன்மத் தாவிர்ப்பவித் தியற்கைத் தீக்ஷாக்குறியுற்ற சிவக்கிரியா சத்திச் சிறப்பிருப் பிச்சா சத்தி கிருத்தியக் குறிச் சங்கற்பசிற்கன்மத்தால்,—

ஆன்மாவி லடிஞானந்தோன்றும் - உயிரின்கண்ணே யென்றபடித் துபசரிக்கப்படுங் கரணக்குறி ஞானக்கிரியா லக்ஷணன்ம தன்ம சின்ன மூனனுள்ள சிற்சத்தியின தறிதல் பண்ணுதல் கிருத்தியாகிருதி சாக்ஷாத்காரஞ் சடிதிமல முத்தமாய் வியத்தமாம்.—

தோன்ற - அப்படி யாவிர்ப்பவிக்ச,—

தூரியனுஞ் சிவந்தோன்றும் - மலசத்தியால் மூர்த்தமாகு முன் சிற்சத்திக்கண் மறையப் பிரத்தியக்ஷமன்றி யிருந்த சிவன் பிறப்பொருளறிவி லுதித்த சாக்ஷாத்காரத்திற் பிரத்தியக்ஷமாவன்.—

தானுந்தோன்றும் - அப்படி முன்னிருந்த ஆன்மாவுந் தற்பொருளறிவி னுதித்த சாக்ஷாத்காரத்திற் சிவனுக்கு ஒத்தாறு முருவனாய்ப் பிரத்தியக்ஷமாவன்.—

தொல்லுலகமெல்லாந் தன்னுள்ளே தோன்றும் - அநாதி நித்த சடசித்துப் பிரபஞ்ச மெல்லா மொத்த வியாபகமாயு மொவ்வா வியாப்பியமாயும் பிரத்தியக்ஷமாம்.—

நேரியனாய்ப் பரியனுமா யுயிர்க்குயிரா யெங்கு நின்ற நிலையெல்லாமும் நிகழ்ந்து தோன்றும் - பிரத்தியக்ஷமாகிய சிவனுஞ் சிறப்பா யணுவுக்கணுவாய் மகத்தற்கு மகத்தாய்ப் பசுவர்க்கப் பிரேரகனாய் முத்தான்ம மித்திரனாயிருக்கு முறைமை முற்றுஞ் சாட்சாத்காரமாம். (உஅ)

மிக்கதொரு பக்குவத்தில் - தீவிரதர பக்குவ மல காலத்தில்,—

மிகுசத்தி நிபாத மேவுதலும் ஞானம் விளைந்து - பாஷாணபதன பயம்பண்ணுதல்போ லனுக்கிரக சத்தியினது சம்சார பயம் பண்ணுஞ் சங்கற்பம் பொருந்துதலும், சம்சார பயஞ்சிறிது ஒரு பிரகாரம் பரோக்ஷ சிவபுத்தியும் பிறக்கத் தீக்ஷித சிவ

சொரூபத்தைச் சிவசாத்திரத்காற் பரோக்ஷ ரூபதரிசனப் படுத்தித் தியானிப்பித்துச் சமாதிப்பித்துப் பின் சிவனைப் பிரத்தியக்ஷமாய்க் காட்டுங் குருவைத் தேடி யோடித் திகைக்கச் சிவனவனைக் காட்டிக் கூட்டக்கூடிய,—

ஓர் குருவினருளால் - கடாக்ஷித் தவன் பண்ணுந் தீக்ஷாகன்மாரூட சாக்ஷாத் தீக்ஷாலக்ஷண சிவசத்தி சங்கற்ப சிற்கன்மத்தால் சிவாகமக் கேள்விக் கருகர்களாய்,—

புக்கனுட்டித்தே - கேட்டுச் சிந்தித்துப் பரோக்ஷ சிவ நிச்சயம் பண்ணிப் பின்னபரோக்ஷம்போ லபிநயித்து நடிக்கும் தியானஞ் செய்தே,—

நிட்டை புரிந்துள்ளோர்கள் - தியானத்துறைப்பு ரூப சமாதி சாதித்தோர்கள்,—

பூகலத்தே புகழ் சீவன் முத்தராகி - சதேக சீவன் முத்தி சாக்ஷாத்கார வான்க ளாகுகைக்குக் கீர்த்திக்கும் யோக்கியர்களாய்,—

தக்க பிரியாப் பிரியமின்றி - விருப்பு வெறுப்பு மின்றி,—

ஒட்டிற்றமனி பகுதிற் சம புத்தி பண்ணி - ஓடுஞ் செம்பொன்னு மொப்ப நோக்கி,—

சங்கரனோடொக்க வுறைந்து - சிவ சத்தி வியாத்திக்சொப்பத் தங்கள் சிற்சத்தி விரிவு சிந்தித்து,—

அவனிவரை யிவரவனை விடாதே யுடங்கையாய் - நிரந்தர நினைப்புற்று நிரந்தர நினைப்பு நீங்காதே,—

சிவன் கோற்ற மொன்றுமே காண்பர் - சமாதி முதிழ்க்குஞ் சாக்ஷாத் காரத்திற் சிவன் முதற் சித்த சித்தவஸ்து முற்றுங் கைத்தலத்து நெலிக்கனி கண்ணேக்கத்திற் போலுற்று விளங்குமாறலும் சமாதியி லேகாக்கிர மாத்திர மாதலாற் சிவனிற்கு நிலைமாத்திரஞ் சிந்திப்பார்கள்.

பிரத்தியக்ஷமாய்ப் பார்ப்பார்களென்று பேசவேண்டாம், சிவ சித்தாந்திகட்குப் பாதஞ்சலர் முதலோர்க்குப் போற் சமாதி யோகமன்று; சாக்ஷாத் காரமாகு மங்கிபோகத்திற்கு அங்கமாதலால்.

"ஸர்வார்த்த பாசகம் ஞானம்
சிவபோகந்து சாச்வதம்"

என்றிருத்தலானுஞ் சாக்ஷாத காரமாகும் சிவயோகத்துக்கங்கம் சாக்ஷாத்கார யோகமே!

தியானம் சமாதி யோக மென்ப தங்கமாகையா லுபசாரம். (உக)

தியானம் ஞானத்துதிக்கு முறைமையும், சமாதி தியானதுதிக்கு முறைமையும், சதேக சிவன் முத்தி சாட்சாத்காரஞ் சமாதியின முகிழ்க்கு முறைமையும் சாற்றுகின்றது.

அறியாமை யறிவசற்றி யென்பன முதலியன ஸ்ரீகுருத் திருவாய் மலர்ந் துபதேசிக்கு மொரு வார்த்தையென் றுலகுரைக்கும் வசிமாற் றிருவுப் பிற்றிருசுழி யொருமொழியிற்"கோவாமமகிம்"என்னும் வடமொழி விஞவில்உத்தரமொப்புச்செப்புகலாகு மயமத்தியாதி படர்க்கை முனனிலை தன்மை முக்குறி மூலாக்யம் மும்முப்பதம் மும்முப்பத மொட்டு மூவெழுத்து மும் முப்பதத்தில் மூவெழுத்திற் குறிக்கும் வாச்சிய லக்கிய விருமுப்பொருள்.

அவ்விரு முப்பொருளில் இலக்கியப் பொருளாகும் ஆன்ம பரசிவ முக்குறி முப்பொருள்களின முதற் பொருண் முறைமயிற்றுக்குஞ் சுழுத்தி துரியம் துரியாதீதம் முச்குறி மூவவத்தை சாக்கிரஞ் சொப்பனந் தாக்குஞ் சமனை மட்டு முட்டுஞ் சகிதகும்பகோப சாந்திமேல் உன்மனீ மூலாந்தோபரி யுபாந்தங்களில் அப்படி யப்பொருள் தாக்கிப் பண்ணப்படுங் கேவல கும்பக

சூனிய கும்பக சூனியாந்த கும்பக முக்குறி முக்கும்பசஞ் சாம்பவி கேசரி சாகிரஞ் சொப்பனந் தாக்கிய தாதலால்.

அப்படி யப்பொருள் தாக்குஞ் சின்முத்திரை மவுன முத்திரை மவுனாந்தமுத்திரை முக்குறி மும்முத்திரை.

அப்படியப்பொருள் தாக்குந் தியானஞ் சமாதி சாட்சாத்கார முக்குறி மூவறிவு முனசொல்லிய மும்முப்பதங்களினு மும்முப்பத மொட்டு மூவெழுத்துக்களினும்,நடுப்பத முதலெழுத்துக்களுக்கு வாச்சியப்பொருள் அணுபட்ச ஸ்வரூப சிவயோகங் குறித்தால், பூதான்ம தத்துவான்ம அந்தரான்ம சீவான்ம மந்திரான்ம பஞ்சான்மா,

சம்பு பட்ச சிவரூப சிவயோகங் குறித்தால்,குருலிங்க சங்கமாதி,

இலக்கியப்பொருள் முறைமையி னுன்மனை யுற்ற சின்மாத்திரான்மா அதிக் கிராந்த விந்துக சின்மாத்திர பரசிவம்.

முதற்பத முதலெழுத்துக்களுக்கு வாச்சியப்பொருள் பிரமாதி பரசிவமூர்த்தி ஈசான மூர்த்தி பரியந்த அணுபட்ச அபரசிவம்.

நாதத் துள்ளெழுந் தொளிருஞ் சுத்த பூதாதி யுபாதியுற்ற பஞ்சான்மாவுஞ் சூக்கும பரசிவ ரூபியாயிருந்தாலு மொரு பிரகார மீசானமூர்த்தி முதல் அணு பட்ச அபரசிவ ரூபியாதலாலப் பொருளாம்.

இலக்கியப் பொருள் அதிக்கிராந்த விந்துக பரசிவ மாகு மணுபட்ச சம்புபட்ச இருபரம்.

முடிவிற் பதமுடி வெழுத்துகளுக்கு வாச்சியப்பொருள் தியாக சமாதி யுபாதித தியாசசியத்தினுற் சொரூபலட்சண சிவகோடிக்குட் குறிக்கும் தியான சமாதி யுபாதியுற்ற அணுபட்ச

சம்புபட்ச சின்மாத்திரான்ம பரங்கள். இலக்ஷியப்பொருள் சுத்த சிவமாகு மணுபட்ச சம்புபட்ச இருசிவம்.

ஆன்மாத் தியானத்தானம், பரஞ் சமர்தித்தானம், சிவம் சாட்சாத் காரத்தானம்.

பினனொரு பகுப்பு மிதுபோ லிரு சிவத்தியானங் குறித்துச் செப்பப்படும்; அது செப்புவாம்.

சிவ சத்தி யநந்தேசுர சத்தியாதித் துவாரத்தினாலெ பசு சாத்திராதி லோகாதி யாரூடமாய் சுத்தராக அசுத்த கலையசுத்த வித்தை யிவற்றின் மறைந்து விளக்கினதினாற் செயற்கைப் பசுகரண மென்றும் பசுப்பிரமாண மென்றும் படிக்கப்படுந் தற்பொருளறிவு பிறப்பொருளறிவுச் சிற்சத்திகளைப் பொதுச் சிறப்பாய் மணந்ததினாலு மியற்கையினாலு மசுத்தப்பிராகிருத மனோகங்கார புத்திகள் பசுகரணங்களென்றும் பசுப் பிரமாணங்களென்றும் படிக்கப்படும்.

சிவசத்தி சாட்சாத் சிவாகமாரூடமாயுஞ் சிவமந்திராரூடமாயும் நாதத்து ளெழுந் தொளிருஞ் சுத்த மனோகங்கார புத்தி சர்ப்பமாயிருக்குஞ் சுத்த ராகஞ் சுத்தகலை சுத்தவித்தை யிவற்றின் மறைந்துவிளக்கினதினாலு மியற்கையினாலுஞ் சிவகரண மென்றும் பதிப்பிரமாண மென்றும் படிக்கப்படும்.

தற்பொருளறிவு பிறப்பொருளறிவுச் சிற்சத்திகளைப் பொதுச்சிறப்பாய் மணந்ததினாற் செயற்கையினாற் சிவகரணங்களென்றும் பதிப் பிரமாணங்களென்று மந்த முந்தச் சொன்ன மனோகங்கார புத்திகள் படிக்கப்படும்.

முறைமையில் அதிற் சிவாகம வழிச்செல்லு மனோகங்கார புத்தியிற் படிப்பவனது பசுத்துவ சிவதத்துவ விவேகத் திரிபதார்த்த விவேக பரோக்ஷ தீக்ஷாயோகாங்க விகற்ப சங்கற்ப சர்வபோத ஞான விசேஷங்களைப் பண்ணும், சிவமந்திரவழிச்செ

ல்லு மனோகங்கார புத்திகள் காலாக்கினியாதி யனுசிருதாந்த புவனத்துதிச்கும் அபரசித்தி பராபரசித்தி பரசித்தி முச்சித்தி கள் விருப்ப முறைமையிற் சித்திக்கும் பொருட்டும் முடிவின் முத்தி சிக்கும்பொருட்டும் பிருதிவிமுதற் குணமீருகும், அசுத்த கோடி பிரகிருதி முதற் கால மீருகும், சுத்தாசுத்த கோடி சுத் தவித்தை முதற் சிவமீருகும், சுத்தகோடி முக்கோடிகளிற் சா ட்சாத் தரங்களாயு மணிப்பிரபைபோ லுபரி விரியும் வியாபார த் துவாரத்தினாலும் பூதான்மாதி மந்திரான்மாந்த பஞ்சான்ம சாலம்ப சிவயோக பஞ்சமார்க்கங்களி லொருவழியிற் பிர வேசித்து விகற்ப சங்கற்ப கர்வ போத வியாபாரங்களைப் பல விதமாய்ப் பண்ணும் அந்த விகற்ப சங்கற்ப கர்வ போதங்க ளால்,—

அறியாமையறிவசற்றி - அறிவகற்றி அறியாமை யகற்றி யெ ன மாறுக. அறிவகற்றி யென்பது தத்துவசுத்தித் துவாரத்தி லே ஆன்மசுத்தி தானே பண்ணப்பட்ட தாகிலும் தத்துவசுத்தி பிரதானமாகையால் தத்துவசுத்தி பண்ணியென்றே சாற்றப்ப டும்.—

அறியாமை அகற்றி என்பது மலமல வாசனு சுத்தித்துவார த்திலே யான்ம சுத்தி பண்ணப்பட்டதிலும் ஆன்மா பசு த்துவ மென்னும் மலோபாதியாற் பசுத்துவ மென்று வேறுசத் வமாய் படிக்கப்படு மாதலால் மலம் பசுத்துவத்தோடு பசுத் துவ மென்று படிக்கப்படும்.

மலதத்துவ மென்று வேறு தத்துவமாய் மதிக்கப்பட்ட தில்லையாதலானும் ஆன்ம சுத்தி பிரதான மாகையா லான்ம சுத்தி பண்ணி யென்றே யுறையப்படும்.

இது தொகைப் பொருள்.

அறியாமை யசுத்த தத்துவமென்றும் அறிவு சுத்த தத்துவமென்றுஞ் சொல்வாருமுளர்.

வகைப்பொருள்.

விரிவுப்பொருள் ஒருமிக்க வகுத்துரைப்பாம்.—

அறிவசத்தி - நிருவிகற்பம் புணர்ந்ததிலுதிக்குஞ் சவிகற்பமாய்த் தேவர் நரர்முதற் பசுவர்க்க மாயா சகல வர்க்கத்திற் காணப்படுஞ் சிற்றறிதல் சிற்றுச் செயற் றொழில்களையும் விபரீதவேதன விக்கிரக போகங்களையும் பண்ணும்படி சிறிதுமலஞ்சிந்தித்தும் அசுத்தகலாதி சஞ்சுககலா வச்சியத்துவ தெளிந்திரியக்குறி யசுத்த சகலத்துவமுற்றுக்கிஞ்சிஞ்ஞத்துவ கிஞ்சித் கர்த்திருத்துவ லட்சண சித்துவ சின்ன அசுத்த போகக் கிரியா கர்த்திருத்துவமாகிய வசுத்த போத்திருத்துவ மாத்திர பொதுக்குறித் தூல புருஷ தத்துவத்தினது புத்திரப் போலிப் போக்கிய போத்திருத்துவ போகோப போத்திருத்துவமாகிய வசுத்த போத்திருத்துவச் சிறப்புக்குறித தூல சீவத்துவமேகம்.

நிர்விகற்பம் புணர்ந்ததிலுதிக்குஞ் சவிகற்பமாய் மந்திரேசுர மாயாசுத்த சகலபதி வர்க்கத்திலும் மந்திர மந்திரமகேசுர மகாமாயா சுத்த சகல பதிவர்க்கத்திலும் காணப்படுஞ் சாதிசயப் பேரறிதல் பெருஞ்செயற் றொழில்களையு மற்ப விபரீத வேதன விக்கிரக போகங்களையும் பண்ணும்படி மரியாதியில் மலவாசனை தடைக்குங் கலாதி கஞ்சுகமுற்றுக் கலாவசிபத்துவ வைதரியக் குறிச் சுத்த சகலத்துவ முற்றுச் சாதிசய சர்வஞ்ஞத்துவ சர்வ கர்த்திருத்துவ லக்ஷண தூல சிவத்துவ சின்ன சுத்தபோகக் கிரியா கர்த்திருத்துவமாகிய சுத்த போத் திருத்துவமாத்திரப் பொதுக்குறிச் சூக்கும புருஷத்துவத்தினது

புத்திரப்போலி போக்கிய போத்திருத்துவ போகோப போத்திருத்துவச் சிறப்புக்குறிச் சூக்கும சிவத்துவ மேகம்.

இம்மந்திர மகேசுராதி யபரபதிவர்க்கத்துக் கூறிய குறியுட் கூடிய சுத்த சகலத்துவ முதற் பொதுக்குறிச் சிறிது சின்னமுஞ் சூக்குமசிவத்துவ விளக்கு விக்கிரக விசிஷ்ட சகலத்துவ முதற் சிறப்புக்குறிச் சிறிது சின்னமுமுடைய வணுசதாசிவ வணுவங்கபதி வர்க்கத்தின் முன்சொல்லிய பொதுச்குறிப் பரபுருடத்துவத்தினது புத்திரப்போலி போக்கிய போத்திருதுவ வ போகோப போத்திருததுவச் சிறப்புக் குறிப் பரசிவததுவ மேகம்.

இம் முப்புருடத்துவப் புததிரப் போலி முச்சீவத்துவமுமுபாதிச் சித்துவமும் தூல சிவத்துவமுஞ் சூக்குமசிவத்துவமும் நிரதிசய பரசிவத்துவ சொரூபலட்சண சிவ சமசுத்த சிவனுயிருக்கின்ற நமக்குச் சொரூப லட்சணமன்று; தடஸ்த லட்சணமேயென்று மகாவாக்கிய நடுமுத லிருபதங்களுக்கு வாச்சியார்த்த தடத்த லட்சனுன்மத்துவ தடஸ்த லட்சண சிவத்துவ சுத்திக்குறி முப்புருஷத்துவப் புத்திரப்போலி முச்சீவத்துவசுத்தி தத்துவசுத்தி பண்ணித்தானே வேறுயத்தன மின்றிப் பண்ணப்படு மாதலால் முச்சீவத்துவ தடஸ்தவறிவு விளக்காதலா லறிவென் றுபசரிச்கப்படுந் தத்துவங்க ளாதலா லறிவகற்றி யென்பதற் கர்த்த மிதுவாகத் தத்துவசுத்திபண்ணி,

ஈதிம்முறை பண்ண வென்ப திசைக்கின்றும்.

சாதக சாமர்த்தியத்துக்குத் தக்க சிவஞானத்துணைச் சித்த சிவகன்மயோகி பண்ணுந் தத்துவ தடஸ்த ஆன்ம தடஸ்த சிவ முப்பதார்த்தங்களின திலட்சண வபரோட்ச நிரீட்சணக் குறித் திரிரூபம்,

ஒன்றுக்கொன்று தத்துவ முதற் றிரிபதார்த்த லட்சண

விலட்சண பரோட்ச பரீட்சாரூப நிரீட்சணக் குறித் திரி தரிச னம்.

மனோவிகற்ப சங்கற்ப பிரவிர்த்தமாய்ச் சிவோகஞ் சிவோ யஞ் சிவ சிவ வென்பது முதற் பலவித வகங்கார புத்தி விர்த் திப் பிரவாக சின்ன தியானக்குறி தியானசித்தி சின்ன சமாதி க்குறி திரியோகஞ் சமாதி சித்தி சின்ன சாட்சாத்காரக் குறித் திரிபோகம்.

மூலமந்திர முச்சரித் துள்ளிருக்குஞ் சுரிகாஸ்திர மதித்து த்தொடுத் திருதயாந்தந் தொட்டுத் துவாதசாந்தங் குறித்துச் சமனாந்த மட்டு முட்ட முறைமையிற் போய்ப் போய்த்தான் தேசகால சத்திக்குத்தக்க திருதயத் திருந்துதான் சூனியப் பி ராசாத முச்சரித் துள்ளிருக்குஞ் சுரிகாத்திர மதித்துத் தொ டுத்து தத்துவங்களையு மான்மாவிலுஞ் சிவனிடத்தினுந் தத்துவ தடஸ்தத்தினால் வைத்த தடஸ்தத தன்மைகளையு மறுத்துக் காரணத் தடைவிலொடுக்கி யகண்டிதங்களாகப் பண்ணப்பட் டனபோ லடக்கித் தனது தத்துவ வசியத்துவத் திபாச்சியம் பண்ணித் தத்துவங்கள் தனக்கு வசியங்களாகத் தான் வசியா யிருத்தலாகுந் திரிசுத்தி

இவைகளைத் தான்பண்ணிச் சிவஞானத்துணைச் சாத்திய சிவகனமயோகி பண்ணுஞ் சொல்லியகுறிப் பரோக்ஷரூபந் தரி சனம் யோகங்கூடிய மரிபாதி மனோவாயு ஜயவச மாத்திரத் தினாலே யொரு பிரகாரந் தன்வச மாக்குதலாகும் திரிசுத்தி.

இவைகளைத் தான்பண்ணி யோகசாமர்த்திய மில்லாதிருந் தால், நேதிநேதி நியதலட்சண சிவகன்ம மாத்திரத் துணைச் சா த்திய சிவஞானயோகி பண்ணுஞ் சொல்லியகுறிப் பரோட்ச ரூபந் தரிசன மநாத் மந்யாத் மாபிமானத் தியாக மாகுந் திரி சுத்தி.

இவைகளைத் தான்பண்ணி, அதிமல பரிபக்குவத்தா லாவி
ர்ப்பவிக்கு மதிமோட்ச வாஞ்சையின தாவேசத்தாற்றான்
அது வன்றித் தேசகலா சத்தி சங்கடத்தினாற்றான் வித்தார
சுத்தி விருப்பமில்லையேல் மமகார வகங்கார மாத்திரத் தியா
ச்சிய மாத்திரமாகுஞ் சுத்தி தான்பண்ணி,

அல்ல திலகுவாய்த் தத்துவ தாத்துவிகப் பிரபஞ்ச மனை
த்து நிராகார நிராலம்ப மாயா மகா மாயாத் தோற்ற மாத
லா லப்படி யகண்டிதமாய்க் காரணாகார நிராதார நிராலம்ப
நிஷ்பிரபஞ்ச சிந்தனைமாத்திரமாகுஞ் சுத்திதான் பண்ணி.

இப்படிச் சுத்திபண்ணு மிடத்துச் சுத்திமார்க்க பேதமு
ண்டு, அது சொல்லுவாம்.

முத்திமாத்திரம் விரும்பின் நிராலம்ப சிவயோகம் பண்
ணும் பொருட்டு குரு போதிப்பச் சிவாகமஞ் சிவாகமார்த்த
மாத்திரஞ் செப்புங் குருவாக்கிய மாத்திரந்தான் கேட்டுச் சிந்
தித்துத் தெளிந்து இருதயமுதற் றுவாதசாந்த வியாபியா யிரு
க்கும் பிரமரந்திர முடிவாகும் பஞ்சாதாரங்களிற் றங்கித் தங்
கிக் கமல முடிச்சுக் கதவு திறந்து திறந்து தத்துவமுதலிய முப்
பதார்த்த ரூப தரிசனமுதலிய பண்ணிப்பண்ணிப் பழகிப்பழ
கிப் பின் றானங்களிற் றங்காது சடுதி சற்றே தாக்கித் தாக்கி
முன் சாத்திய முறைமையின் முச்சிவயோகிகள்பண்ணு முப்ப
குப்புக் தத்துவமுதலிய முப்பதார்த்த முச்சுத்திபண்ணி, ப
ண்ணுமிடத்து,

பிரமாதி பரசிவமூர்த்தி ஈசானமூர்த்தி பரியங்க சிவமூர்த்
தி பதங்களில் விரும்பிய சிவமூர்த்தி பதமுத்தியெனும் பரமுத்
திக்குறிச் சித்திகுறித்து, முச் சிவயோகிகள் பண்ணு முறைமை
யிற் சுவாவதி சுத்தியோடு விரும்பிய தத்துவ தத்துவாருகா
ன்ம சிவமூர்த்தி சிவசிவ மூர்த்தி திரிரூப தரிசன யோகபோகத்

கல்ப் பண்ணுமிடத்தும் சித்திக்குப்பின் முத்திவிரும்பின முத்திவழி பழகச் சுத்தியோடு பண்ணுமிடத்தும் பவுதிக தேகாதிக்குறிப் பூதாதி மந்திராந்த வைம்பொருள்கட்குந் தத்துவங்களென்று பெயர் சாற்றப்படுமாதலாற் பூதான்ம தத்துவான்ம வந்தரான்ம சீவான்ம மந்திரான்ம சாலம்ப சிவயோகமார்க்கங்களிற்பழகிய வொருவழிவைத்துப் பின்வழியடக்கிச் சுத்த பூதாதி தொட்டுச் சமனுந்தமட்டு முட்டும் பூதான்ம சித்துபாதித் தூல தேகக்குறிப் பூதங்களிற்ருன் றத்துவான்மசித்துபாதிச் சூக்கும தேகக்குறி தத்துவங்களிற் ருன் அந்தரான்ம சித்துபாதி பரதேகக்குறி யந்தரத்திற்ருன் சீவான்ம சித்துபாதி யகங்கார மாத்திரக்குறிச் சீவனிற் ருன் மந்திரான்ம சித்துபாதிக்குறிப் பிராசாத முதலிய மந்திரத்திற்ருன் ரூப தரிசன யோகபோக சுத்திகள் பண்ணப்படும்.

அறிவகற்றி யென்பதற் கர்த்த மிவ்வள வமைந்தது.—

அறியாமை யகற்றி- மாயா சகல பசுவர்க்கத்திற் காணப்படுஞ் சரீரம் நான், இது சுகம் இது துக்கம் இது மோகம், நான் சுகி நான் துக்கி நான் மோகி யென்பன முதற் பிரஞ்ஞாமோக வஞ்ஞான மூல பசுத்துவ மலத்தின தமோநியாமிகாசத்தி வைத்த போத்திருத்துவக்குறிப் புருஷத்துவ ரூபமாய்ப் போதலாற் றத்துவசுத்தி யான்ம சுத்தியாமாதலால் மலத்தின தாவாரக சத்தி வைத்த நித்திய கேவல நித்திரா முததிரித கிஞ்சிஞ்ஞானக் கிரியா சூனிய வறியாமைக்குறி மூர்ச்சாமோக மூல சித்துவ சூனியக்குறி யறியாமைப்பே ரசித்துவ தூலதர பசுத்துவத்தைச் சொல்லிய பிருதிவிமுதற் கலாந்த தத்துவ சுத்தி நடுநடுவே தத்துவ சுத்திப்படி முச்சிவ யோகிகளடண்ணு முறைமையிற் சிறிது மலசுத்தி துவாரத்தினுலே சுத்தி பண்ணி,

பிரளயாகல விஞ்ஞானகல மூட பசுவர்க்கத்திற் காணப் படுந் தூல சாதிசய சர்வ ஞானக் கிரியா சூனியக் குறி மூர்ச்சா மோக தூல மூலசிவத்துவ சூனியக்குறி யறியாமைப்பெய ரசித் துவ தூல பசுத்துவத்தை மாயா தத்துவ சுத்தியினு மாயா த த்துவ சுத்தி சுத்த வித்தியா தத்துவ சுத்திக்கு நடுவினுந் தத்து வ சுத்திப்படி முச்சிவ யோகிகள் பண்ணு முறைமையின் முற்று மல சுத்தித் துவாரத்தினாலே சுத்தி பண்ணி.

பின் மந்திரே ஶ்வர மந்திர மந்திர மகேஶ்வர மாயா சகல மகாமாயா சகல பதிவர்க்கத்திற் காணப்படுஞ் சூக்கும சாதிச ய சர்வஞ்ஞானக் கிரியா சூன்யக் குறியாகிச் சுத்த போகோப போகப் பிரஞ்ஞா மோகத்திலழுந்திய மூர்ச்சாமோக மூல சூக் கும சிவத்துவ சூனியச்குறி யறியாமைப்பேர் சிவத்துவ சூக்கும பசுத்துவத்தைச் சுத்த வித்தியா தத்துவ வீசுர தத்துவ சுத்தி க்குட் டதத்துவ சுத்திப்படி முச்சிவ யோகிகள் பண்ணு முறை மையிற் றூலதிகார மல மூல தூல மல வாசனை சுத்தித் துவா ரத்தினாலே சுத்தி பண்ணி.

பின்னனுசதாசிவ வணுப் பிரமாங்க மகாமாயா சகல பதி வர்க்கத்திற் காணப்படும் பர நிரதிசய சர்வ ஞானக்கிரியா சூ னியக்குறிச் சுத்த போகோப போகப் பிரஞ்ஞா மோகத் தமிழ் ந்திய மூர்ச்சாமோக மூலபர சிவத்துவ சூந்யச்குறி யறியாமை ப் பரசிவத்துவ பர பசுத்துவத்தைச் சதாசிவ தத்துவ முதல் முத்தத்துவ சுத்திக்குட் டத்துவ சுத்திப்படி சொரூப திரோ தானசத்தி சுத்தியோடு முச்சிவ யோகிகள் பண்ணு முறைமையி ற் சூக்குமாதிகார மலமூல சூக்கும மலவாசனை சுத்தித் துவார த்தினாலே சுத்திபண்ணி.

அறியாமை யகற்றி யென்பதற்கு இவ்வளவு பொருளமை ந்தது.—

அறிவினுள்ளே - தூலசூக்குமபர முச்சின்மாத்தி ரான்ம
தத்துவ மும்மூல முளைத்த தூல சூக்குமபர முப்பர வித்தியாத
த்துவமும் மரம்பழுத்த தூல சூக்குமபர முச்சிவ சிவதத்துவ மு
ப்பழங்கள் விரும்பப் படுமாதலாற் சமனைக்குக் கிழிருபகுப் பா
ன்ம பரசிவ தத்துவத் தியாச்சியத்தினாலே சமனா சுதிக்குமே
லுன்மனாந்தாவதி பரசிவத்துவாபி வியத்தி சித்திக்குமளவும் தா
க்கிப் பரமல வாசனை யாபாசிக்கு மாதலா லுன்மனா மூலாந்தம்
ஸ்வச்சந்த சர்வஞ்ஞானோத்ர சுருதிப்படி சிவசத்தித் துணை
யாய்ச் சென்று திரோதான சத்தி நிக்ரக கிர்ததிய பரா சத்
தியனுக்கிரக கிர்த்திய மத்தியஸ்த சிவ சின்மாததி ரான்மாவி
னுங்கூடச் செல்லுதலாற் செல்லுஞ் சிவசின்மாத்தி ரான்மாவி
னும்,—

அறிவுகளை - முறைமையி லணுபர சிவங்கள் சிவபர சிவங்
களெனு நாலுசித்துகளையும்,—

அருளினால் - சமனைமட்டு முட்டும் பிராகிருத மனோ:கங்கா
ர புத்திகளில் மறைந்து சாலம்பித் தன்மனையுற் றுபரி நிராலம்
பிக்குஞ் சிற்சத்திவிளக்கு விளக்கிய சிற்சாத்த மனோ:கங்கார
புத்தி விகற்ப சங்கற்ப சிற்றுவிகற்ப சவிகற்ப சர்வபோத நி
ருவிகற்ப ஞானங்களால்,—

அறியாதே யறிந்து - திருச்சியமாய் நோக்காதே தடத்த
லக்ஷண நிர்முக்த ஸ்வ சிவரூப லக்ஷண சர்வதிருக் கர்த்திருரூ
ப லக்ஷண பரோக்ஷ நிரிட்சண சிவக்குறிச் சிவரூபம் தடத்த ல
ட்சண விலட்சண ஸ்வரூப லட்சண பரோட்ச நிரீட்சணரூபசா
ஸ்திரீயபரீட்சா விலட்சண சூக்கும பரீட்சாக் குறிச் சிவதரிச
னமெனுந் தச காரியத் திரு காரியம் படுத்திப் பார்த்து,—

குறியாதேகுறித்து - முன்சொல்லிய சாத்தமனச்சங்கற்
ப முனைனாகச் சாத்தாகங்கார புத்திப் பிரவாகச் சிறப்புக் கர்வ

போதஞானங்களா லியற்கையினு லணு பட்ச தற்பொருட் சிவக்குறிப்பினுற்ருன்,—

சம்பு பட்சப் பிறப்பொருட் சிவசாதி விசிஷ்ட தற்பொருட் சிவக்குறிப்பினுற்ருன்.

செயற்கையினு லாரோபித சம்புபட்ச பிறப்பொருட் சிவக்குறிப்பினுற்ருன,

திருச்சிய மன்றிச் சர்வதிர்க் கர்த்திரு ரூபமா யபரோட்சம் போ லபிநயித்துச் சிவோக மென்றுதான் இயற்கையினுற் சம்பு பட்ச வேற்றுமைச் சிவக்குறிப்பினு லப்படிச் சிவோய மென்று தான் சிவ சிவ வென்றுதா னென்றின் மற்றது மொக்க ஸ்புரிக்க அத்தியஸ் தி யருக மருவப்பொருத்திப் பண்ணும் சிவத்தியானச்குறித் தசகாரியத் தொருகாரிய சிவயோகம்பண்ணி,—

அந்தக் கரணங்களோடுங் கூடாதே - இடுக்குக் கொடுத்து விடுத்துத் தொடுத்துச் சிவத்திற் சிறைப்படுத்துஞ் சிவத்தியானத்திற் சிறிதிடங்கண்டு தாக்கிச் சமனையிற் சுருங்கிச் சூனியப் போலியாய்ப்போன மனசைத் திரும்ப வெழுப்பித் திருப்பி விஷயத்தில் வீழ்த்துஞ் சகலதத்தன்மை தொட்டுவிட்டுத் தட்டாதே,—

வாடாதே - திரும்பத் திருப்பி யோக நித்திரா முத்திரித மனத்தைப் பிராகிருத நித்திரையில் முழுகுவிக்குங் கேவலத்தன்மை தாக்காதே,—

குழைந்திருப்பையாகில் - தியானத்தின தர்க்கர்ஷாவஸ்தாரூபமாய் ஞாதிரு ஞானஞேயச் சிறப்புத் தியாதிரு தியான தேய சூனியப் போலியாய் ஞேயத்தழுந்தி யததேய மாத்திரத்திலங்கு ஞானச்சிறப்புத் தியான விசேஷசமாதி பண்ணி யிருகை பயாகில்,—

பிறியாத சிவன்றானே - கூடுதல் பிரிதல் குறிக்கிற குற்றமு ண்டாதலா லநாதிதொட்டுப் பிரேரகப் பிரேரியத் தன்மைச் சம்பந்தியா யிருந்த வீசுரன் றானே,—

பிரிந்து தோன்றி - அந்தச் சம்பந்தம் விட்டுச் சாதிருச்சிய மாத்திர மித்திர சம்பந்தியாய்ச் சாட்சாத் கரிக்கப்பட்டு, அதுவன்றி,—

பிரபஞ்ச பேத மெல்லாந் தானாய்த் தோன்றி - சித் அசித்துச் சிதசித்துச் சித்திரப் பொருள்கட் கெல்லாம் வியாபகமாய்த் தாரகமாய்ச் சாட்சாத் கரிக்கப்பட்டு,—

நெறியாலே - திருக்குத் திருசியக் குறிக் குறிப்பினாலே,—

அவையெல்லா மல்லவாகி-அந்தத் திருச்குத்திருச்சியப் பொருள்களி னொன் றன்றி,—

நின்றெனறுந் தோன்றிடுவ னிராதாரனாயே - தனக்கொரு தாரக மன்றி நிராதாரனா யிருந்தும் சமாதி சாமர்த்தியத்தினாலுதிக்குஞ் சாட்சாத் காரத்தினால் சாட்சாத்கரிக்கப் படுவன்.

பரார்த்த ஸ்வார்த்தார்த்தப் பிரத்தியர்த் தப்பிரத்தியார்த்தச் சர்வார்த்த சீவன் முத்தி சிவ சாட்சாத் காரஞ் சமாதி சாமர்த்தி யத்தினாற் சித்திக்கு மென்று தாற்பரியம்.

சிவஞானயோகியருணா வருமாறு.

—o—

ஆசிரியன் றிருவருளா லிருவகைப்பாசங்களு நீங்கிக்கேட்குமுறையிற் கேட்டுச் சிந்திக்கு முறையிற் சிந்தித்துப் பின்னன்புசெய் தடங்கி நிற்கப் பெறுவார்க்கு, முதல்வனியல்பு கேட்டற்காலத்துப் பொருட்டன்மைபற்றிப் பேதமாய்த் தோன்றிச் சிந்தித்தற் காலத்துக் கலப்புப்பற்றி யபேதமாய்த் தோன்றித்

தெளிந்தபின் இவ்விரண்டுமின்றி நேரியனும் பரியனுமாயதோர் முறைமைபற்றி எவற்றினு மொற்றித்து நின்றே ஒன்றினும் பற்றிலனாய் வேறு தோன்றுமென்பதாம்.

நின்று நிராதாரனாய்த் தோன்றிடுவனெனக் கூட்டுக.

தெளிதலாமாறு மதன்பயனு மினிது விளங்குதற் பொருட்டு மேற்கூறிப் போந்தவற்றையும் அனுவதித்து உடன் கூறினார்.

கூடாதே வாடாதேயென ஈண்டுக் கூறவே, ஏனைக் கேட்டல் சிந்தித்தல்களி னொரோவழிக் கூடுதலும் வாடுதலு நிகழு மென்பதாயிற்று.

அற்றாகலினன்றே ஆண் டிவ்வா றினிதுவிளங்கப் பெறாதா யிற்றென்பது.

இருத்தலருமை நோக்கி இருப்பையாயினென்றார்.

இதனானே தெளிதலாமாறு மதன் கணிகழு மனுபவமுங் கூறப்பட்டன.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

இந்த வுண்மையை யடியேன் பெறும்படி யெப்படியென்ற மாணாக்கனை நோக்கி மே லருளிச்செய்கிறார்.

அறியாமையறிவகற்றி - கருவிகளெல்லாம் நீங்கி ஒன்று மறியாமற் கிடக்கிற வதீதா வத்தையையும் முப்பத்தாறு தத்வங்களோடுங்கூடி விஸ்வ வியாபாரத்தை யறிகிற ஜாக்கிராவத்தையும் நீக்கி,—அறிவினுள்ளேயறிவுதனை யருளினா லறியாதே யறிந்து - ஆன்மாவுக்குப் பிராணனாய் நிற்கிற ஞானத்தினை ஆன்மபோதங் கூடாமல் அந்த ஞானந் தன்னாலே அறிந்து அங்

த ஞானத்தின் வழித்தாய் நிற்கவே தற்றரிசனமுந் தன்னைத் தோன்றாமல் மறைத்துநின்ற பாசத்தின் முறைமையுந் தோன்றும். இந்த முறைமையையும்,—குறியாதேகுறித்து - ஞானத்தாலே கண்டோமென்று காணாதே கண்டு நிற்கக்காட்டின ஞானந் தனக்குக் கரணமாம்.—அந்தக் கரணங்களோடுங் கூடாதே வாடாதே குழைந்திருப்பையாகில் - அந்த ஞானக்காட்டத்தான காண்கிற காட்சியையு மிழந்துநிற்க அவ்விடத்தி லவத்தையாம். அந்த அவத்தையாய் மயங்காதே அந்த ஞானத்தோடே கூடித் தற்போதஞ் ஜீவியாமல் நிலைபெற்று நிற்பையாகில்,—பிறியாத சிவன்றானேபிறிந்துதோன்றி - ஆன்மாவுடனேகூடி யான்மாவொழிந் தில்லையென்னும்படி யநாதியே மறைந்துநின்ற சிவன்றானே சிவனுமொரு முதலுண் டென்னும்படித் தோன்றி அப்பிரகாசமாய் நின்ற தான் பிரகாசித்ததுவு மன்றி,— பிரபஞ்சபேதமெல்லாந் தானாய்த்தோன்றி - காணப்பட்ட விஸ்வத்திலுள்ள பேதங்க ளெதனையுண்டு அத்தனையுந் தன்னையொழிந் தில்லையென்னும்படி தானாகக் காணப்பட்டு,—நெறியாலே இவையெல்லா மல்லவாகி - சடசித்துக்க ளிரண்டுந் தானாய்நிற்கச்செய்தே இவையிற்றிற் றேய்வறநிற்கிற முறைமையாலே யிந்தப் பிரபஞ்சமெல்லாந் தானல்லவாய் நிற்பன்,— நின்றெனுந்தோனறிடுவ னிராதாரனாயே - தானன்றி வேறொரு முதல்களுமற நிற்கச்செய்தேயும் தானு மொன்றினுந் தாக்கற நின்று பிறகாசியாநிற்பன்.

அறியாமையென்றது கருவிகளெல்லாம் நீங்கி ஆன்மாப் பாடாணம்போலே யொன்று மறியாமற் கிடக்குமதே முத்தியென்று பாடாணவாதி கொள்கையினால் அதாகாதென்றதெனக்கொள்க. இதற்குப் பிரமாணம் சங்கற்நிராகரணம், “காட்சியென்னக் காணுத்துயர - மாட்சியைமுத்தி யெனவகுத்துரைக்

கிற் - காணுபாவ மரணங்கருமர - மேய்ந்தவர்முத்தி சேர்ந்த வரன்றே - யனையகதிக்கோர் முனைவரும்வேண்டா - தனிதரு துயர மெனுமிதுதிடமே- பாடாணத்திற் கூடாமுத்தி" என்னு மதுங் கண்டுகொள்க.

அறிவகற்றி யென்றது, வயிந்தவ சரீரத்தைப் பெற்றிருக்கிறதே முத்தியென்று சமவாதி சொல்லுகையினால் அதாகா தென்ற தெனக்கொள்க. இதற்குப் பிரமாணம் சங்கற்பநிராகரணம், "அகன்று-நீங்கியு முருவ நீங்காதாயி - ரோங்கியமுத்தி யாவதெனுரைக்கச் - செடியுடலணுகாக் குடிலைகொடுகுமென் - றோதினைநீயே பேதாய்ப்பகட்டுர - லொளிர்சினை முச்சித் தளிரொனுமிதுக்கு"என்னுமதுங் கண்டுகொள்க.

அறிவினுள்ளே யறிவுகளை யருளினாலறியாதே யறிந்து என்றது ஆன்மதரிசனம்.

அந்தக் கரணங்களோடுங் கூடாதே வாடாதேகுழைந் திருப்பையாகில் என்றது ஆன்மசுத்தி.

நின்றுந் தோன்றிடுவனிராதாரனுயே என்றது ஆன்மலாபம்.

இதற்குப் பிரமாணம் திருக்களிற்றுப்படியார் - உகூ-செ, ஆக்கப்படாத பொருளா யனைத்தினிலுந், தாக்கிதகா தொன் றேடுந் தாக்காதே—நீக்கியுட,னிற்கும் பொருளுடனே நிற்கும் பொருளுடனாய், நிற்கை நிராதாரமாம்" எனுமதுங் கண்டு கொள்க.

இதனுற் சொல்லியது, கேவல சகல மிரண்டினையு நீங்கிச் சுத்தத்தி லுண்டாகிய ஞாதுரு ஞான ஞேயங்களையுங் கழன்று இந்த நிலையிலேநிற்கி லநாதியே தோன்றாமல் நின்ற சிவன் தோன்றிப் பிரகாசிப்பன் என்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

---o---

அருளிஞலறியாமை யறிவகற்றி - ஆசிரியன் றிருவருளா லறியாமையு மறிதலுமாகிய விருவகைப்பாசங்களு நீங்கி,—அறிவினுள்ளே யறிவுதனை யறியாதேயறிந்து- தன்னறிவின்கண்ணே கேட்டலறிவினைக் கேட்குமுறையிற் கேட்டு,—குறியாதே குறித்து - சிந்திக்குமுறையிற் சிந்தித்து,—குழைந்தந்தக்கரணங்களோடுங் கூடாதே வாடாதே யிருப்பையாகில் - பின்பு அன்புசெய்து அந்தக்கரணங்களிற் சோராதடங்கி நிற்கப் பெறுவார்க்கு,—பிறியாதே சிவன்றனே பிறிந்து தோன்றி - பிறிதலில்லாத முதல்வனியல்பு கேட்டற் காலத்துப் பொருட்டன்மைபற்றிப் பேதமாய்த் தோன்றி,—பிசவஞ்சபேத மெல்லாந் தானாய்த் தோன்றி-சிந்தித்தற் காலத் தவை கலப்புப்பற்றி யபேதமாய்த் தோன்றி,—இவையெல்லா மல்லவாகி - தெளிந்த பிரிவையிரண்டுமின்றி,— நெறியாலேயென்று நின்று நிராதாரனாயே தோன்றிடுவன் - நேரியனும் பரியனுமாயதோர் முறைமைபற்றி யெவற்றினு மொற்றித்து நின்று ஒன்றினும் பற்றிலனாய் வேறு தோன்றும்.

இதனானே தன்க ணிகழு மனுபவமுந் தெறித லாமாறுங் கூறப்பட்டன.

* இச்செய்யுளின் முற்பாதியே "பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்திதனி னோர் விருத்தப்பாதி போதும்"என்னும் சிவபோக சாரத்தானும் "பார்விரித்த நூலெல்லாம் பாதிவிருத்தத்தால் சாதித்தார் பொன்னடியைச் சாருநாளென்றோ" என்று தாயுமானார் பாடலானும் கூறியதென சாம்பிரதாய வழக்காய்க் கூறுவது. இதனைச் சிந்தித்தறிக.

மறைஞானதேசிகர் உரை.

இப்படி ஞேயத்தழுந்தின ஜீவன்முத்த ஞானவன்
தேகாந்தத்திற் பெறும் பலம் பரமுத்தி
யென் றுணர்த்துகின்றார்.

புண்ணியமே யூக்குவிக்கும் பாவங்கீழ்நூக்கும்
புண்ணியனைப் பூசித்த புண்ணியத்தினாலே, நண்ணிய
ஞானத்தினா லிரண்டினையுமறுத்து ஞாலமொடு கீழ்மே
லு நண்ணானாகி, யெண்ணுமிக லோகத்தே முத்திபெ
றுமிவன்றா னெங்கெழிலென் ஞாயிறெமக் கென்றுகு
றைவின்றிக், கண்ணுதற னிறைவதனிற் கலந்துகாய
ங் கழிந்தக்கா லெங்குமாய்க் கருதரன்போ னிற்பன். ௧௧

(இ-ள்.) புண்ணியமே யூக்குவிக்கும் பாவங்கீழ் நூக்கும் — புண்ணியஞ் சுவர்க்காதி பலத்தை யடைவிக்கும், பாவம் நரகக்குழியிற் பலத்தை யடைவிக்குமாதலா லிவ்விரண்டும் பொன்விலங்கு மிருப்பு விலங்குமென வறிக.

புண்ணியனைப் பூசித்த புண்ணியத்தினாலே — புண்ணிய மூர்த்தியாகிய சிவனைப் பூசித்த சிவ புண்ணிய பலத்தாலே

நண்ணிய ஞானத்தினா லிரண்டினையுமறுத்து — கன்ம க்ஷயம் பிறவாவிடத்து முத்திகூடாதபடியாலே யிவனுக்குச் சிவனை வழிபடுதலா லுண்டா சிவபுண்ணிய மாகிற ஞானவாளா லவ்விரண்டினையு மேற்றொடராதபடி யறுத்து,

"ஞானவா ளேந்துமையர் நாதப்பறையறைமின்" என்றார்.

ஞாலமொடுகீழ்மேலு நண்ணானாகி — புண்ணியத்தாற் பாவத்தாற் புண்ணியபாவத்தாலும்

நண்ணுமுயிர் மேல்கீழ் நடு — இம்மூன்று லோகத்தையும் பொருந்தாதவனாய்,

எண்ணுமிக லோகத்தே முத்திபெறுமிவன்றான் — இந்த வுலகத்திலே யுண்டுடுத்திருந்து முத்தியினை யடையக் கருதுஞ்சீவன்முத்தனானவன்,

எங்கெழிலென் ஞாயிறெமக் கென்று குறைவின்றி — இப்படிப்பட்ட ஞாதாக்கள் வேறு நமக்கு வேண்டுவதொரு குறைகளுமில்லையெனக்கருதி யாதித்திய னெவ்விடத் துதித்தாலுந் தாழ்வில்லையென் றிருப்பர்கள்.

"இங்கிப்பரிசே யெமக்கெங்கோ னல்குதியேல், லெங்கெழி லென்ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்" எனவறிக.

கண்ணுதறன் னிறைவதனிற் கலந்துகாயங் கழிந்தக்கா லெங்குமாய்க் கருதரன் போனிற்பன். — இந்த ஜீவன் முத்தனுக்குக் கன்மத்தாலுண்டான வாதனைகெட்டுச் சரீரமொழிந்தவாறே கடமான தொடைந்தா லதனுள்ளிருக்கும் விளக்கான தெப்படி யெங்கும் பிரகாசிக்கு மதுபோலிந்த வான்மா நெற்றியிற் கண்ணினையுடைய சிவனது வியாபகத்தைக்கலந் தவனைப்போல சர்வக்கியத்துவமுதலிய குணங்களுடனுங் கூடியிருப்பன். எ-று.

ஆன்மா - என்பதெழுவாய்.

நிற்பனென்பது - பயனிலை.

இதற்குச் சிவதருமோத்தரம் தேவிகாலோத்தரம் மதங்கம் இரத்தினத்திரையத்து மறிக. (௫௬)

சிவாக்ரயோகியருளை வருமாறு.

மேல் ஜீவன்முத்தி பரமமுத்திக் கிரமங் கூறுகின்றது.

புண்ணியமே நோக்குவிக்கும் பாவங்கீழ் நூக்கும் - ஆன்மா விவ்விடத்து ஸ்தூலதேகம் விடும்பொழுது புண்ணிய கன்மமே பரிபாகமாகில் மேலாகிய சுவர்க்கபோகத்தை யனுபவிக்கும். பாபகன்மமே பரிபாகமாகில் நரகத்திலே தள்ளும். மேல் ஞாலமோ டென்கையால் புண்ணியபாப மிருவகைக் கன்மங்களேற்றக் குறைச்சலாக பரிபாகமாகிற் பூமியிலே சுக துக்க மிரண்டையு மனுபவிக்கப் பண்ணும்.—

புண்ணியனைப்பூசித்த புண்ணியத்தினாலே நண்ணியஞானத்தி னிரண்டினையுமறுத்து-புண்ணியமூர்த்தியாகிய சிவனைப் பூசித்த ÷ சுகிர்தத்தினாலே யுண்டான ஞானத்தாலே புண்ணியபாப மிரண்டையுமறுத்து,—

ஞாலமொடு மேல்கீழ் நண்ணானாகி - தேகாதிசனுக் கேதுவான புண்ணியபாப மிரண்டும் போகையால் பூமியினிடத்து பூதபரிணாம தேகத்தையும் தேவலோகத்தில் பூதசார சரீரத்தையும் நரகத்தில் பூத சரீரத்தையு மினிமேற் பொருந்தாதவனாய்,—

எண்ணுமிக லோகத்தே முத்திபெறும் - கன்மபூமியென்றெண்ணப்பட்ட விந்த பூலோகத்திலே தானே ஜீவன்முத்தியை யடையும். இவ்வாறு ஜீவன்முத்தியை யடைந்தவன்,—

இவன்முனெங் கெழுகோ ஞாயிறெமக்கென்று - இவ்வாறு ஜீவனமுத்த னானவன் மகோத்பாதமாக வாதித்தன் றிசைமாறி யுதிக்கினு மஞ்சாமல்,—

காயங் கழிந்தக்காற் குறைவின்றி கண்ணுதறன் னிறைவதனிற்கலந் தெங்குமா யரன்போல் நிர்ப்பனென - சருதுபிராரத்

ததேக மொழிந்தால் முன்னின்ற யேகதேசித்துவம் நீங்கிச் சிவனுடைய பூர்ணத்திலே யப்போடே கலந்த உப்புப்போலக் கலந்து அப்புள்ளளவு முப்புள்ளதுபோலச் சிவனுடனே சர்வவியாபியாய் நிற்பன், முத்தான்மா வென்று புத்திபண்ணென் றிதன்பொருள்.

÷ சுகிருதம் - நற்செய்கை.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

——0——

இப்படி யசத்தியோ நிருவாண தீட்சாவானுய்ப் பின் சிவாகமக் கேள்வி முலிதயவற்றுன் முறைமையில் முப்பதார்த்த விவேச பசுத்துவ சிவத்தவ விவேக சிவ ஞான வானுய்ப் பின் சிவதியான வானுய்ப் பின் சிவசமாதிமானுய்ப் பின சீவன் முத்தி சிவ சாட்சாத்காரவானுய்ச் சாமர்த்தியவா னல்லாதிருந்தால், மரியாதி மதித்துக் கடாக்ஷிக்குஞ் சிவ தீட்சா ரூப சிவ சத்தி பதிந்த ஞானுதி மூன்றி னொன்றிரண்டு மூன்று முறைமையினுடையனுய்த் தானிருந்தவன் சரீராந்தத்திற் சத்தியோ நிருவாண தீட்சாவான் போலப் பரமுத்தி சிவசாட்சாத்கார சிவ சாதிருச்சிய சிவவா னுவனென்று சாற்றுகின்றுர்.

புண்ணிய மேனுக்குவிக்கும் பாவங் கீழ் நூக்கும் புண்ணியனே பூசித்த புண்ணியத்தினுலே - கிரியாபூசையினுலேதான் தீக்ஷா மாத்திரத்தினுலேதான்,—

நண்ணிய ஞானத்தினுல் - முன்சொல்லிய முறைமையிலடைந்த ஞானத் தியான சமாதி சீவன் முத்தி சாக்ஷாத்காரக் கூட்டப்பிரிவு ஞானபூசையினுல்;—

இரண்டினையுமறுத்து - புண்ணியபாவங்களை மலத்தோடு பிரதி தினம் மரியாதியிற்போக்கி,—

எங்கெழுகோ ஞாயிறெமக்கென்று எண்ணும் இகலோகத்தே முத்திபெறு மிவன்றான் - மதிககப்படுஞ் சீவன்முத்தனானவன்,—

காயஞ் சழிந்தக்கால் குறைவின்றிக் கண்ணுதறன் னிறைவதனிற்கலந்து - சிவசத்தி பரிபூரணத்திலொத்து வியாப்பித்து.

ஞாலமொடு கீழ் மேலும் நண்ணுஞகி எங்குமாய்க் கருதரன்போனிற்பன் - எங்கும் வியாபியாய்த் தான்றியானித்த சிவனுக்கொத் தெங்கும் வியாபித்துச் சர்வஞ்ஞத்துவ சர்வ சர்த்திரு ரூப சிவனுயிருப்பன். அப்படித் திருமந்திரத்துஞ் சொல்லப்பட்டது.

"முப்பதுமாறும் படுமுத்தியேணியா
யொப்பிலாப் பேரண்டத் துள்ளொளிப்புக்குச்
செப்பவரிய சிவங் கண்டுநின்றவ
ரப்பரிசாகி யமர்ந்துநின்றுரே."

இப்படிப் பிறப்பொருட் சிவசாதி விசிஷ்டாத்வைத விசிஷ்ட தற்சிவ வியத்திச் சுத்தாத்துவைதஞ் சொல்லி யிருக்கவும் பிரமித்துச் சிறிதிடத்து மதாந்தரப் போலிவசங் தூக்கி யெடுத்துக்கொண்டு பிறப்பொருட் சிவ வியத்திச் சுத்தாதுவைதம் பிறப்பொருட் சிவ வியத்தி விசிஷடாத்துவைதந்தான் விளம்புவோர் வேதாந்தி ராமானுஜ வேஷங்கொண்டு வேற்றுச் சமயிகளாவார்கள்.

சிவ சாயுச்சியச்சொற் செப்புவது நிருப சர்வ வைக்கியமன்று.

ஏகான்மப் பிரசங்கம் வருமாதலால், சிவ சம்யோசமுமன்று.

விகாரப்பிரசங்கம் வருமாதலால் சிவ சமவாயமுமன்று.

ஏகான்மப் பிரசங்கத்திற் கிடங்கொடுக்கு மாதலால்; சிவ தாதான்மியமுமன்று.

சமவாயத்திற்குச் சொல்லிப தூஷணம் வருமாதலால். சிவ த்துவ ரூபம்போ லிருப்பது சிவ தாதான்மிய மென்னில் சித்த சாதனமாம், சிவ லயமுமன்று.

துல்லியப்பொருள் கொள்ளாதிருந்தால் விஞசப் பிரசங் கம் வருமாதலால். சிவானனனியமுமன்று.

துல்லியப்பொருள் கொள்ளா திருந்தால் வேதாந்த மதாந் தரமாதலால் சிவ சாங்கரியமு மன்று.

பரிணதவேதாந்த பாஞ்சராத்திரி மதாந்தரமாமாதலால், சிவ ஸ்வஸ்வாமித் துவமுமன்று.

பரமுத்தி பங்கம் வருமாதலால் சிவப்பிரேரக பிரேரித்தி யத்துவமு மன்று.

ஸ்வஸ்வா மித்துவத்தக்குச் சொன்ன தோஷம் வருமாத லால் சிவ காரண காரியத்துவமு மன்று.

காரண காரியத்துவம் பிரேரக பிரேரியத்துவ மென்று பொருளாதலால் ஸ்வஸ்வாமித்து வத்துக்குச் சொல்லிய தோ ஷந்தானே வருமாதலால். சிவ மேலிடக் கீழ்ப்படுதலு மன்று.

விநாசதுல்லியமா மாதலால் அருக்கன் கண்களுக்குப் போற் சிவ வியங்கியத்துவமு மன்று.

பிரதிபந்தப் பிரசங்கம் வருதமாலால் சிவ வியாபக வியா ப்பியத்துவமுமன்று.

ஜடத்துவ நித்தியத்துவப் பிரசங்கம் வருமாதலால் சி வப் பிரதிவிம்பமுமன்று.

மேற்சொல்லிய தூஷணம் வருமாதலால் சிவகுண சங்கி ராந்தியு மன்று.

திருஷ்டாந்தமில்லை யாதலால் சிவாவேசமு மன்று.

சுவாதந்திரிய சூனியம் வருமாதலால் சிவகுண சமுர்புத்தியுமன்று.

அநித்தியத்துவப் பிரசங்கம் வருமாதலால் சிவநுக்கிராயாநுக்கிராககத்துவமு மன்று.

அது வியங்கிய வியஞ்சகத்துவமாதலா லிது பிரதிபந்தப்பிரசங்கம் வருமென்று முன்றள்ளப்பட்ட படியால் சிவபோக்கிய போத்திருத்துவமு மன்று.

ஜடப்பிரசங்கம் வருமாதலால் சிவ ஞாப்பிய ஞாபகத்துவமு மன்று.

அப்படி திருச்சியமாகில் ஜடத்துவப்பிரசங்கம் வருமாதலால் ஸ்வஸம்வித் புரஞநுபாவியாநுபவி த்ருத்துவமு மன்று.

ஏகான்மப்பிரசங்கம் வருமாதலால் பரஸம்வித் புரிஞுகியோகித்ருத்துவமு மன்று.

சர்வபதார்த்த சாயுச்சியப் பிரசங்கம் வருமாதலால். சிவ சாநித்தியமு மன்று.

ஒன்றுக்கொன்று சாக்ஷாத்காரமே சாநித்திய மாதலால் அப்போது சிவ சாக்ஷாத்காரந் தானே பாசட்டும்; "ஸர்வார்த்தபாசகம்ஞாநஞ் சிவயோநது சாச்வதம்" என்னும் வசனத்திஞு லதுவு மொருநிக்கினுலாகும்.

ஆனால் முடித்த பக்ஷமேது,சிவ சாதிபென்று செப்பப்படுஞ் சிவ சாதிருச்சியமே சிவ சாயுச்சியம். ஆதிமுத்தன் அநாதிமுத்தன் என்னுஞ் சிறித வைசாதிருச்சிய மிருத்தலான் முற்றுஞ் தாதிருசியஞ் சிவ சாயுச்சியமென்று செப்பப்படாது.

அப்படிச் சொல்லப்படா,து ஆதிமுத்தனநாதி முத்தனென்னும் சிறிது வைசாதிருச்சிய வார்த்தை மலோபாதி தொட்டுவந்த வெகிரங்கவார்த்தை யென்றும், முத்தனுக்கு அவர்ச்சநீய சஞ்சித கிர்த்தியம் சிவனுக்குக் கிருபாசம்சித்த கிர்த்தியமென்னு

ஞ் சிறிது வேற்றுமை வார்த்தையும் வேறு கரணீயமில்லாமையா
லென்றும், முற்றுஞ் சிவசாதிர்ச்சிய மென்பதே யந்தரங்க வார்
த்தை யென்று முடிதலான் முற்றுஞ் சிவசமாதிருச்சியமே சிவ
சாயுச்சிய மென்று சித்தாந்தம் சித்தித்தது.

ஆகையா லெல்லாம் நல்லதுதானே! சிவ முற்றுவமை சி
வைக்கியமெனறு சிலர் செப்புவதேத? சத்தியம். அது நிருப
சரித வைக்கிய மன் றுபசரித வைக்கிய மப்படிச் சுருதி சொல்
லியதென்று காந்தபுராணங் சழறுதலால்.

சிவா னன்னியத்துவமே சிவ சாயுச்சியமென்று சில சிவ
சித்தாந்திகள் செப்பியதேது? அது பரீக்ஷை பண்ணுதபடித்
தது.

சிவனோடு அனன்னியத்துவ மென்னுமிடத்து அனென்
பது அன்னியப்பொருள் விருத்தப்பொருள் அபாவப்பொரு
ளாக முப்பொருட் சொல்லாதலால், முப்பொருளுள் சிவனுக்
கன்னியமாய் முத்தான்மாவில்லை யாதலாற் சிவா னன்னியனெ
ன்ற பாவப்பொருட் டொகை விரித் தருத்தஞ் சொல்லில் விவ
ர்த்த வேதாந்தமாம்.

சிவனுங் கன்னிய மல மாயா கன்மங்கட்கு விருத்தனாதலா
ல் சிவானனனியனென்று விருத்தப் பொருட்டொகை விரித் தர்
த்தஞ்சொல்லில் சிவனுமப்படி யென்று சிவ சதிர்சியனாய்ச் செ
ப்பப்படுவன்.

சிவனுக்கு அன்னிய மலமாயா கன்மங்கட் கனனியன் விசதி
ருசனாதலால் சிவானனனிய னென்று அன்னியப் பொருட்டொ
கை விரித்தர்த்தஞ்சொல்லில் சிவனுமப்படியென்று சிவ சதிருச்
சியனாய்ச் செப்பப்படுவன்.

இப்படி அவர்கட் கிட்ட விகாதம்பண்ணுஞ் சிவா னன்னி
யச் சொற் சொல்லி யேதுப் பிரயோசனம் விசேடித்துக் கட்

டிக்கொண்டது, ஒன்றமில்லை. சகள சதாசிவ சாதிருச்சியமாத்திரஞ் சிவ சமாதி மதம்.

அது சித்தாந்தமன்றென் றறிந்து முற்றுஞ் சிவ சாதிர்ச்சியமே சிவ சாயுச்சியமென்று சிவ சித்தாந்தம் பண்ணிச் சுகியாயிரு.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

வியாபகமாகிய வுயிர் அவ்வியல் பிழந்து கீழுமேலு மேகதேசப்பட்டுச் சேறற்குக் காரணம், அங்ஙனஞ் சென் றவ்வப்பயனுகரச்செய்யு மிருவினைத் தளையேயாகலின, அத்தளை யிரண்டனையும் ஞானநூ லோதன்முதற் சிந்தித்தலீறாகிய ஞானபூசையின் பயனாய் நிகழ்ந் தெளிதலுணர் வெனப்படும் அரதனான் அறுக்கப் பெற்றார்க்குக் காரண மின்மையிற் காரியமாகிய ஏகதேசச் செலவு மின்றா யொழியும். அஃதொழியவே, அவர் கரணங்களின வயத்தராதலின்றி மேலங்ஙனந் தோன்றிய விறைவனது வியாபகத்தைத் தலைப்பட்டு ஒருவாற்றானுங் குறைவின்றி இம்மையே சீவன் முத்தராகி, மாசு நீங்கியவழி ஆடையின் வெண்மை ஆடைமுழுதும் விளங்கினாற்போல, இகருளி வாங்குங் கலம்போ லுழல்வதாகிய விவ்வுடம்பு நீங்கப்பெறும் பரமுத்தி நிலையிற் றமது வியாபக மெங்ஙனும் அறிவு விளங்கப் பெற்று முதல்வனோ டொத்து நிற்பரென்பதாம்

சிவசம மாதற்குரிய சாதாரண தன்மியாவ திஃதென்பார், எங்குமா யென்றார்.

தெளிந்தார்க்குக் கண்ணுறுதற னிறைவதனிற் கலத்தற்கணிடையீடின்மை யினிது விளக்குவார், இடையீடாவன வினையென்பதூஉம் அவை கழிந்தவாறு முடன் கூறினார்.

கண்ணுதற னிறைவதனிற் கலந்தார்க்குப் பண்டை யேகதேசவுணவு தூர்ந்து போதலின், ஏகதேசவுடம்பி னிகழு மின்பதுன்பத்திற்கு ஏதுவாகிய உற்பாத முதலியவற்றை நோக்கி வரக்கடவதோர் கவலையின்மையின், எங்கெழிலென் ஞாயிறெமக்கென்று குறைவின்றி நிற்பாராயினா ரெனபது.

“தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான் - மனக்கவலை மாற்ற லரிது”, என வெதிர்மறை முகத்தாற் கூறியது மிதுபற்றியென்க.

கலந்து முத்திபெறு மிவனென விடையும்.

இதனானே நிட்டை யாமாறு மதன் பயனுங் கூறப்பட்டன.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

இந்தச் சிவஞானம் இருவினை யொத்தவிடத்திலே இவனுக்குண்டாமென் றருளிச்செய்கிறார்.

புண்ணியமேல் நோக்குவிக்கும் - நல்வினையானது மேலாயிருக்கில் சுவர்க்கத்திலே கொண்டுபோய்வைத்து இன்பத்தைப் புசிப்பிக்கும்,—பாவங்கீழ் தாக்கும் - தீவினையானது நரகத்திலே தள்ளித் துன்பத்தைப் புசிப்பிக்கும். இவையொழிந்து,—புண்ணியனைப் பூசித்த புண்ணியத்தினாலே - பரமேஸ்வரனைப் பூசித்த சரியைகிரியா யோகங்களின் முற்றுதலினா லுண்டான சிவபுண்ணியத்தி னதிகத்தினாலே,—நண்ணிய ஞானத்தினாலிரண்டினையுமறுத்து - பொருந்தப்பட்ட சிவஞானத்தினாலே ஆன்மபாவ மென்கின்ற பாசங்களிரண்டினையுஞ் சோதித்து, அப்படிச் சோதிக்கையால்,—ஞாலமொடுகீழ்மேலு நண்ணானாகி - கன்மத்தை யார்ஜ்ஜிக்கிறபூமியிலும் அனுபவிக்கிற சொர்க்கந

கங்களிலுஞ் சென்று பொருந்துதலின்றி.—எண்ணுமிகலோகத்தே முத்திபெறும் - எல்லாப் பாக்கியங்களுக்கு மேதுவெனறெண்ணப்பட்ட இந்தலோகந்தன்னிலே மோக்ஷத்தை அநதச்சிவஞானத்தாலே பெறுகிற்பன்.—இவன்று னெங்கெழுகோஞாயிறெமக்கெனறு குறைவின்றி-இப்படிப் பெற்ற அந்தச்சிவஞானியானவன் பொல்லாத காலத்துக்கு ஞாயிறு திசைமாறித்தோன்றப் பிரபஞ்சத்தி லுள்ளவர்களுக் கெல்லாம் விதனம்வரும். இவன் எவ்விடத்திலே யுதித்தால் நன்று நமக்கென்று ஒரு சலனமுமின்றி,—கண்ணுதற னிறைவதனிற்கலந்து - பரமேஸ்வரனுடைய பூரணத்துடனே தானுங்கூடிச் சரீரமுள்ளமட்டு நின்று,—காயங்கழிந்தக்கால் - பிராரத்தம் புசித்துத் தொலைந்து சரீரம் விட்டபொழுது,—எங்குமாய்க் கருதரன்போனிற்பன் - சிவஞானத்தினாலே யறிதியிட் டறியப்பட்ட சுகசொரூபியாயிருக்கிற பரமசிவனைப்போலே தானும் பூரணனாய் நிற்பன்.

நண்ணியஞானத்தி னிரண்டினையு மறுத்து என்றது ஆன்மதரிசனம்.

குறைவின்றிக் கண்ணுதற னிறைவதனிற் கலந்து என்றது ஆன்மசுத்தி.

காயங்கழிந்தக்கா லெங்குமாய்க் கருதரன்போனிற்பன் என்றது ஆன்மலாபம்.

இதற்குப் பிரமாணம் சிவஞானபோதம், அ-சூ, ௨-வெ, "பசித்துண்டு பின்னும் பசிப்பானை யொக்கு, மிசைத்து வருவினையினின்ப—மிசைத்த, விருவினையொப்பி லிறப்பிற் றவத்தால், மருவுவனாம் ஞானத்தை வந்து". என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, புண்ணியபாவங்க ளிரண்டும் சொர்க்க நரகங்களிலே கொண்டுபோ மென்றும் சிவனைப் பூசித்த சிவ புண்ணியத்தினாலே உண்டாகிய ஞானத்தினாலே இந்த வி

ரண்டு வினைகளும் போமென்றும் இவை போனால் இவனுக்குப் பூமியிலும் நரக சுவர்க்கத்திலுமுள்ள தொந்தனை யுண்டாகாதென்றும் இந்தச் சரீரத்தோடே கூடியிருக்கச் செய்தே விருப்பு வெறுப்பற்றுச் சிவனுடனேகூடி யொன்றுபட் டிருப்பர்களென்றும் இந்தச் சரீரம் நீங்கினால் பரமுத்தியைப் பெறுவர்களென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

இவன்றனே-வியாபகமாகியவுயி ரவ்வியல்பிழந்து,—கீழ்நோக்கும் மேல்நோக்கும் பாவபுண்ணியம் - கீழுமேலு மேகதேசப்பட்டுச் சேறற்குக் காரண மங்ஙனஞ்சென்று அவ்வப்பயனுகரச்செய்யு மிருவினைத் தளையே யாகலின்,—இரண்டினையும்- அத்தளையிரண்டினையும்,—புண்ணியனைப் பூசித்த புண்ணியத்தினாலே - சிவபுண்ணிய மிகுதிப்பாட்டால்,—நண்ணிய ஞானத்தினாலறுத்து - ஞானநூல் ஓதல்முதற் சிந்தித்த லீறாகிய ஞானபூசையின் பயனாய் நிகழ்ந் தெளித லுணர்வெனப்படும் அரத்தா னறுக்கப்பெற்றோர்க்கு,—ஞாலமொடு கீழ்மேலு நண்ணாதாகி - காரணமின்மையாற் காரியமாகிய பூமி நரகம் சுவர்க்கத்திற் செல்லுதலாகிய வேகதேசச் செலவு மின்றா யொழியும்—கண்ணுதற னிறைவதனிற்கலந்து-அஃதொழியவே யவர் கரணங்களின் வயத்தராதலின்றி மேலங்ஙனந் தோன்றிய விறைவனது வியாபகத்தைத் தலைப்பட்டு,—ஞாயிறெங்கெழிலென் னெமக்கென்று குறைவின்றி-ஞாயிறெவ்விடத்தெழினு மகனாலே தமக்காவதோர் பயனின்மை தெரித்தவராய் ஒருவாற்றானுங் குறைவின்மையை யடைந்து,— எண்ணு மிகலோகத்தே முத்திபெறும் - இவ்விதமாகக் கருது மிம்மையே சீவன் முத்தராகி,—கா

யங்கழிந்தக்கா லெங்குமாய்க் கருதரன்போனிற்பன் - மாசு நீங்கியவழி யாடையினது வெண்மை யாடைமுழுவதும் விளங்கினாற்போல இங்குளி வாங்குங் கலம்போ லுழல்வதாகிய வில்வுடம்பு நீங்கப்பெறும் பரமுத்தி நிலையிற் றமது வியாபகமெங்கணு மறிவு விளங்கப் பெற்றுக் கருதுகின்ற முதல்வனோ டொத்து நிற்பர்.

இதனானே நிட்டையாமாறும் அதன்பயனும் கூறப்பட்டன.

மறைஞானதேசிகர் உரை.

மேல் ஜீவன்முத்தர் தன்மை யிரண்டு
செய்யுளா லுணர்த்துகின்றார்.

ஞாலமதின் ஞானநிட்டை யுடையோருக்கு நன்மையொடு தீமையிலை நாடுவதொன்றில்லை, சீலமில்லைத் தவமில்லை விரதமோடாச்சிரமச் செயலில்லைத் தியானமில்லைச் சித்தமலமில்லைக், கோலமில்லைப் புலனில்லைக் கரணமில்லைக் குணமில்லைக் குறியில்லைக் குலமுமில்லைப்,பாலருட னுன்மத்தர் பசாசர்குணமருவிப் பாடலினோ டாடலிவைப் பயின்றிடினும்பயில்வர். (௩உ)

(இ-ள்) ஞாலமதின் ஞான நிட்டையுடையோருக்கு — இந்தப் பூமியின் கண்ணே நிட்டையைப் பொருந்தின ஞாதாக்களுக்கு,

நன்மையொடு தீமையிலை — விருப்பு வெறுப்பு மில்லை யாகையா லிருவினையு மேறுவ தில்லையாய்,

நாடுவதொன்றில்லை — தனக்கெதுவந்தாலுஞ் சிவன் செயலெனக் கருதியவ்வனவனாதுவென்னுஞ் சுட்டுப் போதமு மில்லையாய்,

சீலமில்லை — இன்னபடி யாசாரமாய் நடக்க வேணுமென்னுந் தன்மையு மில்லையாய்,

தவமில்லை — சாந்திராயண முதலிய விரதங்களை யனுட்டித்துச் சரீரத்தை வாட்டுதல் செய்விப்பது மில்லையாய்,

விரதமொடாச்சிரமச் செயலில்லை — பிரமசரிய முதலிய விரதத்துடனே கூடின நாலாச்சிரமத்தின் வழியின் றனுட்டிக்க வேணுமென்று நியமமுமில்லை,

தியானமில்லை — யாதாமொரு மூர்த்தித் தியானமுமில்லை,

சித்த மலமில்லை — மனவழுக்கு மில்லை,

கோல மில்லை — இப்படி யிருக்கவேணு மென்கிற நியமுமில்லை,

புலனில்லை — விடயங்களின் வழி யொழுகுவது மில்லை,

கரணமில்லை — சிவகரணமாய்ச் சீவிப்பதன்றி யவகரண மில்லையாய்,

குணமில்லை — பொல்லாத குணங்களுடன்கூடி நடப்பதுமில்லை,

குறியில்லை — ஓரடையாளங்க ளுடனே கூடியிருக்கவேணுமென்கிற நியமமுமில்லை,

குலமுமில்லை — இன்ன சாதியென்று வரைதலுமில்லை,

பாலருடனுன்மத்தர் பசாசர் குற்றதே — இம்மூவரையு முவமித்துத் தங்களுக் கேற்றதே செய்திருக்கையாற் கூறியதொழிப

ணமருவி — இவர்களைப் போல வறிவற்றதென்றுகூறிய தன்று;

பாடலி ேனா டாட விவைபயி ன்றிடினும் பயில் வர். — பாடியுமாடியுந் திரிந்தாலுந் திரிவார்கள் எ-று.

உம்மை ஐயம்.

இதற்குச் சர்வஞானோத்திர மதங்கத்துமறிக. (கூஉ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

சீவன் முத்தர் பண்ணவேண்டுவ தொருநியமுமில்லை யென்பது கூறுகின்றது.

ஞாலமதின் ஞானநிட்டை யுடையோருக்கு நன்மையொடு தீமையில்லை - பூமியின்கண்ணே சிவஞான நிலைப்பேற்றை யுடையோருக்கு நன்மையாகிய புண்ணியமுமில்லை,—

ஒடு- உடனிகழ்தல். தீமையாகிய பாபமுமில்லை.—

நாடுவதொன்றில்லை - புண்ணிய பாபக்கிரியைகளைப் பண்ணினார்களாகிலும் ஒரு பலததை நாடுவதில்லை,—

சீலமில்லை- சமயாசாரங்கள் பண்ணவேண்டுவது மில்லை,—

தவமில்லை - சாந்திராயணாதி தபசைப் பண்ணவேணுமென்பதுமில்லை,—

விரதமில்லை -நைஷ்டிகம் பாசுபதம் ÷ அதியாச்சிரமம், பஸ்மசரியை இவைகள் முதலான விரதங்களைப்பண்ணவேண்டுவது மில்லை,—

ஆச்சிரமச் செயலில்லை - ஆசிர்ம தருமங்களை யனுஷ்டிக்க வேண்டுவது மில்லை,—

தியானமில்லை-மூலாதாராதி ஸ்தானங்களிலே சகுணமூர்த்தி தியானங்கள் பண்ணவேண்டுவது மில்லை —

சித்தமலமில்லை - சித்தமான தலமருதலில்லை. அலமருதல் = விகர்ப்பம். —

கோலமில்லை - சமயத்துக்கேற்ற வேடத்தைத் தரிக்கவேணு மென்பது மில்லை, —

புலனில்லை - சப்தாதி விஷயங்களை விடவேணும் பொருந்தவேணுமென்னும் நியமமுமில்லை, —

கரணமில்லை - அந்தக்கரணங்களை யடக்கவேணு மென்பதுமில்லை.

இவ்வாறு விஷயங்களிற் செல்லாமற் கரணங்களை யடக்கவேண்டுவது ஞான சாதகனுக்கே! ஞானசித்தனுக்குக் கரணங்கள் சிவகரணமும் சகலவஸ்துக்கள் சிவாகார மாகையாற் கரணங்களை யடக்கவேணுமென்னும் சங்கற்பமில்லை, —

குணமில்லை - தாமச ராசச குணக்கிரியைகளை யடக்கி சாத்விக குணக்கிரியைகளைச் செய்யவேணுமென்னு நியமமில்லை, —

குலமில்லை-குலதருமத்திலே நடக்கவேணு மெனபதுமில்லை, —

பாலருட னுன்மத்தர் பசாசாகுணமருவி - பாலர்குணமாவது பசித்தநேரம் புசிப்பதன்றி யினிமேற் புசிப்புக் கிதுவேணு மென்று தேடாமலும் மாதாபிதாவுக்குவந்த பேறிழவிற் சந்தோஷமுந் துக்கமுந் தனக்கில்லாமலும் பிரயோசனத்தை யிச்சியாம லொருதொழில் செய்வதும்.

+உன்மத்தர் குணமாவதுவொரு தன்மையாய் வைதவரையும் வாழ்த்தினவரையும் பகுத்து நோக்காமல் தேக சவுக்கியங்களையு மிச்சியாமலிருக்கை.

பசாசர்குணமாவது பேய்பிடியுண்டவன் தேசத்திலேயொ

ருத்தர் பண்ணு மிதாஹிதங்கள் பிடித்த பேய்க்கேயாகத் தனக்குப் பாரமற விர்ப்பது,—

பாடலினோ டாடலிவை யயின்றிடினும் பயில்வர்-ஆனந்த மேலீட்டினாலே சிவனைப் பாடுதலுந் தாமாடுதலுஞ் செய்வர்.

உம்மையினால் நிர்விகாரமாயிருந்தாலு மிருப்பர். இவ்வாறு அந்நியமமே நியமமாகையால்,—

குறியில்லை-இன்னபடித்தாயிருப்ப னின்னபடி செய்வனென்றோ ரடையாளஞ் சொல்லப் பெறுவதில்லை யென்றிதனபொருள்.

÷ அதியாச்சிரமம்-ஆச்சிரமத்தைக் கடந்தது, + உன்மத்தர்-பித்தர்.

ததாஹு: — யஸ்யாயஸ்யா ஸமாஸ்ரம நஷ்டஸ்த —க்ரியா । ஸந்த்யேஸஸர்வாண்யாணி யோகாவாந் ஜ்ஞேய: ॥ ஸத்யாவாந் நிஸ்ஷாந்து க்ருதக்ருத்யா து யநாமிச ॥ ஸங்கல்பஞ்சு விகல்பஞ்சு யோவாந்த்ய க— ஸயுக்தா இதி ॥

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

தியானமூலத்து மூளைத்து மந்தமாயுந் தீவிரமாயுஞ் சீவன்முத்தி சாக்ஷாத்கார பரமுத்தி சாக்ஷாத்காரப் பழம்பழுக்குஞ் சமாதி விருக்ஷம் வளர்த்தவன் மகிமை யிருவிருத்தத்தால் வகுத் துரைக்கின்றார்.

வெளிப்பொருள்.

சிவஞானயோகியருளா வருமாறு.

இந்த நிட்டையுடையார்க்கு விதித்தன செய்தலும் விலக்கியன வொழுகலும் வேண்டாம், அவர் செய்தன வெல்லாந் தவமா மென்பதாம்.

பாலர் குணம் அறவொழுகற்கும், உன்மத்தர் குணம் ஒருகாற்செய் தொருகாலொழிதற்கும், பிசாசர்குணஞ் செயலிழப்பின்றி செய்தற்கு முவமையாயின.

இல்வாறன்றி, மேலுணவு தேடாமை முதலியவற்றிற்கு அம்மூன்று முவமையாயின வென்பாருமுளர்.

இச்செய்யுளி னெடுத்துக்கொண்ட பொருளோ டியையின்மையானும்' "பால ருன்மததர் பிசாசரிலெனவு - முறங்கினோன்கை வெறும்பாகெனவுந் - தானேதவிராதாலுல்" எனப் பிராண்டுந் தவிர்தன் மாத்திரைக்கே அவற்றை எடுத்து காட்டிய வாற்றானும், அஃதீண்டைக் கேலாமை யறிக.

பாடலினொடாடலினை பயிறல் பரமானந்த மேலீடு நோக்கி நிகழ்வதென்க.

நிரம்பவழகியருளா வருமாறு.

இந்த உண்மைநிட்டை கூடின ஞான வான்களினிலக்கணமே லருளிச்செய்கிறார்.

ஞாலமதின் ஞானநிட்டை யுடையோருக்கு - இந்தப் பூமியிலே ஞானநிட்டை கூடியிருக்கிறவர்களுக்கு,—நன்மையொடு தீமையில்லை - விருப்பு வெறுப்பு மில்லையாய்,—நாடுவதொன்றில்லை-இன்னது வேணுமென்று ஒரு நாட்டங்களு மில்லையாய்,—

சீலமில்லை - ஜாதித்தொழில் குணத்தொழில் முதலான சீலங்களுமில்லையாய்,—தவமில்லை - பஞ்சாக்கினி நடுவும் ஜலத்தினடுவு முதலாகச் செய்கிற தவங்களு மில்லையாய்,— விரதமொடாச்சிரமச் செயலில்லை-மாசோபவாசம் அட்டமிவிரத முதலானவையும் ஒரு ஆசிரமங்களு மில்லையாய்,— தியானமில்லை-ஆதாரம் பிராசாதம் முதலாயுள்ள தியானங்களு மில்லையாய்,—சித்தமலமில்லை - ஆன்மாவுக்கு அநாதியே சகசமயிருக்கு மாணவமலமு மில்லையாய்,—கோலமில்லை - இப்படி இருக்கவேணுமென்று ஒரு வடிவுமில்லையாய்,—புலனில்லை - இந்திரியவியாபாரங்களு மில்லையாய்,—கரணமில்லை- அந்தக்கரண வியாபாரங்களுமில்லையாய்,—குணமில்லை- சாத்துவித ராசத தாமதமென்கிற குணங்களுமில்லையாய்,— குறியில்லை - ஓரடையாளமுமில்லையாய்,—குலமில்லை- பிராமண க்ஷத்திரியன் முதலாயுள்ள குலதன்மமு மில்லையாய், இங்ஙனஞ் சொல்லப்பட்டவை யெல்லாமில்லையா யிருக்கையில் இவர்களிலக்கணம் எப்படியென்னில்?—பாலருட னுன்மத்தர் பசாசர்குண மருவி - யாதொன்றையும் விகற்பியாமல் நிருவிகற்பமாய்க் காண்கிற பாலனைப்போலவும் வைதாரையும் வாழ்த்தினாரையும் சுட்டியறியாத மதுபானஞ் செய்தவர்களைப்போலவும் ஆகாரம் நித்திரை பயமைதுனம் என்கிற நாலு காரியமு மில்லாத பசாசனைப்போலவும் இந்தக் குணங்களைப் பொருந்தி,—பாடலினோ டாடலிவை பயின்றிடினும்பயில்வர் - தங்களுக்குண்டான சுகத்தின்மிகுதியாலே பாடுவதாடுவதாய் திரிந்துடனுந் திரியாநிற்பர்கள்.

இதற்குப்பிரமாணம் திருவாசகம் புணர்ச்சிப்பத்து-அ-செ-,'நெக்குநெக் குள்ளுருகி யுருகிநின்று மிருந்துங் கிடந்துமெழுந்து, நக்குமழுதுந் தொழுதும்வாழ்த்தி நானாவிதத்தாற் கூத்துநவிற்றிச், செக்கர்போலுந்திருமேனித் திகழநோக்கிச் சிலிர்சிலிர்

த்துப், புக்குநிற்பதென்று கொல்லோவென் பொல்லாமணியைப்புணர்ந்தே” என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, உண்மையைப் பெற்ற ஜீவன்முக்தரா யுள்ளவர்களுக்கு விருப்பு வெறுப்பு முதல் ஜாதிதன்ம மீறாகச் சொல்லிவந்த முறைமைகளெல்லா மில்லையென்றும் அவர்கள் பாலருன்மத்தர் பசாசர் குணங்களைப் பொருந்தி நிற்பர்களென்று முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

ஞாலமதில் ஞானநிட்டை யுடையோருக்கு - இவ்வுலகத்தின்கண் ஞானநிட்டை யுடையார்க்கு,—நன்மையொடு தீமையில்லை - நன்மைதீமைகளாகிய இருவினைகளுமில்லை,—நாடுவதொன்றில்லை - வினைகளைச் செய்தாராயினு மொருபலத்தை நாடுவதுமில்லை,—சீலமில்லை - சமயாசாரங்களனுட்டிக்க வேண்டுவதுமில்லை,—தவமில்லை - தவங்கள் பண்ணவேண்டுவதுமில்லை,—விரதமோ டாச்சிரமச்செயலில்லை - விரதானுட்டானங்களுட னாச்சிரம தருமங்களையுமனுட்டிக்க வேண்டுவதுமில்லை,—தியானமில்லை - தியானபாவனைகளுமில்லை,—சித்தமலமில்லை - சித்தசலனமுமில்லை,—கோலமில்லை - அவ்வச் சமயத்துக்கேற்ற வேடத்தைத்தரிக்கவேண்டுவது மில்லை,—புலனில்லை - விடயங்களைவிடுதல் பற்றுதல் வேண்டுமென்ற நியமமு மில்லை,—கரணமில்லை - அந்தக்கரணங்களை யடக்கவேண்டுவதுமில்லை,—குணமில்லை - தாமதராசதகுணங்களை யடக்கிச் சத்துவகுணச் செய்கைகளைச் செய்யவேண்டுமென்ற நியமமுமில்லை,—குறியில்லை - ஒருகுறியின்க ணிற்கவேண்டுமென்பது மில்லை,—குலமுமில்லை - குலதன்மத்திலே நடக்கவேண்டுவது மில்லை,—பாலருட னுன்மத்தர் பிசாசர்குண

மருவி-பாலரைப்போலற ஒழுகலும் உன்மத்தரைப்போலொரு காற்செய்த தொருகாலொழிதலும் பேய் பிடியுண்டவர் போல செயலிழப்பி னின்று செய்தலு மாகிய குணங்களைப்பொருந்தி,—பாடலினோ டாடலிவை பயின்றிடினும் பயில்வர்- பரமானந்த மேலீட்டாற் பாடலாடல்க ளாகிய தொழில்களைச் செய்திடினுஞ் செய்வர்.

மறைஞானதேசிகர் உரை.

தேசமிடங் காலந்திக் காசனங்களின்றிச் செய்வ தொன்று போற்செய்யாச் செயலதனைச் செய்தங், கூசல்படு மனமின்றி யுலாவனிற்ற லுறக்கமுணர் வுண்டி பட்டி னியிருத்தல்கிடத்தன், மாசதனிற் றூய்மையினில் வறுமைவாழ்வில் வருத்தத்திற் றிருத்தத்தின் மைதுனத்திற்சினத்தி லாசையினில் வெறுப்பிலிவை யல்லாதுமெல்லா மடைந்தாலு ஞானிகடா மரனடியை யகலார். (௯௯)

(இ-ள்.) தேசமிடங் காலந்திக் காசனங்களின்றி காசி முதலிய புண்ணிய தேசத்திலிருக்க வேணுமென்னு நியமமும் கங்கை முதலிய நதிக்கரை யிடத்தி லிருக்கவேணு மென்னு நியமமும் உபராகமுதலிய புண்ணிய காலங்களை வேணுமெனக் கருதுதலு மின்ன திக்கைப் பார்த்திருந்து ஜபானுட்டானஞ் செய்யவேணுமென்பதும் பதுமாதன முதலியவோ ராதனங்களிலே யிருக்கவேணுமென்னு நியமமுமின்றி

செய்வதொன்றுபோற்செய்யாச்செயலதனைச் செய்து — யாதாமொன்றை யவர்கள் செய்யுமிடத்தவர்கள் கோட்பாடு வேற்றுமையாற் செயல்களெல்லாததையுஞ் சிவன் செயலெனவே கருதிப் பணியற நிற்றலாலும்,

“யாதேசெய்யினு நாமலோம்நீயெனி, லாதேசெய்யு மளவில்பெருமையன்” எனவறிக.

அங்கூசல் படு மனமின்றி — ஊசலான தெப்படிப் போக்குவரவு செய்யும், அதுபோன்ற சஞ்சல புத்தியுமின்றி

உலாவனிற்றலுறக்க முணர்வுண்டி பட்டினியிருத்தல் கிடத்தல் மாசகனிற் றூய்மையினில் வறுமை வாழ்வில் வருத்தத்திற் திருததத்தின் மைதுனத்திற் சினத்திலாசையினில் வெறுப்பிலிவையல்லாது மெல்லா மடைந்தாலு ஞானிகடா மரனடியையகலார், — ஞானிகளானவர்கள் நடத்தல் முதலிய வியாபாரங்களைப் பொருந்தின விடத்தும், இஃதன்றி யாதாமோ ரவத்தைகளைப் பொருந்தின விடத்தும், வாயுவான தெப்படி வினாவிலடித்தாலு மாகாசத்தைவிட்டு நீங்காத வாறுபோலச் சிவனது திருவடிநிழலைவிட் டொருக்காலு நீங்கார்கள். எ-று.

மாசு - அசுசியான விடத்தும்,
தூய்மை - சுத்தனாயிருந்த விடததும்.

இதற்குச் சர்வ ஞானோத்தரத்தும், நிசுவாசத்து மறிக.

(௧௩)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேலிதனையே விரித்துரைத்தல்.

தேசமிடங் காலந்திக் காசனங்களின்றி-இன்றி என்பதுப தந்தோறு மொட்டிப் பொருளுரைக்க. *ஆரியாவர்த்தாதி புண்ணியதேசத்திலே வசிக்கவேணுமென்றுங் கிகட கேரளாதி யீன தேசத்திலே வசிக்கலாகா தென்பதும் சிவாலய சமீபத்திலே தீர்த்த சமீபத்திலே இருக்கவேணுமென்பதும் ÷ இதரஸ்தலத்திலே யிருக்கலாகா தென்பதும் இன்ன காலத்திலே யின்னகிரியையைச் செய்யவேணு மின்னகாலத்திலே யின்னகிரியையைச் செய்யவேண்டா மென்பதும் இன்னதிக்குமுகமாக இருக்கவேணும் இன்னதிக்கிலே இன்னதிக்கு தலையாகப் படுக்கவேணும் வியாக்கிராசன முதலான வாசனங்களிலே இருக்கவேணும் பூமியிலே ஆசனமில்லாம லிருக்கவொண்ணா தென்பது மின்றி சுவஸ்திக பத்மாசனாதி யாசன பந்தங்களைப் பண்ணவேணும் வேண்டாமென்னும் நியமங்களில்லாமல்,—

செய்வதொன்றுபோற் செய்யாச்செயலதனைச் செய்துங் கூசல்படு மனமின்றி - பலத்தை யுத்தேசித் தொரு கன்மம் பண்ணுகிறவர்களைப்போல பலத்தைக் கொடாவகையாகவே ஸ்நாந தாநாதிக் கிரியைகளைப் பண்ணி யிவ்விடத்து இது இவ்வாறு மிவ்வாறல்ல இது பண்ணலா மிது பண்ணலாகாது என்னு மனதினுடைய சஞ்சலமின்றி,—

உலாவநிற்ற லிருத்தல் கிடத்த லூண்டி பட்டினி யுறக்கமுணர்வு - இங்ஙனங் கூறிய செயல்களைப் பிராகிருத சனங்களைப்போலே செய்தும்.—

மாசதனிற் றூய்மையினில் வறுமைவாழ்வில் வருத்தத்திற் றிருத்தத்தின் மைதுனத்திற் சினத்தி லாசையினில் வெறுப்பி

வினையல்லாது மெல்லா மடைந்தாலும் - இவ்வாறு சொன்னவைகள் முதலான விதி * நிஷேத கன்மங்க ளநேகஞ் செய்தார்களாகிலும்,—

ஞானிகடா மரனடியை யகலார் - ஞானசித்தர் சிவனை நீங்கித் தொழிற் செய்தவரல்லர். ஆதலாற் புண்ணிய பாப மவர்கட்கில்லை. இவ்வாறு விசாரக் கிரியைகளைப் பண்ணுகையிலே சிவனை நீங்காத தெப்படியென்னில்? வாயுவானது சைத்திய † சௌரப்பிய மாந்தியத்துடனே தென்றலாகவு மிதற்கு விபரீதமான சூராவளியாகவும் இவ்விரண்டு கிரியை முதலாக வேகத்திலே சரித்தும் ஆகாசத்தை நீங்காததுபோல,

இதற்குச் சம்மதி,—

யதா² வாயுஸ் ஸ்வபா⁴வேந விச்²வாகாஶம் ந முஞ்சதி । ஜ்ஞேய நிஶ்சித்த தத்த்வஸ் விஷயேஷ்வா நஸஜ்ஜதி ॥

இதனால் பிராரத்த கன்மம் நானாபேத மாகையால், கோபவானாகியும் சாந்திமானாகியும் விரக்திமானாகியும் ராகவானாகியும் போகவானாகியு மிருப்பார்களாகையால் சீவன் முத்தர்களுடைய லக்ஷணமிவ்வாறென் றறியப்போகாதென்று கூறியது.

இதற்க்குச்சம்மதி.

ஶாந்தஸ்த்வவிரக்தாஶ்ச ராகிணோ போ⁴கி³நஸ்ததா² । ஜ்ஞாநயுக்தா நாநாகா³ஸ் கர்மஶேஷநியோஜிதே ॥

* ஆரியாவர்த்தம் - ஒருபுண்ணிய தேசம், ÷ இதரம் - வேறு, + வியாக்கிராசனம் - புலித்தோல், * நிஷேதம் - விலக்கு, † சௌரப்பியம் - வாசனை.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

தேச மிடங் காலந் திக் காசனங்கள் முதலியவை தியானத் திச்சிக்கப்படுவன, சமாதியில் வேண்டுவதன்றென்று பொருள்.

மற்றைய வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

விகாரமுறுதற்கேதுவாகத் தம்முண் மாறுபட்ட தொழில் பலவற்றையுஞ் செய்தாராயினும், அவைபற்றி யவர் சிறிதும் விகாரமுறுவாரல்லர் ; உண்மையானோக்குவார்க்கு அவர் செய்யுஞ் செயல் வேறாகலானென்பதாம்.

செய்யாச் செயலதனைச் செய்தற்கு வேறொரு நியதியும் வேண்டாமென்பார், தேசமிடங்காலந் திக்காசனங்களின்றியென்றார்.

இன்றிச் செய்வதெனவும் அடைந்தாலூசல்படு மணியின்றி யெனவு மியையும்.

அடைந்தாலு மென்னு மும்மை சிறப்பின்கண் வந்தது. "உவரி தோனறியாழ் தொழிலவாயினு மயிலை தீஞ்சுவையுட்டின்" என்றாற் போல.

இவையிரண்டு செய்யுளானும் கிட்டைமேவினோர்கள தாசாரங் கூறப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

---o---

இப்படி முன்சொன்ன வுண்மையைப்பெற்ற சிவஞானிக ள் எவ்விடத்து மந்தச் சிவஞானமேயாய் நிற்பார்களென்று ம ருளிச்செய்கிறார்.

தேசமிடங் காலந்திக் காசனங்களின்றி - நல்ல விராச்சி யம் பொல்லாவிராச்சியம் என்கிறதேசங்கள் காசி திருவம்பல முதலாயுள்ள தானங்கள் விஷ்வயன சங்கிரமங்கள் முதலாயு ள்ள காலங்கள் கிழக்கு தெற்கு முதலாயுள்ள திக்குக்கள் சித் ராசனம் பத்மாசன முதலாயுள்ள வாதனங்கள் இவையுமில்லை யாய்,—செய்வதொன்று போற்செய்யாச் செயலதனைச் செய் து - சரிதை கிரியாயோகங்களை வழுவறச்செய்து சாலோக்கி யாதி பதங்களைப் பெறுகிற முறைமைபோலச் செய்யாத செய லாகிய மவுனயோகத்தை யாசாரியனாலே பெற்றுச் சிவானு போகத்தை அனுபவித்து; அப்படி அனுபவிக்குமிடத்து,—அங் கூசல்படு மனமின்றி - அவ்விடத்து ஊசலின் றொழிலை யொத் துப் போக்குவருத்துச் செய்யத்தக்க மனமுமில்லையாய்,— உ லாவல் நிற்றல் - நடந்தாலும் அசைவற நின்றாலும்,— உறக்க முணர்வு - உறங்கினாலும் விழித்தாலும்,— உண்டி பட்டினி - புசித்தாலும் பசித்தாலும்,— இருத்தல் கிடத்தல் - இருந்தாலு ங் கிடந்தாலும்,—மாசதனிற் றூய்மையினில் - அசுத்தத்தில் சு த்தத்தில்,—வறுமை வாழ்வில் - மிடியில் செல்வத்தில்,— வரு த்தத்தில் திருத்தத்தில் - துக்கத்தில் சுகத்தில்,— மைத்துனத்தி ல் சினத்தில் - சங்கு சாரமாகிய பிரியத்தில் கோபத்தில்,— ஆசையினில் வெறுப்பில்-விருப்பு வெறுப்புக்களில்,—இவையல் லாதவெல்லா மடைந்தாலும் - இங்ஙன மொன்பது வகையில் பதினெட்டாகச் சொல்லப்பட்ட விவையுமன்றி வேறுஞ் சிலவ

ந்து பொருந்தித்தாகிலும்,—ஞானிகடா மரனடியை யகலார்-உண்மைஞானிகளா யுள்ளவர்கள் பரமேஸ்வரனுடைய ஸ்ரீபாதத்தை விட்டு நீங்காமல் அனவரதமு மதுவே நிலையாக நிற்பார்கள்.

இதனாற் சொல்லியது,சீவன முத்தராயுள்ளவர்கள் பிராரத்தம் புசித்துத் தலையுமளவு மௌனோப தேசத்தோடுங் கூடி இருப்பர்களென்றும் அவ்விடத்து ஆகாரம் நித்திரை பய மைதுனமுதலாயுள்ளவை வந்து தாக்கினாலும் பரமேஸ்வர னுடைய சீர்பாதமே பற்றுக்கோடாக நின்று விடுவர்களென்னு முறைமையு மறிவித்தது.

'சூரியகாந்த' 'மிச்சதொரு' 'அறியாமை' 'புண்ணியம்' 'ஞாலமதின்' 'தேசமிடம்' ஆகவாறும் உண்மை நிட்டை.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

ஞானிகடாம் - ஞானிகளாவார்,—தேசமிடங் காலந்திக்காசனங்களின்றிச செய்வதொன்றுபோல்- ஓர்தேய மோர் காலமொருதிக்கு ஒரு ஆசனமுதலியவையின்றிச் செய்வதாகிய ஒருதொழில்போல,—செய்யாச் செயலதனைச் செய்து- செய்தற்கரியதொழிலதனை யியற்றியும்,— உலாவனிற்றல் - உலாவுதலினும் நிற்றலினும்,—உறக்கமுணர்வு - உறக்கத்தினு முணர்ச்சியினும்,— உண்டிபட்டினி - உண்ணுதலினு முண்ணாதொழிதலினும்,—இருத்தல் கிடத்தல்- இருத்தலினும் கிடத்தலினும்,—மாசதனிற்றூய்மையினில் - மாசுடைமையினுந் தூய்மையுடைமையினும்,—வறுமைவாழ்வின் - வறுமையினும் வாழ்வினும்,—வருத்தகத்திற்றிருத்ததில் - துன்பத்தினு மின்பத்தினும்,—மைதுனத்திற் சினத்தில்-புணர்ச்சியினுங் கோபத்தினும்,—ஆசையினின்

வெறுப்பின் - விருப்பினும் வெறுப்பினும்,—இவையல்லாதமெல்லாமடைந்தாலும்-விகாரமுறுதற்கேதுவாகத் தம்முன்மாறுபட்ட தொழில்பலவற்றையுஞ் செய்தாராயினும்,—அங்கூசல்பமுனமின்றி யரனடியையகலார் - அவ்விடத்து அவைபற்றியவர் சிறிதும் விகாரமின்றி முதல்வன்றிருவடியை விட்டுநீங்கார் என்பது உண்மையாளுேக்குவார்க்கு அவர்செய்யுஞ்செயல் வேறுகலான்.

இவை இரண்டு செய்யுளானு நிட்டை மேவினோரது ஆசாரங் கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

இஃதில்லாதோர்க்கு வேறுமோருபாய நிட்டை யுணர்த்துகின்றார்.

இந்நிலைதா னில்லையே லெல்லாமீச னிடத்தினினு மீசனெல்லா விடத்தினுமியன்ற, வந்நிலையை யறிந்தந்தக் கரணங்களடக்கி யறிவொரு குறிகுருவினருளினலறிந்து, மன்னுசிவன் றனையடைந்து நின்றவன்றனலே மருவுபசு கரணங்கள் சிவகரணமாகத், துன்னியசாக் கிரமதனிற் றுரியாதீதந் தோன்றமுயல் சிவானுபவஞ் சுவானுபூதிகமாம். (௬௪)

(இ-ள்.) இந்நிலைதா னில்லையேல் இந்தப்பாவனை கைவாராதாகில்

எல்லா மீசனிடத்தினு மீச லாம் சராசராத்மக மாகிய வான்மாக்க ளெல்லாம் சிவனிடத் தைக்கியமாகிநிற்கு முறை

னெல்லா விடத் தினினு மியன்றவ ந்நிலையையறிந்து	மையினையு மந்தச்சிவன்றனு மாயாதி தனுவினு னுயிர்க்குயிராய் வியாபித்து நிற்கு முறைமையினையு மறிந்து, அதென்போல வெனில்? சிவசாதாக்கிய முதலியநாலு மெய்படி

யொன்றாகக் கன்ம சாதாக்கியத்திலே வியாபித்து நிற்கும், அது போல மாயாதனு முதலியவற்றினு னனுப்பிரவிட்டமாக வியாபித்து நிற்பனென வறிக.

“கன்ம சாதாக்கியத்திற் கலந்தாற்போலநாதி, நின்மலன வனேமாயா தனுவினு நிறைந்துநிற்கு, மன்னிய மநாதிதன்னுட் கலாதியு ளுயிருள்வைகுஞ், சின்மயன் சீவனபாலு முன்னிலச் சிவன்பாற் சீவன்” “உண்டெனமாதிபதத் தூர்வதெனும்போ தவற்று ளுண்டுயி ருண்டீச னுயிருட்டுடிக்குங் கண்டவிலும் மற்றைப தானங்களினு முண்டு மனமாதியவற் றுற்றவுயிருட் சிவன்றானுண்டு” என்று ரெமதகுரவர்.

அந்தக் கரணங்களடக்கி	அந்தக் கரணங்களைப் புலன்வழிச் செல்லாமலடக்கி
அறிவதொருகுறி குருவி னருளினாலறிந்து	ஞானசாரியன் கடாக்ஷத்தாலே யவ்விடத் தறியத் தக்கதோ ருபதேசத்தை முறைபிறழாமற் பெற்று
மன்னுசிவன்றனை யடைந்து நின்று	அந்தக்குறிப்படியே நிலைபெற்ற சிவனைக் கண்ணிமைக்கு மளவாதல் அம்பெய்தால தபோய் விழுமளவாதல் பசுக்கறக்கு மளவாதல் அந்தப் பாவத்துடன் கூடியிருந்து
அவன்றனாலே	அந்தச் சிவனது கடாட்சத்தா லநாதியே பலத்துடன் கூடியிருக்கிற வான்மாவுக்கு,
மருவு பசுகரணங்கள் சிவகர	பசுகரணமாய்ச் சீவிக்கிற விச்சாஞானக் கிரியைகளாமே யனுக்கிரகத்தைப்பொருந்தி

ணமாக — யிவனுக்குப் பரமமான சிவகரணமாகச் சீவி யாநிற்கும்.

அன்னிய சாக்கிரமதனிற் றுரியாதீதந் தோன்றுமியல் — கருவிகணிறைந்த சாக்கிரா வத்தையின் கணின்று நாடோறுந் துரியாதீதனுமா யுவவமையு மில்லாத சிவத்தை யடைந் திருப்பாயாக

சிவானு பவஞ் சுவானுபூதிகமாம். — ஆகையா லிப்படி நிட்டையைப் பொருந்தி வரவே யதுமுற்றுதலாலே சிவனிடத் துண்டான வானந்த மானதுபோல உன்னிடத்திலே தானே யனுபூதியான துண்டாகா நிற்கும் எ-று.

இது பதப்பொருள்.

சுவ எ-து உனக்கு.

அனு எ-து பினபுண்டாம்.

பூதி எ-து ஆனந்தமாயினும் ஐசுவரியம் எனவறிக.

"பிரிவிலாவடியார்க் கென்றும் வாராத செல்வம்வருவிப்பானை" எ-ம். "முத்திநெறியறியாத மூர்க்கருடன் முயல்வேனை அத்தனெனக்கருளியவா றார்பெறுவா ரச்சோவே" எ-ம். "கோமாகரி யுரித்தவர்தம்மைத் தம்மைபோலத்தன்னடியார்க்கின்பமளிப்பவர் பொருள்கள விடமுண்டநிலத்தார் மிடற்றண்ணலார் சிரபுரந்தொழுவினை நில்லாவே" என்னுந் திருவாக்கினுமறிக.

இதற்குச் சர்வஞானோத்தரத்தும் மதங்கம் சூதசங்கிதையிலுமறிக.

(௩௪)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

சொல்லிப் போந்தவா றுண்மையாகிய நிட்டை கூடாதிருக்கில் நிஷ்டை கூடு முபாயம் மேல் கூறுகின்றது.

இந்நிலைதா னில்லையேல் - சிவனில் வேறற்றுச் சிவனே யாய்ச் செய்யுஞ் செயலெல்லாஞ் சிவன்செயலாய் நிற்குந் தன் மைகூடித் தில்லையாகில்,—

எல்லாமீசனிடத்தினு மீசனெல்லாவிடத்தினுநின்ற வ ன்னிலையை யறிந்து-சித் தசித்தாயுள்ள பிரபஞ்சமெல்லாஞ் சிவ னிடத்திலே யவகாசமாய் நின்றமையுஞ் சிவனெல்லா வஸ்துக் களினு மந்தரியாமியாக நின்றமையு மறிந்து,—

அந்தக்கரணங்களடக்கி யறிவதொருகுறிகுருவி னருளினு லறிந்து - மனோபுத்தி யகங்கார சித்தங்களின் வியாபாரமன் றியிலே சிவனை யறிவதற்கொரு லக்ஷியத்தை ஆசாரியனு லரு ள்பெற்று,—

மனனுசிவன் றனையடைந்து நின்றவன்றனுலே மருவுபுறக் கரணங்கள் சிவகரணமாக - தன்னிடத் தந்தரியாமியாக நின்ற சிவனைச் சரணமாகவடைந்து பிரிவறநின்ற வந்தச் சிவப்பிரகா சத்தினுலே யளத்திற்பட்ட புற்போல ஆன்மாவுக்கு போகசா தனமாகப் பொருந்தின உட்கரணங்களும் புறக்கரணங்களுஞ் சிவ கரணங்களாக,—

துன்னிய சாக்கிரமதனிற் றுரியாதீதந் தோன்றமுயல்-பிரு திவியாதி நாதாந்த முப்பத்தாறுந் தாத்துவிகங்களும் நெரு ங்கினின் றுள்ள ஜாக்கிராவஸ்தையிலே நின்மல துரியாதீதம் பிறக்கும்படி முயற்சிபண்ணும். இங்ஙனஞ் சொன்ன நின்மல து ரியாதீதம் பிறக்குமாகில்,—

சிவாநுபவஞ் சுவா * னுபூதிகமாம் - சிவாநந்தானுபவம் அநந்நிய வனுபவமாமென் றிதன்பொருள்.

இந்த நின்மலாவஸ்தை முதலே 'ஐந்துசாக்கிரமதனில், எ

ன்ற விருத்தத்தில் விரித்தமையா லிவ்விடத்து விரியக் கூறிய தில்லை.

* அனுபூதி - அநுபவம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—— o ——

நிராகாரத் தியானசமாதி சாமர்த்திய மில்லாதான் குரு கற்பித்த சதாசிவாதி சாகாரத் தியான சமாதிபண்ணச் சாலம்ப சிவ சமாதி சாக்ஷாத்கார பூர்த்திச் சுகானுபூதி முன்னாக, நிசழும் நிராலம்ப சிவ சமாதியானது பரசம்வித் சிற்சத்தியின் முறைமையின் முகிழ்க்கும் நிராலம்ப சிவ சமாதிச் சிற்றுப்பூர்த்திச் சுசமும் நிராலம்ப சிவ சாக்ஷாத்கார முற்றுப் பூர்த்திச் சுசமுஞ் சுவ சம்வித்சிற்சத்தியின முகிழ்க்குஞ் சுவானுபூதியினாலனுபவிக்கப் படுமென் றுரைகின்றார்.

இந்நிலைதா னில்லையேல் - நிராலம்ப சிவயோக நிலை நிற்கச் சத்தி போதாதிருந்தால்,—எல்லா மீசனிடத்தினிது மீசனெல்லா விடத் தினிதுநின்ற வந்நிலையைக் குருவினருளாலறிந்து - ஒருபிரகாரம் அகண்டித சகலவியாபக சிவரூபங் குருச் சொல்ல இது தத்துவாதீத சிற்சத்தி விஷயம் புத்தி கோசரமன்றென்பது அறிந்து,—அறிவதொரு குறி குருவினருளினாலறிந்து - புத்தியினாற்றியானிக்கப்படு மொரு சிவ விக்கிரக மக்குரு கிருபையினாற் கற்பிக்கவறிந்து,—அந்தக்கரணங்களடக்கி - விஷயத்தில் விழாதமேலெழுப்பி யச்சகளசிவ முகமாக்கி.— மன்னுசிவன்றனையடைந்துநின்றுமருவு பசுகரணங்கள்-அந்தவந்தக்கரணங்கள்,— அவன் றனாலே - முற்சொல்லிய முறைமையிற் சுத்தவித்தை முதலியவற்றோடு கூடி,—சிவகரணமாகி-தியானித்துச் சமாதித்

துச்சாக்ஷாத்கரித் திருப்பச் சாக்கிர சாக்கிராதிக் கிரமத்தில்,—துன்னியசாக்கிரமதனிற் றுரியாதிதந் தோன்ற முயல்சிவாநுபவம்-நிஷ்கள சிவ சாக்ஷாத்கார முற்றுப்பூர்த்தி ஸ்புரிக்க பண்ணுந் துரிய சமாதிச் சிற்றுப்பூர்த்தி,—சுவாநுபூதிகமாம்-ஸ்வாநுபவாநு பாவியமாம்.

சிவஞானயோகியருரை வருமாறு.

இங்ஙனங் கூறிய முறையானே, அகம்புறமென்னுமலெங்கணு மேகநிலையாய்க் கண்டு இறைநிறைவி லழுந்துவதாகிய நிட்டை மேவுத லரிதாய்ப் பண்டைப் பயிற்சிவயத்தாற் சுட்டுணர்வுபற்றிப் பிரபஞ்சங் காட்சிப்பட வருமாயின் அதனைக் காணும் பொழுதே இறைவ னகத்துள்ளாயும் புறமாயு நிற்கு நிலையு முடன்கண்டு, அவ்வா றண்டத்தினிற்குநிலை அறிதலரிதாயிற் பிண்டத்தினிற்கு நிலையு மொன்றின்னைத் தறிந்து அதுவாயிலாகப் புகுந்தாதல் அவ்வியல்பைத் தலைப்பட்டறிந்து ஆண்டுக் காணுங் கரணங்களெல்லாம் பேரின்பமாகப் பேணி, இவ்வாறு கருவிகளோடுந் தொழிற் பட்டு நிற்பதாகிய சகலசாக்கிரத்திற்றானே கருவிபொன்றனோடுங் கூடாது தொழிலிறந்து நிற்கும் நின்மல துரியாதீதநிலை கை கூடும்படி முயல்வார், சிவானுபவந் தமதாகக்கொண்டு அனுபவிக்கப் பெறுவா ரென்பதாம்.

அந்நிலையை யறிந்தென்றது அண்டத்தின்வைத் தறிதலெனவும், அறிவதொருகுறி குறிவினாலறிந்தென்றது அவ்வறிவிற் கேதுவாய்ப் பிண்டத்தின்வைத் தறிதலெனவு முணர்க.

சிவன் ஆகுபெயர்.

அகரச்சுட்டு வருவித்துரைக்க.

முயலென்பது முன்னிலை யேவல்.

சிவானுபவஞ் சுவானுபூதிகமென்புழித் தொக்குநின்ற வாறுவது முறையே செயப்படு பொருண்மைக் கண்ணும் வினைமுதற் பொருண்மைக் கண்ணும் வந்த காரகம். அமிழ்தவுண்டி கடவுளருண்டி யென்றாற் போல.

இதனானே அந்நிட்டை மேவப்பெறு தார்க்கு அது பெறு முபாயங் கூறப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

இப்படி முன்சொன்ன வுண்மை நிட்டை கூடாதென்ற மாணாக்கனை நோக்கி மேலொரு உபாயநிட்டை யருளிச்செய்கின்றார்.

இன்னிலைதானில்லையேல் - இந்த மௌன உபதேசத்தைப் பெற்று அந்தநிலையே நிலைபாக நிற்கக்கூடாதாகில்,—எல்லாமீசனிடத்தினினு மீசனெல்லாவிடத்தினினு நின்றவனிலையையறிந்து - ஜடசித்துக்களென்று சொல்லப்பட்ட சர்வமும் தம்பிரானார் தாரகமாக நின்று காரியப்படுகிற முறைமையும் அந்தச் சர்வத்திலும் தம்பிரானார் நிற்கிற அந்த நிலைமையையும் சிவஞானத்தாலே யறிந்து,—அந்தக்கரணங்களடக்கி - சர்வமுஞ் சிவனிடத்திலே நிற்கிற முறைமையும் சிவனவ்விடங்களிலே நிற்கிற நிலைமையும் அந்தஞானங் காட்டாகத் தான்காண்கிற காக்ஷியையு மிழந்து தற்போதஞ் ஜீவியாம லந்த ஞானமாய் நின்று,—அறிவதொருகுறி குருவினருளினாலறிந்து - ஞானமாய்நின்று அவவிடத்திலே யறியத்தக்கதோ ருபதேசத்தை ஆசாரியனுடைய வனுக்கிரகத்தினாலே பெற்று அப்படிப் பெற்று லநாதி

யே தன்னிடத்திலே தோன்ருமல் நிலைபெற்று நின்ற சிவம் பிரகாசிக்கும்.—மன்னுசிவன் றனையடைந்துநின்று - அப்படி நிலைபெற்ற வந்தச் சிவனைக் கூட்டிநின்று, —அவன்றனுலே - அநாதியே யான்மாவைப்பொருந்தி நிற்கிற அந்தச் சிவனுடைய பிரகாசத்தின் மேலீட்டாலே,—மருவுபசுகரணங்கள் சிவகரணமாகத் துன்னிபசாக்கிரமதனிற் றுரியாதீதந் தோன்றமுயல்-அநாதியே யான்மாவைப்பொருந்தி நிற்கிற தத்துவங்கள் தானே சிவகரணமாம் முப்பத்தாருேடுங் கூடிநிற்கிற ஜாக்கிராவஸ்தைக்கு ஸ்தானமாகி யவ்விடத்திலே சாக்கிரத்திற் சாக்கிரம் சாக்கிரத்திற் சொற்பனம் சாக்கிரத்திற் சுழுத்தி சாக்கிரத்திற் றுரியம் என்கிற நாலுங் கழன்று. சாக்கிராதீதம்புரிந்து நில். அப்படி நிற்கவே பசுகரணந்தானே சிவமாம்,—சிவானுபவம் சுவானுபூதியமாம் - அப்படிச் சிவமாய்நிற்கிற வதுகானே யுனக் கனுபூதியமாம்.

அன்னிலையை யறிந் தந்தக் கரணங்களடக்கி யறிவதொரு குறிகுருவி னருளினுலறிந்து ஆன்ம தரிசனம்.

மருவு பசு கரணங்கள் சிவகரணமாகத் துன்னியசாக்கிரமதனிற் றுரியாதீதந்தோன்றமுயல் ஆன்மசுத்தி.

சிவானுபவஞ் சுவானுபூதியமாம் எனறது ஆன்மலாபம் என்னுமதுங் கண்டுகொள்க.

இதற்குப்பிரமாணம் திருக்களிற்றுப்படியார், சஉ-செ "பாலை நெய்தல்பாடியதும் பாம்பொழிபப்பாடியதும், காலனையன் றேவிக் கராங்கொண்ட—பாலன், மரணந்தவிர்ப்பதுவு மற்றவர்க்கு நந்தங், கரணம்போ லல்லாமை காண்" என்னுமதுங் கண்டுகொள்க.

இதனுற் சொல்லியது, முன்சொன்ன வுண்மை நிட்டைகூடாமல் வாதனை மேலீட்டால் ஜடசித்துக்க ளிரண்டும் பரமே

ஸ்வரனி'-மாகநிற்கிற முறைமையையும் அவ்விடங்களிலே பரமேஸ்வரநிற்கிற நிலைமையையு மந்த ஞானத்தாலே யறிந்து அப்படியறிந்த தற்போதமுங் கெட்டுநிற்க அந்த நிலையாமெனறும் அதொழிந்தும் ஆசாரியனாலே தனக்குப் பிராணனாய்நிற்கிற சிவனை யறிந்து அவனாலே பசுகரணமுந் தானே சிவகரணமுமாய்ச் சாக்கிராதீதமும் புரியுமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

இந்நிலைதா னில்லையேல் - இங்ஙனங் கூறியமுறையானே யகம்புற மென்னுமல் எங்கணு மேக நிலையாய்க்கண டிறைநிறை விலமுந்துவதாய் நிட்டை மேவுதலரிதாய்ப் பண்டைப் பயிற்சி வயத்தாற் சுட்டுணர்வுபற்றிப் பிரவஞ்சங்சாக்ஷிப்பட வருமாயின்,—எல்லா மீசனிடத்தினு மீசனெல்லா விடத்தினு நின்ற வந்நிலையையறிந்து - அதனைக்காணும் பொழுதே யிறைவனதற்குள்ளாயும் புறமாயு நிற்குநிலையுமுடன் கண்டு,—அந்தக் கரணங்களடக்கி- அவ்வாறண்டத்திற்கு நிலையறிதலரிதாயின் மனாதிகளடக்கி,— குருவினருளால் நின்றறிவதொரு குறியுமறிந்து- குருவருளாற் பிண்டத்திற்கு நிலையு மொன்றின்வைத் தறிந்து,—மன்னுசிவன்றனை யடைந்து-அதுவாயிலாகப் புகுந்தாதலவ்வியல்பைத தலைப்பட்டறிந்து,—நின்றஅவன்றனாலே மருவுபசுகரணந்தள் சிவகரணமாக - ஆண்டுக்காணும் கரணங்களெல்லாம் பேரின்பமாகப்பேணி,—துன்னிய சாக்கிரமதனில்-இவ்வாறு கருவிகளோடுந் தொழிற்பட்டு நிற்பதாகிய சகல சாக்கிரத்திற்றானே,—துரியாதீதந் தோன்ற முயல் சிவானுபவம் - கருவியொன்றனோடுங் கூடாது தொழிலிறந்து நிற்கு நின்மல துரியா

தீதநிலை கைகூடும்படி முபல்வார் சிவாநுபவத்தை,—சுவாநுபூதிகமாம் - தமதாகக்கொண் டநுபவிக்கப் பெறுவர்.

இதனுனே யங்கிட்டை மேவப் பெருதார்க் கதுபெறு முப்ாயங் கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை

மே லித்தன்மை யுடையோர் சிறப்பு மஃதில்லார்
சிறப்பின்மையு முணர்த்துகின்ருர்.

சாக்கிரத்தே யதீதத்தைப் புரிந்தவர்க ளுலகிற் சர்வசங்க நிவிர்த்திவந்த தபோதனர்களிவர்கள், பாக்கியத்தைப் பகர்வதுவென் னிம்மையிலேயுயிரின் பற்றறுத்துப் பரத்தையடை பராவுசிவரன்ருே, வாக்குமுடி கவித்தரசாண் டவர்க ளரிவயைரோ டனுபவித்திங்கிருந்திடினு மகப்பற்றற்றிருப்பர், நோக்கியிது புரியாதோர் புறப்பற்றற்ருலு நுழைவர்பிறப் பினில்வினைக ளுங்கிடாவே. (கூறு)

(இ-ள்) சாக்கிரத்தே யதீதத்தைப் புரிந்தவர்க ளுலகிற் சர்வசங்கநிவிர்த்திவந்த தபோதனர்க ளிவர்கள் பாக்கியத்தைப் பகர்வதுவென்

இந்தப் பூமியிலே சஞ்சரித்திருக்கவும் சகலாவத்தையிற் ருனே சாக்கிராதீதத்தை முன்கூறியபடி பொருந்தினவர்கள் சிறப்பை விசாரிக்கிலவர்களே சர்வசங்க பரித்தியாகம் பண்ணினவர்க ளாதலா லந்த ஞாதாக்கள் பண்ணின பாக்கியத்தை நாமென்ன சொல்லப் போகிருேம். அஃதெக்கா ரணத்தாலெனில்?

இம்மை யிலே யுயிரின் பற்றறுத்துப் பரத்தை யடைபராவுசிவ ரன்றே

சமுத்திரத்திலே யநவரதமும் மச்சமானது கூடியிருந்தாலும் அந்த உப்பினது தன்மையை யடையாத வாறுபோல இந்த ஜீவன் முத்தரான ஞாதாக்களு மிந்தச் சரீரத்துடனேகூடி யிருந்தார்களே யாயினு மிந்தச் சரீரத்துடன் பற்றுமற்றுப் புறப்பற்றாகிய வான்மாக்களிடத் துண்டாகிய பற்றையும் விட்டுப் பரமமான சிவனுடனே கூடியிருக்கையா லிந்தப்பூமியிலே யிரண்டாஞ் சிவனெனக் கருதுமவர்களே யாதலால்,

ஆங்குமுடி கவித்தரசாண் டவர்களரிவையரோட னுபவித்திங் கிருந்திடினு மகப்பற்றற்றிருப்பர்

விதிவழியுண்டாக்கு முடியை யிராஜாவாக்குதற் கபிடேகம்பண்ணி யதனைச் சூட்டிப் பட்டத்துக் குரிய மடவாருடன் கூடியிருந்தார்களே யாயினு மதனால் வசியரல்லர். அஃதென்போ லெனின்? சுந்தரப்பெருமா ளாயனார் மடவார்கலவியுடன் கலந்திருந்து மெய்ப்படிப் பற்றுதலின்றி யிருந்தா ரதுபோல இவர்களு மப்படியே யிருவகைப் பற்றையு மற்றிருப்பர்கள்.

நோக்கியிது புரியாதோர் புறப்பற்றற் றாலு நுழைவர் பிறப்பினின் வினை களுங் கெடாவே.

நிட்டையைப் பெருமையென விசாரித் ததன்வழி நில்லார்களேயாயி னவர்களொருவராலும் விடுத்தற்கரிய விருவிதப் பற்றையும் விட்டார்களே யாயினு மப்பலத்தை யுறார், ஜனன மரணப்பட்டுத் திரிவார்கள்; அஃதுண்டாகையா லதற்குக் காரணமாகிய வினைகளுங் கெடாது. எ-று.

ஓகாரம் - எதிர்மறை.

நுங்குதல் - கெடுதல்.

'பற்றுகபற்றற்றான் பற்றினை யப்பற்றைப்- பற்றுக பற்று விடற்கு' எனவறிக.

அகப்பற்றே சிறப்புடைத்தென வறிக.

இதற்குச் சர்வஞானோத்தரம், சிவதருமோத்தரமுமெனை வறிக. (ருரு)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் ஜீவன்முத்தர்களுடைய வப்பியந்தா வேறுபாடும் புறத்துறவினாலே முத்தியில்லை யென்பதுங் கூறுகின்றது.

சாக்கிரத்தே யதீதத்தைப் புரிந்தவர்கள் - சகலமான சாக்கிறத்திற் கருவிகளெல்லாம் பிறியாம லிருக்கையிலே நின்மல துரியாதீதத்தைப் பொருந்தின பேர்கள்,—

உலகிற் சர்வசங்கநிவிர்த்திவந்த தபோனர்க ளவர்கள் பாக்கியத்தைப் பகர்வதுவெ லிம்மையிலேயுயிரின் பற்றறுத்துப் பரத்தையடை பராவுசிவரன்றே - பூமியின்க ணெல்லாப்பற்றையு மொழிந்து தவமே பொருளாக வுள்ளவர்க ளவர்களுடைய செல்வத்தை யிவ்வளவென்று நம்மாற் சொல்லவரிது. இம்மையிலே தானே யான்மாவினுடைய பந்தமாகிய வாணவ மாயை காமியங்களை யறுத்துப் பரமசிவனை வேறறக் கலந்து பூமியின்க ணுள்ள வான்மாக்களை யீடேற்றுவது பொருட்டாகச் சஞ்சரிக்கிற ஜீவர்களல்லவோ, ஆமே!—

ஓகாரம் - எதிர்மறை.

அவர்களாக்குமுடி சவித்தரசாண் டரிவையரோ டனுபவித்திங் கிருந்திடினு மகப்பற்றற்றிருப்பர் - அந்த ஜீவன்முத்தரானவர்கள் நவரத்தினங்களினாலே பண்ணப்பட்ட முடியைத் தரித் திராச்சியத்தையாண் டநேக மடந்தையர்களைப் புணர்ந் திந்தப் பூமியின்கண்ணே பஞ்சபூதான்மகமான தேகத்திலே

யிருந்தும் சிவோகம் பாவனையை விட்டுச் சிவோகமென்றே யிருப்பர். சிவனு மிந்த ஆன்மாவே தாமா யிந்த பஞ்ச பூதான்மக மாயிருக்கிற தேகத்தை யதிட்டித்திருப்பர் —

ததாஹ — ததாவிதஸ்ய தேஹி வதி விஜாநதஃ । வஞ்சபூதாத்மகே தேஹே ஶிவஸ்ஸ தைவ திஷ்டதி ॥

நோக்கியிது புரியாதோர் புறப்பற்றறுலும் வினைசனுங் கிடாவே நுழைவர்பிறப்பினில் - சிவஞானத்தினாலே சிவனை யநந்யமாகக் கண்டு ஜீவபாவதகை விட்டு சிவபாவனையைப் பண்ணுதவர் தனக்குப் பரமமான ÷ போக்கிய வஸ்துக்களை யொழிந்தார்களாகிலும் புண்ணிய பாபங்கள் கெடாது, ஆதலால் ஜகநத்தை யெடுப்பதொன் றிதன்பொருள்.

ஏகாரம் ஈற்றேகாரம்.

÷ போக்கியம் - புசிக்கத்தக்கது.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

சீவன் முத்தி சாக்ஷாத்கார சித்திமான் முத்தித் தடை தடுப்பனென்று சாற்றுகின்றார்.

வெளிப்பொருள.

சிவஞானயோகியருரை வருமாறு.

இங்ஙனம் பசுகரணஞ் சிவகரணமாகத் துன்னிய சாக்கிரதீதினின்று கொண்டுதானே கரணங் கடந்த வதீதத்தைப் புரி

ந்தார், கருவிகளினீங்கி நிட்டைமேவினோரோ டொப்பச்சிறந்தாரே யாவார். அவ்வுண்மை யறிந்தார் உண்டுடுத்துப் பூசிமுடித்துச் செய்யுந் தொழிலொப்புமையேபற்றி யவரை உலகத்தாரோடுவைத் தெண்ணற்க வென்பதாம்.

பராவுதல் சஞ்சரித்தல்.

இதனானே யங்ஙன முயன்றாரது பெருமை கூறப்பட்டது.

ஞானவதிகாரப் பட்டமைபற்றி யீண்டுக் கேட்டலுடன் வைத்து ஒருவாற்றாற் றொகுத்தோதிய இன்னோரன்னவை யெல்லாம் வருகின்ற சூத்திரங்களான் விரித்துக் கூறப்படும்.

புறச்சமய நெறியென்பதுமுத லித்துணையும் இரண்டாங் கூற்றைத் தெரித்துணர்த்தியவாறு.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

இப்படிச் சாக்கிராதீதம் புரிந்துநிற்கும் ஞானவான்கள் பெருமையை மேலருளிச்செய்கிறார்.

சாக்கிரத்தே யதீதத்தைப் புரிந்தவர்கள் - அருளுடனே கூடி இரண்டற நிலைபெற்று நேயத்துடனே யழுந்துகிற சாக்கிராதீதங் கைவந்தவர்கள்,—உலகிற் சருவசங்க நிவிர்த்திவந்த தபோதனர்கள் - பூமியிலே சருவசங்கப் பரித்தியாகம் பண்ணின தபோதனர்கள்,—அவர்கள் பாக்கியத்தைப் பகர்வதுவென் - அவர்கள் முன் ஜனனங்களிலே செய்த சிவ புண்ணியத்தை வாக்காலே கோசரிப்ப தெப்படி?—இம்மையிலே யுயிரின் பற்றறுத்து - இந்த ஜனனத்திலே ஆன்மாவுக் குண்டான பாசப் பற்றுக்க ளெல்லாத்தையுந் தங்களுக்குப் பிராணனாய்

நிற்கிற ஞானத்தினாலே யறுத்து,—பரத்தையடை பராவுசிவ ரன்றே - எல்லாத்துக்கு மேலாயிருக்கிற சிவத்தைப் பொருந்தி சிவமாயிருந்துள்ள இவர்கள் சஞ்சரிபாநின்ற சீவரல்லவோ!—ஆக்குமுடி கவித்தரசாண்டவர்க ளிரிவையரோ டனுபவித்தங்கிருந்திடினு மகப்பற்றற்றிருப்பர் - அவர்கள் பண்ணப்பட்ட வபிஷேகமுஞ்சூடி இராஜ்ஜியம் பண்ணினவர்களுடனே கூடி யனுபவித்து அங்கே யிருந்தார்களாயினும் உட்பற்றற் றிருப்பார்கள்,—நோக்கியிது புரியாதோர் புறப்பற்றற்றாலும் நுழைவர்பிறப்பினில் - இப்படிப் பார்த்து இந்தவுண்மையிலே கூடாதவர்கள் புறப்பற்றுக்க ளற்றிருந்தாரே யாயினுஞ் ஜனனத்தை யடையா நிற்பர்கள். ஆகையாலே,—வினைசனுங்கிடாவே-பிராரத்த கன்மமு மது புசிக்கையி லுண்டான வாகாமிய கன்மங்களுங் கெடாது.

இதனாற் சொல்லியது, கருவிகளெல்லாங்கூடி இலாடத்தானத்திலே நிற்கச்செய்தே அவையிற்றிற் றோயாமல் சிவத்துடனேகூடிச் சிவமாய்ச் சாக்கிராதீதம் புரிந்துநிற்கிற ஞானவான்களுக்கு ஜனன மறுமென்றும் இந்த வுண்மை கூடாதவர்களுக்கு ஜனன மருதென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

——0——

சாக்கிராதீதத்தைப் புரிந்தவர்கள் - இங்ஙனம் பசுகரணம் சிவகரணமாகத் துன்னிய சாக்கிரத்தி நின்றுகொண்டு தானே கரணங்கடந்த வதீதத்ததைப் புரிந்தார்,—உலகிற் சர்வசங்க நிவிர்த்திவந்த தபோதனர்கள்-இவ்வுலகின்கண்ணே கருவிகளினீங்கி நிட்டைமேவினரோ டொப்பச் சிறந்தவரேயாவர்;—இவர்கள் பாக்கியத்தைப் பகர்வதுவென்- இவர்கள் முற்பி

றவியில்செய்த சிவபுண்ணியத்தைச் சொல்லவொண்ணாமையா ல்,—இம்மையிலே யுயிரின்பற்றறுத்து-இம்மைக்கண் ணுயிர்ப்ப று நீங்கி,—பரத்தையுடை பராவுசிவரன்றே- மேலாகிய சிவத் தைப் பொருந்தி யிரண்டற நிற்கையாற் சஞ்சரிக்கின்ற சிவமே யாவர்,—அவர்க ளாக்குமுடிகவித்து அரசாண் டரிவையரோ டணைவித்துங் கிருந்திடினும்- அவர்களாக்கப்பட்ட முடியினை ய ணிந்து அரசாக்ஷிசெய்து அரிவையரோ டின்புற் றிருந்திடினு ம்,—அசப்பற்றற்றிருப்பர்-அகப்பற்றுநீங்கினவரேயாவர்—நோ க்கியிது புரியாதோர் புறப்பற்றற்றாலும் - ஆராய்ந் திவ்வகப்பற் று நீங்காதோர் புறப்பற்று நீங்கினும்,—வினைகளுங்கிடா பிறப் பினினுழைவர்-வினைகளொறுதலின் பிறப்பினை யடைவர். இவ்வு ண்மை யறிந்தா ருண்டுடுத்துப் பூசிமுடித்துச் செய்யுந் தொழி லொப்புமையேபற்றி யவரை யுலகத்தாரோடுவைத் தெண்ணா ற்க.

புறச்சமய நெறியென்பது முத லித்துணையு மிரண்டாங் கூற்றைத் தெரித்துணர்த்தியவாறு.

☞ அ-சூ, உ-அதிகரண முடிந்தது.

மறைஞானதேசிகர் உரை.

இப்படிக் கருவிகரணங்களை நீங்கினாற் காண்பதென்னெ ன்று சங்கிராந்தவாதி சொல்ல வுணர்த்துகின்றார்.

கருவிகழிந்தாற்காணு ரொன்றுமெனிற் காணுர் கா ணுதார் கன்னிகைதான் காமரசங்காணும், மருவியிரு வரும்புணர வந்தவின்பம் வாயினாற் பேசரிது மணந் தவர்தாமுணர்வ, ருருவினுயிர் வடிவதுவு முணர்ந்தி

லர்காண்சிவனை யுணராதா ருணர்வினா லுணர்வதுகற்ப
னைகா, ணருள்பெறிலவ் விருவரையு மறிவிறந்தங்கறிவ
றறியாரேற் பிறப்பும்விடா தாணவமுமறுதே. (௩௬)

(இ-ள்.) கருவிக ழிந்தாற் காணு ரொன்று மெனில் — ஆன்மாக்கள் கருவிகரணங்க ளெல்லாத்தையும் விட்டு நீங்கினவிடத தொன்றையுங் காணமாட்டார்க ளென்னில்?

காணுர் காணுதார் — உண்மை யறிவில்லாதா ரொன்றையுமறியார்கள் காண். அஃதெதுபோல வென்னில்?

கன்னிகை தான் காமரசங்காணுள் — கருவி கரணங்களுடனே கன்னியானவள் கூடியிருக்கவு மந்தக் காமத்தாலுண்டான வின்பத்தை யறியாதிருக்கக் கண்டோமே! அஃதெக்காரணத்தா லெனில்? அவளுக்குப் பக்குவமின்மையா லெனவறிக.

'பருவத்தில்வந்து பயனுற்றபண்பி-லயனைப் படைத்தபரன்.' எனவறிக.

ஆனல் நீர்தாங் கருவிகரணங்கள் கூடாமற் சிவதரிசனப் படுவதெப்படியென்று நீ கேட்கிருயாகில்?

மருவியிருவரும்புணர வந்தவின்பம் வாயினுற் பேசரிது மணந்தவர்தா முணர்வர் — பருவமான மாதர் காந்தனைக்கூடின விடத்துண்டாகின வின்பத்தை வேறொருவர்க் கின்னபடி யிருக்குமென்று வாக்காலே வசனிக்கப்படுமோ! ஆதலா லந்தச் சிவனுடன்கூடின வின்பத்தை அந்தப் பக்குவான்மாக்களே யறிவார்கள்.

உருவினுயிர் வடிவதவு முணர் — அஃதன்றியும் கருவிகரணங்களைக் கூடியிருக்கிற வான்மா சரீரத்தின்கண் ணெடிதி

ந்திலர்காண்	னிற்கவு மதனுடை சுரூபத்தை யுள்ளபடி யறியமாட்டார்கள் காண்.
சிவனையுணரா தார்	ஆநந்த ஸ்வரூபனாயிருக்கிற சிவனை ஞானாசாரியனுடைய வுபதேசத்தாலுணரார் காண். நான் ஆநந்த தரிசனப்பட்டேனென்று சொல்லுகிற தல்ல.
உணர்வினா லுணர்வது கற்பனைகாண்	சிவனுடைய ரூபம் பலவிதமாகத் தியானிக்கையா லதுவு மநந்தமன்று. வன்னரூப ஆன்மபோதத்தாற் சுட்டியறிகையால் அதுவுஞ் சங்கற்பஞான மாய்விடுங்காண். ஆதலா

ல் உருபம் வன்னரூபமு மாநந்தமெனப் பெறா. ஆனாலும்முடைய வாநந்தந்தான் யாதெனின்?

அருள்பெறி லவ் விருவரையு மறிவிறந்தங் கறிவர்	சிவனருளைப்பெற்ற ஞாதாக்கள் கருவிகரணாதிகளுடன் கூடாமற் கேவல மான்மாச் சிவனைக் கலந்திருத்தலே பரமமான ஆநந்தமென்று சொல்லுவர்கள்.
அறியாரேற்பிறப்பும்விடா தாணவமுமறாதே	ஞானாசாரியனாலே முன்னர் சொல்லிய கற்பனைகளு மன்றென்று கருதி யக்கக் கற்பனை யில்லாததுமாய்ச் சாசுவதமுமாய்த் துரியங்கடந்ததுமா யிருப்ப தியாதொன்று அது

வே பரமமான வானந்தமென்ற வித்தை யறியா திருப்பார்களாகில் அவர்களுக் கொருக்காலுஞ் ஜனன மரண வாசைய மொழியாது, அஃதுண்டாகவே யாணவ மலமும் விட்டு நீங்கப் பெறாது. எ-று.

மணந்தவர் எழுவாய்.

உணர்வர் பயனிலை.

“மைப்படிந்த கண்ணாளுந் தானும்” “அவனருளே கண்ணாகக் காண்பதல்லால்” “இப்படிய னிவ்வுருவ னிவ்வண்ணத்த னிவனிறைவ னென்றெழுதிக் காட்டொணாதே” எனவறிக.

இதற்குச் சிந்திய விசுவத்திலு மறிக. (ருசு)

சிவாக்ரயோகியருளை வருமாறு.

—0—

நின்மல துரியாதீதத்திலே சோத்திராதி சித்தமிறுதியாக நீங்கி லொன்று மறிவதில்லை யென்பவனைக் குறித்துக் கூறுகின்றது.

கருவிகழிந்தாற் காணா ரொன்றுமெனிற் காணார் காணாதார் - கரணங்களெல்லாம் நீங்கினா லொன்றையுங் காண்பதில்லை யென்னில்? அவ்வாறு கரணங்க ணீங்கினா லொன்றுமறியாமற் பாஷாணம் போலே ஆன்மா விருக்குமென்று முத்தியினின்பத்தைக் காணாதபேர் காணாத ருஷி சம்பிரதாயிகளான் காணாதாரென்னும் சமயிகளை சிவனுடனே கலக்கவென்பது வேண்டா! சிவாநுக்கிரகத்தினாலே சுவஸ்வரூபாபிவ்யத்தியா யிருப்பதே போதுமென்னில்,—

கன்னிகைதான காமரதங்காணாள் - ஷோடச கலையும் நிறைந்த சந்திரனைப்போலப் பதினாறு வயதும் நிறைந்து அதிசுந்தரவதியாய் மதன கலைகளைக் கற்றுடையவளாயினுங் கன்னிகை காமரசத்தை யறியாள். மேல்,—

மருவியிருவரும்புணர வந்தவின்பம் வாயினாற்பேசரிது புணர்ந்தவர்தா முணர்வர் - வாழ்க்கைப்பட்டு பர்த்தாவும் ஸ்திரீயுமாக வொருதலைக் காமமன்றி யிருவரு மொத்த குணமாய்ப் புணர அந்தக் கலவியிலுண்டான சுக மிவ்வாறென்று ஊமை கண்ட கனாப்போலப் புறத்தியாருக்குச் சொல்லப்போகாது. அனுபவித்தபேரே யறிவர்கள்.

ஆதலா லான்மாவுஞ் சிவனுங் கலந்தவிடத் தல்லது ஆன ந்தானுபவ முண்டாகாது. கலந்துண்டான அனுபவ மந்தஞாதா க்களுக்கே அனுபவமொழிய புறத்தியார்க்குச் சொல்லப் போகாது—

சிவனை யுணராதா ருருவி னுயிர்வடிவதுவு முணர்ந்திலர் காண - சிவஞானத்தினாலே சிவ தரிசனப்படாதபேர் தேகேந் திரியாதிக் கந்நியமான ஆன்ம ஸ்வரூபத்தையுந் தரிசித்தவ ரல் லர்காண். காணென்றது மாணாக்கன் முன்னிலை. சிவஞானத்தி னாலே சிவனையு மான்மாவையுந் தரிசிக்க வென்பானேன், ஆன் மஞானத்தினாலே தரிசிக்கலாகாதோ வென்னில்?—

உணர்ந்தார் உணர்வினானுணர்வது கற்பனைகாண் - ஆன்ம ஞானத்தினாலே யறிவேனென்கிறது சங்கற்பம். சங்கற்பமுண் டானபொழுதே விகற்பமுண்டு. விகர்ப்பம் அத்துவைத மாகா து. மேலெவ்வாறு சிவ சீவ தரிசனமென்னில்?

அருள்பெறி லவ்விருவரையு மறிவிறந்தங் கறிவ ரறியாரேற் பிறப்பும்விடா தாணவமுமறாதே - சிவனுடைய பராசத்தி ஆ ன்மாவிலே பிரகாசிக்கப்பெற்று லந்தச் சிவ சீவனிரண்டுபேரை யு மான்மாவினுடைய விருத்திஞானம் லயிக்க ஸ்வரூபஞானத் தினாலே வேறின்மையை யறிவர்கள். இவ்வாறு ஆன்மாவை யுஞ் சிவனையும் அறியார்களாகி லவர்களுக்கு ஜனனமு மொ ழியா தாணவமலமு நீங்காதென் றிதன்பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

பசுகரணங்கழன்ற விடத்தஞ் சிவசத்தி விளக்கு விளக் கிய சிற்சத்திகுறிச் சிவ கரணத்தினாற் சிவனையுந் தன்னையும் சி

வகரணத்தி லுதிக்குஞ் சிவ சாக்ஷாத்கார பூர்த்திசத்தியு மறிந்தனுபவிப்பன்; புத்திபோதத்தா லன்றென்று போதிக்கின்றார்.

காணுதார்-சிவ கரணத்தால் நோக்காதார்,— காணுர்-பசுகரணத்தாற் சிவரூப சிவசமாதி சிவ சாக்ஷாத்கார சித்துப் பூர்த்தி முற்றுப் பூர்த்திச் சுக முதலியவற்றை யுணர்ந்தனுபவியார்,—உணர்விஞ லறிவது - சுத்தவித்தை பொருந்திய சுத்த தத்துவ புத்திபோதத்தா லறிவது,— கற்பனைகாண் - கிருப்த சரீர சதாசிவாதி மூர்த்தி தானன்றே,— அறிவிறந்தங் கறிவர் - சாலம்ப சிவயோக மார்க்கத்துப்போய்ப் புத்திபோதங் கடந்து சிவனைச் சாக்ஷாத் சிவசத்தி வியத்தி சிற்சத்தி யுணர்விஞலுணர்வர், சிவாகமானு மானுருட சிவசத்தி வியத்தி பூமிபூத சிவகரண புத்தி போதானுவித்த சிற்சத்தி யுணர்விஞற் பரோக்ஷமாய்ப் பரம்பரையாய்ப் பார்ப்பர்.

மற்றைய வெளிப்பொருள்.

சிவஞானயோகியருளை வருமாறு.

—o—

இருவரும் புணர வந்த வின்பம் பேசரிதாயினும் மணந்தவர் தாமுணர்வர் அக்காமரசங் கன்னிகை காணுள். அதுபோல அருள்பெறி லவ் விருவரையு மறிவிறந்தங்கறிவர். காணமாட்டாத வபக்குவ ரதனைக் காணுர், தாமேயாகலான் அவருக்கு உணர்த்தும் வாயிலில்லை. இதுநிற்க, பன்னிறங்களான் மயங்கித் தன்னொளியிழந்த படிகம்போல உருவான் மயங்கியே யான்ம சொரூப முணரப் பெற்றிலர். அதனை யுணராதார் அப்பெற்றித்தாகிய வுருவுணர்வால் அவ்வான்மாவுக் குள்ளாகிய சிவனையு மறிவாமென்றல் பாவகமாத்திரையேயாகலாற் கருவியறிவி

றந்து நின்று அருளானறியப் பெறுதார்க்கு ஏகதேசமாகிய கருவியுள்ளளவு மேகதேசக்காட்சி நீங்காமையாற் பிறவியொழியாது. பிறவிக்கு மூலமாகிய வாணவமலமும் பற்றறக் கழியாதென்பதாம்.

இஃது எடுத்துக் காட்டுவமை.

ஈண்டுரு வென்றது கலையாதி மண்ணந்தமாகிய கருவிக்கூட்டத்தை.

இன் ஏதுப்பொருட்கண் வந்த வைந்தாமுருபு.

அது பகுதிப்பொருள் விகுதி.

உணராதார் சிவனை யுணர்வதென வினையும்.

உயர்வு சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது.

உணராதா ரென்றது சிவசங்கிராந்த வாதிகளை நோக்கிக் கூறியது.

காணிரண்டுங் கட்டுரைக்கண்வந்த வசைநிலை.

இதனானே பசுகரணங்கள் சிவகரணமாகத் தன்னிய சாக்கிரத்தைப் பெற்றார் அதன்மேலுங் கரணங்கடந்த வதீதத்தைப புரிதற்கு அறிவு செல்லுமாறு யாங்ஙன மெனனுஞ் சிவசங்கிராந்தவாதிகளை மறுக்குமுகத்தால், 'தன்னியவைம்புல வேடர் சுழலிற்பட்டுத் தணைவனையு மறியாது தயருறுந் தொல்லுயிர்' என்ற மூன்றாங்கூறு வலியுறுத்தப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

சருவிகளைக் கொண்டறியுமதொழிந்து கருவிகளினீங்கினாலச்சிவனைக் காணப்படாதென்ற சங்கிராந்தவாதியை நோக்கி மேலருளிச்செய்கிறார்.

கருவிகழிந் தாற்காணா ரொன்றுமெனிற் - கருவிகளென்று சொல்லப்பட்ட பாசஞான நீங்கினால் ஒன்று மறியார்களென்று நீசொல்லில்?—காணார் காணாதார் - உன்னைப்போலுண்மை யறியாதவர்க ளல்லவோ அசேதனமாயிருக்கிற கரணங்களினீங்கினால் ஒன்றையு மறியாம லிருக்கிறவர்கள். கரணங்களைக் கொண்டறியாமல் ஒன்றையறியும தெப்படியெனில்? உனக்கது சொன்னாலுந் தெரியாது. அதென்போலவெனில்?—கன்னிகைதான் காமரதங் காணாள்-பக்குவப்பட்டுப் புமானைக் கூடாத ஸ்திரீ காமரத மறியாத முறைமைபோல. காமரதமானது சொல்லப்படாதோ வெனில்?—கருவி யிருவரும்புணர வந்தவின்பம் வாயினாற் பேசரிது-அந்த ஸ்திரீ புமான்க ளிருவருந் தங்களிற் கூடி யுண்டானசுகம் வாக்காற் சொல்லுதற்கரிது. ஆனாலந்தச் சுகந்தா னில்லையோவெனனில்?—மணந்தவர்தா முணர்வர் - கூடிப் புணர்ந்தவர்க ளறிவ ரிதனை. ஆகையால்,—உருவினுயிர் வடிவதுவு முணர்ந்திலைகாண் சிவனை யுணராதா ருணர்வினா லுணர்வது கற்பனைகாண் - சிவனுடைய ஞானத்தினாலே சிவனை யறியாதவர்கள் தேஹத்திலே நிற்கிற வான்மசொரூபத்தையு மறிந்தார்க ளில்லை காண். முன்சொன்ன முறைமையொழிந்து ஆன்மபோதத்தாலே கருவிகளைக்கொண் டறியப்பட்டதெல்லாம் சங்கற்பித்துக் கொண்டவைகாண். ஆனால் சிவனையு மான்மாவையு மிவனறியும்படி யெங்ஙனே என்னில்?—அருள்பெறிலங் கிருவரையு மறிவிறந்தங் கறிவர் - முற்சனனங்களிற் செய்த தபோபலங்களினாலே ஆசாரிய னநுக்கிரகத்தைப் பெறில் அந்தச் சிவனையு மானமாவையுந் தற்போதஞ் சீவியாமல் அந்த ஞானத்தோடேகூடி ஞானமாய் நின்றே யறியாநிற்பார்கள்.—அறியாரேற் பிறப்பும் விடா தாணவமு மறாதே- இப்படி யந்த ஞானத்தினாலே சிவனையு மான்மாவையுந் தரிசியார்களாகில் ஜனனமு மறாது அஞ்ஞானமும் விட்டு நீங்காது.

கருவிகழிந்தார் காணார் என்ற சங்கிராந்தவாதியை மறுத்தற்குப் பிரமாணம் சங்கற்ப நிராகரணம் - நிறைந்து நீயாய் நின்றனை யென்று - மறந்தைம் புலனாய் வரா யென்றுங் - கரணமெல்லாங் கடந்தனை யென்று - மரணமையைந்தி னப்புறத் தென்று - முன்னருட் டலைவர பன்னின ரெனவு-மினையவை மொழிய வறிகுவதெவ்வா - றென்ற நிற்கலிக் கொன்றிய வின்பங்-கூறுத றகுமருட் டேரினையன்றே." என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, கருவிகணீங்கினா லொன்றுந் தெரியாது கருவிகளைக் கொண்டே சிவனை யறியவேணுமென்று சங்கிராந்தவாதி சொல்லக் கருவிகள் பாசஞான மாகையால் பதிஞானத்தாலே பதியை யறியவேணுமென்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

மருவி யிருவரும் புணர வந்தவின்பம் வாயினாற் பேசரிது - பொருந்தி யிருவரும் புணரவந்த வின்பம் வாக்காற் பேசுவதரிதாயினும், — மணந்தவர்தா முணர்வர் காமரதம் கன்னிகைதான காணாள் - மணந்தவர்தா முணர்வானறியக் காமரசத்தினைக் கன்னிகையறியாள். அதுபோல, — அருள்பெறி னவ் விருவரையு மறிவிறந்தங் கறிவர்காண் - திருவருளைப் பெறிற் றன்னையுந் தலைவனையு மறிவிறந்தங் கறிவர், — அறியாரேற்காணார் - அறியமாட்டாத அபக்குவ ரதனைக் காணார்தாமே யாகலா னவர்க்குணர்த்தும் வாயிலில்லை. இதுநிற்க, — உருவினுயிர் வடிவதுவு முணர்ந்திலர் - பன்னிறங்களான் மயங்கி தன்னொளியிழந்த படிகம்போல வுருவான மயங்கி யானமசொரூப முணரப் பெற்றிலர், — உணராதாருணர்வினாற் சிவனையுணர்வது கற்பனைகாண் -

அதனையுணராதார ரப்பெற்றித்தாகிய வுருவுணர்வா லவ்வான்மாவுக் குள்ளாகிய சிவனையு மறிவாமென்றல் பாவகமாத்திரை போயகலால்,—கருவிகழிந்தாற் காணுரொன்றுமெனிற் காணர் காணுதார்-கருவியறிவிறந்து நின்று அருளானறியப் பெறுதார்க் கேகதேசமாகிய கருவியுள்ளளவு மேகதேசக்காக்ஷி நீங்காமையால்,—பிறப்பும்விடா ஆணவமு மறாதே,—பிறவியொழியாது பிறவிக்கு மூலமாகிய ஆணவமலமும் பற்றறக் கழியாது.

இங்ஙனே பசுகரணங்கள் சிவ கரணமாகத் துன்னிய சாக்கிரத்தைப் பெற்றா ரதன்மேலுங் கரணங்கடந்த அதீததைப் புரிதற்கு அறிவுசெல்லுமாறு யாங்ஙன மென்னும் சிவசங்கிராந்தவாதிகளை மறுக்குமுகத்தால் 'துன்னியவைம்புல வேடர் சுழலிற்பட்டுத் துணைவனையு மறியாது துயருறுந் தொல்லுயிர்' என்ற மூன்றாங்கூறு வலியுறுத்தப்பட்டது.

அ-ரு, ௩-ம், அதிகரண முடிந்தது.

மறைஞானதேசிகர் உரை.

இப்படி நிட்டையைப் பொருந்தி நீங்கினவிடத்துக் கருவி கரணாதிகளுடன் கூடிநின்றேயாயினு மத ன்வழித் தன்றென் றுணர்த்துகின்றார்.

பன்னிறங்க ளவைகாட்டும் படிகம்போலுள்ளம் பலபுலன்க ணிறங்காட்டும் பரிசுபார்த்திட், டின்னிறங்க ளென்னிறமன் றென்றுதன்ற னெழினிறங்கண் டருளி னின்னிறத்தின்வேறாய்ப், பொய்ந்நிறனைம் புலனிறங்கள் பொய்யென மெய்கண்டான் பொருந்திடுவான்சிவத்தினொடும் போதான்பின்னை, முன்னிறைநீர் சி

றைமுறிய முடுகியோடி முந்நீர்சேர் தந்நீராய்ப்பின்
னீங்கா முறைபோல். (௧௭)

(இ-ள்) பன்னிற ங்க ளவை காட்டும் ப டிகம்போல்	படிகமான தெப்படித் தன்னிடத்திற் கூடின வன்னங்களை மேலிடத் தனக்கெப் பொழுதுஞ் சுபாவமான சொரூபத்தைக் கரந்து தன்னையடுத்த பதார்த்தத்தின் தன்மையே காட்டி நிற்கும். அதுபோல?
உள்ளம் பலபு லன்க ணிறங்கா ட்டும் பரிசுபார் த்திட்டு	இந்திரியத்துக்கு வேறுபட்டிருக்கிற வான்மா வதனைக் கூடினவிடத்துத் தனக்குச் சுவபாவமா யிருக்கிற வடிவைமறைத்த விந்திரியங்களே காட்டிநிற்கு மென்பதனை யறிந்து.
இந்நிறங்களெ ன்னிறமன் றென்று	ஆன்மாவு மிந்த விந்திரியங்களின் வியாபார நமக்குண்மையல்ல வென்றுகருதி
தன்ற னெழி னிறங்கண்டு	இந்திரியங்களின்வழி பொருந்துமது உபாதியெனக் கருதி யான்மாவுக் கழகு சுத்தனாயிருக்கிறதே யுண்மையெனத் தரிசித்து

இவனாக வறிந்துநிற்க வல்லனோவெனில்?

அருளினா லிந் நிறத்தின் வேறா ய்	மத்தியான காலத்திற் படிகமானது கொடுத் ததனைக் கவராது வேறுபட்டாற்போல இவனுந் திருவடியைக் கூடினவிடத்து நமக்குச் சுபாவமன்றென்றுகருதி யதற்குவேறாய்
பொய்நிறவை ம்புல நிறங்கள்	அசத்திய ரூபமாகிய விந்திரி யாதிகளைப் பொய்யென்று கருதி யதனை விட்டுநீங்கித் த

பொய்யெனமெய் கண்டான் — ற் சொரூபத்தைத் தரிசித்தவனே யுண்மை ஞானி,

பொருந்திடுவன் சிவத்தினொடும் போதான்பின்னை — சிவனைப் பொருந்தினவன் பின்பந்தச் சிவதத்துவத்தை விட்டு நீங்கான். அஃதென்போ லென்னின?

முன்னிறைநீர் நிறைமுறிய முடுகியோடி முந்நீர் சேர்ந் தன்னீராய்ப் பின்னீங்கா முறைபோல் — போக்கற நிறைந்த நதியான துடைந்தவாறே, அஃது உடைந்தால் விரைவிற் சென்று சமுத்திரத்தைப் பொருந்தினவிடத் தந்த வுப்புநீரேயாய்ப் பின்பது திரும்பாமலிருக்கு மாறுபோல விந்த வான்மாவு மந்தச் சிவமேயாய் மீளவுந் திரும்பார். எ-று.

முறைபோ லென்பதனாற் காஷ்டத்திலே யடங்கியிருந்த வன்னியான தெப்படி மிருந்த பிரகாசமுண்டானது பின்பந்த அரணியிற் புகாதவாறுபோலவும், தயிரான தெப்படி நெய்யானது பின்பு தயிராகாத வாறுபோலவு மறிக.

மெய்கண்டா னென்பது எழுவாய்.

நீங்கானென்பது பயனிலை.

இதற்குச் சுப்பிரபேதம், ரௌரவ சூத்திரம் நிஶ்வாசத்து மறிக.

"தொண்டலாற் றுணையுமில்லைத் தோலலா துடையுமில்லைக், கண்டலா தருளுமில்லைக் கலந்தபின் பிரிவுமில்லைப், பண்டைநான் மறைகள்காணப் பரிசனே யென்றென்றெண்ணி, யண்டவா னவர்களேத்து மைய னையாறனார்க்கே". (௬எ)

சிவாக்ரயோகியருளை வருமாறு.

மேல் வ்ருத்திஞான மொழிப்ப தெவ்வாறென்ற மாணாக்க னுக் கம்முறைமை கூறுகின்றது.

பன்னிறங்களவைகாட்டும் படிகம்போலுள்ளம் பலபுலன்க ணிறங்காட்டும் பரிசுபார்த்திட்டு - பலநிறப் பொருள்கள் ஸ்ப டிகத்தை யடுத்துள்ளளவில் ஸ்படிகத்தினுடைய வொளியான து அடுத்த பொருளி நிறமாகத் தன்னைப் பிறற்குக் காட்டினது போலச் சத்தாதி புலன்களைக் கவருஞ் சுரோத்திராதியை யா ன்மாவினுடைய வ்ருத்தி ஞானமானது மனதினுடனே கூடப் பொருந்தினவிடத் தந்தச் சுரோத்திராதிக ளானதாகவே கா ண்பிக்கு மியல்பைக் கண்டு,—

இன்னிறங்க ளென்னிறமன் றென்றுதன்ற னெழினிறங்க ண் டருளினா லன்னிறத்தின் வேறாய் - இந்த விஷயஞானங்க ளென்னுடைய ஸ்வரூப மன்றென்று தன்னுடைய ஸ்வரூப ஞா னத்தை சிவஞானத்தினாலே கண்டு அந்த வ்ருத்தி ஞானங்களு க்கு வேறாய்,—

பொய்நிறமைம் புலநிறங்கள் பொய்யென மெய்கண்டான் பொருந்திடுவன் சிவத்தினொடும் போதான்பின்னை - விஷயஞா னங்களானது மூன்று லக்ஷணத்திலே கெடுவதாகையால் அசத் திபமென்று தனது சத்தியஞான ஸ்வரூபத்தை சிவ ஞானத்தி னாலே தரிசித்தவன் சிவ ரூபத்திலே கலப்பன். அவ்வாறு கலந் தவன் திரும்ப ஜனனத்தில் வாரான். அதெண்போல வென் னில்?—

முன்னிறைநீர்சிறைமுறிய முடிகியோடி முந்நீர்சேர்ந் தன் னீராய்ப் பின்னீங்காமுறைபோல் - முதலே கட்டுப்பட் டிருந்

த வேரிநீர் சுரையுடைய மிகவும் விரைந்துசென்று சமுத்திரத்தைப் பொருந்தி யர்த உப்புநீரோயாய்த் திரும்ப நன்னீ ராகாதது போலவென் றிதன்பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

சிவஞானத்துணைச் சிவகன்ம யோகிகளல்லாச் சில சிவநிய திகன்மத்துணைச் சிவஞான யோகிகள பண்ணும் பசுத்துவ சிவத்துவ விவேகத்தை யிருந்து மனமடக்கிப் பலப்படப்பண்ணுமவனும் பாசமுதத்தி சிவத்துவாபிவியத்தி மானுய்ச் சிவனே டொத்துத் திரும்பத் திரும்பானென்று செப்புகின்றுர்.

பன்னிறங்க ளவை காட்டும் படிகம் போல - செம்பரத்தம் பூ முதலிய தடஸ்த லக்ஷண சிவப்பு முதலிய தன்மங்களைத் தனது ஸ்வரூபலக்ஷண சுக்கில முதலிய தன்மங்கள்போற் றன்னிடத்திற் காண்பிக்கும் படிகக்கற்போல்,—

உள்ளம் - ஆன்மாத்தான்,—

பலபுலன்க ணிறங்காட்டும் பரிசும் பார்த்திட்டு - பலபுலன்களென்பது மல முதலியவற்றைக் காண்பிக்கும் குறிப்பு மொழியாதலான், மல முதலிய தடஸ்தலக்ஷண பசுத்துவ சிவத்துவ முதலிய தன்மங்களைத் தனது ஸ்வரூப லக்ஷண சிவத்துவ முதலிய தன்மங்கள் போலத் தன்னிடத்திற் காண்பிக்கு முறையுங் கண்டு,—

இந்நிறங்க ளென்னிற மன்றென்று - இப்பசுத்துவ சிவத்துவ முதலிய தடஸ்த லக்ஷணங்க ளெனது ஸ்வரூப லக்ஷணங்களன்றென்று,—

அருளினல்-சிவ சத்தி வியத்த சிற்சத்தியால் விவேகித்து,—

தன்ற னெழினிறங்கண்டு - தனது ஸ்வரூப லக்ஷண சிவத்துவ தரிசனம் பண்ணி,—

இந்நிறத்தின் வேருய் - இச் சிவத்துவ லக்ஷண விலக்ஷணமாய்,—

பொய்நிற வைம்புலனிறங்கள் - என்பதற் கசத்திய வைம்புல குணங்களென்று பொருளுரைக்கில் மாயாவாத மதமாமாதலால், ஆன்மாவுக்குத் தடத்த லக்ஷண மாதலால் சிவத்துவம்போற் ஸ்வரூப லக்ஷண மாயுள்ளன வன்றி மல முதலிய பாசங் கட்குச் சுவரூப லக்ஷண மாயுள்ள பசுத்துவ சிவத்துவ முதலிய தன்மங்கள்,—

பொய் யென மெய்கண்டான் - தனக்குச் செயற்கைக் குணங்களா யுள்ளன வன்றென்று மல முதலிய வற்றிற் கியற்கைக் குணங்களா யுள்ளமை யுணர்ந்தான் சிவத்துவ விவேகியென்றுமாம்,—

முன்னிறைநீர் சிறை முறிய - கட்டுவிட,—

முடுகி யோடி - விரைந்து சென்று,—

மூந்நீர்சேர்ந் தன்னீராய் - சமுத்திரத் தடைந் துப்புநீராய்,—

பின்னீங்கா முறைபோல் - திரும்பத் திரும்பாத செய்திபோல,—

பொருந்திடுவன் சிவத்தினேடு- அமூர்த்ததிரவிய பதார்த்தங்கட்குப்பொருந் துதல் பிரிதல் கலத்தல் போதிப்பது நீதியன்ருதலால் சிவத்தினேடு தாதான்மிய சம்பந்தத்தால் தனது சிவதத்துவத்தோடு சாதிருச்சிய சம்பந்தத்தால் சிவனேடு சம்பந்திப்பன்.—

போதான் பின்னே - பசுத்துவ சிவத்துவமுத லுபாதிப்படான்.

நீருப்புச் சொபாதி, சிவத்துவம் நிருபாதி, நீர்போ யுப்புப் பொருந்துஞ் சித்திருந்தபடி யிருந்து சிவத்துவ மிசையுமாதலால் முற்றுவமையன்று, திரும்பத்திரும்பா னென்று திட்டாந்தம்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

தன்னையடுத்த பன்னிறங்களி னியல்பே தன்மாட்டுக்காட்டி நிற்கும் பொதுவியல் புடைய படிகம்போல, ஆன்மாவுந் தன்னாற் சாரப்பட்ட கருவிகளி னியல்பே தன்மாட்டுக் காட்டி நிற்கும் தனது பொதுவியல்பை முன்னற் சிந்தித்தறிந்து கொண்டு, பின்னர் அப்படிகவொளி யவற்றின் வேறுளதாயினாற் போல, தனது சிறப்பியல்பு இவற்றின் வேறாயுண்டென்பது முணர்ந்து, பின்னங்ஙனம் பொது வியல்பையே தன்னியல்பாகச் செய்துநிற்கு மக்கருவிஞானம் பொதுவியல்பேயா யொழியும்படி தனியியல்பு விளங்குதற்கு ஏதுவாகிய வுண்மை யுணர்ந்தா னத்தனியியல்பின் விளங்கித் தோன்றுஞ் சிவத்தை யுறுவன்; மீள வக்கருவிக் கூட்டத்திற் செல்வா னல்லன். சிறைப்பட்டநீர் முறிநதவழிக் கடலிற் சென்றடங்கி மீளாதவாறு போலு மென்பது.

கருவிகள் அப்பெற்றிய வாயவழி அவற்றை நீங்கி யருள்பெறுமாறு யாங்ஙனமென்று நோதலுறுவார்க்கு உபாயங் கூறியவாறு.

சேர்தற்கு இடையீடின்மை விளக்குவார், முடிகியோடியென்றார்.

நிரம்பவழகியருளை வருமாறு.

———o———

இப்படிக் கர்த்தாவி னருளினாலே யான்மாக்க ளறிவர்க ளென்ற தென்னம்பு, அவன் நீரும் நிழலும்போல விகாரமற நிற்க இவனைச் சென்று கூடுவனென்ற அவிகாரவாதியை நோக்கி மே லருளிச்செய்கிறார்.

பன்னிறங்களவைகாட்டும் படிகம்போல - பஞ்சவன்னங்களினுண்மையைக் காட்டுகிற படிகத்தைப்போல,—உள்ளம் பலபுலன்க ணிறங்காட்டும் பரிசுபார்த்திட்டு-ஆன்மாவானது பஞ்ச விந்திரியம்களுடைய சுபாவமே தானுங்காட்டுகிறமுறைமையை யறிந்து,—இன்னிறங்க ளென்னிறமன்னென்று-இந்தஸ்வரூப மென்னுடைய சுபாவ மல்லவெனறு,—தன்றனெழில் நிறங்கண்டு-தன்னுடைய வழகிய சுபாவத்தை யறிந்து,—அருளினு லின்னிறத்தின்வேறாய் - அந்தப் பஞ்சவன்னங்களைப்போலத் தன்வசமாக்கிக்கொண்டு நிற்கிற வசத்தியமான விந்தவிந்திரியங்களைக் குருவினாலே தனக்கு வேறாகவறிந்து,—பொய்நிற லைவம் புலநிறங்கள் பொய்யெனமெய்கண்டான பொருந்திடுவன் சிவத்தினொடும் போதானபின்னை - அசத்தியமான சுபாவத்தையுடைய பஞ்ச விந்திரியங்களின் வன்னங்க ளெல்லாம் அசத்தியமென் றறிந்து சத்தியததைத் தரிசித்தவன் அந்தச் சத்தியமாயுள்ள சிவனுக் கடிமையென்றறிந்து அந்தச் சிவனோடுங் கூடிப் பின்பு சிவத்தைவிட்டு நீங்கான. அதென்போல வென்னில்?—முன்னிறைநீர் சிறைமுறிய முடிகியோடி முந்நீர்சேர்ந் தன்னீராய்ப் பின்னீங்கா முறைபோல - முன்னே சிறைசெய்ய நிறைந்து நின்ற நீரானது அந்தக் கரை முறிந்தபோது விரைந்துசென்று சமுத்திரத்தைக் கூடி யுப்புநீராய்ப் பின்பு பழைய நீராகாத முறைமைபோல வான்மாவுந் தன்னைச் சிறைசெய்துநின்ற விந்தி

ரியங்களைக் குருமுகமாகத் தனக்குச் சிறையென்றறிந்த இந்திரியங்களை நீங்கிச் சிவனுடைய சீர்பாதத்திலே பொருந்தி யழுந்தின வான்மா, மீண்டும் அசற்காரியமான விந்திரியங்களில் வந்து கூடப்படாது.

'பன்னிறங்களைவைகாட்டும் படிகம்போ லுள்ளம் பலபுலன் கணிறங்காட்டும்பரிசுபார்த்திட் டின்னிறங்களென்னிறமன்றென்னுதன்ற னெழில்நிறங்க ளறருளிரு லின்னிறத்தின்வேறாய்ப் பொய்நிறவைம்புல நிறங்கள்பொய்யென் மெய்கண்டான் பொருந்திடுவன் சிவதனொடும் போதானபின்னே'' என்றது அவிகாரவாதி. இதற்குப் பிரமாணம் சங்க்றபநிராகரணம், "ஆதலின் வாயிலளவினிலறிதலி - லேதமிலறிவுயிர்க் கெய்துதலிலதே" என்றும், "நீர்நிழலனைய சீர்பெறுகடவுளைச்- சேர்ந்தவர்க்கின்பம் வாய்ந்திடுமென்றனை - பாதவமென்றுஞ் சேதனமனமையி - னிழைத்தோர்வம்மி னென்பதுந் துன்பதுந்- விளைத்தோர்தம்மின் வெறுப்பு மொன்றிலதே" என்றும், சிவஞானபோதம், அ-சூ, சு - வெ, "பன்னிறங் காட்டும் படிகம்போ லிந்திரியந், தன்னிறமே காட்டுந் தகைநினைந்து—பன்னிறத்து, பொய்ப்புலனை வேறுணர்ந்து பொய்பொய்யா மெய்கண்டான், மெய்ப்பொருட்குத் தைய்வமாம் வேறு." என்னுமதுங் கண்டுகொள்க.

'முன்னிறைநீர் சிறைமுறிய முடிகியோடி முன்னீர்சேர்ந் தன்னீராய்ப் பின்னீங்கா முறைபோல்" என்றதற்குப் பிரமாணம், சிவஞானபோதம், அ-சூ, எ-வெ, சிறைசெய்யநின்ற செழும்புனலிலுள்ளஞ், சிறைசெய் புலனுணர்ந்து தீர்ந்து—சிறைவிட், டலைகடலிற் சென்றடங்கு மாறுபோல் மீளா, தலைவரன் பாதத்தை யுற்று" என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, ஆன்மா விந்திரியங்களோடு கூடித் தன்னை யறியாது மயங்கி நிற்குமென்றும் முத்தியிற் சிவனுக்

கடுமையா யிருப்பனென்றும் குருமுகமாக விந்திரியங்களைத்தன க்கு வேறென் றறிந்து நீங்கச் சிவனுடைய திருவடியே இவனு க்குத் தாரகமாமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

பன்னிறங்க ளவைகாட்டும் படிகம்போல - தன்னை யடு த்த பன்னிறங்களி னியல்பே தன்மாட்டுக் காட்டி நிற்கும் பொ துவியல்பையுடைய படிகம்போல,—உள்ளம் பலபுலன்க ணிறம் காட்டும் பரிசுபார்த்திட்டு-ஆன்மாவுந் தன்னாற் சாரப்பட்ட க ருவிகளி னியல்பே தன்மாட்டுக் காட்டி நிற்கும். தனது பொது வியல்பே முன்னற் சிந்தித்தறிந்துகொண்டு,—இன்னிறங்க ளென்னிறமன்றென்று தன்றனெழினிற மருளினாற் கண்டு - பின்ன றப்படிக வொளி யவற்றின் வேறுளதாயினாற் போலத் தனது சிறப்பியல்பு இவற்றின்வேறு யுண்டென்பது மருளா னுணர்ந் து,—இன்னிறத்தின் வேறுய்ப் பொய்நிற வைம்புலநிறங்கள் பொய்யென மெய்கண்டான்-பின்பஞ்சனம் பொதுவியல்லை த ன்னியல்பாகச் செய்து நிற்கு மக்கருவி ஞானம் பொதுவியல் பேயாயொழியும்படி தன்னியல்பு விளங்குதற் கேதுவாகியஉண் மையுணர்ந்தான்,—சிவத்தினோடும் பொருந்திடுவன்-தன்னியல் பின் விளங்கித்தோன்றுஞ் சிவத்தை யுறுவன், — பின்னைப்போ தான்-மீள வக்கருவிக் கூட்டத்திற் செல்வானல்லன்,— முன்னி றைநீர் சிறைமுறிய முடிகியோடி - சிறைப்பட்ட நீர் முறிந்தவ ழி விரைந்தோடி,—முந்நீர் சேர்ந் தந்நீராய்ப் பின்னீங்கா மு றைபோல - கடலினகட்சென் றந்நீரா யடங்கிப் பின் மீளாத வாறுபோலும்.

மறைஞானதேசிகர் உரை

பரிணாமவாதி சிவனை பெத்தான்மாக்களோ யோடிக் கூடிஞனென்ற தென்னை? யவன் சர்வவியாபியோ யேகதேசியோ வென்ன அவனைக் குறித்துணர்த்துகின்றார்.

எங்குந்தா னென்னினு மெய்தவேண்டா மெங்குமில னென்னின்வே றிறையுமல்லன், அங்கஞ்சே ருயிர்போல்வ னெங்குமங்கத் தவயங்கள் கண்போலக் காணுதான்மா, இங்குநா மியம்புந்தத் துவங்களின்வைத்தறிவ திறைஞானந் தந்துதா ளீதல்சுடரிழந்த, துங்கவிழிச் சோதியுமுட் சோதியும்பெற்றுற்போற் சோதிக்குட் சோதியாய்த் தோன்றிடுவன்காணே. (௩அ)

(இ-ள்.) எங்குந் தானென்னினுமெய்தவேண்டாம் — அவன் சர்வவியாபியென்பீராகி லப்பொழுதவனை நாம்சென்று கூடவேண்டுவதில்லை.

எங்குமிலனென்னில் வேறிறையுமல்லன் — சர்வவியாபி யல்லவென்பீராகில் அப்பொழுதவன் கர்த்தாவுமல்லவாய் வேறேயொரு கர்த்தாவை யபேட்சிக்க வேண்டும்.

அங்கஞ்சேருயிர்போல்வன் — அஃதன்றிச் சரீரத்திலே யிருக்கிறவான்மாவைப்போ லேகதேசமாய் விடுவன்.

எங்குமங்கத் தவயவங்கள் கண் — சரீரத் துண்டாகிய அவயவங்களைக் கண்ணுனது காணுமதனை யவயவங்கள் காணுத

போலக் காணு தான்மா — வாறுபோலச் சிவ னெங்கும் வியாபித்து நின்றானேயாகிலு மவனை யான்மாக்கள் காணமாட்டார்கள், ஆன்மாவையு மற்றுள்ள பிரபஞ்சங்களையுஞ் சிவன் கண்டுநிற்பன். அஃதெதென்போல வென்னில்?

இங்குநா மிய ம்புந் தத்துவங் களின் வைத்தறி வது — இவ்விடத்து நாஞ் சொல்லப்பட்ட கால முதலிய தத்துவங்களை வியாபித்துக்கொண்டுநின்று விஸ்வத்தை நடத்து முறைமை போல,

இறைஞானந் தந்துதாளீதல் — சிவ னான்மாக்கட்குச் சர்வஞ்ஞத்துவாதிகளை விளக்கி முத்தியை யடைவிப்பது. அஃதெதென்போ லென்னில்?

சுடரிழந்ததங் கவிழிச் சோதியு முட் சோதியும் பெற்றாற்போல் — படலத்தாலே யொளியை யிழந்த கண்ணனது பண்டிதன் வியாபாரத்தாலே படலீங்கினவாறே நல்ல விழியிலேயு மதற்குக் காட்டாய்நிற்கிற கருவிழியுங் கரிவிழியிலிருக்கும் பாவையையும் பெற்றாற்போல.

சோதிக்குட் சோதியாய்த் தோன்றிடுவன் காணே — அப்பொழு துயிர்க்குயிராத் தோன்றப்பட்ட சிவனை யவ்விடத்துக் கலந்ததைக் கூறியது. எ-று.

என்னவே சிவனு மிவனுக்கும் சர்வஞ்ஞத்துவ முண்டாகல் சற்குண சமானத்தாற் சமரசீபாவங் கூறியதாயிற்று. இச் சமரசீபாவம் பாலும் பாலுங்கூடினது பிறிக்கப்படுவதன்று.

இந்த வைக்கியம் பின்னமே யதனால், கண்ணிற் பிரகாசத்தையும் ஆதித்தப் பிரகாசத்தையும் உவமித்துக் கலந்ததென்றானவறிக.

"திருவேயென்செல்வமே தேனேவானோர் கண்ணேகண்ணுட் கருமணியே மணியாடு பாவாய்காவா, யருவாயவல்வினைநோ யடையாவண்ண மாவடுதண் டுறையுறையு மமரரேறே" என்னும் வாக்கியத்தறிக.

இதற்கு நிசுவாசம் சித்தாந்தரகசிய சாரத்து மறிக(௩அ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

மேல் சிவன் சர்வவியாபியாய் நின்றும் பாச பசு ஞானத்தினால் அறியப்படாமல் சிவஞானத்தைக் கொடுத்ததனால் தோன்ற நிற்பனென்று கூறுகின்றது.

எங்குந்தானெனனினு மெய்தவேண்டா - சிவன் சர்வவியாபியென்னில்? நாம் புதிதாகப் பொருந்தவேணு மென்பதில்லை,—

எங்குமிலனென்னில் வேறிறையுமல்லன் - சர்வவியாபியல்லவென்னில்? ஆன்மாக்களுக்கு அன்னியமாக ஆன்மாக்களிடத்திலே பிரிவறநின்று அந்தர் நியமநத்தைப் பண்ணுகையால் அந்தரியாமியென்று பேருமாய்ச் சுவாமியென்று சொல்லப்படுமவர் அவ்வாறில்லையாகில் கர்த்தாவே யல்லவாம். அந்தரியாமியாகில் அவனைத் தெரியாதே யிருப்பானே னென்னில்,—

அங்கஞ்சே ருயிர்போல்வ னெங்குமங்கத் தவயவங்கள் கண்போலக்காணுதான்மா - தேகத்திலே யான்மாவினின்று சேஷ்டிக்குமாப்போல ஜடசித்தாயுள்ள பிரபஞ்சமெல்லா மீஸ்வரன் நிறைந்துநின்று பிரேரிப்பன். ஈஸ்வரன் ஜடசித்துக்க ளெல்லாத்தையும் பிரேரிப்பானுமாகில் ஜடங்களுக்கு மறிவுண்டாக வேணுமென்னில்? தேகத்தி லவயவங்களெல்லாங் கண்ணைப்போலேகாணுந் தன்மையில்லை, அவ்வா றுதல் சித்தாகிய ஆன்மாக்க

ளுக்கே யறியுந் தன்மை, ஜடங்களுக்கில்லை. ஆன்மா சித்தாகை யால் தானே யறியுமென்னில்?—

இங்ஙனாமியமபுந் தத்துவங்களில்வைத்தறிவ திறைஞான ந்தந்து - இவவிடத்து நாஞ்சொல்லுந் தத்துவங்களிலே ஆன் மாவினுடைய வ்ருத்திஞானத்தைப் பொருந்தி விஷயங்களை ய றிவதுங் கர்த்தாவினுடைய ஞானசத்தி ÷ பிரசாதத்தினுலே யே! இந்த ஞானமேயோ முத்திக்கு மென்னில்? அல்ல. இந்தஞா னங் குருடனுக்குக் கோல் கொடுத்து வழி காட்டுமாப்போலக் கலாதி தத்துவங்களைக்கொண் டான்மாவுக்கு விஷய தரிசன த்தைப் பண்ணுவிப்பது,—

தாளீதல் சுடரிழந்த துங்கவிழிச்சோதியு முட் சோதியும் பெ ற்றுப்போற் சோதிக்குட் சோதியாய்த்தோன்றிடுவன்காணே— மோக்ஷத்தைக் கொடுக்குஞ் சிவஞானமானது காச காமலாதி தோஷத்தினுலே பிரகாசந் தடைப்பட் டவயவத்திற் குறை வற்றிருந்த கண்ணுக்கு சலா†காஞ்சனாதி வைத்தியக் கிரியையி னுலே யாகுதல் தேவதா பிரசாதத்தினுலே யாகுதல் கண்மீதி லொளியும் சூரியாம்சமான உள்ளொளியும் பிரகாசித்தாற்போ ல், ஆசாரியன்பண்ணும் தீக்ஷாக்கிரியையினுலே யாகுதல் பரா சத்திப் பிரசாதத்தினுலே யாகுத லாணவசத்தி நீங்கி யான் மா ஜோதியு மதனுள் பரமான்ம ஜோதியு மபிவியத்தியாவது கரண மோக்ஷஞானமென் றிதன்பொருள்.

÷ பிரசாதம் - அனுக்கிரஹம், † அஞ்சனம்-மை.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

ஆசாரியரு முன்வாக்கில் வாசனையாற் புறப்படுந் 'பொருந் திடுவன் சிவத்தினே டென்பது பெருது, சுவாயம் புவத்திற்

சொல்லியபடி பசுத்தன்மை மறையத் தன்பதித் தன்மை விளக்கத்தோடு பதிவெளியா யறிவில் விளங்குவதே பொருந்துவதென்று போதிக்கின்றார்.

எங்குந்தா னென்னில் - சிவன் சித்தசித்துப் பிரபஞ்ச மெல்லாம் வியாபியா யிருப்ப னென்னில்,—

நாமெய்த வேண்டாம் - ஆற்றுநீர் சமுத்திரத்திற் சென்று கூடுவதுபோ லவனை நாஞ்சென்று கூடவேண்டுவ தில்லை,—

வேறெங்கு மிலனென்னில்,—சர்வத்தையு மறிதல் பண்ணுதல் கூடாதாகையால்,—

இறையு மல்லன் - சர்வ ஜகத் கர்த்தாவு மல்லனாகி விடுவன். உம்மையால் சர்வகர்த் திருத்துவ மில்லாமையாற் சர்வஞ்ஞனுமல்லாதே போவன்.

பின்னவனை யடைவ தில்லை யெனில் அறிவது தியானிப்பது சமாதிப்பது சாக்ஷாத்கரிப்ப தெப்படி யென்னில், அந்தச் சிவனெங்குந் தனக்குச் சரீரம்போ லுபசரிக்கப் படுஞ் சித்தசித்துப் பிரபஞ்ச மெல்லா வற்றினும்,—

அங்கஞ்சே ருயிர்போல்வன் - இயற்கையாற் சர்வவியாபியாயிருந்தாலு மலவிரு ளுபாதிச் செயற்கையினாற் றனது சரீர விளக்குப் பொருந்திய வவ்வளவில் ஞானமுண்டாகையால் அவ்வளவு வியாபக னென் றுபசரிக்கப்பட்ட ஆன்மா வொப்பன்,—

அங்கத் தவயவங்கள் - அந்த ஆன்மாப் பொருந்திய சரீரத் துறுப்புக்கள்,—

கண்போல - நேத்திர மாகிய வுறுப்புப்போல,—

காணுவாகும் கண்ணே காணும் - அப்படியே சிவன் பொருந்திய சித் தசித்துப் பிரபஞ்ச மாகிய சரீரத் துறுப்புக்களுள் ஆன்ம சிற் சத்திக்குறி பொறித்த சிற்கண் ணுறுப்புப்போ லறி

யா வாகும்,ஆன்மசிற் சத்திச்குறி பொறித்த சிற்கண்ணுறுப்பே காணும். ஆகையா லான்மாக் குறிப்பு மொழிபாதலா லான்ம சிற்சத்திக்குறி பொறித்த சிற் கண்ணுனது,—

இங்குநாமியம்புந் தத்துவங்களின் வைத்தறிதல் - இந்த ச் சாத்திரத்தில் நாம்முன்சொல்லிய போக்கியப் பொருளை யறியும்போதும் பசுகரணமா யிருந்தாலுஞ் சகள சிவனை யறியும்போது சிவகரணமா யிருக்கின்ற புத்தி முதலிய தத்துவங்கள் சாட்டாகப் பண்ணும் பதி ஞானக்குறி பொறித்த வோருணர்தல் ஈதொரு சோதி,—

தாள்-தத்துவா தீதமாகிய சிவசத்தி,—

இறைஞானந்தந்து - கருவிப் பதிஞானக்குறி பொறித்த சிற்சத்தியைவிளக்கி,—

ஈதல்- தொழிற்பதிஞானக்குறி பொறித்துக் கொடுச்க அறிதல் ஈதொரு சோதி. இந்த இரு சோதியும் பெற்றது,—

சுடரிழந்த துங்கவிழி - ஒளிமறைந்த பொறியாசுக்கண்,—

சோதியு முட்சோதியும் பெற்ருற்போல - புற வொளியு முள்ளொளிய முற்ற தொப்ப,—

சோதிக்குட் சோதியாய்த் தோன்றிடுவன்காணே - சோதிகுள் உட்சோதிக் கெனறு மாறுக. சொல்லிய ஆன்மசிற்சத்தியி னந்தரங்க நிருபாதிக சோதிக்குட் சோதியாய் நிஷ்களனுக,—

தோன்றிடுவன் காணே - திருச்சியமன்றித் திருக்கு ரூபியாய திருசியன்றனேயாவன்.

சோதிக்குள் - சிவசத்திக்குள் தோன்றிடுவன் - விளங்குவன் என்று சிலபெய ருரைப்பர். பராக்குரூபியாகிய சிவசத்தியில் சிவன் தோன்றுவனுகில் சிவசத்திக் கன்னியனுய் விடுவனென்பது முதற் றூஷணம் பிரமாணப் பிரசங்கததிற் பேசியததிக.

அதுவன்றி பெடுத்தல் முடித்தல் இசையாது பகைக்கும், பார்ப்பவன் பலப்பிரமிதியன்றிப் பிறர் பிரமாணப் பிரமிதி பலமுமாம்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

உயிர் கரணங்க ளெல்லாஞ் சிவமயமே யெனின் வேற்றுமை யின்மையாற் கருவிவழிச் செல்லுஞ் சகல நிலையைக் கைவிட்டுத் திருவடியைத் தலைக்கூட வேண்டாமையானும், அதுபற்றி யெல்லாஞ் சிவமாத லில்லையெனின் எவற்றினும் வியாபகமாயுடனின்று செலுத்துவ தாகிய வவ னிறைமைக்கு இழுக்காய் முடியு மாகலானும், இருவகையு மின்றிக் கலப்பினா லுடம்பின்க ணுயிர்போல ஒப்பநிற்ப னென்பது பெறப்படு மாகலான், உடம்பின்க ணுளவாகிய வைந்திந்திரியங் களினும் உயிர் ஒப்ப நிற்பினும் ஏனை யிந்திரியங்க ணான்கும் ஒளியா லவ்வான்ம போதத் தோடும் விரவிச் சேய்மைக்கண்ணதாகிய விடயதனையும் வியாபித்தறியுங் கண்ணிந்திரியம்போல வியாபித்தறிய மாட்டாவாய்த் தம்மாட்டுவந்த விடயங்களை நின்றாங்கு நின்று இயைந் தறிவனவே யாமன்று, அது போல வான்மாவினுந் தத்துவங்களினும் வைத்துப் பார்த்து வேற்றுமை யறிந்து கொள்ளப் படுமாகலான், அப்பெற்றித்தாகிய வுயிர் அப்பெற்றித் தாகிய கருவிஞானத்தைக் கைவிட்டு இறைஞானந்தந்து திருவடிகளை யீயப்பெறுதல், ஒளியிழந்த கண் மாசு நீங்கியவழித் தன்னொளியையுந் தனக்கு உள்ளொளியாய் நின்று செலுத்து மான்மபோதத்தையும் ஒருங்கே பெற்றாற்போலு மாகலான், அவ்வழி யிறைவன் ஆன்மாவி னறிவுக் கறிவாய்த் தோன்றுவா னன்றி

ஏகதேசமாகிய வேனைக் கருவியறிவிக்கு ளறிவாய்த் தோன்று வானல்லனென்பது.

இறைவ னுப்ப நிற்பினும் ஏகதேசப் பொருள் ஏகதேசப் பொருளே வியாபகப் பொருள் வியாபகப் பொருளே யென்பார், உவமை யெடுத்துக் காட்டி ஆன்மாவினும் நாமியம்புந் தத்துவங்களினும் இங்குவைத் தறிவ தென்றார்.

நாமென்னு முளப்பாட்டுத் தன்மை "நாமறையாமத் தென்னை வந்துவைகி நயந்ததுவே" என்றாற்போல ஈண்டிழித் தற்குறிப்புத் தோன்ற முன்னிலைக்கண் வந்தது.

அறிவ தென்றது வியங் கோள், "கொள்ளப்படாது மறப்பது,, என்பது போல.

இங்கென்பது உவமவுருபு தோன்ற நின்றது.

ஈதல் ஆகுபெயர்.

இழந்த வென்னும் அன்பெறாத வகரவீற்றுப் பலவறி சொல் விழிகளை யுணர்த்திப் பெற்றாற்போ னெனும் பயனிலை கொண்டது.

மாசுநீக்கந் தோன்றத் துங்கவிழிச் சோதியென்றார்.

யாண்டுமொப்ப நிற்குஞ் சிவத்தினேடும் பொருந்தினவன் மீளினும் அதுபற்றி யிழுக்கென்னையென்னுஞ் சிவாத்துவித சைவரை நோக்கி ஒப்பநிற்கும் வழியும் வேற்றுமை யுண்டென்பது உவமைமுகத்தா னினிது விளக்கிப் போதான் பின்னையென்றதனை வலியுறுத்தியவாறு.

நிரம்பவழகியருணை வருமாறு.

—o—

எல்லா வுருவங்களுஞ் சிவமென்று சொல்லுகைச்செய்தே யிவன்சென் றவனைக் கூடுவனென்றதென்நம்பு எனற பரிணாமவாதியை நோக்கி யருளிச்செய்கிறார்.

எங்குந்தாமென்னிலு மெய்தவேண்டாம் - எல்லாவுருவங்களிலு நின்றறிகிறது சிவனே யென்னில்? அவனுடைய திருவடியை நாஞ்சென்று பெறவேண்டுவது இல்லையாம். ஆனால் சிவன் இந்தப் பிரபஞ்சரூபங்களுக் கன்னியனோ வென்னில்,—எங்குமிலனென்னில் வேறிறையுமல்லன் - எவ்விடத்திலு மில்லையென்று நீ சொல்லில் அவன் பிரபஞ்சத்துக்கு வேறுமாய் ஏகதேசியுமாய்க் கத்தாவுமாகான். எல்லா வுருவங்களும் சிவனேயாகில் ஆன்மாவென்பதொன் றெங்கே காணப்பட்டதென்னில்?—அங்கஞ்சே ருயிர்போல்வ னெங்குமங்கத் தவயவங்கள் கண்போலக் காணுவான்மா விங்கு நாமியம்புந் தத்துவங்களில் வைத்தறிவது - சிவனாலே எல்லாவுருவங்களுங் காரியப்பட்டதாமாகிலும் பிரபஞ்சத்தைப் பார்க்க வான்மாவுக்கு விசேடத்துவ முண்டு. அதெங்ஙனே யென்னில்? சரீரத்திலே எல்லா வவயவங்களுக்கும் ஆன்மா பிராணனாய் நிற்கிற நிலையொத்திருக்கச் செய்தேயு மெல்லா வவயவங்களுக்குங் காணுந்தன்மையில்லையாய்க் கண்ணுக்குக் காணுந்தன்மை யுண்டானாற்போல இவ்விடத்து நாஞ்சொன்ன வவயவங்களைப் பார்க்கக் கண்ணுக்கு ஒரு விசேஷ முண்டானாற்போல, பிரபஞ்சத்தைப் பார்க்க ஆன்மாவுக்கும் ஒருவிசேஷ முண்டென்று வைத்துப்பார்த் தறிவாயாக. ஆனா லந்தவான்மாக்கள் சிவனைக்காணு திருப்பானேனென்னில்?—இறைஞானந்தந்து தாளீதல் சுடரிழந்த துங்கவிழிச்சோதியுமுட்சோதியும் பெற்றாற்போல-முன்னே காணுமென்ற கண் படலத்தாலே மறைப்புண்டு காக்ஷியின்றி நின்ற வவதரத்து அந்தப் படல நீங்கினபொழுது காணுந் தன்மையுங் காட்டுமொளியின் தன்மையும் பெற்றாற்போல பரமேஸ்வரன் தன்னுடைய ஞானத்தையுந் தந்து அந்த ஞானத்தாலே ஆன்மாவுக்குண்டான பாசநீங்கத் தன்னுடைய சீர்பாதத்தையுந் தர அந்

த சீர்பாதத்தைப்பெற் றதுவாய் நிற்கவே,—சோதிக்குட் சோதியாய்த் தோன்றிடுவன்காணே - ஆன்மாக்களோ இவனுக்குப்பிராணனாய் நின்று பிரகாசிப்பனென்று அறிவாயாக.

இதற்குப் பிரமாணம். சங்கற்பநிராகரணம், "புவனமிபாவையும் புனிதன தருவெனி-லவன்முதற்காரண மன்றுமென்னி-நிமித்தகாரண நிகழ்த்துகென்னீ - யவனேகாரண மனைத்துமென்றறைந்தனை - மண்டனிற்குலால தண்டசக்கிராதி - காரண மூன்று மோர்புனைந்திடவித் - தாரணியதனிற் கண்டதுசாற்றுக" என்றும். "சிவஞானபோதம், அ-சூ,அ-வெ, "எவ்வுருவுந்தானென்னி லெய்துவாரில்லைதா, னிவ்வுருவின் வேறே யிறையல்ல—னெவ்வுருவுங், கண்போல வையகங்கள் காணுவக் கண்ணிலார், கண்பேறே காணக் கழல்" என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, எல்லா வவயவங்களு மான்மாவாலே காரியப்பட்டு தேகக் கண்ணுக் கொரு விசேஷ முண்டானாற்போல பிரபஞ்சமெல்லாம் சிவனாலே காரியப்படுகைச் செயலே ஆன்மாவுக்கு ஒரு விசேஷ முண்டென்றும்,பக்குவான்மாக்களுக் கல்லாது சிவ தரிசன முண்டாகாதென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

எங்குந்தானென்னி னுமெய்தவேண்டா - உயிர் கரணங்களெலாஞ் சிவமயமே யெனில் வேற்றுமை யின்மையாற் கருவிவழிச் செல்லுஞ் சகலநிலையைக் கைவிட்டுத் திருவடியைத் தலைக் கூட வேண்டாமையானும்,—எங்கு மிலனென்னின் வேறி

றையுமல்லன் - அதுபற்றி யெல்லாஞ் சிவமாதலில்லையெனின் எவற்றினும் வியாபகமா யுடனின்று செலுத்தவதாகிய வவனது இறைமைக் கிழுக்காய் முடியுமாகலானும்,—அங்கஞ்சே ருயிர்போல்வ னென்னின் - இருவகையு மின்றிக் கலப்பினு லுடம்பின்க ணுயிர்போல ஒப்பநிற்ப னென்பது பெறப்படுமாகலான்,—அங்கத் தவயவங்கள் கண்போலக்காணு - உடம்பின்க ணுளவாகிய வைந்திந்திரியங்களினு முயி ரொப்பநிற்பினு மேனையிந்திரியங்க ணன்கு மொளியா லவ்வான்ம போதத்தோடும் விரவி சேய்மைக் கண்ணதாகிய விடயத்தையும் வியாபித்தறியும் கண்ணிந்திரியம்போல வியாப்பித்தறிய மாட்டாவாய் தம்மாட்டுவந்த விடயங்களை நின்றாங்கு நின் றியைந்தறிவனவே யாமன்று. அதுபோல—, ஆன்மா இங்குநாமியம்புந் தத்துவங்களின் வைத்தறிவது - ஆன்மாவினுந் தத்துவங்களினும் வைத்துப் பார்த்து வேற்றுமையறிந்து கொளப்படுமாகலான்,— இறைஞானந்தந்து தாளீதல் - அப்பெற்றித்தாகியவுயி ரப்பெற்றித்தாகிய கருவி ஞானத்தைக் கைவிட் டிறைஞானந்தந்து திருவடிகளை யீயப்பெறுதல்,—சுடரிழந்த துங்கவிழிச்சோதியு முட்சோதியும் பெற்றாற்போல - ஒளியிழிந்தகண் மாசுநீங்கியவழி தன்னொளியையும் தனக் குள்ளொளியாய் நின்றுசெலுத்து மான்மபோதத்தையும் ஒருங்கே பெற்றாற்போலு மாகலான்,—சோதிக்குட் சோதியாய்த் தோன்றிடுவன்காணே - அவ்வழி இறைவ னான்மாவினறிவுக்கறிவாய்த் தோன்றுவானன்றி யேகதேசமாகிய யேனைக் கருவியறிவுக்கு ளறிவாய்த் தோன்றுவானல்லன என்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

இந்தப்படி நிற்கமாட்டாதார்க்கு வேறொருபாய முணர்த்துகின்றார்.

பாசிபடு குட்டத்திற் கல்லினைவிட்டெறியப் படும்பொழுது நீங்கிபது விடும்பொழுதிற்பரக்கு, மாசுபடு மலமாயை யருங்கன்மமனைத்து மரனடியை யுணரும்போ தகலும்பின்னணையு, நேசமொடுந் திருவடிக்கீழ் நீங்காதேதுங்கு நினைவுடையோர் நின்றிடுவர் நிலைபிதுவேயாகு, மாசையொடு மங்குமிங்கு மாகியலம் வருவோ ரரும்பாச மறுக்கும்வகை யருளின்வழியுரைப்பாம். (௫௯)

(இ-ள்.) பாசிபடு குட்டத்திற் கல்லினைவிட்டெறியப்படும்பொழுது நீங்கியது விடும்பொழுதிற்பரக்கும்	இத்தன்மைபோல
ஆசுபடுமலமாயை யருங்கன்மமனைத்து மரனடியை யுணரும்போ தகலும்பின்னணையும்	குற்றத்தைப் பொருந்திய வாணவாதி மலங்களு மிந்த ஜீவன்முத்தர் திருவடியைப் பொருந்தி யிருக்கும்பொழுது, நீங்கும் அதனைக் கூடாவிடத் தப்பொழு தவைகள்வந் திவனைப் பொருந்தாநிற்கும். ஆதலால்

நேசமொடுந் திருவடிக்கீழ் நீங்காதே தூங்குநினைவுடையோர் நின்றிடுவர் நிலையிதுவே யாகும்

சிந்தையுடன் கூடித் திருவடியில் வைத்த வுண்மையைப் பொருந்தி யனவரதமும் பிரியாம லிதுவேயெனக் கருதி நிற்க வெண்ணுஞ் ஜீவன்முத்தர்க ளிதுவே நிலையாகநிற்பர்கள்.

ஆசையொடு மங்குமிங்கு மாகிய லம்வருவோ ரரும்பாச மறுக்கும் வகை யருளின்வழி யுரைப்பாம்.

இந்த முறையி னிற்கமாட்டாதா ராசையினாலே விஸ்வத்தின்கட் கூடியும் பிரிந்துமிருக்கு மவர்களும் பாசத்தை யறுத்து முத்தி யடைகையின்பொருட் டியாமருளின் வழிநிற்கு முபாய நிட்டை மேற் சொல்வாம். எ-று

நினைவுடையோர் நின்றிடுவர். எ-ம். யாம் உரைப்பாம் எ-ம். பொருள் கொள்க.

யாம். எ-து. தன்மைப்பெயர்த் தொக்கது எனவறிக.

அருளின்வழி யென்பதனை யிருபாலுங் கூட்டுக. (௩௧)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் பாசவாசனை நீங்குமுறைமை கூறுகின்றது.

பாசிபடுகுட்டத்திற் கல்லினைவிட்டெறியப் படும்பொழுது நீங்கியது விடும்பொழுதிற் பரக்கும் - பாசிநிறைந்த குளத்திலே மென்மேலுங் கல்லுகொண் டெறிய வந்தக் கல்லுபடுநேரம் பாசி நீங்கி ஜலந் தூயதாயிருக்கும், கல்லெறியாமல் விடும்பொழுதிற் பரக்கும் பாசியானது மூடி ஜலமலினமாம். இது போல—

அரனடியையுணரும்போதாசுபடுமலமாயை யருங்கன்மமுளைத்து மகலும்பின்னையும் - சிவபாவனையைப் பண்ணுங்காலத்துக் குற்றத்தை விளைக்கு மாணவமு மாயையுங் கன்மமும் நீங்கும், சிவபாவனை யொழிந்து ஜீவபாவனை வந்தபின் மும்மலங்களும் பொருந்தும். ஆதலால்,—

நேசமொடுந் திருவடிக்கீழ் நீங்காதே தூங்கு நினைவுடையோர்நின்றிடுவர் நிலையதுவேயாக - உண்மையினால் ஞானத்துடனும் பத்தியுடனும் சிவனிடத்து நீங்காது நின்மல துரியாதீதாவஸ்தையைத் தானே யடையு மிச்சையுடையோர் சுத்தாவஸ்தையே நிலைபெறுக நிற்பர்கள்,—

ஆசையொடு மங்குமிங்குமாகி யலம்வருவோ ரரும்பாசமறுக்கும்வகை யருளின்வழியுரைப்பாம்- விஷயங்களிலே யொருக்கால் விருப்பு மொருக்கால் வெறுப்புமாய், வெறுப்புவந்த காலத்து சிவபாவனையும் விருப்புவந்த காலத்து விஷயாநுபவமுமாகச் சுழலுமவர்கள் வலிதாகிய பாசத்தை யறுக்கு ஞானநெறி கூறுவாமென் றிதன்பொருள்.

சிவாக்ரயோகியர் பண்ணின
சிவஞானசித்தியார் எட்டாஞ் சூத்திரம்
வியாக்யாநம் சமாப்தம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

ஞானத் தியான சமாதி சஞ்சல ரீவன் முத்தி சாட்சாத்கார சமயமாத்திரத்தில் மலமுதலிய பாசம் பறியும். அவை குலையிற் பரக்குமென்று பாஷிக்கின்றார்.

அருளின்வழி யென்பது- அருள்தரு மாகமமார்க்கத்தால். மற்றைய வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

சிவத்தைப் பொருந்தியவன் ஒரோவழிக் கருவிகளின் மீள வருமாயின் அது நீர்ப்பாசிபோல அற்றம் பார்த்து வந்து நிலைப்படும் வாதனைபற்றி நிகழ்வ தாகலின், அவ்வாதனை முன்னர்க் கூறப்படு முபாயத்தைக் கடைப் பிடித்துச் செய்து நீக்கிக் கோடற் பாற் றென்பதாம்.

இவை மூன்று செய்யு ளானும் 'அவரினீக்கி மலமகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன்' என்ற நாலாங் கூற்றுப் பொருள் வலியுறுத்தப் பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

இந்த வான்மா சிவனை யறிந்து கூடினதே யுண்டாகில் மீள வந்த இந்திரியங்களோடு கூடவற்றோ வென்ற பாடாணவாதியை நோக்கி யருளிச்செய்கிறார்.

பாசிபடுங்குட்டத்திற் கல்லினைவிட்டெறிய - பாசிபொருந்தின குளத்திலே கல்லைவிட் டெறிந்த விடத்து,—படும்பொழுது நீங்கி யதுவிடும்பொழுதிற்பரக்கும்-அந்தக்கல்லுப் பட்டபொழுது பாசிவிட்டு நீங்கியும் எறிகிறது தவிர்ந்தபொழுதே மீண்டு

மந்தப் பரசிவந்து தன்னினா மூடிக்கொள்ளாநிற்கும். அத்த
ன்மைபோல,—அசுபடுமலமாயை யருங்கன்மமனைத்து மரனடி
யையுணரும்போ தகலும்பின்னேயும் - குற்றததைப் பொருந்தி
ன மலமாயை காணுதற்கரிய கன்ம மிவைபெல்லாம் பரமேஸ்
வரனுடைய திருவடியை வேறறக்கண்டு கூடும்பொழுது அந்த
மலமாயா கன்மங்க ணீங்கும். இவன் சகலஞானபடியாலே அந்
தத்திருவடியை யுணராதபொழுது மீண்டு மவை வந்துகூடும்.
இந்தப் பாசங்கள் மேலிடாமல் நீங்கும்படி யெங்ஙனே யென்
ற மாணுக்கனை நோக்கி யருளிச்செய்கிருர்.—நேசமொடுந் திரு
வடிக்கீழ் நீங்காதே தூங்கும் நினைவுடையோர் நின்றிடுவர் நிலை
யதுவேயாக - சினேகத்துடனே தனக்குப் பிராணனாய்நிற்கிற
பரமேஸ்வரனது சீபாதத்தின் கீழே யனவரதமும் விட்டுநீங்
காமல் அதுவே பற்றுக்கோடாக நிற்கத்தக்க வறிவினையுடைய
வர்க ளதுவே நிலையாக நிற்பர்கள். மீளவு மந்தநிலைகூடா தவர்
களுக்கு பாசம்நீங்கும தெப்படியென்ற மாணுக்கனை நோக்கி
யருளிச்செய்கிருர் —ஆசையொடு மங்குமிங்குமாகி யலம் வரு
வோ ரரும்பாசமறுக்கும்வகை யருளின்வழி யுரைப்பாம் - பிர
பஞ்ச வியாபாரத்தை விட்டுச் சிவனைப் பெறவேணு மென்கிற
வாசையுடனே யந்தத் திருவடியிலே கூடிநின்று மலத்தின் மே
லீட்டாலே யந்தத் திருவடியை விட்டு நீங்கிப் பிரபஞ்ச வியா
பாரத்திலே கூடிச் சுழன்று அதுவாய் வருகிறவர்களுடைய நீ
ங்குதற்கரிய பாசத்தை நீங்கின முறைமையினைத் தம்பிரானரு
டைய காருண்ணியத்தினுலே மேற் சொல்லா நின்றேன்.

இதற்குப் பிரமாணம் சிவஞானபோதம். அ-சூ, கூ-வெ

"ஐம்பொறியி னல்லையெனு மந்தகரசிவனை, யைம்பொறியை விட்டங் கனைசகல—னைம்பொறியி, னீங்காநீர்ப்பாசிபோல் நீங்கி மலகன்மம்வரி, னீங்கானை நீங்குநினைந்து" எனனுமதுங் கண்டு கொள்க.

இதனாற் சொல்லியது, இந்த வான்மாச் சிவனைப்பெற்றும் பிராரத்தம் புசிக்கவேண்டிய மல மாயாதி கன்மங்களோடு கூடுமென்றும் இந்த மலங்களைத் தனக்குப் பிராணனாய் நிற்கிற சிவனாலே நீக்கிக்கொள்ளு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

நேசமொடுந் திருவடிக்கீழ் நீங்காதே தூங்கு நினைவுடையோர் - இடையறாத அன்போடுஞ் சிவத்தைப் பொருந்தி டீதத்தையடையு மிச்சையுடையோர்,—நிலையதுவேயாகி நின்றிடுவர்-சுத்தாவத்தையையே நிலைபெறாக நிற்பர். ஓரோவழிக் கருவிகளின் மீளவருமாயின் அது,—பாசிபடு குட்டத்திற் கல்லினைவிட்டெறியப்படும்பொழு திதுநீங்கி யதுவிடும்பொழுதிற் பரக்கும்-பாசிபொருந்திய தடாகத்திற் கல்லெறியும்போது நீங்கியு மஃது இல்லாதபோது நீர்ப்பாசிபோல,—ஆசுபடுமலமாயை யருங்கன்ம மனைத்து மரனடியை யுணரும்போ தகலும் பின்னணுகும்-குற்றம் பொருந்திய மலமாயை கன்மங்களெல்லா முதல்வன் திருவடியை யுணரும்போது நீங்குதலு மதனை யுணராத வற்றம்பார்த்துத் தலைப்படுதலும் வாதனைபற்றி நிகழ்வதாகலின்,—ஆசையொடு மங்குமிங்கு மாகி யலம் வருவோர் அரும்பாசமறுக்கும் வகை யருளின்வழி யுரைப்பாம் - அவ்வாசனை பற்றி விருப்பத்தோடு சனனமரணங்களிற் சுழலுதற் கேதுவாகிய அரிய

பாசங்களை நீக்கும்வகை யருள்வழி முன்னர்க் கூறப்பட்ட முபாய த்தைக் கடைப்பிடித்துச் செய்து நீக்கிக் கோடற் பாற்று.

இவை மூன்றுசெய்யுளானும் 'அவரினீக்கி மலமகற்றித் தா ளுக்கி மலரடிக்கீழ்வைப்பன்' என்ற நாலாங்கூற்றுப் பொருள் வலியுறுத்தப் பட்டது.

☞ அ-சூ, ச-ம், அதிகரண முடிந்தது.

☞ எட்டாஞ் சூத்திரம் முற்றிற்று

"நாற்பதினி லொன்றிழிந்து"
என்ற ஏழாஞ்சூத்திரம்
முப்பத்தொன்பது முடிந்தது.

பாயிரமுட்பட திருவிருத்தம்-௨௯௯.

உ

சிவமயம்.

சிவஞானசித்தியார் சுபக்ஷம்.

௯—சூ. ஆன்மசுத்தி இலக்கணம்.

மறைஞானதேசிகர் உரை.

மேலிச்சூத்திரமென்னுதலிற்றோவெனின்? முற்கூறிப்போந்த வான்மாக்களுக் கந்த நிலைநிற்கக் கூடாத படியினாலே யுபாய நிட்டையா லான்மசுத்தி யுணர்த்துத நுலிதற்று. இத்தலைச் செய்யு ளென்னுதலிற்றோவெனில்? 'நேசமொடுந்திருவடிக்கீழ் நீங்காதே நுங்க' என்பதனை விரித் துணர்த்துத நுதலிற்று.

பாசஞா னத்தாலும் பசுஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத்தாலே, நேசமொடு முள்ளத்தே நாடிப்பாத நீழற்கீழ் நில்லாதே நீங்கிப்போதி, னாசைதரு முலகமெலா மலகைத்தேராமென் றறிந்தகல வந்நிலையே யாகும்பின்னு, மோசைதரு மஞ்செழுத்தை விதிப்படி யுச்சரிக்க வுள்ளத்தே புகுந்தளிப்ப னூனமெலாமோட. (௧)

(இ-ள்.) பாசஞா னத்தாலும் பசு ஞானத் — மேலான கர்த்தாவைச் சுத்த மாயாகாரிய மாகிய வாக்குக்க ளாலும் மாயாகாரிய மாகிய கலாதி ஞானத்தினாலு மறிவது

தாலும் பார்ப்பரியபரம்பரனை — பாச ஞானம். ஆன்ம போதத்தாலு மவன் சுத்தனுதலா லறியப்படான். அஃதெக்காரணத்தா லெனின்? இவ்விரண்டினாலு மவனையறிந்து முத்தி யடையப் படாமையால். ஆனாற் காணும்படி யாதெனின்?

பதிஞானத்தாலே நேசமொடுமுள்ளத்தே நாடிப் பாத நீழற்கீழ் — ஆன்மா வானவ னவன்சண்வைத்த நேசத்தாற் சிவஞானமிடமாகச் சிவனைத் தரிசித் தவனது திருவடிநீழலிற் பொருந்தி யதனைவிடாமல் நிற்கி லப்பொழு தான்ம சுத்தியாம்.

நில்லாதே நீங்கிப்போதின் — உலக மயக்கத்தா லதனைப் பொருந்தாமற் பிறிந்து விடுவானாகில்,

ஆசைதருமுலகமெலா மலகைத்தேரா மென்றறிந்தகலவந் நிலையேயாகும் — மெய்யுணர் வில்லாமையா லிவனுக்கு மெய்ப்பொருள்போலத் தோன்றும் பிரபஞ்சத்தை நிலையல்லவென்று கருதி யவ்வஞ்ஞானத்தைவிட்டு நிற்பையாகி லுனக்கு முற்கூறிய வுண்மையான நிலைமையுண்டாம். இதுவும் நிற்கவரிதாகில்,

பின்னு மோசைதருமஞ்செழுத்தை விதிப்படியுச்சரிக்க வுள்ளதேபுகுந்தளிப்பனூனமெலா மோட — அந்த நிட்டை கூடாதபின்பு ஸ்ரீ பஞ்சாக்கரத்தை யந்த வன்னத்துக் குண்டான மாத்திரை முதலாயின வற்றை யதுவதுவாகவே யறிந் தோசை யேருமற் குறையாமற் கருதி யுச்சரிக்கி லப்பொழுது வாச்சிய வாசகத் தன்மைப் பொருளாய் நின்ற சிவன் முனே யான்மாவின்கண் வந்து பிரகாசித் தாணவாதி குற்றங்களைப் போக்கிச் சுவாநந்தானுபூதியைக் கொடாநிற்பன். எ-று.

விதிப்படி யென்பதனைப் பின்னாகக் கூறுகின்றார்.

நில் ஏவல் வியங்கோள்.

அரன் எழுவாய்.

புகுந்திடுவன் பயனிலை.

இதற்குச் சிவஞானபோதத்துஞ் சுவாயமபுவத்து மறிக.

பிரணவத்துடனாறெழுத்தென் றோதியிருக்க விதனைக் கூறிய தென்னையெனில்? அது பொதுவிதியாக வேதாகமங்களிற் கூறினார்.

“வேதநான்கினு மெய்ப்பொருளாவது, நாதநாம நமச்சிவாயவே” எனவறிக.

இதற்குச் சிவதருமோத்தர மெனவறிக. (௧)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—— ० ——

பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத்தாலே நேசமொடு முள்ளத்தேநாடி - சுத்தாசுத்தா மாயா காரியங்க ளுடனேகூடி யறியுமறிவினாலு மவையிற்றுக்களை நீங்கிய ஆன்ம வ்ருத்திஞானத்தினாலும் காண்பதற் கரிதாகி பரமாகிய சுத்தமாயைக்கு மேலான சிவனை சிவஞானத்தினாலே சிவராகத்துடனே யான்மாவினிடத்திலே வேறறக்கண்டு அவனே தானாய்நிற்பது நிட்டை, அப்படி நின்றவன் சுத்தான்மா.—

तथोक्तं स्वायम्भुवे — पतिज्ञानेन ज्ञेयं तद्विशेषात्मसाक्षिकम् । तदन्तर्ज्ञाननिर्मुक्तं पशुपाशात्मवृत्तितः ॥

பாதநிழற்கீழ் நில்லாதே நீங்கிப்போதின் - பாதமென்பது பாசராம். நிழலென்றது தாபத்திரயத்தையுங் கெடுப்பதாத

லால் கௌணமாகச் சொன்னது. சிவாநந்தானுபவியாக நில்லாமனீங்கி யந்தக்கரண வழித்தாகவரில்,—

ஆசைதரு முலகமெலா மலகைத்தேராமென் றறிந்தகலவந்நிலேயயாகும் - ஆன்மாக்களுக் கிச்சையைக் கொடுக்கு முலகங்களெல்லாம் பேய்த்தேர்போல அசத்திய மென்பதை யறிந்து பிரபஞ்ச வாசனையை நீங்கி நிற்கவே முன்சொன்ன நிஷ்டைகூடும்,—

பின்னும்-இதன்றியும்,—

ஓசைதருமஞ்செழுத்தை விதிப்படியுச்சரிக்க வுள்ளத்தே புகுந்தளிப்ப னூனமெலா மோட - அஞ்செழுத்தின் வாசகத்தால் உண்டாம் வாச்சியங்களை யவரவர்கள் வர்ணத்துக்கு மாசிரமத்துக்குஞ் சொன்னபடியே * யனுசந்தானம்பண்ணக் காஷ்டத்திலே அக்னி பிரகாசித்தாற்போலச் சிவ ஞன்மாவினிடத்திலே பிரகாசித்து பாசத்திரயங்களும் போம்படிக்கு ஞாநாநந்தானுபவியாக பிரகாசிப்பதென் றிதன்பொருள்.

* அநுசந்தானம் - ஜபஞ்செய்தல்.

ஞானப்பிரகாசருணா வருமாறு.

முன் சொல்லிய சமாதி நிலை குலைந்தாற் பின் கூடு முபாயங் கூறு கின்றார்.

பாசஞானத் தாலும்-புத்தியாதி தத்துவ தாத்விக விருத்தி ஞானத்திஞலும்,—பசுஞானத்தாலும் - பாசவிருத்தி விளக்கிய ஆன்ம சிற்சத்தி விருத்தி ஞானத்திஞலும், பிரம நானென்ஞது நான் பிரம மென்னும் பசுவாசனை தாக்கும் விபரீததியான ஞானத்திஞலும்,—பார்ப்பரிய பரம்பரனை - காணுதற்

சரிய செயற்கைச் சிவகரண மாகிய பாச ஞான விஷய சகள சதாசிவா தீத நிஷ்கள பர சிவனை,—பதிஞானத்தாலே நேச மொடுமுள்ளத்தே நாடிப் பாதகீழ்றகிழ் நில்லாதே நீங்கிப்போ தில் - ஆன்மாவிற் சாக்ஷாத் சிவ சத்தியால் விளங்கிய சிற்சத் தி விர்த்திப் பதிஞானத்தால் சாமர்த்திய மரியாதியி லறிந்து தி யானித்துச் சமாதித்துச் சாக்ஷாத் கரித்துச் சிவசத்திப் பிரபை தாரகமா யிராது விட்டுப் போதில்,—ஆசைதரு முலக மெலா மலகைத்தேரா மென் றறிந்சகல வந்நிலையேயாகும் - பிரதிபந் தமாயிருக்கும் பிரபஞ்சமனைத்தும் கானல்போற் பொய்போல தோற்று மாயாகார நிராகாரமாய் நோக்கத் திரும்பச் சமாதி நிலைதானேயாம்.—பின்னும்- அதுவன்றியும்,—ஓசைதரு மஞ்செ ழுத்தை விதிப்படியுச்சரிக்க - சிவமுதல் நமவீறுகச் சபிக்க,—ஊ னமெலாமோட - நமப் பதார்த்த பாசம் பறிய மிஞ்சிநின்ற,— உள்ளத்தே-சுத்தபஞ்சாக்கரத்தில் நடுவெழுத் துரைக்குஞ் சின் மாத்தி ரான்மாவிலே,—புகுந்து - முதலெழுத் துரைக்கும் பா தத்தைப் பதித்து,—அளிப்பன் - ஈற்றெழுத துரைக்குஞ் சிவத் தை யிணக்குவன்.

சிவஞானயோகியருளா வருமாறு.

—o—

மேலைச் சூத்திரத்தாற் பேறுமுதலிய வற்றை யுணர்ந்தா னுக்கு அப்பேறு பயப்பதாகிய சாதனஞ் செய்யுமாறு வகுத்து க் கூறுதற் கெழுந்தது ஒன்பதாஞ் சூத்திரம்.

மேற் கூறியவாற்ருல் ஏனையிருவகை ஞானங்களானு மெ ய்துதற் கரியனுகிய பரம்பரனை அவனது திருவடிஞான மொ ன்றுனே தன்னறிவின்கண்ணவைத் தாராய்ந்து நேசமொடுந் திரு

வடிக்கீழ் நீங்காதே தூங்கப் பெருதவழிப் பற்றுச் செய்தற் கேதுவாகிய எத்திறப்பட்ட பிரபஞ்சமும் நின்றுழி நில்லாது பெயருங் கானற்றேரி னியல்பினவாகக் கண்டு கழிப்பவே, அத்திருவடி ஞானம் விளங்கி யந்நிலை கைகூடப் பெறும். அதன் பின்னு மவ்வாறு பாசத்தை யொருவி ஞானத்தைப் பெற்று ஞேயத்தைக் கண்ட காட்சி யொரோவழி வாதனைபற்றிச் சலியாமைப் பொருட்டு, அப்பொருள் பயக்குந் திருவஞ்செழுத்தை யவ்விதிப்படி யறிந்து உச்சரிக்க வென்பதாம்.

ஈண்டு ஊன மென்றது வாதனு மலத்தை.

நில்லாதே நீங்கிப் போதி னெனவே, அவ்வாறு நிற்றலு மநுவாத முகத்தா னீண்டு விதிக்கப் பட்ட தாயிற்று.

ஆகவே இச்செய்யுள் முதனூ லோனபதாஞ் சூத்திரம் போல மூக்கூற்ற தாயவாறு கண்டு கொள்க.

நிரம்பவழகியருரை வருமாறு.

இந்திரியங்களைக் கொண்டு சிவனை யறியுமதொழிந்து இந்திரியங்களணிங்கி யறியவேணு மென்பானேனென்ற சங்கிராந்த வாதியை நோக்கி மே லருளிச்செய்கிருர்.

பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் பார்ப்பரியபரர்பரனை - இந்திரியங்களா லறியும் பாசவறிவாலும் இந்திரியங்கள் கூடி.ஞலொழிந்து அறியாத பசுவறிவாலும் அறிதற்கரிய வெல்லாத்துக்கு மேலாயிருக்கிற பரமேஸ்வரனை,— பதிஞானத்தாலே நேசமொடு முள்ளத்தேநாடி - அந்தப் பதிஞானத்தாலே பதியை விருப்பத்துடனே ஆன்மாவிலே யாராய்ந்தறிந்து அவனுடைய திருவடிநிழலிலேநிற்க முன்சொன்ன நிலையாம்,—

பாதநிழற்கீழ நில்லாதே நீங்கிப்போதின் - இப்படித் திருவடியின்கீழ் நில்லாமல் வாதனையாலே யிந்த நிலையும்நீங்கிப் போதுவனாகில்,—ஆசைதரு முலகமெலா மலகைத் தேரா மென்றறிந்தகல வந்திலையே யாகும்பினனும் - ஆசையை யுண்டாக்குகிற பிரபஞ்சமெல்லாம் பேய்த்தேர்போல நிலையல்லவென்றறிந்து விட்டுநீங்கி முன்சொன்ன நிலைகூடு. இந்த நிலைகூடாதாகில்,—ஓசைதரு மஞ்செழுத்தை விதிப்படியுச்சரிக்கி லுள்ளததேபுகுந்தளிப்பனூனமெலாமோட - வேதாகமங்களிலே சத்தியமாகச் சொல்லப்பட்ட பஞ்சாட்சரத்தி னுண்மையை ஆசாரியனாலேயறிந் துச்சரிக்கில் அந்தப் பரமேசுவரன் தானே குற்றத்தையுடைய பாசங்களெல்லாம் ஓடிப்போம்படி ஆன்மாவுக்குப் பிராணனாய் நின்றநிலையிலே பிரகாசித்து இரக்ஷியாநிற்பன்.

இதனாற் சொல்லியது, ஆன்மாக்கள் தீக்ஷிதரான பின்பு தேகத்திலே நிற்கிறபடியாலே பாசவாதனையைப் பல பிரகாரத்தாலுஞ் சுத்திபண்ணிக்கொள்ளு முறைமை யறிவித்தது.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

பாச ஞானத்தாலும் பசுஞானத்தாலும் - மேற்கூறிய வாற்றலேனைப் பாசஞானம் பசுஞானங்களாகிய இருவகை ஞானங்களாலும்,—பார்ப்பரிய பரம்பரனை - எய்துதற் கரியனாய பரம்பரனை,—பதிஞானத்தாலே யுள்ளததேநாடி - அவனது திருவடிஞானமொன்றானே தன்னறிவின்கண்வைத் தாராய்ந்து,—நேசமொடுந் பாதநிழற் கீழ் - நேசமொடுந் திருவடிக்கீழ்,—நீங்கி நில்லாதே போதின் - நீங்காதே தாங்கப்பெறுதவழி,—ஆசைதரு முலகமெல்லாம் - பற்றுச் செய்தற் கேதுவாகிய வெ

த்திறப்பட்ட பிரவஞ்சமும்,—அலகைத்தேரென் றறிந்தகல- நின்றுழி யில்லாதுபெயருங் கானற்றேரி னியல்பினவாகக் கண்டு கழிப்பவே,—அந்நிலையே யார்க்கும் - அத்திருவடி ஞானம் விளங் கி யந்நிலை கைகூடப்பெறும்.—பின்னுமுள்ளத்தே புகுந்தளிப்ப ஞானமெலாம் ஓட - அதன்பின்னு மவ்வாறு பாசத்தை யொருவி ஞானத்தைப் பெற்று ஞேயத்தைக் கண்டகாட்சி யொரோவழி வாதனைப்பற்றிச் சலியாமைப் பொருட்டு,—ஓசைதரு மஞ்செழு த்தை விதிப்படி யுச்சரிக்க - அப்பொருள் பயக்குந் திருவஞ்செ ழுத்தை யவ்விதிப்படி யறிந்து உச்சரிக்க.

இச்செய்யுள் முதனூல் ஒன்பதாஞ் சூத்திரம்போல முக் கூற்றதாயவாறு கண்டுகொள்க.

மறைஞானதேசிகர் உரை.

மேனிறுத்த முறையானே தொகுத்தவற்றை வகுத்துச் சத்தப்பிரமவாதியைமறுத் துணர்த்துகிறார்.

வேதசாத் திரமிருதி புராணகலைஞானம் விரும்ப சபை வைகரியா தித்திறங்கண்மேலா, நாதமுடி வான வெலாம் பாசஞான நணுகியான் மாவிவைகீழ் நாட லாலே, காதலினா றன்பிரம மென்னுஞானங் கருதுப சு ஞானமிவ னுடலிற்கட்டுண், டோதியுணர்ந் தொன் றென்று வுணர்ந்திடலாற்பசுவா மொன்றாகச் சிவனி யல்பி னுணர்ந்திடுவன்காணே. (உ)

(இ-ள்.) வேதசா த்திரமிருதி புராணகலை சுத்தமாயா சன்னியமாகிய வைகரியிற் றோன்றிய நாலு வேதமுந் தர்க்க முதலிய வாறு சாஸ்திரமு மட்டாதச புராணமும்

ஞானம் விரும்பசபை வைகரியாதித்திறங்கண்டமேல் நாதமுடிவானவெலாம் பாசஞானம்

கீத முதலிய வறுபத்துநாலு கலைஞானமும் எல்லாருநாடோறு முச்சரிக்கப்பட்ட அசபைமந்திர முதலாக நாதமீறாக வுள்ளவைக ளெல்லாம் பாசஞானம். அஃதெக்காரணத்தா லெனின்?

நணுகியான்மா விவைகீழ் நாடலாலே

இந்தச் சத்தப்பிரமத்தை யறிந்த வான்மாவுங் கீழ்வந்து சுகதுக்கமாகிய விருவினைப் பலங்களைப் புசிக்க நாடுகையினாலே யிதனைப் பிரதிஞ்ஞா ஏதுவினாலு மறிவித்ததென வறிக.

காதலினா னான்பிரம மென்னு ஞானங் கருதுபசுஞானம்

வேதாந்தி விருப்பத்துடன் நான்றானே பிரமமென வகங்கரித்துக்கொண்டு சொல்லுகிற ஞானமும் பசுஞானமென் றறியப்படும். அந்த அறிவையு மாகாதென்று கழித்த தெக்காரணத்தா லெனின்?

இவனுடலிற் கட்டுண் டோதியுணர்ந் தொன்றொன் றுணர்ந்திடலாற் பசுவாம்

இந்த வான்மா வானவன் தனக்கென ஒரு செயலில்லாமையாற் கன்மத்துக் கீடாக வொருவன் கரசரணாதிகளைக் கூட்டவதிற் கட்டுப்பட்டுக்கொண்டு சகல சாஸ்திரங்களை யோதி யதன்பொருளை யறிந்திருக்கவு மிந்திரியங்க ளெல்லாவற்றையு மொருகாலத்திற் றானாக வறியமாட்டாதபடியா லொற்றி யொற்றி டொன்றொன்றாகவே பாசமேலீட்டா லறிகையாலும் பரவசமாய் நிற்கையாலு மிதனைப் பசுஞான மென்றார். இந்த விரண்டுஞானமு முத்திக்குக் காரணமன்று. ஆனா லஃதியாதெனில்?

ஒன்றாகச் சிவ அந்தச் சிவனுக்கு மலமில்லாமையாலும் ச
வியல்பி னுணர்ந் ர்வஞ்ஞனுதலாலு மிந்தப்பிரபஞ்சத்திலுண
திடுவன் காணே. டானவான்மாக்கள் செய்த வினைப்பலத்தை
யொருகாலத்திலேதானே யறிந் துள்ளபடியே பலத்தைக் கொ
டுக்கை. பதிஞானமவாது பிரகாசத்தைப் பெற்றவர்கள் ஞான
திருட்டியாற் காண்பார்கள். எ-று.

ஏகார மீற்றசை.

சிவன எழுவாய்.

உணர்ந்திடுவன் பயனிலை.

இதற்குச் சிந்தியத்தும் நிசுவாசத்துமறிக.

மேற் பதிஞான முணர்த்துகையா லாண்டுக்காண்க. (உ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

——0——

மேல் பாச பசு பதி ஞானங்களினுடைய வியல்பு கூறுகின்றது.

வேத சாஸ்திர மிருதி புராணகலை விருப்பசபை வைகரியாதித்திரங்களின் மேலான நாதமுடிவான வெல்லாஞானமும் பாச ஞானம்-வேதசாஸ்திர மிருதி புராணகலை விரும் பசபை வைகரியாதித்திறங்கண் மேலா நாதமுடிவாக வுண்டானவையிற்றுக்களினுலே யுதிக்கும் ஞானமெல்லாம் பாசஞானம். அதென்னில்?—

கனுகியான்மா விவைகிழ்நாடலாலே-ஆன்மா சிவஞானத்தைப் பொருந்தி யிவையிற்றுக்களை யெல்லாந் தனக்கு வியாப்பியமாகக் காண்கையாலே.—

நானபிரம மென்னுஞானம் - பாசத்தைநீக்கி பதிஞானத்தினலே ஆன்ம தரிசனப்பட் டுள்ளளவில் பதிஞானத்தினு

லே தரிசனப் பட்டோமென்பதறியாம லிதுநானல்ல விதுநானல்லவென் றல்லாத்தையுந் தள்ளி வந்தோம். இந்த ஸ்வரூபஞானத்தை யல்லவென்று தள்ளப் போகாதபடியாலே யிதனுன் இதர்க்குமே லொன்றுமில்லை யானபடியாலே நானேபிரமமென்பது பசுஞானம்.

பசுத்துவமாவது அஞ்ஞானம். ஞானஸ்வரூபியா யிருக்கிற ஆன்மாவை பசுவென்பானேன்?—

இவனுடலிற் கட்டுண்டோதியுணர்ந் தொன்றொன்றா யுணர்ந்திடலாற் பசுவாம் - இவ்வான்மாவானவன் ஸ்தூலசூக்கும தேகங்களினாலே கட்டுப்பட்டு சாஸ்திரங்களைப்படித் ததனாலே சிறிதறிதலினாலும் ஒவ்வோ ரிந்திரியங்களைப் பற்றி யொவ்வொரு விஷயங்களாகவே யறிகையினாலு மான்மாவுக்குப் பசுவென்று பெயராம்.

ஒன்றாகச் சிவனியல்பி னுணர்ந்திடுவன் காதலினாற்கருதுகாணே - ஒதலு மொருக்காரா லுணர்தலு மொன்றொன்றா யறிதலுமின்றி சிவன் சுவபாவ நிர்மலஞான சுவரூபியானையாலே ஏககாலத்திலே யெல்லாத்தையும் யதார்வத்தாகவறிவன். ஆதலாலந்தச்சிவனை வேறற வடையவேணுமென்னு மாசையுடனே விசாரிப்பாயாக வென் றிதன்பொருள்.

காணென்றது மாணுக்கனமுன்னிலை.

ஏகார மீற்றசை.

கருது என்றது கருதவது கரணம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

சிவப்பிரமாணமாய்ச் சுத்த கோடியிற் பிரவேசிக்கும் சிவாகம மந்தமாஞ் சாஸ்த்திரங்களும், பிராசாத மந்திர மந்தமாம்

மந்திரங்களும், சிவதத்துவ மந்தமாந் தத்துவங்களும், தத்துவ முதலியவற்றின் விருத்திகளும், பாச ஞானமென்றும்; நான் பிரமமென்பது முதலிய ஞானம் பசு ஞானமென்றும் படிக்கின்றார்.

இவை நணுகியான்மாக்கிழென மாறுக. அந்தப் பசுவானவன்.—சிவனியல்பின் - சிவத்துவம் பெற்ற காலத்தில் பதியாய்,—ஒன்றாக - உள்ளபடி யொருமிக்க எல்லாப் பொருள்களையும்,—உணர்ந்திடுவன் காணே - அறிவன்றானே! சிவனொன்றாக வியல்பினுணர்ந்திடுவனென வுரைக்கினுமாம்.

மற்றைய வெளிப்பொருள.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

மேற்கூறிப்போந்த மூவகை ஞானங்களுட் பாசஞானமாவது நால்வகை வாக்கின்பகுதிய வாகிய வேதமுதலிய சொற்பிரபஞ்சமும் நிலமுதலாகியாகிய பொருட் பிரபஞ்சமுமென்னு மிவைபற்றி நிகழு மேசதேசஞான மனைத்து மாமெனவும், ஏனைப்பசு ஞானமாவது இவற்றைப் பொருந்திய வான்மா இவை யனைத்துந் தன்கீழ் வியாப்பிய மென்றறிந்து நீங்கித் தானவற்றிற்கு மேற்படுதலான் அங்ஙனமதுபற்றி நிகழ்வதோர் செருக்கால் அநாதி முத்தனைப் போல முத்தனாகிய யானுமவ்வாறு பிரமமாவேனெனச் சடிதியின் மதிக்க வருவதோர் சிவசமவாத ஞானமெனவு முணர்க வென்பதாம்.

ஞான வேற்றுமை தெரித்துக் கூறியவாறு.

அற்றேல், அறிந்து நீங்குதலின் வேற்றுமை யின்மையாற் சமப்பிரம மென்றற்கிழுக் கென்னை யென்னுமாசங்கை நீக்குதற் பொருட்டு அநாதி முத்தனோடு ஆதி முத்தனிடை யறிந்து

நீங்குதலின் வேற்றுமை பெரிதாதல் காட்டுவார், இவனுடலிற் கட்டுண் டோதியணர்ந் தொன்றெனரு வுணர்ந் திடலாற் பசுவா மொன்றாகச் சிவனியல்பி னுணர்ந் திடுவன் காணேயென்றார்.

பசுத்துவ நீங்கிய வழியு மவ்வாறு மதித்தல் பசுத்துவ வாதனை பற்றி யாகலா னது பசுஞானமேயா மென்பது.

நான்பிரம மென்னுஞானம் ஏகான்ம வாதம்பற்றி நிகழுஞான மெனினுமாம்.

நாடலா லெனவும் உணர்ந்திடலா லெனவும் உணர்ந்திடுவனெனவுங் காரியத்தைக் காரணமாக வுபசரித்தார்.

நாதமுடி வானவெல்லா மென்றது மது.

நணுகிய வென்னும் பெயரெச்சத் தகரம் விகாரத்தாற்றொக்கது, ,,தகுவரியன்பு" என்றாற் போல.

ஒன்றாகச் சிவனியல்பி னுணர்ந்திடுவன் காணே என்றதனாற் பதிஞானத் தியல்பு இது வென்பதூஉம் பெறப்பட்டது.

அஃதங்ஙனமாக வைகரி யாதித் திறங்க ளெல்லாம் பாசஞானமெனக் கழிப்பின், வைகரியாதித் திறத்துட்பட்ட ஞானநூறனை யோத லோது வித்தல் முதலியன ஞான பூசையென மேற்கூறியது போலியாய் முடியும் போலுமெனின்? முடியாது. பதிஞானம் விளங்குதற்கு ஏதுவா முகத்தாற் பயன்படுதலுடைமையின்.

நிரம்பவழகியருளை வருமாறு.

——o——

இப்படிச் சொல்லப்பட்ட பாசஞானம் பசுஞானம் பதிஞானமென்னு மூன்றினது முறைமையையு மெப்படியென்ற மாணாக்கனை நோக்கி யருளிச்செய்கிறார்.

வேதசாத்திரமிருதி புராணகலைஞானம் விரும்பசபை வைகரிபாதித்திறங்கள்மேலா நாதமுடிவானவெல்லாம் பாசஞானம்-நாலுவேதங்களும் பலசாஸ்திரங்களு மிருதி புராணங்களும் பலகலை ஞானங்களும் விரும்பத்தக்க வசபையும் வைகரி முதலாக நாலுவாக்குகளும் எல்லாத்துக்கு மேலான நாதமீறாக வுண்டாகப்பட்ட விவையெல்லாம் பாசஞானமாம். இவையிற்றை யெல்லாம் பாசஞானமென்று சொல்லவேண்டியது,— நணுகியான்மாவிவைகீழ் நாடலாலே-ஆன்மா விவையிற்றைப் பொருந்தி அதோ மாயையிலுண்டாகிய திருவித காணங்களினு லாராய்ந்து அறிகையினாலே,—காதலினால் நான்பிரம மென்னுஞானங் கருதுபசுஞானமாகும் - எல்லா தத்துவங்களுங் கழன்றவிடத்து ஆசையின் மிகுதியினாலே நானே கர்த்தாவென்று சொல்லப்பட்ட வறிவு சுட்டறியும் பசுஞானமாகும். அதெங்ஙனே யென்னில்?—இவனுடலிற்கட்டுண் டோதியுணர்ந் தொன்றொன்றா வுணர்ந்திடலாற்பசுவாம் - இந்த வான்மா கன்மத்துக் கீடாக வொவ்வொரு தேகங்களிலே கட்டுப்பட்டு ஒன்றை யறியுமிடத்து ஒருவராலே சிலவயிற்றைக் கற்றறிந்தும் விஷயங்களையறிய மவதரத்து ஒவ்வோ ரிந்திரியங்களினாலே ஒவ்வொரு விஷயங்களை யறிந்த நிற்கையால் இவனைப் பசுவென்று சொல்லப்படும்,—ஒன்றாகச்சிவனியல்பி னுணர்ந்திடுவன் காணே - இப்படியன்றியே பரமேஸ்வரன் தன்னுடைய ஞானத்தினாலே சர்வத்தையும் ஏககாலத்திலே ஒருவரறியாமல் தனக்குள்ள வியல்பாகத் தானே யறிந்துநிற்பனென் றறிவாயாக.

இதனாற் சொல்லியது, வேதசாஸ்திர முதலானவையெல்லாம் ஆன்மபோதத்தினு லறியப்படுகையினால் பாசஞானமென்றும் கருவிகளெல்லாங் கழன்றவிடத்து நானே கர்த்தாவென்னு மறிவு ஒரு சரீரத்திலே கூடிநின்று ஒன்றொன்றாக வறிகையி

ஞால் பசுஞானமென்றும் பதியறிவானது ஒருத்த ரறியாமல் சர்வத்தையு மொருகாலத்திலே தானே யறிகையினாலே பதிஞானமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

பாசஞானம் - மேற்கூறிப்போந்த மூவகை ஞானங்களுட் பாசஞானமாவது,— வைகரியாதித்திறங்கள் - வைகரிமுதலிய நால்வகை வாக்கின் பகுதியவாகிய,—வேதசாத்திர மிருதிபுராணகலைஞானம் விரும்பசபை-வேதங்களுஞ் சாத்திரங்களு மிருதியும் புராணங்களு மற்றக் கலைஞானங்களும் விரும்புகின்ற அசபையுமாகிய சொற்பிரவஞ்சமும்,—மேலாநாதமுடிவான வெல்லாம் - மேலாகிய நிலமுதல் நாதமீறாகிய பொருட் பிரவஞ்சமும் என்னு மிவைபற்றி நிகழு மேகதேச ஞானமனைத்துமாம்,— கருது பசுஞானம் - கருதுகின்றவேனைப் பசுஞானமாவது,—நணுகியான்மா விவைகிழ்நாடலாலே - இவற்றைப் பொருந்திய வான்மா இவையனைத்துந் தன்கீழ் வியாப்பிய மென்றறிந்து நீங்கித் தானவற்றிற்கு ளேற்படுதலால்,—காதலினா லான்பிரமமென்னு ஞானம்,—அங்ஙனமதுபற்றி நிகழ்வதோர்செருக்கா லநாதி முத்தனைப்போல முத்தனாகியயானு மவ்வாறு பிரமமாவேனெனச் சடுதியின் மதிக்கவருவதோர் சிவசமஞானமாம். அற்றேலறிந்துநீங்குதலின் வேற்றுமை யின்மையாற் சமப்பிரமமெனற்கிழுக்கென்னை யென்னு மாசங்கையை நீக்குதற் பொருட்டு அநாதிமுத்தனோடு ஆதிமுத்தனிடை யறிந்து நீங்குதலின் வேற்றுமை பெரிதாதல் காட்டுவார்,—இவனுடலிற் கட்டுண்டு - இவ்வான்மாத் தூலசூக்கும தேகங்களாற் கட்டுண்டலானும்,—ஒழியுணர்ந் தொன்றொன்றாயுணர்ந்திடலால் - நூலுணர்வா

ணர்த்த வுணர்த்தலானும் ஒவ்வொரு இந்திரியங்களினு லொவ்வொரு விடயங்களை யுணர்தலானும்,—பசுவாம்- ஏகதேச அறிவையுடைய பசுவெனப்படும். பசுத்துவ நீங்கிய வழியு மவ்வாறு மறித்தல் பசுத்துவவாதனையே பற்றி யாதலா னது பசுஞான மேயாம்,—சிவன்-பதிஞானமாவது,—இயல்பினொன்றாக வுணர்ந்திடுவன்காணே,—ஒருவனுணர்த்தவுணர்தலின்றித் தானேமுழுவதுமறிந்தாங் கறியும் பேரறிவென்பதை யுணர்கவென்பதாம்

மறைஞானதேசிகர் உரை.

மேற் பாடாணவாதி நீர் பதிஞானத்தினாலே பதி தரிசனப் படுவது முத்தியென்றீர், அஃதன்றுகாண். ஞானஞ் சூனியம் பிறந்திருக்கிறதே முத்தியென்ன, அவனை மறுத் துணர்த்துகின்றார்.

கரணங்கள் கெடவிருக்கை முத்தியாமென்னிற் க
தியாகுஞ் சிலைமுட்டை கருமரத்தினுயிர்கண், மரணங்
கொண்டிடவுறங்கி மயங்கிமூர்ச்சிக்க வாயுத்தம் பனைப
ண்ண வல்விடத்தைப்படையச் சரணங்கள் புகுநிழல்போ
ற் றனையடையுஞ் சமாதி தவிராது மலமிதுவும் பசுஞா
னமாகு, மரணங்களரித்தவன்ற னடியையபிவிறந்த
ங் கயிந்திடீர் செறிந்ததுக ளகற்றிடீரே. (௯)

(இ-ள்.) கரணங்கள் கெடவிருக்கை முத்தியாமென்னில் — கருவி கரணங்கள் ஜீவியாமற் றுக்கறவிருப்பதுகாண் முத்தியென்று நீ சொல்லில்?

கதியாகுஞ் சினைமுட்டை கருமரத்தி னுயிர்கள்

அப்பொழுது மீனிற்றோன்றிய சினையு மண்டத்திற் றோன்றிய வுயிர்களும் உத்பீஜத்திற்றோன்றிய பெரிய மரங்களும் இவையெல்லாத்தினு மிருக்கு மான்மவர்க்கங்க ளெல்லா மோக்ஷ மடையவேண்டும். இஃதன்றி,

மரணங்கொண்டிட வுறங்க மயங்கி மூர்ச்சிக்கவாயுத்தம்பனை பண்ணவல் விடத்தையடைய

இயற்கையாற் றேகம் விட்டவர்களும் நித்திரைகொண்டு கிடந்தவர்களும் சன்னிவாத முதலியவற்றால் மயக்கம் வந்து கிடந்தவர்களும் மரமுதலியவற்றி னின்று விழுந்து மூர்ச்சித்துக் கிடந்தவர்களும் யோகசாமர்த்தியத்தாலே பிராணவாயுவைத் தம்பித்துக்கொண் டிருந்தவர்களும் பாம்பு முதலான விஷ மேலீட்டினாலே யறிவின்றிக் கிடந்தவர்களு மாக விவர்களெல்லார்க்குங் கரணங்கள் ஜீவியாதிருக்கையால், இவர்களெல்லாரு முத்தியை யடையக் கண்டிலங்காண். ஆதலாலப் படியன்று.

சரணங்கள் புகுநிழல்போற்றலையடையுஞ் சமாதி

ஒரு நாழிகைக் கெண்பத்தொரு அடியாய்நின்ற நிழல் பொழுதேறிக் காலஞ் செல்லக் குறைந்து குறைந்து வந்து மத்தியானகாலத்திற் றனைவைத்த அடியிலே நிழலடங்கி நின்றாற்போலக் கருவிகரணங்களனைத்து நிற்கின்ற வான்மஞானத்தைப் பொருந்தி யவற்றி னுண்மைகளை யுணர்ந்த அவ்வழியின்க ணின்று பிரிந்துபோந்து தன்னுண்மையின்கண் ணடங்கித் தளராதிருத்தலே முத்தி யாகுமென்று நீ சொல்லில்?

தவிராது மலமிதுவும் பசுஞா

நீ யிப்படிச் சொல்லுகிற தெல்லாம் பசுஞான மாய்விடு மாதலா லஃதன்றி யாணவ

னமாகும்

மும் விட்டு நீங்காது, அஃது ண்டாகவே விஞ்ஞான கலத்துவமும் கூடாது, அஃதில்லாமையாற் பரமுத்தியு முண்டாகாது காண். அஃதடையும் வழி யாதென்று கேட்கிறாயாகில்?

அரணங்களொ ரித்தவன்ற னடியை யறிவிறந்த ங் கறிந்திடீர்செ றிந்ததுகளகற்றி டீரே.

திரிபுரத்தை யெரிசெய்த சிவனது திருவடியைப் பதிஞானத்துடனே பொருந்தி நிஷ்டையைப் புரிந்திருங்கள். அப்பொழு துங்களிடத் துண்டாகிய மலமும் போய்விடும். அது போனவாறே சாயுச்சியத்தையு மடைவீர்கள். எ-று.

இதுவும் என்றவும்மை யெதிரது தழீயவெச்சம்.

ஏகாரம் ஈற்றசை.

இதற்குச் சிந்தியாகமம். (௩)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

——0——

மேல் அந்தக்கரணங்கள்கெட வோரறிவுமற் றிருப்பதே முத்தியென்னும் வைசேஷிகன வாக்கியத்தை மேலனுவதித்து மறுத்தல்.

கரணங்கள் கெடவிருக்கை முத்தியாமென்னில் - கரணங்களெல்லாங்கெட வோரறிவுமறறுக் கல்லுப்போலே யிருப்பது மோக்ஷமென்று சொல்லில?—

கதியாகுஞ் சிலைமுட்டை கருமரத்தினுயிர்கள்-சிலையிலே யிருந்த ஆன்மாக்களுக்கும் முட்டையிலேயிருந்த ஆன்மாக்களுக்கும் § கர்ப்பாசயத்திலே யிருந்த ஆந்மாக்களுக்கும் மரமுதலாஸ்பதகிய ரங்களுக்கும் மோக்ஷமாக வேண்டும். இதன்றியும் மனுஷ்ய தேகத்திலே.—

மரணங்கொண்டிட வுறங்கிமயங்கி மூர்ச்சிக்க வாயுத்தம் பனைபண்ண வல்விடத்தையடைய - மரிப்பதர்க்குப் பத்தாம வஸ்த்தைவந் தோரறிவு மற்றிருந்த ஆன்மாவுக்குஞ் சுழுத்தியி லே யறிவற்றிருந்த ஆன்மாவுக்கும் மயங்கி மூர்ச்சைவந்தபொழு து அறிவற்றிருந்த ஆன்மாவுக்கும் கன்மயோகத்தினாலே வாயுஸ் தம்பிச் சறிவற்றுக் காஷ்டம்போலே யிருந்த ஆன்மாவுக்கும் வ விதாகிய விஷயங்களைத் தின்றுதல் பாம்பு கடித்தாதல் தலைம ண்டைகொண் டறிவற்றிருந்த வான்மாவுக்கும் மோக்ஷமாகவே ணும். கதியாகுமென்பது முதனிலைத தீபம். உயிர்களென்பது நிலைத்தீபம்.—

சரணங்கள் புகுநிழல்போற் றனையடையுஞ் சமாதி - தன் னையறியாமலடைந்த ஞானுபாவமாகிய வஞ்ஞானத்தை யென் வுதாரணமாகச் சொல்லி மறுக்கின்றார். தேகத்தினிழலானது ரவரக்குறுகி மத்தியானமான பொழுது தாட்கீழி னடங்கின போல ஞானத்தினாலே மனோவிர்த்தி ஞானங்களை விட்டு வி டவையிற்றுக்களை நீங்கின ஞானமும் தன்னிடத்திலே பொரு க வோருணர்வு மற்றிருப்பது சமாதி. அந்தச் சமாதியேயா தற்கு மோக்ஷமென்று சொன்னே னென்னில்?—

தவிராது மலமிதுவும் பசுஞானமாகும் - இந்தச் சமாதியி லே அஞ்ஞானம் நீங்காது, இதுவும் பசுஞான மாகையால். லெவ்வா றெனனில்?—

அரணங்களெரித்தவன் றனடியை யறிவிறந்தங் கதிர்ந்திடர் நீக்குக வைகற்றிடரே - முப்புரத்தையும் நகையினாலே யெரி பரமேசுரனைச் சரணமாக வடையு மதனு லுய்யப் பொ

ருந்தின வாணவமாயை காமிகங்களை நீக்குவன். இவ்வாறு நீக்கிக்கொள்ளுங்கோ ளென் றிதன்பொருள்.

ஏகார மிரண்டும் எதிர்மறை.

§ கர்ப்பாசயம், சிசுவிருக்கும் பை.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

——o——

அந்தக்கரண விருத்தி சமூல நிவிர்த்தியே சமாதியும் முத்தியும் தற்பொரு ளறிவு பிறப்பொரு ளறிவு முசிழ்க்கும் ஸ்வவேதன சிவ வேதனாதி வியத்தி வேண்டியதில்லையெனும் பாஷாண வாதி முதலோர் மதம் பாஷித்துத் தூஷிக்கின்றார்.

வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

——o——

அங்ஙனம் நான்பிரமமென நிகழுஞானமே யன்றி ஆன்ம விளைவகிழ்நாடி நீங்குதன் மாத்திரையே முத்தியாத லமையுமென வதற்கு முன்னாக நிகழும் பாடாணவாத ஞானமும், சேமைக்கட் சென்ற வொருவனிழல் உச்சிப் போதின்க ணங்ஙுஞ் சேறலொழிந்த அவனடியுள்வந் தொடுங்கினாற் போலக் ரணங்களிற் சென்ற தன்னறிவு பக்குவம் வந்தழி யங்ஙன சேறலொழிந்து தன்மாட்டுவந் தொன்றி நிராதாரமாய் நிற் மதுவே முத்தியாத லமையுமெனப் பாடாணவாத ஞானத் ன பின்னாக நிகழும் பேதவாத ஞானமுமெனனு மிவைபுர் ஞானம். இவ்வாறு நிகழும் பசுஞானங்களுக் கேதுவாகிய

த்தவ வாதனை இவற்றைக் கைவிட்டுச் சிவஞானத்தாற் சிவனை
யுந் தம்மையு மறியப் பெற்றார்க் கன்றி நீங்காதென்பதாம்.

இதுவும் உம்மை இறந்தது தழீஇயிற்று.

கதியாகு மென்றது செயவென்னும் வாய்பாட்டு வினையெ
ச்சங்களோடு தனித்தனி சென்றியையும்.

சினைமுட்டை கருமரத்தி னுயிர்கண் மருவவென் றுரைக்க.
மருவவெனபது சொல்எச்சம்.

முத்தியா மென்னி லென்பதனைத் தனையடையுஞ் சமாதி
யென்பதனோடுங் கூட்டுக.

ஞாயிற்றைக் காணப் பெறாதார்க்கு இருணீங்காத வாறு
போலத் தனையடையுஞ் சமாதி முத்தியென்பார் சிவனையறிய
ப் பெறாமையி னவர்க்கு மலந் தவிராதாயிற் றென்பது.

கதியாகு மெனவுந் தவிராதுமல மெனவும் ஈண்டுக் கூறி
து, மேலைச் செய்யுளின் உணர்ந் திடலாற் பசுவா மொன்றாக
சிவனியல்பி னுணர்ந்திடுவ னென்றாற் போல ஆசங்கை நீக்கி
வை பசுஞான மாதலை வலியுறுத்துதற் பொருட்டு.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

கருவிகளெல்லா நீங்கி ஆன்மா வொன்று மறியாமல் பா
ணம்போலக் கிடக்குமதுவே முத்தியென்ற பாடாண வாதி
ய நோக்கி யருளிச்செய்கிறார்.

கரணங்கள் கெடவிருக்கை முத்தியாமென்னில் - அந்தக்
ணங்கள் கெட்டுப்போய் ஒன்று மறியாமலிருக்கிறதே மோ
மென்று சொல்லில்?—கதியாகுஞ் சினைமுட்டை கருமரத்தி
யிர்கள் - சினையிலும் முட்டையிலும் பெரியமரத்திலு முளள

ப்ராணிகளுக்கெல்லா மோக்ஷ முண்டாகவேணும். இதுவனறி யும்,—மரணங்கொண்டிட - ஆன்மா தேகத்தை விட்டபொழு தும்,—உறங்க - நித்திரைகொண்ட வவதரத்தும்,—மயங்கி மூர்ச்சிக்க-மிகுந்த மயக்கத்தினலே மூர்ச்சை.வந்தவிடத்தும்,— வாயுத்தம்பனைபண்ண - பிராணவாயு வியங்காமல் தம்பிதத்வி டத்தும்,—வல்விடத்தையடைய - தீர்த்தற்கரிய வலியவிடத் தைப் பொருந்தினவிடத்து முத்தியுண்டாகவேண்டும். அவ்வி டங்களில் முத்தியில்லாம லிருக்கையால்,—சரணங்கள் புருதி மூற்போற் றனையடையுஞ் சமாதி- மத்தியான காலத்தில் அடிக்குள் அடங்கின நிழல்போல ஆன்மா தன்னைப் பொருளொன் றறிகிறவிடத்திலும்,—தவிராதுமலம் - ஆணவமலம் விட்டு நீங் காது,—இதுவும் பசுஞானமாகும் - இது பசுஞானம். முத்தி யைப் பெறுகிறபடி யெப்படி யென்னில்?—அரணங்க ளெரித் தவன்ற னடியை யறிவிறந்தங் கறிந்திடீர் செறிந்ததுக ளகற்றி டீரோ - திரிபுரதகனம் பண்ணின பரமேஸ்வரனுடைய ஸ்ரீ பாத ங்களைத் தற்போததகை விட்டு நின்றவிடத்திலே ஆசாரியனு லே அந்த வுண்மையைத் தரிசித்து அந்தத் தரிசித்த ஞானப் பிரகாசத்தினலே அநாதியே சம்பந்தித்துக்கொண்டு நிற்கிற மலமாயா கன்மங்களி லுண்டாகிய குற்றங்களைப் போக்கி.

"செறிந்ததுக ளகற்றிடீர்" என்றது. 'க்ஷேமச் சொ 'கரணங்கள் கெடவிருக்கைமுத்தி' என்ற பாடாணவாதிமை மறுத்ததற்குப் பிரமாணம் சங்கற்பநிராகரணம், கரணுபா மரணங்கருேர - மேய்ந்தவர்முத்தி சேர்ந்தவரன்றே - யமை யகதிக்கோர் முனைவரும்வேண்டா - தனிதருதுயர மெனுமிது டமே. என்னுமதுங் கண்டுகொள்க.

இதனுற் சொல்லியது, கரணங்களொடுங்கினவிடமே மு த்தியென்ற பாடாணவாயை திகோக்கிக் கரணங்க ளொடு

கினவிட முத்தியென்னில்? சினைமுதல் வல்விடத்தைப் பொருந்தினவர்க ளீறாகச் சொல்லப்பட்டவை யெல்லாத்துக்கு முத்தியுண்டாக வேணுமென்றும் அது இல்லாதபடியாலே கரணங்கள் நீங்கினவிட முத்தி யாகாதென்றும் சிவனுடைய ஞானத்துடனேகூடி ஆன்மபோதஞ் ஜீவியாம லந்த ஞானத்தாலே சிவனுடைய திருவடியைப் பொருந்தினாலொழிந்து மலமு நீங்காது முத்தியு முண்டாகா தென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

கரணங்கள் கெடவிருக்கை முத்தியா மென்னில் - அங்ஙனம் நான் பிரமமென நிகழு ஞானமே யன்றி யான்மாவிவை கீழ்நாடி நீங்குதன் மாத்திரையே முத்தியா மென்னில்,—சினைமுட்டை கருமரத்தி னுயிர்கண்மருவ - சினையினு முட்டையினுஞ் சருப்பாசயத்தினு மரத்தினு முயிர்கள் பொருந்த,—கதியாகும்-முத்தியடைதல் வேண்டும். அங்ஙன மின்மையின் இங்ஙனங் கூறும் பாடாணவாத ஞானமும்,—சரணங்கள் புகுநிழல் போற் றனையடையுஞ் சமாதி முத்தி யெனில் - சேய்மைக்கட் சென்ற வொருவனிழ லுச்சிப்போதின்க ணங்ஙனஞ் சேறலொழிந்த வனடியில்வந் தொடுங்கினார்போல கரணங்களிற் சென்ற தன்னறிவு பக்குவம் வந்துழி யங்ஙனஞ் சேறலொழிந்து தன்மாட்டேயந் தோன்றி நிராதாரமாய் நிற்குமதுவே முத்தியெனில்?—மரணங்கொண்டிட வுறங்க மயங்கிமூர்ச்சிக்க வாயுத்தம் பனைப ண்ண வல்விடத்தையடைய - மரணமாகிய பத்தாமவத்தை யடையுமிடத்து முறக்கத்து மயக்கமுற்று மூர்ச்சையுறுமிடத்தும் பிராண வாயுவியங்காமற் றம்பித்த விடத்தும் கொடியவிடத்தைப் பொருந்தினவிடத்தும்,—இதுவுங் கதியாகும்-இதுவுமுத்

தியாதல் வேண்டும். அங்ஙன மின்மையி னதுவே முத்தியாதல மையுமெனக் கூறும் பேதவாத ஞானமு மென்னு மிவையும்,— பசுஞானமாகும் - பசுஞானமாம்,—அரணங்க ளெரித்தவன்ற னடியை யறிவிறந்தங் கறிகிலீர் - சிவஞானத்தாற் சிவனையுந் தம்மையு மறிவிறந்தங் கறியப் பெறுங்கள்,—செறிந்ததுக ளகற்றிடீரே - உம்மைப் பந்தித்த மலத்தினின்று நீங்குமின,—மலந் தவிராது - மேற்கூறிய பசுஞானங்கட் கேதுவாகிய பசுத்துவ வாதனை யிச்சிவஞான முடையார்கட் கன்றி நீங்கா தெனப தாம்.

மறைஞானதேசிகர் உரை.

சிவனை யகங்காரவாதி யந்தக்கரணங்களா லறியலாயிருக்கச் சிவஞானத்தா லறியவேண்டுமென்ப தெனனெ ன்றுவினவ, அவனைக்குறித் துணர்த்துகின்றார்.

சிவனையவன் றிருவடிஞா னத்தாற்சேரச் செப்பு வது செயல்வாக்குச் சிந்தையெல்லா, மவனையனு கா வென்று மாதலானு மவனடியவ் வொளிஞான மாத லானு, மிவனுமியான் றுலக்குதிர மிறைச்சிமேதை யென்புமச்சை சுக்கிலமோ விந்திரியக்கொத்தோ, பவ மகல வெனையறியே னெனுமையமகல வடிகாட்டி யான்மாவைக் காட்டலானும். (௪)

(இ-ள்.) சிவனையவன் திருவடி ஞானத்தாற் சேரச்செப்புவது — ஆன்மாக்க ளந்தச் சிவனைக் கூடிடத் தவனது திருவடி ஞானமாகிய சிவஞானத் தாலே கூடியிருக்க வென்று வேதாகமங்கள் கூறியிருப்ப, மனமுதலியவற்றா லடைய லாமென்று சொல்லுவ தென்னென்னில்?

செயல்வாக்கு ச் சிந்தையெல் லா மவனையணு காவென்றும்	அவன் வாக்கு மனதீத னுதலா லவனை மனோவாக்குக் காயங்களா லடையப்படா ன் காண.

'மறையினா லயனான்மாலான் மனததினால் வாக்கான்ம ற்றும், குறைவிலா வளவினாலுங் கூறொணாதாகிநின்ற, விறைவ னுர்' என்று முன்னர்க் கூறினாராகையாலும்,

ஆதலானும்	இத்தன்மையை யுடையனாதலானும்,
அவனடி யவ் வொளி ஞானமா தலானும்	அவனுடைய திருவடி விளங்கா நின்ற ஞானப் பிரகாசமா யிருக்கையாலும்
இவனு மியான் ஙவக்குதிர மிறை ச்சிமேதை யென் புமச்சை சுக்கில மோ விந்திரியக் கொத்தோ	இவ்வான்மா வேகமென்று புத்திபண்ணு ஞ் சத்த தாதுக்களோ, இந்திரியங்கள் சமு கங்களோ, அல்லவே!
பவமகல வெ னயறியே னெனு மையமகல	எனக்குண்டாகிய ஜநநமரணங்களை வி ட்டுக் கரையேற வேண்டுமெனு மறிவுண் டாகையின் பொருட் டந்தமயக்கந் தீர்ந்து நிற்க
அடிகாட்டி ான்மாவைக் ாட்டலானும்	இப்படி யான்மாவுக்குத் தனது திருவடி யாகிய ஞானத்தைப் பிரகாசிப்பித் தவனை யுணர்த்தி நிற்கையாலும். எ-று.

செயலென்பது காயத்தின் றொழில்.

ஒகார மெதிர்மறை.

இதற்குக் காரணத்துங் காமிகத்துமறிக. (௪)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

சிவனையவன் றிருவடிஞானத்தாற் காணச்செப்புவது செயல்வாக்குச் சிந்தையெல்லா மவனை யணுகாவென்றுமாதலானும் - சிவனை யவனுக்குப் பிறிவற்ற பரஞானத்தாலே காணச் சொல்லுவதேனெனனில்? இந்திரிய வியாபாரஞானமும் வாச்ய வாசகஞானமும் புத்திவிருத்திஞானமுஞ் சிவனையெக்காலத்துங் கிட்டமாட்டா தாகையாலும்,—அவனடி யவவொளி ஞானமாதலானும் - அந்தச்சிவனுடைய ஸ்வரூபமானது பிரசித்தியான ஸ்வபரப்பிரகாச ஞானமாகையாலும்,—இவனுமியான் றுவக்குதிர மிறைச்சிமேதை யென்புமச்சை சுக்கிலமோ விந்திரியக்கொத்தோ வவமகல வெனையறியே னெனு மையமகல வடிகாட்டி யான்மாவைக்காட்டலானும் - இந்த ஆன்மாவும் யானென்பு முதலாகிய வுறுப்புக்கள் கூடிய தேகமோ இந்திரியக் கூட்டமோ வென்னுங் குற்றமகல வென்னுடைய ஸ்வரூபத்தை அறிகிறேனில்லை யென்னும் சந்தேகந் தீரும்படிக்குச் சிவன் றனது ஞானசத்தியை யான்மாவினிடத்திலே பிரகாசிப்பித்து அதனால் ஆன்ம ஸ்வரூபத்தையுந் தரிசிப்பிப்ப ராகையாலுஞ் சிவனைச் சிவஞானத்தினாலேயே யணையச் சொன்னதென் றிதன் பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

சாக்ஷாத் சிவசத்தி விளக்கு விளக்கிய சிற்சத்திக் குறிப்பதிஞானத்தாற் சிவான்ம சொரூபந்தெரியு மென்று செப்புகின்றார்.

வெளிப்பொருள்.

அடுத்தடுத்துச் சொல்லியது சொல்லிற் கூறியது கூறலென்னுங் குற்றம் வராதோ? வராது, சமாதிதிடம் பிறக்கும்படி சாற்றியதாதலால்.

சிவஞானயோகியருரை வருமாறு.

ஈண்டுக் கூறிப்போந்த ஞானங்களுள் முப்பொறி முதலியனைபற்றி யேகதேசமாய் நிகழுஞ் சுட்டுணர் வாகிய பாசஞானத்திற்கும், தற்சொரூபமே யறியமாட்டாது பாசத்தாற்பட்டுயுற்று நிற்பதாகிய பசுஞானத் திற்கும், தானே சுப்பிரகாசமும் பரப்பிர காசமுமா யெல்லாப் பொருளையு மினிது விளக்குவதாகிய பதிஞானம்போல விளக்கு மாற்றல் செல்லாமையால், அப்பெற்றித்தாகிய பதிஞான மொன்றுமே பதிப் பொருளை யங்ஙன மறியற் பாற்றென மேற்கொண்ட தென்பதாம்.

நிரம்பவழகியருரை வருமாறு.

சிவனுடைய ஞானத்தாலே சிவனை யறியவேணு மென்றது தென்னம்பு என்ற சங்கராந்தவாதியை நோக்கி யருளிச்செய்கிறார்.

சிவனையவன் றிருவடி ஞானத்தாற் சேரச்செப்புவது - பரமேஸ்வரனை யவனுடைய ஸ்ரீபாதமாகிய ஞானத்தாலே கூடவேணுமென்று சொன்னது. அதெப்படியென்று நீ கேட்கில்?—செயல்வாக்குச் சிந்தையெல்லா மவனையணுகாவென்று மாதலானு மவனடியவ் வொளிஞான மாதலானும் - அன்வயம், அவனுடைய சீர்பாதமாகிய வந்தஞானம் விட்டுவிளங்காநின்ற ஞானமாகையாலு மனோவாக்குக் காயங்களா லவனைக் கிட்டவுஞ் சென்

லவும் நினைக்கவும் ஒண்ணாதாகையாலும், இதுவன்றியும் ஆன்மா தன்னையும் இந்திரியங்களாலறியப்படாது. அதெப்படியெனின்? — இவனுமியான் றுவக்குதிர மிறைச்சிமேதை யென்புமச்சை சுக்கிலமோ விந்திரியக்சொத்தோ - ஆன்மாவானது தோலோ விரத்தமோ மாமிசமோ நிணமோ யெலும்போ மூளையோ சுக்கிலமோ இந்திரியக் கூட்டமோவென்று, — பவமகல வெனையறியேனெனு மையமகல - ஜனனங்களெல்லாம் விட்டு நீங்கும்படி என்னை யறிகின்றிலேனென்கிற சந்தேகந்தீர, — அடிகாட்டி யான்மாவைக் காட்டலாலும் - தனது ஞானத்தினாலே தன்னுடைய திருவடியுந் தரிசிப்பித்து, — ஆன்மாவையுந் தரிசிப்பிக்கையால் பாசஞான மறியாது. ஆகையால் பதிஞானமே யெல்லாத்தையு மறியும்.

இதற்குப் பிரமாணம் சங்கற்பநிராகரணம், " சத்தப்பரிச ரூபரசநறை - யெத்திறத்தினதரு ளியம்புகவன்றியும் - நிறைந்துநீயாய் நின்றனையென்று - மறைந்தைம் புலனாய் வாராயென்றுங் - கரணமெல்லாங் கடந்தனையென்று - மரணமையைந் தினப்புறதென்று - முன்னருட்டலைவர் பன்னினரெனவு - மினையவையொழிய வறிகுவதெவ்வா - றெனஉநிற்சலிக் கொனன்றியவின்பங் கூறுதறகு மருட் பேறினையன்றே" என்றும், சிவஞானபோதம்.கூ-சூ-க-வெ," நாடியோவெனபோ நரம்புசிக்கோழையோ, தேடியெனையறியேன றோர்ந்தவகை, — நாடியரன், றன்னாலேதன்னையுங் கண்டுதமைக் காணா, றொன்றாமெனவறிவாரின்று" என்னுமதுங் கண்டுகொள்.

இதனாற் சொல்லியது, பாசஞானத்தினாற் பாசத்தை யறியுமதொழிந்து, பதியை யறியாதென்றும் பதிஞானத்தினாலே பதியை யறிய வேணுமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

செயல்வாக்குச் சிந்தையெல்லாம் - ஈண்டுக் கூறிப்போந்த ஞானங்களுள் மனவாக்குக் காயமாகிய முப்பொருள் முதலியனபற்றி,—அதனையென்று மணுகாவாதலானும்-அவனை யென்ஞான்று மணுகாமையானேகதேசமாய்நிகழுஞ் சுட்டுணர்வாகியபாசஞானத்திற்கும்,—இவனும்-இவ்வான்மாவும்,—யான் றுவக்குதிர மிறைச்சி மேதையென்பு மச்சை சுக்கிலமோ விந்திரியக் கொத்தோ- யான் றோலிரத்த மிறைச்சி மேதையென்பு மச்சை சுக்கில மிந்திரியக் கூட்ட முதலியனவாகப் பலதலைப்பட்டு,—அவமகல வெனையறிபே னெனு மையமகல - குற்றமகலத் தற்சொருபமே யறிமாட்டாமையுற்று நிற்பதாகிய பசுஞானத்திற்கும்,—அவனடி யவ்வொளி ஞானமாதலானும் - முதல்வன் ஞானசத்திதானே தற்பிரகாசமாய் நின்றும்,—அடிகாட்டி யான்மாவைக் காட்டலானும் - தன்னையு மானமாவையும் விளக்கி பரப்பிரகாசமுமாய்நின றெல்லாப் பொருளையு மினிது விளக்குவதாகிய பதிஞானம்போல விளக்கு மாற்றல் செல்லாமையால் அவன்றிருவடி,—ஞானத்தால்-அப்பெற்றித்தாகிய பதி ஞானமொன்றுனே,—சிவனைச்சேரச்செப்புவது - பதிப்பொருளை யங்ஙன மறியற்பாற்றென மேற்கொண்ட தென்பதாம்.

சிவஞானத்தா லன்றி யறியப்படாமைக் கேது காட்டியவாறு.

மறைஞானதேசிகர் உரை.

மேல் சிவனைப் பாசஞான முதலிய வற்று லறிப்படாதென்பதூஉ மவனைவைகளைக் கண்டிருப்ப னென்பதூஉ முணர்த்துகின்றார்.

கண்டிடுங்கண் டனைக்காணு கரணங்காணு கரணங்க டமைக்காணு வுயிருங்காணு, வுண்டியம ருயிர்தானுந் தன்னைக்காணு துயிர்க்குயிரா மொருவனையுங் காணுதாகுங், கண்டசிவன் றனைக்காட்டி யுயிருங்காட்டிக் கண்ணுகக் கரணங்கள் காணுமனிற்பன்,கொண்டரனை யுளத்திற்கண் டடிகூடிற்பாசங் கூடாது கூடிடினுங் குறிப்படியினிறுத்தே. (௫)

(இ-ள்.) கண்டிடுங்கண்டனைக்காணு	விஸ்வத்திற் பதார்த்தங்களுக்கெல்லாங் காட்டாய் நிற்கிற கண்ணனது தன்னையு மறியமாட்டாது,
கரணங் காணு	அதுவுந் தனக்குட் கரணமாய்நின்று ஜீவிப்பிக்கிற கரணங்களையு மீதென்று கண்ணனதறியமாட்டா.
கரணங்க டமைக்காணு	அவைகளுக்குக் காட்டாய்நிற்கிற கரணங்களு நாமே யெல்லாத்துக்குங் காட்டாய் நிற்கிறே மென்னுந் தன்மையு மறியமாட்டாது.
உயிருங் காணு	அந்தக் கரணங்களுந் தனக்கு மேலுமாய்ப் பிராணனுமா யிருக்கிற வான்மாவையு மறியமாட்டா.
உண்டியமருயிர்தானுந் தன்னைக்காணு	இந்தக் கருவி கரணதிகளைக்கொண்டுணர்வாகிய சுகதுக்க மோகங்களைப் புசிக்கிறே மென்னு முணர்வையு மான்மாவு மறியமாட்டான்.
உயிர்க்குயிரா மொருவனையுங்	அந்த வான்மாவுந் தனக்கு மேலுமா யுயிர்க்குயிருமாய் நின்றுணர்த்துங் கர்த்தாவை

காணுதாகும் — யு முணரமாட்டா. ஆதலா லிவைக ளிப்படி யொன்றுக் கொன்று ஞானவிருத்தியு மதிக விருத்தியுமாய்க் காரியப்படு முறைமை யறிந்து,

கண்ட சிவன் றனைக்காட்டி — இப்படி யெல்லாத்துக்குமேலா யெல்லாத்தையும் வியாபித்திருக்கிற சிவன் பக்குவான்மாக்களுக்குத் தற்சுரூபத்தைக் காட்டி,

உயிருங்காட்டி — ஆன்ம ரூபத்தையுந் தரிசிப்பித்து,

கண்ணுகக் கரணங்கள் காணுமனிற்பன் — அந்தச் சிவன் கரணங்களிடத்திலு மனுப்பிரவிஷ்டனாய் வியாபித்து அவைகளாற் றன் காணப்படாம லதற்கு வேறாய் நிற்பன்.

கொண்டானை யுளத்திற்கண்டடிகூடிற் பாசங் கூடாது — இப்படிச் சிவன் வியாபித்து நிற்குமுறைமையை உன்னிடத்திலே கண்டு மயக்க விகற்பமின்றி யவனுடைய திருவடியை யெப்பொழுது நினைந்திருக்கி லுன்னிடத் துண்டாகிய பாசங்கள் விட்டுநீங்கும்.

கூடினுங் குதிப்படியினிறுத்தே. — அதுவந்து மேற் கூடிற்றே யாயினு முன்பு போல நிற்கி லந்தப் பாசங்கள் வருத்தாது. எ-று.

இப்படிச் சொல்லவே சிவ ஞன்மாக்களுக் குபகரிக்கு முறை யுணர்த்தியதாயிற்று.

உவமை-ஐயத்தின்கண் வந்தது.

இதற்குக் காலோத்தரம், வாயவ்ய சங்கிதையினு மறிக (௫)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

ஆன்மா தனதுஞானத்தினாலே சிவனைக் காணும் சிவனுந் த

னது ஞானத்தினாலே ஆன்மாவைக் காண்பனென்னி லிவ்வாறு
கூடாதென்னு முறைமையைக் கூறுகின்றது.

கண்டிடுங்கண் டனைக்காணா கரணங்காணா - ரூபவத் பதா
ர்த்தங்களைக் காணுங் கண்ணானது தன்னையுங்காணாது தனக்கு
முதலாகிய அந்தக் கரணங்களையுங் காணாது,—கரணங்கடமை
க்காணா வுயிருங் காணா - அறியுந்தன்மையை யுடைய புத்திதத்து
வ வித்தியாத்துவங்கள் தம்மையுமறியாது தமக்குக் கர்த்தா
வாகிய ஆன்மாவையுமறியாது,—உண்டியம ருயிர்தானுந் தன்னை
க்காணா வுயிர்க்குயிரா மொருவனையுங் காணாதாகும் - விஷய
த்தைப் பொருந்திநிற்கிற ஆன்மாவும் பந்தத்திலே தன்னையுந் த
னக்குயிரா யினை யற்றவனாகி நிற்கிற சிவனையுங் காணாது,—க
ண்டசிவன்றனைக்காட்டி யுயிருங்காட்டிக் கண்ணாகிக் கரணங்க
ள்காணா நிற்பன் - ஆன்மாக்களையுஞ் சர்வ பிரபஞ்சங்களையும்
வேறொரு சகாயத்தையு மபேக்ஷியாமல் ஏககாலத்திலே யதா
வததாகக் கண்டிருக்குஞ் சிவன் றனது ஞானப்பிரகாசத்தினா
லே ஆன்மாவுக்குத் தனையுங் காட்டி யந்த ஆன்மாவையுங்
காட்டித் தானந்த வான்மாவி னிடத்தில் அநந்நியமா யிருந்
தும் பாசபசு ஞானாகம்மியனா யிருப்பன். ஆகலால்,—கொண்
டானை யுளத்திற்கொண் டடிகூடின பாசங் கூடாது கூடிடி
னுங் குறித்தடியினிறுத்தே - அந்த சிவஞானத்தைக் காட்டா
கக் கொண்டானை யான்மாவிலே வேறறக்கண்டந்த ஸ்வரூப
மேயாகிற பாசநீங்கும் நிஷ்டைதிரித்து கரண வியாப்தியைப்
பொருந்தின நேரத்துப் பாசவாசனை பொருந்தித் தாமாகிலது
நீங்கும்படிக்கு முன்போலச் சிவபாவனையைப் பண்ணிச் சிவத்
தினிடத்திலே யுன்னுடைய போதத்தை யலைவற நிறுத்தென்
றிதன்பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

மேற்சொல்லிய பதிஞானமே சிவ முதலிய திரிபதார்த்தங் காணுங் கண். கண் முதலியவற்றிற்குக் கண்ணென்பது, கண்ணுக் குபகாரம் பண்ணுதலாற் கண்ணென் றுபசரிக்கப் பட்டதென்று காண்பிக் கின்றார்.

கரணங்காணா - கரணங்களைக் காணா,—உயிருங்காணா - உயிரையுங் காணா,—கண்ட சிவன் - இவையெல்லாவற்றையும் பிரத்தியக்ஷமாகப் பார்க்குஞ் சிவன்,—தனைக் காட்டி - தனைக் காட்டி - தனக் கியற்கைக் கண்ணாகி உயிர்க்குச் செயற்கைக் கண்ணாகிய தனது சத்தியினால் உயிர்க்கு இயற்கைக் கண்ணாகிய சிற்சத்தியை விளக்கித் தனது ஸ்வரூபத்தை யுயிர்க்குக் காண்பித்து,—உயிருங் காட்டி - உயிர்க்குயிர்ச் சுவரூபத்தையுங் காண்பித்து,—கண்ணாகி - உயிர்க் கியற்கைக் கண்ணாகிய சிற்சத்தி வியஞ்சக தன் சத்தி சமவாய சம்பந்தத்தா லுயிரைக் குறித் துபசரித செயற்கைக் கண்ணாகி,—காணா - காணாமல்,—அடிகூடில் - சிவசத்திக் கொப்பச் சிற்சத்திக் கண்ணைத்திறந் தொளிபரப்பித் தியானிக்கில்,—குறித்தடியி னிறுத்தே - திரும்பப் பாசம் நீங்கும்படி சிவ சிந்தனை பண்ணிச் செப்பியபடி சிவ சத்தித் தாரகமாகத் தானே நில்.

மற்றைய வெளிப் பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

பாசபசு ஞானங்கள் பரப்பிரகாசமாய் நிற்பினுந் தற்பிரகாசமாய் நிற்றல் செல்லாதென்பது கண்மேல்வைத் தறியக்கிடத்தலானும், ஏனைப் பதிஞானத் திற்குத் தற்பிரகாசமாய் நிற்

றலுஞ் செல்லுமென்பது தானவ் விரண்டிற்குங் காட்டாய்த் தனக்கொரு காட்டு வேண்டாது நிற்றல்பற்றி யறியப்படுதலானும், சிவனே அவன் றிருவடி ஞானத்தாற் சேறலே பொருத்தமுடைத் தென்பதாம்.

மேலதற்குத் தரிசனங் காட்டியவாறு.

காணதென்னும் துவ்விறு விகாரத்தாற் றொக்கது.

கண்டிடு மென்பதனைக் கரணங்க ளென்பதனோடுங் கூட்டுக.

கண்டிடுதல் ஈண்டுப் பரப்பிரகாச மாதன் மேற்று.

உண்டி யமர்தலு மது.

எடுத்துக்காட் டுவமை.

தனைக்காட்டி யுயிருங் காட்டிக் கண்டசிவ னென விரையும்.

காட்டிக் கண்டசிவ னென்றது அனுவாதம்.

கண்ணுகி யென்பது கட்டாகி யென்றவாறு. சொன்னசிவன் கண்ணு வென்றாற் போல.

கரணங்களாற் காணுமலென மூன்றுவது விரித்துரைக்க கரணங்க ளெனவும் உயிரெனவும் சிவனெனவும் அவ்வப் பொருண்மேல் வைத்து உபசரித்தார்.

இரண்டாங் கூற்றுக்குத் தோற்றுவாய் செய்வார், பாசங் கூடாது, கூடிடினுங் குறித்தடியி னிறுத்தே யென்றார்.

இவை நான்கு செய்யுளானும் மூன்றாற் கூற்றின் பொருள் விளக்கப் பட்டது.

நிரம்பவழகியருளை வருமாறு.

—o—

அந்த முத்தியில் பதியும் பசுவும் தரிசனப்பட்டதே யுண்

டாகில் இந்தப் பேதத்திலும் தரிசனப்பட வேண்டாவோ வென்ற பாடாணவாதியை நோக்கி யருளிச்செய்கிறார்.

கண்டிடுங்கண் டனைக்காணா - அவயவங்களைக் காண்கிறகண் தன்னைக் காணமாட்டாது,—கரணங்காணா-அதுவன்றியும் அந்தக் கரணங்கள் தாமெல்லா விடயத்துக்கு மறிவாய் நிற்பினும் தன்னை யறியமாட்டாது,—உயிருங்காணாது - அத்தக்கரணங்களைக் காரியப்படுத்திநிற்கிற பிராணவாயுவுந் தன்னைத் தான் காண மாட்டாது,—உண்டியமருயிர்தானுந் தனைக்காணா- கன்மத்துக் கீடாகச் சரீரத்தைப் பொருந்தி சுகதுக்கங்களை யனுபவிக்கிற வான்மாவுந் தனைத்தான் காணமாட்டாது,—உயிர்க்குயிராமொருவனையுங் காணாதாகும்-தனக்குப் பிராணனாய்நின்றுணர்த்துகிற பரமேசுவரனையும் ஆன்மாக் காணமாட்டாது. ஆனாலந்தச் சிவனை யறியும்படி யேனென்னில்?—கண்டசிவன் றனைக்காட்டியுயிருங்காட்டி-எல்லாத்தையுமறியத்தக்கசிவன் பேதத்திலிந்த வான்மாவுக்குத் தோன்றாமல் நின்று முத்தியில் தன்னையுங்காட்டி யிந்த வான்மாவையுங் காட்டிக்,—கண்ணாகிக் கரணங்கள் காணாமல் நிற்பன் - சிவன் றன்னைக் காண்கைக்கு ஆன்மாவுக்குத் திருஷ்டியுமாய்க் கரணங்களா லறியுமிடத்துத் தோன்றாமலுநிற்பன். அந்தக் கரணங்களாகிய பாசஞானம் நீக்கும்படி யெப்படியென்ற மாணாக்கனை நோக்கி யருளிச்செய்கிறார்.—கொண்டானை யுளத்திற்கொண் டடிகூடிற் பாசங்கூடாது - அப்படி வாதனை மேலிட்டால் தனக்குப் பிராணனாய் நிற்கிற சிவனை யவனுடைய ஞானத்தினாலே தன்னிடத்திலே கண்டு கொண்டு அவனுடைய சீபாதத்தைப் பொருந்தில் மயக்கவிகற்பங்கள் பொருந்தாது,—கூடிடினுங் குறித்தடியினிறத்தே - அந்த மயக்க விகற்பங்கள் கூடித்தாயினும் ஞாதிருவென்கிற தன்மை பொய்ஞானமாய் நிற்கவே முற்பட்ட நிலை கூடும்.

இதற்குப் பிரமாணம் சிவஞானபோதம், கூ-சூ, உ- வெ, "காட்டிய கண்ணே தனைக்காணுக் கண்ணுக்குக், காட்டாயவு ள்ளத்தைக் கண்காணுக்—காட்டிய, வுளளந் தனைக்காணு வுள் ளத்தின் கண்ணுய, கள்ளந்தா னுள்ளத்திற் காண்." என்னுமதுங் கண்டுகொள்க

இதனுற் சொல்லியது, பேதத்தில் மலசம்பந்தமாயிரு க்கையால் பதியையும் பசுவையுந் தரிசிக்கப்பட்ட தில்லையென று முத்தியி லந்த மலம் நீங்குகையா லவ்விரண்டையுந் தரிசிக் கப்படுமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

——o——

கண்டிடுங்கண் டனைக்காணு சரணங்காணு - ஒருவிடயத் தைக் காண்கின்ற கண்ணுனது தன்னியல்பையுங் காணமாட் டாது, தனக்கு முதலாகிய அந்தக் கரணங்களி னியல்பையுங் காணமாட்டாது,—கண்டிடுங் கரணங்க டமைக்காணு வுயிருங் காணு - அறியுந் தன்மையுடைய புத்திமுதலிய புறக்கரணமும், வித்தியா தத்துவமாகிய அகக்கரணமும், தம்மியல்புங் காண மாட்டா;தமக்கு அவ்விடயத்தைக் காட்டி முதலாய் நிற்குமுயி ரையும் அவை காணமாட்டா. அவைபோல,—உண்டியம ருயிர் தானுந் தனைக்காணு வுயிர்க்குயிரா மொருவனையுங் காணுகா கும்-ஒருவிடயங்களைப்பற்றி நிற்கின்ற ஆன்மாவு மவ்வாறே தன் னியல்பையு மறியமாட்டாது, தனக்கு முதலா யுயிர்க் குயிரா யுணர்த்திநிற்கு முதல்வனையுங் காணமாட்டாது. ஆகலின்,— த னைக்காட்டி யுயிருங்காட்டிக் கண்டசிவன் - தற்சோருபத்தை யு மான்மசோருபத்தையும் விளங்கச்செய்து தனக்கொரு கா ட்டின்றி அறிந்தாங் கறிந்து நிற்குஞ்சிவன்,—கண்ணுகிக் கரண

ங்கள் காணுமனிற்பன் - காட்டாகித் தனக்கொரு கரணங்கள் வேண்டாது நிற்பனாதலின்,—கொண்டு அனை யுளத்திற் கண்டு - அச்சிவஞானத்தைக் காட்டாகக்கொண்டு முதல்வனை யவ்வறிவினிற்காணப்பெற்று,—அடிகூடிற் பாசங்கூடாது - திருவடியைத் தலைகூடிற் பாசநீங்கும்,—கூடினுங் குறித்தடியினிறுத்தே-நீங்காதுகலந்திடினுஞ் சிவபாவனையை விடாதுசெய்து சிவனை யவன் றிருவடி ஞானத்தாற் சேறலேபொருத்த முடைத்தென்பதாம்.

இவை நான்குசெய்யுளானு முதற்கூற்றின்பொருள் விளக்கப் பட்டது.

☞ ௯ - சூ, க-அதிகரண முடிந்தது.

மறைஞானதேசிகர் உரை.

மேற் சொல்லிய முறையில் நிலைபெற்றுநிற்கு ஞாதாக்களுக் கனுக்கிரகஞ்செய்யு முறைமை யுணர்த்துகிறார்.

குறிப்படியி னின்றட்ட குணமெட்டுச்சித்தி கோகனகன் முதல்வாழ்வு குலவுபதமெல்லாம், வெறுத்து நெறி யறுவகையு மேலொடுகீழடங்க வெறும்பொ வெனநினைந்திருக்க மேலொடுகீழில்லா, னிறுத்துவ தோர் குணமில்லான் றன்னைபொருவர்க்கு நினைப்பரியா னொன்றுமிலான் நேர்படவந்துள்ளே, பொறுப்பரிய பேரன்பை யருளியதன்வழியே புகுந்திடுவ னெங்குமிலாப் போகத்தைப்புரிந்தே. (௯)

(இ-ள்.) குறிப்ப ஞானசாரிய னுபதேசித்த முறையினின் டியினின்று று,

அட்டகுணம் "தோற்றமநந்த ஞானத்தோ டநந்ததரிசனமும், தோற்றுமனந்த வீரத்தோ டநந்தசுகத்தினுடன், மாற்றியநாமமின்மை கோத்திர மின்மையாயுவின்மை, யேற்றியதோயழி யாவியல்பென்ப ரேந்திழையே" என்றார் பார்த்திபமுடையார்.

எட்டுச்சித்தி விருத்தம். அணுவினுநுண் ணுருவுகொளவணிமாவா மவற்றி னதிமேகத் தியங்கியுந்தோய் வற்றவுடலகிமாத், திணியபெருவனாயெனமெய்ச்சிறப்புறுகைகிரிமா, சிந்தித்தபலமெவையுஞ் சிறப்புறுகை பிராத்தி, பிணைவிழியா ராயிரவ ரொடும்புணர்ச்சிபெறுகை பிரகாமியீசித்தைமாவலியுமடிபேணி, மணமலர்போ லெவராலும் வாஞ்சிக்கப்படுகை வசிவசித்தைவலியராற் றடுப்பரியவாழ்வே" என்றுமொழிதகுறவர் எனவறிக. "அட்டமாசித்திமுத லனைத்துள்ளபேறுகளுங், கட்டமாங்கதிகடரும் பரகதிகாணக்கொடா, மட்டிலாமாலையாய வியாபகமாடிவாகிக், கிட்டலாகாமுத்தியது மற்றிவற்றுற்கிடையாதே".

கோகனகன்முதல்வாழ்வு குலவுபதமெல்லாம் வெறுத்து — பிரமா முதலாயினு ரனுபவிக்கும் போகங்களெல்லாத்தையுஞ் சீயென் றுவர்த்து.

நெறியறுவகையு மேலொடு கிழடங்க — ஆறத்துவாவினையும் பந்தமெனக் கருதி வெறுத்து

வெறும்பொயென நினைந்திருக்க — அவைகள் அபரபோகங் கொடுத்தற் கேதுவாகையால் அசத்தியமெனக் கருதி ஞானாசாரிய னுபதேசித்த நிட்டையைப் பொருந்தி நிற்பையேயாகில் அப்பொழுது

மேலொடுகீழில்லா னிறுத்தவதோர் குணமில்லான் றன்னை யொருவர்க்கு நினைப்பரிய னொன்றுமில்லான்

தான் பூரணனாய்த் தனக் காதியந்தமுமில்லாதவனுமாய்ச் சுத்தனாதலாற் றன்கண் வைக்கப்படுவதொரு வன்னரூபங்களுமில்லாதவனுமாய்த் தான் சாந்தனாதலால் தன்னுண்மையினை யின்னபடியென் றொருவராலுமறிதற் கரியனுமா யாதித்தனெப்படித் தனக்கொன்றை விரும்பிச் செய்யா தான்மாக்களுக் குபகாரஞ் செய்யுமாறுபோல இவனுந் தனக்கென வோர் கைம்மாறு கருதா தான்மாக்களுக் குபகாரஞ் செய்வனாதலால்.

நேர்படவந்துள்ளே பொறுப்பரிய பேரன்பையருளி

இச்சிறப்பினை யுடைய சிவ னிந்த முத்தான்மாவை யனுக்கிரகஞ் செய்தற் பொருட்டாகவும் இவனிடத்திலே தரித்தற்கரிதாகிய சிற்சத்தியைப் பிரகாசிப்பித்து

அதன்வழியே புகுந்திடுவ னெங்குமிலாப் போகத்தைப்புரிந்தே.

அந்தச் சிற்சத்தியுடன் கூடியிருக்கிறவர்களுக்குத் தன்னிடத் துண்டான சுவாநந்தாநுபூதியைத் திளைப்பிப்பன். எ-று.

வெறுத்தென்பதனை நடுநிலைத் தீபகமாக்கி யிருபாலுங் கூட்டுக.

கோகனகன்-சாரணக்குறி.

நினைப்பரியான் எழுவாய்

புரிந்திடுவன் பயனிலை.

இதற்குச் சிவதருமோத்தரத்தும், சர்வ ஞானோத்தரத்து மறிக. (௬)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

---o---

மேல் பிரபஞ்ச வைராக்கியம்வரிற் சிவன் ஞானே அநுக்கிரகம் பண்ணுவனென்பது கூறுகின்றது.

குறித்தடியி னின்றட்ட குணமெட்டுச்சித்தி கோகனகன்முதல்வாழ்வு குலவுபதம் நெறி யறுவகையு மேலோடுகீ ழடங்கவெல்லாம் வெறும் பொய்யென வெறுத்து நினைத்திருக்க-லக்ஷியமாகிய சிவபதத்திலே நின்று பசாசுபத முதலாகப் பிரமபதமீறுக வடைவே பிரதிவி யப்பு தேசோ வாயு வாகாசம் மனசு அகங்காரம் புத்தி இந்த வெட்டு தத்துவங்களிற் கிரமத்திலேயெட்டு பதத்திலு மொவ்வொரு குணமதிகமாக வெண்குணமான வணிமாதியாகிய வெட்டுச்சித்தியையும்,

இதற்குச்சம்மதி.

[illegible]

பிரமாதிகளுடைய ஐஸ்வரியங்களையு மவர்கள் வாழுமுலகங்களையு மந்திரபத முதலான பதங்கள் மந்திரபத வன்ன புவன தத்துவங் கலைகளென்னு மாறத்துவாவு மூர்த்வ மாயை யதோ மாயையெனனு மிரண்டு மாயையினுடைய காரிய மாகையாற் பயனற்ற பொய்யென்று வெறுத்துச் சிவபதத்தையே யிச்சித்து நினைத்திருக்க,—

மேலொடுகீழில்லான் நிறுத்துவதோர் குணமில்லான் றன்மையொருவர்க்கு நினைப்பரியானொன்றுமிலா னேர்படவந்துள்ளே பொறுப்பரிய பேரன்பை யருளியதன்வழியே யெங்குமிலாப்போகத்தைப் புரிந்தேபுகுந்திடுவன - முடியுமடியுங் காண்பரியான் இன்னதொரு குணவானென் றொருத்தரா னிச்சயிக்கப்போகாதவன் தன்னுடைய ஸ்வரூபத்தை இவ்வாறென் றறிவதற் கரியவன் தேகேந்திரியாதி கரணங்க ளொன்றுமில்லாதவன் சந்நிதானம்பண்ணி யான்மாவினிடத்திலே தரித்தற் கரிதாகிய சிவராகதத்தைவிளைத்தந்தச் சிவராகம் வழியாகப் பூமிமுதல் சத்தியலோக பரியந்தத்தில் மநுஷியா நந்தமுதல் பிரமாநந்த முடிவான யானந்தங்க ளெல்லாஞ் சரி இன்றி விளங்குஞ் சிவாநந்தத்தை விளைத் தான்மாவினிடத்திலே வேறறக் கலந்திடுவனென் றிதன்பொருள்.

——

ஞானப்பிரகாசருரை வருமாறு.

——o——

அப்படித் தியானம் பண்ணிச் சிவசத்தி தாரகமாய் நின்று செய்வ துரைக்கின்றார்.

நெறியறுவகையும் - ஆறத்துவாவும்,—வெறும் பொய்யென - அசத்தியம்போற் காணுங் கண்டிதமாக,—புகுந்து - விள

க்கி,—போகத்தை - சிவத்துவ விளக்கமாகுஞ் சிவானந்தப் பெயர்ச் சிவபோகத்தை.

மற்றைய வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

குருவினருளா லறிவதொரு குறியின்க ணுறைத்து நின்று கொண்டு, காலாக்கினி புவனமுத லநாசிருத புவன மீறுயுள்ள எவ்வகைப் பட்ட புவனமும் இதற்குமுன் னனுபவித்துக் கழித்தமையிற் சான்ற சோறெனக்கண் டருவருத்து விட்டு, அறுவகை யத்துவா வுட்பட்ட மூவகைப் பிரபஞ்சமுங் காரணருபத்திற் சிறிதுங் காணப் படாமையாற் பித்திகைவடிவம் காண்பார்க்குக் காணப்படாதா யதன்கண் மறைந்த சித்திர வடிவம் போல முழுப்பொய்யெனக் கண்டு, அவ்வாறு கண்ட காட்சி சலியா திருக்கப் பெறின், அப்பிரபஞ்சத்திற்கு விலக்கணமான ஞான சொருபம் ஆண்டினிது விளங்கித் தோன்றும். தோன்றவே, வறியார்க்கு நிதி வாய்த்தழிப்போல அதன்கட் பெருங்காதன் மீதூறும். அது மீதூறவே "இனபி லினிதென்ற லின்றுண்டே லின்றுண்டா - மன்பினிலேயது" ஆகலான் அவ்வன்பின் வழியே பேரின்ப மயமாய்ப் புசுந்து உயிரின் கண் விளங்கித் தோன்றும் அந்தஞானத்திற்கு முதலாகிய ஞேயமென்பதாம்.

அட்டகுண மெட்டுச் சித்தி கோகனத னென்றது பைசாச பதத்தி னட்டமா சித்தியை நோக்கி எண்மடங் கேற்றமாகிய வட்ட சித்தியுடைய பிரமபதமென வதன்பெருமை கூறியவாறு.

கோகனதன் ஆகுபெயர்.

ஒற்று மிகாமை வடநூன்முடிபு.

வாழ்வு குலவுபதம் திப்பிய மகளிரும் அதிவிசித்திரமாகி ய மாடமு மாளிகையு முதலிய போக்கியப் பொருட் சிறப்புக ளா னழகு பெற்ற பதம்.

ஒற்றுமை பற்றிக் குணங் குணியாக வுபசரிக்கப் பட்டது.

இதனானே ஆணைதரு முலகமெலா மலனைத் தேரா மென் றறிந் தகலுமாறும் அந்நிலையே யாமாறும் வகுத் துணர்த்தி இ ரண்டாங் கூறு வலி யுறுத்தப் பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

இப்படி ஜீவபரமென் றிரண்டில்லை யெல்லாஞ் சிவமே யென்ற பரிணாமவாதியை நோக்கிச் சிவ னின்மலனென்றும் ஆ ன்மா மலசம்பந்தியா யிருப்பனென்று மதா நீங்கினு லொழிந் து சிவ தரிசன முண்டாகாதென்றும் மே லருளிச்செய்கிறார்.

குறித்தடியினின்று - ஆசாரிய னறிவித்தபடியே யறிந்து பரமேஶ்வரனுடைய திருவடியிலே தற்போதஞ் ஜீவியாம லந்த ஞானமேயாய் நின்று,—அட்டகுணமெட்டிச்சித்தி-நற்குணங்க ளாகச் சொல்லப்பட்ட எட்டுக்குணங்களும் நுண்மை பெருமை அறவுநொய்தாயிருத்தல் மிகவுங் கனத்திருத்தல் விண்மிசையே கல் பாரமெய்சேர்தல் வேண்டின வுருவைக் கொள்ளுதல் எங் குந்தானேயாய் நிற்றல் என்னும் எட்டுச் சித்தியும்,—கோசனக ன் முதல்வாழ்வு குலவுபதமெல்லாம் வெறுத்து-பிரமாவினுடை ய ஐஸ்வரிய முதலாகவுள்ள ஐஸ்வரியங்களையும் கொண்டாடப் பட்ட பதங்களையும் உபேட்சித்து,—நெறிபறுவகையும் மேலொ டு கீழடங்க-கீழும் மேலும் எங்கும் நிறைந்து நிற்கத்தக்க சட த்துவாக்களின் வழியடங்கலும்,—வெறும்பொய்யென நினைந்தி

ருக்க - இங்ஙனஞ் சொல்லப்பட்டவை யெல்லாம் சுத்த வசத்தியமென்று இவையித்தை சிவஞானத்தாலே யறிந்து அந்தஞானமாய் நிற்கவே,—மேலொடு கீழில்லான் - முதல் நடு விறுதி மூன்று மில்லாதவனுமாய,—நிறுத்தவதோர் குணமில்லான - சொல்லப்பட்டதொரு குணங்களுமில்லாதநிர்க்குணனுமாய்,—தன்னையொருவற்கும் நினைப்பரிப்பான் - தன்னுண்மையைத் தானறிவிக்க வறியுமதொழிந்து ஒருவராலு மறியப் படாதவனுமாய்,—ஒன்றுமிலான் - சர்வமுந் தானாய் நிற்கச்செய்தே ஒன்றுந் தானல்லனுமாய் நிற்கிறவன்,—நேர்படவந்துள்ளே பொறுப்பரிய பேரன்பையருளி - வேதத்திற் றேன்றும லப்பிரகாசமாய் நின்றமுதல் தானே முத்தியில் பிரகாசித்து இவனுக்குள்ளே பொறுத்தற்கரிய மிகுத்த பத்தியையு முண்டாக்கி அதன் வழியே புகுந்திடுவன்,—எங்குமிலாப் போகத்தைப் புரிந்தே - அந்தப் பெரிய பத்திவழியாகத் தானுஞ் சென்றுகூடி எவ்விடத்திலு மில்லாத சிவபோகத்தைக் கொடாநிற்பன்.

இதற்குப் பிரமாணம், சங்கற்பநிராகரணம், "சத்தியுஞ் சிவமுந் தாமேறுசுருமென் - றிதகிறனுணர்வுவங் கெய்துவதெவர்க்கோ - தமக்கேயென்னிற் றமுணராமையு - மமைப்பறவுணர்தலு மவர்க்கடையன்றே" என்றும், சிவஞானபோதம், ௯-சூ, ௩-வெ, "நிற்குணனாய்நின்மலனாய் நித்தியானந்தனாய்த், தற்பரமாய்நின்ற தனிமுதல்வ—னற்புதம்போ, லானவறிவாயளவிறந்து தோன்றுமே, வானேமுதல்களையின் வந்து" என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது,ஆன்மா பாசமாகிய பிரபஞ்சத்தையசத்தென்றறிந்து நீங்கிச் சத்தாகிய சிவம் பிரகாசிக்குமெனனுமுறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

அடியிற் குறித்துநின்று - குருவினருளா லறிவதோர் குறியின்கணுறைத்து நின்றுகொண்டு,—அட்டகுண மெட்டுச்சித்தி-பைசாசபதத்தி னட்டமாசித்தியை நோக்கி யெண்மடங் கேற்றமாகிய வட்டசித்தியையுடைய,—கோகனகன முதல்-பிரமபத முதலியவற்றின்,—வாழ்வு குலவுபதமெல்லாம் வெறுத்து-திப்பிய மகளிரு மதிவிசித்திர மாகிய மாடமு மாளிகையு முதலிய போக்கியப்பொருட் சிறப்புகளா னழகுபெற்ற பதமாகிய காலாக்கினி புவனமுத லநாசிருதபுவனமீறாகிய வெவ்வகைப்பட்ட புவனமும் இதற்குமுன்னனுபவித்துக் கழித்தமையிற் கான்றசோறெனக் கொண் டருவருத்துவிட்டு,—நெறியறுவகையு மேலொடு கீழடங்கவெறும் பொய்யென நினைந்திருக்க,— அறுவகை யத்துவாவுட்பட்ட ஏழுவகைப்பிரவஞ்சமுங் காரணரூபத்திற் சிறிதுங் காணப்படாமையான் பித்திகைவடிவங் காண்பார்க்குக் காணப்படாதா யதன்கண்மறைந்த சித்திரவடிவம்போல முழுப்பொய்யெனக்கண்டு அவ்வாறு கண்டகாட்சி சலியாதிருக்கப்பெறின்,—மேலொடு கீழில்லான் - மேலொடு கீழில்லானாகியும்,—நிறுத்துவதோர் குணமில்லான் - குறித்தறிவதொரு குணமில்லானாகியும்,—தன்னையொருவர்க்கு நினைப்பரியான்- தன்னையொருவர்க்கு முணர்தற் கரியானாகியும்,—ஒன்றுமிலான் - ஒன்றுமிலனாகியும்,—உள்ளேவந்து நேர்பட - பிரவஞ்சத்திற் கிலக்கணமான ஞானசொரூப மாண்டினிது விளங்கித்தோன்றும். தோன்றவே,—பொறுப்பரிய பேரனபையருளி-வறியார்க்கு நிதிவாய்த்தழிப்போலப் பெருங்காதன் மீதூறும்,—அதுமீதூறவே, யதன்வழியே, "இன்பினினிதென்ற லின்றுண்டே லின்றுண்டா-மன்பினிலையேயது" ஆகலான் அவ்வன்பின்வழியே,— எங்குமிலா

ப் போகத்தைப் புரிந்தே - எவ்விடத்து மறிதற்கரிய பேரின்ப மயமாய்,—புகுந்திடுவன - புகுந் துயிரின்கண் விளங்கித் தோன்று மந்தஞானத்திற்கு முதலாகியஞேயம்.

'இதனுனே யாசைதரு முலகமெலாம் அலகைத்தேராமென்றறிந் தகலுமாறு மந்நிலையேயாமாறும்' பகுத்துணர்த்த இரண்டாங் கூறு வலியுறுத்தப் பட்டது.

☞ கூ-சூ, உ-ம், அதிகரண முடிந்தது.

மறைஞானதேசிகர் உரை.

மேன் மாயாவாதி ஜீவபரங்களை யொன்றென்ருேதி யிருக்க நீ ரிரண்டாகக் கூறிய தென்னென்று வினவ வுத்தர முணர்த்துகிறுர்.

கண்டவிவை யல்லேனு னென்றகன்றுகாணுக் கழி பரமு நானல்லே னெனக்கருதிக்கசிந்த,தொண்டினெடு முளத்தவன்ரு னின்றகலப்பாலே சோகமெனப் பாவிக்கத் தோன்றுவன்வேறன்றி, விண்டகலு மலங்களெலாங் கருடத்தியானத்தின் விடமொழியு மதுபோல விமலதையுமடையும், பண்டைமறை களுமதுநா னுனெனென்று பாவிக்கச் சொல்லுவதிப் பாவத்தைக் காணே. (எ)

(இ-ள்) கண்டவிவை யல்லேனுனென்ற கன்று — ஆன்மாவானவ னிது விதுவென்று சுட்டியறியப்பட்டவைகளெல்லா வற்றையு மிதுநா னல்லவென் றதற்கு வேருய்

காணாச்சுழிபரமு நானல்லேனெனக்கருதி	ஆன்மபோதத்துக்கெட்டாதிருக்கிற மேலான பரமசிவனும் நானல்லவென் றறிந்து. என்னவே, பாசத்துக்கும் பதிக்கும் வேறாயிருப்பதோ ரான்மா வுண்டென் றறிவிப்பதாயிற்று.
கசிந்ததொண்டினொடு முளத்தவன்றானின்றகலப்பாலே	அந்தச் சிவன்றானாகாநின்ற அடிமைத்திறத்துடன் கூடிநின்றவான்மா விடத்திலெள்ளுக்கு ளெண்ணெய்போலவும் பூவினிடத்துக் கந்தமானது பொருந்தி நின்றாற்போலவு முள்ளும் புறம்புங் கலந்துநின்ற வைக்கியத்தினாலே
சோகமெனப் பாவிக்கத் தோன்றுவன்வேறன்றி	நானந்தச் சிவனாகா நின்றேனென் றவனறிந்து பாவிக்க அப்பொழுது அவனிடத்தில் அநநியமாய்நின்ற சிவன்றானே பிரகாசியாநிற்பன்.

அச்சோகம் பாவனை ஆன்மாப் பரமான்மாவைக் கூடினவிடத்துத் தானென்பதொரு முதலின்றி யவனுடனே யிலயித்தொன்றாய்ப் போமென்னும் வேதாந்தி மதம்போல வன்று. இங்ஙனஞ் சிவம் பிரகாசிக்கவே!

விண்டகலுமலங்களெலாம்	அநாதியாக விவனிடத்திற் செறிந்து நீங்காதிருக்கிற மலங்களெல்லாம் விட்டுப்போகாநிற்கும். அஃதென்போல வென்னில்?
கருடத்தியானத்தின் விடமொழியுமதுபோல	பாவனையிற் பட்ட கருடனாற் பாம்பொழியும். பாவனையே செய்யும் பலம் என்பதனாலிந்தப் பாவனை பண்ணவே மலமானவைகணீங்குமென வறிக.

விமலதையு மடையும் — ஆகலா லிந்த வான்மா சுத்தனும். அஃதாவது, நின்மலத்துவத்தைப் பொருந்தா நிற்கும்.

பண்டைமறைகளு மது நானானேனென்று பாவிக்கச் சொல்லுவதிப் பாவகத்தைக்காணே. — இந்தப் பாவனையைக்காண பழயதாகவிருக்கிற வேதங்கள் சோகம் பாவிக்கச் சொல்லுகிறது நீயதற்குப் பொருள்கோ ளறியாமல் விபரீதமாகக்கொண்டாய்காண். ஆதலாலது கூடாது. எ-று.

ஸ: - அவன், அஹம் - நான். இதனைச் சோகமென்றார். இதுவடமொழி. இது செய்யுட்கண்ணும் வரப்பெறும்.

"செந்தமிழ்ச்செய்யுட் டெரித்துணர்த்துஞ் செய்யுட்கண் வந்தவடமொழியை மாற்றுதே—சந்தர், வழுவாமற் கொண்டியற்று மாண்பினார்க் குண்டோ, தழுவாம லிற்குந் தமிழ்" எனவறிக.

வழித்தலைப்படுவான் சுழல்கின்றே னுன்னைபோ லென்னைப் பாவிக்கமாட்டேன் எனவறிக.

இதற்கு வாதுளம் சித்தாந்த சம்போதியினு மறிக. (எ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் வேதத்திலே சோகமென்றதனு லொன்றென்ற தன்று பிரிவற்ற வநுபவாதிசயத்தினாலே யது நானென்றதே யென்னு முறைமையும் பேதமாகச் சிவனுக்கு சமனாயிருக்கு மென்னு மந்த மதிகளை நிராகரித்து சிவ ஜீவர்களுக்குத் தாதாத்மியமுங் கூறுகின்றது.

கண்டவிவை யல்லே ஞானென்றகன்று - ஆன்மபோதத்தி ஞற் பிரித் தறியப்பட்டதெல்லா மென்னுடைய ஸ்வரூபமல்ல வென்று நீங்கி,—காணுக்சழிபரமு நானல்லேனெனக்கருதி- ஆன்மபோதத்திஞலே காணப்படாமல் விஸ்வாதீதஞய் நிற்கிற சிவனும் நானல்லனென்று புத்திபண்ணி,—கசிந்த தொண்டி ஞெடுமுளத்தவன்ரு னின்றகலப்பாலே சோகமெனப் பாவிக்க ததோன்றுவன்வேறன்றி விண்டகலு மலங்களெல்லாம் விமல தையையடையக் கருடத்தியானத்தால் விடமொழியுமதுபோல-கசிந்தசம்பந்தத்தினுடனே ஆனமாவிலே ஜீவன் வேறின்மை யாகி நின்றமையா லந்தச் சிவஞனென்று பாவனைபண்ண வான்மாவிலே வேறறப் பிரகாசிப்பன். சிவபாவனைபண்ணலே யாணவாதி பாசங்களெல்லா நீங்கிப்போ யான்மா நின்மலத்துவத்தைப் பொருந்துவன். அதெதன்போல வென்னில்? கருடபாவனையிஞலே விடநீங்குமாப்போல,—பண்டைமறைகளு மதுநாஞனேனென்றுபாவிக்கச்சொல்லுவ திப்பாவகத்தைக்காணே— பழயதாகிய வேதங்களு மதுநாஞனேனென்று பாவனைபண்ணச் சொன்னது நாமிப்பொழுது சொன்ன பாவனையைக் காணென் றிதன்பொருள்.

ஏகார மீற்றசை.

ஞானப்பிரகாசருணா வருமாறு.

———o———

சிவபோக நிமித்தமாகுங் குலைந்த சிவசமாதிகூடும் பொருட்டுப் பிரபஞ்சம் பொய் யென நினைந்திருத்தன் மாத்திரம் போதுமோ வென்னச் சித்தாந்த சிவோகம்பாவனைத் திவக வேதாந்த சோகம் பாவனை வேண்டுமென்று விளம்புகின்ருர்.

கண்டவிவை-தேகாதிப் பிரபஞ்சந் தாக்கி வாச்சியப்பொருளாய் மயங்கி யிருக்குங் குருலிங்க சங்கமாதிகள்,—

அல்லேனுன் - நித்திய நிலையங் குலையுங் கண்டிக வடிவ தடத்த லக்ஷண முற்ற வயமிதம் பதவாச்சியப் பொருளாய்ச் சாலம்ப சிவ யோக விஷயமாய்த் தடத்தலக்ஷண சிவபதவாச்சியப்பொருட் சிவக்குறி பொறிக்கு மிடமாதலானும் வாச்சியப் பொருள் விட் டிலக்கியப் பொருட் சுவரூப லக்ஷண சிற்பரமிரண்டு மெடுத்துத் தொடுத் துரைத்தாலுஞ் சிவோயஞ் சிவமிதமென்று படர்க்கைப்பொருட் சுவரூப லக்ஷண சிவப்பொருளாய்ப் பாவிக்கப்பட்டு சிவோகமென்று தன்மைப் பொருட் சிவப்பொருளாய்த் தியானிக்கக் கிட்டித் தட்டாதாதலானும் அகம்பதத்தில் வாச்சியப்பொருட்டடத்தலக்ஷணத் தன்மைப் பொருட் பூதான்மாதி மந்திரானமாந்த பஞ்சான்மக் குறிதாண்டிச் சிட்டவிலக்கியப் பொருட் சுவரூப லக்ஷணத்தன்மைப் பொருட் சின்மாத்தி ரான்மாவாய்ச் சிவபதத்தில் வாச்சியப் பொருட்டடத்த லக்ஷணத் தன்மைப் பொருட் பிரமாதி சாங்க சதாசிவாந்த பஞ்சேசுவரக் குறிதாண்டிச் சிட்ட விலக்கியப் பொருட் சுவரூப லக்ஷணத் தன்மைப் பொருட் பரக்குறி பதித்துப் பின்னஸ்மிபதத்தில் வாச்சியப்பொருட் டடத்த லக்ஷணத்தன்மைப்பொருட் டியான சமாதி யுபாதி யுற்ற சின்மாத்தி ரான்மாக் குறி பரக்குறி யிருகுறிகாண்டிச் சிஷ்ட விலக்கியப் பொருட் சுவரூப லக்ஷணத் தன்மைப் பொருட் சிவக்குறி பொறிக்கப் பாத்திரவானுகையால்,—

நானன்றென் றகன்று பஞ்சவித சாலம்ப சிவயோக மார்க்கத் தொரு மார்க்கத்தால் முப்பத வாச்சியப்பொருள் கடந் துன்மனேயுற்று,—

காணுக் கழிபரமும்-பரோக்ஷ வநாதிமுத்த பரசிவமும்,

நானல்லேன் படர்க்கைப்பொருளாதலாற் றன்மைப்பொருளா கிய,—

நானல்லேன் எனக் கருதி - சிவோயஞ் சிவமிதமென்று சிந்திக்கலாம், சிவோகமென்று சிந்திக்கப்படாது. ஆரோபிதமா யப்படியுஞ் சிந்திக்கலாமென்றுஞ் சிந்தித்து,—

கசிந்த உளத்து - ஆன்மாவில்,—

தொண்டினொடும் - சமயதீட்சையிற் சைவர் செயற்கை யாய்ப் பாவிக்கு மியற்கையாய் வைஷ்ணவ ரெப்போதும் பாவி க்கும் தாசோகம் பாவனு வாசனையோடு,—

அவன்றான் - சிவன்றான்,—

நின்ற கலப்பாலே - நிலைபெற்ற சாங்கரியத்தாலே சிவோக மென்று சிறப்பித்துச் சிந்திக்சப்படான். ஏவப்படுந் தாசத் தன்மையுமேவுஞ் சிவத்தன்மையும் என்மாதா மலடியென்பது போற் பகைத் தேகிபவித்துப் பாவிக்கப் படாதாகையால். ஆகி லெப்படி ?—

சோகமெனப் பாவிக்க - இரண்டுங்கெட்ட வைஷ்ணவ தா சோகம் பாவனு வாசனை தடைத்துச் சித்தாந்தச் சிறப்புச் சி வோகம் பாவனைத் தீபக வேதாந்தப் பொதுச்சோகம் பாவனை யஸ்மியந்தத் தனைத்துச் சோகமென்று பண்ண,—

தோன்றுவன் வேறின்றி - தாசோகம் பாவனு வாசனை த ள்ளி யந்தத் தஸ்மியனைத்துச் சிந்தாந்தச் சிறப்புச் சிவோகம் பாவனை பண்ணப் பண்ணிக் குறியொப்பித்து வேற்றுக் குறியி ன்றி சீவன் முத்தியிற் சமாதி முற்றிச் சாட்சாத் கரிக்கப்படுவ ன். நீரிட்போது செப்பியது செப்பமன்று. ஸ்வரூப சிவபாவனை சத்தியமானதுபோ லாரோபித சிவரூப சிவபாவனை சத்தியம ன் றசத்தியமே! அசத்திய மெப்படிப் பலங்கொடுக்கும்? சத்தி யம் நீ சாற்றியது. முத்திசெய் சிவாவிர்ப்பாவ பாசதிர பாவ

னையாகலாற் சத்திய சிவ பாவனையினாற்போல அசத்திய சிவபாவனையினாலும்,—

கருடத் தியானத்தால் விடமொழியு மதுபோல மலங்களெல்லாம் விண்டகலும் -பிரியாது பிரிந்து நீங்காது நீங்கும்,—

விமலதையு மடையும் - சிவத்துவாபி வியத்தியும் ஸ்திதஸ்தாபிதமாம்.

விண்டகலு மென்பதனால் முத்திபலமும், விமலத்தையு மென்பதனால் வியத்திபலமுமவிளம்பப்பட்டன.

தொண்டினேடென்பதனைநின்றகலப்பாலெனபதோடு விசேஷியாமற் சிலர் பாவிக்க வெனபதோடு படுதநி விசேஷித்தார்கள் சிவோகந் தாசனென்று சிந்திப்பார்களாய் மன்மாதா வந்தியை யென்றும் வழக்குரைப் பார்கள்,—

பண்டை மறைகளும் -
பிரவாகா நாதிச் சுருதிகளும்.

உம்மையினாற் சில விடத்து சிவாகமங்களும்,—

அது நானேனென்று பாவிக்கச் சொல்லுவது-இதுத்தமமென்று தியானிக்கச் செப்புவது,—

இப்பாவகத்தைக் காணே - இச்சிவோகம பாவனைத் தீபக சோகம்பாவனையைத் தானே,—

சோகமென்பது பரோக்ஷாபரோக்ஷப்பகைப்பொருள், ஐக்கியப் பிராந்தி யாகையால்.

> “தாஸோஹ மிதிஸம்மோஹம் ஸோஹமேவ பரிப்ரம:
> அஹமேவ பரிப்ராந்தி தஸ்மாத்ரீணி பரித்யஜேத்.”

என்று சில சிவாகமத்திற் றள்ளியிருத்தலால் அப்படிச் சிவோகம் பாவனையே பகையாமற் பாவிக்கப் படுமென்று படித்திருந்தாலுஞ் சோயம் தேவதத்த னென்பதுபோற் சுருதிச்சொ

ற் சித்த விவேகத்திஞற் சிவோகம் பாவனைத் தீபமாகச் சோக மென்று மொருவழி சொல்லலாமென்று தாற்பரியம்.

சிவஞானயோகியருரை வருமாறு.

———0———

உடம்பே நானென்றும் அது நீங்கியவழிப் பிரமம் நானென்றும் இங்ஙனம் விபரீதமாக வுணர்கின்றன. உயிராவது சுட்டுணர் வுட்பட்ட வப்பாசமு மன்று சுட்டுணர் விறந்துநின்றவப் பதிப்பொருளு மன்று இரண்டற்கும் வேறெனக் கண்டு, வேருகிய பாசத்தை மேற் கூறிய வாற்ரு லொருவி, ஏனைப் பதிப் பொருள் வேருயினும் வியாப்பிய வியாபக பாவகத்தாற் கண்ணொளியும் ஞாயிற்றி னொளியும் போல வேற்றுமை சிறிதுந் தோன்ருதவாறு ஒற்றித்து நிற்றற்குரிய தனது தொண்டினையும் இறைவன் கலப்பினையும் நோக்கி நின்று, கருடோகம் பாவனை யொருவன் செய்யப் பெறுமாயின், அக்கருட னம்மாந்திரிகனுக்கு வேருதலின்றி யத்து விதமாய்த் தோன்றி விடத்தை நீக்கித் தெளிவு செய்யு மாறுபோல, சிவனு மிவனில் வேருதலின்றி அத்து விதமாய்த் தோன்றி மலங்களை நீக்கிச் சுத்தனுகச் செய்வன். வேதாந்த மகாவாக்கியத் திற்கும் இதுவே பொருளாகக் கொள்க வென்பதாம்.

இப்பாவனை யின்றி யமையாச் சிறப்பிற்றென்ப துணர்த்துவார், பயனு முடன் கூறினார்.

பரமுமென்ற வும்மை இறந்தது தழீஇது.

பரம் அவனெனத் திணைமயங்கிற்று.

தொண்டாவது சார்ந்ததனவண்ணமா மியல் புடைய வுயிர் கழிபரமு நானல்லே னெனக் கருதியவழி முன்போல முனைத்தலின்றி ஓங்குணர்வி னுள்ளடங்கி அதன் வழித் தாய் நிற்றல்.

முனைத்து நின்று செய்யும் உலகத் தொண்டினீக்குதற்குக் கசிந்த தொண்டென விசேடித்தார்.

வேறாய வழியுஞ் சோகமெனப் பாவித்தற் குறிய வினைபு இருவர் மாட்டு முண்மை விளக்குவார், கசிந்த தொண்டினொடு முளத்தவன்றா னின்ற கலப்பாலே யென்றார்.

கருடபாவனையை யெடுத்துக் காட்டியதும் அதன்கணைய நீக்குதற் பொருட் டென்பது.

எனவே கருடோகமெனப் பாவிக்கு மத்துவித பாவனைக்கு மந்திரத்தின தாற்றலும் அவ்வாற்றல்வழி நின்று பாவிக்கும் மாந்திரிகன தாற்றலும் ஒருகலையான் வேண்டப்பட்டு ஆண்டைக்கு நிலை பெறுமாறு போல, சிவோக மெனப் பாவித்துநிற்கு மத்துவித நிலைக்கு இறைவனது கலப்பும் இவனது தொண்டும் ஒருகலையான் வேண்டப் படுமென்பது போந்தமையால், அங்ஙனந் தொண்டு செய்தற் குரிய ஆன்மாவினது ஞானக் கிரியைகளும் கலத்தற்குரிய இறைவன் ஞானக்கிரியைகளும் ஆண்டுக் கேடின்றி நிலைபெறு மென்பதூஉம் அருத்தியா னுணர்ந்து கொள்க.

“உன்றன் குலமிரண் டென்குலமிரண்டுங் குறுகிடா வண்ண மின்பமா யென்பாற் கூத்தையுங் கொண்ட தெப்படி” என வியந்து கூறிய தூஉம் இவ்வுண்மை நோக்கி யென்க.

இப்பெற்றித் தாகிய சுத்தாத்துவிதவுண்மை யுணரமாட்டாதார், ஒருபொருள் மற்றொரு பொருளாதல் யாண்டு மின்மையின் அது நானேனென்னு மொருவார்த்தைப் பொருள் படுமாறு யாங்ஙனமென் றுசங்கித் தார்க்கு, ஒன்றுகெட்டு ஒன்றா மெனக் கொண்டு பரிணாமங் கூறுவாரும், அது நானென்னு மிருபெயரும் விட்டும் விடாத வாகுபெயரெனக் கொண்டு கேவலாத்துவிதங் கூறுவாரும், அவற்றுள் ஒன்றனை மாத்திர மாகு

பெயரெனக் கொண்டு விசிட்டாத்து விதங் கூறுவாருமா யிடர்ப் படுவர்.

அங்ஙன மிடர்ப்பட் டுரைப்பன வெல்லாம் பொருளல்ல வென்பார் 'பண்டை மறைகளு மதுநானேனே யென்று பாவிக்கச் சொல்லுவதிப் பாவகத்தைக் காணே' என்றார்.

எனவே, வேதாந்த மகா வாக்கியமுஞ் சித்தாந்த மகாவாக்கியமும் பொருளா லொன்றென்ப தூஉம் பெறப் பட்டது.

ஈண்டுக் கருடனென்றது கருடனுக் கதிதெய்வமாகிய மந்திர சொரூபத்தை யாகலின் அப்பாவனை மெய்யாதற் கிழுக்கின்மை யுணர்க.

இதனானே திரு வஞ்செழுத்தை விதிப்படி யுச்சரிப் பார்க்கு வேண்டப்படும் பாவனை கூறப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

அது நானென்று சாஸ்திரஞ் சொல்லுகைச் செய்தே நீரிதை யிரண்டாகச் சொல்லுவானேனென்ற பரிணாமவாதியை நோக்கி மே லருளிச்செய்கிறார்.

கண்டவிவை நானல்லே னென்றகன்று - தேகாதிப் பிரபஞ்சத்தை இது நானல்லவென்று நிபதிபண்ணி அந்தப் பிரபஞ்சத்துக்குத் தான் வேறாய். தான் வேறென்றதெதனாற்பு, அப்படியறிந்து நீங்கினதா லல்லோ அந்தச் சிவமெனவில்?—காணுக் கழிபரமு நானலலே னெனக்கருதி - வாக்கு மனாதீதமாயிருக்கிற மேலான சிவமுமல்ல நானென்றறிந்து,—கசிந்த தொண்டினொடு முளத்தவன்றா னின்றகலப்பாலே- பக்திபண்ணுகிற வடிமைத்திறத்துடனே பொருந்தின வான்மாவிலே யவன்கூடிநின்ற வயிக்கியத்தினால்,—சோகமெனப் பாவிக்கத் தோனறு

வன்வேறின்றி - நானவனென்றே தியானித்து நிற்கப் பேதத்திற் றோன்றாமல் அப்பிரகாசமாய்நின்ற சிவன் இப்பொழுதுவேறறநின்று பிரகாசியா நிற்பன்,—விண்டகலு மலங்களெலாம் - அவனப்படிப் பிரகாசிக்கவே அநாதியே பொருந்திநிற்கிற மலங்களெல்லாம் விட்டுநீங்காநிற்கும். அதென்போலவென்னில்?—கருடத்தியானத்தில் விடமொழியு மதுபோல விமலதையுமடையும்-விஷந்தீண்டினவன் றன்னைக் கருடனாகப் பாவிக்க அந்தப் பாவகந்தினாலே அவனுக்குண்டாகிய விஷந் தீர்ந்தாப்போல் இவனுமந்த ஜீவனென்று சோகம் பாவஞ்செய்ய நின்மலத்துவமும் பொருந்தா நிற்கும்,—பண்டைமறைகளு மதுநானேனென்று பாவிக்கச் சொல்லுவதிப் பாவகத்தைக்காணே-பழமையாய்வருகிற வேதங்களும் தத்துவமசியென்கிற மகாவாக்கியத்தினாலே அது நானேனென்று தியானிக்கச் சொல்லுவதும் இந்தப் பாவனை தன்னைக்காண்

இதற்குப் பிரமாணம் சிவஞானபோதம்-கூ - சூ, ரு-வெ, “கண்டதையன்றன் றெனவிட்டுக்கண்டசத்தா, யண்டனையான்மாவி னுய்ந்துணரப்—பண்டணைந்த, வூனத்தைத் தான்விடுமா றுத்தமனிலொண்கருட, தியானத்திற் றீர்விடம்போற் றான்” என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, சிவன் ஆன்மாவிலே நின்ற கலப்பை யறிந்து தானவனுக்கடிமையாய்ச் சோகம் பாவஞ் செய்யவே தனக்குண்டான பாச நீங்குமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

(உடம்பே நானென்று மதுநீங்கியவழிப் பிரமநானென்று மிங்ஙனம் விபரீதமாக வுணர்கின்ற வுயிராவது) கண்டவிவைய

ல்லேனுன் - சுட்டுணர் வுட்பட்ட வப்பாசமுமன்று,—காணுக் கழிபரமு நானல்லேன் - சுட்டுணர் விறந்த வப் பதிப்பொருளு மன்று,—என்றகன்று-இரண்டிற்கும் வேறெனக்கண்டு வேறாகி யபாசத்தை மேற்கூறியவாற்றாலொருவி,—கருதிஅவன்றாளைத் தக்கப்பாலே நின்ற,—ஏனைப்பதிப்பொருள் வேறாயினும் வியாப் பியவியாபகத்தாற் கண்ணொளியு நாயிற்றொளியும்போலவேற் றுமை சிறிதுந் தோன்றாதவாறு ஒற்றித்து நிற்றற்குறிய,—கசி ந்ததொண்டினொடுமெனக் கருதி - தனதுதொண்டினையு மிறை வன்கலப்பினையு நோக்கி நின்று,—சோகமெனப் பாவிக்க - க ருடோகம் பாவனைபோல சிவோகம் பாவனை யொருவன செய் யப்பெறுமாயின்,—கருட தியானத்தால் விடமொழியு மதுபோ ல-அக்கருட னம்மாந்திரிகனுக்குவேறாதலின்றி யத்துவிதமாய்த் தோன்றி விடத்தை நீக்கித் தெளிவு செய்யுமாறுபோல,—வேறி னறிந்த தோன்றுவன் - சிவனு மிவனில்வேறாதலின்றி யத்துவித மாய்த் தோன்றி,—மலங்களெல்லாம் விண்டகலும் விமலதை யு மடையும்-மலங்களை நீக்கிச் சுத்தனாகச் செய்வன்,—பண்டை மறைகளுமது நானேனென்று பாவிக்கச் சொல்லுவது இப்பா வகத்தைக்க ணே-வேதாந்த மகாவாக்கியத்திற்கு மிதுவேபொ ருளாகக் கொள்கவென்பதாம்.

இதனானே திருவஞ்செழுத்தை விதிப்படி யுச்சரிப்பார்க்கு வேண்டப்படும் பாவனை கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

இந்நிலை மயங்கிற்றாகின் மேலோ ருபாயநிட்டை யுணர்த்துகின்றார்.

அஞ்செழுத்தா லான்மாவை யரனுடையபரிசு ம
தனுருவு மஞ்செழுத்தா லமைந்தமையு மறிந்திட், டஞ்

செழுத்தா லங்ககர நியாசம்பண்ணி யான்மாவி லஞ்செழுத்தா லிதயத்தர்ச்சித், தஞ்செழுத்தாற் குண்டலியின னலையோம்பி யணைவரியகோதண்ட மடைந்தருளின்வழிநின், றஞ்செழுத்தை விதிப்படி யுச்சரிக்கமதியருக்க னணையரவம் போற்றோன்று மான்மாவிலரனே (அ)

(இ-ள்.) அஞ்செழுத்தா லான்மாவைய ரனுடைய பரிசும்

ஸ்ரீபஞ்சாக்கரத்தினுள்ளே சிவமுஞ் சத்தியு முந்திநின் றான்மாவை நடுவேவைத்த முறைமையு மறிந்து, என்னவே! சிவ னான்மாக்கள் பாசத்தை நீக்கி யனுக்கிரகஞ் செய்கையா லான்மாவைச் சிவனுடைமை யென்றார்.

“ஊனநடன மொருபா லொருபாலா - ஞானநடந் தானடுவேநாடு. “சிவமுதலே யாமாறு சேருமேற் றீரும் - பவமிதுவே யோதும்படி” என்றா ருமாபதி சிவாசாரியார்.

“சிவஞ்சத்தியான்மாத் திரோதந்திமிரஞ்-சிவமுதலைந்துஞ் சிந்தைசெய்” என்றா ரெமதுகுரவர்.

“யாதனுருபிற் கூறிற்றாயினும் பொருள்சேர் மருங்கில் வேற்றுமைசாரும்” என்னு மிலக்கணத்தால் மூன்றனுருபு ஏழாமுருபாயிற் றெனவறிக.

அரனுருவு மஞ்செழுத்தா லமைந்தமையு மறிந்திட்டு

சகள நிட்களமாகிய சதாசிவமூர்த்திக்குஞ் சகளமூர்த்திகளுக்கும் ஸ்ரீபஞ்சாக்கரமே திருமேனியான முறைமையினையு மறிந்து, அவை வருமாறு,—

யகாரம் லிங்கம். வகாரம் நாளம், சிகாரம் மேற்பதுமம், மகாரங் கண்டம், நகாரங் கீழ்ப்பதுமம். நகாரஞ் சத்தியோசாதம், மகாரம் வாமம், சிகாரம் அகோரம், வகாரந் தற்புரு

டம், யகாரம் ஈசானவத்திரம், ஆகத் திருமேனியான வாறு காண்க.

“யகார மிலிங்கமாம் நாளம் வகாரஞ், சிகாரமேற் பீடந் தெரிக்கின்—மகாரந்தான், கண்டமேயாகுங் கவின்று ரடிப்பீடம், பண்டிகழு நஃகாரமே யாம்.” “நகாரமேசத்தியோ சாதமுக நாடின், வகாரந்தான் வாம மெனமதிக்கச்—சிகாரம், அகோரம்வகாரந் தற்புடமாகும், யகார மீசானமுக மென்” என்றுரொமதுகுரவர்.

மேற் சகளத்தைத் தரிசிக்கிறது; நகாரம் பாதம், மகாரம் வயிறு, சிகாரந்தோள்கள், வகாரம் முகம், யகாரந் திருமுடி” எனவறிக.

“நவ்விரண்டுகாலதாய் நவின்றமவ்வும் வயிரதாய்ச், சிவ்விரண்டுதோள்களாய்ச் சிறந்தவவ்வும்வாயதாய், யவ்வும்யவவு முடியதா யெழுந்தசெம்மல் நேர்மையைச், செம்மையோர்ந்து நிற்பதே சிவாயவைஞ்செழுத்துமே” எனவறிக.

இவ்விரண்டும் பஞ்சாக்கர தரிசனமென வறிக.

அஞ்செழுத்தா லங்ககரநியாசம் பண்ணி

ஸ்ரீ பஞ்சாக்கரத்தாலே கரந்நியாச மங்கந்நியாசங்களைப் பண்ணி. அஃதாவது:—

கநிட்டாதி யங்குட்டாந்தமான கரங்களிலே யகார வகார மகார சிகார நகாரங்களைச் சங்கார ந்யாசம்பண்ணி, பாத முதல் தலையீறான வங்கங்களிலே யவ்வெழுத்துக்களை யடைவே நியாசம்பண்ணி இருதய முதலிய தானங்களிலே சடங்கங்களை நியசித்து, மற்றவங்கங்களிலே பிரணவத்தை நியசித்து,

ஆன்மாவி னிதயத்தஞ்செழுத்தா லர்ச்சித்து

ஆனமாவி னிதயத் தஞ்செழுத்தா லர்ச்சித் தெனப் பதமாறுக. சூரியகோடிப் பிரபை போன்ற ஆன்மாவினது இதய கமலத்திலே பஞ்சாக்கரமே வடிவான சிவனை யெட்

டங்குல வுயரத்தையுந் தனக்கு வேண்டினதொரு நிறத்தினையு
ஞ் சிவலிங்கமாகக் கற்பித் தஞ்செழுத்தாற் பூசைபண்ணி,

அஞ்செழுத்தாற் குண்டலியி னனலையோம்பி — குண்டலியெனப் பெயரையுடைய நாபி த்தானத்தே யிருக்கிற நாடி யட்டகோண முமாய்ப் பாம்பானது மண்டலமாகப் பேழைசெய் திருக்கிறதைக் குண்டமாகப் பாவித் ததிலுளே ஞானாக்கினிநின்று சொலிக்கிறதாகப் பாவித் தந்த ஞானவனலைச் சுழுமுனை நாடியிலே மேலே கொண்டுபோய் பிரமரந்திரத்திலே வைத்து, அந்த வனற்பொறியோடு மேகோபவிக்கிறதாகப் பாவித்து, அதினுலேதான் சுத்தனாய்க் கீழேயிறக்கி நாபியி லக்கினியிலே கூட்டிச் சதாசிவனைப் பூஜித்து,

"அஞ்செழுத்தாற் சொன்ன வனைத்தினையுஞ் செய்யவடைவே - யஞ்செழுத்தே மந்திரமேலாம்" என்று ரொமது குரவர்.

அந்த நாடியினின்று மேலே புறப்பட்டு விந்துத்தானத்தை யடைந்திருக்கிற வமிர்ததாரையாகப் பெருகுகிறத்தை மனதாகிற பாத்திரத்திலேவாங்கி யிடைபிங்கலைகளாகிற சுருக்குச் சுருவங்களாலே யஞ்செழுத்தை யுச்சரித் தோமஞ் செய்து.

அணைவரியகோதண்ட மடைந்தருளின்வழி நின்று — கருவி கரணாதிகளைவிட்டுச் சென்று கூடுதற்கரிதாகிய புருவமத்தியத்தைப் பொருந்தித் தன்னுடைய வாதீனமின்றி யருளின்வழியேநின்று சரற்காலத்திற் சந்திரப் பிரபைபோலத் தியானித்து

அஞ்செழுத்தை விதிப்படியுச்சரிக்க — "நம்முதலா யோதிலரு ளுடாது நாமமது, சிம்முதலா யோதுரீசென்று" என்னும் விதியறிந்து நாடோறுந் தனக்கியன்ற மாத்திரஞ் சபஞ்செய் திருக்கில்

மதியருக்கனணையரவம்போற் — ஒருக்காலுங் காணப்படாதிருக்கிற இராகுகேதுக்க ளுபராகத்தா லெதிப்பட்டுக் காண

ரென்று மான்	ப்பட்டிருக்குது, அதுபோலச் சிவனு மந்தவா
மாவிலரனே.	ன்மா விடத்திலே வந்து பிரகாசியா நிற்கு
	ம். எ-று.

அரன் எழுவாய்.

தோன்றும் பயனிலை.

இதற்குச் சிந்தியம் காரணம் சுப்பிரபேதத்து மறிக.

சிவாக்ரயோகியருரை வருமாறு.

——o——

முதலே யோசைதரு மஞ்செழுத்தை விதிப்படி யுச்சரிக்க
வென்றதை மேல் விரித்துக் கூறுகின்றது.

அஞ்செழுத்தாலான்மாவை யரனுடையபரிசு மானுருவம
ஞ்செழுத்தா லடைந்தமையுமறிந்து - அஞ்செழுத்தினாலே யா
ன்மாவைச் சிவனடிமையாகவுடைய பரிசாவது:—பஞ்சாக்ஷரத்
தினுடைய பொருள், சிவன்பொருட்டு நமஸ்காரமென்று சொல்
லும். நமஸ்கரிக்கிறவ னடிமையும் நமஸ்காரத்தைக் சொல்லுகிற
வ னுண்டவனு மாகையா லான்மா வடிமையுஞ் சிவ னுண்டவ
னுமென்கிற முறைமையும், நகாராதி யைந்தெழுத்தும் நிவிர்த்தி
யாதி யைந்து கலைகளுக்கும் பீஜமாதலால் நிவிர்த்தியாதி பஞ்ச
கலைகளையும் வேறாற சத்தியோசாதாதி பஞ்சமந்திரங்களு முதி
த்துச் சதாசிவர்க்குத் திருமேனியானமையு முணர்ந்து,—

அஞ்செழுத்தா லங்ககர நியாசம்பண்ணி - யகாராதிநகா
ராந்தம் பீஜமாக லீசானாதி மந்திரங்களை யங்குஷ்டாதி கநிஷ்
டாந்த மாகவும் ஹ்ரஸ்வப் பிரணவாதி யகாராந்தம் பீசமாக
இருதயாதி மந்திரங்களை கநிஷ்டாதி யங்குஷ்டாந்தமாகவும்
† நியசித்து சிரசுமுதல் பாதாந்தம் இருதயாதி அஸ்காங்க மந்
தப்படியே நியசித்தித்துப் பஞ்சாக்ஷரத்தினாலே பஸ்மீகரணம்
பண்ணி,—

அஞ்செழுத்தாலிதயத் தான்மாவி லர்ச்சித்து-இருதயகமலத்தி னடுவே ஆன்மலிங்கத்திலே பஞ்சாக்ஷரத்தினாலே பஞ்சபிரம ஷடங்க மூர்த்தியாகிய சதாசிவ தேவரை மேற்சொல்லு மந்தர் × யஜநப்படியே பூஜைபண்ணி,—

குண்டலியி னஞ்செழுத்தா லனலையோம்பி- குண்டலிமஸ்தகத்தி னுபிகுண்டத்தில் வைந்தவாக்கினியிலே சந்திர மண்டத்து லமிருதங்கொண்டு பஞ்சாக்ஷரத்தினாலே ஓமம்பண்ணி,—

அனைவரிய கோதண்ட மடைந்து தருளின் வழிநின்று-யோகப்பிரசாதத்தினாலே யல்லது கிட்டப்போகா புருவமத்தியத்தை மூலாக்கினியை யெழுப்பி வாயு வன்னிபீசத்தை யுச்சரித்ததன்வழித்தாய்ச் சென்றடைந்து நூறுயிரஞ் சந்திர சமானமாயிருக்கிற சிவமண்டலத்திலே சமாதியடைந்து சிவனுடைய ஆஞ்ஞாசத்தி பிரேரிக்கத் தான் ¶ பிரேரியனாய் நிற்குமுறைமை கண்டு, அவ்வாறே யெல்லாத் தொழில்களையுஞ் செய்து நின்று,—

அஞ்செழுத்தை விதிப்படியுச்சரிக்க மதியருக்கனணையரவம்போற்றோன்று மான்மாவிலரனே - பஞ்சாக்ஷரத்தை நாலுவர்ணத்தவர்களும் நாலாசிரமத் தவர்களு மின்னபடி ஜபிக்கவென்று சிவாகமஞ் சொன்னபடியே ஜபிக்கத் தனித்துக் காணப்படாத ராகு கேதுக்களைச் சந்திரசூரிய ரிடமாகக் காண்பித்ததுபோல ஆன்மாவிலே சிவ நநங்யமாகப் பிரகாசிப்பனென் றிதன்பொருள்.

இந்தப் பஞ்சாக்ஷரத்தின்கிரமங் கிரியாதீபிகையிலே விஸ்தரித்துச் சொன்னோங் கண்டுகொள்க

† நியசித்து-நியாயஞ்செய்து, × யஜநம்- யாகம், ¶ பிரேரியன் - பிரேரிக்கத் தக்கவன்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

இந்நிலையுங் கூடாதோர்க்குச் சுத்த பஞ்சாக்ஷரத் துவாரத்தினாற் சிவோகம் பாவனைத் தீபகமா மஞ்செழுத்து சப மறைகின்றார்.

அஞ்செழுத்தா லான்மாவு மரனுடைய பரிசும் - மறைஞான தேசிகர் விரித்துரைத்தபடி யகாரமான்மா சிகாரம் சிவம் என்பன முதன்முறையும்,—அரனுருவு மஞ்செழுத்தா லமைந்தமையும் - சிகாரமகோரமென்பது முதன முறைமையிற் சதாசிவாதி ரூபமுற்றதும் அறிந்திட்டு,—அஞ்செழுத்தாலங்க கரநியாசம்பண்ணி - கனிஷ்டாதி யங்குஷ்டாந்தங்களில் யகாராதியாகக் கரநியாசமும் பாதாதி மூர்த்தாந்தங்களில் நகாராதியாக வங்கநியாசமும் பண்ணி,—குண்டலியில் - நாபித் தானத்தில்,—கோதண்டம் - புருவமத்தியம்.

மற்றைய வெளிப்பொருள்.

—

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

கசிந்த தொண்டினொடு மூளத்தவன்றானின்ற கலப்பாலே சோகமெனப் பாவித்தற்கண் ஆன்மாவுஞ் சிவமு மங்ஙனம் உடைமையு முடையானுமாய் நிற்கும் பரிசை ஐந்தெழுத்தோது முறையின் வைத்துணர்ந்து, "ஆடும்படி கேள்" எனவும் "சேர்க்குந் துடிசிகரம்" எனவு மோதியவாறே அவன் திருமேனி அஞ்செழுத்தா லமைந்த பரிசு முணர்ந்து, அம்முறையே அங்கநியாச கரநியாசங்களு மவ் வைந்தெழுத்தாற் செய்துகொண்டு, இதயமுந்தி புருவ நடுவென்னும் மூன்றும் பூசைத்தானம் ஓமத்

தானந் தியானத் தானமாகக் கற்பித்துக் கொண்டு, அங்ஙனம் வழிபட்டு நின்று கொண்டு அவ் வஞ்செழுத்தை விதிப்படியே மாறி நெஞ்சமுத்தி யுச்சரித்தல் செய்க. இவ்வாறு சிவோகம்பா வனையுந் திருவஞ் செழுத்து மந்திரமும் அந்தரியாகக் கிரியையு மென்னும் இம்மூன்றனும் ஒருவழிப்பட நின்று கொண்டு அதனை க் கணிக்கப் பெறுவார்க்கு, நவக் கோள்களுள் ஏனை யேழும் போலக் காண்டல் செல்லாத ராகு கேதுக்கள் உபராகத்திற் சந்திராதித்தர் மாட்டுக் காணப்படுமாறுபோல, முப்பொருள களுள் யானிகனை யறிந்தே னறிகின்றிலே னென்னு மறிவிற்கு விடயமாய்த் தோன்று மேனைப் பசுபாசங்கள் போலப் புலனு காதவழிப் பதிப்பொருள் அவ்வுச்சரிப்பி லான்மாவின் மாட்டு விளங்கித் தோன்று மென்பதாம்.

அறிந்திட் டென்பதனை மேலுங் கூட்டுக.

ஆன்மாவை யரனுடைய பரிசுமென்ற வும்மையால் ஆன்மா அரனுக் குடைமையாம் பரிசு மறிதலினு லறிந்திட் டென்பது உம் பெற்றாம்.

அரனுருவு மென்ற வும்மை சிறப்பு.

அரனுருவு மஞ்செழுத்தா லமைந் தமையு மறிதல் இதயத் தி லான்மாவில் அவ்வாறு கண்டு அர்ச்சித்தற்பொருட் டென்க.

இனி உம்மையை எண்ணும்மையாக்கி, அஞ்செழுத்தா லா ன்மாவை யரனுடைய பரிசு மரனுருவு மறிந்திட்டெனக் கண் ணழித்து, ஆன்மாவையும் அரனுடைய பரிசாகிய திருவருளையுஞ் சிவ சொரூபத்தையும் அஞ்செழுத்தா லுணர்ந்தென்றும், அஞ் செழுத்தா லமைந்தமையு மறிந்திட்டென்பது அமைந் தொழிந் த மலங்களையு மைந்தெழுத்தி லுணர்ந் தென்றும் உண்மை வி ளக்கஞ் சிவப்பிரகாச முதலிய வற்றுள் ஓதிய வாறுபற்றி யுரை த்தலு மொன்று.

இப்பொருட்குக் "கற்பனவு மினியமையும்" என்றாற்போல அமைதல் வேண்டாதொழி தன்மேற்று.

மை அஞ்சனம் மலம் என்பன ஒரு பொருட் கிளவி.

ஈண்டு மலமென்றது ஆணவ திரோதங்களை.

இவை கழிந் தொழிந்தமை பற்றி வேறுவைத் தெண்ணப் பட்டன.

அணைந்து தியானித் தெனற் பாலது அணைந் தென்று உபசரிக்கப் பட்டது.

அல்லுழிப் பயன் படாமை யுணர்த்துவார், விதிப்படியெ ன ஈண்டுங் கூறினார்.

இதனானே ஆண்டைக்கு வேண்டப்படும் மந்திரமுங் கிரியையுங் கூறப்பட்டன.

திரம்பவழகியருரை வருமாறு.

—o—

மேல் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தாலே ஆன்மாவைச் சிவனுக் கடிமையான பத்தி டண்ணுகிற முறைமை மாணாக்கனை நோக்கி யருளிச்செய்கிறார்.

அஞ்செழுத்தா லான்மாவு மரனுடையபரிசும் - ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தாலே ஆன்மாவைச் சிவனுக் கடிமையானபடி யறிந்து,—அரனுருவு மஞ்செழுத்தா லமைந்தமையு மறிந்திட்டு - பரமேஸ்வரனுக்கு பஞ்சாக்ஷரந் திருமேனியான முறைமையுமறிந்து,—அஞ்செழுத்தா லங்ககரநியாசம்பண்ணி யான்மாவில் - ஆன்மாவிலே பஞ்சாக்ஷரத்தினாலே அங்கநியாசமுங் கரநியாசமுஞ்செய்து,—அஞ்செழுத்தா லிதயத்தர்ச்சித்து - அந்தச் சிவனைப் பஞ்சாக்ஷரத்தினாலே யிதயகமலத்திலே பூசித்து,—அஞ்செழுத்தால் குண்டலியி னனலையோம்பி-பஞ்சாக்ஷரத்தினா

லே நாபி குண்டலத்திலே சுவாகாவென்று அக்நிகாரியஞ் செய்து,—அணைவரிய கோதண்டமடைந் தருளின்வழிநின்று-பொருந்துதற்கரிய யிலாடத்தானத்தின் கீழான புருவமத்தியிலே சிவன் ஆன்மாவுக்குப் பிராணனாய் நிற்கிற தன்மையை அவனுடைய ஞானத்தினாலே யறிந்து சோகம்பாவஞ்செய்ய அப்பொழுதே சிவனுக்கு அடிமையாவன். இப்படி நிற்க ஆன்மசுத்தி வருகிறபடி எப்படியென்ன மேலருளிச்செய்கிறார்.—அஞ்செழுத்தை விதிப்படியுச்சரிக்க - பஞ்சாக்ஷரத்தை உபதேசப்படியே யறிந் துச்சரிக்க,—மதியருக்க னணையரவம்போற் றோன்றும்-ஆதித்தனிடத்திலும் சந்திரனிடத்திலும் ஆச்சரியமாக இராகு கேதுக்கள் கூடினவிடத்து அந்தச் சந்திராதித்தர்களை யுள்ளடக்கி இராகு கேதுக்கள் மேலிட்டு நின்றாற்போல,—ஆனமாவிலரனே - அந்தச் சிவனுனென்று சோகம்பாவஞ் செய்யி லப்பொழுதே காட்டத்தி லக்கினி தோன்றினாற்போலச் சிவனு மான்மாவிலே தோறின்ப் பிரகாசியா நிற்பன்.

இதற்குப் பிரமாணம் சிவஞானபோதம்,௯-சூ, ௩-வெ, அஞ்செழுத்தாலுள்ள மரனுடைமை கண்டதனை, யஞ்செழுத்தா லர்ச்சித் திதயத்தி—லஞ்செழுத்தாற், குண்டலியிற் செய்தோமங் கோதண்டஞ் சாநிக்கி, லண்டனுஞ் சேடனு மங்கு"

அஞ்செழுத்தை விதிப்படி யுச்சரிக்க மதியருக்க னணையரவம் போற்றோன்று மான்மாவிலரனே என்றதற்குப் பிரமாணம் சிவஞானபோதம்,௯-சூ,௭-வெ, "இந்துவிற்பானுவி லிராகுவைக் கண்டாங்கு, சிந்தையிற்காணிற் சிவன்கண்ணே—முந்தவே, காட்டாக்கிததோன்றிக் கனல்சேரும்பென்ன, வாட்டானு மோதஞ் செழுத்து" எனனுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தாலே ஆன்மா சிவனுக் கடிமையென் றறிந்து பூசை யோமத் தியானங்களும்

ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தாலே செய்யக்கடவ னென்றும், ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை யுள்ளமரியாதி யறிந்து சோகம் பாவஞ்செய்ய இந்த வான்மாவை யுள்ளடக்கிச் சிவன் பிரகாசித்து நிற்பனென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

ஆன்மாவை யரனுடையபரிசு மஞ்செழுத்தா லறிந்திட்டு - கசிந்ததொண்டினொடு உளத்தவன்று ணின்றகலப்பாலே சோக மெனப் பாவித்தற்கா ஞானமாவுஞ் சிவமு மங்ஙனமுடைமையு முடையானுமாய் நிற்கும் பரிசை யைந்தெழுத்தோது முறைமை யின வைத் துணர்ந்து,— அரனுருவு மஞ்செழுத்தா லமைந்த மையு மறிந்திட்டு - ஆடும்படிகேள் எனவும் சேர்க்குந் துடிசிகரம் எனவும் ஓதியவாறே யவன்திருமேனி ஐந்தெழுத்தா லமைந்த பரிசுமுணர்ந்து,—அங்ககரநியாச மஞ்செழுத்தாற் பண்ணி- அம்முறையே அங்கநியாசம் கரநியாசங்களு மவ்வைந்தெழுத் தாற் செய்துகொண்டு,—இதயத்துக் குண்டலியி னணைவரிய கோதண்டம்-இதய முந்தி யணைதற்கரியபுருவநடுவென்னு மூன் றும்,—ஐஞ்செழுத்தா லான்மாவி லர்ச்சித் தஞ்செழுத்தாலன லையோம்பி யடைந்தருளின் வழிநின் றஞ்செழுத்தை விதிப்படி யுச்சரிக்க-முறையே பூசைத்தான மோமத்தானந் தியானத்தா னமாகக் கற்பித்துக்கொண்டு அங்ஙனம் வழிபட்டு நின்றுகொண் டவ வைந்தெழுத்தை விதிப்படியேமாறி நெஞ்சமுத்தி யுச்சரித் தல் செய்க. இவ்வாறு சிவோகம்பாவனையுந் திருவஞ்செழுத்து மந்திரமும் அந்திரியாக்கக் கிரிடையுமென்னு மிம்மூன்றனு மொருவழிப்படநின்றுகொண்டு அதனைக் கணிக்கப்பெறுவார்க்கு,— மதிபருக்க னணையரவம்போல் - நவக்கோள்களுள் ஏனையேழும்

போலக் காண்டல் செல்லாது ராகு கேதுக்க ளுபராகத்திற் சந்திராதித்தர் மாட்டுக் காணப்படுமாறுபோல,—ஆன்மாவிலான்றோன்றும்-மூப்பொருள்களுள் யாவிதனையறிந்தே னறிகின்றிலேனென்னு மறிவுக்கு விடயமாய்த்தோன்று மேனைப் பசுபாசங்கள்போலப் புலனாகாதவழிப் பதிப்பொருளவ் வுச்சரிப்பிலான்மா வின்மாட்டு விளங்கித் தோன்றும்.

இதனானே ஆண்டைக்கு வேண்டப்படும் மந்திரமுங் கிரியையுங் கூறப்பட்டன.

மறைஞானதேசிகர் உரை.

முதற்சட் டொருத்துக்கூறியதன்றி வேறோர்விதி பி
ருதிவி முதற் சிவமீறான தத்துவங்களைத்தியா
னிக்கு முறைமை யுணர்த்துகின்றார்.

நாட்டு மிதயந்தானு நாபிதனிலடியாய் ஞாலமு
தற் றத்துவத்தா லெண்விரனுளத்தாய், மூட்டுமோகி
னிசுத்த வித்தைமலரெட்டாய் முழுவிதழெட் டக்க
ரங்கண் முறைமையினி லுடைத்தாய்க், காட்டுகம
லாசனமே லீசர் சதாசிவமுங் கலாமூர்த்த மாமிவற்றி
ன் கண்ணுறுஞ்சத்தி, வீட்டையருள் சிவமூர்த்தி மா
ணுகிச்சத்தி மேலாகி நிற்பனிந்த விளைவிந்துபோ
ற்றே. (௯)

(இ-ள்.) நாட்டுமி தயந்தானு நாபித னிலடியாய் — சிவனைபூசித்தற்குக் கற்பிக்கு மிருதய கமலத்துக்கு நாபித்தானமே யடியாகச் சொல்லும்.

ஞாலமுதற்றத்துவதா லெண்விர னுளத்தாய் மாணிக்க நிரம்போன்றிருக்கிற கிழங்கே பிரதிவிதத்துவமாய், அப்புமுதல் மாயையீருகக் கிழங்கின மேலே நீலநிரம்போன் றெட்டங்குல வுயரத்தை யுடைய நாளத்தினடுவே நவதுவாரத்தையும் பவளம்போன்ற முள்ளினையும் பொருந்தி,

மூட்டு மோகினி அந்தநாளத்தி னுனியிலே பூவினடியிலே பொருந்திய முடிச்சு மாயையாகவும்,

சுத்த வித்தை மலரெட்டாய் சுத்தவித்தியா தத்துவமே யெட்டிதழ்த் தாமரைப் பூவாய். அஃதெச்சிறப்பை யுடையதெனில் சுவேத நிறத்தினை யுடைய வெட்டிதழினையும் பன்னிரண்டங்குல விரிவினையு முடைய கமலத்து நாப்பண் ணோரங்குல வுயரத்தினையும் விரிவினையும் அதிலைம்பத்தோரெழுத்தை விதையாகவும் ஓட வைத்த பொன்போன்ற கர்ணிகையினையு மதனைச் சூழ அந்திரம்போன்ற அறுபத்துநாலு கேசரங்களையு மதனுனியிலே முத்துப்போலவு மிப்படியிருக்கிற பதுமத்தில்.

முழுவித மெட்டக்கரங்கண் முறைமையினி லுடைத்தாய் கிழக்குமுதலாகப் பிரதானமான வெட்டிதழிலும் அடைவே ஓம்சிவாய நமோநம வேவக்கரங்க ளெட்டினையும் பொருந்தி இவ்வெட்டிதழினையு மட்டவிதயேசுர ரதிட்டித்திருப்பர்கள்.

காட்டுகமலாசனமேலீசர் இப்படிச் சொல்லப்பட்ட பதுமத்தின் மேலீஸ்வர தத்துவத்திலிருக்கு மகேஸ்வரராகவும்,

சதாசிவமுங் கலா மூர்த்தமாம் சதாசிவதத்துவத்திற் சசினயாதி யாகிய சத்திகள் முப்பத்தெட்டுக் கலைகளையும் வடிவாகவுடைய சதாசிவ மூர்த்தியும்,

இவற்றின் கண்ணாகுஞ்சத்தி	இவைக ளிருக்கிறத்துக்குஞ் சத்தித்தத்துவத்தி லிருக்குஞ சத்தி,
வீட்டையருள் சிவன் மூர்த்திமானாகிச் சத்தி மேலாகி நிற்பன்	சத்திக்கு மேலாகி வீட்டையருள் சிவன் மூர்த்திமானாகி நிற்பன. எனப்பதமாறுக. முற்கூறிய சத்திதத்துவத்துக்கு மேலாகிய சர்வான்மாக்களுக்கு மோட்சத்தைக் கொடாநிற்கிற சிவதத்துவ மெல்லாத்துக்கு மேலாகிநிற்கும்.

ஈண்டுச் சத்தியென்பது நாலாம்வேற்றுமை, குவ்வென்னுமுருபு தொக்கது.

இந்த விளைவறிந்து போற்றே	இப்படி மண்முதல் சிவதத்துவமீறாக வாதனமும் மூர்த்திமானுமாய் நிற்குமுறைமையினை யறிந்து சிவனை யாராதனை செய்வாயாக. எ-று.

முழுவிதழெனச் சிறப்பித்தமையா லுபதள முளதென்றதாயிற்று.

சதாசிவமுமென்ற வும்மையா லீசுர தத்துவமுங் கூறியதாயிற்று.

சிவன் எழுவாய், நிற்கும் பயனிலை.

நீ முன்னிலைத்தொகை எழுவாய்.

போற்று பயனிலை.

இதயபதுமம் வாழைப்பூப்போல அதோமுகமாய் நாலங்குலந் தாழ்ந்திருக்கும். தாழ்ந்திருக்குமென் றோதியிருக்க அக்கமலத்திற் பூசிக்கச் சொல்லிய தென்னெனில்? அதனை யுத்தம பீஜ மந்திரத்தாற் பண்ணி யஃ தலர்ந்ததாகப் பாவித்து அதிற் பூஜையென்றது.

இதற்குக் காமிகம் சுப்பிரபேதம் நிசுவாசம் சூதசங்கிதை காலோத்தரம் கிரணத்து மறிக. (௯)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேலந்தர்யசனக்கிரமங் கூறுகின்றது.

நாட்டுமிதயந்தானும் - இருதய கமலங்களிலே நிரூபிக்கப் பட்டதுதான். உம்மை சிறப்பும்மை,—நாபியினிலடியாய் ஞால முதற்றத்துவத்தா லெண்விரலுளத்தாய் - மூலாதாரத்திலே கூர்மம். கூர்மத்துக்கு நடுவே ஆதாரசத்தி. கூர்மத்தின்மேல் அனந்தனுக்கு பத்மாசனம். அதன்மேலேயநந்தன் நாபிமட்டாய். அனந்தனுடைய சிரசிலே பிருதிவி, தாமரைக்கிழங்கு. அப்புத த்துவ முதலாகக் காரிப மாயாதத்துவ மளவு முப்பது தத்து வங்களும் எட்டங்குல நாளம். பஞ்சாசற்பாவமுந் தாமரைத் தண்டி னூல்கள். நாளத்தின் முள்ளுகள் நூற்றுத் தொண்ணூற் றொரு புவனங்கள்.—மொட்டுமோகினி - தண்டுக்கு மிதமுக்கும் நடு விசைதலையதோமாயை. அதன்மேல்,— சுத்தவித்தை மல ரெட்டாய் - சுத்தவித்தியா தத்துவ மெட்டிதழாய்,—முழுவி தழெட்டக்கரங்கள் முறைமையினி லுடைத்தாய் - இந்திராதி திக்கு பாலருடைய பீசமான அஷ்டாக்ஷரத்தைக் கிரமத்திலே யுடைத்தாய். கிரமமாவது யகாராதி ஹகாராந்தமெட்டும் வாயு அக்நி இந்திரன் வருணன் யமன குபேரன் நிருதி ஈசாநன். திக் குதனங்கள்,—ஈசர் சதாசிவங்கள் - அனந்தாதி மகேஶ்வரர் வசிப்பதான வீஶ்வர தத்துவங்கள் கேசரங்கள். சதாசிவர் வசிக்குஞ் சாதாக்கிய தத்துவங் * கர்ணிகை.—காட்டு-காட்டாகிய சூரிப சோமாக்நி மண்டலங்கள் மூன்றும் தளாக்கிர விர்த்தத்திலும் கேசராக்கிர விர்த்தத்திலும் கர்ணிகா விர்த்தத்திலும். இவையிற்றுக்களுக்கு அதிபதிக ளடைவே பிரம விஷ்ணு ருத்திரர்கள். இவ்வாறுள்ள,—கமலாசன மேல்-என்றதனுற் கர்ணிகையின் மேற் சத்திமயமாகிய விமலாசனத்திலே யெனக்

கொள்க,—கலாமூர்த்தமாமிவற்றின் கண்ணுகுஞ்சத்தி விட்டை யருள்சிவன மூர்த்திமாஞகிச் சததி மேலாகிநிற்பன்-ஈசாநாதி பஞ்சபிரம மந்திரங்களின் கலைகள் முப்பத்தெட்டும் சதாசிவமூர்த்தியாம். இந்தக் கலைகளை சசிநியாதி முப்பத்தெட்டு சத்தியு மதிட்டித்திருக்கும். இனி முத்தியைக் கொடுக்கும் பரமசிவ னிந்தச் சத்திகளாலாகிய தேகத்துக்குப் பிராணனுமா யிந்தச் சத்திகளுக்கு அதீத நிலையாகிய நிர்விகர்ப ஞானநந்த ஸ்வரூபியாகநிற்பன்.—இந்தவிலைவறிந்து போற்றே-இந்த விலைவாவது பராயாதி பஞ்சசத்திகளுஞ் சுத்தமாயையிலே பதிய வதனுற் சிவசாதாக்கியம் அமூர்த்தி சாதாக்கியம் மூர்த்தி சாதாக்கியம் கர்த்திரு சாதாக்கியம் கன்மசாதாக்கியம் எனவைந்து பேதமாயொன்றையொன் றாஸ்ரயித்துக்கொண்டிருக்கும். இந்தமுறைமையை யறிந்து கனமசாதாக்கியத்தைப் பூஜைபண்ணவென் றிதன்பொருள்.

இதன் விஸ்தாரங் கிரியா தீபிகையிலே சொன்னேங் கண்டுகொள்க.

* கர்ணிகை - தாமரைக்காய்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

இதயத் தர்ச்சனைப் பிரகார மறைகின்றார்.

நாட்டு மிதயந்தானும் - இருதய கமலமும்,—நாபியினில் அடியாய் - கந்தமாய்,— ஞாலமுதற் றத்துவத்தா லெண்விர னளத்தாய்,—மூட்டு மோகினி - புறவிதழ் முடிச்சு மாயை,—சுத்த வித்தைமலர் - சுத்த வித்தியா தத்துவ முட்பதுமாசனம். ஈசுவர தத்துவ மாகிய,—முழுவித ழெட்டாய்,—ஓம் நமசிவாயநம வென்னும்,—எட் டக்கரங்கள் முறைமையினி லு

டைத்தாய் காட்டு கமலாசனமேல் - காண்பிக்கப் பட்ட பது மாசனப் பொருட்டில், சாந்தியாதி நிவிர்த்தி யந்த சதுஷ் கலாசத்தி மண்டலத்திற் சாந்தி யதீத கலாரூப சிவமண்டல மந்தர்ப்பவிக்கு மாதலால்.—ஈசர் சதாசிவங்கள் - அனந்தாதி யதிஷ்டிதாக் கலாஞ் சம்புவீசுரர்கள் உருத்திர சதாசிவரொருவருமே யிலிங்கத்திற் பூச்சிய ராதலாற் கலேசுர சதாசிவ முதற் சதாசிவர்களு மாசனத் தந்தர்ப் பவிப்பார்கள்.—அவற்றின் கண்ணுருஞ் சத்தி - சிவாசனத் திடத்துச் சாந்தி யதீத கலாக் கொழுந்தா மிந்திகாந்தி நாத கலா சமஷ்டி லிங்கா திஷ்டாயக ஈசானி முதல் மூர்த்தி யீருகுஞ் சத்தி சமஷ்டிக் குறிச் சத்தி,—கலாமூர்த்தமாம் - அஷ்டத் திரிம்சத் கலாகர்ப்பித சதாசிவ தேகமாம்.—விட்டையருள் சிவன் - அதிகாரா வஸ்தாரூ— பரசிவம்,—மூர்த்திமானுகி - தேகியாகி,—சத்திமேலாகி - தேகத்துச்சூட் சிவனாய்,—நிற்பன் - இருப்பன்.—இந்நவிதி வதிந்து போற்றே - இச்செய்தி புணர்ந்து பூசிப்பாயாக.

சிவஞானயோகியருரை வருமாறு.

———o———

இசயத் தர்ச்சித்தற்கு, நிலமுதற் சத்தி தத்துவ மீருகிய முப்பத் தைந்தினையுங் கிழங்கு முதற் பீ மீருகிய அவயவங்களாக வுடைய இதய கமலம் ஆசனமும், அதன்மேற் சத்தி மூர்த்தியும், சிவன் மூர்த்திமானுமா மென்பதாம்.

சிவதத்துவஞ் சத்தி தத்துவங்கட்குத் தம்முள் வேறுபாடு சிறிதாதல் பற்றிச் சிவதத்துவத்தை வேறெண்ணுது சத்தி தத்துவத்து ளடக்கிக் கூறினர்.

சத்தி மேலாகி யென்றதனுற் சத்தி மூர்த்தி யென்பதூஉம் பெறப்பட்டது.

அற்றேல், மேல் ஐந்தெழுத்தா லமைந்த வுருவெனக் கூறி அதன்பின் ஆன்மாவி லர்ச்சித் தெனவுங் கூறி ஈண்டுச் சத்திமூர்த்தி யென்றல் மலைவாம் போலு மெனின்? ஆகாது. அம்மூன்றும் முதல்வனுக்கு முறையே தூலவடிவுஞ் சூக்கும வடிவும் அதிசூக்கும வடிவுமெனக் கோடலா லென்பது.

அண்ட மோரணுவாம் பெருமை கொண்டு கரணங்களெல்லாங் கடந்து நின்ற வவ்விறைவனே அணுவோ ரண்டமாஞ் சிறுமை கொண்டு ஆன்மாக்க ளுய்தற் பொருட்டு உடம்பி னுள்ளுமவ்வாறு நிற்கின்றான், அதனையறிந்து செய்யாதவழிப் பூசையாற் பயனில்லை யென்பார் இந்த விளைவறிந்து போற்றே யென்றார்.

தன்னின முடித்தலால் ஓமித்தல் தியானித்தல்களினும் இவ்வாறே புணர்த்து செய்ப்படு மெனக் கொள்க.

நிரம்பவழகியருரை வருமாறு.

இத்தன்மை கூடாதவர்களுக்குச் சிவனை யுள்ளே பூஜித்து அதினாலே ஆன்மசுத்தி யுண்டாகுமுறைமை யருளிச்செய்கிறார்.

காட்டுமிதயந்தானு நாபியினடியாய் - சொல்லப்பட்ட விதயமாகிய தாமரைப்பூத் தனக்குக் கிழங்கு நாபித்தானமாய்,—ஞாலமுதல் தத்துவத்தா லெண்விரனாளத்தாய் - பிருதிவி முதல் கலையந்தமாகவுள்ள முப்பத்தொரு தத்துவத்தாலே அந்தப் பூவுக்குத் தண்டு எட்டங்குல நீளத்தை யுடையதாய்,—மூட்டுமோகினி - நாளமும் பூவும் பொருந்தின மூட்டு அதோமாயையாய்,—சுத்தவித்தைமலர் - தாமரைப்பூச் சுத்தவித்தையாய்,—எட்டாய் முழுவிதழெட்டக்கரங்கள் - எட்டு அக்கரங்களும் பூவுக்கு நிறைந்தவித ழெட்டாய்,—முறைமையினை யுடைத்

தாய்க் காட்டு கமலாசனம் - முன்சொன்ன கிழங்குமுதல் இதழ்முடிவான முறைமையினை யுடைய பிரமாசனமாயிருக்கிற முப்பத்திரண்டு தத்துவத்துக்கும் நிவிர்த்தி பிரதிஷ்டை வித்தையென்கிற கலைகள் வடிவாம்.—மேலீசர் சதாசிவங்கள் கலாமூர்த்தமாம் - இந்த வாதனத்துக்குமேலீசுரத்துவமும் சாதாக்கிய தத்துவமும் நடுவிற் கரணிகையாம். இவை யிரண்டுக்கும் சாந்தியும் சாந்தியாதீதமும் வடிவாம்.—இவற்றின் கண்ணுறுஞ் சத்தி - சத்திதத்துவம் இந்த கர்ணிகையிற் கண்ணுன விந்துக்களாம்,—வீட்டைப்பருள் சிவன்மூர்த்திமானுகிச் சத்திமேலாகி நிற்பன் - மோக்ஷத்தைத் தருகிற அந்த நாதம் அதற்குப் பிராணனுமாய் மேவிரந்தரமுமாய்ச் சத்தி தத்துவத்துக்கு மேலுமாய் இந்தப் பூவுக்குக் கந்தமுமாய் நிற்பன் — அந்தச் சிவனை இந்த விளைவறிந்து போற்றே - இப்படி பூசித்தாலுண்டாகிய பயனை யறிந்து அந்தச் சிவனுனென்று சோகம்பாவஞ் செய்கிறதுதானே அந்தரியாக பூஜையாம்.

இதற்குப் பிரமாணம் சிவஞானபோதம்,௯-சூ, அ-வெ, "மண்முதலாள மலர்வித்தை கலாரூப, மெண்ணரியவீசர் சதாசிவமு—நண்ணிற், கலையுருவா நாதமாஞ் சத்திபதன கண்ணு, நிலைபதிலா மச்சிவன்முனேர். எனனுமதுங் கண்டுகொள்க.

இசனுற் சொல்லியது, அத்துவா சோதனைசெய்து சிவனைக் கூடுகிற வந்தரியாகத்தின் முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

நாபியினில் - உந்தியில்,—ஞாலமடியாய் - பிருதிவிதத்துவம் கிழங்காகவும்,—முதற்றத்துவத்தா லெண்விரனுளத்தாய - பிரதிவியை முதலாகவுடைய ஏனை யப்பு முதலிய இருபத்துமூ

ன்று தத்துவங்களு மெண்விரலளவைத்தாயுள்ள நாளவடிவமாகவும்,—மூட்டுமோகினி சுத்தவித்தை மலரெட்டாய்-அசுத்தமாயையின் காரியமாகிய வித்தியாதத்துவங்க ளேழுஞ் சுத்தவித்தையுமென்னும் எட்டுதத்துவங்களு மெட்டிதழ் வடிவாகவும்,—முழுவித மெட்டக்கரங்கள் முறைமையினி லுடைத்தாய் - அவ்விதமெட்டிற்கு முறையே அக்கரங்களை யுடையதாகவும்,—ஈசர்சதாசிவமும் கலாமூர்த்தமாம் - ஈசவாஞ் சதாசிவமென்னுமிரண்டு தத்துவமும் அறுபத்து நான்கெனப்படும் கேசரவடிவமாகவும் பொகுட்டு வடிவமாகவும்,—சத்தியிவற்றின் கண்ணுகும் - சததிதத்துவம் பொகுட்டிற் காணப்படும் ஐம்பத்தொருபீஜவடிவமாகவும் உடைய,—நாட்டு மிதயந்தானுங் காட்டு கமலாசனம்-நாட்டப்படு மிதயம கமலாசனமும்,—மேல்சத்திமேலாகி-அதன்மேற் சததி மூர்தயும,—விட்டையருள் சிவன்மூர்த்திமானுகி நிற்பன் - வீட்டினை யருளுகின்ற சிவன் மூர்த்திமானுகியு நிற்பனுதலின்,—இந்த விளை வறிந்து போற்றே.

இம்முறையை யறிந் தர்ச்சிப்பாயாக வென்பதாம்.

மறைஞானதேசிகர் உரை.

முற்கூறிய வந்தரியாகத்துக்கு வேண்டு முபகரணங்களு மதனுற் பிரயோஜனங்களு முணர்த்துகின்றார்.

அந்தரியா கந்தன்னை முத்திசாதனமா யறைந்திடுவ ரதுதானு மான்மசுத்தியாகுங், கந்தமலர் புகையொளிமஞ் சனமமுது முதலாகக் கண்டனவெல் லாமனத்தாற் கருதிக்கொண்டு, சிந்தையினிற் பூசித்துச் சிவஞானத்தாற் சிந்திக்கச் சிந்திக்கத் தற்பணத்தை

விளக்க, வந்திடுமவ் வொளிபோல மருவியரனுளத்
தே வரவரவந் திடுவன்பின் மலமானதறுமே. (௧0)

(இ - ள்.) அந்தரியாகந் தன்னை முத்திசாதனமா யறைந்திடுவர் — ஞாதாக்க ளிந்த அந்தரியாகபூசை ஞானயோகமாதலா லிதுவே பரமமான மோக்ஷத்துக் கேதுவென்று சொல்லுவர்கள். அஃதெக்காரணத்தாலெனில்?

அதுதானு மான்மசுத்தியாகும் — அந்த வந்தரியாகந்தானு நாடோறு மியற்றவே யான்மாவுக்குச் சுத்தியாம். அஃதியற்றுமஃதெங்ஙனமெனில்?

கந்தம் — சந்தனம். அஃதாவது, போகத்திற் பற்றில்லாமையால் வைராக்கியமாகிறதே சந்தனம்.

மலர் — அட்டபுஷ்பம். அஃதாவது, கொல்லாமை. யிந்திரிய நிக்கிரகம். அஃதாவது, புறக்கருவியின் வழி போகாதிருத்தல்.

சாந்தி — அஃதாவது, உட்கருவி யடக்கல். தயை ஞானம் சத்தியவசனம் பேசுகை. தவம் பாவம். அஃதாவது, மனவழுக்கற் றிருத்தல். என வெட்டினையு மறிக.

பூவார் மலர்கொண் டடியார் தொழுவார்.
என்று ராதலி னறிக.

புகை — தூமம். அஃதறிந்து, பிராணாயாமம் போக்குவரவுடனே கூடியிருக்கிற மனமாகிற பாத்திரத்திலே பிராணனாகிற அக்கினியை யிட்டு கர்வமெனப் தொரு தூபங்கொடுக்கை.

ஒளி — ஞானதீபம். அஃதாவது, புத்தியெல்லாத்தையும் பிரகாசிப்பிக்கையால் ஞானமே தீபமாயிற்று.

மஞ்சனம் — திருமஞ்சனம் நிறை.

அமுத முதலாக — பிரத்தியாகாரமாகிற அம்ருதமே நைவேத்தியம். அஃதாவது, இந்திரியத் துவாரங்களிலே பற்றினமனதை யந்த விந்திரிய விஷயர்த்தங்களிலே செல்லாமற் றிரும்பக்கொண்டுபோய்ப் பலகாலு மிதயத்திருத்தல்.

கண்டவெல்லாமனத்தாற் கருதிக்கொண்டு — இவைமுதலிய வெல்லாத்தையு மிந்தப்பாவனைகளுடனே பாவித் துபசாரங்களைக் கொடுத்து

சிந்தையினிற் பூசித்துச் சிவனை ஞானத்தால் — சிவனைஞானத்தாற் சிந்தையினிற் பூசித்து எனப் பதமாறுக. சர்வ வியாபியாயிருக்கிற சிவனை ஞானவிதியா லான்மாவினிடத்திலே யிப்படிப் பாவகத்துடன் பொருந்திப் பூசிக்க.

சிந்திக்கச் சிந்திக்கத் தற்பணத்தைவிளக்க வந்திடுமவ் வொளிபோல — கண்ணாடியை விளக்கவிளக்க எப்படி மலினம்போய்ப் பிரகாச மதிகமா மதுபோல இவனு மான்மாவின் கண் பலகாலும் பலகாலும் நினைக்க நினைக்க ஞானம் பிரகாசியாநிற்கும்.

மருவியரனுளத்தே வரவரவந்திடுவன் — அனவரதமும் நினைக்க நினைக்கச் சிவனு மான்மாவைப் பொருந்தி யிரண்டறநிற்கிற சிவன் பிரகாசியாநிற்பன்.

பின் மலமானதுமே. — சிவப்பிரகாச முண்டானவாறே யிவ்விடத் துண்டாய மலங்களும் விட்டு நீங்கும். எ-று.

சிந்திக்கச் சிந்திக்க எ-து. வரவரஎன விரகூட்டுறக் கிளர்த்தலின் அஃதிரட்டைச் சொல்லெனவறிக.

அது - சுட்டு.

தான் - அசை.

உம்மை - எதிரது தழீஇயவெச்சம்.

அறிந்தோர் அறைவர், அரன் அறம் என, எழுவாய் பயனிலைக் கூட்டுக.

"உடம்பெனு மனையகத்தே யுள்ளமே தகளியாக, மடம்படு முணர்நெய்யட்டி யுயிரெனுந் திரிமயக்கி, யிடம்படு ஞானத் தீயா லெரிகொள விருந்துநோக்கிற், கடம்பமா காளைதாதை சழலடி காணலாமே." எனவும். "காயமே கோயிலாக்கிக் கடி மன மடிமையாக, வாய்மையே தூய்மையாக மனமணி லிங்கமாக, நேயமே நெய்யும்பாலு நிறையவே யமையவாட்டிப், பூசைகொ ளீசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே." எனவுமறிக.

இதற்குச் சிவதருமோத்தரம் சுப்ரபேதம் வாதுளம் மோக சுரோத்தரம் பூசாத்தவத்து மறிக.

இந்நிலை கைவாராதார் புறத்தியிற் பூசிக்கு மவைகளைப் பாவித்துப் பூசிக்கவென்பதூம் பெறும். (௧௦)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

——o——

மேலிதுவுமது.

அந்தரியாகந் தன்னை முத்திசாதனமா யறைந்திடுவ ரது தானு மான்மசுத்தியாகும் -இருதயத்துள்ளே சிவனைப் பூஜிப்பதை முத்திக் குபாயமாகப் பெரியோர்கள் சொல்லுவர்கள். அந்த வந்தரியாகந்தா னான்மசுத்தி யாகும்-ஆன்மசுத்தியாவது ஆணவ மாயை கன்மமென்கிறவழுக்கு நீங்குவது. அதுவே முத்தி.

மேல் பூஜைபண்ணு மடைவு,— கந்தமலர்ப் புகையொளிமஞ்சன மமுது முதலாகக் கண்டனவெல்லா மனத்தாற் கருதிக்கொண்டு - ஜலம் கந்தம் புஷ்பம் தூபதீப நைவேத்திய மாதியாகவுண்டான வஸ்துக்க ளெல்லாத்தையு மனத்தினாலே யுண்டாக்கிக்கொண்டு. உண்டாகும்வாறு, பிருதிவி பீஜத்தையுச்சரித்து அசாதாரண பிருதிவியிலே நின்றும் கந்தம் புஷ்பம் தூபம் வஸ்திரம் உபவீதம் அன்னம் அபூபம் தாம்பூலமுத லநேக வஸ்துக்களையும் அப்பு பீஜத்தை யுச்சரித்து அசாதாரணஅப்பு தத்துவத்திலே நின்றுஞ் ஜலம் பால் தயிர் நெய் தேன் கருப்பஞ்சாறு முதலான நெகிழ்ச்சியான வஸ்துக்களையும் வன்னி பீஜத்தை யுச்சரித்து அசாதாரண வன்னி தத்துவத்திலே நின்றும் தீபம் ரத்தினாபரணம் தர்ப்பணமுதலான பிரகாச வஸ்துக்களையும் வாயு பீஜத்தை யுச்சரித்து அசாதாரண வாயு தத்துவத்திலே நின்றும் ஆலவட்டம்விசிறி சாமர முதலான சலன வஸ்துக்களையும் வியோம பீஜத்தை யுச்சரித்து அசாதாரண வியோம தத்துவத்திலே நின்றுங் கண்டாநாதம் கிண்ணாத முதலான நாதங்களையுமிப்படிச் ÷ சம்பாதிதமான வஸ்துக்களினாலே,—சிந்தையினிற் பூசித்துச்சிவனை - ஆன்ம லிங்கத்தினாலே சிவனைப் பூஜித்தமேல்,— ஞானத்தாற் சிந்திக்கச் சிந்திக்கத் தர்ப்பணத்தைவிளக்கவந்திடு மவ்வொளிபோல் மருவியரனுளத்தே வரவரவந்திடுவன்பின் மலமானதறுமே - சிவனை யென்பது நடுநிலைத்தீபம். சிவனை யவனது ஞானத்தினாலே சிவபாவனையை மேன்மேலும் பண்ணக் கண்ணாடியை விளக்க விளக்க முன் னப்பிரகாசமா யிருந்த வொளியே பிரகாசமானதுபோல அநாதியே யான்மாவிலே பிரிவறப் பொருந்தி யிருக்கிற சிவன் சிவ பாவனைகைவரக் கைவரச் சிவனு மதிகமாகப் பிரகாசித்துப் பிரகாசித்து வருவன். ததனுகுணமாக வாணவமலமும் நீங்கி நீங்கி வந்

து சிவன் பூரணமாகப் பிரகாசிக்க மலம் நிச்சேஷமாகப் போமென் றிதன்பொருள்.

÷ சம்பாதிதம் - சம்பாதிக்கப்பட்டது.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

இவ் வந்தரியாகமும் ஒருவழி யான்ம சுத்திமுன்னாகப் பின் பண்ணப்பட்டுச் சாலம்ப சிவயோக மூலமாதலாற் சாலம்ப சிவயோக மார்க்கத்தாற் சமனாந்தம் போய்ச் சமனாந்த முற்றுப் பாச முத்தி நிராலம்ப சிவயோக யாத்திர சின்மாத்திரான்ம சித்திக் குறி யான்ம சுத்தியாமதனாற் சாலம்ப சிவயோக மவலம்பித் தந்தத்து நிராலம்பித்து நிராலம்ப சிவயோகம் பண்ணப் பரமுத்தியா மென்று பகர்கின்றார்.

ஞானத்தால் - முன்சொல்லியபடி இருதயத்திருந்து நிராலம்பித்துப் பண்ணும் நிராலம்ப சிவத்தியானத்தால்,—சிந்திகச் சிந்திக்க - தியானிக்கத் தியானிக்கத் தியானமுற்றுஞ் சிவசமாதியால்,—மருவி யரனுளத்தே வரவர - சிவன் ஆன்மசிற்சத்தியின்கண் சாநித்தியனாகச் சாநித்தியனாக,—மலமானதறுமே - மலமுத்திவருமே,—பின் தருப்பணத்தை விளக்க வந்திடு மவ்வொளிபோல் ஆன்மா,—வந்திடுவன் - சிவத்துவாபி வியத்திமானாவன் —வந்திடு மவ்வொளிபோல வொளி வரவர மருவியரன் வந்திடுவன,—மலமான தறுமென வுரையுரைத்தாற் காரியமுந்துதலும் காரணம் பிந்துதலுமாய வியத்தி முந்துதலும் முத்தி பிந்துதலுமாய் முறைமைத் தப்புவரும். வந்திடு மவ்வொளிபோல மருவியரன் வந்திடுவனென்றலுர் திஷ்டாந்த விரோதமா மாதலாலு மப்படி யுரைப்பதன்று.

மற்றைய வெளிப்பொருள.

சிவஞானயோகியருரை வருமாறு.

சண்ணுடிக்குப் பொடியிட்டு விளக்க விளக்க ஒளி மேலிட்டு மாசு நீங்குமாறு போல, ஆன்மாவி லவ்வாறு ஞானத்தாலர்ச்சித்தலும் ஓமித்தலுந் தியானித்தலுஞ் செய்யச்செய்ய ஆண்டுச் சிவம் மேலிட்டு மேலிட்டுவந்து விளங்கித் தோன்றும். தோன்றவே ஆணவமலந் தேய்ந்து தேய்ந்து பற்றறக் கழியும். அங்ஙன மான்ம சுத்திக்கு ஏதுவாகலான் அவ்வந்தரியாகம் ஒருதலையான் வேண்டப்படும் முத்திசாதனமென் றறிக வென்பதாம்.

அதுதானு மான்ம சுத்தியாகுமென ஒற்றுமை பற்றிக் காரணத்தைக் காரியமாக வுபசரித்தார்.

உம்மை சிறப்பு.

கந்தமலர் புகையொளி மஞ்சனமமுது முதலாக் கண்டன வெலா மனத்தாற் கருதிக் கொண்டு சிந்தைதனி லர்ச்சிக்க வெனவே, அவற்றை யங்ஙனங் கற்பித்துக் கோடலு மனுவாததாற் பெற்றாம்.

மனத்தாற் கருதுமாறு "காயமே கோயிலாகக் கடிமனமடிமையாக" என்பது முதலிய திருவாக்குக்களாலு மறிக.

ஞானத்தா லென்பதனை அர்ச்சிக்க வென்பத னோடுங் கூட்டுக.

சிந்திக்க வென்றது முன்னையது ஓமித்தன் மேற்று.

இவையிரண்டு செய்யுளானும் அந்தரியாகஞ் செய்யு மாறும் அஃதான்மசுத்திக்கொருதலையான் வேண்டப் படுவதென்பதூஉங் கூறப்பட்டன.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

இப்படி யுட் பூசையாகச் சொல்லப்பட்ட அந்தரியாகத்துக்குப்பய னெப்படி யென்ற மாணாக்கனை நோக்கி யருளிச் செய்கிறார்.

அந்தரியாகந்தன்னை முத்தி சாதனமாயறைந்திடுவர் - இப்படி பூசிக்கிற உட்பூசையாகிய அந்தரியாகத்தை மோக்ஷயேதுவென்றே சொல்லுவர்க ளறிவாலுயர்ந்தோர்.—அதுதானா மான்மசுத்தியாகும்-அந்த வந்தரியாகந்தான் உயிர்க்கு விளக்கமுமாம். இந்தப் பூஜைக்குண்டான வுட்கரணங்களேதென்னில்?—கந்தமலர்ப்புகையொளிமஞ்சன மமுதமுதலாகக் கண்டனவெலா மனத்தாற் கருதிக்கொண்டு - கந்தபுஷ்ப தூபதீப மஞ்சனந் திருவமுது முதலாக நூல்களிற் சொல்லப்பட்டன வெல்லா மனத்தாலே சங்கற்பித்துக்கொண்டு,—சிந்தையினிற் பூசித்துச் சிவனை - தனக்குப் பிராணனாய் நிற்கிற பரமேசுவரனைத் தன்னுடைய விதயத்திலே பூஜித்து,—ஞானத்தாற் சிந்திக்கச்சிந்திக்க - சிவஞானத்தாலே அவனைச் சந்ததமும நினைக்க நினைக்க,—தற்பணத்தை விளக்க வந்திடுமவ்வொளிபோல் - கண்ணாடியை விளக்கவே மேலேயுண்டாகிற பிரகாசம்போல,—மருவியருளத்தே வரவரவந்திடுவன் - சிவன் ஆன்மாவைப் பொருந்தி நின்று மேலேமேலே பிரகாசியாய்நிற்பன். அங்ஙனம் பிரகாசிக்கவே,—பின்மலமானதறுமே - முன் அநாதியே மறைத்துக்கொண்டு நின்ற ஆணவமலமாகிய வந்த வந்தகாரம் இப்பொழுதிந்தச் சிவப்பிரகாசத்தாலே நீங்கும்.

இதனாற் சொல்லியது பூசைக்கு வேண்டத்தக்க வுபகர

ஙங்களெல்லா மனத்தாலே சங்கற்பித்துக்கொண்டு ஞானத்தாலே யுள்ளே பூசிக்கிற பூசை ஆன்மசுத்தியென்றும் அப்படி பூசிக்கவே இவனுக்குச் சிவப்பிரகாச முண்டாமென்றும் அந்தச் சிவப்பிரகாசத்தினாலே பாசமான்து நீங்குமெனனு முறைமையு மறிவித்தது.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

———o———

தற்பணத்தை விளக்கவந்திடு மவ்வொளிபோல் - கண்ணாடிக்குப் பொடியிட்டு விளக்கவிளக்க ஒளிமேலிட்டு மாசுநீங்கு மாறுபோல,—சிந்தையினிற்சிவனை-ஆன்மாவிற்சிவனை —கந்தமலர்ப்புகையொளிமஞ்சன மமுதமுதலாகக்கண்டனவெலாம்-சந்தனம் புட்பந் தீபந் தூபந் திருமஞ்சன மன்னமுதலிய பூஜாத் திரவியங்களெல்லாம்,—மனத்தாற் கருதிக்கொண்டு ஞானத்தால்பூசித்துச் சிந்திக்கச் சிந்திக்க-மனத்தாற் கற்பித்துக் கொண்டு ஞானத்தா லர்ச்சித்தலும் ஓமித்தலுந் தியானித்தலுஞ் செய்யச்செய்ய,— மருவியரனுளத்தே வரவர வந்திடுவன் - ஆண்டுப்பொருந்திய சிவம் உள்ளத்தின் கண்ணே மேலிட்டு மேலிட்டு வந்துவிளங்கித் தோன்றும்.தோன்றவே,—பின்மலமானது மே - பின ஆணவமலம் தேய்ந்துதேய்ந்து பற்றறக்கழியும்,—அதுதானுமானம சுத்தியாகு மந்தரிபாகந்தன்னை முத்திசாதனமா யறிந்திடுவர்-அங்ஙன மான்மசுத்திக்கேதுவாகலா னவ்வந்தரிபாகம் ஒருதலையான் வேண்டப்படு முத்திசாதன மென்றறிக.

இவையிரண்டு செய்யுளானு மந்தரியாகஞ் செய்யுமாறும் அஃதான்மைக்கு ஒருதலையான் வேண்டப்படுவ தென்பதுங் கூறப்பட்டன.

மறைஞானதேசிகர் உரை.

*அங்கிட்டையைப் பிரிந்தகாலத்திற் புறப்பூசை
யில் விருப்பமுண்டாகி லொப்பின் மு
டித்தலாக வுணர்த்துகின்றார்.*

புறம்பேயு மரன்கழல்கள் பூசிக்கவேண்டிற் பூம
ரத்தின் கீழுதிர்ந்த போதுகளுங்கொண்டு, சிறந்தாரு
ஞ் சீர்சிவனை ஞானத்தாலங்குச் சிந்திக்கும் படியிங்கு
ச் சிந்தித்துப்போற்றி, யரம்பாவங் கட்குநா மென்க
டவோமெங்கு மாண்டவனைக் கண்டக்கா லகம்புற மெ
ன்றே, திறம்பாதே பணிசெய்து நிற்கையன்றோ
சீரடியார் தம்முடைய செய்திதானே. (கக)

(இ-ள்.) புறம்பேயு மரன்கழல்கள் பூசிக்க வேண்டில்	புறப்பூசையுஞ் செய்யவேண்டிற்றாயி னதனைப் பூசிக்க. அஃதெவ்வாற்றா னெனின்?
பூமரத்தின் கீழுதிர்ந்த போதுகளுங் கொண்டு	பாதிரி கோங்கு அலரிமுதலிய கோட்டினின்று முதிர்ந்த பூமுதலியவற்றாற் பூசை செய்க.

இது மலையிலக்காதலாற் புறத்துஞ் சிவபூசை பூவாற் புரிவார்க் கரத்தின்மலையிலக் கேயாம். எனவறிக.

சிறந்தாருஞ் சீர்சிவனை ஞானத்தா லிங்குச் சிந்திக்கும் படியங் குச்சிந்தித்துப் போற்றி	சர்வஞ்ஞு யெவ்விடத்து நிறைந்துநிற்கின்ற அழகிய சிவனை யந்தரியாகம் பண்ணு முறைபோ லிவ்விடத்து மப்படியே கருதிப் பூசிப்பதுஞ் செய்து தோத்திரஞ்செய்து

அறம்பாவங்கட்கு நாமென்கடவோம் — யாமே யிவ்விடத்துச் செய்யும் புண்ணிய பாவங்கட் கவனே தலைவனுதலா லவற்றினைச் செய்ய எமக்கென் றறிவின்மையா லிவற்றினுக் கெவ்வாற்று னுரியோமென்று, கருதி என்னவே யான்மசமர்ப்பணங் கூறியதாயிற்று.

எங்குமாண்டவனைக் கண்டக் காலகம்புறமென்றுதே — சர்வவியாபியா யிருக்கிற சிவனை யிப்படித் தரிசித்தவிடத் தகப்பூசை புறப்பூசையென விகற்பித்துக் கருதலின்றிப் பூரணத்தைவிட்டு நீங்காது

திறம்பாதே பணிசெய்து நிற்கையன்றோ சீரடியார்தம்முடைய செய்திதானே. — சிறப்பினையுடைய ஞாதாக்கள் இந்த நிலையிற் பிரியாதற்றுத் தோன்றின கண்ணே யவன் பணியேயென்று பிறழாமல் வழிபாடுசெய்து நிற்கும். எ-று.

செய்து-எழுவாய்.

நிற்கை-பயனிலை.

புறம்பேயு மென்னு மும்மை யிழிவுசிறப்பு.

ஏகார மெதிர்மறை.

இதற்குத் தேவிகாலோத்திரம் சிவதந்திரம் இரகசியசாரத்து மறிக. (௪௧)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

புறம்பேயு மரன்கழல் பூசிக்கவேண்டில்-முன்சொன்ன வந்தரிபசனத்திலே மன தலம்பிறவாமற் புத்தியிலும் பூசிக்கவேணுமென் றிச்சையுடைத்தாமாகில்,— பூமரத்தின்கீ ழுதிர்ந்த

போதுகளுங்கொண்டு - சிவனுக்குச் சாத்தவுரித்தாகிய பூவையு டைய மரத்தின்கீழுதிர்ந்த வந்தப்புஷ்பங்களையும் முறைமையி ஞலே திருமஞ்சன முதலானவையிற்றையுங் கூட்டினவைத்துக் கொண்டு,—சிறந்தாருஞ் சீர்ச்சிவனை ஞானத்தாலங்குச் சிந்திக் கும்படி யிங்குஞ் சிந்தித்துப்போற்றி-எவ்வுயிருக்குஞ் சிறப்புயி ராய்ப் பொருந்தி யழகுபெற்றிருக்குஞ் சிவனை ஞானத்திஞலே முதல் இருதயகமலத்திலே பாவித்தபடி யாசனமூர்த்தி மூர் த்திமானைப் புறத்தியிலே க்ஷணிகலிங்கத்திலே யாகுதல் ஆசா ரியர் கொடுத்த வாண லிங்காதிலே யாகுதல் பூசைபண்ணி,— அறம்பாவங்கட்குநா மென் கடவோமென்று - இந்தப்பூசை ப ண்ணுகிறவிடத்திலே ÷ நூநாதிகங்களிஞலும் மந்திரக்கிரியா பாவஞுத் திரவியங்களினுடைய +சாங்கத்திஞலும் *வைகல்லி யத்திஞ லுண்டான புண்ணிய பாவங்களுக்கு நமக்குமெனப் போகாது சிவன் கூட்டின கரணங்களையுங் கொடுத்த திரவிய ங்களையுங்கொண் டேவினபடியே செய்தோமென்று பணிபற் நின்று. உம்மை சிறப்பும்மை,—ஆண்டவனைக் கண்டக்கா லகம் புறமென்ஞதே திறம்பாதே பணிசெய்து நிற்கையன்றோ சீரடி யார்தம்முடைய செய்திகானே - பதியாகிய சிவனை யெண்ணி றந்தகால மறியாம லிருந்தும் ஆசாரிய ருபதேசத்திஞலே சிவ ன் சுவாமியென்றும் நாமடிமை யென்றும் அறிந்தபின் புள்ளு ம் புறம் பென்ஞம லெவ்விடத்துஞ் சிவனுக்கடிமைத் தொ ழில் செய்வதன்றோ வழகிய சிவனடியார் தொழிலாவதென் றிதன்பொருள்.

எட்டாஞ்சூத்திரத்தில் 'புதியவிரைப்போது' என்றுசொல் லி யிவ்விடத்துப் பூமரத்தின் கீழுதிருந்த தென்றது விரோத மென்னில் அஃதன்று. எட்டாஞ்சூத்திரத்திற் சொன்னது கிரக ஸ்தவிஷயம்,இவ்விடத்துச் சொன்னது சந்யாசிவிஷயம்.சந்யா

சிக்கு 'புஷ்பாணஞ்ச நிகுந்தனம் என்றும் யவ்யதம் பதிதபுஷ்பம் ஸகுர்த்தவ்யம் யதிபூஜநம்' என்னு மாகம வசனத்தினால் விதியாகையால்.

÷ நூனாதிகம் குறைச்சல், + சாங்கம்-நிறைவு, * வைகல்யம்-குறைவு.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

சதா சமாதி நிஷ்டனுக்குச் சமாதி குலைந்து மனச் சஞ்சலம் வந்தகாலத்துப் புறப்பூசையும் பூசிக்க வேண்டியதென்று புகல்கின்றார்.

ஞானத்தால் - நிராலம்ப சிவத்தியானத்தால்,— அங்கு - நிராலம்ப சிவயோகத்தில்,—இங்கு- முன்சொல்லிய கலாமூர்த்தமாகக் கற்பிக்கப்பட்ட சிவலிங்கத்திலும்,—நிராகாரமா யுயிர்க்குயிராய்ச், சிந்தித்துப்போற்றி - தியானித்துப் பூசித்து,— ஆண்டவனை என்றது பூசாகாலத்திற் பூச்சிய பூசகத் தன்மையா லுரைத்தது. சமாதிகாலத்திற் சுவதந்திரமா யொப்பாக வொப்பிக்கும் நிராலம்ப சிவதியானத்தின் மூலைக்குஞ் சமாதியிற் சாற்றப்படாது.

"நாஸ்திபூஜாநமஸ்காரோ நஜபோத்யாநமேவச
கேவலம்ஞேயமித்யுக்தம் வேதிதவ்யம் நகிஞ்சந."

என்று தேவிகாலோத்தரத் திருத்தலால்,
மற்றைய வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

அகத்தாதல் புறத்தாதல் ஒருகுறியின்க ணிறைவனைக் காணப்பெறின், அகம்புறமென் றிரண்டா லர்ச்சனை புரியு மிந்தச் ச

கம் போலப் புண்ணிய பாவங்களைக் குறித்தலின்றி அதுவே நீ துவே நெனப் பிரித்துக் காண்டலுமின்றி யாண்டு மொருபெற் றியராய் இட்டபணி செய்து நிற்றலே மெய்யடியார்செய்தி யாகலான், அகத்தே காணும்படி புறத்தேயு மொரு குறியிற் கண்டு அரன்கழல் பூசிக்கற் பாற்று. அதற் குபகரணம் வேண்டுமாயின், முயன று வருந்துதலு மாகாமையான், மரத்தினின்று முதிர்ந்த பூக்களும் ஆறுகுள முதலியவற்றி னுளதாகிய நீரும் அயாசகமாய் வந்த அமுது முதலாயினவுமே ஆண்டைக் கமையு மென்பதாம்.

போற்றிப் பூசிக்கவென விடையும்.
புறம்பேயு மென வும்மை இறந்தது தழீஇ இயிற்று.
போதுகளு மென்ற வும்மை எதிரது தழீஇ இயது.
இதனானே புறப் பூசையும் ஆண்டைக்கு அங்கமாதல் கூறப் பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

ஞானவான்களுக்கு இந்த வுட்பூஜை யொழிந்து புறப்பூஜை வேண்டுமோ வென்ற மாணுக்கனை நோக்கிப் புறப்பூஜை பூஜிக்கவேண்டி னும் அந்த ஞானத்திலேலே பூஜிப்பார்களென் றருளிச் செய்கிறார்.

புறம்பேயுமரன்கழல்கள் பூசிக்கவேண்டில்-உட்பூஜை யொழிந்து புறத்திலும் பரமேஶ்வரனுடைய சீர்பாதங்களை யர்ச்சிக்கவேண்டியிருந்தா லதனாலே,—பூமரத்தின் கீழுதிர்ந்தபோதுகளுங்கொண்டு- பூவுள்ள மரத்தின்கீழே யுதிரப்பட்ட புஷ்பங்கள் திருமஞ்சனம் திருவமுது முதலான திரவியங்களுந் தேடிக்கொண்டு,—சிறந்தாருஞ் சீர்ச்சிவனை ஞானத்தாலே சிந்திக்கு

ம்படி யங்கு சிந்தித்துப்போற்றி- சிறப்புப்பொருந்திய வழகிய பரமேஸ்வரனை சிவஞானத்தாலே யங் குட்பூஜையிலே தரிசித்து இரண்டற நிற்கிற முறைமைபோல இவ்விடத்திலும் அப்படியே கண் டர்ச்சித்துத் தோத்திரமுஞ் செய்வது. இந்த முறைமையிலே நிற்கையினாலே,—அறம்பாவங்கட்கு நாமென் கடவோம்- பிராரத்தகன்மந் துலையுமளவுந் தேகத்திலேநின்று சுகதுக்கங்களைப் புசித்தாலும் விருப்பு வெறுப்புகளுக்கும் நமக்குக் தொந்தனை யுண்டாகாது. நாம்ஞானமாய் நிற்கையினாலே,— எங்குமாண்டவனைக் கண்டக்கால் - எவ்விடத்திலும் நம்மை யடிமைகொண்ட பரமேஸ்வரனைக் கண்டவிடத்து,—அகப்புறமென்னாதே-உள்ளென்றும் புறம்பென்றும் நினையாதே உள்ளும் புறம்பு மொருநீர்மையாகக் கண்டு,—திரம்பாதே பணிசெய்து நிற்கையன்றோ சீரடியார்தம்முடைய செய்திதானே- இந்தநிலை திரியாமல் எங்குமவன் பரிபூரணனாய் நிற்கையால் எவ்விடத்திலும் வழிபாடுசெய்து நிற்பதல்லோ திருவுளத்துக் குவந்த வடியார்க்குள்ள செயல்கள்.

இதனாற் சொல்லியது, ஞானவான்களுக்கு உட்பூஜை யமையுமென்று புறப்பூஜை வேண்டினாலும் அந்த உட்பூஜையைப்போல வர்ச்சிக்கவேணுமென்றும் பரமேஸ்வரனை வழிபடுமிடத்து எங்கும் பூரணமாய் நிற்கிற முறைமை யறிந்து உள்ளும் புறம்பு மொருநீர்மையாக வழிபாடு செய்யவேணு மென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

——0——

அகப்புறமென்னாதே யாண்டவனைக் கண்டக்கால் - அகத்தாதல் புறத்தாத லொருகுறியின்கணிறைவனைக் காணப்பெறீ

ல்,—அறம்பாவம்கட்கு நாமென்கடவே மென்றும் - அகம்புற மென்றிரண்டா லர்ச்சனைபுரியு மிந்தச்சகம்போல புண்ணிய பாவங்களைக் குறித்தலின்றி,—திறம்பாதே பணிசெய்து நிற்கைய ன்றே-அதுவே றிதுவே றெனப் பிறித்துக் காண்டலுமின்றி யாண்டுமொரு பெற்றியாரா யிட்டபணிசெய்து நிற்றலே.—சீரடியார் தம்முடைய செய்திதானே - மெய்யடியார் செய்தியாகலான்,—சிறந்தாருஞ் சீர்ச்சிவனை - அகத்தே காணும்படி சிறந்து விளங்குகின்ற முதல்வனை,—ஞானத்தாலங்குச் சிந்திக்கும்படி - ஞானத்தா லுள்ளேகண்டாற்போல,—புறப்பேயு மிங்குஞ் சிந்தித்து - புறத்தேயு மொருகுறியிற்கண்டு,—அரன்கழல்கள் போற்றிப்பூசிக்க - அரன் சழல்கள் பூசிக்கற்பாற்று.—வேண்டிற் பூமரத்தின் கீழுதிர்ந்த போதுகளுங் கொண்டு பூசிக்க - அதற்கு பகரணம் வேண்டுமாயின், முயன்று வருந்துதலும பிறவுயிர்களை வருத்துதலு மாகாமையின் மரத்தின்கீழுதிர்ந்த பூக்களுமாறு குளமுதலியவற்றி னுளவாகிய நீரும் அயாசகமாய் வந்த அமுதமுதலாயினவுமே யாண்டைக் கமையும்.

இதனானே புறப்பூசையு மாண்டைக் கங்கமாதல் கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

சர்வ வியாபித்துவத்தை யறிந்து வழிபட்ட
வான்மாக்களுக் கவன் கொடுக்கும் வரி
சை யீதென் றுணர்த்துகின்றார்.

இந்தனத்தி னெரிபாலி னெய்பழத்தினிரத மெள்ளின்க ணெண்ணெயும்போ லெங்குமுளனிறைவன்,வந்தனைசெய் தெவ்விடத்தும் வழிபடவேயருளு மல

மறுப்போ ரான்மாவின் மலரடிஞானத்தாற், சிந்தனை
செய் தர்ச்சிக்கிற் சிவனுளத்தேதோன்றித் தீயிரும்
பைச் செய்வதுபோற் சீவன்றன்னைப், பந்தனையை ய
றுத்துத்தா னாக்கித்தன்னுருவப் பரப்பையெலாங்
கொடுபுகுந்து பதிப்பனிவன்பாலே. (கஉ)

(இ-ள்.) இந்தனத்தினெரி	மரத்தின்கணக்கினி யடிதொடுத்து நுனியளவாக வியாபித்து நிற்குமாறுபோலவும்
பாலினெய்	பாலின்கணெய் யெங்கும் வ்யாபித்து நிற்குமாறுபோலவும்
பழத்தினிரதம்	பழத்தின்கணிரதம் வ்யாபித்து நிற்குமாறுபோலவும்
எள்ளின்கணெண்ணெயும் போல்	எள்ளிவிடத்துத் தைலம் வியாபித்து நிற்குமாறு போலவும்
எங்குமுளனிறைவன்	இறைவனெங்குமுளனெனப் பதமாறுக. சிவனு மிப்படிச் சர்வவ்யாபியா யிருப்பன்.
வந்தனை செய்தெவ்விடத்தும் வழிபடவே யருளும்	அகப்பூசை புறப்பூசையெனக் கூறியவற்றொன்றால் வழிபடவே யக்தச்சிவன் றானே சாநந்தியமாய் நின் றான்மாக்களுக் கனுக்கிரகத்தைச் செய்வன்.
மலமறுப்போரான்மாவின் மலரடி ஞானத்தாற் சிந்தனைசெய் தர்ச்சிக்கில்	மலரடிஞானத்தாற் சிந்தனைசெய் தர்ச்சிக்கி லான்மாவின்மல மறுப்போனெனப் பதமாறுக. மலர்போன்ற அவனது திருவடிகளை யடையக் கருதும் ஞானத்தாலே விருப்பத்துடன் பாவித்துப் பூசிக்கி லக்கவான்மாவினகண் ணுதியே பொருந்தின ஆணவாதி குற்றம் போம்படி.

சிவ னுளத்தே தோன்றி — தன்னை வழிபடாநின்ற வான்மாக்களிடத்தி லுண்டாகிய கிருபையினாலே யவரிடத்திலே பிரகாசியாநிற்பன். ஓரிடத்திலே பிரகாசிப்ப னென்பீராகில் அவ னேகதேசியாய் விடானோவெனில்? சிவனது வியாபகந் தடைபடாதாகையா லதற்கானியில்லை.

தீ யிரும்பைச் செய்வது போற் சிவன் றன்னைப் பந்தனையை யறுத்துத் தாளுக்கி — அக்கினியானது தன்னைச் சேர்ந்த விரும்பை யெப்படித் தற்சொரூபமாக்கிற்று, அது போல இந்தச் சீவனுந் தன்னைப் பொருந்தின வான்மாக்களுடைய ஆணவாதிமலப் போக்கி யவர்க ளறிவை விளக்கித் தற்சொரூபமே யாக்கி

தன்னுருவப் பரப்பை யெலாங் கொடுபுகுந்து பதிப்ப னிவன்பாலே. — தன்னைப்போலச் சர்வஞ்ஞத்துவாதி குணங்களையு மிச்சாஞானக் கிரிபைகளையு மிந்த வான்மாவிடத்திலே கொண்டுவந்து பதியாநிற்பன். எ-று.

ஆன்மா விச்சாஞானக் கிரியாசொரூப னென்று முன்னோதியிருக்க இப்பொழுது கொடுப்பனென்ற தென்னைபோவென்னி லது பாசத்துடன் கூடினபோது விருத்திகாரியமாகச் சீவிக்கும், ஈண்டு நிச்சயரூபமாகவே சீவிக்கு மதனையே யிப்பொழுது கொடுத்ததெனக் கூறியதெனவறிக.

இறைவன் - எழுவாய்.

எங்குமுளன் - பயனிலை.

அந்த விறைவனே பதிப்பனென்பதும் பயனிலை.

ஒரெழுவாயு மிரண்டுபயனிலையுங் கொண்டதெனவறிக.

இதற்குச் சர்வஞானோத்தரம் ஆக்கினேய புராணத்து மறிக. (கஉ.)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேலுமதற்கே புறநடை.

இறைவ னிந்தனத்தினெரி பாலினெய் பழத்தினிரத மெள்ளின்க ணெண்ணையும்போ லெங்குமுள னெவ்விடத்தும் வந்தனைசெய்து வழிபடவேயருளும் -போல் என்பது கடைநிலைத்தீபம், பதந்தோறு மொட்டிப் பொருளுரைக்க. சகதகர்த்தாவாகிய சிவன் சராசராத்மகமாகிப் பிரபஞ்சமெங்குங் காஷ்டமு மக்கினியும் போலவும் பழமுஞ் சுவையும் போலவும் எள்ளுமெண்ணையும்போலவும் பிரிவறநின்றுளன். ஆதலால் சராசரப் பேதங்களிலே எந்தமூர்த்தியிலே சிவபாவனைப் பண்ணிப் பூசித்து வழிபடினும் அதற்கதற்கேற்றபலங்களைப் பூமியாதிபத்தியம் சுவர்க்கமுதலாக சிவசாமீப்ய பரியந்தமும் போகங்களை யெல்லாங் கொடுப்பன். இவ்விடத் தனேக திட்டாந்தங்களினாலே அத்வைதம் திடம்பண்ணினது.—மலமறுப்போ ரான்மாவின் மலரடி ஞானத்தாற் சிந்தனைசெய் தர்ச்சிக்க- போகமானது அசத்தியமும் பந்தமுமாதலான் மோக்ஷமே வேணுமென் றிச்சித்தப்போர் ஆன்மாவி னிடத்திலே சிவஞானத்தினாலே சிவதரிசனத்தைப் பண்ணிச் சிவ னான்மாவிடத்திலே வேறற நின்றமையாலே நானே சிவனாகப் பாவித்து ஞானபூசையைப் பண்ண,—சிவனுளத்தே தோன்றி பந்தனையை யறுத்துத் தீயிரும்பைச் செய்வது போற் சீவன்றன்னைத் தானாக்கித் தன்னுருவப் பரப்பை யெலாங் கொடுபுகுந்து பதிப்ப னிவன்பாலே-முன்சொன்னவாறு ஞானபூசை பண்ணவே சிவ னான்மாவிலே பிரகாசித் தாணவாதி பாசங்களையறுத்து அக்கினி யிரும்பிலே பொருந்தி யிரும்புடைய நிறத்தையுஞ் சுடுந்தொழிலையுங் காட்டியதுபோல ஆன்மாவைத் தானாகச்செய்து, தானாகச் செய்த லான்மாவினுடைய

கிஞ்சிஞ்ஞதையும் பாரதந்திரியத்தையு மொழித்துத்தனதாகிய சர்வஞ்ஞ சர்வ கர்த்திருத்துவத்தைப் பிரகாசிப்பித்து ஐந்தொழிற் கிருத்தியங்களைப் பண்ணிவிப்பது. இவ்வாறு சீவன்முத்தி யவஸ்தையிலே செலுத்திப் பரமமுத்தியிலே தன்னுடைய ஸ்வரூபமாய்ச் சத்திய ஞானுந் தங்களைக் குறைவற விந்தப்பரமமுத்தவிடத்திலே ஸ்தாபிப்பனென் றிதன்பொருள்.

கொடுவென்றது ஆன்மாவை தம்மைக்கிரகித்தெனவும் புகுந்தென்றது ஆன்மாவுக்குத் தம்மைக் கொடுத்தெனவு மறிக. இதற்குச் சம்மதி திருவாசகம் "தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச் சங்கரா. ஏகார மீற்றசை.

× பாரதந்திரியம் - உட்பட்டிருக்கை,

சிவாக்கிரயோகிபண்ணின சிவஞானசித்தி
ஒன்பதாஞ் சூத்திர வியாக்கியான
சமாப்தம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

——o——

தேவிகா லோத்தரத் துரைத்த ஞானசார முற்று முற்று முலோகாசாரப் பற்று முற்று மற்றவர்க்கே பஞ்சாக்ஷர மாத்திரத்தா லங்க நியாச மதனு லந்தரியாக மதனுற் பூமரத்தின் கீழ் விழுந்த பூப் புறப் பூசை, இம் முக்குறி பொறிக்குஞ் சிற்குறி ஞான பூசை, உலோகாசாரமு ஞானுசாரமு மொத்து மேறியுங் குறைந்து மிருக்கு மவர்க்கு பத்ததிப் படிக்குப் பலகுறிக் கிரியாபூசை, சிவத்தியான வுயிரியர்சைச் சிவஞான பூசையினுற் சிவன் சீக்கரஞ் சாந்நித்ய மாய்ச் சிவத்துவாபிவியத்தி செய்வனென்று செப்புகின்றுர்.

இந்தனத்தி னெரி யென்பது முதல் உவமை முற்றுவமை யன்று பிரபஞ்ச மாத்திரத்தி லேகதேச வுவமை. முற்றுவமையாக்கிப் பொருளுரைக்கில், இந்தனத்தி னெரி யென்பதனாற் காஷ்டத்தி னவயவமாய்க் காஷ்டத திருக்குமக்கினிப் பரமாணு வுக்கும். அப்படி யிருக்கும் பிருதிவிப் பரமாணு அப்புப் பரமாணு வாயுப் பரமாணுக்களுக்கும் சம்யோகசம்பந்தம். அந்த இந்தனத்துனுக்கு மெல்லாப் பரமாணுக் களுக்குஞ் சமவாய சம்பந்தம்.

அக்கினிப் பரமாணுவுக்கு மெரிக்கும் சம்யோக சம்பந்தம் சொல்லப்பட்டடும்.—

பாலினெய் யென்பதினாலும் எள்ளின்க ணெண்ணெ யென்பதனாலு மப்படி யூகித்துச் சம்யோகசம்பந்தமும் சொல்லப்படும்.—

பழத்திலிரத மென்பதனாற் கேவலஞ் சமவாய சம்பந்தஞ் சாற்றப்படு மாதலாற் பிரபஞ்சத்திற்குஞ் சிவனுக்கும் மிச்சம்பந்த மெல்லாஞ் சாற்றப்பட்டுச் சிவன் விகாரியாய்ச் சடமாயு மேகான்ம வாதத்திற் கிருப்புமாவன். ஆதலா லிச் சம்பந்தங்களை விட்டுச் சித்த சித்துப் பிரபஞ்ச முற்றும் வியாபித்து,—

எங்குமுள னிறைவனென - அதனாலே எவ்விடத்தும் இலிங்க சித்தி யாதியில்,—

வந்தனை செய்து வழிபடவே - கிரியாபூசை நமஸ்காரங்கள் செய்து போற்ற,—

அருளும்- பதமுத்தி கொடுத்துப் பரபோகந் துய்ப்பித்து மகாப் பிரளயத்திற் பரமுத்தியும் பலிப்பிக்கும். திரிகாலத்திற் பரமுத்தி தல்லப மாறனும்,—

மலமறுப்போர் - உத்தரோத்தர சுத்த போக மாத்திர முற்று நடுவே கீழ்நழுவாதபடி ஒத்தமல பரிபாகத்தால் மகாப்

பிரளயத்து மதிதுல்லபமாய்வரு மிகுந்த மஃடரிபாகதார தம்மியத்தால் நிரதிகரண சிவதீக்ஷை சாதிகரண சத்தியோ நிருவாண சிவ தீக்ஷை யிரண்டிற்கு மருகர் சிலர் தவிர வசத்யோ நிருவாண தீக்ஷை மாத்திரத் தருகராய்த் தானங்களிற் றங்காது சரீராந்தத்துச் சிவத்துவந் தடையின்றி யடையும் பொருட்டுத் தீக்ஷையிற் பிராரத்த கன்ம போகந் தகைந்த சிஷட மலமுத்தி விரும்புவோர்.

ஆன்மாவின் மலரடி ஞானத்தால் - சிவசத்தி விளக்கில் விளங்கிய சிற் சத்தியால்,—

சிந்தனை செய் தற்சிதக -சிவோகம் பாவனுத்தியான பூசை பண்ண,—

சிவனுளத்தே தோன்றி - ஆன்மாவில் மலக்ஷய சரசங்கற்ப சாநித்தியனாய்ச் சீவன் முத்தி சிவ சாக்ஷாத்காரந்தான் பரமுத்தி சிவ சாக்ஷாத்காரகோடி பரிசிக்கு முத்தம சிவ சமாதி மாத்திரந்தா னுதிக்கப் பண்ணிச் சரீராந் தத்தில்,—

தீபிரும்பைச் செய்வது போல - முற்றுவமையன் றிதுவும். ஒத்த சிவத்துவப் பிரகாச மாத்திரத்தி லேக தேச திஷ்டாந்தம். முற்றுவமை யுன்னில் சிவாவேச காபால மதமாம், அது சித்தாந் மன்று; தடத்த லக்ஷண மாதலால். அதைச் சொரூப லக்ஷண மோக்ஷ சுருதி தூரத்தும். ஆகையா லவ்வள வொப்பினுல்,—

சீவன் றனைப் பந்தனையை யறுத்துத் தானுக்கி - அச் சேவித்த மலத்தினை மாற்றித் தன்னைப் போற் றற்பொருளாகிவிற் சிவனுக்கி,—

தன்னுருவப் பரப்பையெல்லாங் கொடு புருந்து பதிப்பணிவன்பாலே - இவ்விடத்தும் லக்ஷணையாற் பொருளுரையா திரு

க்கபடி யுரைத்தாற் சங்கிராந்தவாதி பாசுபதி மதமாம். அது சித்தாந்த மன்று, தரணப் பொருளைக் கொடுபுகுந்து பதிப்ப னென்பது கூடாது. சிவனாகிய ஆன்மாவிலே தனது சத்திக் கொத்த பிறப்பொரு ளறிவுச் சிற்சத்திக்குறிச் சிவத்துவ தரண முற்றும் பிரகாசிப் பிப்பன். சிவப் பிரகாச முதற் சிவ சாத்திரங்களிலே திரிமலமு மகல வுயிருள் சேர்முத்தி யென்பது முதல் வசனங்களுக்கு மிலக்ஷணையினுற் பொரு ளிப்படித்தானே பண்ணவேண்டும். சொற்பொருளிருந்தபடி பொருளுரைக்கிற் பாசுபதி முதலோர் மதமாம். அதுசிவசித்தாக்த மன்றென்றுசெப்பி யப்பொருள் தள்ளிய தாகையா லிப்பொருள் நற்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

இறைவன் அகம்புறமென்னும் பிரிவின்றி யாங்கணு முளனாகலான், மேற்கூறியபடி அகத்தாதல் புறத்தாதல் யாண்டுவழிபடினும் அனுக்கிரகிக்குமென்பதே தேற்றம். அங்ஙனமாயினும் ஆன்மாவின் கண்ணதாகிய வாதனுமல நீக்கலுறுவார்க்கு அகப்பூசையா லவ்வாறு வழிபடுத லொருதலையான் வேண்டும். இறைவன் விளங்கித் தோன்றி வாசனையைப் பற்றறத் துடைத்தற்குந் தன்வண்ணமாக்கித் தனது பேரானந்தப் பெருஞ்செல்வ முழுவதும் அவனதாகச் செய்தற்கும் உரிமையுடைய விசேடவிலையபு ஆண்டையதாகலா னென்பதாம்.

இங்ஙனத்தினெரி உலகத்தார்க்குச் சிறிதுந் தோன்றுதவாது மறைந்து உடனாய் நிற்றற்கும், பாவினெய் மந்ததரமலபாகமுடையார்க்கு ஒருவாற்ருற் றேன்றியுக் தோன்ருதும் மறைந்

து உடனாய் நிற்றற்கும், பழத்தினிரதம் மந்தமலபாகமுடை யார்க்கு உய்த்துணரும்வழி விளங்கித் தோன்றுவதாய் உடனா ய் நிற்றற்கும், எள்ளின்க ணெண்ணெய் தீவிரமலபாக முடை யார்க்கு இனிது விளங்கித் தோன்றினும் பிரித்தறியப்படாது உ டனாய் நிற்றற்கும் உவமையாயின.

எங்குமுள னிறைவனென்றது எவவிடத்தும் வழிபடவே யருளுதற்குரிய வியைபு விளக்குதற்கும், மலமறப்போரென்ற துந் தோன்றி யறுத்தாக்கிப் பதிப்பனென்றதும் ஆன்மாவிற் சிந்தனைசெய் தர்ச்சித்தற்குரிய விசேடவியைபு விளக்குதற்கு ம், ஏதுவாய் நின்றன.

தன்னுருவப் பரப்பெல்லா மிவன்பாலே பதிதலாவது, தீ இருப்பைச் செய்வதுபோல இறைவனுக்குரிய முற்றுணர்வு முத லிய எண்குணங்களும் படிகம்போலச் சார்ந்ததின் வண்ண மியல்புடைய ஆன்மாவுக்குரிய குணமாம்படி அத்துவிதவியை பானே இவன்மாட்டு விளங்கித் தோன்றுதல்.

அதுவே சிவானந்த மேலிடுத லென்பது.

அர்ச்சிக்கவென்றது வியங்கோள். முடிபு வேறாகலிற் பா ல் வழுவின்மையுணர்க.

அர்ச்சிக்கவென்பதனை எச்சமாகக்கொண்டு பாடமோது வார் பால்வழுவாதலையும் நோக்கிற்றிலர் போலும்.

மேல் அந்தரியாகந் தன்னையென்ற செய்யுளிற் பெறப்பட் டதனை ஈண்டுங் கூறுதல் கூறியது கூறலாம் போலுமெனின் மலைய ற்க, வேண்டாது கூறி வேண்டியது முடித்தற்கெழுந்த விச்செ ய்யுளாகலின்.

இதனானே யப்புறப்பூசையி லகப்பூசை விசேடமுடைத் தென அதன்பெருமை கூறப்பட்டது.

இவையாறு செய்யுளானும் மூன்றுங்கூற்றின் பொருளைத் தெரித் துணர்த்தியவாறு.

நிரம்பவழகியருரை வருமாறு.

———o———

உட்பூசை மகத்தாக வருளிச்செய்தசென் நம்பு என்ற மாணாக்கனை நோக்கி மேலு மருளிச்செய்கின்றார்.

இந்தனத்தினெரிபாலினெய் பழத்தினிரதம் எள்ளின்கணெண்ணெயும்போ லெங்குமுளனிறைவன்-காட்டத்தி லக்கினிபோலவும் பாலி னெய்யைப்போலவும் பழத்தின் சுவைபோலவும் எள்ளினிடத்துண்டாகிய எண்ணெயைப்போலவும் பரமேசுவரனும் சடசித்துக்களா யெவ்விடத்திலும் வியாபியா யிருப்பன்,—வந்தனைசெய் தெவ்விடத்தும் வழிபடவேயருளும்- ஆகையாலே பரமேசுவரனும் தன்னை யாதோரிடத்திலே நமஸ்கரித்து வழிபாடுசெய்யவே அவரவர் கருத்துக்குத் தக்கதாக வனுக்கிரகியா நிற்பன்,—அத்தன்மையொழிந்து மலமறுப்போரான்மாவின்- ஆன்மாவுக் கநாதியேயுள்ள மலத்தைத் திருவருளினாலேபோக்க விசாரிக்கிறவர்கள்,—'மலரடிஞானததாற் சிந்தனைசெய்தர்ச்சிக்க-எவ்விடத்திலும் விட்டு விளங்காநின்ற சீர்பாதமாகிய ஞானத்தாலே சிவனை யறிந்து தன்னுடைய விருதய கமலத்திலே யர்ச்சிக்க,—சிவனுளத்தேதோன்றி- அநாதியே தோன்றாமல் நின்றசிவன் ஆன்மாவிலே பிரகாசித்து,—தீயிரும்பைச்செய்வதுபோற் சிவன்றன்னைப்பந்தனையை யறுத்துத்தானாக்கி - அக்கினியானது தன்னைக் கூடின விரும்பை யிரும்பின்றன்மையை மறைத்துத் தானாக்கின முறைமைபோல சிவனுந் தன்னைப் பொருந்தின வான்மாவை அவனுடைய பாசசம்பந்தங்க

லையும் விடுவித்துத் தன்னைப்போல நின்மலனாக்கி அப்படி வருப மாக்கினது மன்றி'—தன்னுருவப் பரப்பையெலாங் கொடுபுகுத் து பதிப்பனிவன்பாலே- தன்னுடைய சுகசொரூபத்தின் வியா த்தியெல்லா மிவனுக்கு ப்ராணனாய் நின்றநிலையிலே காட்டி யனுபவித்து அசைவறநின்று பிரகாசியாநிற்பன்.

இதனாற் சொல்லியது, எவ்விடத்திலும் வியாத்தமாயு ள்ள பரமேஸ்வரனை ஞானவானகளா யுள்ளவர்கள் தங்கள் தங்களுக்குப் பிராணனாய்நிற்கிற முறைமையைச் சிவஞானத் தாலே யறிந்து யுள்ளே பூசிக்கத் தங்களுக் குண்டான மலச ம்பந்தமும் நீங்கிச் சிவனைப் பெறுவர்களென்னு முறைமை றிய வித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

——o——

இறைவ னிந்தனத்தினெரி - இறைவ னகம்புறமென்னும் பிரிவின்றி யுலகத்தார்க்குச் சிறிதுந் தோன்றாதவாறு மறைந்து டனாய் நிற்கும் விறகிற்றீப்போலவும்,—பாலினெய் - மந்தர மலபாகமுடையார்க்கு ஒருவாற்றாற் றோன்றியுந் தோன்றாது ம றைந்துடனாய் நிற்கும் பால்நெய்போலவும்,—பழத்தினிரதம்- மந்தமலபாக முடையார்க் குய்த்துணரும்வழி விளங்கித் தோ ன்றுவதாய் உடனாய் நிற்கும் பழத்திரசம் போலவும்,—எள்ளி ன்க ணெண்ணெயும்போ லெங்குமுளன் - தீவிரமலபாக முடை யார்க்கு இனிது விளங்கித் தோன்றினும் பிரித் தறியப்படா து டனாய்நிற்கு மெள்ளி னெண்ணெய் போலவும் யாண்டுமுளனாத லான்,—எவ்விடத்தும் வந்தனை செய்து வழிபடவே யருளும்- மேற்கூறியபடி அகத்தாதல் புறத்தாதல் யாண்டும்வந்தித்து வழி

படினு மநுக்கிரகிக்கு மென்பதே தேற்றம்.—ஆன்மாவின் மல மறுப்போர் - அங்ஙனமாயினு மான்மாவின கண்ணதாகிய வாதனுமல நீக்கலுறுவார்க்கு,—மலரடிஞானத்தாற் சிந்தனை செய் தர்ச்சிக்க - அகப்பூசையா லவ்வாறு வழிபடுதல் ஒருத லைபான் வேண்டும்.—சிவனுளதகேதோன்றிப் பந்தனையையறுத்து - இறைவ னுள்ளே விளங்கித்தோன்றி வாசனையைப் பற்றறத் துடைத்தற்கும்,— தீயிரும்பைச் செய்வதுபோற் சீவன்றன்னைத்தானுக்கி - தீயிரும்பைச் செய்வதுபோல வுபிரைத தன் வண்ணமாக்கி,—தன்னுருவப் பரப்பையெலாங் கொடுபுகுந்துமிவன்பாலேபதிப்பன் - இறைவனுக்குரிய முற்றுணர்வு முதலிய வெண்குணங்களும் படிகம்போல சார்ந்ததின்வண்ணமா மியல்புடைய ஆன்மாவுக்குரிப குணமாம்படி அத்துவித இயைபானே இவன்மாட்டு விளங்கித் தோனறுதலாகிய தனதுபேரானந்தப் பெருஞ்செல்வ முழுவது மிவனதாகச் செய்தற்கு முரிமையுடைய விசேட வியைபு ஆண்டைய தாகலான்.

இதனுனே புறப்பூசையி லகப்பூசை விசேடமுடைத்தெண அதன்பெருமை கூறப்பட்டது.

இவை ஆறுசெய்யுளானும் மூன்றுங் கூற்றுப் பொருளைத் தெரித் துணர்த்தியவாறு.

—o—*—o—

கூ-ரு, க-ம், அதிகரண முடிந்தது.

ஒன்பதாம் சூரத்திரம் முற்றிற்று.

“ஈராறு என்ற”

ஒன்பதாஞ் சூத்திரம்

பனிரண்டு முடிந்தது.

சிவமயம்.

சிவஞான சித்தியார் சுபக்ஷம்.

க0—வது, மலமோசன இலக்கணம்.

மறைஞானதேசிகர் உரை.

இனிப் பத்தாஞ்சூத்திர மெனனுதலுற்றோவெனின்?
முற்கூறிய பாசவாதனை நீங்கிச் சீவன்முத்தர்
நிற்கு நிலைமை கூறுத னுதலிற்று.

இத் தலைச்செய்யுள் என்னுதலிற்றோ வெனின்? இச்சீவன் முத்தர்க் காகாமிய மேருதபடிக்குக் காரணங் காட்டி யுணர்த்துத னுதலிற்று.

இவனுலகி லிதமகிதஞ் செய்தவெல்லா மிதம
கித மிவனுக்குச் செய்தார்பாலியையு, மவனிவனாய் நி
ன்றமுறை யேகனாகி யரன்பணியி னின்றிடவு மகலுங்
குற்றஞ், சிவனுமிவன் செய்தியெலா மென்செய்தி
யென்றுஞ் செய்ததெனக் கிவனுக்குச் செய்ததென்
றும்,பவமகல வுடனாகி நின்றுகொள்வன்பரிவாற் பா
தகத்தைச் செய்திடினும் பணியாக்கி விடுமே. (க)

(இ-ள்.) இவனுல கிலிதமகித ஞ்செய்த — இந்தச் சீவன்முத்தர் இந்த வுலகத்தின் கண்ணே செய்த புண்ணியபாவங்க ளவர்க ளிடத்திலே ஆகாமியமாய் வந்தேருது. அஃ

வெல்லா மிதமகி தமிவனுக்குச் செய்தார்பா லியையும்

தெங்கே சென்றடையுமென்ன, சிவனவர்களுங் கிதமகிதஞ் செய்தவர்க ளிடத்திலே தானே சென்றடையும்படி திருவுளஞ் செய்வன். அஃ தெக்காரணத்தா லெனில்?

அவ னிவனாய் நின்றமுறை யேகனாகியரன்பணியி னின்றிடவு மகலுங்குற்றம்

காட்டத்தி லக்கினியானதுபோல ஐக்கிய முற்றுக் கூறுகையா லந்த வைக்கியத்தின் முறைமையிலே யிவன் செய்கிற செயல்களெல்லாஞ் சிவனேவலெனக் கருதிப் பணியறுதலுக்கொண்டு நிற்கவே யிவனுக் காகாமிய மேருமலிவனுக்குச் செய்தவர்க ளிடத்திலே தானே யவ்வினைகள் போயடையும்

"யாதே செய்யினு நாமல்லோ நீயெனி, லாதே செய்யு மளவில் பெருமையன், மாதே வாகிய வாய்மூர் மருகனூர், போதே யென்று புகுந்தும் போய்கொலோ." எனவறிக.

இச்சிறப்பினையுடைய ஞாதலாலே.

சிவனுமிவன் செய்தியெலா மென்செய்தியென்றும்

பரமேசுரனும் இந்த உலகத்தின்கட் சீவன்முத்தனா யிருக்கிறவன் செய்கிற விருவினைப் பலங்க ளனைத்தினையு மிவன் செய்தானெனக் கருதாதவைக ளெல்லா நாமே செய்ததெனக் கருதி

செய்ததெனக் கிவனுக்குச் செய்ததென்றும்

யாதாமொருவ ரிந்தச் சீவன் முத்தனுக்குச் செய்யப்பட்ட நல்வினை தீவினைக ளனைத்துஞ் சிவனுக்கே செய்ததென்று

பவமகல வுடனாகி நின்றுகொள்வன்

இந்த ஞானவான்கள் சுத்தராகையாற் சனன மெடாதபடியாலே சிவனு மவர்களுடன் கூடி யொன்றுபட்டு நின்றுகொள்வன்

பரிவாற் பாதகத்தைச் செய்திடினும் பணியாகிவிடுமே.	சிவனிடத்திலே நேசத்தாலே இவன் சண்டாளரைப்போல மகத்தாகிய பாபங்களைச் செய்தானேயாகிலும் இவனுமவனுங் கூடியிருக்கிற வைக்கியத்தினாலே யக்குற்றமு நன்மையாய்விடும். எ-று.

ஏகார மீற்றசை.

இதற்குத் தேவிகாலோத்தரம் சிவஞானபோதம்.

"சொன்ன ஞானி தனைத்துதித் தாரவர், முன்னஞ் செய்யற முற்று மடைவர்க, ளின்னல் சொன்னவ ரேயவர் வன்பவ, மன்னுவாரசைவிஞ்ஞானஞ் சேர்வரே" எ-ம் அருத்துக வமலனா ரன்னை யகத்துணர்ந்தவரையன்னங், கருததிருந்தவர்க்குச் செய்த பூசனைகடவுள் கொள்வ, ரொருத்தருக் குபசாரங்க ளுடலிடையுலகர்செய்வர், பிரித்துட லுயிரைப்பேணும் பெற்றியையாரே பெற்றார்." என்றோதினா ரெமதுகுறவர். (௧)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—-0—

ஞானநெறி சொல்லி மேல்பத்தாஞ் சூத்திரத்தில் பிரபத்திநெறி கூறுகின்றது. பிரபத்தியாவது மார்ஜ்ஜால சிசுவைப் போலத் தன்செயலறச் சிவன்வழித்தாய் நிற்கை.

அவனிவனா யேகனாகி நின்றமுறைமையினாலே யரன்பணியி னின்றிடவு மகலுங்குற்றம் - அவன்-சிவன், இவன்-ஆன்மா, என்பது லோகப்ரசித்தம். சிவ னான்மாவிலே யபிவியத்தியாய் ஆன்மாதானாக வொன்றுபட்டு நின்றமுறைமையினாலே ¶ பிரபஞ்சனைவ னெல்லாச் செயலுஞ் சிவனதாகவே செய்துநிற்கையால் புண்ணிய பாபங்களென்கிற குற்றமிவனைப் பொருந்தாது. இவன் சிவன் செயலென்று பாவிக்கிற மாத்திரமன்றியு

ம்,— சிவனுமிவன் செய்தியெலா மென்செய்தி யென்று மிவனுக்குச்செய்த தெனக்குச் செய்த தென்றும் பவமகலவுடனாகி நின்றுகொள்வன் பரிவாற் பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கிவிடுமே-சிவனுமிந்த பிரபன்னன் கோபப் பிரசாதங்களினாலே பண்ணின நிக்கிரகாநுக் கிரகமெல்லாம் நாம்பண்ணினதேயென்றும் இவனுக்கொருத்தர் பண்ணின உபகா ரபகாரங்ளெல்லாம் நமக்குப் பண்ணினதென்று மிவனுக்கு சனனத்துக் கேதுவான வாகாமியகன்ம மேருமலொழியும்படி வேறறநின்றிவனைத் தானாகவே யங்கிகரித்துக் கொள்வன். இவ்வாறு பெற்ற பிரபன்னன் புத்திபூர்வமாக மகாபாதகங்களைப் பண்ணினனாகிலும் அதுதமதேவலாயாக்கிக் கன்மத்தை யொழித்துவிடும். ஏகார மீற்றசை. விடுவனென்றது விடுமென்றது வினைமுற்று.

नाभुक्तं क्षीयते कर्म कल्पकोटिशतैरपि ।

என்னும் வாக்கியத்தினாலே பண்ணின கன்மமானது பலத்தைக்கொடாதே போகாதே யென்னின்? மெய். ஒருவன்பண்ணின கிருஷியினாலுண்டாகிய தானியம் அவன்புசியாமல அந்நியராலும் புசிக்கப்படுமே! அதுபோல வென்பதற்கு,—இவனுலகிலிதமகிதஞ் செய்ததெல்லா மிதமகிதமிவனுக்குச் செய்தார்பா லிசையும்-பிரபன்னனவன் சனங்களுக்குப் பண்ணின நன்மைகடீமைகள் விதியுத் தாசாரங்கள் அநாசாரங்க ளாசாரங்க ளிவையிற்றின் பலங்கள் எல்லா மிவனுக் கிதம்பண்ணினவர்க ளிடத்திலும் பொருந்தும்.

तथाहि — प्रारब्धं भोगतो नश्येत् शेषं ज्ञानेन नश्यति । आगामिकस्य कर्मणस्तु [illegible] नास्ति ॥

ஞானப்பிரகாசருணா வருமாறு.

——o——

இப்படி யெட்டாஞ் சூத்திரத்து மொன்பதாஞ் சூத்திரத்து முத்தி சாதன சிவயோக மநேகம் பிரகாரமா யறைந்து சிவயோகபல சிவபோக சிவ சாக்ஷாத்காரமுஞ் சிறிது சிறிது நடுவே செப்பி, வடமொழிப் பத்தாஞ் சூத்திரத்திற்முனே செப்பியிருத்தலாற் சிவ சாத்திர மாத்திர சாதநிய சிவ யோகாங்கக் குறித் திரிபதார்த்த சிவத்துவபசுதத்துவ விவேக பரோக்ஷ பொது ஞானமுஞ் சிவபோக சாதன சிவயோகம் பாவக சிவ சமாதிக்குறிச் சிவயோகமுஞ் சிவபோகபல வபரோக்ஷ சாக்ஷாத்காரச் சிறப்பு ஞானக்குறிச் சிவபோகமும் சிவயோகி மகிமையுஞ் செப்புகின்முரா யொன்பதாஞ் சூத்திரத் தந்தத் துரைத்த சமாதிமான மகிமை சாற்றுகின்முர்.

இவனுலகி லிதமகிதஞ் செய்தவெல்லாம் - பூமியின் கண்ணிச் சமாதிமான் செய்யு மிதமகித முன்னுகப் புத்தியின் முளைக்கும் புண்ணிய பாவங்கள் முற்று முவர்த்தரையில் விதைத்த வித்துப்போற் பலியாது,—இதமகித மிவனுக்குச் செய்தார்பாலிசையும்-இவனுக்குச் செய்த விதமகித முன்னுகம் புண்ணியபாவங்கள் செய்தவர்கள் புத்தியிற் பொள்ளெனப் பெரிதாய் முளைக்கும். அதுகொண் டவை வருமென் றுபசரிக்கப்பட்டது. அதுவன்றி யவைவருமென் றுரைத்தால் முத்தான்மாவிற் சிவசத்தி சங்கிராந்திக்கும், திஷ்டாந்த மில்லாமற் றேடும் சங்கிராந்தவாதி திருஷ்டாந்தமாகப் பண்ணிச் சித்தாந்தியைச் சயிப்பன். ஒருவனது புண்ணிய பாவ மொருவனிடத்திற் போகாது. அவனைக் குறித்துப் பண்ணினு லவனது புத்தியின் முளைக்கும்,—அவனிவனுய் நின்றமுறை யேகனுகி - சோகம்பாவித் திருப்ப

துபோ லொத்த சிவக்குறி யுள்ளாகிப் புன்னிச் சிவன் முன்னாகப் பின்னானென்று சிந்தித்து-அரன்பணியி னின்றிடவும்,—

"ஸமாதி ஸமதாவஸ்தா ஜீவாத்மா பரமாத்மனோ"

என்னுஞ் சிவ வசனத்தால் சிவசம சிவாவஸ்தாவேச வசனாகிச் சீவித்திருக்க, அப்படிச் சிவன் விதித்த சிவ சமாதி யனுஷ்டானத்தில் நிற்கத் தானவனாதலால், சமயி பண்ணுந் தாசானுஷ் டானத்தினின்று தற்செயலற்றுத் தான் கெட்டு நிற்கவென்று பொருளுரைப்பது நன்றன்று. சமாதியினும் நானென்பது அகங்கார விர்த்தி யுபாதி விர்த்தி மாத்திரம் விட்டு ஸ்வதந்திர புத்தியோடு தோற்றுமற் றோற்றி நிற்கு மாதலால்,— அகலுங்குற்றம்-பாச முத்தி சிவத்துவாபி வியத்தி பலிக்கும்.— பணியாக்கி விடுமே - நிஷித்தானுஷ்டான மானாலுஞ் சண்டேச்சுரன் முதலோர்க்குப் போல விதிதானுஷ்டான மாக்கி விடும்.

மற்றைய வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

இங்ஙனம் வேண்டுஞ் செய்திமுறைமைகள் மூன்றுசூத்திரத்தால் வகுத்தோதிய வாசிரியர், நிறுத்தமுறையானே அச்சாதனத்தாற் பெறப்படும் பெத்தநீக்கமும் முத்திப் பேறுமாகிய பயனியல்பு மூன்றுசூத்திரத்தாற் கூறுவான் றொடங்கினார். அவ்விருவகைப் பயனுள் அப்பெசத நீக்கமாமாறு கூறுதற்கெழுந்தது பத்தாஞ்சூத்திரம்.

பதிஞானத்தா லிங்ஙனங் காணப்பட்ட விறைவன் பெத்தநிலையி லுடனாய் நிற்பினும் வேறு காணப்படுமாறின்றி ஆன்மா

வேயா யொற்றுமைப்பட்டு ஆன்மாவின் வழிநின்ற முறைமை போல, ஈண்டான்மா அம்முதல்வனோ டொன்றாய் நின்றறியினுந் தானென வேறு காணப்படாதவாறு அவனோ டொற்றுமைப் பற்றி அவ்விறைபணியின் வழுவாது நிற்கப்பெறின், அங்ஙன மேகனாகி நிற்றலான் யானெனதென்னுஞ் செருக்கறுதலின் அவ்விறைவனும் இவன் செய்யுமிதமகிதங்க ளெல்லாம் யான் செய்யு மிதமகிதங்களென உடனாய்நின்று ஏன்றுகொள்வன். அவ ன்பணியினிற்றலான் இந்திரியங்களின் வசமாய்நிற்கும் பாதந்திரிய மொழிதலின், அவ்விறைவனும் இவனுக்கின்பத்துன்ப நுகர்ச்சியாமாறு பிறர்செய்யு மிதமகிதங்க ளெல்லாம் எனக்கு நுகர்ச்சியாமாறு செய்தனவேயாமென உடனாய்நின்று ஏன்று கொள்வன். இவ்விருதிறத்தானும் முறையே, இவன்செய்யு மிதமகிதங்கள் இவனுக்குப் பணியாய் முடியும். இவனுக்கு இதமகிதஞ் செய்தார்மாட்டு அவ்விதமகிதங்கள் அவ்வளவினன்றி மிகுதிப்படுதற்கு முறையே துணைக்காரணமாயிவையும். இங்ஙனம் ஆர்ச்சிப்பும் நுகர்ச்சியும் இவனைப் பந்தியாதொழியவே, ஏனைச் சஞ்சிதவினையு மாயையு மாணவமுமாகிய குற்றங்கண மூன்றும் இவனைப் பந்திக்கமாட்டாவாய் விண்டொழியு மென்பதாம்.

நின்றிடவென்பதனை ஈரிடத்துங் கூட்டி நிரனிறையாக வைத்து, என்றென்னு மெச்சங்களைக் கொள்வனென்பதனோடுந் தனித்தனிகூட்டி, இவனுலகிலென்னு முதலடியைப் பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கி விடுமேயென்றதன் பின்னாக வைத்துரைத்துக்கொள்க.

நின்றிடவுமென்றவும்மை சிறப்பு.

பாதகத்தைச் செய்திடினுமென்ற வும்மையாற் புண்ணியத்தைச் செய்திடிற் பணியாக்கிவிடுதல் கூறவேண்டாவாயிற்று.

அவை மிகுதிப்படுதற்குத் துணைக்காரணமா யிவையுமென் பது ஆற்றலாற் பெற்றாம்.

அது அவர்தாஞ் செய்தவினை தன்னு னலமுடனே பிறர் செய்வினை யூட்டி யொழிப்பானுமென முன் வருகின்ற வாற் ருனறிக.

அச்செய்யுளின் கருத்துமுணராது இவன்செய்த இதமகி தங்களே இவன்மாட்டுச் செய்தார்க்கியையுமென்றுரைப்பின், இவனமாட்டுச் செய்தவருடைய இதமகிதங்கள் வேறென்னாய் முடியுமெனக் கடாயினார்க்கு விடையின்மையும், நியதி தப்புத லும் சிவஞானச் செயலுடையோர் கையிற்றானங் கிலமனவே செய்திடினு மத்தானமே நிலமலைப்போற் றிகழுமென்றற்போ ல்வனவற்ரேடு முரணுதலுமாகிய குற்றங்க ளுளவாமா றுண ர்க.

உலகத்தார் பார்வைக்கு இவன் செய்தனவாகவும் அச் செயல் இதமகிதமாகவுந் தோன்றப்படுவன மாத்திரையேயன் றிப் பிறிதில்லையென்பார் உலகிலென்றார்.

அவனென்பதும் இவனென்பதும் மகாவாக்கிய வழக்கு.

இவ்வாறன்றி, நின்றிடவென்னுமெச்சத்தை அகலுமெனப தனோடு முடியவைத் துரைப்பார்க்கு, ஏனையன தம்முளவாய் நின்று ஒருபொருண்மேல் வருவனவல்லவாய் முடிதலின் முத னூலோடொத்து ஒருபொருணுதலிய சூத்திரமாதற் கேலாமை யறிக.

இச்செய்யுளிற் கூறப்படும் முக்கூற்றுள், ஒருவாற்றா னீண் டு வலியுறுக்கப்படு மிறுதிக்கூறு பதினோராஞ் சூத்திரத்தில் இயைபுபற்றி யெடுத்துக்கொண்டு தடைவிடைகளாற் சாதிக்க நின்றமையின், முன்னையிருகூறுமே வெறெடுத்துக்கொண் டோ தப்படுவனவெனக் கொள்க.

—

நிரம்பவழகியருளா வருமாறு.

—o—

மேலிப்படி யுள்ளே கண்டு பூசித்து வருகிறேனென்ற மாணுக்கனை நோக்கி யருளிச்செய்கிறூர்.

இவனுலகி லிதமகிதஞ் செய்தவெல்லா மிதமகிதமிவனுக்குச் செய்தார்பாலிசையு மவனிவனாய் நின்றமுறை யேகனுகி - அன்னுவயர், பெத்தத்தில் சிவன் ரேற்றமின்றி யிந்த வான்மாவாய் நின்ற முறைமைபோல இவனுந் தன்ரேற்றமின்றி சிவனிடத் தேகனுய் நில்லாமல் நானுந் தனியே ஒரு முதல், சிவனுந் தனியே ஒரு முதலென்று இப்படி யிரண்டாக விசாரிக்கிறவர்களுக்கு விசாரிக்கிற நினைவு கிடைக்கையினுலே சிவன்ருெரு முதலில்லை யெனனும்படி யந்த வான்மாவேயாய் நிற்பன்; ஆகையால் சிவனைச் கூடுகை யுண்டாகாது. இப்படித் தற்ரேற்றமற்றுச்சிவனுகிநின்ற விவன் இந்தப் பிரபஞ்சத்திலசுகதுக்கங்களைப்புசிக்கிறவிடத் துண்டாகிய பிரிபாப்பிரியங்களெல்லாம் இந்த ஜீவன் முத்தனு யுள்ளவனுச்கு முன்புள்ள புண்ணியபாவமெல்லாம் இல்லையாய்ப் போனபடியாலே இவனுக்கு விருப்பு வெறுப்புக்கள் செய்தவர்களிடத்லே சென்று பொருந்தாநிற்கும். இத்தன்மை கூடாதொழியில் மேலு மோ ருபாய மருளிச்செய்கிருர்.—அரன்பணியினின்றிடவு மகலுங்குற்றம் - அப்படி நிற்கக் கூடாதபொழுது சிவனுடைய வேவலென்றும் சிவனுடைய நியதியென்றும் நிற்கவு மலமாயா கன்மமாகிய குற்றங்கணீங்கும்.—சிவனுமிவன்செய்தியெலா மென்செய்தியென்று - இப்படி தன்செயலற்று நிற்பனேயாகில் கர்த்தாவும் இவனுலே செய்யப்பட்டதெல்லாந் தன்னுடைய செயலென்றும்,—செய்ததெனக்கிவனுக்குச்செய்ததென்றும்-இவனுக்குச் செய்த நன்மைதீமையெல்லாம் நமக்குச் செய்ததா யிருக்குமென்றும்- பவமகலவுட

ளுகி நின்றுகொள்வன் - இவனுக் குண்டான ஜனனங்களெல்லாம் விட்டுப்போம்படி ஆன்மா வென்பதொரு முதலற ஆன்மா தானேயாய் ஒன்றுபட்டு அசைவறநில்லா நிற்பன்,—பரிவார்ப்பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கிவிடுமே - முன்சொன்ன முறைமையிலே நின்றவிவன் சிவனளவி லுண்டாகிய பத்தியினுலே கொலைமுதலாக வுண்டாகிய பாதகங்களைச் செய்தானேயாயினும் பரமேஶ்வரனு மிவனை விட்டு நீங்காமல் நின்ற கலப்பாலே அதுவுந் தன்னுடைய பணிவிடையாக்கி விடுவன்.

இதற்குப் பிரமாணம் திருத்தோணேக்கம், "தீதில்லைமாணிச் சிவகருமஞ் சிதைத்தானைச், சாதியும்வேதியன றாதைதனைத்தாளிரண்டும், சேதிப்பவீசன் றிருவருளாற் றேவர்தொழப், பாதகமேசோறு பற்றினவாதோணேக்கம்" என்னுமதுங் கண்டுகொள்க.

இதனுற் சொல்லியது, பெத்தத்தில் பரமேஶ்வரன் ஆன்மாவாய் நின்ற முறைமைபோல விந்தவான்மாவு மிப்பொழுது தற்ருேற்றமறச் சிவமாய் நிற்கவே மலமாயா கன்மங்களிங்குமென்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

அவனிவனுய் நின்றமுறை - பதிஞானத்தா லங்ஙனங் காணப்பட்ட விறைவன் பெத்தநிலையி லுடனுய் நிற்பினும் வேறு காணப்படுமாறின்றி யான்மாவேயா யொற்றுமைப்பட்டு ஆன்மாவின் வழி நின்றமுறைபோல,—ஏகனுகி யரன்பணியி னின்றிடவும் - ஈண் டான்மா அம்முதல்வனே டுடனுய் நின்றறியினுந் தானென வேறு காணப்படாதவா றவனே டொற்றுமைப்

பற்றி அவ் விறைபணியின் வழுவாது நிற்கப்பெறின்,— பவமக ல-அங்ஙன மேகனாகிநிற்றலான் யானெனதென்னுஞ் செறுக்க றுதலின்,— சிவனுமிவன் செய்தியெலா மென்செய்தி யென் று முடனாகி நின்றென்று கொள்வன்- அவ்விறைவனு மிவன்செ ய்யு மிதமகிதங்களெல்லாம் யான் செய்யு மிதமகிதங்களென உட னாய்நின் றேன்றுகொள்வன்,—இவனுக்குச் செய்த தெனக்கு ச்செய்த தென்று முடனாகிநின் றேன்றுகொள்வன் - அரன்ப ணியி னிற்றலா னிந்திரியங்களின் வசமாய் நிற்கும் பரதந்திரி ய மொழிதலின் அவ்விறைவனு மிவனுக் கின்பத்துன்ப நுகர்ச் சியாமாறு பிறர் செய்யு மிதமகிதங்களெல்லா மெனக்கு நுகர் ச்சியாமாறு செய்தனவே யாமென வுடனாய்நின் றேன்று கொ ள்வன்,—பரிவாற் பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கி வி டுமே-இவ்விருதிறத்தானு முறையே யிவன் செய்யு மிதமகிதங் க ளிவனுக்கும் பணியாய் முடியும்— இவனுலகி லிதமகிதஞ் செய்தவெல்லா மிதமகித மிவனுக்குச் செய்தார்பா லிசையும் - இவனுக்கு இதமகிதஞ் செய்தார்மாட்டு அவ்விதமகிதங்கள அ வ்வளவினன்றி மிகுதிப்படுதற்கு முறையே துணைக்காரணமாக லியையும்.—குற்றமகலும் - இங்ஙன மார்ச்சிப்பு நுகர்ச்சியு மி வனைப் பந்தியா தொழியவே யேனைச் சஞ்சிதவினையு மாயையு மாணவமுமாகிய குற்றங்கள் மூன்று மிவனைப் பந்திக்க மாட் டாவாய் விண்டொழியும்.

இச்செய்யுளிற் கூறப்படு முக்கூற்றுள் ஒருவாற்று னீண்டு வலியுறுக்கப்படு மிறுதிக்கூறு பதினோராஞ்சூத்திரத்தி னியை புபற்றி யெடுத்துக்கொண்டு தடைவிடைகளாற் சாதிக்க நின்ற மையின், முன்னை யிருகூறுமே வேறெடுத்துக்கொண் டோது ப்படுவன வெனக்கொள்க.

மறைஞானதேசிகர் உரை.

இந்நிலைமை யானென தென்னுஞ் செருக்கற்றகருல் ஞானம் பிரகாசித்தார்க் குண்டென்பதூஉ மஃ தில்லாதார்க் குண்டாகாதென்பதூஉ மு ணர்த்துகின்ருர்.

யான்செய்தேன் பிறர்செய்தா ரென்னதியானெ ன்னு, மிக்கோணை ஞானவெரி யால்வெதுப்பிநிமிர்த்து த், தான்செவ்வே நின்றிடவத் தத்துவன்ருனேரே த னையளித்து முன்னிற்கும் வினையொளித்திட்டோடும், நான்செய்தே னெனுமவர்க்குத் தானங்கின்றி நண்ணு விக்கும் போகத்தைப் பண்ணுவிக்குங்கன்ம, மூன்செ ய்யா ஞானந்தா னுதிப்பினல்லா லொருவர்க்கு மியா னெனதிங் கொழியாதன்றே. (உ)

(இ-ள்) யான்செய்தேன் பிறர் செய்தாரென் னதியானென்னு மிக்கோணை நானேயிவனுக்கு நன்மைசெய்தோன் ஒருவராலுஞ் சாதித்துக் கெடாத காரியத்தை நானே நிறைவேற்றிக் கொடுத்தோன் என்றும் பிறரேயெனக் கிந்தத்தீமை செயதாரென் றகங்கரித்து நின்றும், எனதென்னு மபிமானமும் யானென்னு மபிமானத்தினையு முடையவர்களுக் காகாமியங்களேறுங் குற்றம். அஃதென்போல வென்னின்.

ஒருவன் வீட்டி லூர்க்குருவியுங் கோழியும் வளர்த் தக்கா லதனைப் பூனை பிடித்தவிடத் தப்பொழு ததனிடத் தபிமா னம் பண்ணுதபடியாலே துக்கங்கண்டிலம், கோழியை நரிபிடி

த்கதென்னு மபிமானத்தை யதனிடத்து வைக்கையா லத்தை கரிபிடித்தவிடத் தென்னுடையது போய்த்தென்னுந் துக்கமுற்றாற்போல யானெனதென்னும் பந்தத்துக்கு மஃதேகாரண மாதல்லா லெனவறிக.

ஞானவெரியால் வெதுப்பிநிமிர்த்து	அதனை ஞானமாகிய அக்கினியிலே வெதுப்பிநிமிர்த்து
தான்செவ்வே நின்றிட	அந்த பந்த தசையைக் கருதாது முத்திதசையை யுடையோன் சிவனே யெல்லாத்துக்கும் பிரேரகனெனக் கருதி யவன்வழித்தாய் நிற்பர், அப்பொழுது
அத்தத்துவன்றானேரே தனையளித்து முன்னிற்கும்வினையொளித்திட்டோடும்	அந்தவுண்மைப் பொருளாகிய சிவனிடத்திற்றானே பிரகாசியாநிற்கவே யிவனிடத்தேறின வினைகளெல்லா மொளித்தோடிப்போம். ஒளித்தல்-வலிகெடுதல்.
நான்செய்தேனெனு மவர்க்குத் தானங்கின்றி	நானென்னுஞ் சுட்டுப்போதத்தைப் பொருந்தி யகங்கரித்து நிற்குமான்மாக்களுடன் சிவன் கலந்து நின்றானேயாயினும் அவர்களுக்குப் பிரகாசியாமல் நிற்பன். அஃதின்மையால்?
நண்ணுவிக்கும் போகத்தைப் பண்ணுவிக்குங் கன்மம்	பண்ணுவிக்குங் கன்ம நண்ணுவிக்கும் போகத்தை யெனப்பதமாறுக. இப்படியேறின வாகாமியகன்மம் வேறொரு சரீரத்தை யெடுக்கப்பண்ணுவிக்கும். அந்தச்சரீரம் போகத்தைப் புசிக்க விருப்பத்தை யுண்டாக்கும்.

இவ்வாறு சநந மரணத்தற்றுத் திரிகிறதே சுபாவமாய் விடுங் காண்.

ஊன் செய்யா ஞானந்தானுதிப் பினல்லா லொரு வர்க்கும் யானெ னதிங்கொழியா தன்றே.

ஆன்மாக்களுக்குக் குற்றத்தைப் போக்குவதாயுள்ள சிவஞானமானது பிரகாசியாதவிடத் தொருவர்க்கும் யானெனதென்னு மிடும்பை யொழியாது எ-று.

"யானெனதென்னுஞ் செருக் கறுப்பான் வானோர்க்-குயர்ந்த வுலகம் புகும்" எனவறிக.

தத்துவன் முன்னிற்கும் என எழுவாயும் பயனிலையுமறிக.

இதற்குக் காலோத்தரம் மதங்கம் சிவதருமோத்தரம் எனவறிக. (௨)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேலிதனையே விளங்கக் கூறுகின்றது.

யான்செய்தேன் பிறர் செய்தா ரென்ன தியானெனு மிக்கொண் ஞானவெரியால்வெதுப்பி நிமிர்த்துத் தான்செவ்வே நின்றிட வத்தத்துவன்முனேரே தனை யளித்து முன்னிற்கும் வினையொளித்திட் டோடும்-யானொருதருமத்தைப் பண்ணினேன ஒருத்தருக் குபகாரம் பண்ணினேன் அபகாரம்பண்ணினேன் பிறரெனக்குபகாரம்பண்ணினார்கள் அபகாரம் பண்ணினார்களென்றுதனக்கும் பிறருக்கும் ஸ்வதந்திரமுண்டாகவும் வீடுமாடு பெண்டுபிள்ளைமுதலானபொருள்களைச் சிவனென்னிடத்திற் கூட்டினாரென் றெண்ணமலென்னுதே யென்னும் தேகேந்த ரியாங்

தக்கரணவிர்த்தி ஞான மிவைகளை யெனக் கன்னியமென் றுணராமல் யானேயென்னு நினைவும் வச்கிரமாகிய மாயாசன்னிய ஞானத்தைதச் சிவஞானமாகிற அக்கினியினாலே காச்சி யந்தக் கோட்டத்தைத் தீர்த்துத் தான சிவனுக்கு அபிமுகயாக நிற்கும் போதில்,முந்தின திருவிருத்தத்திலே சொல்லப்பட்ட சத்தியமாகியசிவன் றன்னுடைய ஆநந்தஸ்வருபத்தை யிவனுக்களித்து பந்தத்திலே சிவனை தெரியாம லாணமாமுன்னாக நின்றதுபோல வாணமாவைமறைத்துச் சிவனே முன்னாக நிற்பன். இவ்வாறு சிவன் முன்னாக நிற்கவே புண்ணிய பாவமான திவனைக் கிட்டாம லிவனுக்கு இதமகிதஞ் செய்தவரிடத்திலே விரைந்து போய்நிற்கும். நிற்பனென்பதற்கு நிற்குமென்றது வினைமுற்று.— நான் செய்தே னெனுமவர்க்குத் தானங்கின்றி நண்ணுவிக்கும் போகத்தைப் பண்ணுவிக்குங் கன்மம் - முன்சொன்ன யானசெய்தே னென்பதாதியான நினைவையுடையவர்க்குக் சிவ னவ்விடத்திற் பிரகாசிப்பதினறி யவர்களபண்ணின புண்ணியு பாவங்களுக்கேற்ற.சுக துக்கங்களைப் புசிப்பிக்கும். புசிப்பிக்குமிடத்து மேலும் புண்ணிய பாவங்களைப் பண்ணுவிக்கும். இவ்வாருகில் யானெனதென்ப தொழிவ தெவ்வாறென்னில்?—ஊன்செய்யா னுந்தா னுதிப்பினல்லா லொருவர்க்கு மியானெனதிங்கொழியாதன் றே-மாயாகரணங்களைப் பொருந்தியறிகிற சிற்றறிவன்றிப் பெரிதாகிய சிவஞானம் பிரகாசிக்கி லல்லது பிரமாதி களுக்கும் யானெனதென்னு மகங்கார மமகாரங்க ணீங்காதென் றிதன் பொருள்.

அன்றென் கிளவியா மெனத் தகுமே.

—

ஞானப்பிரகாசருணா வருமாறு.

——o——

சிவபோகஞ் சிவயோகத்தாற் சேருமென்றுசெப்பிகின்ருர்

யான் செய்தேன் பிறர் செய்தா ரென்ன தியானென்னுமி க்கோணை - உபகாரபகாராபி மானத் திருக்காரு மஞ்ஞானத் தை,—ஞான வெரியால் - சிவசாத்திர மாத்திர சாத்திய சிவா தித் திரிபதார்த்த சிவத்துவ பசுத்துவ விவேக பரோக்ஷ பொ து ஞாநாக்கினியால்,— வெதுப்பி நிமிர்த்து - வாட்டி மேலறி வை நீட்டி,—தான் செவ்வே நின்றிட - சிவயோகி யானவன் தியான சமாதிக் குறிச் சிவ யோகத் திருக்க,— தத்துவனு ருவேநேரே - சிவனெதிராய்,— தனையளித்து முன்னிற்கும் - விரைவிலே திரிகாலக் குறிப்பு மொழிதன்னைச் சிவ யோகி யைக் கொண்டு சாக்ஷாத் கரிப்பிக்கச் சத்தி சங்கற்ப சாநி த்திய னுவன்,— வினையொளித்திட்டோடும் - முதநி முந்தி வி யத்தி பிந்தி வருதல் முறைமை யாதலால் முன் பாச முத்தி யாம் பின் சாக்ஷாத் காரக் குறிச் சிவத்துவ வியத்தியாம்,— ஊன் செய்யா ஞானம் - சிறப்பு ஞானச் சிவ யோகத்துக்கு மூ லமாய் முன் சொல்லிய பொது ஞானம்.

மற்றைய வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

யானென தென்னுஞ் செருக் கற்றலன்றி, இறைவ னுடனா ய் நின்று கோடலும் அதுபற்றி வினை நுகர்ச்சியு மார்ச்சிப்பும் இவனுக் கில்லாததாலும், அதுபற்றிக் குற்றமகலுதலுமாகிய வி வை முறையே நிகழ்தல் செல்லாமையால், அச்செருக் கறுதி யைப் பயப்ப தூஉம் அவனிவனாய் நின்ற முறை யேகனாகி நிற் கு ஞானமொன்றே யன்றிப் பிறிதின்மையின், அச்செருக் கறுதி யின் பொருட்டு அவ்வாறு நிற்கு ஞானம் ஒருதலையான் வேண்ட டற்பாற் றென்பதாம்.

வலியுறுத்தற் பொருட்டு உடம்பாட்டு முகத்தானு மெதிர்மறை முகத்தானுங் கூறினார்.

உருவகஞ் செய்ததும் அதனை யின்றி யமையாமை விளக்குதற் பொருட்டு.

ஞான மென்றது ஈண்டேற் புழிக் கோடலால் ஏகனாகி நிற்கு ஞானத்தின்மேற் றாயிற்று.

இதனானே, மேலைச் சூத்திரத் தோதிய வாறு ஞாதிருவு ஞானமு ஞேயமுமாக நின்று காணுங் காட்சியே யமையும் அதனைமேலு மேகனாகி நிற்றலெற்றுக் கெனபாரை நோக்கி, அவ்வாறுநின்றாலன்றி யானெனதென்னுஞ் செருக் கறுதன் முதலியன முறையே நிகழ்ந்து முத்தியைத தலைக் கூடுதல் செல்லாதென முதற்கூறு வலி யுறுத்தப் பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

——0——

இயானெனதென்னுஞ் செறுக்கற்றவர்களுக் கொழிந்து ஞானப்பிரகாச முண்டாகாதென்று அருளிசசெய்கிறார்.

இயான்செய்தேன் பிறர்செய்தா ரென்னதியானென்னுமிக் கோணைஞானவெரிபால் வெதுப்பிநிமிர்த்து - நான் பிறருக்கொன்றைச் செய்தேனென்றும் பிறா தனக்கொன்றைச் செய்தார்களொன்றும் யானென்றும் என்னுடைய பதார்த்தமென்றும் பிறரென்றும் பிறருடைய பதார்த்தமென்றும்சொல்லுகிற அஞ்ஞானமாகிய முட்டினது திருக்கை ஞானக்னியினாலே வெதுப்பி நன்றாக நிமிர்த்து,—தான்செவ்வே நின்றிட - தானத் தவஞானமாகிய குற்றத்தைவிட்டு ஞானத்துடனேகூடி ஞானத்தின் வழித்தாய் நிற்கவே,—அத்தத்துவந்தா னேொதனையளித்

துமுன்னிற்கும் வினையொளித்திட்டோடும் - அந்த ஞானத்துக்கு மேலாயிருக்கிற சிவன்றனே புலப்படத் தன்னை யிவனைவசத்திலே கொடுத்து ஆன்மாவென றொன்றில்லை யென்னும்படி தான் பிரகாசியா நிற்பன். அப்படி நிற்கவே யிவனுக்குண்டான பிராரத்தமும் அது புசிக்கச்செய்தே யேறுகிற வாகாமியமும் ஆதித்தன் சன்னதியில் அந்தகாரம்போலத் தோன்றாமலோடிப் போகாநிற்கும்,— நான்செய்தே னெனு மவர்க்குத் தானங்கின்றி - தன்னாலே செய்யப்பட்டதென்று அகங்கரித்து நிற்கிற பேதான்மாக்களுக்குக் கர்த்தா வவர்களுடனே பொருந்தி நிற்கச்செய்தேயும் தோன்றாமல் நின்று,—நண்ணுவிக்கும் போகத்தைப் பண்ணுவிக்குங்கன்மம் - அவர்கள் முன் ஜனனங்களிற்செய் கன்மத்துக் கீடாகச் சுகதுக்கங்களையும் புசிப்பித்து அது புசிக்கிற வவசரத்திலே இதாவகிதங்களாகிய வாகாமியத்தை யுண்டாக்கா நிற்பன். இப்படிச் சொல்லுகிற யானெனது போம்படி யெங்ஙனே யென்னில்?—ஊன்செய்யா ஞானந்தா னுதிப்பினல்லால் - சர்வர்க்கும் அனுக்கிரகத்தைச செய்கிற சிவஞானம் பிரகாசியாதபொழுது,—ஒருவர்க்கு மியானெனதின் கொழியாதன்றே - சர்வான்மாக்களுக்கு மியானெனதென்று சங்கற்பித்துக் கொண்டு நிற்கிற பசுஞானம் விட்டு நீங்காது.

இதற்குப் பிரமாணம் சிவஞானபோதம். ௧௦-சூ,௧-வெ. "நானவனென் றெண்ணினர்க்கு நாடுமுளமுண்டாதல், தானெனவொன் றின்றியே தானதுவாய்—நானெனவொன், றில்லெனறுதானே யெனுமவரைத் தன்னடிவைத், தில்லென்று தானாயினை." என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, யானென்னுஞ் சங்கற்பத்தா லுண்டாகிய பசுஞானத்தை சிவ ஞானத்தாலே நீக்கி அந்தஞான

த்தின் வழித்தாய் நின்றவர்க்கு ஜனன முண்டாகாதென்றும் யானெனதென்றும் சங்கற்பத்தோடே கூடி அஞ்ஞானமேயாய் நின்றவர்களுக்கு ஜனனம் ஒழியாதென்றும் சர்வான்மாக்களுக்கும் சிவஞான முதயமானா லொழிந்து இந்தவஞ்ஞானம் போகாதென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—0—

யான்செய்தேன் பிறர்செய்தார் - யானிதனைச் செய்தேன் பிறரிதனைச் செய்தார் என்கின்ற,— என்னது யானென்னுங் கோணை - மமகார வகங்காரமாகிய செருக்கு விளைதற் கேதுவாகிய மலக்கோணை,— ஞானவெரியால் வெதுப்பி நிமிர்த்து - ஞானாக்கினியால் காய்ச்சி யக்கோணைத்தீர்த்து,— தான்செவ்வே நின்றிட - தான்முதல்வன் வழித்தாய் நிற்கவே,— அத்தத்துவன்றானே தனையளித்து முன்னிற்கும் - அம்முதல்வன் றற்சொரூபத்தை விளக்கி வெளிப்பட்டுத் தோன்றுமாகலின்,— வினையொளித்திட்டோடும் - புண்ணியபாவமாகிய வினைகளிவனைப் பொருந்தாம லிவனுக்கு இதமகிதம் செய்தார்பால் விரைந்து செல்லும்,— நான்செய்தே னெனு மவர்க்கு - முன் சொன்ன யான செய்தேனென்பது முதலிய நினைவுடையார்க்கு,— தானங்கின்றிப் போகத்தை நண்ணுவிக்கும் - முதல்வன் விளங்கித் தோன்றுதலின்றிக் கன்மாநுகூலமாகப் போகத்தைப் புசிப்பிக்கும்,— கன்மம் பண்ணுவிக்கும் - புசிக்குமிடத்தாகாமிய வினையை யேறச் செய்யுமாகலின்,— ஊன்செய்யா ஞானந்தானுதிப்பினல்லால் - மாயாகருவிகளைப் பொருந்தியறிகிற சிற்றறிவி னின்று நீங்கி யேகனாகி நிற்கப்பெற்றாலன்றி,—

ஒருவர்க்கும் யானெனதிங் கொழியாதன்றே - யாவர்க்கும் யானெனதென்னுஞ் செருக்கொழியா தன்றே. எ-ம்.

இதனானே மேலைச்சூத்திரத்து ஓதியவாறு ஞாதுரு ஞானமு ஞேயமுமாக நின்று காணுங்காட்சியே யமையும் அதன்மேலும் ஏகனாகிநிற்றல் எற்றுக்கென்பாரை நோக்கி யவ்வாறு நின்றாலன்றி யானெனதெனனுஞ் செருக்கறுதல் முதலியன முறையே நிகழ்ந்து முத்தியைத் தலைக்கூடுதல் செல்லாதென மூதற்கூறு வலியுறுத்தப் பட்டது.

கO-சூ, க-ம், அதிகரண முடிந்தது.

மறைஞானதேசிகர் உரை.

இம்முறையி னிற்கவொட்டாம லிந்திரியாதி தன்வ
சத்தாகி லதற்கோ ருபாய முணர்த்துகின்றார்.

இந்திரிய மெனைப்பற்றி நின்றேயென்வசத்தி
னிசையாதே தன்வசத்தே யெனையீர்ப்பதிவற்றைத்,
தந்தவன்ற னாணைவழி நின்றிடலா லென்றுந் தானறி
ந்திட் டவற்றினொடுந் தனையுடையான்றாள்கள், வந்த
னைசெய் திவற்றின்வலி யருளினால்வாட்டி வாட்டமி
ன்றி யிருந்திடவும் வருஞ்செயல்களுண்டேன், முந்த
முடைச் செயலென்று முடிந்தெழுகவினைகண் மூளா
வங் காளாகி மீளானன்றே. (௩)

(இ-ள்.) இந்திரி இந்திரியங்களானவை யென்னுடன் கூடி
ய மெனைப் யிருந்து மவை யென்வசம் வாராம லென்
பற்றி நின் னையுந் தன்வழித் தாக்கிக்கொண் டிழுத்து
றே யென் வசத் க்கொள்ளுகிற முறைமையினையும்

தி னிசையாதே தன்வசத்தே யெனையீர்ப் பதிவற்றை	
தந்தவன்றாணைவழி நின்றிடலாவென்றுந் தானறிந்திட்டு	அவை சடமாதலாற் றன்வழித்தன் றவையிற்றைச் சிருட்டித்து நிறுத்தின கர்த்தாவினது வழியானுந் தானுமென் றுணர்ந்துநின் றவைநடக்கையினாலே யிதனை யறிந்துகொண்டு
அவற்றினொடுந் தனையுடையான் றாள்கள் வந்தனைசெய்து	அவைகளுடன் கூடின தன்னையு மிவ்விந்திரியங்களையும் சுதந்தரமாகவுடைய சிவனுடைய சீர்பாதகமலங்களை வணங்கி
இவற்றின் வலி யருளினால்வாட்டி	அவைகளால் வருத்தம் வந்தவிடத் தந்தப் பலத்தை யருளினால் கெடுத்து
வாட்டமின்றி யிருந்திடவும் வருஞ்செயல்களுண்டேல்	இம்முறைமையி லதன் வலியைக் கெடுத்துநின்ற வாதையுறாம லிருக்கையிலுஞ் சன்மாந்திரத்தி லார்ச்சித்த பிராரத்த வசத்தாலே யதன்வழி யிழுத்துத் தீவினையைப் பண்ணிற்றாயினும்
முந்தனுடைச் செயலென்று முடிந்தெழுக	இனி நாமிதற்கு வேறொன்றுஞ் செய்வதில்லை நாமுன்னே யார்ச்சித்த கன்மத்துக்கீடாகச் சிவனே செய்ததெனக் கருதி, இதுவு மவன்செயலென்று அதன்வழியே செல்க. இப்படி யதன்வழித்தென்றே பணியாற்றுநிற்பானாகில்

வினைசண் மூளா — இவனுக் கொருக்காலு மாகாமிய கன்ம மேறப்பெறா.

அங்காளாகி மீளாதனறே. — அஃது உண்டாகாதபடியாலே மற்றொரு ச னனத்தை யெடுப்பித்துப் பலத்தை யெப்ப டி கொடுக்கப் போகின்றது. எ-று.

ஒடு உடனிகழ்ச்சி.

உம்மை யசை.

இவன் கிரியையற்றவ னாதலாலே அஃது உண்டாகாதென் பதாயிற்று.

இதற்குச் சிந்தியாகமம் சிவதருமோத்தரத்து மறிக.

"ஐவரா லலைக்கப்பட்டுக் கழியிடைத் தோணிபோன்றே ன்" எனவும்.

"நாணிலா ஐவரோடு மிட்டெனை விரவிவைத்தா ராணலாற் பெண்ணுமல்லா ரதிகைவீ ரட்டனாரே." எனவுமறிக (௯)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேலும் பிரபத்தி யுபாயங் கூறுகின்றது.

இந்திரியமெனைப்பற்றி நின்றேயென்வசத்தி லிசையாதேதன் வசத்தேயெனையீர்ப்பது-சோத்திராதி இந்திரியங்களானது அந்தக்கரண விர்த்தியான வென்னுடைய வறிவைப்பற்றி நின்றே யென வழிக்காகாமல் தன்வழித்தாக விழுக்கையா லெவ்வாறு இவ்வேதனைகளை நீங்குவதென்று மாணாக்கன் வினவ உத்தரம்.—இவற்றைத் தந்தவன்றன் னாணைவழி நின்றிடலா னென்றுந் தானறிந்து - ஆவற்றினொடுந் தனையுடையான் றாள்கள் வந்தனைசெய் திவற்றின் வலி யருளினால் வாட்டி - இந்த இந்திரியங்களை யான்மாவுக்குக் காரணங்களாகக் கூட்டின சிவனுடைய வாஞ்ஞாசத்

தி வழித்தாய்க் கூட்டினபொழுது கூடியும் பிரித்தபொழுது பிரிந்தும் எக்காலமும் நிற்கையாலே இந்தவிந்திரியங்களை யுடைமையாகவுந் தன்னையடிமையாகவு முடையவன் சிவனெனவுமறிந் தவனுடையபாதத்தை வணங்கி யிந்தவிஷயங்களிலே யடியேன்கருத்துச் செல்லாம லிறுத்தவேணுமென்று வேண்டிக்கொண்டவனருளினாலே யிந்திரியங்களுடைய சத்திகளைக்கெடுத்துச் சிவன்வழித்தாய தானினையாமனிற்க,—வாட்டமின்றி யிருந்திடவும் வருஞ்செயல்களுங்கண்டேன்-இந்திரியத்தின் வலியைக்கெடுத்துத் தன்வலிகெடாம லிருக்கச் சிதேயும் பிரபல பிராரத்தத்தினாலே விஷயத்தினுடைய விச்சையானது மேலிட்டுவரில்.—முந்தனுடைச் செயலென்று முடிந்தொழுகு வினைகண் மூளாவங்காளாகி மீளானன்றே-இவ்வாறு விஷயவிச்சை மேலிட்டு வருவது கர்த்தாவினுடைய பிரேரகமே, இதை நம்மால் மீறப்போகா தவனேவினபடி செய்கிறோமென்றுநீர்வரக்கிலே கோரையொழுங்கினாற்போல விஷயத்தைக் கூடினும் ஆகாமிய கன்மமான துண்டாகாதாகையால் மோக்ஷத்துக் குரித்தா யிவ்விடத்து ஜனனத்தை யெடுக்கத் திரும்பிவாரார்களென் றிதன்பொருள்.

பிரபல பிராரத்தமென்றதேதென்னில் பிராரத்தமானது தீவிரமென்று மந்தமென்றும் × சுப்தமென்றும் மூன்றுவிதமாம்.

இதில் சுப்தமானது சிவதரும பாராயணனாய் நடக்கிறவனுக் கில்லையாம்.

மந்தமானது சிவஞானிக்கில்லையாம்.

தீவ்ரமான தாருக்கும் நீங்காது.

தீவ்ரபிராரத்தம் பிரபலபிராரத்த மென்றதெனவறிக.

× சுபத்தம்-தூங்கினது.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

சிவனைச் சிந்தித்துச் சிவசத்தி தனைச் சிற்சத்திப் பிரத்தியாகார வியாபாரத்தா லிந்திரியங்களை விஷய விமுகங்களாகப் பண்ணிச் சமாதிபண்ணித் தான் செய்யுங் கிருத்தியங்களைச் சிவாதீன மாக்கி நிற்கப் பாசமுத்தி சிவத்துவ வியத்தி பலிக்குமென்று படிக்கின்றார்.

ஆனாகி - சர்வஞ்ஞத்துவஞ் சர்வ கர்த்திருத்துவ முற்றுச் சமர்த்தனு கி, தாசனுகி யென றுரையுரைப்பதன்று, அதிமோகமென்று முன் மறுத்திருத்தலால்.

மற்றைய வெளிப்பொருள்.

———

சிவஞானயோகியருரை வருமாறு.

———o———

உலகத்துப் பாடி காவல ராயினுர் பிழைசெய் தள்ளாரைத் தம்முளாட்க்கித் தாமீர்த்தவா றெல்லாம் பரதந்திரமாய்க் கிடப்பச் செய்வது தம்மை யவ்வாறு செய்விக்கு மரசன தாணைவழி நிற்கு மவ்வாற்றல் கொண்டன்றிப் பிறிதின்மையின், அதனை யறிந்து அப்பாடி காவலர்க்குந் தமக்கு மிறைவனுகிய வவ்வரசனைத் தலைக் கூடப்பெற்று அவன் கருத்தின்வழி யொழுகவல்லராயவழி, அவ ரப்பரதந்திர நீங்கி யரசனருளாற் பாடிகாவலரையுந் தம்மாணைவழி நிற்பித்துக் கொள்ளவல்ல சுதந்திரராவர். அதுபோல, வினை செய்தமைபற்றி இந்திரியங்களென்னைத் தம்முளாட்கி யீர்த்தவழி யெல்லாம் பரதந்திரப் பட்டுக் கிடப்பச் செய்வதும் அவற்றை யவ்வாறு செய்விக்கு முதல்வன தாணைவழி யவைநிற்றலான், அவ்வாற்றல் கொண்டன்றிப் பிறி

தில்லையென் றிவ்வாறுணர்ந்து அவ்விந்திரியங்களையுந் தன்னையு முடையனாகி யம்முதல்வனருள்களைத் தலைக்கூடப்பெற்று அவன் பணியினின்றொழுக வொருவன் பெறுமாகின், அவன் அம்முதல்வன் றிருவருளால் அவ் விந்திரியங்களைத் தன்னானை வழி நிற்பித்துக் கொள்ளவல்ல சுதந்திரனாவன். அவ்வாறு முதல்வன்வழியி னுறைத்து நிற்புழியும் பயிற்சிபற்றி யொரோவழி யவ் விந்திரியங்களின் குறும்பு நிகழுமாயின், இந்திரியங்களுக்குமெனக்கு மொரு சுதந்திர மின்மையின் அதுவும் முதல்வன் செயலே யென்று வரைசெய்து பணியின் வழுவா தொழுகவே, அதுவாயிலாகப் புகுந்து கூடித் துடக்க வல்ல வினைகள் அங்ஙனமாக மாட்டாவாய் மடங்கி யொழியு மாகலான், அவ்வாறடிமைத்திறத்தி னின்றோன் மறித்துப் பொறிகளின வழிப்பட்டுப் பரதந்திரனாவானல்ல னென்பதாம்.

குறிப்புரைவகை.

ஏகனாகி நிற்றலே யமையும் அதன்மேலு மரன்பணியி னிற்றலெற்றுக் கென்பாரை நோக்கி, ஏகனாகி நிற்பினுந் தன்பணி மடங்கினாலன்றி வினைத் துடக் குறுதற் கேதுவாய் இந்திரியங்களின் வழிப் பட்டுச் செல்லும் பரதந்திர நீங்காமையின், அது நீங்குமாறு தான் பணியை நீத்தற் பொருட்டு அரன்பணியினிற்றலு மொருதலையான் வேண்டப்படுமென் றுணர்த்தியவாறு.

நின்றிடலா லீர்ப்பதென் றறிந்திட்டென வினையும்.

தான் அசை.

ஈர்ப்ப தென்பது அத்தொழின்மே னின்றது.

என்று மென்னு மும்மை அவ்விர்த்தலை மாற்றுதற்கு உபாயமாவது யாமு மவ்வாணைவழி நிற்றலென்று மறிந்தென எதிரது தழீஇயிற்று.

இவற்றி ஞெடுங் தனையுடையா னென்றது குறிப்பேதுவாய் நின்றபெயர்.

வந்தனை செய்தல் ஈண்டு அரன்பணியி னிற்றன் மேற்று.

வருஞ் செயல்க ளுண்டே லென்பது ஒருமைப் பன்மை மயக்கம்.

வாட்டமின்றி யிருந்திடவும் வருஞ்செயல் ளுண்டேன் மூர்த்தனுடைச் செயலென முடித் தொழுகுதல், "யானுமதுவே வேண்டினல்லால வேண்டும்பரிசொன் றுண்டென்னி லதுவு முன்றன் விருபன்றே" என்ற திருவாக்கினுமறிக.

அவ்வாறு முடித்தொழுசவும் வருஞ்செயல்க ளுளவாம் போலுமென்பாரை நோக்கி அங்ஙனம் வரம்பின்றி அநவத்தை யாதலில்லை யென்பார், ஆளாகிமீளா ரென்றுங் கூறினார்.

நிரம்பவழகியருளை வருமாறு.

இந்தத் தன்மை கூடாதவர்களுக்கு மேலுமோ ருபாய மருளிச்செய்கிறார்.

இந்திரியமெனைப்பற்றி நின்றேபென்வசத்தி னிசையாதே தன்வசத்தே யெனையீர்ப்ப- பஞ்சேந்திரியங்களிலு மியான் முதன்மையாயிருக்க அவை யென்னைப் பற்றிக்கொண்டு நிற்கச்செய்தேயும் என்னுடைய வசத்தினுமேல பொருந்தியாராமல் இவை யென்னைத் தன்னுடைய வசத்திலே வலித்துக்கொள்ளுகிற வினைவயிற்றை,—இவற்றைத் தந்தவன்றன் ஞானைவழி நின்றிடலா லென்றுந் தானறிந்திட்டு - இந்திரியங்களை யெனகுக்கூட்டின பரமேசுவரனுடைய வாக்கினை வழியிலே எப்பொழுதும் நிற்கின்றனென்றும் இவைவிற்றுக் கொருசெய லில்லையெனறுந் தானறிந்து,—இவற்றிஞெடுங் தனையுடையான் றாள்கள் வந்தனை செ

ய்து - இந்த விந்திரியங்களோடுந் தன்னை யடிமையாக வுடைய பரமேஸ்வரனது சீர்பாதங்களிலே தன்செயலற்று அவன்செயலான முறைமையை யறிந்து வணங்கி,—இவற்றின்வலியருளினுல்வாட்டி - இந்தப் பஞ்சேந்திரியங்களினது பலத்தைத் தம்பிரானுருடைய வருளினுலொழிந்து வாராதென் றறிந்து அவை யிற்றைக்கெடுத்து,—வாட்டமின்றி யிருந்திடவும் வருஞ்செயல்களுண்டேல் - இவையிற்றை நீக்கி மயக்க விகற்பங்கள் கூடாமலிருக்கலாம். அப்படியிருக்கவே மீண்டு மிந்திரிய வியாபாரங்கள் வந்துகூடில்,—முந்தனுடைச் செயலென்று முடிந்தொழுக - கர்த்தாவினுடைய செயலொழிந்து விந்திரியங்கள் தானுக வந்துகூடாதென் றறுதியிட்டு நிற்கவே,—வினைகள் மூளாது-இந்த முறைமையிலே நின்று பிராரத்தம் புசிக்கிற விவர்களுக்கு ஆகாமிய மேருது.—அங்காளாகி மீளாவன்றே - அந்தப் பரமேஸ்வரனுக் கடிமையா யவனைவிட்டு நீங்காமல் நிற்பன்.

இதற்குப் பிரமாணம் சிவஞானபோதம், ௧0-சூ, ௨-வெ, "நாமல்லவிந்திரிய நம்வழியினல்லவழி, நாமல்லநாமு மரனுடைமை—யாமென்னி, னெததனுவினின்று மிறைபணியாற்கில்லைவினை, முற்செய்வினை யுந்தருவான் முன்" என்னுமதுங் கண்டுகொள்க.

இதனுற் சொல்லியது, இவனுலுள்ள செயல்களெல்லாம் சிவனுடைய செயல்களென்று காணவே ஆகாமிய மேருதென்னு முறைமை யறிவித்தது.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

——o——

(உலகத்துப் பாடிகாவலராயினுர் பிழைசெய் துள்ளாரைத் தம்முள்ளடக்கித் தாமீர்த்தவா றெல்லாம் பரதந்திரமாய்க்

கிடப்பச்செய்வதுதம்மையவ்வாறுசெய்விக்குமரசனதாணைவழி நிற்குமவ்வாற்றல் கொண்டன்றிப்பிறிதின்மையின், தனையறிந்து அப்பாடிகாவலர்க்கும் தமக்கு மிறைவனாகிய அவ்வரசனைத் தலைக்கூடப்பெற் றவன் கருத்தின்வழி யொழுகவல்லாராயவழி யவ ரப்பாரதந்திரநீங்கி யரசனருளாற் பாடிகாவலரையும் தம்மாணைவழியி னிற்பித்துக் கொள்ளவல்ல சுதந்திரராவர். அதுபோல) இந்திரியமெனைப்பற்றி நின்றே யென்வசத்தினிலையாதே தன்வசத்தினெனை யீர்ப்பது - வினைசெய்தமைபற்றி யிந்திரியங்களெனைத் தம்முள்ளடக்கி யீர்த்தவழி யெல்லாம் பரதந்திரப் பட்டுக் கிடப்பச் செய்வதூஉம்,—இவற்றைத தந்தவன்றனாணைவழி நின்றிட்டலால்-அவற்றை யவ்வாறு செய்விக்கு முதல்வனதாணைவழி அவை நிற்றலால்,—என்றுந்தானறிந்திட் டிவற்றினொடுந் தனையுடையான் றாள்கள் வந்தணைசெய்து - அவ்வாற்றல் கொண்டன்றிப் பிறிதில்லையென் றிவ்வா றுணர்ந் தவ்விந்திரியங்களையுந் தன்னையு முடையானாகிய அம்முதல்வன றாள்களைத் தலைக்கூடப்பெற் றவன்பணியினின்றொழுக ஒருவன பெறுமாயின்,—அருளினாலிவற்றின் வலிவாட்டி வாட்டமின்றி யிருந்திடவும்-அவ னம்முதல்வன் றிருவருளால் அவ்விந்திரியங்களைத தன்னாணைவழி நிற்பித்துக் கொள்ளவல்ல சுதந்திரனாவன். அவ்வாறு முதல்வன்வழியி னுறைத்து நிற்புழியும்,—வருஞ்செயல்களுண்டேனு முந்தனுடைச் செயலென்று முடிந்தொழுக,—பயிற்சிபற்றி யொரோவழி யவ்விந்திரியங்களின் குறும்பு நிகழுமாயி னிந்திரியங்கட்கு மெனக்கு மொருசுதந்திர மின்மையி னதுவு முதல்வன் செயலேயென்று வரைசெய்து பணியின்வழுவாதொழுகவே,—வினைகண்மூளா-அதுவாயிலாகப் புகுந்துகூடித் துடக்கவல்ல வினைக ளங்ஙனமாக மாட்டாவாய் மடங்கியொழியுமாகலான்,—அங்காளாகிமீளானன்றே- அவ்வா றடிமைத் திற

த்தினின்றோன் மறித்துப் பொறிகளின் வழிப்பட்டுப் பரதந்திரனாவா னல்லன்.

மறைஞானதேசிகர் உரை

தன்னை யடைந்தார் வினை தீர்ப்பதன்றோ தலையாயவர் தன்கடனாவது, தானென்னுந் திருவாக் குண்டாகையாற் றான் கைம்மாறு கருதா தனுக்கிரகஞ் செய்வது சிவனுக்குச் சுவபாவமென் றுணர்த்துகின்றார்.

சலமிலனாய் ஞானத்தாற் றனையடைந்தார்தம்மைத் தானாக்கித் தலைவனவர் தாஞ்செய்வினைதன்னா, னலமுடனே பிறர்செய்வினை யூட்டியொழிப்பானாய் நணுகாமல் வினையவரை நாடிக்காப்ப, னுலகினிலென் செயலெல்லா முன்விதியேநீயே யுண்ணின்றுஞ் செய்வித்துஞ் செய்கின்றாயென்று, நிலவுவதோர் செயலெனக்கின் றுன்செயலேயென்று நினைவார்க்கு வினைகளெல்லா நீங்குந்தானே. (ச)

(இ-ள்.) சலமிலனாய் ஞானத்தாற் றனையடைந்தார் தம்மைத் தானாக்கித் தலைவனவர் தாஞ்செய் வினை தன்னா னலமுடனே பிறர்செய்வி

தலைவன் சலமிலனாய் நலமுடனே யாவர் தாஞ் செய்வினை தன்னாற் பிறர்செய்வினை யூட்டி யொழிப்பானாய் ஞானத்தாற் றனை யடைந்தார்தம்மைத் தானாக்கியவரை வினை நணுகாமல் நாடிக் காப்பன். இதனைப் பொருள் கோளாக்கிப் பொருள் கொள்க. சிவன் றானவன் றனக் கொருவ ரிடத்திலும் விருப்பு வெறுப்பின்மையாற் சர்வான்மாக்க ளிடத்திலும் நன்மைவைக்கப்பட்ட

னை யூட்டி பொழிப்பானாய் நணுகாமல் வினையவரை நாடிக் காப்பன்

வனாய் அவரவர் செய்த கன்மபேத மெல்லாதனையும் நம்மாலே நாம் செய்தோமென்று கருதி நிற்கிறவர்களுக் கவர்களவர்கள் செய்த கன்மபலங்களை யேறாமற் குறையாமலவரவர்களுக்குக கொடுத்துப் புசிப்பித்துத் தொலைப்பிப்பானுமாய்க் கன்மங்களைச் செய்யுமிடத் தான்மாக்களுக் கொருசெயலு மின்மையா லிஃதெல்லாஞ் சிவன்செயலெனக் கருதிநிற்கிற ஞானத்தினா லிஃதெல்லாஞ் சிவாக்கினையின் வழியென் றிவர்களிப்படி நிற்கவே தமது செயல்களெல்லாஞ் சிவன் செயல்களெனக்கருதி நிற்கையாலுஞ் சிவபாவனை யுடன் கூடிநிற்கையாலு மவர்கள் கன்மபலத்தைப் பொருந்தாமற் காப்பன்.

இப்படி சீவன் முத்தர்கள் நிற்கையினாலே.

உலகினி லென் செயலெல்லா முன்விதியே

கன்மம் பிரகிருதி சம்பந்தமா யிருக்கையா லதற்குச் சுதந்தரமில்லை.

இப் பிரபஞ்சத்தின்கண் யான் செய்யும் வியாபாரமெல்லாம் தேவரீர் கற்பித்தபடியே! அஃதெக் காரணத்தாலெனில்?

நீயே யுண்ணின்றுஞ் செய்வித்துஞ் செய்கின்றாய்

எனக்கெனச் சுதந்திர மில்லாமையால் நீர்தாமே யென்னுள்ளே நின்று மிவையெல்லாவற்றையுஞ் செய்கின்றாய், உண்ணின்று மென்ற வும்மையாற் புறம்பேநின்று மெனக் கூறியதாயிற்று.

என்று நிலவுவதோர் செயலெனக்கின் றுன் செயலே

எப்பொழுதும் யானேவப்படுகிறவனாகலா லென்னுடைய சுதந்திரத்தாற் செய்யுஞ் செயல்களின்று. இஃதெல்லா மும்முடைய வியாபாரமேயெனப் பணியறுத்து

என்றுநினைவார்க்கு — எப்பொழுது மெதுவந்தாலு மிந்தப்படி கருதியிருக்கிற ஞாதாக்களுக்கு

வினைகளெல்லா நீங்குந் தானே. — இந்தப்படி நிற்கிறவர்களிடத் துண்டாகிய ஆகாமிய கன்மங்களெல்லாம் பொருந்தாது. எ-று.

தலைவன் - எழுவாய்.

காப்பன் - பயனிலை.

நினைவார்க்கென்பதனைப் பெயராக்கி நீங்குமென்பதனைப் பயநிலையாக்குக.

தான் - அசை.

ஏகாரம் - ஈற்றசை.

இதற்குச் சர்வஞானோத்தரத்து மறிக. (௭)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

அந்தத் தீவ்ரமாகிய பிராரத்தகன்மபலத்தைப் புசிக்குமிடத்து ராகத்துவேஷமுண்டாய்ப் பிறர்க்கு இதாகிதங்களைச் செய்யினும் ஹீனகிருத்தியங்களைப் பண்ணினும் பிரபஞ்சதையினாலே ஆகாமிய புண்ணியபாவ மேறுதென்பது கூறுகின்றது.

தலைவன்ஞானத்தாற் றனையடைந்தார்தம்மை தானுக்கியவர் தாஞ்செய்வினைதன்னால் நலமுடனே பிறர்செய்வினை யூட்டியொழிப்பானாய் நாடிச் சலமிலனாய் வினையிவரை நணுகாமற்காப்பன—கர்த்தாவானவன் றனதுஞானத்தினாலே தனனையேயறநின்றபெயரைத் தானேயாகப்பண்ணிச் செய்தவர்கள் பிராரத்தகன்ம வசத்தினாலே செய்துள்ள புண்ணிய பாவங்களைக் கொண்டு பிறர்அவர்களுக்கு நன்மை தீமைகளைப் பண்ணினவ

ர்களைப் புசிப்பித்துத் துலைப்பவனாகக்கண்டு அக்புண்ணிய பாவங்கள் சீவன் முத்தனைப் பொருந்தாதபடி வஞ்சனையில் லாதவனாகவே பாதுகாப்பன். ஆதலால்,— உலகினிலென்செயலெல்லா முன்விதியே நீயேயுண்ணின்றுஞ் செய்வித்துஞ் செய்கின்றாயென்று நிலவுவதோர் செயலெனக்கின்றுன்செயலேயென்று நினைவார்க்கு வினைகளெல்லாம் தானே நீங்கும் - உலகத்தின்கண் மனவாக்குக்காயங்களினாலே நான்செய்யப்பட்ட புண்ணிய பாவங்களெல்லா முன்னால்கற்பிக்கப்பட்டதே! நீயே யந்தரியாமியாக வென்னிடத்திலேநின் றிச்சையாதிச் செலுத்தி ஞானேந்திரியங்களினாலே விஷயங்களைப்பற்றிவித்துங் கன்மேந்திரியங்களினாலே தொழில்களைச் செய்வித்துஞ் செய்கிறாயென்றும் ஆதலா லென்னாற் செய்யுங் கிரியையொன்றுமில்லை யுன்னுடைய கிரியாசத்தியே செய்விப்பதென்று மெவ்விடத்து மெச்செயலுஞ் சிவன்செயலென்று எண்ணுமவர்களுக்குப் பிராயச்சித்தத்தினாலே யாதல் புசித்தாலன்றிக் கன்மங்கள் பொருந்தாமற் றானேபோமென் றிதன்பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

கன்மங் கன்மபலன்க ளிரண்டினையுஞ் சிவனிடத்திற் சமர்ப்பித்துச் சமபுத்தியாய் நிருவிகற்ப சமாதியாய்ச் சிவனைச் சிந்தியாது சிந்தித்திருப்பவர்க் கிருவினை யிசையாதென் றிசைக்கின்றார்.

வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

———0———

நீயே எனக்குண்ணின்று செய்கின்றாயாகலின் என்னாற் செய்யப்படு மிதமகிதமெல்லாம் நீசெய்யுஞ் செயலேயென்றும், நீயே பிறரைக்கொண்டு செய்வித்துஞ் செய்கின்றாயாகலிற் பிறரா லெனக்குவரு மிதமகிதங்களும் நீ செய்யுஞ் செயலே பிறிதில்லையென்றும், இங்ஙனம் அவனருளையல்லது ஒன்றனையுங் கருதாராய்த் தம்மை யிழந்து நிற்கப்பெறுவார்மாட்டு, அஞ்ஞானகன்மம் பிரவேசிக்கமாட்டாதா யொழிந்துவிடுமாகலான், அப்பெற்றித்தாகிய மெய்யுணர்வான் அடைக்கலம் புக்காரைத் தன்னைப்போலச் சுத்தராகச் செய்து பாதுகாத்தலும், மந்திரவலியானடங்கி இரை நுகரப்பெறாது கிடக்கும் பாந்தள் யாதானுமோரிலக்குவந்து வாய்த்தழி வறிதுகிடவாதவாறுபோல, அவர்மாட்டெழுந்தும் அவரைச் சாரமாட்டா தொழிந்து கிடந்த வவ்வாகாமிய வினை அவர்க்கு இதமகிதங்களைச் செய்வார் பிறருளராயவழி அவ்வினையுபற்றி ஆண்டவ்விதமகிதங்களுக்குத் துணையாய்த் தலைக்கூடற்பால தாகலின் அதனை யவ்வாறு செலுத்திப்பிறர் செய்யு மவ்விதமகிதங்களை மிகுவித்து நுகர்வித்தொழிதலுஞ் செய்வனாகலான் அதுபற்றி யிறைவன் சலமுடையனுவானல்லனென்பதாம்.

ஆக்கிக் காப்பனென வினையும்.

பிறரை யூட்டி யொழித்தலே யவரை வினை நணுகாமற் காப்பதெனக் கொள்க.

பிறரை யங்ஙன மூட்டுதலுங் கருணையேயாமென்பார், ஊட்டியென் றொழியாது ஒழிப்பானு யென்றும் நலமுடனேயென்றுங் கூறினர்.

உலகினி லென்செயலெல்லா முன்விதியே நீயே யுண்ணின்றுஞ் செய்வித்துஞ் செய்கின்று யென்று நிலவுவதோர் செயலெனக்கின் றுன்செயலே யென்று நினைவார்க்கென்றதனல் அவன் பணியி னின்றிடலாவது இதுவெனத் தெரித்துக் கூறிய தூஉ மாயிற்று.

இறைபணியினிற்கு மிவன் பாதகத்தைச் செய்திடினும் பணியாச்கிவிட்டு இவனுலகி லிதமகிதஞ் செய்தவெல்லா மிதமகித மிவனுக்குச் செய்தார்பா லிசையச் செய்தல் இறைவனுக்குச் சலமாய் முடியும் போலு மென்பாரை நோக்கி, அதனைத் தெரிதது ணர்த்திச் சலமின்மை காட்டியவாறு.

நிரம்பவழகியருரை வருமாறு.

---o---

இப்படிச் சிவனை யிரட்சித்தானென்னிற் பட்சவாதி யாகாதோ வென்ற வவிகாரவாதியை நோக்கி யருளிச்செய்கிறார்.

சலமிலனுய்ஞானத்தாற் றனையடைந்தார்தம்மைத் தானுங்கித்தலைவன் - அன்னுவயம். சிவஞானத்தாலே தன்னை யடைந்தவர்களை இரட்சித்துத் தன்னைப்போலே யாக்கிக்கொள்ளுகிற விது கர்த்தாவுக்குள்ள தாகையாலே தன்னையடைந்தவர்களை யிரட்சிக்கச் செய்தேயும் பிறரோடு வெறுப்பில்லை. இப்படிச் சிவனைப் பெற்றவர்கள் இந்திரிய வியாபாரத்தோடு கூடியிருந்தால் மீளவு மாகமிய மேறாதோ வென்னில்?—அவர் தாஞ்செய்வினைதன்னு னலமுடனேபிறர்செய்வினை யூட்டியொழிப்பானும் - தன்னையடைந்த வடியாரைச் சிவன்றானுக்கி யிருக்கச்செய்தேயும் இந்திரிய வியாபாரங்களுடனே கூடியிருந்தார்களாயினும் அவர்கள் முன்புசெய்த கன்மத்துக் கீடாகப் பிறராற் பலி

க்கிற பலன்களும் இவர்கள் பிறருக்குப் பலிக்கிற பலன்களும் இவையெல்லாஞ் சிவனுடைய செயலென்று காணவே சிவனும் புசிப்புமாத்திரம் புசிப்பித்துத் தலைப்பிப்பனும் நின்று,—நணுகாமல்வினையவரை காடிக்காப்பன் - அப்படித் தன்செயலற்று நின்றவர்களுக்கு ஆகாமியமேருமற் திருவுள்ளம்பற்றிப் பாதுகாத்துக்கொள்ளுவன். இந்த வுண்மையைப் பெற்றவர்கள் நிற்குமுறைமை யருளிச்செய்கிறார்.— உலகினி லென்செயலெல்லா முன்விதியேநீயே யுண்ணின்றுஞ் செய்வித்துஞ் செய்கின்றபென்றும்- பிரபஞ்சத்திலே நான்செய்கிற தொழில்களெல்லாம் நீ நியமித்ததே! நீ தானே யெனக்குள்ளே நின்று மிவையெல்லாஞ் செய்கிறாயுஞ் செய்விக்கிறாயும் என்றும்,—இலவுவதோர் செயலெனக்கின் றுன்செயலேயென்று - எனக்கிப்பொழுது பொருந்தப்பட்ட தியாதொரு செயல்களெல்லா முன்னுடைய செயலேயென்றும்,—நினைவார்க்கு வினைகளெல்லா நீங்குந்தானே- இங்ஙனஞ் சொல்லப்பட்ட முறைமையை சிவனுடைய சிவஞானத்தாற் கண்டு நிற்பார்க் கெல்லாக் கன்மங்களும் விட்டு நீங்காநிற்கும்.

இதற்குப் பிரமாணம், தேவாரம். "முன்னம்மடியேனறியாமையினால்முனிந் தென்னைநலிந்து முடக்கியிடப், பின்னையடியே னுமக்காளும்பட்டேன் சுடுகின்றது சூலைதவிர்த்தருளீர், தன்னையடைந்தார் வினைதீர்ப்பதன்றோ தலையானவர்தங்கடனாவது தா, னன்னநடையா ரதிகைக்கெடில வீரட்டானத் துறை யம்மானே." சிவஞானபோதம், ௧0-சூ, ௩-வெ, "சார்ந்தாரைக்காற்றல் தலைவர்கடனாதல், சார்ந்தாரைக்காத்துஞ் சலமிலனாய்—சார்ந்தடியார், தாந்தாமாய் செய்துபிறர் தங்கள் வினைதாங்கொடுத்து, லாய்ந்தார்முன் செய்வினையு மங்கு" என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, பக்குவான்மாக்களை இரட்சிக்கை யினால் சிவன் பக்ஷவாதி யல்லனென்றும் சிவனைப் பெற்றவர் கள் பிராரத்தம் புசிக்குமிடத் துண்டாகிய செயல்களெல்லாஞ் சிவனுடைய செயலேயென்றுங் காணவே, அவர்களுக்கு ஆகாமி ய மேறாதென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—0—

நீயே யுண்ணின்றுஞ் செய்கின்றாய்-நீயேயெனக் குண்ணின் றுஞ் செய்கின்றாயாகலின்,—உலகினி லென்செயலெல்லா முன் விதியேயென்றும் - உலகினி லென்னாற்செய்யப்படு மிதமகிதமெ ல்லா நீ செய்யுஞ் செயலே என்றும்,—செய்வித்து நிலவுவதோ ர் செயலெனக்கின் றுன்செயலேயென்றும் - நீயே பிரணாக்கொ ண்டு செய்வித்தும் செய்கின்றாயாகலின் பிறரா லெனக்குவரு மி தமகிதங்களு நீ செய்புஞ்செயலே. பிறிதில்லை,—என்றும் நினை வார்க்கு வினைகளெல்லா நீங்குந்தானே-இங்ஙன மவ னருளைப ல்ல தொன்றினையுங் கருதாராய்த் தம்மையிழந்து நிற்கப்பெறு வார்மாட் டஞ்ஞானகன்மம் பிரவேசிக்க மாட்டாதா பொழி ந்துவிடு மாகலான்,—ஆபஞானத்தாற் றனையடைந்தார் தம் மை - அப்பெற்றிக தாகிய மெய்யுணர்வா னடைக்கலம் புக்கா ரை,—தானுக்கிக்காப்பன் - தன்னைப்போலச் சுத்தராகச்செய் து பாதுகாத்தலும்,—அவரை நாடிநணுகாமல்வினை- மந்திரவ லியா னடங்கி யிரைநுகரப்பெறாது கிடக்கும் பாக்கள் யாதா னு மோரிலக்கு வந்துவாய்த்தழி வறிது கிடவாத வாறுபோல வவர்மாட் டெழுந்து அவரைச் சாரமாட்டா தொழிந்து கிட ந்தவவ் வாகாமியவினை,—அவர்தாஞ் செய்வினைதன்னை முட னே பிறர்செய்வினை யூட்டி யொழிப்பானும் - அவர்க் கிதமகித

க்களைச் செய்வார் பிறருளராயவழி யவ்வியைபுபற்றி யாண்டவ்வித மகிதங்கட்குத் துணையாய்த் தலைக்கூடற் பாலதாகலினதனை யவ்வாறு செலுத்திப் பிறர் செய்யு மவ்விதமகிதங்களை மிருவித்து நுகர்வித்து ஒழித்தலுஞ்செய்வானாகலான்,—தலைவன்சலமிலன் - அதுபற்றி யிறைவன் சலமுடையனுவனல்லன்.

மறைஞானதேசிகர் உரை.

இலிங்கமில்லாதார் சிறப்பின்மையு மிலிங்கமுள்ளார் சிறப்புண்மையு முணர்த்துகின்றார்.

நாடுகளிற் புக்குழன்றுங் காடுகளிற் சரித்து நாகமுழை புக்கிருந்துந் தாகமுத றவிர்ந்தும், நீடுபல காலங்க ளித்தனை யிருந்து நின்மலஞா னத்தையிலார் நிகழ்ந்திடுவர் பிறப்பி, லேடுதரு மலர்க்குழலார் முலைத்தலைக்கே யிடைக்கே யெறிவிழியின் படைக்கே கிடந்துமிறை ஞானம், கூடுமவர் கூடரிய வீடுங் கூட்டிக் குஞ்சித்த சேவடியுங் கும்பிட்டே யிருப்பர். (௫)

(இ - ள்.) நாடுகளிற் புக்குழன்றுங் காடுகளிற் சரித்து நாகமுழை புக்கிருந்துந் தாகமுத றவிர்ந்தும் நீடுபல காலங்க ளித் நின்மலனது ஞானம் நின்மலஞானம். அதனை யில்லாதோர் பூமிப் பிரதக்கிணமாகத் திரிந்தாலும் புறப்பற்றை யற்று மிருகங்களைப்போல வனத்திற் சஞ்சரித்துச் சருகு புசித் திருந்தாலும் புலிகளைப்போல மலைப்பாழிகளுட் புக்கு யோகத்தைச் சாதித்திருந்தாலும் பாம்புபோல வாயுவைப் புசித்துத் தாகங்களைத் தீர்ந்திருந்தாலும் யோகிகளை

தருயிருந்து நின் மலஞா னத்தை யிலார் நிகழ்ந்திடு. வர் பிறப்பில்

ப்போல நாணெடுங்காலம் நித்தியத்துவம் பெற்றிருக்கவென்று கருதித் திருட்டபலமாகிய விரசாயனங்களைக் கற்பப்படி கூட்டிக் கொண்டிருப்பினு மஃதில்லாதோ ரித்தனை வருத்தமுற்றுச் சாதித்தார்களோ யாயினு மிறுதிக்கட் பூமியிலே வந்து பிறப்பர்கள். அஃதுள்ளாற் பெறும்பலம் யாதெனில்?

ஏடுதரு மலர்க் குழலார் முலைத் தலைக்கே யிடைக்கே யெறிவிழியின் பரிகடைக்கே கிடந்துமிறைஞானங் கூடுமவர்

சிவஞானத்தைப் பொருந்தினவர்கள் ஏடுந்தோடும் பூவினிதழே எனபதனுற் பூவினிதழைப் பொருந்தின குழலையுடைய மாதர் முலையினுடைய குசுமமாகிற நுனியிலேயும் அல்குற் றலத்திலும் அம்புபோலக் கொடிதாகிய விழிகளினது கடைக்கட் பார்வைகளிலேயும் அகப்பட்டு முயங்கிக் கிடந்தார்களேயாயினு மந்த விடயங்களின் வசமாகார்கள். அஃதென்போல வென்னில்? தண்ணீரிலே யநவரதமுங் கூடியிருக்கிற தாமரையானது எப்படி யதனைப் பற்றுமலிருக்கும் அப்படிப்போல ஞானிகளும் பொருந்தார்கள். ஆதலா லெத்துடன் பொருந்தியிருப்பர்க ளென்னில்?

கூடரியவீடுங் கூடிக் குஞ்சித்த சேவடியுங் கும்பிட்டே யிருப்பர்.

யாவராலும் பெறுதற்கரிய பரமமான முத்தியைப் பொருந்திப் பரமாநந்தத் தாண்டவத்தைப் புரியாநின்றோன் றூக்கிய சீர்பாதத்தையே யநவரதமு மனுசந்தானம் பண்ணிக்கொண் டிருப்பர்கள். எ-று.

நின்மலஞானத்தை யிலார் நடுநிலைத் தீபகம்.

விமலமுமாய் சர்வதோமுகமா யிருக்கிற சிவஞானம் பிரகாசியாவிடத்து முத்தியடையப் பெறுதென்பது கருத்து.

சேவடியுமென்ற வும்மை சிறப்பின்கண் வந்தது.

ஞானத்தையிலார் நிகழ்ந்திடுவர் பிறப்பில் எனவும், இறை ஞானங் கூடுமவர் இருப்பரெனவும், இரண்டெழுவாயும் இரண்டு பயனிலையுங் கூட்டுக.

இதற்குப் பத்திரகிரியினும் சர்வஞானோத்தரத்தும் இரத்தினத்திரயத்து மறிக. (௬)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் கிரியா யோகங்களினாலே முத்தியில்லை ஞானத்தினாலே யல்ல தென்பது கூறுகின்றது.

நின்மலஞானத்தை யிலார் நாடுகளிற் புக்குழன்றுங் காடுகளிற்சரித்தும் நாகமுழைப்புக்கிருந்துந் தாகமுதற்றவிர்ந்தும் நீடுபல காலங்க ணிந்தராயிருந்தும் நிகழ்ந்திடுவர் பிறப்பில்,—சிவஞானமில்லாத பெயர் புண்ணியபூமிகளிலே சஞ்சரித்தும் புண்ணிய தீர்த்தங்களை யாடிப் பிரயாசைப்பட்டும் வனத்திலே சாகமூலபலங்களைப் புசித்துஞ் சஞ்சரித்தும் மலைமுழைஞ்சிலே புகுந்தும் ஸ்திராசனத்திலே யிருந்தும் அப்பியாசவசத்தினாலே பசிதண்ணீர்தாகத்தை யடக்கியும் நெடிதாகிய பலயுகங்கள் மரணமில்லாம லிருந்துங் காலாந்தரத்திலே சனனத்திலே வந்து தோன்றுவார்கள்,—இறைஞானங் கூடுமவரோடு தருமலர்க் குழலார் முலைத்தலைக்கே யிடைக்கே யெறிவிழியின் படுகடைக்கே கிடந்தும்÷ குஞ்சித்த சேவடியுங் கும்பிட்டே கூடரிய வீடுங் கூடியிருப்பர் -பதியினது சிற்சத்தி பதிதலையுள்ளபேர் அழகுபொருந்திய மடந்தையருடைய வெல்லாவவயங்களையுங் கோய்ந்திருக்கச் சிதேயுஞ் சிவனது குஞ்சித பாதமாகிய வருட் சத்தியையும் பிரியாத வணக்கத்துடனே நி

ன்று முன்சொன்ன தபோயோகங்களினாலுங் கூடப்போகாத மோக்ஷத்தையுங்கூடிச் சிவமேயாயிருப்பரென றிதன்பொருள்.

கூடுமெவரென்றது இறந்தகாலந் தருந்தொழி லிடைநிலையாய்க் கூடினவரெனப் பொருளுரைத்தது.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

சிவசாக்ஷாத்கார சித்தியினாற் சித்த சிவ யோகிக்குஞ் சிவப்பிரத்தியக்ஷ சாக்ஷாத்காராத் துன்முக சிவசமாதி சித்தியினாற் சித்த சமாதி சாத்திய சிவயோகிக்குஞ் சிவப்பிரத்தியக்ஷ விஷய விருப்ப மிருந்தாலு மவர்கள் சரீராந்தத்திற் பாசமுத்தியடைந்து மல சத்திவிர்த்தி விரியாது குவித்த சிவசத்தி கர்ப்ப சிற்சத்தியை விரித்துச் சிவனைச் சாக்ஷாத்கரிப்பார்க ளென்றுஞ் சரீர மிருக்குங் காலத்து மாகாமிய மேறுதென்றும் பிராரத்த கன்மமும் பலங்குன்றி வாசனைமாத்திரமாய்த் தாக்காமற் றுச்சும் போகம் புசிப்பிக்குமென்று மிருதிரு விருத்தத்தாலிசைக்கின்றார்.

வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

———o———

ஏனைப் பெரும்பேறெல்லாங் கொடுக்க வல்லனவாய எத்துணை நன்மைகளும், இங்ஙனம் அரன்பணியி னிற்றலாகிய மெய்த்தொண்டு செய்யும் ஞானத்தாற் றரப்படும் பேற்றைக் கொடுக்க

வல்லுவனவல்ல. எல்லாப் பெரும்பேற்றையுங் கெடுக்கவல்லன வாய எத்துணைத் தீமைகளும், இதனாற்றரப்படும் பெருப்பேற்றைக் கெடுக்க வல்லனவுமல்ல; அத்துணைப் பெரியதோர்சிறப்பிற்று இவ்விறைபணிநிற்கு ஞானமென்பதாம்.

அரன்பணி நிற்றலது ஆற்றல் கூறியவாறு.

சாக்கிரத்தே யதீதத்தை யென்னுஞ்செய்யுளில், சாக்கிரத்தே யதீதத்தைப் புரிந்தவர்கள் சாக்கிரத்தி னின்றவொப்புமை மாத்திரையேபற்றி அவரை யெல்லாரோடு மொப்பவைத் திகழற்கவென வவரது பெருமை யுணர்த்துவார், ஆக்குமுடி கவித்தரசாண்டு நுங்கிடாவேயென ஆண்டுக் கூறினார்; அதனையே அரன்பணியி னிற்றலா னாசற்பாலதன்கண் மற்றொன்றாற் செய்யக்கடவ தொன்றில்லையென அத்தொண்டின் பெருமையுணர்த்துவார், ஈண்டுமெடுத தோதினார்.

இங்ஙனங் கருத்துவகையாற் பொருள் வேறுபாடுண்மையிற் கூறியது கூறலாகாமை கண்டுகொள்க.

நிரம்பவழகியருளை வருமாறு.

—o—

பிரபஞ்ச வியாபாரங்களை விட்டு நீங்கி அரிய தபசுகளைப் பண்ணினாலும் சருவமுஞ் சிவனுடைய செயலென் றறியாதவர்களுக்கு சனனம் நீங்காதென்றும் சருவமுஞ சிவன்செயலென்றறிந்தவர்களுக்கு சனனம் நீங்குமென்றும் மே லருளிச்செய்கிறார்.

நாடுகளிற் புக்குழன்றும்- பூப்பிரதட்சண முதலாக வெல்லா விராச்சியங்களும் புக்குத் தடுமாறித் திரிந்தும்,—காடுகளிற் சரித்தும் - வனசரிதராய்த் திருந்தும்,—நாகமுழைபுக்கிரு

ந்தும் - மலை முழஞ்சுகளிலே யிருந்து தவசு பண்ணியும்,—தாக முதல் தவிர்ந்தும் - ஆகாரம் நித்திரை பய மைதுன மென்னு முடற்குணங்களை விட்டும்,—நீடுபல காலங்கள் நித்தராயிருந்தும் - எண்ணிறந்த நெடுங்காலங்கள் நித்தத்துவம் பெற்றிருந்தும்,—நின்மல ஞானத்தை யிலார் நிகழ்ந்திடுவர் பிறப்பில் - சிவனுடைய ஞானத்தைப் பெறாதவர்களுக்கு சனன முண்டாகாநிற்கும். இத்தன்மையன்றி,—ஏடுதரு மலர்க்குழலார் முலைத்தலைக்கே யிடைக்கே யெறிவிழியின் படைக்கே கிடந்து மிறைஞானங்கூடுமவர் கூடரியவீடுங் கூடிக் குஞ்சித்த சேவடியுங் கும்பிட்டேயிருப்பர்-இதழ்பொருந்தின மலரையுடைய கூந்தலார்களுடைய முலைமுகத்திலே யவர்கள் மருங்குலிலே காமதுறை யிலக்காகாம லம்பிலுங் கடிதாகப்பட்டுப் பறியப்பாற்கிற கொடிய கடைக்கண்களிலே கிடந்தார்களாயினும் பரமேஸ்வரனுடைய ஞானத்தைக் கூடினவர்கள் யாவராலுங் கூடுதற்கரிய மோக்ஷத்தையும் பொருந்தி குனிப்பையுடைய சீர்பாதத்தையுந் தொழுதுகொண் டிருப்பார்கள்.

இதற்குப் பிரமாணம் திருக்களிற்றுப்படியார், சுங-வெ, “வீட்டிலே நின்று வினையொழிந்து நின்றிடிலென், நாட்டிலே நல்வினைகள் செய்திடிலென்—கூட்டிலவாட், சாத்தியே நின்றிலையேற் றக்கனார் வேள்விசெய்த, மாத்திரமே யாங்கண்டாய் வந்து”. என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, பிரபஞ்ச வியாபாரங்களை விட்டு அரிய தபசுகளைப் பண்ணினாலும் சர்வமும் சிவனுடைய செயலென் றறியாதவர்களுக்கு ஜனனம் நீங்காதென்றும் ர்சவமும் சிவனுடைய செயலென் றறிந்தவர்களுக்கு இந்திரிய வியாபாரத்தோடுங் கூடியிருந்தாலுஞ் ஜனனம் நீங்குமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

நாடுகளிற் புக்குழன்றும்-புண்ணிய தேசங்களிற் சென்று புண்ணியதலம் புண்ணிய தீர்த்தங்களைத் தரிசித்தாடியும்,—காடுகளிற் சரித்தும் - வனத்திலே சென்று கந்தமூல பலாதிகளை யயின்றும்,—நாகமுழை புக்கிருந்தும் - மலையிலுள்ள குகையின் யோகத்திருந்தும்,—தாகமுத றவிர்ந்தும் - யோகாப்பியாச பலத்தினாலே பசிதண்ணீர் தாகமுதலியவற்றிற் குணவுக ளொழிந்தும்,—நீடுபலகாலங்கள் நித்தராயிருந்தும் - நெடுங்காலமரண மில்லாமலிருந்தும்,—நின்மல ஞானத்தை யிலார் - நிருமலமாகிய சிவஞான மில்லாதார்,—பிறப்பி னிகழ்ந்திடுவர் - ஜனனத்துட்படுவர்,—ஏடுதரு மலர்க்குழலார் முலைத்தலைக்கே யிடைக்கே பெறிவிழியின் படுகடைக்கே கிடந்தும் - இதழை யுடைய மலர்மாலை யணிந்த கூந்தலையுடைய மங்கையர் கொங்கை யல்குல் விழிக்கடை முதலிய அவயவங்களைத் தோயப் பெறினும்,—இறைஞானங் கூடுமவர்-சிவஞானத்தைப் பெற்றோர் கூடரிய வீடுங்கூடிக் குஞ்சித்த சேவடியுங் கும்பிட்டேயிருப்பர் - பெறுதற்கரிய வீட்டினையும் பொருந்தித் திருவடிக்க ணீங்காதே நிற்பர்.

மறைஞானதேசிகர் உரை.

இத்தன்மையினை யுடைய ஜீவன்முத்தர் வாதனையினாலே
கன்மங்கள் செய்தார்களேயாயினு மதனையுணர்களா
தலா லாகாமியமுமேறுதென் றுணர்த்துகின்றார்.

அங்கித்தம் பனைவல்லார்க் கனல்சுடாதாகு மௌடதமந் திரமுடையார்க் கருவிடங்களேறா, வெங்கித்

தைக் கன்மமெலாஞ் செய்தாலுஞானிக் கிருவினைகள் சென்ரணையா முற்செய்வினையிங்குத், தங்கிப்போம் பாத்திரமுங் குலாலன்வினைதவிர்ந்த சக்கரமுங் கந்தித்துச் சுழலுமாபோல், மங்கிப்போய் வாதனையாலு றல்விக்குமெல்லா மலங்களும்பின் காயமொடு மாயுமன்றே. (௬)

(இ-ள்.) அங்கித் தம்பனைவல் லார்க் கனல்சுடாதாகும் — அக்னித்தம்பனை வல்லவனை அனலானது சுடாத வாறுபோலவும்

ஔடத மந்திரமுடையார்க் கருவிடங்களேறு — ஔஷத மந்திர பலத்தினை யுடைய சித்த புருஷர்களானவர்களை விடச் சத்தியானது வாதைபண்ணுத வாறுபோலவும். ஔஷத மந்திர மென்பதனை யிருபாலுங் கூட்டுக.

கன்ம மெல்லாரையும் வாதியாதோ வென்னில்? அநேக ஜனங்கள் நடுவே அக்நித்தம்பனை வல்லவனையே சுடாதுபோ லெனவறிக.

எங்கித்தைக் கன்மமெலாஞ் செய்தாலுஞானிக் கிருவினைகள் சென்றணையா — ஞானவான்களெந்தெந்தக் கன்மங்களைச் செய்தார்களே யாயினும் அந்தந்தக் கன்ம பலங்களைப் பொருந்தி வாதையுறார்கள்.

முற்செய்வினையிங்குத் தங்கிப்போம் பாத்திரமுங் குலாலன்வினைதவிர்ந்த சக்க — பூர்வத்திலுண்டான கன்மாநுகுணமான சரீரத்திலுண்டான பிராரத்தகன்ம வாதனை சிறிதிருந்து சுகதுக்கங்களை யுறுவிக்கினுஞ் சிறி தழலப்பண்ணும். அஃதென்போல வென்னில்?

ரமுங் சந்தித்து
ச்சுழலு மாபோ
ன்மங்கிப்போய்
வாதனையாலுழல்
விக்கும்

பெருங்காய மிருந்த பாண்டமானது அஃது தொன்றொழிபப் போயிருக்கினு மந்தப் பாண்ட மந்தப் பெருங்காய நாற்ற முண்டாயிருக்கும். இங்ஙன முண்டாயிருந்து மேலதனு லொரு பிரயோசன மில்லாதது போலவும் குயவன் றிகிரியி லேற்றினமண் கடத்தை யுண்டாக்கினபின்னு மந்த வாதனைதானே நின்று மெல்லமெல்லச் சுத்தித் தானேயொழிந்துபோ மதுபோலவும். இந்த வாதனையோ டிருக்கவு மோருடலை யுண்டாக்குமோ வென்னில்? அக்கினியைச் சேர்ந்த வித்தானது பின்பு முளையாத வாறு போலென வறிக.

எல்லாமலங்க ளும் பின் காய மொடு மாயுமன் றே — இந்த வான்மாச் சரீரத்தை விட்டு முத்தியை யடையும்பொழுது முற்கூறிய வாசனைத் மகமாகிய கன்மமு மாயையு மாணவமுந் தான் கெடாமற் றன் சத்தியினது வலிகெட்டு நிற்கவே தடைபடாமல் முத்தியை யடைவன். எ-று.

சந்தித்துச் சுழலுமென்பதனை நிரைநிரையாக்கிப் பொருளுணர்க.

பலவெழுவாயும் பலபயனிலையும்

உம்மை எதிர்மறை.

மாயு மென்றது சுத்தமாச் செடுமென்றதன்று, அஃது நிருந் தும் வாதை பண்ணுதென்பது கருத்தாயிற்று.

"உக்கொளியா தொளிக்குமிரு ளுதயகதி ரொளிமுன்னே, பக்குவத்திற் பசுபாச வலியடங்கும் பரமசிவனை, நக்கனு

யிர்க் கருள்புரியநசித்ததலவசித்ததல,நெய்க்கனநீங்குதலென்ன மாயைநிலை தொலையு'மன்றே'' என்று ரொமததுறவர்.

இதற்குச் சிவதருமோத்தரம் கிரணம் சுப்ரபேதத்து மறிக. (சு)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் சிவஞானிக்குக் கனமமேருதென்பது கூறுகின்றது.

ஞானிக்கு எங்கித்தை கன்மமெலாஞ் செய்தாலு மிருவினைகள் சென்றணையா - சீவன்முத்த னெவ்விடத் தெவ் வினைகளெல்லாஞ் செய்யினும் ஞானபலத்தினலே யவைகள் பலமாகப் பொருந்தாது. அதெவ்வாறென்னில்—அங்கித் தம்பனைவல்லார்க் கனல்சுடாதாகும்-அக்கினித் தம்பனையை யுடையவன் அக்கினியை யெடுக்கிலு மணையினு மவனுக்குச் சுடாது.—அவுடத மந்திர முடையார்க் கருவிடங்களேறு - மந்திர ஔஷத சித்தனுக்குக் கடித்தவிஷமுங் குடித்தவிஷமுந் தாக்காது ஆகும். இவவாறுகும் பிராரத்தகன்மபலம் புசிக்கும்போது மாயையும் ஆணவமுங் கூடிநின்றே புசிக்கவேணும். மும்மலமிருக்கையினலே சிவஞானி பாவ தெப்படியெனவில்?—முன்செய்வினை யெல்லா மலங்களு மங்கிப்போய வாதனையா லுழலவிக்கும்-அநாதியேதொன்று தொட்டுவரப்பட்ட கன்ம மாயை யாணவமெல்லா மலங்களுக்குஞ் சத்திகள்கெட்டு வாதனையினலே தேகமுள்ளளவும் விஷயங்களிலே யுழலுதலைச் செய்விக்கும்.—பின்காயமொடு மாயுமன்றே-பிராரத்தகனம மற்றபின் தேகத்தோடே வாதனையும் நசிப்பதாம்.இவ்வாறு வாதனையினலே பண்ணுங்கிரிகை பலத்தைக் கொடாது. அதெனபோல வென்னில்?—இங்குத் தங்கிப் போம் பாத்திரமுங் குலாலன் வினைத்தவிரந்த சக்கரமுங் கந்தித்துச் சு

ழலுமாபோல-பெருங்காயம் வைத்தெடுத்துப்போட்ட பாண்டங் குயவன் றண்டுகொண்டு சுழற்றுதலை யொழிந்த திகரியையு மடைவே மணப்பதையுஞ் சுழலசலையுஞ் செய்யினு மவையிற்றிரு லொருபயனு மில்லாததுபோலவென் றிதன்பொருள்.

அன்றென்ப தாமென்கிளவி.

சிவாக்ரயோகி பண்ணின சிவஞானசித்தி
பத்தாஞ் சூத்திர வியாக்கியானம்
சமாப்தம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

பிராரத்தம், சுபத்தமென்றும் மந்தமென்றும் தீவிரமென்றும் மூன்றுவிதம். அவற்றுள் சுபத்தஞ் சிவதன்மத் தொருப்பட்டிருப்பவரை வாதியாது. மந்தஞ் சிவ ஞானிகளை வாதியாது. தீவிர மெல்லாரையும் வாதிக்கு மானாலும் சிவஞானிகளை மிகுதியும் வாதியாது, ஆகாமியமு மேறாது.

பதப்பொருள் வெளிப்பொருள்.

இப்பத்தாஞ் சூத்திரத்து முன்பின் சில விடங்களிலேயு மிருந்து கூறியது கூறலைக் குறித்துந் திரிபதார்த்தஞ் சூக்குமஸ்வரூப பரீக்ஷை பண்ணுத லோகச் சொற் சுட்டு மட்டுக் கட்டுவிட்டு முட்டத் தொட்டுப் பரீக்ஷை பண்ணுதலானும் உரை விரித்துரையாது துணர்ந்து கொள்க.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

சுடுதற் கேதுவாகிய அங்கியைத் தம்பனஞ் செய்யவல்லார் அவ்வங்கியுண் மூழ்கிக்கிடப்பினும் அதுபற்றி யவர்மாட்டுச் சுடு

நிகழாதவாறும், கொலைத்தொழிற் கேதுவாகிய விடங்களைத் தடுக்கவல்ல மந்திரமருந்துகளைப் பெற்றுடையார் அவ்விடங்களை யெல்லாம் நிறையப்பருகினும் அதுபற்றி யவர்மாட்டுக் கொலைத்தொழி னிகழாத வாறுபோல, விருப்பு வெறுப்புகக ணிகழ்தற் கேதுவாகிய இந்திரியங்களை மேற்கூறிய முறையினின்று தம் வழிப்படுத்த வல்ல ஞானிகள் எவ் விந்திரியங்களினின்று எத்தொழிலைச் செய்தார்களாயினும் அதுபற்றி யவர்மாட்டு விருப்பு வெறுப்பு நிகழ்ந்து மேலைக்கு வித்தாதல் செல்லாமையானும், ஏனைப் பிராரத்தவினையுந் தற்பணி நீத்தவர்மாட்டுத் தலைக்கூடமாட்டாது வெந்தபடம்போலச் சத்திகெட்டேபோய் வாசனை மாத்திரையாய் நின்று சிறிதே தாக்குமவ்வளவேயன்றி வாதனையாற் செய்யக்கடவது பிறிதில்லையாதல், காயமிருந்தொழிந்த பாத்திரத்தில் அவ்வாதனை கிடந்து கந்தித்தும் ஒருகறிக்கு பயோகமாதலின்மையுங் குயவனுவான் குடத்தை வனையுமளவுஞ் சுழற்றிவிட்ட திகிரியில் அவ்வாதனை கிடந்து தன்வேகமுள்ளவளவு மதனை மெலிதாகச் சுழல்வித்து மற்றொன்றனை வனைதற்கு உபயோகமாதலின்மையும் போலுமாகலானும், வாதனை மாத்திரைக்குத் துணையாய் நின்ற ஏனை மலவாதனைகளும் அவ்வுடம்பு மாயுங் காலத்து வேறொருபற்றின்மையான் அதனோடு மாய்ந்தொழியு மென்பதாம்.

இந்துத் தங்கிப்போம்பாத்திரம் தீவிரவாதனைக்கும், வினைதவிர்ந்த சக்கரம் மந்தவாதனைக்கு மூவமையாயின.

எங்கென்பது எங்கித்தையென மரீஇயிற்று.

நின்றென்பது சொல்லெச்சம்.

கந்தித்தென்னும் வினையெச்சம் எச்சப்பொரு டராது செவ்வென்மாத்திரையே குறித்து நின்றது. “பயந்துகாத் தழிக்குமற்றை மூவர்” என்றாற்போல.

மங்கி யொன்றொழியாது போயென்றார், வலியுறுத்தற்கு.

உவமை யெடுத்துக் காட்டியதும் அதனைத் தெளிவித்தற் பொருட்டு.

இதனானே மேல் ஒருவாற்றால் வலியுறுத்தப்பட்ட மூன்றாங் கூற்றை வருஞ்சூத்திரத்தி னியைபுபற்றி யெடுத்துக்கொண்டு தடைவிடைகளாற் சாதித்தற் பொருட்டு ஈண்டுத் தோற்றுவாய்ச் செய்துகொள்ளு முகத்தானே, மேலைச் செய்யுளின் 'எறிவிழியின் படுகடைக்கே கிடந்துங் கும்பிட்டே யிருப்பர்' என்றதனை உவமைகளின் வைத்துணர்த்தி யினிது விளக்கியவாறு.

இவை நான்கு செய்யுளானும் இரண்டாங் கூற்றின்கட் படுமாறெல்லாம் வகுத்துக் கூறப்பட்டன.

நிரம்பவழகியருரை வருமாறு.

—0—

இப்படிக்கொத்த ஞானவான்கள் இந்திரிய வியாபாரங்களோடு கூடி யிருக்கச்செய்தே அவையிற்றிற் றோயாமல் நின்றமுறைமை யெங்ஙனேயென்ற மாணாக்கனை நோக்கி யருளிச்செய்கிறார்.

அங்கித்தர்ப்பனவல்லார்க் கனல்சுடாதாகும் – அக்கினிக்கட்டாகிய வுபதேச வல்லவர்களுக்கு அந்த வக்கினியிலே நடக்கச்செய்தே அந்த வக்கினி சுடாமல் அவர்கள் வசமாயிருந்தாற்போலவும்,—அவுடதமந்திர முடையார்க் கருவிடங்களாறு - ஔஷதப் பிரயோகம் மந்திரத் தியானமு முடைய விஷகாரிகளைத் தீர்த்தற் கரிபதாகிய விஷங்கள் பொருந்தினு லந்தவிஷங்களாறும லவர்கள் வசமாய்க் கிடந்த தன்மைபோலவும்;—

எங்கித்தைக் கன்மமெலாஞ் செய்தாலும் ஞானிக் கிருவினைகள் சென்றணையா - முன்செய் வினை எல்லாக் கன்மங்களையும் ஞானவானகளா யுள்ளவர்கள் செய்யார்கள், வாதனையாலே செய்தார்க ளாயினும் திரிபதார்த்தத்தைத் தரிசித்துச் சிவனல்லதொன்று நடவாது என்கிற விசாரத்தை யறிதியாக வுடைய சிவஞானிகள் சுகதுக்கங்களைப் புசிக்குமிடத்துண்டா னவிருப்பு வெறுப்பு இவர்கள் வசமாவதொழிந்து இவர்க ளதின் வசமாகார்கள்;ஆகையால் ஆகாமியமானது சென்று பொருந்தாது. முன்பு பிராரத்தம் புசிக்கச் செய்தே யல்லோ வாகாமிய மேறிவந்தது, இப்போ பிராரத்தம் புசித்தானுகில் மீளவு மாகாமிய மேருதோ வென்னில்? வாகாமிய மேருமற் போகிறவழியு மேலருளிச்செய்கிருர்.—இங்குத் தங்கிப்போம் பாத்திரமுங் குலாலன்வினைதவிர்ந்த சக்கரமுங்கந்தித்துச் சுழலுமாபோல் - பெருங்காய மிட்டிருந்த பாத்திரத்தி லுண்டாகிய பெருங்காயம் போனுலும் பாத்திர மீளவும் நாறின தன்மைபோலவும் குலாலன் திருகையை திரியாமல் கைவிட்டாலும் முன்பு திரித்தவிசை யுள்ளளவும் சுழன்ருற்போலவும்-முனபுள்ள பிராரத்த கன்மமும்,—மங்கிப்போய் வாதனையா லுழல்விக்கும் - ஆசாரியன் செய்த அத்துவா சோதனையாலே திரப்போ யிருக்கச்செய்தேயும் வாதனு மாததிரத்தாலே ஞானவான்களிடத்துப் பிராரத்த கன்மந் தேகத்தோடேகூடி ஜீவியாநிற்கும்,அப்படி ஜீவிப்பித்ததாமாயினும் பின்னையொரு ஜனனத்துக் கேதுவாகாது. அதெந்தவினை யென்னில்?—எல்லா மலங்களும் பின்காயமொடு மாயுமன்றே-அப்படி பிராரத்தம் புசிக்கச்செய்தேயும் ஏறின வாகாமியமாகிய கன்மத்துக்கிடாக வெடுக்கிற மாயாதேகமு முண்டாகாது. அந்த ஞானவான் தற்போதஞ் ஜீவியாமல் அந்த ஞானமாய் நிற்கிற கோட்பாட்டாலே ஆணவ மாயை காமிய

மென்கிற மலங்களெல்லாம் வாதனையாலே சரீர முள்ளமட்டு நின்று பின் டந்தச்சரீரத்தோடேமாயும்.

இதற்குப் பிரமாணம் சிவஞானபோதம், ௧0-சூ, ௫-வெ, "நண்ணலவ்வேவாத நற்றவர்தம்மினும், பண்ணமர்மாச்செனுத்தும் பாகரினு—மெண்ணி, யரனடியோர்பவ ளைம்புலனிற் சென்று, மவர்திறம் நீங்காரதற்கு" என்றும், ௮௪-வெ, "இங்குள்வாங்குங் கலம்போல ஞானிபால், முன்செய் வினைமாயை மூண்டிடினும்—பின்செய்வினை, மாயையுட னில்லாது மற்றவன்றான் மெய்ப்பொருளே, யாயவத்தினூணரு மச்சு" என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற்சொல்லியது, சிவனைப் பெற்றவர்க ளிந்திரியங்களோடு கூடியிருந்தார்க ளாமாயினு மந்த யிந்திரியங்க ளிவர்கள் வசமாயிருக்கும தொழிந்து இவர்க ளதன்வச மாகார்க ளாகையா லவர்களுக் காகாமிய மேறுதென்றும் பெருங்காய மிட்ட பாத்திரம்போல பிராரத்த கன்ம வாதனா மார்க்கத்தாலே கூடிவந்ததாயினும் அதிலேறின வாகாமியத்தினால் மேலொரு சரீர தொந்தனை யுண்டாகாதென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

அங்கித் தம்பனைவல்லார்க் கனல்சுடாதாகும் - சுடுதற்கேதுவாகிய அங்கியைத் தம்பனஞ்செய்ய வல்லார் அவ்வங்கியுண் மூழ்கிக் கிடப்பினு மதுபற்றி யவர்மாட்டுச் சூடு நிகழாதவாறும்,—அவுடத மந்திர முண்டையார்க் கருவிடங்களேறா - கொல்லைத்தொழிற் கேதுவாகிய விடங்களைத் தடுக்கவல்ல மந்திர மரு

ந்துகளைப் பெற்றுடையா ரவ்விடங்களை யெல்லா நிறையப் பருகினும் அதுபற்றி யவர்மாட்டுக் கொலைத்தொழி னிகழாதவாறு போல,—ஞானிக்கெங்கித்தைக் கன்மமெலாஞ் செய்தாலும்-விருப்பு வெறுப்புக்க ணிகழ்தற் கேதுவாகிய விந்திரியங்களை மேற்கூறிய முறையினின்று தம்வழிப்படுத்தவல்ல ஞானிகள் எவ்விந்திரியங்களினின்று எத்தொழிலைச் செய்தார்களாயினும்,—இருவினைகள் சென்றணையா - அதுபற்றி யவர்மாட்டு விருப்பு வெறுப்பு நிகழ்ந்து மேலைக்கு வித்தாதல் செல்லாமையானும்,—முற்செய்வினை - வாதனையா லுழல்விக்கும் வினைப் பிராரத்த வினையும் தற்பணிநீத்தவர் மாட்டுத் தலைக்கூடமாட்டாது வெந்தபடம் போலச் சத்திகெட்டுப்போய் வாதனை மாத்திரையாய் நின்று சிறிதே தாக்கு மவ்வளவேயன்றி வாதனைபாற் செய்யக்கடவது பிறிதில்லையாதல்,—இங்குத் தங்கிப்போம் பாத்திரமுங் கந்தித்து-காயமிருந் தொழிந்த பாத்திரத்தி லவ்வாசனை கிடந்து சந்தித்து மொருகறிக் குப யோகமாத லின்மையும்,—குலாலன்வினை தவிர்ந்த சக்கரமுஞ் சுழலுமாபோல-குயவனவன் குடத்தை வனையுமளவுஞ் சுழற்றிவிட்டது சிறிதி லவ்வாதனை கிடந்து சுழ வேகமுள்ளளவு மன்னை மெலிதாகச் சுழல்விற்று மற்றொன்றினை வனைதற் குபயோகமாத லின்மையும் போலுமாகலானும்,—எல்லா மங்கிப்போய் வாதனையா லுழல்விக்கும் பிரமலங்களுங் காயமொடு மாயுமன்றே - வாதனை மாத்திரைக்குத் தலையாய் நின்ற வினை மலவாதனைகளு மவ்வுடம்பு மாயுங்காலத்து வேறொருபற்றின்மையா னதனோடு மாய்ந்தொழியுமென்பதாம்.

இதனானே மேலொருவாற்றான் வலியுறுத்தப்பட்ட மூன்றாங்கூற்றை வருஞ் சூத்திரத்தினைப் பற்றியெடுத்துக்கொண்டு தடைவிடைகளாற் சாதித்தற் பொருட்டுத் தன்னிதோற்றுவாய் செய்துகொள்ளுமுகத்தானே மேலைச் செய்யுளின் எறிவிழியின் படிந்தடைக்கி கிடந்தம் குறிப்பிட்டே யிருப்பர்' என்றதனை யுவமைகளின் வைத்துணர்த்தி யினிது விளக்கியவாறு.

இவை நான்கு செய்யுளானும் இரண்டாங்கூற்றின்கட் பதிமோரெல்லாம் வகுத்துக் கூறப்பட்டன.

☞ ௧௦ - சூ, ௨-அதிகரண முடிந்தது.

பத்தாஞ் சூத்திரம் முற்றிற்று.

—o—

“ கந்தன்முக மோராறும்”
என்ற பத்தாஞ் சூத்திரம்
ஆறு முற்றிற்று.

பாயிரமுட்பட - ௩௱௬.

உ

சிவமயம்.

சிவஞான சித்தியார் சுபக்ஷம்.

கக—வது, பக்தியின் இலக்கணம்.

மறைஞானதேசிகர் உரை.

மேற் பதினோராஞ் சூத்திர மென்னுதலிற்றோ வெனின்? இப்படிப் பந்தத்திலே கிலேசமுற்றுப் பந்தங்களை நீங்கின ஜீவன்முத்தர்க் குபகாரஞ்செய்த சிவனது திருவடியை யடைந் தவனிடத்திற் பத்திசெய்யுமா றுணர்த்துத னுதலிற்று. மேலித் தலைச் செய்யு ளென் னுதலிற்றோ வெனின்? எல்லாத்தையுங் காணுங் கண்ணுக்கு ஆன்மா காட்டாய் நினறாற்போல ஆன்மாவுக்குச் சிவ னுபகரிக்கு முறைமை யுணர்த்துத னுதலிற்று.

காயமொழிந் தாற்சுத்த னாகியான்மாக் காட்டக்க
ண் டிடுந்தன்மை யுடையகண்ணுக், கேயுமுயிர் காட்டிக்
கண் டிடுமாபோல வீசனுயிர்க் குக்காட்டிக் கண்டிடுவ
னித்தை, யாயுமறி வுடையனு யன்புசெய்ய வந்நிலைமை
யின்றிலைபி னடைந்தமுறையாலே, மாயமெலா நீங்கிய
ரன் மலரடிக்கீழிருப்பன் மாறாத சிவானுபவ மருவி
க்கொண்டே. (க)

(இ-ள்) காயமோ ழிந்தாற் சுத்தனாகி யான்மா — ஆன்மா காயம்போன வாறே மலங்கள் நீங்கிப் புடம்வைத்த பொன்போலச் சுத்தனாய்

காட்டக் கண்டிடுந் தன்மை யுடைய கண்ணுக்கு — ஒருவன் காட்டக்காணு மியல்பினை யுடைய கண்ணுக்கு

ஏயவுயிர்காட்டிக் கண்டிடுமா போல — அது பொருந்தப்பட்ட கண்முதலிய விந்திரியங்களைக் கொண்டு தனது சைதன்னியமிடமாக வந்தரூபங்களையும் கண்ணையுங் கண்ட ஆன்மாவைப்போல

ஈசனுயிர்க்குக் காட்டிக் கண்டிடுவன் — சிவ[illegible]னவன் தானாக வொரு விடயங்களையு மறியமாட்டாத வான்மாக்களுக்குத் தற்சொருபத்தினையுங் காட்டித் தானெல்லாத்தக்கு மேலாய் நின்று சர்வான்மாக்கள் செய்யுங் கன்மங்களை யறிந்து பலங்களைக் கொடாநிற்பன்.

இத்தன்மையும் அறிவுடையனா யன்பு செய்ய — இந்தச் சிவனாலே யல்லோ நமக்கு மலம்போய் நின்மலனானோ மென்னுந் தன்மையை யாராய்ந் தறியத்தக்க அறிவுடையனா யந்தச் சிவனிடத்திற் பத்திசெய்ய

அந்நிலைமை யினின்றிலயி னைடந் தமுறையாலே — இப்படி யான்மா வானவ னோடோறுஞ் சோகம் பாவனைபண்ணி ஐக்கியமாயிருக்க வதன்பின்பு சிவனைப்போலத் தானும் நின்மலனா யிருக்குந் தன்மையையுடைய னானையினாலே

[illegible] நீங்கியான் ம[illegible] — இப்படி யவனை நடோறுந் தியானஞ்செய்யவே மலத்தினாலே வரு மயக்க விகற்பங்

டிக்கிழிருப்பன் கலை விட்டு நீங்கிச் சிவனது திருவடிப்புறத்
தின் கீழே யிராநிற்பன். அப்பொழு திந்த
வான்மா விருக்குந் தன்மை யாதெனில்?

மாருதசிவானு ஆன்மாக்கள் தங்களிடத் தனவரதமு
பவ மருவிக்கொ மொழியா திருக்கிற சுவாநந்தானு பூதியாகி
ண்டே. ய ஆன்ம சத்தியினது யின்பத்தையே திளை
த் திருப்பர்கள். எ-று.

ஈசன் காட்டுவன். எ-ம் ஆன்மா இருப்பன, எ-ம் எழுவாய் பயனிலை கூட்டுக.

சுவாநுபவமென்பது தன்னிடத்துண்டாகிய அநுபவம்.

சுவானுபவம் இது வடமொழி

சுவானுபவமென்றது சிவானுபவமெனக் கூறுவர்கள், அஃதிசையா.

மூலசூத்திரமாகிய சிவஞானபோதத்தில், 'சுவானுபூதிமான்' என்றதனையானு மற்ற ஆகம புராணங்களிற் கூறுகையானு மெனவறிக.

இதனை எமது குரவர் பரமோபதேசமென ஒரு நூலாக்கி விரித்துக் கூறினார், அதனை யாண்டுக் காண்க.

இதற்குச் சுப்பிரபேதம் சர்வஞானோத்தரம் சூதசங்கிதையிற் ப்ரமகீதையினு மறிக. (க)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

ஆன்ம சகாயமாகிய சிவனிடத்திலே யந்தரங்க பக்தியென்னு முறைமை ஞானத்துக் கிரியை கூறுகின்றது.

காட்டக் கண்டுபிடிக் தன்மையையுடைய கண்ணுக் கேயுமு யிர் காட்டக் கண்டிடுமாபோல விசனுயிர்க்குக் காட்டிக் கண்டு

வெவித்தை யாயுமறி வுடையனு யன்புசெய்யவன்னிலைமையின்னிலையி னடைந்த முறைபாலே - சூரியாதிப் பிரகாசங்கள் துணையாகச் சைதன்னிய யோகத்தினாலே ரூபவத பதார்த்தங்களைக் காணுமியல்பையுடைய கண்ணுக்கு இந்திரியங்களைப் பொருந்திநின்ற சீவான்மாக் காட்டக் கண்டிடுமாபோலப் பரமேசுவர னான்மாவுக்கு அறிவிக்க வறிவன். இந்தவுபகாரத்தைப் பெரிதாக விசாரிக்கும் ஞானத்தை யுடையனும் சிவனிடத்தி னிடையறாத பத்திபண்ணவே எட்டாஞ் சூத்திரத்திலே ‘ஞானஞேயமொடு ஞாதுருவு நாடாவண்ணம்’ என்ற திலேகூடு மாகையாலே.— ஆன்மா காயமொழிந்தான் மாயமெல்லா நீங்கிச் சுத்தனாகி யரன் மலரடிக்கீழ் மாறாத சிவானுபவ மருவிக்கொண்டே யிருப்பன் - முன்சொன்னவாறு சிவனிடத்திலே யிடையறாத வந்தரங்கப் பத்தியைப் பண்ணிக்கொண் டிருந்த ஆனமா தேகமொழிந்தவாறே ஆணவ மாயை மயக்கங்களை யெல்லாம் விட்டுநீங்கி நின்மலனாகிய சிவனிடத் தொழிவற்ற சிவாநந்தாநு பூதியனாயிருப்பனென் றிதன்பொருள்.

ஐந்தாஞ் சூத்திரத்திலே யிந்திரியங்களுக்குத் தரிசிப்பிக்கிற ஆன்மாவைப்போல ஆன்மாக்களுக்குத் தரிசிப்பிக்கிறவன் சிவனென்று கூறியமொழியே யிவ்விடத்தும் கூறியது புனருத்தியென்னில்? அப்படியல்ல. அவ்விடத்துக் கூறியது சடரூபமாகிய பிரபஞ்சத்தைத் தரிசிப்பிக்கிறதுக்குத் திட்டாந்தம், இவ்விடத்துக் கூறியது சித்தரூபனாகிய சிவன் ஸ்வரூபத்தைத் தரிசிப்பிக்கிறதுக்குத் திஷ்டாந்தமாகையால் புனருத்தியில்லை.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———0———

சிவனதுபகார முணர்த்துகின்றார்.

காயமொழிந்தால் - பிராரத்தகன்மம் பிடித்திருத்துஞ் சரீரமதுமாயும். மாய்ந்தால் சரீராவதி மறைக்குஞ் சாமர்த்திய மாத்திரமாய் மாயத் திரும்பத் தீக்ஷையிற் சேஷிப்பித்தமலமு மாயாதுமாய,—

சுத்தனாகி யான்மா-ஆன்மா மலமுத்தி மானாய்ச் சிவத்துவாரூட சின்மாத்திரனாய் நிற்ப,—

காட்டக் கண்டிடுந்தன்மையுடைய கண்ணுக்கு - சடமாதலானுங் கண்காணு மெனப துபசாரோபசாரம், முத்தியில் மலமறைப்பு நீங்கினாற் காட்டு நாடாது ஸ்வதந்திரமாய்க் காணுந் தன்மையுடைய தானாலும் பெத்தத்தில் மலமறைப்பினால் காட்டக் கண்டிடுந் தன்மையுடைய சீவான்ம சிற்சத்திக்கு,—

ஏயுமுயிர் காட்டிக் கண்டிடுமாபோல - பொருந்திய வான்மா மனசையேவ மனசு கண்ணையேவக் கண் சிற்சத்தியை விளக்கக் கிற்சத்தி காண்பதுபோல,—

ஈசனுயிர்க்குக் காட்டிக் கண்டிடுவன் - பரிபூரணமாய்ப் பண்ணப்பட்டதற்குத் திரும்பப் பண்ணவேண்டுவது ரீதியில் நின்றுபார்த்தா லில்லையா மாதலால், காட்டுத் திரும்ப விரும்பாதபடி சிவத்துவாபி வியத்திபண்ணத் தனக்குப் போசகபோக்கியமின்றி யுள்ளமை மாத்திரமாய்ப் பிறர்க்குப் போசக போக்கியமாய்ச் சாத்த சற்று சவிகற்ப விருவிகற்ப சாக்ஷாத்காரத்தாற் பதிமுதலிய முப்பதார்த்தங்களைச் சாக்ஷாத்கரிப்பன்-

இத்தை யாயுமறிவுடையனாய் - அப்போதுவரு மிச்செய்தியை யிப்போது சிவாகமக் கேள்வி சிந்தித்தலினால்வருந் தெளிவென் றுரைக்கும் பதிமுதல் முப்பதார்த்த சிவத்துவ பசுத்

துவ விவேக பரோக்ஷ ஞானமுடையனாய்ப் பின்னபரோக்ஷம்போ லபிநயத் தியானவானாய்ச் சிவமாத்திர தேய ஞேயத் தழுந்திச் சூனியப் போலிச் சிந்தனைச் சமாதிமானுமாய்ச் சமாதி சிவ சாக்ஷாத்கார மலஞ் சபிதி கொடுக்கும் பொருட்டு,—

அன்புசெய்ய - கூடிய மரியாதி சிவபூசை பண்ண,—

அந்நிலைமை யிந்நிலையி னடைந்த முறையாலே - சொல்லி விதேக பரமுத்தி சிவ சாட்சாத்காரஞ் சதேக சீவன்முத்தி யொருபடி சார்ந்த செய்தியாலே,

அதுவன்றியும் அந்நிலைமை பிறர் பசிதாகம்போல் ஒருபிரகாரம் திருச்சியமானாலுஞ் சர்வதிருக் கர்த்திரு ரூபமா யது சிவமென்றுவரு மாகம பரோக்ஷ ஞானத்தை,—

இந்நிலையினடைந்த முறையாலே - தன் பசிதாகம்போலிது சிவமென்று வரும் சீவன் முத்தி சிவ சாக்ஷாத்கார ரூபத்தினும் சார்ந்த தன்மையினாலே,—

மாயமெலா நீங்கி - மலமுதற் பாச மோசித்து,—

மாறுத சிவானுபவ மருவிக்கொண்டே - தனது பிறப் பொருளறிவுச் சிற்சத்தியில் விளங்கித் தோன்றிப் பிரிவற்ற பிரபஞ்ச கர்ப்ப பிறப்பொருட் சிவ சாக்ஷாத்காரப் பூர்த்திக் கீர்த்திச் சிவானந்தத்தைத் தனது தற்பொருளறிவுச் சிற்சத்தியில் விளக்கித் தோற்றித் தற்பிரிவற்ற தற்பொருட் சிவ சாக்ஷாத்காரத்தாற் சாக்ஷாத் தநுபவித்துக்கொண்டு,—

அரன் மலரடிக் கீழிருப்பன் - அப்படிப் புறப்பொருட் சிவசத்திக்கொத்து விரிந்து சித் தசித்துப் பிரபஞ்சகர்ப்பப் பிறப்பொருட் சிவனைத் திருச்சியப் பிரபஞ்ச விலக்ஷண திருக்குரூபப் பிரபஞ்சலக்ஷண சர்வதிருக் கிருத்து ரூபமாய்ப் பராக்சாய்ப்பார்க்கும் பராக்குரூபப் பிறப்பொருட் பிரமாணரூப தற்பொருட் பிரமேய ரூப பிறப் பொருளறிவுச் சிற்சத்திச் சீர்மையில் பிரத்

தியக் காய் வீழ்ந்து பதிமுதல் முப்பதார்த்தப் பிறப் பொருட்
பிரமேய சேர்மையிற் றீண்டாத சிற்சத்தி மாத்திரத்தைப் பிர
த்தியக் காய்ப் பார்க்கும் பிரத்தியக்கு ரூப பிறப்பொருட் பிர
மாணரூப தற்பொருளறிவுச் சிற்சத்திக் குறிக் கிரமிகமாகச் ச
த்திமத்து ரூபியாயுஞ் சத்தி ரூபியாயுந் தற்பொருட் பிரமாதிரு
ரூபசித்தரூப மாத்திரத்தாற் பொருளறிவனாகிய வந்தரான்மரூ
பசிற்சத்திக் குறிச் சிவ மாத்திர ரூபியாயு மிருப்பன்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

இங்ஙனம் பத்தாஞ் சூத்திரத்தாற் பெத்தத்தினின்று நீங்
கப் பெற்றார்க்கு முத்திப்பயன் பெறுமாறு வகுத்துக் கூறுதற்
கெழுந்தது பதினொராஞ் சூத்திரம். முத்தியென்றது ஈண்டுத்
தலைமைபற்றிச் சிவப்பேற்றினையே யென்றது.

கண்ணிந்திரியம் ஓருருவத்தைக் காணும்படி உயிரத்துட
னாய் நின்று காட்டுதன் மாத்திரையேயன்றி அக்கண்ணொளியோ
டுங் கூடச் சென்று அவ்வுருவத்தைக் காணுதலுஞ்செய் துபகரிக்
குமதுபோல, உயிரொருவிடயத்தை யறியும்படி முதல்வனுட
னின் றறிவித்தன் மாத்திரையேயன்றி அவ்வுயிருணர்வோடுங் கூ
ட அத்துவிதமாய்ச் சென்று அவ்விடயத்தை யறிதலுஞ்செய் து
பகரித்து வருமாகலான், எல்லாமலங்களும் பிணக்காயமொடுமா
யினமை மேலைச் சூத்திரத் திறுதியிற் கூறியவாற்றாற் காயமொ
ழிந்தான் மும்மலங்களு நீங்கப்பெற்றுச் சுத்தனுமோனாகிய
வான்மா, முதல்வனிங்ஙனம் அத்துவிதமாய் நின்று உபகரித்து
வருமுரிமையைக் கடைப்பிடித் தறிந்துகொண்டு நிற்கப்பெறின்,
அதுதொடர்புபற்றிய வம்முதல்வன் றிருவடிகளைத் தலைப்படுத
ற்கண் இச்சை யிடையறாது நிகழும்; அங்ஙனம் மறிவிசனைக ளி

ரண்டும் பிறிதொன்றிற் சேறலின்றி அவ் வத்துவிதநிலை யொன்றேபற்றி முதல்வன் றிருவடிக் கண்ணவாய் ஒருங்கு நிகழவே, காயமொழிந்தபின் மலநீங்கிச் சுத்தனாய் நிற்குமுறைமை காயத்தோடு நிற்புழித் தானே கைகூடப் பெறுதலால், ஞானக்கிரியையுமே எல்லாமலங்களையு மிம்மையே நீத்தொழித்து அவ்வறிவிச்சைகளோடொப்ப வொருவழிக் கொண்டு அம்முதல்வன் றிருவடியைத் தலைக் கூடப்பெற்று, சிவாநுபூதியே சுவாநுபூதியாகக் கொண்டு வாழ்வனென்பாய்.

அத்துவிதநிலை விளக்குவதாகிய காணுமுபகார மாத்திரையே யீண்டுக் கூறப்புகுந்தார், இனிது விளங்குதற் பொருட்டு ஐந்தாஞ் சூத்திரத்துட் கூறிப்போந்த காட்டுமுபகாரத்தையு மனுவதித்துடன் கூறினார்.

ஈண்டுக் காணுமுபகார மாத்திரையே கூறுதல் கருத்தென்பது முதனூலின் "உள்ளத்தைக் கண்டுகாட்டல்" என்பதற்கு "அவனு மவற்றது விடயத்தை யுணருமென்றது" எனக் காணுமுபகாரத்தையே வேறெடுத்துக்கொண்டுரைத்த கண்ணழிப்புரையானு முணர்க.

காட்டுமுபகார மாத்திரையேயன்றி அதன்பின்னாக வுடனின்று காணு முபகாரமும் வேண்டப்படுமென்பது எவ்விடத்தும்'என்னுஞ் செய்யுளின விளங்கக் காட்டுதும்;ஆண்டுக் காண்க.

காயமொழிந்தாற் சுத்தனாகி யான்மா இத்தன்மையாயு மறிவுடையனாயென வினையும்.

ஆகியென்றது பெயர்.

அந்நிலை யென்பதற்கு வேறுவே றுரைப்பாருமுளர்.

அகச்சுட்டு அடுக்க நின்றதனை யொழித்து வேறொன்றனைச் சுட்டுதல் செல்லாமையும் பிறவும் அவர் நோக்கிலர்.

இருவகைப் பயனு மொருங்கே சேரவைத்து விளக்குவாராய், மேலைச்சூத்திரத்து வேறுகூறாக வையாது ஒருவாறு வலியுறுக்கப்படு மூன்றாங் கூற்றைக் காயமொழிந்தாற் சுத்தனாகி யெனவும், அந்நிலைமையினிலையி லடைந்த முறையாலே மாயமெலா நீங்கியெனவும், அதனொழிபாக எண்ணெடுத்துக் கொண்டாராகலின், அதனோடுளப்பட இச்செய்யுள் முக்கூற்றதாயவாறு கண்டுகொள்க.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

இந்தச் சரீரசம்பந்தம் நீங்கினு லான்மாக்கள் சிவனுடைய திருவடியைப் பெறுவது யெப்படி யென்ற மாணாக்கனை நோக்கி மேலருளிச்செய்கின்றார்.

காயமொழிந்தாற்சுத்தனாகி யான்மாக் காட்டக்கண்டிடுந்தன்மை யுடையகண்ணுக் கேயுமுயிர்காட்டிக் கண்டிடுமாபோல வீசனுயிற்குக்காட்டிக் கண்டிடுவ னிதனையறிவுடையனாயன்புசெய்ய வனனிலைமை யின்னிலையி னடைந்தமுறையாலே மாயமெலாம்நீங்கி யரனடிக்கீழிருப்பன் மாறுதசிவானுபவ மருவிக்கொண்டே - அன்னுவயம். மாயமெலாம் நீங்கி காயமொழிந்தாற் சுத்தனாகி யான்மவென்று பொருட்கூட்டுக. காட்டக்காணுந் தன்மையினையுடைய கண்ணுக்குக் காட்டுகிற முறைமையினையுடைய வான்மாக் காட்டக் காணுங் கண்ணைப்போல இவ்வான்மாக் காணும் பகுதிக் குள்ள கன்மத்தை சிவன் றிருவுள்ளத்திலே யறிந்து ஆன்மாவுக் கறிவிக்க வறிவன். இந்த உபதேசத்தினாலே யாராய்ந்தறிந்து மறவாதே பத்திபண்ணின் அந்தப் பத்தியினுடைய நிலையேதுவாக இப்பொழுது சிவனைக் கூடுகிற முறைமையாலே மலமாயா கன்மங்க ளுண்டாகிய மயக்கங்க

னெல்லாம் விட்டு நீங்கியிருந்து பிராரத்தத் தொலைவிலே சரீர மொழிந்தா லான்மா சுத்தனாய்ப் பரமேஸ்வரனுடைய தாமரை மலர்போன்ற சீர்பாதத்தின் கீழிருப்பன். இருக்குமிடத்து மொழிபாக சிவானுபவத்தைப் பொருந்திக்கொண் டிருப்பன்.

இதனாற் சொல்லியது, பெத்தத்தன்மையிற் பரமேஸ்வரனுபகரித்து நின்ற முறைமை யறிந்து மறவாமற் பத்திபண்ண அந்தப் பத்தி யேதுவாக வுண்டாகிய ஞானத்தினாலே பரமேஸ்வரனுடை சீர்பாதத்தை யணையுமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

காட்டக்கண்டிடுந் தன்மையுடைய கண்ணுக்கு - காட்டக் காணுந் தன்மையுடைய கண்ணிந்திரியமோருருவத்தைக் காணும்படி,—ஏயுமுயிர் காட்டிக் கண்டிடுமாபோல - பொருந்திய வுயிரத்துடனாய் நின்று காட்டுதன் மாத்திரையேயன்றி யக்கண்ணொளியோடு கூடச்சென றவ்வுருவத்தைக் காணுதலுஞ்செய் துபகரிக்குமதுபோல,—உயிர்க் கீசன் காட்டிக் கண்டிடுவன் - உயிர் ஓர் விடயத்தை யறியும்படி முதல்வனுட னின் றறிவித்த தன் மாத்திரையே யன்றி யவ்வுயிர் உணர்வோடுகூட வத்துவிதமாய்ச் சென் றவ்விடயத்தை யறிதலுஞ்செய் துபகரித்து வருமாதலான்,—காயமொழிந்தாற் சுத்தனாகியான்மா - எல்லா மலங்களும் பின்காயமொடு மாயுமென மேலைச் சூத்திரத்திற் கூறியவாற்றாற் காயமொழிந்தால் மும்மலங்களு நீங்கப்பெற்றுச் சுத்தனாயோனாகிய ஆன்மா,—இதனை யாயுமறிவுடையனாய் - முதல்வ னிவ்வண்ண மத்துவிதமாய்நின் றுபகரித்து வருமுரிமையைக் கடைப்பிடித் தறிந்துகொண்டு நிற்கப்பெறின்,—அப்பு

செய்ய - அத்தொடர்பு பற்றிய அம்முதல்வன் திருவடிகளைத் தலைப்படுதற்கணிச்சை யிடையறாது நிகழும். அங்ஙனமன்றி விச்சைகளிரண்டும் பிறிதொன்றிற் சேரலின்றி யவ்வத்துவித நிலையொன்றே பற்றி முதல்வன் திருவடிக் கண்ணவாய் ஒருங்கு நிகழவே,—அந்நிலைமை யிந்நிலையி னடைந்தமுறையாலே - காயமொழிந்தபின் மலநீங்கச் சுத்தனாய் நிற்கு முறைமை காயத்தொடு நிற்புழித் தானே கைகூடப் பெறுதலால்,—மாயமெலா நீங்கி - ஏனைக்கிரியையுமே பெல்லாமலங்களையு மிம்மையேயொழித்தொழித்து அவ்வறிவிச்சைகளோ டொப்பவொருவழிக் கொண்டு,—அரன்மலரடிக்கீழ் மாறாத சுவானுபவ மருவிக்கொண்டேயிருப்பன் - அம்முதல்வன் திருவடியைத் தலைக்கூடப் பெற்றுச் சிவானுபூதியே சுவானுபூதியாகக் கொண்டு வாழ்வன்.

இதனானே இருவகைப் பயன்களையு மொருங்கே சேரவைத்து விளக்குவாராய் மேலைச் சூத்திரத்து வேறுகூறுக வையாது ஒருவாறு வலியுறுக்கப்படு மூன்றாங்கூற்றைக் காயமொழிந்தாற் சுத்தனாகி யெனவும் அந்நிலைமை யிந்நிலையி லடைந்த முறையாலே மாயமெலா நீங்கியெனவும் அதனொழிபாக விண்டெடுத்துக் கொண்டாராகலி னதனோடுளப்பட இச்செய்யுள் முக்கூற்ற தாயவாறு கண்டுகொள்க.

மறைஞானதேசிகர் உரை

மேலந்த ஜீவன்முத்தர்க ணேயத்தழுந்து முறைமை யுணர்த்துகின்றார்.

பராஞானத் தாற்பரத்தைத் தரிசித்தார்பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார்பார்க்க, வருஞானம் பலஞான மஞ்ஞானம் விகற்பம் வாச்சியவா சகஞான

ம் வயிந்தவத்தின் கலக்கந், தருஞான போக ஞாதிரு ஞான ஞேயந் தங்கியஞானஞ் சங்கற்பனை ஞானமாகு ந், திருஞான மிவையெல்லாங் கடந்தசிவஞான மாத லாற் சீவன்முத்தர் சிவமேகண்டிருப்பர். (உ)

(இ-ள்) பரஞானத்தாற் பரத்தைத் தரிசித்தாற் பரமே யார்த்திருப்பர் — பரனது ஞானத்திலுலே பரத்தைத் தரிசித்த சிவஞானிகள் தேகாந்தமளவு மேலான பரப்பிரமத்தையே தரிசித்துக்கொண்டிருப்பர்கள்.

இப்படிப் பரத்தைப் பார்த்திருக்கிற ஞாதாக்கள் இந்த வுலகத்தின்க ணுண்டாய மாயாபதார்த்தங்களைப் பார்த்திருப்பர்களோ வென்னில்?

பதார்த்தங்கள் பாரார் — இந்த விசுவவியற்கையைப் பொருந்தியிரார்கள். அஃதென்போல வென்னில்? அமிர்த்தத்தைப் புசித்தவன் விடம்புசிக்க விரும்பாதவாறுபோல.

"உலகுளார் பெறுநுதுஞ்சு மொருபொருள் விழித்தயோகி, யுலகுளார் விழித்தபண்டத் துரங்குவ னுருவமாக, வுலகெலா மொன்றிவேறற் றொளிருமொப் பிலிதன்னோன்று, ஊலர் தலைக் கனிந்தயோகிக் கவனலா னேயமியாதே" எனவறிக.

அதனைப் பார்த்திருக்கிற குற்றம் யாதெனின்?

பார்க்கவருஞானம் பலஞானமஞ்ஞானம் விகற்பம் வாச்சிய வாசகஞானம — விசுவத்தி னுண்டாகிய கடபடாதி ஞானங்களெல்லாம் பலவாதலானும் அவைகள் விகற்பமாக விசாரித்துப்பார்க்கி லதவு மஞ்ஞானத்தா லுண்டான வாதலானும் வாய்வழக்காற் சொல்லப்படாநின்ற சத்தார்

வயிந்தவத்தின் கலக்கந் தருஞான போக ஞாதிருஞான ஞேயந் தங்கிய ஞானஞ் சங்கற்பனை ஞானமாகும்	த்த ஞானத்தா லுண்டாகிற ஞானங்களெல்லாம் விந்துவிற் றோற்றிய வைகரியாதி ஞானமும் பரமமான பந்தமாதலானும் இவைகளன்றி ஞாதிருஞான ஞேயங்களாகிய ஞானங்களு மான்மபோதத்தாற் சுட்டி யறிகிற ஞானங்களெல்லாஞ் சங்கற்பஞான மாதலானு மிவைகளெல்லாங் கூடாது.
திருஞான மிவையெல்லாங் கடந்த சிவஞானம்	சம்யஞான மாவது அவைகளெல்லாத்தையும் பற்ற விசிட்டமான சிவனைப் பிரகாசிப்பிக்குமதா யுள்ள மேலான சிவஞானமே!
ஆதலாற் சீவன் முத்தர் சிவமேசண்டிருப்பர்.	இதுவே சிறப்பாகையினாலே சீவன்முத்தர்களந்தஞானத்தாற் றானே பரமசிவனுடன் அனுசந்தானம் பண்ணிக்கொண் டிருப்பர்கள். எ-று.

ஏகாரந் தேற்றம்.

ஞாயதே நேகந்நீகரண வியுத்ப்பத்தியாலே ஞானமென்னும் பதமுண்டாயிற் றெனவறிக, இது வடமொழி.

இந்த ஞானம் பரம் அபரமென விருவிதம்.

வாச்சியவாசக ஞானம் அபரமாதலாற் றள்ளினார்.

பதிஞான் மேலான தாகையா லிதுவே சிறப்புடைத் தென்பது.

அஃதெக் காரணத்தா லெனில்? அந்தஞானம் பிரத்தியக்ஷம் அனுமானம் ஆகமமாகிய இம்மூன்றினாலு மறியப்படாத படியாற் கூறிய தெனவறிக.

இதற்குச் சர்வஞானோத்தரம் சிவதருமோத்தரம் யோகசம் சிந்தியம் மிருகேந்திரத்து மறிக. (உ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் சீவன் முத்தர் சர்வமுஞ் சிவாகாரமாகவே காண்பர்களென்பது கூறுகின்றது.

பரஞானத்தாற் பரத்தைத் தரிசித்தார் பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார் பார்க்க வருஞானம் பலஞான மஞ்ஞானம் விகற்பம் வாச்சிய வாசகஞானம் வயிந்தவத்தின் கலக்கந்தரும் - பாசஞானத்துக்கும் பசுஞானத்துக்கும் மேலாயிருக்கிற பதிஞானத்தினாலே பாச பசுக்களுக்கு மேலாயிருக்கிற பதியை வேறறச்கண்டாரெவ்விடத்தும் பதியேகண்டிருப்பர், பதிக்கிஅன்னியமாக வொருவஸ்துக்களையுங் காணார். வேறுவேறு வஸ்துக்களாகக் காணவருகிற ஞானமானது பலவாய மாயாவிகற்ப ஞானமாம். சொல்லும் பொருளுமாகிற ஞானம் விந்துவின் கலங்கற் பிரதேசத்திலே யுண்டான ஞானமாம்,—போகஞான ஞாதரு ஞான ஞேயந் தங்கியஞானஞ் சங்கற்பனை ஞானமாகுந் திருஞான மிவையெல்லாங் கடந்த சிவஞான மாதலாற் சீவன் முத்தர் சிவமே கண்டிருப்பர் - போகத்துக்குக் காண்பானுங் காட்சியுங் காணப்படு பொருளுமாகிற திரிபுடி ஞானம் சங்கற்பஞானம். சிரீமத்தாகிய முன்சொன்ன சுத்தா சுத்த மாயாஜந்ய ஞானங்களுக்கும் திரிபுடி ஞானங்களுக்கு மப்பாலாகிய சிவஞானமாகையால் ஜீவன் முத்தரானவர்கள் விகற்பமாகிய பதார்த்த ஞானத்தைவிட்டு நிர்விகற்ப ஞானமாக வெல்லாஞ் சிவமாகவே கண்டிருப்பரென் றிதன்பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

அபரோக்ஷப் போலிப் பரோக்ஷமாய்ப் பாஷிக்குஞ் சிவமாத்திர தேயநிர்விகற்ப சமாதியிற் சாத்த மனோகங்கார புத்தி சங்கற்ப கர்வபோத சிற்றுச் சவிகற்ப நிர்விகற்ப சாத்த மாத்திர சர்வார்த்த சிவ சாக்ஷாத்காரத்திற் போலப் பதார்த்தங்கள் தோற்ற, தோற்றுமாறு லந்தஞானம் பிறவி பெருக்கும் பிராகிருத மனோகங்கார புத்தி சங்கற்ப கர்வபோத தூல சவிகற்ப ஞானந் துஷ்டஞ் சுதமன்றென்று சொல்லுகின்றார்.

பதார்த்தங்கள் பாரா ரென்பது பரமுத்தியிலென்று சிலர் படித்துப் பேசுவார்கள். சர்வ பதார்த்த கர்ப்ப சிவ சாக்ஷாத்கார பூர்த்திப் பர முத்தியில் அவர்கள் தாழ்ந்த சமாதி நிலையைச் சாற்றுத லஞ்ஞானம். அதுவனறித் 'தூரியனுஞ் சிவக் தோன்றுந் தானுந்தோன்றுந் தொல்லுலக மெல்லாந் தன்னுள்ளே தோன்றும்' என்பது முதலிய வசன விரோதமுமா மென்பதறிக.

வெளிப்படை.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

இத்தை யாயுமறிவெனப்பட்ட பரஞானத்தால் அதனைத் தெளிய நோக்கி அன்பு செய்யப்பெற்றார், அவ்வொன்றனையே யுணர்ந்துகொண்டு நிற்பரன்றி மேற்கூறிய பிராரத்தவாதனை தாக்குதற்குரிய ஏனைப் பதார்த்தங்களைச் சிறிதுங் காண்பாரல்லர். அவற்றைக் காண வருஞானங்களாவன? கருவிகளைப் பற்றி நின்றறியுங் காட்சியநுமான முறையெனம் பலவகைப்பட்ட அ

ஏவைஞானங்கள். அவையெல்லாஞ் சுட்டுணர்வின் பேதமாகலா னும், ஏனைக் கேட்டலின் கண்ணதாகிய சாத்திரஞானம் நால் வகை வாக்கைப்பற்றி நிகழும் விந்து ஞானமேயாகலானும், சிந் தித்துத் தெளிதற் கண்ணதாகிய பேதஞானமும் பாவனை ஞா னமாதலேயன்றி அனுபூதி ஞானமாகாமையானும், இவையனை த்திற்கும் மேலாய் ஈண்டுக் கூறப்பட்ட விச் சிவஞானமொன் றே பதார்த்தங்களைப் பார்க்கவாராத சிறப்புடைய ஞானமாக லான், இதனைப் பெற்ற சீவன் முத்தர் சிவமொன்றே கண்டிரு ப்பரன்றி ஏனைப் பதார்த்தங்களை நோக்கிப் பிராரத்த வாதனை யிற் படுவாரல்ல ரென்பதாம்.

சிவமே கண்டிருப்பரென்றது முடிந்தது முடித்தல்.

ஏகாரம் பிரிநிலை.

ஈண்டு அஞ்ஞானமென்றது சுட்டுணர்வின் மேற்று.

கலக்கம் ஐயம்.

கேட்டலறிவு மேற்சிந்தித்துத் தெளியும்படி ஐயத்தை வி ளைத்தல்பற்றி, அதனைக் கலக்கந்தரு ஞானமென்றார்.

போகத் தங்கிய ஞானமென்றது அக்கலக்கந் தருஞானம் போம்படி யவ்வாறு தங்கிய ஞானமென்றவாறு.

சீவன்முத்தர் பிறிதொன்றனைப் பாராரென வற்புறுத்தோ திய விதனானே, பிராரத்தவினை மங்கிப்போயவழியும் மங்காது நின் றுழல்விப்பதாகிய அதன் வாதனை யற்றறக் கழியுமாறு சா திக்கப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

சரீரதொந்தனை நீங்கின் பரமுத்தியிலே சிவானுபூதியைப் பெறுமதொழிந்து சரீரத்தோடே கூடியிருக்க சிவானுபூதி யுண்

டாவ தெப்படியென்ற மாணாக்கனை நோக்கி மே லருளிச்செய்கிறார்.

பரஞானத்தாற் பரத்தைத் தரிசித்தார் - மேலான சிவஞானத்தாலே அசத்தியத்தை யசத்தியமென் றறிந்துநீங்கிச் சத்தியமாயுள்ள பரமேஸ்வரனைத் தரிசித்தவர்கள்,—பரமே பார்த்திருப்பர் - அந்தப் பரமேஸ்வரனை எவ்விடத்திலுங் கண்டிருப்பர்கள்,—பதார்த்தங்கள் பாரார் - வாதனை மார்க்கத்தாலே பிரபஞ்ச விஷயங்கள் மேலிட்டாலு மதிற்கூடார்கள்—பார்க்கவருஞானம் பலஞான மஞ்ஞானவிகற்பம் - அந்த விஷயங்களோடுங் கூடிநின்று பார்க்கவுண்டான வறிவு வெகுவிதமானவறிவு மாயா மயக்க விகற்பமுமா யிருக்குமதொழிந்து,—வாச்சிய வாசகஞானம் வைந்தவத்தின் கலக்கந்தருஞானம்போகம் - வைந்தவமாகிய சுத்தமாயையி லுண்டான வாசகமாகிய சத்தமும் வாச்சியமாகிய வத்தமுமாயிருக்கிற வறிவு சத்தந்தான் பிரமமென்றும் அத்தந்தான் பிரமமென்று மயக்கத்தைத் தருகிற ஞானமா மவைநீங்க,—ஞாதிருஞானஞேயந் தங்கிய ஞானஞ் சங்கற்பனை ஞானமாகும் - காண்பானுங் காட்டுவதுங் காணப்படுகிற பொருளுமாயிருக்கிற ஞானஞ் சங்கற்பித்த திகிற ஞானமாம். அவைநீங்கத்,—திருஞான மிவை யெல்லாங் கடந்த சிவஞானம் - அழகிய ஞானமாவது இவை யெல்லாத்துக்கு மப்பாற்பட்டு வாக்கு மனோ கோசரமா யிருக்கிற சிவஞானமாயிருக்கும்.— ஆகலால்சீவன்முத்தர் சிவமேகண்டிருப்பர்- ஆகையினாலே ஜீவன் முத்தராயுள்ளவர்கள் வாதனையாலும் அபுத்தி பூர்வத்தா லுண்டாகிய பிராரத்தம் புசித்துத் துலையுமளவும் கனவிலும் நனவிலு மந்தச் சிவத்தையே தரிசித்துக்கொண் டிருப்பார்கள்.

இதனாற் சொல்லியது, உபதேசக் கிரமத்திலே உண்மையைப் பெற்ற ஜீவன் முத்தராயுள்ளவர்கள் பிரபஞ்ச விஷயங்க

ளையு மசத்தமும் சத்தமாயிருக்கிற வைந்துவ ஞானத்தையும் விட்டு ஞாதுரு ஞானநேயங்களையும் கழன்று இவையிற்றுக்கு மேற்பட்டு சிவஞானத்தாலே சிவனைத் தரிசித்து அனவரதமு மந்தச் சிவமேயா யிருப்பர்களென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—0—

பரஞானத்தாற் பரத்தைத் தரிசித்தோர் - இத்தையாயு மறிவெனப்பட்ட பரஞானத்தா னதனைத் தெளியநோக்கி யன்பு செய்யப் பெற்றார்,—பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார் - அவ்வொன்றனையே யுணர்ந்துகொண்டு நிற்பரனறி மேற்கூறிய பிராரத்தவாதனை தாக்குதற்குரிய வேனைப் பதார்த்தங்களைச் சிறிதும் காண்பாரல்லர்,—பார்க்கவருஞானம் பலஞானம் அஞ்ஞானவிகற்பம்-அவற்றைக் காண வருஞானங்களாவன? கருவிகளைப்பற்றி நின்றறியுங்காட்சியனுமான முறையெனப் பல வகைப்பட வளவை ஞானங்கள். அவையெல்லாம் சுட்டுணர்வின் பேதமாகலானும்,—வாச்சிய வாசகஞானம் வயிந்தவத்தின் கலக்கம் தருஞானம் - ஏனைக் கேட்டலின் கண்ணதாகிய சாத்திரஞானம் நால்வகை வாக்கைப்பற்றி நிகழும் விந்து ஞானமே யாகலானும்,—போக ஞாதுரு ஞானஞேயங் தங்கிய ஞானஞ் சங்கற்பனை ஞானமாகும் - சிந்தித்துத் தெளிதற் கண்ணதாகிய பேதஞானமும் பாவனை ஞானமாதலே யன்றி யறுஞ்ஞான மாகாமையானும்,—இவையெல்லாஞ்கடந்த சிவஞானந் திருஞானம் - இவையனைத்திற்கு மேலா யீண்டுக் கூறப்பட்ட இச்சிவஞானமொன்றே பதார்த்தங்களைப் பார்க்கவாராத சிறப்புடைய ஞானம்,—ஆதலாற் சீவன் முத்தர் சிவமே கண்டிருப்பர்-ஆகலால், இதனைப் பெற்ற சீவன முத்தர் சிவமொன்றே கண்

டிருப்பரன்றி யேனைப் பதார்த்தங்களை நோக்கிப் பிராரத்தவா தனையிற் படுவரல்லர்.

சீவன் முத்தர் பிறிதொன்றனைப் பாராரென வற்புறுத்தோதிய விதனானே பிராரத்தவினை மங்கிப்போய வழியும் மங்காதங்கின் றுழல் விப்பதாகிய அதன்வாதனைப் பற்றறக் கழியுமாறு சாதிக்கப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

மேற் சிவசம்வாதி சரீர நீங்கி முத்திபெற வேணுமோ முத்தியினும் நித்தியத்துவம் பெற்றிருக்கலாமோ வென்று வினவ வுணர்த்துகின்றார்.

அநாதியுட லொன்றினைவிட் டொன்றுபற்றிக் கன்மாலா யழிந்து வருதலினு லந்தமில்லைப், பினுதியருள் பெற்றவர்க ணித்தவுரு வத்தைப் பெற்றிருக்கை முத்தியெனிற் பெறும்பதமே யிதுவு, மினுதுநிலை யிதுதானுங் காயமுண்டே லிருங்கன்ம மாயமல மெல்லாமுண்டா, மநாதிதரு முடலாதி காரியத்தாலநாதி மலமறுக்கு மருந்தற்று லுடன்மாயுங் காணே. (௫)

(இ-ள்.) அநாதியு டல் ... இச்சரீர மநாதி. அஃதெக் காரணத்தாலெனில்?

ஒன்றினைவிட் டொன்றுபற்றிக் கன்மாலா யழிந் ... பழம் புடவையைப் போட்டுவேறோ புதுப்புடவையை யெடுக்குமாறுபோலக் கன்மத்துக் கீடாக வெடுத்த தூலவுடலை விட்டு

து வருதலினால் வாசனாத்மகமாகிய சூக்குமவுடலைப் பற்றிப் பிறந்து மிறந்தும் ஜலப் பிரவாகம்போல ஜனனந் தோறுந் தொடர்ந்து அது பிரவாகனாதியாய் வருகையினாலே

அந்தமில்லை உலவாக்கிழி யான தெப்படி முடிவின்றியிருக்கும், அதுபோல விந்தத் தேகத்துக்கு முடிவில்லை.

பினாதி பின்பொருகாலத்தின் மாயாகாரியமாகிய வடிவையெடுத்து நாச மடைந்திருக்கையாலாதியென்று சொல்லவும் பெறும்.

அருள் பெற்றவர்களித்த வுருவத்தைப் பெற்றிருக்கை முத்தியெனில் அந்த வருளைப்பெற்ற முத்தான்மாக்களைப்போல நித்தியத்துவமே பெற்றிருப்பதே முத்தியென்று நீ சொல்லில்?

பெறும்பதமேயிதுவும் இந்தநித்தியத்துவம் பெற்றிருப்பது மொரு பதப் பிராப்தியைப் பெற்றிருப்பதுகாண்.

இனாதநிலையிதுதானும் இந்த நித்தியதத்துவம் பெற்ற சரீரந்தானும் பொல்லாததே, அஃதெக் காரணத்தாலெனில்?

காயமுண்டேலிருங்கன்ம மாயை மலமெல்லாமுண்டாம் சரீரமென்ப தொன்றுண்டாகவே யதற்கேற்ற கன்மமுண்டாம். அஃதுண்டாகவே மாயையு மலமு மிவைகளெல்லா முண்டாய் விடுங்காண்.

மனாதிதரு முடலாதி மனோவாக்குக் காயமாகிய மூவிதத்தானுமார்ச்சித்த கன்மமுண்டாகவே யதற்கேற்ற தனுகரண புவனபோக முண்டாமாதலாலிதுவு மாதியெனப் பெறும்.

காரியத்தால நாதி — சநந்தோறுந் தொடர்ந்து தொடர்ந்து காரியப்பட்டு வருகையினுலே பிறவாகாநாதியெனப் பெறும்.

மலமறுக்கு மருந்தற்று வுடன் மாயுங் காணே. — வைத்தியனுகிய சிவன் மாயாகாரியமாகிய மருந்தைக் கொடுத்து மலவாதனை யாகிற வியாதியைப் போக்கவே பின் பொருக்காலுஞ் சரீர முண்டாகாது. எ-று.

இதனுலே கன்ம மநாதித்துவமு மாதித்துவமுங் கூறவே கன்மக்ஷயங் கூறியதாயிற்று.

இதற்குச் சிந்தியாகமம். (கூ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் வயிரவ தந்திரவாதிகள் தேக நித்தியமாவதே முத்தியென்பதை மறுத்தல்.

உடலநாதியே யொன்றினைவிட் டொன்றுபற்றிக் கன்மாலாயழிந்து வருதலாலந்தமில்லைப் பிறதியருள் பெற்றவர்க ணித்தவுருவத்தைப் பெற்றிருக்கை முத்தியெனில் - ஆன்மாக்களுக்கநாதியே கன்மத்தினுலே யொரு தேகத்தைவிட் டொருதேகத்தைப்பற்றி யாயுமழிந்தும் வருகிற தியல்பாகையால் யாதேனுமொரு தேகமில்லாம லிருப்பதில்லை. ஆகலால் சரிகை கிரியைகளைச் சாதித்தபின் யோகாப்பியாசத்தினுலே யாதியாகிய பரமேஸ்வரனுடைய வருளினுலே நித்திய வுருவத்தைப் பெற்று அவர்கள் சிவலோகத்திலே சித்தராயிருப்பதே முத்தியென்னில்?—பெறும்பதமேயிதவு மினு தநிலையிததானுங் காயமுண்டேலிருங்கன்ம மாயை மலமெல்லா முண்டாம் - நித்தியகாரியத்தைப் பெறுதல் மோக்ஷமென்னு மிதவு முன் னுஞ்சொன்ன ப

தமுத்தியே காயத்தோடே யிருப்பது. குற்றம்பொருந்தின நிலைமைய தெவ்வா றென்னில்? மாயாதேக முண்டான போதே பெரிதாகிய கன்மமு மாயையு மாணவமு மெல்லாப் பந்தமு முண்டு. ஆகில் * விதேக + கைவல்லிய முண்டாம்படி யெவ்வா றென்னில்?—அநாதிமல மறுக்கு மு—லாதி மருந்து தருங்காரியத்தாலற்று லுடல்மாயுங்காணே - அநாதி கர்த்தாவாகிய சிவன் ஆன்மாவுக் கனுதி சம்பந்த மாகிய வாணவமலத்தை யறுக்குந் தேகாதி மருந்தைக் கொடுப்பன். அந்த தேகேந்திரியாந்தக்ரண வியாபாரமாகிய போகத்தினாலே ஆன்மா வியாபியாகிய வாணவமலம் பரிபக்குவமாய் நீங்கினால் ஔஷதமாகிய தேகாதிகள் பொருந்தாமல் நசிக்கும். ஆதலால் விதேக கைவல்லியமே பரம முத்தியென் றிதன்பொருள்.

ஏகார மீற்றசை.

* விதேக - தேகமில்லாத, + கைவல்லியம் - முத்தி.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

சாரூப முதலிய பதமுத்தி, பரமுத்தி யன்றென்பது படிக்கின்றார்.

அநாதிதருமுடல் - சிவனு மாயையுங் கொடுக்குஞ் சரீரம். மற்றைய வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

உடம்பாவது அநாதியா யுயிரைப்பற்றி நீரோட்டம் போலத் தொடர்ச்சியாய் வருவதாகலான் அதற்கொரு முடிவு கூறுத

ல் பொருந்தாமையின், முத்தியினும் இவைபோலன்றி நித்தியசு த்த மங்களமயமான திப்பிய சரீரமுண்டென்னும் உருவசிவசம வாதிகண் மதமடாது. உடம்புளதாகவே அதற்குக் காரணமா கிய மாயையும் அதன் க ணிகழுமுண்டிவினைகட்கேதுவாகிய க ன்மமும் அதனை யியைவிப்பதகிய வாணவமலமும் விட்டுநீங்கு தலின்மையின் அதுவு மின்ருமையைப் பயக்கு நிலையேயாகலா னும், ஆகவே யதனை முத்தியென்பதற்குத் தாற்பரியம் பதமு த்தி யென்பதேயாமாகலானும், மனமுதலிய புரியட்டக வுடம் பினின் றுந் தோன்றுவதாகிய வில்வுடம்பு அக்காரியப்பாட்டா லாதியாய் அநாதியாகிய மலநோய் தீர்த்தற்கு மருந்தாய்வரும், இஃது அக்காரண நீங்கியவழித் தானுமுடனீங்குவதன்றி நிற் றற்கோ ரியையபின்மையான் அந்தமாதற்க ணுசங்கையின்மையா னு மென்பதாம்.

இதனுனே மாயாமலம் பற்றறக் கழியுமாறு தடை விடை களாற் சாதிக்கப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

சமவாதி சரீரம் நீங்கி முத்தியைப் பெறவேணுமென்ற தெ ப்படி, முத்தியிலுஞ் சரீரம் நித்த தத்துவத்தைப் பெற்றிருக்கு மென்று சொல்ல; அவனை மறுத்து மேலருளிச் செய்கிறுர்.

அநாதியுட லொன்றினைவிட் டொன்றுபற்றிக் கன்மாலா யழிந்துவருதலா லந்தமில்லை - அநாதியே ஆன்மாக் கன்மத்து க் கிடாக ஒரு தேகம்போக வொரு தேக மெடுத்துக்கொண்டு உண்டாயு மில்லையாயும் வருகையாலே தேகத்துக் கொருக்காலு முடிவில்லை. இத்தன்மையொழிந்து,—திருவருள் பெற்றவர்க

ணித்தவுருவத்தைப் பெற்றிருக்கை முத்தியெனில்- இப்படிக் கன்மம் புசித்துத் தலைந்தபின்பு வேட்டுவாளி பொன்று மறியாப் பச்சைப்புழுவை யெடுத்துத் தன்சொரூப மாக்கின தன்மை போல, ஒன்று மறியாமற் கிடக்கிற வான்மாவையுஞ் சிவனுடைய ஞானமெடுத்துத் தன் ஸ்வரூபமாக்க அந்த மாயாவுடலே நித்த தத்துவத்தைப் பெற்றிருக்கிறவர்கள் ஸ்வரூபத்தை நீங்கியும் பெற்றிருக்கிறது முத்தியென்று நீ சொல்லில் ?—பெறும்பதமே யிதுவும் - சரியைகிரியா யோகங்களைச் செய்தவர்கள் பெறுகிற பதமுத்தி யொழிந்து சாயுச்சியமாகாது.—இனுதநிலை யிதுகாணுங்காயமுண்டே விருங்கன்மமாயை மலமெல்லாமுண்டாம் - இந்த முத்திதானும் பொல்லாததொன்று. அதெப்படி யென்னில்? ஒரு வடிவுண்டான பொழுதே வேறுவிதமான கன்மமும் அதனாலே மாயையும் இவ்விரண்டுக்குங் காரணமாயிருக்கிற மலமும் சருவமு முண்டாகா நிற்கும்.—மனுதிகருமுடலாதி காரியத்தா லனுதிமலமறுக்கு மருந்து - மனம் புத்தி ஆங்காரம் தன்மாத்திரையென்று சொல்லும் புரியட்டகதேகமுதலான தனுகரண புவன போகங்களென்று சொல்லு மருந்தைக்கொண்டே பரமேஸ்வரன் அநாதியே ஆன்மாக்களை மறைத்துக்கொண்டு நிற்கிற மலத்தைப் போக்கா நிற்பன்.—அற்ற வுடல் மாயுங்காணே - ஆகையா லந்த ஆணவமலம் போகவே நீமுத்தியிலழியா தென்ற மாயாசரீரமு மழிந்துபோமென் றறிவாயாக.

இதற்குப் பிரமாணம் சங்கற்பநிராகணம் சிவசம்வாதிமதம். "முன்னேன்றனது முதிரொளிஞான - மறியாப்பச்சைச் சிறுபுழுக்கவர்ந்த - வண்டெனவுயிரைக் கொண்டிடுமுயிரது-கன்னேனுக்கித் தானதுவாகி-யைவகைத்தொழிலு மெவ்வகையுணர்வும்-பிரியாவாறும்பெற்றுத் திரியாப்பெரியோர் திரட்சிசேர்க்கிடுமே" என்றும், அவன்மறுப்பு. "முத்தியுற்ற நற்றவரவை

யிடை - சேர்வொன்றனே சார்தருமுத்தி - சாலோக்கியமோசா யுச்சியமெனிற் - பந்தமுற்ற கந்தலகழிகத - வறிவுநேருடறிவு பி றியாப்பெற்றி - வேண்டுமென்றதற் கீண்டிவரிவ்வா - றிருப்ப தொன்பதற் குருத்தானவேண்டும்” என்றும், “இச்சாருப நச்சி னவொன்னில் - மும்மலத்தேது மின்மையதன்றே” எனனுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, சமவாதி யருளைப்பொருந்தின வா ன்மாக்களுடைய மாயாதேகந் தானே முத்தியி லநிதத தத்துவ த்தைப் பெற்றிருக்கு மென்று சொல்ல அதுபதமுத்தியாவதொ ழிந்து சாயுச்சிய மாகாதென்றும் யாதொரு சரீர தொந்தனே யுள்ளமட்டும் மூன்று மலமும் நீங்காதென்றும் இந்த மாயாசரீர மலத்தைப் போக்க வந்ததென்றும் ஆகையால் இந்தமலம் நீ ங்கினபோதே மாயாசரீரமும் நீங்குமென்னு முறையை யறிவித் தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

உட லனுதிபற்றி பொன்றினை விட்டொன்று கனமாலா யழிந்து வருதலா லந்தமில்லை - உடம்பாவ தனுதியா யுயிரைப் பற்றி நீரோட்டம்போலத் தொடர்ச்சியாய் கன்மத்திற் கேற்ப வாசியு மழிந்தும் வருவதாதலா னதற்கொரு முடிபுகூறுதல் பொருந்தாமையான்,—பினுதியருள் பெற்றவர்க ணித்த வுருவ த்தைப் பெற்றிருக்கை முத்தியெனில் - முதல்வ னருளைப் பெ ற்றவர்கள் முத்தியினு மிவைபோலன்றி நித்திய சுத்தமங்கள ம யமான திவ்வியசரீர முண்டென்னு முருவ சிவசமவாதிகள் ம தமடாது.—காயமுண்டேன் மாயை யிருங்கன்ம மலமெல்லா முண்டாம்-உடம்புளதாகவே யதற்குக் காரணமாகிய மாயை

யு மதன்க ணிகழு முண்டிவினைகட் கேதுவாகிய கன்மமு மதனை இயைவிப்பதாகிய ஆணவ மலமும் விட்டு நீங்குதலின்மையின்,—இதுதானு மிறுதிநிலை-இதுவு மின்றுமையைப் பயக்கு நிலையேயாகலானும்,—இதுவும் பதமேபெறும்-ஆகவே யதனை முத்தியென்பதற்குத் தாற்பரியம் பதமுத்தியென்பதே யாமாகலானும்,—மறுதிகருமுடல் காரியத்தா லாதி-மனமுதலிய புரியட்டக வுடம்பி னின்றுந் தோன்றுவதாகிய விவ்வுடம்பு அக்காரிய வேறுபாட்டா லாதியாய்,—அநாதிமல மறுக்கு மருந்தற்று ளுடன் மாயுங்காணே-அநாதியாகிய மலநோய் தீர்த்தற்கு மருந்தாய்வரும். இஃது அக்காரண நீங்கியவழித் தானுமுடனீங்குவதன்றி நிற்றற்கோ ரியைபின்மையா னந்தமாதற்க ணுசங்கையின்மையானும்.

இதனானே மாயாமலம் பற்றறக் கழியுமாறு தடைவிடைகளாற் சாதிக்கப் பட்டது.

மறைஞானதேசிகர் உரை

இந்தச் சீவன்முத்தர்க்கு முற்கூறிய மலவாதனை கெட்டு நிற்குமதற் குதாரணமிட் டுணர்த்துகின்றார்.

தெரிவரிய மெய்ஞ்ஞானஞ் சேர்ந்தவாறே சிவம்பிரகா சிக்குமிங்கே சிவன்முத்தனுக்கு, முரியமல மௌடதத்தாற் றடுப்புண்டவிட மு மொள்ளெரியி னெளிமுன்ன ரிருளுந்தேற்றின், வருபால்சேர் நீர்மருவுங் கலங்கலும்போலாகி மாயாதே தன்சத்தி மாய்ந்துகாயந், திரியுமள வும்முளதாய் பின்புகாயஞ் சேராத வகைதானுந்தேயுமன்றே. (௪)

(இ-ள்.) தெரிவரிய மெய்ஞ்ஞானஞ் சேர்ந்தவாறேசிவம் பிரகாசிக்கும்

இவ் வான்மாவுக்கு யாவராலு மறிதற்கரிய வுண்மை ஞானங் கூடின விடத்து சிவம் பிரகாசியா நிற்கும்.

இங்கே சீவன் முத்தனாகும்

இவ்விடத்திலே தானே ஜீவன் முத்தனாகும். அஃதாவது, பிரியாப்பிரிய முதலியதின்றிச் சிவனுடனே கூடியிருக்கவுந் தேகாபிமான மற்றிருத்தலென வறிக.

உரியமலம்

அவர்களை யெவ்விடத்தும் விட்டு நீங்காத வாணவமலம் அந்தத் தேசத்தி லெப்படியிருக்குமென்னில்?

ஔட தத்சாற் றடுப்புண்டவிடமும்

பரமமுத்தியைப் பொருந்துமளவுஞ் சர்ப்பாதி விடங்களை யௌடதசத்தியானது எப்படி வாதையுறாமற் றடுக்கு மதுபோலவும்,

ஒள்ளொளியினொளிமுன்ன நிருளும்

மிகுந்த வக்நிப்பிரகாசத்தின் முன்ன ரந்தகாரத்தின் வலியானதுகெட் டடங்கி நிற்குமாறுபோலவும், அந்த வலிகெட்டு நிற்குமதெங்ஙனமெனின்?

தேற்றின் வருபரல்சேர் நீர்மருவு கலங்கலும் போலாகி

தேற்றின்க ணுண்டாக்கப் பட்ட வித்தினாற் றேற்றப்பட்ட நீரினது கலங்கலான நீர் அந்த மண்ணைக் கீழ்ப்படுத்தி யது தோன்றாமற் றானே தெளிந்து மேற்பட்டு நின்றாற்போல

மாயாதே தன் சத்திமாய்ந்து

தான் கெடாமற் றனது சத்திகெட்டு,

காயந்திரியுமள
வும் முளதாய்
பின்பு காயஞ்
சேராதவகைதா
னுந் தேயுமன்றே.

இப்படியே தேகாந்த மளவு முண்டாய்.
பின்பொரு சரீரமெடாதபடி பண்ணிநின்
று தானும் போம். எ-று.

தானும் மென்னும் உம்மை மாயையுமென விரந்ததுதழீ இய வெச்சமாயிற்று.

இதற்குச் சுப்பிரபேதம கிரணுகமம். (௪)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—0—

ஆகில் தேகாந்தத்திலே யல்லது மோக்ஷமில்லையோ வென்னில்: இவ்விடத்து ஞானோதய காலத்திலே ஜீவன்முத்தி, தேகாந்தத்திலே பரமுத்தி யென்பது மேற்கூறுகின்றது.

மெஞ்ஞானஞ் சேர்ந்தவாறே தெரிவரிய சிவம்பிரகாசிக்கு மிங்கே சீவன்முத்தனுகும் - சத்தியஞானமானது ஆன்மாவினிடத்திலே பிரகாசித்தவாறே பாசபசு ஞானங்களினுலே தெறிதற் கரிதாயிருந்த சச்சிதாநந்த மயமான சிவம் ஆன்மாவுக்குவேறற அபிவியத்தியாம். அப்போதே யிந்தப் பூமியின்கண் பிராகிருததேகத்திலேதானே ஜீவன் முத்தராம். ஜீவன்முத்திக்கும் விதேக கைவல்லியத்துக்கும் பேதமேதென்னில்?—உரியமலமாயாதே சத்திதான்மாய்ந்து காயந்திரியமளவு முளதாய்ப் பின்பு காயஞ்சேராதவகை தானுந்தேயுமன்றே - மல மென்றது மும்மலத்துக்குஞ் சாதி யொருமை. ஆன்மாவின் ஞானத்தை மறைத்து விஷயங்களிற் பொருந்திப் புசிப்பிக்குப் ஆணவ மாயை காமிக மூன்றும் சத்திகள் கெட்டுத் தாங்கெடாமல் பிராரத்ததேக முள்ளளவும் நின்று பிராரத்த தேகநாசத்துக்குப் பிற

கு தேகமுண்டாகாதவாறு மும்மலங்களுமுத்தனுக்கில்லையாம். மும்மலங்களுமிருந்த ஆன்மாவுக்கு சர்வஞ்ஞத்துவ மில்லாமல் மாயாகரணங்களையும் பொருந்தி விஷயங்களையும் புசிப்பதுண்டாவதாகையால் பெத்தனேயென்னில் பந்தமில்லாத வகைச்குத் திட்டாந்தங்கூறுகின்றது,—ஒள்ளொளியி னொளிமுன்ன ரிருளுஞ் சேற்றின்வருபரல்சேர் நீர்மருவுகலங்க லவுடததாற் றடுப்புண்ட விடமும்போலாகி-உம்மை எண்ணும்மை. போலாகி வெளையது பதந்தோறு மொட்டிப் பொருளுரைக்க. நல்ல வக்நிப்பிரகாசத்திலே சமீபத்திலேயிருளில்லாமல் தூரத்திலே நின்றலும் சமீபத்திலேயிருந்தபேர்க்கு வஸ்துக்கள் தெரிவதுபோல ஜீவன்முத்தனுக்கு சர்வஞ்ஞதை யில்லாதிருக்கினுஞ் சிவாநுபூதியுண்டாதலா லாணவமல பந்தமில்லை. தேற்றாவி னுண்டாகிய விரையை யுரைத்த தண்ணீர்தேறி மண்ணடியிலுந் தண்ணீர்மேலுமாகப் பிரிந்திருந் தொன்றிலே கலங்கி மண்ணுந் தண்ணீருமுன போலச்சேற்றுநீர்போ லிருந்துந் தானே தெளிவதுபோல் ஜீவன்முத்தன் வாதனையினாலே விஷயங்களுடனே கூடினாற்போலிருந்துந் தானே பந்தவிஷயங்களுக்கு வேறாய்நிற்பன்; ஆதலால் மாயாபந்தமில்லை விடத்துக்குமாற்றான ஔஷதத்தை யுள்ளேகொண்டு பாம்பினாலே கடிப்பித்துக் கொண்டா லந்த விடமேறாற் றனையானதுபோலச் சிவபாவனையைப் பண்ணிக்கொண்டு அநேக போகங்களைப் புசித்தாலு மதனாற் புண்ணிய பாபங்களேறா தாகையாற் கன்மமல பந்தமில்லையென் றிதன் பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

சமாதி சித்தித்தா லொருபிரகார மலம் நீங்கிச் சீவன்முத்தி சிவ சாக்ஷாத்காரஞ் சித்திக்கும். சித்திக்கப் பின்பு சரீர

ந்தத்தின் மல மாவிர்த்தி நிவிர்த்திச் சுபாவமாயிருக்கு மழியா தென் றிசைக்கின்றார்.

வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

மேற்கூறிய மெய்ஞ்ஞானத்தைப் பெற்றவழியும், அதனாற் சிவப்பிரகாசித்தவழியும், அதனாற் சீவன் முத்தராயவழியும், முறையே தேற்றின் வருபரல்சேர் நீர்மருவுகலங்கள் முதலிய மூன்றும்போல ஆணவமலந் தனது சத்திகெட்டு வாசனைமாத்திரையா யவ்வுடம் புள்ளளவு நின்று, மற்றொரு பிறவிக்கு ஏதுவாதலின்றி அதனோடு கழிந்தொழியு மென்பதாம்.

தேற்றின் வருபரல்சேர் நீர்மருவுகலங்கல் பரஞானஞ் சேரப் பெற்றார்மாட்டு மாய்ந்து கிடக்கு மலசத்தி ஒருகாரணத்தான் மேற்படினு மொட்டின்றி யங்ஙனம் விண்டொழிதற்கும், சிவப்பிரகாசித்தார்மாட்டு ஒள்ளொளியி னொளிமுன் னிருள் அஃ தாண்டைக்குச் சிறிதாயினும் இடையின்றியுஞ் சேய்மைக்கண்ணுள்ளதுபோலத் தோன்றுதற்கும், ஔடதத்தாற் றடுப்புண்டவிடம் சீவன் முத்தராகப் பெற்றார்மாட்டு ஒருவாற்றானு மிடையின்றியும் அந்நிலையின் மெலிவு பார்த்திருத்தற்கும் உவமையாயின.

எதிர்நிரனிறையாக வைத்துக் கண்டுகொள்க.

ஒள்ளொளியென விசேடித்ததனால் விளக்குமுதலிய அற்பவொளியொளிகள் நீக்கப்பட்டன.

இதனானே ஆணவமலம் பற்றறக்கழியுமாறு கூறப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

முன்சொன்ன வாணவமலம் நீங்குவது எப்படி யென்ற மாணாக்களை நோக்கி யருளிச்செய்கிறார்.

தெரிவரியமெய்ஞ்ஞானஞ் சேர்ந்தவாறே சிவம்பிரகாசிக்கும் - ஆன்மாவுக் கநாதியேயுள்ள மலசம்பந்தத்தினாலே அறிதற்கரிய வுண்மைஞானஞ் சத்திநிபாதம் பிறந்து மலம் நீங்கி அந்தசிவஞானத்தைப் பொருந்தினபொழுதே சிவப்பிரகாச முண்டாகா நிற்கும். இங்கே,—சீவன்முத்தனாகும்-அப்பொழுதே யிந்தச் சரீரத்தோடே யிருக்கச்சே ஜீவன்முத்தனாய் விடுவன். மலங்கூடி நிற்கச்சே முத்தனாவது எப்படி யென்னில்?—உரியமலம் - மற்ற மலங்களைப்போலவிட்டும் பற்றியும் நில்லாமல் எப்பொழுது மான்மாவுக்குச் சகசமாயிருக்கிறது ஆணவமலமானது,—அவுடதத்தாற் றடுப்புண்டவிடமும் - அவிழ்தத்தினாலே தடைபட்ட விஷமானது தான் கெடாமற் சத்திகெட்டு நிற்கிற முறைமைபோலவும்,— ஒள்ளொளியி னொளிமுன்ன ரிருளும-நன்றாகவிட்டு விளங்கா நின்ற வக்கினிப் பிரகாசத்தின் முன்னே தான் கெடாமற் கெட்டுநிற்கிற வந்தகாரம்போலவும்,—தேற்றினவருபரல்சேர் நீர்மருவுகலங்கலும்போலாகி - தேற்றாம்வினையாலே தேற்றப்பட்ட நீரிற் கலங்கலானது தான் கெடாமற் கெட்டுநிற்கிற முறைமைபோலவும்,—மாயாதே தன்சத்திமாய்ந்து - அந்த மலமுந் தன்னுடைய நித்தகதத்துவங் கெடாமல் ஆன்மாவை மறைக்கிற சத்திகள் கெட்டு? அப்படிக்கெட்டும்,—காயந்திரியுமளவும் முளதாய்-ஆன்மா தேகத்துடனே கூடித்திரியுமளவுமுண்டாய்,—பின்பு காயஞ்சேராதவகைதானுந் தேயுமன்றே - பின்பு ஒரு தேகம்வந்து கூடாதபடி இந்தத் தேகத்துடனே மாய்ந்து போகாநிற்கும்.

இதற்குப் பிரமாணம் சிவஞானபோதம், ௧௧-சூ-௯-வெ, "பொன்வாண்முன் சோணமுழைபுக்கொடுங்கிப் போயகலத், தன்வாளே யெங்குமாந் தன்மைபோல்—முன்வாண், மலத்தின்மறைந்துள்ள மற்றுலக்க யுண்ணு, மலத்திரித்துச் செல்லும் வரத்து." என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, அநாதியிலே இவனோடு கூடிநிற்கிற சிவனும் இவனுடைய மலசம்பந்தத்தாலே இவனுக்குப் பிரகாசியாது நின்ற முறைமையும் பின்பு மலநீங்கினவிடத்து சடக்கெனச் சிவம் பிரகாசிக்கு மென்கிற முறைமையினையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

———o———

தெரிவரிய மெய்ஞ்ஞானஞ் சேர்ந்தவாறே - மேற்கூறிய மெஞ்ஞானத்தைப் பெற்றவழியும்,—சிவம் பிரகாசிக்கும் - அதனாற் சிவம் பிரகாசித்தவழியும்,—இச்சீவன் முத்தனாகும் - சீவன்முத்தனாயும் வழிமுறையே,—தேற்றின் வருபரல் சேர்நீர் மருவுங்கலங்கலும் - தேற்றான் மரத்துண்டாகிய விரையினாற்றேற்றப்பட்ட நீரினிடத்துப் பொருந்திய கலங்கல மண்ணைக் கீழ்ப்படுத்தியதுதோன்றுமற்றுமேனெ தெளிந்து மேற்பட்டு நின்றாற்போலப் பரஞானஞ் சேரப்பெற்றார் மாட்டுமாய்ந்து கிடக்கு மலசத்தி யொருகாரணத்தால் மேற்படினு மொட்டினறி யங்ஙனம் விண்டொழிதலும்,—ஒள்ளெரியி னெளிமுன்னிருளும் - மிக்கவக்கினிப் பிரகாசத்திற்கு முன்னிருளொன்றுடைச் செறிதாயினு மிடையின்றிச் செய்மைக்கணுள்ளதுபோல சிவம்பிரகாசித்தார் மாட்டு ஒருவாற்றானு மிடையின்றியும்,— அவுடதத்தாற்றடைப்புண்டவிடமும் - அக்கினியின வெலிவுபார்த்திருத்தலும்போலுமாகலின்.—உரியமலமாயாதே தன்சத்திமாய்ந்து கா

யக்திரிபுமளவு முளதாய்,—ஆணவமலந் தனதுசத்திகெட்டு வாதனை மாத்திரையாய் அவ்வுடம்புள்ள அளவுநின்று,—பின்புகாயஞ் சேராத வகைதானுந் தேயுமன்றே-மற்றொருபிறவிக் கேதுவாதலின்றி யதனோடு கூடும்.

இதனானே யாணவமலம் பற்றறக்கழியுமாறு கூறப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

மேலு மவனந்த வாணவமலம் முத்தியிற்
கெடுமாயி னான்மாவும் நாசமடையு
மென்ன மறுத் துணர்த்துகிறார்.

ஆணவந்தா னநாதியந்த மடையாதாகு மடையி
னந்த வான்மாவு மழியுமெனிற்செம்பிற், காணலுறுங்
களிம்பிரத குளிகைபரிசிக்கக் கழியுஞ்செம் புருநிற்க
க் கண்டோமன்றே, தானுவின்றன் கழலிணையத் தயி
ருமலந்தவிர்ந்தாற் றன்சுத்த னுயிருக்கை முத்திபரன்
றளைப்,பூணவேண் டுவதொன்று மில்லையெனினருக்க
ன் புகுதவிருள் போமஃயிற் பொருந்துமலம்போ
மே. (ரு)

(இ-ள்.) ஆணவந் தானாதி யந்த மடை யாதாகும்	ஆணவமாகிற பாச மநாதியானதால் அதற்குத்தோற்றமு நாசமு மடையாது.
அடையி னந்த வான்மாவு மழியு மெனில்	நித்தியமாயிருக்கு மஃதழிந்தக்கா லந்த வான்மாவுமழியுமென்று நீசொல்லில்? அஃதன்று.

செப்பிற்காண	செம்பினிடத்தி லெல்லாராலுங் காணப்
லுறுங் களிம்பிர	பட்ட காளிதமானது சகசமாயிருக்கவு மிர
த குளிகைபரிசிக்	தகுளிகையானது பரிசித்தவுடனே அக்கா
கக் கழியும்	ளிதமானது போகக் கண்டோமே!
செப்புரு நிற்க	அப்போது அந்தச் செம்பழிய வேண்டா
க்கண்டோம்	அந்தச் செம்பினது ஸ்வரூபங் குறையக்க
	ண்டிலம்.
அன்றே	அப்படியாமே.
தாணுவின்றன்	அதுபோலச் சிவனது சீர்பாத கமலத்
கழலிணையத் தவி	தை யடைந்த காலத்து மலநீங்கு மான்மா
ருமலம்	வு நாசமின்றி நிற்குங்காண். அஃதொக்கும்.
தவிர்ந்தாற்று	அந்த வான்மாவுக்கு அநாதி சமவாய ச
ன் சுத்தனாயிருக்	ம்பந்தமாய்க் கூடியிருந்தமல நீங்கினவிடத்
கைமுத்தி	தந்த வான்மாச் சுத்தனுவன் றனே! பிரதா
	னனாயிருக்கும் அதுவேமுத்தி.
அரன்றாளைப்	இவனுஞ் சுத்தனுமாய்ப் பிரதானனுமாயி
பூணவேண்டுவ	ருக்கையாலே யிவனுக்குச் சிவனது சீர்பாதத்
தொன்று மில்	தைக் கூடிநிற்க வேண்டுவதோர் பணியுமில்லை
லையெனில்	யென்று சொல்லில்?
அருக்கன் புகு	ஆதித்தப் பிரகாச முண்டானவிடத் தெ
தவிருள்போம்	ப்படி யந்தகாரம்போம், அதுபோல
அடியிற் பொரு	இந்த வான்மாவும் பிரதானனா யிருந்
ந்த மலம்போமே.	தால் முத்தி யடையப்படா னுதலா லிவ
	னுக்கு சிவனது சீர்பாதத்தைச் சார்ந்து நி
	ற்கி லல்லது மலநீங்காது. எ-று.

இது பல எழுவாயும் பல பயனிலையும்.

இதற்குக் கிரணமும் ரௌரவமும் எனவறிக. (௫)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

மேல் பூர்வசைவர் ஆணவ மான்மாவுக்கு அநாதி சையோகமாகையாற் கெடாதென்கை கெடுமுறைமை கூறுகின்றது.

ஆணவந்தா னநுதியந்த மடையாதாகு மடையிலந்தவான்மாவு மழியுமெனனில்-ஆணவமலமானது ஆன்மாவுக்கு அநாதி சையோகமாதலா லாணவங்கெடாது. கெடில்அம் மலத்தைச் சகசமாயுடைய ஆன்மாவுங் கெடுமென்னில்? அப்படியல்ல,—செம்பிற் காணனுருங்களிம் பிரதகுளிகைபரிசிக்கக் கழியுஞ்செம்புரு நிற்கக் கண்டோமன்றே-செம்புக்குச் சகசமாய்க் காணப்பட்ட களிம்பான இரத குளிகையிற் பரிசத்தினாலே நீங்கிச் செம்புருவு பொன்னுருவாய் நிற்கக் கண்டோமே! அன்றெனகிலாவியாமெனத்தகுமே. ஆதலா லநாதிசம்பந்தமாகிய ஆணவமலம் நீங்கி யான்மா சிவனுடனே வேறறச் சுத்தனாய் நிற்பன். இதற்குச் சிவசமவாதி சொல்லும் வசனத்தை யனுவதித்து நிராகரித்தல்,—தாணுவினறன் கழலிணையத் தவிருமலந் தவிர்ந்தாற் றனசுத்தனா யிருக்கை முத்தியான்றனைப் பூணவேண்டுவதொன்றுமில்லை யெனில்-சிவன் பூரணனாகையினாலே சலனமில்லை, சலனமின்றி யிருக்கையினாலே தாணுவென்று சொல்லப்பட்டது. தாணுவாகிய சிவனுடையசத்தி யான்மாவிலேபதிய மலமானது நீங்கும் நீங்கவே யான்மா நின்மலனாகிச் சிவனுக்குச்சமனாகவேயிருப்பதேமுத்தி. சிவனுடனே யிரண்டறக் கலந்துநிற்கவேணுமென்பதொன்றில்லை யென்னில்? உம்மைவினைமுற்று,—அருக்கன்புகுத விருள்போ மடியிற் பொருந்தமலம் போமே - ஆதித்திய கிரணமுங் கண்ணொளியுங் கலந்தபோது கண்ணின் மறைப்புப் போம், சிவனுட னிரண்டறக் கலந்தபோ தாணவ நீங்கும் அல்லது நீங்காதென் றிதன்பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

மலத்திற்கு ஆவிர்தி நிவிர்த்தித் திரிபுவருமாகி லான்மாவுக்கு மந்தவிகாரம் வருமென் றறைய மறுத் துணர்த்து கின்றார் பாட்டின் முற்பாதி வெளிப்பொருள். அப்படியானவை மலாமாவிர்தி நிவிர்த்தி ஸ்வபாவ லக்ஷணமாய்க் கெடாது. நீங்குமாகில்,— தாணுவின்றன் சமூலனையத் தவிருமலம் - முத்தி கிர்த்திய தீக்ஷா கன்மத்தில் விளங்கிச் சாக்ஷாத தீக்ஷா நாமந்தரித்த சிவக்கிரியாசத்தி சங்கற்ப சம்பந்தியாக மலம் அப்படி நீங்கும்.— தவிர்ந்தால் - நீங்கினால்,—தான் சுத்தனா யிருக்கை முத்தி - தான் நின்மலனாய் நிற்றல் மாத்திரமே மோக்ஷம்.—அரன்றாளைப் பூணவேண்டுவ தொன்றுமில்லையெனில் - திரும்ப அந்தத் தீக்ஷா லக்ஷண சிவசத்தி சங்கற்ப சம்பந்தஞ் சாரவேண்டுவதில்லை யென்று மலம்போமுத்திவாதியாயிருந்து நீ சொல்லில்? மலமுத்திமாத்திர முத்தியன்று மலசிவத்துவங்களினது முத்தி வியத்தியிரண்டு மோக்ஷமென்று முந்திநாஞ் சொல்லுதலால்,—அருக்கன் புகுத விருள்போம்-அப்படி,—அடியிற்பொருந்த மலம் போமே - வியத்தி கிர்த்திய தீக்ஷா கன்மத்தில் விளங்கிய சிவக்கிரியாசத்தி சங்கற்பத்திற் சம்பந்திக்க முன்சொல்லிய முத்திகிர்த்திய தீக்ஷாகன்மத்தில் விளங்கிய சிவக்கிரியா சத்திசங்கற்ப சம்பந்தத்தால்,—மலம் போயும் மகாமாயையில் மலர்வைத்த மலவாசனை சிவத்துவ தம்பனம் பண்ணிக்கொண்டு மாறாதிருக்கு மந்தமலவாசனை மகாமாயையி லயமாந்தானே.

நன்றிதுவாகிலு மிதினாலு முத்தியே சொல்லப்பட்டது, வியத்தி விளங்கச் சொல்லப்பட்டதில்லை. சத்தியமே சாற்றியது. மலவாசனாமுத்தி கிர்த்தியமே செவ்வரததம்பூச் சிவப்

புபாதியுற்ற படிகவெண்மை விளக்கம்போல, மலவாசனோபாதியுற்றுத் திரிவின்றியிருந்தபடி யிருக்குஞ் சிவத்துவாபி வியத்தியை வியஞ்சகந் திரும்ப விரும்பாமல் விகிர்தி விட்டிருந்தபடி இருத்தலுஞ் சிவத்துவாபி வியத்தி கிர்த்தியம் விகாரம் வருமாதலால் வேறொன்றன்று.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

இரதகுளிகை பரிசித்தமாத்திரையே செம்போடு சகசமாய் நின்ற களிம்பு நீங்கச் செம்பு வேறுநிற்றல் கண்டாமாகலின், அதுபோல மெய்ஞ்ஞானஞ் சார்ந்தமாத்திரையே உயிர் வேறாய்நிற்ப உயிரோடு சகசமாய் நின்ற ஆணவமலம் நசிக்குமென்றற்கோரிழுக்கின்மையான், முத்தியினுஞ் சகசமல நீங்குமாறில்லையென்னும் பாடாணவாத சைவர் மதமும், அருக்கனொளி மேவினும் அருக்கனொடு கண்ணொளி கலந்தாலன்றி இருள் பற்றறக் கழியாதவாறுபோல மெய்ஞ்ஞானஞ் சேரினுஞ் சிவம் பிரகாசித்துத் திருவடியை உயிர் பொருந்தினலன்றி ஆணவ மலம் பற்றறக் கழியாதின்மையின், மெய்ஞ்ஞானஞ் சேர்ந்தமாத்திரையே மலநீங்கப் பெறும், அதுவே முத்தியாதலையும், அதனமேலுந் திருவடியைக் கலத்தல் வேண்டாவென்னும் பேதவாத சைவர்மதமும் அடாவென்பதாம்.

இங்ஙனந் தடைவிடைகளான் மேலது சாதிக்கப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—— 0 ——

இப்படி ஆணவமலம் முத்தியிற் கெடுமென்றதெப்படியென்ற பேதவாதி மத மேலருளிச்செய்கிறார்.

ஆணவந்தா னாதி யந்த மடையாதாகும் - ஆணவமலமானது அநாதியே ஆன்மாவுள்ளவன்றே யுள்ளதாகையாலே அதுக்கு நாசமுண்டாகாதென்று சொல்லில்? மல்னாசமானாலொழிந்து ஞானமுண்டாகாது தானென்னில்?— அடையிலந்த ஆன்மாவு மழியுமெனில் - ஆணவமல மழியுமாகில் அநாதியானவான்மாவும் அழிடவேணும் என்கிறாயாகில்? ஆன்மாவுக்கழிவுண்டாகாது? பாசத்துக் கழிவுண்டு. அதென்போலவெனனில்?— செம்பிற் காணலுறுங் களிம்பிரத குளிகைபரிசிக்கக் கழியுஞ்செம் புருநிற்கக் கண்டோமன்றே-அநாதியே செம்பிலே பொருந்திநிற்கிற காளிதமானது இரத குளிகையினது சம்பவத்தாலே கழிந்துபோயும் செம்பினது சொரூப மழியாமல் நிற்கக் கண்டோமாகையால் ஆன்மாவு மழியுமெனகிறது கருத்தன்று. முத்தியிற் பாசமழியுமென்ற பேதவாதி மதம் மேலருளிச்செய்கிறார்.—தாணுவினறன் கழலிணையைத் தவிருமலம் - பரமேசுரனுடைய ஸ்ரீபாதத்தைச் சேரவே அப்பொழுதே மலம்போம்.—தவிர்ந்தாற் றான்சுத்தனாயிருக்கை முத்தி-அந்த மலம்போனால் ஆன்மா சுத்தனாயிருக்கிறதே மோட்சம்,—அரன்றாளைப் பூணவேண்டுவதொன்று மில்லை எனில் - அதனைப் பெற்றபின்பு பரமேசுரன் ஸ்ரீபாதத்தைச் சற்றும் பொருந்தவேண்டுவதில்லையென்று நீர்சொல்லில் அதுகருத்தனறு. ஆனாலெப்படியென்னில்?—அருக்கன் புகுத விருட்போ மடியிற் பொருந்த மலம்போமே-ஆதித்தன் றோற்ற வந்தகாரம் போனாற்போல அவனுடைய ஸ்ரீபாதத்தைப் பொருந்தினாலொழிந்து மலம் விட்டுப்போகாது.

முத்தியில் மலமழியாதென்றது பேதவாதி நிராகரணம் இதற்குப் பிரமாணம் சங்கற்பநிராகரணம் "மறைக ளாகமத் துறைகண்மற் றெவையு - நாசமில் பதிபசு பாசமென் றுரை க்க-வயர்த்தோர் குளிகைச் சயத்தாற் றுமிரக் - காளித நாசம் பாசத் தெய்தல்-கூடாது" என்னுமதுங் கண்டுகொள்க. முத் தியில் மலமழியு மென்றவன் பேதவாதி இதற்குப் பிரமா ணம் சங்கற்பநிராகரணம். "ஈசனதருளாற் பாசத்தொகுதி-செறுவுறுசெம்பிற்களையுறு களிம்பு-குளிகை தாக்க வொளி பெ ற் றுங்கு-நித்தசுத்த முததனுக - வைத்தனருலகின் மறைவல் லோரே." என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, பாச மழியாதென்றும் அழியுமெ ன்றுஞ் சொன்ன சமையிகளை வகுத்து முத்தியிற் பாசத்தின் சத்திக ளொழியும சொழிந்து நித்திய மழியாதென்றும், சத்தி களழியுமிடத்தும் ஆதித்தன் சன்னதியி லந்தகாரம் போனு ற்போல் சிவனுடைய சீபாதத்தைப் பொருந்தி வேறற நின்றால் மலம் போமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

ஆண்வந்தா னநாதியந்த மடையாதசுகும்-முற்கூறப்பட்ட ஆணவமலம் அநாதி நித்தமாதலா னுசமடை-வதின்று,—அடை பிலந்த ஆன்மாவு மழியுமென்னில்-நாசமுறுமெனி லான்மாவு ம ழியுமெனப்பட்டு நித்தமாதற் கிழுக்காய் முடியுமெனி னற்றன் று.—இரதகுளிகை பரிசிக்க-இரதகுளிகை பரிசித்த மாத்திரை யே,—செம்பிற்காணலுறுங் களிம்பு கழியும் - செம்பொடு சகச மாய் நின்றகளிம்பு நீங்க,—செம்புரு நிற்கக் கண்டோமன்றே - செம்புரு வேறுநிற்றல் கண்டாமாகலி னதுபோல,—தானுவின்

றன்கழலணைய மலந்தவிரும் - மெய்ஞ்ஞானஞ் சார்ந்தமாத்தி ரையே யுயிர்வேறுப்நிற்ப வுயிரோடு சகசமாய்நின்ற ஆணவமல நசிக்கும்,—தவிர்தாற் றன்சுத்தனுயிருக்கை முத்தி - நசித்த வழி யுயிர்வேறாய்நிற்றற் கோரிழுக்கின்மையான் முத்திநிலையினு ஞ் சகசமல நீங்குமாறில்லையென்னும் பாடாணவாத சைவர்ம தமும்,—அருக்கன் புகுதவிருள்போம்-அருக்கனொளி மேவினும் அருக்கனொடு கண்ணொளி கலந்தாலன்றி யிருள் பற்றறக்கழிபா தவாறுபோல,—அடியிற்பொருந்த மலம்போமே-மெய்ஞ்ஞான ஞ்சேரினும் சிவம்பிரகாசித்துத் திருவடியை யுயிர்பொருந்தின லன்றி யாணவமலம் பற்றறக் கழியுமாறின்மையின்,—அரன்ற ளைப் பூணவேண்டுவதொன்றுமில்லையெனில் - மெய்ஞ்ஞானஞ் சேர்ந்த மாத்திரையே மலநீங்கப் பெறுமதுவே முத்தியாதல லையும், அதன்மேலும் திருவடியைக் கலத்தல் வேண்டாவெ ன்னும் பேதவாத சைவர்மதமும் அடாவென்பதாம்.

இதனானே தடைவிடைகளான் மெலது சாதிக்கப்பட் டது.

மறைஞானதேசிகர் உரை.

அந்த வாணவமும் முத்தான்மாக்களைப் பொருந் தாமற் பெத்தான்மாக்களைப் பொருந்தி நிற்கு மென் றுணர்த்துகிறார்

நெல்லினுக்குத் தவிடுமிக ளநாதியாயு நெல்லை விட்டு நீங்கியவைநின்றநிலை நிகழ்த்தீர், சொல்லிபிடிற் றுகளற்ற வரிசியின்பாலில்லை தொக்கிருந்து மற்றொ ருநெற் றேற்றிடாவா, மெல்லவினை விடுமறவே யி வைபோலவணுவை மேவுமல முடல்கன்ம மநாதிவிட்

டேநீங்கு, நல்லசிவ முத்தியின்கட் பெத்தான்மாவை
நணுகிநிற்கு மாதலினு லூசமுமின்றுமே. (கூ)

(இ-ள்.) நெல்லி னுக்குத்தவி டுமிக ளநா தியாயு நெல்லைவி ட்டு நீங்கிடவை நின்றநிலை நிகழ்த்தீர்	நெல்லுக்குத் தவிடுமியு மநாதியாயிருக்கவு மந்த நெல்லைவிட்டு அவைகள் நிற்குமுறைமையினை யெனக்குச் சொல்லவேணு மென்கிறுயாகில்
சொல்லியிடிற் றுசளற்ற வரிசியின்பாலில்லை	நீயவற்றை யிப்படிச் சொல்லுவையாகில் அவ்வுமியுந் தவிடும் போசத் தீட்டின அரிசியின்கணில்லை.
தொக்கிருந்து மற்றொரு நெற் றொற்றிடாவாம்	அதனு லவை யிரண்டுடன்கூடி யிருந்தும் வேறேபொருநெல்லைச் சென்று பொருந்த மாட்டாது.
மெல்லவிவை விடுமறவே	இவை யிரண்டு மநாதியாயிருக்க வோரவதரத்தின்மே லதனை விட்டுப்போகாநிற்கும்.
இவைபோல	இந்த முறைமைபோல
அணுவைமேவும்	சுத்தான மாவைப் பொருந்தி நிற்கும்
மலமுடல்கன்ம மநாதிவிட்டுநீங்கும்	மல மாயா கன்மங்களினுடைய அநாதித்துவ மோரவதரத்திலே விட்டு நீங்காநிற்கும். அதற் கவதரம் யாதென்னில்?
நல்லசிவமுத்தியின்கண்	அந்தச் சுத்தான்மாக்கள் நன்றான சிவத்துடன்கூடி முத்தியைப் பொருந்தினவிடத்துப் போங்காண்.

பெத்தான்மாவை நணுகிநிற்கும் — மற்றப் பெத்தான்மாக்களை யெப்பொழுதும் பொருந்திநிற்கும்.

ஆதலினூஞ் சமுமின்றுமே. — ஆகையால் முத்தான்மாக்களிடத்து மலமில்லை. மற்றப் பெத்தான்மாக்களைக் குறித்துக் காண்க. எ-று.

'தொக்கிருந்த மற்றொருநெற் றோற்றிடாவாம்' என்பதற்குத் தீட்டின வரிசியுடனே தவிடுமுமியுங் கூடியிருந்தாலு மந்த வரிசியை வாதித்து மற்றொரு நெல்லாக மாட்டாது எனபவும் பெறும்.

உமி தவிடுபோன வரிசி சுபா வமாயிருக்குமோ வேறே பெறு மொரு சன்மாந்தரத்தை யடையுமோ வெனில் சன்மாந்தரத்தை யடையாது தண்டுலத்துவமு நாசமுமாகாது பரிணாமமு மடையாது. இப்படி யான்மாவுக்குச் சுதந்தரமான சொரூப மடையு மென்பது கருத்தென வறிக.

இதற்குப் பெரிய கிரணாகமம், சுப்பிரபேதத்து மறிக.(௬)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

——o——

மேலு மான்மாவுக் கநாதி சம்பந்தமாகிய ஆணவாதி பாசம் நீங்கு முறைமையும் அது நித்தமுங் கெடாமுறைமையுங் கூறுகின்றார்.

அணுவை யநாதி மேவு மல முடல்கன்ம மநாதிவிட்டே நீங்கும் - ஆன்மாவை யநாதியே பொருந்திநிற்கும் ஆணவமலமுந் தேகாதிக்குக் காரணமாகிய மாயையுங் கன்மமு நன்மையாகிய சிவானந்தத்தைப் பெறுமுத்தியிலே கத்தந் தொழிலைவிட்டு நீங்கும். அநாதியான தந்தமில்லை மூன்று பொருளு நித்தியமெ

ன்று சொல்லுகையால். இவ்விடத்துப் பாசங் கெடுமென்றதெவ்வா றென்னில்? பாசம் நித்தங் கெடாதென்பதற்கு,—பெத்தான்மாவை நணுகிநிற்குமாதலினு ளுசமுமின்றுமே - முத்தனாவிட்டு நீங்கியும் பெத்தான்மாக்களிடங்களிலே பொருந்திபு நிற்கையாற் பாசத்துக்கு நாசமில்லை. அநாதி சையோகத்துக்கு + வியோகமில்லை யென்பது கூடாது. அதெவ்வா றென்னில்?—நெல்லினுகருத் தவிடுமிகளநாதியாயே நெல்லைவிட்டுநீங்கும்வகை நின்றநிலை நிகழ்த்தீர் - அநாதி சம்யோகத்திற்கு வியோகமில்லை யென்கிற புத்திமான்களே நெல்லுக்குத் தவிடுமியும் அநாதி சம்யோகமாயிருந்து நெல்லைவிட்டுநீங்கின வகையும் அவை நீங்க வரிசிடமுடக்கற்று நின்ற நிலையுஞ் சொல்லிக் காணீர்.—சொல்லியிடிற் றுகளற்ற வரிசியின்பாலில்லை மெல்லவிவைவிடுமறவே - சொல்லுமிடத்திற் றுகளற்ற வரிசியினிடத்திலே உமியுந் தவிடுமில்லை, உமியுந் தவிடும் நீங்குவோரால் க்ரமத்திலே நீங்கும்,—தொக்கிருந்து மற்றொருநெற் றோற்றிடவாம் - இவைபோல் அந்தத் தோலாகிய உமி துகளற்ற அரிசி யுடனே கூடியிருந்தாலு மந்த வரிசியின்னே யொருநெல்லாகாது. இதுபோல பாசத்தை நீங்கின ஆன்மா விபுவாகையால் பாசத்திற்கு மான்மாவிற்கு மோரிடத்தாயினு முன்புபோல் முத்தான்மா பசுவாகானென் றிதன்பொருள்.

+ வியோகம்-பிரிவு.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

——o——

அநாதி பாச பந்த மகலுமா றெப்படி யென்ன வுத்தர முரைக்கின்றார்.

வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

அரியோடுஞ் சகசமாய் நின்ற முளைதவிடுமிகள் கெட்டொழிய அரிசி கேடின்றி நிலைபெறுதல் கண்டாம், அவ்வரிசி முன்போல வேறொரு நெல்லுத் தோன்றுதற்குக் காரணமாதல் செல்லாமையான் அவை யவ்வரிசியின்க ணடங்கி நிற்குமென்றற்கு ஒரியைபின்மையின், அவை ஆண்டில்லையென்பதே தேற்றம். அவைபோல அநாதியே யுயிர்களோடு சகசமாய் நின்ற மும்மலங்களும் முத்திநிலைக்கண் விண்டொழியுமென்றே கொள்க. ஆன்றி விண்டொழியினும் ஏனைப் பெத்தரிடத்துக் காணப்படுதலால் அவை நித்தப்பொருளாதற்கும் இழுக்கில்லை யென்பதாம்.

இத்தைவிளைவித்தன் மலமென்பதூஉ மறிக.

மெய்ஞ்ஞானஞ் சேர்ந்த மாத்திரையே மலம் பற்றறக்கெடுமெனபாரையும் ஈண்டு மறுப்பார், மெல்ல விவை விடுமறவே யென்றுங் கூறினார்.

ஏகாரந் தேற்றம்.

இனம்பற்றியும் உவமேயம்பற்றியும் முளையு முடன்வைத் துரைக்கப்பட்டது.

இதனானே இரதகுளிகை பரிசித்த செம்பிலுங் களிம்பு தொக்கிருக்குமெனக் கோடுமென்பாரை நோக்கித் தொக்கிருத்தல் செல்லாமை அநுபலத்தியேதுவின் வைத்துணர்த்தற்பொருட்டு, வேறுமோ ருவமைகூறுமுகத்தான் அம்மூன்றுமொருங் கேகவியுறுத்தப்பட்டன.

இவைஐந்துசெய்யுளும் மேலைச்சூத்திரத்தின் அகலுங்குற்றமென்ற இறுதிக்கூற்றி னொழிபாய் இயைபுபற்றி யீண்டு வைக்கப்பட்டன.

நிரம்பவழகியருரை வருமாறு.

———o———

அநாதியாயிருக்கிற பாசங்கள் நீங்குமென்ற தெப்படியென்ற சமவாதியை நோக்கி நெல்லுக்குண்டான தவிடுமியு மநாதியா யிருக்கவு நீங்குகிற முறைமைபோலவென் றருளிச்செய்கிறார்.

நெல்லினுக்குத் தவிடுமிக ளநாதியாயே நெல்லைவிட்டு நீங்கும்வகை நின்றநிலைநிகழ்த்திர் - நெல்லுக் குண்டான தவிடுமியு மநாதியாயிருக்க அந்த நெல்லைவிட்டுப் போம்படியும் அதநிடத்திலே நிற்குமென்கிற முறைமையும் எனக்குச் சொல்லவேணும்,—சொல்லியிடிற் றுகளற்றவரிசியின்பாலில்லை - அதவுனக்குச் சொல்லுமிடத்துச் சுத்தமான வரிசியிற் றவிடுமியு முண்டாகாது. அந்த வரிசியிலே உமியுந் தவிடு மிரண்டு மீளவுங்கூடிக் கிடந்தாலும் பொருந்துமோ வென்னில்?—தொக்கிருந்து மற்றொருநெற் றோற்றிடாவாம் - இவை யிரண்டுங் கூடியிருந்தும் துகளற்ற வரிசி வேறொரு நெல்லுண்டாகைக் கங்குரியாது.—மெல்லவிவை விடுமறவே - இவை யிரண்டு மநாதியா யிருக்கச்சே ஓரவதரத்திலே பெத்தன நேராக வில்லையாய்ப் போகாநிற்கும்.—அவைபோல அணுவைமேவு மலமுடல்கன்ம மநாதிவிட்டே நீங்கும் - அந்த தவிடுமுமியு மோரவதரத்திலே நீங்கின முறைமைபோல ஆன்மாவைப் பொருந்தி நிற்கிற மலமாயாதி கன்மங்க ளிவனுடைய வநாதித்தத்துவ மொருகாலத்திலே விட்டு நீங்காநிற்கும். அதுக் கவதர மேதென்னில்?—நல்லசிவ முத்தியின்கண்-பொல்லாத வசத்தியத்தை யசத்தியமென் றறிந்து நீங்கி நன்றான சத்தியத்தைச் சத்தியமென் றறிந்து சிவத்துடனிரண்டறக் கூடுகிற மோக்ஷத்தி லில்லையாம். அழிபாதென்றதெப்படி யென்னில்?—பெத்தான்மாவை நணுகிநிற்கும்-திரிய

தார்த்த நிர்ணயத்தை யறிந்து மலத்தை நீங்காமல் மலசம்ப ந்தேகளாயிருக்கிற பெத்தான்மாக்களைப் பொருந்திநிற்கும்.— ஆதலினால் நாசமுமின்றாமே-ஆதலினால் முத்தான்மாக்களிடத்து மலமில்லையாய்ப் பெத்தான்மாக்களிடத்து நிற்கையால் இந்தமலங்கள் கெடுவதுமில்லை.

இதனாற் சொல்லியது, நெல்லுக்குத் தவிடுமியு மநாதியாயிருந்தும் ஓரவசரத்திலே நீங்குந் தன்மைபோல ஆன்மாக்களுக்கு மலமாயாதி கன்ம மநாதியாயிருந்து மோக்ஷத்தைப் பெற்ற முத்தான்மாக்களிடத்து இல்லையா யிருக்குமென்றும் பெத்தான்மாக்களைப் பொருந்தி நிற்கையால் நித்த தத்துவ மழியாதென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

நெல்லினுக்குத் தவிடுமிக ளநாதியாயே நெல்லைவிட்டு நீங்கும்வகை நின்றநிலை நிகழ்த்தீர் - அரிசியொடு சகசமாய் நின்றமுளை தவிடுமிகள் கெட்டொழிய வரிசி கேடின்றி நிலைபெறுதல் கண்டாம்,—தொக்கிருந்து மற்றொரு நெற் றோன்றிடாவாம் - அவ்வரிசி முன்போல வேறொரு நெற்றோன்றுதற்குக் காரணமாதல் செல்லாமையான்,—சொல்லியிடிற் றுகளற்ற வரிசியின் பாலில்லை மெல்லவினையறவே விடு மவைபோல-அவைசொல்லுமிடத்துக் குற்றமற்ற அரிசியின்கண் டங்கி நிற்குமென்றற் கோரிணையின்மையின் அவையாண்டில்லை யென்பதே தேற்றம. அவைபோல, அநாதியணுவை மேவுமல முடல்கன்ம நல்லசிவ முத்தியினகண் விட்டே நீங்கும். அநாதியே யுயிர்களோடு சகசமாய் நின்ற மலமாயை கன்மங்களாகிய மும்மலங்களு முத்திநிலைக்கண் விண்டொழியு மென்றே கொள்க,—பெத்தான்மாவை ஈனுகி

நிற்குமாதலினு னாசமுமின்றாமே,—ஆண்டு விண் டொழியினும் ஏனைப் பெத்தரிடத்துக் காணப்படுதலா லவைநித்தப் பொருளாதற் கிழுக்கில்லை யென்பதாம்.

இதனானே இரசகுளிகை பரிசித்த செம்பினும் களிம்புதொக்கிருக்குமெனக் கோடுமென்பாரை நோக்கித் தொக்கிருத்தல் செல்லாமை யனுபவத்தியேதுவின் வைத்துணர்த்தற் பொருட்டு வேறுமோருவமை கூறுமுகத்தா னம்மூன்று மொருங்கே வலியுறுத்தப் பட்டன.

இவையைந்து செய்யுளு மேலைச்சூத்திரத்தின் 'அகலுங் குற்றம்' என்ற விறுதிக்கூற்றி னொழிபா யீண்டு வைக்கப்பட்டன.

மறைஞானதேசிகர் உரை.

மேலிந்தச் சுத்தான்மாக்கள் சிவனது திருவடியைக் கூடிநிற்கு
முறைமை யெப்படியென்ற ஐக்கியவாதியைக் குறித்துச்
சீவர் சிவனுடைய வைக்கிய மீதென் றுணர்த்துகின்றார்.

எவ்விடத்து மிறையடியை யின்றியமைந்தொன்
றையதின் றியற்றிடா வுயிர்க ளீசன்றானுஞ், செவ்வி
தினி னுளம்புகுந்து செய்தியெலா முணர்ந்து சேட்டிப்
பித்தெங்குமாய்ச் செறிந்துநிற்ப, னிவ்வுயிர்க டோ
ற்றும்போ தவனையின்றித் தோற்றா திவற்றி னுக்கம்
முதலெழுத்துக் கெல்லாநிற்கு, மவ்வுயிர்போ னின்
றிடுவ னாதலானு மரனடியை யகன்றுநிற்ப தெங்கே
யாமே. (எ)

(இ-ள்.) எவ்விட உயிர்க ளிறையடியையின்றி யெவ்விடத்து மிறை து மமைந் தொன்றையறிந் தியற்றிடாவெ

யடியை யின்றியமைந் தொன்றையறிந் தியற்றிடா வுயிர்கள்

னைப் பதமாற்றுக. ஆன்மாக்கள் சிவனது பிரேரகமின்றி யெல்லாவிடத்து மொன்றைப் பொருந்தி யறியவுஞ் செய்யவு மாட்டார்கள்.

ஈசன் றானுஞ் செவ்விதினி னுளம்புகுந்து செய்தியெலா முணர்ந்து

சிவனுஞ் சராசராத்மிகமாகிய ஆன்மாக்கடோறும் வ்யாபித்து நின்றவர்கள்செய்த புண்ணியபாவங்களை யுள்ளவாறுணர்ந்து

சேட்டிப்பித் தெங்குமாய்ச் செறிந்து நிற்பன்

அவர்களவர்கள் செய்த கன்மத்துக்கீடாகச் செயற்படுத்திச் சர்வ வியாபியாய்ப் பிறியின்றி நிற்பன்.

இவ்வுயிர்கடோற்றும்போத வனையின்றித்தோற்றா

இந்த வான்மாக்கள் செய்த கன்மத்துக்கீடான வுடலை யெடுக்கும்பொழுது அவனது பிரேரகமின்றித் தோற்றமாட்டாதாகலா லவனாலே தானே சீவிக்கும். இவனொருவனாயிருந்து சர்வ ஆன்மாக்களிடத்தும் வ்யாபித்துநிற்கு மஃதென்போல வென்னில்?

இவற்றினுக் கம்முத லெழுத்துக் கெல்லாநிற்கு மவ் வுயிர்போனின் றிடுவன்

சிவனு மான்மாவுங் கலந்துநிற்கு மதனை யறியில், «மெய்யினியக்க மகரமொடு சிவணு-மெய்யொ டியையினு முயிரியறிரியா" என்னு மிலக்கணத்தால் மெய்யெழுத் தானது தானே நடவாம லுயிரெழுத்தைப் பொருந்தியே நடந்ததாயி னப்பொழுது தன்னிலைமை திரியாதவாறுபோல, இந்த வான்மாக்களு மெல்லாத்துக்கும் பிராண நாயகனாகிய சிவனுடன்கலந்து நின்று சீவியாநிற்கும்.

ஆதலானு மர இத்தன்மையை யுடைய னுகையினுலே
லடியை யகன்று யா மவனுடைய திருவடியைவிட்டு நீங்கிநிற்
நிற்பதெங்கேயா ப தோரிடமு மில்லைகாண். எ-று.
மே.

'ஒருநாழியப்பு மொருநாழியுப்பு, மிருநாழி யிந்த விருநா
ழி—யொருநாழி, யாமளவினீரு ளடங்கியிடு முப்புப்போ, லா
முடனு மாவியடைந்து' என்று ரொமதுருரவர்.

இதனை விரிக்கிற் பெருகும்.

இதற்குப் பெரிய கிரணுகமம். (எ)

சிவாக்ரயோகியருளை வருமாறு.

———o———

முத்தியிலே ஆன்மா சிவனைப்போலே யிருப்பதன்றி சிவ
னை வேறறக் கலந்து நிர்ப்பனென்பதை வேண்டா மென்று
ம் அஞ்ஞானியுடைய மூர்த்தாவிலே ‡ அசனிபாதமாக வெவ்
காலத்துஞ் சிவனைப் பிரிந்து நிர்க்குமுறைமை கூடாதென்பது
கூறுகின்றது.

உயிர்க ளெவ்விடத்து மிறையடியையின்றி யடைந்திதான
றை யறிந்தியற்றிடா - ஆன்மாக்கள் தூலசூக்கும தேகங்களிலு
மிந்திரியங்களிலுஞ் சிவனையன்றி யொன்றை யறிபவு மொருசெ
யையைப் பண்ணவு மறியார்கள்.— ஈசன்முனுஞ் செவ்விதினி
னுளம்புகுந்து செய்தியெலா முணர்ந்து சேட்டிப்பித் தெங்கு
மாய்ச் செறிந்து நிற்பன் - இந்தப்பரமேஸ்வரனும் நேரே யா
ன்மாக்களிடத்திலே பொருந்திநின் றவர்க ளவர்கள் பண்ணுங்
கன்மங்களெல்லா மறிந் தந்தக் கன்மங்களுக் கேற்க வானமா
க்களை பிரவிருத்திபண்ணுவித் தெவ்விடத்தும் பிரிவறக்கூடிநிற்
ப்பன்,— இவ்வுயிர்கடோற்றும்போ தவனையின்றித் தோற்று-

இவ்வான்மாக்கள் ஞானக்கிரியைக ளாணவத்தினாலே மறைந்து நின்று பிரகாசிக்கும்போ தந்தச் சிவனையன்றிப் பிரகாசியாது,—அம் முதலெழுத்துக்கெல்லாமுதலா நிற்கு மவ்வுயிர்போலிவற்றினுக் குயிராய் நின்றிடுவ னாதலால் நாமரனடியை யகன்று நிற்பதெங்கேயாமே-முதலெழுத்தாகிய அகார மெல்லா வெழுத்துக்கு முயிராய்நின்ற வந்தவுயிரெழுத்துபோல ஆன்மாக்களுக்கெல்லாஞ் சிவ னுயிராகப்பொருந்தி நிற்பன், ஆதலானுஞ் சிவனைப் பிரிந்து தனித்துச் சிவனுக்குச் சமனாய நிற்போமென்பதெவ்வாறு கூடும், கூடாதென் றிதன்பொருள்.

‡ அசனிபாதம்-இடிவிழுகை.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

——o——

பெத்தான்மாக்களுக்கு சுவாதீனமே ஸ்வாதந்திரியமில்லையென்று பேசுகின்றார்.

முற்கூறியதிற் சிறிது கூட லோகப் பிரசித்திப் பொருளோதுதலால் வெளிப்பொருள்.

பெத்தான்மாவைக் குறித் துரைத்திருக்க விவ்விடத்துச் சிலர் முத்தான்மாவையுங் குறித் துரைத்ததென்று கொண்டு முத்தான்மாவுக்குச் சிவனோடொதது வியாபித் தொருசிவசாரியாய் நிற்றலே சிவனோ டகலாமல் நிற்பனென்பதுங் கலப்பாய் நிற்பதென்பதும் நாஞ்சொல்லுஞ் சுத்தாத்துவைத சிவசித்தாந்த மென்பதை யறியாமல் அரனடியையகன்று நிற்பதெங்கேயாமே என்பதற்குப் பிரிந்து நிற்பதென்று சொல்லுவார்களென் றெண்ணிக் கொண்டு விசிட்டாத்துவைதமாய் வேறறக் கலந்து நிற்பனென்று பரிகரித்தார்கள். அதுஅநாதிமுத்த சிவனுக்கு மான்வுக்குஞ் சமவியாபகத்துவ மிருக்கிற படியினாலே அப்

படிப்பிரிந்திருக்குமென்று சொல்லுவார்க ளில்லை, பிரியாதிருந் தாலும் அமூர்த்த வஸ்துவுக்குப் பரிசசலப் பெண்பதில்லை.

ஸர்வவஸ் துஷுவ நுஸ்ஸ ூத மஸ்வயப் ஸர்வவஸ் துபி:
ஸர்வம்வ்யாப்பாவதிஷ்டேத நசஸம்யுஜ்யதேப்ரபு:

என்றுசிவாகம வசனமிருக்கையால் 'சிவசமவாதி சொல் லுஞ் சாமியத்துக்கு வேறாய் சித்தாந்தி சொல்லும் சிவாத்துவை த சிவசாமியம் சிவன் சொன்னதாதலால் அதிற் சொல்லும் தூ ஷணம் சிவதூஷண மென்பதறியாமற் சிலர் சொன்னார்கள், அவர்க்குப் பிராயச்சித்தம் சிவனே பண்ணுவர்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

ஆன்மாவுக்கு அறிவுசெயல்கள் விளங்குதலும் விளங்கியபி ன் விடயத்திற் சென்று பற்றுதலும் இறைவன்றிருவடியையின் றி யமையமாட்டா. அதுபற்றி யிறைவனும், அக்கரங்களை யிய க்குதற் பொருட்டு அவற்றுடனிற்கும் அகரம்போல, அறிவுசெ யல்கள விளங்குதற்பொருட்டு உயிர்களோடுங் கலந்து நிற்பன். அங்ஙனம் விளங்கிய அறிவுசெயல்கள் பின் விடயத்திற் சென் று பற்றுதற்பொருட்டு அவ்வுயிர்களை பிடித்துக்கொண்டு அ வை செல்லுமாறெல்லா மறிந்து செலுத்தி அவ்விடயங்களினு முடனாகக் கலந்து நிற்பனுசலால் ஆணவமலத்தினீங்கி வேறு நி ன்றவுயிர்கள் அதுபோல இறைவனைவிட்டுத் தனித்து நிற்றல் ஓரிடத்து மில்லையென்பதாம்.

எவ்விடத்தும் பெத்தமுத்தி யிரண்டினுமென்க.

இதனுள் உயிர்களறிந் தியற்றிடா வெனவும் இறைவனரு ளுஞ் செறிந்து நிற்பனெனவுங் கூறியது ஆன்மாவி னறிவுசெய

ல்கள் விடயித்தற்சட்படு மியல்பிற்கும், தோற்றும்போ தவனை யின்றித் தோற்றுவெனவும் இறைவ னவ்வுயிர்போ னின்றிடுவ னெனவுங் கூறியது அவை விளங்குதற்கட்படு மியல்பிற்குமெ னக் கொள்க.

இவ்விருதிறத்துள் உயிரிற் கலந்துநின்று அறிவுசெயல்களை விலக்குதலே காட்டு முப காரமெனவும், அவ்வுயிரை யதிட்டித் துக்கொண்டு சென்று விடயத்திற் கலந்து நிற்றலே காணுமுப காரமெனவுங் கொள்க.

உயிர் ஒன்றனை விடயித்தல் இறைவ னவ்விடயத்துமுட ன் சென்று கலந்தாலன்றி உயிரிற்கலத்தன் மாத்திரையா லமை யாதென்பது, கண்ணொளி விளக்கின் சோதியொடு கலந்தும், விளக்சொளி கலந்தவற்றையன்றிக் காண்டல் செல்லாமையின வைத்துணர்ந்துகொள்க.

“அறிவானுந்தானே யறிவிப்பான்றானே” என்றபின் “அ றிவாய்திகின்றான்றானே” என்ற அம்மைதிரு வந்தாதியுமிது.

இதனானே, அநாதியுடனின்ற வாணவமலத்தை விட்டுநீங் கி இறைவனொடு கூடுமாயின் அம்முறைபற்றி இறைவனையு மொ ரோவழி விட்டுநீங்கப் பெறும்போலு மென்னு மவ்வாதிகளை நோக்கி, அது கூடாமைக்கு ஏதுக் கூறுமுகத்தான் ஈசனுயிர்க் குக் காட்டிக் கண்டிடுவனென்ற முதற்கூறு தெரித்துணர்த்தி வலியுறுத்தப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

நீரும் நிழலும்போல நிர்விகாரியாயிருக்கிற சிவன் பக்கு வான்மாக்களை யறிந்து அவர்கள் பாசத்தை நீக்கித் திருவடியிற் கூட்டிக்கொள்ளுவனென்றும் அபக்குவான்மாக்களுடைய பா

சத்தை நீக்கிக் கூட்டிக்கொள்ளா னென்றும் சொன்னதெப்படி, ஆன்மாத்தா னறிவனல்லோ ஆகையாலே சிவனுடைய ஞானத்தினாலே பாசத்தை நீக்கிக் கொள்ளுவனென்ற அவிகாரவாதியை நோக்கி யருளிச்செய்கிறார்.

எவ்விடத்து மிறையடியையின்றி யமைந் தொன்றை யறிந்தியற்றிடாவுயிர்கள் - பெத்தமுத்தி யிரண்டிடத்திலும் தம்பிரானார்த் திருவருளையின்றி ஆன்மாக்கள் தானாக வொருவிடையத்தைப் பொருந்தி யறிந்தனுபவிக்கவும் அனுபவித்தே கன்மத்துக் கீடாக வொன்றைச் செய்யவும் யிவையாண்டுக்கு மாட்டார்கள்.—ஈசன் றானுஞ் செவ்வியினினுள் புகுந்து - ஆன்மாக்கள் தானாகவொன்றையு மறியாததுகொண்டு பரமேஸ்வரனும் செவ்விதாக ஆன்மாவிலே யனாதியேபொருந்திநின்று,—செய்திபெலாமுணர்ந்து- ஆன்மாக்கள் கன்மத்துக் கீடாக வெழுந்திருந்தசெயல்களையெல்லாந் தனது திருவுளத்திலேகண்டு,—செட்டிப்பித்து-அந்தந்த விஷயங்களைக் கூட்டிப் புசிப்பித்து,—எங்குமாய்ச்செறிந்துநிற்பன் - சடசித்துக்க ளிரண்டினும் பூரணமாய் விட்டு நீங்காமனிற்பன். இவையன்றியும்,—இவ்வுயிர்கள் தோற்றும்போ தவனையின்றித்தோற்றாது - இவ்வான்மாக்களுக் குள்ள கன்மம் புசித்துத் தொலைந்து அந்தச் சரீரத்தைப்போட்டுக் கன்மத்துக் கீடாக வேறொருசரீர மெடுக்கு மிடத்தும் கர்த்தாவன்றித் தானாக வெடுக்கமாட்டாது,—இவற்றினுக்கம்முதலெழுத்துக் கெல்லாம் நிற்கு மவ்வுயிர்போல் நின்றிடுவன் - அகாரமென்கிற முதலுயிர் அக்கரங்களுக் கெல்லாம் பிராணனாய் நின்று அக்கரங்களைக் காரியப் படுத்தினாற்போல சிவனும் ஆன்மாக்களுக்குப் பிராணனாய்நின்று காரியப்படுத்துவன்,—அதலால் நாமரனடியை யகன்றுநிற்ப தெங்கேயாமே - ஆகையாலே பரமேஸ்வரனுடைய திருவடியை விட்டு நீங்கிநின்று தானாக வறியததக்கவிட மெவ்விடம், ஓரிடமுமில்லை.

என்னவே ஆன்மாவுக்குத் தான் அறிவிக்க வறியுமதொழி ந்து தானாக வறியாதென்பது கருத்து. இதற்குப் பிரமாணம். சங்கற்ப நிராகரணம், அவிகாரவாதி நிராகரணம். "நீர்நிமல னைய சீர்பெறுகடவுளைச் - சேர்ந்தவர்க்கின்பம் வாய்ந்திடுமெ ன்றனை - பாதவமென்றுஞ் சேதனமின்மையி-னிழைத்தோர்வ ம்மி னென்பதுந் துன்பம் - விளைத்தோர்தம்மில் வெறுப்புமொ ன்றிலதே" என்றும், சிவஞானபோதம், ௧௧ - சூ, ௨ - வெ, ஏகமாய்நின்றே யிணையடிகளொன்றுணரப், போகமாய்த்தான விளைக்கும் பொற்பினால்—மோகமா, யுள்ளத்தின்கண்ணானா னுள்கு வார்குள்கிற்றை, யுள்ளத்தாற் காணாதே வுற்று" என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, சிவன் வேறறநின்று ஆன்மாக்கள் கன்மத்துக் கீடாக விஷயங்களைக் கூட்டிப் புசிப்பிக்குமதொ ழிந்து தானாக வறியாதென்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

——o——

உயிர்களமைந்து ஒன்றைஉறிந் தியற்றியிடல் - ஆன்மாவுக் சறிவு செயல்கள் விளங்குதலும் விளங்கியபின் விடயத்திற் செ ன்று பற்றுதலும்,—எவ்விடத்து மிறையடியை யின்றியமை யா - பெத்தமுத்தி யிரண்டினு மிறைவன் திருவடியை யின்றி யமையமாட்டா,—ஈசன்றானும்-அதுபற்றி யிறைவனும்,—இவ்வு யிர்கள் தோன்றும்போ தவனை யின்றித்தோன்றாது - இவ்வா ன்மாக்களுக்கு அறிவுசெயல்கள் முதல்வனை யின்றி விளங் காமையின அவைவிளங்குதற் பொருட்டு,—அம்முதலெழுத்துக் கெல்லாமாய் நிற்கு மவ்வுயிர்போ லியற்றினுக்கு நின்றிடுவன்-அ க்கரங்களையியக்குதற் பொருட்டு அவற்றுடனிற்கும் அகரம்போ

ல வுயிர்களோடுங் கலந்துநிற்பன்.—செவ்விதினி னுாம்புகுந்து செய்தியெலா முணர்ந்து சேட்டிப்பித் தெங்குமாய்ச் செறிந்து நிற்பன்-அங்ஙனம் விளங்கிய அறிவுசெயல்கள் பின்விடயத்திற் சென்று பற்றுதற் பொருட் டவ்வுயிர்களை யதிட்டித்துக் கொண் டவை செல்லுமாறெல்லா மறிந்து செலுத்தி யவ்விடயங்களி னு முடனாகக்கலந்து நிற்பன்,—ஆகலானு மரனடியை யகன்று நிற்பதெங்கேயாமே - ஆதலா னாணவமலத்தி னீங்கி வேறு நின்ற வுயிர்கள் அதுபோல விறைவனை விட்டுத் தனித்து நிற்றல் ஓரிடத்தினு மில்லையென்பதாம்.

இதனானே யநாதியுடனின்ற வாணவ மலத்தைவிட்டு நீங்கி யிறைவனொடு கூடுமாயின் அம்முறைபற்றி யிறைவனையும் ஒரோவழிவிட்டு நீங்கப் பெறும்போலு மெனனும் அவ்வாதிகளை நோக்கி அதுகூடாமைக் கேதுகூறு முகத்தா னீச னுயிர்க்குக் காட்டிக் கண்டிடுவனென்ற முதற்கூறு தெரித்துணர்த்தி வலியுறுத்தப் பட்டது.

☞ கக-சூ, க-ம், அதிகரண முடிந்தது.

மறைஞானதேசிகர் உரை

மேலு மவன் சர்வவ்யாபி யாகிற் காணவேண்டாவோ வென்னப் பக்குவான்மாக்களுக் கொழிந்து மற்றையவர்க்குக் காணப்படாதென் றுணர்த்துகின்றார்.

எங்குந்தா னிறைந்துசிவ னின்றானுபி னெல்லாருங் காணவே வேண்டுந்தானென்னில், இங்குந்தான்

ந்தகருக் கிரவியிருளாகு மீசனருட் கண்ணில்லார்க் கொளியாயேயிருளாம், பங்கந்தா னெழும்பதுமம் பக்குவத்தையடையப் பருதியலர்த் திடுவதுபோற் பருவஞ்சேருயிர்க்குத், துங்கவரன் ஞானக்கண் கொடுத்தருளினாலே சோதிக்குட் சோதியாய்த் தோன்றிடுவன்காணே. (அ)

(இ-ள்.) எங்குந் தா னிறைந்துசிவ னின்றானு மெல்லாருங்காணவே வேண்டுந்தா னென்னில்

சிவன் சர்வான்மாக்கட் குயிராய் நிறைந்து நின்றானு மவனை யெல்லாருங் காண வேணும்,காணாமையாற் கர்த்தா வல்லவென்று நீ சொல்லில்?

இங்குந்தா னந்தகருக் கிரவியிருளாகும்

இந்த வுலகத்தின்க ணுதித்த சூரியனெவ்விடத்தும் பரம்பிப் பிரகாசியாநிற்கையாலுங் கண்ணில்லாதோர்க் கிருளாயே தோன்று மாறுபோலத் தோன்றாநிற்கும்.

ஈசனருட்கண்ணில்லாற் கொளியாயேயிருளாம்

சிவனெவ்விடத்து நிறைந்து நின்றானு மவன தருட்கண்ணையுடையார்க்குப் பிரகாசமாயே யிருப்பன். அஃதில்லாதோர்க்கு இருண் மயக்குற்றாற்போலத் தெரியாது நிற்பன் காண். ஆனாற் சிவன் பட்சபாதி யாகானோ வென்னில்?

பங்கந்தானெழும்பதுமம் பக்குவத்தை யடையப் பருதியலர்த்திடுவதுபோல்

சேற்றின்முளைத் தெழுகின்ற தாமரையின் கூட்டத்திலே சில முகையலரும், பக்குவமுடையதைப் பரிதியான தலர்த்து மாறுபோல

பருவஞ்சேரு யிர்க்குத் துங்க வரன் ஞானகக ண், கொடுத்து	சிவசத்தியினுடைய பரிசனத்தினாலே சுத்தரான வான்மாக்களுக்கு மேலான சிவஞான திருஷ்டியைக் கொடுதது அவர்கள் கண்டிருக்கும்படிக்கு
அருளினாலே	இவர்கள் காணுந் தன்மை யில்லாமையால் தனது காருண்ணியத்தினாலே
சோதிக்குட் சோதியாய்த் தோன் றிடுவன் காணே.	அறிவுக் கறிவாய் வந்துநின்று தோன்றுவன். எ-று.

ஞானக்கண் கொடுத்ததென்ப திவனுக்கு முன்பில்லாததைக் கொடுத்ததன்று, இவனுக் குண்டான ஞானக் கிரியைகள் தடைப் பட்டத்தைச் சிவஞானத்தாலே போக்கிச் சிவாபி வியக்தியைப் பண்ணுமதைக் கொடுத்ததென்றும் கூறியதென வறிக.

இதற்கு நிசுவாசம் சிவதருமோத்தரம் மதங்கத்து மறிக.

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேலிவ்வா றெங்கும் பிரிவறச் சிவனிற்கில் எல்லாராலுங் காணவேண்டு மென்னின்? அவன் ஞான ஸ்வரூபி யாகையால் ஞானக்கண்ணினாலேயே காணவேணும். அந்த ஞானக்கண்ணும் பக்குவத்திலே சிவனருளா லுண்டாமென்னு முறைமையுங் கூறுகின்றது.

எங்குந்தா னிறைந்துசிவ னின்றானகி லெல்லாருங் காணவே வேணுமெனன்னில் - சிவ னெவ்விடத்தும் பிரிவற நிறைந்து நின்றானகி லெல்லாருங் காணப்பட வேணுமே! யவ்வாறு காணப்படாதே யிருப்பா னேனெனன்னில்?—இங்குந்தா னந்த கருக்

கிரவியிருளாகும் - இந்தப் பூமியினிடதகுக் குருடர்க் காதித்தி யனுங் காணப்படாதவனே! அவ்வாறே,—ஈசனருட் கண்ணிலா ர்க் கொளிபாயேயிருளாம் - சிவஞானமாகிய திருஷ்டியில்லா தபேர்க்குச் சிவன் ஞானப்பிரகாச ஸ்வரூபியாயிருந்துங் கா ணப்படான். காணு முறைமை யெவ்வா றுண்டாமென்னில்,— பங்கந்தா னெழும்பதுமம் பக்குவத்தையடையப் பரிதியலர்த் திடுவதுபோற் பருவஞ்சேருயிர்க்குந் துங்கவரன் ஞானக்கண் கொடுத்தருளினாலே சோதிக்குட்சோதியாய்த் தோன்றிடுவன் காணே - சேற்றிலேநின் றுண்டான தாமரை முகையான தலர் தற்குப் பக்குவமானபோ தாதித்திய னலர்வித்தாற் போல மலபரிபாகத்தைப் பொருந்தின ஆன்மாவுக்கு மாதேவனாகிய சிவன் சிவஞானமாகிய திருட்டியைக் கொடுத் ததனா லான்ம ஞான பிரகாசத்துக்கு வேறற வதிகப் பிரகாசமாக வேறறத் தோன்றுவனென வறியென் றிதன்பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

அசிவ யோகிக்கு அப்ரத்தியக்ஷன் சிவ தத்த சிவ சாக்ஷா த்கார நிஷ்கள நிராலம்ப சித்த சிவயோகிகளுக்குச் சிவன் பி ரத்தியக்ஷனென்று பேசுகின்றார்.

கொடுத்து - விளக்கி,—சோதிக்குட் சோதியாய் - பராக் கு ரூப சத்திக்குட் பிரத்திபக்கு ரூப சத்திமானாய்.

மற்றைய வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

———o———

முதல்வன் அத்துணைக் கலப்புடையனா யெங்குஞ் செறிந் துநின்று உபகரித்துவரினும், அஃதருட்கண்ணுடையார்க்கன்றி

அறியவாராது. அவ்வருட்கண்ணும் பக்குவமுடையார்க்கன்றிக் கிடைக்கப் பெறாது. அப்பேறும் முதல்வனையின்றி யமையாது. ஆகலான் அப்பெற்றித்தாகிய வருட்கண்ணை முதல்வன் பருவம் பார்த்திருந்து கொடுக்கப் பெற்றுடையார்க்கே அவனறிவுக்கறிவாய்நின்று அவ்வா றுபகரித்துவரு மத்துவிதநிலை இனிது விளங்குமென்பதாம்.

இத்தகையாயு மறிவுடையனாதற்கு உரிமை கூறியவாறு.

பருவமெய்தாததூஉ மெய்தியதூஉம் ஓரிடத் தொருங்கு காட்டுவார், பங்கந்தா னெழும்பதுமமென வேற்றுமை கூறினார்

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

நிர்விகாரியா யெங்கு நிறைந்து நிற்கிற சிவ னநுக்கிரகஞ் செய்தாராகி னெல்லார்க்குமொக்க வநுக்கிரகஞ் செய்யவேண்டாமோ வென்ற அவிகாரவாதியை நோக்கி யருளிச்செய்கிறார்.

எங்குந்தா னிறைந்தசிவன் நின்றானாகி லெல்லாருங்காணவே வேண்டுந்தானென்னில்-எல்லா வான்மாக்களிடத்தும் எல்லா வத்துவாக்களிடத்தும் சிவன் பூரணனாய் நிற்பானாகில் எல்லாருஞ் சிவனைக் காணவேணு மென்று நீ சொல்லுகிறாயாகில்,—இங்குந்தா னந்தகருக் கிரவியிருளாகும் - இவ்விடத்தப் பிரபஞ்சமெங்கும் பிரகாசித்து நிற்கிற ஆதித்தப் பிரகாசந்தான் அந்தகராயுள்ளார்க் கிருளாயேயிராநிற்கும். அதுபோல,—ஈசனருட்கண்ணில்லாற் கொளியாயேயிருளாம்-பரமேஶ்வரனுடைய திருவருளாகிய கண்ணில்லாத பாசபந்தியா யுள்ளவர்க்குச் சிவனொக்க நிற்கச்செய்தேயு மஞ்ஞானமே யொழிந்து தானொரு முதலிலையென்னும்படி நிற்பன்,—பங்கந்தா னெழும்பதுமம் பக்குவத்தையடையப் பருதியலர்ந்திடுவதுபோற் பருவஞ்சே

ருயிர்க்குத் தங்கவரன்ஞானக்கண் கொடுத்தருளினாலே சோதிக்குட்சோதியாய்த் தோன்றிடுவன்காணே - அன்னுவயம், தன்னளவிலே சினேகிதராய்த் தன்னை யறிந்து வழிபடுகிற பக்குவான்மாக்களுக்குப் பாசத்தை நீக்கி எல்லாத்துக்கு மேலாயிருக்கிற பரமேஸ்வரன் தன்னுடைய ஞான திருட்டியைக் கொடுத்து அந்த ஞானமாகிய காட்டாலே அவர்களுடைய பாசத்தை நீக்கி அந்தப் பாச ஞானமாய் நிற்கிற பக்குவான்மாக்களிடத்திலே பிரகாசியாய் நிற்பனெனில் பட்சவாதியாகானோ வென்னில்? சேற்றிலே எழுந்திருக்கப்பட்ட எண்ணிறந்த தாமரைகளாதித்தனாலே அலர்த்தப்பட்ட பக்குவமான தாமரைபோலுமென் றறிவாய்.

இதற்குப் பிரமாணம் சிவஞானபோதம், ௧௧-சூ,௩ வெ, "அருக்கனேர்நிற்பினு மல்லிருளேகாணர், கிருட்சண்ணே பாசத்தாற் றிச—னருட்கண்ணாற், பாசத்தை நீக்கும் பகலலர்த்துந் தாமரைபோல், நேசத்திற் றன்னுணர்ந்தார் நேர்" என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, ஆதித்தன் சன்னதியில் அந்தகரைப்போல அபக்குவராயுள்ள பாசபந்திகளுக்குச் சிவன் பிரகாசியானென்றும் பக்குவராயுள்ள முத்தான்மாக்களுக்குச் சிவன பிரகாசியா நிற்பனென்னும் முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

சிவனெங்குந் தானிறைந்துநின் றாகில்-முதல்வ னத்துணைக்கலப்புடையனாய் எங்குஞ் செறிந்துநின் றுபகரித்து வரினும்,—எல்லாருங்காணவே வேண்டுந்தானென்னில் - யாவரு மறியவே வேண்டுமெனில்?—இங்குந்தானிரவி யந்தகருக்கிருளாகும் - அ

து மிவ்விடத்து ஆதித்த னந்தகருக்கு இருளாயே நின்றாற்போ
ல,—ஈசனருட்கண்ணில்லார்க்கு ஒளியாயேயிருளாம் - முதல்வ
னும் அருட்க ணுடையார்க் கன்றி யறியவாராது,— பங்கந்தா
னெழும்பது மம் பக்குவத்தையடைய பருதியலர்த் திடுவதுபோ
ல- அவ்வருட்கண்ணுஞ் சேற்றிற்றோன்றிய பக்குவமுடைய தா
மரையை யாதித்தன் அலரச்செய்வதுபோல,—பருவஞ்சேருயி
ர்க்கு - பக்குவமுடையார்க் கன்றிக் கிடைக்கப்பெறாது.—தங்
கவானருளினாலே ஞானக்கண்கொடுத்து- அப்பேறு முதல்வனை
யின்றி யமையாதாகலா னப்பெற்றித்தாகிய வருட்கண்ணை மு
தல்வன் பருவம் பார்த்திருந் து கொடுக்கப் பெற் றுடையார்க்
கே,—சோதிக்குட் சோதியாய்த் தோன்றிடுவன்காணே - அவ
னறிவுக் கறிவாய் நின்று உபகரித்து வரும் அத்துவிதநிலை யினி
து விளங்கும்.

இத்தையாயு மறிவுடைய ராதற் குரிமை கூறியவாறு.

மறைஞானதேசிகர் உரை.

முன்சொன்ன வுண்மையாலும் பின்சொன் னுபாயத்தாலும் சிவ னுட னொன்றா கூடிநிற்கிற முறைமையைச் சமயிகள் கருத் துக்களை வினவி யவர் மதங்களைமறுத் தருளிச் செய்கின்றார்.

சென்றணையு நிழல்போலச் சிவனிற்பனென்னிற்
சென்றணையு மவன்முதலி சிவத்தையணைந்தொன்றாய்,
நின்றதுயிர் கெட்டதென்னிற் கெட்டதணைவின்றாம் நி
ன்றதேற் கேடில்லை யணைந்துகெட்டதென்னிற், பொ
ன்றினதேன் முத்தியினைப் பெற்றவரார்புகலீ பொன்
றுகையே முத்தியெனிற் புருடனித்தனன்றாம், ஒன்றி

யிடு நீரொடுநீர் சேர்ந்தாற்போலென்னி லொருபொ
ருளா மதிபதியோடுயிர்பொருளொன்றன்றே. (கூ)

(இ-ள்.) சென்ற — தேகாந்தத்தி லான்மாத் திருவடியைக்
ணையு நிழல் — கூடுமிடத்து வேனிற்காலத்து உஷ்ணத்தா
போலச் சி — ல்வழிபோவார் வருத்த நீங்கச்சென்று சேரு
வனிற்ப னென் — ந் தண்ணிழலானது போலவே சிவ னிற்பன்.
னின — இந்த வான்மாவுஞ் ஜநநவிடாய் தீர்ந்து தா
னே யறிந்து கூடுவனென்று னவிகாரவாதி,

சென்றணையும — அறிவு செயலொன்று மில்லாத மரம்போ
வனமுதலி — லச் சிவனிற்க விந்த வான்மாச் சென்றுகூடு
மாகி லிவனே கர்த்தாவாகும்,திருவடியைக்
கூடுமிடத்துச் சிவன் கர்த்தாவுமா யான்மா வடிமையாய்த் த
நுகரண மிறந்து கூடுகிறவனுக் கிது கூடாது.

சிவத்தையணை — உயிர்கெட்டுச் சிவத்தையடைந் தொன்
ந் தொன்றாய்நின் — றாய் நின்றதெனறன்.
றதுயிர் கெட்ட
தெனின்

கெட்டதணைவி — கூடு முன்பாக நாசமானது பின்சென்று
ன்றாம் — கூடுவதில்லையாம்.

நினறதேற் கே — கூடினபின் கெடாம னின்றதென்று லிவ
டில்லை — னுமொரு முதலாய் நிற்கவேண்டும், சாயுச்சி
ய மோக்ஷமாதலா லதுவு மடாது.

அணைந்துகெட் — கூடினபின்பு கெட்டது வென்றாயாயின்?
டதென்னின்

பொனறினதே — கூடினபோதே கெடுவனென்று யாயின்
ன் முத்தியினைப் — கிலேசநீங்கிப் பரமானந்த சௌக்கியமான
பெற்றவரார் புக — முத்தியைப் பெற்றிருக்கிறவரார், எமக்குச்
னீ — சொல்லுவாயாக நீ.

பொன்றுகையேமுத்தியெனின்	கர்த்தாவைக் கூடினபின்பு ஆன்ம நாசம் பிறக்கிறதே மோக்ஷமென்றான
புருடனித்த னன்றும்	ஆன்மா நித்திய னென்கிறது மல்லவாய் முப்பொருளு நித்தியமென்ற வேதாகமங்கட்கும் விரோதம் வரும்.
ஒன்றியிருநீரொடுநீர் சேர்ந்தாற்போ லென்னில்	கெட்டுப்போனதும் பிரிந்து நிற்பதுமன்றி நீருதகஞ் சேர்ந்தாற்போல முத்தியி லொன்றாய் விடுமென் றைக்கியவாதி சொன்னாயின்,
ஒருபொருளா மதிபதியோ டுயிர்பொருளொன்றன்றே.	ஒப்பற்ற கர்த்தாவுடன் உயிர்கூடி யொருபொருளாகிறது ஒருண்மையாகச் சொல்லப்பட்டதல்ல. எ-று.

நிசுவாசத்து மறிக. (௯)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் பரமத முத்திகளை நிராகரித்தல்.

ஈஸ்வரா விகாரவாதி ,சென்றணையு நிழல்போலச் சிவர்ற்பனென்னில் சென்றணையு மவன்முதலி-சிவனே தற்புரியான், மலமரத்தி நிழல்போல நிற்க வான்மாவே யுபாயங்களினாலே சிவனைப் பொருந்துவனென்னில்? ஆன்மாவே கர்த்தாவாம், ஆகையா லதுகூடாது. மேலான்ம லயவாதி,—உயிர்கெட்டுச் சிவத்தையணைந் தொன்றாய்நின்றதென்னிற் கெட்டகலைவினாம் - ஆன்மாகெட்டுச் சிவத்தைப் பொருந்தி யொன்றாய்நின்றதென்னில் கெட்டதற்குக் கூடுதலில்லையாம்.—நின்றதேற் கேடில்லை-

ஒன்றாய் நின்றதென்கையாற் கெட்டதுமல்ல,—அணைந்து கெட்டதென்னில் பொன்றினதேன் முத்தியின்பம் பெற்றவரார்நீபுகல்-சிவனுடனே பொருந்தினபின் ஆன்மா கெட்டதென்னில்அப்பொழுது ஆன்மா நசித்ததென்று சொல்லும். நசித்ததாமாகில் மோக்ஷத்தி லுண்டாகிய சுகத்தைப் பெற்றவரார் நீ சொல்லு.—பொன்றுகையே முத்தியெனிற் புருடநித்தனனாம்-ஆன்மநாசந் தானே முத்தி,இன்பததைப் பெறவேண்டுவ தில்லையென்னில்? ஆன்மா நித்திய நல்லனாகவேணும். ஆகையா லசததே! மேலீஸ்வ ராக்கியவாதி,—நீரொடுநீர் சேர்ந்தாற்போ, லொன்றியிடுமென்னி லொருபொருளா மதிபதியோ டியிர்பொருளொன்றன்றே - சிற்றேரி யுடைய வந்தநீர் பேரேரி நீரோடே கூடினாற்போல ஜீவான்மாவினுடைய பாசபந்தமறப் பரமான்மாவோடே கூடுமென்னில்? சிற்றேரிநீரும் பேரேரிநீரு மொருதன்மைத் தாதலால் ஜீவனுஞ் சிவனு மொரு தன்மைத்தல்ல. ஒரு தன்மைததாகி லொருபொருளாம். அப்பொழுது பதிபசுபாசமென்னு மூன்று பொருளுக் கொருபொருளினறு யிருபொருளேயாம். ஆகையால் இவ்வாறு * ஆதிக்கியங் கூடாதென் றிதன் பொருள்.

நீருநீரும்போல ஆதிக்கியங் கூடாதென்னில்? "முன்னுளைநீர் சிறைமுறியமுடிகியோடி மூன்னீர்சேர்ந் தன்னீராய்ப் பின்னீங்காமுறைபோல்" என்ற விருத்தத்துக்கு விரோதமெனவில்? அப்படியல்ல, மதுர ரசமாய ஆற்றணையிலே கட்டுப்பட்டிருந்தநீ ரணையுடைய லவணரசமான சமுத்திர ஜலத்துடனே கலந்து ஏகரச மானாற்போல ஏகதேசியும் கிஞ்சிஞ்ஞனுமாயிருந்த ஆன்மா ஆணவாதி பாசங்கணீங்கச் சிவத்துடன் கலந்து சர்வ வியாபித்துவ சர்வஞ்ஞத்துவத்தையும் பெற்று தசசமாசமாவதற்குச் சொன்ன திட்டாந்தமாகையால் விரோதமாகா. ஆகில்,

தயாமஜ:— தயாஜவம் ஜிவைக்ஷிப்தம் க்ஷீரெ க்ஷீரெ வரிதைவரதம்| சுவிஶேஷம் ஹவெத்தத்து ஜாஜீவாஶ்த வெருாத்தெநாஃ ||

என்ற ஆகம வசனத்துக்குக் கதியேதென்னில்? ஜலேஜலம் ×க்ஷிப்தமென்பதற்கு முதலே கூறப்பட்டது. க்ஷிரே க்ஷீரங் கிருதே கிருதமென்பதற்கு ஓமகாலத்திலே ஓமதிரவியங்களிலே +கவ்வியமாயுள்ள, கிருதக்ஷீரம் ÷பரியாப்தமா யில்லாதளவில் வெள்ளாட்டு நெய்பால் கவ்வியத்துடனே கூட்டி சமஸ்காரம்பண்ணவது கிருத்யயோக்கிய மானுற்போல பாச வசத்தினுலே யேகதேசியுங் கிஞ்சிஞ்ஞனுமா யுள்ள பசு பசுத்துவ பாசநீங்கிப் பதியுடனே ¶மேளனமா யுள்ளவில் சர்வ வியாபித்துவ சர்வஞ்ஞத்து வான்மகமான பதிஸ்வரூபமாமென் றிதன் பொருள். ஆகையால் விரோதமில்லை.

* ஆதிக்கியம்-மிகுதி, × க்ஷிப்தம் - போடப்பட்டது ÷ கவ்யம்-பிதருக்களுக் குரியது, ÷பரியாப்தம் - போதுமானது, ¶ மேளனம் - சேருதல்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

வாதிகள் கருத்து மறுத்துணர்த்து கின்றார்.
வினு வுத்தரம் மறுப்பு
பொருள் வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

———o———

அரன் கொடுத்துத் தோன்றுவானெனல் வேண்டா, பகிகராற் சென்றணையப்படும் மரநிழல்போல முதல்வன் விகாரமி

ன்றி நிற்ப உயிர் தானே பருவஞ்சேர்ந்தவழி ஞானக்கண்ணைப் பெற்று அரனைத் தலைக்கூடுமென வமையுமென ஈசுரவவிகாரவாதி மதம்பற்றிக் கூறின், மரநிழலுக்குச் சுதந்திரமின்றிச் சென்றணைவாருக்கு அச்சுதந்திர மாமாறுபோல, முதல்வனுக்குச் சுதந்திரமில்லை, அவனைத் தலைக்கூடுவதாகிய வுயிர்க்கே சுதந்திரமெனப்பட்டு வழுவாம். இனிப் பரிணாமவாதிகள் உயிர் கெட்டுக்கூடி அரனடியி லொன்றாய்ப் போமென்பர். கெட்டாற் கூடுமாறின்மையானும், கெடாதுநின்று கூடுமெனின் அவ்வாறு நின்று கூடியவழிக் கேடின்மையின் ஒன்றாதல் பெறப்படாமையானும், கூடியபின் கெட்டதெனிற் கெட்டவழி முத்திபெறுவ தொன்றின்மையானும், கேடே முத்தியெனின் உயிர் நித்தமாதல் செல்லாமையானும், அதுவும் வழுவாம். இனி ஐக்கவாதிகள் நீரிலே நீர் சேர்ந்தாற்போல உயி ரரனடியைச்சேர்ந் தொன்றா மென்பர். நீருநீரும்போல முதல்வனுமுயிருந் தம்முட் சமமாதல் செல்லாமையின அவர்மதமும் அடாதென்பதாம்.

அரன் மலரடிகீ ழிருக்குமியல்பு வேறுவேறாகக்கூறு மவ்வ மதங்களைப் பரிகரித்தவாறு.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

முன்சொன்ன உண்மையினாலும் பின்சொல்லிவந்த வுபாயங்களாலும் இந்த விரண்டு வகையாலும் சிவனைப் பெற்றவர்கள் சிவனோடு கூடிநிற்கு முறைமையைச் சமயிகள் கருத்துகளை வினவி அவரவர்கள் மதங்களை மறுத தருளிச்செய்கிறார்.

சென்றாரையும் நிழல்போலச் சிவநிற்பனென்னில்-நீரும்நிழலும்போலச் சிவன் விகாரமற நிற்பன், அந்த நீரிலும் நிழலிலும்

சென் றிளைப்பாறுகிற வான்மாவைப்போல ஆன்மா முத்தியிற் சிவனைத் தானாக வறிந்து கூடுமென்று நீ சொல்லில்?—சென்றனையுமவன்முதலி - அந்த நீரையும் நிழலையு மறிந்துசென்று கூடுகிற ஆன்மாக்கர்த்தாவாவன், ஆகையா லது கருத்தன்று.—சிவத்தையணைந் தொன்றாய் நின்றதுயிர் கெட்டென்னில் - உப்பளஞ்சேர்ந்த புற்பலாலம் உப்பாய்ப் போனதுபோலவும் அக்கினியைச் சேர்ந்த விரும்பு அக்கினியானாற்போலவு மான்மாச் சென்று சிவத்தைப் பொருந்தி ஆன்மாவென்கிற தன்மை கெட்டுச் சிவமாய் நின்றதென்னில்?—கெட்டதணைவின்றாம்-ஆன்மாவென்கிற தன்மைகெட்டால் சிவத்தைப் பொருந்தின் தன்மையில்லையாம், ஆகையா லதுகருத்தன்று.—நின்றதேற்கேடில்லை-ஆன்மாவும் சிவமு முத்தியிலு மிரண்டாயிருக்குமென்று நீ சொல்லில், இவன் தற்போதங்கெட்டுச் சிவனைக் கூடினது மில்லையாய்ச் சிவனுக்குப் பூரணமுமில்லையாம், ஆகையா லது கருத்தன்று.—அணைந்துகெட்ட தென்னில் - அநாதியிலே ஆன்மாவுஞ் சிவமு மிரண்டு முதலாயிருந்து முத்தியி லான்மாச் சிவனைச்சென்றுகூடி பொன்றாய்விடுமென்று கூறின்,—பொன்றினதேல் முத்தியினைப் பெற்றவரார் புகல்நீ- கூடினபொழுதே ஆன்மாக் கெடுவதினால் மோக்ஷத்தைப் பெற்றவர்களின்னாரென்று எமக்கு நீ சொல்லவேணும்.—பொன்றுகையே முத்தியெனிற் புருடனித்தனன்றாம்- ஆன்மாக் கெட்டுப்போகிறதுதானே மோட்சமென்று சொல்லில்,—ஆன்மா நித்தனுமல்லவாய் - நித்தமென்று சொல்லுகிற வேதாகமங்களுக்கும் விரோதமா மாகையா லது கருத்தன்று.—ஒன்றியிடும் நீரொடுநீர் சேர்ந்தாற்போ லென்னில் ஒருபொருளா மதிபதியோ டுயிர்பொருளொன் றன்றே - முத்தியிலே ஒருபொருளாய் நின்று பின்பு பதியென்றும் பசுவென்று மிரண்டாய் மீளவும் நீருநீருஞ்சேர்ந்த தன்மைபோல முத்

தியிலொன்றும் என்றுகூறின், பதியும் பசுவும் ஒரு முதலாக வென்றும் அதிபதியாயிருக்கிற கர்த்தாவு மான்மாவு மொருபொருளாகா தாகையா லது கருத்தன்று.

சென்றணையும் நிழல்போலச் சிவனிற்பனென்றவ னவிகாரவாதி இதற்குப் பிரமாணம்சங்கற்பநிராகரணம் "நீர்நிழலணையச் சீர்பெறு கடவுளைச் - சலமிலனாகிச் சார்ந்தவர்க்கென்று - நலமிகநல்கு நாதனையணைந்து - பூமிவெம்மை பொருந்தாதுயர்ந்த - நிழல்வாழு நினவினர்போலத் - திருவடிநிழல் சேர்ந்து - கருவுறு துயரங் களைந்திருந்திடுமே" என்னுமதங் கண்டுகொள்க. சென்றணையு மவன்முதலிபென்றது, அவனை மறுத்ததற்குப் பிரமாணம். நீர்நிழலணைய சீர்ப்பெறுகடவுளைச் - சேர்ந்தவர்க்கின்பம் வாய்ந்திடுமென்றனை - பாதவமென்றுஞ் சேதனமின்மையி-னிழைத்தோரவம்பி னென்பதுநதுன்பம் - விளைத்தோர்தம்மில் வெறுப்பொன்றிலசேற் - பொடித்திடுகொப்புள் வெடித்திருசரணம் - வெய்யபூமியி னுள்ளுறவமுங்கி - யாற்றுதலின்றி யாறியங்கினர்முன்-ஞேற்றிடுமென்று சொல்லவுமிலதா - லிவ்வகைக்கடவுட் கியம்புதறவரோ" என்னுமதங் கண்டுகொள்க.

சிவத்தையணைந் தொன்றாய்நின்ற துயிர்கெட்டென்னில், என்றவன் சங்கிராந்தவாதி. இதற்குப் பிரமாணம் சங்கற்பநிராகரணம், "வேற்றோர்முகவொளி தோற்றுங்கலனெனத் - தலைவனதருளுயிர் நிலவிடுநிலவச் - காட்டத்தங்கி மாட்டத்தங்கிய - தன்மையுமளத்திற் புல்லையினீப்பும் - போன்றதுவாகித் தோன்றிடுமதனாற் - பசுகரணங்கள் சிவகரணங்க - ளாகமாறியறிவுறு -மேகமாமுயிர் யானெனதின்றே" என்னுமதுங் கண்டுகொள்க. என்றுகேட்ட தவனை. இன்றுமென் றவனைமறுத்ததற்குப் பிரமாணம் சங்கற்ப நிராகரணம். "நோக்குமுகவொளி நீக்காதானெனக் - கவருந்தன்மை முகுரம்போலக்-கொடுத்தனு

கோடற் கடுத்ததுண்டன்றே - காட்டத்தங்கி கூட்டச்கூடு- மிக் தனத்தியற்கை வெந்தழுருங்காது - வுப்பளத்தடுத்த புற்பலால ங்கள் - சடத்தவேனுங் கொடுத்ததுகொள்ளுந் - தன்மையுண்டு கைக் கின்மையதன்றே” என்னுமதுங் கண்டுகொள்க.

நின்றது என்றவன் சமவாதிமதம். இதற்குப் பிரமாணம் சங்கற்பநிராகரணம். “முன்னொன் றனது முதிரொளிஞான-மதி பாப்பச்சைச் சிறுபுழுக்கவர்ந்த- வண்டெனவுயிரைக் கொண் டிடுமுயிரது - தன்னைநோக்கித் தானதுவாகி - ஐவகைத்தொழிலு மெய்வகையுணர்வும் - பிரியாவாறு பெற்றுத் - திரியாப் பெரியோர் திரட்சிசேர்ந்திடுமே” என்றும், கேடில்லையென் றவனை மறுத்ததற்குப் பிரமாணம் சங்கற்ப நிராகரணம். “முத்தியுற்ற நற்றவரவையிடை - சேர்வொன்றனைச் சார்கருமுத்தி- சாலோக்கியமோ சாயுச்சியமெனிற் - பந்தமுற்ற கந்தலகழித்த- வறிவிநொடறிவு பிறியாப்பெற்றி-வேண்டுமென்றதற்கிண்டி வரிவ்வா - திருப்பதொன்பதற் குரித்தான்வேண்டு - மண்ணலதருளி னண்ணியிருப்பினுஞ் - சீவன்முத்தரென் றுரைதினரகன்று - நீங்கியுமுருவ நீங்காதாயி - னுேங்கியமுத்தி யாவதென்னுமாக்க” என்னுமதுங் கண்டுகொள்க.

அணைந்துகெட்டதென்னிற் பொன்றினதேன் முத்தியெனிற் பெற்றவரார்புகல்கீ பொன்றுகையே முத்தியென்றது சைவர். இதற்குப் பிரமாணம் சங்கற்பநிராகரணம். “ கருவியுமல மும் பிரிவுறப்பிரியா - ஞானநல்கலுந் தானதுநோக்கித் - தன்னையுமதனையுந் தன்முதற்பொருளையு - மின்னவென்றறியா விருவருமுயங்கி - யொன்றாயுறுபய னுவப்பு-மின்றாய் நிற்குமிதுசிவ கதியே” என்றும், புருடனிதத நன்றும் என்றவனை மறுத்தற் குப் பிரமாணம் சங்கற்பநிராகரணம், “ இருவருங்கூடி யொருபயனுய்ததென் - றருளினையிவ்வா றபேதிகணில்லையே” என்னுமதுங் கண்டுகொள்க.

ஒன்றியிடும் நீரொடுநீர் சேர்ந்தாற்போல என்றது ஐக்கவாதி இதற்குப் பிரமாணம் சங்கற்பநிராகரணம். "சததினீபாத முப்த்திறையருளா - லுருவுகொடுலகு தெரிவுறமருவி-மாசுறுந்துக தேசுறவிளங்கும் - தன்மையினுணர்த்தும் புனைமைகணிங்கி-நீருநீருஞ் சேருந்தகைமையி- னறிவினோடறிவு செறிவுறப்பொருந்தி - யொன்றுமென்பதை யுலகோர் - நன்றுமுத்தியெனநவின்றனரோ" என்னுமதுங் கண்டுகொள்க. ஒரு பொருளாமதிபதியோ டுயிர்பொருளொன்றன்றே என்றவனை நோக்கி மறுத்ததற்குப் பிரமாணம், சங்கற்பநிராகரணம். "அறிவிற்கறிவு செறியவேண்டின்றே - யுண்மையிலிருமையு மொளியேயொளிலொரு - தன்மையாகமுன் சாற்றினரிலரோ" என்னுமதுங் கண்டுகொள்க.

இந்த ஐக்கியவாதியை யொழிந்த சங்கிராந்தவாதி பரிணாமவாதி சைவர் இவர்கள் முத்தியிலான்மாவுஞ் சிவமுமொன்றாயிருக்குமென்பர்களெனக் கொள்க.

இதனாற் சொல்லியது, ஆன்மாவுஞ் சிவமும் முத்தியிலிரண்டாயிருக்குமென்றும் அக்கினியைச் சேர்ந்த விரும்புபோலச் சிவத்தோடே கூடின வான்மாவுஞ் சிவமாமென்றும் பெத்தத்திலொழிந்து முத்தியிலுமிரண்டா யிருக்குமென்றும் அநாதியேயிரண்டாயிருந்து முத்தியி லொன்றுமென்றும் இப்படிச்சொன்ன சமயிகளை அவையுத்த மல்லவென்று மறுத்த முறைமையறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

---o---

சென்றணையு நிழல்போலச் சிவனிற்பனென்னில் - அரன் கொடுத்துத் தோன்றுவானெனல் வேண்டா, பதிகராற் சென்

றணையப்படு மரநிழல்போல முதல்வன் விகாரமின்றிநிற்ப வுயிர்தானே பருவஞ்சேர்ந்தவழி ஞானக்கண்ணைப் பெற்று அதனைத் தலைக்கூடுமென வமையுமென ஈஸ்வர அவிகாரவாதி மதம்பற்றிக்கூறின்,—சென்றணையு மவன்முதலி - மரநிழலுக்குச் சுதந்தரமின்றிச் சென்றணைவார்க்கு அச்சுதந்தர மாமாறுபோல முதல்வனுக்குச் சுதந்தரமில்லை, யவனைத் தலைக்கூடுவதா யுள்ள உயிர்க்கே சுதந்திரமெனப்பட்டு வழுவாம்.—உயிர்கெட்டுச் சிவததையணைந்து ஒன்றாய் நின்றதென்னில் - இனிப் பரிணாமவாதிகள் உயிர்கெட்டுக் கூடி யரனடியி லொன்றாய்ப் போமென்பரெனில்,—கெட்டதனை யின்றாம் - கெட்டாற் கூடுமாறு இன்மையானும்,—நின்றதேல்-கெடாது நின்று கூடுமெனின்,—கேடில்லை-அவ்வாறுநின்று கூடியவழி கேடின்மையி னொன்றாதல் பெறப்படாமையானும்,—அணைந்து கெட்டதென்னில் - கூடியபின் கெட்டதெனின்,—பொன்றினதேன் முத்தியினைப் பெற்றவரார்புசனி - கெட்டவழி முத்திபெறுவ தொன்றின்மையானும்,—பொன்றுகையே முத்தியெனில்-கேடே முத்தியெனின்,—புருடனித்தனன்றாம்- உயிர்நித்தமாதல் செல்லாமையானு மதுவும் வழுவாம்,—ஒன்றியிடுநீரொடுநீர் சேர்ந்தாற்போல என்னில்-இனி யயிக்கவாதிகள் நீரிலே நீர்சேர்ந்தாற்போலே உயி ரரனடியைச் சேர்ந்தொன்றா மென்பரெனின்,—ஒருபொருளா மதிபதிபோடுயிர்பொருளொன்றனறே - நீரும் நீரும்போல முதல்வன் உயிரும் தம்முட் சமமாதல் செல்லாமையின் அவர்மதமும் அடாது.

அரன் மலரடிக்கீ ழிருக்கு மியல்பு வேறுவேறாகக்கூறு மவ்வவர் மதங்களைப் பரிசரித்தவாறு.

மறைஞானதேசிகர் உரை

செம்பிரசகுளிகை தாக்கினவிடத் துண்டாகிய தன்மைபோல இந்தவான்மாவுஞ் சிவனைக் கலந்தவிடத் திருக்குமுறைமை யுணர்த்துகின்றார்.

செம்பிரத குளிகையினாற் களிம்பற்றுப்பொன்
னாய்ச் செம்பொனுடன் சேருமலஞ் சிதைந்தாற்சீவன்,
நம்பனுடன் கூடுமெனிற் பொன்போலல்ல னற்குளி
கை போலவர னணுகிமலம்போக்கி, யம்பொனடிக் கீ
ழ்வைப்ப னருங்களங்க மறுக்கு மக்குளிகை யதுவும்
பொன் னாகாதாகு, மும்பர்பிரா னுற்பத்தி யாதிசெய
ற்குரிய னுயிரதுதானுஞ் சிவானுபவ மொன்றினுக்கு
முரித்தே. (௯௦)

(இ-ள்.) செம்பிரத குளிகையினாற் களிம்பற்றுப்பொன்னாய்ச் செம்பொனுடன் சேரும் — செம்பொன விரதக்குளிகை தாக்கக் களிம்பற்றெப்படிப் பொன்னுடன் கூடும். அது போல

மலஞ் சிதைந்தாற்சீவனம்பனுடன் கூடுமெனில் — இந்தவான்மாவுஞ் சிவஞானத்தினாலே மலம்போய்ச் சிவனைச் சேர்ந்தவிடத் திவனுமவனைப் போலப் பஞ்சகிருத்தியங்களையுஞ் செய்தற் குரித்தாவ னென்று சிவ சமவாதி சொல்லில்? அஃதன்று.

பொன்போலல்ல னர்குளிகை — சிவனிந்தப் பொன்போல்வ னல்லனச்செம்பைப் பொன்னுக்குங் குளிகையைப் போ

போலவா னனு கிமலம் போக்கி யம்பொனடிக்கி ழ்வைப்பன்	ன்றவனுகி யான்மாக்களுடைய மலத்தைநீக்கி யழகினையும் பொலிவினையு முடைய திருவடி நீழற் கீழேவைப்பன்.
அருங் களங்க மறுக்கு மக்குளிகையதுவும் பொன்னுகாதாகும்	அருமையாய்க் களங்கத்தைப் போக்கின பொன்னானது தான்வேறே யொரு செம்பிற்களிம்பை போக்கமாட்டாது குளிகையே போக்குமிது பொனனுகவே யிருக்கும், அத்தன்மைபோல?
உம்பர்பிரா னுற்பத்தியாதி செயற்குரியன்	தேவர்களுக் கெல்லாஞ் சுவாமியாயிருக்கப்பட்ட சிவன் சிருட்டி முதலிய பஞ்சகிருத்தியங்களையுஞ் செய்தற்குறியன்.
உயிரது தான் சுவானுபமொன்றினுக்கு முரித்தே.	இப்படிச் சுத்தனுன வான்மாக்கடான் வேறொரு கிருத்தியங்களுஞ் செய்வதின்றிச் சுவானுபூதி யொன்றையுமே திளைத்திருப்பதேயுரிமையுடையார் எ-று.

எனவே இவர்கள் பரமுத்தியைப் பெற்றிருந்தாற் கிருத்திய கர்த்தாவாகார்கள்.

ஆன்மாக்க ளொருக்காலுங் கிருத்தியஞ் செய்யார்களோ வெனில்? அபரமுத்தியை யடைந்த வதிகாரிகள் அவனனுமதியைப் பெற்றுக் கீழுள்ள கிருத்தியகர்தாக்களா யிருப்பர்களென வறிக.

அந்தப்பரம முத்தர்களும் சிருட்டியாதியைப் பண்ணிற் குற்றம் யாதெனில்? அநேகேசுர வாதமுண்டாகையாலும் சுத்தமாயை யொன்றுகையாலும் சிருட்டி யாதி கிருத்தியங்கள் செய்யப்பெறு தெனவறிக.

இதற்குச் சர்வஞானேத்தரம் சர்வ மதோப நியாசம் சிவதருமோத்தரம் மிருகேந்திரத்து மறிக.க

போக்குமோ மற்றொரு செம்பிற்களிம்பைப்பொ-னீக்குவ
ரோரீங்கினர் நோக்கீசு. படைப்பதுஞ் செய்யார் திளைப்பார்
பற்றற்றாரீச-னடிக்கீழ்த்தத்தஞ்சத்தினி யின்பம்." "ஆதிமுத்தனி
ன்பமு மநாதிமுத்த வின்பமுங்கே-ளோதும்விதித துபங்டத்த
தும். என்றுரெமதகுறவர்.

இதனைப் பரமோபதேசத்திற் கூறினு ராண்டுக்காண்க
(௪0)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேலதர்க்கே புறநடை.

செம்பிரதகுளிகையினுற் களிம்பற்றுப்பொன்னுய்ச் செம்
பொனுடன்சேருமலஞ் சிதைந்தாற் சீவன் நம்பனுடன் கூடுமெனி
ல்-செம்பானதிரதகுளிகைப் பரிசத்தினுலே களிம்பானதுபோய்
ப் பொன்னும். அப்படியே சிவனுடையசத்தி ஸ்பரிசத்தினு
லே ஆன்மாவினுடையவாணவாதி மலங்களீங்கவே சிவனோ
டே யொக்க வான்மாக்களும் பஞ்சகிருத்தியம் பண்ணுமென்
னில்,—அரன் பொன்போலல்ல னற்குளிகைபோல-அரன் பொ
ன்னைப்போலே யல்ல,செம்பைக்களிம்பறுததுப் பொன்னுக்கும்
ரசக்குளிகைபோலே செமபொன்னுடன் கூடும் ரசகுளிகையினு
லே களிம்பறறபொன்னுனது முனனுள்ள பொனனே யொக்கு
மொழியக் குளிகையை யொவ்வாது,—அரனனுகி மலம்போக்
கியம் பொனனடிக் கிழ்வைப்பன் - சிவன் ஆன்மாவைப் பொரு
ந்தின மலங்களை நீக்கி யான்மாவைத் தன்னிடத்து வேறற வை
ப்பன்,—அருங்களங்கமறுக்கு மக்குளிகையதுவும் பொன்னுகா
தாகும்-உலகத்தவர்க ளரிதிற்றேடும் பொன்னை டெளிதிலாக்கு
மிரதகுளிகைபொன்னுகாது. இப்படிப்போல,—உம்பர்பிரா னுற்
டத்தியாதிகளுக்குரிய னுயிரததான் சிவானுபவ மொனதினுக்கு

தே-தேவர்க்களுக்கெல்லாம் சுவாமியான சிவனே சிருஷ்டிமுத லைந்தொழில்களுக்குங் கர்த்தா, ஆன்மாவானது சிவாநந்தானுபவ மொன்றினுக்குமே யுரியது.

இதனுல் முத்தான்மாக்கள் சிவாநந்தானுபவிகளே யாவர்கள், கிர்த்திய கர்த்தாக்க ளாகார்களெனக்கூறியது.

ஆதிமுத்தரான அநந்தேஶ்வராதி விஶ்வாமித்திரர் பரியந்தம் சிருஷ்டியாதி கிருத்தியங்கள் பண்ணினதை யாகமபுராணங்களிலே கேட்கப்பட்டது. இவ்விடத் தாசாரிய ரநுக்கிரகமாகிற கிருத்தியத்தைப் பண்ணக் காணப்பட்டதே யென்னில்? அதுமெய்; சிவனெவ்விடத்து மெந்தக் கிருத்தியமு மவரவரை யதிஷ்டித்துத் தாமேபண்ணுவர், முத்தான்மாக்கள் பண்ணுவர்களென்பது இருப்பு சுடுவதென்பதுபோல வாதாரலக்ஷணை. இந்த விசாரமெல்லாஞ் ஜீவன்முத்தி யவத்தையிலேயே, பரமமுத்தியிலே சிவமென்று மான்மாவென்றும் பிரிந்து காணப்படுவ தொன்றில்லை. ஆகையால் முத்தான்மாக்கள் கிருத்தியம் பண்ணுவர்கள் பண்ணார்களென்னும் விசாரத்துக் கவகாசமேயில்லை.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

முத்தியிற் சிவனு முத்தான்மாவும் பொன்னும் பொன்னும்போற் புணர்ந் தொருபொருளா யிருப்பார்களென்று சிவாத்துவைதிப் போலிப் புருஷனொருவன் புகல மறுத்துரைக்கின்றார்.

செம்பிரத குளிகையினாற் களிம்பற்றுப் பொன்னாய்ச் செம்பொனுடன் சேரும்-அப்படி,—மலம் சிதைந்தால்- முத்திமானாய்,—சீவனம்பனுடன் கூடுமெனில் - சிவனோ டயிக்கிய மாமென்

று செப்பில் சிவன்,—பொன்போலல்லன் - பொன்னுக்குமொ
ருபொருள் போல்பவன். ஆகையால்,—நற்குளிகை போல்வன்-
சீவனுக்கு,—அரனணுகிமலம்போக்கி-ஒருபுடையொப்புவமையா
தலால்,—அம்பொ னடிக்கீழ் வைப்பன்-குளிகையும்பொன்னும்
போற் றனக்கு வேற்றுச் சாதியாகாமற் குளிகை பொன்னொ
ளிப் பிரகாசம் பண்ணுவதுபோற் சிவத்துவப் பிரகாசஞ் செ
ய் தொதத சிவசாதியாக்கித் தனது சத்திக் கொத்து விரிந்த அ
ந்தச் சத்தி பதார்த்தம் பார்த்தொத்துப் போய்ப் பராக்காய்
ப் பதிமுதற் பதார்த்தம் பார்க்கும் பராக்குரூப சீவசிற்சத்தி
யைப் பதிமுதற்பதார்த்தம் பாராது பிரத்தியக்காய்ப் பார்க்கு
ம் பிரத்தியக்கு ரூப சிற்சத்திக் குறிச் சிவனாகச் சீவனைப்பண்
ணுவன்.—அருங்களங்க மறுக்கு மக்குளிகை தானும் பொன்னா
காதாகும் - குளிகையாக வுபமிக்கப்பட்ட சிவ னிப்பொன்னா
க வுபமிக்கப்பட்ட சீவனாகான். ஒரு பொருளல்லாதிருந்தாலு
மொரு சிவசாதியா யொதத பொருளாமென் றுரைத்தலால்
பஞ்சகிர்த்திய முத்தசிவன் பண்ண வேண்டுமென்பதற் குத்தர
ம்—உம்பர்பிரா னுற்பத்தி யாதிகளுக் குரியன் - சிவன் சிருஷ்
டி முதலிய பஞ்சகிர்த்திய கிருபா கிர்த்தக் கருகன்,—உயிர்தா
ன்-முத்தசிவனதான்,—சிவானுபவ மொன்றினுக்கு முரிததே -
சிவ சங்கற்பத்திற்கு வேற்றுச் சங்கற்பம் வேற்றுப் பலம் வி
ட்ட பிரதக்கவர்ச்சநீய சங்கற்ப சம்சித்த பஞ்ச கிர்த்திய கிர்த்
தானாலும் சிவன்போற் கிருபா சங்கற்ப சம்சித்த கிர்த்திய கிர்
த்தல்லாமையாற் றனது பராக்குரூப சிற்சத்தி விர்த்திக்குறி ச
ர்வார்த்த சிவசாக்ஷாத்கார பூர்த்திக் கீர்த்திச் சிவானந்த நாம
சிவபோகத்துக் கருக பிரத்தியக்குரூப சிற்சத்திலிங்கச் சிறப்பு
ச் சிதந்தரான்ம போதச் சித்துக்குறி கரண கர்த்திரு ரூப வநு
பவா நுபவி திருக்ஸ்வரூபி யாகாநிற்கும்.

சிவஞானயோகியருரை வருமாறு.

———o———

களிம்புள்ளளவுஞ் செம்பு பொன்னுடனொத்து ஒன்றுமா தில்லையாயினுங் களிம்பு நீங்கியவழி ஒத்தொன்றுதல் செல்லு மெனபது மடாது. உயிர்க்கு மலத்தை நீக்கு மாற்றலையுடைய முதல்வனைச் செம்பிற்குக் களிம்பு நீக்குமாற்றலுடைய இரசகுளிகையோ டொப்புறுத்துதலன்றி அவ்வாற்றலில்லாத பொனனோ டொப்புறுத்துதல் ஈண்டைக்கேலாமையானும், மலநீங்கிய வழியுஞ் சிவானுபவ மொன்றற்கே சுதந்திரமாயவுயிர் ஐந்தொழிலெல்லாவற்றிற்குஞ் சுதந்திரனாகிய முதல்வனோ டொத்தொன்றுதல் செல்லாமையானு மென்பது.

ஒன்றினுக்கு மென்னு மும்மை முற்றும்மை.

சிவானுபவ மொன்றினுக்கு முரித்தேயென்ற விதநானே, சிவானுபவத்திற்கு முரித்தன்றென்னுஞ் சுத்தசைவர்மதமு மறுக்கப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

———o———

செம்பிற்களிம்பு குளிகைதாக்க நீங்கின தன்மைபோலச் சிவனுடைய வருளாலே ஆன்மாவுக்கு மலம்போய் முத்தைப் பெறுமென்ற பேதவாதிமத மேலருளிச்செய்கிறார்.

செம்பிரதக் குளிகையினாற் களிம்பற்றுப்பொன்னாய்ச் செம்பொனுடன்சேரும் - செம்பொன் இரதகுளிகையினாலே சாளிதம்போய் மாற்றெழுந்திருந்து கனகமாய்ச் சிவந்த பொன்னுடனே கூடாநிற்கும். அதுபோல,—மலஞ்சிதைந்தாற்சிவ னம்பனுடன்கூடுமெனில் - மலமானது சிவனருளாலே நீங்கினால்

ஆன்மாவுஞ் சிவனுடனே கூடுவன் என்று நீசொல்லில் அது திட்டாந்த விரோதம். அதெப்படி யென்னில்?— பொன்போலல்லனற் குளிகைபோல்வன்-பரமேஸ்வரனந்தப் பொன்னைப்போலல்லன் நல்ல குளிகையைப்போல்பவன் ஆகையா லான்மாவுமன்றி,—அரனணுகிமலம்போக்கி யம்பொனடிக் கீழ்வைப்பன்-பரமேஸ்வரன் றனது திருவருளாலே யிவனை யநாதியே பொருந்திநிற்கிற மலத்தினது சத்திகளை நீக்கி அழகிய பொலிவினையுடைய தனது திருவடியின்கீழே வைப்பனென்றதெப்படி. ஆன்மா வருளைப் பெறுகிறதே பயனென்றும் அந்தவருளுக்குள்ள தன்மையே யெல்லா மவனுக்குண்டாமென்றுஞ் சொல்லுகிற சமவாதியைப் பார்த்து மறுத்து மே லருளிச்செய்கிறார்.—அருங்களங்கமறுக்கு மக்குளிகையதுவும் பொன்னாகாதாகும்-செம்பினது காளிதத்தைப்போக்கித் தேடுதற்கரிதாய்ப் பொன்னாக்கின வந்தக் குளிகையானதும் பொன்னாகாது, அந்தப் பொன்னுங் குளிகையாகாது, காளிதம் நீங்கினபொன் குளிகையாகாதாற்போல அருளைப்பெற்ற வான்மாக்களும் அருளுக்குள்ள தன்மை யுண்டாகாது,—உம்பர்பிரா னுற்பதியாதிகளுக்குரியன் - ஆகையால் தேவர்களுக் கெல்லாங் கர்த்தாவாகிய பரமேஸ்வரன் சிருட்டிமுதலான கிருத்தியங்களுஞ் சர்வஞ்ஞத்துவமு மநாதியேயுடையன்.—உயிர்தானுஞ் சிவானுபவ மொன்றினுக்குமுரித்தே - ஆன்மாத் தானு மருளைப் பெற்றாலுஞ் சிவனுக்குள்ள பஞ்சகிருத்தியமும் பேரறிவு முண்டாகாது,—சிவானுபவ மொன்றையு மனுபவித்துக்கொண் டிருக்கிறதற் குரித்து.

செம்பிரதக்குளிகையினாற் களிம்பற்றுப்பொன்னாய்ச் செம்பொனுடன் சேருமலஞ் சிதைந்தாற்சீவ னம்பொனுடன் கூடும், என்றவன் பேதவாதி. இதற்குப் பிரமாணம் சங்கற்பநிராகரணம். “ஈசனதருளாற் பாசத்தொகுதி-செறிவுறுசெம்பிற் கறை

யுறுகளிம்பு - குளிகைதாக்க வொளிபெற்றுங்கு - நித்தமுகத சுத்தனுக-வைத்தனருலகின் மறைவல்லோரோ" என்றும் "பொன்போலல்ல னற்குளிகைபோல்வான்" என்று அவனை மறுத்த தற்குப் பிரமாணம் சங்கற்பநிராகரணம். "மறைகளாகமத் துறைகண்மற்றெவையு - நாசமில்பதிபசு பாசமென்றுணைக்க- வயத்தோர்குளிகை சயத்தாற்றுமிரக்- காளிதநாசம் பாசத்தேய்த்தல் - கூடாதன்றியுங் குளிகைசேருண - நீடாதழித்த நிலைநிலையாதலிற் - பேதவாத மோதுதல்பிழையே" என்னுமதுங் கண்டுகொள்க.

உயிர்தானுஞ்சிவானுபவ மொன்றினுக்குமுரித்தே என்றது ஆன்மாச் சிற்றறிவனுகையா லச்சிவனுக்குள்ள கிருத்தியமெல்லா மிவனுக்குண்டாகாது, சிவானுபவ மொன்றினுக்கு முரித்தென்பது கருத்து. இங்ஙனஞ் சமவாதியை மறுத்தற்குப் பிரமாணம் சங்கற்பநிராகரணம். "அவனிவனுகி யிவனவன் செய்தி-யென்றுசெய்வா னென்றியமதத்தா - லெல்லாமறிதல் செல்லாதுயிர்கள் - சிற்றறிவெனுமிச் சொற்றவறுரும்" என்னுமதுங் கண்டுகொள்க.

இதனுற் சொல்லியது, செம்பிற் காளிதமானது இரதகுளிகையினாலே நீங்கப் பொன்னுன தன்மைபோல ஆன்மாவுக்குண்டான பாசமு மருளாலே நீங்கினுலு மருளுக்குள்ள முறைமை யான்மாவுக் குண்டாகாது, பொன்னுனது குளிகை யாகாதாற்போல வென்றும் ஆகையா லிதருத்த மல்லவென்றும் ஆன்மா வருளோடுகூடினுலுஞ் சிவானுபவ மொன்று மொழிந்து பஞ்ச கிருத்திய முண்டாகாதென்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

——o——

செம்பிரத குளிகையினால் களிம்பற்றுப் பொன்னாய்ச் செம்பொனுடன் சேரும் - களிம்புள்ளளவும் செம்பு பொன்னுடனொத் தோன்றுமா றில்லையாயினும் களிப்பு நீங்கியவழி யொத்து ஒன்றுதல் செல்லுமென்பது படாது,—மலஞ் சிதைந்தாற் சிவ னம்பனுடன் கூடுமெனி னற்குளிகைபோல்வான் பொன்போலல்லன் - உயிர்க்கு மலத்தை நீக்குமாற்றலுடைய முதல்வனைச் செம்பிற்குக் களிம்பு நீக்குமாற்றலுடைய விரதகுளிகைகளோ டொப்புறுத்துதலன்றி யவ்வாற்றலில்லாத பொனனோ டொப்புறுத்துத லீண்டைக்கு ஏலாமையானும்,—அருங்களங்க மறுக்கு மக்குளிகைதானும் பொன்னாகாது -அரியகளிம்பினை நீக்கிய ரசகுளிகையும் பொன்னாகாது.—நணுகுமலம் போக்கி யம்பொ னடிக்கீழ்வைப்பன்-பொருந்தியமலத்தை நீக்கித் திருவடிக் கீழ் செலுத்துவனாயினும்,—சிவானுபவ மொன்றினுக்கு முரித் துயிர்தானும் - மலநீங்கியவழியும் சிவானுபவ மொன்றற்கே சுதந்தரமாய வுயிர்,—உற்பத்தி யாதிகளுக் குரியன உம்பர் பிரானுகும் - ஐந்தொழி லெல்லாவற்றிற்கு சுதந்திரனாகிய முதல்வனோ டொத்து ஒன்றுதல் செல்லாமையானும்.

சிவானுபவம் ஒன்றினுக்கு முரித்தேயென்ற விதனானே சிவானுபவத்திற் குரித்தன்றெனனுஞ் சுத்தசைவர் மதமும் மறுக்கப்பட்டது.

மறைஞானதேசிகர் உரை.

மீளவுமவ னான்மாவுஞ் சித்தச் சிவனுஞ்சேர்த்து இந்தவிரண்டுந் தம்மிற்கூடி யொன்றாயிருக்கிறதே முத்தியென்று சொல்ல மறுத் துணர்த்து கின்றார்.

சிவன்சீவ னென்றிரண்டுஞ் சித்தொன்றுமென்னிற் சிவனருட்சித் திவனருளைச் சேருஞ்சித் தவன்றான், பவங்கேடு புத்திமுத்தி பண்ணுஞ்சித் தவற்றிற் படியுஞ் சித் தறிவிக்கப் படுஞ்சித்துமிவன்றான், அவன்றானே யறியுஞ்சித் தாதலினு லிரண்டு மணைந்தாலு மொன்றாகா தநியமாயிருக்கு, மிவன்றானும் புத்தியுஞ்சித் திவனுமோபுத்தி யிதுவுமசித் தெனிலவனுக் கிவனுமசித்தாமே. (கக)

(இ-ள்.) சிவன்சீவ னென்றிரண்டுஞ் சித்தொன்று மென்னில் — சிவனுஞ் சைதன்னிய ஸ்வரூபன் ஆன்மாவுஞ் சைதன்னிய ஸ்வரூபன் இவவிருவருஞ் சேதன ரூபியானபடியாலே முத்திகாலத்திலொரு முதலெனச் சொல்லில்? அஃதன்று.

சிவனருட்சித் திவனருளைச்சேருஞ் சித்து — சிவனனுக்கிரகத்தைச் செய்தற்குரிய சித்து இந்தவான்மாவும் அனுக்கிரகத்தைப் பெற்றிருக்கிற சித்துக்காண்

அவன்றான் பவங்கேடு புத்திமுத்தி பண்ணுஞ் சித்து — அந்தச் சிவ னிந்த வான்மாக்கள் சநநமரணத் துற்றதனாலே வருத்தமுற் றவரை யிளைப்பாற்றும் பொருட்டுப் பஞ்சகிருத்தியங்களையும் பண்ணிப் போகமொட்சங்களைக்கொடுக்குஞ் சித்து.

அவற்றிற் படியுஞ்சித் தறிவிக்கப் படுஞ் சித்துமிவன்றான் — இவன்றானவனாலே யாதொன்றை யறிவிக்கத் தானறிந் ததிலே யழுந்த வழுந்துகிற சித்து.

அவன்றானேயறியுஞ்சித்து — அந்தச்சிவன் சர்வஞ்ஞனாதலாற் சர்வத்தையு மறிகிறசித்து.

ஆகலினு லிரண்டு மணைந்தாலுமொன்ருகாத நியமா யிருக்கும்	இத்தன்மையை யுடைத் தாகையினாலே சிவனு மான்மாவுந் தம்மிற் கலப்புண்டாய் வேறற நின்றாலு மொன்றுவதில்லை. அஃதென்போல வென்னில்?
இவன்றனும் புத்தியுஞ்சித் திவனுமோ	இந்தவான்மாவுஞ்சித் திவனாலே காரியப்படும் புத்தியுஞ்சித் திவ்விரண்டுங் கூடியவிடத்து வேறற்றிருப்ப தொழிந்து ஏகபொருளாகாதவாறுபோல
இவன்றனும் புத்தியுஞ் சித்து	இந்த வான்மாவுஞ்சேதனம் புத்தியுஞ் சேதனம் இவ்விரண்டுஞ் சேதனமாயிருக்கும்.
இவனுமோ புத்தி	இந்த வான்மாவாகாது புத்தி.
இதுவு மசித்தெனில்	இந்தவான்மாவி னுண்மையை விசாரித்துப்பார்க்கி லந்தபுத்தி யவனுக் கசித்தாயிருக்கும். அதுபோல,
அவனுக் கிவனு மசித்தாமே.	சிவனுடைய வுண்மையை விசாரித்துப்பார்க்கி லந்தச் சிவனுக் கான்மாவினது சித்து மசித்தாம் எ-று.

சிவனைக்குறித்துச் சொல்லும்போ தான்மாவுக் கிஃ தவதரப் பெயரென வறிக; முக்யமன்று. (சக)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் ஜீவசைதன்னியத்திற்குஞ் சிவ சைதன்னியத்திற்கும் பேதங் கூறுகின்றது.

சிவன் சிவனென் றிரண்டுஞ் சித்தொன்றென்னில் - சிவனு மான்மாவும் இரண்டும் சித்துருபமாகையா லான்மஞானக் கிரி

யைகளுக்குத் தடையாய்நின்ற ஆணவமல நீங்கில் சிவனைப்போ லே கிருத்திய கர்த்தா வாவனென்னில்?—சிவனருட்சித் திவன ருளைச் சேருஞ்சித்து - சிவன் ஆனந்தப் * ப்ரதாபியானசித்து, ஆன்மா வந்த வாநந்தத்தை யனுபவிக்குஞ் சித்து,—அவன்றன் பவங்கெடு புத்திமுத்தி பண்ணுஞ்சித் தவற்றிற்படியுஞ்சித்து - சிவன்றன் ஜநந மரண போகமோக்ஷங்களை யுண்டாக்கும் ஞா னஸ்வரூபி, ஆன்மா விவையிற்றுக்களை யடையும் ஞானஸ்வரு பி,—அறிவிக்கப் படுஞ்சித்து மிவன்றன் - ஆன்மா சிவனறிவி ச்ச வறிகிற ஞானஸ்வரூபி,—அவன்றனே யறியுஞ்சித்து - சிவ ன் றனையறியு ஞானஸ்வரூபி,—ஆதலிருவிரண்டு மணைந்தாலு மொன்றுகா தநநியமாயிருக்கும் - இவ்வாறு ஜீவனுக்குஞ் சிவ னுக்கும் ஞானக்கிரியை வேறுபாடுண் டாதலான் முத்தியிலு மொன்றுவதில்லை, பிரிவற்ற வத்வைதமாயிருக்கும். அதெவ்வா றென்னில்?—இவன்றனும் புத்தியுஞ்சித் தவனுமோபுத்தி-ஆன் மாவும் புத்திதத்தவமுஞ் சித்தென்று சொல்லப்படுகையால் புத்தி ஆன்மாவோவென்னில்?—இறு அசித்தென்றிடில் அவனு க் கிவனுமசித்தாமே - புத்தி அசித்துருபமாகையால் சித்துருபி யான ஆன்மாவாகா தென்னில்? எக்காலமு மெல்லாத்தையு முள்ளபடி யோர் துணையுமின்றி யறியுஞ் சிவனைக்குறித்துப் பந் தத்திலே சிவன் மாயாகரணங்களைக் கூட்டி யறிவித்தபொழு தறிந்து மிவ்வாறறியாதபொழுது ஜடத்தோடுந் தன்னோடும் பேதமற நிற்கையால் ஆன்மா அசித்தென்று சொல்லுவதற்குப் போதுமென் றிதன்பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

சிவனுஞ் சீவனுஞ் சித் தொருசாதி யிருசித்துப் பொருளா

யிருக்குமென்ப திசையா தொரு சித்துப் பொருளொன் றுரைக்க மறுத் துணர்த்துகின்றார்.

சிவஞ்சீவ னென்றிரண்டுஞ் சித்து - சிற்பொருள் விபுப் பொருளு மாதலால் ஒன்றை விட் டொன்றிருக்குந் தானமுமில் லை. அதனால்,—ஒன்றாம்-ஐக்கியமாம்,—என்னில்- அமூர்த்தவி புப் பொருளொன்றுக் கொன்று தட்டா துள்ளும்புறம்பு மொ த்திருக்கும். அஃதிருக்க அந்தச் சீவ சிவைக்கியம் ஆதியானுன் நித்தியம், அநாதியானல் வேற்றுமைக்குறி விளம்பப்படாது. வேற்றுமைக்குறி கண்டோங் கேட்டோமாகி யிருவர்க்கும் வை க்கப்படும். அந்த வேற்றுமைக்குறி யாதோ வென்னில்:—சிவன ருட்சித்து - சிவனுக்குப் பரமுத்தி வியத்திக் குறியனுக்கிரகம் பண்ணுஞ் சித்து,—இவன் சிவனருளைச் சேருஞ் சித்து - அந்த ச் சிவானுக்கிரகத்தைச் சிவனிடத்தினின்றும் பெறுஞ்சித்து,— அவன்றான் - சிவன்றான்,—பவங் கெடு புத்தி முத்தி பண்ணுஞ் சித்து - சிருட்டி திதி சங்கார திரோபாவ பத முத்தி யனுக் கிர கங்களைப் பண்ணுஞ் சித்து,—அவற்றிற் படியுஞ் சித்து - அந்த ப் பஞ்ச கிர்த்திய பரதந்திரத்தி லகப்பட்டுக் கட்டுண்ணுஞ் சித் து,—அறிவிக்கப்படுஞ் சித்துமிவன்றான் - புத்தி முத்திக் கிரமத் திற் சாபேட்ச சிற்றறிவு நிரபேட்ச பேரறிவுகளினு லுணர்த்து விக்க யோக்கியமாகுஞ் சித்துஞ் சீவன்றான்,—அவன்றானே ய றியுஞ் சித்து- சிவன் சுவதந்தர அறிவன,—ஆதலினுலிரண்டும ணைந்தாலும் - முத்தியிற் சாயுச்சியமானாலும்,—ஒன்றுகாது - ஒரு பொருளாகாது,—அநந்யமா யிருக்கும் - அநந்ய சாயுச் சிய முதற் சம்பந்தச்சொ லிவ்விடத்துச் சாதிர்ச்சியப் பொ ருட் சொல்லாதலா லொத்திருக்கும். பந்தத்தில்,—இவன் றனு ஞ் சித்து புத்தியுஞ் சித்து,—சித்தெனும் வசன மாத்திரத்தி னுலே சித்தை விளக்குதலால், சிதநென் றுபசரிக்கப்படும்,—

புத்தியிவனுமோ- ஆகாது.—இது வசித்தென்றிடில் - புத்திசட
மென்னில்,—அவனுக்கு - சிவனுக்கு,— இவனும் - சீவனும்,—
அசித்தாமே - ஏகாரத் தெடுப்பினாலே யுபாதி தள்ளி ஸ்வரூப
லக்ஷணத்தினாலே சிவனுக் கொத்த சித்துத் தானே அசித்த
ன்று.

ஸ்வரூப லக்ஷணத்தினால் சித்துப்புத்தி தடத்த லக்ஷண
த்தினாற் சித்தென் றுபசரிக்கப் பட்டதுபோலப் பசுத்துவ மி
ருத்தலாற் றடத்த லக்ஷணத்தினாலே யசித்தென் றுபசரிக்கப்
பட்டது, முத்தியிலொத்த சித்தே.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

இருபொருளுஞ் சித்தேயாகலான் ஒத்தொன்றுமென்றலே
யமைவுடைத்தன்றி, உயிர்தானுஞ் சிவானுபவ மொன்றினுக்குமு
ரித்தேயென வேற்றுமைப்படுத்தக் கூறுதல் ஆண்டைக்கமையா
தாலெனின்? அற்றன்று. ஒளியென்னும் பொதுமையால் ஒத்
தொன்றுமாயினும் வியஞ்சகத்தையின்றி யமையாதா யதுவது
வாய் முந்திக் காணுங்கண்ணொளிக்கும் அதுபோலத் தனக்கொ
ரு வியஞ்சகம் வேண்டாது தானே வியஞ்சகமாய் எல்லாவ
ற்றையு மொருங்கே விளங்கிநிற்கு ஞாயிற்றினொளிக்குந் தம்மு
ள் வேற்றுமை பெரிதாயினாற்போல, சித்திரண்டற்குந் தம்மு
ளந்தரங்கவேற்றுமை பெரிதுமுண்மையான், அவ்விருபொருளு
ந் தம்முட் கூடியவழியும் அத்துவிதமாய் நிற்றலேயன்றி ஒன்று
ய்ப் போமாறில்லையென்பதாம்.

நீருநீரும்போல ஒத்தொன்றாய் நிற்குமென்னும் ஐக்கியவாதி
களை மறுத்தற் கெழுந்த விவ்விரண்டுசெய்யுளும், ஒத்து வேறாய்

நிற்குமென்னும் அருவசிவசமவாதிகளை மறுத்தற்கு முரிபவா
காண்க.

நிரம்பவழகியருரை வருமாறு.

சிவனுடன்கூடி யான்மா சிவானுபவத்தை யனுபவித்திரு
குமென்ற தெப்படி? ஆன்மசித்துஞ் சிவசித்துந் தன்னிற்கூடி
யொன்ருய் விடுகிறதே முத்தியென்ற வைக்கவாதியை நோக்கி
மறுத் தருளிச்செய்கிருர்.

சிவன்சீய னென்றிரண்டுஞ் சித்தொன்ரு மென்னில்- சி
னென்று சொல்லப்பட்ட முதலு மான்மாவென்று சொல்லப்ப
ட்ட முதலு மிரண்டுஞ் சேதனமாயிருக்கையா லொருமுதலென்
று நீசொல்லி லது கருத்தன்று. அதெனனெனில்?—சிவனருட்
சித் திவனருளைச்சேருஞ்சித்து - சிவனொன்றிலுந் தாக்காம லெ
ல்லாத்துக்குந் தாரகமாய் நிற்கிற ஞானமாகிய வறிவு, இந்த
வான்மா வந்தவருளைப் பொருந்தி யதிற் ருாகமாய்நிற்கிற வறி
வு.—அவன்ருன் பவங்கெடு புத்திமுத்தி பண்ணுஞ்சித்து -அந்தப்
பரமேஶ்வர னான்மாக்களுடைய ஜநநங்களைப் போக்குகைப்
பொருட்டாகப் புசிப்புக்களை யுண்டாக்கி யவற்றையுங் கன்மத்
துக்கீடாகப் புசிப்பித்துத் தொலைத்தவாறே மோக்ஷத்தையுங்
கொடுக்கிற வறிவு,—அவற்றிற்படியுஞ்சித் தறிவிக்கப் படுஞ்சித்
தமிவன்ருன் - அந்த ஜநந மரணங்களிலே பொருந்தி வருகிற
வறிவுமாய்ப் பரமேஶ்வர னறிவிக்க வறியுமதொழிந்து தானுக
வறிகிற வறிவுமல்லவா யிருப்ப னிந்தவான்மா,—அவன்ருனே
யறியுஞ்சித்து - அந்தப் பரமேஶ்வர னேககாலத்திலே தானுக
வறிகிற வறிவாகவிருப்பன்.—ஆதலினு லிரண்டு மணைந்தாலு
மொன்ருகா - ஆகையாற் சிவனு மான்மாவுங்கூடினாலு முத்தி

லு மொன்றுவதில்லை. ஆனாற் சிவனு மான்மாவுந் தன்னில் வே
யிருக்குமோ வென்னில்? அப்படி வேறுயிராது,— அநனிய
ாயிருக்கும்- ஆனாலுந் தன்னில் வேறற்றிருக்கும். இரண்டு சித்
மாய்த் தன்னில் வேறற்றிருந்தாற் றன்னிலொவ்வாதோ வெ
ினில்? ஒவ்வாது. அதெங்ஙனே யென்னில்?—இவன்றானும் புத்
புஞ்சித்து - இந்த வான்மாவு மிவனுடையபுத்தியு மிரண்டுஞ்
ேதனமாயிருக்கும். அப்படியிருந்தாலும்,—இவனுமோ புத்தி-
சேதனமாகிய புத்தி சேதனமாகிய வான்மாவாகாது.—இது
சித்தென்றிடில் - ஆன்மா வறிவுக்கறிவாயிருக்கிற புத்தி அசே
னமாமென்னில்?—அவனுக்கிவனு மசித்தாமே - முன்சொன்
வான்மாவுக்குப் புத்தி யசேதனமான முறைமைபோல அந்
ச் சிவனுக் கிந்த வானமாவுஞ் சேதனனாயினு மசேதனனா
ப யிருப்பன்.

இதற்குப் பிரமாணம் சங்கற்பநிராகரணம் ஐக்கியவாதி
றுப்பு "அறிவிற்கறிவு செறியவேண்டின்றே - யுண்மையிரு
மயு மொளியேயெடனிலொரு - தன்மையாகமுன் சாற்றினில
ர்" என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, சிவனுமான்மாவு மறிவாயிருந்தா
ம் பலபிரகாரத்தாலும் ஒன்றுகாதென்றும், அப்படியொன்று
ாம விருந்தாலும் வேறற்றிருக்கு மென்றும், ஆன்மாவும் புத்
புமறிவாயிருந்தாலும் ஆன்மாவுக்குப் புத்தி யசேதனமாயிரு
தமென்றும், அத்தன்மைபோலச் சிவனுக்கு மான்மா வசே
னமா யிருக்குமென்னு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

சிவன்சீவ னென்றிரண்டுஞ் சித்தொன்று மென்னில்-சிவன் சீவனென்கிற விருபொருளுஞ் சித்தேயாகலான் ஒத்து ஒன்று மென்றலே யமைவுடைத்தன்றி, உயிர்தானுஞ் சிவானுபவ மொன்றினுக்கு முரித்தேயென வேற்றுமைப் படுத்துக் கூறுதல் அன்டைக் கமையாதா லெனில்? அற்றன்று,—சிவனருட்சித்து இவனருளைச் சேருஞ்சித்து-சிவ னருளாகியசித்தாம், சீவனவ்வருளைச் சேருஞ்சித்தாம்,—அவன்பவங்கெடு புத்திமுத்தி பண்ணுஞ் சித்து அவற்றிற்படியுஞ்சித்து-அம்முதல்வன் பவத்தினைக் கெடுத்துப் புத்திமுத்தியினை யளிக்குஞ் சித்தாம், உயி ரவைகளிலழுந்துஞ்சித்தாம்.—அவன்றானே யறியுஞ்சித்து இவன்றா னறிவிக்கப்படுஞ்சித்து - முதல்வன்றானே யறியுஞ்சித்தாம் உயிர் அறிவிக்க அறியுஞ்சித்தாம்,—ஆதலினாலிரண்டு மணைந்தாலு மொன்றாகாது அன்னியமாயிருக்கும்-ஒளியென்னும் பொதுமையா லொத்து ஒன்றாமாயினும் வியஞ்சகத்தையின்றி யமையாதா யது வதுவாய் முந்திக்காணுங் கண்ணொளிக்கும் அதுபோலத் தனக்கோர்வியஞ்சகம் வேண்டாது தானேவியஞ்சகமாய் எல்லாவற்றையுமொருங்கே விளக்கிநிற்கு ஞாயிற்றி னொளிக்குந் தம்முள்வேற்றுமை பெரிதாயினாற்போலச் சித்துஇரண்டற்கும் தம்முள் அந்தரங்கவேற்றுமை பெரிதுமுண்மையா னவ்விருபொருளுந் தம்முட்கூடிய வழியும் அத்துவிதமாய் நிற்றலேயன்றி யொன்றாப்போமா றில்லை யாதலான்,— இவன்றானும புத்தியுஞ்சித் திவ னாமோபுத்தி - உயிரும் புத்திதத்வமும் சித்தெனக் கூறப்படினும் புத்திதத்வமும் உயிராதலில்லை.—இது அசித்தென்றிடிலவனுக் கிவனுமசித்தாமே - புத்தித்துவஞ் சடமெனறிடி னே

ளை தத்துவங்களைநோக்க வுயிர் சித்தேயாயினும் முதல்வனை நோக்க வுயிர் அசித்தேயாம்.

நீரும் நீரும்போல வொத்தொன்றாய் நிற்குமென்னு மயிக்யவாதிகளை மறுத்தற்கெழுந்த விவ்விரண்டு செய்யுளும் ஒத்து வேறாய் நிற்குமெனனும் அருவசிவ சமவாதிகளை மறுத்தற்குமுரியவாறு காண்க.

மறைஞானதேசிகர் உரை.

இதற்கு மீளவுமவ னுன்மாவையே சித்தென்பீராகின் முத்தியிற் சிவனுற் பிரயோசனமில்லை யெனறு சொல்ல அதற்குதாரணமுகத்தா லுணர்த்து கின்றார்.

இரும்பைக் காந்தம் வலித்தாற்போ லியைந்தங்
குயிரை யெரியிரும்பைச் செய்வதுபோ லிவனைத் தா
னாக்கி, யரும்பித்திந் தளைத்தையன லழிப்பதுபோன் ம
லத்தை யறுத்தமல னப்பணைந்த வுப்பேபோ லணைந்
து,விரும்பிப்பொன் னினைக்குளிகை யொளிப்பதுபோ
லடக்கி மேளித்துத் தானெல்லாம் வேதிப்பானுகிக்,
கரும்பைத்தே னைப்பாலைக் கனியமுதைக் கண்டைக்
கட்டியையொத் திருப்பனந்த முத்தியினிற்கலந்தே. (கஉ)

(இ-ள்) இரும்பைக்காந்தம் வலித்தாற்போ லியைந்தங்குயிரை	தானாகப்பற்றுந் தன்மையில்லாத விரும்பைக் காந்தந் தன்னகத்து வலித்துக் கொள்வதுபோல அமலனு மிந்தவான்மாவைத் தன்வசத் தாக்கிக்கொண்டு. இது சிவ னிவனைத் தன்வசத்தாக்குத லென்பதற் குதாரணம்.

எரியிரும்பைச் செய்வதுபோ லிவனைத் தானாக்கி — அங்கியானது தன்னைவந்தடைந்த விரும்பானதை எப்படித் தன் செய்தியாக்கிக் கொண்டாற்போலச் சிவனுந் தன்னை வந்தடைந்த வான்மாவைத் தற்சொரூபமாக்கிக் கொண்டதென வுவமித்தது.

அரும்பித்திந்தனத்தைய னலழிப்பது போன் மலத்தை யறுத் தமலன் — அக்நியானது தன்னைத்தெரியாமல் மறைத்துநிற்கிற காட்டத்தின்கண்ணுதிக்கவு மந்தவச்நிதானே காட்டமென்னும் பெயரை யழித்து நின்றமுறைமைபோல. நின்மலனான சிவனுடன் கூடினவான்மா மாயாகாரியமாகிய மலத்தாற் றனுவாதியை யெடுத்துக் கொண்டு தன்னைத் தெரியவொட்டாமல் மறைத்திருக்கிற மலங்களை யகற்றியதற்குதாரணம்.

அப்பணைந்தவுப்பேபோலணைந்து — உப்புக்கட்டியானது சலத்துடன் கூடினபொழு தெப்படி யுப்பென்னுந் தன்மை கெடாமல் வேறறக்கலந்திருக்கு மதற்குதாரணங் கூறியதாயிற்று.

விரும்பிப் பொன்னினைக்குளிகை யொளிப்பதுபோ லடக்கி — யாவரானும் விரும்பப்பட்ட விரதகுளிகையான தெப்படி பொன்னினுடைய வியல்பைக் காண்பியாமல் குளிகைதானே வியாபித்துத் தானே மேலிட்டு நிற்குமாறுபோல. சிவனு மிந்த வான்மாவையுந் தன்வசத்தாக்கித் தானே மேற்பட்டு நிற்குமதற் குவமித்தது.

மேளித்துத் தானெல்லாம் வேதிப்பானாகி — இத்தன்மையை யுடையனா யானந்தத்தைப் பொருந்தித் தானெல்லாத்தையு மறிவிக்குந்தன்மையையுடைய முத்தியின்கண்.

கரும்பைத்தே னைப்பாலைக் கனி யமுதைக் கண் டைக் கட்டியை யொத் திருப்ப னந்தமுத்தியினி ற்கலந்தே.

கருப்பஞ்சாறுமுதலிய விரதத்தையொத்திருக்கு மிவ்பத்தை யான்மாவானவ னந்தமுத்தியைப் பொருந்தியிருப்பன்காண் எ-று. (சஉ)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

—o—

மேல் ஜீவன்முத்தி யேமுவிதமுங் கூறுகின்றது.

சிவன்,இரும்பைக் காந்தம் வலித்தாற்போ லியைந்தங் குயிரை-சிவன் பிரபந்தனான ஆன்மாவைக் காந்தமிரும்பை விகாரமன்றியிலே தன்வசத்தாக்கிக் கொண்டதுபோல பிரபந்தனான ஆன்மாவை விகாரமன்றித் தன்வசத்தாக்கிக்கொண்டவனுக் கோரிச்சையுந் தொழிலுமன்றி யெல்லாந் தனது செயலேயாக நிற்பன்.—எரியிரும்பைச் செய்வதுபோ லிவனைத்தனாக்கி-ஆன்மா தத்தரிசனமாய் மேலொரு செயலுமின்றிச் சிவஞானததினாலே ஆன்மசுத்தியாய் நின்றவனை யிரும்பிலே அக்நியதிஷ்டித்துச் சுடுதல்முதலான தொழில்களைச் செய்வதுபோலச் சிவன அதிஷ்டித்துத் தனது கிருத்தியமான வைந்தொழில்களையுஞ் செய்வன். அப்பொழுது இரும்பு சுடுகிறதென்றதுபோல ஜீவன்முத்தரா யிருக்கிற வின்னு ரின்னகிருத்தியத்தைச் செய்கிறாரென்று சொல்லப்படும்.—அரும்பித திங்கனைதகை யனலழிப்பதுபோல் மலத்தை யமலனறுத்து-ஆன்ம சுத்திகருமேல் சிவதரிசனப்பட்ட வான்மாவி னிடத்திலே காஷ்டத்திலே முன் மறைந்திருந்த வக்நியானது பிரகாசித்துக் காஷ்டத்தினு

ளுடைய தன்மையைக் கெடுத் தக்நியாய் நின்றதுபோலச் சிவன் பிரகாசித்துப் பசுத்துவத்தைக் கெடுத்துத் தனதுமயமாக்கி நிற்பன்.—அப்பினைந்த வுப்பேபோ லிணைந்து - சிவதரிசனாநந்தரம் சிவயோகத்தை யடைந்து ஆன்மாவைச் சலத்தினுடனே கூடின வுப்பானது சலத்தினுடைய ருசியையடக்கித் தனது ருசியாய் நின்றதுபோலச் சிவனு மான்மாவைத் தனது தன்மையுளடக்கித் தானாக நிற்பன்,— விருப்பிப் பொன்னினைக் குளிகை யொளிப்பதுபோ லடக்கி - சிவபோகமாகநின்ற ஆன்மாவை, மிகவுஞ் சங்கோசித் தருக்கிக் கொடுத்தபொன்னை ரசகுளிகை பருகி பொன்கெடாமலிருக்க அதநிறத்தை மறைத்துத் தனநிறமாகவே காட்டிநின்றதுபோல் சிவானந்த மான்மாவுக்கு அநந்நியானுபவமாகவே செய்து காட்டாகவுங் காண்பதாகவுமாயிருக்கிற ஞானத்தையடக்கி,—மேலளித்து-காட்சியிறந்து நின்ற ஆன்மாவைப் புரைவறக்கலந்து,—தானெல்லாம் வேதிப்பானாகி - ஞாதுருஞானஞேய மூன்றும் நழுவ ஆனந்த பரவசனாகிய ஆன்மா தானேயாகநிற்பன். இவ்வாறுமுத்தியே யபேதமாகில் சிவாநந் தானுபவ மொருபடித்தோ பேதமுண்டோவெனில்? பேதமுண்டென்பது,—கரும்பைக் கனியைப் பாலைத் தேனைக் கண்டைக் கட்டியை யமுதை யொத்திருப்பனந்த முத்தியினிற்கலந்தே - இந்தச்சொன்ன வேறுபேத பதார்த்தமு மதுர ரசமேயாயிருக்கவும் பேதமுள்ளதுபோலச் சிவாநந்தமும் பேத முண்டு. அவைவருமாறு,—கரும்பிலே கடினமாகிய கோதும் அற்ப மதுரமான சாறும் போலச் சிவபாவமதிகமுஞ் சிவபாவமற்பமும் அதனால் விஷயானுபவ காலமதிகமுஞ் சிவானந்தானுபவகால மற்பமும், பழத்திலே கொட்டையுந் தோலு மதிகமும் சாறு அற்பமும்போல சிவபாவ மதிகமுஞ் சிவபாவ மற்பமுமாய்க் கரும்பிற் கடினமில்லை, பாலிலே தண்ணீர்ப்பங்கு மூ

ன்று பாலினுடைய பங்கொன்று கடினமேயில்லை, தேன் தித்திப்பும் புளிப்பு மிருவகைரசம், கண்டிசகு ரசமும் ரூபமுமொன்றே கடின முண்டு, கட்டி மதுர ரூபமேயாகிக் கடினமன்றி யுடனேகரையும், அமிருத முன்சொன்ன தியாச்சிய கடினரசாந்தர ரசங்க ளில்லாமல் சுத்த மதுரமாயிருக்கும், அப்படியே யந்த முத்தியெனபது. முடிவான மோக்ஷமுத்தி யதிலே யமிருதமென்றும் மதுரமென்றும் பேதமில்லாதது போல சிவனுன்மாவைப் புணர்வற விளைவிகிற்பன், இவயிற்றுக்களை யனுபவத்தினுலே யறிவதன்றி வாச்சிய வாசகத்தினுலே யறிவதன்றென்றிதன்பொருள்.

தது₃க்தம் [illegible] — [illegible]
[illegible] நாவவஸ்தித: | [illegible]
[illegible] காயகாரண வர்ஜித: ||

ஞானப்பிரகாசருரை முற்று.

—— o ——

சிவன் சீவனுக்குப் பரமுத்தி பண்ணும் பரிசு பகர்கின்றார்.

நல்ல துமதாசாரியர் படல பாடன வாசனு மார்ச்சன மாத்திரத்தினுல் வைத்தியனுகிய நிமித்த கர்த்தாவால் கண்ணொளி விளங்குவதுபோல மல பாடன வாசனு மார்ச்சன மாத்திரத்தினுற் சிவனுகிய நிமித்த கர்த்தாவாற் சிவத்துவம் விளங்குமென்று பிறர் மதம் மறுக்குமொரு சுத்தாத்துவைத சித்தாந்த திருஷ்டாந்த வார்த்தை செப்பாது பிறர் மத திருஷ்டாந்தப் பேச்சுப் பேசிய தேது? அஃதாவது.

இரும்பைக் காந்தம் வலித்தாற்போல் விசைந்தனுவிரை –

என்றது முத்தியிலுஞ் சுதந்தரிய மில்லை யெனும் பிரயோச்சிய கர்த்திருத்துவ வாதி மததிருட்டாந்தமாம்,—

எரியிரும்பைச் செய்வதுபோ லிவனைத் தானாக்கி - என்றது சிவாவேசஞ் செப்புங் காபாலமத திருட்டாந்தமாம்,—

அருளித் திந்தனத்தை யனலழிப்பது போல் மலத்தை யழித்து-என்றது காட்டத்தால் மறைப்புண்டு கடைய முசிழ்த் தெரியிந்தனத்தை யெரித்தழித்தலால் மலமழிக்குஞ் சிவனுக்கு மறைப் பில்லாமைபாற் கடைபவனுக் கொப்புச் சிவன்,காட்டத்தில் மறைந்திருந் ததித்த வன்னி போல் மலத்தில் மறைந்திருந் துதிக்கு முயிர் சிவத்துவ மாகையால் விஷம திருட்டாந்தமாம். அல்ல தான்மா ஞானத்தால் முத்தியை முயலும் விவர்த்த வேதாந்திமதம் மலம்போ முத்திவாதிமத மிருவர் மததிருட்டாந்தமாம்,—

அமலன அப்பனைந்த வுப்பேபோலணைந்து-என்றது விசிட்டாத்துவைதம் விளம்பும் ராமாநுஜமத திருட்டாந்தமாம்,—

விரும்பிப் பொன்னினைக் குளிகை பொளிப்பதுபோ லடக்கி - என்றது நாராயணப் பிரகிருதி யிலயவாதி பாஞ்சராத்திரமத திருட்டாந்தமாம்,—

மேளித்துத் தானெல்லாம் வேதிப்பானாகி -என்றது சிவகுண சங்கிராந்தி சொல்லும் பாசுபத மததிருட்டாந தாபாசமாம்,—

கரும்பைத் தேனைப் பாகைக் கனி யமுதைக் கண்டைக் கட்டியை யொத்திருப்பன்-என்றது சாங்கியதேசி சத்துவ சமயோகவாதி மததிருட்டாந்தமாம்,—

முத்தியினிற் கலந்தே- என்றது கண்டைக் கட்டியை யொத்தென்றதை யிங்கு மிசைத்துக் கலந்தே யிருப்ப னென்பர், பரிணாத வேதாந்தமத திருட்டாந்தமாம். இப்படியிருக்க எப்படிச்

சிவசித்தாந்தப் பொருளுரை நீருரைப்பீர்? சத்தியம் நீ சாற்றியது. நமதாசாரியர் முற்றுவமை யுன்னிச் சொன்னவரன்று; ஒருபுடை யொப்புநவகம் சுருதி யுரைத்தாராதலால். மலவசமாகி மயங்கு முயிரைத் தன்வசமாக்கி மலமுத்தி பண்ணிச் சிவத்துவாபி வியத்தி விளைதனுத் தனக்கொப்புவித் தேவுத லியற்றுதற் றன்மைச் சம்மந்தஞ் சற்று முற்றிராது முற்றுமறுத்துச் சித்துச் சிவசாதிபாக்கி பொத் தொருமித் திரசித்துச் சிவசாதிக் கலப்பாயிருப்பானென் றிசைய வினிதாய்ப் பொரு ளிசைவிப்போம்.

குளிகை-பொன்னைத் தனக்குட் கரக்கு மிரத குளிகை,—மேளித்து - மிச்சிரமித்து,—வேதிப்பானுகி - தன்மய மாக்குவானுகி.

மற்றைய வெளிப்பொருள்.

இதனாற் கரும்பைத் தேனை பென்பன முதலியவும் மதங்கத்திற் சொல்லிய வெழுவகை முத்திக்குத் திருட்டாந்தமா மென்றுஞ் சீவனுக் கியற்கையாய்ச் சிவத்துவ மில்லை சிவ வியத்திக் கலப்பினுற் செயற்கைச் சிவத்துவஞ் சித்திக்குமென்று முறையுரைக்குஞ் சிலர் மதந் திக்கற்றுப்போயின.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

காந்தம் விகாரமின்றிநின்றே இரும்பை வலிப்பவுங் கண்டாம், அதுபோல இறைவனும் விகாரமின்றியே உயிரைத் தன்வழிப்படுத்துநிற்பனுகலாற் சென்ற ளையுகிழல்போலச் சிவனில்லாமைபற்றிச் சிவன் நிருவிகாரியாதற் கிழுக்கில்லை. எரி இரும்பைக் கெடுத்தலின்றிக் தன்வண்ணமாக்கித் தன்வண்ணமாக்குதற் குரித்தாகாது இவ்விரும்பின்கணுடன் ருேன்றிநிற்கும்

கரைமாத்திரங் கெடச் செய்யும், அதுபோல இறைவனும் உயிரைத் தன்வண்ணமாகச் செய்து தன்வண்ணமாக்குதற் குரித்தாகாது அவ்வுயிரின்கண்ணுடனொன்றி நிற்கு மலமாத்திரங் கெடச் செய்யுமாகலால், பொன்னாகை முத்தியாகாமைபற்றி பொன்னாதற் கிழுக்கில்லை. நீரோடு சேர்ந்தவுப்புத் தன் சுவை முழுவதுமந் நீர்க்காக்கித் தன்னோடொப்பச் சமஞ்செய்து நிற்கும், அதுபோல உயிரைச் சேர்ந்தவிறைவனுந் தனக்குரிய எண்குணங்களையும் அவ்வுயிரின்கட் பதிப்பித்துத் தன்னோடொப்பச்செய்து நிற்பனாகலான், நீரொடுநீர் சேர்ந்தாற்போலல்லாமைபற்றிச் சிவசமமாதற் கிழுக்கில்லை. இரசகுளிகை செம்பையுருக்கித் தன்னோடு கூட்டி வேதித்துப் பொன்னாகச் செய்தும் பொன்னியல்பைக் காட்டாது தன்னுளடக்கி நிற்குமாறுபோல இறைவன் உயிரையவ்வாறெல்லாஞ் செய்தும் அதனியல்பு சிறிதுந் தோன்றாதறிவிறந்து நிற்குமாறு தனது வியாபகத்துளடக்கி நிற்குமாகலான், அப்பணைந்த வுப்பேபோலணைந்து ஒப்பச் செய்தமைபற்றி உம்பர்பிரானொருவனே உற்பத்தியாதிகளுக் குரியனாதற் கிழுக்கில்லை. கருப்பஞ்சாறு முதலிய சுவைப்பொருளெல்லாம் ஒன்றாகக் கலந்தவழியுளதாகிய சுவை இவ்வியல்பிற்றெனப் பிரித்தறிய வாராமைபோல, இறைவனு முயிரின்க ணொன்றாகக் கலந்தவழி இவ்வியல்பிற்றெனப் பிரித்தறிய வாராத ஆனந்தசொரூபமாய் நிற்பன்; ஆகலான் அறிவிறந்து நிற்றல்பற்றி உயிர்தானுஞ் சிவானுபவமொன்றினுக்கு முரித்தாதற்கு இழுக்கில்லையென்பதாம்.

சென்றணையு நிழல்போலச் சிவனிற்பனென்பதமுதலாகக்கூறு மவ்வாதிகளை மேலோராறுத்தவழி அவர்கூறுமாசங்கைகளை முறையேபரிகரித்துச் சித்தாந்தம் வலியுறுத்தற் பொருட்டு இங்ஙனம் வெவ்வேறுவமைகளின் வைத்துக் காட்டி ஒருங்கு கூறியவாறு.

மலரடிக்கீழ் வைப்பனெனவும், பாதநிழற்கீழ் நிற்கவெண வும், ஏகனாகி நின்றிடவெனவும், அரன்மலரடிக்கீழிருப்பனெ னவுங் கூறிய இந்நான்கு சூத்திரங்கட்குந் தம்முட் பொருள் வேற்றுமையில்லைப்போலுமென மயங்காமைப் பொருட்டு இறு திக்கண் ணவற்றைத் தொகுத்தெடுத்துக்கொண்டு இவ்வாறு மு தலிய நான்காக வகுத்து வைத்துணர்த்திய வாறுமாம்.

நின்மலசாக்கிரமுதலிய ஐந்தவத்தையுந் தெரித்துக் கூறிய வாறென்றலு மொன்று.

மதங்கத்துட் கூறப்படுமெழுவகை சூத்திரங்களைவகுத்துக் கூ றியதென் றுரைப்பாரு முளர்.

இத்தரும் பிந்தனமெனவும் ஆகியடக்கிடெனவும் கலந்தொ த்தெனவு மிடையும்

இத்தொகைப்புழி அன்சாரியையும் இல்லுருபும் விகாரத்தாற் றொக்கன.

அனலா னாக்கப்படுத லொப்புமைபற்றி இரும்பின் க றையை இந்தனமாக வுருவகஞ்செய்தார்.

அணைந்தெனக் காரியத்தைக் காரணமாக வுபசரித்தார்.

மேளித்தல் கூட்டுதல்.

ஆகியுமெனச் சிறப்பும்மை விரித்துரைக்க.

கலந்தவழியென்பது கலந்தெனத் திரிந்து நின்றது.

அரும்பித்திந்தனத்தை அனலழிப்பதுபோ லென்பதற்கு இவ்வாறுரைக்க வறியாது விறகின்மேல் வைத்து உரைப்பாருமு ளர்.

விறகையழித்தற்கட்படும் விசேடமின்மையானும், ஏனை யபோல உயிரோ டியைபுடைத்தாதற்குரிய வுவமையின்மையா னும், அரும்பித்தென வொருசொல் லின்மையானும், அவ்வுரை போலியென்றொழிக.

அல்லதூஉம், தீஇரும்பைச் செய்வதுபோற் சிவன்றன்னைப் பந்தனையை யறுத்துத் தானாக்கியென அறுத்தல் ஆக்குதலிரண்டும் இரும்பினமேல் வைத்தே மேற்கூறிய வாசிரியர்க்கு ஈண்டுமதுவே கருத்தாதலுணர்ந்துகொள்க.

மேளித்துக தானெல்லாம் வேதிப்பானாகி என்றதனை அடக்கியென்பதனோடியையாது வேறுவைத்துரைப்பின், ஏனையவற்றிற்கெல்லாம் உவமை தனித்தனி யெடுத்துக்காட்டி இஃது மாத்திரைக் குவமை கூறாமை குன்றக்கூறலாய் முடியுமெனவொழிக.

இவ்வைந்து செய்யுளானும் இரண்டாங் கூற்றிற்கு அவ்வமதம் பற்றி நிகழுமாசங்கைகளைப் பரிகரிக்குமுகத்தாற் சித்தாந்தங் கூறப்பட்டது.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

இப்படி முன் சொல்லிவந்த பல பிரகாரத்தாலுஞ் சிவனானது திருவடியைப் பொருந்துகிற பக்குவான்மாக்களைத் தனது திருவடியிலே கூட்டிக்கொள்ளுகிற முறைமையு மவ்விடத்தி லுண்டாகிய கலப்பு மெப்படியென்ற மாணாக்கனை நோக்கி மேலருளிச் செய்கிறார்.

இரும்பைக்காந்தம் வலித்தாற்போ லிசைந்தங்குயிரை-காந்தமானது ஒரு பணியாகிநின்று தன்வசத்திலே யிரும்பை வலித்துக் கொண்டாற்போலத் தன்னை வழிபடுகிறவர்களைச் சிவனுந் தனது திருவடியிலே கூட்டிக்கொண்டு,—எரியிரும்பைச் செய்வதுபோ லிவனைத்தானாக்கி-அக்கினியைச் சேர்ந்த விரும்பை யக்கினி தானாக்கினாற்போலத் தன்னைப்பொருந்தின வான்மாவை

யுஞ் சிவனுங்காணுக்கி,— அரும்பித் திந்தனத்தை யனலழிப்பது போல் - காட்டத்திலக்நிதோன்றி அந்த அக்நிதானே காட்டமென்கிற பெட்டை யழித்துப்போட்ட முறைமைபோல,—மலத்தையறுத்தமலன்-ஆன்மாவினிடத்ததிலே பிரகாசித்து அந்த நின்மலனாகிய சிவன் முனே ஆன்மாவினுடைய மலங்களைப் போக்கி,—அப்பணைந்த வுப்பேபோலணைந்து-நீரோடுகூடின வுப்பென விஞ்சிக்கமாட்டாம லந்த நீரிலே கூடாமை கிடக்கத் தற்சொரூபந் தோன்றாமல் நின்ற தன்மைபோல வான்மாவையுஞ் சிவன் சாயுச்சியத்திற் றன்னுடன் கூட்டிக்கொண்டு,—விரும்பிப் பொன்னினைக் குளிகையொளிப்பதுபோ லடக்கி - விருப்பத்துடனே குளிகையானது பொன்னினைந் தொன்றாகாம லப்பொன்னைக் கிரகித்துக்கொள்ளுகிற முறைமைபோ லான்மாவையுஞ் சிவன் சிநேகத்துடனே தன்னிடத்திலேகிரகித்துக்கொண்டு,—மேளித்துத் தானெல்லாம் வேதிப்பானாகி - இங்ஙனஞ் சொல்லப்பட்ட முறைமைக ளெல்லாத்தாலுஞ் சிவ னான்மாவை மேற்படுத்தித் தற்போதத்தையும் போக்கிச் சிவபோதமேயாக்கித் தன்னிடத்திலே யொன்றுபடுத்திக்,—கரும்பைத் தேனைப் பாலைக் கனி யமுதைக் கண்டைக் கட்டியை யொத்திருப்பனந்த முத்தியினிற்கலந்தே - கரும்பையுந் தேனையும் பாலையும் பழத்தையும் அமுதத்தையுங் கற்கண்டையுங் கருப்புக் கட்டியையும் புசித்தவர்களுக்குள்ள சுகத்தையொத்த முடிந்த முத்தியாகிய சாயுச்சியத்தைப் பெற்றுச் சிவஞானிக ளனுபவிக்கும்படியவர்களிடத்து வேறற்றுச் சுகஸ்வரூபியாயிருப்ப னந்தச்சிவன்.

இதற்குப் பிரமாணம் சிவஞானபோதம். ௧௧-சூ, ௪-வெ, “மன்னுமிருளை மதிதுறந்த வாறனபின், மன்னு மரனே மலந்துறந்து—தன்னின், வலித்திரும்பைக் காந்தம் வசஞ்செய்வான் செய்தல், சலிப்பில் விகாரியலன் றான்” என்றும், “ அப்பணைந்தவுப்

பினுளமணைந்து சேடமாங்-கப்பின்ரு மீசன்சுழல்" என்னுமதுங் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது, சிவஞான்மாக்களைத் தன்னிடத்திலே கூட்டிக்கொள்ளுமிடத்துத் தனக்கொரு விகாரமற நிற்கிறது இரும்புங் காந்தமும்போலவென்றும், தானாகிறதுக் குவமை அக்நியு மிரும்பும்போலவென்றும், மலத்தைப் போக்கிறதற் குவமை காட்டத்திற்றோன்றின நெருப்பு காட்டத்தைச் சுடுகிற தன்மைபோலவும், அளவு விஞ்சாமலான்மாச் சிவனுட் நிற்கிற முறைமை அப்பைச் சேர்ந்த வுப்புப்போலவும், இவனை யுள்ளடக்கிக்கொண்டு நிற்கிற முறைமை பொன்னைக் குளிகையான தன்னுள்ளடக்கிக்கொண்டு நின்ற முறைமைபோலவும், இங்ஙனஞ் சொல்லப்பட்ட முறைமைகளாலே யிவனைத் தானாக்கிக் கரும்பு முதலான சுவைகளைப்போல சாயுச்சியத்தி லான்மா வுடனே யிரண்டறக் கலந்து சுகஸ்வரூபியா யிருப்பனென்னு முறைமையு மறிவித்தது

———o———

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

———o———

காந்தம் இரும்பை வலித்தாற்போலன்றுயிரை யடைந்து— காந்தம்விகாரமின்றி நின்றே யிரும்பை வலிப்பவும் கண்டாம், அதுபோல விறைவனும் விகாரமின்றியே யுயிரைத் தன்வழிப்படுத்து நிற்பனாகலாற் சௌறனைய நிழல்போலச் சிவனில்லாமை பற்றிச் சிவனிருவிகாரியாதற் கிழுக்கில்லை,— எரியிரும்பைச் செய்வதுபோ லிவனைத்தானாக்கி யிரும்பித் திங்கனத்தை யனலழிப்பதுபோன் மலத்தை யறுத்து - எரியிரும்பைக் கெடுத்தலின்றித் தன்வண்ண மாக்கித் தன்வண்ணமாக்குதற் குரித்தாகாது இவ்விரும்பின்கணுடன் றோன்றி நிற்கும் களைமாத்திரங்

கெடச்செய்யு மதுபோல விறைவனு முயிரைத் தன்வண்ண மாகச்செய்து தன்வண்ணமாக்குதற் குரித்தாகா தவ்வுயிரின்க ணுடனூன்றிநிற்கு மலமாத்திரம் கெடச்செய்யு மாகலான் பொன்றுகை முத்திபாகாமைப்பற்றி யொன்றுதற் கிழுக்கில்லை,—அப்பனைந்த வுப்புப்போல விருப்பியமலனனைந்து-நீரொடு சேர்ந்த உப்புத் தன்சுவையுமுழுவது மந்நீர்க்காக்கித் தன்னுடொப்பச் சமனசெய்து நிற்குமதுபோல வுயிரைச்சேர்ந்த இறைவனுந் தனக்குரிய எண்குணங்களையு மவ் வுயிரின்கட் பதிப்பித்துத் தன்னோடொப்பச் செய்து நிற்பனாகலான் நீரொடுநீர்சேர்ந்தார்போலல்லாமைப்பற்றிச் சிவசமமாதற் கிழுக்கில்லை,—குளிகையொளித்துப் பொன்னினை யடக்கியொளிப்பதுபோல் தானெல்லாம் வேதிப்பானுகி-இரதகுளிகை செம்பையுருக்கித் தன்னொடுகூட்டி வேதித்துப் பொன்னுகச்செய்தும் பொன்னியல்பைக்காட்டாது தன்னு ளடக்கி நிற்குமாறுபோல இறைவனுயிரை யவ்வாறெல்லாஞ் செய்து மதனியல்பு சிறிதுந் தோன்றுது அறிவிறந்து நிற்குமாறு தனது வியாபகத்து ளடக்கி நிற்குமாகலானப்பனைந்த உப்பேபோலனைந்து ஒப்புமை செய்தமைப்பற்றி உம்பர்பிரானுருவனை யுற்பத்தியாதிகளுக் குரியனாதற் கிழுக்கில்லை,—கருப்பைத்தேனைப் பாலைக் கனியமுதைக்கண்டைக் கட்டியைபொத்து முத்தியினிற்கலந்து இருப்பன் - கருப்பஞ்சாறு தேன் பால் கனி அமுது கற்கண்டு சருக்கரை முதலிய சுவைப்பொருளெல்லா மொன்றுகக் கலந்தவழிப்புளதாகிய சுவை யிவ்வியல்பிற்றெனப் பிரித்தறிய வாராமைபோல இறைவனு முயிரின்கண் அங்ஙனம் கலந்தவழி யிவ்வியல்பிற் றெனப் பிரித்தறியவாராத ஆநந்த சொரூபமாய் நிற்பனாதலின் அறிவிறந்து நிற்றல்பற்றி யுயிர்தானுஞ் சிவானுபவம் ஒன்றினுக்கு முரித்தாதற் கிழுக்கில்லை யென்பதாம்.

சென்றணையு நிழல்போலச் சிவனிற்பன் என்பது முதலாகக்கூறு மவ்வாதிகளை மேலே மறுத்தவழி யவர்கூறு மாசங்கைகளை முறையே பரிகரித்து சித்தாந்தம் வலியுறுத்தற் பொருட்டு இங்ஙனம் வெவ்வேறு உவமைகளின் வைத்துக்காட்டி யொருங்கு கூறியவாறு.

இவை ஐந்துசெய்யுளானும் இரண்டாங்கூற்றிற் சவ்வமதம்பற்றி நிகழு மாசங்கைகளைப் பரிகரிக்குமுகத்தாற் சித்தாந்தம் கூறப்பட்டது.

☞ கக-சூ, உ-ம், அதிகரண முடிந்தது.

பதினோராஞ் சூத்திரம் முற்றிற்று.

"கரமங்கிராறும்"
என்ற பதினோராஞ் சூத்திரம்

பன்னிரண்டு முற்றிற்று.

பாயிரமுட்பட நஉக.

சிவமயம்.

சிவஞான சித்தியார் சுபக்ஷம்.

கஉ—வது, அடியவர் இலக்கணம்.

மறைஞானதேசிகர் உரை

மேற்பன்னிரண்டாஞ் சூத்திர மென்னுதலிற்றோ வெனின்? முன் சொன்ன வுண்மையானு மதனைபின் சொன்ன வுபாயத் தானுஞ் சிவனை யுணர்ந்த ஞாதாக்கள் தமது முதலெனக் கருதிநிற்கு முறைமை யுணர்த்துத னுதலிற்று.

மேல் இத்தலைச்செய்யுள் என்னுதலிற்றோ வெனில் பிரமா முதலாயினோரால் சிந்திக்கப்படாத பதியை யிந்தச் சீவன்முத்தர் சிந்திதனுகக் கண்டு வழிபடுமாறு உணர்த்துதனுதலிற்று.

செங்கமலத் தாளிணைகள் சேரவொட்டாத் திரிம
லங்க ளறுத்தீச னேசரொடுஞ்செறிந்திட், டங்கவர்தந்
திருவேட மாலயங்களெல்லா மரனெனவே தொழுதி
றைஞ்சி யாடிப்பாடி, யெங்குமியாமொருவர்க்கு மெளி
யோமல்லோ மியாவர்க்கு மேலானோ மென்றிருமாப்
பெய்தித், திங்கண்முடி யாரடியா ரடியோமென்று திரி
ந்திடுவர் சிவஞானச் செய்தியுடையோரே. (க)

(இ-ள்.) செங்கம செங்கமலம்போன்ற சிவனது சீர்பாத லத் தாளி மாகிய வாநந்தமாகிய சுவானந்தானு பூதி

னைகள்சேர வொட்டாத் திரி மலங்க ளறுத்து	யைப் பருகவொட்டாது மும்மலங்களையு நீக்கி
ஈசனேசரோ டுஞ்செறிந்திட்டு	சிவனிடத்தி லெண்வகைப் பத்தியைச்செய்யுஞ் சிவபத்தர்களுடன் கூடியிருந்து
அங்கவர்தந் திருவேடமாலயங் களெல்லா மர னெனவே தொழுதிறைஞ்சி யாடிப்பாடி	அவ்விட்டதவர்களினது திருவேடத்தையு மதற்குச் சமானமான சிவாலயங்களையுங் கண்டவிடங்களெல்லாஞ் சிவனே சாந்நித்தியமா யிருப்பனெனக் கருதி வணங்கிநின்று தோத்திரத்துடன் கூத்துமாடி,
எங்குமியா மொருவர்க்கு மெளியோமல் லோ மியாவர்க் குமேலாரோமெ ன்றிறுமாப் பெய்தி	எவ்விடத்தும் யாமே நிறைந்து நிற்கிறோமதனாலே யாவர்க்கு மெளிமையாக அவர்களவசவிருத்தி வாரோம், யாவர்க்கு மேலா யிருப்போமென்று பெருமிதமெய்தி,
திங்கண் முடி யா ரடியா ரடி யோமென்று திரி ந்திடுவர் சிவஞா னச்செய்தி யுடை யோரே.	இங்ஙனம் பாசநீங்கிச் சிவஞானச் செயலே மேலிட்டிருக்கப்பட்டா நின்ற வறிவினையுடைய ஞாதாக்கள் சந்திரனைத் திருச்சடாமுடியிலே தரியாநின்ற சிவனுக்கடிமையோமென்று கருதிச் சஞ்சரியாநிற்பார்கள் எ-று.

தூலலிங்கமாகிய வாலயமெனவே சூக்குமமாகிய சிவலிங்கமெனப்பெறும்.

சிவஞானச்செய்தி யுணர்ந்தோரே யென்பது எழுவாய், திரிந்திடுவரென்பது பயனிலை.

இதற்குச் சிவஞானபோதம் மதங்கம் பரமேசுரத்து ம்
திக. (௧)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் சிவஞான சரிதையாகிய பாஃப்பத்தி கூறுகின்றது.

செங்கமலத்தாளிணைகள் சேரவொட்டாத் திரிமலங்களறுத்து - சிவானந்தத்தை டநந்பானுபவமாகப் பொருந்துவதற்குத் தடையாயிருக்கிற மூன்று மலத்தையு மொழித்து.

ஒழிக்குமாறியாதோவென்னில்? ஆணவமல சத்தியானது, மோகம் மதம் ராகம் * விஷாதம் தாபம் ÷ சோஷம் ‡ வைசித்திரியம் என்றேழுபேதமாம். இந்தவேழின் வசமாகாதிருக்கை யாணவமலத்தை நீங்குதல்.

அவையிற்றுக்கேப் பொருந்தி வருவன, மோகமானது § வனிதையர் முதலான விஷயங்களிலே விதிநிஷேதம் விசாரியாமற் பொருந்துதல்.

மதமாவது முன்சொன்ன வனிதையாதி கிட்டினவிடத்திலே இந்த வனிதையைப்போல வொருத்தருமில்லை இவளே தேவவனிதையென் றபிமானம் பண்ணுவது.

ராகமாவது அந்த விஷயத்திமேல மேன்மே லாசையைப் பெருக்குதல்.

விஷாதமாவது அந்த விஷய விரகத்திலே மெத்தவுந் துக்கப்பட்டழுந்தல்.

தாபமாவது மனதுதபிக்க வாற்றுதல்.

சோஷமாவது விரகாதிக்கியத்தினாலே தேகத்தில் ஜ்வரமும் பொறுக்கப்போகாத தாபமுமாவது.

வைசித்திரியமாவது இந்த ஸ்திரீ யிந்தவுறவின்முறையார் இதமாய்ப் புசிக்கு மன்னமுதலான பொருள்கள் பூமி இதெல்

லா முண்டாச்சுது, ஆகலா லொருகுறையு மில்லோம், இவைக ளெல்லாத்துடனுங்கூட வென்னை ரக்ஷிக்கிறவர்களாரென் றிது முதலான பல சிந்தனைகளைப் பண்ணுவது வைசித்திரியம்.

மாயை பொய்யை மெய்யெனும்படி மயக்கறிவைப் பண்ணுவது. தேகாதி பிரபஞ்சமெல்லாம் பொய்யென் றதி லபிமானம்விட்டுச் சிவனிடத்தி லபிமானம்பண்ணுதல் மாயை நீங்குதல். தனக்கும் பிரர்க்கும் ஸ்வதந்திரமில்லை சர்வான்மாகளுக்கு மீஸ்வராபரதந்திரரா யான்செய்தார் பிரர்செய்தா ரென்னுஞ் சுட்டுத லொழிதல் கன்மம் நீங்குதல். இதற்குச் சம்மதி

[illegible]

க்ஷாத்ராதா யஸ்ய ச॥ க்ஷமா ஸம்பந்நஸ்ய வஸ்த்ராத³ந
விஜ்ஞாயதே நரணாம் ஹவேஷு। நாநாதி³ க்ஷேத்ராய
ஈஶாநேஷ்விஷ்ட ஸஜ்ஜந:॥ ஸர்வே தே ஸஹ
ஜாதோக்ஷா யாய வதாநரணாம்।

ஈசநேசரோடுஞ்செறிந்து - இவ்வாறு மும்மல சம்பந்தங் களை நீங்கின சிவபத்தருடனேகூடி,—

அங்கவர்தந்திருவேட மாலயங்களெல்லா மரனெனவே தொழுதிறைஞ்சி - சிவபத்தர்களுடனே கூடினவிடத்து அவர்களுடைய ஜாதியையுங் குணத்தையும் விசாரியாமல் சிவனுடையாளமாகிய விபூதி ருத்திராக்ஷந் தரித்தபேர்களைக் கண்டமாத்திரத்திலே அஞ்ஞானத்தையறுக்கு மரனிவர்களென்று பாவித்துஞ் சிவனுக்காலயமாகிய சிவலிங்கங்களைச் சிவனென்று பாவித்தும். அடைவே தொழுதிறைஞ்சி என்றது சத்த + புனருத்திவாராமல் சொன்னது. இருவகையையுந் தண்டனிட்டேனென் றிதன்பொருள்.—

பாடியாடி -சிவானந்த மேலீட்டினால் சிவன்புகழைப் பண்ணுடனேபாடிக் கைகொட்டிக் கூத்தாடி,—

எங்குமியா மொருவர்க்குமெளியோமல்லோ மியாவர்க்கு மேலானோமென் றிருமாப்பெய்தி - பூலோக முதலாய்ப் பிரமலோக பரியந்தத்திலும் மனிதர்முதலாக பிரமா விருனபேர்க்குள்ளே யொருவர்க்கு மியாந் தாழ்ச்சியுடையோ மல்லோம் முன்சொன்ன பேர்க்கெல்லாம் முயர்ச்சியை யுடையோமென்று தலையெடுப்புடைத்தாய் இவ்வாறுபெற்றும்,—

திங்கண்முடியா ரடியா ரடியோமென்று திரிந்திடுவர் சிவஞானச் செய்தியுடையோரே - சந்திரசேகருடைய வடியார்க்

கடியோமென் றவர்களேவினபணிசெய்து சஞ்சரிப்பார்கள் சிவஞான சரிதையையுடைய பெரியோர்களென் றிதன்பொருள்.

* விஷாதம்-விசனம், ÷ சோஷம்-உலருதல், ‡ வைசித்திரியம்-ஆச்சரியம், § வநிதை - மடந்தை, + புனருக்தி - இரட்டித்துச் சொல்லல்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

சமாதி கூடியிருக்குஞ் சமயத்துச் சிவோகம்பாவனை புகதி பண்ணிப் பூசாநமஸ்கார காரிய புத்தி பண்ணுதிருந்தாலுஞ் சமாதி சலனம் வந்தகாலத்துச் சரியானுட்டானந் தாக்கித் தூக்கிச் சமாதிநிலை சாரவேணுமென்று பன்னிரண்டாஞ் சூத்திரத்திற் படுத்திச் சரியை படித்து முடிக்கின்றார்.

செங்கமலத் தாளிணைகள் - ஞானக்கிரியா சத்திக்குறிச் சிவத்துவத்தை,—திரிமலங்க ளறுத்து - தேகத்தி னிமித்தஞ் சிறிது சேஷித்து நிற்கத் தீட்சா சுத்தி பண்ணிக் கொண்டு,— சிவஞானச் செய்தியுடையோர் - நிர் விகற்ப சமாதி நீங்கிச் சவிகற்ப சமாதி சேர்ந்தோர்.

மற்றைய வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

இவ்வாறு பத்தாஞ்சூத்திரத்தானும் பதினோராஞ்சூத்திரத்தானும் முறையே பாசநீக்கமுஞ் சிவப்பேறுமாகிய பயன் பெற்றார்க்குச் சீவன்முத்திநிலைக்க ணிகழுமியல்பு வகுத்துக் கூறுதற்கெழுந்தது பன்னிரண்டாஞ் சூத்திரம்.

பற்றறக் கழிந்த மும்மலங்கள், விளக்கற்றம்பார்க்கு மி
நள்போல, அறிவற்றம் பார்த்து நிற்பனவாகலான், அவற்றை
ஞ்சிப் பரிகரித்தலும், பரிகரித்தற்குத் துணையாகிய மெய்யன்
ரோடு பயிறலுங், பயிற்சி நிலைபெறும்படி அவரது திருவேடத்
யுஞ் சிவாலயத்தையும் அரனெனக் கண்டு வழிபடுதலுமுடை
ராய், இப்பேறு பெறமாட்டாரது சிறுமையும் பெற்றாரது
பருமையும் நோக்கிக் கனிந்துவாழ்தல், சீவன்முத்தர்க்குரிய
யல்பென்பதாம்.

ஒட்டாவென்னும் பெயரெச்ச மறை ஏதுப்பெயர் கொண்
முடிந்தது.

இச்செய்யுள் முசனூல் பன்னிரண்டாஞ் சூத்திரம்போல
க்கூற்றதாமாறு கண்டுகொள்க.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

முன் சொன்ன வுண்மையாலும் பின் சொல்லிவந்த வுபா
ங்களாலும் சிவனைப்பெற்ற ஜீவன் முத்தராயுள்ளவர்கள் பிரா
ததம் புசித்துப் பின்பு பரமமுத்தி யடையுமவர்க ளிங்ஙத் தே
த்தோடு கூடிநிற்கிற முறைமை மே லருளிச்செய்கிறார்.

செங்கமலத் தாளிணைகள் சேரலொட்டாத் திரிமலங்கள
த்து - சிவந்த தாமரை மலர்போன்ற சிவனுடைய சீபாதங்க
ச் சென்று பொருந்தவொட்டாத ஆணவ மாயை காமியமெ
னு மும்மலங்களையு மறுத்து,—ஈசனேசரொடுஞ் செறிந்து
- பரமேஸ்வர னளவிலே மிகுந்த பத்தியையுடைய சிவபத்
ர்களுடனேகூடி,—அங்கவர்தந்திருவேட மாலயங்களெல்லா
ரனெனவே தொழுதிறைஞ்சி யாடிப்பாடி - அப்படிச் சிவனி

டத்திலே கிருபையுடையவர்கள் திருவேடத்தையுந் திருக்கோ யில்களையும் பரமேஶ்வரனென்றே கண்டு கும்பிட்டுத் தண் டன்பண்ணிச் சந்நதியிலே கூத்துமாடிப் பாட்டும்பாடி,—எங் குமியா மொருவர்க்கு மெளியோமல்லோம் - சுவர்க்கம் நரகம் பூமியென்று சொல்லப்பட்ட எவ்விடத்திலு முள்ளவர்க ளொ ருவர்க்கு நாம்பயப்படுவோ மல்லோம்,—யாவர்க்குமேலானோ ம் - சர்வர்க்கு மேலான சிவனுக் கடிமைப்பட்டுச் சர்வர்க்குமே லானோம்;—என்றிறுமாப்பெய்தி - இந்த வழிபாட்டினாலே பி ழைத்தோமென்கிற விறுமாப்பைப் பொருந்தி,—திங்கண்முடி யாரடியா ரடியோமென்று திரிந்திடுவர் சிவஞானச் செய்தி யுடையோரே - சந்திரசேகர னுடைய வடியாருடைய வடியோ மென்கிற இந்தத் தலைமையை மகத்தாகச் சொல்லிக்கொண் டெங்கும் வியாபரியா நிற்பர்கள் சிவஞானமாய் நிற்கிறவ கள்.

இதனாற் சொல்லியது, ஜீவன்முத்தராயுள்ள சிவஞானி னுக்கு முன்பு மலத்திரயங்களோடுகூடி வந்த வாதனைகளாக தென்றும் மனத்தினாற் சிந்திக்க வொண்ணாத சிவனை மனவா குக் காயங்களினாலே சிந்தித்து வழிபடுமுறைமை யறிவித்தது

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

செங்கமலத் தாளிணைகள் சேரவொட்டாத் திரிமலங்க றுத்து - செந்தாமரை மலர்போல் விரிந்து விளங்கிய திருவடி களை யணையவொட்டா தயர்த்தலைச் செய்விக்கும் பற்றறக் கழி த மும்மலங்கள் விளக்கற்றம் பார்க்கு மிருள்போல அறிவற்ற பார்த்துநிற்பன ஆகலா னவற்றை யஞ்சிப் பரிகரித்தலும்,—அ னேசரோடுஞ் செறிந்து - பரிகரித்தற்குத் துணையாகிய மெ

ன்பரோடு பயிறலும்,—அங்கவர்தந் திருவேடம் ஆலயங்க
ளெல்லாம் - பயிற்சி நிலைபெறும்படி யவரது திருவேடத்தையும்
வாலயத்தையும்,— அரனெனவே தொழுதிறைஞ்சி யாடிப்
ாடி - அரனெனவேகண்டு வழிபா டியற்றி யானந்த மேலீட்
ா லாடல் பாடல்களைச் செய்தலு முடையராய்,—எங்குமியா
மாருவர்க்கு மெளியோமல்லோம் யாவர்க்கு மேலானோ மெ
திறுமாப் பெய்தி -இப்பேறு பெறமாட்டாரது சிறுமையை
நாக்கி யெவ்விடத்துள்ளார்க்கும் யாமெளியராகலின்றி யத்
ருவடியைத் தலைக்கூடப் பெற்றமைபா னியாவர்க்கு மேலா
ோ மெனக்களித்தும்,—திங்கண் முடியா ரடியா ரடியோ
ன்று இறிந்திடுவர் - திருவடியைத் தலைக்கூடப் பெற்றவரது
ருமையைநோக்கி யவர்க்கடிமையென வாழ்தலும்,—சிவஞா
ச் செய்திபுடையோரே - சீவன் முத்தர்க்குரிய விலக்கணம்.

இச்செய்யுண் முதனூல் பன்னிரண்டாஞ் சூத்திரம்போல
க்கூற்றதாமாறு கண்டுகொள்க.

☞ கஉ-சூ, க-ம், அதிகரண முடிந்தது.

மறைஞானதேசிகர் உரை.

சிவன் சர்வவியாபியா யிருத்தலாற் சிவபத்தர்களிடத்
தன்பு செய்யு முறைமை யுணர்த்துகின்றார்.

ஈசனுக் கன்பில்லா ரடியவர்க் கன்பில்லா ரெவ்வு
ர்க்கு மன்பில்லார் தமக்குமன் பில்லார், பேசுவதெ
னறிவிலாப் பிணங்களைநா மிணங்கிற் பிறப்பினொடு
றப்பினொடும் பிணங்கிடுவர் விடுநீ, யாசையொடு மா

னடியா ரடியாரை யடைந்திட் டவர்கரும முன்கரும
மாகச்செய்து, கூசிமொழிந் தருண்ஞானக் குறியினின்
று கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே. (உ)

(இ-ள்) ஈசனுக் கன்பில்லா ரடி யவர்க் கன்பில்லார்	சிவனிடத்திலே நிறைந்த பத்தியில்லாதவர்களவனதடியார்களிடத்திலும் பத்தியற்றவர்களே! அஃதெதன்போல வென்னில்? யாதாமொருவர் மனைவியிடத்தின் மிகுந்த விருப்ப முண்டாகில் அவள் பிள்ளையிடத்து மி

குந்தவிருப்ப முண்டாம், அவளிடத் தாசையில்லாவிடத் தப்பி
ள்ளையிடத் தாசையில்லாத வாறுபோல.

வெவ்வுயிர்க்கும ன்பில்லார் தமக் குமன்பில்லார்	எல்லாப் பிராணிகளிடத்துங் கிருபைய ற்றவர்கள் தம்மளவிலு மன்பற்றவர்களே!
பேசுவதென் னறிவில்லாப் பி ணங்களைநாம்	சிவன் சர்வான்மாக்களிடத்தும் வியாபி த்து நிற்கிறானெனக் கருதி யவர்களிடத் த ன்புசெய்யாத பிணங்களுக்கு நாமென்னபுத் தி சொல்லப்போகிறோம்.
இணங்கிற்பிற ப்பினொடு மிற ப்பினொடும்பிண ங்கிநிவர் விடுநீ	இவர்களறிவில்லாத மூடராதலா லவர்க ளைச் சேர்ந்தால் ஜனன மரணங்களிலே வீ ழ்த்தி விடுவர்களாதலா லவர்களிணக்க த்தை யாகாதென் றுவர்த்து நீவிடுவாயாக
ஆசையொடும ரனடியாரடியா ரை யடைந்திட் டவர்கரும முன் கரும மாகச்செ ய்து	விருப்பத்துடனே மெய்யன்பைப் பொரு ந்திச் சிவனடியா ரெப்பொழுது மந்தப் ப த்தைவிட்டு நீங்காதிருப்பர்களாதலா லவ ர்களடியாரைக்கூடி யவர்கள் கருமத்தை யுன்னுடைய கருமமெனக் கருதிப் பணிவி டுக்கொண்ட வடிமையைப்போல அவர்

ளேவுதற்கு முன்னே யறிந்த தனைச் செய்து முடித்து,

கூசிமொழிந்து — நாமிவர்க் கிந்தக் காரியத்தைச் செய்யலாமோ வென்று மனதிற் சழக்கையறுத்து,

அருண்ஞானக் குறியினின்று — அந்த ஆசிரியராலே யுணர்த்தப்பட்ட நிட்டையைப் பொருந்திநின்று;

கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரிபே. — எவ்விடத்துஞ் சர்வ வியாபியாய் நின்ற பொருளைக் குறித்துக் களித்துப் பரமமான ஆனந்தத்துடன் பொருந்திக் கும்பிட்டுத் தண்டமிட்டுக் கூத்தாடித் திரிவாராக. எ-று.

தமக் கன்பில்லாரென்பது, தாமுய்யுநெறி கருதாமைபற்றியது.

அடியார் - சிவஞானிகள். சிவஞானிக ளடியாரென்றது பொதுமைபற்றிச் சிவபத்த ஜநங்களைக் கூறியது.

இதற்கு மதங்கம் ஞானரத்நாவலி சிந்திய விசுவத்து மறிக. (௨)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேலிதனையே திடம்பெறக் கூறுதல்.

அடியவர்க் கன்பில்லா ரீசனுக்கன்பில்லார் - சிவனடியாரிடத்தில் பத்தியில்லாதபேர் சிவனிடத்திலும் பத்தியில்லாத பேர்களே! சிவனடியாரிடத்தில் பத்திபண்ணாமல், சிவாலயத்திலே பத்திபோலச் சிலர் செய்தாலு மது வயிறுவளப்பின் பொருட்டான ÷ காபட்டியமான பத்தியே மாகேஸ்வரரிடத்திலே யவமானம்பண்ணிச் சிவலிங்கத்திலே பூசைபண்ணினாற் பயனில்லை.—

தயாளு:—ஸர்வம் ஜீவஜாதம் ஸ்வாத்மவத் பச்யந் ஸம்ஸாரஸாகராந் நிஸ்தீர்ணஸ் ஸாதுஸங்கம் நிஷேவேத॥

எவ்வுயிர்க்கு மன்பில்லார் தமக்கு மன்பிலார் - எல்லாச் சீவனிடத்திலுந் தயை யுண்டாயத் தம்மைபோல் விசாரித்தபேர்களே சனன மரணமாகிய கடலிலே நின்றுங் கரையேற வன்புடையவர்கள், இதில்லாதபேர்கள் தன்னிடத்திலே யன்பில்லாதபேர்களே,— பேசுவதென் - அவர்களை நான்சொல்லுவதென்ன,—அறிவில்லாப் பிணங்களை நாமிணங்கிற் பிறப்பினொடு மிறப்பினொடும் பிணங்கிடுவர்விடுநீ - அறிவில்லாதபடியினாற் பிணங்களுக்கொத்த பேர்களுடனே நாங்கூடிப் பிறப்பிறப்புக் கேதுவான தர்மங்களைப் பண்ணும்படிக்குச் சொல்லிக் கலகம் பண்ணுவார்களாகையா லவர்களுடனே கூட்டரவை நீதவிர்க்கக் கடவை.—ஆசையோடு மரனடியா ரடியாரை யடைந்திட்டவர் கருமமுன் கருமமாகச் செய்து கூசிமொழிந் தருண்ஞானக் குறியினின்று கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூததாடித் திரியே - மிக்கநேசத்துடனே சிவனடியாரையு மவர்க்கேவற் செய்வாரையும் சேரிந் தவர்க்கு வேண்டுங்கருமமே யுனக்கு வேண்டுங் கருமமாகச்செய் தவர்களுடனே பேசுங்காலத்து மவர்களைச் சொல்லும் பூச்சியவசனமு முன்னைச்சொல்லும் நைச்சியவசனமும் முன்னைச் சொல்லும் + நைச்சியவசனமும் தப்புதோவென்றுங் கூச்சத்துடனேபேசி யாசாரிய ரருளிச்செய்த ஞானநிஷ்டையிலே நின்று மெவ்விடத்திலுஞ் சிவமேகண்டு தண்டமிட்டு கைகொட்டிக் குணலைக் கூத்து நடித் திவ்வாறு சஞ்சரிப்பாயாகவென் றிதன்பொருள்.

÷ காபட்யம்-வஞ்சனை, + நைச்சியம்-அடக்கம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

இதுவுமது.

ஞானச் குறியினின்று தாசோசம் பாவனை தாங் கச்சரியை சரிக்குமிடத்துஞ் சிவோசம் பாவனை ஞானந் தரித்துச் சரிப்பவொன்று தாற்பரியம்.

மற்றைய வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

கழிகாமத்தராயினார்க்கு, அத்தொடர்புடையார திணக்கம் அக்காமப்பைங்கூழ் வளர்க்கு நீராதல்பற்றி அதன்கட் கழிபேருவகையும், அல்லாரதிணக்கம் அதனைப் பாறச்செய்யுங் களையாதல்பற்றி அதன்கண் வெறுப்புமிகுதியும் உளவாமாறுபோல, மாறுத சிவானுபவ மருவிக்கொண்டு அரன்மலரடிக்கீ ழிருக்கப்பெற்றார்க்கு, அதனை வளர்க்கு நீர்மையராகிய வத்தொடர்புடையாரோ டிணங்குதற்கண் உவகைமிகுதியும், அதனைக் கெடுக்கு நீர்மையராகிய பிறரோ டிணங்குதற்கண் வெறுப்புமிகுதியும், இயல்பா னுளவாமென்பதாம்.

விதிமுகத்தாற் கூறினார், சுவைப்பொருட் டுண்ணப்படும் பால் மருந்துமாமாறுபோலச் சாதனமுமாமா றுணர்த்துதற்கு.

முன் வருவனவற்றிற்கு மிஃதொக்கும்.

காமுகனாவானொருவன் ஒரு வனிதையிடத் தன்புடையனென்பது அவளொக்கலைக் கண்டுழி நிகழு மன்பினளவு பற்றியே தெளியப்படும். அதுபோல ஈசனுக்கன்புடைமை அவனடி

யவரைக் கண்டுழி நிகழு மன்பினளவுபற்றியே தெளிப்பப்படுமாக லான் அடியவர்க் கன்பில்வழி ஈசனுக் கன்புடையார்போலொ ழுகுகல் நாடகமாத்திரையே பிறிதில்லையென்பார் அடியவர்க் கன்பில்லா ரீசனுக் கன்பில்லாரென்றும், எவ்வுயிர்க்கணு முள னாகிய வீசனிடத்து அன்புடையார்க்கே அத்தொடர்பு பற்றி எவ்வுயிர்க்கு மன்புடையராதல் கூடுமென்பார் ஈசனுக்கன்பில் லா ரெவ்வுயிர்க்கு மன்பில்லாரென்றும், இவ்விடங்களி லன்பி ல்லாதார் தம்முயிர்க் குறுதி செய்துகொள்வா ரல்லரென்பார் தமக்கு மன்பில்லாரென்றுங் கூறினார்.

"அன்பிலா ரெல்லாந் தமக்குரியர்" என்புழித் தம்மென் றது உடம்பை நோக்கியாகலின், அஃதீண்டைக்கு முரணாமை யறிக.

இதனெதிர்மறை முகத்தால் அடியவர்க் கன்புடையாரது பெருமையுங் கண்டுகொள்க.

அவர்கரும முன்கருமமாகச் செய்தலுந் தற்போத முனைத் தாமின்று செய்யிற் குற்றமாமென்பார், அருண்ஞானக் குறியி னென்றார்.

கூசுதல் அவருயர்வும் தன்னிழிபும் நோக்கி நிகழ்வது.

கும்பிடுதலும் தட்டமிடுதலுங் கூத்தாடுதலும் உவகைமிகு தியி னிகழு மெய்ப்பாடு.

இதனானே இரண்டாங்கூறு தெரித் துணர்த்தப் பட்டது.

முதற்கூறு செங்கமலத் தாளிணைகள் சேரலொட்டாத் திரிமலங்களென ஆண்டே யுடம்போடு புணர்த்தோதி வலியுறுத் தமையின், வேறு கூறிற்றிலர்.

நிரம்பவழகியருளா வருமாறு.

ஜீவன்முத்தரா யுள்ளவர்கள் சிவபத்த ரல்லாதவருடன்

கூடலாகாதென்றுஞ் சிவபத்தர்களுடனே கூடவேண்டுமென்று மருளிச்செய்கிறார்.

ஈசனுக்கன்பில்லா ரடியவர்க்கன்பில்லார் - பரமேஸ்வரனிடத்துப் பத்தியில்லாதவர்கள் சிவனுடைய வடியாரிடத்திலும் பத்தியில்லாதவர்களா யிருப்பார்கள். இதன்றியும்,—எவ்வுயிர்க்கு மன்பில்லார்-சர்வான்மாக்க ளிடத்திலு மானம் இரக்கமு மவர்களிடத்தி லுண்டாகாது,—தமக்குமன்பில்லார்-முன்சொன்ன விடங்களி லன்புடையனாகிற் றங்களுக்கும் பிழைக்கலாம், அது வில்லாததுகொண்டு தங்களுக்குத் தாமுங் கிருபையில்லாதவர்கள்.—பேசுவதென் னறிவில்லாப்பிணங்களை - இப்படிச்சொத்த அறிவுகெட்ட பிணங்களை யென்னென்று சொல்லுவோம்.—நாமிணங்கிற் பிறப்பினு மிறப்பினும் பிணங்கிடுவர்விடுநீ - நாமவர்களுடனே கூடில் நமக்குப் பிராணனாய்நிற்கிற சத்தியத்தைத் தரிசியாத வண்ண மடக்கத்தைச் செய்து ஜநநத்திலு மரணத்திலு மாறிமாறி வருகிற துக்கத்தை யுண்டாக்குகிற புத்திர மித்திர களத்திராதிகளோடுங் கூடுதலை நீவிட்டு நீங்கி,—ஆசையொடு மரனடியா ரடியாரையடைந்திட்டு - விருப்பத்துடனே கனவிலு நனவிலுஞ் சிவனை யல்லது மற்றொன்றையு மறியாத சிவனுடைய வடியார்களுடைய வடியார் திரட்சியிலே கூடிக்கொண்டு,—அவர்கரும முன்கரும மாகச்செய்து - அவர்க ளருளிச்செய்த பணிவிடையை யுன்னுடைய காரியமென்கிறபிரியத்துடனே செய்து,—கூசிமொழிந் தருள்ஞானக் குறியினின்று - அப்படிச் செய்தே யான்செய்தேனென்னுஞ் சுதந்தரமற்று அந்தச் சிவபத்தர்களைப்போல நீயுஞ் சிவனுடைய காருண்ணியமாகி சிவஞானத்தாலே சத்தியத்தைத் தரிசித்து அந்த நிலையிலே நின்று,—கும்பிட்டுத்தட்டமிட்டுக்கூத்தாடித்திரியே - அந்தச் சிவபத்தர்கள் திருக்கூட்டத்தைத் தண்டன்பண்ணிக்

கையுங்கொட்டிக் கூத்தமாடித்திரி, அப்படிச் செய்தாலார்ச் சிதமான கன்மம் பொருந்தா.

இதற்குப் பிரமாணம் சிவஞானபோதம். கஉ-சூ, உ-வெ. "மறப்பித்துத் தம்மை மலங்களில் வீழ்க்குஞ்,சிறப்பில்லார் தந் திறத்துச் சேவை—யறப்பித்துப், பத்தரினத்தாய்ப் பரனுணர் வி னாலுணரு, மெய்த்தவரை மேவா வினை" என்னுமதுங் கண் டுகொள்க.

இதனாற் சொல்லியது, ஞானவான்களாயுள்ள சிவபத்தர் களோடுகூடி பிரபஞ்சத்தாருடனே முன்புகூடி வந்த வாதனை யொழியவே ஆகாமிய மிவர்களுக் கேருதென்னு முறைமை யறி வித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

காமுகனுவா னொருவன் ஒருவனிகையினிடத்து அன்பு டையனென்ப தவளொக்கலைக்கண்டுழி நிகழு மன்பினளவுபற்றி யே தெளிப்படும்,அதுபோல ஈசனடியவரைக் கண்டுழி நிகழு மனபுடைமை பற்றியே,ஈசனுக் கன்புடைமை தெளியப்படுமாக லான்,— அடியவர்க் கன்பில்லா ரீசனுக் கன்பில்லார் - அடிய வர்க்கன்பில்வழி யீசனுக் கன்புடையார்போ லொழுகுதல் நா டகமாத்திரையே பிறிதில்லை,— எவ்வுயிக்கு மன்பில்லார் - எ வ்வுயிர்க்கண்ணு முளனாகிய ஈசனிடத்து அன்புடையார்க்கே யத்தொடர்புபற்றி எவ்வுயிர்க்கு மன்புடையராதல் கூடும்,— தமக்கு மன்பில்லார் நாம்பேசுவதென் - இவ்விடங்களினன பில்லார் தம்முயிர்க் குறுதிசெய்து கொள்ளுவா ரல்லராக வி னதனை நாஞ்சொல்லுவ தென்னை, கழிகாமத்தா ராயினு ரத் தொடர்புடையார திணக்கம் அக்காமப் பைங்கூழை வளர்க்

குநீராதல்பற்றி அதன்கட் கழிபே ருவகையாமாறுபோல அரணடியாரடியாரை யடைந்திட் டவர்கரும முன்கருமமாக ஆசையுடன்செய்து - மாறாதசிவாநுபவ மருவிக்கொண் டரன்மலரடிக்கீ ழிருக்கப் பெற்றார்க்கு அதனைவளர்க்கு நீர்மையராகிய வத்தொடர் புடையாரோ டிணங்கி யவர்பணியை யுன்பணியாகவே தற்போத முளைத்தலின்றி விருப்பத்துடன் செய்தற்கண் உவகை மிகுதியும் காமுகரல்லாதார திணக்க மதனைப்பாரச்செய்யும் கலையாதல்பற்றி யதன்கண் வெறுப்பு மிகுதியாமாறுபோல,—அறிவிலாப்பிணங்களையிணங்கிற்பிறப்பினு மிறப்பினும் பிணங்கிடுவர் விடுநீ - அதனைக்கெடுக்கு நீர்மையராகிய அறிவில்லாரோ டிணங்கிற் பிறப்பிறப்பிற் படுத்துவராதலி னதன்கண் வெறுப்பு மிகுதியும் உளவாம், அதனைவிட்டு நீங்கிநீ,—கூசிமொழிந் தருண்ஞானக்குறியினின்று - அடியாரதுயர்வு முனதிழிவு நோக்கிக் கூசி நயமொழி கூறிச் சிவஞானத்தா லிரண்டறவத்துவித நிலையினின்று,—கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே - அவ்வுவகை மிகுதியாற் கும்பிட்டுக் கைகொட்டிக் கூத்துமாடித் திரிவாயாக வென்பதாம்.

இதனானே இரண்டாங்கூறு தெரித்துணர்த்தப் பட்டது. முதற்கூறு செங்கமலத் தாளிணைகள் சேரலொட்டாத் திரிமலங்களை வாண்டே யுடம்பொடு புணர்த்து ஓதி வலியுறுத்தமையின் வேறு கூறிற்றிலர்.

☞ கஉ-சூ, உ-அதிகரண முடிந்தது.

மறைஞானதேசிகர் உரை

சிவன் திருவேடத்தாரை யுண்டாக்கிச் சர்வான்மாக்
களையு மீடேற்றுகையின்பொருட் டோர்
சிறப்புவிதி யுணர்த்துகின்றார்.

அறிவரியான் றனையறிய வாக்கையாக்கி யங்கங்கே
யுயிர்க்குயிரா யறிவுகொடுத் தருளாற்,செறிதலினாற் றி
ருவேடஞ் சிவனுருவே யாகுஞ் சிவோகம்பா விக்கு
மத்தாற் சிவனுமாவர், குறியதனா லிதயத்தே யரனைக்
கூடுங் கொள்கையினா லவனவர் குறியொடுதா மழியு,
நெறியதனாற் சிவமேயாய் நின்றிடுவ ரென்றூ னேசத்
தாற் றொழுதெழுமின் பாசத்தாள் விடவே. (௯)

(இ-ள்.) அறிவரியான் றனையறிய வாக்கையாக்கி	ஆன்மாக்களுடைய மனோவாக்குக் கெட்டாத சிவன் றனது காருண்ணியத்தாலே யாவருந் தன்னை யுணர்ந்து வழிபடுதற்பொருட்டு மாயாகாரிய மாகிய வுடலை யெடுப்பித்து,
அங்கங்கே யுயிர்க்குயிரா யறிவுகொடுத்து	எண்பத்து நான்கு நூறாயிரம் யோனிபேதங்க டோறு மவ்விடத் தவ்விடத்திலே யான்மாக்க டோறு முயிர்க்குயிராய்நின் றதற்கதற்கேற்ற ஞானத்தைப் பிரகாசிப்பித்து நிற்றலால்
அருளாற் செறிதலினாற் றிருவேடஞ் சிவனுருவேயாகும்	சிவன் றன தருளா லவ்விடங்கடோறும் வியாபித்து நிற்கிறத்தினாலே யவனது வேடமாகிய திருநீறு முருத்திராக்கமுந் தரித்திருக்கு மடியாகளையுஞ் சிவனுடைய திருமேனியென்றே கொள்ளப்படும். அஃதன்றி,
சிவோகம் பாவிக்குமத்தாற் சிவனுமாவர்	சோகம் பாவனை பண்ணும்பொழுது அத்துவிதமாகப் பாவிக்குமதனாலே இந்த ஞானவான்களைச் சிவனென்று சொல்லப்படும். அஃதன்றி,

குறியதனு லிதயத்தே யரனைக் கூடுங்கொள்கையினு லவனுவர் — ஆசாரியன் காட்டின குறிவழியே நின்று தத்த மிருதயங்களிலே சிவனை யந்தரியாகமாகப் பூசித்து முடிவின்கட் கோதண்டத் தானத்திலேபோவம் பிறப்பித்துக் கொண்டிருந்த கோட்பாட்டினுலும் சிவனுகியே நிற்பார்கள்.

குறியொடுதாமழியு நெறியதனுற் சிவமேயாய் நின்றிடுவர் — இப்படிப் பலவாகத் தாங் குறித்துக்கொண்டு நின்ற குறிப்புகளுங் குறித்தறியும் புத்தியாதிகளுஞ் சேர விலயத்தைப் பொருந்தினவிடத்து நிட்டையைப் பொருந்தி நிற்கிற வழிபாட்டினுலும் சிவமேயாய் விடுவர்.

என்றுல் — இப்படி யேதுக்கள் பலவாகக் காட்டுகையினுற் றிருவேடத்தாரையே பணிக. அஃதெக்காரணத்தா லெனில்?

நேசத்தாற் றெழுதெழுமின் பாசத்தாள் விடவே. — பாசத்தாள் விடவே நேசத்தாற் றெழுதெழுமின் எனப் பதமாறுக. யாதாமொருவ ரொருவன் வீட்டிற் களவுகொள்ளக் கருதுமவன் அவன் வீட்டுத் தாளுக்குப் பொடிப்போட்டுதி யதனை விடுவிக்கு மாறுபோல, இந்த வான்மாக்களையுஞ் சிவன் முத்தி யடைவிக்கையின் பொருட்டு இவர்களை வணக்கஞ்செய்பவே யுன்னைவிட்டு நீங்கவொட்டாம லிருக்கிற அஞ்ஞானமாகிற கபாடத்தைப் பந்தித்திருக்கிற பாசமாகிற தாள் கழன்று நீங்கி யதுபோகவே பிரகாசமுனக் குண்டாம். எ-று.

இரண்டா முருபு நாலாமுருபாய் மயங்கிற்றென வறிக.

இதற்குக் காமிகமென வறிக. (௫)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேலந்தச் சிவபத்தர்க ணிற்கு நிலைமையாற் சிவனெனவே வழிபடுகவென்று கூறுகின்றது.

அறிவரியான் றனையறிய வாக்கையாக்கி யங்கங்கே யுயிர்க்குயிரா யறிவுகொடுத் தருளாற் செறிதலினாற் றிருவேடஞ் சிவனுருவேயாகும் - பாசவறிவாலும் பசுவறிவாலும் மறிதற்கரிதாகிய சிவன் றன்னை யுணருமாறு தவம்பண்ணும் தேகத்தையும் தபோவேஷத்தையுங் கொடுத் தந்த தேகத்தில் ஜீவான்மாக்களிடத்திலே பரமானமாவாக நின்று சிவஞானத்தைப் பிரகாசிப்பித்துக் கருணையினாலே பிரிவறப் பொருந்துகையினால் சிவனுடைய வேஷத்தைத் தரித்த தேகம் சிவனுடைய திருமேனியேயாம். இது ஞானசரிதைபண்ணு மவரைச் சொன்னது.—சிவோகம் பாவிகுமதத்தாற் சிவனுமாவர் - பூதசுத்தியானந்தரம் சீகண்டாதி மாதிருகை பஞ்சம்பிரம ஷடங் காஷ்டத்திரும்சத் கலா ணியாசங்களைப் பண்ணிச் சிவோகமென்று பாவனைபண்ணு மதத்தாற் சிவபாவனையும், உட்மையினாற் ஜீவபாவனையு முடையவர்களாவர்கள். இது ஞானத்திற் க்ரியாவானைச் சொன்னது.—குறியதனாலிதயத்தே யரனைக்கூடுங் கொள்கையினா லவனாவர் - அஷ்டகலாப் + பிராசாதத்தை இருதயாதியாகப் பிரம்மாதி காரணத் தியாகக்கிரமத்திலே துவாதசாந்தமாகிய உன்மனை சத்தி சகிதரான÷அநாசிருதரை வேறறப் பொருந்து முறைமையினா லந்தப் பரமசிவனாம். இது சிவஞானபோகியைச் சொன்னது.—குறியொடு தாமழியு நெறியதனாற் சிவமேயாய் நின்றிடுவர் - ஞாதுரு ஞானஞேயமென்னு மூன்றும் நழுவநின்றோர் சத்தி சிவான்மா வெனனும் பேதமறச் சிவமேயாவர். ஏகாரந் தேற்றம். தேற்றமாவது, சிவனேயல்லது ஜீவபாவஞ் சற்றுமில்

லை யென்றது,—என்றால் - இவ்வாறு ஜீவன்முத்தரான பேர்க ள் சிவனேயென்று வேதாகமங்கள் சொல்லுகையினாலே,—†ந சத்தாற்றெழுந்திடும் பாசத்தார்விடவே - சிவனன்பனை மிகுத் த அன்பினாலே நீ வணங்கி வழிபடு, உன்னைப் பந்தித்திருக்கும் பாசங்களானது நீங்கிவிட.

பாசத்தா ரென்றது இழிவின் வந்த உயர்திணை வாய்ப் பாடு.

ஏகார மீற்றசை.

+ ப்ராசாதம்-உப்பரிகை, ÷ அநாசிருதர்-ஒன்றைப்பொ ருந்ாதவர்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

சிவோகம் பாவனை பண்ணு மவர்க்குத் தாசோகம் பாவ னை சத்துருவானாலும் பராக்குற்ற பொது பாவனை பலிக்கு மு பாயம் பண்ணலாமென்று படிக்கின்றார்.

சிவோகம் பாவிக்குமத்தால் - அறிபானை யறிவகத்திலெ னும் திருவிருத்த முதலியவற்றிற் செப்பியபடி சிவோகம் பாவ னை பண்ணுதலால் பாவனு சாமர்த்திய மில்லாத போது,—சுறி யதனாலிதயத்தே யானைக் கூடுங் கொள்கையினால் - இருதய கம லத்திற் றீபா கிருதி நாதா கிருதி சதாசிவா கிருதி முதற் சகள நி ட்கள சகள சாகாரத் தன்மையினாற் சிவனைத் தியானிக்குஞ் செ ய்தியினாலே,—அவனாவர் - சிவ சமான சாதிச் சிபனாவா,—சு றிவொடு தாமழியும் நெறியதனால்- நிராகார சிவ சமாதியில்,— சிவனேயாய் நின்றிடுவர்-சிவனைப் போற் சிவனாவர்.

மற்றைய வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

வேடத்தானும பாவனையானுஞ் செயலானுந் தன்மையானுந் திருவேடமுடைய மெய்யன்பர் சிவமேயாதல் தெளியக்கிடத்தலின், அதுபற்றி யவரை அரனெனவே தேறி வழிபடுக, ஏனைய பாசப்பற்றுடையாரது பற்று, விட்டொழிதற் பொருட்டென்பதாம்.

சிவமாதல் தெளிந்துகோடற்கு வேடமுதலியவற்றுளொன்றேயமையுமென்பார், சிவமாதலை யவற்றொடு தனித்தனி கூட்டிக் கூறினார்.

அவ் வேடமுடையாரென் றெடுத்துக்கொண் டுரைக்க. பாசத்தார் ஆகுபெயர்.

—

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

மேல் சிவபத்தர்களது திருவேடத்தைப் பரமேஸ்வரனெனக் கண்டு வழிபடுகவென் றருளிச்செய்கிறார்.

அறிவரியான் றனையறிய யாக்கையாக்கி - ஆன்மபோதத்தாலியாவராலு மறிதற்கரிய பரமேஸ்வரன் தன்னை யறியு நிமித்தமாகத் தன்னுடைய பத்தர்களுக்குத் திருவேடமாகிய தனது திருமேனியைக் கொடுத்து,—அங்கங்கே யுயிர்க்குயிரா யறிவுகொடுத்து - தன்னை யிவர்களறியும்படிக் கீடாக அவரவ ரிருதயத்திலே யவர்களுக்குப் பிராணனாய் நின்ற முறைமையாலே ஞானத்தையும் பிரகாசிப்பித்து,—அருளாற் செறிதலினாற் றிருவேடஞ் சிவனுருவேயாகும் - தனது காருண்ணியத்தினாலே இவர்களிடத்திலே தான் பொருந்தி நிற்கையா லிந்தத் திருவுருவஞ் சிவனுடைய திருமேனியென்றே கொள்ளப்படும்.—சிவோக

ம்பாவிக்குமத்தாற் சிவனுமாவர் - நானென்றொரு முதலில்லை சர்வமுஞ் சிவனென்று தியானிக்கையா லிவர்களைச் சிவனென்று சொல்லப்படும்,—குறியதனு லிதயத்தே யரனைக்கூடுங் கொள்கையினுலவனுவர் - ஆசாரியன் தரிசிப்பித்த வந்தத் தியானத்தினுலேநின்று தந்த மிருதயங்களிலே பரமேஸ்வரனை ஏகிபாவம் பிறப்பித்துக்கொள்ளுகிற கோட்பாடுகளாலே சிவனுகியே நிற்பர்கள்.—குறியொடு தாமழியுநெறி யதனுற் சிவமேயாய்நின்றிடுவர் - தாமிப்படி கொள்ளுகிற தியானங்களுந் தியானித்துநிற்கிற தங்களுடைய ஆன்மபோதங்களும் பின்பு சேரவழிந்துபோகிற முறைமையாலே ஆன்மபோதஞ் ஜீவியாம லந்தச் சிவமேயாய் நின்றுவிடுவார்கள். என்னவே யிவர்களிடத்திலே பரமேஸ்வர னிப்படிப் பிரகாசிப்பன், அல்லாதவிடத்தில் நிற்கச்சேயுந் தோன்றுமனிற்பன்,—என்றால் - வேதாகமங்க ளிப்படியென்று சொல்லுகையால்,—நேசத்தாற்றொழுதிடுநீ பாசத்தார்விடவே - உன்னுடைய பாசமானது விட்டுப் போம்படி இப்படிச் சொல்லப்பட்ட மயேஸ்வரர்களைச் சிநேகத்தாலே பணிவாயாக.

இதற்குப் பிரமாணம் சிவஞானபோதம். கஉ-சூ, ரு-வெ, "தன்னுணர வேண்டித் தனதுருவைத் தான்கொடுத்துத், தன்னுணர்த்தம்மு ளிருத்தலாற்—றன்னுணரு, நேசத்தர் தம்பா னிகழுந் ததிநெய்போற், பாசத்தார்க் கினமும்பதி" என்னுமது கண்டுகொள்க.

இதனுற் சொல்லியது, மயேஸ்வர ரிடத்திலே சிவன் பிரகாசியா நிற்பனென்றும் அல்லா விடங்களி லப்பிரகாசமாய் நிற்பனென்றும் ஆகையால் மயேஸ்வரனைச் சிவனுகக் கண்டு வழிபாடுசெய்யவே யிவனுக் குண்டான பாசம்விட்டு நீங்குமென்னு முறைமையு மறிவித்தது,

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

———o———

அறிவறியான் - அசிந்திதனாய்நின்ற பரம்பொருள்,—தன்னை யறிய - உலகத்துள்ளார் தன்னை யறிதற்பொருட்டு,—யாக்கை யாக்கி - திருநீறு சண்டிகை முதலிய திருவேடமாகிய தன்வடிவத்தைத் தன் அன்பர்க் களித்து,—அங்கங்கே யுயிர்க்குயிரா யறிவுகொடுத்து - யாங்கணு முயிர்க்குயிரா யறிவினை விளக்கி,—அருளாற்செறிதலினால் - அருளாற் கலத்தலால்,—திருவேடஞ் சிவனுருவேயாகும் - அத்திருவேடத்தானுஞ் சிவமேயாதல் தெளியக் கிடத்தலானும்,—சிவோகம் பாவிக்குமதத்தால் - சிவோகம் பாவனையானும்,—சிவனுமாவர் - சிவமேயாத றெளியக்கிடத்தலானும்,—இதயத்தே குறிபதனா லரனைக்கூடும் கொள்கையினால் - இருதயத்தானத்தி லொரு குறியினைகண் வைத்து முதல்வனைக் கூடும் செயலானும்,—அரனாவர்,—சிவமேயாதல் தெளியக்கிடத்தலானும்,—குறியொடு தாமழியுநெறிபதனால் - குறியுடனே தாமென்ப தொன்றின்றாகிய தன்மையானும்,—சிவமேயாகிநின்றிடுவனொன்றால் நேசத்தானீ தொழுதிடு - சிவமேயாதறெளியக் கிடத்தலானும், அதுபற்றி யவரை யானெனவே தேறித் தொழுதிடு,— பாசத்தார்விடவே - வினைப் பாசப்பற் றுடையாரதுபற்று விடவொழிதற் பொருட்டென்பதாம்.

மறைஞானதேசிகர் உரை

சிவன் சர்வ வியாபியாயிருந்தாலுந் தன்னிடத்
தன்புடையார்க்குச் சாந்நித்திய மாகு
முறைமை யுணர்த்துகின்றார்.

திருக்கோயி லுள்ளிருக்குந் திருமேனி தன்னைச் சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவ னங்கே, யுருக்கோலி மந்திரத்தா லெனிலேயு மவர்க்கு முளனங்கு மெங்குமில னிங்குளனென் பார்க்கு, விருப்பாய வடிவாகி யிந்தனத்தி னெரிபோன் மந்திரத்தின் வந்துதிப்ப னிருஞ்சுரபிக் கெங்கு, முருக்காண வொண்ணுத பான்முலைப்பால் விம்மி யொழுகுவது போல்வெளிப் பட் டருளுவ னன்பர்க்கே. (௪)

(இ-ள்) திருக்கோயி லுள்ளிருக்குந் திருமேனிதன்னைச் சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவ னங்கே — சிவாலயத்துக் குள் ளெழுந்தருளி யிருக்கிற சிவலிங்கத்தி னிடத்திலே சதாசிவனென்று கருதுமவர்க் கவ்விடத்திற் சாந்நித்தியமாகாநிற்பன். திருக்கோயில் தூலலிங்கமாயிருக்க அதனைக் கூறுமற் றிருமேனியெனக் கூறிய தென்னையெனில்?

கோயிற் தேசமும் அதிலிருக்குஞ் சிவலிங்கந் தேசியுமாதலாற் கூறிற்றென வறிக.

சிவனெனவே யென்று தேற்றங் கூறுகையா லந்த மூர்த்தியிடத்திலே வியாபித்திருக்கும் பரமசிவனைக் கூறியதாயிற்று. வியாப்பிய வியாபக பாவததினாலே தேகத்துக்குந் தேகிக்கும் பேதமில்லை யெனவறிக.

உருக்கோலி மந்திரத்தாலே நினையுமவர்க்கு முளன் அங்கு — வியத்தலிங்கம் வியத்தாவியத்த லிங்கம் அவ்வியத்த லிங்கமென மூவிதமாகக் கூறிய திருமேனியை யதிட்டாசுத்தமாதலாற் சுத்தனுக்கு மாயேயம் பொருந்தா தாகையாற் சுத்தமான மந்திரமே திருமேனியாக

லால் முப்பத்தெட்டுக் கலைமுதலியவற்றாற் திருமேனியாக்கித் தியானஞ் செய்யுமவர்க்கு அந்தக் குறியிடமாகத் தானே பிரகாசியாநிற்பன்.

எங்குமில னிங்குள னென்பார்க்கு விருப்பாய வடிவாகி

பரிபூரணமா யெங்கும் வியாபித்திருக்கிற சிவ னெவ்விடத்து மில்லை சாலம்பமுதலிய ஆவாகனாதி கிருத்தியங்களைப் பண்ணுகையா லிங்கேதானே யுளனென் றறுதியிட்டவர்களுக் கவ்விடத்திற்றானே யருச்சித்துப் பிரகாசியாநிற்கும். அஃதென்போ லென்னில்?

இந்தனத்தி னெரிபோல்

தாபரமான வேர்முதல் நுனியீறாக மரத்தின்கண் வியாபித்து நிற்கிற அக்கினியானது, அரணியைக் கட்டையிலேற்றிக் கடைந்தவிடத் தக்கினியானது பிரகாசித்தாற்போலவும்,

மந்திரத்தின் வந்துதிப்பன்

பிராசாத மந்திரோச் சாரணத்தினாலே அவ்விடத்துப் பிரகாசியா நிற்பன்.

இருஞ் சுரபிக் கெங்கு முருக்காணவொண்ணாத பால் முலைப்பால்விம்மி பொழுகுவதுபோல வெளிப்பட்டருளுவ னன்பர்க்கே.

பெரிய சுரபியின்கட் கொம்புமுதற் குளம்பீறாகப் பாலானது வியாபித்திருக்கவு மவ்விடத்திற் றோன்றாமற் கன்றுக்கிரங்கித் தானே முலைக்கண்ணிலே யிறங்கி விம்மித்தோன்றி பொழுகுமாறுபோல அந்தச் சிவனு மன்பர்க்கே யுருகி நிட்களமானவன்றானே மூர்த்திகரிக்கு முறைமையு மித்தன்மை. எ-று.

இதனாற் றாபர சங்கமங்களிடத்தில் வியாபித்து நிற்கு முறைமை கூறியதாயிற்று. இதற்குச் சூக்குமத்தும் நிசுவாசத்தும் சுப்பிரபேதத்து மறிக. (௬)

கஉ—சூத்திரம். அடியவர் இலக்கணம். உ௲எக

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் சிவலிங்கத்தை வழிபடு முறைமை கூறுகின்றது.

திருக்கோயி லுள்ளிருக்குந் திருமேனிதன்னைச் சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவன் அங்கு-திருக்கோயி லுள்ளிருக்கு ஞ் சிவலிங்கமே சிவனென்று பாவித்து வழிபடுமவர்க் கந்தச் சிவலிங்கத்தி னிடத்திலே சாந்நித்தியம் பண்ணுவன்,—அங்கே மந்திரததாலுருக்கோலி யுளனென நினையுமவர்க்குமுளன்-அந்தச் சிவலிங்கத்தி னிடத்திலே பஞ்சப்பிரம ஷடங்கமந்திரங்களி னாலே யுளனென்று பாவித்த பேர்க்கு மவ்வாறு மந்திரமூர்த்தி யாக சாந்நித்தியம் பண்ணுவன்,—எங்குமில னிங்குளனென்பார்க்கு விருப்பாயவடிவாகி யிந்தனத்தினெரிபோன் மந்திரத்தின் வந்துதிப்பன்- சிவ னகண்ட பரிபூரணனென் றறியாமல் மந்தமதிகளா யெங்குமில்லை, இந்த மூர்த்தியிலேயே தனக்குத் தனக்கிஷ்டமான விக்கிரகத்திலே மந்திர நியாசங்களைப்பண்ணி வழிபடக் காஷ்டத்திலே வன்னிபோல வந்த மந்திரத்திலே சாந்நித்தியமாவன். இவ்வாறு பாவிக்கவே,—இருஞ்சுரபிக்கெங்கு முருக்காணவொண்ணாத பான் முலைப்பால் விம்மியொழுகுவதுபோல் வெளிப்பட்டருளுவ னன்பர்க்கே - பாலானது பசுவினுடைய தேகமெல்லாம் வியாபித்திருந்தும் பின்னை யோரிடத்தில் காணப்படாமற் றன்னுடைய கன்றைக் கண்டபொழுது முலையிலே விம்மி யொழுகுவதுபோல ஆராத்த வாவினுடைய சிவனிறைந் திருந்தானேயாயினு மந்திராத்த வாவிலே பிரகாசித்துப் பத்தர்கள் வேண்டியது கொடுத்தருளுவனென் றிதனுடைய பொருள்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

யோக சாமர்த்திய மில்லார்க்குத் தியானோ பாய முரைக்கின்றார்.

ஸ்ரீகண்ட தேகியால் தரிசனங் கொடுப்ப னென்று சித்தாந்தம்.

மற்றைய வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

பகுத்துணர்தலின்றிச் சிவலிங்கமுதலிய திருமேனியே சிவனெனக் கண்டு வழிபடுஞ் சரியையாவார்க்குச் சிவன் ஆண்டு வெளிப்படாது நின்று அருள்செய்வன். அருவப்பொருளாகிய சிவன் ஈசானாதி மந்திரங்களாற் சிவலிங்கமுதலிய திருவுருக் கோயிலானெனக் கருதி மந்திரநியாசத்தால் வழிபடுங் கிரியையாளர்க்கும், யோகிகளுள்ள மெங்கணு மில்லமாக வாழுஞ் சிவன் இத்திருமேனியினுமிருந்து பூசைகொண்டருளுவனெனக் கருதிச் சாத்தியமந்திரங்களால் வழிபடும் யோகிகட்கும், கடைந்தவழித் தோன்றுமெரியுங் கறந்தவழித் தோன்றும் பாலும்போல் அவ்வ மந்திரங்களா லவரவர் விரும்பிய வடிவாய் அத்திருமேனிகளில் அப்போதப்போது தோன்றிநின்று அருள்செய்வன். அவர்போலேகதேசமாக்க குறித்தலின்றி அன்புமாத்திரையா னாண்டு வழிபடு ஞானிகட்கு, கன்றை நினைந்த புனிற்றாவின் முலைப்பால் போல, கருணை மிகுதியால் அவ்வன்பே தானாய் எப்போது மாண்டு வெளிப்பட்டு நின்று அருள்செய்வன்; ஆகலான் அஃதறிந்து வழிபடுக வென்பதாம்.

ஆகலானஃதறிந்து வழிபடுகவென்பது குறிப்பெச்சம்.

அங்கேயென்பது யாண்டுஞ் சென்றியையும்.

மந்திரத்தா லுருக்கோலி யெனமாறுக.

கோலியென்பது பெயர்.

உளன் உள்ளம்.

இலனென்பது இல்லெனு மிடப்பெயரடியாகப் பிறந்த குறிப்புவினைமுற்று.

இங்குமென்னுமும்மை இறந்தது தழீஇயிற்று.

அன்பர்க்கு விம்மி யொழுகுவதுபோ லெனவே யோகிகட்குக் கறக்கவொழுகும் பால்போலென்பது பெறப்பட்டது.

அன்பரென்றது ஈண்டு ஞானிகண்மேற்று, "அன்பரொடு மரீஇ" என்புழிப்போல.

திருவேடஞ் சிவனெனத் தெளியுமாறு தொழப்படுவோரது கருத்துவகைபற்றிக் கூறினார், சிவாலயத்தைச் சிவனெனத் தெளியுமாறு தொழுவாரது கருத்துவகைபற்றிக் கூறினாரெனவுமுணர்க.

நிரம்பவழகியருரை வருமாறு.

—0—

மேற் சிவலிங்கப் பெருமானிடத்திலே சிவன் விசேஷமாகப் பிரகாசித்துநிற்கிற முறைமை யருளிச்செய்கிறார்.

திருக்கோயிலுள்ளிருக்குந் திருமேனிதன்னைச் சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவனங்கே - அழகிய சிவாலயத்துக் குள்ளே எழுந்தருளி யிருக்கிற சிவலிங்கப்பெருமான் றன்னைச் சிவனென்றே யுபதேசத்தினாலே யறிந்தவர்களுக்கு அவ்விடத்திற் சிவன் பிரகாசித்து நிற்பன்,—உருக்கொலி மந்திரத்தா

லே நினையுமவர்க்கு முளன் - அந்தந்தத் திருமேனியிலே மந்திரங்களாலே திருமேனியாகக் கொண்டவர்களுக்கு மங்கே பிரகாசியாநிற்பன்,—எங்குமிலனிங்குளனெனபார்க்கு விருப்பாய வடிவாகி - காணப்பட்ட வெல்லாவுருவங்களுந் தானாயிருக்கச்செய்தே தற்சொரூபந் தோன்றும னிற்பன். இந்தச் சிவலிங்கப் பெருமானிடத்திற் றோன்றி நிற்பனென்கிறவர்களுக்கு விருப்பத்துடனே யந்தத் திருமேனியி லெப்பொழுது மிருப்பன். அதெங்ஙனெனின்?—இந்தனத்தி னெரிபோல மந்திரத்தின் வந்துதித்து - காட்டத்தி லுண்டான வக்கினியானது முன்பு காணப்படாமலின்று பின் பிவனுலறியப்பட்ட தோருபாயத்தினு லந்தக் காட்டத்தி லுண்டானாற்போலத் தோன்றி,—இருஞ்சுரபிக் கெங்குமுருக் காணவொண்ணுத பான் முலைப்பால் விம்மி யொழுகுவதுபோல வெளிப்பட் டருளுவனன்பர்க்கே - பெரிய சுரபிக்குக் கொம்புமுதல் குளம்பீறுக வெவ்விடத்திலும் பால் வியாப்தமாய் நிற்பினு மவ்விடங்களிற் பாலினது ஸ்வரூபந் தோன்றுமனின்று முலைக்கண்ணிலே விம்மித் தோன்றித் தாரையாகப் பொழியுமதுபோலச் சிவலிங்கத்திலே பிரகாசியா நிற்பன் அவ்விடத்திலே வழிபடுகிற பத்தர்களுக்கு.

இதற்குப் பிரமாணம் சிவஞானபோதம். கஉ-சூ, ௪-வெ, "கண்டதொரு மந்திரத்தாற் காட்டத்தி லங்கிவே, றுண்டல்போ னின்றங் குளதாமாற்—கண்டவுருத், தானதுவா யன் றுனுன் தானதுவாய்த் தோன்றுனே, தானதுவாய்க் காணுந் தவர்க்கு" என்னுமதுங் கண்டுகொள்க.

இதனுற் சொல்லியது, காட்டத்தி லக்கினியானது முன்பு தோன்றுமனின்று ஒருத்த ரரணிகொண்டு கடைய வவ்விடத்திலக்நி தோன்றிய தன்மைபோல எவ்விடத்திலும் தோன்றும ல்நின்ற சிவனும் பெரியோர்கள் சிவலிங்கப் பெருமானிடத்திலே

கண்டு வழிபட, அவ்விடத்திற் பிரகாசியா நிற்பனென்னு முறைமை யறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

——o——

திருக்கோயி லுள்ளிருக்குந் திருமேனிதன்னை - பகுத்துணர்தலின்றி ஆலயத்து ளெழுந்தருளியிருக்கும் சிவலிங்கமுதலிய திருமேனியை,—சிவனெனவே கண்டவர்க்கு - சிவமெனக் கண்டு வழிபடுஞ் சரியையாளர்க்கு,—சிவனங்கேயுறைவன்- சிவ னாண்டு வெளிப்படாது நின்று அருள்செய்வன்,—மந்திரத்தா லுருக்கோலினனென நினையுமவர்க்கும்-அருவப் பொருளாகிய சிவனை ஈசானாதி மந்திரங்களாற் சிவலிங்க முதலிய திருவுருக் கோலினானெனக்கருதி மந்திரந்யாசத்தால் வழிபடுங் கிரியையாளர்க்கும்,—உளனெங்கு மிலனிங்கே யுளனென்பார்க்கும்-யோகிகளுள்ள மெங்கணு மில்லையாகவாழும் சிவனித்திருமேனியிலு மிருந்து பூசைகொண்டருளுவ னெனக்கருதிச் சாத்தியமந்திரங்களால் வழிபடும யோகிகட்கும்;—இந்தனத்தினெரிபோல் பான்முலைப்பால் கறக்கவொழுகுவதுபோல் மந்திரத்தில் விருப்பாய வடிவாகி வந்துதித்தும் - கடைந்தவழித் தோன்றுமெரியும் கறந்தவழித் தோனறும் பாலும்போல அவ்வம்மந்திரங்களா லவரவர் விரும்பிய வடிவாய்த் திருமேனிகளி லப்போதப்போது தோன்றி நின்றருள்செய்வன்,—அன்பர்க்கு-அவர்போலேசதேசமாய்க் குறித்தலின்றி யன்புமாத்திரை யாண்டுவழிபடும் ஞானிகட்கு,—மிருஞ் சுரபிக்கெங்கு மூருக்காணவொண்ணாத பான்முலைப்பால் விம்மிபொழுகுவதுபோல வெளிப்பட்டருளுவன் - கன்றை நினைந்த புனிற்றாவின் முலைப்பால்போல அக்கருணை மிகுதியால் அவ்வன்பேகாரணப் எப்போது மாண்டு வெளிப்பட்டு நின்று அருள்செய்வானாகலா னஃதறிந்து வழிபடுக வென்பதாம்,

மறைஞானதேசிகர் உரை.

இங்ஙன மிலிங்கத்தினையுந் திருவேடத்தாரையும் வழிபடும் வழிபாடு முணர்த்தி ஞானாசாரியனைச் சிவனெனவே வழிபாடுசெய்யு முறைமையு மூன்று திருவிருத்தத்தா லுணர்த்துகின்றார்.

ஞானயோ கக்கிரியா சரியைநாலு நாதன்றன் ப
ணிஞானி நாலினுக்கு முரியன், ஊனமிலா யோகமுத
ன் மூன்றினுக்கு முரியன் யோகிகிரியா வான்றனொ
ண் கிரியை யாதி, யானவிரண் டினுக்குரியன் சரியையி
னி னின்றோ னச்சரியைக் கோருரிய னதலினாலியார்க்கு,
மீனமிலா ஞானகுரு வேகுருவு மிவனே யீசனிவன் றா
னென்று மிறைஞ்சி யேத்தே. (ரு)

(இ - ள்.) ஞானயோ கக்கிரியா சரியை நாலு நாதன் றன்பணி	சிருட்டி காலத்திற் பரமேசுரன் திவ்வியாகமங்களை நாலு பாதமாகப் பிரித் ததிகாரானு குணமாக வருளிச்செய்ததுஞ் சிவன் கற்பித்த தொழில்களே!
ஞானி நாலினுக்கு முரியன்	மேலான பாதத்தின் வழிநின் றனுட்டித்த ஞானி ஞானம் யோகம் கிரியை சரியையென்க்கூறிப நாலுபாதத்துக்கு முரியவன்,
ஊனமிலா யோகமுதன் மூன்றினுக்கு முரியன்யோகி	யோக பாதத்தின் வழிநின் றட்டாங்க யோகத்தை யனுட்டித்த யோகி குற்றமில்லாத யோகபாத முதலிய மூன்று பாதத்தின் வழிநின் றனுட்டித்தற் குரியவன்,

கிரியாவான் ருனுங்கிரியை யாதியான விரண்டினுக் குரியன் கிரியா பாதத்தின வழிநின் றனுட்டிக்குமவன்றான் கிரியை சரியையாகிய விரண்டினையு மனுட்டித்தற் குரியவன்,

சரியையினி னின்றானச் சரியைக்கேயுரியன் சரியைத் தொழிலிலேனின் றனுட்டித்தவனந்தச் சரியைமாத்திரமே யனுட்டித்தற் குரியவன், இவ்வாறு பேதித்துக் கூறியதெனெனில்?

உபாத்தியாயரானவர் மாணாக்கர் பக்குவத்துக் கிடாகக் கற்பிக்குமாறு போலச் சிவனு மான்மாக்களுடைய பக்குவத்துக் கிடாக நாலுபாதங்களாகப் பிரித்துக் கூறியதென வறிக.

ஆதலினா லிபார்க்கு மீனமிலா ஞான குருவே குருவு மிவனே ஒவ்வொருவ ரொவ்வொரு பாதத்தின்வழி நின்றனுட்டித்தற் குரித்தாதலால் எல்லாப் பாதமு மனுட்டித்தற் குரிய மேலான ஞானாசாரியனு மிவனென வறிக.

ஈசனிவன் றானென்று மிறைஞ்சி யேத்தே. இந்த ஞானாசாரியனே சிவனெனக் கருதி வணங்கித் துதியுஞ் செய்க. எ-று.

ஏகாரந் தேற்றம்.

இதற்குக் கிரணாகமம் வாயவ்விய சங்கிதையினு மறிக (௫)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

மேல் மகேஶ்வரரை யின்னாரை யின்னார் வழிபடுகவென்னு முறைமை கூறுகின்றது.

ஞானயோக கிரியாசரிதை நாலும் நாதன்றன் பணி—திரிபதார்த்தத்தையும் ஞான முதலாகிய நாலுபாதத்தையு முபதேசிக்கிறது சிவனுடைய கிருத்தியம்,—ஞானிநாலினுக்கு முரியன்—

ஞானசாரிய னந்தச்சிவனே யாகையால் திரிபதார்த்தத்தையும் ஞானமுதலாகிய நாலுபாதத்தினையு முபதேசிக்கச் சுவதந்திரன்,—ஊனமிலா யோகமுதல் மூன்றினுக்கு முரியன்யோகி - யோகாசாரியன் அடயோகமல்லாத சிவயோகமாகிய யோக முதலான மூன்றுபாதத்தினையு முபதேசிக்க கர்த்தன்,—கிரியாவான்றானெண்கிரியையாதி யானவிரண்டினுக்கு முரியன் - கிரியாசரியனானவன் கிரியைசரிதை யிரண்டுபாதமு முபதேசிக்கக் கர்த்தன்,—சரிதையினின்றோனச்சரிதைக்கே யுரியன் - சரியாபாதத்தை யனுஷ்டிக்கிறவ னந்தச் சரியாபாதத்தைத் தானனுஷ்டிக்கவே கர்த்தன், பிறர்க்குபதேசம்பண்ணக் கர்த்தனல்ல,—ஆதலினாலெவர்க்கு மீனமிலா ஞானகுருவே குருவு மிவனே யீசனிவன்றனென்று மிறைஞ்சியேத்தே - ஆதலினாலே சரிதையைப்பண்ணுகிறவன் கிரியையைப் பண்ணுகிறவன் யோகத்தைப் பண்ணுகிறவ னிவ்வகை மூவர்க்கும் பாசபசுஞானமின்றிச் சிவஞான மூர்த்தியாயுள்ள ஞானாசாரியனே யாசாரியன்? இவனே ஈசுவரனென்று நமஸ்கரித்து தோத்திரம்பண்ணி வழிபடுக வென்றிதன்பொருள்.

இதனாற் சரியாவான் கிரியாவானையும் யோகியையும் ஞானவானையும் கிரியாவான் யோகியையும் ஞானவானையும் வர்ணாசிரமானு குணமாக வணங்கி வழிபடுகவென் றிதன்பொருள்.

இவர்களில் ஞானிக்கு வர்ணாசிரம மில்லையெல்லாராலும் பூச்சிடனென்று சர்வசாத்திரசித்தம்.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

—o—

ஆகையால் நிராலம்ப சிவயோக சமாதிமானாகிய ஞானி நிராலம்ப சிவயோகமாகு ஞானநுட்டானத்தோடு சாலம்ப சிவ

யோகமாகும் யோகக்கிரியை பொருட்டான மூன்றிற் குரியன்; மற்றையர் மூவருந் தங்கள் தங்கள் மரியாதிக்குரிய ரென்று மக ளுல் நிராலம்ப சிவயோககுருவே குருவென்று நிகழ்த்து கின் றுர்.

வெளிப்பொருள்.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

மேலைச் செய்யுளிற் கூறிய நால்வகைக்கருத்தும் அவரவர் மாத்திரைக்கேயுரித்தாயிருக்கச் சரியையாளரைப்போல ஞானி வழிபடுத லெற்றுக்கெனின்? நாலுபாதத்தி னிகழும் கிரியையெ ல்லாங் கத்தாவின துண்மைப்பணியாகலால், உலகின் மருவாத வின்பத்துள் வைத்த குருவினுபகாரத்தைக் கருதி நால்வகைத் தொழிலும் ஞானி செய்தலே கடப்பாடென்பது உட்டொழில் செய்வார் புறத்தொழிற்கு முரியரென்னு முறைபற்றியும், ஏனை யோர் தத்தந் தொழிற்கேயுரியரென்பது புறத்தொழில் செய் வார் உட்டொழிற் குரியரல்லரென்னு முறைபற்றியு முணர்ந்து கொள்ளப்படுவன. இனி யந்நால்வகைப் பாதத்தினிற்கு மாணு க்கர்க்கு ஆசிரியன்மார் உபதேசித்தற்கட்படு முறைமையும் இவ்வா றே வைத்துணர்ந்து, எல்லார்க்கு முபதேசித்தற்குரிய ஞானகு ருவே தலைபாய குருவென்றும், ஈண்டுக் கூறிய தாபரசங்கமங்க ளும் இக்குருவடிவின் வேறல்லவென்றுந் தேறி, அவ்விரண்டினு ம் வழிபடுக வென்பதாம்.

மேற்கூறிய நால்வகைக்கருத்துக்கு முரியராவாரைக் கூ றுவார், அவற்றையுள்ளடக்கி நிற்கும் ஞான முதலியவற்றை யுடையாரது இயல்பின்மேல் வைத்துக் கூறினுர்.

சொற்பல்காது மாட்டேற்றின்மேல்வைத் துணர்ந்து கோடற்பொருட்டு, ஆகலினாலிறைஞ்சி யேத்தே யென்பதனையும் ஈண் டுடன்கூறினார்.

திருவேட மாலயங்களெல்லா மரனெனவே தொழுதிறைஞ்சுதற்கட்படும் விசேடங் கூறியவாறு.

ஈசனிவனென்புழி இவனென்பது பகுதிப்பொருள் விகுதி.

ஈண்டு ஈசனென்றது திருக்கோயிலுள்ளிருக்குந் திருமேனியை.

என்றுமொன்னு மும்மைபை எதிரது தழீஇயிற்றுக்கித் திருவேடமு மிவனேயென் றிறைஞ்சியேத்தெனவு முறைத்துக்கொள்க.

இவைமூன்று செய்யுளானும் மூன்றுங்கூறு தெரித்துணர்த்தி வலியுறுத்தப்பட்டது.

நிரம்பவழகியருளா வருமாறு.

ஆசாரியனை வழிபடுகிற முறைமை மேலருளிச் செய்கிறார்.

ஞானயோகக் கிரியாசரியைநாலு நாதனறன் பணி - ஞானமும் யோகமும் கிரியையும் சரியையும் இவை நாலும் பக்குவான்மாக்களை யிரட்சிக்கைப் பொருட்டாகப் பரமேஸ்வரன கற்பித்தருளின பணிவிடை, முன் சொல்லிவந்த நாலு பாதத்திலும் நிற்கிற நாலுபேருக்கு மறிவொத் திருக்குமோ வென்ற மாணுக்கனை நோக்கி ஒத்திராதென் றருளிச் செய்கிறார்.—ஞானிநாலினுக்குமுரியன் - ஞானபாதத்திலே நிற்கிறவனிந்த நாலு பாதத்துக்கு முரித்தா யிருப்பன்,—ஊனமிலாயோக முதன்மூன்றினுக்குமுரிபன் யோகி - யோகபாதத்திலே நின்றவன் குற்றமில்

லாத யோகமுதல் மூன்றினுக்கு முரித்தா யிருப்பன்,—கிரியா வான்ருனெனுங் கிரியையாதியான விரண்டினுக்கு முரியன் -கிரியாவிதியானவன்ருனழகிய கிரியையாதி யான விரண்டினுக்கு முரித்தாயிருப்பன்,—சரியையி னின்ருேனெனுஞ்சரியைக்கே யுரியன் - சரியையிலே நின்றவன சரியை யொன்றினுக்குமே யுரித்தாயிருப்பன்,—ஆதலினு லியார்க்கு மீனமிலா ஞானகுருவே குருவும்-தான் நாலுபாதத்துக்குங் கதகனுயிருந்து இங்ஙனஞ் சொல்லிவந்தவர்கட்கு நாலுபாதத்தையுங் கொடுக்கிறவ னுகையாலே குற்றமில்லாத ஞானுசாரியனே ஆசாரியனும் —இவனே ஈசனிவன்ருனென்று மிறைஞ்சியேத்தே-பரமேஸ்வரன் ருனுமிந்தஞானுசாரியன் ருனேயென்று அட்டாங்க பஞ்சாங்க மாகத் தண்டன்பண்ணித் தோத்திரங்களுஞ் செய்து வழிபடுவாயாக.

இதனுற் சொல்லியது, ஆன்மாக்கள் பக்குவத்துக்குத் தக்கதாக ஞானயோக கிரியா சரியையென்கிற நாலு பாதத்திலு நிறுத்தி அதற்குத்தக்க முத்தியையுங் கொடுக்கிறவன் ஞானு சாரியனென்று மிவனே சிவனென்றும் ஞானவான்களுக்கு ஞானம் பிரகாசித்தாலுங் குரு வழிபாடு செய்யவேண்டு மெனனு முறைமையு மறிவித்தது.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

ஞானயோகக் கிரியாசரியை நான்கு நாதன்றன்பணி - ஞானயோகக் கிரியா சரியையென்னு நான்குபாதத்தி னிகழும் கிரியையெல்லாம் கர்த்தாவினது உண்மைப் பணியாகலான்,—ஞானிநாலினுக்கு முரியன் - ஞானி ஞானமுதனுன்கினுக்குமுரியன்,—ஊனமிலா யோகமுதன் மூன்றினுக்கு முரியன்யோகி - யோகி அழிவில்லாத யோகமுதன்மூன் றிற்கு முரியன்,—கிரியா

வான்ற னொண்கிரியை யாதியான விரண்டினுக்கு முரியன் - கிரியாவா னொள்ளிய கிரியை முதலிய விரண்டினுக்கு முரியன,—சரியையி னின்றோ னச்சரியைக் கேயுரியன் - சரியாவானச் சரியை யொன்றிற்கே யுரியன்,—ஆதலினால் யார்க்கு மீனமிலா ஞானகுருவே குருவும்-ஆகலினா லெல்லார்க்கு முபதேசித்தற்குரிய ஞானகுருவே தலையாய குருஎன்றார்,—இவனே யீசனிவன்றானென்றும் இறைஞ்சியேத்தே-ஈண்டுக் கூறிய தாபரசங்கமங்களும் இக்குருவடிவின் வேறல்லவென்றுந் தேறி யவ்விரண்டினும் வழிபடுக வென்பதாம்.

இவை மூன்று செய்யுளானும் மூன்றுங்கூறு தெரித்துணர்த்தி வலியுறுத்தப் பட்டது.

---

௧௨ - சூ, ௩-ம், அதிகரணமுடிந்தது.

மறைஞானதேசிகர் உரை.

இந்தவாசாரியனைச் சிவனாகப் பாவிப்பதெவற்றிற்கோ வெனில் இந்தப்பாவனை யில்லாவிடத் தவனுபதேசித்த மந்திர முதலானவை பலியாதாதலா லாசாரியனை வழிபாடுணர்த்தியதென் றுணர்த்துகின்றார்.

மந்திரத்தான் மருந்துகளால் வாய்த்தயோ கத்தான் மணிபிரத குளிகையினான் மற்று மற்றுந், தந்திரத்தே சொன்னபடி செய்யவேத சகலகலை ஞானங்கடரி காலஞான,மந்தமிலா வணிமாதி ஞானங்களெல்லா மடைந்திடுமா சானருளா லடிசேர் ஞானம், வந்திடுமற் றொன்றாலும் வாரா தாகு மற்றவையு மிவனருளால் மருவு மன்றே. (௯)

(இ-ள்.) மந்திரத்தான் மருந்துகளால் வாய்த்த யோகத்தால் மணியிரத குளிகையினான் மற்றுமற்றுந் தந்திரத்தேசொன்னபடிசெய்ய

மந்திரங்களாலு மௌஷதங்களாலுந் தனக்குச் சித்தித்த யோகங்களாலும் ஒளியையுடைய விரசகுளிகையாலும் வேறுவேறு சாத்திரங்களினாலே சொன்னபடியேசெய்தால்

வேதசகலகலை ஞானங்கடிரிகால்ஞான மந்தமிலா வணிமாதி ஞானங்களெல்லா மடைந்திடும்

நாலுவேதமுஞ் சகலகலை ஞானமும் பரகாயப்பிரவேச முதலியவற்றா லுண்டாகிய திரிகாலஞானமும் பைசாச முதலாயினார்க்கு மேன்மேல் விசிட்டமான அணிமாதியான வெட்டுச் சித்திசளு மிவையெல்லா முண்டாகா நிற்கும்.

ஆசானருளாலடிசேர்ஞானம் வந்திடுமற்றொன்றாலும் வாராதாகும்

ஆசாரியன் சடாக்ஷத்தாற் திருவடிஞான முண்டாம், இதனையொழிந் திவை வேறொருவராலும் வேறொன்றினாலும் உண்டாக மாட்டா.

மற்றவையுமிவனருளால் மருவுமன்றே.

முன்பு சொன்னவைகளெல்லா மிந்தவாசாரியன் பிரசாதத்தினா லுண்டாகா நிற்கும். எ-று.

மற்றுமென்பதனால் தீர்த்தத்தினிடத்துந் தேவனிடத்துங் காலவிதானஞ் சொல்லுஞ் சோதிடரிடத்தும் பிராமணரி புத்தி பண்ணவேணுமெனக் கூறியது.

வாய்த்தயோகமென்பது "வாயுரைச் செயித்த செய்கை வாய்த்தநற் கடையாளங்க ளாயுராரோக்கியாதி யவற்றைய

வ்வுடலங்காட்டு, மாயமுமனத்தினில்லை வசமுறும் புலன்களெல்லாங், காயத்தின் மலநீர்மற்று நொய்தெனக் கழியுமன்றே" என்கையா லறிக.

இதற்குக் கந்தகாலோத்தரமும் பிரவு முளவெனவறிக (௬)

சிவாக்ரயோகியருரை வருமாறு.

———o———

மேலிரண்டு விருத்தத்தினாலே அந்த ஞானாசாரியனே சித்திமுத்திக் கொடுப்பவனாதலா லவனையே வணங்கி வழிபடுக வென்னு முறைமை கூறுகின்றது.

மந்திரத்தால் மருந்துகளால் வாய்த்தயோகத்தால் மணியிரத குளிகைகளால் மற்றுமற்றுந் தந்திரத்தே சொன்னபடி செய்ய வேதசகலகலைஞானங்க டிரிகாலஞான மந்தமிலாவணிமாதி ஞானங்களெல்லா மடைந்திடும்-இது வெளிப்பொருள்,—

ஆசா னருளா லடிசேர்ஞானம் வந்திடு மற்றென்றாலும் வாராதாகும்- ஞானாசாரிய னனுக்கிரகத்தினாலே சிவசாயுச்சியத்தை யடையும் சிவஞானமான தூண்டாம், வேறொருபாயங்களினாலு முண்டாகாது,—

மற்றவையு மவரனருளால் மருவுமன்றே - முன்மந்திராதியுபாயங்களினாலே வேதாதியானவித்தைகளும் அணிமாதி அஷ்டமகா சித்திகளும் அந்தஞானாசாரியனுடைய கருணையினாலே பொருந்துவதா மென் றிதன்பொருள்.

"அன்றென்கிளவி யாமெனத்தகுமே"

ஏகாரம் - ஈற்றசை.

———

ஞானப்பிரகாசருரை வருமாறு.

———o———

மந்திரத்தாற் சாலம்பயோக முதலிய தந்திரத்தாற் சாவதிச் சுவாவதித் திரிகால ஞான முதலிய பல முண்டாம், நிராலம்ப சிவயோக குரூப தேசத்தாற் சிவத்துவம் பொருந்தும், நிராலம்ப சிவயோகப் பொருட் சித்தாந்த மகா வாக்கிய ஞானம் வரும், மற்றொன்றால் வாராதென் றுரைக்கின்றார்.

வெளிப்பொருள்.

———

சிவஞானயோகியருரை வருமாறு.

———o———

ஏனைஞானங்களெல்லாம் ஆசிரியனையின்றியு மமையும், திருவடிஞானம் ஒருவாற்றானு மாசிரியனை யின்றி யமையாது, ஆகலால் இவனேயீச னிவன்றானென்று மிறைஞ்சி யேத்தென்பதாம்.

ஆகலாலிவனேயீச னிவன்றானென்று மிறைஞ்சியேத் தென்பது குறிப்பெச்சம்.

அவ்வாறேத்துதற்குரிய பெருமை கூறியவாறு.

மற்றவையு மவனருளான் மருவுமென்றது இயைபின்மை நீக்குதற் பொருட்டு.

———

நிரம்பவழகியருரை வருமாறு.

———o———

எல்லா ஞானங்களுஞ் சாத்திரஞ்சொன்ன முறைமையிலே செய்யவுண்டாம் சிவஞானத்தினாலே சத்தியத்தைத் தரி

சித்துச் சிவானுபவத்தை யனுபவிக்கிற சாயுச்சியம் ஞானாசாரிய ஞலொழிந் துண்டாகாதென்று மேலருளிச்செய்கிறார்.

மந்திரத்தான் மருந்துகளால் வாய்த்தயோகத்தான் மணியிரத குளிகைகளான் மற்றுமற்றுந் தந்திரத்தே சொன்னபடி செய்ய-இன்னவின்ன மந்திரங்களாலே யின்னதின்ன துண்டாமென்று சொல்லுகிற மந்திரங்களாலும், இன்னவின்ன ஔஷதங்களாலே யின்னதின்ன துண்டாமென்கிற ஔஷதங்களாலும், பிராணயாம முதலாகச் சொல்லப்பட்ட நல்லயோகங்களாலும், ஒளியுடைய விரதகுளிகையினாலும், இவையொழிந்தும் வேறும் வேதசாஸ்திரங்களிலே சொன்னபடி செய்தால்,—வேத சகலகலை ஞானங்கள் திரிகாலஞான மந்தமிலாவணிமாதி ஞானங்களெல்லா மடைந்திடும் - நாலு வேதத்தையும் பல கலைஞானத்தையும் அறியத்தக்க வறிவுகளும் செல்காலம் வருங்காலம் நிகழ்கால மென்கிற முறைமையு மறியுமறிவும் முடிவில்லாத அணிமா மகிமா லகிமா கரிமா பிராத்தி பிரகாமியம் ஈசத்துவம் ஆக விவை யெட்டுமாக விங்ஙனஞ் சொல்லப்பட்ட வறிவுகளெல்லா முண்டாகாநிற்கும். சிவ ஞான மிவற்றினாலுண்டாகாது. அந்த ஞான முண்டாம்படி எப்படியென்னில்?—ஆசானருளா லடிசேர் ஞானம் வந்திடு மற்றொன்றாலும் வாராதாகும் - ஆசாரியனுடைய கடாட்சத்தினாலே சிவனுடைய சீபாதத்திலே பொருந்தி யிரண்டறக் கலந்திருக்கிற ஞானம் பிரகாசிக்கும்; இப்படி யொழிந்து வேறொன்றினா லுண்டாகாது. இந்த ஞான மொழிந்து,—மற்றவையு மவனருளான் மருவுமன்றே - முன்பு சொன்னவைதானு மிந்த வாசாரியனுடைய வனுக்கிரகத்தினாலே யுண்டாம்.

இதனாற் சொல்லியது, சாஸ்திரங்கள் சொன்ன முறைமையிலே மந்திர முதலானவற்றினாலே வழுவறச் செய்தாலவ

ரவர்க்கு வேண்டின ஞானங்க ளுண்டாமென்றுஞ் சிவஞானங் குருகடாட்சத்தா லொழிந் துண்டாகா தென்னு முறைமையு மறிவித்தது.

சுப்பிரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

மந்திரத்தால் - மந்திரங்களாலும்,—மருந்துகளால் - மருந்துகளாலும்,—வாய்த்த யோகத்லால் - பொருந்திய யோகத்தாலும்,—மணிபிரத குளிகையினால் - இரசக் குளிகையினால்;—மற்றுமற்றுந் தந்திரத்தே சொன்னமுறைசெய்ய-வேறுவேறுசாஸ்தரங்களிலே சொன்னபடி செய்தற்கும்,—வேத சகலகலை ஞானங்கள் - வேதாகம முதலிய கலைஞானங்கள்,—திரிகால ஞானம் - திரிகால ஞானங்கள்,—அந்தமிலா வணிமாதி ஞானங்களெல்லாம் - முடிவில்லாத அணிமாதிமுதலிய ஞானங்களெல்லா வற்றிற்கும்,—ஆசானருளா னடைந்திடும் - ஆசாரியனையின்றி யடையும்,— அடிசேர்ஞானம் வந்திடு மற்றொன்றாலும் வாராதாகும்-திருவடிஞானம் ஒருவாற்றானு மாசிரியனை யின்றி யடையாது. ஆகலான்,—அவனருளான் மற்றவையு மருவுமன்றே - குருவருளா னெல்லா மருவப்பெறு மாகலி னிவனே யீசனிவன்றா னென்று மிறைஞ்சியேத்தே.

மறைஞானதேசிகர் உரை.

அந்தப்பாவனு பலத்தா லாசாரியனைப் பரமசிவனெனக் கருதினோர்க் கனுக்கிரகஞ்செய்யுமுறைமை யுணர்த்துகின்றார்.

பரம்பிரம மிவனென்றும் பரசிவன்றா னென்றும் பரஞான மிவனென்றும் பராபரன்றா னென்று, மான்

றருசீர் நிலையெல்லா மிவனே யென்று மருட்குருவை வழிபடவே யவனிவன்ருனயே, யிரங்கியவா ரணமாமை மீனண்டஞ் சினையை யியல்பினெடும் பரிசித்து நினைந்தும் பார்த்தும், பரிந்தவைதா னுக்குமாபோற் சிவமே யாக்கும் பரிசித்தும் சிந்தித்தும் பார்த்துந் தானே. (எ)

(இ-ள்.) பரம் பிரம மிவனென்றும்	இக்க ஞானுசாரியனே பரப்பிரம சுருபனென்றும்
பரசிவன்ருனென்றும்	பரமமான சிவனென்றும்
பரஞான மிவனென்றும்	மேலானசிவஞான மிவனேயென்றும்.
பராபரன்ருனென்றும்	இவனேபராபர வத்துவென்றும்
அரன் றருசீர் நிலையெல்லாமிவனே யென்றும்,	இவனு மவனும் பேதமறவிருக்கிற வைக்கியத்திஞலே யவனுக்குண்டாய சிறப்பியாதொன் றதுவெல்லா மிவனுக்கே யென்றும்
அருட்குருவை வழிபடவே யவனிவன் ருனுயே	இப்படிப் புத்திபண்ணிக் கிருபையே வடிவாயிருக்கிற ஞானுசாரியனே நாடோறும் வழிபடவே யந்தச்சிவ னிந்த வாசாரிய மூர்த்தியைப் பேதமற வதிட்டித்துக்கொண்டு
இரங்கிய வாரண மாமை மீனண்டஞ் சினையை யியல்பினெடும் பரிசித்தும் நினைந்தும்பார்த்தும்	கோழியான திரக்கத்தா லண்டத்தைப் பரிசித்துக் கொண்டிருந்தும் ஆமையானது அதனையே நினைத்துக் கொண்டிருந்தும். முட்டையானத்தை யிருபாலுங் கூட்டுசு. மீனனது சினையைப் பார்த்துக்கொண்டிருந்தும்

பரிந்திவைதா
னாக்குமாபோல்
சிவமேயாக்கு
ம் பரிசித்துஞ் சி
ந்தித்துப் பார்த்
துந்தானே.

சினேசத்துடனே யிவையிற்றைச் சொல்லிய முறையே தற்சொரூப மாக்குமாறு போல ஞானாசாரியனு மாணாக்கருட் சிலரைப் பரிசதீக்கையைச் செய்தும் சிலரை வாசகதீக்கையைச் செய்தும் சிலரைத் திருநோக்கென்னுந் தீக்கையைச் செய்தும் சர்வக்கியனுக்குச் சமமானரூபத்தை யுண்டாக்குவன் எ-று.

ஏகாரந் தேற்றம்.

சிவம் பிரமத்துக்கு பரமாதலாற் பரப்பிரம மென்றார்.

முத்தான்மாக்களுக்கும் சிவத்வ முண்டாதலாற் பரசிவமெனறார்.

அபரஞானத்துக்கு வேறாதலாற் பரஞானமென்றார்.

பரமாகுண்டலிக்கு மேலாய்நிற்றலாற் பராபர மென்றார்.

இதற்கு விசுவசாரோத்தரம். (எ)

பன்னிருபனுவலும் பண்ணிப்பதப்பொரு - ளுன்னித் திரிவற வுணர்ந்தபெருமைய - ரன்னியமற்ற வமலனடிக்கீழ் - அழியாவின்பத் தனுபவரவரே - இழியாருலகினங் கியற்றார் தொழிலுந் - தீண்டிக்குளிகை செம்பு தன்களிம்பு - மாண்டறக்கனகமாமதுதனக்கே - மற்றொருசெம்பிற் களிம்பினைமாற்றும் - பெற்றியுங் களிம்பினைப் பெறுதலுமின்றே - யன்னநிலையா மமலனை யடைந்தா - ரன்னியமற்று மடைபவர்தாமே - திருத்துறையூர்ச் சைவன் திருந்துமறையுர்- விரித்துரைக்கும் வேதியன் மெய்கண்டான் - கருத்தி, னருணந்தி தேவ னருண்மொழியாய்ந்தே - யிருணந் தம்பாற் கண்டிலேமே.

சிவஞான சித்தியார் சுபக்ஷத்திற்

கோர்வகை யானே காண்டிகை முற்றும்.

மாசிலுபசார மஞ்சனப்பூ கந்த, நேசமிகு தூபமொளி நீர முத—தூசணைக்கா, யாதி குடைசவரி யாலவட்டம் விசிறி, யாடலொடு வாச்சியமீ ரெட்டாகும்.

நிலையடைய வனுதினமு நினையெனது மனமே, தொலைவிலரு டருமகலு மலமுமுறு துயரு, மலைவுடைய யுனதுமட மதியுடையவருளு, முலைவின்மறை ஞானமுனி யுரைசெய்திரு மொழியே.

சிவாக்ரயோகியருளை வருமாறு.

——0——

பரம்பிரம்ம மிவனென்றும் பரசிவன்ற னென்றும் பரஞான மிவனென்றும் பராபரன்ற னென்று மரன்றருஞ்சீர் நிலையெல்லா மிவனே யென்று மருட்குருவை வழிபடவே - சிவனுக்குச் சத்தியினாலும் விந்துவினாலும் அஞ்சவத்தை யுண்டு, அந்த அஞ்சவத்தையி னின்ற நிலைகளெல்லாம் இந்த வாசாரியனே என்று வழிபடுக. அவைகளாவன: குண நாமக் கிரியைகளொன்று மின்றி நிர்விசற்ப ஞானஸ்வரூபமாகப் பெரிதாய்நின்றது பரம்பிரமம், பினபு பருசத்திதோன்றிச் சிவனென நின்ற நாலுசத்திகளுந் தன்னிடத்தி லுண்டாகச் சுத்தமாக நின்ற வவதரம் பரசிவன், ஞானசத்தி மூர்த்திமானு யான்மாக்களுடைய கன்மங்களையு மதின் பக்குவங்களையும் பாரதந்திரியங்களையுங் கண்டு நிற்கு மவசரம் பரஞானம், பரமாகிய சுத்தாசுத்தமாயைக்கு மேலாய்க் கிரியாசத்தி மூர்த்திமானாய்ச் சுத்தமாயையில் காரியங்களை யுண்டாக்கு மவசரம் பராபரம், சதாசிவன் மகேஶ்வரன் ருத்திரனென்னு நாமங்களை யுடைத்தாய் சுத்தாத்துவ மிசிராத்துவ அசுத்தாத்துவ கிருத்தியங்களைப் பண்ணுவது அரன்றருஞ் சீர்நிலை. இவ்வாறு பஞ்சாவஸ் * தானுச்யூதனாய் நின்ற சிவ மிந்த வாசாரியனேயென்று கருணையினாலே கொண்ட குருமூர்த்தி சித்தத்தின் வழித்தாய் நடக்க

வே,—அவனிவன்றானாயே யிரங்கி - அந்தப் பரசிவ னிந்த வாசாரியனே யாகிக் கருணைபூர்த்து,—வாரண மாமை மீனண்டஞ் சினையை யியல்பினாலும் பரிசித்தும் நினைந்தும் பார்த்தும் பரிந்தவைதானாக்குமாபோற் சிவமேயாக்கும் பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்துந்தானே - கோழியு மாமையு மீனும், முட்டையையுஞ் சினையையும் பரிவினாலே யணைத்தும் நினைந்தும் பார்த்து முதலிருந்து ஆவரணங்க ணீங்கத் தனது ஸ்வரூபமாக்கிக் கொண்டவைபோல வாசாரியனும் பரிசதீக்ஷையினாலே மாயையையும் மானச தீக்ஷையினாலே கன்மத்தையும் + சாட்சுஷ தீக்ஷையினாலே யாணவமலத்தையும் நீக்கிச் சிவமே யாக்குவன்.

ஏகாரத்தினாலே சிவகுண சங்கிராந்தி சமுர்பத்தி சமாவேச சிவசமமென்னு மூர்த்திகளல்லாமல் சிவதாதாத்மியமென்றதெனவறிக.

ஆக்குவனென்பதற்கு ஆக்குமென்பது வினைமுற்று.

* அநுச்யூதன - கலந்தவன், + சாட்சுஷம் - கண்ணினது.

ஒருமலமு மிருவினையுங் குணங்கள் மூன்று
முட்கரண மோர்நான்கும் புலன்களைந்தும்
வருபகைக ளோராறும் பவங்க ளேழு
மாய்ந்திடப்பே ரின்பமெட்டும் வகைய தாகத்
தருவதுவாய்ப் பரஞான மூர்த்தி தானே
தாரணிமேற் குருவுருவந் தரித்து வந்தோன்
திருவருளாற் சிவஞான சித்தி யென்னுந்
தொன்னூலுக் குரைவிரித்தோன் றெரிந்த வாறே.

இரவியெழுந் திருளதனை நீக்குவபோ லென்று
மிறைஞ்சுமடி யவர்மனத்தி னிருளதனை நீக்கக்
கருணைபொறை தவந்தருமங் கல்விசிவ ஞானங்
காசினியி லொருவடிவாய்க் காட்டியபோற் றோன்றிப்

பரசமய கோடாரிமே னின்றநெறி கொண்டு
  பலகலையு முணர்ந்தசைவ பரிபால னாகித்
திரமருவு சிவஞான சித்திதரு பொருளைத்
  தெளிந்திடவே விரித்துரைத்தான் சிவாக்கிர தேசிகனே.

ஞானப்பிரகாசருரை வருமாறு.

---o---

குருவினது பெருமை கூறுகின்றார்.

பரம் - சுத்த சிவன்றா னென்றும்,—பிரமம் - சுத்தசிவ மத்திய நிர்த்தசிவம்,—இவன்றா னென்றும்,—பரசிவன்றானென்றும்-இருபர சிவனெனு மிலய சிவன்றா னென்றும்,—பராபரன்றானென்றும் - அநாகத சிவ னென்னும் போக சிவன்றா னென்றும்,—பரஞான மிவ னென்றும் - ஞானக் கிரியாப் பிரவிர்த்தி மானாகிய சதாசிவ னென்னு மதிகார சிவன்றா னென்றும்,— அரன் றருஞ் சீர் நிலை யெல்லாம் - மகேசுரன் உருத்திரன் மால் பிரமன முதற் சிவபேத மனைத்தும்,— இவன்றா னென்றும்,—ஆரோபித சிவாத்து விதத்தினாலே,—அருட்குருவை வழிபடவே - அந்தச்சிவ னிந்தக் குருதேகத்தி லாவேசித் திந்தக் குருவாயே கிருபா சமுத்திரனாகிய தேசிகனைப் பாவனைபண்ண,—அவனிவன்றானாயே - அந்தச் சிவன் இந்தக் குருதேகத்தில் ஆவேசித் திந்தக் குருவாய்.

இரங்கி வாரணமுதற் பதப்பொருள் வெளிப்பொருள்.

இம் முத்திருட்டாந்த தாட்டாந்திகப் பொருளுணர்ந் தனைக்கு மிடத் துயிர்க்கியற்கையாய் மலத்தின் மறைந்த சிவத்துவஞ் சிவனால் விளங்குமென்னும் பொருள் விளங்கிற்று.

சொல்லி னவிற் றரிசறுஞ் சோத்திரத்
தொல்லு மேற்சிவ ஞான முதித்திடுஞ்

செல்லு மெய்யரு ணந்திசெய்சித்திக்கு
நல்ல ஞான ப்ரகாச னவிற்றுரை.

சிவஞானயோகியருரை வருமாறு.

—o—

சிவபேதமனைத்துங் குருமூர்த்தமேயெனத் தேறி ஞானாசாரியனை வழிபடுக, அங்ஙனம் வழிபடப்பெறின் சிவன் இக்குருவை யாவேசித்து நின்று நாடோறுஞ் செய்யும் பரிசமுதலியமூன்றும் அவ்வுயிரைத் தன்வண்ணமாகச் செய்தருளுவனென்பது.

அவ்வா றேத்தினுர்க்கு வரும் பயன் கூறியவாறு.

பரம்பிரமமென்றது சொரூப சிவத்தையெனவும், பரசிவனென்றது தடத்த சிவத்தையெனவும், பரஞானமென்றது ஆகுபெயரான் அதனையுடையாரை யெனவும், பராபரனென்றது ஏனைத்தாபர மூர்த்தத்தையெனவும, அரன்றருஞ்சீர் நிலையென்றது அறுபத்துமும்மை நாயன்மார் முதலிய சிவபத்தர் பொருட்டாக ஆண்டாண்டு வெளிப்பட்டருளி மறையும் மூர்த்தங்கள் எல்லாவற்றினையு மெனவும் கொள்க.

பரஞான மிவனென்றும் பராபரன்றானென்றும் வழிபடுத லதிகாரப் பட்டமையின் ஏனையவு முடன்கூறினார்.

நிரம்பவழகியருரை வருமாறு.

—o—

சிவனே யாசாரியனென்றும் ஆசாரியனை வழிபாடு செய்யப் பரமேஸ்வர னிவனைத் தானுக்குவ னென்று மே லருளிச்செய்கிறார்.

பரம்பிரமமிவனென்றும் - எல்லாத்துக்கு மேலாயிருக்கிற பர மிந்த வாசாரியனென்றும்,—பரசிவன்றானென்றும்-எலால்

த்துக்கு மேலான சிவ னிந்தவாசாரியனென்றும்,—பரஞானமி வனென்றும் - மேலானஞானமு மிந்த வாசாரியனே யென்று ம்,—பராபரன்றானென்றும் - எங்கும் பரிபூரண ஞான பரமசிவ னே இந்த வாசாரியனே யென்றும்,—அரன்றருஞ்சீர் நிலையெல் லா மிவனேயென்றும் - பரமேஶ்வரனுக் குண்டாகப்பட்ட சிற ப்பையுடைய நிலைமைக ளெல்லா மிந்த வாசாரியனே யென்று ம்,—அருட்குருவை வழிபடவே யவனிவன்றானாயே யிரங்கி - ஞானாசாரியனை வழிபடவே அந்தப் பரமேஶ்வர னிந்தவாசா ரியன் றானேயாய் கிருபை ஜனித்து,—வாரண மாமைமீ னண்ட ஞ் சினையை யியல்பினொடும் பரிசித்தும் நினைந்தும்பார்த்தும்- நிறைநிறை - கோழியு மாமையு மீனு முட்டையையுஞ் சினையையு முறைமையாக, கோழி தன்னுடைய முட்டையைப் பரிசித்து ம், ஆமை தன்னுடைய முட்டையைத் தூரத்தே கிடந்து நினைத் தும், மீனானது சினையைப்பார்த்தும்,—பரிந்திவைதா னாக்குமா போல - முன் சொன்ன மூன்றும் பிரியப்பட்டு, கோழிமுட் டையைக் கோழியாக்கின தன்மைபோலவும், ஆமை முட்டை யை யாமையாக்கின தன்மைபோலவும், மீன் சினையை மீனாக்கி ன தன்மைபோலவும்,—சிவமேயாக்கும் பரிசித்துஞ் சிந்தித்து ம் பார்த்துந்தானே-சீபாதங்களாலே பரிசித்தும், திருவுளம்ப ற்றியும், திருக்கண்சாத்தியும் இந்த வான்மாவை யந்தச் சிவமே யாக்குவ னிந்த வாசாரியன்.

ஞானயோகத்தால் பரம் பிரமமென்கிற திருவிருத்த மூன் றுக்கும் பிரமாணம் சிவஞானபோதம், கஉ-சூ, எ-வெ, "தன் னை யறிவித்துத் தான்றானாச், செய்தானைப், பின்னைமறத்தல் பிழையலது—முன்னவனே, தானேதா னாச்செய்துஞ் சைவமெ ன்றுஞ் சைவமே, மானே தொழுகை வலி" என்னுமது கண்டு கொள்க.

இதனாற் சொல்லியது, அந்த உண்மையைத் தரிசித்த ஜீவன்முத்தரா யுள்ளவர்கள் பரப்பிரமமுதலான திருமேனிகளெல்லா மிந்த வாசாரியன்றானேயென்று தேகாந்தமுள்ளளவுங் குரு வழிபாடுசெய்து வரக்கடவர்களென்றும் அப்படி செய்யவே கோழியு மாமையு மீனு மண்டத்தையுஞ் சினையையும் பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்துந் தானாக்கின முறைமைபோல விந்த வான்மாவையும் ஆசாரியர் பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்தும் தற் சொரூபமாகிய சிவமே யாக்குவனென்னு முறைமையையு மறிவித்தது.

சத்து மசத்துஞ் சதசத்துஞ் சத்திய மாகிநிற்குஞ்
சித்தன் றிருவம் பலவாண னென்னுளஞ் சேர்ந்தனனாற்
சுத்தம் பயின்ற பதிபசுபாசத்தைச் சொல்லுஞ் சத்த
மத்த மதற்கு ளறுபோகங் காண்டற் சரிதல்லவே.

செய்ய சிவஞான சித்திக் கடற் பொருட்கு, உய்யு நெறி தோன்ற வுளந்தோன்ற—மெய்யுயிரை,யூட்டுநெறி தோன்ற வுரைபகர்ந்தான் ஞானவழி, காட்டு நிரம்ப வழகன்.

சுப்ரமண்யதேசிகருரை வருமாறு.

—o—

பரம்பிரம மிவனென்றும் - சொரூபசிவமே யிவனென்றும்,—பரசிவன்றானென்றும் - தடத்தசிவமே யிவனென்றும்,—பரஞானமிவனென்றும் - பரஞானத்தையுடையா னிவனென்றும்,—பராபரன்றானென்றும் - ஏனைத் தாபரமூர்த்தங்களே யிவனென்றும்,—அரன்றருசீர் நிலையெல்லா மிவனேயென்றும் - அறுபத்துமூன்று நாயன்மார் முதலிய சிவபத்தர் பொருட்டாக ஆண்டாண்டு வெளிப்பட்டருளி மறையு மூர்த்தங்களெல்லா மாகிய சிவபேதமனைத்தும் குருவெனத்தேறி,—அருட்குருவை வழிபடவே - ஞானாசாரியனை வழிபடுக. அங்ஙனம் வழிபடப் பெறில்,—அவனிவன்றானேயே - சிவன் இக்குருவை யாவேசித்து

நின்று,—இரங்கிய வாரணமாமை மீனண்டஞ் சினையை - இரக்கமுற்ற கோழி ஆமை மீன் முறையே முட்டையினை,— இயல்பினொடும் பரிச்சித்து நினைந்தும் பார்த்தும் பரிந்திவைதானாக்குமாபோல்-இயல்பாகவே தீண்டியும் கருதியும் நோக்கியும் பரிவுற்றுத் தன்வண்ணமாகச் செய்யுமாறுபோல,—தானேடரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்தும் சிவமேயாக்கும் - தானுடோடும் செய்யும் பரிசமுதலிய மூன்றுனும் அவ்வுயிரைத் தன்வண்ணமாகச் செய்தருளுவன் என்பதாம்.

அவ்வாறேத்தினர்க்கு வரும்பயன் கூறியவாறு.

இன்னுமிந்நூலின்கண் விரித்துக் குருமுகமாய்க்கேட்டறிதற்பாலன அநேகமுள,அவை கைலாய பரம்பரை மெய்கண்டசந்ததித் திருவாவடுதுறை நமச்சிவாய மூர்த்தி மரபிலெழுந்தருளி விளங்குகின்ற அம்பலவாண தேசிகர் திருவடியைப்பெற்ற அநுபவமுடையவர்களை முறையில் வழிபட்டுக் கேட்டறிக.

☞ கஉ - சூ, புறநடை முடிந்தது.

☞ பன்னிரண்டாஞ் சூத்திர முற்றிற்று.

"கருதிடுவங் கணபதி யைங்கரமு மிருபதமும்"
என்ற பன்னிரண்டாஞ் சூத்திரம்
ஏழும் முற்றிற்று.

"சிந்தையிவை மூவொன்பதொடு முந்நூறுஞ்
சிவஞான சித்திசுவ பக்கமெனத் தெளிமே"
என்னும் சிவஞான சித்தியார் சுபக்ஷத்
திருவிருத்த முன்னூற்றிருபத்தேழும்
உரையுடன் முற்றுப்பெற்றது.

ஆக பாயிரமுட்பட - ௩உ௭.

சிவமயம்.

சிவஞான சித்தியார் சுபக்ஷம்

பாயிர முதல், ௧௨-ஞ் சூத்திரவரைச் செய்யுளகராதி.

சித்தியார் சுபக்ஷ

அகராதி முற்றும்

முற்றிற்று.

இதிலுள்ள குறிப்பெழுத்துக்கள்.

ப—பக்கம்

சூ—சூத்திரம்

செ—செய்யுள்

பா—பாயிரம்

அள—அளவை